A23

தமிழரசு

ஜூலை - டிசம்பர் 2000

JL
V2;11m,N70TA.
P00.
221993


தமிழரசு
ஜூலை 1-31, 2000, ரூ10
3 ஆக.2000
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008
TIDEL PARK



# கலைஞர் ஆட்சியில்
# 46,600 கல்நார் வீடுகள்



**சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம்...**

1998 - 1999, 1999 - 2000 → ரூ.26.5 கோடி செலவில் 20,600 கல்நார் கூரை விடுகள்

2000 - 2001 → ரூ.39 கோடி செலவில் 26,000 கல்நார் கூரை விடுகள்


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆனி–ஆடி
ஜூலை 1–31, 2000
மலர் : 32 இதழ் : 1 & 2
விலை ரூ.10


இந்த இதழில்...


- டைடல் பார்க் — 2
- அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் ஒளிவீசும் புதிய ஆலயம் — 5
- நமது வருங்காலத்தின் சின்னம் — 9
- தகவல் தொழில்நுட்பவியலில் தமிழகம் முன்னணி — 12
- கணினியில் தமிழகம் முன்னணி — 16
- திருக்குறள் விரிவுரை — 17
- உருது அகாடமி — 25
- பக்கிங்காம் கால்வாய் புனரமைப்பு — 30
- அறிவுமதி கவிதை — 32
- தமிழக கிராமங்கள் அனைத்துக்கும் மின்வசதி — 33
- பெருந்துறையில் சிப்காட் தொழில் வளர்ச்சி மையம் — 35
- காக்கை குறிப்புகள் — 36
- சாலை விபத்தைத் தடுப்போம் — 38
- ஒரு இடந்தேடி — 39
- சமய நல்லிணக்கப் பாவலர் — 47
- கல்வியில் அக்கறை காட்டுகிற அரசு — 49
- தமிழ்நாட்டில் 5000 இளைஞர் மன்றங்கள் — 51
- தேசிய நீர்வளக்குழுக் கூட்டம் — 53
- தீ விபத்தும் தீயணைப்புத்துறையும் — 57
- தீ காயங்களுக்கு நவீன சிகிச்சை — 58
- கீரைகள் சொல்லும் மருத்துவம் — 60
- வனத்துறையின் பணிகள் — 62
- தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் — 63
- கதவைத் தட்டும் வாய்ப்பு-II — 65
- தேசிய மக்கள்தொகைக் குழு — 71
- ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டச் செக்கு — 75
- அரசு ஆணைகள் — 78


**திருக்குறள்**

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*
*சால மிகுத்துப் பெயின்.*

மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் வண்டியின் அச்சு முறிகின்ற அளவுக்கு அதற்குப் பலம் வந்துவிடும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# டைடல் பார்க்

# ஆசியாவின் மிகப்பெரிய மென்பொருள் பூங்கா

22/9/93

சென்னை தரமணியில் தமிழக அரசு நிறுவனங்களான டிட்கோவும், எல்காட்டும் இணைந்து 338 கோடி ரூபாயில் உலகிலேயே மூன்றாவது பெரிய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கியுள்ளன. இது ஆசியாவிலேயே முதலாவது மிகப்பெரிய மென்பொருள் பூங்காவாகும்.

டைட்ல் பூங்காவின் கட்டிடம் தரைத்தளத்துடன் 12 மேல் தளங்களையும், கார்களை நிறுத்திட 2 தரை கீழ்த்தளங்களையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அலுவலக உபயோகத்திற்கான இடங்கள், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான அலுவலகங்களின் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தேவைக்கேற்ப 4,000 சதுர அடியிலிருந்து 90,000 சதுர அடிவரை ஒரே தளத்தில் இடவசதிகள் அமைந்துள்ளன. அகன்ற இடவசதிகளும், சிறந்த தகவல் தொடர்பு வசதிகள், தடையற்ற மின்வசதி (ஜெனரேட்டர் வசதிகளுடன்) ஆகியவைகளும் அமைந்துள்ளன.

வி.எஸ்.என்.எல்., எஸ்.டி.பி.டி. ஆகிய நிறுவனங்கள் தகவல் தொடர்புக்கு தேவையான அலைவரிசைகளை இங்கு நிறுவி உள்ளன. இதற்கான தனியாக எர்த் ஸ்டேஷன் எனப்படும் தகவல் தொடர்பு நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தியாவிலேயே இது போன்று எங்கும் அமைக்கப்படவில்லை.

இப்பூங்காவில் வணிக வங்கிகள், கடைகள், சுகாதார மையங்கள், மாநாட்டுக் கூடங்கள், வணிக மையங்கள், சிற்றுண்டிச் சாலைகள், நீச்சல் குளம், டென்னிஸ் விளையாட்டு மைதானம், விருந்தினர் இல்லங்கள் ஆகியவைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தகவல் தொடர்புத்துறை (டாட்) இப்பூங்காவிற்கான நவீன வசதிகளுடன் தனித்தன்மை வாய்ந்த தொலைபேசி நிலையத்தை அமைத்து டைடலில் நுகர்வோர் கோரிக்கை வைத்தவுடன் தொலைபேசி இணைப்புகளை உடனுக்குடன் அளித்திடுகிறது.



செய்திகளை அனுப்புவதற்குத் தேவையான அனைத்து நவீன வசதிகளும் இங்கு அமைக்கப்படுகின்றன. தரை வழியாகவும், செயற்கைக்கோள் வழியாகவும், நுண்ணலைகள் மூலமாகவும் செய்திகளை பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப வசதிகள் இக்கட்டிடத்தின் மேல் தளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து வகையிலும் நவீன தேவைகளை ஈடுசெய்வதற்கு ஏற்ப டைடல் பூங்கா கட்டிட வசதிகளைக் கொண்டுள்ளது.

இந்த மென்பொருள் பூங்கா ரூ.338 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 12.8 இலட்சம் சதுர அடியில் இதற்கான கட்டிடம் எழுப்பப்பட்டு இருக்கிறது. மொத்தம் 14 மாடிகள் கொண்டதாக இக்கட்டிடம் வானுயர உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் பூங்காவில் 29 நிறுவனங்கள் சுமார் 7.2 இலட்சம் சதுர அடி நிலத்தை தங்களுக்காக பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

வெளிநாட்டு நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள் தமிழக நிறுவனங்கள் டைடல் பார்க்கில் இடம் பெற்று உள்ளன.

சென்னையில் மையப்பகுதியில் விமான நிலையத்தில் இருந்து அருகே அமைந்து உள்ளதால் வெளிநாட்டு நிறுவனங்கள் டைடல் பார்க்கினை தேடி வந்துள்ளன.

உலக அளவில் சென்னை நகரின் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தும் வகையில் டைடல் பார்க் விளங்கும் என்றால் மிகையாகாது. இது முதல்வர் கலைஞரின் சாதனை பட்டியலில் ஒரு மைல்கல் என்பதும் மறுக்க முடியாததாகும்.

இந்த டைடல் பூங்காவின் திறப்பு விழா 4-7-2000 அன்று மாலை 7 மணியளவில் நடைபெற்றது.

விழாவிற்கு வந்த பிரதமர், முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பூங்காவின் எதிரே அமைக்கப்பட்டுள்ள மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு நின்று பூங்காவின் எழிற்தோற்றத்தை கண்டு வியந்தனர்.



கண்ணாடியினால் இழைக்கப் பெற்ற, கலை நயத்துடன் அமைக்கப்பெற்ற மேடையில் விழா நடைபெற்றது.

விழாவில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.ஏ.பி. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

டிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். கோபாலன் பூங்காவின் தனிச் சிறப்புக்களை விளக்கி புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி திட்ட விளக்க உரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களுக்கு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்.

பின்னர் – விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள்





JL
V21M, N70TA
DCO

அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மென்பொருள் தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தை உலக அரங்கிற்கே முன்மாதிரி மாநிலமாக விளங்கிடச் செய்திட அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

முதல்வரது உரையைத் தொடர்ந்து மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனவள அமைச்சர் திரு.டி.ஆர். பாலு வாழ்த்துரை வழங்கினார்.

STPI, VSNL மற்றும் DoT ஆகிய நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பஸ்வான் உரையாற்றினார்.

முக்கிய ஒதுக்கீடுதாரர்களான சத்யம் இன்போவே நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. ஆர்.ராமராஜ், பென்டா சாப்ட் நிறுவன தலைவர் திரு. வி. சந்திரசேகர் மற்றும் அல்காடெல் நிறுவனம் ஆகியோருக்கு ஒதுக்கீட்டு ஆவணங்களை ஒப்படைத்து உரை நிகழ்த்தினார், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள்.

இதனைத் தொடர்ந்து இத்திட்டம் உருவான விதம். இதனை செயற்படுத்திட தமிழக




அரசும், முதல்வர் கலைஞர் அவர்களும் மேற்கொண்ட முனைப்பான முயற்சிகள், தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக தமிழகம் விளங்கிடும் பாங்கு ஆகியனவற்றை தெளிவாக எடுத்தியம்பிடும் 'லேசர் ஷோ' எனப்படும் வீடியோ திரைப்படம் டைடல் பூங்கா ஒளி வெள்ளம் பாய்ச்சி பார்ப்போரை பிரமிப்பிலும், களிப்பிலும் ஆழ்த்தியது.

நிறைவாக 'டைடல்' தகவல் தொழில்நுட்பப் பூங்காவை பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் தொடங்கிவைத்தார்.

பிரதமர் மேடையில் நின்று பொத்தானை அழுத்தியதும் 12 தளங்களைக் கொண்ட 'டைடல்' பூங்கா ஒளி வெள்ளம் பாய்ச்சி பார்ப்போரை பிரமிப்பிலும், களிப்பிலும் ஆழ்த்தியது.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பிரதமரின் சிறப்புரையைத் தொடர்ந்து எல்காட் தலைவர் திரு. ஞானதேசிகன் நன்றியுரையாற்றினார்.

முக்கிய ஒப்பந்ததாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கு செயலாக்கச் சான்றிதழ்களை வழங்கி மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.பிரமோத் மகாஜன் உரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் வாழ்த்துரை வழங்கினார்.

> **"இந்த மென்பொருள் பூங்கா ரூ.338 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. மொத்தம் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 12.8 இலட்சம் சதுர அடியில் இதற்கான கட்டிடம் எழுப்பப்பட்டு இருக்கிறது. மொத்தம் 14 மாடிகள் கொண்டதாக இக்கட்டிடம் வானுயர உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் பூங்காவில் 29 நிறுவனங்கள் சுமார் 7.2 இலட்சம் சதுர அடி நிலத்தை தங்களுக்காக பெற்றுக்கொண்டு இருக்கின்றன."**

• • •



# அறிவுசார்ந்த பொருளாதாரத்தின் ஒளிவீசும் புதிய ஆலயம்

# டைடல் பார்க்

**□ பிரதமர் வாஜ்பாய்**

தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் மாபெரும் கட்டத்தை அடையும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளில் நான் இங்கே வந்திருந்து பங்கு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.



இந்தியாவின் தகவல் தொழில்நுட்பப் பேரலை உலகத்தின் தகவல் தொழில்நுட்பமெனும் அனைத்துக் கடற்கரைகளிலும் வீசத் தொடங்கி விட்டதற்கு அடையாளமாக இந்த டைடல் பார்க் திகழ்கிறது. இந்த மாபெரும் சாதனையைப் படைத்திருக்கும் தமிழ்நாடு அரசை என் மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

பெங்களூரிலும், ஐதராபாத்திலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை நான் பார்த்திருக்கிறேன். மும்பை, பூனா, கல்கத்தா, திருவனந்தபுரம், டெல்லி மற்றும் மொகாலி போன்ற இடங்களிலும் இதுபோன்ற பூங்காக்கள் உருவாகியிருக்கின்றன; அல்லது உருவாகி வருகின்றன என்று அறிகின்றேன். நாம் அனைவரும் இணைந்து உருவாக்கி வரும் நவீன இந்தியாவின் ஒளிவீசும் சின்னங்களாக புதிய பொருளாதாரத்தின் இந்தப் படைப்புகள் திகழ்கின்றன.

"பாரத தேசம்" என்னும் கவிதையில் மகாகவி சுப்ரமணியபாரதி "பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்" என பாடியிருக்கிறார். விடுதலைக்குப் பிறகு இந்தியா என்ன செய்யும் என்று சிந்தித்த பாரதி,

**"ஆயுதம் செய்வோம் – நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்**
**உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள்**
**செய்வோம்"**

– என்று சொல்லியிருக்கிறார்.

தகவல் தொழில்நுட்பம் உருவாகும் என்று பாரதி கனவு கூட கண்டிருக்க மாட்டார். ஆனால் 21ஆம் நூற்றாண்டைய உலகில் இந்தியா எந்த நாட்டிற்கும் இளைத்ததல்ல என்பதை எடுத்துக்காட்டும் டைடல் பார்க் போன்ற திட்டங்கள் பாரதியின் தொலைநோக்குப் பார்வையை எடுத்துக்காட்டுகின்றன.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் போன்ற அறிவினால் உந்தப்படும் பொருளாதாரமும், சமுதாயமும் புதிய நூற்றாண்டின் தொடக்கமாக அமைந்துள்ளன. இவற்றில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், மானுட சாதனையின் வலிமை மிக்க சாதனையாக அமைந்திருக்கிறது.

கடந்த திங்களில் இரு பெரிய அறிவியல் அறிவிப்புகளை நாம் கண்டோம், ஒன்று, செவ்வாய்க் கோளில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது மற்றொன்று, மனித உயிரணுக்களைப் பற்றிய புதிய கண்டுபிடிப்பு. இவற்றையெல்லாம் இணைத்துப் பார்த்தால் மனித இனம், இந்த அண்டத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மிகப் பெரிய சாதனைகளைப் படைக்க இருப்பது புரிகிறது.

விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல முனைகளிலும் ஏற்பட்டுவரும் மனிதஇன வளர்ச்சி எனும் பந்தயத்தில் இந்தியாவின் இடம் முன்னணி இடமாக அமைந்தி

வேண்டும். அது பின்னிலை இடமாகவோ, நடு இடமாகவோ இருந்திடக் கூடாது. இதுவே நமது நோக்கம். இந்த நோக்கத்தை, நமது நம்பிக்கை, திறமை மற்றும் வளங்களின் உதவிகொண்டு நாம் வெற்றி கண்டாக வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தில் குறிப்பாக, மென்பொருள் வளர்ச்சியில் இந்தியா பெற்றுள்ள ஆற்றல் உலகம் முழுதும் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிலிக்கான் பள்ளத்தாக்கில் இந்திய தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களும், தொழில் முனைவோரும் தொடக்க காலத்தில் படைத்த சாதனைகள் மூலம் இது சாத்தியமாயிற்று. கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவிலேயே ஏராளமான வெற்றிச் சாதனைகள் உருவாக்கப்பட்டன; தமிழ்நாட்டிலும் பல வெற்றிச் சாதனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது தகவல் தொழில்நுட்பம் என்பதால், அரசு தனது கொள்கை அறிவிப்புகளிலும், முன்னுரிமைகளிலும் தகவல் தொழில்நுட்பத்திற்கு முதலிடம் அளித்து வருகிறது. மத்திய அரசு கொண்டுள்ள இதே மாதிரியான அணுகுமுறையை மாநில அரசுகளும் கடைபிடித்து, சிலிக்கான் பள்ளத்தாக்கில் உள்ளதைப் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி வருகின்றன. நாம் அனைவரும் ஒன்றிணைந்து, இந்தியாவை உலகத் தரத்திலான மென்பொருள் வளர்ச்சிக்கு ஏற்ற இடமாக உருவாக்கிட முடியும்.

புதுடெல்லியிலும், சென்னையிலும் அணுகுமுறையும், முன்னேற்ற நடவடிக்கையும் ஒரேமாதிரியாக அமைந்து வருகின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று திறந்து வைக்கப்படும் இந்த டைடல் பார்க் திகழ்கிறது.

குறுகிய காலத்தில் இந்தியா தகவல் தொழில்நுட்பத்தில் நிறைய சாதித்துள்ளது. எனினும், நம்மிடம் உள்ள முழு வளத்தையும் பயன்படுத்திக் கொள்ள இன்னும் நீண்டதூரம் நாம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நமது பலம் அனைத்தையும் ஒன்று திரட்ட வேண்டும். வேகமாக நமது பலவீனங்களை வெற்றி கொள்ளவேண்டும். பல முனைகளிலும் ஒரே நேரத்தில் முறையான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

தொலைத்தொடர்பு கட்டமைப்பு வசதிகள் நமது நாட்டில் பலம் குன்றியவையாக உள்ளன. தொலைத் தொடர்புத் துறையில் அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த ஆண்டு புதிய தொலைத்தொடர்பு கொள்கை அதன் தொடக்கமாக அமைந்தது. உலகத்தில் எந்த நாட்டிலும் காணமுடியாத அளவுக்கு தாராள மயமாக்கப்பட்ட இணையக் கொள்கை ஒன்றையும் நாம் அறிவித்துள்ளோம். இதனால் விளைந்து வரும் பலன்களை எல்லோராலும் அறிந்து கொள்ள முடியும். நாடு முழுதும் மிக வேகமாக இணையச் சேவைகள் பரவி வருகின்றன. இணையக் கட்டணங்களும் வெகுவாக குறைந்து வருகின்றன. எனினும், உலகத் தரத்திலான தொலைத் தொடர்பு மற்றும் இணையச் சாதனையை நாம் அடையவேண்டும் என்றால், நாம் பல பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும் என்பதையும் நான் உணர்கிறேன்.

நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப இணைப்புக்குழு இந்தப் பிரச்சினைகளைப் பற்றி ஆலோசனை செய்து வருகிறது.

கடலுக்கடியில் அமைக்கப்படும் கண்ணாடி இழை வடத்தொடர்பு தனியார் மயமாக்கப்படக்கூடாது என்று தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தொழில் முனைவோர் வலியுறுத்தி வருகின்றனர். அரசு இந்தப் பிரச்சினையைப் பரிவோடு பரிசீலனை செய்யும்.



அதிவேக, அகன்ற இணைப்பு வசதிகள் போதுமான அளவுக்கு இல்லாமை தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன. இந்தத் தேவையை அரசு உணர்ந்துள்ளதால், அதற்கென ஒரு நிலைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில் முனைவோரும், நுகர்வோரும் அதில் பிரதிநிதித்துவம் பெறுவர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால், மாநில அரசுகளின் நிறுவனங் களுடன் இணைந்து அவற்றை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை தொலைத் தொடர்புத்துறை உருவாக்கி வருகிறது.



இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் தொலைத் தொடர்புத்துறையை ஒரு நிறுவனமாக அமைத்திடுவது என்று அரசு ஏற்கெனவே முடிவு செய்துள்ளது. அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக இந்தியாவில் விரைவில் உலகத் தரத்திலான தொலைத் தொடர்பு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு கட்டணங்களும் வெகுவாக குறைக்கப்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

### மேம்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பு வசதி

முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்கள் சென்னைக்கும், தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் மேம்படுத்தப்பட்ட தொலைத் தொடர்பு வசதிகள் உருவாக்கப்படவேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்தியாவின் மற்ற பகுதிகளின் தேவைகளைப் போலவே, இந்த மாநிலத்தின் தேவைகளும் தொலைத் தொடர்புத்துறை விரைவில் நிறுவனமாக மாற்றி அமைப்பதன் மூலம் நிறைவு செய்யப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

நமது கவனத்தை ஈர்க்கும் இரண்டாவது பிரச்சினை தகவல் தொழில்நுட்பமும், அது சார்ந்த கல்வியும் ஆகும். 2008ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலருக்கு ஈடான மென்பொருள் ஏற்றுமதியை உயர்த்திட வேண்டுமென்று நாம் இலக்கினை நிர்ணயம் செய்துள்ளோம். மிக உயரிய ஊதியத்தில் இரண்டு மில்லியன் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை இந்த ஏற்றுமதி இலக்கு உருவாக்கும். அத்துடன் இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறைக்குப் பயிற்சி பெற்ற ஏராளமான மனித வளம் தேவைப்படும். இதை ஈடு செய்வதற்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த கல்விக்கான வசதிகளை மிக விரிவான அளவில் நாம் உருவாக்கிட வேண்டியுள்ளது.

கட்டமைப்பு வசதிகள், ஆசிரியப் பயிற்சி, மாணவர்களுக்கான கல்விக்கடன் ஆகியவற்றில் விரைவான சீர்திருத்தங்களை நாம் செய்தாக வேண்டும். கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மத்திய அரசும், மாநில அரசுகளும் கல்வி நிறுவனங்களும் ஈடுபடவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மரபு சார்ந்த தொழில்களைப் புதுப்பித்து நவீன மயப்படுத்துவதில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்பது மூன்றாவதாக நமது கவனத்தை ஈர்த்திடும் பிரச்சினையாகும். இந்தியாவின் மென்பொருள் வளர்ச்சி பெருமளவுக்கு ஏற்றுமதியையே இலக்காகக் கொண்டிருக்கிறது. உள்நாட்டுப் பொருளாதாரம் மென்பொருள் வளர்ச்சியை குறைந்த அளவிற்கே பயன்படுத்தி வருகிறது என்பது வருத்தம் தரக்கூடியதாகும். இந்த ஏற்றத்தாழ்வான நிலை தகவல் தொழில்நுட்பம் நமது நாட்டில் நின்று, நிலைத்து வளர்வதற்கு ஊறு விளைவிக்கக்கூடும்.

“செங்கல் பொருளாதாரத்தையும்”, “கணிப்பொறி பொருளாதாரத்தையும்” சமஅளவில் கலந்து பயன்படுத்துவதன் மூலமாகத்தான் இந்தியாவின் தேசிய இலக்குகளை எய்திட முடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பாரம்பரிய பொருளாதாரத்தில் உயரிய திறனையும், உற்பத்தியையும் பெருக்குவதற்கே புதிய பொருளாதாரம் நமக்குத் தேவைப்படுகிறது. பாரம்பரிய பொருளாதாரத்தை புதுப்பிப்பதன் மூலம் புதிய பொருளாதாரத்திற்கான உள்நாட்டுத் தேவைகளை நாம் நிறைவு செய்ய முடியும்.

அரசுத் துறைகள், சேவை நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் விரைவாகவும், விரிவாகவும் தகவல் தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்துவது உள்நாட்டு பொருளாதாரத்தை உயர்த்திட உதவும். தகவல் தொழில்நுட்பத்திற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டதால் அதன்மூலம் மின்னியல் வாணிப முறைகளுக்குப் பாதுகாப்புகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, கொள்முதல் அனைத்தும் விரைவில் இணையத்தின் மூலமாகவே நடைபெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதன் மூலம் ஒளிவு மறைவற்ற தன்மை, திறமை, பொறுப்பு ஆகியவை மேம்படும். மேலும், அரசிற்குக் கணிசமான அளவிற்கு சேமிப்பையும் உருவாக்கிடும்.

### உலகிலேயே மிகப் பழமையான மிகச் சிறந்த மொழி தமிழ்

இந்திய மொழிகளில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது என்பது நமது உடனடி கவனத்தை ஈர்த்திடும் நான்காவது பகுதியாகும். நமது மொழிகள் ஒவ்வொன்றும் பாரம்பரியமான அறிவு மற்றும் மதிப்பீடுகள் நிறைந்த களஞ்சியங்களாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழ்மொழி உலகிலேயே மிகப் பழமையான, மிகச்சிறந்த மொழிகளில் ஒன்றாகும். தலைமுறை தலைமுறையாக சமுதாய மற்றும் கலாச்சார மரபுகளை இந்திய மொழிகள் தாங்கி வருகின்றன. எனவே, அறிவைத் தாங்கி வரும் சாதனமாக ஆங்கில மொழி மட்டுமே இருக்குமானால், தகவல் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்டு வரும் அறிவுப் புரட்சியின் முழுப்பயனையும் இந்தியா அடைந்துவிட முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தை தாய்மொழியின் மூலம் வளர்த்திட வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு மற்ற மாநில அரசுகளைக் காட்டிலும் நிறைய நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்து மாநிலங்களும் தமது இலக்கிய, கலாச்சார மற்றும் கலை மரபுகளைச் சொந்த மொழிகளின் மூலம் தகவல் தொழில்நுட்பத்தில் உருவாக்கி படைப்பதில் தமிழ்நாட்டைப் பின்பற்றவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தகவல் தொழில்நுட்பம் அறிந்தவர்கள், தகவல் தொழில்நுட்பம் அறியாதவர்கள் என்று இந்திய சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் இடைவெளி எனக்குக் கவலையைத் தருகிறது. அதற்கு “டிஜிட்டல் இடைவெளி” என்று பெயர். அதைக் கண்டுபிடித்து சரி செய்வதற்கான



நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளாவிட்டால், ஏற்கெனவே நம்மிடையே உள்ள சமுதாய மற்றும் பொருளாதார வேறுபாடுகள் ஆழம் அடைவதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன.

தகவல் தொழில்நுட்பம் என்பது நகர்ப்புறத்தில் உள்ள ஆங்கிலம் பேசுவோருக்கு மட்டுமல்ல; கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளியோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மலைசாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு அதிகாரம் வழங்குதல், சமூகநீதி, பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றிற்கான சக்தி வாய்ந்த சாதனமாக தகவல் தொழில்நுட்பம் உருவாகிடவேண்டும்.

ஒவ்வொரு இந்தியனும் எங்கிருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், அவனுடைய வாழ்க்கையை இணையமும், அது தொடர்பான தொழில்நுட்பங்களும் மற்றும் சேவைகளும், அடுத்து வரும் ஐந்தில் இருந்து பத்து ஆண்டுகளுக்குள் சென்றடைவதை காண நான் பெரிதும் விரும்புகிறேன்.

நமது விவசாயிகள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள் மற்றும் சாதாரண சாமான்ய மக்கள் பெரிதும் பயனடையும் வகையில் தகவல் தொழில்நுட்ப சேவைகள் அமைவதற்கான உத்திகளை நமது விஞ்ஞானிகளும், வல்லுநர்களும், தொழில்முனைவோரும் உருவாக்கிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இந்திய மொழிகளில் இணையத்தில் கல்வி, வாணிபம் போன்ற உள்ளடக்கங்களை உருவாக்க வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. எஸ்டிடி. பூத்களை போலவே இணைய மையங்கள் நாடெங்கிலும் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலம் சாமானியர்கள் இந்திய மொழிகளிலேயே இ–மெயில் அனுப்புவதற்கும், பெறுவதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இணைய மையங்கள் மூலம் அரசு, வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் வழங்கிடும் வசதிகள் எல்லோரையும் சென்றடைய வேண்டும்.

வேளாண்மை, தொழில், கல்வி, சுகாதார பாதுகாப்பு மற்றும் சமுதாயத்தின் பல முனைகளில் தமிழ்நாடு கண்டுள்ள வளர்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. வேகமாக முன்னேற வேண்டும் என்ற புதிய உத்வேகம், புதிய கண்ணோட்டம், புதிய சிந்தனை இங்கே உருவாகி இருப்பதை என்னால் காண முடிகிறது. இந்த முயற்சியில், இந்த மாநிலத்திற்குத் தன்னால் இயன்ற வகையில் அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு விரும்புகிறது.

தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சேதுசமுத்திரம் திட்டத்தை நான் அறிவேன். அந்தத் திட்டத்தை மேற்கொள்வதென்று தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் நாங்கள் உறுதி அளித்திருக்கிறோம். இந்த உறுதியை நிறைவேற்றுவதற்கான பணி விரைவில் தொடங்கப்படும் என்று இந்த மாநிலத்து மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்.

அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் ஒளிவீசும் புதிய ஆலயமாக இந்த டைடல் பார்க்கை உருவாக்கியுள்ள டிட்கோ, எல்காட் ஆகிய தமிழ்நாடு அரசு நிறுவனங்களை நான் பாராட்டுகிறேன். மிகப்பெரிய ஆலயங்களுக்குப் புகழ்பெற்றது தமிழ்நாடு என்பதை நாம் அறிவோம். மற்றொரு ஆலயமாக டைடல் பார்க் இன்று உருவாகியிருக்கிறது. மேலும், அறிவு சார்ந்த பொருளாதாரத்தின் படைப்பு என்பதால் இந்த டைடல் பார்க் கலைமகளும், அலைமகளும் சேர்ந்திருக்கும் இடம் எனக் கொள்ளலாம். இந்த டைடல் பார்க்கை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டவர்கள், இந்த டைடல் பார்க்கில் பணியாற்றி தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் செல்வத்தையும், செல்வாக்கையும் சேர்த்திட இருப்பவர்கள் ஆகிய அனைவருக்கும் கலைமகள், அலைமகள் ஆகிய இருவரின் ஆசி நிரம்ப உண்டு.

*– சென்னை – தரமணியில் டைடல் மென்பொருள் பூங்காவினை 4–7–2000 அன்று திறந்துவைத்து பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய உரை.*

• • •



# டைடல் பார்க்

## நமது வருங்காலத்தின் சின்னமாக திகழும் தகவல் தொழில்நுட்பத்தின் உலகத் தரம் வாய்ந்த வசதிகளை கொண்டது

**– முதலமைச்சர் கலைஞர்**

நாம் தகவல் தொடர்பு காலத்தில் வாழ்கிறோம். இக்காலத்தில் இதனையே "அறிவு" எனலாம். இது வேறு எதனையும்விட மேம்பட்டது. நமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வல்லது. அறிவு வளர்ச்சி சார்ந்த தொழிலுக்கு, தகவல் தொழில்நுட்பம் ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்; நமது வருங்காலத்தின் சின்னமாகவும் இது திகழ்கிறது. நமது பிரதமர் அவர்களின் சொற்களில் கூற வேண்டுமெனில், தகவல் தொழில்நுட்பம் என்பது "இந்தியாவின் எதிர்காலம்" எனப்படும்.

டைடல் பார்க் இந்தியாவிலேயே புத்தம்புது வசதிகளைக் (Most sophisticated facility) கொண்டுள்ள மிகப்பெரிய நிறுவனமாகும். தகவல் தொழில்நுட்பவியல் தொழில்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய உலகத் தரம் வாய்ந்த வசதிகளை இது பெற்றுள்ளது. கால நிர்ணயம், செலவு மதிப்பீடு ஆகியவற்றைக் கடக்காத அளவில் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

டைடல் பார்க் முக்கிய நவீன அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. நிறுவு திறனில் 50 விழுக்காடு அளவு அனல் மின்சாரத்தைச் சேமித்து வைக்கும் மிகச்சிறந்த தொழில்நுட்பம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அனல் மின்சாரத்தைச் சேமிக்கும் இம்முறை பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளை அடுத்து உலகின் மூன்றாவது பெரிய திட்டமாக இங்கு நிறுவப்பட்டுள்ளது. இம்முறை இந்தியாவிலேயே முதன்முறையாக இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பிரமிப்பூட்டுகின்ற இவ்வரும் பணியை நிறைவேற்றி முடிப்பதில் பங்குகொண்ட பல்வேறு அமைப்புகளையும், வல்லுநர்கள், பணியாளர்கள் ஒவ்வொருவரையும் என் உளமாரப் பாராட்டுகிறேன். நமது தகவல் தொழில்நுட்பவியல் வரலாற்றில் இன்று நடைபெறும் இத்திறப்பு விழா நிகழ்ச்சி ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

இந்த மாபெரும் நிறுவனத்தினை நாட்டிற்கு அர்ப்பணிப்பதற்கும், இந்நிகழ்ச்சியைச் சிறப்பிப்பதற்கும் நமது பிரதமர் அவர்களும், அவரது அமைச்சர் பெருமக்களும் இங்கு வருகை தந்திருப்பது நமக்குப் பெருமிதம் அளிக்கிறது.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, திரு. வாஜ்பாய் அவர்கள் என்னுடைய நீண்டகால நண்பர்; ஒரு நல்ல நண்பர். இவர் பல்வேறு ஆற்றல்களுடன் மிளிர்பவர். ஓர் அரசியல் மேதை; சிறந்த கவிஞர்; சொல்லாற்றல் மிகுந்தவர். இவை அனைத்தையும்விட, சிறுபான்மையினர் ஆயினும், பெரும்பான்மையினர் ஆயினும் அவர்கள் அனைவரிடமும் அன்பும் பற்றும் கொண்டுள்ள ஒரு மிகச்சிறந்த மனிதநேயப் பண்பாளர். மதச்சார்பற்ற தன்மை மிகுந்த தலைவர் இவர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நான் இடம் பெற்றிருப்பதனால் மட்டும் இதனைக் கூறவில்லை; நமது பிரதமரிடம் தொடர்ந்து நன்மதிப்பும், பேரன்பும் செலுத்தி வருகிறவன் நான்.

இவர் உண்மையிலேயே வியந்து போற்றுதற்குரிய பிரதமர். ஆகையால், டைடல் பார்க் வளாகத்தினை திறப்பதற்காக இவர் இங்கு வருகை தந்திருப்பது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிக்கு மதிப்பையும், பெருமையையும், சிறப்பையும், புகழையும் மேலும் உயர்த்துகிறது.

தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் தொழில்களை வளம்பெறச் செய்வதிலும், வளர்ப்பதிலும், மாநில அரசு கொண்டுள்ள பொறுப்புணர்வை வெளிப்படுத்திடும் ஒரு சான்றாக ஒளிவீசுகிறது டைடல். ஒரு பேருருவச் சிலைபோல உயர்ந்துள்ள டைடல், வான்பரப்பையும் விஞ்சி நிற்கிறது. இதுபோலவே, தமிழகம் தகவல் தொழில்நுட்பவியலில் இதர மாநிலங்கள் அனைத்தையும் மிக விரைவில் வென்றுநிற்கும் என்பதில் உறுதி கொண்டுள்ளோம்.

தொடக்க நிலையிலேயே இந்த டைடல் பார்க் மிகச் சிறந்த வெற்றி பெற்றுள்ளதால், வெகுவிரைவில்

சென்னையில் இரண்டாவது டைடல் பார்க் திட்டத்தைச் செயல்படுத்திட நாங்கள் கருதியுள்ளோம்.



தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பவியல் தொழில் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் அறிக்கை கூறுவதுபோல, தமிழகம் மிகவும் காலம் தாழ்ந்து இந்தியத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் ஈடுபட்ட போதிலும், தி.மு.கழக அரசின் நான்கு ஆண்டுகாலச் சீரிய முயற்சிகளால் இங்குத் தகவல் தொழில்நுட்பவியல் மிகச்சிறப்பான முறையில் வளர்ச்சி கண்டுள்ளது.

1995–96இல் 34 மென்பொருள் தொழில் பிரிவுகள் மட்டுமே தமிழகத்தில் இருந்தன. அவற்றின் மூலம் செய்யப்பட்ட ஏற்றுமதி மதிப்பு வெறும் ரூ.37 கோடிதான்.

1996–97க்குப் பின் இதில் மிக வேகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

31–3–2000 தேதியளவில் மென்தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 600க்கு மேல் உயர்ந்துள்ளது. 1999–2000 ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் மதிப்பும் 1,914 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது.

அமெரிக்காவில் உள்ள ஹார்வார்டு பல்கலைக்கழகம் அண்மையில், 1999 அக்டோபரில் மேற்கொண்ட ஆய்வின் மூலமாக, தமிழ்நாடு இந்தியாவில் ஒரு மாபெரும் தகவல் தொழில்நுட்ப மாநிலமாக உருவெடுத்து வருகிறது எனக் கணித்துள்ளது. ஹார்வார்டு பல்கலைக்கழக ஆய்வு "இந்தியாவிலேயே முதலாவதாக மட்டுமல்ல; மனித சமுதாயத்தில் பாதிபேர் வாழ்கின்ற ஆசிய கண்டத்தின் நுழைவு வாயிலாகத் தமிழ்நாடு ஏன் ஆகக்கூடாது?" என்றும் கேட்டுள்ளது.

இந்தியாவிலேயே திறமைசாலிகளின் மிகப்பெரிய உறைவிடம் என்றும், அறிவு செறிந்தோரின் இருப்பிடம் என்றும் புகழ் பெற்றுள்ள தமிழகம், உலக அளவில் மேலும் உயர்ந்து பெருமைகள் பெற்றிட எங்களது அரசு பல்வேறு முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சிறந்த ஆட்சியை வழங்குவதில் எங்களது அரசு உறுதி கொண்டுள்ளது. இதன் விளைவாக, எங்களது கட்டமைப்பு வசதிகள், மனித ஆற்றல்கள், செயலாற்றும் பண்புகள் அனைத்தும் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளன.

- தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் விரைவாகவும், நாட்டிற்குப் பயன்தரத்தக்க வகையிலும் வளர்ச்சி அடைவதை உறுதி செய்திட பல்வேறு முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.
- தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனி கொள்கை வகுத்த முதல் மாநிலம் தமிழகம். அத்துடன் முதலமைச்சரின் நேரடிப் பொறுப்பில் தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனி துறையை உருவாக்கிய முதல் மாநிலமும் தமிழகமே.
- மென்பொருள் தொழில் வல்லுநர்களை இந்தியாவின் பிற மாநிலங்களைவிட அதிக அளவில் கொண்டுள்ள மாநிலம் தமிழகம்தான்.
- 1998ஆம் ஆண்டில் நாஸ்காம் (NASSCOM) என்னும் அமைப்பு மேற்கொண்ட ஆய்வு, மென்பொருள் தொழில்களில் முதலீடு செய்வதற்கு இந்தியாவிலேயே சிறந்த இடம் சென்னையே என்று தெரிவிக்கிறது.
- இணையத்தின் மூலம் உலக அளவிலான தொடர்புகளைப் பெறுவதற்கு வசதியாக தமிழகத்தில் உயர் அலைவரிசையை உருவாக்குவதற்கும், கண்ணாடி இழை வடத்தினை (Optic Fibre Cables) அடிப்படையாகக் கொண்டு இணைய வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நாங்கள் ஊக்கமளித்து வருகிறோம். இத்தகைய முதல் திட்டத்திற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.
- நமது மக்களுக்கும், அரசுக்கும் இடையில் மகிழ்ச்சியான முறையிலும், பயன்தரத் தக்க வகையிலும், கருத்துப் பரிமாற்றங்கள் உருவாவதற்கு வழிவகுக்கும் வண்ணம், அரசின் சார்பில் பல கணினிமயத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சான்றாக, நிலப்பதிவேடுகள், நில வரைபடங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், சார் பதிவாளர் அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், விற்பனை வரி அலுவலகங்கள், நகராட்சிப் பணிகள் ஆகியவைகளைக் குறிப்பிடலாம்.
- 2008ஆவது ஆண்டில், பள்ளியிலிருந்து வெளியேறும் அனைத்து மாணவர்களும் கணினிக் கல்வி பெற்றவர்களாக விளங்கிட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இதன் முதல் நடவடிக்கையாக, மாநிலம் முழுவதிலும் உள்ள 1,200 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி அறிவியல் கல்வியை வழங்கிடத் தொடங்கியுள்ளோம்.
- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி வழங்கும் மிகப் பெரிய திட்டம் ஒன்று இந்த ஆண்டில் தொடங்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில் தான் உயர் ஆற்றல் வாய்ந்த கணினித் திறன் (Largest Main Frame Computing Capacity) வல்லுநர்கள் அதிகம் உள்ளனர்.
- மல்டி மீடியா சாஃப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் (Multimedia Software Applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் பெரிய மையமாக சென்னை வேகமாக உருவாகி வருகிறது.
- பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள சிறுசேரி கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்று உருவாகி வருகிறது.
- தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் தமிழகம் முழுவதிலும் பரவலாக அமைக்கப்படுவதற்கு வசதியாக, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சர்வதேசப் புள்ளிவிவர இணைப்பு மையங்களை (International Data Links) நிறுவிட, இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவிற்கு (STPI) நாங்கள் நிதியுதவி வழங்குகிறோம். இதன் பயனாக இந்த ஆண்டின் முடிவிற்குள் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் இந்த வசதிகள் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.
- தகவல் தொழில்நுட்பத்தில் நமது நாட்டில் சிறந்து விளங்கும் முதல் மாநிலமாகவும், உலகின் தகவல் தொழில்நுட்ப அறிவு செறிந்தோரின் இருப்பிடமாகவும் தமிழகத்தை உருவாக்குவதற்கு எங்களது மாநில அரசு உறுதி கொண்டுள்ளது.
- இந்த எண்ணம் நிறைவேறிட, மத்திய அரசும், அதன் அமைச்சர் பெருமக்களும் தங்களது முழுமையான ஆதரவினை எங்களுக்கு வழங்குவார்கள் என நம்புகிறேன்.
- குறிப்பாக, பின்வரும் இனங்களின் மீது சாதகமான முடிவுகளை நாங்கள் எதிர்பார்க்கிறோம் :

1. தமிழகம் முழுவதும் சர்வதேச தகவல் தொடர்பு மையங்களை நிறுவுவதற்கு இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவிற்கு (STPI) ஊக்கமளித்திட வேண்டும்.
2. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தினால், சென்னையில் "இந்திய தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மேலாண்மை நிறுவனம்" (Indian Institute of Information Technology and Management) என்னும் உயர்கல்வி அமைப்பினை விரைவில் நிறுவிட வேண்டும்.
3. வட்டார அளவிலான சமுதாயத் தகவல் மையங்களை (Block Level Community Information Centres) அமைத்திடும் மத்தியத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள வட்டங்கள் அனைத்திலும் இவற்றை நிறுவிட வேண்டும்.
4. கண்ணாடி இழை வடங்களை (Optic Fibre Cables) கண்டங்களுக்கிடையில் கடல் வழியாக அமைத்திடும்போது சென்னையை நுழைவு வாயிலாக அங்கீகாரம் செய்யவேண்டும்.

இறுதியாக, டைடல் பூங்காவில் இடம்பெறும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் தொழில் எல்லா வகையிலும் வெற்றி களைக் குவித்திடவும், இத் தொழிலின் எதிர்காலம் மிகவும் ஒளிமயமாய் அமைந்திடவும் உளமார வாழ்த்துகிறேன்.

*– தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4–7–2000 அன்று சென்னை தரமணியில் நடைபெற்ற டைடல் பார்க் தொடக்க விழாவில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய தலைமையுரையின் தமிழ் வடிவம்*

★ ★ ★

# தகவல் தொழில்நுட்பவியலில் தமிழகம் முன்னணி

தமிழகத்தைப் பொருத்தமட்டில் தகவல் தொழில்நுட்பவியலில் முன்னோடியாகவும், பொருளாதாரத்தில் வெற்றி கண்டுள்ள மாநிலமாகவும் திகழ்கிறது.

- பெருகிவரும் வளமான தகவல் தொழில்நுட்பத் தொழிலால் ஏறத்தாழ 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள்.

- கடந்த ஆண்டு மட்டும் 1,900 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மென்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

- அமெரிக்காவைச் சேர்ந்த ஹார்வார்டு பல்கலைக்கழகம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வில், தமிழ்நாடு குறுகிய காலத்தில் இந்தியாவிலேயே மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப மாநிலமாக உருவாவதோடு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு நுழைவாயிலாகவும் திகழும் என்று தெரிவித்துள்ளது.

- தேசிய மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் கூட்டமைப்பு (NASSCOM) கடந்த 1998ஆம் ஆண்டு மேற்கொண்ட ஓர் ஆய்வின் மூலம், மென்பொருள் தொழிலில் முதலீடு செய்ய சிறந்த சாத்தியக்கூறுகள் உள்ள நகரமாகச் சென்னை நகரைத் தேர்வு செய்துள்ளது.







பொதுமக்கள் அரசோடு தொடர்பு கொள்ளும்போது, அந்தத் தொடர்பு பயன்தரும் வகையில் அமைந்து, மக்களுக்கு மனநிறைவு அளித்திடும் வண்ணம் தமிழக அரசின் பல துறைகளில் கணினி மயமாக்கல் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1. தகவல் தொழில்நுட்பம் என்பது மக்களுக்கு அவசியமான ஒன்று என்பதை உறுதி செய்து, தகவல் தொழில்நுட்பத்தில் தாய்மொழியாம் தமிழில் பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் பல முன்னோடியான பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

2. மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியலைக் கற்பிக்கும் திட்டத்தின் மூலம் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

3. இனி வருங்காலங்களில் இணையத் தொடர்பு என்பது இன்றியமையாதது என்பதை முழுமையாக உணர்ந்துள்ளதன் பயனாகவும், இவ்விணைய வசதி தமிழகம் முழுவதும் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தில், ஏறத்தாழ 13,000 சமுதாய இணைய மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இங்கிலாந்தைச் சேர்ந்த வேர்ல்டுடெல் நிறுவனத்துடன் இணைந்து உயர்கடத்துத் திறன் கொண்ட ஆப்டிக் ஃபைபர் கேபிள் அமைக்கும் பணி நடைபெற்று வருவது இத்திட்டத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்கிறது.

அச்சிடப்பட்டு, உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள எனது விரிவான உரையில் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் பெற்றுள்ள வளர்ச்சியும், அதைப் பெருக்குவதில் இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### உடனடியாக கவனம் செலுத்தவேண்டிய பிரச்சினைகள்

சில முக்கியமான பிரச்சினைகளில் உங்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். இப்பிரச்சினைகளில்



நாம் உடனடியாக கவனம் செலுத்துவதன் மூலம் இதனை வெகு சிறப்பாக செயல்படுத்துவது குறித்து இன்று நாம் ஓர் ஒன்றுபட்ட முடிவுக்கு வர இயலும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**1. மனதளவிலான மாற்றம்**

தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பெரும் அளவிலான பலனைப் பெறுவதற்கு நமக்கு மனதளவிலான மாற்றங்கள் அவசியமாகிறது.

- ஒளிவுமறைவற்ற தன்மை, பொறுப்புணர்வோடு கூடிய விரைவுத் தன்மை, இவற்றின் மூலம் அரசின் நடவடிக்கைகளை மாற்றி யமைப்பதன் மூலமே பொதுமக்கள் பயன்பெற இயலும்.

**2. மின்னணு வசதியுடன் கூடிய இணைய ஆட்சிமுறை அமைப்பு**

மின்னணு வசதியுடன் கூடிய இணைய ஆட்சிமுறை அமைப்பை நாம் ஏற்றுக் கொள்வதன் மூலம், உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தரமானதொரு பொதுவான தொடர்பு வசதியை ஏற்படுத்தி அரசினுடைய உற்பத்திகளையும், சேவைகளையும் பொதுமக்களுக்கு எங்கிருந்தாலும், எப்பொழுது வேண்டினாலும், எந்த நேரத்திலும் வழங்கிட இயலும்.

**3. உலகளவிலான இணைய வசதி**

உலகளவிலான இணைய வசதியினை பெறுவதை உறுதி செய்யவேண்டும்.

- அவ்வசதிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும் எல்லோரும் எளிதில் வாங்கக்கூடியதாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும்.
- பன்னாட்டு நுழைவு
- தேசிய அளவிலான விளம்பரம்
- சொந்த உபயோகத்திற்கான கணினிகளை தந்திக்கம்பியின்றி காற்றாலைகள் மூலம் இயங்கக்கூடிய தகவல் தொடர்பு சாதனங்கள், டிஜிடல் தொலைக்காட்சிப் பெட்டிகள், செயற்கைக் கோள்கள் மூலம் நேரிடையாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் வசதிகள் போன்ற அனைத்தும் முழுமையாக இயந்திர மயமாக்கப்படவேண்டும்.

**4. உள்நாட்டுச் சந்தையில் குறைந்த விலையிலான, பன்னாட்டு உயர்கடத்தும் திறன்கொண்ட இணைய வசதிகள்**

உள்நாட்டுச் சந்தையில் குறைந்த விலையிலான, பன்னாட்டு உயர்கடத்தும் திறன் கொண்ட இணைய வசதிகள் தடையற்ற அளவில் கிடைக்கச் செய்திடல் வேண்டும்.

**5. தொலைத்தொடர்பு கட்டுப்பாடுகளை விரைவாக நீக்குதல்**

குறிப்பாக,

- உள்ளூர்ப் பகுதிகளுக்கிடையில் தொடர்புகளை உருவாக்குதல்.
- ஒவ்வொரு இணைப்பகத்திலும் பன்னாட்டுத் தொலைத்தொடர்பு வசதி (ISDN), Digital Subscribers Line (DSL) ஆகிய வசதிகளை அளித்தல்.
- கடல்வழியே ஆப்டிக்ஃபைபர் கேபிள்கள் அமைப்பதை ஊக்குவித்தும், பொதுத்துறை மூலமாகவும், தனியார் துறை மூலமாகவும், செயற்கைக்கோள் இணைப்பகங்களை நிறுவியும், பன்னாட்டு தகவல் தொடர்பு வாய்ப்புகளை அதிகரித்தல்.
- தேவைப்படும் தகவல் தொடர்பு திறன்கள் உடன் கிடைக்க வகை செய்தல்.
- தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் வாய்ப்புகளை ஐ.சி.டி.யுடன் ஒருங்கிணைப்பதை அங்கீகரித்தல்.

**6. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தகவல் தொடர்புக்கான பல்வேறு வழிகளையும் ஒருங்கிணைத்தல்**

- ஆப்டிக்ஃபைபர் இணைப்புகள் மூலமாக உள்நாட்டு தகவல் தொடர்பு வசதிகள் விரைவாக மேம்படுவதை ஊக்குவித்து, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

**7. குறைந்த செலவில் வன்பொருள், மென்பொருள்கள் கிடைக்க வகை செய்தல்**

- பழைமையான மற்றும் சீரமைக்கப்பட்ட வன்பொருள்களுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்கிட நிதியுதவிச் செய்தல்.
- செயலாக்கம் மற்றும் துறை சார்ந்த பணிகள் ஆகியவற்றில் பயன்படத்தக்க குறைந்த விலையிலான வரியற்ற பொதுவான மென்பொருள்களை உபயோகப்படுத்தச் செய்தல்.



**8. புதுமையான நிதியுதவி திட்டங்களையும், பொது–தனியார் கூட்டு முயற்சிகளையும் ஊக்குவித்தல்**

- அரசு நடவடிக்கைகளில் பழைய தொழில்நுட்பங்களை கைவிட்டு புதிய நடைமுறைகளை பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல்.
- பள்ளிகளில் கணிப்பொறி அறிவியல் கல்வித் திட்டத்தை குத்தகை அடிப்படையில் நடத்திட நிதியுதவி வழங்குதல்.
- இத்தகைய குத்தகைச் செலவினங்களை மத்திய அரசு திட்டங்களின் கீழ் கொண்டு வருதல்.

**9. தகவல் தொழில்நுட்ப சட்டத்தை அமல்படுத்துதல்**

அரசுத்துறை மற்றும் வியாபாரங்களில் தகவல் தொழில்நுட்ப சட்டத்தை நடைமுறைப்படுத்துவன் மூலம், இச்சட்டம் பற்றிய நிறைகுறைகள் குறித்த மிகப் பெரிய அளவிலான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த இயலும்.

**10. "தேசியக் குடிமகன் அடையாள முறை"**

ஒவ்வொரு குடிமகனையும் அடையாளம் காணத்தக்க பல்வேறு தகவல் தொகுப்புகள் இன்று நடைமுறையில் உள்ளன. எனினும், "தேசியக் குடிமகன் அடையாள முறை" என்ற ஒன்று இல்லாத காரணத்தால் இந்தத் தகவல் தொகுப்புகள் ஒன்றொடொன்று தமக்குள் பரிமாறிக்கொள்ள இயலாத நிலையுள்ளது வருந்தத்தக்கது.

**11. கணினி மூலமான வர்த்தக முறையினை ஊக்குவித்தல்**

கணினி மூலமான வர்த்தக முறையினைப் பெருக்கிட

- இடைத்தரகர்களைத் தவிர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தில் பெருமளவிலான சேதம் தவிர்க்கப்படுகிறது.
- அரசு மற்றும் தனியார் துறைகளில் பெருமளவிலான உற்பத்தியைப் பெருக்கிட வழி செய்கிறது. குறிப்பாக, SME SECTOR களில் தகவல் தொழில்நுட்பம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**12. உள்நாட்டுச் சந்தைகளை ஒருங்கிணைத்தல்**

வரி, காப்புவரி அமைப்பு மற்றும் முன்னுரிமைக்குரிய கொள்முதல் ஏற்பாடுகள் போன்ற சட்டரீதியான ஒழுங்குமுறை விதிகளைத் தளர்த்தி, உள்நாட்டுச் சந்தைகளை கணினி வர்த்தக விதிகளைத் தளர்த்தி, உள்நாட்டுச் சந்தைகளை கணினி வர்த்தக முறையில் மூலம் (e-commerce) ஒருங்கிணைப்பதன் பயனாக வர்த்தக நடைமுறை செழிக்க வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

இறுதியாக,

தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத்தில் – இந்தியாவில் மட்டுமின்றி உலகளவில் ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அதனைத் தொடரும் வகையில், தகவல் தொழில்நுட்பத்தை நாம் செம்மையாக பயன்படுத்துவதன் மூலம் சிறப்பானதொரு ஆட்சி முறையைத் தர இயலும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதனை நடைமுறைப்படுத்திட மத்திய அரசும், தொடர்புடைய அமைச்சகமும் எங்களுக்குப் போதிய ஒத்துழைப்பையும், நிதி உதவிகளையும் வழங்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**– புதுடெல்லியில் 15–7–2000 அன்று நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப அமைச்சர்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.** •

**கொட்டைகளையும் சேர்த்துத் தின்றவர்**

*அரண்மனையில் ஒரு பெரிய விருந்து நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கானவர்கள் அவ்விருந்தில் பங்கு கொண்டனர். மாமன்னர் அக்பரும் பீர்பலும் ஒன்றாக அமர்ந்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.*

*விருந்தில் பலவகையான பலகாரங்கள் பரிமாறப்பட்டன. பலவகையான பழங்களும் பரிமாறப்பட்டன.*

*சக்கரவர்த்தியும் பீர்பலும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டு தமக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.*

*இருவரும் பேரீச்சம்பழக் கொட்டைகளைக் தங்கள் காலடிகளில் துப்பிக் கொண்டிருந்தனர்.*

*பீர்பலிடம் வேடிக்கை செய்யவேண்டும் என்று நினைத்த அக்பர் சக்கரவர்த்தி மெல்லத் தம் காலடியில் உள்ள பேரீச்சம்பழக் கொட்டைகளைப் பீர்பலின் பக்கம் தள்ளிவிட்டார்.*

*இது பீர்பலுக்குத் தெரியாது.*

*திடீரென்று அக்பர், "என்னதான் பேரீச்சம் பழத்தின் மீது உனக்கு ஆசை இருந்தாலும் இப்படியா அளவுக்கு மீறிச் சாப்பிடுவது? இப்படிச் சாப்பிட்டால் உடம்புக்கு ஆகுமா?" என்று கேட்டார்.*

*கீழே குனிந்து பார்த்த பீர்பல் அக்பர் பேரீச்சம்பழக் கொட்டைகள் பூராவையும் தன் பக்கம் தள்ளி இருப்பதை அறிந்துகொண்டார்.*

*"நானாவது வெறும் பேரீச்சம் பழங்களைத்தான் சாப்பிட்டேன், நீங்களோ கொட்டையையும் சேர்த்து அல்லவா தின்றிருக்கிறீர்கள்" என்றார் பீர்பல்.*

*பீர்பலின் நகைச்சுவை அக்பரைப் பெரிதும் கவர்ந்தது.*

★ ★ ★

# கணினி யுகம் கண்டோம், முன்னணியில் நின்றோம்



- இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஆண்டுதோறும் ஏறத்தாழ 38 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள் உருவாகின்றனர். இதில் 19 ஆயிரம் பேர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்றவர்கள்.

- தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (NASSCOM) 1998இல் நடத்திய ஆய்வின்படி சென்னையை முதல் நிலை நகரம் என்று அறிவித்துள்ளது.

- முதலமைச்சரின் தலைமையில் மாநில தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக்குழு (IT Task Force).

- தகவல் தொழில்நுட்பத்திற்கென தனிக் கொள்கையை (IT Policy) உருவாக்கிய முன்னணி மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும்.

- மென்பொருள் முனைவோர்க்கு, தமிழ்நாடு மென்பொருள் ஊக்க மூலதன நிதி (Venture Capital Fund) வசதி.

- டைடல் பூங்கா – அதிநவீன, உலகத்தர வசதிகளைக் கொண்ட, இந்தியாவிலேயே மிகவும் பெரிய மென்பொருள் பூங்கா. ரூ.340 கோடி செலவில், 2000 ஜூலை 4ஆம் தேதி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடக்கம்.

- பழைய மாமல்லபுரம் சாலை, சிறுசேரியில், ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கம்.

- ஆசியாவின் மிகப்பெரிய மென்பொருள் வளர்ச்சி மையம், டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ் (TCS) நிறுவனத்தால் சோழிங்கநல்லூரில் தொடங்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பெண்டபோர் (Pentafour), இன்போசிஸ் (Infosys) மற்றும் போலாரிஸ் (Polaris) நிறுவனங்களும் தங்களது மையங்களை இப்பகுதிகளில் நிறுவியுள்ளன.

- உலகப் புகழ்பெற்ற வேர்ல்டு டெல் (World Tel) நிறுவனத்துடன் சேர்ந்து, தமிழ்நாடு முழுவதும் 13 ஆயிரம் சமுதாய இணைய மையங்கள். இதன் மூலம் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டிட ஏதுவாகும்.

- கணினிப் பயன்பாடுகளில் தமிழ்க் குறியீடுகளுக்குத் தனி இடம் சேர்க்க, தமிழ்நெட் 1999 உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை பிப்ரவரி 7,8 தேதிகளில் நடத்தியது. மாநாட்டில் தரப்படுத்தப்பட்டுள்ள தமிழ் விசைப் பலகை அறிமுகம்.

- உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்.

- இந்தியாவிலேயே முதலாவதாக தமிழ்நாட்டில் 1,200 அரசு மேனிலைப் பள்ளிகளிலும் கணினி அறிமுகம். இதனால் ஆண்டுதோறும் சுமார் 48 ஆயிரம் மாணவர்கள் கணினிப் பயிற்சி பெறுவர்.

- தகவல் தொழில்நுட்ப கல்வியை மேம்படுத்த டானிடெக் என்னும் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 1998இல் உருவாக்கம்.

- 1993–94இல் சுமார் ரூ.2 கோடி என்றிருந்த மென்பொருள் ஏற்றுமதி,

  1999–2000இல் ஏறத்தாழ ரூ.2,000 கோடியாக உயர்வு.

- தமிழ்நாட்டில், 1995–96இல் 34 மென்பொருள் நிறுவனங்கள் இருந்த இடத்தில், இப்போது 600க்கும் மேல் மென்பொருள் நிறுவனங்கள் இருக்கின்றன.

- உலகிற் சிறந்த ஹாலிவுட் படங்களுக்குத் தமிழ்நாட்டில் மென்பொருள் (Animation & Graphics) தயாரிப்பு.

- அரசுத்துறை நிர்வாகம் கணினி மயமாக்கம். முதல் கட்டமாக பத்திரப் பதிவு, மோட்டார் வாகனத்துறை, நிலப்பதிவேடுகள், விற்பனை வரித்துறை மற்றும் வருவாய்த்துறை ஆகியவை கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன.

- இணையப் பயன்பாடு அதிகம் உள்ள தென் மாநிலங்களுள் தமிழகமும், தென் மாநிலப் பெருநகரங்களின் வரிசையில் சென்னையும் முதலிடம் வகிக்கின்றன.

★ ★ ★



# திருக்குறள் விரிவுரை

☐ தமிழ்த்தென்றல் திரு. வி.க.

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்ன? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற்குரிய கருவியுமாகும்.

திருக்குறளை ஆராய்ந்தால், அதன்கண் உலகமிருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர், உலகையே திருக்குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கென்றே பயின்றார். உலகுக்கென்றே வாழ்ந்தார். அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகமாயினர். உலகம் அவராயிற்று. இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவையூட்டும்? அஃது உலக நினைவூட்டுதல் இயல்பே. ஆகவே, திருவள்ளுவர் நினைவு தோன்றும்போது, உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பொன்றுமில்லையென்க.



### உலகம்

உலகம் எது? இவ்வினாவிற்குச் செவ்வனிறை இறுத்தல் அரிது. உலகம் இதுவே என்று அறுதியிட்டுக் கூறல் இயலாது. உலகம் பலவிதம். ஒவ்வொருவர்க்கு ஒவ்வோர் உலகம் உண்டு. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருபோது ஒவ்வோர் உலகம் உண்டு என்று கூறல் மிகப்பொருத்தம்.

ஒருவர் தம் வாழ்வில் எத்துணையோ முறை பிறக்கிறார், எத்துணையோ முறை இறக்கிறார். நொடிக்கு நொடி பிறப்பும் இறப்பும் உறுகின்றன. இந்நிகழ்ச்சியை உணர்ந்து நடப்போர் சிலரே.

ஒருவர் ஒன்றைப்பற்றி ஒருபோது எண்ணங் கொள்கிறார். அவரே அதைப்பற்றி வேறுபோது வேறுவித எண்ணங் கொள்வோராகிறார். இவ்வாறு எண்ணங்கள் தோன்றி நின்று மறைந்து வருகின்றன. தோற்றம் மறைவு என்றால் என்ன? பிறப்பு இறப்பு என்றால் என்ன? இரண்டும் ஒன்றே. 'நாளுநாள் சாகின்றாமால் நமக்குநாம் அழாத தென்னே' என்றார் வளையாபதியாரும்.

பருவுடல் தோன்றுவதும் மறைவதும் மட்டும் பிறப் பிறப்பாகா. எண்ணங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பிறப் பிறப்பின்பாற்பட்டனவே. இப்பிறப்பிறப்பு, மெய்யுணர்வு தோன்றும்வரை நிகழ்ந்து கொண்டே போகும். முகிழ்க்கும் ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வோர் உலகமென்க.

ஆதலால், உலகம் எது என்று எங்ஙனம் அறுதியிட்டுக் கூறுவது?

எண்ணமே உடலும் உலகுமாம். அடிப்படை எண்ணம். எண்ணத்தின்படியே எல்லாம்

உருக்கொள்ளும். எண்ணம் நுண்மை. உரு பருமை.

நாடு

உலகைப் பற்றிப் பலர் பலவாறு கூறுப. அவர்தங் கூற்றுக்களை எடுத்த பொருளுக்கேற்ப இங்கே முக்கூறுபடுத்திக் கொள்கிறேன்; ஒன்று, உலகம் பூதங்களால் ஆக்கப்பட்டதென்பது. இன்னொன்று, உலகம் நாடுகளால் (Nations) ஆக்கப்பட்டதென்பது; வேறொன்று, உலகம் கலைகளால் ஆக்கப்பட்டதென்பது. இம்மூன்றனுள் சிங்க நோக்காக நிற்பது நாடு. நாடு ஒருவகையில் முன்னையதிலும், மற்றொரு வகையில் பின்னையதிலும் ஒன்றும். நாட்டை வெறும் பௌதிகமாகப் பார்ப்பது ஒருவகை; அதைக் கலையாக நோக்குவது இன்னொரு வகை.



நாடு என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமன்று. அது கல்வி, தொழில், அரசு, நாகரீகம், வாழ்வு முதலியவற்றையுங் கொண்டது. நிலப்பரப்பு, பூதகாரியம், கல்வி, நாகரீகம், வாழ்வு முதலியன கலையின் பாகுபாடுகள். இவ்விரண்டையுங் கொண்ட ஒன்றே நாடு என்பது.

தமிழ் நாடு

உலகில் பல நாடுகளிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு பெயருண்டு. நாட்டுப்பெயர்கள் பெரிதும் அவ்வந்நாட்டு மொழியினின்றும் அரும்பியன.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர்; தமிழ்மொழியில் நூல்செய்தவர். அவர் நினைவு தோன்றும் போது தமிழ் நாட்டின் நினைவன்றோ தோன்றுதல் வேண்டும்? உலக நினைவு தோன்றுவதென்னை?

ஈண்டுத் தமிழ்நாடென்றது இப்போதுள்ள 'தமிழ் நாட்'டைக் குறிப்பதன்று. அது பழந்தமிழ்நாட்டைக் குறிப்பது. தமிழ்நாட்டுக்கு அடிகோலி, அதை ஆக்கிய பேரறிஞர் பரந்த நோக்குடையவர். அவர் உலகியலை நன்குணர்ந்தவர். உலகியலில் இருவிதச் சிறப்புக்களுண்டு. ஒன்று சிறியது. மற்றொன்று பெரியது. உலகியல், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலியவற்றிற் கலந்தும், இவற்றைக் கடந்தும் விளங்குவது. சாதி மதம் மொழி நிறம் நாடு முதலியன கலந்தநிலை சிறியது. இவற்றைக் கடந்தநிலை பெரியது. சிறிய நிலை பன்மை; பெரியநிலை ஒருமை. பன்மையில் ஒருமை காண முயல்வது அறிவுடைமை. பன்மையைப் பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாக்குவது அறியாமை.



பழந் தமிழர்

பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படியவில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை. ஒற்றுமையே அவர்க்குப் புலனாகிறது. அவர் நடாத்திய வாழ்வு அத்தகையது.

பழந்தமிழர் மொழியில் ஈண்டு ஒன்று நினைவிற்கு வருகிறது. அது வருமாறு :

**யாதும் ஊரே யாவருங் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே மின்னொடு**
**வானந் தண்டுளி தலைஇ யானாது**
**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉ மென்பது திறவோர்**
**காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை இகழ்த லதனினு மிலமே.**

இப்புறப்பாட்டை உற்று உற்று நோக்குக. நோக்கி, நோக்கி உன்னுக. உன்னி உன்னி அதில் ஒன்றுக. பாட்டுப் பொருளில் வேற்றுமைக்கு இடமுண்டோ? பிணக்குக்கு இடமுண்டோ? எல்லாம் ஒருமை! யாதும் ஊர், யாவருங்கேளிர் (சுற்றத்தார்)

பழந்தமிழரது பரந்த நோக்கு என்னே! என்னே! அப்பழந்தமிழர் நாடு எங்கே? தமிழ் நாடே! உலகாக விளங்கிய தமிழ் நாடே! நீ யாண்டுச் சென்றனை? மீண்டும் எழுவையோ? பழந்தமிழே! உன் நாடு சிறுமண்ணாய்க் கிடக்கிறது. பிரிவுக்கும் பிணக்குக்கும் இரையாகிறது. அஃது உலகாக மீண்டும் விளங்குதல் வேண்டும். திருவள்ளுவர் நாடாதல் வேண்டும். 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்ற உனது விழுமிய கொள்கைக்கோர் இலக்கியமாக நிற்றல் வேண்டும். 'யாதும் ஊரே – யாவரும் கேளிர்' என்ற உனது உள்ளுறையன்றோ இந்நாளில் 'சமதர்மம்' 'சமதர்மம்' (Socialism) என்று விரித்துப் பேசப் படுகிறது? பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நீ சமதர்மம் பேசினை; சமதர்மத்தில் நின்றனை; வாழ்ந்தனை. இந்நாளில் உன்னிலை இரங்கத்தக்கதாயிருக்கிறது. உனது பழைமையைக் குறிக்கோளாகக் கொண்டு இக்காலத்தவர் வாழ்வு நடாத்துவாராக.



திருவள்ளுவர்

திருவள்ளுவர் யார்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சீரிய கொள்கை பிறந்த பெருந் தமிழ்க் குடியில் தோன்றியவர். அவர் நெஞ்சம், சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய சிறுமைக் கட்டுகளில் படிந்து கிடக்கவில்லை. அவர் நெஞ்சில் பரந்த உலகே படிந்து கிடந்தது. அது திருக்குறள் என்னும் நூலாக உருக்கொண்டது. இத்தகைய நூல் ஓர் இனத்துக் குரியதாகுமா? உலகுக்குரிய

தாகுமா? இப்பெரு நூலை அருளிய ஒருவர் ஓர் இனத்துக்குரியராவரா? உலகுக்குரியராவரா? எனவே, திருவள்ளுவர் நினைவு தோன்றும் போது உலகமும் உடன் தோன்றுதல் இயல்பே. இதில் வியப்பொன்றுமில்லை.

**மொழியும் பொருளும்**

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர். அவர்தந் தாய்மொழி தமிழ்; அவர் தமிழில் நூல் செய்தனர். நூலின் மொழி தமிழ். பொருளோ உலகுக்குரிய ஒன்று. இது வெள்ளிடைமலை. இவ்வாறு நூல் செய்தோர் அரியர். செய்வோரும் அரியர். இது பற்றியே தமிழ்நாட்டுச் சமதர்மப் புலவராய், இற்றைஞான்று நமது நடுவண் வாழ்ந்த பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று வீறுகொண்டு மகிழ்ச்சியுடன் ஓதியருளினார்.



**வரலாறு**

உலகுக்கு ஒரு நூலை அருளிய திருவள்ளுவரது உண்மை வரலாறு நமக்குத் தெரியவில்லை. 'இப்போது வழங்கி வரூஉம் அவர்தம் வரலாறு, பின்னே புனையப்பட்டது. பல தமிழாசிரியரது வரலாறுகள் சரித்திர முறையில் நமக்குக் கிடைக்கவில்லை. இது நாடு செய்த பாவம். 'சரிதம்' என்னும் பெயரால் புனைந்துரைகளே பெரிதும் நாட்டில் உலவுகின்றன. அவரவர் அருளிய நூலைக் கொண்டே அவரவர் நிலையை ஊகித்து உணரவேண்டுவது அறிஞர் கடமை.

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் என்னும் தமிழ்ப் பொது நிலையம் எல்லார்க்குங் காட்சி வழங்குகிறது. அந்நிலையத்தைப் பார்ப்போம். அதனுள் புக முயல்வோம். முயன்று புகுந்தால் திருவள்ளுவரைக் காணலாம். திருவள்ளுவர் இறந்துபட்டாரில்லை. அவர் உயிருடன் திருக்குறள் நிலையத்தில் வீற்றிருக்கிறார் உலகீர்! அவரைக் காண எழுக எழுக.

**வைப்புகள்**

ஒரு நிலையத்தில் புகுந்து, அதன்கண் வாழ்வோரைக் காணுதற்குப் பல வாயில்களைக் கடத்தல் வேண்டும். திருக்குறள் நிலையத்துக்கும் பல வாயில்களுண்டு. அவையே திருக்குறளிலுள்ள வைப்புகள். அவற்றைப் பார்ப்பதால், போற்றுவதால், அல்லது ஓதுவதால் மட்டும் அவை திறந்து வழி காட்டா. அவற்றைப் பயின்று பயின்று, அவற்றின் பொருளை உணர்ந்து உணர்ந்து, அவற்றின்படி வாழ்வு நடாத்தல் வேண்டும். இவ்வாழ்வினரை வரவேற்க வாயில்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. வாயில்கள் வழிகாட்டும். திருவள்ளுவரிடஞ் சேர்க்கும்.

**உரையாசிரியர்**

திருவள்ளுவரைத் தாங்காணவும், பிறர்க்குக் காட்டவும் உழைத்தவர் பலர். பலருள் குறிக்கத்தக்கவர் பதின்மர். அப்பதின்மர் பெயர்களை,

**தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிமே லழகர் பரிதி – திருமலையர்**
**மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்**
**கெல்லை யுரையெழுதி னோர்**

என வரூஉம் வெண்பா தெரிவிக்கிறது.

பதின்மருள் முதல் முதல் உரை கண்டவர் தருமர். அவர்க்கே எல்லா வாழ்த்தும் வணக்கமும் உரியன.



இப்பொழுது அச்சாகி வெளிவந்துள்ள உரைகள் இரண்டு.ஒன்று மணக்குடவருடையது. மற்றொன்று பரிமேலழகருடையது.

பழைய உரைகளுள் இறுதியது பரிமேலழகருடையது. இதுவே பெரிதும் போற்றப்படுகிறது. பரிமேலழகர் பெருங்கல்வியாளர். வடமொழி தென்மொழிப் புலவர். அவர்தம் உரையில் அவரது காலத்துக்கேற்ற பொருள்களும், எக்காலத்துக்கு முரிய பொருள்களுமாக இரண்டுஞ் செறிந்து கிடக்கின்றன.

வேறு மொழிப் புலவர் சிலரும் திருவள்ளுவரைக் காண முற்பட்டனர். இன்னும் பலர் முற்படுதல் வேண்டும். திருவள்ளுவர் ஒளி, உலகம் முழுவதும் காணும் நாளே நன்னாளாகும். அந்நாள், யாதும் ஊராகவும் யாவருங் கேளிராகவும் பொலியுந்திருநாளாகும்.

திருக்குறளை யான் இளமையில் ஒருவாறு பயின்றேன். பின்னே மணக்குடவரும் பரிமேலழகரும் உதவியுள்ள உரைகளைத் துணையாகக் கொண்டு ஆய்ந்து ஆய்ந்து பார்த்தேன். இவ்விருவரும் தமிழ்த்தாய்க்கு ஆற்றியுள்ள தொண்டை எம் மொழியால் வழுத்தவல்லேன்! மனமொழி மெய்களால் இருவரையும் போற்றுகிறேன்.

**காலத் திறவு**

திருக்குறள் நிலையத்துக்கு இக்காலத்துக்குரிய திறவு ஒன்று வேண்டும் என்னும் உணர்வு பலரிடை எழுந்ததை யான் அறிவேன். இவ்வுணர்வு அடிக்கடி என்பாலுந் தோன்றி நின்றழிந்ததுண்டு.

திருக்குறளுக்கு ஒரு புத்துரை காண்டல் வேண்டும் என்ற எண்ணம் முதல் முதல் எழுந்தபோது எனக்கு வயது முப்பத்தொன்றிருக்கும். இவ்வுரை எழுதப்புகுந்த பொழுது எனது வயது ஐம்பத்து மூன்று. இந்நாளில் யான் அந்நாளைய கலியாணசுந்தரனா யில்லை. அந்நாளைய கலியாணசுந்தரன் பெரிதும் ஏடுகளையே கட்டி அழுதவன். ஏட்டுப் புழுவாயிருந்தவன். இப்பொழுது ஏட்டுக் கல்வி அவனை விடுத்து ஒருவுகிறது. இயற்கைக் கல்வி அவனைப் புல்குகிறது. இயற்கையின் உள்ளுறையாயுள்ள இறைக் கல்வியை அவன் வேட்டு நிற்கிறான்.




**இயற்கை வாழ்வு**

யான் இப்பொழுது ஏட்டுக்கும் இறைக்கும் இடையில் நிற்கிறேன். இறையருள் கூடின் திருவள்ளுவரை நேராகாணும் பேறு பெறுவேன். மற்றவர்க்கும் அவரைக் காட்டுவேன். இறையருள் எனக்குக் கிட்டுமோ? கிட்டாதோ? அறிகிலேன்.

இயற்கை அன்னையின் திருவருளையாதல் யான் முற்றும் பெற்றேனா? இல்லை. நகர வாழ்வு அதைத் தகைந்து நிற்கிறது. நகர வாழ்வை விடுத்தால் சில சேவைகளுக்குத் தடை நேரும். என் செய்வேன்! பலதிற வேலைச் சூழலிடை மூழ்கி நிற்குஞ் சிறியேன், இயற்கை அன்னையின் திருவருட்டுணை கொண்டு, திருவள்ளுவரைக் காண ஒல்லும் வகை

முயல்வேன். வழுக்கியும் வீழ்வேன். யான் மனிதன், குறையுடையேன். சிறுமையுடையேன். அறியாமை யுடையேன்.

ஏட்டினின்றும் இயற்கையினிடமும், இயற்கை யினின்றும் அதன் உள்ளுறையான இறையினிடமுஞ் செல்லுதல் வேண்டும். இஃதொருவித ஒழுங்கு முறை. இம்முறையைத் தொல்காப்பியனார் செவ்வனே கோலியுள்ளார்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களால் ஆக்கப்பெற்றது. மூன்றனுள் எழுத்துஞ் சொல்லும் ஏட்டுக் கல்விக்குத் துணை செய்வன. பொருள் இயற்கை வாழ்வுக்குத் துணை செய்வது. இயற்கை வாழ்வு இறைவாழ்வைக் கூட்டுதல் இயல்பு. இம்முறை ஈண்டுக் கருதற்பாலது. இம்முறையால் திருவள்ளுவரை வழிபட முயல்கிறேன். இயற்கை அன்னையின் துணை வேண்டும்.

## நூல்

திருவள்ளுவர் அருளிய நூல் திருக்குறள்.

திரு+குறள்= திருக்குறள். திரு, பல பொருள் ஒரு சொல். இங்கே இரண்டு பொருள் குறிக்கத்தக்கன: ஒன்று செல்வம், மற்றொன்று அழகு. செல்வம்; அறம், பொருள், இன்பம், அழகு; கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம். இது பேராசிரியர் கூறியது. குறளில் முச்செல்வமென்னும் அறம்–பொருள்–இன்பம் உண்மையானும், கண்டோரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமாகிய அழகு உண்மையானும் அது, திரு என்னும் பொருந்திய அடைபெற்றுத் திருக்குறள் என்று அழைக்கப்படலாயிற்று. திருவையுடைய குறள் என்று விரிக்க.

குறள் – குறுமை, குறுகியது. குறுகிய பா–குறட்பா. இது குறுவெண்பாட்டு என்றும், குறள் வெண்பா என்றுஞ் சொல்லப்படும். முதல் அடி நான்கு சீரும், இரண்டாம் அடி மூன்று சீருமாக ஏழு சீர் கொண்டது குறள் வெண்பா.

'குறுவெண் பாட்டிற் களவெழு சீரே'

குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்ட ஒருநூல், குறள் என்னும் பெயர் பெறலாயிற்று.

குறள்–குறுமை, பண்புப் பெயர்.

குறள், ஈரடி வெண்பாவுக்காம் போது பண்பாகு பெயராய், இவ்வெண்பாக்களால் ஆக்கப்பட்ட நூலைக் குறிக்கும் போது கருவியாகு பெயராய், இருமடியாகு பெயராதல் காண்க.

## முப்பால்

திருக்குறள் முப்பாலுடையது. முப்பால், அறம்–பொருள்–இன்பம் என்பன. 'வீடு எங்கே? வீட்டைத் திருவள்ளுவர் தனியே வகுத்துக் கூறாது விடுத்த தென்னை?"

இதற்குக் கூறப்படுங் காரணம் பலப்பல. திருவள்ளுவர் வீட்டையுங் கூறினார் என்பதை நிறுவிக் காட்டுதற்கு, 'வீட்டுப்புலவோர்' படும்பாடு என்னே! அவர், 'கடவுள் வாழ்த்து', 'துறவு', 'நிலையாமை', 'மெய்யுணர்வு', 'அவா வறுத்தல்' முதலிய அதிகாரங்களை எடுத்துக் காட்டுவர். மூலை முடுக்குகளிலுள்ள சில குறட்பாக்களையும் சொற்றொடர்களையும் சொற்களையும் எடுத்துக் காட்டுவர். திருவள்ளுவர் மீது அவர் கொண்டுள்ள அன்பு பாராட்டற்குரியது. அவர் எடுத்துக்காட்டும் அகச்சான்றுகளெல்லாம் திருவள்ளுவர் வீட்டுண்மையில் உறுதியுடையார் என்பதை மறுப்பார் யார்? 'திருவள்ளுவர் வீட்டுக்கெனத் தனிப்பால் வகுத்துக் கூறாமைக்குக் காரணமென்னை' என்னும் வினாவிற்கு எடுத்துக்காட்டுக்களில் யாண்டாயினும் விடையிருக்கிறதா என்பது சிந்திக்கத் தக்கது.

வீடு, வாக்கு மனங்கட்கு எட்டாதது அத்தகைய ஒன்றை எவ்வாக்கால் விளம்புதல் கூடும்? இதுபற்றியே பரிமேலழகரும், 'வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது. இலக்கண வகையாற் கூறப்படாமையான், நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமே யாம்' என்று ஒருவாறு விளக்கிப் போந்தனர்.

அறவழி நின்று, பொருளாக்கி, இன்பம் நுகர்வோர் வீடு அடைதல் ஒருதலை. அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடு, அடைவாகவும் பயனாகவுமுள்ள ஒன்றை எப்படிச் சொல்லால் அறுதியிட்டுச் சொல்வது? வீடு, அறம் பொருள் இன்பங்களினின்றும் வேறுபட்டு நிற்பதன்று. அது மூன்றினும் விராவி நிற்பது. திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விராவியே நிற்கிறது.

வீடு, விடு என்னும் அடியினின்றும் பிறந்தது. விடுதலை வீடு, கட்டினின்றும் விடுதலையடைவது வீடு. வீடு எங்கிருப்பது? அதற்கென ஒரு தனியிடம் உண்டோ? கட்டுடையார்க்கு அது புலனாகாமையால், அவர் அதற்கென ஒரு தனியிடம் வகுத்தனர் போலும்! வீட்டை மறைத்திருப்பது கட்டு. கட்டு அறுந்ததும் வீடு பொருளாகும்.



## கட்டு

கட்டும், கட்டின் பாகுபாடுகளும் திருக்குறளில் சிலவிடங்களில் புகுந்திருக்கின்றன. 'இருள்சேர் இருவினை', 'அழுக்காறவா வெகுளி இன்னாச்சொல்', 'பிறப்பென்னும் பேதைமை', 'சார்புகெட', 'காமம் வெகுளி மயக்கம்', 'பற்றுவிடற்கு' என வருஉம் திருக்குறள் மொழிகளை நோக்குக.

கட்டறுந்தால் மனம் மாசிலதாகும். மாசற்ற இடம் வீடாய்ப் பொலியும். இந்நிலையுற்றார்க்கு எல்லாம் வீடே 'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று அப்பரும், 'அருநரகவையும் நீ என்று நம்மாழ்வாரும் 'பரலோக ராச்சியம் உம்முடைய உள்ளத்திலிருக்கிறது' என்று கிறிஸ்து பெருமானும் அருளிய செம்மொழிகளை உன்னுக. இம்மொழிகளை



இப்பெரியார் யாண்டிருந்து அருளினர்? இவ்வுலகத்தில் இருந்தே அருளினர். இவருக்கு இவ்வுலகம் எவ்வாறு தோன்றிற்று? வீடாகவே தோன்றிற்று. ஆதலால், வீடு என்பது ஓரிடத்தில் தனியே இருப்பதன்றென்க.

## பழைமை

கட்டையறுத்தற்கு அறவழியில் நின்று, கல்வி பயின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பம் நுகர்தல் வேண்டும். இச்செந்நெறியே வாழ்வுக்குரியது. இதுவே இயற்கை வாழ்வு. இந்நுட்பமுணர்ந்த அறிஞர், அறம், பொருள், இன்ப வாழ்வையே உலகுக்கு அறிவுறுத்தினர். இம்மூன்றிற் கலவாத வீடு ஒன்று தனித்திருப்பதாக அவ்வறிஞர்க்குத் தோன்றவில்லை. அறம் பொருள் இன்ப வாழ்வில் வீடு பொலிதல் அவர்க்கு நனிவிளங்கிற்று. உண்மை கண்டவர் உண்மை உரைத்தல் இயல்பு.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றில் வீடும் விரவி வருமாறு கூறுவது பழைய முறை. பழைய நூல்கள் யாவும், இம்முறைவழியே பிறந்தன. இடைக்காலத்தில் தோன்றிய நூல்களும் உரைகளும் பழங்கொள்கையைக் கலக்கிவிட்டன. இதற்குக் காரணம் காலப்போக்கென்று கூறுவது பொருத்தம். திருவள்ளுவர் முப்பாலே வகுத்தருளினர்.

**போலி வீடு**

நாளடைவில் வீட்டைப்பற்றிய தனி நூல்கள் பெருகின. இவற்றுள் மிகச் சிலவே பழங்கொள்கைக்குத் துணை போவன. பல, அறம் பொருள் இன்ப வாழ்வில் பொருளற்ற நிலையாமையையும், இயற்கையை வெறுத்தல் – பெண்ணை வெறுத்தல் என்னும் போலித் துறவையும், நுழைத்து நல் வாழ்வுக்கு இடர் செய்தன. இந்நூற் பெருக்கால், அறம் – பொருள் – இன்ப வாழ்வு அருகுவதாயிற்று.

மக்கள் எண்ணம், அறம் பொருள் இன்பக் கலப்பற்ற போலி வீட்டில் – வெறும் பாழில் – படிந்தது. அதனால் மன்பதையில் தீயொழுக்கம் புகுந்தது. இந்நாளில் உலகம் எக்காட்சி வழங்குகிறது? கொலையுங் களவுங் கள்ளுங் காமமும் பொய்யுந் தாண்டவம் புரியாத இடமும் உளதோ?

தனித்த வீடென்று அறம் பொருள் இன்ப வாழ்வை வெறுக்க ஏவும் நூல்களை இயற்றுவது பாவம். அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடாயிருத்தலான், வீட்டைத் தனியே பிரித்துக் கூறுவது எற்றுக்கு? இது வெறும் பாழைக் கூறுவதாக வாக்கு மனமுடைய மக்களால் கொள்ளப்படும். அறம் பொருள் இன்ப வாழ்வுக்குரிய நூல் செய்வோரே நலஞ் செய்வோராவர்.

அறம் – பொருள் – இன்பம் – அற்ற தனித்த வீட்டு நூல்களால் உலகம் உற்ற அல்லல் போதும், போதும், அறம் பொருள் இன்ப வாழ்வு, வீட்டை உணர்த்த வல்லது. ஆதலால், இந்நாளில் அறம் பொருள் இன்ப வாழ்வு அதாவது இயற்கை வாழ்வு பெருகுதல் வேண்டும். இதற்கு உறுகருவியாகத் துணைபுரியவல்லது திருவள்ளுவரது முப்பால் நூல்.

**மரபு**

திருவள்ளுவர் அருளியது முப்பால் நூல். (முக்கால், அறம் – பொருள் – இன்பம் என்பன) அறமும், பொருளும் புறத்தில் அடங்குவன. இன்பம் அகத்தில் அடங்குவது. அகம் புறம் என்னும் இரண்டும், அறம் பொருள் இன்பம் என்று மூன்றாக விரிந்தன.

'அகம் புறம்' தமிழ் மரபென்றும், 'அறம் பொருள் இன்பம்' வடமொழி மரபென்றும் சொல்வோரும் உளர். 'எதனின்றும் எது பிறந்தது? எது முன்னையது? எது பின்னையது? என்று போரிடுவோரும் உளர். போராட்டத்துக்கும் திருவள்ளுவர் நூலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பது எனது கருத்து. திருவள்ளுவர் நூல், மரபு கடந்தது. அது மன்பதைக்குரியது. அதை 'மரபு' என்னுஞ் சிறையில் புகுத்த முயல்வது அறமாகாது.

உண்மை எவருடைமை? அது தமிழருடையதா? மற்றவருடையதா? ஓர்க. தமிழறிஞரிடை 'அகம் புறம்' என்று தோன்றிய உண்மை. மற்றவரிடை 'அறம் பொருள் இன்ப'மாகத் தோன்றியிருக்கலாம். இவரிடை 'அறம் பொருளின்ப'மாகத் தோன்றிய உண்மை, அவரிடை 'அகம் புற'மாகத் தோன்றியிருக்கலாம். ஒவ்வொரு நாட்டறிஞரிடை ஒவ்வொருவித உண்மை தோன்றும். அஃது அவ்வந்நாட்டாருடைமை என்று நினைப்பது தவறு. அறிஞர் எந்நாட்டவராயினும் அவர் காணும் உண்மை உலகுக்கு உரியதாகும். அதை, மரபின் பாற்படுத்திப் போரிடுவது அறியாமை. அறிஞர் உலகுக்கு உரியவர். அவர் பிறந்த நாட்டுக்கு மட்டும் உரியவராகார்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்தவர். தாய் மொழியை நன்கு பயின்றவர். அவர் அந்நாளில் தமிழ்நாட்டிற் புகுந்த பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலுள்ள நூல்களையும் பயின்றிருப்பர். திருவள்ளுவர் தாம் பெற்ற கலைப்புலமையளவில் நின்று திருக்குறளை யாத்தனர் என்று சொல்வதற்கில்லை. இதனை அவர்தம் நூலை ஆராய்வதால் தெளிதல்கூடும்.

திருக்குறளை ஆய்ந்து பார்த்தால், அது கலைப்புலமை கடந்த இயற்கைப் புலமையால் முகிழ்த்த தெள்ளறிவினின்றும் பிறந்ததென்பது விளங்கும். ஆராய்ச்சியாளர், சாதிவெறி மதவெறி மொழி வெறி முதலிய வெறிகளற்றவராயிருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர், கற்பன கற்றார், கேட்பன கேட்டார். அவர், தாம் கற்றனவும் கேட்டனவும் வாழ்வில் ஒன்றப்பெறுதற்கு இல்வாழ்க்கையேற்று, இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தி, அறவழியில் நின்று, தொழில் புரிந்து, பொருளீட்டி, இன்பந்துய்த்து, நன்மக்களைப் பெற்று, அன்பராய், விருந்தோம்பி, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண்மை எய்தி, மனமாசகன்ற அறவோராய், தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறுதல் வேண்டித் திருக்குறள் என்னுந் தனி நூலை அருளினர்.

நாடு, தனது பழங்கொள்கையினின்றும் விழ்ந்து, சாதி வெறி மதவெறி மொழிவெறி முதலிய சிறுமைகட்கு இரையானபோது, அவ்வவ் வெறியர் திருவள்ளுவரைப் பற்றிப் பலப்பலவாறு கூறலாயினர். வெறி ஏறிய மதியில் உண்மை விளக்குங்கொல்? வெறியற்ற மதிகொண்டு திருக்குறளை ஆராய்க. ஆராய்ந்தால் திருக்குறள், மரபு கடந்த ஒரு நூலாகவே விளங்கும்.

**–'குறளமுதம்' நூலிலிருந்து**
**வெளியீடு : தமிழ் வளர்ச்சித்துறை**






# உருது அகாடமி

இன்று காலையிலும் மாலையிலும் உருது மொழி ஒலியை கேட்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். காலையில் எப்படி என்று கேட்பீர்கள். காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் திருமகன் பரூக் அப்துல்லா என்னைச் சந்திக்க வந்தபோது, அவருக்கு டெல்லியிலே இருந்து வந்த தொலைபேசியிலே என் இல்லத்தில் என் அருகில் இருந்து தொடர்பு கொண்டு உருது மொழியிலே பேசினார்.

காஷ்மீரத்தில் உருதுமொழி ஆட்சிமொழி. அந்த ஆட்சிமொழியை தன்னகத்தே கொண்டிருக்கின்ற காஷ்மீரத்து முதல்வர் அவர்களின் உருதுமொழி ஒலி காலையிலே. உருது அகாடமியுடைய தொடக்க நிகழ்ச்சி இங்கே நடைபெறுகிறது இன்று மாலையிலே. இந்த இரண்டுக்கும் உள்ள பொருத்தத்தை நான் எண்ணிப் பார்க்கின்றேன். எப்பொழுதுமே என்னுடைய வாழ்க்கையில் இப்படி பொருத்தமான சில காரியங்கள் நடைபெறுவதுண்டு. அது இன்றைக்கும் நடைபெற்றிருக்கின்றது.

**15 தேசிய மொழிகளில் உருது மொழியும் ஒன்று**

இந்திய அரசியல் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பதினைந்து தேசிய மொழிகளில் உருதுவும் ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது. இது இந்தியாவிலே ஜம்மு காஷ்மீரில் ஆட்சிமொழி; பீகார் மாநிலத்தில் இரண்டாவது ஆட்சிமொழியாக வீற்றிருக்கின்றது. அந்த மொழியினுடைய பெருமைகள் குறித்தும், அதிலே புகழ்பெற்ற புலவர்கள், வல்லுநர்கள் குறித்தும் பேராசிரியர் அவர்களும் மற்றும் உரையாற்றிய பெரியவர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

அந்த அகாடமி உருவாக ஒரு வரலாறு உண்டு. பெரிய வரலாறு ஒன்றுமில்லை. சிறிய வரலாறுதான். ஆர்க்காடு இளவரசர் திரு. நவாப் ஜி.எம். அப்துல் காதர் 13–12–1991 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாட்டில் உருதுமொழியைப் பரப்பவும், அதன் வளர்ச்சிக்கு உதவிடவும் "உருது அகாடமி" ஏற்படுத்த வேண்டும் என்று அன்றைய தமிழக அரசினை கேட்டுக் கொண்டார். பின்னர், மேலும் பல இஸ்லாமிய அமைப்புகளிடம் இருந்து உருது அகாடமி அமைப்பதற்கான கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. எனினும், இது குறித்து முந்தைய அரசினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

### உருது அகாடமி அமைக்க இந்த அரசு நடவடிக்கை

1996இல் இந்த அரசு அமைந்த பிறகுதான் உருது அகாடமி அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும் விவரிக்க விரும்புகிறேன். பிற மாநிலங்களில் உருது அகாடமி எவ்வாறு செயல்படுகிறது என்பதனைப் பற்றி அறிவதற்கு அதன் அமைப்பு விதிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

10-8-1999 அன்று உயர்கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள உருது அகாடமிகள் செயல்படும் முறைகளை அறிந்து, அரசுக்கு அறிக்கை அளித்திட, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முத்துவீர கணபதி, சென்னைப் பல்கலைக்கழக உருதுத் துறை பேராசிரியர் சையத் சஜ்ஜட் உசைன் ஆகியோர் அம்மாநிலங்களுக்கு அனுப்பப் பட்டனர்.

அவர்கள் இருவரும் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களுக்குச் சென்று, அம்மாநிலங்களில் செயல்படும் உருது அகாடமிகள் குறித்து ஆய்வுசெய்து, தமிழக அரசுக்கு அறிக்கைகளை வழங்கினர். அந்த அறிக்கையின் அடிப்படையில், 25-10-1999 அன்று தமிழகத்தில் உருது அகாடமி அமைக்கப்படும் என்று கழக அரசினால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 27-2-2000 அன்று தமிழகக் கல்வியமைச்சர் பேராசிரியர் தலைமையில் உருது அகாடமி செயல்படும் என்று தமிழக அரசினால் ஆணையிடப்பட்டது.

அந்த ஆணையைத் தொடர்ந்து, தமிழக அரசின் "உருது அகாடமி" இன்று முறைப்படி தொடங்கி வைக்கப்படுகிறது.

### நட்புக்கு கருவியாக பயன்பட்டது உருது மொழி

வரலாற்று ரீதியாக பார்த்தால் இந்தியாவின் வடபகுதிக்கு இஸ்லாமியர்கள் முதன்முதலாக வந்த காலத்தில் இருந்து இந்த மொழி தன் உருவத்தைப் பெற ஆரம்பித்தது என்று கூறப்படுகிறது. புதிதாக வந்த முஸ்லிம்கள் இந்திய மக்களின் தொடர்புக்கும், நட்புக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்திய மொழி உருதுமொழி என்று கருதப்படுகின்றது.

இங்கே பேசிய நிசார் அகமது குறிப்பிட்டார்கள். அவர் பேசியது உங்களுக்கு எப்படி புரிந்தது என்று கேட்டார்கள். அவருடைய பேச்சை சுருக்கமாக தமிழிலே எழுதி முதலிலே என்னிடத்திலே கொடுத்திருந்தார்கள். எனவே, அவர் குறிப்பிட்டிருப்பார் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். இந்தியாவில் தமிழ்நாட்டில் இன்றைக்கு எங்களிடத்திலே இஸ்லாமியர்களுக்கும், இங்குள்ள மற்றவர்களுக்கும் இருக்கின்ற உறவு பலமான உறவு; வேறு எங்கும் இல்லா அளவிற்கு இங்கே நட்பும், உறவும் செழித்திருக்கிறது என்று நிசார் அகமது குறிப்பிட்டிருந்தார்.

> **உருதுமொழி வேறு எங்கேயோ உள்ள ஒரு நிலத்தின் மொழி என்று கூறக்கூடாது. உருதுமொழியும் இந்திய மொழிதான் என்பதை நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.**

அப்படி முஸ்லிம்கள் தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறுவதற்கு ஏற்பட்ட அவசியத்தை நிறைவேற்றுகிற நிலையிலே, ஒரு புதுக்கருவியாக வாய்த்ததுதான் உருதுமொழி என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் தம் மொழியின் சில சொற்களையும், அந்தப் பகுதியிலே மக்கள் பேசிவந்த இந்திய மொழிச் சொற்களையும் பயன்படுத்தி, தங்களை அறியாமலேயே ஒரு புதுமொழி தோன்றுவதற்கு வழிவகுத்தார்கள். அந்த மொழிதான் படிப்படியாக வளர்ச்சி பெற்று, உருது என்று பெயர் பெற்றது.

### உருது மொழியும் இந்திய மொழிதான்

இந்தியப் பண்பாடும், முஸ்லீம் பண்பாடும் இணைந்தமைக்கு ஒரு பாலமாக உதவிய மொழி என்று உருது மொழியைச் சொல்லலாம். இம்மொழியில் அரபு, பார்சி, துருக்கி, சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் இருந்தும் சொற்கள் வந்து சேர்ந்துள்ளன. உருதுமொழி வேறு எங்கேயோ உள்ள ஒரு நிலத்தின் மொழி என்று கூறக்கூடாது. உருது மொழியும் இந்திய மொழிதான் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உருதுமொழியிலே வரலாற்றுக் காரணங்களால் பார்சி - அரபு மொழிகளின் செல்வாக்குப் பலவகைகளில் இடம்பெற்று இருந்தாலும், இலக்கண ரீதியாக இது முற்றிலும் ஓர் இந்திய மொழியாகவே திகழ்கின்றது. உருதுச் சொற்களின் புள்ளிவிவரப்படி, இம்மொழியில் இந்திய மொழிச் சொற்களின் எண்ணிக்கை 73.5 விழுக்காடு ஆகும்.

பார்சி - அரபுச் சொற்களின் எண்ணிக்கை 25.5 விழுக்காடும் மற்ற ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் 1 விழுக்காடும் அமைந்துள்ளமை தெரிய வருகிறது. ஆகையால் இது அடிப்படையில் ஓர் இந்திய மொழியே என்பதில் ஐயமில்லை.

உருதுவில் மொத்த எழுத்துக்கள் 37. இது பார்சி-அரபு மொழிகளின் வரிவடிவத்தில் எழுதப்படுகின்றது. உருதுமொழி வளர்ச்சிக்கு உதவியவர்கள் பலர் இந்துக்கள் என்று சொல்லும்பொழுது மிகப் பெருமையாக இருக்கிறது. உருது மொழி வளர்ச்சிக்கு முஸ்லிம்களைத் தவிர, இந்துக்கள் மட்டுமல்ல, சீக்கியர்களும், கிறித்தவர்களும் போற்றத்தக்க வகையிலே தங்களுடைய பங்கினை வழங்கியுள்ளார்கள்.

### முதல் உருது செய்தித்தாளை வெளியிட்ட இந்து அறிஞர்

முதலாவது உருதுக் கசல், ஒரு பிரபலமான உருதுச் செய்யுள் வடிவம், இதனை இயற்றியவர் சுந்தர பான்பிராமன் என்பவர். இவர் ஔரங்சீப் காலத்தில் வாழ்ந்த ஓர் இந்துக் கவிஞர் ஆவார். முதல் உருதுச் செய்தித்தாளை வெளியிட்டவர் ஓர் இந்து அறிஞரான இராசாராம் மோகன்ராய். இராம் பாபு சக்சினா என்ற ஓர் இந்து ஆசிரியரே உருது இலக்கிய வரலாற்றை முறையாக முதன்முதலில் எழுதினார்.

புகழ்பெற்ற இந்திய நாவல் சிறுகதை ஆசிரியர் பிரேம் சந்த் இந்து குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் அடிப்படையில் ஓர் உருது எழுத்தாளர் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தியாவில் மேன்மைக்குரிய இலக்கியப் பரிசாக விளங்குவது ஞானபீடப் பரிசு. இப்பரிசைப் பெற்ற இரகுபதி சஹாய்பிராக் கோரக்பூரி ஓர் உருது கவிஞர். இவர் ஓர் இந்துக் குடும்பத்தைச் சார்ந்த ஆங்கிலப் பேராசிரியர்.

### சிறப்பு வாய்ந்தவை இக்பாலின் கவிதைகள்

இக்பால் பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். இக்பாலின் உருதுமொழிக் கவிதைகள் சிறப்பு வாய்ந்தவை; எழுச்சி வாய்ந்தவை; ஆங்கில முறையைத் தழுவி கற்பனை, கருத்து, மொழிநடை முதலியவற்றில் உருதுமொழியை செழித்தோங்கச் செய்தவர்களில் இக்பால் குறிப்பிடத்தக்கவர். இவர் மேனாட்டுக் கருத்துக்கள், பண்பாடு முதலியவற்றை மதிப்பிட்ட சிறந்த கவிஞர்; கீழ்நாட்டு மக்களுடைய குறைகளையும் உணர்ந்து கண்டித்துள்ளார். விடுதலை, அமைதி, சகோதரத்துவம், சமத்துவம் முதலியவற்றை இக்பால் மக்களுக்கு எடுத்தோதினார்.

இவருடைய கவிதைகளை ஆய்வு செய்து பெரிதும் பாராட்டி எழுதியவர்கள் பலர். அவர்களில் அரியானா மாநில ஆளுநராக விளங்கிய சையத் முசாபர் ஹூசைன் பர்னே அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர் "IQBAL - Poet - Patriot of India" என ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட நூலில் இக்பாலின் கவிதைகளை மிகவும் போற்றிப் பாராட்டியுள்ளார்.

"After 1970, there was a renaissance of Iqbal's poetry in India. In his poetry, India is referred to as the 'best country in the World'. He admired its unique way of life, its undying civilization and wrote some of the finest verses to its mountains, rivers and valleys"

### இந்தியாவில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய இக்பால் கவிதைகள்

அதாவது,

"1970ஆம் ஆண்டிற்குப் பின், இக்பாலின் கவிதைகள் இந்தியாவில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அவர் தமது கவிதைகளில் இந்தியாவை "உலகின் மிகச்சிறந்த நாடு" என்று குறிப்பிடுகிறார். இந்தியாவின் சிறந்த வாழ்க்கை முறையையும், இறவாப் புகழ் படைத்துள்ள இதன் பண்பாட்டுச் சிறப்பையும் எண்ணிப் பெருமிதம் அடைகிறார். இந்தியாவின் மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் மீது சிறந்த பாடல்களை எழுதியுள்ளார்.

### நாட்டுப்பற்றை குறிக்கும் இக்பாலின் கவிதைகள்

இக்பாலின் உருதுக் கவிதைகளை மிக அருமையாக பர்னே புகழ்ந்திருப்பதற்கு இது ஒரு சான்றாகும்.

இக்பாலின் கவிதைகளில் நாட்டுப்பற்றைக் குறித்த கவிதைகள் ஒன்றிரண்டை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

**"இவ்வுலகில் நீ வாழ விரும்பினால்**
**உன் அன்பிற்குரிய ஒருவரை**
**உன்னிடமிருந்து**
**பிரிக்கச் செய்திடும்**
**வேற்றுமைகளுக்கு நீ**
**இடம் கொடுத்திடாதே!**
**மாந்தர்களிடம் செலுத்தும் அன்பு**
**இன்பச் சுவைதரும் பழரசம்**
**போன்றது"**

- என்கிறார்.

மனித நேயத்தை வலியுறுத்திய இக்பால் மற்றொரு கவிதையில்,

**"அறிந்தோர், அறியாதார்;**
**செல்வர், வறியோர்**
**அனைவரிடமும் அன்புகாட்டு"**

இக்பாலின் உருதுக்கவிதை வலியுறுத்தும் சீரிய கொள்கை ஒன்று, நான் மிகவும் ரசித்த கவிதை இது.

> **முதலாவது உருதுக் கசல், ஒரு பிரபலமான உருதுச் செய்யுள் வடிவம் இதனை இயற்றியவர் சுந்தர பான்பிராமன் என்பவர். இவர் ஔரங்சீப் காலத்தில் வாழ்ந்த ஓர் இந்துக் கவிஞர் ஆவார். முதல் உருதுச் செய்தித்தாளை வெளியிட்டவர் ஓர் இந்து அறிஞரான இராசாராம் மோகன்ராய். இராம் பாபு சக்சினா என்ற ஓர் இந்து ஆசிரியரே உருது இலக்கிய வரலாற்றை முறையாக முதன்முதலில் எழுதினார்.**

**"மரணமே இறுதியானது**
**என்பதை**
**நான் அறிவேனாதலால்**
**நீண்ட ஆயுளை நான்**

விரும்பவில்லை!
ஆடுகளைப் போல்
அடிமைகளாக
நூறாண்டுகள் வாழ்வதைக்
காட்டிலும்,
சிறிது காலமே ஆயினும்
சிங்கம்போல் வாழ்வதே சிறப்பு"

இது என் உள்ளத்தை கவர்ந்ததில் ஆச்சரியம் இருக்காது என்பது உங்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன்.

தமிழில் மொழி பெயர்த்த இக்பாலின் கவிதைகள்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் நல்ல கவிஞர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் இக்பாலின் கவிதைகளை தமிழிலே மொழி பெயர்த்திருக்கிறார். அதில் ஒன்றிரண்டை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உறங்கும்
குழந்தையின் கையில் இருந்து
வண்ணப் பொம்மைகள்
நழுவி
விழுவதுபோல்,
இலையுதிர் காலத்தில்
பூக்களின் இதழ்கள்
பூமியில் உதிர்கின்றன.

வாழ வேண்டுமா –
அப்படியானால்
ஆபத்துகளிடையே
வாழுங்கள்

'சுறா மீனின் ஆபத்து இல்லாத
கடலில்
எனது படகைச் செலுத்த
மாட்டேன்'

ஆபத்து இருக்கிற இடத்திலே தான் துணிந்து செல்லவேண்டும். ஆபத்தை நோக்கி எதிர்நீச்சல் போடவேண்டும். எதிர்நீச்சல் போடுவதற்காக ஒரு இயக்கம் தமிழ்நாட்டில் தொடங்கியதும், அது பெரியாரின் கண்டுபிடிப்பாக இருந்ததும், அண்ணாவின் வழிகாட்டுதலோடு நாங்கள் எல்லாம் அந்த இயக்கத்திலே இருப்பதும் நீங்கள் அறியாதது அல்ல. அதைத்தான் இக்பால் சுட்டிக்காட்டுகிறார்.

'இளம்பிறையே!
உனது
ஏழ்மை கண்டு வருந்தாதே
பூரண நிலா – உன்னுள்தான்
புதைந்திருக்கிறது'

இளம்பிறையாக ஒரு கீற்று மாதிரி இருக்கும்பொழுது, அதிகம் சொத்து சுகமில்லாத ஏழ்மை நிலை நிலாவுக்கு என்று எண்ணத் தோன்றுகிறதாம். அப்படி எண்ணாதே, வருத்தப்படாதே. உனக்குள்ளேதான் பூரண நிலா இருக்கிறது. இன்னும் பதினைந்து நாட்களில் வெளியே வரும் என்று மிக அழகாக அந்தக் கவிதை வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படியே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இன்றின்
கர்ப்பத்திலிருந்து
புதிய சூரியன் பிறந்து
விட்டான்.
முழுகிப் போன
நட்சத்திரங்களை எண்ணி
இன்னும் எத்தனை காலம்
ஆகாயம் துக்கம்
அனுசரிக்கும்?
பறக்க வேட்கை
படைத்தவர்கள்
நதிகளையே ஒப்புவதில்லை
உனது ஆற்றலை உணராது
எத்தனை காலம்
பனித்துளிகளைச்
சட்டைப்பையில் நிரப்பிக்
கொண்டிருப்பாய்?
பூக்களும் கனிகளும்
கொண்டுவரும்
வசந்தஅலை,
காத்திருக்கும்
தோட்டக்காரனிடம் கேட்கும்
'காயம்பட்ட ரோஜாவுக்குக்
களிம்பு தேடி
எத்தனை காலம் இன்னும்
அலைவாய்?'

### உருது அகாடமி ஆற்ற வேண்டிய பணிகளில் இவையும் இணையும்

இத்தகைய கவிதைகளை எல்லாம் நான் படித்துக் காட்டுவதற்கு காரணமே இந்த உருது அகாடமி ஆற்ற வேண்டிய பணிகளில் இவைகளும் இணையும் என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

இங்கே துணைத்தலைவர் பேசும்போது ஆரோக்கியமான இலக்கியங்களை எல்லாம் பரப்புவோம்; கவிதா மண்டலங்கள் நடத்துவோம்; அதுமாத்திரம் அல்ல, மாணவர்களிடத்திலே, இளைஞர்களிடத்திலே இந்த இலக்கியப் புதுமைகளை எல்லாம் கொண்டு சேர்ப்போம் என்றெல்லாம் குறிப்பிட்டார்.

அதற்கு இந்த உருது அகாடமி நிச்சயமாக வழிவகுக்கும். வழிவகுப்பதற்காகத்தான் இது தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய உருமொழியின் இலக்கியங்கள் ப்றறி எனக்கும், பேராசிரியருக்கும்கூட இதிலே சுயநலம் உண்டு. உருது மொழியிலே இப்படிப்பட்ட இலக்கியங்களை படித்துக் காட்டினேனே – இக்பாலின் கவிதைகளைப் போன்ற எவ்வளவு அருமையான கவிதைகள், செய்யுள்கள் உருதுமொழியில் இருக்கக்கூடும். அவைகளை எல்லாம் நாங்கள் படிப்பதற்காகவாவது தமிழிலே வரவேண்டும் அல்லவா? அதற்கு இந்த அகாடமி பயன்படவேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

### பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உருதுபேசும் முஸ்லிம்கள்

இங்குள்ள இஸ்லாமியர்கள் எல்லா நன்மைகளையும் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். முதலிலே ஒன்றை சொல்கிறேன். உருதுபேசுகின்ற முஸ்லிம்களுக்கு ஒரு கோரிக்கை நீண்டகாலமாக இருந்தது. நான் கடந்த காலத்திலே இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது சட்டப்பேரவையிலே உருது பேசுகின்ற முஸ்லிம்களைப் பின்தங்கிய சமுதாயத்தில் சேர்க்கவேண்டும் என்று ஒரு வாதம் நீண்டநேரம் நடைபெற்றது. அப்பொழுது என்னுடைய அமைச்சரவையிலே இருந்த பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் எழுந்து, "உருது பேசுகின்ற முஸ்லிம்களைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க இடமில்லை" என்று சொன்னார்.

ஏன் இடமில்லை என்று எதிர் வரிசையில் இருந்த முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

### நம்பிக்கையோடு வாழுங்கள் – உங்களோடு எப்போதும் நாங்கள் இருப்போம்

நான் எழுந்து என்னுடைய அமைச்சரை உட்காரச் சொல்லி விட்டு அமைதியாகச் சொன்னேன். "சட்டத்திலே இடமில்லை என்கிறார் அமைச்சர், பரவாயில்லை. சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும் என் இதயத்திலே இடம் இருக்கிறது" என்று சொல்லி, உருது பேசுகின்ற முஸ்லிம்களும் இனிமேல் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறுவார்கள் என்று அறிவித்தேன். அது உங்களுக்குத் தெரியும்.

நபிகள் நாயகத்தினுடைய விழா விடுமுறையோடு சம்பளத்தோடு கூடிய விழாவாக தமிழகத்திலே முதன்முறையாக அறிவித்து செயல் படுத்திய அரசு இந்த அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அரசை பின்பற்றித்தான் இந்திய அரசு வி.பி.சிங் காலத்திலே அதனை அறிவித்தது என்பதனையும் நீங்கள் அறிவீர்கள். எனவே என்றென்றும் உங்களோடு இருப்பவர்கள் நாங்கள்; எப்பொழுதும் இருப்போம். நீங்களும் அவ்வாறே அந்த நம்பிக்கையோடு வாழலாம் என்பதைத் தெரிவித்து இந்த உருது அகாடமியை தொடங்கி வைப்பதிலே அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**– தமிழ்நாடு அரசு உருது அகாடமியை 21-7-2000 அன்று சென்னையில் தொடங்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**

★ ★ ★

**இந்தியாவின் சிறந்த வாழ்க்கை முறையையும், இறவாப் புகழ் படைத்துள்ள இதன் பண்பாட்டுச் சிறப்பையும் எண்ணிப் பெருமிதம் அடைகிறார். இந்தியாவின் மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள் ஆகியவற்றின் மீது சிறந்த பாடல்களை எழுதியுள்ளார்.**

## தமிழகத்திலேயே முதன்முறையாக காவல்துறையினருக்கென தனி நூலகம்

கோவை மாநகர் காவல் ஆளிநர்கள், அவர்தம் குழந்தைகள், குடும்பத்தினர் மற்றும் கோவை மாநகர்க் காவல் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் படித்துப் பயனுறும் வண்ணம் முதன் முறையாக நவீன நூலகம் ஒன்று ஆயுதப் படை வளாகத்தினுள் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த நூலகத்தில் விலை உயர்ந்த சுமார் 3,000 புத்தகங்கள் உள்ளன. (கணினி புத்தகங்களும், Encyclopedia-க்களும் இதிலடங்கும்) இவற்றைத் தவிர, நாளிதழ்களும், பருவ இதழ்களும் இடம் பெறுகின்றன. இவை அனைத்தையும் காவல் ஆளிநர்களின் குழந்தைகள் ஆர்வத்தோடு படித்தும், குறிப் பெடுத்தும், தங்களது அறிவுத் திறனை வளப்படுத்திக் கொள் கின்றனர்.



தமிழகத்திலேயே முதன் முறையாக காவல் துறையினருக் கென செயல்பட்டு வரும் இந்த நூலகம் அனைவரின் பாராட் டினையும், வரவேற்பையும் பெற்றுள்ளது. காவல் ஆளிநர் களின் குழந்தைகளின் அறிவு ஊற்றுக் கண்ணை திறந்து வைக்கும் அரிய பெட்டகமாக விளங்கும் இந்த நூலகத்திற்கென மேலும் வாழ்க்கைக்குப் பயனுள்ள புத்தகங்களை வாங்கவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நூலகத்தை நிர்வகிக்க மாவட்ட நூலகத்தில் இருந்து உதவியாளர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். தமிழக காவல் துறைக்கே பெருமை சேர்ப்பதாக இந்நூலகம் அமைந்துள்ளது

**போலீஸ் செய்தி மடலிலிருந்து..**

● ● ●

# பக்கிங்காம் கால்வாய் புனரமைப்பு

பக்கிங்காம் கால்வாய் தமிழ்நாட்டைச் சார்ந்த கடலூர் மாவட்டத்தில் உள்ள மரக்காணம் கழிமுக பகுதியில் தொடங்கி ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள (கோதாவரி கழிமுகம்) பெத்த கஞ்சம் பகுதி வரை மொத்தம் 418 கிலோ மீட்டர் தூரம் அமைந்துள்ளது.

கூவம் ஆற்றின் வடக்கு பகுதியில் அமைந்த கால்வாய் வடக்கு பக்கிங்காம் கால்வாய் என அழைக்கப்படுகின்றது. அதன் மொத்த நீளம் தமிழ்நாட்டு எல்லை பகுதியில் 58 கிலோமீட்டர் நீளம் உள்ளது. தென்பகுதியில் அமைந்துள்ள



கால்வாயை தென்பக்கிங்காம் கால்வாய் எனவும் அழைக்கப்படுகின்றது. இதன் மொத்த நீளம் 105 கிலோமீட்டர் ஆகும். இந்த தென்பகுதி கால்வாயில் நிளவாட்டத்தில் "0" கி.மீ. முதல் 8.84 கிலோமீட்டர் வரை உள்ள கால்வாயை மத்திய பக்கிங்காம் கால்வாய் என அழைக்கப்படுகின்றது. இது அடையாரையும் கூவத்தையும் இணைக்கின்றது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் எல்லைக்குள் இக்கால்வாய், மொத்த நீளம் 49.70 கி.மீ. ஆகும். இதில் 22.04 கி.மீ. நீளமுள்ள கால்வாயின் தூர்வாரும் பணி 96–98 ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 27.66 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் தூர் வாரி புனரமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தூர் வாரும் பணி

இப்பணியில் தூர் எடுக்கப்பட வேண்டிய மொத்த மண் அளவு 9,92,000 கன மீட்டராகும். அதில் 30–6–2000 முடிய தூர் வாரப்பட்ட அளவு 6,44,000 கன மீட்டராகும். அதாவது தெற்கு பக்கிங்காம் கால்வாயில் மொத்தமுள்ள நீளம் 23,860 மீட்டரில் 15,000 மீட்டர் தூர் வாரும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய கால்வாயில் தூர் வாரும் பணி நடைபெற்று வருகின்றன. வடக்கு பக்கிங்காம் கால்வாயில் கால்வாய் அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நீளம் 1,800 மீட்டரில் 1,400 மீட்டருக்கு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணி இன்னும் ஒருமாத காலத்திற்குள் முடிவடையும். மத்திய பக்கிங்காம் கால்வாயில்



உத்தேசிக்கப்பட்ட இடங்களில் தூர்வாரும் பணிகள் முடிவடைந்துள்ளன.

### ஈப்பு பாதை அமைக்கும் பணி (Jeep Tracks)

ஈப்பு பாதை, வடக்கு பக்கிங்காம் கால்வாயில் சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு சாலை அமைக்க கரைக்கு மண் நிரப்பப்பட்டு, கிராவல் மற்றும் மணல் – கிராவல் கலந்த கலவையும் நிரப்பப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தெற்கு பக்கிங்காம் கால்வாயில் ஈப்பு பாதை பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### வெள்ளத்தடுப்பு சுவர் கட்டும் பணி

பக்கிங்காம் கால்வாயில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டவேண்டிய மொத்த



நீளம் 2,910 மீட்டராகும். அதில் எண்ணூர் வார்பு அருகில் ?20 மீட்டரும், மத்திய பக்கிங்காம் கால்வாயில் 110 மீட்டர் அளவுக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணியை திருவாளர்கள் லார்சன் மற்றும் டியூப்ரோ அவர்கள் செய்து வருகின்றனர். பணிகள் 27–9–99 அன்று துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் அனைத்தும் 30–6–2001க்குள் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### சுற்றுலா முக்கியத்துவம்

தற்போது நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளின் கீழ் துரைப்பாக்கம் முதல் முட்டுக்காடு வரை சுமார் 15 கி.மீ. தூரத்திற்கு கால்வாய் தூர் வாரப்பட்டு, படகு போக்குவரத்துக்கு உகந்ததாக ஆக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதி சுற்றுலா தலங்கள் நிறைந்ததாக உள்ளது. முட்டுகாடு படகு குழாம், வி.ஜி.பி. தங்கக் கடற்கரை, எம்.ஜி.எம். போன்ற சுற்றுலா மையங்கள் பொதுமக்கள் வெகுவாக விரும்பி செல்லும் இடங்களாக உள்ளன. தற்போது முட்டுகாடு முதல் துரைப்பாக்கம் வரை பக்கிங்காம் கால்வாயில் படகு போக்குவரத்து வசதிகள் அமைப்பதன் மூலம், சுற்றுலா பயணிகள் மன மகிழ்ச்சி அடைவார்கள். மேற்கண்ட சுற்றுலா தலங்களை இணைப்பதன் மூலம், சுற்றுலா துறையையும் மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன. மேலும் சாலையின் வழியாக செல்லும் போக்குவரத்து நெரிசலையும் தவிர்க்கலாம். சுற்றுலா துறையின் மூலம் இதை செயல்படுத்தினால் பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

பக்கிங்காம் கால்வாய் 1966 வரை படகு போக்குவரத்துக்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. சான்றாக 1934இல் பாவேந்தர் பாரதிதாசன் தன் நண்பர்களுடன் இக்கால்வாயில் படகு மூலம் சென்னையிலிருந்து மகாபலிபுரம் சென்றுள்ளார். அவர் படகில் சென்ற அனுபவத்தையும், அடைந்த மகிழ்ச்சியையும் ஒரு கவிதையின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் 1966 மற்றும் 1984ஆம் ஆண்டுகளின் ஏற்பட்ட புயல்களினால் கால்வாய் தூர்ந்து போய்விட்டதால் படகு போக்குவரத்து முழுதும் நிறுத்தப்பட்டுவிட்டது.

தற்போது புனரமைப்புப் பணிகள் செயலாக்கம் செய்வதின் மூலம் மீண்டும் படகு போக்குவரத்துக்கு சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

★ ★ ★



சேர்ந்து
நிழற்படம்
எடுத்துக்கொண்டு
அடிக்கடி
மடல் எழுதுவதாகச்
சொல்லிக் கொண்டு
பிரிகிற நட்பின் வலியை
மறைத்துக்
கொள்வதற்காகத்தான்
மனைவியிடமும்
பிள்ளைகளிடமும்
பேத்திகளிடமும்கூட
சிரிக்கச்
சிரிக்கப்
பேசுகிறார்கள்
இவர்கள்.

□ அறிவுமதி

- 'நட்புக்காலம்' கவிதையிலிருந்து



# தமிழக கிராமங்கள் அனைத்துக்கும் மின்வசதி

## – கயத்தாறில் பிரதமர் புகழாரம்

இந்த புனிதமான கயத்தாறு மண்ணில் கால்பதிக்க நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இந்த இடத்திற்கு ஒரு கவுரமான இடம் உண்டு. ஏனென்றால் இது வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவுகளுடன் தொடர்பு உடைய மண்.

18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட அவர் இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவர், ஆனாலும் வீர பாண்டிய கட்டபொம்மன் பற்றியும், அவரது வீரதீர செயல்கள் பற்றியும் இந்தியாவின் வடபகுதிகளில் சரியாக தெரியாமல் போனதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

தமிழ்நாடு தைரியமானவர்களையும், தேச பக்தர்களையும் உடைய பூமி. கட்டபொம்மனைப் பின்பற்றி இங்கு ஏராளமான ஆண்களும், பெண்களும் விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றனர். தங்கள் எழுத்தாற்றலால் பலர் விடுதலைக்கு வித்திட்டார்கள். அவர்களில் சுப்பிரமணிய பாரதியாரும், வ.உ.சிதம்பரம் பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அவர்களைபோல் நமக்கு தெரிந்த பல சுதந்திர வீரர்கள், இன்னும் தெரியாத எண்ணற்றோரின் தியாகங்களால் தான் இன்று நாம் சுதந்திரத்தை அனுபவிக்கிறோம்.

எனவே, கட்டபொம்மனுக்கும் இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர்களுக்கு நான் தலை வணங்கி மரியாதை செய்கிறேன். அவர்கள் இந்திய சுதந்திரத்திற்காக போராடினார்கள். இப்போது நாம் இந்தியாவின் அனைத்துத்துறை வளர்ச்சிகளுக்காக போராடிக்கொண்டிருக்கிறோம்.

**இணைந்து பணியாற்றுங்கள்**

இன்னொரு காரணத்திற்காகவும், இங்கு நாம் கட்டபொம்மனை நினைத்துப் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. கட்டபொம்மனும், அவருடன் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்களும் தென் தமிழகத்தின் பல்வேறு சாதி மற்றும் சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள். ஆனால், தங்கள் தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காக ஒன்றுசேர்ந்து செயல்பட்டனர்.

எனவே, தமிழகத்தைச் சேர்ந்த வெவ்வேறு சாதி மற்றும் சமுதாய மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்களும் அதைப்போல் உங்கள் மாநில வளர்ச்சிக்காகவும், நர்ட்டின் வளர்ச்சிக்காகவும் இணைந்து பணியாற்றுங்கள்.

**மின் உற்பத்தியில் தமிழகம் முதலிடம்**

இன்று இங்கு 15 மெகாவாட் காற்று மின்சக்தி திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக அரசு மற்றும் மக்களின்



தொலைநோக்குப் பார்வையை நான் பாராட்டுகிறேன். நம்நாட்டில் உள்ள மொத்த காற்று மின் உற்பத்தியில் 70 சதவீதக் காற்று மின்சக்தி உங்கள் மாநிலத்தில் இருந்துதான் கிடைக்கிறது. காற்று மின் சக்தி திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தும் பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு. மேலும், சர்க்கரை ஆலை கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிப்பதிலும் இந்தியாவில் தமிழகம்தான் முன்னணியில் உள்ளது.

### முதல்வரின் துடிப்பான தலைமை

இதற்காக எனது நண்பர் கருணாநிதியை, அவரது சகாக்களையும் பாராட்டுகிறேன். அவரது துடிப்பான தலைமையின்கீழ் இந்த பெருமையான இலக்கை அடைந்துள்ளீர்கள். விரைவிலேயே மின்உற்பத்தியில் தமிழகம் தனது முழு சக்தியையும் எட்டும். நாட்டின் வளர்ச்சிக்கும், மின்உற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. விவசாயம், தொழில்துறை போன்ற துறைகளில் வேகமான வளர்ச்சி பெற வேண்டுமானால் மின்சக்தி அவசியம். துரதிர்ஷ்டவசமாக மின்உற்பத்திக்கு சரியான கொள்கை வகுப்பதில் நாம் தவறிவிட்டோம்.

### மின்வசதி பெற்ற தமிழக கிராமங்கள்

அதன் பயனாக பல மாநிலங்கள் மின்தட்டுப்பாட்டை சந்தித்து வருகின்றன. இதன் காரணமாக பொருளாதார, சமூக வளர்ச்சியும் தடைபடுகிறது. உதாரணத்திற்கு, இன்றும்கூட நம்நாட்டில் 7 கோடியே 70 இலட்சம் வீடுகள், அதாவது சுமார் 35 கோடி மக்கள் மின்வசதி இல்லாமல் இருக்கிறார்கள். ஆனாலும் நான் சொன்னது தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது. இங்கு 100 சதவீதம் அனைத்து கிராமங்களிலும் மின்வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மலிவான, சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாத மின் தயாரிக்கும் முறையில் இன்னும் நாம் அதிகம் சாதிக்க வேண்டியிருக்கிறது. இயற்கையான முறையில் மின்சக்தி தயாரிக்கும் அனைத்து வழிகளையும் மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. 2012ஆம் ஆண்டில் மின்உற்பத்தி 10 ஆயிரம் மெகாவாட் அதிகரிக்க கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக தேவையான முதலீடுகளைச் செய்யும்படி தொழில் அமைப்புகளை கேட்டுக்கொள்கிறேன்.

மின்சக்தியைப் பெருக்குவதில் மாநிலங்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. இதில் தமிழகத்தை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***– தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் 5–7–2000 அன்று காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்தும் ஆய்வு மையத்தை திறந்துவைத்தும் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து. ●***

## நூறு சதவிகிதம் வீட்டுவரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு சலுகைகள்

நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, 2000–2001ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 15 சதவிகிதம் சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக ரூ.93.27 கோடியை பகிர்ந்தளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியை பின்வருமாறு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது :

- வருவாய் குறைவான, நலிந்த ஊராட்சிகள் குடிநீர் கட்டணத் தொகையைச் செலுத்த வழிவகை செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.12.50 இலட்சம்.
- வருவாய் குறைவான, நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டணத் தொகையை செலுத்துவதற்கு வழிவகை செய்ய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.12.50 இலட்சம்.
- ஊராட்சிகளிடையே உள்கட்டமைப்பு வசதிகளில் சமன்பாடு ஏற்படுத்தவும் நலிவுற்ற ஊராட்சிகள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சிகள், முக்கிய நகரங்களின் அருகிலுள்ள ஊராட்சிகள், இயற்கைச் சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள கடலோர மற்றும் மலைப்பகுதி ஊராட்சிகளில், போதிய அடிப்படை வசதிகள், குடிநீர், தெருக்கள் மேம்பாடு, வடிகால் வசதி, சந்தைகள் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்த ஊராட்சிகளுக்கு ரூ.7.15 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.8 கோடி.
- பத்தாயிரம் புதிய தெரு விளக்குகள் அமைக்கவும், இரண்டாயிரம், குழல் விளக்குகளைச் சோடியம் விளக்குகளாக மேம்படுத்தவும் ஊராட்சிகளுக்கு ரூ.12 கோடி.
- வருவாய் குறைவான ஊராட்சி ஒன்றியங்கள் நிருவாகச் செலவை மேற்கொள்ள நிதியுதவியாக 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு, தலா ரூ.10 இலட்சம்.
- பழுதடைந்துள்ள 84 சமையல் அறைக் கட்டடங்கள், 1,529 சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட மைய கட்டடங்கள் பழுது பார்ப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.3.66 கோடி.
- நிதிவசதி மற்றும் அடிப்படை வசதிகளில் நலிவுற்றுள்ள ஊராட்சிகளில் உள்ள தெருக்களைத் தூய்மையாக வைத்து இருக்கவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும் கான்கிரீட் தெருக்கள் அமைக்க மத்திய நிதிக்குழு மானிய நிதியுடன் ஈட்டு மானியமாக ஊராட்சிகளுக்கு ரூ.10 கோடி.
- குடிநீர் வழங்கல் மற்றும் பணி பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களின் கைப்பம்பு பொருத்துநர்களைக் கொண்டு சுழல்நிதி ஏற்படுத்தி, தொழில்நுட்ப சேவைக்குழு அமைக்க ஊராட்சிகளுக்கு ரூ.2.85 கோடி ஒதுக்கீடு.
- 100 விழுக்காடு வீட்டுவரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு ஒரு ரூபாய் வசூலுக்கு 3 ரூபாயும், 80 விழுக்காட்டிற்கு மேல் வீட்டுவரி வசூல் செய்தால் 2 ரூபாயும், 80 விழுக்காட்டிற்குக் குறைவாக வீட்டுவரி வசூல் இருந்தால், ஒரு ரூபாய் வரி வசூலுக்கு ஒரு ரூபாயும் ஊக்க நிதியாக, ஆகமொத்தம் ரூ.37.92 கோடி வழங்கப்படும்.
- புதியதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.1.50 இலட்சம். ★



“இன்று நடைபெறுகின்ற இந்த விழாவிலே திறக்கப்பட உள்ள கட்டிடங்கள், அடிக்கல் நாட்டப்பட உள்ள திட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டு இவற்றை நான் உங்கள் முன்னிலையிலே நிறைவேற்றி வைத்திருக்கிறேன். 127 கோடியே 76 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்பட்டுள்ள 46 கட்டிடங்களும் திட்டப் பணிகளும் திறந்துவைக்கப்பட்டுள்ளன. 45 கோடியே 57 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 16 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ஒரு கோடியே 58 இலட்சத்து 86 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்புடைய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு – அடையாளபூர்வமாக நான்கைந்து பேருக்கு நானும் எஞ்சியோருக்கு அதிகாரிகள் மூலமாகவும் வழங்கப்படவிருக்கின்றன. ஆகமொத்தம் 174 கோடியே 92 இலட்சத்து 76 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு பணிகள் இன்றைய விழாவின் மூலமாக செயலுக்கு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.




சிப்காட் தொழில் வளர்ச்சி மையம் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 71–72ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டு, அதனுடைய ஒரு கூறாக இன்றைக்கு இங்கே இந்த விழா தொடக்க விழாவாக இந்தப் பகுதிக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

### சிப்காட் வளாகத்தில் நில விற்பனை சம்பந்தமான புதிய அறிவிப்பு

இடைக்காலத்திலே இது தொடங்கப்பட்டிருக்க வேண்டுமென்றாலும் இடையிலே வந்த அரசுகள் இதிலே மிகுந்த அக்கறை செலுத்தாத காரணத்தால் இந்த வளாகம் உருவாகாமலே போய் இன்றைக்கு உருவாகி திறக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

2,800 ஏக்கர் நிலப்பரப்பில் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே இந்த வளாகம் அமைக்கப்படுகின்றது. இதுவரை 2,500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த மையத்திற்குத் தேவையான சாலை வசதிகள், தெரு விளக்குகள், நீர்வசதி, கழிவு நீர்வசதி முதலிய அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தொழில்முனைவோருக்கு மனைகள் ஒதுக்கீடு செய்வதற்கு தயார் நிலையில் இத்தொழில் மையம் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 318 ஏக்கர் நிலம் 40 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 26 நிறுவனங்கள் ஜவுளித் தொழில் சார்ந்தவை; பத்து நிறுவனங்கள் பிற தொழில் சார்ந்தவை. நான்கு நிறுவனங்கள் பொதுத் துறையைச் சார்ந்தவை. இந்த சிப்காட் வளாகத்திலே நிலங்களை விற்பது சம்பந்தமாக இந்த நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பை நான் செய்திட விரும்புகிறேன்.

சிப்காட் வளாகத்தில் உள்ள நிலங்கள் இதுவரை ஒரு ஏக்கர் ஆறு இலட்சம் ரூபாய் வீதம் விற்கப்பட்டது. இனிமேல் அதாவது இன்று 1–7–2000 முதல் ஒரு புதிய அறிவிப்பு. அதாவது 50 ஏக்கர் முதல் 99 ஏக்கர் வரை நிலம் வாங்குபவர்களுக்கு இனிமேல் ஒரு ஏக்கர் நான்கு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கு வழங்கப்படும். 100 ஏக்கருக்கு மேல் நிலம் இங்கே வாங்குவோருக்கு ஒரு ஏக்கர் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

***– ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தை தொடங்கிவைத்தும் மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டியும் 1–7–2000 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...***



# காக்கை குறிப்புகள்

• கபிலன்

அடுத்தவன் கையை எதிர் பார்த்தது
காக்கை
அவன் தின்றுக் கொண்டிருக்கையில்

உதடுகள் சிகரெட் புகைக்க அல்ல
உழைக்க

கரண்ட்டு கம்பத்தில் காக்கை வீடு
விமானம் பார்த்து அழும் குஞ்சுகள்

முட்களுக்கிடையே காக்கைத் துளிகள்
உதடு கிழியக் கத்தும்

திருட்டு அம்மா திரும்ப
வரும்வரை

காக்கையின் விசிறி விரல்களில்
ரேகை அழியும் வரை

காக்கையின் தொலைவு
மனிதனைவிட நீளமானது

பாரதி குயிலுக்கும் பாவேந்தன்
குயிலுக்கும்
காக்கைதான் தாய்

காக்கைக்கும், குயிலுக்கும்
வித்தியாசம் என்ன இருக்கிறது
மொழியைத் தவிர

குயில் முட்டைக்குத் தேவை
காக்கையின் வயிறு

அம்மாவின் முழுமையை
உடைத்துக் கொள்கிறது குயில்

குயில் குஞ்சை
உதைத்துச் சொன்னது
காக்கை

"தன் குஞ்சு பொன் குஞ்சு"



– 'தெரு ஓவியம்'
கவிதைத் தொகுப்பிலிருந்து...
யாளி பதிவு வெளியீடு,
சென்னை–24.

# "சாலை விபத்தைத் தடுப்போம்"



□ க. சு. அகஸ்தியன்

சாலை விபத்து நடக்காத நாளே இல்லை - அதைத்
தடுக்க வழி சொல்லாத ஆளே இல்லை;
அவசரமே பிரதானம் என்றால் உமக்கு;
ஆதங்கமே வருமானம் என்றே ஆகும்.

தலைவிதியை மாற்றுகின்ற இறைவன் என்றே,
சாலைவிதி கடைப்பிடித்தல் அவசியம் என்பேன்.
அரைநிமிடம் தாமதித்தால் மோதல் இல்லை;
அவசரத்தில் தனைஇழந்தால் வாழ்வே இல்லை.

வழிமறித்து முன்சென்றால் விபத்தே நேரும்,
விதிமதித்து வழிநடந்தால் நலமே சேரும்;
வீட்டிலிருந்து புறப்பட்டு நிதானம் இன்றி,
செல்லுமிடம் சேரும்வரை மடியில் வேகம்.

என்றநிலை மாறிடவே நாளும் நாமும்,
காரியங்கள் யாவையுமே இறுக்கம் இன்றி,
கடமையொடு நேரத்தே செய்தால் பணியை,
கண்டிப்பாய் தவிர்க்கலாம் சாலை விபத்தை.

பாதையிலே வருவோர்கள் நமக்கு என்றும்,
பங்காளியா பகையாளியா போட்டி போட,
பாசத்தோடு வழிவிட்டு நேசம் கொண்டால்,
பாதையிலே விபத்தெனும் நாசம் இல்லை,

இந்தநிலை உருவாக நாமும் கொஞ்சம்,
பெருமையோடு உழைத்திடவே நெஞ்சில் நிறைப்போம்.



# ஒரு இடந்தேடி

□ கந்தர்வன்

கவி சம்மேளனத்திற்கு வந்து சேரும் ஒரு முதிய தம்பதியினர்...... அவசரம் பரபரப்பு அவர்களிடையே.... அந்தப் பரபரப்பின் பின்னாலும் ஒரு கவியுள்ளம் இருக்கிறது......

கவிஞர்களில் பழசு புதுசு என்றெல்லாம் ஏது? இவர்கள் ஒரு நேரம் குழந்தைகள், ஒரு நேரம் வாலிபர்கள், ஒரு நேரம் கிழவர்கள்......"

அந்த மலைப்பகுதியில் வெயில் முளைக்க இன்னும் வெகு நேரமிருந்தது. ரயிலிலிருந்து இறங்கி பஸ் பிடித்து உட்கார்ந்ததும் ஊர், மொழி தாண்டிய பரபரப்பு வந்தது. கண்டக்டர் அருகில் வரவும், பையிலிருந்த அழைப்பிதழை எடுத்து மறுபடி ஒருமுறை படித்துப் பார்த்துவிட்டு ஊர்ப் பெயரைச் சொல்லி ரூபாயைக் கொடுத்தேன். சொல்லி வாய் மூடுமுன் பின்சீட்டிலிருந்து "ஸார் நீங்கள் கலை விழாவுக்கா போகிறீர்கள்'' என்று ஆங்கிலத்தில் கேட்ட குரலுக்குத் திரும்பி "ஆமாம்" என்றேன்.

அவர் பருமனாய் வயது முதிர்ந்திருந்தார். இரண்டு காதுகளிலும் கொத்தாய் நரைமுடி. பக்கத்தில் சிவப்பாய் ஒல்லியாய் ஒரு வயதான மாது. அவர் மனைவியாயிருக்க வேண்டும். தூரப் பயணமும் வயதின் தளர்ச்சியும் இருவரிடமும் நிறையத் தெரிந்தன. பெட்டி, பைகள் போகக் கையில் இன்னும் கால்வாசித் தண்ணீரோடு வெள்ளை பிளாஸ்டிக் பாட்டில். அவர் எல்லாவற்றிலும் ஜாக்கிரதையாகவும் பதட்டமாகவுமிருந்தார்.

''எனக்கு வந்த கடிதத்தில் கலை விழா நடக்கும் இடங்கள் என்று மூன்று ஊர்ப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குழப்பமாயிருக்கிறது. நாம் எங்கே இறங்க வேண்டும்? உங்களுக்குப் பழக்கமான பிரதேசமா இது? இவள் என் மனைவி. நாங்களும் கலை விழாவுக்குத்தான் போகிறோம்" என்றார்.

நான் அவருக்குப் பதில் சொல்லுமுன் கண்டக்டர் அந்தப் பக்கம் வர நான் தமிழிலேயே அந்த ஊரைப் பற்றி விசாரித்தேன். அவர் சொன்னார், ''நீங்கள் எங்கு இறங்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். கடந்த இரண்டு நாட்களாய் ஆட்கள் எங்கெங்கிருந்தோ வருகிறார்கள். நீங்கள் போக வேண்டிய இடத்திற்கு நேராக இறக்கிவிடுகிறேன். போதுமா?" என்று மலையாளத்தில் சொல்லிப் பாந்தமாய்ச் சிரித்தார். நான் தமிழில் பேச கண்டக்டருக்குப் புரிவதும், அவர் மலையாளத்தில் பேச எனக்குப் புரிவதும் பின்னாலிருந்த பெரியவருக்கு நம்பிக்கையூட்டியிருக்க வேண்டும்.

திரும்பி அவரைப் பார்த்தபோது அது தெரிந்தது. என் பக்கமாய் வர முயன்றவாறு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ''நான் மைசூரிலிருந்து வருகிறேன். ஒரு கவிஞன், கன்னடம். என் பெயர் ராஜாராவ்" என் பங்கிற்கு நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் ராவ் சொன்னார். "நாம் நாளை மறுநாள் கவி சம்மேளனத்தில் சேர்ந்து பங்கு பெறுகிறோம் இல்லையா? நீங்கள் புதிய தலைமுறை ஆள்".

"அப்படிச் சொல்ல முடியாது. பழசும் புதுசும் சேர்ந்த மாதிரியான ஆள். தவிரவும் கவிஞர்களில் பழசு புதுசு என்றெல்லாம் ஏது? இவர்கள் ஒரு நேரம் குழந்தைகள், ஒரு நேரம் வாலிபர்கள், ஒரு நேரம் கிழவர்கள்".

ராவ் என் முகத்தின் மீது ஒரு தந்தையின் உற்ற பார்வையோடு சொன்னார். "நீங்கள் எனக்குச் சிறந்த நண்பராய் விளங்கப் போகிறீர்கள்".

அவர் இதைச் சொல்லிக் கொண்டிருந்தபோது பஸ் ஒரு பாலத்தின் மீது சென்றது. கீழே பச்சை பார்டர் போட்ட

வெள்ளைச் சேலையாய் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ராவ் இந்தப் பாலத்தைக் கடந்ததும் நாம் இறங்க வேண்டிய இடம் வந்துவிடுமா?" என்றார்.

"பொறுப்பு கண்டக்டர் கையில். நாம் மரங்களையும் செடிகளையும் புதுப்புது மனிதர்களையும் ஜன்னல் வழியாய்ப் பார்ப்போம்".

என் பக்கத்திலிருந்து திரும்பி மனைவியுடன் கன்னடத்தில் பேச ஆரம்பித்தார். ஒரு இடத்தில் பஸ் நின்றபோது அந்த அம்மாள் கன்னடத்தில் அவரிடம் அவசரமாய் எதுவோ சொல்ல, அவர் பதறிப்போய் என் தோளைத்தட்டி "இதுவா நாம் இறங்க வேண்டிய இடம்?" என்றார்.

"பொறுப்பு கண்டக்டருடையது. நீங்கள் கவலையில்லாமல் இருங்கள்" என்றேன். என்னுடைய நிதானம் அவருக்கு ஆச்சர்யமாயிருந்தது. அடுத்தடுத்த நிறுத்தங்களில் இருவரும் கவலையோடு "இதுவா? இதுவா?" என்று கேட்டு எழுந்திருப்பதும் உட்கார்வதுமாயிருந்தனர்.

எங்களை இவ்வளவு நேரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்த கண்டக்டர் என் முன்னே வந்து, "நீங்களிறங்க வேண்டியது நெக்ஸ்ட் ஸ்டாப்பிங்" என்று சொன்னது ராவ் தம்பதிக்கு மொழி பெயர்க்காமலே புரிந்துவிட்டது. லக்கேஜ்களை எடுத்து வைத்துக்கொண்டு சீட்டுகளின் நுனியில் உட்கார்ந்திருந்தனர்.

பஸ் நின்றதும் கண்டக்டர் வந்து "இதே" என்றதும் பரபரப்பாயிறங்கினர் இருவரும்.

விழாக்குழு அலுவலகத்தில் அந்த அதிகாலை நேரத்திலும் குளித்து சந்தனப் பொட்டுடன் ஒரு இளைஞர் எங்களை வரவேற்று உட்காரச் சொன்னார். "நீங்கள் இரண்டு நாட்கள் தாமதமாக வந்திருக்கிறீர்கள். டெல்லியிலிருந்தும் கான்பூரிலிருந்தும் முதல் நாளே கலைஞர்கள் பட்டாளம் வந்து எல்லா டிராவலர்ஸ் பங்களாக்களையும் அடைத்துக் கொண்டு விட்டார்கள். எங்களுக்கு வெகு அருகிலுள்ள இரண்டு



மாநிலங்களிலிருந்து நீங்கள் தாமதமாக வந்திருக்கிறீர்கள். உள்ளூரில் ஒரு அறைகூட காலியில்லை. அருகிலுள்ள ஊர்களிலும் அறைகள் இருக்காது. தூரத்து ஊர்களில் டிராவலர்ஸ் பங்களாக்களைத் தொடர்பு கொண்டிருக்கிறேன். "டீ சாப்பிடுங்கள்" என்று சொல்லி ப்ளாஸ்கிலிருந்து டீ ஊற்றிக் கொடுத்தார். தொலைபேசியில் வரிசையாக எண்களைச் சுழற்றி மலையாளத்தில் தீவிரமாக விசாரித்துக் கொண்டிருந்தார்.

ராவ் முகத்தில் கலக்கம் தெரிந்தது. மனைவியுடன் கன்னடத்தில் கவலையோடு பேசிக் கொண்டிருந்தார். டீ கோப்பை கிடுகிடுவென்று ஆடியது. கை நடுக்கம் அதிகமாகியது. என்னிடம்



கேட்டார், "நமக்கு ஒரு அறை ஏற்பாடு செய்து விடுவார்களா?"

"கவலைப்படாதீர்கள். நல்ல கவிஞனுக்கு எப்போதும் ஒரு இடமுண்டு"



என்றேன். அவர் அதை ரசித்துச் சில விநாடிகள் புன்னகை செய்தார். உடனே சீரியஸாகி அந்த இளைஞரைக் காண்பித்துச் சொன்னார். "பாருங்கள்; அவர் நம்பிக்கை இழந்து தொலை பேசியில் பேசிக் கொண்டிருக் கிறார். நாங்கள் இனிமேல்தான் குளிக்க வேண்டும். என் மனைவியை இந்த வயதில் நான் வெகுதூரம் அழைத்து வந்துவிட்டேன்". நாற்காலியில் விரக்தியோடு சாய்ந்து கிடந்து தனக்குள் சொல்லிக் கொண்டார். "ஆனால் இவை இப்படித்தான் நடக்கும்".

அந்த இளைஞர் தொலைபேசியை வைத்துவிட்டு எங்களைப் பார்த்து உற்சாகமாய்ச் சிரித்தார். நான் ராவைப் பார்த்தேன். இளைஞரிடமிருந்து ஒரு நல்ல சொல் கேட்க மிகுந்த ஆர்வமாய் நாற்காலி முனைக்கு வந்துவிட்டார்.

"ஒரு டிராவலர்ஸ் பங்களா கிடைத்துவிட்டது. ஆனால் அதில் ஒரு பிரச்சினை" என்று இழுத்து நிறுத்தினார் இளைஞர். ராவின் முகத்தில் சட்டென்று கவலை தோன்றியது. நான் சிரித்துக்கொண்டே கேட்டேன்.

"டி.பி. வெகு தொலைவிலோ?"

இளைஞர் சொன்னார் "அதுதான் பிரச்சினை. ஆனால் நீங்கள் அதிகம் சிரமப்படாமல் நாங்கள் சில உதவிகள் செய்வோம். இப்போது ஒரு கார் உங்கள் மூவரையும் ஏற்றி அந்த டிராவலர்ஸ் பங்களாவில் கொண்டுபோய் விடும். தினமும் காலையில் உங்களை அழைத்துவர கார் அனுப்புவோம். இரவு எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்ததும் கிடைக்கின்ற ஒரு காரில் நீங்கள் அங்கு போய்த் தங்கிக் கொள்ளலாம். டிபன், சாப்பாடு எல்லாவற்றையும் நீங்கள் இங்கே வந்துதான் முடித்துக்கொள்ள வேண்டும்".

"மிகவும் சரி. இப்போது நாங்கள் புறப்படக் கார் தயாரா?" என்றேன்.

கார்கள் ஒவ்வொன்றாய் வர ஆரம்பிக்கும் நேரம்தான், ஆட்களும் வரவேண்டும். நேற்றிரவு அநேகமாய் விடிந்துதான், எல்லோரும் வீடுகளுக்குச் சென்றார்கள். சற்று இருங்கள். வந்ததும் உங்களை அனுப்பி வைக்கிறேன்".

ராவ் மனைவியிடம் வெகு தாழ்வாய்க் குனிந்து பேசிக் கொண்டிருந்தார். பிறகு என்னைப் பரிதாபமாய்ப் பார்த்தார். "ராவ்ஜி கவலைப்படாதீர்கள். அவர்கள் சீக்கிரம் ஏற்பாடு செய்து விடுவார்கள்" என்றேன். ராவ் சொன்னார், "இவ்வளவு குழப்பங்களாலும் ஒரு பெரும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்திருக்கிறது. எங்களையும் உங்களையும் பிரித்து தனித்தனியாய்ப் போடாமல் ஒரு இடத்தில் தங்க ஏற்பாடாகியிருப்பதுதான் அது. நாங்கள் வயதானவர்கள், நீங்கள் அன்பானவர்" யாசகக் கலை ராவ் முகத்தில் அப்பியிருந்தது.

"கவலைப்படாதீர்கள். நான் உங்களுடன் மூன்று நாளும் நிழலாயிருப்பேன்" என்றதும் ராவ் துயரங்கள் மறைந்த ஒரு பெருமூச்சை விட்டார். கழிவிரக்கம் நிறைந்தவாறு என் கைகளைத் தன் கைகளில் எடுத்து வைத்துக்கொண்டு "கவிதையை விடவும் அன்பு பெரிதுதானே?" என்றார். "எல்லாவற்றையும் விட" என்று நான் சொன்னதும் இறுக்கமாய் என் கைகளைப் பற்றிக் கொண்டார். முதியவர்களின் வெதுவெதுப்பு இரக்கத்தையும் அன்பையும் அந்நேரம் அதிகப்படுத்தியது. மனைவியிடம் குனிந்து ராவ் கன்னடத்தில் சொன்னது இதுவாகத்தானிருக்க வேண்டும், "கவலைப்படாதே இதோ இவரிருக்கிறார் நமக்கு, தடுமாற விடமாட்டார்".

நான் அந்த இளைஞரின் பக்கத்தில் போய் நாம் வெளியே போய் கார் எதுவும் வந்திருக்கிறதா; ஆள் யாரும் வந்திருக்கிறார்களா என்று பார்ப்போமா. அந்த முதிய தம்பதியைப் பார்க்கப் பாவமாயிருக்கிறது" என்று ராவைச் சுட்டிக் காட்டிக் கேட்டேன்.

"இன்னும் கால் மணிக்குள் ஏதாவது ஒரு கார் வந்துவிடும்; ஆளும் வரும். அதுவரை இந்தப் பாட்டைக் கேளுங்கள்" என்று ஒரு கேஸட்டைச் செருகினார். அதிகாலை வேளைக்கும், மூடிக் கிடந்த பனிக்கும் அந்த இசை கதகதப்பாயிருந்தது. கண்ணை மூடி சில நிமிடங்கள் சுகமாய் அனுபவித்துத் திறக்கையில் ராவ் துயர்மிகுந்து மனைவியோடு ஆழ்ந்த விவாதத்திலிருந்தார்.

ஒருவர் உள்ளே வரவும் இளைஞர் எழுந்து ஆவலாய் அவரிடம் மலையாளத்தில் பேசிக்கொண்டே எங்களைப் பார்த்து "பேக்கப்" என்பதுபோல் சைகை காட்டினார்.

நாங்கள் காரில் ஏறியதும் அந்த இளைஞர் சொன்னார். "இந்தக் கார் உங்களைக் கொண்டு போய் டி.பி.யில் விட்டதும் திரும்பிவிடும். மறுபடி பத்து மணிக்குள் கார் அனுப்புகிறோம். என் பெயர் தாமோதரன். இது அலுவலகத் தொலைபேசி எண். கார் குறித்த நேரத்தில் வரவில்லையென்றால் நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள்" என்று ஒரு கார்டைக் கொடுத்தார்.

கார் போய்க் கொண்டிருந்தபோது ராவ் சொன்னார், "மூன்று நாள்களுக்கு நம்மை அழைத்துப் போகவும் கொண்டு வந்து விடவும் கறாரான ஏற்பாடுகள் இல்லையென்று நினைக்கிறேன்".

"கவலைப்படாதீர்கள், நான் உங்களோடு இருக்கிறேன்" என்றேன். கார் ஒவ்வொரு கி.மீ. கல்லைத் தாண்டும்போதும் "ஓ எவ்வளவு தூரம்" என்று முனகிக் கொண்டேயிருந்தார். அடிக்கடி மனைவியோடு பேசினார். திருப்தியில்லாத அவர் முகத்தைச் சரி செய்ய என்ன செய்வது என்ற சங்கடம் டி.பி. முன் இறங்கும்வரை என்னிடமிருந்தது.

அவர்களை ஒரு அறைக்குள் விட்டு அடுத்த அறையில் நான் தங்கிக்கொண்டேன். அரைமணி கழித்து வாயில் பிரஷோடு வாசலில் நின்றபோது ஒரு வாளி நிறைய வெந்நீரைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ராவ் "திஸ் இஸ் ஃபார் மை லேடி" என்று சொல்லிக்கொண்டே சென்றார்.

ஒன்பது மணிக்கெல்லாம் அவர் என் அறைக்கு வந்தார். அழுக்கெல்லாம் போய் பளிச்சென்றிருந்தார். மனைவியை விட்டு தனியாக வந்தது ஆச்சர்யமாக இருந்தது. ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்குள்ளும் மனைவியோடு பேசிக் கொண்டிருந்தவர் "கார் வந்து விடுமல்லவா?" என்றார்.

"நாம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம். கார் வந்துவிடும்" என்றேன்.

"நம்மை இவ்வளவு தூரத்தில் கொண்டு வந்து போட்டிருக்க வேண்டியதில்லை. எத்தனை மணிககுக் கார் வரும்; எத்தனை மணிக்கு நாம் டிபன் சாப்பிடப் போகிறோம் என்பதெல்லாமே நிச்சயமற்றுக் கிடக்கிறது" என்று அவர் வெறுப்பாய்ப் பேசினார்.

"வரும்போது வரட்டும். நாம் இப்போது கவிதை பற்றிக் கொஞ்சம் பேசுவோம்!"

"ஆனால் நண்பரே உங்கள் வயதில்லை எங்களுக்கு. சரியான நேரத்திற்கு நாங்கள்



சாப்பிடவேண்டும். நேற்று மைசூரிலிருந்து ரயிலில் வந்த சிரமங்களை வார்த்தைகளில் சொல்லமுடியாது".

"நான் வேண்டுமானால் தாமோதரனிடம் தொலைப் பேசியில் பேசி பார்க்கிறேன்"

"நானும் வருகிறேன்" என்று ராவும் எழுந்தார்.

பத்தரை மணிக்குக் கார் வருவதற்குள் ராவ் துடித்துப் போனார். கவிதை சம்பந்தமாய் அவரிடம் கேட்ட கேள்விகளுக்குச் சிறுசிறு வாக்கியங்களில் பதில் சொல்லி விட்டு மனைவியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

காரில் போய் அரங்கின் முன் இறங்கி உணவுக் கூடத்தைக் கண்டுபிடிக்க சிறிது நேரம் பிடித்தது. ஒரு மணிநேரம் முன்பே டிபன் காலியாகி விட்டதாய்ச் சொன்னதும் ராவ் சோர்ந்துவிட்டார். "வெளியில் நிறையக் கடைகள் தெரிகிறது. வாருங்கள் ராவ்ஜி. நான் இன்று உங்களுக்கு சிறிய விருந்தளிக்கிறேன்" என்றதும் ராவ் பதறிச் சொன்னார். "அவையெல்லாம் வயிற்றுக்குச் சரிப்படுமோ என்னவோ? இரண்டுங்கெட்டான் நேரம் வேறு".



"நீங்கள் சாப்பிடாமலிருப்பது அதைவிட மோசமல்லவா?" என்று கூறி இருவரையும் அழைத்துப் போய் மெதுவான உணவு வகைகளாய்ப் பார்த்து வாங்கிக் கொண்டு வந்து மேஜை மேல் வைத்தேன். ராவ் தம்பதி சங்கோஜத்துடன் சாப்பிட்டது. பாக்கு வாங்கக்கூட மனைவியிடம்தான் சில்லரை கேட்டு வாங்கினார் ராவ்.

அன்று அலகாபாத்திலிருந்து வந்த ஒரு ஆண் கலைஞரும் பெண் கலைஞரும் மணிப்பூர் நடனம் பற்றி செயல் விளக்கம் நடத்திக் கொண்டிருந்தனர். நிபுணர்களும் கலைஞர்களும் ரோமாஞ்சனமாகிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வினாக்களுக்கு அந்த இரு கலைஞர்களும் அடவுகளோடு உயர்ந்த ஆங்கிலத்தில் பதிலளித்துக் கொண்டிருந்த நேரம். யாரோ என்னை அழைத்தது போலிருக்க திரும்பிப் பார்த்தேன். ராவ் மனைவியோடு மண்டபத்தின் மேல் திண்ணையில் உட்கார்ந்து என்னை அழைத்துக் கொண்டிருந்தார். நான் திரும்பிப் பார்த்ததில் அவருக்கு திருப்தி.

வெகு நேரமாய் என்னை அழைத்துக் கொண்டிருந்திருப்பார் போல.

எழுந்து அவரிடம் வந்தபோது அவர் தன் கடிகாரத்தைக் காட்டினார். மணி இரண்டாகி இருந்தது. ''நாம் எப்போது சாப்பிடுவது?" என்றார். அவர் வயதிற்கு இந்த விவாதங்கள் அலுப்பாய்த் தெரிந்திருக்கும். அவர் பொருட்டு நிகழ்ச்சியிலிருந்து விலகி நடந்தேன். உணவுக் கூடத்தின் முன்னால் வரிசையில் நின்றபோது கேட்டார், "சாதம் இங்கெல்லாம் சிவப்பாய் தடியாயிருக்குமாமே", இவளால் சாப்பிட முடியுமா என்று தெரியவில்லை?"

சாப்பிட்டு வந்ததும் அடுத்த நிகழ்ச்சி நான்கு மணிக்குத்தான் என்றார்கள். ராவ் சொன்னார். "பக்கத்தில் அறை கிடைத்திருந்தால் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம். இந்த வயதில் அதுவெல்லாம் எங்களுக்கு அவசியம்''. மரங்களடர்ந்து பசுந்திடலொன்று அருகில் தெரிந்தது. ''அங்கே போய் ஓய்வெடுப்போம்" என்று அழைத்துப் போனேன். மரத்தடியில் உட்கார்ந்ததும் ராவ் அந்தப் பெயர் தெரியாத பெரிய மரத்தை அடி முதல் நுனி வரை ஆழ்ந்து பார்த்தார். அப்பவும் சொன்னார், ''அந்த டி.பி. வாசலிலும் ஒரு பெரிய மரம் ஆயிரம் கவிதைகள் சொல்லிக்கொண்டு நிற்பதை". ராவ் மேலும் கவிதை பற்றி பேசுவாரென்று எதிர்பார்த்த போது, "நாங்கள் நாளை மறுநாள் மைசூர் போக டிக்கெட் ரிஸர்வ் செய்யவேண்டுமே'' என்று பரபரப்பாகி விட்டார்.

விழா அலுவலகம் சென்று அவரவர் ஊர்களுக்கு டிக்கட் ரிஸர்வ் செய்யக் கேட்டுக் கொண்ட பின் அரங்கத்திற்குள் செல்கையில் ஒரு புகழ்பெற்ற உள்ளூர் கலைஞர் கதகளிக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்துக் கொண்டிருந்தார்.

ராவ் தம்பதி என்னைத் தனியாக விடுவதாக இல்லை. என் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டனர். ராவ் ஐந்து நிமிடம் பற்றில்லாமல் நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டுப் பத்து நிமிடம் குனிந்து மனைவியோடு பேசிக் கொண்டிருந்தார். பேசிவிட்டு நிமிர்கிற போதெல்லாம் கவலைப்பட்டும் பதட்டப்பட்டும் தெரிவார்.

இரவு பத்தரை மணிக்கு சாப்பாட்டுக் கூடத்திற்குப் போகும்போதும் ராவ் சொன்னார், "எல்லாமே கால தாமதமாய் நடக்கிறது. சாப்பிட்டவுடனாவது கார் கிடைக்குமா?"

"முதலில் சாப்பிடுவோம்!"

சாப்பிட்டு வெளியில் வந்தபோது பொது அரங்க நிகழ்ச்சிகள் துவங்கிவிட்டதாகச் சொன்னார்கள். நிர்வாகிகளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. திருவிழாக் கூட்டம் போலிருந்தது, ஜனத்திரள். ராவ் தம்பதி வேறு வழியில்லாமல் என்னோடு திறந்தவெளி அரங்கில் வந்தமர்ந்தனர். சதங்கையும் ஜதியும் வண்ணமுமாய் பரத நாட்டியம் நடந்து கொண்டிருந்தது. ராவ் நடனத்தை ஒரு நிமிடம்கூட ஊன்றிப் பார்க்கவில்லை. குனிந்து மனைவியோடு பேசிக் கொண்டேயிருந்தார்.

திடீரென்று என் தோளைத் தொட்டார். "அதோ பாருங்கள், முன் வரிசையில் மிஸ்டர் தாமோதரன் உட்கார்ந்திருக்கிறார். நாம் போய்க் கேட்கலாமே கார் கிடைக்குமாவென்று''. ராவ் தம்பதிக்காக ஒவ்வொரு நல்ல நிகழ்ச்சியாய் இழந்து கொண்டிருப்பது பளிச்சென்று மனதில் பட்டது. ஆனால் ராவ் மறுபடி மறுபடி தோளைத் தொட்டுக் கொண்டேயிருந்தார்.

நாங்கள் காரில் ஏறிக் கிளம்பிச் சென்றபோது மெல்லிய வெளிச்சத்தில் ஒரு பழக்கடையும் அதில் மலைப் பக்கத்துப் பழங்கள் நிறையவும் தெரிந்தது. காரை நிறுத்திப் பழம் வாங்க நான் இறங்குவது தெரிந்து ராவ் ஓடிப்போய் தாமே வாங்கினார். மனைவியிடம் பணம் வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்தார். உங்களுக்காக நான் சிறிய செலவாவது செய்ய வேண்டும்" என்றார்.

மறுநாள் காலையில் பனியோடும் குளிரோடும் ராவ் என் அறைக்கு வந்தார். "இன்று சீக்கிரம் கார் வந்து விடுமா?" என்றார். இரவு அவர் மனைவிக்குத் தலை வலித்ததாகச் சொன்னார்.

''இன்று நாம் கவிதை பாடவேண்டும்" என்றேன்.

"ஆம்" என்றவர் "ஆனால் நான் புதிதாக எதுவும் எழுதிக் கொண்டு வரவில்லை" என்றார்.

"ஏன்?"

''இப்போதெல்லாம் எதை எழுதுவதென்று தெரியவில்லை"

"எது பாதித்ததோ அதை"

''அப்படி எழுத மனம் வரவில்லை"

"நீங்கள் எழுத வேண்டும்".

''விடுங்கள் காபி சாப்பிட வேண்டும். வருகிறீர்களா?"

அன்று பல மொழிக் கவிஞர்களும் கவிதை பாடினார்கள். மற்ற எல்லோர் கவிதைகளிலும் மொழிதான் பிரதானமாயிருந்தது. ராவ் கவிதையில் உணர்ச்சி பிரவாகமெடுத்துப் படர்ந்தது. ஆழ்கடல், மலையுச்சி, பருவ காலங்கள், உயர் மணம், கண்ணீர், கடிய வேர்வை மிகவும் வேண்டிய ஒருவரின் ஸ்பரிசமெல்லாம் தெரிந்தது. கட்டியணைத்துக் கொண்டேன் அவரை. கூட்டம் கலையும்போது அவரிடம்



கேட்டேன். "எப்படி முடிந்தது இப்படி ஒரு கவிதை எழுத?'' அவர் சொன்னார். "என் மனம் ஆரோக்கியமாயிருந்தபோது; இதோ இவள் கழுத்தில் அந்த ஐந்து பவுன் சங்கிலியும் இல்லாதிருந்தபோது".

நான் புரியாமல் விழித்தபோது என்னை ஒரு கையிலும் மனைவியை ஒரு கையிலும் பற்றிக்கொண்டு தளர்வாய் நடந்துகொண்டே ராவ் சொன்னார். ''நான் ஒரே கம்பெனியில் முப்பத்தாறு வருஷம் வேலை பார்த்து ஓய்வு பெற்றேன். அதைவிட முக்கியம் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரே பேண்ட், ஒரே சட்டை மட்டுமே வைத்திருந்தேனென்பது".

"அவ்வளவு சிரமப்பட்டீர்களா?"

"அந்த நாட்களில் பேண்டையும் சட்டையையும் துவைத்துக் காயப்போட்டுவிட்டு அநேக நாள்களில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு நெடுநேரம் நின்று கொண்டிருப்பேன்".

"சொல்லுங்கள் ராவ்ஜி"

"என்ன சொல்ல?"

''நீங்கள் இப்போது ஏன் எழுதுவதில்லையென்று".

"நான் இப்போது என் சொந்த வாழ்க்கையைப் பற்றியல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறேன்"

"எனக்கு வருத்தமாயிருக்கிறது ராவ்ஜி. நீங்கள் எழுதாமலிருப்பதற்கும், உங்களது இப்போதைய வாழ்க்கைக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதாய் உணர்கிறேன்".

ராவ் தலையசைத்துக் கொண்டே கேட்டார். "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" நான் பதிலளித்ததும் ராவ் சொன்னார், "எனக்கு மூன்று பிள்ளைகள்" வாடிய முகத்தோடு தொடர்ந்தார்.

"மூத்தவள் ஒரு புரொபஸர், மைசூரில்; அடுத்தவளுக்கு பெங்களூரில் வங்கியில் வேலை மகன் ஜெய்ப்பூரில் இஞ்சினியர். இவளுக்கு ஐந்து பவுனில் சங்கிலி ஒன்று இருந்தது. அது அடகுக் கடைக்குப் போய்ப் போய் அவர்கள் படித்து முடித்தார்கள். அவர்களுக்கு சாப்பிடக் கொடுத்துவிட்டு இவள் எத்தனை நாள் பட்டினி கிடந்தாள் என்று கணக்கிட்டுவிட முடியாது".

''எல்லோருக்கும் திருமணமாகிவிட்டது".



''திருமணமாகி எல்லோரும் கணவரோடும் மனைவியோடும் பிர.மாதமாய் செட்டிலாகி விட்டார்கள்".

''உங்களுக்குத் திருப்திதானே"

"ஆனால் நானும் இவளும் இன்னும் செட்டிலாகவில்லை. இந்த ஊருக்கு வரும்படி வந்த அழைப்பு நாங்கள் சேர்ந்திருக்கவும் சுதந்திரமாயிருக்கவும் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்துவிட்டது. இதற்காக நாங்கள் அலைந்து கொண்டேயிருக்கத் தயாராயிருக்கிறோம்".

"மூன்று பேர்களில் ஒருவர் வீட்டைப் பரிசீலித்து அங்கு செட்டிலாகிக் கொள்ளலாமே".

"சரி விடுங்கள். நாங்கள் வெகு சீக்கிரம் ராமேஸ்வரம் வருவோம். வழியில் தானே உங்கள் ஊர்?"

''ஆமாம் நீங்களிருவரும் எங்கள் வீட்டில் வந்து சில நாட்களாவது தங்கிச் செல்ல வேண்டும்"

"உங்கள் முகவரி வேண்டும்"

நான் பேனாவை எடுக்குமுன் ராவ் ஞாபகத்திற்கு வந்து சொன்னார் "கிளம்புங்கள், நாம் ஊர் திரும்ப டிக்கெட்டுகளை வாங்கிவிட்டார்களா என்று விசாரிப்போம்".

விழா அலுவலகத்தில் அவர்கள் சொன்னதைக் கேட்டு ராவ் மிகவும் சோர்ந்து போனார். நான் மறுநாள் கிளம்பவும் அதற்கும் மறுநாள் ராவ் தம்பதி புறப்படவும் டிக்கெட்டுகள் வாங்கியிருந்தனர். மைசூருக்கு டிக்கெட் கிடைப்பதில் சிரமமிருந்ததாம்.

''நீங்கள் எங்கோளடிருக்கும் போதே எங்களுக்கு இவ்வளவு கஷ்டம். நீங்களில்லாமல் ஒரு முழு நாள் நாங்கள் டிபிக்கும் கலையரங்கிற்கும் அலைந்து சாப்பிட்டு எப்படி ரயிலேறப்

போகிறோமோ" என்றார். அந்த அம்மா பீதியில் வெளிறிப் போனார்.

அன்றிரவும் நாங்கள் நடுநிதியில்தான் அறைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. தளர்ச்சியும் மனச் சோர்வுமாய் ராவும் அந்த அம்மாவும் குளிருக்குக் கைகளை மார்பில் கட்டிக்கொண்டு அறைக்குள் நுழைந்ததை வராந்தாவில் நின்று பார்த்தேன். காலை மூன்று மணிக்கு என் அறைக்கதவைத் தட்டி இரண்டு வயிற்று வலி மாத்திரைகளை வாங்கிப் போனார்.

காலையில் வெகுநேரம் சென்றே ராவ் என் அறைக்கு வந்தார். "நாளை ஒரு முழு நாளைக்கும் நாங்கள் உங்கள் உதவியின்றி அலைய வேண்டும். ஆனால் என்ன செய்வது? அலைந்துகொண்டே திரிய வேண்டியதுதான், ராமேஸ்வரம் வரும்போது சந்திப்போம்" என்றார். விடுபடாமல் ஒவ்வொரு பொருளையும் எடுத்துப் பெட்டிக்குள்ளும் பைக்குள்ளும் நான் வைத்துக் கொண்டிருந்த நேரமது.

வெளியே சளசளவென்ற சத்தம் அதிகமாய்க் கேட்டதால் டி.பி. வாசலுக்கு வந்தோம். எதிர்கட்சிகள் திடீர் பந்த் நடத்திக் கொண்டிருந்தன. சாலையில் வாகனமென்று ஒரு சைக்கிள்ரிக்ஷா கூட இல்லை. மழை வேறு கொட்ட ஆரம்பித்திருந்தது.

ராவ் தம்பதி நடுங்கிப் போனார்கள். அவர் குனிந்து மனைவியோடு அடிக்கடி பேசிக் கொண்டுதானிருந்தார். ஆனாலும் அந்த அம்மா முகத்தில் வேர்வை துளிர்த்துக் கொண்டேயிருந்தது மழையிலும் குளிரிலும்.

மதியம்போல ஒரு கார் வர நான் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். ராவ் தம்பதியைக் கொண்டுபோய்க் கலையரங்கில் இறக்கிவிட்டதும், என்னை ரயில் நிலயத்தில் விடும்படி டிரைவரிடம் சொன்னேன். மழை சடசடவென்ற சத்தமாய்ப் பெய்து கொண்டிருந்தது.

கலையரங்க வாசலிலிருந்து கார் கிளம்பியபோது ராவ் தவிப்பும் அவசரமுமாய் என்னிடம் எதுவோ கேட்க விரும்பிக் கையை உயர்த்தியது போலிருந்தது. ஆனால், டிரைவருக்கு பந்த் பதட்டம் – மழை குளிர் நடுக்கம் — வேகமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்.

இரவு வரவிருக்கும் ரயிலுக்காக மதியமே போய் ரயில் நிலைய பெஞ்சில் உட்கார்ந்திருந்தேன். தண்ணீர் குடித்துவிட்டு நிமிர்ந்தபோது சட்டென்று ஞாபகம் வந்தது. ராவ் என் வீட்டு முகவரியைக் கேட்டுத்தான் கையை உயர்த்தியிருந்திருக்கிறார்.

***– 'ஒவ்வொரு கல்லாய்' சிறு கதைத்தொகுப்பிலிருந்து.***
***வெளியீடு : அகரம் கும்பகோணம்***

## மௌனமே சிறந்தது

ஒரு நாள் அக்பர் பீர்பலைப் பார்த்து, "பீர்பல், முட்டாள்களுடன் பழக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

பீர்பலோ அக்பர் சொன்னதைக் காதில் வாங்காதவர் போலப் பேசாமல் இருந்தார்.

அக்பர் மறுபடியும், "பீர்பல், உன்னைத்தான்! முட்டாள்களுடன் பழக வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

பீர்பல் மறுபடியும் மௌனம் சாதித்தார்! அக்பருக்கோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'நாம் கேட்கிறோம். பீர்பல் பேசாமல் இருக்கிறாரே!" என்று கோபப்பட்டார்.

"என்ன பீர்பல், நான் கேட்பது காதில் விழவில்லையா? முட்டாள்களுடன் பழக வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

இதற்கும் பீர்பலிடமிருந்து மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது.

"என்ன பீர்பல்! உன் காது செவிடாகப் போய் விட்டதா? அல்லது வேண்டுமென்றே மௌனம் சாதிக்கிறாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார், அக்பர்.

"அரசே! கோபப்படாதீர்கள்! நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலை அப்போதே சொல்லி விட்டேனே!" என்று சாவதானமாகச் சொன்னார், பீர்பல்.

"என்ன, பதில் சொன்னாயா? மௌனமாக அல்லவா இருந்தாய்? இதுதான் பதிலா?"

"ஆம், அரசே! முட்டாள்களுடன் பழகவேண்டுமானால் மௌனம் சாதிக்க வேண்டும்" என்றார் பீர்பல்.

பீர்பலின் பதிலைக் கேட்டு அக்பர் மகிழ்ச்சி அடைந்தார்! ●



# சமய நல்லிணக்கப் பாவலர்

அறிஞர் தெ.பொ.மீ. 'பழந்தமிழ் வடிவம்' என்றும் தமக்கு தமிழ் அறிவு தந்த 'தமிழ் தொட்டில்' என்றும் பாராட்டிய பாவலர் பெருமான் செய்கு தம்பி அவர்கள் நாஞ்சில் நன் நாட்டில் 31–7–1874ஆம் ஆண்டு பிறந்தார். அவரது 127ஆவது பிறந்த நாளை தமிழ் கூறும் நல்லுலகம் இன்று கொண்டாடுகிறது.

அவதானக் கலைப் பேரரசர், அறிஞர் மாமணி, பாவலர்க்கெல்லாம் பாவலர், செந்தமிழ் சொற்கொண்டல் செய்கு தம்பிப் பாவலர் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தமிழறிஞர்கள் நடுவண், ஈடுஇணையற்ற புகழைப் பெற்றவர். பாவலரிடம் பன்முக ஆற்றல் அமைந்திருந்தது. இயற்றமிழ் புலவர், கதிர்வேலருக்கு எதிர்வேலர், தேவாமிர்தப் பிரசங்க களஞ்சியம், சோடாவதானி, மாகமதி, சதாவதானி, கலைக்கடல், தமிழ்ப்பெரும் புலவர், மாத்தமிழ்ச் செம்மல் என்பன போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு விளங்கக் கூடியவர். பாவலர் பாங்கோடு ஆற்றிய தமிழ்ப்பணி தான் இதற்கெல்லாம் முழுமுதற் காரணம் என்று தமிழ்க்குடி மக்கள் அறிவர்.

பாவலர் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தில் தமிழனும், தமிழ் மொழியும் மிக பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த சமூக, அரசியல்; பொருளாதார பின்புலங்கள் உண்டு. தமிழின உணர்வு, மேலீட்டின் காரணமாக தமிழ் இலக்கண, இலக்கியங்களில் மட்டுமின்றி சமய நூல்கள் அனைத்திலும் ஆய்ந்து தோய்ந்தவர். எனவேதான் இவர் வாழ்விலும் சிந்தனையிலும் தமிழ்க் கருத்துக்களே மிகுந்தன.

> **"எத்தனை பாட்டுவகை எந்தமிழில் உள்ளனவோ**
> **அத்தனையும் சொல்லவல்ல ஆற்றலுடைவித்தை**
> **இறந்ததுகாண்; சிந்திப்பீர் இப்புவியில் யாரும்**
> **பிறப்பாரோ பாவலரைப் போல"**

என்ற டி.கே. சிதம்பர முதலியாரின் பாடல் முழக்கம் தெரிவிக்கிறது. கவிக்கோ அப்துல் ரகுமான் "பாவலர், தம் மனம் நினைத்து உருகுவதை நினைவு வந்த வரிசையில் உணர்வுப்பூர்வமாய்ப் பாடக்கூடியவர்" என்று போற்றுகிறார்.

பதிப்பாசிரியர், பத்திரிக்கையாளர், உரையாசிரியர், சொற்பொழிவாளர், அவதாரக் கலைஞர், இலக்கண இலக்கியத் திறனாய்வாளர், ஆசிரியர், சுதந்திரப் போராட்ட வீரர், அரசியலார் என பல வகைகளில் முத்திரை பதித்த இந்த வித்தகர், சமய நல்லிணக்கப் பணிகளில் தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டவர். செய்கு தம்பிப் பாவலர் சமயப் பொறை மிகுந்தவர். பிற சமயங்களிடம் காழ்ப்புணர்ச்சி இல்லாதவர். அனைத்து சமயத்தையும் மதிக்கும் பண்பாளர். சமுதாயத்தில் சமய நல்லிணக்கம் மேலோங்கி இருந்தால் மட்டுமே ஒருமைப்பாடும், ஒற்றுமைப்பாடும் இந்திய சமுதாயத்தில் இருக்க முடியும். இஸ்லாமியச் சமயம், சைவ சமயம் முதலிய சமயங்களின் பெருமைகளைப் பாவலர் தம்முடைய படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். இஸ்லாமியச் சமுதாயத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், அந்தாதி, கோவை, பிள்ளைத்தமிழ், மஞ்சரி போன்ற இலக்கிய வகைகளின் உள்ளடக்கமாய்ப் படைத்துள்ளார். "தமிழகத்தின் சமய நல்லிணக்க தூதுவராகவே இந்நூற்றாண்டின் மத்தியில் நாஞ்சில் நாட்டில் வாழ்ந்த செய்கு தம்பிப் பாவலர் அவர்கள், தம்முடைய நபிகள் நாயக மான்ய மஞ்சரியில் நபிகள் நாயகம் உலக நபியாக ஆற்றிய உறுபணியை உயர்வுளப் பாடுகிறார்" எனும் பகுதியில் அறிஞர் மு. அப்துல் கரீம் விளக்கிக் கூறுகிறார்.

செய்கு தம்பிப் பாவலர் இஸ்லாமியச் சமயத்தைச் சேர்ந்தவராயினும், பிற சமயங்கள் மீது, மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அருட்பாவை, "மருட்பா" என்று தமிழறிஞர்கள் சிலர் வாதிட்டனர். அக்கருத்தை மறுத்து அருட்பாவை அருட்பாவே என்று நிறுவியவர் செய்கு தம்பிப் பாவலர். அதனால் அவரை காஞ்சிபுரம் வீதியில் யானை மீது அமர வைத்து ஊர்வலமாய் அழைத்து சென்று அவருக்கு பெரிய கோயிலில் பூரண கும்ப மரியாதை செய்தனர். இக்கருத்தை, இராமலிங்க அடிகளாரின் அருட்பாவுக்கு மாபெரும் எதிர்ப்பு முளைவிட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் என்பாரின் மாணாக்கரும், தலைசிறந்த தமிழறிஞருமான கதிர்வேல் பிள்ளை என்பார் அருட்பாவை மருட்பா எனக்கூறி எதிர்த்த கூட்டத்தினின் தளபதியாய் இருந்து சண்டமாருதம் செய்தார். அருட்பா சைவ நூலேயாயினும் அது தமிழ் நூல்; தன்னேரில்லா ஞானப் பூங்கா. எனவே, அதன்பெருமை காக்கப்பட்டாக வேண்டும்; கண்டனங்களிலிருந்து 'அது மீட்கப்பட்டாக வேண்டும் என்ற தமிழுணர்வு பிடர் பிடித்து உந்த செய்கு தம்பிப் பாவலர் அருட்பாக்களம் புகுந்தார். அடுக்கடுக்கான ஆதாரங்கள்; மிகமிகத் தெளிவான வாதங்கள் பாவலர்

முனைவர் பேராசிரியர் கா. மு. பாதுசா
பதிவாளர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

> “இயற்றமிழ் புலவர்,
> கதிர்வேலருக்கு எதிர்வேலர்,
> தேவாமிர்தப் பிரசங்க
> களஞ்சியம், சோடாவதானி,
> மாகமதி, சதாவதானி,
> கலைக்கடல், தமிழ்ப்பெரும்
> புலவர், மாத்தமிழ்ச் செம்மல்
> என்பன போன்ற பல்வேறு
> சிறப்புப் பெயர்களைக்
> கொண்டு விளங்கக் கூடியவர்
> பாவலர்.”



அவர்களின் வாயிலிருந்து கடல்மடை திறந்தாற்போன்று வெளிப்போந்தன. அருட்பா, அருட்பாவே என நிறுவப்பட்டது. தேவாமிர்த பிரசங்க களஞ்சியம் என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார். இந்து சமய அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கிக் கலைமகளைப் பற்றியும், திருமாலைப் பற்றியும், சிவபெருமானைப் பற்றியும் பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

*“திங்களொடு கங்கைமுடி சேர்த்தசிவன் நீயே*
*திரிபுரங்கள் நீறுபடச் சிரித்த சிவன் நீயே*
*சங்கினொடு சக்கரம்கை தாங்கியமால் நீயே*
*தசமுகனைப் போரினுயிர் தவிர்த்திடுமால் நீயே*
*நங்கைகலை மங்கைதவழ் நாவினையன் நீயே*
*நாரணனார் உந்திதரு நளினத்தோன் நீயே*
*எங்குமுள பரம்பொருளே என்றுமுள பொருளே*
*யானைமுகப் பொருளேவந் தேழைக் கருளே”*

என்ற பாவலரின் வரிகள் தமிழ் நெஞ்சங்களில் ஆழப்பதிந்து இருக்கிறதல்லவா?

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில், ‘சைவம் வளர்த்த தமிழ்’ என்ற தலைப்பில் மூன்று நாள் சொற்பொழிவு நடந்தது. மூன்றாம் நாள் சொற்பொழிவில் பல்வேறு சைவ சமய சாத்திர, தோத்திரப் பாடல்களைக் கடல்மடை திறந்த வெள்ளம்போல் வெளிப்படுத்தினார். அப்போது, ‘கூர்ந்த மெய் ஞானத்தார்’ எனத் தொடங்கும் மாணிக்கவாசகர் பாடலில் அமைந்த,

*“கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்*
*நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணர்வே”*

என்னும் அடிகளைக் கூறி நிறுத்தி, மேற்கொண்டு கூறுமாறு சைவப் பெருமக்களை வினவினார். யாரிடமிருந்தும் தொடர் அடி வரவில்லை. அதனைக்கண்ட பாவலர் எஞ்சிய பகுதியைத் தாமே கூறிச் சைவர்களை நோக்கி, “இனியாகிலும் தமிழ் தழைத்தோங்கச் சைவம் வளர்த்த தமிழைத் தயை செய்து படிக்க முன்வாருங்கள்” எனக் கூறி முடித்தார்.

அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் குறிப்பிட்டபடி இத்தகைய பன்முக ஆற்றல்பெற்ற ஒரு பேரொளியைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்துவது தமிழ் கற்றவரின் தலையாய கடமையாகும். 1847ஆம் ஆண்டு நாகர்கோயிலை அடுத்த ‘இலங்கடை’ என்னும் ஊரில் தோன்றிய இப்பெருமான் 76 ஆண்டுகள் தமிழ் மண்ணில் வளர்ந்து, வாழ்ந்து 1950ஆம் ஆண்டில் உயிர்நீத்தார். இவர் தமிழுக்கும் சமயத்திற்கும் செய்த பணி ‘மெக்கா’ வரை நீண்டது. மதநல்லிணக்கம் பேசுகின்ற இன்றைய அரசியல் விற்பனர்களுக்கு இவர் ஒரு முன்னோடியாவார். எல்லாச் சமயத்தவராலும் மதிக்கத்தக்க தமிழனாய் வாழ்ந்த பெருமை செய்குதம்பிப் பாவலருக்கே உண்டு. இஸ்லாமியர் நெஞ்சில் இடம்பெற்ற இவர், அயல் மதத்தவரின் அகங்களிலும் பேரிடம் பிடித்துவிட்டார். இவரை நேசித்த தமிழறிஞர்களும், யாசித்த தமிழ்ச் சான்றோர்களும் பல்லோராவர். ★



# கல்வியில் அக்கறை காட்டுகிற அரசு

மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் 10-வது வகுப்பு, 12-வது வகுப்புத் தேர்வுகளில், சிறப்பிடம் பெற்ற மாணவ-மாணவியர்க்கு பாராட்டும், அவர்களுடைய கல்விச் செலவு முழுமையையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்கின்ற திட்டத்தை விளக்குகின்ற நிகழ்ச்சியும் வள்ளுவர் கோட்டத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அறிவொளி ஏற்றக் கூடிய தக்க கருவி கல்விதான். அந்தக் கல்வியிலே கண்ணுங்கருத்துமாக இருந்து படித்துத் தேறியது மாத்திரமல்லாமல், முதல் தரமாக தேறிய நிலையும், அது கண்டு மகிழ்ச்சியுற்ற பெற்றோர்கள் நாம் பெற்ற குலக்கொழுந்துகள் இவ்வாறு வெற்றி பெற்றிருக்கிறார்களே என்று அடைகின்ற மன நிம்மதியும், நம்முடைய ஆசிரியத் தன்மையினால் அல்லவா நம்முடைய மாணவர்கள் நமக்குப் பெயரையும், புகழையும் தந்திருக்கிறார்கள் என்று பெருமிதப்படுகின்ற ஆசிரியர் பெருமக்கள், நெஞ்சு நிமிர்த்தி அமர்ந்திருக்கின்ற காட்சியும் உள்ளபடியே நெஞ்சம் கொள்ளை கொள்கின்ற இனிய காட்சியாகும்.

இத்திட்டம் 1996–ஆம் ஆண்டு நான்காவது முறையாக கழக ஆட்சி பொறுப்பேற்ற காலந்தொட்டு அறிமுகம் செய்யப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு சீரிய, சிறந்த, செழுமையான திட்டமாகும். தமிழை ஒரு பாடமாகவேனும் எடுத்துப் படித்து, பத்து, பனிரெண்டாம் வகுப்புகளில் மாவட்ட அளவிலே முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவ-மாணவிகளுடைய உயர்கல்விச் செலவை அரசே ஏற்கின்ற இந்தத் திட்டம் 1996–97ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 1997–98இல் மாவட்ட அளவில் மூன்று இடங்கள் பெறும் மாணவ-மாணவிகளுக்கும் இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, இத்திட்டத்தின்படி பத்தாம் வகுப்பிலே சாதனை படைக்கும் மாணவர்களுக்கு அவர்களின் மேல்நிலைக் கல்விச் செலவு அல்லது ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் நிறுவனங்களிலே சேர்ந்து பயிலும் செலவு ஆகியவற்றை அரசு ஏற்றுக்கொள்கிறது.

பனிரெண்டாம் வகுப்புத் தேர்வில் சாதனை படைக்கும் மாணவர்கள் மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற்கல்வி உட்பட எந்த வகைக் கல்விப் பிரிவில் சேர்ந்தாலும் அவர்களுக்குரிய செலவு முழுவதையும் அரசு ஏற்கிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை உதவி பெற்றவர்கள் என்று எடுத்துக்கொண்டால் 1996ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் மூன்று பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் மூன்றுபேர்.

1997ஆம் ஆண்டு இத்திட்டத்தை விரிவுபடுத்தியதன் காரணமாக பத்தாம் வகுப்பு மாணவர்கள் நூற்று இருபத்தாறு பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தொண்ணூற்று ஒன்பது பேர்.

1998ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் 139 பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தொண்ணூற்று ஏழு பேர்.

1999ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் நூற்று பத்தொன்பது பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் நூற்றியொரு பேர்.

இப்படிப்பட்ட இந்த எண்ணிக்கையில் மாணவர்களுடைய படிப்புச் செலவை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.



**905 மாணவ-மாணவிகளின் உயர் கல்விச் செலவை அரசு ஏற்கிறது**

இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு மாணவர்கள் நூற்று இருபத்திரெண்டு பேர்; பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தொண்ணூற்றி ஆறு பேர். இத்திட்டத்தின்படி, இதுவரை பத்தாம் வகுப்பிலே சாதனை படைத்த ஐந்நூற்றி ஒன்பது மாணவர்களுக்கும், பனிரெண்டாம் வகுப்பில் சாதனை படைத்த முன்னூற்றி தொண்ணூற்றி

ஆறு மாணவர்களுக்கும் ஆகமொத்தம் தொள்ளாயிரத்து ஐந்து மாணவர்களுடைய உயர்கல்விச் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

நடப்பாண்டிற்கு இவ்வகை செலவினத்திற்காக 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஆண்டும்கூட, இப்படிப்பட்ட பாராட்டுக்களைப் பெறுகின்றவர்கள் இந்த வாய்ப்பை, இந்தத் திட்டத்தினுடைய பயனை நுகரக்கூடியவர்கள் எண்ணிக்கையில் மாணவர்கள் பனிரெண்டாம் வகுப்பில் நாற்பத்தைந்து பேர்; மாணவிகள் ஐம்பத்தோரு பேர். அதேபோல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில – மாவட்ட அளவிலே முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை நூற்றி இருபத்திரெண்டு. இதிலே மாணவிகள் எண்பத்தெட்டு பேர்; மாணவர்கள் முப்பத்து நான்கு பேர். மொத்தத்தில் மாணவியர் நூற்று முப்பத்தொன்பது பேர், மாணவர்கள் எழுபத்தொன்பது பேர்.

"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?" என்று கேட்டது அந்தக் காலம். கேட்டவர் யார் என்று கேட்பது இந்தக் காலம் என்பதற்கு அடையாளமாகத்தான் மாணவியர் இந்த அளவிற்கு எண்ணிக்கையிலே பெருகியிருக்கின்றனர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் எந்தெந்த உயர்கல்வியை எடுத்துக் கொள்வது என்ற முடிவிற்கு வந்து, இதுவரையிலே 1999ஆம் ஆண்டு முடிய பனிரெண்டாம் வகுப்பிலே இந்தத் தரம் பெற்றவர்களுடைய எண்ணிக்கை மருத்துவக் கல்லூரிகளிலே நூற்று பனிரெண்டு மாணவர்கள்; பொறியியல் கல்லூரிகளிலே நூற்று பதினான்கு மாணவர்கள்; இதர கல்லூரிகளிலே எழுபத்து நான்கு மாணவர்கள் சேர்ந்து உயர்கல்வி பெற்று வருகின்றார்கள். இந்த ஆண்டு கணக்கு இன்னும் எடுக்கப்படவில்லை. எனவே, அவரவர்கள் தாங்கள் விருப்பமுள்ள துறைகளிலே திறமை காட்டுவதற்கு இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது என்பதை நான் கூறமுடியும்.

இந்த ஆட்சி கல்விக்கு எந்த அளவு முக்கியத்துவம் தருகிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதுவும் கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்களுக்கு மேலும் வழிவகை செய்துதரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், அவர்களுக்கென்று தனியாக அவர்களுடைய இடஒதுக்கீட்டிலேகூட கிராமப்புறத்து மாணவர்களுக்குப் பதினைந்து சதவீதம் என்ற உயர்ந்த திட்டத்தைக் கொண்டுவந்ததும் இந்த அரசுதான் என்பதையும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே இந்தத் திட்டம் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் நான் இங்கே அறிவிக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக, 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே ஆட்சிப் பொறுப்பேற்ற காலந்தொட்டு, அதற்கு முன்பு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கல்வியிலே காட்டிய அக்கறையை தொடர்ந்து பின்பற்றி வந்த அரசு இந்த அரசு என்பதை உங்களுக்கு நான் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதனுடைய வளர்ச்சியை உங்களுக்கு குறிப்பிட்டு சொல்ல வேண்டுமேயானால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் நான் எந்த ஆட்சி, யாருடைய ஆட்சி என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை. ஐந்தாண்டு, நான்காண்டு என்று சொன்னாலே புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு என்ற காரணத்தால் சொல்கின்றேன்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை ஐந்நூற்று முப்பத்தொன்று; இந்த நான்காண்டு காலத்தில் தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை தொள்ளாயிரத்து அறுபத்தைந்து.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகள் நூற்று தொண்ணூற்று ஆறு; இந்த நான்காண்டு காலத்திலே ஐந்நூற்று பனிரெண்டு.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை நூற்று முப்பத்தி நான்கு; இந்த நான்காண்டு காலத்திலே முந்நூற்றி அறுபத்து நான்கு.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் எண்பது; இந்த நான்காண்டு காலத்திலே இருநூற்று தொண்ணூற்று ஆறு.

கடந்த ஐந்தாண்டு காலத்திலே அனுமதிக்கப்பட்ட கலை, அறிவியல் கல்லூரிகள் அறுபத்தைந்து; இந்த நான்காண்டு காலத்திலே நூற்று இருபத்தைந்து.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் அனுமதிக்கப்பட்ட சுயநிதி பொறியியல் கல்லூரிகள் முப்பத்திரெண்டு; இந்த நான்காண்டு காலத்திலே எழுபத்தைந்து.

இப்படி கல்வித்துறையிலே, உயர்கல்வி நிலையிலே சிறப்பெய்துகின்ற ஒரு நிலையை உருவாக்கக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்றது. இது உங்களுடைய ஆட்சி என்பதற்கு அடையாளமாகத்தான் உங்களிலே திறமை காட்டுகின்றவர்களுக்கு, முதலிடம் பெறுகின்றவர்களுக்கு இந்த அரசினுடைய நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு எல்லோருக்கும் இன்றைய தினம் கல்வியை ஊட்டக்கூடிய அளவிற்குப் பல சாதனங்கள், வசதி வாய்ப்புகள் இந்த அரசின் சார்பாக செய்யப்பட்டிருந்தாலும்கூட, அதிலும் சிறப்பாக உங்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே செய்கின்ற காரியம்தான் இன்றைய நிகழ்ச்சி என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்தி, இதை தக்கவாறு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளிலே இன்னும் நிறைய மாணவ, மாணவியர் போட்டி போட்டுக் கொண்டு இந்தத் திட்டத்தை, இதனுடைய பயனை நுகரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாணவர்கள் யாரும் சோர்வடையாமல், மாணவியருடைய வெற்றியைக் கண்டு பொறாமைப்படாமல் போட்டி மனப்பான்மையோடு மாணவர்கள் தாங்களும் அந்த இடத்திற்கு வரவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**– 2000ஆம் ஆண்டு 10, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வுகளில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு மாநில–மாவட்ட அளவில் முதன்மை பெற்ற மாணவ–மாணவியர்க்கு அவர்களது உயர்க்கல்வி செலவை ஏற்கும் விழா 29–7–2000 அன்று நடைபெற்றது. இந்த விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து... ★**



# தமிழ்நாட்டில் 5,000 இளைஞர் மன்றங்கள்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 2000–2001ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவர்கள் அல்லாத இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒன்றிற்கு ஒரு இளைஞர் மன்றம் வீதம் தொடங்கப்படும் என அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து நடப்பாண்டில் 5,000 இளைஞர் மன்றங்கள் தொடங்கப்படும் என்றும், இந்த மன்றங்கள் இளைஞர் களிடையே உறுதிப்பாட்டினையும், மதநல்லிணக்கத்தினையும் ஏற்படுத்துவதற்கு விளையாட்டு ஒரு முக்கியமான அம்சமாக இருப்பதால் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் ஒரு இளைஞர் மன்றம் (Youth Club) பொது சந்திப்பு மையமாகச் செயல்படுமென இளைஞர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கேற்ப மாநிலம் முழுவதும் இந்த ஆண்டு 5,000 இளைஞர் மன்றங்கள் அமைக்க ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள் ளார்கள். விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் இளைஞர் மன்றங்களின் செயல்பாடுகளை கவனிப்பது ஆகியவற்றிற்கு இம்மன்றங்களே பொறுப்பேற்று தானாகவே நிதியைத் திரட்ட வேண்டும். மாவட்டங்களில் அமைக்கப்படும் இந்த இளைஞர் மன்றங்களுக்கென ஒரு தனிச் சின்னமும் (LOGO) எழுச்சியூட்டும் குறிக்கோளும் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. ஊராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கப்படும் இந்த மன்றங்கள், அமைந்துள்ள இடத்தின் பெயரைக் கொண்டதாக மட்டுமே இருக்க வேண்டும். தனி நபரின் பெயரிலோ, ஒரு சமுதாயம் அல்லது எந்தவொரு கட்சியின் பெயரைக் கொண்டோ இருக்கக்கூடாது. இந்த மன்றத்தின் குறிக்கோள் 'விளையாடி மகிழ்வோம், ஒன்று கூடி வாழ்வோம், நாடு நலம் பெற உழைப்போம்' என்பதாக இருக்கவேண்டும்.

இவ்விளையாட்டு மன்றங்கள் 'நமக்கு நாமே' திட்டம் போல் ஒரு தன்னார்வ அமைப்பாக முன்னேறி செயல்பட வேண்டும். கல்லாமை போக்குதல், அறிவியல் முனைப்பு (Scientific temper) ஏற்படுத்துதல், மத நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் பாரம்பரியப் பண்பாட்டைப் பேணிய வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் வகையில் செயல்பட வேண்டும். ஏனைய துறைகளில் உள்ள (IEC) - Information, Education, Communication (செய்தி, கல்வி, தகவல்) நடவடிக்கைகளுக்கும் இம்மன்றங்களின் பணி பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் 25 உறுப்பினர்களைக் கொண்டதாக இம்மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். இம்மன்றங்களில் உறுப்பினர்களாக சேர விரும்பும் இளைஞர்களின் வயது 15 முதல் 35 வயதிற்குட்பட்டு இருக்கவேண்டும். சம்பந்தப்பட்ட ஊராட்சி/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். அனைத்து சாதி மற்றும் சமுதாயங்களின் பிரதிநிதித்துவம் கொண்டதாகவும், மகளிர்க்கு தகுந்த பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையிலும் இம்மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். இம்மன்றங்களின் பணிகள் 10 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழுவால் கண்காணிக்கப்படும்.

இளைஞர் மன்றத்தின் நிர்வாகக் குழு குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூட்டப்பட வேண்டும். இளைஞர் மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்குழு ஜூன் மாதம் ஒரு முறையும், டிசம்பர் மாதம் ஒரு முறையுமாக ஆண்டுக்கு இரண்டு முறை கூட்டப்பட வேண்டும். ஒரு நிர்வாகக் குழுக்கூட்டம் கூட்டப்படுவதற்கு குறைந்தபட்சம் உறுப்பினர்களின் எண்ணிக்கை (quorum) 5 ஆக இருக்க வேண்டும். அதேபோல் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்படுவதற்கு குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 நபர்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

இந்த இளைஞர் மன்றத்தில் உறுப்பினராகச் சேரும் ஒவ்வொரு உறுப்பினரும் கீழ்க்காணும் 'இளைஞர்களுக்கான உறுதிமொழியினை' எடுத்துக்கொள்ள வேண்டும்.

"இளமையும், மன உறுதியும் நிரம்பப் பெற்ற நான் என் சக இளைஞர்களுடன் மதம், சாதி எனும் குறுகிய வேறுபாடுகளைக் கடந்து இந்திய ஒருமைப்பாட்டிற்கும், தமிழக மேம்பாட்டிற்கும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்ற உளமாற உறுதி கூறுகிறேன். நான் என் தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், உடல் வளத்தை அதிகரித்துக் கொள்ளவும், தலைமைப் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவும் அயராது பாடுபடுவேன். எனது ஓய்வு நேரத்தை விளையாட்டு, வாசிப்பு, கலை, இலக்கியம், சமூகப்பணி, கிராம ஒற்றுமை, மது ஒழிப்பு, தீண்டாமை அழிப்பு போன்ற ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபட்டு ஒளிபடைத்த கண்களுடன், வலிமை மிக்க தோள்களுடன் விளங்கிட பயன் படுத்துவேன் என முழு மனதுடன் சூளுரைக்கிறேன்".

இளைஞர் மன்றங்களுக்கான (Youth Clubs) சின்னம்



விளையாடி மகிழ்வோம்!
ஒன்றுகூடி வாழ்வோம்!!
நாடு நலம்பெற உழைப்போம்!!!

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்/நன்கு பெயர் பெற்ற சுயஉதவிக்குழுக்கள்/நேரு யுவ கேந்திரா/உள்ளாட்சி அமைப்புகள் — ஆகியவற்றின் மூலம் இளைஞர் மன்றங்கள் அமைப்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் தீர்மானிப்பார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முகமை (Agency) 'இளைஞர் மன்ற ஊக்குநர் (Promoter) என்று அழைக்கப்படும். இந்த ஊக்குநர் இளைஞர் மன்ற உறுப்பினர்களுக்கு, குறைந்தபட்சம் 6 மாத காலம் பயிற்சி அளிப்பதும் (Hand holding period), எவ்வித இடர்ப்பாடுமின்றி இளைஞர் மன்றங்கள் இயங்குவதற்கும் உதவி செய்வார். இந்தக் காலகட்டத்தில் ஊக்குநர், இளைஞர் மன்ற செயற்குழு மாதத்திற்கு ஒரு முறை கூடுவதையும், பொதுக்குழுக் கூட்டம் ஒரு முறையாவது கூட்டப்படுவதையும், இளைஞர் மன்றத்தின் உறுப்பினர்களை மரம் நடுதல்/மண்சாலை அமைத்தல்/புதர்களை அகற்றுதல்/தூர்வாருதல் போன்ற ஆக்கப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்திக் கொள்வதையும் உறுதிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு இளைஞர் மன்றத்திலும் இப்பணிகளைச் செயலாக்குவதில் ஆகும் செலவினத்தை ஈடுகட்டும் பொருட்டு ரூ.500, அந்தந்த இளைஞர் மன்ற ஊக்குநர்களிடம் ரூ.250 வீதம் இரண்டு தவணைகளில் வழங்கப்படும்.

இந்த 6 மாத காலப் பயிற்சி காலம் முடிவடைந்தவுடன் நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள் மற்றும் சமூக நலப்பணிகள் மற்றும் பிற ஊக்கப் பணிகள் ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய அறிக்கையினை இளைஞர் மன்ற அமைப்பாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த இளைஞர் மன்றங்களை இளைஞர்கள் பயன்படுத்திக் கொண்டு விளையாட்டின் மூலம் ஒன்றுபட்டு, சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஆக்கப்பூர்வமானப் பணிகளில் ஈடுபட்டு தமிழகத்தையும், தமிழக மக்களையும் வளமும், நலமும் பெறச் செய்ய வேண்டுமென்று தமிழக அரசு இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

★ ★ ★



# தேசிய நீர்வளக்குழுக் கூட்டம்

□ முதலமைச்சர் கலைஞர்

முக்கிய இயற்கை வளமான தண்ணீரை ஆதாரவாக மேம்படுத்தவும், திறமையாக நிர்வகிக்கவும் கொண்டுள்ள அக்கறைக்காக பிரதமர் அவர்களைப் பாராட்டுகிறேன். முக்கியமான பிரச்சினைகள் பற்றி மட்டுமே நான் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன்.

**நிகழ்ச்சி நிரல் பொருள்–1 :** வரைவு தேசிய நீர்க் கொள்கை (1998) சிறந்த சிந்தனையுடன் கூடிய, தெளிவான, பயன்தரக்கூடிய "தேசிய நீர்க்கொள்கை 1998" வரைவு அறிக்கையை கொண்டு வருவதற்கு நீர் வளத்துறை அமைச்சகம் மேற்கொண்ட முயற்சிகளை நான் நிச்சயமாக பாராட்டவேண்டும். இது ஏற்கெனவே இருந்துவரும் தேசிய நீர்க்கொள்கை – 1987–யை மேம்படுத்தி உருவாக்கப்பட்டதுதான் என்பதில் ஐயம் எதுவுமில்லை; ஆனால், "நீர்வளத்தை"ப் பொறுத்தவரை, உருவாகி வரும் சவால்களையும், முன்னேற்றங்களையும் பரிசீலித்து இயன்ற அளவிற்கு "தேசிய நீர்க்கொள்கை–1998"ன் வரைவுக் கொள்கையில் இணைப்பதற்கு நீர்வள அமைச்சகம் அதிக கவனம் எடுத்து செயல்பட்டுள்ளது.

**தேசிய நீர்க்கொள்கை வரைவு அறிக்கைக்கு பரந்த அளவிலான ஒப்புதல்**

1998 அக்டோபர் 29ஆம் தேதி நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுவின் கடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது "தேசிய நீர்க்கொள்கை–1998"ன் வரைவு. அறிக்கைக்குப் பரந்த அளவிலான ஒப்புதலை எங்கள் அரசு அளித்துள்ளது. எனினும், அவ்வாறு செய்யும்போது "நதிப்படுகை மாநிலங்களிடையே தண்ணீர் ஒதுக்கீடு செய்வதற்கான வழிகாட்டி நெறிகளை" உருவாக்குவதற்கான பிரிவு ஒன்றை சேர்ப்பதற்கான உத்தேச முடிவை நாங்கள் திட்டவட்டமாக நிராகரித்துவிட்டோம். முதன்முதலாக வழிகாட்டி நெறிகள் பற்றிய இந்தக் கருத்து 1986ஆம் ஆண்டு கூறப்பட்டதிலிருந்து அத்தகைய "வழிகாட்டி நெறிகள்" எந்தப் பயனும் அளித்ததில்லை, அது பயனற்ற நடவடிக்கை என்பதே தமிழ்நாட்டின் நிலையாக இருந்துள்ளது என்பதை இந்த மதிப்பிற்குரிய அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். நன்கு பரிசீலிக்கப்பட்ட அந்த நிலையை எங்கள் அரசு மாற்றிக் கொள்ள முடியாது.



"தேசிய நீர்க்கொள்கை–1998" கடந்த தேசிய நீர்வளக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பிறகு, எங்கள் முன்வைக்கப்பட்டுள்ள வரைவு அறிக்கையில் சில சிறிய அளவிலான திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதை நான் காண்கிறேன். எனவே, எங்கள் அரசு இதன் உள்ளடக்கத்தை மீண்டும் ஒருமுறை முழுமையாக ஆராய்ந்து மேலும் சில சிறிய மாற்றங்களைத் தெரிவிக்க முடிவு செய்துள்ளது. அவை இந்த உரையின் முடிவில் இந்தக் குழுவின் பரிசீலனைக்காகத் தரப்பட்டுள்ளன; அவற்றை பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**வழிகாட்டு நெறிகளை உருவாக்கும் பிரிவு நீக்கப்பட வேண்டும்**

உண்மையில், வழிகாட்டி நெறிகளை உருவாக்குவது பற்றிய 21–ஆவது பிரிவு நீக்கப்படவேண்டும். இந்தக் கொள்கை ஆவணத்தில் கூறப்பட்டுள்ள யோசனைகளில் மாநிலங்களுக்கு இடையிலான நதிகள் தொடர்பான கருத்துக்களைத் தவிர்த்து மற்றவற்றிற்கு மசோதாக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தால் அத்தகைய சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கே உண்டு என்று நான் கருதுகிறேன். மாநிலங்களின் அதிகாரங்களை ஆக்கிரமிக்கும் மனோ பாவம் கட்டுப்படுத்தப் படவேண்டும்.

உதாரணமாக நிலத்தடி நீர் நிர்வாகம் மற்றும் மேம்பாடு பற்றிய சட்டம் மாநில அரசுகளின் எல்லைக்கு உட்பட்டது. மத்திய நிலத்தடி நீர் ஆணையம் மத்திய அரசால் அமைக்கப்பட்டிருப்பது. இதில் மாநில அரசுகளின் அதிகாரத்தை மீட்கும் வகையில் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

நாங்கள் தெரிவிக்கும் திருத்தங்களுடன் "தேசிய நீர்க்கொள்கை–1998" இறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். கொள்கை ஆவணத்திலிருந்து "நதிப்படுகை மாநிலங்களுக்கிடையே நீர் ஒதுக்கீட்டுக்கான வழிகாட்டி நெறிகளை" உருவாக்குவதற்கான பிரிவு நீக்கப்படவேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். நதி நீரைப் பயன்படுத்தும் மாநிலங்களின் பயன்பாட்டுக் கொள்கை நீர் ஒதுக்கீட்டுக்கு வழிகாட்ட வேண்டுமென்ற பஞ்சாப் அரசின் கொள்கையை எங்கள் அரசும் ஆதரிக்கிறது.

**நிகழ்ச்சி நிரல் பொருள்–2 :** மாநிலங்களுக்கிடையே நீர் ஒதுக்கீட்டுக்கான தேசிய கொள்கை வழிகாட்டி நெறிகள்.



1987இல் பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்ற நீர்வளக்கவுன்சிலின் இரண்டாவது கூட்டத்தில், அதன் தொடக்க நிலையிலேயே "வழிகாட்டி நெறிகளை" உருவாக்கும் முயற்சிக்கு மத்திய திட்டக் கமிஷனிடமும், பலவேறு மாநில அரசுகளிடமும் ஆதரவு கிடைக்க வில்லை. தேவையின் அடிப்படை யிலும் நிரூபிக்கக்கூடிய அடிப்படை யிலும் அந்த முடிவு எடுக்கப்பட்டது.

1. வரைவு தேசிய நீர்க் கொள்கையை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட செயற்குழு, பொதுக்கருத்தின் அடிப்படையில், தேசிய கொள்கையின் மாநிலங்களுக்கு இடையிலான நதிகளில் தண்ணீர் ஒதுக்கீட்டிற்கான எந்த கொள்கை வழிகாட்டி நெறிகளையும் நீக்குவது என்று முடிவு செய்தது.

2. 1987 செப்டம்பரில் பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வழிகாட்டி நெறிகளை சேர்க்கும் யோசனையை நிராகரித்துவிட்டு நீர்க்கொள்கை. ஏற்பட்டது. அக்கூட்டத்தில் ராஜீவ்காந்தி குறிப்பிட்டதைப் போல மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நடுவர் மன்றங்கள் அளித்த தீர்ப்புகளே தீவிர பரிசீலனை மற்றும் ஆய்வுகளுக்குப் பின்னர் இந்த வழக்கிற்கான சட்டங்களாகக் கூடும்.

3. தண்ணீர் ஒதுக்கீட்டிற்கான கொள்கை வழிகாட்டி நெறிகளின் தேவையை ஆராய்ந்த மத்தியத் திட்டக் கமிஷனும் அத்தகைய வழிகாட்டி நெறிகள் பயன்படும் விதம் குறித்து சந்தேகம் தெரிவித்துள்ளன.

4. இப்போது வரைவு செய்யப்பட்டுள்ளது போன்ற மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் ஒதுக்கீட்டிற்கான கொள்கை வழிகாட்டி நெறிகள், சட்டபூர்வமான ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. இதை நீர் வளத்துறை அமைச்சகமே ஒப்புக் கொண்டுள்ளது. அவை சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல. எனவே நீர் தாவா நடுவர் மன்றங்கள் உட்பட எந்த நீதித்துறை அமைப்பிலும் இவற்றின் மீது நிச்சயமாக வழக்காட முடியாது.

5. இத்தகைய கொள்கை வழிகாட்டி நெறிகளுக்கு இந்த மதிப்பிற்குரிய அவை ஒப்புதல் அளிக்க மேற்கொள்ளும் எந்த முயற்சியும் நடுவர் மன்றத்தின் அதிகாரத்திற்குள் ஆக்கிரமிப்பதற்குச் சமமானதாகும். மேலும் இந்த வழிகாட்டி நெறிகள் அரசியலமைப்புச் சட்டத் தேவைகள் எதையும் தெளிவாக அறிவிக்கவில்லை. எனவே அவற்றைப் பயன்படுத்த முடியாது.

இதை உறுதிப்படுத்தும் வகையில், சட்ட வல்லுநர்கள் 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 262ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இயற்றப்பட்டதே தவிர, அரசியலமைப்புச் சட்டத்தில் ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள முதல் பட்டியலின் 56ஆவது என்ட்ரீ அல்லது இரண்டாவது பட்டியலில் 17ஆவது என்ட்ரீ மூலம் அல்ல என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

உண்மையில், காவிரி நதிநீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்தின் 1991ஆம் ஆண்டின் ஸ்பெஷல் ரிபரன்ஸ் எண்.1 வழக்கில் ஏ.ஐ.ஆர்.1992 எஸ்.சியில் குறிப்பிட்டுள்ளபடி மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தை முதல் பட்டியலின் 56ஆவது என்ட்ரியுடன் தொடர்புடையதாகக் கொள்ள முடியாது. ஆனால் அது அரசியலமைப்புச் சட்டத்தின் 26ஆவது பிரிவுடன் தொடர்புடையதாக நாடாளுமன்றத்தில் செய்யப்பட்டது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாடாளுமன்றமோ, மாநில சட்டமன்றங்களோ மேற்கண்ட தகராறுகளுக்கு வழக்கு தொடருவதற்காகவோ அல்லது எந்த வகையிலாவது அரசியலமைப்புச் சட்டத்தின் 26ஆவது பிரிவின் கீழ் வழக்காடுவதற்காக உருவாக்கப்பட்ட வழக்கையோ, விசாரணை அமைப்பையோ பாதிக்கவோ தலையிடவோ வழக்கு தொடருவதற்காக சட்டம் எதையும் இயற்ற முடியாது.

அதே சிறப்பு குறிப்பு வழக்கில் உச்சநீதிமன்றம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

"மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதியின் தண்ணீர் அது ஓடும் மாநிலப் பகுதிகளில் பாய்ந்த போதிலும் அந்த தண்ணீர் எந்த ஒரு மாநிலத்திலும் இருப்பதாகக் கூற முடியாது. அது ஓடிக்கொண்டே இருக்கிறது. அத்தகைய தண்ணீருக்கு எந்தவொரு மாநிலமும் மற்ற மாநிலங்களுக்கு அவர்களுக்குரிய சமமான பங்கை அளிக்காமல் சிறப்புரிமை கோர முடியாது"

மாநிலங்களுக்கிடையே தண்ணீர் ஒதுக்கீடு செய்ய தேசிய கொள்கை வழிகாட்டி நெறிகள் உருவாக்குவதை எங்கள் அரசு முற்றிலும் எதிர்ப்பதால், நான் இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள வரைவுக் கொள்கையின் சிறப்புக்களை ஆராய விரும்பவில்லை.



**சர்க்காரியா கமிஷன் பரிந்துரைப்படி தண்ணீர் தாவா சட்டத்தில் திருத்தம்**

மாண்புமிகு பிரதமர் அவர்களின் அனுமதியோடு, மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டம் 1956–ஐ திருத்துவதற்குச் சர்க்காரியா கமிஷனால் பரிந்துரைக்கப்பட்டு, மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தால் அங்கீரிக்கப்பட்ட "ஒன்றும், தேசிய-தோற்றத் திட்டத்தின்கீழ் படுகைகளுக்கிடையே தண்ணீர் மாற்றும் திட்டம்" மற்றொன்றுமாக இரு கருத்துக்களைப் பரிசீலனைக்கு வைப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

பிரதமராக நீங்கள் பதவியேற்றவுடன் நீங்கள் அறிவித்த தேசிய செயல் திட்டம் பற்றிய என் கருத்துக்களை நினைவூட்ட பிரதமர் அவர்கள் என்னை அனுமதிக்க வேண்டும். தண்ணீர் தாவாக்களை திறமையுடன் முறையாக தீர்ப்பதற்கும், அவற்றைக் குறிப்பிட்ட காலக்கெடுக்குள் அமல்படுத்துவதற்கும் தங்களுக்கு இருக்கும் அக்கறையைப் பாராட்டி 1998 மார்ச் 28ஆம் தேதி நான் உங்களுக்குக் கடிதம் எழுதினேன். அதை நிறைவேற்ற எங்கள் அரசின் முழுமையான ஒத்துழைப்பையும் தெரிவித்திருந்தேன்.



அந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவாக்களைத் தீர்ப்பது, 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டத்தில் திருத்தங்களைச் செய்து சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்து வதன் மூலமே இயலும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தின் 262ஆவது பிரிவிலிருந்து பெறப்படும் சட்டத்தை கடுமையாக மத்திய அரசு செயல்படுத்துவதன் மூலமே இயலும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

**அமல்படுத்த காலக்கெடுவுக்கு அமைச்சரவை எதிர்ப்பு தேவையில்லை**

இந்தப் பணி நிர்வாக வழிகாட்டி நெறிகளின் மூலம் நிச்சயமாக சாதிக்க முடியாது. தங்கள் தலைமையில் 1999 ஜனவரி 22ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போல, மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது போன்று, சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளைச் செயல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியிருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடை கிறேன்.

பரிந்துரைகளில் ஒன்றான நடுவர் மன்றத் தீர்ப்புகளை இரண்டு ஆண்டுகளுக்குள் அமல்படுத்த வேண்டும் என்பதில் நீர்வளத்துறை அமைச்சகத்திற்கு சில எதிரான கருத்துக்கள் உள்ளன என்பதை பிரதமர் அவர்கள் அறிந்திருக்கலாம். 2000 மே 20ஆம் தேதி நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தின் 6ஆவது கூட்டத்தில் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போன்று, 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தின் 6ஆவது பிரிவில் நடுவர் மன்றத் தீர்ப்புகளை அமல்படுத்துவதற்கான காலக்கெடு இல்லாததை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, சில மாநிலங்கள் நடுவர் மன்றத்தீர்ப்பை அமல்படுத்துவதைத் தாமதப்படுத்தி வருகின்றன. உண்மையில், இரண்டு ஆண்டுகளுக்குள் அதை அமல்படுத்துவதில் ஏதேனும் நியாயமான பிரச்சினைகள் இருந்தால் மாநிலங்களுக்கிடையேயான மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது போன்று, மத்திய அரசு தேவைக்கு ஏற்ப அதை அமல்படுத்தும் காலத்தை 2 ஆண்டுகளுக்கு மேலும் நீட்டித்துக் கொடுக்கலாம் என்ற பாதுகாப்பான பிரிவு ஒன்றும் உள்ளது. எனவே, இந்த அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தின் முடிவு நன்கு பரிசீலிக்கப்பட்டது என்றாலும், மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் இந்தப் பரிந்துரையையும் ஆதரவாக பரிசீலித்து 1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டுகிறேன்.

இன்றைக்கு நமக்குத் தேவைப்படுவது அதிலும் குறிப்பாக அரசு இயந்திரங்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது. சில குறிப்பிட்ட இனங்களில் அதிக அக்கறை கட்டப்பட வேண்டும் என்பதோடு நீர்வளம் இல்லாது இடங்களில், அங்கு திருப்திகரமாகவும் நம்பிக்கையோடும் நீர்வளங்களைப் பயன்படுத்தக் கூடிய வகையில் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என்பதுதான்.

அரசியல் எல்லைகளை மீறி இயற்கை வளங்களை மீறி, உபரி படுகையிலிருந்து பற்றாக்குறை படுகைக்கு வேண்டிய வளங்களைத் துரிதமாக்கிட, பணிகள் முடிக்கப்படவேண்டும்.

பற்றாக்குறை படுகையிலிருந்து தண்ணீர் பகிர்ந்தளிப்பது என்பது வேலையை கடுமையாக்கும் ஒன்றாகும். தேசிய இழப்பை அது அதிகரிக்கும். நாட்டின் வேளாண்மை மற்றும் வேளாண்மை பொருளாதாரத்தில் ஒருங்கிணைப்பு ஏற்படாத நிலையையும் அது உருவாக்கும். இதற்கெல்லாம் விரைந்து ஒரு முடிவை கண்டாக வேண்டும். அதற்கேற்ப, இமாலய நதி வளர்ச்சிக் குழு

மற்றும் தீபகற்ப நதி வளர்ச்சிக் குழு உள்ளடக்கிய தேசிய திட்டத்தை வலுவுள்ளதாக ஆக்க வேண்டும்.

**குறைந்த கால இடைவெளியில் நதிகளை இணைக்கும் திட்டம்**

விரிவான பரிசீலனையுடன், குறைந்த கால இடைவெளியில், நதிகளையெல்லாம் இணைக்க வேண்டும் என்ற யோசனையுடன், தேசிய நதி வளர்ச்சிக் குழுமத்தின் 30 ஆண்டு கால திட்டத்தை எனது அரசு 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏற்றுக்கொண்டது.

இதுதவிர வேறு. யோசனையையும் நாங்கள் தெரிவித்தோம். அதாவது பம்பா–அச்சன்கோயில் வைப்பாறு, நேத்ராவதி – ஹேமாவதி போன்ற நதிகளின் இணைப்பை அது தொடர்பான சாதக அறிக்கையில் வந்தவுடன் உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும். இறுதி அறிக்கை வரும்வரை காத்திருக்கத் தேவையில்லை என்றும் அப்போது தெரிவித்தோம்.

என்னுடைய முந்தைய ஆலோசனைப்படி, உங்களது தலைமையின் கீழ் உயர் மட்டக்குழு ஒன்று ஏற்படுத்தி, தீபகற்ப நதி வளர்ச்சிக் குழுவின் முடிவை இறுதி செய்து அமலாக்கிட வலியுறுத்தி, 14–6–2000 அன்று மீண்டும் உங்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். பம்பா – அச்சன் கோயில் – வைப்பாறு நதிகள் இணைப்பு பற்றியும் அதில் உள்ளது.

இந்த நாட்டில் தண்ணீர் குறைவால் ஏற்படும் துன்ப துயரங்களைக் களைந்து, அங்கெல்லாம் மேன்மை நிலை எய்த வேண்டுமானால் அதற்கு வெகு காலம் பிடிக்கலாம். எனவே இது குறித்து, பிரதமர் அவர்கள் தனித் கவனம் செலுத்தி அப்படிப்பட்ட பகுதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக தண்ணீர் பங்கீடு குறித்து இங்கே நம்முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை வழிகாட்டு நெறிகள் குறித்த திட்ட நகல் எவ்வித பலனையும் அளிக்காது என்று பிரதமர் அவர்களுக்கும், இக்கவுன்சிலின் உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

ஏற்கெனவே முடிவான பிரச்சினைகளை முடிக்காமல் செய்யக் கூடியவைகள்தான் அதில் உள்ளன. அதுமட்டுமின்றி ஏற்கெனவே மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளை அது மேலும் அதிகரிக்கும். அதுமட்டு 'மின்றிமாநில பிரச்சினைகளில் தலையிடும்.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் தாவாவின் சட்டப் பிரச்சினைகளையும் அதன் நடைமுறைகளையும் அது தீர்க்காது. அது மட்டுமின்றி அதை பல கூறுகளாக பிரிக்கவும் ஊக்கப்படுத்தும்.

எனவே, இந்த கொள்கை வழிகாட்டு நெறிகளை இந்த அவையில் எழுப்பாமல், முழுக்க முழுக்க கைவிடுமாறு நான் இந்த அவையின் உறுப்பினர்களை கண்டிப்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**– டெல்லியில் 7–7–2000 அன்று நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுவின் நான்காவது கூட்டத்தில் படிக்கப்பட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை.**

★ ★ ★

## எய்ட்ஸ் தடுப்பு பிரச்சாரம் : தமிழக அரசுக்கு ஐ.நா.சபை பாராட்டு

பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறையைப் பயன்படுத்த வேண்டும் என்ற தமிழக அரசு மேற்கொண்டு வரும் பிரச்சாரம் பாராட்டுக்குரியது.

செக்ஸ் உணர்வில் அதிக நாட்டமுள்ள இளைஞர்கள் மத்தியில் அறியாமையும் தவறான கண்ணோட்டமும் இருந்து வருகின்றன. இதை அகற்றுவதற்கு எய்ட்ஸ் தடுப்புப் பிரச்சாரம் பயன்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 1995–க்கும் 1997–ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் கர்ப்பிணிகளிடம் வைரஸ் கிருமிகள் பரவியது 1.25 சதவீதம் அதிகரித்தது.

எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க தமிழக அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது. எய்ட்ஸ் நோய்த் தடுப்பு அமைப்பை ஏற்படுத்தியது. எய்ட்ஸ் நோய்த் தடுப்பு பிரச்சாரத்தை தீவிரமாக்க அரசு சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவி கோரப்பட்டது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் எய்ட்ஸ் தடுப்பு அமைப்புகளும் அரசு நிதியுதவியுடன் தீவிர செயல் திட்டத்தில் ஈடுபட்டன. இதனால் விலை மாதர்களிடம் செல்லும் ஆண்கள் எண்ணிக்கை குறைந்தது. அத்துடன் பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறைகளைப் பயன்படுத்தும் போக்கும் அதிகரித்தது.

மக்கள் தொகை அதிகம் உடைய இந்தியாவிலும் சீனாவிலும் ஆப்பிரிக்காவைப் போல, எய்ட்ஸ் பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகமில்லை. ஆனால் திருமணத்துப் புறம்பான வழிகளில் பாலியல் இன்பத்தைப் பெற முற்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வைரஸ் கிருமிகளின் பாதிப்பு பரவலாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

இந்தியாவில் இரண்டாயிரமாண்டின் துவக்கத்தில் 1,000 பேருக்கு மூன்று பேர் என்ற அளவில் எய்ட்ஸ் பாதிப்பு இருந்தது. அதாவது 37 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தது தெரிய வந்தது. உலகில் ஆப்பிரிக்காவுக்கு அடுத்து இத்தகைய தாக்குதல் அதிகம் உள்ளது இந்தியாவில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் எய்ட்ஸ் பாதிப்பு பரவலாக இருந்து வருகிறது. சில மாநிலங்களில் அறவே இல்லாமலும் இதர மாநிலங்களில் 2 சதவீதம் என்ற அளவிலும் அதற்கு மேலும் இருந்து வருகிறது.

வடகிழக்கு மாநிலங்களில் போதை மருந்துகள் பயன்படுத்துவது அதிகரித்து வருவதால் எய்ட்ஸ் தாக்குதலும் தீவிரமாகி வருகிறது. மணிப்பூர் இதில் முன்னணியில் இருந்து வருகிறது.

**எய்ட்ஸ் நோய் பாதிப்பு பரவலாகக் குறையும்**

1999ஆம் ஆண்டு டெல்லி, ஐதராபாத், மதுரை, புனே, திருப்பதி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள விலை மாதர்களுக்கு எய்ட்ஸ் பாதிப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் நான்கில் ஒரு பகுதியினருக்கு பாதிப்பு இருக்கும் விவரம் ஆய்வில் தெரியவந்தது. மும்பையில் அதிகபட்சமாக 71 சதவித விலை மாதர்கள் இந்தத் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

எய்ட்ஸ் நோய் பரவாமல் தடுக்க இந்திய அரசும் பல மாநிலங்களும் தீவிரப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன. தடுப்பு செயல்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன் மூலம் எய்ட்ஸ் நோய் பாதிப்பு விகிதம் பரவலாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*– உலக அளவில் எய்ட்ஸ் மற்றும் கிருமிகள் தடுப்புக்கான நடவடிக்கைகள் குறித்த ஐ.நா. அறிக்கையிலிருந்து–*



# தீ விபத்தும் - தீயணைப்புத்துறையும்

தீ மூலம் ஏற்படுகின்ற ஆபத்தைத் தடுத்து அமைதியாக மாநில மக்கள் வாழ்வதற்காக உழைப்பதே தமிழ்நாடு தீயணைப்புத் துறையினரின் அரிய பணி.



★ தீ விபத்து ஏற்படுகின்ற இடங்களுக்கு விரைந்து சென்று முனைப்புடன் தீயணைப்புப் பணியை மேற்கொண்டு, உயிர்சேதம் மற்றும் உடைமைகளின் சேதத்தை எந்த அளவுக்குக் குறைக்கலாமோ அந்த அளவுக்குக் குறைத்தல்.

★ வெள்ளம் மற்றும் நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் மக்களைக் காப்பாற்றி உயிர்ச் சேதமும் உடைமைச் சேதமும் ஏற்படாமல் தடுக்க மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

★ விபத்துகள் ஏற்பட்ட இடங்களுக்கு விரைந்து, இடிந்து விழுந்த கட்டடங்களுக்கு இடையில் சிக்கித் தவிக்கின்ற மக்களைக் காப்பாற்றி உயிர்சேதத்தைத் தவிர்த்தல்.

★ அவசர காலங்களில் துன்புறும் மக்கள் மற்றும் மிருகங்களைக் காப்பாற்றுதல்.

★ தீ மூலம் ஏற்படுகின்ற அழிவைக் குறைப்பதற்காக, மக்களுக்குத் தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு முறைகள் சம்பந்தமான அடிப்படை பயிற்சி அளித்தல்.

★ தீ விபத்து ஏற்பட்ட இடங்களுக்குச் செல்லும் தீயணைப்போருக்கு உதவிட நமக்கு நாமே என்ற அடிப்படையில் குழுக்கள் அமைப்பதை ஊக்குவித்து, தீப் பாதுகாப்பு மற்றும் சேதம் ஏற்படாமல் தடுப்பது குறித்து மக்களுக்கு உணர்த்துதல்.



★ நெருக்கடியின் போது காலதாமதமின்றி மக்கள் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக அலுவலர்களின் பெயர்கள், தீயணைப்பு நிலையங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் குறித்து விரிவாக விளம்பரப்படுத்துதல்.

★ மக்கள் அதிகமாகக் கூடுகின்ற இடங்கள், முக்கியமான பொது நிகழ்ச்சிகள் நடக்கின்ற இடங்களில் தீயணைப்பு ஊர்திகள் மற்றும் தீத்தடுப்பு கருவிகளை நியாயமான கட்டணத்தில் ஆயத்த நிலையில் வைத்தல்.

★ நோய்வாய்ப்பட்டவர்களையும், காயம் ஏற்பட்டவர் களையும் விரைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக நோயாளர் ஊர்திகளைப் பயன்படுத்துதல்.

தீ அல்லது இதர விபத்துகள் ஏற்படும்பொழுது, மக்கள் அது குறித்து அருகிலுள்ள தீயணைப்பு நிலையத்திற்குத் தாமதமின்றி சரியான தகவலைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு தகவல் அளிக்கும்போது, விபத்தின் தன்மை, விபத்து நடந்த இடத்தின் சரியான முகவரி, ஆங்கு எளிதில் செல்வதற்கான வழித்தடம் ஆகிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். எளிதில் செல்லக்கூடிய வழித்தடம் தெரிவிப்பதால் தீயணைப்புத் துறையினர் வந்து சேரக் கூடிய கால அளவு குறையும். ●

மருத்துவக்கட்டுரை :

# தீக்காயங்களுக்கு நவீன சிகிச்சை

வரலாற்றில் மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்த காலத்திலிருந்தே அதனால் ஏற்படும் விபத்துக்களையும் அறிந்தே இருக்கிறான். தீக்காயங்களின் மருத்துவ சிகிச்சையும் காலத்திற்கு ஏற்றபடியும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடியும் மாறிக்கொண்டே இருக்கிறது.

### தீக்காயங்களுக்கான காரணங்கள்

பெரும்பாலான தீக்காயங்கள் விபத்துக்களால் தான் ஏற்படுகின்றன மற்றும் கொலை, தற்கொலை (Homicide and Suicide) முயற்சிகளாலும் ஏற்படுகின்றன.

1. தீச்சுவாலை (Flame Burns) அல்லது கொதிக்கும் திரவங்கள், பட்டாசு, போன்றவை உடலில்படுவதால் ஏற்படுபவை.
2. இரசாயன அமிலங்களும், காரங்களும் (Chemical Burns-Acids and Alkalies) உடலில் படுதல்.
3. மின் தாக்குதலால் (Electric Shock) ஏற்படும் காயங்கள்.
4. எக்ஸ்ரே கதிர் வீச்சுகள் (Radiation Burns) தவறுதலாக உடலில் படும்போது கொடுமையான ஆறாத தீக்காயங்கள் ஏற்படுகின்றன.
5. வரதட்சணைக் கொடுமைகளும் தீக்காயங்களுக்கு ஒரு காரணம் என்பதை பார்க்கிறோம். தற்காலங்களில் பெண்கள் எவ்வளவு அறிவுள்ளவர்களாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்களோ அவ்வளவு கோழைகளாகவும் இருப்பதைக் காணும்போது வருத்தமாக உள்ளது. கணவரோ மாமியாரோ அல்லது பெற்றோர்களோ சிறிது கோபத்தோடு பேசிவிட்டால் கூட தற்கொலை முயற்சி மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். புகுந்த இடத்தில் புத்திசாலித்தனமாக நிலைமைக்கேற்ப மாறிக் கொண்டாலும் சில சமயங்களில் எதிர்த்து போராடும் நிலைக்குத் தள்ளப்படுவதால் இந்த மாதிரியான அவலநிலைகள் ஏற்படுகின்றன.

தீப்புண்கள் கொதிக்கும் எண்ணெய், நீராவி போன்ற வற்றினால் ஏற்படுவதை Scalds என்று கூறுகிறோம். மின்சார விபத்துகளினாலும் தீக்காயங்கள் உண்டாகின்றன. பல நேரங்களில் இதயம் நின்றுவிடும் வாய்ப்பு இருக்கிறது. மின்சாரம் உடம்பினுள்ளே புகுந்த இடம் (Point of Entry) வெளியேறுமிடம் (Point of Exit) என இரு இடங்களிலும் மோசமான காயங்கள் ஏற்படுவதுண்டு. தொழிற்சாலைகள் பெருகி முன்னேறிவரும் சூழலில் தொழிற்சாலை தீக்காயங்கள் (Industrial Burns) தவிர்க்க முடியாததாகிறது.

### தீச்சுவாலைக் காயங்கள்

பெரும்பாலும் குடிசையில் வாழும் கீழ்த்தட்டு மக்கள் தீச்சுவாலையால் பாதிக்கப்படுகின்றனர். காரணம் தரை அடுப்பில் நைலான் போன்ற ஆடைகளை அணிந்து கொண்டு சமையல் செய்யும்போது எளிதில் தீப்பிடிக்க ஏதுவாக இருக்கிறது.

### மின்சாரத் தீக்காயங்கள்

தரக்குறைவான மின் சாதனங்களின் கசிவினாலும் கவனக்குறைவாக மின் சாதனங்களைப் பயன்படுத்துவதாலும் ஏற்படுபவை. இவ்வகைத் தீக்காயங்களால் மின்சாரம் தாக்கிய இடம் மட்டுமின்றி இதயம், மூளை, சிறுநீரகங்கள், நுரையீரல்கள் ஆகியவை கூடப் பாதிக்கப்பட்டு மரணம் உண்டாகிறது.

### கதிர் வீச்சு காயங்கள்

இதுமற்ற தீக்காயங்களிலிருந்து மாறுபட்டது. கதிர்வீச்சின் தன்மையால் உடல் திசுக்கள் தங்கள் இயற்கை நிலையை இழந்து அழுகி புண்கள் உண்டாகிவிடுகின்றன. இது பெரும்பாலும் புற்று நோயாளிகளிடம் அதிகமாக கதிர்வீச்சு சிகிச்சைக்குப்பின் வெளிப்படுகிறது. X-Ray நிலையங்களிலும், அணுக்கதிர் உலை நிலையங்களிலும் வேலை செய்வோரிடம் இக்காயங்கள் காணப்படும். இவ்வகை தீக்காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பது மிகக் கடினமானதாகும். இந்தக் காயங்கள் நாள் கடந்தால் புற்று நோயாக மாறும் வாய்ப்புகள் அதிகம்.

டாக்டர் கே.செந்தில்நாதன், MBBS., Ph.D.



### தீக்காயங்களுக்கு முதலுதவிகள்

தீக்காயங்களுக்கு முன்பெல்லாம் குளிர்ந்த நீர் ஊற்றக்கூடாது என்று கூறிவந்தனர். அது முற்றிலும் தவறு. மிக சிறந்த முதலுதவி குளிர்ந்த நீரை ஊற்றுவதும், நெருப்பினால் சுடுபட்டு ஒட்டிக் கொண்டிருக்கும் துணிகளை எடுத்துவிடுவதுமாகும். பிறகு சுத்தமான மெல்லிய துணியால் அல்லது துணி கிடைக்காவிட்டால் அன்றைய புது செய்தித்தாளை உட்பக்கமாக உடலில் சுற்றி பின்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

### தீக்காயங்களின் தன்மைகள்

1. முதல்நிலை (First Degree Burns) இதில் சிவப்பு நிறமும் எரிச்சலும் வீக்கமும் மட்டுமே இருக்கும்.
2. இரண்டாம் நிலை (Second Degree Burns) இதில் தோலின் மேற்பகுதியும், தோலிற்குக் கீழ் இருக்கும் பகுதியும் எரிந்து விடுவதால் தீப்பட்ட இடத்தில் வீக்கமும் எரிச்சலும், நீர் கொப்பளங்களும் உண்டாகின்றன.
3. மூன்றாம் நிலை (Third Degree) இதில் முழு தோல் பகுதி எரிந்துவிடுகிறது. அத்துடன் மூளை, நுரையீரல், இதயம், சிறுநீரகம் போன்றவையும் பாதிக்கப்படுகின்றன.
4. நான்காம் நிலை (Fourth Degree) இதில் உடல் முழுவதும் மிகப்பெரிய கருகிய தீக்காயங்களுடன் தோல் தசைகள், எலும்புகள் மற்ற அவயங்களும் கருகிவிடுகின்றன.



### சிகிச்சை முறைகள்

தீக்காயங்களுக்கான சிகிச்சையில் மருத்துவத்துறை மிக முன்னேறியுள்ளது. எனவே, விபத்து நடந்ததும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டும். மிக நவீன வசதிகளும், தீப்புண் காயங்களுக்கான தனி அறைகள் உள்ள மருத்துவ மனைகளாக இருத்தல் வேண்டும்.

### செயற்கை சுவாசம்

புகையினால் பாதிக்கப்பட்டு அல்லது முகம் தீப்பிடித்து எரிவதால் மூச்சுவிடுதல் சிரமம் இருந்தால் E.T.Tube என்றும் பிளாஸ்டிக் குழாயைச் செலுத்தி வெளிக்காற்று நேராக நுரையீரலுக்குச் செல்லும்படி செய்யலாம். கபத்தில் ஓட்டையிட்டு (Tracheostomy Tube) வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

### தசையில் உப்பும் நீரும்

ஆரம்ப அதிர்ச்சி (Initial Shock) தீயின் வெப்பத்தால் இரத்த ஓட்டத்தில் இருந்து தண்ணீர் – உப்பு சத்துக்கள் வெளியேறி தசை மண்டலத்திற்கு வருவதால் உடல் வீக்கமும், நாடி தளர்ச்சியும் அடைந்து இந்நிலை உருவாகிறது. இதை உடனடியாக கண்டறிந்து தண்ணீரும், உப்புச் சத்துக்களும் உடலில் ஏற்றாவிடில் மரணம் நேரலாம்.

### முற்றிய தீக்காயம்

தீயினால் கருகிய தசை, தோல் ஆகியவைகள் கழிவு பொருட்கள் இரத்த ஓட்டத்தில் கலந்த ஒருவகையான நஞ்சை உண்டாக்கி இரண்டாம் அல்லது மூன்றாம் நாள் மரணம் ஏற்படுகிறது.

### நாற்றமுடைய தீக்காயம்

இந்நிலையில் மிகக் கொடுமையாகவும் இதில் அனைத்து தீக்காயங்களும் கிருமிகளால் தாக்கப்பட்டு சீழ் உற்பத்தியாகி தாங்க முடியாத துர்நாற்றம் உண்டாகும். இக்காயங்களைச் சுத்தமாக்கி Silver sulpha Diaze என்ற களிம்பை பூசி சுத்தமான கட்டுகள் போட்டு, தேவையான வீரியம் மிக்க ஊசி மருந்துகள் கொடுத்து கிருமிகளின் தாக்குதலைச் சமாளிக்க வேண்டும். இந்தக் காயங்கள் நோயாளிகளின் உடலின் வேறு பகுதியிலிருந்து தோலை எடுத்து (Split skin Grafting) காயங்களை மூட வேண்டும். மிகக் கொடுமையான தீக்காயங்கள் அனைத்தும் சிகிச்சைக்குப் பிறகு முக்கியமான உறுப்புகள் சோர்வடைவதால் (Essential Organ Failure) மரணத்தில் முடிகிறது.

### [illegible]

மேற்கூறியதிலிருந்து தப்பி உயிர் பிழைப்போர் இந்த நான்காம் நிலையை அடைகின்றனர். இதில் உடலில் மடங்கி நிமிரும் பல மூட்டுகள் பிடிப்பற்று (Contracture) செயல் இழக்கின்றன. இவற்றை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் சரிப்படுத்தலாம்.

### நீர்ச் சுற்று

அதிகளவு நீர்ச் சத்தும் தாதுச்சத்தும் வெளியேறுகிறது. அவற்றை ஈடுசெய்ய வேண்டும். அதை Intra venous line என்று கூறுகிறோம். எரிபடாத இடத்தில் Intra venous Line ஆரம்பித்தல் நலம். அப்பொழுதே இரத்த பரிசோதனை செய்து இரத்த அணுக்கள் எவ்வளவு உள்ளது இரத்தம் எந்த பிரிவைச் சார்ந்தது தாதுச் சத்துக்கள் (Electrolytes) எவ்வளவு இருக்கிறது என்பதையும் அறியவேண்டும்.

இப்போது கோலஜன் (Collagan) என்ற செயற்கை தோல் போன்ற சவ்வு மற்றும் Amnlotic Membrane போன்றவை மிகவும் பயனுள்ளதாக உள்ளன. தற்போது மிகவும் பாதிக்கப்பட்ட தீக்காயங்கள், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை முறையில் கொஞ்சம் கொஞ்சமாக சரி செய்யப்படுகின்றன.

*நன்றி :*
**மருத்துவ அறிவியல் மலர்**

# கீரைகள் சொல்லும் மருத்துவம்

மனிதனின் வாழ்க்கைக்கு உணவு எந்தளவுக்கு அத்தியாவசியத் தேவையோ, அதே அளவுக்குக் கீரைகளும் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. கீரைகளைக் கிள்ளுக்கீரை என்று ஏளனம் செய்த காலம் மலையேறி விட்டது. இன்று கீரைகளின் பயன்களைப் பட்டியலிடாத பத்திரிகைகளே கிடையாது எனலாம்.

**அகத்திக்கீரை**

அகத்திக் கீரையில் கால்சியமும் இரும்புச் சத்தும் அதிகம் உள்ளது. வைட்டமின் ஏ மற்றும் சி–யும் மிகுதியாக இருப்பதால் பல் ஈறுகளை இது கெட்டிப்படுத்துகிறது. தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் அகத்திக்கீரை உண்டால் பால் பெருகும். இது கண் பார்வையை பிரகாசமடையச் செய்கிறது. குடல்புண்ணை ஆற்றுகிறது. மலச்சிக்கலை நீக்குகிறது. இதனுடன் சிறிது நீர் உற்றி அவித்து தேங்காய் துருவல் போட்டு உண்ணலாம். அல்லது தேங்காய் பாலில் அவித்தும் சாப்பிடலாம். இந்தக் கீரையை வாரம் ஒருமுறை சமைத்து உண்ண வெயிலில் அலைவதால் ஏற்படும் வெப்ப மலச்சிக்கல், காப்பி, டீ அருந்துவதால் உண்டாகும் பித்தம் போன்றவையும் அகலும்.

**அரைக்கீரை**

எல்லா காலங்களிலும் எல்லா இடங்களிலும் கிடைக்கும். இதன் தண்டை அறுக்க அறுக்க வளர்ந்து கொண்டே வருவதால், இதை அறுக்கீரை என்றும் அழைப்பர். அரைக்கீரையில் பச்சை, சிவப்பு என இரண்டு வகை உண்டு. இந்த கீரையுடன் சீரகம், பாசிப்பருப்புச் சேர்த்துக் கூட்டாகச் செய்தோ, கடைந்தோ சாப்பிடலாம். பொரியலாகவும் உட்கொள்ளலாம். அரைக்கீரையில் உள்ள குளோரோபில் உடல் வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகிறது. அரைக்கீரை ஜீரணத்தை அதிகரிக்கும். பசியை உண்டாக்கும். மலச்சிக்கலைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். தொடர்ந்து இந்தக் கீரையை உண்டு வந்தால், தும்மல், மூக்கு ஒழுகுதல் போன்றவை மட்டுப்படும்.

**கொத்தமல்லிக் கீரை**

அதிகளவு நார்ச்சத்தும் மாவுச் சத்தும் சிறிதளவு அல்புமின் மற்றும் நைட்ரஜனைக் கொண்ட கொத்தமல்லியை தனியா கீரை என்றும் சென்னைவாசிகள் அழைப்பர். கொத்தமல்லிக் கீரை சமையலில் ருசிக்காகவும், நல்ல மணத்துக்காகவும் பயன்படுவதுடன், ஜீரண சக்தியை அதிகரிக்கவும் பயன்படுகிறது. வயிற்றுப் பொருமல், ஏப்பம் போன்றவற்றைக் குணமாக்கும். கொத்தமல்லி விதையுடன் சுக்கு சீரகம் ஆகியவற்றை பொடியாக்கி கெ திநீரில் போட்டு சிறிது கருப்பட்டியும் சேர்த்து தினமும் இருவேளை உட்கொள்ள நெஞ்சு எரிச்சல், தலைச்சுற்றல், வாந்தி போன்றவை குணமாகும்.



**வெந்தயக்கீரை**

இரும்புச் சத்து மிகுந்தது வெந்தயக்கீரை. இது எலும்பு வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இதில் பாஸ்பரஸ், நைட்ரஜன், அல்புமின் மற்றும் லெசிதீனும் இருப்பதால் உடல் நன்கு வளர்ச்சியடைகிறது. இந்தக் கீரை உடலுக்குக் குளிர்ச்சியைத் தரவல்லது. மலக்கட்டை நீக்கும். இதில் வைட்டமின் ஏ, பி மற்றும் சி–யும் உள்ளது. இரத்தச் சோகையை நீக்க காட்லிவர் எண்ணெய்க்குப் பதிலாக வெந்தயக் கீரையை சுறி சமைத்து சாப்பிடலாம். நாக்கின் மேல் ஏற்படும் வெள்ளை மாவுப்படை, செதில் போன்ற படை நீங்க வெந்தயக் கீரையை துவையல் செய்து சாப்பிட்டு வரலாம். தீ பட்ட இடங்களில் இந்தக் கீரையை தடவ எரிச்சல் தணிந்து விரைவில் புண் ஆறும். பழச்சாறு மற்றும் மோருடன் வெந்தயத்தைச் சேர்த்துப் பருக வயிற்றுப் போக்கு நிற்கும்.

**மரு. எம். பால் ஆறுமுகம்**



**சிறுகீரை**

உடல் சூட்டைக் குறைத்து உடலை குளிர்ச்சியாகவும், இளமையாகவும் வைத்திருக்கக்கூடியது இந்தக் கீரை. இது பலவீனமான உடலைத் தேற்றி உடல் வலிமையடைய உதவுகிறது. கண் தொடர்பான நோய்களைத் தடுக்கிறது. சிறுகீரையை பருப்புடன் கடைந்தும், தேங்காய், வெங்காயம் சேர்த்து பொரியலாகவும் உண்டு வரலாம். சிறுகீரையைத் தொடர்ந்து உண்டு வர இரத்த விருத்தி உண்டாகும்.. இதில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, வைட்டமின் சி மற்றும் பி இருப்பதால், சரும நோய்களைத் தடுக்கிறது. பல் ஈறில் இரத்தம் வருதல், செரிமானக் கோளாறுகள் போன்றவற்றையும் இது குணப்படுத்துகிறது.

**தண்டுக்கீரை**

கீரை வகைகளில் மிக உயரமாக வளர்வது தண்டுக்கீரை. யானை கொழுத்தால் வாழைத்தண்டு, மனுஷன் கொழுத்தால் கீரைத்தண்டு என்று கிராமங்களில் சொல்வதுண்டு. அதாவது கொழுப்பைக் கரைக்க தண்டுக்கீரை பயன்படுகிறது என்பதைத்தான் நமது முன்னோர்கள் அவ்வாறு கூறினார்கள். இதன் தண்டை சமைத்துச் சாப்பிட சிறுநீர் நன்கு பிரியும். உடல் மெலியும். உடல் லேசாகக் காணப்படும். உடலுக்கு இளமைப் பொலிவைத் தருகிறது. முதியோர்கள் இந்தக் கீரையைச் சாப்பிடுவது மிகவும் அவசியமாகும். ஏனெனில், இதில் சுண்ணாம்பு மற்றும் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. கருவுற்ற பெண்கள் தினமும் அரைக் குவளைத் தண்டுக் கீரைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து அருந்திவர மகப்பேறு பிரச்சினை இல்லாமல் இருக்கும்.



**பருப்புக்கீரை**

தாதுப் பொருட்களும் உயிர்ச்சத்தும் நிறைந்துள்ள பருப்புக்கீரை மிகவும் சுவையானது. இதில் ஆல்புமின் கூட்டுப் பொருளும் நைட்ரஜன் கூட்டுப் பொருளும் அதிகம் இருப்பதால் இரத்தத்தை தூய்மையாக்கப் பயன்படுகிறது. இந்தக் கீரையால் மலச்சிக்கல் தீரும். மண்ணீரல், சிறுநீரகம், கல்லீரல் போன்றவற்றை உறுதிப்படுத்தி இயங்கச் செய்கிறது. பருப்புக் கீரையின் விதையை குடிநீராகச் செய்து குடித்து வர உடற்களைப்பைப் போக்கி உடலுக்கு வலிமையைத் தரும். தாது விருத்தியை உண்டாக்கும். கருவுற்ற பெண்கள் இந்தக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட சிறுநீர் எளிதாகப் பிரியும். மேலும், கர்ப்பக் கால மலச்சிக்கலைத் தவிர்க்கலாம். கருவுற்ற பெண்களுக்கு வரும் கை கால் வீக்கம் வராது.

**பொன்னாங்கண்ணிக் கீரை**

இந்தக் கீரையைச் சுத்தம் செய்து துவரம் பருப்பு சேர்த்து கூட்டு செய்து நெய் சேர்த்து உண்டு வந்தால் உடல் தளதளவென மாறும். ஒல்லியாக உள்ளவர்கள் பருமன் உடலைப் பெறலாம். இதனுடன் வெள்ளைப்பூண்டு சேர்த்து சமைத்து உண்டால் நாட்பட்ட மலச்சிக்கல், நிவர்த்தியாகும். மூல நோய் நீங்கி முற்றிலும் குணம் ஏற்படும். உடல் சூடு தணியும். பொன்னாங்கண்ணித் தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தரும். பார்வையை கூர்மையாக்கும். கை கால் உடல் எரிச்சல், மண்டைக் கொதிப்பு, உடல்வலி மற்றும் வயிற்று வலியும் குணமாகும்.

**மணத்தக்காளிக் கீரை**

உடல்நலம் காப்பதில் மிகவும் சிறந்ததாக இந்தக் கீரை கருதப்படுகிறது. வாய்ப்புண், குடல்புண், வயிற்றுப்புண், வாய் வேக்காடு போன்றவற்றை குணப்படுத்த வல்லது. மணத்தக்காளிக் கீரையுடன் பாசிப் பருப்பைச் சேர்த்து கூட்டு வைத்தோ, கடைந்தோ உணவோடு உண்ணலாம். இதை சீரகம் மற்றும் மிளகாய் சேர்த்து எண்ணெய்விட்டு வதக்கி, நீர்சேர்த்து அவித்து பின்பு தேங்காய்ப் பாலில் வேக வைத்து உண்டுவர வாய்ப்புண் உடனே குணமாகும். கணைய வீக்கம், கல்லீரல் வீக்கம் ஆகியவற்றுக்கு இதன் சாறு மிகவும் நல்லது. மணத்தக்காளிப் பழச்சாறோடு, இலைச்சாறையும் சேர்த்துப் பருக சிறுநீர்ப்பாதையில் உண்டாகும் எரிச்சல் குணமாகும்.

**முள்ளங்கிக் கீரை**

இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து மற்றும் சோடியம் போன்ற தாதுக்களை அதிக அளவில் முள்ளங்கிக் கீரை உள்ளடக்கியுள்ளது. முள்ளங்கிக் கீரையின் சாறை 15 நாட்கள் தினமும் ஒரு டம்ளர் அளவுக்குப் பருகி வர, சிறுநீர் தாரை நோய்கள் அகலும். இந்தக் கீரையைச் சமைத்துண்ண அதிமூத்திரம். நீர் தடை, வயிற்று எரிச்சல், ஊதின உடல், குடைச்சல், வாதம், வீக்கம், சுவாசக் காசம், கப நோய்கள், இருமல் ஆகியவை குணமாகும்.

**முருங்கைக் கீரை**

இதன் இலையை நெய் விட்டு வதக்கி பொரியல் செய்து சாப்பிட்டு வர ஆண்மை அதிகரிக்கும். முருங்கைக் கீரையை சூப்பாகச் செய்து சாப்பிட்டு வர தொண்டைக் கோளாறுகள், சுவாசக் குழல் தொடர்புடைய நோய்கள் குணமாகும். ஒரு டம்ளர் நீரில் இரண்டு கைப்பிடி முருங்கை இலையைப் போட்டு 10 நிமிடம் வேக வைத்து ஆறிய பின்பு உப்பு, மிளகு, எலுமிச்சை சாறு ஆகியவற்றைச் சேர்த்துக் குடிக்கலாம். இதனால் சோகை குணமாகும். முருங்கை இலைச் சாறுடன் எலுமிச்சை சாறைக் கலந்து முகத்தில் தடவி வந்தால் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் மறையும். இதன் இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி, மூட்டுவலி, வாதவலி, இடுப்பு வலி ஆகியவற்றுக்கு ஒத்தடம் கொடுக்கலாம்.

*நன்றி :* **மருத்துவ அறிவியல் மலர்**

# வனத்துறையின் பணிகள்

சுற்றுச்சூழல் மற்றும் உயிரின வாழ்க்கைச் சூழலை நிலைப்படுத்துதல்.

நகர்ப்புற பகுதிகளை பசுமைப் பகுதிகளாக மாற்றுவதன் மூலம் காற்று மற்றும் நீரிலுள்ள நச்சுத் தன்மையைக் குறைத்து அப்பகுதி மக்களுக்கு தூய்மையான காற்றையும் நீரையும் கிடைக்கச் செய்தல்.

வளமிக்க பல்லுயிர்களான வன உயிரினங்களையும், தாவர இனங்களையும் பாதுகாத்தல்.

மண்ணின் ஊட்டச் சத்தையும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஈரப் பதத்தினையும் மேம்படுத்த ஆறுகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவற்றில் மண் வளப் பாதுகாப்பு முறைகளைச் செயல்படுத்துதல்.

மாநில நிலப்பரப்பளவில் வனப்பரப்பை அதிகரிக்க சமுதாய மற்றும் தனியார் நிலங்களில் வன நிர்ணய பணிகளை துரிதப்படுத்துதல்.

வனப்பகுதியில் சுற்றுச்சூழலை மீட்கவும் இயற்கை உயிரினச் சூழலை நிலைநிறுத்தவும் இயற்கை வனங்களை மேம்படுத்தவும் கூட்டு நிர்வாக முறையை ஊக்குவித்தல்.

கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் அன்றாடத் தேவைகளான விறகு மரங்கள், கால்நடைத் தீவனம் மற்றும் இதர வனப் பொருட்கள் குறைவின்றி கிடைக்கும் வகையில் தரமான மரங்களின் எண்ணிக்கையினை உயர்த்துதல்.

வனப் பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்தி விலை மதிப்பு மிக்க அட்டவணை, மர வனப் பொருட்களைப் பாதுகாத்தல்.

கடலோரப் பகுதிகளின் நுட்பமான இயற்கைச் சூழலை நிலைப்படுத்தல்.

வனவளத் தொழில்நுட்பங்களை நவீனமாக்குதல்.

தொழிற்சாலைகள், வணிகம் மற்றும் உள்ளூர் துறைகளின் தேவைக்கேற்ப புதிய வன நுட்பவியல் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துதல்.



வனத்துறையிலுள்ள அனைத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் பணியிடைப் பயிற்சி (Inservice Training) அளிப்பதன் மூலம் மனித வளத்தினை மேம்படுத்துதல்.

சுற்றுச் சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி அதில் வரும் வருவாயை அங்குள்ள மக்களுக்கென செலவிடுதல். ●



# தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

புதுப்பிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள் மரபு சார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஓர் முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களை பயன்படுத்துவதன் வாயிலாகத் தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவைகள் என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும் இவ்வளங்கள் குறைவதே இல்லை.

## சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள்

2000–2001–ஆம் ஆண்டில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவக் கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படும்.

1. தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான 1000 எல்.பி.டி.8 கலெக்டர்களுடன் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.20,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.
2. வீட்டு உபயோகத்திற்கான சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.3,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.

## சூரிய மின்பம்பு

900 வாட் திறன் உள்ள ஒரு பம்பு ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்க வல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்.

900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2.24 இலட்சம். மைய அரசின் நிறுவனமான இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ரூ.1,12,500 மானியமாக வழங்குகிறது. மாநில அரசு ஒரு பம்புக்கு ரூ.59,000 மானியமாக வழங்குகிறது. எனவே பயனாளியின் பங்குத்தொகை ஒரு பம்பிற்கு ரூ.52,500 ஆகும்.

## சூரிய ஒளி விளக்கு

சூரிய ஒளி விளக்கு 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தை தரக்கூடிய ஒரு சாதனமாகும். இதன் விலை ரூ.4,000. மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ.1,500.

## காற்று சக்தி

காற்றாலைப் பண்ணை மூலம், காற்று சக்தி மின் உற்பத்தி செய்ய

- ★ திட்டத் தொகையில் 75 சதவிகிதம் வரை கடன் வசதி
- ★ 100 சதவிகிதம் தேய்மான வருமான வரிச்சலுகை
- ★ உதிரி பாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்



### நீர் இறைக்கும் காற்றாலைகள்

நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ தலா ரூ.20,000 மானியம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி



நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 25 முதல் 100 விழுக்காடுகள் வரை மானியமாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (100 விழுக்காடு மானியம்)
2. உராய்வு குறைவான புட் வால்வுகள் (75 விழுக்காடு மானியம்)
3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர் தேவைக்காகப் பொது கிணறுகளில் அமைத்தல் (10 விழுக்காடு மானியம்)
4. பிற வகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் (25 விழுக்காடு மானியம்)

★ ★ ★

## கொள்ளைக்கூட்டத்தாரை ஓடச் செய்தார்

ஒரு நாள் முல்லா, எல்லோரிடமும் தம்முடைய வீர தீரச் செயல்களைக் கூறி பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்.

"நான் பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு முறை பயங்கரமான கொள்ளைக் கூட்டத்தினரைப் பயந்து ஓடும்படி செய்திருக்கிறேன்'' என பெருமையடித்துக் கொண்டார் முல்லா.

அவர்களில் ஒருவர், "நீங்கள் ஒருவராக எப்படி கொள்ளைக் கூட்டத்தினரை ஓடும்படி செய்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு முல்லா, "அது மிகவும் சுலபமானது. கொள்ளைக் கூட்டத்தினரைக் கண்டதும் நான் ஓடினேன். அவர்கள் என்னைப் பிடிப்பதற்காக என் பின்னே ஓடி வந்தனர்" என்று சாதுர்யமாகக் கூறினார். ★



# கதவைத் தட்டும் வாய்ப்பு – 2

□ Dr. P.T. சூர்யகுமார்

ஐ.ஐ.டி. (I.I.T) என்பது உலகத் தொழிற்நுட்பக் கல்வி நிறுவனங்களில் மிகச்சிறந்த ஒன்று. இந்தியாவில் ஆறு மையங்களில் உள்ளது. சென்னை, மும்பை, கவுஹாத்தி, டில்லி, கான்பூர், கராக்பூர் ஆகிய பெரும் நகரங்களில் உள்ளது. இதேபோன்று ஐ.ஐ.எஸ்.சி. (I.I.Sc.) பெங்களூர் ஒரு முக்கியமான நிறுவனம். இதில் சேர விரும்புபவர்கள், 10+2 (அல்லது) அதற்கு இணையான படிப்பில், கணிதம், வேதியியல், இயற்பியல், பாடங்களை எடுத்துப் படித்து இருக்கவேண்டும். 60% மார்க்கு மேல் பெற்றிருக்க வேண்டும். மேற்கூறிய அனைத்து இடங்களுக்கும் பொதுவான நுழைவுத்தேர்வு (JEE) ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது ஐ.ஐ.டி.யினை மையமாகக் கொண்டு இந்தியாவில் பல நகரங்களில் நடத்தப்படும்.

முதற்கட்டத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து முப்பது ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுதுவர்.

**இந்த நிறுவனங்களில் சேர விரும்புவோர் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடங்களில் மிகுந்த ஆர்வமும், திறமையும், அறிவும், ஊக்கமும் நிறைந்தவர்களாக இருக்கவேண்டும். ஒன்பதாம் வகுப்பு முதல்கொண்டே இதற்கு ஆயத்தமாக படிப்பது சிறந்தது. இதுபோன்ற நுழைவுத் தேர்வு முறைகளைப் பற்றிய முழு விவரங்களை அறிய Choose the Best Course, After +2 என்ற கையேடு (Hand Book) வாங்கிப் படித்துப் பயன்பெறலாம்.**

## JEE ENTRANCE EXAMINATION :

JEE என்று அழைக்கப்படும் இந்த தேர்வு, இந்தியாவில் உள்ள 6 இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT), தொழில்நுட்பக் கழகம் (பனாரஸ் இந்து பல்கலைக்கழகம்), வாரணாசி போன்ற கல்வி நிறுவனங்களில் நடத்தப்பெறும் 4 வருடக் கல்வியினை இளங்கலை தொழில்நுட்பம் (B.Tech.), மருந்தகக் கலை (Pharmacy), வரைவுபடம் (Design) மற்றும் 5 வருடப் படிப்பான கட்டடக்கலை (B.Arch) போன்ற பிரிவுகளில் படிப்பதற்காக, மாணவர்களின் சேர்க்கைக்காக, இந்திய தொழில்நுட்பக் கழகமும் மேலே கூறப்பட்ட நிறுவனமும் இணைந்து இந்த நுழைவுத் தேர்வை நடத்துகிறது. என்னென்ன பாடப்பிரிவுகள் உள்ளன, ஒவ்வொரு பிரிவுக்கும் எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன போன்ற விபரங்களுக்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கு என்றும், அதன்கீழ் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பார்க்கவும். ஐ.ஐ.டி.யின் ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு வெவ்வேறு பாடப்பிரிவுகளில் மாணவர்களின் சேர்க்கைக்கு உதவுவதற்காக நடத்தப்படுகிறது. வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கு என்று நேரடி சேர்க்கை என்ற திட்டத்தின்கீழ் அடங்கும் மாணவர்கள் ஒருங்கிணைந்த நுழைவுத்தேர்வு எழுதத் தேவையில்லை.

சில பொதுவான விளக்கங்கள்/விபரங்கள் இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

விளம்பர அறிவிப்பு (அல்லது) விளம்பரம்/நவம்பர்/டிசம்பர்

தேர்வு : ஜனவரி, மே

தேர்வு முடிவு : ஜூன்

இந்தியாவில் வசித்துக்கொண்டிருக்கும் அனைத்து இந்தியர்களுக்கும், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியருக்கும் வெளிநாட்டவருக்கும் இந்தத் தேர்வு எழுத அனுமதி உண்டு.

### தனி ஒதுக்கீடு (Reservation) :

சில குறைந்தளவு – ஆனால் அதே சமயம் தேவையான மதிப்பெண்கள் பெற்று இருந்தால் 15% தாழ்த்தப்பட்ட



பிரிவினைச் சேர்ந்த மாணவர்களுக்கும் (7½) இடங்கள் பழங்குடி வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சில தளர்த்தப்பட்ட குறைந்த அளவு கல்வித்தகுதியின்கீழ் **ஒரு வருட கால பயிற்சியில் சேர அனுமதி உண்டு.**

**கல்வி நிறுவனங்களில், பாடப்பிரிவுகளில் சில குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு என்று ஒதுக்கீட்டில் முன்னுரிமை :**

பாதுகாப்பு மற்றும் படைத்துறை பிரிவைச் சேர்ந்த அதில் உயிரிழந்தவர்களின் குழந்தைகளுக்காகவும் அல்லது நிரந்தரமாக முடமாக்கப்பட்டவரின் குழந்தைகளுக்காக 2 இடமும், ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது தவிர உடல் ஊனமுற்றோருக்கு என்று ஒரு இடமும், ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஒதுக்கீடு மேலே குறிப்பிட்டுள்ள மாணவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதுவும், அவர்களுடைய பெயர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பொதுப் பிரிவில் வெளிவந்தால் மட்டுமே இந்தப் பிரிவில் சேருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**தகுதியான வயது வரம்பு :**

அதிகபட்சம் 23 ஆண்டுகள் (28 ஆண்டுகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களுக்கு).

**கல்வித் தகுதி :**

இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம் எடுத்துப் படித்து 10+2 என்ற முறையில் அல்லது அதற்கு சமமான படிப்பில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். 5½ வருட படிப்பினை முதுகலை தொழில்நுட்பத்தில் வேதியியல் சார்ந்த தொழில்நுட்பம் பயில்வதற்காக கரக்பூரில் உள்ள ஐ.ஐ.டி.யில் சேர விரும்புவோர் பள்ளி உயர்நிலைக் கல்வியில் அல்லது 10+2 அல்லது அதற்குச் சமமான பரப்பில் 'உயிரியல்' பாடப்பிரிவு படித்து வெற்றி பெற்றிருக்கவேண்டும். தொழில்நுட்பக் கல்வியில் 3 வருட பட்டம் (Diploma) பெற்றவர்களும், அவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்களும் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். மருத்துவத்தகுதியின் அடிப்படையில் அவர்கள் எந்தவித குறைபாடும் இல்லாதவராக இருக்கவேண்டும்.

**விண்ணப்ப பாரம் பெறும் முறை :**

விண்ணப்பப் பாரம் மற்றும் தகவல் புத்தகம் பெற விரும்புவோர் ரூ.500 செலுத்தி (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினைச் சார்ந்த மாணவர்க்கு – ரூ.250) கனரா வங்கிகள் அல்லது யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா என்ற வங்கியில் குறிப்பிட்ட ஏதாவது ஒரு கிளையில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அந்தந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வின் தலைவருக்கு (அந்தந்த இடங்களில் உள்ள ஜே.இ.இ. மையத்திற்கு) குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். காலதாமதமாக வந்துசேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**நுழைவுச்சீட்டு அட்டை :**

தகுதியுடைய மாணவர்களுக்கு நுழைவு அட்டைகள் வழங்கப்படும்/அனுப்பப்படும். குறிப்பிட்ட தேதிக்குள் நுழைவுச்சீட்டு/நுழைவு அட்டை கிடைக்காத மாணவர்கள் அவன்/அவள் அந்தந்த இடத்தில் உள்ள ஐ.ஐ.டி. ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு மையத்தை/நிறுவனத்தை அணுகலாம்.

**தேர்வு செய்யும் முறை :**

ஐ.ஐ.டி.யின் ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மொத்தம் 3 தேர்வுகள் உண்டு. இயற்பியல்/வேதியியல்/கணிதம் ஆக மூன்று பாடங்களிலும் தேர்வு நடைபெறும். ஒவ்வொரு தேர்வுக்கும் மொத்தம் 100 மதிப்பெண்கள். ஒவ்வொரு தேர்வுக்காகக் கொடுக்கப்படும் கால அளவு 3 மணி நேரம் ஆகும்.

**மையங்கள் :**

இந்தியா முழுவதும் உள்ளன. மாதிரி வினாக்கள் தகவல் புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருக்கும். இந்தத் தேர்வுக்கான வினாத்தாள்கள் ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய இரு மொழிகளிலும் இருக்கும்.



மாணவர்களைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்படும் இந்த தேர்வுகள் 2 நிலைகளில்/கட்டங்களில் இந்திய தொழில்நுட்பக் கழகத்தினால் நடத்தப்படுகிறது. முதல் கட்டத்தேர்வு 3 மணி நேரம் நடத்தப்படும். பெரும்பாலும் இந்தத் தேர்வுகள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வு ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வில் 3 தேர்வுத்தாள்கள் உண்டு. இயற்பியல், வேதியியல், கணிதம் என்ற 3 பாடங்களிலும் தேர்வு நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வுக்கான கால அளவு 3 மணி நேரங்கள் ஆகும். வெற்றி தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இரண்டாம் கட்டத்தேர்வு எழுத வேண்டிய மாணவர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் முதல் கட்டத் தேர்வு முடிந்தபின் வெளியிடப்படும். முதல் கட்டத் தேர்வில் இருந்து 15,000 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் இரண்டாம் கட்டத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.




இவ்வாறு இரண்டு கட்டமாகத் தேர்வு நடத்துவதன் நோக்கம் என்னவென்றால் திறமையான மாணவர்களை மட்டுமே தேர்ந்தெடுத்து, கல்வி பயில அனுமதிப்பதாகும். முதல் கட்டத்தேர்விலேயே திறமையற்ற மாணவர்கள் தவிர்க்கப்பட்டு விடுவார்கள். பின் இரண்டாம் கட்டத் தேர்வின் திறமையற்ற மாணவர்கள் வெளியேற்றப்பட்டு மிகக் குறைந்த அளவு மாணவர்களுக்கு நிறைந்த கல்வி அளிக்கின்றனர்.

**இந்திய மொழிகளில் வினாக்களுக்குப் பதில் அளித்தல் :**

தேர்வு எழுதும் மாணவர்கள் ஆங்கிலம் அல்லது பின்வரும் ஏதேனும் ஒரு இந்திய மொழிகளில் வினாக்களுக்கு விடை அளிக்கலாம்.

அவையாவன :

1. அஸ்ஸாமீஸ்
2. பெங்காலி
3. குஜராத்தி
4. ஹிந்தி
5. தமிழ்
6. தெலுங்கு

**தகுதிபெற்ற மாணவர்களின் பட்டியல் :**

ஜே.இ.இ. (J.E.E.) நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் அவருடைய பதிவெண் (Regn.No.) இந்திய அளவில் தேர்வில் அவர் எந்த இடத்தில் (Rank) இருக்கிறார் என்பது போன்ற விவரங்கள், இந்தியாவில் உள்ள அனைத்து இந்திய தொழில்நுட்பக் கழகங்களிலும் வெளியிடப்படும். மேலும் இந்த விவரங்கள் அனைத்து பிரபல செய்தித் தாள்களிலும் வெளியிடப்படும். தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவர்கள் கலந்து ஆலோசிப்பதற்காகவும், மருத்துவத் தேர்வுக்காகவும் அழைக்கப்படுவார்கள். கலந்து ஆலோசிப்பதற்காகவும், இளங்கலை கட்டடக்கலை, இளங்கலை வரைவுபடவியல் போன்ற பாடப்பிரிவுகளில் சேருவதற்கு விரும்பும் மாணவர்களுக்கு மேலும் ஒரு 2 மணிநேரத் தேர்வு நடைபெறும். இந்தத் தேர்வுகள் அந்தந்த கலந்து ஆலோசிக்கும் மையங்களிலேயே ஒவ்வொரு ஜூன் மாதமும் நடைபெறும்.

**பாடப்பிரிவு மற்றும் நிறுவனங்களை ஒதுக்கீடு செய்தல் :**

ஒவ்வொரு மாணவனும், சேர வேண்டிய பாடபப்ரிவு மற்றும் கல்வி நிறுவனம் போன்றவை, இந்திய தொழில்நுட்பக் கழகங்களால் முடிவு செய்யப்படும். இடங்கள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களால் பூர்த்தி செய்யப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய இடங்கள் அந்தந்தப் பிரிவு மாணவர்களால் பூர்த்தி செய்யப்படும்.

## அயல்நாட்டில் உள்ள மாணவர்களுக்கான நேரடிச்சேர்க்கை :

**இந்திய/வெளிநாட்டு மாணவர்கள் :**

கடந்த எட்டு ஆண்டுகளில் குறைந்தது 3 வருடமாவது வெளிநாட்டில் படித்திருக்க வேண்டும். 10+2 (அதற்கு மேல் அல்ல) கல்விப் படிப்பும் அதில் (அந்த ஐந்து ஆண்டில்) அடங்கியிருக்கவேண்டும்.

**தகுதிகள் :**

நுன்ழைவுத்தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு மாணவனும், +2 வகுப்பில் இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதப்பாடப் பிரிவில் 80% மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும். இது தவிர எல்லா பாடத்திலும் குறைந்தது 70% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம் IIC பாடங்களில் SAT தேர்வில் 1800 மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும்.

**தேர்ந்தெடுப்பு :**

ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் வெளியிடப்படும் தகுதி பெற்றவர்களின் பெயர் பட்டியல் SAT-II தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தயார் செய்யப்படும்.

**விண்ணப்ப பாரங்கள் குறித்த விதிமுறைகள் :**

வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கான (இந்தியர் மற்றும் வெளிநாட்டினர்) நேரடிச்சேர்க்கை (DASA) என்ற பிரிவின் கீழ் கல்வி பயில சேர விரும்புவோர், அமெரிக்க டாலரின் மதிப்பில் $100 வங்கி வரைவோலை பெற்று ஏப்ரல் மாதம் 30ஆம் தேதிக்குள் சென்று சேருமாறு அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையை இந்திய தொழில்நுட்பக் கழகம் என்ற பெயரில் எடுக்கவேண்டும்.

இளங்கலை தொழில்நுட்பம் (சுரங்கத்துறை, பொறியியல்) படிப்பு பெண்களுக்கு ஏற்றதல்ல.

**நடப்பு ஆண்டு :**

ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதக் கடைசியில் அந்தந்தக் கல்வி ஆண்டு ஆரம்பிக்கும். இது இந்தியாவில் உள்ள 6 இந்தியத் தொழில்நுட்பக் கழகங்களுக்கும் பொருந்தும்.

**கட்டணம் :**

போதனைக் கட்டணம் இந்திய மாணவர்களுக்கு ரூ.25,000 முதல் 32,000 வரை செலவாகும். வெளிநாட்டு மாணவர்களுக்கு அவர்கள் நாட்டு நாணய மதிப்பில் US$ 7,000 முதல் 8,000 வரை செலவு ஆகும்.

**விடுதி வசதிகள் :**

அனைத்துக் கல்வி நிலையங்களும், தங்கும் வசதி கொண்டவை.

**மேலும் விவரங்களுக்கு :**

அந்தந்த கல்வி நிலையங்களின் கீழ் தனியாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

**பொறியியல் பட்டதாரிகளை உருவாக்கும் திறமைக்கான தேர்வு :**

இந்தத் தேர்வு அகில இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வாகும். இந்தியத் தொழில்நுட்பக் கழகம் மற்றும் இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூர் இரண்டும் இணைந்து, தேசிய ஒருங்கிணைப்புக் குழு, GATE கல்வித்துறை, மனித வள மேம்பாட்டுத்துறை, இந்திய அரசாங்கத்தின் சார்பாக நடத்துகிறது.

- I.I.T. –யில் சேர மாணவர்கள் Brilliant Tutorial, 12 Masilamani Street, T.Nagar, Chennai - 600 017 என்ற கோச்சிங் மையத்தில் சேர்ந்து படிக்கலாம்.
- I.I.T. வினா வங்கிகளை வாங்கி படிப்பது நலம்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சில புத்தகங்களை வாங்கி படிக்கலாம். இந்த புத்தகங்கள் ஓர் வழிகாட்டிதான்.



# உலக பிரசித்திபெற்ற நிறுவனங்கள்

**இந்தியத் தொழில் நுட்ப நிறுவனங்கள் (I.I.T.)**

"சோர்வின்றி முயற்சி மேற்கொள்பவர்கள் விதியையும் தோல்வி அடையச்செய்வார்கள்" என 'விதியை மதியால் வெல்லலாம்' என அற்புதமாக, அழகாக சென்னையில் கிரஸண்ட் இன்ஜினியரிங் கல்லூரியில் 12–ஆம் பட்டமளிப்பு விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியது போல், இங்கு சேர்கின்ற மாணவ மாணவிகள் அயராது படித்து உலகின் பல துறைகளில் தலைசிறந்து விளங்குகின்றனர் என்றால் மிகையாகாது.

இந்தியாவில் சென்னை, பம்பாய், கான்பூர், காராக்பூர், கௌஹாத்தி, டெல்லி போன்ற இடங்களில் இந்த நிறுவனங்கள் உள்ளன. இயற்கை எழிலுடனும், உயர்கல்விக்கென எல்லா வசதிகளையும் தன்னிடம் பெற்றுள்ள நிறுவனம். வளர்ந்த நாடுகளில் உள்ள பெரிய தொழில்துறை பல்கலைக் கழகங்கள், நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக மிகவும் சிறப்பான தரம் வாய்ந்த கல்வியை அளிக்கின்றது.

இந்த நிறுவனங்களில் இளங்கலையில் (B.E./B.Tech) சேர்வதற்கெனப் பொது நுழைவுத் தேர்வான (Joint Enterance Examination) (JEE) என்று சுருக்கமாக அழைக்கப்படும் தேர்வினை எழுத வேண்டும். இது இரண்டு கட்டமாக நடத்தப்படுகின்றது. 1. முதற்கட்டம்: ஜனவரி முதல் ஞாயிற்றுகிழமை 2. அடுத்த கட்டம்: மே மாதம் 6, 7 தேதிகளில் (தேதிகள் மாறலாம்) நடத்தப்படுகின்றது. +2 மாணவர்கள் கணிதம், இயற்பியல், வேதியியல் எடுத்து படித்தவர்கள் இந்த நுழைவுத் தேர்வினை எழுதலாம். அனைவரும் புகழும் வண்ணம் திறமையாக இந்த நுழைவுத் தேர்வுகளை எவ்விதக் குறைகளும் இல்லாமல் நடத்தி நல்ல மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இதில் தேர்வுபெற மாணவர்கள் நுணுக்கமாக, ஆழமாக ஆராய்ந்து, பாகுபடுத்தி, அயராது படித்திடல் வேண்டும் என்பது தான் தாரக மந்திரம். B.E./B.Tech என்ற கோர்ஸ்களுக்குப் பிறகு M.E./M.Tech/M.S./Ph.D. என்ற ஆராய்ச்சி படிப்பும், M.Sc. (Physics, Chemistry, Maths)ம் உள்ளது.

இந்த உயர் நிறுவனங்களில் உலகப் புகழ்பெற்ற ஆசிரியர்களும், உயர்கல்வி வசதிகளும், அதற்கு மேல் நிர்வாகத் திறன் கொண்ட நிர்வாகக் குழு இருப்பதும் தான் இந்த நிறுவனத்தின் சிறப்பு அம்சங்கள்.

**இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் (I.I.Sc.) பெங்களூர்**

இது IIT போன்ற சிறந்த நிறுவனம். +2வில் முதல் 20 ரேங்க் எடுத்தவர்களுக்கு, I.I.Sc. Young Fellowship' என்ற புரோகிராம் நடத்தப்படுகின்றது. இதில் வெற்றி பெற்றவர்கள் நேரிடையாக உயர் ஆராய்ச்சிப் படிப்பிற்கு சேர்கின்றனர்.

J.N.Tata (1839–1904), Lord Curzon Sri Krishnaraja Wodeyar IV (The Maharaja of Mysore) மூவரின் பெரும் முயற்சியால், 1909ல் துவக்கப்பட்ட உயர்கல்வி



நிறுவனத்தில் விஞ்ஞானம், இன்ஜினியரிங் துறையில் சிறந்து விளங்குகின்றது. உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகள் இதன் நிர்வாகிகளாக இருந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, சி.வி.ராமன், எஸ்.தவான், எஸ்.ராமசேஷன், சி.என்.ஆர்.ராவ், ஜி.பத்மநாபன், எஸ்.பாகவந்தம் போன்றோர்.

**மேலாண்மையில் உயர்கல்வி நிறுவனங்கள்**

**I.I.M. (Indian Institute of Management)**

இன்றைய தொழில் உலகம் கடுமையான போட்டிகளைச் சந்தித்து வருகின்றது. ஒரு நிறுவனத்தின் அமைப்பு, உற்பத்தித் திறன், கச்சாப் பொருள்கள், முதலீடு முதலியவைகள் முழுமையாக இருந்தாலும் சரியான நிர்வாகத் திறன் இல்லை என்றால், உடல் உறுப்புக்கள் அனைத்தும் நல்ல முறையில் இருந்தாலும், நரம்பு மண்டலத்தின் தண்டு வடம் சரியில்லை என்றால், எத்தகைய செயல்களையும், செய்ய இயலாதவனைப் போல் ஆகிவிடுகின்றது. இத்தகைய நிர்வாகத் திறமையை மாணவர்களிடம் தகுந்த முறையில் உருவாக்கும் படிப்பே எம்.பி.ஏ. (M.B.A.), B.B.A. போன்றவைகள் ஆகும்.

**B.B.A.-ல் சேர்ந்து வெற்றி பெற என்னென்ன தகுதி தேவை?**

- +2வில் வெற்றி பெற்றவர்கள் (வணிகவியல், பொருளியல் எடுத்துப் படித்தவர்களுக்கு முன்னுரிமை)







- ஆங்கில அறிவுத்திறன், கணக்கில் புலி, பொது அறிவின் தந்தையாக இருக்க வேண்டும். பொதுவாகத் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் B.B.A., B.B.M., B.A. (Corporate Science) B.A. (Co-operation) போன்ற இளநிலைப் படிப்புகள் கற்றுத் தரப்படுகின்றது.

உயர் கல்வியில் இந்தியாவில் சிறந்தது I.I.M. என்ற உயர்நிலைக் கல்வி கூடங்கள் தான். I.I.M. – அகமதாபாத், கல்கத்தா, இந்தூர், கோழிக்கோடு, லக்னோ, பெங்களூர் ஆகிய இடங்களிலும், இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் M.B.A. என்ற பட்டமேற்படிப்பு சொல்லித் தரப்படுகின்றது. இங்கு படிப்பவர்கள், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்குச் சிறந்தவர்களாக கருதப்படுகின்றனர். இதுவல்லாமல் முக்கியமாகச் சில சிறப்பு நிறுவனங்களும் உள்ளன.



"தேசிய மக்கள் தொகைக் குழுவை அமைத்ததற்காக பிரதமர் அவர்களுக்கும், மத்திய அரசிற்கும் முதற்கண் என் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்கள் தொகை இலக்குகளை மட்டும் விவரிக்காமல், கொள்கை கோட்பாடுகளையும், அவற்றை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளையும் சேர்த்து விவரிக்கின்ற தேசிய மக்கள் தொகை கொள்கை 2000-ஐ ஏற்படுத்தியதற்காக மத்திய அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மக்கள் தொகையை நிலைப்படுத்துவதில் அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களும் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், கருத்துக்களை எடுத்துக் கூறவும் வாய்ப்பளித்தமைக்காக பிரதமர் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்கள் அனைத்தும் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுடைய மக்கள் தொகை கொள்கைகளுக்கு உதவியாக இருப்பதுடன் அதன் மூலம் தேசிய மக்கள் தொகைக் கொள்கையின் குறிக்கோள்களை அடைவதில் நாட்டிற்கே பயன்படும் என்று நம்புகிறேன்.

**குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது**

இந்த சந்தர்ப்பத்தில் குழுமியுள்ள அனைவர் முன்னிலையிலும் தமிழ்நாட்டின் குடும்ப நலத்திட்டத்தின் வெற்றியின் பின்னணியினைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். நாட்டின், வளர்ச்சித் திட்டங்களில் குடும்ப நலத்திட்டம் ஒரு முக்கிய அம்சம் என்பதைப் புரிந்து




கொண்ட எங்களுடைய அரசு, மக்கள் தொகையை நிலைப்படுத்துவதில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் மாநில அரசு பல முன் மாதிரித் திட்டங்களைத் துவக்கி செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக தரமான நலச்சேவை அளிப்பதில் முன்னேற்றம், சுகாதார அமைப்பிலுள்ள



இடைவெளிகளைப் பூர்த்தி செய்தல் மூலம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் மக்களுடைய பூர்த்தி அடையாத தேவைகள் வெகுவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன் மூலம் குடும்ப நலத்திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

சமீபத்தில் மாநில அளவிலான மக்கட் தொகை குழு என் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய சாதனைகளின் விவரங்கள் பின்வருமாறு :

பிறப்பு விகிதம் – தேசிய குறியீடு 21, இந்தியாவின் சாதனை 26.5. தமிழ்நாட்டின் சாதனை 19.2.

சிசு மரண விகிதம் – தேசிய குறியீடு 60, இந்தியாவின் சாதனை 72. தமிழ்நாட்டின் சாதனை 53.

மொத்த கருத்தரிப்பு விகிதம் – தேசிய குறியீடு 2.1, இந்தியாவின் சாதனை 3.3 தமிழ்நாட்டின் சாதனை 2.

100 சதவீத தடுப்பூசித் திட்ட சாதனை, 84 சதவீதத்திற்கும் மேலாக மருத்துவமனைகளில் பிரசவங்கள் மற்றும் 100 சதவீத கர்ப்பிணிகளின் பதிவு என்ற சாதனைகளின் அடிப்படையில் நோக்கும் போது, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் குடும்ப நலத்திட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கான பல காரணங்களுள் பொருளாதாரத்தில் பொதுவான முன்னேற்றம் முக்கிய காரணமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக குடும்ப நலத்திட்டத்தில் அரசியல் தலைவர்களின் ஈடுபாடும், அதை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு இருந்து வரும் தீவிர முயற்சியும் முக்கிய காரணங்களாகும்.

மத்திய அரசு குடும்ப நலத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்கு வெகு காலத்திற்கு முன்பே சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியார் அவர்கள் திருமண வயதை உயர்த்தவும், சிறு குடும்ப நெறியைக் கடைபிடிக்கவும் உறுதியான சமுதாய ஒருங்கிணைப்பை உருவாக்கினார். பிற்காலத்தில் இம்முயற்சிகள் அறிஞர் அண்ணா அவர்களாலும், தற்போது தமிழக அரசாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த பாரம்பரியம் தேசிய குடும்ப நலத்திட்டம் தொடங்கி பின்பும் செயலாக்கத்தில் இருந்து வருகிறது.

**99 சதவிகித மக்களுக்கு குடும்ப நெறி பற்றிய விழிப்புணர்ச்சி**

பொதுவாக அனைத்து சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி, அதிகாரிகளும் குடும்ப நலத்திட்டம் மற்றும் சிறு குடும்ப நெறியைப் பற்றி மக்களுடன் கலந்துரையாடக்கூடிய வாய்ப்புள்ள பொதுக் கூட்டங்கள், சமூக நிகழ்ச்சிகளில் மிகத் தீவிரமாகப் பேசி வருகிறார்கள். இதனுடன் தகவல் கல்வி தொடர்பு நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் 99 சதவீத மக்களுக்கு சிறு குடும்ப நெறி பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

மாநிலத்தில் மக்களுக்குச் சுகாதார சேவைகளை அளிப்பதற்கு மத்திய அரசு அளவுகோலின்படி துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற சுகாதார அடிப்படை அமைப்புகளை தமிழ்நாடு ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக தற்போது 8,682 துணை சுகாதார நிலையங்கள், 1,410 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 160 தாலுக்கா மருத்துவமனைகள், 67 தாலுக்கா அல்லாத மருத்துவமனைகள், 26 மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் உள்ளன.

1996–ஆம் ஆண்டு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் சுகாதார அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்களைக் கட்டித்தருவது என முடிவு செய்யப்பட்டது. எனவே ரூ.51 கோடி செலவில் முழுமையாக மாநில நிதியில் இருந்து 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதுபோலவே 64 சதவீத துணை சுகாதார நிலையங்கள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

அவ்வாறு கட்டப்பட்ட 600 துணை சுகாதார நிலைய கட்டடங்களில் 400 கட்டடங்கள் சமுதாயத்தின் ஒத்துழைப்புடன் கட்டப்பட்ட கட்டடங்களாகும். இது தமிழ்நாட்டில் மட்டுமே நடைபெறும் பரிசோதனைத் திட்டமாகும். 24 மணி நேரமும் சுகாதார சேவைகளை அளிக்கும் வகையில் 250 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார்பு பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

தரமான சுகாதார சேவைகளை அளிப்பதற்கு மருந்துகள் எந்நேரத்திலும் தடையின்றி விநியோகம் செய்யப்பட வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு, மருந்துகளை வாங்கி விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் என்ற ஒரு நிறுவனம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகம் முக்கியமான மருந்துகளின் பெயர் பட்டியல் தயார் செய்து, அவற்றை மருந்துக் கழகமே வாங்கி, மாவட்ட மருந்து கிடங்குகளில் இருப்பு வைத்து, அனைத்து சுகாதார நிலையங்களுக்கும் பாஸ்புத்தகம் மூலமாக விநியோகம் செய்து வருகிறது. இந்த மருந்துக் கழகம், விநியோகிக்கப்படும் மருந்துகளுக்குக் கடுமையான தரக்கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இக்கழகத்தின் திறமைக்கும் வெற்றிக்கும் வெளிப்படையான செயல்பாடுகளே காரணமாகும். ஒப்பந்தப்புள்ளி அறிக்கை முதல் மருந்து இருப்புநிலை வரை அனைத்து விவரங்களும் கணினியில் வெப் தளத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9002 சான்றிதழையும் பெற்றுவிட்டது மிகவும் சிறப்பானதாகும். இக்கழகத்தின் மொத்த செயல்பாடுகளும் கணினி வழியே கண்காணிக்கப்படுகின்றன.

**மருத்துவ நிறுவனங்களை தொழிற்சாலைகள் தத்தெடுக்க வழிவகை**

சமுதாயம் மற்றும் தனியாருடைய ஈடுபாட்டை அதிகரிக்கவும், மருத்துவ நிறுவனங்களை முழுவதுமாகவோ, பகுதியாகவோ அல்லது கட்டடங்களைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், உபகரணங்கள் வழங்குதல் போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காகவோ மருத்துவ நிலையங்களைத் / தொழிற்சாலைகள் தத்து எடுத்துக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 69 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5 துணை சுகாதார நிலையங்கள், 24 அரசு மருத்துவமனைகள் ஆகியவை 51 தொழிற்சாலை நிறுவனங்களால் தத்து எடுக்கப்பட்டு ரூ.1.5 கோடி நிதியுதவியும் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குத் தேவையான நிலையான உபகரணப்பட்டியல் தயார் செய்துள்ளது.



இப்பட்டியலில் உள்ளது போல் உபகரணங்கள் வாங்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. அனைத்து முதல்நிலை பரிந்துரை நிலையங்களுக்கும் அல்ட்ரா சோனோகிராம், அவசர கால மற்றும் அவசிய கர்ப்பகால சேவைகள் மற்றும் சிசு பராமரிப்புக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

போதிய பயிற்சி இல்லையெனில் சுகாதார வசதிகளைப் பயன்படுத்த முடியாது என்பதை கருத்தில் கொண்டு, பயிற்சி நிலையங்களின் அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி வசதிகளுடன் மேலாண்மை, சமுதாய ஒருங்கிணைப்பு, பாலின பாகுபாடு ஆகிய பகுதிகளைப் பயிற்சிப் பாடத்திட்டத்தில் இணைத்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவிலான சுகாதாரம், மருத்துவத்துறை, குடும்பநல இயக்குநர்கள் மற்றும் நலப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதோடு, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களுக்கும் பணியில் சேரும் முன்பே பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் தற்போது மாநிலத்தில் நடைமுறையில் உள்ள குடும்பநல திட்டப் பணிகள், தொழில்நுட்ப மறு புத்தறிவு, மேலாண்மை மற்றும் நிர்வாகத்திறன் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



எங்கள் மாநிலத்தில் கிராமங்களில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர், பகுதி சுகாதார செவிலியர் மற்றும் சமுதாய சுகாதார செவிலியர்களுக்கு மொபட் வாகனம் ஓட்ட பயிற்சி அளிப்பது ஒரு வித்தியாசமான பயிற்சி என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த பெண் களப்பணியாளர்கள் சுகாதார சேவைத் திட்டங்களின் முதுகெலும்பாவார்கள். இவர்கள் கிராமங்களுக்குச் சென்று நலப்பணிகளைச் செயல்படுத்துவதற்கு வாகன வசதி மிகவும் அவசியமானதாகும். இவர்களுக்கு மொபட் வாங்க நிதி ஒதுக்கீடு செய்து கடனுதவி அளிப்பது மட்டும் போதாது எனக்கருதி, 3 நாள் பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு செய்து, அந்த முகாமில் மொபட் வாகனம் ஓட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் பயனாக கள அளவிலான நல பராமரிப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சுகாதார சேவைகளை நல்ல முறையில் நிர்வாகம் செய்ய இந்த அமைப்புகளில் அளிக்கப்படும் சேவைகளைக் கண்காணிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்காக தமிழக அரசு 1996–ஆம் ஆண்டு முதல் 9 மில்லியன் நபர்களின் புள்ளி விவரங்களை ஆண்டுதோறும் சேகரித்து வருகிறது. (முக்கிய புள்ளி விவர கள ஆய்வு (Vital Events Survey). இந்த கள ஆய்வின் முடிவில் பெறப்பட்ட விவரங்கள் யாவும் மாதிரி பதிவு அமைப்பின் (Sample Registration Scheme) விவரங்களைக் காட்டிலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இந்த விவரங்கள் பாலினம், மாவட்டம், இடம், குடியிருப்பு வாரியாக இருக்கிறது. இந்த கள ஆய்வு சுகாதார அமைப்பில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் பொது சுகாதாரம் மற்றும் குறிப்பாக தாய் சேய் நலத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள் சீராக அதிகரித்து வருகிறது**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கப்படும் சேவைகளைக் கண்காணிப்பதற்காக கணினியில் விவரங்களைப் பதிவு செய்யவும், அவ்வாறே கணினி மூலம் விவரங்களைப் படிப்பதற்கும் 'ஆப்டிகல் மார்க் ரீடர்' (Optical Mark Reader) என்ற கருவி அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நடைபெறக்கூடிய மருத்துவ சேவை நடவடிக்கைகளான புறநோயாளி வருகை எண்ணிக்கை, உள்நோயாளி எண்ணிக்கை, நிகழ்த்தப்பட்ட பிரசவங்கள் ஆகியவற்றை முறையாக கண்காணிக்க ஏதுவாகிறது. இதுபோல் மிகத் தீவிரமாக கண்காணிப்பதால் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள் யாவும் சீராக அதிகரித்து வருகிறது.

தாய் இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதம் ஆகியவற்றை குறைப்பதற்காக தாய் இறப்பு தணிக்கை மற்றும் சேய் இறப்பு தணிக்கை என்ற கண்காணிப்பு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சுகாதார அதிகாரிகள், மகப்பேறு மருத்துவ நிபுணர் மற்றும் முதல் நிலை பரிந்துரை மையங்களில் உள்ள முதன்மை மருத்துவ அதிகாரிகள் கொண்ட மருத்துவ கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு இறப்புகளைத் துரிதமாக அறிவிக்கவும், முழுமையாக விசாரணை செய்து மருத்துவம் மற்றும் மருத்துவமல்லாத காரணங்களைக் கண்டறியவும், மகப்பேறு உடன்படிக்கை மூல வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழு, தாயின் இறப்புக்கான காரணங்களைக் கண்டறிய, தாயின் உறவினர்களின் கருத்துக்களையும், சிகிச்சை அளித்த மருத்துவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து 15 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும். இந்த வாய்வழி விசாரணை முறை தாய் இறப்பிற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க உதவுவதுடன் மருத்துவர்களுக்கு தாய் இறப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க உதவுகிறது. இத்துடன் சுகாதாரச் சேவைகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய உதவுகிறது.

**[illegible]**

தமிழ்நாடு அரசு முழுமையான இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்களைக் கிராமப்புறங்களில் அளிக்க 'வருமுன் காப்போம்' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன் முறையாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்த முகாம்களில் அரசு மருத்துவமனைகளிலிருந்து 15 சிறப்பு மருத்துவர்கள் கிராம மக்களை, இ.சி.ஜி. போன்ற சிறந்த மருத்துவக் கருவிகள் கொண்டு பரிசோதனை செய்து, சிகிச்சை அளித்து, தேவைப்பட்டால் மேல் மருத்துவப் பரிசோதனைக்கு வாகன வசதி செய்து அனுப்பி வைக்கிறார்கள்.

இந்த முகாம்களில் சுகாதார விழிப்புணர்ச்சி, நோய்களிலிருந்து பாதுகாத்தல் பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இதுவரை 4,334 முகாம்களுக்கும் மேல் கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு முகாமிலும் சுமார் 916 நபர்கள் பங்கு பெறுகிறார்கள். டிசம்பர் மாத முடிவில் சுமார் 10 மில்லியன் மக்கள் அதாவது தமிழ் நாட்டிலுள்ள 6–ல் 1 பங்கு மக்கள் இந்த முகாம்களின் மூலம் பயன்பெறுவார்கள். இந்த முகாம்கள் மூலம் மாநில அளவிலான நோய்களின் அளவீடுகளை அறிவதுடன் பகுதி வாரியான நோய் பரவும் முறைகளைப் பற்றி பல தகவல்களையும் அறிய முடிகிறது. இந்த தகவல்கள், சிகிச்சை முறைகள் மற்றும் நோய்த் தடுப்பு முறைகளைத் திட்டமிடவும், உதவுகிறது. இந்த புதுமையான திட்டத்தின் மூலம் ஏழ்மையான நிலையில் உள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த உதவுகிறது.

'வாழ்வொளித் திட்டம்' என்ற பள்ளி நலத்திட்டம் 1999 முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதல் வகுப்பில் இருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரையில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படும். தேவை ஏற்பட்டால் மேல்நிலை மருத்துவ நிலையங்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறத. ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மற்றும் மருத்துவ சார்பு பணியாளர்கள் குழு அவர்களின் நிரந்தர பயணத் திட்டத்தின்படி பள்ளிகளுக்குச் சென்று பரிசோதனை செய்கிறார்கள். 1999–2000–ஆம் ஆண்டில் இதுவரை 72 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

குடும்ப நலத்திட்டத்தை உத்வேகப்படுத்துவதற்காக மாநில மக்கள் தொகை கொள்கை 2000 தயாரிக்கப்படுகிறது. குடும்ப நலத்திட்டத்தில் பெண்களின் மேல் உள்ள பளுவைக் குறைத்து, ஆண்கள் தீவிரமாக பங்குபெற தீவிரமான தகவல் தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கும் திட்டமும், வருங்கால தாய்மார்களுக்கான (வளர் இளம் பெண்கள்) ருபெல்லா நோய் தடுப்பூசித் திட்டமும் (Rubella Vaccination) செயல்படுத்துவதன் மூலம் வருங்கால தலைமுறைகள் நலமாகவும், வளமாகவும் இருப்பதற்குத் தேவையான முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய முனைப்பான நடவடிக்கைகளினால் மாநிலம் சீராக முன்னேறி வருகிறது. மாநிலத்தின் இயற்கை வளர்ச்சி விகிதம் கேரளாவைவிட குறைந்துள்ளது. 11.9 ஆக உள்ள கேரளாவின் வளர்ச்சி விகிதத்தை ஒப்பிடும் போது தமிழ்நாடு 10.7 என்ற நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் சுவு இனப் பெருக்க விகிதம் (Net Reproduction Rate) தற்போது 1 ஆக உள்ளது. இந்தியா தற்போதுள்ள நிலையில் எங்கள் மாநிலத்தின் நிலையை அடைய இன்னும் 5 ஆண்டு காலம் தேவைப்படும். தமிழ்நாட்டின் மக்கள் தொகையை 2010–ஆம் ஆண்டில் 7.2 கோடி என்று நிலைப்படுத்துவதே அரசின் குறிக்கோளாகும். கண்டிப்பாக அந்நிலையை நாங்கள் அடைந்தே தீருவோம்.

இருப்பினும் எங்கள் மனதில் ஒரு அச்சம் இருக்கிறது. மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களும், மத்திய அரசும் இந்த அச்சத்தைப் போக்க வேண்டும். தற்போது மக்களவையில் தமிழ்நாட்டிற்கு 39 உறுப்பினர்கள் உள்ளார்கள். மக்கள் தொகை குறைக்கப்பட்டதன் விளைவாக மக்களவையில் எங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது என்று மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களும், மத்திய அரசும் உறுதி அளிக்க வேண்டும். மாண்புமிகு பிரதமர் அவர்களும், இந்திய அரசும் தேவையான, சரியான, உடனடி நடவடிக்கைகள் எடுத்து அரசியலமைப்பில் தகுந்த மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் தமிழ்நாட்டிற்கும் மற்றும் குடும்ப நலத்திட்டங்களை ஆர்வமுடன் வெற்றிகரமாக செயல்படுத்தி மக்கள் தொகையை நிலைப்படுத்திய மாநிலங்களுக்கும் மக்களவையில் பிரதிநிதிகளைக் குறைப்பதன் மூலம் தண்டனை வழங்காமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

2001–ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளில் வேகமாக முன்னேறி வரும் சூழ்நிலையில், இந்த மாநிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை முன்பு இருந்ததைப் போலவே தேசிய மக்கள் கொள்கை 2000த்தின் பரிந்துரையின்படி 2025–ஆம் ஆண்டு வரை நீடிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மக்கள் தொகையை நிலைப்படுத்துவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மத்திய அரசு ஊக்கமும் உறுதியையும் அளிக்கும் என உறுதியாக நம்புகிறேன்".

**– தேசிய மக்கள் தொகைக் குழுவின் முதல் கூட்டத்தில் படிக்கப்பட்ட முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை.** ★



# ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட செக்கு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, கரூர் மாவட்டம் வெள்ளியணை–நத்தமேட்டில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எண்ணெய் ஆட்டும் செக்கு ஒன்றினைக் கண்டறிந்துள்ளது. இச்செக்கு ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினரால் சோமூர் இறைவனது பயன்பாட்டிற்காகக் கல்லால் அமைக்கப்பட்டதாகும். இதன் வாய்ப் பகுதியில் வட்டமாக வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு இத்தகவலைத் தருகிறது. அக்கல்வெட்டில் பாடம் பின்வருமாறுள்ளது.

**"ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மகாதேவர்க்கு அஞ்ஞூற்றுவர் இடுவிச்ச செக்கு"**



பண்டையத் தமிழ்நாட்டில் ஐந்நூற்றுவர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், வளஞ்சியர், சித்திரமேழில் பெரிய நாட்டார், பதினென்விசயத்தார், அய்யப்பொழிலார் என்ற பெயர்களில் வணிகர் குழுக்கள் இருந்தன. இக்குழுக்கள் தமிழகம் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் தரை மார்க்கமாகவும், இலங்கை, பர்மா (மியான்மர்), தாய்லாந்து, சீனம் போன்ற கடல் கடந்த நாடுகளில் கடல் மார்க்கமாகவும் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டன. கூட்டம் கூட்டமாக வண்டிகளில் சரக்கேற்றிக்கொண்டு அன்றையப் பெருவழிகளில் சென்ற இவர்கள் இடையிடையே பாதுகாப்பான இடங்களில் தங்கிச் சென்றனர். இவ்விடங்கள் வீரத்தாவளம், அடிக்கீழ்த்தளம், மடிகை என்ற பெயர்களில் விளங்கின. இவர்களுக்கென்று தனிப்பாதுகாப்புப் படைகளும் இருந்தன. இவை முன்னுகை மகா சேனை, வீரக்கொடியார், எரிவீரர் என்று பல்வேறு பெயர்களில் விளங்கின. நெடுந்தொலைவு செல்லும் இவர்களுக்கு கொள்ளையர் பயம் தொடர்ந்திருந்ததால் வழிநெடுகப் பல கோயில்களைத் தோற்றுவித்து வழிபட்டனர். இக்கோயில்கள் சிவன், திருமால், காளி (பிடாரி), சாத்தன் (ஐயனார்) மற்றும் சமண, பௌத்தக் கடவுளர்களுக்காகவும் அமைந்தன. இக்கோயில்களுக்காகப் பல்வேறு கொடைகளை நல்கிய இவ்வணிக் குழுக்கள், குளங்கள், மண்டபங்கள் ஆகியவற்றையும் தர்மமாக அமைத்துக் கொடுத்தன. இச்செய்திகள் தொடர்பான கல்வெட்டுகள் தமிழகத்தில் பல இடங்களிலும் கண்டறியப் பட்டுள்ளன.

பண்டைய கோயில்களில் விளக்கெரிப்பதற்காகப் பொன், கால்நடைகள், நிலங்கள் வழங்கப்பட்டன. விளக்கெரிப்பது ஒரு சிறந்த கொடையாகக் கருதப்பட்டது. விளக்கெரிப்பதற்கும் உணவிற்கும் எண்ணெய் இன்றியமையானதாக இருந்தது. எனவே எண்ணெய் ஆட்டக் கல்லால் ஆன செக்குகளைச் செய்தளிப்பது முக்கியக் கொடையாகக் கருதப்பட்டுச் செக்குகள் கொடையாக நல்கப்பட்டன. எண்ணெய் ஆட்டும் தொழில் பண்டையத் தமிழகத்தில் அரசிற்கு வரி வருவாய் ஈட்டித் தந்த தொழிலாகும். செக்கிறை, செக்குக் கடமை, செக்குப் பாட்டம் என்ற பெயர்களில் வரிகள் வசூலிக்கப்பட்டன. புதிதாக அமைக்கப்படும் ஊர்களில் செக்குகள் அமைக்கும் உரிமை அரசால் மட்டுமே வழங்கப்பட்டது. செக்காட்டுபவர்கள் சங்கரப்பாடியார் என்னும் செக்கார் என்றும் அழைக்கப்பட்டனர். பல கோயில்களையொட்டி இவர்களுக்குக் குடியிருப்புகளும் இருந்தன.

**அ. அப்துல்மஜீத்**, எம்.ஏ.,
இயக்குநர் (பொ), தொல்லியல் துறை

தமிழகத்தில் பல இடங்களில் கற்செக்குகள் கி.பி.8ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளுடனும், கல்வெட்டுகள் இல்லாமலும் கிடைத்துள்ளன. செக்குகளின் கீழ்ப்பகுதி மட்டுமே கிடைப்பதால் உலக்கைப் பகுதி மற்றும் மாடுகள் கட்டி இழுக்கும் அமைப்பு எப்படி இருந்தது என்பது அறிய இயலாதுள்ளது. எனினும் தாராசுரத்தில் உள்ள 63 நாயன்மார்களின் கதைகளை விளக்கும் சிறு சிற்பத் தொகுகளில் கலியநாயனார் கதையை விளக்கும் சிற்பத்தில் கி.பி. 12ஆம் நூற்றாண்டளவிலதான செக்கின் அமைப்பு நன்கு காட்டப்பட்டுள்ளது. செக்கின் உலக்கை மற்றும் எருதுகள் நன்கு தெளிவாக அதனில் தெரிகின்றன.



வெள்ளியணையில் ஐந்நூற்றுவ வணிகர்கள் சோமூர் மகாதேவர் கோயிலின் பயன்பாட்டிற்காகச் செக்கு அமைத்துக் கொடுத்துள்ளனர். செக்கில் உள்ள கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இச்செக்கு கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம். இச்செக்குள்ள இடம் புஞ்சை நிலம் அருகில் அமைந்த குடியிருப்பான நத்தமேடு ஆகும். இங்கு கல்வெட்டில்லாமல் மேலும் இரண்டு கற்செக்குகள் உள்ளன. எனவே இங்கு கோயில் சார்ந்த ஒரு எண்ணெய்த் தொழிற்சாலை– செக்காலை இருந்திருக்க வேண்டும். அருகிலமைந்த புஞ்சை நிலத்தில் விளையும் எள், ஆமணக்கு, நிலக்கடலை போன்றவை இங்கு பெரிய அளவில் ஆட்டப்பட்டிருக்க வேண்டுமென்று கருதலாம்.

வெள்ளியணை, கரூர் – திண்டுக்கல் பழைய சாலையில் அமைந்துள்ள ஊராகும். இச்சாலை வடமொழி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தக்ஷிணபதம் என்ற பெருவழிச்சாலையாகும். கரூர் பண்டைய நாட்களில் ஒரு பெரும் வணிக நகரமாக விளங்கியது. இங்கு மேற்சொன்ன தக்ஷிணபதம் என்ற பெருவழியும் கொங்கப் பெருவழி என்ற மற்றொரு பெருவழியும் சந்தித்தன. கொங்கப்பெருவழி கேரளத்தில் மேலைக் கடற்கரையில் தொடங்கி கோவை, கரூர், திருச்சி ஆகியவற்றை இணைத்துப் பூம்புகார் சென்று முடிந்த் பெருவழியாகும்.

மேற்கண்ட செய்திகளைக் கருத்தில் கொண்டால் தமிழகத் தொல்லியல் துறை அண்மையில் வெள்ளியணையில் கண்டறிந்த செக்கு மற்றும் அதனில் உள்ள கல்வெட்டால், பண்டையத் தமிழக வணிகக் குழுக்கள், கோயில் சார்ந்த தொழில்கள், பண்டையப் பெருஞ்சாலைகள் மற்றும் பொருளாதாரச் செய்திகள் எவ்வகையில் விளக்கம் பெறுகின்றன என்பதை நன்கு அறிய முடியும்.

★ ★ ★



ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே!

– பாரதியார்



# சங்ககாலத் தொல்பொருட்கள் கண்டுபிடிப்பு

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அருகில் மாளிகைமேடு என்ற சிற்றூரில் தமிழக அரசும் தொல்லியல் துறை கடந்த மூன்று மாதங்களாக அகழாய்வுப் பணியினை மேற்கொண்டுள்ளது. அவ்வகழாய்வில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொல்பொருட்கள் பல கிடைத்துள்ளன. அவற்றுள் சங்ககாலப் பண்பாட்டுப் பொருள்களோடு அக்காலத்திலேயே இந்தியாவின் பிற பகுதிகளோடும். ரோம் நாட்டுடனும் தமிழகத்துக்கு இருந்த பண்பாட்டு வணிகத் தொடர்பினை உறுதி செய்யும் வகையில் பல்வகையான வெளிநாட்டு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.

ரோம் நாட்டைச் சேர்ந்த அரிட்டைன், ரௌலட்டட் வகை மட்பாண்டங்களும், அதே கால கட்டத்தினைச் சேர்ந்த தமிழகத்துக் கருப்பு, சிவப்பு மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. சிறப்பாக பண்டைத் தமிழ் எழுத்துகள் (தமிழ்) பொறிக்கப்பட்ட சிவப்பு மட்பாண்டங்ளும், கோழி உருவம் பொறித்த ரௌலட்டட் பானைகளும், கீறல் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானைகளும் குறிப்பிடத்தக்கவை. மௌரியர் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படும் பளபளப்பான கருப்பு வண்ண மெருகூட்டப்பட்ட பானை ஓடும் கிடைத்துள்ளது. இவை யாவும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த பண்பாட்டிற்குரிய மண் அடுக்குகளில் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட தொல்பொருட்களேயன்றி, செவ்வக வடிவிலான யானை உருவம் பொறிக்கப்பட்ட செப்புக்காசு ஒன்றும், பெண்கள் காலில் அணியப்படும் தண்டை ஒன்றும், பல்வகையான மணிகள், மான்கொம்பு, சுடுமண்ணால் ஆன தாயக்கட்டை, சுடுமண்ணால் ஆன தக்களி மற்றும் குழந்தைகள் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வட்டச்சில்லுகள், புகைப்பான்கள், துளையிடப்பட்ட கூரையோடுகள், சுடுமண் அகல் விளக்கு, சுடுமண் காதணிகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. இவ்வகழ் ஆய்வின் மற்றொரு சிறப்பான கண்டுபிடிப்பாக பருத்தி நூல் திரள் கிடைத்துள்ளதைக் குறிப்பிடலாம். இவ்வகை நூல்கள் தமிழகத்து அகழாய்வுகளில் சிலவிடங்களிலேயே கிடைத்துள்ளன.



அக்காலத்திலேயே நூல் நூற்றலும், நெசவுத் தொழிலும் நடைபெற்றன என இவற்றிலிருந்து நன்கு அறியலாம்.

மேலும் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பண்டைய கால கட்டங்களின் அடிப்பகுதிகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றினில் தரைப்பகுதி பொடி செங்கல்லோடு சுண்ணாம்பு கலந்து 5 செ.மீ. கனமுடையதாக அமைக்கப் பெற்றுள்ளது.

★ ★ ★

# அரசு ஆணைகள்

**கூட்டுறவு – சோதனை முறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் – 1997–98 ராபி பருவத்தில் திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் செயலாக்கப்பட்டது – பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஈட்டுறுதி ரூ.4,42,77,521 – ஒப்பளிப்பு – ஆணையிடப்படுகிறது.**

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜி2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.37 நாள் : 03.03.2000

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 157, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிஜி2) துறை, நாள் 17.8.98
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம் எண்.ந.க. 100668/99/பாக1, நாள் 13.7.99 மற்றும் 8.12.99

ஆணை :

1997–98–ஆம் ஆண்டு ராபி பருவக் காலத்தில் "சோதனைமுறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்" இம்மாநிலத்தில் உள்ள திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்ட 59 வட்டங்களில் விவசாயிகளால் பயிர் செய்யப்பட்ட நெல், சிறுதானியங்கள், பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களுக்குச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இவ்வட்டாரங்களில் உள்ள பயிர்க்கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகளால் செலுத்தப்படவேண்டிய ஈட்டுறுதிக் கட்டணத் தொகை முழுவதையும் மத்திய அரசும் மாநில அரசும் 8:2 விகிதாச்சாரத்தில் ஏற்க வேண்டும். அதேபோல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ஈட்டுறுதித் தொகை (Indemnity)க்காகும் செலவினத்தையும் மத்திய மாநில அரசுகள் 8:2 என்ற விகிதாசாரத்தில் ஏற்க வேண்டும்.

2. இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் விவசாயிகளின் ஈட்டுறுதிக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.58 இலட்சத்தினை வழங்கும்படி கருத்துரு அனுப்பியிருந்தார். அக்கருத்துருவை ஆய்வு செய்தபின், 17.8.98 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.157–ல் ரூ.58 இலட்சத்தினை தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதிக்கு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் உள்ள 4,02,814 விவசாயிகள் இத்திட்டத்தில் பங்குபெறுவார்கள் என மத்திய அரசு எதிர்பார்த்ததன் அடிப்படையில், மாநில அரசின் பங்காக ரூ.58 இலட்சம் கோரப்பட்டது. என்றும், எனினும் இத்திட்டத்தில் 1,86,699 விவசாயிகள் மட்டுமே பங்கேற்றனர் என்று இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் தனது 3.9.98 நாளிட்ட கடித எண்.532/98–இல் தெரிவித்தது என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது 13.7.99 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்தார். எனவே, மாநில அரசின் பங்கு மானியத் தொகை ரூ.27 இலட்சமாக கணக்கிடப்பட்டு அத்தொகை அரசால் வழங்கப்பட்ட ரூ.58 இலட்சத்திலிருந்து இந்திய பொது காப்பீட்டுக் கழகத்திற்குப் பதிவாளரால் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 31 இலட்சம் தமிழ்நாடு பயிர் ஈட்டுறுதி நிதிக் கணக்கில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்திருந்தார்.

4. மத்திய அரசு ராபி 1997–98 பருவத்திற்கு மொத்த ஈட்டுறுதிக் கட்டணமாக ரூ.23,68,87,606.66–ஐ நிர்ணயித்துள்ளது என்றும், இதில் மாநில அரசின் 20 சதவீத பங்கு ரூ.4,73,77,521.33 என்றும், எனினும் தற்போது ஏற்கெனவே தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியில் ரூ.31 இலட்சம் இருப்பு உள்ளதால், அத்தொகையினைக் கழித்துவிட்டு ரூ.4,42,77,521.33 (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்திரண்டு இலட்சத்து எழுபத்தியேழாயிரத்து ஐநூற்று இருபத்தோரு ரூபாய், முப்பத்து மூன்று பைசா மட்டும்) தமிழ்நாடு மாநில பயிர் பாதுகாப்பு நிதிக்கு வழங்கிடுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தமது 13.7.99 நாளிட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்றுக்கொண்டது. அதன்படி, ராபி 1997–98 பயிர் பருவத்தில் சோதனை முறை விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் திருவாரூர் மற்றும் நாகப்பட்டிணம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டதால் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஈட்டுறுதி வழங்கிட மாநில அரசின் பங்காக தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதிக்கு ரூ.4,42,77,521 (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்தியிரண்டு இலட்சத்து எழுபத்தியேழாயிரத்து ஐந்நூற்று இருபத்து ஒன்று மட்டும்) அனுமதித்து ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–இல் அனுமதிக்கப்பட்டுள்ள இச்செலவினை "2401–00 பயிர் வளர்ப்பு – 110 பயிர்க்காப்புறுதி – ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – J.B.தமிழ்நாடு பயிர்க்காப்புறுதி நிதிக்கு பங்குத் தொகை – 10 பங்குத் தொகை" (கு.தொ.கு. 2401.00.110.J.B. 1006) என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம்.



7. இத்தலைப்பின் கீழ் 1999–2000 வரவு செலவித் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கமாக ரூ.1000 மட்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்செலவினத்தை 1999–2000–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த ஒதுக்கீட்டில் சேர்க்கவும், சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற, இதனை துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கவும் உரிய செயற்குறிப்புகளை நிதித்துறைக்கு அனுப்புமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும் இந்நிதியினை சென்னை கிழக்கு சம்பள கணக்கு அலுவலகத்தின் மூலமாக பெற்று தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியின் கணக்கில் சேர்க்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில உள்ள இணைப்பதிவாளருக்கு (செறிவு, வேளாண்மைப் பகுதித் திட்டம் ) அதிகாரம் வழங்கப்படுகிறது.

9. இந்த அரசாணை நிதித்துறையின் 03.03.2000–ஆம் நாளிட்ட அ.சா.கு.எண்.18257/கூ.உ (ம)நு.பா./2000–1ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

– **எல்.கே.திரிபாதி**
அரசுச் செயலாளர்

---

**2000–2001–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை – மாண்புமிகு முதலமைச்சரின் மீனவர் நலத்திட்ட அறிவிப்புகள் – தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் அமைத்தல் – ரூ.182 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கீடு – செலவின ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.**

கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் (மீன்6) துறை

அரசு ஆணை (நிலை) எண்.102 நாள் : 26.6.2000

படிக்க :

1. அரசு நேர்முகக் கடித எண்.4663/மீன்6/2000–1, கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் துறை, நாள் 29.3.2000
2. மீன்துறை இயக்குநர் கடித எண்.ஆர்1/13796/2000, நாள் 22.4.2000, 8.5.2000, 9.5.2000 மற்றும் 31.5.2000
3. அரசு நேர்முகக் கடித எண்.21662/எஸ்.ஜி.எஸ்.ஒய்/2000 ஊரக வளர்ச்சித்துறை, நாள் 13.6.2000 மத்திய அரசுக்கு முகவரியிட்டது.

ஆணை :

24.3.2000 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000–2001–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவையின் முன் வைத்து உரையாற்றும் பொழுது மீனவர்கள், மீன்களை விற்பதற்குப்படும் சிரமங்களை நீக்குவதற்கும் சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மீனவர் அங்காடி தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும் என்றும் நவீன வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும் என்றும் மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டு மொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக்கூடமும் (Auction Hall) உலர்களமும் (Drying Yard) அமைத்துத் தரப்படும் என்றும் அறிவித்தார்கள்.

2. இவ்வறிவிப்பினைச் செயலாக்கும் பொருட்டு, மீன்துறை இயக்குநர், மண்டல மீன்துறை உதவி இயக்குநர்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க்ங்கள் மற்றும் முக்கியமானவர்களை அழைத்து கூட்டம் நடத்தியும், அங்காடி அமையும் இடம் அங்காடிக்கும் மீன்பிடி கிராமங்களுக்கும் இடையே உள்ள தூரம் மற்றும் விற்கப்படவேண்டிய மீனின் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டும் கீழ்க்கண்டுள்ள 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் அமைக்க ரூ.182 இலட்சத்திற்குத் திட்ட மதிப்பீடு தயாரித்து அரசிற்கு அனுப்பியுள்ளார்.

| வ.எண். | மாவட்டம் | அங்காடி அமையும் இடம் |
|---|---|---|
| 1. | சென்னை | இராயபுரம் |
| 2. | காஞ்சிபுரம் | தாம்பரம் |
| 3. | கடலூர் | கடலூர் பழைய நகரம் |
| 4. | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 5. | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை |
| 6. | புதுக்கோட்டை | அறந்தாங்கி |
| 7. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 8. | திருநெல்வேலி | வள்ளியூர் |
| 9. | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 10. | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் |

3. சுகாதாரமான முறையில் 50 கடைகளோடு, மீனவர் அங்காடி ஒன்று அமைக்க 15 சென்ட் நிலமும், உலர்களம் மற்றும் ஏலக்கூடம் அமைத்திட 4 சென்ட் வீதம் 8 சென்ட் நிலமும் தேவைப்படும் எனவும், மீனவர் அங்காடியில் 2 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதி அமைக்கப்படவுள்ளது எனவும் மீன்துறை இயக்குநர் அரசிற்குத் தெரிவித்துள்ளார். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீட்டினையும் மீனவர் அங்காடியின் வடிவமைப்பினையும் மீன்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். இத்திட்டத்திற்கான செலவினமான ரூ.182 இலட்சத்தினை ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து பெற்றுத்தர ஏற்பாடு செய்திடவும், இதற்கு காலதாமதமாகும் எனில் உடனடியாக இப்பணியினைத் துவக்கிட ஏதுவாக ரூ.182 இலட்சத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்திடுமாறும் மீன்துறை இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

4. மீன்துறை இயக்குநரின் செயற்குறிப்பு அரசினால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. மீன்துறை இயக்குநர் தமது 9.5.2000 மற்றும் 31.5.2000 நாளிட்ட கடிதங்களில் அரசுக்கு அனுப்பிய திட்ட செயலாக்க அறிக்கை மற்றும் மீனவர் அங்காடியின் வடிவமைப்பு ஆகியவற்றிற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது.

5. மேலும், தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீனவர் அங்காடிகளும், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் அமைக்கவும் தேவைப்படும் செலவினமான ரூ.182 இலட்சத்தினை ஊரக வளர்ச்சித் திட்டமான சுதந்திரப் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் (SGSY) சிறப்புத் திட்டத்தில் ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற ஊரக வளர்ச்சித் துறையால் தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. மேற்கண்ட சூழ்நிலையில், மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற காலதாமதம் ஏற்படும் என்பதாலும், மீனவர் அங்காடி அமைக்கும் திட்டத்தின் செயல்பாட்டின் தாமதத்தை தவிர்க்க வேண்டியும், இணைப்பில் கண்டுள்ளவாறு 10 இடங்களில் மீனவர் அங்காடிகளும், 9 இடங்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் அமைக்கவும் (சென்னை இராயபுரம் தவிர) மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.182 இலட்சத்திற்கு செலவின ஒப்பளிப்பும், (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்தும் அரசு இவண் ஆணையிடுகிறது.

7. இச்செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து இச்செலவினத்தை எதிர்பாரா செலவி நிதியிலிருந்து முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ.1) துறைக்கு தேவையான விண்ணப்பப் படிவத்தில் அரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. மேலே பத்தி 4–இல் ஒப்புதலளிக்கப்பட்ட மீனவர் அங்காடிகளின் கட்டுமானப் பணிகளை சென்னை மீன்பிடி திட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளர் மேற்கொள்வார். மீன்துறை இயக்குநர் மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்டள்ள தொகையினைப் பெற்று சென்னை மீன்பிடி திட்ட வட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்டச் செலவினத்தினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம் –

"4405, மீனளம் குறித்த மூலதனச் செலவு – 105. பதப்படுத்துதல், பாதுகாத்தல், விற்பனைச் செய்தல். ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II. மாநிலத்திட்டம் – JF. தமிழ்நாட்டில் மீனவ அங்காடிகள் கட்டுதல் – 16. பெரும்பணிகள்" (த.தொ.கு.எண். 4405.00.105.JF.1609)

10. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு மீன்துறை இயக்குநர் மதிப்பீட்டு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

11. கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினைத் தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

12. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திகையோடு வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ.சா.கு.எண்.47907/ காபம்/2000 நாள் 26.6.2000).

(ஆளுநரின் ஆணைப்படி)

– மோகன் வர்கீஸ் சுங்கத்,
அரசுச் செயலாளர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 ஃபேக்ஸ் : 5368927



# தமிழரசு

பதிவு எண். M.8676
Licence No.TN/MS/(C)/PR




# தமிழரசு

ஆகஸ்ட் 1-31, 2000, ரூ10






**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆடி–ஆவணி
ஆகஸ்ட் 1–31, 2000
மலர் : 32 இதழ் : 3 & 4
விலை ரூ.10

*முதல் பக்க அட்டையில்*
சுதந்திரத் திருநாள்
*கடைசிப் பக்க அட்டையில்*
திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

இந்த இதழில்...

❖ இந்திய சுதந்திரத் திருநாள் —— 2
❖ ஒரு கிராமத்து நதி —— 8
❖ இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம் தமிழ்நாடு —— 10
❖ சென்னையில் மேலும் இரு மேம்பாலங்கள் —— 17
❖ நாட்டுப்புறவியல் கூறுகள் —— 22
❖ சிதைவு —— 28
❖ செய்திச்சரம் —— 33
❖ நாகை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் —— 37
❖ தன்னிறைவைப் பெற்ற பச்சைமலைப்பகுதி —— 41
❖ ஈரோடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள் —— 44
❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடிநீர் வசதி —— 47
❖ திரைப்பட விருதுகள் வழங்கும் விழா —— 49
❖ போதுமான தண்ணீர் பருகாமையால் தோன்றும் நோய்கள் —— 55
❖ ரெட்டைமலை சீனிவாசன் அஞ்சல்தலை —— 58
❖ அரசின் அரும் செயல்களில் தொழிற்சாலைகள் பங்கேற்க வேண்டும் —— 62
❖ இந்தியப் பொருளாதார மையம் தகவல் —— 64
❖ நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் —— 66
❖ சங்க இலக்கிய உத்திகள் —— 70
❖ திருவாரூரில் முதல்வர் கலைஞர் —— 73
❖ இருதயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் —— 77

## திருக்குறள்

***தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே***
***வேளாண்மை என்னுஞ் செருக்கு.***

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# இந்திய சுதந்திரத் திருநாள்

**முதலமைச்சர் கலைஞர் உரை**

பேரன்பு கொண்ட பெரியோர்களே!

அருமைத் தாய்மார்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே!

இன்று நமது இந்தியத் திருநாட்டின் சுதந்திரத் திருநாள்.

சுதந்திரம் அடைந்த பிறகு, நமது நாடு பல்வேறு துறைகளிலும் பாராட்டத்தக்க வகையில் முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. தமிழகமும் இந்தியாவில் உள்ள இதர மாநிலங்கள் எல்லாம் பாராட்டும் வகையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது.

உலக நாடுகளும் பாராட்டும் வகையில் மேலும்மேலும் பல முன்னேற்றங்களைக் காண்பதற்கு ஏற்ப, நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து உழைத்திட வேண்டும் என்னும் உணர்வினை நமக்கு அளிக்கின்ற நாள் இந்தச் சுதந்திரத் திருநாள்.

இந்த அரசு 1996ஆம் ஆண்டில் நான்காவது முறையாகப் பொறுப் பேற்ற பிறகு, உருவாக்கப் பட்ட புதிய திட்டங்கள் பல.

அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்",

ஊர் முன்னேற்றத்தில் ஒவ்வொருவரும் பங்கேற்றிட வேண்டும் எனும் உணர்வை வளர்த்திடும் "நமக்கு நாமே திட்டம்",



மக்கள் மனம் மகிழும் வண்ணம் மக்கள் பிரதிநிதிகள் தொண்டாற்றிட வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத, இந்த மாநிலத்தில் மட்டுமே "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்",

துள்ளித் திரியும் பள்ளி மாணவர்க்கும் அறிவை அள்ளித்தரும் கணினிக்கல்வித் திட்டம்,

கந்துவட்டி கட்டி மனம் வெந்துவிட்ட மகளிர் பயன்பெற சேமிப்புடன் இணைந்த சிறுவணிகக் கடன் திட்டம்,

சிற்றூர் மக்களுக்கும் பயனளிக்கும் "மினி பஸ்" எனும் "சிற்றுந்துத் திட்டம்",

சமத்துவச் சிந்தனையை மக்களிடையே வளர்த்திடும் "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்",

உழுவோரும், நுகர்வோரும் பயனடைய "உழவர் சந்தை திட்டம்",



வந்தபின் தவிப்பதை விட, வருமுன் காப்போம் எனும் சிந்தனையைத் தந்து செயல்பட வைத்திடும் "வருமுன் காப்போம் திட்டம்",

மேழிச் செல்வங்களை மேம்படுத்த "கால்நடை மேம்பாட்டுத் திட்டம்",

மாணவர்களிடம் உடல்நலம் ஓம்பும் உணர்வினை பள்ளிப்பருவம் முதல் வளர்த்திடும் "வாழ்வொளித் திட்டம்",

அடிக்கடி தீ விபத்துகளுக்கு ஆளாகி அல்லல்படும் ஏழைக் குடிசைவாழ் மக்களுக்கு கல்நார் கூரையுடன் வீடுகள் அமைக்கும் திட்டம்,

கிராமப்புறக் கைவினைக் கலைஞர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு களை அதிகரித்திட "பூமாலை விற்பனை மையம்",





கிராமப்புற மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் "மகளிர் திட்டம்" – எனப் புதிய பல திட்டங்கள் நான்காண்டுகளாக நடைமுறைப் படுத்தப்பட்டு தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கப் பட்டுள்ளன.

நிர்வாக வசதிகளை மேம்படுத்திட தேனி, திருவள்ளூர், நாமக்கல், திருவாரூர் என புதிய மாவட்டங்கள் உருவாக்கம். அரியலூரிலும் புது மாவட்டம் அமைத்திட நடவடிக் கைகள்.

திண்டுக்கல், தூத்துக்குடி, சென்னை, விழுப்புரம், திருவண்ணா மலை, நாமக்கல், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், தேனி ஆகிய 10 மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள்,

உயர்கல்வி வசதிகளை. பெருக்கிட "உயர்கல்வித்துறை",

கடுஞ்சாலைகளைக் கால்படும் சாலைகளாக மேம்படுத்திட "நெடுஞ்சாலைத்துறை",

இளைஞர்களின் நலம் வளர்த்திட "இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை",

தமிழ் மொழியின் பயன்பாட்டைப் பெருக்கிட "தமிழ் ஆட்சி மொழித்துறை",

தகவல் தொழில் நுட்பத்தில் தமிழகம் சிகரத்தைத் தொட "தகவல் தொழில் நுட்பவியல் துறை",

1995இல் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது இந்தியாவிலேயே முதலிடம்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ளதில் தமிழகம் முதலிடம்.

உயர்கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

கார்கில் போராட்டத்தின் போது தேசிய பாதுகாப்பு நிதிக்கு அதிக நிதி வழங்கியதில் தமிழகம் முதலிடம்.

தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.




1996 ஏப்ரலில் தமிழகத்தில் 34 மென்பொருள் நிறுவனங்கள்; தற்போது 600க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள்.

1995–96இல் தமிழகத்தில் தயாரிக்கப் பட்ட மென்பொருள் களின் ஏற்றுமதி மதிப்பு 37 கோடி ரூபாய்; 1999–2000இல் 1914 கோடி ரூபாய்.

மென்பொருள் வல்லு நர்கள் எண்ணிக்கை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம்.

சமதர்ம சமுதாயம் உருவாக உழைத்திட வேண்டும் என்னும் உணர்வினை வழங்கி வழிகாட்டிட "சமூகச் சீர்திருத்தத்துறை",

பழங்குடியின. மக்களைச் செழுங்குடியின மக்களாக மாற்றிட "பழங்குடியினர் நலத்துறை" எனப் பல்வேறு புதிய துறைகள் உருவாக்கப்பட்டுத் துறைதோறும் தமிழகம் பிறை போல வளர்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளன.

தொழில் நட்புறவுக் கொள்கையுடன் கூடிய வெளிப்படையான அணுகுமுறை, திறந்த நிர்வாகம், ஊழலற்ற ஆட்சி என்பதை இந்த அரசு கொள்கையாகக் கொண்டதால்,

மென்பொருள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே என "நாஸ்காம்" அமைப்பின் ஆய்வு பறை சாற்றி யுள்ளது.

4.7.2000 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களால் திறக்கப் பட்ட "டைடல் பார்க்" தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சீரிய சான்றாகத் திகழ்கிறது.

குழந்தைகள் நலன்காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் முதல் இடம்.

எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதல் இடம்.



மண்ணில் மகிழ்ச்சி நிலைத்திட மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதல் இடம்.

சிசு மரணம் தேசிய சராசரி 72; தமிழகத்திலோ 53 மட்டுமே!

பிறப்பு விகிதம் தேசிய சராசரி 26.5; தமிழகத்தின் சாதனை 19.2.

- அரிசி உற்பத்தித் திறன்
- எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் தமிழகம் இந்தியாவில் முதலிடம்.
- கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே தமிழகம் முதலிடம்.

தமிழக போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டுதோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும், 1998–99இல் 5 விருதுகளையும் பெற்றுப் பெருமை கண்டுள்ளது தமிழகம்.

தேசிய அளவில் உள்ள மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்புக் குழு வழங்கும் விருதுகளில் 9 விருதுகளைக் கடந்த ஆண்டில் பெற்றுள்ளது தமிழகம்.

1996க்குப் பின் 740 கோடி ரூபாய் செலவில் 475 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப் பட்டதில் இதுவரை 204 கோடியே 68 இலட்ச ரூபாய் செலவில் 179 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 535 கோடியே 32 இலட்ச ரூபாய் செலவில் 296 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னையில் 10 புதிய மேம்பாலங்கள் 115 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டதில் இதுவரை 7 பாலங்கள் எழிலுடன் அமைக்கப்பட்டு, திறக்கப்பட்டுள்ளன.

நேப்பியர் பாலம் 5 கோடியே 11 இலட்ச ரூபாய் செலவில் அழகுடன் விரிவுபடுத்தப்பட்டுள்ள பாங்கினைப் பாராட்டாதவர் எவருமில்லை.

4 ஆண்டுகளில் 20,900 கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகள், தார்ச்சாலைகளாக மாற்றம்;

10 ஆயிரம் கிலோ மீட்டர் நீள கிராமச் சாலைகளும்,

1787 கிலோ மீட்டர் நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகளும்,

3469 கிலோ மீட்டர் நீள மாநிலச் சாலைகளும் அதிகரிக்கப்பட்டு சாலை வசதிகள் மேம்பாட்டில் தமிழகம் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 15 இலட்சம்.

தமிழகத்தில் மட்டும் கட்டப்பட்டுள்ள வீடுகள் 9 இலட்சத்து 89 ஆயிரம்.

நெசவாளர் துயர் துடைக்க கைத்தறி துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 30 விழுக்காடு தள்ளுபடி;

60 வயதடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை 100/– ரூபாய் என்பது



1997–98இல் 150/– ரூபாயாகவும், நடப்பு ஆண்டில் 200/– ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

60 வயதுக்குமுன் மரணம் எய்திடும் நெசவாளரின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1996–97இல் 15,000/– ரூபாய் என்பது படிப்படியாக உயர்த்தப்பட்டு, நடப்பு ஆண்டில் 50,000/– ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர் பயன்பெற தனி தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

தையல் தொழிலாளர் நலவாரியம்,

ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியம்,

முடிதிருத்துவோர் நலவாரியம்

சலவைத் தொழிலாளர் நலவாரியம்

கைவினைத் தொழிலாளர் நல வாரியம்

பனைமரத் தொழிலாளர் நல வாரியம்

– எனப் பல்வகைத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கும் தனித்தனித் தொழிலாளர் நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையில் நான்கு ஆண்டுகளாக 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்; 12 ஆயிரம் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்.

நகராட்சி நிர்வாகத் துறையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் புது தெரு விளக்குகள்; 90 ஆயிரம் குழல் விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்

என தமிழகத்தையே ஒளி மயமாக்கிட நாம் உன்னத முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

ஆதிதிராவிடர்களுக்கு 3 இலட்சம் இலவச கான்கிரீட் வீடுகள்;

மீனவர்களுக்கு 20,000 வீடுகள்;

158 கோடி ரூபாய் செலவில் பாசனப் பகுதிகளில் தூர்வாரும் பணிகள்;

சொந்தக் கட்டடங்கள் இல்லாத 653 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 52 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள்;

கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தொழிற்கல்வி நிறுவனங்களில் 15 சதவீத இடஒதுக்கீடு;

பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களில் இருந்து ஒவ்வொருவகைத் தொழிற் கல்விப் பிரிவிலும் சேரும் முதல் பத்துநிலை மாணவர்களின் பட்டப்படிப்பு செலவு முழுவதையும் அரசு ஏற்றல்;

10, 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ மாணவியரின் உயர்கல்விச் செலவை அரசு ஏற்றல் என்பன உட்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளி முதல் தொழில்நுட்பக் கல்லூரிகள் வரை அனைத்திலுமே முந்தைய காலகட்டங்களைவிடக் கூடுதலாக கல்வி நிறுவனங்களைத் தமிழகம் முழுவதிலும் பரவலாக உருவாக்கி, மாணவ மாணவியர் அதிக எண்ணிக்கையில் சேர்ந்து பயில வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழகப் பொறியியல் கல்லூரிகளில் 1995–96இல் மாணவர்களுக்கு இருந்த இடங்களின் எண்ணிக்கை 20,170 மட்டுமே.

இந்த இடங்களை 48,000 என உயர்த்தியுள்ளமை ஒன்றே, இந்த அரசு கல்வித் துறையில் ஏற்படுத்தி வரும் சாதனைகளுக்கு ஒரு மிகச்சிறந்த சான்றாகும்.

வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு மூப்பு அடிப்படையில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் உட்பட மொத்தம் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பல்வேறு வகை ஆசிரியர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு;

மூவலூர் மூதாட்டியார் திட்டத்தில்மட்டும் 2 இலட்சத்து, ஆயிரத்து 733 ஏழைப் பெண்களுக்கு 10,000/– ரூபாய் வீதம், மொத்தம் 201 கோடியே 73 இலட்சத்து 30ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவி;

மகளிர் திட்டத்தின்மூலம் 34 ஆயிரத்து 25 சுய உதவிக் குழுக்கள்; அவற்றில் 6 இலட்சத்து 10 ஆயிரத்து 335 மகளிர் உறுப்பினர்கள்;

மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 13 ஆயிரத்து 644 மகளிர்க்கு கடன் உதவி;

உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு; அதன் மூலம் 44 ஆயிரத்து 143 பெண்களுக்கு உள்ளாட்சி மன்றங்களில் பதவி;



பெண்கள் நலத்திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும், “வாழ்ந்து காட்டுவோம் திட்டம்”.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களையும், சாதனைகளையும் தொடர்ந்து படைப்பதன் மூலம் தமிழகம் இந்தியாவின் இதர மாநிலங்களும், மத்திய அரசும் போற்றும் வகையில் பல்வேறு பெருமைகளைக் குவித்து வருகிறது.

மொழி உணர்வு வளர, இலக்கிய நலம் மிளிர “குறள் பீடம்” எனும் அமைப்பு;

உருதுமொழி ஆய்வுக்கும், வளர்ச்சிக்கும் தனியாக உருது அகாடமி;



வான்புகழ் அய்யன் வள்ளுவர்க்கு விண்முட்டும் சிலை;

ஆன்றோர்களுக்கும் சான்றோர்களுக்கும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், மொழிப் போர் தியாகிகளுக்கும் மரியாதை செலுத்திடும் வண்ணம் இவ்வரசு அமைத்த மணி மண்டபங்கள், நினைவிடங்கள், சிலைகள், நினைவுச் சின்னங்கள் கணக்கிலடங்கா!

சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி, வாழ்ந்துவரும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 1500 ரூபாய் என்பது 3000 ரூபாய் ஆகவும்,

அவர்களின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 750 ரூபாய் என்பது 1500 ரூபாய் எனவும் உயர்வு;

இப்படி, தியாகச்சுடர்களுக்கு சிறப்புகள் செய்து வருவதுடன், தமிழக மக்களின் வளமான முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றி, தமிழகத்திற்குப் பெருமைகளைக் குவித்து வருகிறது இந்த அரசு.

இத்தகைய பெருமைகள் தொடர்ந்திட – சாதனைகள் பெருகிட – ஜனநாயக மாண்புகள் செழித்திட – பொய்மைகள் நீங்கிட – வாய்மையே வெல்லும் என்னும் தத்துவம் நிலைத்திட – என்றும் விழிப்புடன் செயல்படுவோம் என இந்த வீர சுதந்திரத் திருநாளில் அனைவரும் உறுதியேற்போமாக!

நமது சுதந்திரத்திற்காகப் போராடி, உயிர் தந்தோர், உடல் ஊனமுற்றோர், உடைமைகளைத் துறந்தோர், சிறைக் கோட்டங்களில் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி நலிந்தோர், நாடு கடத்தப்பட்டோர் என்ற வரிசையில் தியாக மணிகளாய் வரலாற்றில் விளங்கிடும் ஆயிரமாயிரம் தியாகச் சுடர்களுக்கு இந்நாளில் நமது வீரவணக்கங்களைச் செலுத்திடுவோம்.

தமிழக மக்கள் அனைவர்க்கும் என் உளமார்ந்த சுதந்திரதின நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

வணக்கம்.

*– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15–8–2000 அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரை.*

★ ★ ★

# ஒரு கிராமத்து நதி

எங்கிருந்து வருகிறது
இந்த நதி?

மலைகளின்
மௌனம் உடைந்தா?
முகில்களின்
ஆடை கிழிந்தா?
வனங்கள் பேசிய
இரகசியங்கள் கசிந்தா?

இல்லை....

என்னிலிருந்து....
என் அந்தரங்கங்களின்
ஊற்றுக்கண் திறந்து
என் மார்புகள்
புல்லரித்து
என் ரத்தக் குழாய்களில்
புல்லும் பூவும் மணந்து
என்னை முழுக்காட்டி
என்னையே கரைத்துக் கொண்டு....

அங்கிருந்து வருகிறது
இந்த நதி.

●

உப்பாறு இதனுள் சங்கமிக்கும்
பாலாறும் கூட.
இது என் உதிரத்தின் உப்பு
இது என் தாய்ப்பால்

படிக்காத இதிகாசங்களும்
எழுதி முடிக்காத சரித்திரங்களும்
இதன் கரையில்....

●

பாறைகளைச்
சிற்பமாக்குகிற பழக்கம்
இதன் அலை நுணுக்கம்
பகல்களில்
நகரும் ஓவியம்
இரவுகளில்
தொலைதூரக் காற்றின்
நாதசுரத்துக்கு அசையும்
பாதரசம்.

●



□ சிற்பி





தானும் உணவாகி
மீனும் உணவாகும்
இந்த நதிக்கு
நானும் உணவாவேன்

●

இது
நான் தவழ்ந்த கோரைப்பாய்
முகம் பார்த்த கண்ணாடி
என் காதலின் வீணை
ஏகாந்தங்களின் பள்ளியறை
பெருமூச்சுகளின் பந்தய மைதானம்

பாரங்கள் தாங்காது வழியும்
பெரிய கண்ணீர்த் துளி

நினைவுகளைப் பொதிந்துவைத்த
வெள்ளித் தாள்

துயரங்களின் கால்வாய்
சந்தோஷங்களின் சமுத்திரம்

என் நீல ரத்தம்
என் ஆதிக் கவிதைகளின்
தொப்புள் கொடி
அந்திமச் சாசனத்தின்
ஏட்டுச் சுவடி

●

காலங்களின் தோளில்
பவனிவரும் இந்த மகாகவிதையில்
எழுத்துக்களுக்கு இடையே
தேங்கும் மௌனம்
நான்.

- 'ஒரு கிராமத்து நதி'
கவிதைத் தொகுப்பிலிருந்து.

வெளியீடு :
கோலம் வெளியீடு,
பொள்ளாச்சி.

● ● ●

“அட்வர்டைசிங் அண்டு மார்க்கெட்டிங்”
தொழிலியல் பத்திரிகை ஆய்வுக் கட்டுரை :

# இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம் தமிழ்நாடு

பத்தாண்டுகளுக்கு முன்பு சென்னை மாநகரச் சாலைகளை முழுவதுமாக திரைப்படங்கள் மற்றும் திரை நட்சத்திரங்களின் போஸ்டர்களே வியாபித்திருந்த நிலை இன்று முழுமையாக மாறி, சென்னை விமான நிலையத்திலிருந்து வெளி வந்தவுடனேயே தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மிகப்பெரிய அளவிலான நியான் விளக்குகள் அலங்கரிக்கும் விளம்பரங்கள் அமைந்துள்ளன.

### இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம் தமிழ்நாடு

சென்னை மாநகரம் இந்தியாவின் நான்காவது பெருநகரமாகத் திகழ்கிறது. தொழில் தொடங்குவதற்குத் தேவையான தாராளமான இடவசதியுடன் கூடிய குறைந்த விலையில் கிடைக்கும் நிலங்கள், அடிப்படை கட்டமைப்பு வசதிகள், கல்வியறிவுடன் கூடிய மனித வளம், ஆகியவை சென்னையில் மிகவும் எளிதில் கிடைக்கின்றன. மேலும் சென்னை மாநகரம் விரைந்து வளரும் நுகர்வோர் சந்தையாக உருவெடுத்து வருகிறது. சிகாகோ நகரைச் சேர்ந்த திரு.ஜோன்ஸ் லாங், “தமிழ்நாடு, இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மிகவும் ஏற்ற மாநிலம்” என்று கூறுகிறார்.

தமிழக அரசின் சிறந்த முயற்சியினால், தொழில் துறையைப் பொறுத்தமட்டில் இந்திய அளவில் மட்டுமல்லாது உலகளவிலும் போட்டி போடுமளவிற்குத் தமிழகம் உயர்ந்து வளர்ந்துள்ளது. உயர்தொழில் நுட்பத்துடன் கூடிய பல தொழிற்சாலைகள் இங்கு அமையப் பெற்றுள்ளதன் பயனாக, ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 450 கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரத் தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதில் வாகணங்களின் உதிரிபாகங்கள் மதிப்பு மட்டும் 16 கோடி ரூபாயாகும். பருத்தித் துணிநூல் மற்றும் பாலிஸ்டர் நூல் ஏற்றுமதியில், இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 25 சதவிகிதமும், ஆயத்த ஆடை ஏற்றுமதியில் 21 சதவிகிதமும் ஆகும். இதில் சென்னையும், திருப்பூரும் இரு முக்கிய மையங்களாகும்.

ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரையை தமிழகம் கொண்டுள்ளதால் இந்தியாவில் 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் உணவு ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 20 சதவிகிதம் என்ற அளவிற்கு உள்ளது. ஸ்பிக், சக்தி சுகர்ஸ், ராம்கோ குரூப், டி.வி.எஸ். குரூப், அமால்கமேஷன்ஸ் குரூப், முருகப்பா குரூப், டி.டி.கே குரூப், தரணி, இ.ஐ.டி.பாரி, எம்.ஆர்.எப். போன்ற பெருந்தொழில் நிறுவனங்களுக்குத் தமிழகம் தாயகமாகத் திகழ்கிறது. ஆயத்த ஆடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உலகளவிலான பல நிறுவனங்கள் குறைந்த செலவில் அதிக அளவில் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு தமிழகத்தில் உள்ளதால், அனைத்து பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தை நாடி வருகின்றன. நாட்டின் பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 70 சதவிகிதமாகவும், தோல் மற்றும் தோலினால் செய்யப்பட்ட பொருட்களில் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 45 சதவிகிதமாகவும் உள்ளன.



அடிப்படை கட்டமைப்பு வசதியுடன் கூடிய தொழில் பேட்டைகள் தமிழகத்தில் ஏற்கெனவே உருவாக்கப் பட்டுள்ளன. நாட்டின் பின்னலாடை உற்பத்தித் திறனில் நான்கில் ஒரு பங்கும், சிமெண்ட் காஸ்டிக் சோடா மற்றும் உர உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கும், சர்க்கரை, சைக்கிள் மற்றும் கால்சியம் கார்பைடு உற்பத்தியில் பத்தில் ஒரு பங்கும் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், இந்திய நாட்டின் மொத்த தீப்பெட்டி உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 60 சதவிகிதமாகவும், வடிவமைக்கப்பட்ட தோல் பொருட்களின் உற்பத்தியில் 77 சதவிகிதமாகவும் உள்ளது. ரயில் பெட்டிகள் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 32 சதவிகிதம் ஆகும்.

வாகன தொழில் இங்கு பாரம்பரியத் தொழிலாக உள்ளதன் காரணமாக, உயர் வர்த்தக வாகனங்கள் தயாரிப்பில் தமிழகம் 33 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது. வாகன உதிரிபாகங்கள் தயாரிப்பதில் 35 சதவிகிதமும், இரு சக்கரவாகனங்கள் தயாரிப்பில் 46 சதவிகிதமும் பெற்றுள்ளது.

இந்தியாவிற்கான பன்னாட்டுத் திட்டங்களில் தமிழகம் பெரும் பங்கு வகிக்கிறது. 5.3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 15 சதவிகிதம். மேலும் இந்தியாவில் அமையவிருக்கும் ஏற்றுமதி தொடர்பான நிறுவனங்களில் 537 நிறுவனங்களை தமிழகம் தனது முயற்சியினால் ஈர்த்துள்ளது. இந்நிறுவனங்களின் மொத்த முதலீடு 9,678 கோடி ரூபாயாகும். இதன் மூலம் ஏறத்தாழ 96,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த ஏற்றுமதியில் கைவினைப் பொருட்கள், தென்னை நார் உற்பத்திப் பொருட்கள், துணிகள், கெமிக்கல்ஸ், தங்கத்தி லான நகைகள், கற்கள், மருந்துகள், தோல் மற்றும் தோலினால் செய்யப்பட்ட பொருட்கள், முந்திரி, மிளகு, ஏலக்காய் போன்ற நறுமணப் பொருட்கள், பித்தளை மற்றும் கனிமப் பொருட்கள் மற்றும் விவசாயம் சார்ந்த உணவுப் பொருட்கள், காப்பி மற்றும் தேயிலை ஆகியவையாகும்.

> *“அறிவியல் ஆற்றலின் இருப்பிடமாக ஓசைப்படாமல் உயர்ந்து வரும் தமிழகம்” என டெல்லியிலிருந்து வெளிவரும் “அட்வர்டைசிங் அண்டு மார்க்கெட்டிங்” எனும் பிரபல ஆங்கில தொழிலியல் பத்திரிகை **31.7.2000** நாளிட்ட இதழில் மயங்கா எம்.சிங் என்பவர் தமிழ்நாட்டைப் பற்றி எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரை.*
>
> *இந்தியாவின் தொழிலியல் பத்திரிகைகளில் முன்னணியில் விளங்கி வருவது ஏ அண்டு எம் என்றழைக்கப்படும் “அட்வர்டைசிங் அண்டு மார்க்கெட்டிங்” எனும் ஆங்கிலப் பத்திரிகையாகும்.*
>
> *டெல்லியிலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீடும் **1** இலட்சத்து **50** ஆயிரம் பிரதிகள் விற்பனை யாகின்றன.*

### நான்காண்டுகளில் 36.5 பில்லியன் டாலர் அன்னிய முதலீட்டை தமிழகம் ஈர்த்துள்ளது

கடந்த நான்காண்டுகளில் 36.5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு அன்னிய முதலீடுகளை தமிழகம் ஈர்த்துள்ளது. இதுபற்றி அரசின் தொழில்துறை செயலர் திரு.சக்திகாந்ததாஸ் கூறுகையில், “தொழில் தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், தொழில் தொடங்கியோர், தொடங்க முன்வருவோர் ஆகியோரின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உடனடியாக அனுகூலமான உதவிகளை வழங்குவதோடு, அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான அரசியல் வலிமையையும் தமிழகம் பெற்றுள்ளது” என்று குறிப்பிட்டார்.

கடுமையான உழைப்பு, திறமை, ஆங்கில அறிவு மற்றம் இணக்கமான அணுகுமுறை ஆகியவற்றில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. தொழில் தொடங்குவதற்குப் பெரிதும் சாதகமான சூழ்நிலை இங்கு நிலவுகிறது. தொழிலாளர்கள் நடத்தும் போராட்டங்களினால் ஏற்படும் மனித நாள் இழப்பு நாட்டிலேயே தமிழகத்தில்தான் குறைவு. இங்கு மனிதவள முதலீடு மிகுந்து காணப்படுகிறது. இந்தியாவிலேயே கல்வித் திறனை மேம்படுத்தும் வகையில் செய்யப்படும் முதலீட்டில் தமிழகம் உயர்ந்து காணப்படுவதோடு, மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது. இங்குள்ள ஐ.ஐ.டி., அண்ணா பல்கலைக்கழகம், மண்டலப் பொறியியல் கல்லூரி மற்றும் சென்னை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவையே இந்த மேம்பட்ட நிலைக்குக் காரணம்.

சென்னை தெற்காசியாவின் “டெட்ராய்ட்” ஆகத் திகழ்கிறது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் வாகன உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 35 சதவிகிதமாக இருப்பதால், ஃபோர்டு, ஹூண்டாய், மிட்சுபிஷி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தைத் தேர்வு செய்து தங்கள் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன.

ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.யாங் சோ கிம் அவர்கள், “எங்கள் நிறுவனத்தைத் தமிழகத்தில் தொடங்குவதற்கு முன்பு, இந்திய அளவில் நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் – துறைமுகம், மின்சாரம், தொழில் தொடங்குவதற்கும், வாகனங்களை உற்பத்தி செய்வதற்கும் தேவையான நல்ல சூழ்நிலை தமிழகத்தில் தாராளமாக நிலவுவதை உறுதி செய்து கொண்ட பின்னரே, எங்கள் நிறுனத்தை தமிழகத்தில் நிறுவியுள்ளோம்” என்று தெரிவித்துள்ளார். மேலும் “எங்களுடைய தேவைகள் எதுவானாலும் அவை அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட உடனே, உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுகின்றன. எங்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மிகக் குறைந்த செலவில் கால தாமதமின்றி வழங்குவதும் தமிழக அரசுக்குரிய சிறப்பாகும்” என்று ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் தலைவர் திரு ஏ.பி.காந்தி தெரிவிக்கிறார்.

### தமிழகத்தில் வாகன உற்பத்தித் தொழில் வளர்வதற்கான மூன்று காரணங்கள்

வாகன உற்பத்தித் தொழிலில் முன்னோடியாகத் திகழக் கூடிய பழமை வாய்ந்த அசோக் லேலண்டு

நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சேஷசாயி அவர்கள் "தமிழகத்தில் வாகன உற்பத்தித் தொழில் வளர்படுவதற்கு,

★ வாகனத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரிய நிறுவனங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களைத் தயாரிக்கக்கூடிய பல சிறிய தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் இருப்பதும்,

★ திறமை வாய்ந்த மனித வளமும்,

★ மற்றும் எளிதில் விற்பனை செய்ய ஏதுவான நல்ல சந்தை வசதிகளும்" என மூன்று காரணங்களைக் குறிப்பிடுகிறார்.

வாகன மேலாண்மைப் பிரிவிற்கும், வாகனப் பாதுகாப்பு சாதனங்களை வடிவமைப்பதற்கும், பிளாஸ்டிக் மற்றும் ரப்பரால் உருவாக்கப்படும் பொருட்கள்



தொடர்பான தொழில்களைத் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கிட தமிழக அரசு முன்வந்துள்ளது.

உணவு பதப்படுத்துதல் மற்றும் பூக்களை விளைவித்தல் போன்றவற்றிற்குத் தேவையான வளங்கள் இங்கு அதிகமாக இருப்பது தமிழக அரசால் அடையாளம் காணப்பட்டு, அவற்றைப் பெருக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மா, வாழை, காய்கறிகள் மற்றும் இதர பருப்பு வகைகளின் விளைச்சலும் இங்கு மிகுதி. கோழி இறைச்சிகளைப் பதப்படுத்துதல், பதப்படுத்தப்பட்ட பழ வகைகள், ஒருங்கிணைந்த பூக்களை விளைவித்தல் ஆகிய புதிய திட்டங்களும் இங்கே உருப்பெற்றுள்ளன.

**தகவல் தொழில்நுட்பத்தில் ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் மையம் சென்னை**

சென்னை தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு இந்தியாவிலேயே மிகவும் ஏற்ற இடமாகத் திகழ்வதாக தேசிய அளவிலான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆய்வு செய்து அறிவித்துள்ளது. தகவல் தொழில்நுட்பப் பொருட்களின் உற்பத்தியில் தமிழகம் இதுவரை இல்லாத அளவிற்கு 1998–99–இல் 400 கோடி அளவிற்கு இருந்த ஏற்றுமதி தற்பொழுது 300 சதவிகிதம் அதிகரித்து 1,250 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இத்தொழிலில் ஏறத்தாழ 23,500 தொழில்நுட்ப வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இத்தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களால் சென்னையில் 1 இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடி பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொழில் நுட்பத்தில் சென்னை ஆசியாவின் மிகப்பெரிய ஆற்றல் மையமாக உருவெடுத்து வருகிறது.

தற்பொழுது தமிழகத்தில் அமைந்துள்ள ஏற்றுமதி செய்யும் 160 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில், 140 நிறுவனங்கள் சென்னையிலேயே அமைந்துள்ளன.

தமிழக அரசின் சீரிய முயற்சியினால் சென்னையில் பத்து இலட்சம் சதுர அடி பரப்பளவில் "டைடல் பார்க்" தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்கள் சுமார் 3,600 சதுர அடியிலிருந்து 75,000 சதுர அடி வரையில் ஒரே தளத்தில் அமைத்துக் கொள்ள வசதி உள்ளது. இப்பூங்காவின் பயன்பாட்டிற்கென்று தனியாக 110 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய துணை மின் நிலையத்தின் மூலமாகத் தங்கு தடையற்ற மின்சாரம் வழங்கப்படுவது சிறப்பான அம்சமாகும். இத்தொழில்நுட்பப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டும் வசதி, மின்தூக்கி, பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவை அனைத்தும் தானியங்கி முறையில் பராமரிக்கப்படுகின்றன. ஏறத்தாழ 4,000 தொலைபேசி இணைப்புகளுடன் கூடிய ஒரு தொலைபேசி நிலையமும் இவ்வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ளது.

மேம்பட்ட மனித வளம், உயர்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள், குறைந்த செலவிலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் போன்ற இதர வசதிகள் தமிழகத்தில் அதிக அளவில் கிடைப்பதன் காரணமாகவே தகவல் தொழில்நுட்பத் தொழில் இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது என காக்னிசன்ட் (Congnizant) இ.டி.எஸ். (E.D.S.), அல்கா டெல் (alcatel), டி.சி.எஸ். (TCS) மற்றும் பென்டாஃபோர் (Pentafour), போன்ற தகவல் தொழில்நுட்ப முன்னணி நிறுவனங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

சிறிய அளவில் மென்பொருள் தொழில் தொடங்குவோரை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசே 30 கோடி ரூபாய் அளவிற்கு மென்பொருள் நிதியத்தை உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (டானிடெக்) மூலம் தேர்ந்த கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பெருகிவரும் விமான சேவையை கருத்தில் கொண்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் 200



கோடி ரூபாய் செலவில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு, வரும் 2003–ஆம் ஆண்டில் வர்த்தக ரீதியில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்டை மாநிலமான ஆந்திரமும், கர்நாடகமும் தகவல் தொழில்நுட்பத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் தமிழகம் செயலாற்றலால் உயர்ந்து நிற்கிறது என்று "சன்மார் குரூப்" நிறுவனங்களின் தலைவர் திரு.சங்கர் குறிப்பிடுகிறார்.

உயிரியல் தொழில்நுட்பம் தற்பொழுது முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழக அரசின் சீரிய முயற்சியினால் புதிய உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று உருவாக்கப்படுகிறது. இதற்கான புதிய கொள்கை ஒன்றும் தமிழக அரசால் அறிவிக்கப்பட உள்ளது. உயிரியல் தொழில்நுட்பத்திலும், உயிர் வேதியியலிலும் சிறப்பு வாய்ந்த நிறுவனங்களைச் சார்ந்த உயர் திறமை பெற்ற வல்லுநர்கள் இம்மாநிலத்தில் அதிக அளவில் உள்ளனர்.

**ஆயுர்வேதம், சித்தமருத்துவத்தின் தாயகமாக தமிழகம் திகழ்கிறது**

தமிழகத்தில் மிக அதிக அளவில் வளமான மூலிகைகள் கிடைக்கப் பெறுவதால் இந்திய முறை மருத்துவத்தில் குறிப்பாக ஆயுர்வேதம், சித்த மருத்துவத்தின் தாயகமாக தமிழகம் திகழ்கிறது. இங்கிருந்து மூலிகை உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், கிழக்காசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



"ஆக்கப்பூர்வமாக செயல்திறன் மற்றும் முதலீட்டாளர் நேயமிக்க அரசாங்கம், உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உதவிடும் நிர்வாகம், சிறந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், திறனும் ஒத்துழைக்கும் மனோபாவமும் மிகுந்த தொழிலாளர்கள், செம்மையான அடிப்படைச் சுகாதாரம், கல்வி முறைகளும், நிறைந்த சமூகக் கட்டமைப்பு வசதிகளும் தமிழ்நாட்டின் பலங்களாகும்" என்று தமிழக அரசின் நிதித்துறைச் செயலர் பி.வி.இராஜாராமன் கருத்து தெரிவித்திருக்கிறார்.

என்.சி.ஏ.இ.ஆர். ஆய்வின்படி, இந்தியாவில் தமிழகம் சிறந்த செயலாக்கம் நிறைந்த மாநிலமாகத் திகழ்கிறது. உதாரணமாக, திறன்பட்ட ஒற்றைச்சாளர முறையைக் கொண்டு வந்த முதல் மாநிலமாகவும் தமிழகம் விளங்குகிறது. புதிதாக தொடங்கப்படும் திட்டங்கள் அனைத்திற்கும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் மாநில முதலீட்டு மேம்பாட்டுக் குழு, தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு இயங்கும் திட்ட அனுமதி அதிகார ஆணையம் ஆகிய இரு உயர் நிலைக்குழுக்களால் ஒப்புதல் வழங்கப்படுகின்றன.

திட்டங்கள் நிறைவேற்றப்படும் இடம், அவற்றின் தன்மை, அளவு ஆகியவற்றைப் பொறுத்தே அரசின் மூலதன உதவித்தொகை வழங்கப்படுகிறது. கணினி மென்பொருள் உற்பத்தித் திட்டங்களுக்கு உயர்ந்தபட்ச மானியத் தொகை 20 சதவிகிதம் – அதாவது அதிகபட்சமாக 20 இலட்சம் ரூபாய் வரை இருக்கும். குறைந்த வரி விகிதங்கள், தொழில் திட்டங்கள் குறித்த நடவடிக்கைகளில் ஒளிவு மறைவற்ற தன்மை, காலதாமதமின்மை ஆகியவை பெருமளவிலான தொழில் தொடங்குவோரின் எதிர்பார்ப்பாகும். இவற்றை நிறைவேற்றுவதில் தமிழக அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தொழில் தொடங்குவோருக்குத் தேவையான நிதி உதவிகளையும், தொழில்நுட்ப உதவிகளையும் டிட்கோ, சிப்காட், டிக் ஆகிய அரசு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இவற்றின் உதவியுடன் தொழில் வளர்ச்சி மையங்கள், தொழிற்பேட்டைகள் எனப்படும் தொழில் வளாகங்கள் ஒசூர், இராணிப்பேட்டை, கிண்டி, அம்பத்தூர், காரைக்குடி, சிவகங்கை, பரமக்குடி, திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

**சிப்காட் நிறுவனத்தின் மேற்பார்வையில் நான்கு தொழில் பூங்காக்கள்**

சிப்காட் நிறுவனத்தின் மேற்பார்வையில் 8,708 ஏக்கர் பரப்பளவில் நான்கு தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கும்மிடிபூண்டியில் அமைக்கப்படும் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற் பூங்காவும் இதில் அடங்கும்.

தமிழகம் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு பல தொழிற் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. டிட்கோ நிறுவனத்தினால் 7,600 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோலிய இரசாயனப் பூங்கா சென்னை விமான நிலையத்திலிருந்து 45 கி.மீ.



தொலைவில் உள்ளது. இங்கிருந்து ஏறத்தாழ 2 கி.மீ. தொலைவில் எண்ணூரில் பெரும் துறைமுகம் அமைந்துள்ளது. மேலும், சென்னை துறைமுகமானது சுமார் 27 கி.மீ. தொலைவில் உள்ளது.

சிப்காட் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழிற்பூங்காக்களை அமைத்துள்ளது. இத்தொழிற் பூங்காக்களில் தொழில் தொடங்குவோர்க்கு 15 சதவிகிதம் வரை – அதாவது 15 இலட்சம் ரூபாய் வரை மூலதன உதவித் தொகையும், முத்திரைத்தாள் தீர்விலிருந்து 13 சதவிகிதம் விலக்களிப்பும் வழங்கப்படுகிறது. மேலும், இப்பூங்காக்களிலும் இடம், நீர் வசதி, இணைப்புச் சாலைகள், கழிவு நீரேற்று வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் விரைவாக வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 36.5 பில்லியன் அமெரிக்க மதிப்பிலான முதலீட்டில் 285 பெரும் தொழிற் திட்டங்களை நிறைவேற்ற தமிழக அரசு கருதியுள்ளது. இந்தியாவில் பெருமளவில் முதலீட்டை ஈர்க்கும் மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

மத்திய அரசின் முயற்சியினால் இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஒன்று தமிழகத்தில் தூத்துக்குடிக்கு அருகேயுள்ள நாங்குநேரியில் சுமார் 6000–8000 மில்லியன் ரூபாயில் 1012 எக்டேர் நிலப்பரப்பில் உருவாக்கப்படுகிறது. இத்திட்ட செயற்குறிப்பில் தூத்துக்குடி வாகைக்குளத்திலுள்ள விமான நிலையத்தின் தரமுயர்த்தும் பணியும் அடங்கும். சிறப்புப் பொருளாதார மண்டலம் உயர்தொழில் நுட்பப் பூங்காவாக படிப்படியாக உயர்த்தப்படும். இது தகவல் தொடர்பு மின்னணுவியல், உயர்தொழில் நுட்பவியல் ஆகிய தொழில்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கும்.

இந்தியாவின் மிகப்பெரிய மூன்றாவது பொருளாதாரத்தை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர்கள் கண்டுபிடித்தனர். பண்டைய மற்றும் இடைக்கால தமிழகத்தின் நிருவாகம், கட்டடக் கலை, பொருளாதார நிலைகள் ஆகியவை குறித்த பண்டைக்கால ஆதாரங்களைச் சங்க கால இலக்கியம் நமக்கு அளிக்கிறது.

சுமார் ஆறரை கோடி மக்கள் தொகை கொண்டுள்ள தமிழகம் மக்கட் தொகையில் இந்தியாவில் ஏழாவது இடத்தில் உள்ளது. கிரானைட், சுண்ணாம்புக்கல், பழுப்பு நிலக்கரி இங்கு கிடைக்கும் முக்கிய கனிமவளங்களாகும். இயற்கை வளங்களைக் கொண்ட கிராமப்புறங்கள் இம்மாநிலத்தின் உண்மையான களஞ்சியங்களாகும். தமிழ்நாட்டில் எக்டேர் ஒன்றுக்கு 2.5 டன் நெல் மகசூல் கிடைக்கிறது. இது நாட்டிலேயே மிக அதிகமானதாகும். இம்மாநிலம் 68.1 இலட்சம் டன் அரிசி மற்றும் ஏனைய சிறுதானியங்களையும் 3.4 இலட்சம் டன் பயறு வகைகளையும் உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. இம்மாநிலம் எக்டேர் ஒன்றுக்கு 100 டன் என்ற அளவில் கரும்பு உற்பத்தி செய்து உலக அளவிலும் சாதனை புரிந்துள்ளது. ஏறத்தாழ 3.5 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பருத்தி இன்னொரு முக்கியமான பயிராகும். 2.8 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்படுகிறது. முக்கியப் பணப் பயிர்களான தேயிலையும், காப்பியும் பெருமளவில் பயிரிடப்படுகின்றன.

அண்மைக் காலத்தில் கவரப்பட்டுள்ள முதலீட்டின் 61 சதவிகிதம், பெரும்பாலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் தொடர்புடையதாகும். நவீன வியாபார முறைகளுக்கும் வாழ்க்கை முறைக்கும் தொடர்பு உள்ளது. தமிழ்நாட்டின் தொலைத் தொடர்பு வசதி பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இம்மாநிலத்தில் 1.2 மில்லியன் இணைப்புகளுடன் 1,603 தொலைபேசி இணைப்பகங்கள் உள்ளன. சென்னை வி.எஸ்.என்.எல். நிறுவனம் பெருமளவில் நவீன கால தகவல் தொடர்பு வசதிகளையும் அளிக்கிறது. அலைவரிசையை அதிகரிக்கக் கூடுதல் தரை நிலையங்களை ஏற்படுத்தி,



சென்னையில் வசதிகளை மேம்படுத்த இந்நிறுவனம் பெருமளவில் முதலீடு செய்கிறது.

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் சரக்குக் கப்பல் முனையங்கள் உள்ளன. சென்னை துறைமுகம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 35.6 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளையும், தூத்துக்குடி துறைமுகம் 10.7 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளையும் கையாளுகின்றன.

ஒட்டுமொத்தமாக தமிழகம் மனித வள அளவுக்குறியீட்டில் மூன்றாம் இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் கல்வி அறிவு பெற்றவர்கள் 70 சதவிகிதம் பேர் ஆவர். ஆனால் அகில இந்திய அளவில் கல்வி அறிவு பெற்றவர்கள் 62 சதவிகிதம் பேர்.

தமிழ்நாடு மாநிலத்தில் தேர்ச்சி பெற்ற மனித ஆற்றல் மிகுதியாக உள்ளது. காரணம் ஆண்டுதோறும் பொறியியல் பட்டதாரிகள் 32,600 பேருக்கும் அதிகமாகத் தேர்ச்சி பெற்று வருகின்றனர். இவர்களில் 15,000 பேர் கணினித் தொடர்பான துறையில் தேர்ச்சி பெறுகின்றனர். மேலும் தமிழ்நாட்டில் சுமூகமான தொழிலாளர் நல்லுறவு நிலவுகிறது. இங்கு மனித ஆற்றலுக்காகும் செலவும் மிகக்குறைவு. தவிர, புற வாழ்க்கைத் தரக் குறியீடு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றைப் பொறுத்தவரை தமிழ்நாடு நான்காம் இடம் வகிக்கிறது. கல்வி, சுகாதாரம், குடிநீர் வழங்கல் மற்றும் வீட்டுவசதி ஆகிய துறைகளில் அரசு இடைவிடாது எடுத்து வருகின்ற தளராத முயற்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

வரலாற்றுப் பின்னணியும், வலுவான வருங்காலமும் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். இம்மாநிலம் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் முதலீட்டைப் பெற்று வேகமாக முன்னேறி வருகிறது.

* * *

## முதலீட்டில் தமிழகம் முதலிடம் :

**'தினமணி'** நாளிதழ் தலையங்கம்

*கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களுக்கிடையே தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் போட்டி ஏற்பட்டிருப்பது ஆரோக்கியமான அம்சம். அதிலும் குறிப்பாக மகாராஷ்டிரம் மற்றும் தமிழகத்துக்கு இடையே, அண்மைக்காலமாக, இந்தப் போட்டி கடுமையாகவே இருந்து வந்துள்ளது.*

*கடந்த ஏப்ரல் மாத நிலவரப்படி, தொழில் முதலீட்டில் மகாராஷ்டிரத்தைவிட தமிழகம் வெறும் 318 கோடி ரூபாய் தான் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் விரையில் மகாராஷ்டிரத்தைத் தமிழகம் மிஞ்சி இந்தியாவில் முதலிடத்தை வகிக்க உள்ளது என கடந்த மே மாதம் தமிழக முதல்வர் கருணாநிதி சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்.*

*அவர் கூறியதற்கு இணங்க தற்போது வெளிவந்துள்ள இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின்* (Centre for Monitoring Indian Economy) *அறிக்கைப்படி ரூ.1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடி முதலீடு திரட்டி, நாட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது தமிழகம். தொழில் வளர்ச்சியில் தமிழகத்தின் இவ்வரலாற்றுச் சாதனை மன நிறைவு தருவதாகும்.*

*ரூ.1 இலட்சத்து 58 ஆயிரத்து 410 கோடி முதலீடு திரட்டியுள்ள மகாராஷ்டிரம் 2–ஆம் இடத்துக்குச் சரிந்துள்ளது. குஜராத் 3–ஆம் இடத்தையும் ஆந்திரம் 4–ஆம் இடத்தையும் தக்க வைத்துக் கொண்டுள்ளன.*

*இப்பந்தயத்தில் ஒரிசா 5–ஆம் இடத்திலும் கர்நாடகம் 6–ஆம் இடத்திலும் உள்ளன. எனினும் கடந்த சில மாதங்களில் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் தொழில் முதலீடு உயர்ந்துள்ளது. இது அம்மாநிலங்கள் மேற்கொண்டு வரும் தீவிர முயற்சியைப் பிரதிபலிக்கிறது.*

*அதே நேரம் கடந்த ஏப்ரல் மாதத்துக்குப் பிந்தைய நான்கு மாதங்களில், குஜராத் மற்றும் கேரள மாநிலங்களில் தொழில் முதலீடு சரிந்துள்ளது கவலை தருவதாகும். குஜராத் சரிவுக்கு அங்கு சில மாதங்களுக்கு முன் நிலவிய கடும் வறட்சியும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும்.*

*குறைந்த செலவில் நல்ல கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட மனித வளம், புதிய திட்டங்களை உடனுக்குடன் பரிசீலித்து அனுமதி வழங்கிடும் அரசின் முனைப்பான செயல்பாடு ஆகிய அம்சங்கள் – தமிழகம் இச்சாதனை புரிந்திட உதவியுள்ளன என்பது வெளிப்படை.*

*எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுப் பணியில் மாநிலங்களின் பங்கு கணிசமாக அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியில் இம்முன்னணி மாநிலங்கள் காட்டும் அக்கறை இதை உணர்த்துகிறது.*

*உற்பத்திப் பெருக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு மட்டுமல்லாமல் கணிசமான அளவில் நேர்முக, மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவும் இத்தொழில் வள மேம்பாட்டுப்பணி வழிவகுக்கும் என நம்பலாம். வளர்ச்சியின் பயன் பரவலாக்கப்படுவதற்கும் சாதாரண மக்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் இது இன்றியமையாதது ஆகும்.*

*நன்றி : தினமணி 9.8.2000*

# துறைகள்தோறும் முதலிடம், வெற்றிகள் குவிக்கும் தமிழகம் !



★ 1995-இல் தொழில் வளர்ச்சியில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது இந்தியாவில் முதலிடம்.

★ தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியுள்ளதில் தமிழகம் முதலிடம்.

★ உயர்கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

★ தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்.

★ மென்பொருள் வல்லுநர்கள் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்.

★ குழந்தைகள் நலன்காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் முதலிடம்.

★ எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதலிடம்.

★ மகிழ்ச்சி பரவிட மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதலிடம்.

★ அரிசி உற்பத்தித்திறன், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் தமிழகம் இந்தியாவில் முதலிடம்.

★ கரும்பு உற்பத்தித் திறனில் உலகிலேயே தமிழகம் முதலிடம்.

□ □ □



# சென்னையில் மேலும் இரு மேம்பாலங்கள்



சென்னை மாநகராட்சி மன்றத்தின் சார்பில் இதுவரையிலே ஐந்து பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டு இன்று இரண்டு பாலங்கள் திறந்து வைக்கப்பட்டு மேலும் மூன்று பாலங்கள் விரைவில் திறக்கப்படும் என்ற அறிவிப்பு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கின்றது.

**7 பாலங்கள் கட்டப்பட்டதில் ரூ.18.44 கோடி மிச்சம்**

சென்னை மாநகரத்துக்கு எழிலூட்டுவதற்காக மாத்திரமல்ல, வசதி செய்து தருவதற்காக இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 115 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் பத்து பாலங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு இன்றுடன் 7 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த 7 பாலங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.77.50 கோடி. இதற்கான கட்டுமானச் செலவு ரூ.59.06 கோடி. எனவே மிச்சப்படுத்தப்பட்ட தொகை ரூ.18.44 கோடி என்பதைக் கேட்க நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மாநகராட்சி மன்றத்தையும் மேயரையும் அதிகாரிகளையும் மற்றும் இந்தக் கட்டுமானப் பணியை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தக்காரர்களையும் பெரிதும் பாராட்டி வாழ்த்துகிறேன். இந்த நிலை எல்லா இடங்களிலும் தொடர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் காண்கிற நேரத்தில் பல்லாயிரக்கணக்கிலே நீங்கள் இங்கே குழுமியிருக்கிறீர்கள். இது ஒரு பாலத்தின் திறப்பு விழாவிற்கு இவ்வளவு பேர் வரக்காரணம் என்னவென்றால் அத்தனை பேருக்கும் சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சியிலே உள்ள ஆர்வத்தையும் அக்கறையையும் இது காட்டுகிறது என்றுதான் இதற்குப் பொருள். இந்த மாநகரம் முன்னேறும், வளர்ச்சி பெறும், அழகுறும், வசதிகளை உருவாக்கும் என்ற அந்த எதிர்பார்ப்பு கடந்த நான்காண்டு காலத்திற்கு முன்பே உங்களுக்கு ஏற்பட்ட காரணத்தினால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை மாநகராட்சி மன்றத்தின் ஆட்சிப் பொறுப்பிலே அமர வைத்தீர்கள். அந்த நம்பிக்கை வீண் போகாமல் மாநகராட்சி மன்றத்திலே மேயரும், துணை மேயரும் மற்றுமுள்ள கட்சித்தலைவர்களும், உறுப்பினர்களும் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை நீங்கள் தெளிவாக அறிவீர்கள். இந்தப் பாலங்களிலே மிச்சப்பட்டது பணம் மாத்திரமல்ல, மிச்சப்படப் போவது உங்களுடைய நேரமும் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தப் பாலங்கள் இல்லாவிட்டால் ஒரு இடத்தைக் கடக்க எவ்வளவு நேரமாகும், எந்த அளவிற்கு நேரத்தை இந்தப் பாலங்கள் மிச்சப்படுத்துகின்றன என்பதை முன்னால் பேசிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணி, தம்பி டி.ஆர்.பாலு, தம்பி மாறன் ஆகிய அத்தனை பேரும் இங்கே எடுத்து விளக்கியிருக்கிறார்கள். எனவே அதைப்பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை.

ஒன்றை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். கோ.சி.மணி குறிப்பிட்டதைப் போல பாலங்களை தமிழ்நாட்டிலே அதிகமாகக் கட்டிய ஒரு ஆட்சி உண்டென்றால் அது திராவிட முன்னேற்ற கழக

ஆட்சிதான். 1967–இல் அண்ணா அவர்கள் தலைமையிலே உருவான இந்த ஆட்சி 67லும் சரி, பிறகு 69லும் சரி, பிறகு 71லும் சரி, பிறகு 89லும் சரி, இப்போது நான்காவது முறையாகப் பொறுப்பேற்றுள்ள இந்தக் கால கட்டத்திலும் சரி, மிக அதிகப்படியான பாலங்களைத் தமிழகத்திலே கட்டிய ஆட்சி இந்த ஆட்சிதான். ஒரு ஒப்பீடு உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால் முந்தைய ஐந்து ஆண்டுகளில் 96க்கு முன்பிருந்து ஐந்தாண்டு காலத்தை நீங்கள் கணக்கிட்டால் தமிழகம் முழுவதும் அப்போது கட்டிமுடித்த பாலங்களின் எண்ணிக்கை 53. அதற்கான செலவு 26 கோடியே 10 இலட்சம் ரூபாய். 1996க்குப் பின் இந்த நான்காண்டுகளில் கட்டி முடித்துள்ள பாலங்களின் எண்ணிக்கை இதுவரையில் 179. இவற்றுக்கான செலவு 204 கோடியே 68 இலட்சம் ரூபாய். மேலும், கட்டுமானப் பணிகள் நடைபெற்று விரைவில் முடிக்கப்படவிருக்கும் பாலங்களின் எண்ணிக்கை 296. இவற்றின் மதிப்பீடு 535 கோடியே 32 இலட்சம் ரூபாய்.

### 1996–ஆம் ஆண்டுக்குப் பின் சாலை மேம்பாட்டுச் சாதனைகள்

ஒரு புள்ளி விவரம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால் பயன்படக்கூடிய, நினைவிலே நிறுத்தப்பட வேண்டிய புள்ளி விவரம் சொல்ல வேண்டுமேயானால் தமிழகத்தில் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 1996க்குப் பின் சாதனைகள் என்று எடுத்துக் கொண்டால் உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணியின் துறையின் சார்பிலும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் தா.கிருட்டினனின் துறையின் சார்பிலும் நடைபெற்ற சாதனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

- 748.66 கோடி ரூபாய் செலவில் 12,842 கி.மீ. நீள நெடுஞ்சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன.
- 149 கோடி ரூபாய் செலவில் 2,748 கி.மீ. நீள ஊரகச்சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன.
- 150 கோடி ரூபாய் செலவில் 1,500 கி.மீ. நீளத்திற்கு நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 10,000 கி.மீ. நீளமுள்ள கிராமச்சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.
- 21,000 கி.மீ. நீள கிராமச்சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.
- 1787 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- 3,469 கி.மீ. நீள இதர மாவட்டச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகர் நோக்கி வரும் 252 கி.மீ. நீள ஆரச்சாலைகளும் அவைகளில் 3 பாலங்களும் 212 கோடியே 54 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.





49 கோடியே 85 இலட்ச ரூபாய் செலவில் 18.8 கி.மீ. நீளமுள்ள தாம்பரம் –மதுரவாயல் – சென்னை புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

36 கோடி ரூபாய் செலவில் மதுரை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

110 கோடி ரூபாய் செலவில் 28.40 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்ட கோவை புறவழிச்சாலை போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கும்பகோணம், பழனி, செய்யாறு ஆகிய இடங்களில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் புறவழிச்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதில், கும்பகோணம் புறவழிச்சாலைக்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. மற்ற இடங்களில் பணிகள் முன்னேறி முடிவடையும் கட்டத்திலே உள்ளன.

1996க்கு முன் பேரூராட்சிகளில் இருந்த சிமெண்ட் சாலைகளின் நீளம் 380 கி.மீ. இதுநான்கு ஆண்டுகளில் 909 கி.மீ.என்ற அளவில் அதிகரித்துள்ளது.

1996க்கு முன் பேரூராட்சிகளில் இருந்த தார்ச்சாலைகளின் நீளம் 733 கி.மீ. இது 1996க்குப் பின் நான்காண்டுகளில் 3421 கி.மீ. என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

- தேசிய நெடுஞ்சாலைகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாத்திரம் அமைக்கப்பட்ட முக்கிய பாலங்கள் –
- 1969–இல் திண்டிவனம் அருகே சங்கராபரணி ஆற்றில் 220 மீட்டர் நீளத்திற்குப் பெரிய பாலம்.
- 1971–இல் மதுரை–திண்டுக்கல் புறவழிச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம்
- 1971–இல் மதுரை ஆண்டாள்புரம் அருகே முத்துராமலிங்கத்தேவர் மேம்பாலம்
- 1971–இல் மதுரைக்கல்லூரி அருகே மேயர் முத்து மேம்பாலம்
- 1972–இல் காரனோடை அருகில் குசத்தலை ஆற்றில் 400 மீட்டர் பாலம்
- 1972–இல் தருமபுரி திருப்பத்தூர் சாலையில் தென்பெண்ணை ஆற்றில் இருமாத்தூர் அருகே பாலம்.
- 1972–இல் திருச்சிக் கரையாற்றில் 113 மீட்டர் பாலம்.
- 1972–இல் மதுரை–அருப்புக்கோட்டை சாலையில் பாலம்.
- 1973–இல் சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலம்.
- 1974–இல் கும்மிடிப்பூண்டி அருகே ஆரணியாற்றில் 123 மீட்டர் பாலம்.
- 1974–இல் சென்னை ஆர்.கே.மடம் சாலையில் பாலம்.
- 1974–இல் உளுந்தூர்பேட்டை அருகில் கடிலம் ஆற்றில் 321 மீட்டர் பாலம்.
- 1974–இல் சென்னை அடையாற்றில் திரு.வி.க.பாலம்.
- 1974–இல் திருப்பூர் நகரில் பாலம்.
- 1974–இல் திண்டுக்கல் அருகில், சென்னை திருச்சி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சாதனையாற்றின் குறுக்கே 72 மீட்டர் நீளத்திற்குப் பாலம்.
- 1974–இல் திண்டுக்கல் வட்டாணம் சாலையில் பாலம்.
- 1974–இல் விருதுநகர் அருகே கவுசிக ஆற்றின் குறுக்கே 101 மீட்டர் நீளத்திற்குப் பாலம்.
- 1974–இல் இராமேஸ்வரத்தில் ஆசியாவிலேயே பெரிய பாம்பன் பாலம் (பணி துவக்கம்).
- 1975–இல் மணப்பாறை அருகே சித்தனாதன் ஆற்றின் குறுக்கே 132 மீட்டர் பாலம்.
- 1975–இல் திருச்சி சமயபுரம் அருகே உப்பாற்றில் 105 மீட்டர் பாலம்.
- 1975–இல் மார்த்தாண்டம் பனிச்சம்மோடு சாலையில் குழித்துறை ஆற்றில் பாலம்
- 1989–இல் மாமண்டூர் அருகில் தாக்குப்பேட்டையில் என்.எச்.45 தேசிய நெடுஞ்சாலையில் 90 மீட்டர் பாலம்.
- 1989–இல் அதே மாமண்டூர் அருகில் கிள்ளியாற்றில் 175 மீட்டர் பாலம்
- 1989–இல் செங்கல்பட்டு அருகில் பாலாற்றின் குறுக்கே 686 மீட்டர் பாலம்

### தமிழக நெடுஞ்சாலைகளில் கட்டப்பட்ட பாலங்கள்

இவைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலையிலே இந்த அரசின் ஒத்துழைப்போடு அமைக்கப்பட்ட பாலங்கள். அரசு எடுத்த முயற்சியின் காரணமாக அமைந்த பாலங்கள் தமிழக நெடுஞ்சாலைகளில் என்று எடுத்துக் கொண்டால் –

- 1969–இல் தஞ்சை–திருச்சி மாவட்டங்களை இணைத்து கொள்ளிடம் ஆற்றில் திருமானூர் அருகில் ஒரு பெரிய பாலம்



- 1969–இல் குளித்தலை–முசிறிக்கு இடையில் காவிரிப்பாலம்
- 1970–இல் திருநெல்வேலி சந்திப்புக்கு அருகில் திருவள்ளுவர் பெயரால் ஒரு ஈரடுக்கு மேம்பாலம்
- 1971–இல் கோவையில் ஒரு மூன்றடுக்கு மேம்பாலம்
- 1972–இல் ஈரோடு–சத்தி சாலையில் ஒரு பாலம்
- 1973–இல் ஒகனேக்கல் சாலையில் சின்னாறு நதியில் பாலம்
- 1973–இல் பொள்ளாச்சி–தாராபுரம் சாலையில் பாலம்
- 1973–இல் தேவிப்பட்டிணம்–திருப்பாலக்குடி சாலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாலம்
- 1973–இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பொய்யேரி செல்லும் சாலையில் திருமணி ஆற்றில் பாலம்
- 1973–இல் முத்துப்பேட்டை–மீசல் சாலையில் அம்புலியாற்றில் பாலம்
- 1973–இல் கல்லார் சிமெண்ட்பள்ளி சாலையில் அரசனூர் ஆற்றில் பாலம்
- 1973–இல் உடுமலைப்பேட்டை – குமாரலிங்கம் சாலையில் அமராவதி ஆற்றில் பாலம்
- 1974–இல் செங்கல்பட்டு அருகில் சூணாம்பேடு சாலையில் பாலம்
- 1974–இல் வேலூரர் அருகில் பாலாற்றில் போளூர் சுப்ரமணியன் பாலம்
- 1974–இல் கடலூரர்–சித்தூரர் சாலையில் மலட்டாற்றின் குறுக்கே பாலம்
- 1974–இல் பேசின்பிரிட்ஜுக்கு அருகில் பக்கிங்ஹாம் கால்வாயில் அமைந்த பாலமும், அப்பகுதியில் அமைந்துள்ள ஒரு இரயில்வே மேம்பாலமும் அகலப்படுத்திக் கட்டப்பட்டன.
- 1975–இல் கடலூரில் கடற்கரைச் சாலையில் தென்பெண்ணை ஆற்றின் அருகில் கடல்நீர் உள்ளே வரும் பகுதியில் 75 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்

ரெயில்வே மேம்பாலங்கள் என்று எடுத்துக் கொண்டால் –

சென்னை விம்கோ நகர் – எண்ணூர் இரயில் நிலையங்களுக்கிடையில் ஒரு இரயில்வே மேம்பாலம்

மாயூரம் சாரங்கபாணி மேம்பாலம்

திருவாரூர் மேம்பாலம்

கும்பகோணம் இரயில்வே மேம்பாலம்



நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை முத்துப்பேட்டை சாலையில் ஒரு மேம்பாலம்

கோவையில் கிராஸ்கட் சாலையில் மேம்பாலம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆர்க்காடு விழுப்புரம் சாலையில் ஒரு மேம்பாலம்

இப்படி சொல்லிக் கொண்டே போனால் நேரம் போதாது. அந்த அளவிற்கு பாலங்கள் கழக ஆட்சியிலே கட்டப்பட்டு மக்களுடைய போக்குவரத்துக்கும் வசதிவாய்ப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடத்தான் இந்தப் பட்டியலை உங்கள் முன் நான் படித்துக் காட்டினேன்.

**பாலங்களைப் பயன்படுத்துவோர் ஒழுங்குமுறையோடு பயன்படுத்த வேண்டும்**

ஒரு மாநகரம் அழகுபெற பாலங்கள் மாத்திரம் போதாது என்பதை நான் உணராதவன் அல்ல. அந்தப் பாலங்களைப் பயன்படுத்துவோர் அதை எவ்வளவு ஒழுங்குமுறையோடு, கடமை உணர்வோடு, கட்டுப்பாட்டு உணர்ச்சியோடு பயன்படுத்த வேண்டுமென்பதை நான் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சிங்கப்பூர் சிங்காரமாக அழகாக இருக்கிறது. தூய்மையாக இருக்கிறது என்றால் அது நிர்வாகம் மாத்திரம் செய்யும் பணியல்ல. மக்களும் அதற்கு ஒத்துழைக்கிறார்கள். அதைப்போல சென்னை சிங்காரச் சென்னையாக தொடர்ந்து விளங்கிட வேண்டுமேயானால் மக்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

இப்போது மேயர் ஸ்டாலினுடைய முயற்சியால் நவீனமான முறையில் இயந்திரங்களைப் பயன்படுத்தி துப்புரவுத் தொழிலில் ஈடுபாடு கொண்ட அதை ஒரு உத்தியோகமாக கருதுகிற ஆட்களை வைத்து சென்னையில் மூன்று நான்கு பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டு குறிப்பாக மைலாப்பூர், ஆயிரம்விளக்கு, திருவல்லிக்கேணி பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கே செல்லுகிற நேரத்தில் சிங்கப்பூரில் உள்ள தெருக்களைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. அவ்வளவு தூய்மையாக இருக்கின்றது. அங்கே வாழ்கிறவர்கள் என்னைச் சந்திக்கும் போதும் சரி, நண்பர்களைச் சந்திக்கும்போதும் சரி, மேயரைச் சந்திக்கும் நேரத்திலும் சரி மிகத் தூய்மையாக இந்த முயற்சியின் காரணமாக எங்கள் பகுதி விளங்குகிறது. இதை விடாமல் செய்து வாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மற்ற பகுதிகளுக்கும் அதை விரிவாக்க வேண்டும் என்ற எண்ணம் மாநகராட்சி மன்றத்திற்கும் இருக்கிறது. குறிப்பாக எனக்கும் இருக்கிறது. அதற்கு சில இடையூறுகள், சில அரசியல் தலையீடுகள் உருவாகின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது. அவைகளையும் மீறி இந்த நல்லப் பணியை நாம் தொடர சென்னை மாநகர மக்களுடைய ஒத்துழைப்பும் உதவியும் தேவை என்று நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

**சென்னை மாநகரம் தூய்மையாக இருப்பதற்கு ஒத்துழைப்பீர்**

அதுவரையிலே தூய்மைப்படுத்தப்படுகின்ற இடத்திலேகூட சில இடங்களில் தூய்மைப்படுத்தி விட்டுச் சென்ற அடுத்த நிமிடம் ஒருவர் ஒரு தாளை அங்கே போட்டுவிட்டு போவது, சிகரெட் பிடிப்பவர் சாலையில் சிகரெட்டைப் பிடித்துவிட்டு ஓரத்திலே கூட போடாமல் நடுச்சாலையிலே அதைப் போட்டுவிட்டு போவது போன்ற காட்சிகளை யெல்லாம் காண முடிகின்றது. நான் அவர்களுக்கு இரண்டாவது முறையாகச் சொல்கிறேன். நான் அடிக்கடி என் குரல் வளத்திற்காக விக்ஸ் வில்லையை வாயிலே போட்டு அதன் மூலம் தொண்டைக் கரகரப்பைக் குறைத்துக் கொள்வதுண்டு. நான் காரிலே செல்லும்போது கூட அந்த விக்ஸைப் பிரித்து வாயிலே போட்டுக் கொண்டு, பிரிக்கப்பட்ட தாளை காருக்குள் போடுவேன், இல்லாவிட்டால் சட்டைப்பைக்குள் போட்டுக் கொள்வேன். பலபேர் என்ன செய்கிறார்கள்? காரிலே இருந்து பார்த்தால் ஏதோ காற்றாடி விடுவதைப் போல காருக்குள்ளிருந்து தாளை வீசி எறிவதை காண முடிகிறது. அப்படி வீசியெறிப்படும் தாள் பல சேர்ந்தால் அதற்குப் பெயர்தான் குப்பை. அதைப்புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஒரு தாளைத்தானே போட்டோம். நாம் போட்டது ஒரேயொரு துண்டு தாள் தானே என்று எண்ணினால் இப்படி பல துண்டுத் தாள்கள் சேர்ந்தால் அது தூய்மையைக் கெடுத்துவிடும் என்பதை உணர வேண்டும்.

எனவே நாம் ஒவ்வொருவரும் சென்னை மாநகரம் தூய்மையாக இருப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். அந்த உணர்வு நமக்கெல்லாம் இருந்தாக வேண்டும் என்று நான் சென்னை மாநகர மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு சிங்காரச் சென்னையை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கிறோம். முழுமையான சிங்காரச் சென்னை இன்னமும் அமைந்துவிடவில்லை. அதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். அப்படி போகின்ற அந்தப் பயணத்திற்கு இடையூறு இல்லாமல் மாநகர மக்கள் மாநகராட்சி மேயருக்கும், மன்றத்திற்கும் உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொண்டு இந்த நல்ல விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

***– சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை – டி.டி.கே. சாலைச் சந்திப்பு டி.டி.கே. சாலை– சர்.சி.வி. இராமசாமி சாலைச் சந்திப்பு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட இரு மேம்பாலங்களை 12–8–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து.*** ★

# நாட்டுப்புறவியல் கூறுகள்

□ மு. இளங்கோவன்

தமிழ்மொழியின் சிறப்பினையும் தமிழர்களின் பெருமையினையும் தெரிவிக்கும் சான்றுகளாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கூத்துகள், விளையாட்டுகள், பாடல்கள், பண்பாட்டு மரபுகள், வாழ்வியல் நெறிகள், பொழுதுபோக்குகள் முதலானவற்றைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. சங்கப்பாடல்கள் என்பவை பல்வேறு புலவர்களால், பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டுள்ளன. இவற்றில் அந்தந்த மண்ணின் தொழில்கள், அடையாளங்கள் பதிய வைக்கப்பட்டுள்ளன. அக்கால மக்களின் வாய்மொழிவழி சங்க இலக்கியங்கள் பயிலப்பட்டமையால் "சங்கப்பாடல்களை வாய்மொழி இலக்கியங்கள்" எனக் கைலாசபதி குறிப்பிடுவார். இச்சங்கப் பாடல்களின் வழி அறியலாகும் நாட்டுப்புறவியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய முனைகின்றது.

சங்ககால மக்கள் நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாக வகுத்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் முதல், கரு, உரிப்பொருள்களை வரையறை செய்தனர். எனவே ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அடையாளங்கள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய இசையும், இசைக்கருவிகளும் தெரிய வருகின்றன. குறிஞ்சிப்பண், நெய்தற்பண், பாலையாழ், நெய்தற்பறை போன்ற ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியே இசைமரபும், இசைக்கருவிகளும் இருந்துள்ளன.

குறிஞ்சிநில மக்கள் தினைப்புனத்தில் கிளிகளை விரட்டிய போது பாடிய பாடலும், குரவைப்பாடலும், வேலனின் வெறியாட்டுப் பாடலும், வள்ளைப்பாடலும் (உலக்கை இடிக்கும்போது பாடுவது), முல்லைநில மக்கள் பாடிய குரவைப்பாடலும், பெண்டிர்கள் பாடிய பாட்லும் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. மேலும் மருதநிலத்தில் வாழ்ந்தவர்கள் பாடிய துணங்கைப்பாடலும், உழவுப்பாடலும், ராவண்டைப் பாடலும், நீர் இறைக்கும்போது பாடும் பாடலும் நெய்தல் நிலத்தில் பாடும் குரவைப்பாடலும், ஊசற்பாடலும் இவை போன்ற பிற பாடல்களும் நாட்டுப்புறச் சாயலில் முன்பு பாடப்பட்டுள்ளமைக்குப் பல சான்றுகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறவியல் செய்திகள் இடம் பெற்றுள்ளமை போன்று சங்க நூல்களுக்கு முந்தைய தொல்காப்பியத்திலும் நாட்டுப்புறவியல் குறித்த குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியர் எட்டுவகை வனப்புகளைப் பற்றி குறிப்பிடும் இடத்தில்,

**சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்**
**புலன் என மொழிப் புலனுணர்ந் தோரே.**

(தொல்)

என்று புலன் என்னும் வனப்பினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

வழக்குச் சொற்களால் தொடுக்கப்பட்டு, ஆராய வேண்டாமல் பொருள் விளங்குவது புலனெனும் செய்யுளாம் என்பது இளம்பூரணம். எனவே மக்களின் வழக்குச் சொற்களால் அமைந்து ஆடியும், பாடியும் மகிழத்தக்க நாடகத்தன்மை உள்ள பாடல்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வழங்கியிருக்க வேண்டும். மேலும் விடுகதை, பழமொழி முதலான வடிவங்கள் பற்றியும் தொல்காப்பியத்தில் குறிப்புகள் உள்ளன. மன்னன் உறங்குவதற்கு முன் பாடல்பாடி உறங்கவைக்கும் முறை இருந்துள்ளதை,

**கண்படை கண்ணிய கண்படை நிலையும்**

(பொருள், புற.29)

என்ற தொல்காப்பியம் நூற்பாவடி குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியத்தை அடுத்து எழுந்த சங்க இலக்கியங்களில் பல்வேறு நாட்டுப்புறவியல் சார்ந்த செய்திகள் செவ்வியல் தன்மை பெற்றுக் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் ஒப்பாரிக்கு நிகரான பாடல்கள் உள்ளன எனினும் ஒப்பாரி என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் இல்லை. கணவன் இறந்ததால் மனைவி புலம்புவது, மனைவியின் மறைவிற்குக் கணவன் புலம்புவது, தந்தையின் இறப்பிற்கு மகளிர் புலம்புவது, அரசன் மறைவிற்குப் புலவர் பாடுவது என்ற முறையில் சங்க இலக்கியங்களில் கையறுநிலைப் பாடல்கள் உள்ளன.

சங்க இலக்கியங்களில் அக்காலத்தில் நிலவிய பல்வேறு கூத்துகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றுள் குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு, வாட்கூத்து, கயிறாட்டம், உரற்கூத்து, பாவைக்கூத்து, கபாலக் கூத்துப் பற்றிய செய்திகள் குறிப்பிடத்தக்கன. இக்கூத்துகள் பற்றிய விரிவாக ஆராயும்போது இவை இசை, விளையாட்டுகளுடன் நெருங்கியத் தொடர்புகள் கொண்டுள்ளதையும், அக்கால மக்களின் வாழ்வியலில் இக்கூத்துகள் பெற்ற இடத்தினையும் அறிய முடிகின்றது.

**குரவைக் கூத்து**



குரவைக் கூத்து எழுவரேனும், ஒன்பதின்மரரேனும் கைகோர்த்தாடும் கூத்து என்றும், வரிகூத்தின் ஓருறுப்பு என்றும், விநோதக் கூத்து ஆறனுள் ஒன்று என்றும் கூறுவர். மலைநடனம் எனக் குரவைக் கூத்தினை அகராதிகள் குறிப்பிடுகின்றன.

குரவை நிகழ்த்துவது என்பதைக் குரவை அயர்தல், குரவை தூங்குதல், குரவை முனைதல், குரவை நிற்றல், குரவையோடொலித்தல், குரவை தழுஉதல் என்று சங்க இலக்கியங்கள் (புறம். 129; அகம்.232; அகம்.20; மகா.615; மகா.97; கலி.109) குறிப்பிடுகின்றன.

குரவைக்கூத்து என்பது குறிஞ்சி நிலமக்கள் நிகழ்த்தும் கூத்து என்பதைப் பரவலாகச் சங்க இலக்கியமும்,

சிலம்பும் குறிப்பிடுகின்றன. குரவை என்பது குழு நடனம் (கலி 104:69) எனவும், இசைப் பின்னணியுடன் ஆடுவது எனவும் (ம.கா.97), குரவையாடுதலில் பங்குகொள்வோர் ஒருவரையொருவர் தழுவிக்கொள்வர் எனவும் (ம.கா.614–615), குரவையாடுவோர் கள்குடித்து ஆடுவது உண்டு எனவும் (புறம்.129; மலை.320–323) குறிப்புகள் உள்ளன. இக்கூத்து மலையுச்சி, மணற்குன்று, மரநிழல் இவற்றினை இடமாகக் கொண்டு ஆடப்பட்டுள்ளது. வழிபாடு, பொழுதுபோக்கு, வெற்றியின் அறிகுறி என்ற நிலைகளில் குரவையாடுதல் நிகழ்ந்துள்ளது.

முல்லை நிலமக்கள் தெய்வ வழிபாட்டிற்கும், பொழுதுபோக்கிற்கும் குரவையாடியுள்ளனர். அவர்கள் நல்ல மணற்பரப்பில் குரவையாடியுள்ளனர். குரவைக் கூத்துச் சில மாற்றங்களுடன் இலங்கையில் நடத்தப்படுகிறது என்று அறிய முடிகின்றது (மேற்கோள் : ப.118, தமிழர் கூத்துகள்). குறவர் இனமக்கள் மூங்கில் குழாயில் விளைந்த தேறலை முகந்து, வேங்கை மரநிழலின் முன்றிலில் குரவை அயர்ந்துள்ளனர். கோசர், கள்ளின் தெளிவையுண்டு களிப்புற்று இனிய குரவையாடு மிடத்து இசை எழுப்புவர் (புறம் 376:7–9) எனவும், குறவர்கள் தம் சுற்றத்தினருடன் மூங்கிலில் விளைந்த தேனால் செய்த கள்தெளிவை உண்டு மகிழ்ந்து தொண்டகம் என்னும் சிறுபாறையின் ஒலிக்கேற்பக் குரவை அயர்வர் (முரு.194–197); எனவும், மகளிர் தம் கணவரது பரத்தமைத்தன்மையைப் பாடிக் காஞ்சி மரத்து நிழலில் குரவை ஆடுவர் எனவும் (அகம் 336–9) வரும் குறிப்புகள் குரவைக் கூத்தினைப் பற்றிய பல்வேறு செய்திகளைத் தெரிவிக்கின்றன. (குரவை எனும் சொல்லாட்சி குறித்து அறிய காண்க : ச.இ. பொருட்களஞ்சியம். பக்.390, 391, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு)

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குரவைக் கூத்து அக்காலச் சமூக மக்களின் பெரும் பான்மைக் கலைவடிவமாக இருந்துள்ளது. அரசன் முதல் அவன் நிழலில் உறையும் குடிமக்கள் வரை குரவைக் கூத்தினை அறிந்துள்ளனர் எனவும் அயல்தேசத்தினரும் இக்கூத்தினைக் கண்டும், பங்கு பெற்றும் உள்ளனர் என்பதும் தெரிய வருகின்றன. அரசன், படைவீரர்கள், குடிமக்கள் எனச் சமூகத்தின் பலதரப்பட்டவர்களும் இக் கூத்தினை ஆடியுள்ளனர். ஆண், பெண் இணைந்தும், பெண்கள் குழுவினராகவும், வீரர்கள் வெற்றிக்களிப்பாலும், தெய்வம் நினைந்தும் ஆடியுள்ளனர். எனவே சமூகத்தின் அனைத்து மக்களாலும் அறியப்பட்ட வடிவமாகக் குரவைக் கூத்து விளங்கியுள்ளது.



துணங்கைக் கூத்து

சங்க இலக்கியங்களில் துணங்கைக் கூத்து என்றொரு வகை குறிப் பிடப்படுகின்றது. மகளிர் நிகழ்த்தும் கலைவடிவம் இது. துணங்கைக் கூத்து இரவு நேரங்களில் நடைபெறும். முழவு இசைத்துத் துணங்கைக் கூத்தினை மக்கள் நடத்தியுள்ளனர். பேய்த்துணங்கை, போர்த்துணங்கை, மகளிர்த்துணங்கை எனும் மூவகைத் துணங்கைக் கூத்துகள் பற்றிச் சங்க



இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. துணங்கைக் கூத்து ஆரவாரம் மிக்கது எனவும், முன்பே பயிற்சி பெற்றவர்கள் இக்கூத்துகளில் பங்கேற்பர் எனவும் அறியமுடிகின்றது. பெண்கள் ஆடிய துணங்கைக் கூத்தினுக்குச் சேரலாதன் தலைக்கை கொடுத்தமைக்கு அவன் தலைவி ஊடினாள் (பதி.52:13:16) எனும் குறிப்பினையும் காணமுடிகின்றது. மேலும் பரத்தையர் ஆடும் துணங்கைக் கூத்தின்போது தலைக்கைகொடுத்த தலைவனின் நீல ஆடை பரத்தையின் சிலம்பில் சிக்கிக் கிழிந்ததைக் கலித் தொகைக் குறிப்பு (கலி 73:16–17) வழி அறிய முடிகின்றது.

துணங்கைக் கூத்து என்பது பெண்கள் ஆடுவதாகவும், ஆணும் பெண்ணும் இணைந்து ஆடுவதாகவும், போர் வீரர்கள் ஆடுவதாகவும், பேய்கள் ஆடுவதாகவும் (முருகு.51, 56; பெரு.234, 235) குறைத்தலைப்பிணம் எழுந்து நின்று ஆடுவதாகவும் (மது.25–27) சங்க இலக்கியங்கள் குறிப்புகளைத் தருகின்றன. மேலும் தலைவன் குழை, கோதை, பைந்தொடிகளை அணிந்தவனாய் விழாக் காலத்துத் துணங்கை யாடினான் (நற்.50:2,3) எனவும் குறிப்பு உள்ளது. எனவே சங்ககாலச் சமுதாயத்தினர் அனைவராலும் பல்வேறு சூழல்களில் துணங்கைக் கூத்து ஆடப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

**ஆரியக் கூத்து (கழைக்கூத்து)**

சங்க இலக்கியங்களில் ஆரியக் கூத்து எனும் கலைவடிவை மக்கள் பயன்படுத்தியுள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. கழாய்க் கூத்து அல்லது கயிறாட்டம் எனவும் இதனைக் குறிப்பிடுவர். ஆரியக் கூத்து எனும் கயிறாட்டம் பற்றி,

**கழைபாடு இரங்கப் பல்இயம் கறங்க**
**ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று**

(நற்.95 1 :1–2)

என்று நற்றிணை விளக்குகிறது. கயிற்றின்மீது தாளத்திற்கேற்ப நிகழும் நடனம் இது என்பதை இச்சான்றின் வழி அறியமுடிகிறது. கழைக்கூத்து ஆடுவது எளிதான செயல் அன்று. கருவிகளின் இசைக்கேற்ப இரு புறங்களில் நடப்பட்ட மூங்கிலின் மீது கட்டப்பட்ட கயிற்றின் மீது மெல்ல நடந்து ஆடுவது கழைக்கூத்து ஆகும். இதனை அழகிய ஓர் உவமை வழிச் சங்கப்புலவர் குறிப்பிடு கின்றார். இனிய கள்ளினை நீரென்று உண்ட மயில் தடுமாறுவதைப் போல் ஆசிரியர் தள்ளாடுவர் என்பதை,



**நீர்செத் தயின்ற தோகை**
**வியலூர்ச்**
**சாறுகொ ளாங்கண்**
**விழவுக்கள நந்தி**
**அரிக்கூட்டு இன்இயம்**
**கறங்க ஆடுமகள்**
**கயிறூர் பாணியிற் றளரும்**

(கு.பா.191–194)

என வரும் பாடலடிகள் உணர்த்தும்.

ஆரியக் கூத்து நிகழும் போது பல்வேறு இசைக் கருவிகள் தாளநயத்துடன் இசைக்கப்படும் என்பதையும், அவை

வாகைநெற்றுகள் காற்றிலாடி ஒலிப்பதுபோல் இருக்கும் எனவும் (குறுந்.7:3–15) இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஆரியக் கூத்திற்குக் கழையும், கயிறும் மிகவும் தேவையானவை என்பதும், இவை குறிஞ்சி நிலக் கருப்பொருள்கள் என்பதும் சிந்திக்கத்தக்கன.



**உரற்கூத்து**

உரற்கூத்து என்னும் ஒருவகைக் கூத்து சங்க காலத்தில் நிகழ்த்தப் பட்டுள்ளது. இது உரலைக் கட்டித் தொங்கவிட்டு ஆடும் ஆட்டமாக அறியமுடிகின்றது.

**துனைஅரைச் சீறுரல் தூங்கத் தூக்கி**
**நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த**
*(பெரும் : 54–55)*

எனும் குறிப்பின் வழி பெண்கள் உரற்கூத்தினை நிகழ்த்துவர் என்பது புலனாகின்றது. இக்கூத்து நிகழ்த்தப்படும்போது இசைக் கருவிகள் வாசிக்கப்படுவதும் (பெரும் 55–56), வீட்டு முன்றில்களில் சென்று இக் கூத்து நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகின்றன.

**வெறியாட்டு**

சங்க இலக்கியங்களில் வெறியாட்டுக் குறித்த செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சமுதாயத்தில் பெரும்பான்மை மக்களிடம் வெறியாட்டு நிகழ்த்தும் மரபு இருந்துள்ளது. இவ்வழக்கத்தினை வெறியாட்டுக் கூத்து என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பிற வகைக் கூத்துகளிலிருந்து இது வேறுபட்டு நிற்கின்றது. தலைவனை நினைத்து வருந்தும் பெண்டிர் உடல்மெலிவுற்ற காலத்தில் வேலன் (முருகன் அருள்பெற்றவன்) வெறியாட்டு நிகழ்த்துவதாகச் செய்திகள் இடம்பெறுகின்றன. வெறியாட்டுக் கூத்தில் ஒருவரே ஈடுபடுவர். ஆடவரும், பெண்டிரும் இக்கூத்தில் ஈடுபட்டுள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. வெறியாட்டு என்பது குறிஞ்சிக்கடவுள் முருகனைத் தருவித்து ஆடுவது ஆகும். வெறியாட்டு நிகழ்வு, காலம், வெறியாடுவோரின் மனநிலை, வெறியாட்டத்தின்போது பயன்படுத்தப்படும் பொருள்கள் முதலியன பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

வெறியாடும் இடம் மிகுந்த பரப்பினைக் கொண்டிருக்க வேண்டும் (அகம் 98:17) எனவும், அழகுபடுத்தப்பட்டிருக்கும் (அகம் 22:8–1) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆட்டினது கழுத்தை அறுத்து அதன் உதிரத்தைச் சிந்தி களம் முழுவதும் தினைக்கதிரைப் பரப்பி வைப்பது வெறிகளம் புனைவதின் முதன்நிலை என்பதை, 'மறிக்குறள் அறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்' (குறுந்–263:1) எனும் பாடலடி உணர்த்தும். வெறியாட்டுக்களம் அச்சம் தருவதாகக் காணப்படும். தூய்மையற்ற மகளிர் வெறியாட்டு இடங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்துள்ளனர். வெறியாடல் என்பது மயிலின் ஆடலுடனும், கன்றின் துள்ளலுடனும் ஒத்துள்ளதாகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும்.

**கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**

*(குறுந்:105:2–4)*

**முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத்**
**தாவுபு தெறிக்கும் ஆன்**

*(புறம்.259,5–6)*

எனும் அடிகள் இதனை மெய்ப்பிக்கும். சங்க காலத்தில் நிலவிய பிறவகைக் கூத்துகளுக்கு இல்லாத தனிப்பண்பாக வெறியாடுவோரின் உணர்வு வயப்பட்ட நிலையினைச் சுட்டலாம்.

இக்கூத்துகளைத் தவிரப் பாவைக்கூத்து, வாளமலைக்கூத்து, துடிக்கூத்து முதலான புறத்துறை சார்ந்த கூத்துகள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. கொடுகொட்டி (கலி.கடவுள் வாழ்த்து), பாண்டரங்கம் (கலி.கடவுள்), கபாலக்கூத்து (கலி. கடவுள்) முதலான இறைநெறி சார்ந்த கூத்துகள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன.

**விளையாட்டுகள்**

சிற்றூர்ப்புற மக்களின் வழக்கில் இருந்த பல்வேறு விளையாட்டுகள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான விளையாட்டுகள் மகளிர் விளையாடுவனவாக உள்ளன. அடுத்துச் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன. விளையாட்டுக்களம் – விளையாடுபவர்கள் – விளையாட்டும் காலம் – விளையாடும் கருவிகள் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன. புனலாடுதல், கழங்காடுதல் முதலான விளையாட்டுகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. நீர் விளையாட்டில் மகளிர் தம் தோழியருடனும், காதலனுடனும் விளையாடுவர். சுனை, அருவி (புறம் 251:4), கடல் (புறம் 339:4) என மூன்று நிலைகளில் புனல் விளையாட்டு இருந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. புனல்விளையாட்டின்போது பெண்கள் மெல்லிய ஆடைகளை அணிந்து நீராடியதைப் பரிபாடல் (பரி.10:9–10) குறிப்பிடும். இதுபோல் நீருடன் தொடர்புடைய வண்டல் அயர்தல் (வண்டல் விளையாட்டு, அகம் 320:11–13) எனும் விளையாட்டினைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. மேலும் நீர்நிலைகளுடன் தொடர்புடைய நண்டுபிடித்து விளையாடும் (அலவனாட்டு) விளையாட்டும் உண்டு. நண்டு பிறந்ததும் தாய் நண்டு இறந்துவிடும் என்ற குறிப்பினைத்,

**தாய்சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு**
**பிள்ளை தின்று முதலைத்து அவன்ஊர்**

*(ஐங்.24:1–2)*

எனும் பாடலடி தெரிவிக்கின்றது.

**அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்த**

*(நற்.363:10)*

எனும் பாடலடி அலவனாட்டினைப் பற்றித் தெரிவிக்கின்றது.

செம்முதாலாட்டு என்னும் பெயரில் ஒரு விளையாட்டு இருந்துள்ளது. செம்முதாய் என்பது தம்பலப்பூச்சி ஆகும். பட்டுப்பூச்சி என்றும் இதனை அழைப்பது உண்டு. இதனைப் பிடித்துப் பெண்கள் விளையாடியுள்ளனர் (நற்.362:5–6). மேலும் பூவில் உறையும் வண்டுகளைப் பிடித்து விளையாடும் வழக்கம் இருந்துள்ளதையும் அறிய முடிகின்றது (நற்.27:1–2).

சங்க இலக்கியங்களில் சிறப்பிடம் பெறும் விளையாட்டுப் பாவை விளையாட்டு ஆகும். வண்டல் மணல்களில் பாவை செய்து விளையாடுவதைப் பாவை விளையாட்டு என்பர். 'வண்டல் பாவை சிதைஇய வந்து' (அகம் 320:11–13) எனும் அடி இதனை மெய்ப்பிக்கும். புல்லினால் பாவை செய்யும் மரபும் அக்காலத்தில் நிலவியுள்ளது.

பந்தாடுதல் சங்க காலத்தில் இருந்துள்ளது. இது மகளிர் விளையாடும் விளையாட்டு ஆகும். 'பந்தாடு மகளிரிற் படர்தரும்' (ஐங்.295:5) எனும் குறிப்பு இதனைத் தெரிவிக்கும். இல்லங்களில் இருந்த பெண்கள் கழங்காய்களைக் குழியில் இட்டு ஆடியுள்ளனர். கழங்கினை இடும் குழிகள் அறை எனப்படும் (நற்.76:3). மேலும் ஊசல், வள்ளைப்பாட்டு முதலான விளையாட்டுகளும் இருந்துள்ளன்.

இளைஞர்கள் ஏறு தழுவுதலையும் (கலி.103:63–64) மல்லாடலையும் (புறம்.80) விளையாட்டாக மேற்கொண்டிருந்தனர். முதியவர்கள் வல்லு என்னும் விளையாட்டினை ஆடியதை,

**நரைதோளர் அதிர்தலை இறக்கி**
**கவை மனத்து இருத்தும் வல்லு**

*(அகம்.377:7–8)*

எனும் பாடலடிகள் சுட்டும்.

சிறுவர்கள் விளையாடிய வட்டாட்டமும் (நற்.3:3–4) கிலுகிலியாட்டும் (கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலியாடும் – சிறுபா.61), தழூஉ விளையாட்டும் (கலி.83:3) பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

*நன்றி : சங்க இலக்கியம்*
*வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

★ ★ ★

# சிதைவு

• ஆர். வெங்கடேஷ்

59 ஆம் நம்பர் வீட்டுக்குப் போய் வாடகை வசூலித்து வரச் சொல்லியிருந்தாள் அம்மா.

எங்கள் வீட்டில் யார் படிப்பை முடித்துவிட்டு வேலைக்குக் காத்திருந்தாலும், அனுதினமும் பல்வேறு தினசரிகளைப் பார்த்து, இணக்கமாய் சுருக்கமாய் வேலை கோரி விண்ணப்பங்கள் போடுவதோடு, சில கடமைகள் மற்றும் பணிகளை ஏற்றே தீரவேண்டும். அதில் இந்த வாடகை வசூலும் ஒன்று.

மற்றவைகளில் முக்கியமானவை; விடிகாலை எழுந்து குளித்துவிடவேண்டும். பவ்யமாய் சுவாமி படத்தின்முன் நின்று 'நல்ல எதிர்காலம் கொடு தெய்வமே' என்று சில பதிகங்களை ஒப்புவித்து விட்டு, வேண்டிக்கொள்ளவேண்டும். அப்புறம் ஒரு மிடறு காப்பியைக் குடித்துவிட்டு சமர்த்துப்பிள்ளையாய் மரக்கடைக்குப் போய்விடவேண்டும்.

இதெல்லாம் செய்யவில்லையென்றால், இரண்டு விஷயங்கள் நடைபெறும். முதலில் வேலையற்றுத் தூங்கும் சோம்பேறிப் பட்டம். மற்றொன்று, வீட்டுக்கு வருகிற போகிறவர்களிடம் எல்லாம் அம்மா, ''எங்க ராஜு படிச்சுட்டு வேலை இல்லாம கெடக்கறான், பாவம் ஏதாவது வேலை இருந்தா சொல்லுங்களேன்'' என்று குரல் தாழ்த்திக் கெஞ்சுவாள். இல்லாத பச்சாதாபமெல்லாம் சுற்றிக்கொள்ளும். படுத்தால் எதிர்காலமே இருட்டாய்த் தெரியும். கனவுகளில் ஒரு எச்சையிலை காற்றில் பறந்துகொண்டேயிருக்கும்.

இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால், இந்த இடைப்பட்ட காலத்தில் அதிபயங்கர உற்சாகியாய் இருந்து விடவேண்டும். தப்பித்தவறி சோகம் எங்கும் தட்டுப்பட்டுவிடக்கூடாது. இதற்கும் அம்மா, ''அவனால முடிஞ்சவரைக்கும் ஆக்டிவாத்தான் இருக்கான். பாவம், நல்ல வேலை கெடைக்கணும்'' என்பாள்.

ஆனால், தேவையில்லாமல் சில பைத்தியக்காரத் தனங்கள் இப்போதுதான் தோன்றும். அதிகமாகச் சாப்பிடப் பிடிக்காது. உரிமையாய் எதையும் கேட்கப் பிடிக்காது. நானே துவைக்கிறேன் பேர்வழியென்று பழுப்பு வேட்டியோடு வலம் வருதல், யாராவது சும்மாயிருக்கிறேன் என்று சொல்லிவிடுவார்களோ என்று வீட்டை ஒட்டடை அடிப்பது, கறிகாய் வாங்குவது, மின்சாரக் கட்டணம் செலுத்துவது என்று ஓடியாடுவது, இறுதியாய், எல்லாரும் தூங்கின பின் தூங்குவது.

இவற்றில் எல்லாவற்றையுமோ அல்லது ஒரு சிலவற்றையோ என் அண்ணாக்கள் செய்து நான் பார்த்திருக்கிறேன். இப்போது என் முறை. பொறியியலின் கடைசி செமஸ்டர் ரிசல்ட் இன்னும் வரவில்லை. எழுதிவிட்டு வெளிவந்தவுடனே தொண்டையை அடைக்கத் தொடங்கிவிட்டது. என்னதான் அப்பாவுக்குச் சொந்த மரக்கடை உண்டென்றாலும் அது என் சொத்தில்லை. நானே உழைத்து முன்னுக்கு வரவேண்டும்.

அண்ணாக்கள் எல்லாம் நன்றாக இருக்கிறார்கள். நான் மட்டும் குடும்பத்தைக் கெடுக்க வந்தக் கோடாரி காம்பாகி விடக்கூடாது. இப்படி என்னென்னவோ பயம். வீட்டுக்கு வந்தவுடன், வழக்கம்போல் அம்மா சாதம் போட்டுக் கொண்டே மூன்றாவதுவீட்டு பவ்யாவுக்கு எல்.ஐ.சி.யில் வேலை கிடைத்துவிட்டதைச் சொன்னாள்.

''மேல என்ன படிக்கணுமோ படி. எல்லாம் நான் பாத்துக்கறேன். கடைக்கெல்லாம் வராத'' என்றார் அப்பா. எதுவும் காதில் விழாதவனாய் மறுநாளிலிருந்து அண்ணாக்களின் வழியில் நானும் கடைக்குப் போனேன்.

அப்போதுதான் இந்த வாடகை வசூலும் வந்தது.

''அந்த ஆள் இந்த மாசம் வாடக குடுத்தாணாப்பா?''

ஒருநாள் மதியம் சாதம் போட்டுக்கொண்டே அம்மா கேட்டாள். இந்த ஆள் என்பது 59ஆம் நம்பர் வீட்டில் பல்லாண்டுகளாய்க் குடியிருக்கும் செல்லப்பாவைக் குறிக்கும்.

''தெரியலம்மா''.

''நிச்சயமா குடுத்திருக்க மாட்டான் பாரு. இன்னிக்குப் பதினேழு தேதியாறது. நாலு மாசம் பாக்கி. உங்கப்பா ஏதாவது பண்ணாரா? ஒண்ணும் பண்ணியிருக்க மாட்டாரே''.

நான் வெறுமனே சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்தச் செல்லப்பா பிரச்சினை கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றிய பிரச்சினையாயிருக்க வேண்டும். எனக்குத் தெரிந்து எல்லா அண்ணாக்களும் போய் வாடகை வசூல் செய்திருக்கிறார்கள்.

அவராய் வந்து வாடகை கொடுத்த சரித்திரமேயில்லை. எப்போதும் ஒரு மூன்று நான்கு மாத வாடகை பாக்கி இருந்துகொண்டே இருந்திருக்கின்றது. அதுவும் பிசாத்து வாடகை. முன்னூறு ரூபாய். சென்னை மாநகரின் மையமான சூளைப் பகுதியில் இவ்வளவு குறைவான வாடகை என்றால் யாரும் சிரிக்காமல் இருக்கமாட்டார்கள்.



ஆனால், இதில் சில புரியாத அம்சங்கள் உண்டு. எதற்குச் செல்லப்பாவையே இத்தனை ஆண்டுகள் அதில் குடியிருக்க விடவேண்டும்? அதுவும் வாடகை ஏற்றாமல்? அம்மா சத்தம் போடுவாளே தவிர, மேற்கொண்டு எதுவும் செய்ததாய் தெரியவில்லை.

''சரி, இப்ப என்ன பண்ணணுங்கற?''

''நேரா, அந்த வீட்டுக்குப் போ, அந்த ஆள் இருக்காண பாரு. நறுக்குன்னு நாலு வார்த்தை கேளு. வாடகைய வாங்கிட்டு வா. ஏதாவது ஜாஸ்தி பேசினா, வீட்ட காலி பண்ணிட சொல்லு. வேறு ஆள் பார்த்துக்கலாம்''.

நான் கைகழுவ எழுந்துகொண்டேன். இதில் இருக்கும் மடத்தனம் எரிச்சல் ஏற்படுத்தியது. ஒருவன் சரியாய் வாடகை கொடுப்பதில்லை. இழுத்தடிக்கறான். அப்புறமும் ஏன் அவனையே இருக்கவிட வேண்டும்? இன்றைய தேதிக்கு அதை அப்படியே வேறொருவருக்குக் கொடுத்தாலும் ஆயிரக்கணக்கில் வாடகை வரும். பெரிய வீடு. பழங்காலத்துப் பாணி.

நாங்களெல்லாம் பிறந்தது அங்கே தான். பக்கத்திலேயே அப்பாவுக்குக் கடை. சைடாம்ஸ் ரோடு.

நான் பிறந்தபின், கடையில் நல்ல முன்னேற்றம். அப்புறம்தான் இந்த பெசன்ட் நகர் வீடு. சூளை வீட்டை, இன்னொரு மரக்கடையில் கணக்கெழுதும் செல்லப்பாவுக்கு, அப்பா வாடகைக்கு விட்டார். அவர் வாடகைக்கு வந்து, என் வயதாகும். வாடகையை இழுத்தடிக்கும் பாணிக்கும் என் வயதாகலாம்.

அசமந்தமாய் வியாபாரம், மணி நான்கு. யாரையும் காணோம். அப்பா வெளியே போயிருந்தார். முதலில், கடைக்கு வரவேண்டா மென்றவர், நான் வரத் தொடங்கியதும், எனக்கும் ஒரு மேஜை நாற்காலி போடச் சொல்லியிருந்தார். அதுவும் மிகக் கவனமாய், எவ்வகையிலும், நான் அவர் மகன் என்ற உரிமை

ஏற்பட்டுவிடாதபடி, அவரது இருக்கைக்கு வெகுதொலைவில் கடை. ஊழியர்களின் அருகே, ஆனால் என் ஓவ்வொரு அசைவும், அவரது பார்வையில் படும்படி.

மற்றவர்கள் சோம்பலாய் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வந்த கொஞ்ச நாளிலேயே தெரிந்து கொண்ட விஷயம்; இது சுறுசுறுப்பான உத்யோகமில்லை. வீடு கட்டுபவர்களோ, காண்ட்ராக்டர்களோ, மேஸ்திரிகளோ வந்தால்தான் வியாபாரம். வருபவர்களுக்கு மரம் பிடிக்க வேண்டும். விலை படிய வேண்டும். அவர்களுக்கு ஏற்ற சைஸ் இருந்தால் பிரச்சினையில்லை. வினோத சைஸ்களுக்கு, புதிதாய் மரம் அறுக்க வேண்டும். பணம் புரளுமே தவிர, உற்சாகம் புரளாது. இதனால்தான், அண்ணாக்கள் இங்கே தாக்குப்பிடிக்க முடியவில்லையோ, என்னவோ!

சூளை வீட்டைப் போய் பார்க்கலாம் என்று கிளம்பிய போது, ராமானுஜன் அண்ணாவின் போன் வந்தது.

''அப்பா இருக்காராடா?''

''வெளியே போயிருக்கார். வந்துடுவார். என்ன விஷயம்?''

''ஓண்ணுமில்ல சும்மாதான். நீ என்ன பண்ற?''

''சூளை வீட்டு வரைக்கும் போகலாம்னு கெளம்பிண்டிருந்தேன். நீ போன் பண்ண''.

''என்ன, வாடகை வசூலா? பெஸ்ட் ஆப் லக், போயிட்டு வா''

பதில் எள்ளலும், நமுட்டுச் சிரிப்புமாய்த் தெரிந்தது. போனை வைத்துவிட்டு, கடை ஊழியர்களிடம் சொல்லிவிட்டு, வெளியே நடக்கத் தொடங்கினேன்.

அந்த வீட்டை அடைந்தபொழுது, இரண்டு விஷயங்கள் உறுத்தின. கோபமாய்க்கூட வந்தது.

வெளிச்சுவரில் இரண்டு மூன்று செடிகள் இலைவிட்டுப் பரவியிருந்தன. உள்ளே நுழைந்தால், கழிவறை நாற்றம் சகிக்க முடியவில்லை.

முதலில் எதிர்ப்பட்டது, அந்த ஆள்தான். நட்சத்திரங்கள் சிதறிய முழுக்கை பனியன். மக்கில் தண்ணீர் எடுத்து, காலைக் கழுவிக்கொண்டார். திரும்பிப் பார்த்தவருக்குச் சின்ன ஆச்சரியம் முகத்தில்.

''ராஜுவாப்பா நீ?''

ஆமாமென்பது போல தலையசைக்க,

''வா, வா, எவ்வளவு சின்னப் பையனா பார்த்தது உன்ன. இப்ப என்ன பண்ணிண்டு இருக்க, வாப்பா''.

அவர் வேட்டியை இறக்கி விட்டுக்கொண்டு கூடத்திற்குள் நகர, அங்கே பாயைச் சுருட்டிக்கொண்டு ஒரு பெண் சட்டென எழுந்தது. நான் கூடத்திற்குள் போக, அப்பெண் சாவதானமாய் பார்த்துவிட்டு, ரேழிப் பக்கம் போனது.

''என்னப்பா, இவ்ளோ தூரம்! அம்மா எப்படி இருக்கா?''

எங்கே இதற்கெல்லாம் பதில் சொன்னால், என் கோபம் கழன்றுவிடுமோ என்று எண்ணியவாறு பதில் சொல்லாமல் இருந்தேன். பின் சட்டென,

''அந்த வாசல் செடியையெல்லாம் கொஞ்சம் புடுங்கிப் போடக்கூடாதா சார்?'' என்றேன் நான்.

அவர் முகத்தில் யோசனை ரேகை.

''எங்கேயிருக்கு செடி?''

''செடி மொளைச்சிருக்கறதுகூட உங்களுக்குத் தெரியலையா?''

என் குரலின் கடுமை அவரைத் தாக்கியிருக்க வேண்டும்.

''இல்லப்பா, எனக்குக் கொஞ்ச நாளா கண்ணு சரியாத் தெரியல. அதான்'' என்று சிநேகமாகப் புன்னகைத்தார். பின்னால், கதவுக்கு பக்கத்தில் ஒரு மாமியும் பெண்ணும் நின்றிருந்தார்கள்.

''நம்ம ராஜு தெரியறதா. வீட்டுக்கார மாமா கடைசி பிள்ளை'' அவர்தான்.

''தெரியாம என்ன. அவா வீட்ல எல்லார் சாயலும் ஒரே மாதிரிதானே இருக்கும்''.

''காபி கொண்டாயேன்''

''இந்தச் சாக்கடை ஒரு நாத்தமாக நாறறதே. ஏதாவது பண்ணக்கூடாதா?'' நான்.

''நாத்தமா....'' என்றவர் யோசிப்பது போலிருந்தது. பின், ''இங்கே சாக்கடை அப்பப்போ அடைச்சுக்கும். குப்பகாரன் வந்து குத்திவிடுவான். நான் திருப்பிப் பண்ண சொல்றேன்'' என்றவர் மீண்டும் பின்புறம் திரும்பி ''நாறறதா?'' என்று அப்பெண்ணிடம் கேட்டார். அவள் அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் என்னையே பார்த்திருந்தாள்.

மேலே என்ன பேசுவதென்பது எனக்குத் தெரியவில்லை. கோபத்தை அப்படியே தக்கவைத்துக் கொள்ளவும் முடியவில்லை. இரண்டு மூன்று விஷயங்கள் அன்னியமாயும் உணரவைத்தன. முதலில் இது என் வீடில்லை. அப்பா வீடு. அவர் வைத்துள்ள ஒரு குடித்தனக்காரரிடம் போய் அதிகாரம் பண்ணுவது அநாகரிகம். பேசவே வந்திருக்கக்கூடாது. இந்த வீடு இந்த நிலைமைக்கு வந்திருப்பதற்கு, அப்பாவும் காரணம். அதற்கு இவரைப் போய் குற்றம் காண்பது சரியில்லை. அதற்கப்புறம், இந்த வீட்டின் கோலத்தையும் நிலைமையும் பார்த்தபின்னால் பேசவே மனம் வரவில்லை.

மாமி காபி கொண்டு வந்தாள். பால் அதிகமில்லை. கடைசியில் காப்பித்தூள் நாக்கில் உறுத்தியது. டபரா, டம்ளரைக் கீழே வைக்கப் போனபோது, மாமி வாங்கி



கொண்டாள். கூடவே, ''வாடக வாங்க வந்தேளா?'' என்றாள்.

ஆமாம் என்பதுபோல் தலையாட்ட, மாமி முகத்தில் சின்ன புன்னகை.

''நானே. இவர்கிட்ட சொல்லிண்டிருந்தேன், போய் குடுத்துடுங்கோன்னு. இவரும் இதோ போறேன், அதோ போறேன்னார். போகலியா நீங்க?''

''கடையேதான் பெருந்தொல்லையாயிருக்கே. எங்கே போக முடியுது?



இத்தனைக்கும் நாளஞ்சு கடை தள்ளி தான் இவர் கடை. போக முடியலையே''.

நான் யதார்த்தமாய் தலையாட்டிக் கொண்டிருந்தேன்.

''சரி, இப்பவேண்ணா குடுங்க. நான் வாங்கிண்டு போறேன்'' என்றேன் நான்.

''இல்ல. என்னத்தான் வாங்கிண்டு வரச்சொல்லியிருக்காங்க''.

என்னையறியாமல், என் குரூரம் வெளிப்பட்டது. பிடிவாதமும்.

''நான் நார்மலா அப்பாகிட்டதான் குடுக்கறது. அப்படியே கொஞ்ச நேரம் பேசிண்டு இருப்போம்''.

அவர் அந்த மாமியைப் பார்த்தார். மாமி முகத்தில் கலவரம் போல் என்னவோ. சட்டென அங்கே ஒரு மௌனம் கவிழ்வதை என்னால் உணர முடிந்தது. கதவோரம் நின்றிருந்த பெண்தான் பேசியது.

''நேத்து பத்மா வாயிண்டு போயிட்டாப்பா. நீங்க தானே கொடுத்தீங்க...''

அவர் முகத்தில் அசட்டுச் சிரிப்பு. ''நான் அப்பாகிட்ட குடுத்துடறேனப்பா. நீ ஏன் பாவம் இவ்ளோ தூரம் வரணும்''.

''சரி, பரவாயில்லை. எங்கிட்டயே குடுத்துடுங்க. நான் அப்பாகிட்ட சொல்லிடறேன்''.

என்னவென்று தெரியாமல், என்னுள் ஓர் மூர்க்கம். ஸ்டூலில் இன்னும் நன்றாய் உட்கார்ந்துகொண்டேன். மனதுக்குள் என்னென்னவோ கேள்விகள், கோபங்கள், ஏமாற்றுகிறவர்கள் என்று மட்டும் உறைத்தது. இன்று விடப் போவதில்லை. என்னவானாலும் பரவாயில்லை. நாலு வார்த்தை கேட்டுவிட வேண்டியதுதான்.

''எங்க பொண்ணு வீட்டுல ஒரு அவசரம். நேத்து வந்து கேட்டா. அவ மாமனார ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்காளாம். அதுக்குத்தான் இத தூக்கி குடுத்துட்டோம். நான் எவ்ளோ...''

மாமி பேச்சைக் கேட்கப் பிடிக்கவில்லை.

''எனக்கு அதெல்லாம் வேணாம் மாமி. வாடகை குடுங்கோ. இல்ல வீட்ட காலி பண்ணுங்கோ. நான் எங்கப்பா மாதிரி ஏமார்றதா இல்ல. ஏதாவது ஒண்ணு கிளியரா சொல்லிடுங்கோ''.

''இப்படி திடுதிடுப்புன்னு வந்து வாடகைய குடுன்னா, நாங்க வெச்சிண்டு காத்திருக்க முடியுமான்னா? நீங்க இன்னிக்கு வருவீங்கன்னு யாருக்குத் தெரியும்?''

கதவோரம் நின்றிருந்த பெண்தான் விலுக்கென முன்னால் வந்து பேசியது.

''ஆனா, மாசாமாசம் வாடகை குடுக்கணும்னு தெரியுமில்லயா? இந்த மாசத்தோட சேர்த்து நீங்க நாலு மாசம் பாக்கி. அது தெரியுமா? வருவீங்கன்னு தெரியுமான்னு கேக்கறீங்களே, நீங்க ஒழுங்கா வாடகை இன்ன தேதியில குடுக்கறேன்னு சொல்ல வேண்டியதுதானே. அதுக்கு வக்கில்ல''.

படபடவென பொறிந்துவிட்டேன். மாமி பெண்ணின் கையைப் பிடித்து

அமுக்க, அவர் தலை கவிழ்ந்து கொண்டிருந்தார். பின் தலை நிமிர்ந்தவர் நெற்றியில் சுருக்கங்கள், கண்களில் இருட்டு.

''நீங்க வாடகை வாங்கறதவிட, சண்டை போடதான் வந்திருக்கேள் போலிருக்கு'' என்றார்.

''நீங்க ஒழுங்கா வாடகைய குடுத்தா, நான் ஏன் சண்ட போடறேன்?'' கொஞ்சம் மூச்சு வாங்கிவிட்டு,

''எனக்கு ஒண்ணும் உங்களோட சண்டை போடணும் ஆசையில்ல சார். நீங்கதான் சண்டை கிண்டையினு எல்லாம் பெரிய வார்த்தைய சொல்றீங்க'' என்றேன்.

''ஆமா, நீ பேசினது சண்ட போடற மாதிரிதான் இருக்கு. அதுவும் அந்தச் சின்ன பொண்ணுகிட்ட போய் கத்தற. நாங்க பெரியவரா எல்லாம் இங்க பேசிண்டிருக்கும் போது, அதுகிட்ட போய் கத்தினா என்ன அர்த்தம்?''

''யார்? உங்க பொண்ணு தான் மொதல்ல கத்தினா. நானா கத்தினேன். நான் பதில்தான் சொன்னேன். நான் வீட்டுக்காரன். வாடகைய கேக்கறேன். எனக்கு வாடகை வேணும். அவ்வளவுதான்''.

வாடகை வாங்காமல் கிளம்புவதில்லை. என்னவானாலும் பரவாயில்லை. அவர் முகத்தில் கவலை போன்ற சாயல்.

பின் சட்டென வீராப்புடன் அவர் எழுந்துகொண்டார்.

''வாடகைய தர முடியாது. என்ன பண்ணுவியோ பண்ணிக்க போ...போ.''

இந்த பதில் எதிர்பார்த்ததல்ல. ஜிவ்வென இரத்தம் தலைக்கேற எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. லேசாய் கை உதறியது.

அவர் அலட்சியமாக அடுத்த அறைக்குப் போக, மாமி மட்டும் மிரண்டு போயிருந்தாள். அப்பெண்ணும் சமையலறைக்குள் நுழைய மாமி,

''கோச்சுக்காதப்ப. அவருக்கு முன்கோபம் ஜாஸ்தி...'' என்றபடி அவசரமாய் முன்னால் வர, என்னுள் அவமானமும் கோபமும் கனன்றது. எதுவும் சொல்லாமல் விறுவிறுவென வெளியே வந்தேன்.

இத்தோடு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டேன்.

கடைக்கு வந்தவுடன், முதல் காரியமாய் அம்மாவுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னேன். அம்மா அசந்து போனாள். ''அப்படியாடா சொன்னான், அப்படியாடா சொன்னான்'' என்று புலம்பிவிட்டாள். அந்த க்ஷணமே ஏதாவது செய்துவிட வேண்டுமென்று துடித்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. இதை எப்படி அணுகுவது என்றும் தெரியவில்லை. இப்போது நடந்துகொண்ட முறையும் சரியாயென்று தெரியவில்லை.

ஆனால், எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு. உடல் பரபரத்தது. என்னதான் பெரியவர், தெரிந்தவர் என்றாலும் வாடகை தரமுடியாது என்று சொல்ல முடியுமா? என்ன நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும். இவர்களை வெளியேற்றுவது ஒன்றே சிறந்த வழி. மீண்டும் போய் நிற்பது பைத்தியக்காரத்தனம்.

புத்தி சுறுசுறுப்பானது: உடனே பன்னீர் ஞாபகம் வந்தான். போலீசில் என்னவோ உயர் பதவி. அண்ணாவின் நண்பன். கடகடவென அவன் எண்ணைத் தேடி தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது,

''என்ன விஷயம்'' என்றான்.

''வீடுதான். காலி பண்ணமாட்டேங்கறாங்க''.

''அப்புறம்''

அப்புறம் என்ன சொல்வது? வீடு காலி செய்யாதது அவ்வளவு பெரிய விஷயமில்லையா?

''ஏதாவது பணம் எதிர்பார்ப்பான். கொடுத்து அனுப்பிச்சுடுங்களேன்...''

''பணம் இல்ல சார் விஷயம்''.

''அப்படின்னா!''

''வேற ஆம்பளைங்கெல்லாம் அங்க நிறைய வந்துட்டுப் போறாங்கன்னு அக்கம்பக்கத்தில பேசறாங்க''.

''ப்ராத்தலா?''

நான் ஆழமாய் ஓர் மௌனம் கைகொண்டேன். மூர்க்கம். வெறி எல்லாம் உள்ளே. முதலில் விரட்ட வேண்டும், என்ன சொல்லியாவது.

அப்புறம் நடந்தவைகளை பார்க்க நான் ஊரில் இல்லை.

எனக்கு வேலை கிடைத்தது. வட மாநிலங்களெங்கும் கிளைகள் உள்ள லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் விற்பனையாளனானேன். ஊர் ஊராய் சுற்றினேன். பல முகங்கள். பல தண்ணீர். நடுநடுவே பல நிர்வாக மேலதிகாரிகளைச் சமாதானப்படுத்தி ஆர்டர் பிடிக்க மது, மாது, வகையறாக்களை கையாளுவதும் பழக்கமானது. இதெல்லாம் விற்பனை உத்திகள் என்று எங்கள் நிறுவனம் அங்கீகரித்தது.

அப்படி ஒரு ஏற்பாட்டின் போதுதான், செகந்தராபாத்தில் பாயைச் சுருட்டிக் கொண்டு எழுந்த பெண்ணைப் பார்த்தேன். சிரித்தாள். கடமையாய் தன் காரியத்தை நிறைவேற்றினாள். பணம் பெற்றுக்கொண்டாள். வண்டியில் வரும்போது,

''இது உங்கள் கைங்கரியம் தான்'' என்றாள்.

நான் பேச்சற்றுப் போனேன்.

*— 'கரைந்தவர்கள்' கதைத் தொகுப்பிலிருந்து.*

*வெளியீடு : மதி நிலையம், சென்னை–14.*

★ ★ ★



# செய்திச் சரம்

## இணைய வசதிகளைப் பயன்படுத்துவதில் தமிழகம் முந்துகிறது!

வேகமாக வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பத்தில் ''இணையம்'' அல்லது "இன்டர்நெட்" முக்கிய இடம் வகித்து வருகிறது. இணைய வசதிகளுக்கான இணைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு நகரத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் நவீன முன்னேற்றத்தைக் கணிக்கின்ற கணினி யுகம் இது. இந்த இணைய வசதிகளைப் பெறுவதில் இந்தியாவில் முன்னணி நகரங்களும், மாநிலங்களும் போட்டிப் போட்டுக் கொண்டு மேல்நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இன்றைய நிலையில், இந்தியாவில் 14 இலட்சத்திற்கும் மேலான இணையத் தொடர்புகள் உள்ளன. இணைய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் மராட்டியம் முதலிடத்தையும், டெல்லி இரண்டாவது இடத்தையும், தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. பயன்பாட்டில் உள்ள இணையத் தொடர்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | |
|---|---|
| மாராட்டிய மாநிலத்தில் | 4,52,948 |
| டெல்லியில் | 2,26,587 |
| தமிழ்நாட்டில் | 2,14,178 |
| கர்நாடகத்தில் | 1,39,370 |
| மேற்கு வங்காளத்தில் | 1,14,221 |
| ஆந்திர மாநிலத்தில் | 63,902 |

இந்தியாவில் உள்ள பெருநகரங்களை எடுத்துக் கொண்டாலும், இணையத் தொடர்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் சென்னை மாநகரம் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. பெருநகரங்களில் பயன்பாட்டில் உள்ள இணையத் தொடர்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு :

| | |
|---|---|
| மும்பையில் | 2,81,000 |
| டெல்லியில் | 2,26,587 |
| சென்னையில் | 1,12,000 |
| பெங்களூரில் | 85,000 |
| கல்கத்தாவில் | 80,000 |
| ஹைதராபாத்தில் | 45,000 |

இப்படி இந்தியாவில் உள்ள இணைய வசதிகளைப் பற்றிய புள்ளி விபரங்களை 3.8.2000 அன்று மாநிலங்களவையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு பிரமோத்மகாஜன் வெளியிட்டுள்ளார். ★

## நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க கண்காணிப்புக்குழு

*தேயிலையின் விலை குறைந்ததைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கு தமிழக அரசு 21.5.2000 அன்று குழு ஒன்றை அமைத்தது. அக்குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் தேயிலை விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தேயிலையின் விலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான பணிகளை விரைவுபடுத்துவதற்காக நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு கண்காணிப்புக்குழு ஒன்றை நியமித்து 3.8.2000 அன்று முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இக்குழுவில், குன்னூரில் உள்ள மத்திய தேயிலை வாரியத்தின் மண்டல தலைமை நிர்வாகி, இன்கோசர்வின் மேலாண்மை இயக்குநர், முதலமைச்சரின் செயலகத் துணைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல், தேயிலையின் தரத்தினைக் கண்காணித்து மேம்படுத்துதல், நியாயமாகவும், சுமுகமாகவும் தேயிலைத்தூள் ஏலம் விடப்படுவதை உறுதி செய்தல் ஆகியவை இக்குழுவினால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவைகளுடன், தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அவசர நடவடிக்கைகளையும் இக்குழு மேற்கொள்ளும்.*

*மேலும், இக்கண்காணிப்புக்குழு அடிக்கடி கூடி தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதுடன், தேயிலை விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு சிரமங்களையும் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்குரிய ஆலோசனைகளையும் அரசுக்கு உடனுக்குடன் வழங்கும் என்றும் முதல்வர் கலைஞர் இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.* ★

## தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்

இந்த ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் 4.4.2000 அன்று சட்டப்பேரவையில் உரையாற்றியபொழுது, "தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோயிலிருந்து காலத்தே காப்பாற்றவும், தென்னைச் சாகுபடியை மேம்படுத்தவும், தென்னைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டும், தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவிக்கவும் 12.3.2000 அன்று விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் என்னிடம் வைக்கப்பட்ட கோரிக்கையை ஒட்டியும், தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம் உருவாக்கப்படும்" – என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின்படி, தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் தலைமையில், "தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்" எனும் அமைப்பினை உருவாக்கி முதல்வர் கலைஞர் 3.8.2000 அன்று ஆணையிட்டுள்ளார்.

வேளாண்மைத் துறை செயலாளர், நிதித்துறைச் செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், வேளாண்மை விற்பனை இயக்குநர், தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தென்னை ஆராய்ச்சி மைய இயக்குநர், கொச்சியில் உள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி ஆகியோரும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களான கிணத்துக்கடவு திரு.மா.சண்முகம், பட்டுக்கோட்டை திரு.ப.பால சுப்பிரமணியம், திண்டுக்கல் திரு.இரா.மணிமாறன், விவசாயப் பிரதிநிதிகளான திரு.கே.செல்லமுத்து, திரு.கே.எம்.தங்கராஜ், திரு.க.சுந்தரம், தென்னை பதப்படுத்தும் பிரதிநிதி திரு.சின்னப்பன் ஆகியோர் இக்குழுமத்தின் உறுப்பினர்களாகச் செயல்படுவர் என்றும், வேளாண்மைத்துறை இயக்குநர் இக்குழுமத்தின் உறுப்பினர் செயலராகப் பணிபுரிவார் என்றும் முதல்வர் இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.

எக்டேர் ஒன்றுக்கு 11,520 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு, தேங்காய் உற்பத்தித் திறனில் தமிழகம், இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. இந்நிலையில், தேங்காய் உற்பத்தியை மேலும் அதிகரித்தல், தேங்காய் மற்றும் தென்னை உபபொருட்களைப் பதப்படுத்துதல், சேமிப்பு வசதிகள், விற்பனை யுக்திகள், பொருட்களைப் பிரித்தல், விலைக் கொள்கையை உருவாக்குதல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையை வகுத்தல், உயிரியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைத்தல், தொழிற்சாலை உள்ளமைப்புகளை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மையங்களை அமைத்தல், கடன் வசதி அளித்தல் போன்றவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இக்குழுமம் செயல்படும்.

★ ★ ★

## அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணை

தமிழக சட்டப்பேரவையில் 2000–2001–ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று அளித்து உரையாற்றுகையில், தென்மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிடும்வண்ணம், "திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை மேம்படுத்தி, தென்மாவட்டங்களில் கால்நடைகளின் தரத்தை உயர்த்த ஆவன செய்யப்படும். குறிப்பாக, தென் மாவட்டங்களுக்கு ஆடுகள் வளர்ப்பு மையம் ஒன்றை ஏற்படுத்துதல், அதிகப் பயன் தரும் கோழி இனங்களைக் கோழி வளர்ப்போர்க்கு அளிக்க மையம் ஒன்றை ஏற்படுத்துதல், நீலநாக்கு நோய் போன்ற கால்நடை நோய்களைச் சமாளிக்க விவசாயிகளுக்கு உதவும் வகையில் வட்டார ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த கால்நடைப் பண்ணையில் முக்கியத்துவம் அளிக்கப்படும்" என்று முதல்வர் கலைஞர் அறிவித்தார். அந்த அறிவிப்பின்படி, நான்கு புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் :

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சௌக்லா இன செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்கு ஏற்ற தட்பவெட்ப நிலை உள்ளது. சௌக்லா இன செம்மறி ஆடுகளின் உரோமம் கம்பளி, தரை விரிப்புகள் முதலியவற்றைத் தயாரிக்கவும், இவ்வகை ஆட்டின் ஆண் இனம் நாட்டுச் செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்தவும் பயன்படும். எனவே, தென் மாவட்ட மக்கள் சௌக்லா இன செம்மறி ஆடுகளை இந்தப் பகுதிகளில் வளர்த்து பொருளாதார மேம்பாடு காண முடியும் என்பதால், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையில், 13 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில், 400 சௌக்லா இன செம்மறி ஆடுகளையும், 40 கிடாக்களையும் வளர்த்து, அவற்றின் மூலம் கிடைக்கும் 6 மாத வயதுடைய கிடா குட்டிகளை ஆண்டுக்கு 660 ஏழை விவசாயிகளுக்கு, மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் வழங்கிடவும்,

அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் மாதம் ஒன்றுக்கு 25 விவசாயிகள் வீதம் ஆண்டுக்கு 300 விவசாயிகளுக்கு 22 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் விஞ்ஞான முறையில் கால்நடைகளின் இனப்பெருக்கம், தீவனம், பராமரிப்பு போன்றவைகளில் தென்மாவட்டங்களில் உள்ள கிராமப்புற விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கும் திட்டத்தை 5 ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தவும்,

23 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில், அதிக அளவில் பயன்தரும் கிரிராஜா இனத்தைச் சேர்ந்த, ஒருநாள் வயதுடைய 2000 கோழிக் குஞ்சுகளை மாதந்தோறும் வாங்கி, அபிஷேகப்பட்டி பண்ணையில் உள்ள கோழிக் கொட்டகைகளில் பனிரெண்டு வாரகாலம் வரை வளர்த்து, மாதந்தோறும் 200 ஏழை விவசாயிகளுக்கு தலா 10 குஞ்சுகள் வீதம் மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் வழங்கிடவும்,

தென்மாவட்டங்களில் ஆடுகளை அதிக அளவில் தாக்கி, அங்கு வாழும் கிராம மக்களுக்கு மிகுந்த பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் நீலநாக்கு நோயிலிருந்து ஆடுகளை காப்பதற்கு உதவும் வகையில், நீலநாக்கு நோயின் தன்மை, அந்நோயைப் பரப்பும் நச்சுயிரி, அந்நோய் குறித்த கண்காணிப்பு, கொசு ஒழிக்கும் முறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 16 இலட்ச ரூபாய் செலவில் அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் மண்டல ஆய்வுக்கூடம் ஒன்றை நிறுவுவதற்கும்,

ஆக மொத்தம் 75 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். ★



குறைந்த செலவில் (Low Budget) தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடும் தயாரிப்பாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஆண்டுதோறும் அத்தகைய திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசு மானியம் வழங்கும் திட்டம் முதல்வர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு 1989–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற 1996–ஆம் ஆண்டு 28 படங்கள் தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1997–ஆம் ஆண்டு 11 படங்கள் தேர்வு செய்யப்பட்டு 55 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

1998–ஆம் ஆண்டுக்கான குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ள திரைப்படங்களில் தரமான திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் பொருட்டு, 1.1.1998 முதல் 31.12.1998 வரை வெளிவந்துள்ள தமிழ்த் திரைப்படங்களில் தரமான படத்தைத் தேர்வு செய்து அரசுக்கு பரிந்துரைக்க நீதியரசர் கே.எஸ்.பக்தவச்சலம் அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்கள் கொண்ட தேர்வுக்குழுவை அரசு 21.6.1999 அன்று அமைத்தது.

1998–ஆம் ஆண்டில் மொத்தம் 70 தமிழ் திரைப்படங்கள் வெளிவந்தன. மானியத்தொகை கோரி வரப்பெற்ற 23 விண்ணப்பங்களும் பதிவு செய்யப்பட்டு, அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற 22 திரைப்படங்கள் மட்டும் தேர்வுக் குழுவினரால் பார்வையிடப்பட்டு, அவற்றில் 15 திரைப்படங்களுக்கு மானியம் வழங்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்வுக்குழுவினரின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள், அக்குழுவினரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள படங்களான,

1. சொர்ணமுகி
2. கிழக்கும் மேற்கும்
3. சேரன் சோழன் பாண்டியன்
4. குருபார்வை
5. பகவத்சிங்
6. கும்பகோணம் கோபாலு
7. கோல்மால்
8. கவலைப்படாதே சகோதரா

**1998–ஆம் ஆண்டில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியான 15 திரைப்படங்களுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் அரசு மானியம்**

9. வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு
10. உயிரோடு உயிராக
11. பொன்மானைத் தேடி
12. இனி எல்லாம் சுகமே
13. கலர் கனவுகள்
14. சந்தோஷம்
15. நிலாவே வா

ஆகிய பதினைந்து படங்களுக்கு தலா 5 இலட்ச ரூபாய் வீதம் 75 இலட்சம் ரூபாயினை வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

10.8.2000 அன்று சென்னை – வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில், திரைப்படங்களுக்கு அரசு வழங்கிடும் இந்த மானியத் தொகை வழங்கப்பட்டது.

★ ★ ★

## 960 தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டடங்கள்

தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் போதுமான கட்டட வசதிகள் இல்லாத நிலையில் செயல்பட்டுவரும் 960 தொடக்கப் பள்ளிகளுக்கு தாழ்வாரத்துடனும், கழிப்பறைகளுடனும் கூடிய புதிய கட்டடங்களை 30 கோடியே 29 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கி முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

★ ★ ★

# ஆலந்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை

ஆலந்தூர் நகராட்சியின் மொத்த பரப்பளவு 19.5 சதுர கிலோ மீட்டர் ஆகும். நகரத்தின் தற்போதைய மக்கள் தொகை 1,65,000 ஆகும். நகராட்சி பகுதியிலுள்ள 135 கி.மீ. நீளமுள்ள 755 சாலைகள் மற்றும் தெருக்களிலிருந்து தினசரி 65 மெட்ன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள 287 துப்புரவு பணியாளர்களும், 15 வாகனங்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

நகராட்சிக்குட்பட்ட பத்து குடியிருப்பு பகுதிகளில் 'பை மூலம் குப்பை சேகரிக்கும் முறை' ( Carry bag system) அறிமுகப்படுத்தப்பட்டு குடியிருப்பாளர்களது வீட்டிற்கே சென்று குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் வார்டு 14, 20 மற்றும் 21–இல் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மாட்டு வண்டிகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு 25 மூன்று சக்கர சைக்கிள் (TRI CYCLES) மூலமாக குடிசைப் பகுதிகளிலும், குறுகிய தெருக்கள் மற்றும் சந்துகளிலிருந்தும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் விமான போக்குவரத்துத்துறையினரது வேண்டுகோளுக்கிணங்க நகராட்சி எல்லைக்குள் குப்பைகளை சேகரிக்க இயலாத நிலையில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள பள்ளிக்கரணையில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் குப்பையை உரமாக்கும் பணியினை மேற்கொள்ள உரத்திடலுக்காக (Compost Yard) இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி வாகனங்கள் மூலமாக கொண்டு வரப்பட்டு சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி உரத்திடலில் கட்டி, இயக்கி, ஒப்படைத்தல் அடிப்படையில் (BOT Basis) குப்பைகளிடமிருந்து உரம் உற்பத்தி செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மெஸர்ஸ்.ஹீலிங் மெடிகேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை–4 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி உரத்திடலின் முன்புறம் நகராட்சியின் சார்பில் சுற்றுச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மீதமுள்ள மூன்று பக்கங்களிலும் மேற்படி நிறுவனமே சுற்றுச் சுவர் கட்டித்தர முன்வந்துள்ளது. உரத்திடலுக்கு கொண்டு வரப்படும் குப்பைகளின் அளவுகளைக் கணக்கிடு செய்ய கணினி எந்திரத்துடன் கூடிய எடை மேடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலந்தூர் நகரத்தையொட்டியுள்ள உள்ளகரம், புழுதிவாக்கம் மற்றும் பள்ளிக்கரணை பேரூராட்சிகளிலிருந்தும், மடிப்பாக்கம் பஞ்சாயத்திலிருந்தும், பல்லவபுரம் நகராட்சி, பரங்கிமலை கண்டோன்மென்ட் போர்டு ஆகிய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் குப்பைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி உரத்திடல் 15 வருட காலத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியினால் வழங்கப்படும் குப்பைகளுக்கு ஒரு மெட்னுக்கு ரூ.3.50 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.84,000 வருவாய் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உரத்திடலில் பணிகளைத் துவக்குவதற்கான வேலை உத்தரவு 22.8.2000 அன்று மெஸர்ஸ்.ஹீலிங் மெடிகேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை–4 நிறுவனத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி.மணி அவர்களால் வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் 1.9.2000 அன்று கட்டுமானப் பணிகளைத்துவக்கி 1.3.2001 முதல் உர உற்பத்தியைத் (Organic manure) துவங்க உள்ளது. ★



# நாகப்பட்டினம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்




★ **அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்** கீழ் 1997–98 முதல் 1999–2000 வரை, 19 ஊராட்சிகளில் ரூ.9.78 கோடி செலவில் 1,192 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 6 ஊராட்சிகளில் ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் 210 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ **பெரியார் நினைவு சமத்துவபுரம்** திருமருகல் ஊராட்சி ஒன்றியம் பனங்குடி, நாகை ஒன்றியம் பாப்பாக்கோயில், செம்பனார் கோயில் ஒன்றியம் காட்டுச்சேரி ஆகிய ஊராட்சிகளில் ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

**திருக்குவளையில்** சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் சமத்துவபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ **நமக்கு நாமே திட்டத்தின் கீழ்** இதுவரை ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் 288 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நாகை கடற்கரை அபிவிருத்தி சாலை மேம்பாடு மற்றும் சிறுவர் பூங்கா அமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூ.84.94 இலட்சம் செலவில் 47 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ **வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ்** இதுவரை 109 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 1,17,150 நபர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இலவச மருத்துவ பரிசோதனை பெற்றவர்களில் 41,760 பேர் ஆண்களும், 46,935 பேர் பெண்களும், 27,825 பேர் குழந்தைகளும் ஆவார்கள்.

மருத்துவ பரிசோதனை வசதி பெற்றவர்களில் 9,107 பேர், மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப் பட்டு, தொடர் சிகிச்சை பெறுகின்றனர்.



★ வாழ்வொளித் திட்டத்தின் கீழ் 1,140 பள்ளிகளில் படிக்கும் 1,95,455 மாணவ–மாணவிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு பயன்பெற்றுள்ளார்கள்.



★ சிறப்புக் கால்நடை மருத்துவ முகாம் திட்டத்தின்கீழ் 73 முகாம்கள் நடத்தப்பட்டு, 1,35,000 கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கப் பட்டுள்ளது.

★ நாகப்பட்டினத்தில் ரூ.16.95 இலட்சம் செலவில் **உழவர் சந்தை** அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.27,66,792 மதிப்புள்ள 3,56,356 கிலோ கிராம் காய்கறிகள் விற்பனையாகியுள்ளது. 3,639 விவசாயிகளும், 1,40,200 நுகர்வோர்களும் பயன்பெற்றுள்ளனர்.

★ **மேனிலைப்பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி** வகுப்பு தொடங்கும் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 23 பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. நடப்பாண்டில் மேலும் ஐந்து மேனிலைப் பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.



★ நாகை மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் 13,973 இலவச **வீட்டுமனைப் பட்டாக்கள்** வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 6,050 பேருக்கும் – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் மூலம் 1,264 பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் வருவாய்த் துறையின் மூலம் 3,000 பேருக்கும் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 2,000 பேருக்கும் – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் 950 பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளன.

★ **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்** கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 7,190 பெண்களின் திருமணத்திற்காக ரூ.7.19 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ **அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புமண நிதி உதவித் திட்டத்தின்** கீழ் 125 தம்பதிகளுக்கு ரூ.16,25,000 வழங்கப்பட்டுள்ளது.






★ **மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின்** கீழ் 4,000 மகளிருக்கு ரூ.25.66 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

★ **இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்** கீழ் ரூ.27.63 கோடி செலவில் 8,844 தொகுப்பு வீடுகள் கட்டப் பட்டுள்ளன. நடப்பாண்டில் 1,275 தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் விரைந்து செயலாக்கம் பெறுகின்றன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், **தாட்கோ** மூலம் 19,304 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.3.20 கோடி நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

★ **டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம் மற்றும் தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்** கீழ் 8,200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.23.63 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ **கண்ணொளி வழங்கும் திட்டத்தின்** கீழ் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் 20,905 பேருக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு பயன் பெற்றுள்ளார்கள்.

★ **கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்தின்** கீழ் கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ரூ.38.85 கோடி செலவில் 723 குடியிருப்புகளுக்குக் குடிநீர்வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.10 கோடி செலவில் 192 கிராமப்புற குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

★ **மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரண உதவித்திட்டத்தின்** கீழ் ரூ.7.62 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 1,06,451 மீனவர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

★ **வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்** கீழ் ரூ.27.63 கோடி செலவில் 1,656 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூ.3.14 கோடி ஒதுக்கீட்டில் 114 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ **ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்** கீழ் ரூ.25.94 கோடி செலவில் 6,010 பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ நாகை மாவட்டத்தில், திருக்குவளை, கீழ்வேளூர் ஆகிய ஊர்களைத் தலைமையிடமாகக்கொண்டு 2 புதிய **வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள்** உருவாக்கப்பட்டுள்ளன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.26.51 கோடி செலவில் 639.79 கி.மீ. தூரத்திற்குக் கிராமப்புறச் சாலைகள் தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

★ **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் ரூ.6.49 கோடி செலவில் 324 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

- ★ நாகை மாவட்டத்தில் 134 இடங்களில் **விளையாட்டு மற்றும் புத்துணர்வு மையங்கள்** தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் **விளையாட்டு அரங்கம்** உருவாக்கப் பட்டுள்ளது.
- ★ **பொதுப்பணித் துறையின்** மூலம் ரூ.22.75 கோடி செலவில் 196 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- ★ **மனைவரி, தல்வரி ரத்து**

1996ஆம் ஆண்டு நான்காவது முறையாக முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் மனைவரி, தலவரி ஆகியவற்றை ரத்து செய்து பிறப்பித்த முதல் அரசாணையின் மூலம் நாகை மாவட்டத்தில் 2,37,835 பேர் பயன் பெற்றுள்ளார்கள். இவர்களில் ஆதிதிராவிடர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் 90,793 பேர் ஆவார்கள் என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.



1997ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் 1407–ஆம் பசலிக்கான நிலவரி, கூடுதல் நிலவரி, தலவரி, தலமேல்வரி ஆகியவற்றை ரத்து செய்து முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆணை பிறப்பித்ததின் விளைவாக நாகை மாவட்டத்தில் 1,88,037 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள். இந்த வகையில் தள்ளுபடி செய்யப்பட்ட நிலவரியின் மொத்தத் தொகை ரூ.2 கோடியே 18 இலட்சம் ஆகும்.

- ★ நாகை மாவட்டத்தில் கடந்த நான்காண்டு காலத்தில் ரூ.29.19 கோடி செலவில் 3,316 கி.மீ. தூரத்திற்கு, ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் தூர் எடுக்கும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ★ **நெடுஞ்சாலைத்துறையின்** மூலம் கடந்த நான்காண்டுகளில் ரூ.35.04 கோடி செலவில் 636.72 கி.மீ. தூரத்திற்குச் சாலை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன. மேலும் ரூ.2.39 கோடி செலவில் 6 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.4.61 கோடி செலவில் 7 பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ரூ.6.58 கோடி செலவில் 168.17 கி.மீ. தூரத்திற்குச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

**முதல்வராகக் கலைஞர்,**

**முதல் இடத்தில் தமிழகம்**

என்ற நிலையில், வளர்ச்சிப்பாதையில் நடைபோடுகிறது நாகப்பட்டினம் மாவட்டம்.

★ ★ ★



# தன்னிறைவைப் பெற்ற பச்சைமலைப் பகுதி

திருச்சிராப்பள்ளி மாவட்டம் வடகோடியில் உப்பிலியபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் மலைவாழ் மக்கள் 6,000 பேர் வாழ்ந்து வரும் அடர்ந்த காடுகள் அடங்கிய பச்சைமலை எனும் மலைக்கிராமங்கள் அமைந்துள்ளது. இங்கு 1996–ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் உத்தரவின்படி, மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட பல்வேறு வளர்ச்சிப்பணிகள் நிறைவேற்றப்பட்டு இன்றைய தினம், பச்சைமலைப்பகுதி கிராமங்கள் தன்னிறைவு பெற்ற கிராமங்களாகத் திகழ்கின்றன.

பச்சைமலைப் பகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வண்ணாடு ஊராட்சி, கோம்பை ஊராட்சி என இரண்டு ஊராட்சிகளும், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தென்புறநாடு ஊராட்சியும் என மொத்தம் மூன்று ஊராட்சிகள் அமைந்துள்ளது. இந்த மூன்று ஊராட்சிகளிலும் கடந்த 4 ஆண்டுகளில் சாலைகள், கழிப்பறை வசதிகள், தொகுப்பு வீடுகள், குடிநீர் வசதிகள், தெருவிளக்கு வசதிகள் என மொத்தம் 170 பணிகள் ரூ.79.38 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2000–2001–ஆம் ஆண்டில் தார்சாலைகள், கான்கிரீட் சாலைகள், பள்ளி கழிப்பறைகள் என மொத்தம் 11 பணிகள் ரூ.7.63 இலட்சம் மதிப்பீட்டிலும், தொகுப்பு வீடுகள், கான்கிரீட் சாலைகள், சமுதாயக் கட்டடங்கள் என மொத்தம் 30 பணிகள் 10 இலட்சம் மதிப்பீட்டிலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர் வசதி**

குடிநீருக்காக பல மைல் தூரம் மலைப்பாதையில் நடந்து சென்று கிணற்றுத் தண்ணீரை தூக்கிக் கொண்டு வரும் நிலையை அகற்றும் வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திருவைமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களும், உப்பிலியபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு டி.கருப்புசாமி அவர்களும், தமிழக முதல்வர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தவுடன், ரூ.2.30 கோடி நிதி ஒதுக்கீடு அளித்து, அனைத்து கிராமங்களும் பயன்பெற்றிடும் வகையில் 35 இடங்களில் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் அமைத்து அதிலிருந்து குழாய்கள் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், மக்கள் நடந்து சென்று தண்ணீர் தூக்கி சிரமப்படும் நிலைமாறி, தன் குடியிருப்பிற்கே வரும் தண்ணீரைப் பெற்று மனமகிழ்ந்து செல்கின்றனர்.

**நியாயவிலைக் கடை**

அதுமட்டுமல்லாமல், பல மைல் தூரம் நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் வாங்கும் நிலையை மாற்றி 200 பேர் கொண்ட மக்களுக்கு ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடை என



மகளிரே நடத்திடும் பல்வேறு பகுதிநேர நியாயவிலைக்கடை ஆங்காங்கே திறந்து, அனைத்து அத்தியாவசியப் பொருள்களையும், மக்கள் மனநிறைவுடன் வாங்கிச் செல்கின்றனர். மேலும், மலைப்பகுதியில் வசிக்கும் அனைவருக்கும், அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் உள்பட அனைத்துப் பொருள்களும் குறைவின்றி நிறைவாக மாவட்ட நிர்வாகம் மூலம் வழங்கப்பட்டு வருவதால், மக்களிடையே ஒரு மனநிறைவைக் காண முடிகிறது. இதுகுறித்து பூனாச்சி கிராமத்தில் மகளிர் குழுவை அமைத்து அதன் தலைவியாகவுள்ள கண்ணம்மா என்பவர் கூறுகையில் டாக்டர் கலைஞர் தலைமையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு எங்களுக்கு உணவுப் பொருள்கள் ஒழுங்காக வழங்கப் படுகின்றன. பள்ளிகள் ஒழுங்காக நடை பெறுகின்றன. தார்ச்சாலைகள் போடப் பட்டு போக்குவரத்து வசதிகள் செய்யப் பட்டுள்ளன. குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைத்து வருகிறது. மின்சாரம் இல்லாத பல்வேறு கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது என உவகை பொங்கக் கூறினார்.

**மின் வசதி**

இங்கு அமைந்துள்ள 16 கிராமங்களில் இதுவரை மின்சாரமே இல்லாமல் இருட்டிலேயே வாழ்க்கையை நகர்த்தி வந்த கிராம மக்களின், இருள் நீக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ.1.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டே இராமநாதபுரம், வல்லம், நெசக்குளம், புத்தூர், புதூர் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு விட்டது. புதிதாக சிலையூருக்கு மின்சார வசதி அமைக்கப்பட்டு, இங்கு வாழ்ந்து வரும் முதியவர் வடமலை என்பவர் தனக்கு எண்பது வயதாகிறது என்றும், இனி வரும் சந்ததிகள் வாழ்க்கை விரைவில் முன்னேறிவிடும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் நாகூர், பாளையம், குண்டூர், சின்னப்பழமலை, பெரியப்பழமலை, குறிச்சி, தேன்பாடி, தாலார், வாழையூர் மற்றும் செங்காத்தூர் ஆகிய எட்டு கிராமங்களுக்கு மின்சார வசதி வழங்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கிடும் வகையில் மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது.

**போக்குவரத்து வசதி**

போக்குவரத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக துறையூரிலிருந்து 3 பேருந்துகளும், சேலம் ஆத்தூரிலிருந்து ஒரு பேருந்தும் என நான்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் இங்குள்ள கிராமங்களுக்கு மலைப்பாதையில் சென்றிட புதிதாக சிற்றுந்து (மினிபஸ்) ஒன்றும் இயக்கப்பட்டு, கிராம மக்களிடையே ஒரு ஒருங்கிணைப்பையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பச்சைமலைப் பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு அதிகமாக விளைகிறது. கிலோ ஒன்றுக்கு ரூ.1.20 என விற்பனை செய்த இதன் விலையை உயர்த்தி இன்றைய தினம் ரூ.2.20–க்கு விற்பனை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மலைவாழ் உழவர்களுக்கு அதிக இலாபம் கிடைப்பதாகவும், இதனை சேலம் மாவட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் விற்பனை செய்திடும் வகையில் எடுத்துச் செல்ல சாலை வசதிகள் மேம்பாடு செய்துள்ளதால், லாரி போக்குவரத்திற்கு எளிதாக உள்ளதாகவும், இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். மேலும் இங்கு பலாப்பழம், முட்டைகோஸ், அன்னாசிப்பழம், சீரகச்சம்பா நெல், கொய்யா, தேங்காய் முதலியன நன்றாக விளைந்து மக்களுக்கு நல்ல இலாபம் தருகிறது. இங்கு தோட்டப்பயிர்களை விளைவித்து அதனை விற்பனை செய்திடும் வகையில் விரைவில் துறையூரில்



உழவர் சந்தை அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**கல்வி**

கல்வியைப் பொறுத்தவரையில், டாப்செங்காட்டுப் பட்டியில் மாணவர்கள் பயில கணினி வசதியுடன் ஒரு மேல்நிலைப்பள்ளியும், செம்புளிச்சாம்பட்டியில் ஒரு உயர்நிலைப்பள்ளியும், புத்தூரில் ஒரு நடுநிலைப் பள்ளியும் அமைந்துள்ளது. நாகூரில் அமைந்துள்ள உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளியை 10.8.2000 நாளன்று நடுநிலைப்பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டதை முறைப்படி துவக்கி வைத்தார். இது தவிர 25 உண்டி/உறைவிட ஆரம்பப்பள்ளிகள்





நடைபெற்று வருகின்றன. இங்கெல்லாம் இலவச சீருடைகள், இலவச புத்தகங்கள் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதி அட்டையும் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களுக்கும் சாதிச்சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. இதுநாள்வரை டாப்செங்காட்டுப் பட்டி மேல்நிலைப்பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள், உப்பிலியபுரம், துறையூர் ஆகிய இடங்களில் அரசுத் தேர்வு எழுதி வருவதை மாற்றி இந்த ஆண்டு முதல், டாப்செங்காட்டுப்பட்டி கிராமத்திலேயே அரசுத் தேர்வு எழுதிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அங்குள்ள 56 கிராமங்களில் வசிப்போரில் 50 கிராமங்களில் வசிக்கும் 5500 பேருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 6 கிராமங்களில் வசிக்கும் 500 பேருக்கும் செப்டம்பர் மாத இறுதிக்குள் சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டுவிடும்.

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் நிறைவேறும்வரை ஓயமாட்டோம் என்கிற தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கொள்கைப்படி, இந்த மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது என சொன்னால் அது மிகையாகாது.

**– துரை. தாமரைச்செல்வம்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*



# ஈரோடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட மாவட்ட ஆட்சியர் திரு ச.கருத்தையா பாண்டியன்,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் செய்தியாளர்கள் குழு ஈரோடு, பவானி, கோபி ஆகிய ஒன்றியங்களுக்கு பயணம் மேற்கொண்டது. முதலில் ஈரோடு ஒன்றியத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமமான வில்லரசம்பட்டிக்குச் சென்றபோது, இந்த ஊராட்சியில் தார்சாலைகள் அமைத்தல், நியாயவிலைக் கடைகள் கட்டுதல், தடுப்புச் சுவர் கட்டுதல், கான்கிரீட் சாலை அமைத்தல், சிறுபாலம் அமைத்தல், வடிகால் அமைத்தல் போன்ற 20 பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பிலும், 14 குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 14 பணிகள் ரூ.54.19 இலட்சம் மதிப்பிலும் நடைபெற்றுள்ளது. மேலும் இந்த ஊராட்சியில் 24 கைப்பம்புகள், 7 விசைப்பம்புகள், 7 திறந்தவெளி கிணறுகள், 7 தரைமட்டத் தொட்டிகள், 3 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்குச் சீரான முறையில் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகளைப் பார்வையிட்ட செய்தியாளர்கள் அப்பகுதி பொதுமக்களான திருமதி.சரஸ்வதி, திருமதி.பழனியம்மாள், திரு.சந்திரன் ஆகியோரைச் சந்தித்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றிக் கேட்டபோது, "இந்தப் பகுதியில் எவ்வித அடிப்படை வசதியும் இன்றி நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். ஆனால் இந்தத் திட்டம் கொண்டு வந்ததின் மூலம் குடிநீர்வசதி, சாலைவசதி, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் எங்களுக்கு தற்போது கிடைத்துள்ளது. இந்தத் திட்டம் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றனர்.



"அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 1997-98-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 11 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டது. ரூ.1,197.36 இலட்சம் செலவில் 1,248 பணிகள் செய்து முடிக்கப்பட்டது. 1998-99-ஆம் ஆண்டில் 10 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.1327.82 இலட்சம் செலவில் 1,168 பணிகள் முடிக்கப்பட்டது. 1999-2000-ஆம் ஆண்டில் 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.825.48 இலட்சத்தில் 950 பணிகள் முடியும் நிலையில் உள்ளன" என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் செயல்படும் கருவல்பாறைவலசு கிராமத்திற்குச் சென்ற போது, 11 மகளிர்களைக் கொண்டு இயங்கும் அமுதம் சுயஉதவிக் குழுவைச் செய்தியாளர்கள் பார்வையிட்டனர். குழுவில் உள்ள அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விவசாயக் கூலிகள். ஒவ்வொரு மாதமும் தலா ரூ.250 வீதம் அனைவரும் சுயமாகச் சேமித்து வருகின்றனர். மாதம் இரண்டு முறை குழுக்கூட்டம் நடத்தி வருகின்றனர். தற்போது குழு சேமிப்புக் கணக்கில் ரூ.14,787 உள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் சுழல் நிதியாக ரூ.10 ஆயிரமும், வங்கி மூலம் ரூ.15 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவி திருமதி இந்திராணி செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, இக்குழுவில் உள்ள நாங்கள் 11 பேரும் தையல் பயிற்சி பெற்றுள்ளோம். தையல் எந்திரமும் துணிகளும் வாங்கி ஆயத்த ஆடைகள் தயார் செய்து ஈரோட்டில் விற்பனை செய்திட உள்ளோம். இதனால் எங்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை கூடுதல் வருமானம் கிடைக்கும். குடும்ப செலவு போக மாதம் ரூ.1,000 வரை சேமிக்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்தனர்.

### விதைச் சுத்திகரிப்பு நிலையம், பவானி

தமிழக வேளாண் பெருங்குடி மக்களுக்கு தரமான விதைகளை விநியோகிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்விதைச் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு, அரசு விதைப் பண்ணைகளிலிருந்தும், விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளிலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டு "பெட்கஸ் இயந்திரம்" மூலம் தரமான விதைகளை மட்டுமே தனியே பிரித்தெடுத்து, அதில் விதைச்சான்று அலுவலரால் மாதிரி எடுக்கப்பட்டு, கோவையில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, விதைகளின் தரமும், முளைப்புத் திறனும் நன்கு பரிசோதிக்கப்பட்டு, தரமான விதைகள் விதைப் பரிசோதனை முடிவில் தேறும் பட்சத்தில் சான்றளிக்கப்பட்ட பின்பு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்மூலம் விவசாயிகளுக்கு சுத்தமானதாகவும், கலப்பில்லாமலும், நன்கு முளைப்பு திறன் உள்ளதாகவும், சரியான ஈரப்பதம் உள்ளதாகவும், தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்படும் சான்று அட்டைகள் பொருத்தப்பட்டு, சான்று விதைகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வேளாண் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பாக உள்ளது.

### நெடுஞ்சாலை

கடந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் நெடுஞ்சாலைகள் துறையின் சார்பில் எந்திரத்தின் மூலம் 30 கி.மீ தார் சாலைகள் அமைக்க ரூ.412 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 12 கி.மீ. சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.214 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் கோபியிலிருந்து சித்தோடு வரை 22 கி.மீ. சாலைகள் ரூ.318 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது. 1999-2000-ஆம் ஆண்டில் சித்தோட்டிலிருந்து ஈரோடு பேருந்து நிலையம் வரை மற்றும் ஈரோட்டிலிருந்து அரச்சலூர் வரை 52 கி.மீ. தார்சாலைகள் அமைக்க ரூ.840 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 22 கி.மீ. தார்சாலைகள் அமைக்கும் பணி முடிவு பெற்றுள்ளது. இதுவரை இதற்காக ரூ.390 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் அடுத்த ஆண்டில் அரச்சலூரிலிருந்து தாராபுரம் வரையிலும், ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் சாலை நொய்யல் வரையிலும் ஆக 77 கி.மீ. தார்சாலைகள் அமைக்க ரூ.1432 இலட்சம் நிதி கோரப்பட்டுள்ளது.



நபார்டு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மலையம்பாளையம், தாமரைப்பாளையம் சாலை அமைக்கப்பட்டும், ஈரோடு, சென்னிமலை ரோடு, கனகபுரம் வரை உள்ள சாலை அமைக்கவும், ஊதியூர் தாசநாயக்கன்பட்டி சாலை அகலப்படுத்தவும் ஆக 22.8 கி.மீ. தார்சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.182 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் 127 கி.மீ. பிற மாவட்ட சாலைகள் பராமரிக்கவும், செப்பனிடவும், ஈரோடு கோட்டத்திற்கு ரூ.461 இலட்சமும், கோபி கோட்டத்திற்கு ரூ.300 இலட்சமும் ஆக ரூ.761 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் தூர்வாரும் பணி

கடந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்வாய்கள் தூர்வாரி சீரமைக்க ரூ.10 கோடி நிதி பெறப்பட்டு, அதில் கீழ்பவானி கால்வாய் தூர்வாரி சீரமைக்கப்பட்டது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய் தூர்வாரி சீரமைக்க ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இந்த ஆண்டும் ரூ.10 கோடி பெறப்பட்டு கால்வாய் தூர்வாரி சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கீழ்பவானி பாசன கால்வாய், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாய், காளிங்கராயன் மற்றும் இதர கால்வாய்கள் நிரந்தரமாக சீரமைத்து நவீனப்படுத்த ரூ.800 கோடி அரசிடம் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கீழ்பவானி பாசன கால்வாயில் 23,000 ஏக்கர் கூடுதலாக பாசன வசதி பெறுவதற்கு அரசு உத்திர விட்டுள்ளது.

தடப்பள்ளியில் கால்வாய் தூர்வாரும் பணியை பார்வையிட செய்தியாளர்கள் சென்றிருந்தபோது, கால்வாய் பாசன விவசாயி திரு.மு.ரங்கசாமி செய்தியாளரிடம் தெரிவித்ததாவது :

*"40 ஆண்டுகளுக்கு முன்பு பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை பகுதி விவசாயிகளுக்காக இந்த கால்வாய் அமைக்கப்பட்டது. சுயநலம் கருதி சில விவசாயிகள் கால்வாய் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து முறைகேடாக பயன்படுத்தினர். மண்மூடி தூர்ந்து போன கால்வாயைத் தூர்வாரி செப்பனிட 15 ஆண்டுகளாக கோரிக்கை வைத்தோம். முதல்வர் கலைஞர் எங்களின் கோரிக்கையை ஏற்று ஆக்கிரமிக்கப்பட்ட கால்வாய் பகுதிகளை மீட்டு, கால்வாயை தூர்வாரி, கரைகளை அகலப்படுத்தி வருகிறார்கள். இதனால் எங்கள் நிலப்பகுதிக்கு நீர்வரத்து தங்குதடையின்றி கிடைக்கும். மேலும் கூடுதல் நிலங்கள் பாசனவசதி பெறும். இந்த சிறப்பான திட்டத்தை எங்கள் பகுதிக்கு செயல்படுத்திய விவசாயிகளின் தோழன் முதல்வர் கலைஞருக்கு என்றும் நன்றி கூற*

*கடமைப்பட்டுள்ளோம். இதை சிறப்பாக நிறைவேற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவிக்கிறோம்"* என்று கூறினார்.

**குளம் பராமரிப்பு**

ஈரோடு ஊராட்சி ஒன்றியம் பேரோடு அருகிலுள்ள துயிர்பாளையத்தில் உள்ள குளம் ரூ.5 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுள்ளது. இந்த குளத்தின் மேற்குபுறத்தில் புதிதாக கரைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இருந்த கரைகள் பலப்படுத்தப்பட்டு, பக்க தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. குளம், தூர் வாரப்பட்டு மேலும் ஆழப்படுத்தப்பட்டுள்ளது. அதிகப்படியான நீர் வழிந்தோட கலிங்குச் சுவர் சுமார் 9 மீ. நீளத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்பவானி பாசன வாய்க்காலில் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டது போக எஞ்சிய நீரும் மழைநீரும் வீணாவது தடுக்கப்பட்டு, தேக்கி வைக்கப் படுகிறது. இந்த தேக்க நீரினால் கோடைக்காலங்களில் கிணறுகளில் நீர் உயருவதற்கு மிகவும் உதவியாக உள்ளது. இக்குளத்தில் தற்போது மீன்வளர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. இதனால் கிடைக்கும் வருவாய் ஊராட்சியின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் உதவுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.



**தளவாய்பேட்டை துணை மின்நிலையம்**

ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்தைச் சேர்ந்த ஜம்பை, தளவாய்பேட்டை, ஒரிச்சேரி, புன்னம், தொட்டிபாளையம், வைரமங்கலம், சின்னபுலியூர், ஆப்பக்கூடல், கூத்தம்பூண்டி ஆகிய கிராமங்களுக்குத் தற்போது சித்தோடு, சூரியம்பாளையம், அந்தியூர், கவுந்தப்பாடி ஆகிய 110/22 கிலோவோல்ட் துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமங்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட துணை மின்நிலையங்களின் கடைநிலைப் பகுதியில் உள்ளதால், மேற்படி கிராமங்களில் மின் அழுத்தம் குறைவாக இருந்த காரணத்தால், அம்மின்னழுத்தக் குறைபாடுகளைச் சரிசெய்யும் பொருட்டு, மேற்சொன்ன பகுதிகளின் மையப்பகுதியான ஒரிச்சேரி கிராமம், தளவாய்ப்பேட்டை பகுதிகளில் புதியதாக ஒரு 110/22 கிலோவோல்ட் துணை மின்நிலையம் ரூ.431.20 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

தளவாய்பேட்டை புதிய துணை மின்நிலையத்திற்கான நிலம் மற்றும் கட்டுப்பாடு அறை, வாரியப் பணியாளர்கள் குடியிருப்பு வீடுகள் ஆகியவை அமைக்கும் பணிகளுக்காக ரூ.49.91 இலட்சம் ஒதுக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அந்தியூர் துணை மின்நிலையத்திலிருந்து தளவாய்பேட்டை துணை மின்நிலையத்திற்கு 13 கி.மீ. தூரத்திற்கு 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட மிக உயரழுத்த மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி புதிய துணை மின்நிலையத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்திற்கு 22 கிலோ வோல்ட் உயரழுத்த இணைப்பு மண் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. மேற்படி மின்பாதைகள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.146.80 இலட்சம் செலவில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி தளவாய்பேட்டை துணை மின்நிலையத்தில் 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகள் (மொத்த திறன் 20 எம்.வி.ஏ.) ரூ.117.05 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளன. இதர மின் உபகரணங்கள் மற்றும் மின் நிலைய துணை உபகரணங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.117.44 இலட்சம் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பொதுப்பணித்துறை**

ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி அரசு மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட மகப்பேறு அறையுடன் கூடிய பிரசவ அறையும் மற்றும் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் காப்பகம் அறை கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு ரூ.44 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, முழுமையாக முடிக்கப்பட்டு, 11.12.99 அன்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த கட்டுமானப் பணியையும் செய்தியாளர்கள் பார்வையிட்டனர்.

இப்பயணத்தின் போது மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறையை சார்ந்த அலுவலர்களும் கலந்துக் கொண்டனர்.

**— தா. மனோகரன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம். ★



# காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடிநீர் வசதி

மக்களின் அடிப்படைத்தேவையான, குடிநீர் வசதியை செய்துதர தமிழக அரசு பல்வேறு குடிநீர்த்திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. அதேபோல், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிடைக்கின்ற நீர் ஆதாரங்களைக் கொண்டு, தீவிரத்திட்டங்கள் தீட்டப்பட்டு, மக்களுக்கு குடிநீர் வசதிகள் செய்துதரப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சுகுமாரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**நகர குடிநீர்த்திட்டங்கள்**

நகர குடிநீர்த்திட்டங்களைப் பொறுத்தவரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6 நகராட்சிகளும், 28 பேரூராட்சிகளும் உள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் நகராட்சிக்கு மட்டும் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மதுராந்தகம் நகராட்சிக்கு தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 50 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. முழுமையான அளவான 90 லிட்டர் குடிநீர் வழங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 1996 முதல் 2000 வரை 9 திட்டங்கள் ரூ.17.11 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டுள்ளது. செங்கல்பட்டு நகராட்சி, உத்திரமேரூர் பேரூராட்சி, செய்யூர் ஊராட்சி, பெருங்களத்தூர் பேரூராட்சி, திருநீர்மலை பேரூராட்சி, திருப்பெரும்புதூர் பேரூராட்சி, நந்திவரம் கூடுவாஞ்சேரி, திருக்கழுக்குன்றம், சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் 9 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இத்திட்டங்களினால் அந்தந்தப்பகுதியில் வாழும், 1,77,140 பொதுமக்கள் பயன்பெறுகின்றனர்.

நடப்பு நிதியாண்டில், செவிலிமேடு பேரூராட்சி, வாலாஜாபாத் பேரூராட்சி, சிட்லபாக்கம் பேரூராட்சி, குன்றத்தூர் பேரூராட்சி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, செம்பாக்கம் பேரூராட்சி, மாங்காடு பேரூராட்சி, நந்திவரம் கூடுவாஞ்சேரி ஆகிய 8 பேரூராட்சிகளில் ரூ.13.30 கோடி மதிப்பீட்டில், 1,23,640 நபர்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் விநியோகத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் குன்றத்தூர், பீர்க்கன்கரணைத் திட்டங்களைத் தவிர ஏனைய 6 பேரூராட்சிகளின் அனைத்துப் மேம்பாட்டுப் பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு விடும். இதுபோக ரூ.2.02 கோடி மதிப்பில் மதுராந்தகம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், ரூ.2.64 கோடி மதிப்பில் மாடம்பாக்கம் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டமும், மாமல்லபுரம் பேரூராட்சியில் ரூ.1.6 கோடியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் ரூ.6.75 கோடி மதிப்பில் குடிநீர் மேம்பாட்டு திட்டமும், நடப்பு ஆண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.



சோழிங்கநல்லூர் பேரூராட்சியில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில், சோழிங்கநல்லூரில் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பகுதி–1 மேனிலைத் தொட்டியும், பகுதி–2இல் எம்.ஜி.ஆர். நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேனிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 9.80 இலட்சம் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும். நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் வரை குடிநீர் கிடைக்க ஆவண செய்யப்பட்டுள்ளது.

**ஊரக குடிநீர்த் திட்டம்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் 648 ஊராட்சிகள் உள்ளடங்கிய 3,346 குடியிருப்புகள் உள்ளன. 1996–ஆம் ஆண்டு முதல் 2000 வரை, 993 குடியிருப்புகளுக்கு ரூ.41.55 கோடி மதிப்பில் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், இம்மாவட்டத்தில் மொத்தம் 225 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.11.55 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்க திட்டம் தீட்டப்பட்டு 97 குடியிருப்புகளுக்கான பணிகள் முழுமையாக ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இது தவிர, ரூ.3.07 கோடி மதிப்பீட்டில் முள்ளி மேல்மருவத்தூர் மற்றும் இரண்டு குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த்திட்டமும், ரூ.66.7 இலட்சம் மதிப்பில் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மலையான்குளம் மற்றும் 10 குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர்த்திட்டமும், ரூ.52.2 இலட்சம் மதிப்பில், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெருநகர் மற்றும் 9 குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர்த்திட்டமும், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏகாட்டூர் மற்றும் 3 குடியிருப்புகளுக்கு ரூ.31.4 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டு குடிநீர்த் திட்டம், இதுபோன்ற பெரிய அளவிலான ஊரக கூட்டு குடிநீர்த்திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் 1999–2000 ஆண்டில், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரசங்கால் கிராமத்தில் ரூ.10.57 இலட்சம் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் சித்தேரிமேட்டில் ரூ.6.43 இலட்சம் மதிப்பீட்டிலும், சமத்துவபுரங்களில் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



2000–2001–ஆம் ஆண்டில் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துறை, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் மாம்பாக்கம் ஆகிய இடங்களில், சமத்துவபுரங்களின் பணிகள் தொடர்பாக ஆரம்ப பணிகள் நடந்து வருகின்றன.

புனித தோமையர்மலை ஊராட்சி ஒன்றியம், ஒக்கியம் துரைப்பாக்கம், கணேஷ்நகர மற்றும் பாண்டியன் நகரில் ரூ.11.95 இலட்சம் மதிப்பில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டமும் மற்றும் இதே ஊராட்சி ஒன்றியம் சார்ந்த ஒக்கியம்துரைப்பாக்கம், திருவள்ளுவர் நகர் மற்றும் மகாத்மாகாந்தி நகரில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.13.74 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் தீட்டி முடிக்கப்பட்டு மக்கள் உபயோகத்தில் உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருவதில் மாவட்ட நிர்வாகம் முனைப்போடு செயல்பட்டு பொதுமக்களின் பாராட்டினை பெற்றுள்ளது.

– பா. நாராயணமூர்த்தி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

★ ★ ★



# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா : பரிசுத்தொகை உயர்வு

முதல்வர் **கலைஞர்** அறிவிப்பு

இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்தக் கலை விழாவில் - சிறந்த நடிகர்கள், சிறந்த திரைப்படங்கள் - திரைப்படங்கள் வெற்றி பெற ஒத்துழைத்த சிறந்த கலைஞர் ஆகியோருக் கெல்லாம் பரிசுகள், விருதுகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவைகளை வழங்கியதிலும் இந்த இனிய விழாவைக் கண்ணுறுகின்ற வாய்ப்பைப் பெற்றதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் அவர்கள் தனக்குக் கிடைத்துள்ள இந்த விருது பற்றி எந்தப் படத்திற்கு இது கிடைத்தது, எத்தனையாவது முறையாக சிறந்த நடிகருக்கான விருதைப் பெறுகிறேன் என்றெல்லாம் குறிப்பிட்டார். அவர் நான் பேசிய ஒரு பேச்சை நினைவூட்டி ஒரு புத்தகத்தில் இதைப் படித்தேன் என்றும் குறிப்பிட்டார். சரத்குமார் போன்றவர்கள் கள்ளங்கபடம் இல்லாதவர்கள் என்பதற்கு இது ஒரு சான்று. சிலபேர் அந்தக் கருத்தை அப்படியே சொல்லி அதை தானே சொல்லிய கருத்து போல உங்களுடைய கைதட்டலைப் பெற்றுக்கொண்டு போவார்கள். ஆனால் எது தனக்குச் சொந்தம், எது தனக்குச் சொந்தமில்லை என்பதை வெளிப் படையாகச் சொல்கின்ற அந்த வெள்ளை உள்ளத்தை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

பொதுவாகவே கலைஞர்கள் என்றாலே அவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் அதற்கு உதாரணமாகத் திகழ்கிறார்.

அடுத்து சிறந்த நடிகர் என்ற விருதினைப் பெற்றவர் தம்பி கார்த்திக். கார்த்திக் நடித்த ஏராளமான படங்களை நான் பார்த்திருக்கிறேன். இப்போது வீட்டில் உள்ள தொலைக்காட்சிகளின் மூலமாக அவருடைய பழைய படங்களைக் காணும் வாய்ப்பு ஏற்படும்போது, இவ்வளவு ஆற்றல் படைத்த இந்த நடிகன் இன்னும் ஏற வேண்டிய உச்சியிலே ஏறவில்லையே என்று நான் ஏங்கியதுண்டு. அந்த ஏக்கத்தைப்



போக்கும் வகையில் தம்பி கார்த்திக் கலையுலகத்திலே வளரவேண்டும். அதற்கான முயற்சிகளை மேலும் மேற்கொள்ள வேண்டுமென்று அண்ணன் என்ற உரிமையோடு நான் தம்பி கார்த்திக்கிற்குச் சொல்லிக் கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்ற விருதை செல்வி ரோஜா பெற்றிருக்கிறார். இந்த் விருதை அவருக்கு தமிழக அரசு கொடுத்தது மாத்திரமல்ல, நீதிமன்றமும் சேர்ந்து கொடுத்திருக்கின்ற விருது. ஆகவே நீதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர் இந்த விருதைப் பெறுவதற்கு. செல்வி ரோஜா கவர்ச்சியான பாத்திரங்களை மாத்திரம் ஏற்றுக் கொண்டு நடிப்பவர் என்று யாராவது கருதினால் அதற்கு விதிவிலக்காக அவர் மிக எளிமையான ஒரு ஏழை வீட்டுப் பெண்ணாக, நாடோடிப் பெண்ணாகக் கூட நடிக்க முடியும். திறமையாக நடிக்க முடியும் என்பதை மெய்ப்பித் திருக்கிறார்.

இவர்களுக்கும் மற்றும் விருது பெற்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை இங்கே வழங்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மலிவான செலவிலே எடுக்கப்பட்ட தரமான படங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நீதிபதியாக நம்முடைய பக்தவத்சலம் அவர்கள் அமர்ந்து ஒரு குழு அதிலே கலந்துகொண்டு அவர்கள் எல்லாம் தேர்வு செய்து 23 படங்களிலே 15 படங்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்.

அதிலே நம்முடைய தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் தம்பி விஜயகாந்துக்கு ஒரு குறை. இன்னும் எட்டுப் படங்களை ஏன் விட்டு விட்டீர்கள் என்று.

வருகிற எல்லா படங்களையும் தேர்வு செய்வதென்றால் அதற்கு நீதிபதியும் குழுவும் தேவையில்லை. ஒரு நீதிபதியை உட்கார வைத்துவிட்டு 23 படங்களுக்கும் நீங்கள் பரிசு கொடுங்கள் என்று சொன்னால் அதையே ஒரு வழக்கமாகக் கொண்டால் அடுத்த முறை தேர்வுக் குழுவே இல்லாமல் போய்விடும்.

தம்பி விஜயகாந்துக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். வெறும் தம்பி விஜயகாந்தாக மட்டும் இருந்திருந்தால் பரவாயில்லை என்று பதில் சொல்லாமல் இருந்திருப்பேன். ஒரு பெரிய அமைப்பின் தலைவராக அவர் இன்றைக்கிருக்கிறார். தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவராகவும் அவர் இருப்பதால் நான் அவருக்குப் பதில் சொல்வது என்னுடைய பொறுப்பும் கடமையும் ஆகும். 23 படங்களையும் தேர்ந்தெடுக்க முடியாததற்குக் காரணம் ஆரம்பத்திலேயே நிபந்தனைகளில் குறைந்த செலவிலே எடுக்கப்பட்ட தரமான படங்கள் என்று விளம்பரப்படுத்தி யிருக்கிறோம். அதற்குப் பிறகுதான் தேர்வுக்கு 23 படங்கள் வந்தன. நீதிபதியும் அவரோடு இணைந்து தேர்வு செய்த குழுவினரும் குறைந்த செலவை மாத்திரம் பார்க்காமல், தரமான படமா என்றும் பார்த்து தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்.

இவ்வளவு கண்டிப்பாக இருந்தால்தான் அடுத்த முறை குறைந்த செலவிலே மாத்திரமல்ல; தரமான படங்களையும் எடுக்க வேண்டுமென்ற எண்ணம் படம் எடுப்பவர்களுக்குத் தோன்றும் என்பதற்காகத் தான் 23-ல் பதினைந்தை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.



இன்னும் சொல்ல வேண்டுமானால் எந்தப் படத்தைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர்களுடைய தேர்வு முடிந்த பிறகு ஒட்டப்பட்ட அரக்கு முத்திரையிட்ட ஒரு கவரில் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களின் பெயர்கள் எனக்கு அனுப்பப்படும். அதைப் பிரித்துப் பார்த்து ஒப்புக் கொள்வதுதான் என்னுடைய பணி. ஒரு தகவல் என்ற அளவிற்குத்தான் அந்தப் பட்டியல் எனக்கு அனுப்பப்பட்டன. அதை நான் ஏற்றுக்கொண்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே நீதியரசர் பாஸ்கரன் அவர்கள் நீதிபதியாக இருந்து தேர்வு செய்த பட்டியல்கூட அப்படித் தான் வெளியிடப்படும்.

## அண்ணா அறிமுகப்படுத்திய திரைப்பட விருது வழங்கும் திட்டம்

திரைப்படங்களுடைய வளர்ச்சியையும் தரத்தையும் உயர்த்தும் நோக்கத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த 67 - 68ஆம் ஆண்டுக் காலத்திலேதான் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த கலைஞர்கள், சிறந்த தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தினார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## பரிசுத்தொகை உயர்வு

அந்தத் திட்டத்தின்படிதான் இப்போது சிறந்த தமிழ்ப் படங்களுக்கு மூன்று பரிசுகளும், சிறப்புப் பரிசு ஒன்றுமாக நான்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசுக்குரிய படத்திற்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும்,



இரண்டாம் பரிசுக்குரிய படத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசுக்குரிய படத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசு பெறும் படத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகின்றன. இதைச் சற்று உயர்த்தலாமே என்ற எண்ணம் தம்பி விஜயகாந்த் போன்றவர்களுக்கு உண்டு. என்னிடத்திலே பலமுறை எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

எனவே அவர்களுடைய முறையீட்டிற்கு அல்ல அல்ல வேண்டுகோளுக்கு அல்ல அல்ல, அன்புக் கட்டளைக்கு உடன்பட்டு முதல் பரிசுக்குரிய படத்திற்கு இனிமேல் இரண்டு இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசுக்குரிய படத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசுக்குரிய படத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசு பெறும் படத்திற்கு 75 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள் விருது பெறுவது மாத்திரமல்ல. இந்த ஆண்டு தம்பி சரத்குமார் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல திரைப்படக்கல்லூரி மாணவர்களுடைய திறமைக்கும் நாம் மதிப்பளித்திருக்கிறோம். மாணவர்களை மதிக்கிறோம் என்றதும் மாணவர்கள் நிறையப்பேர் இங்கே வந்திருக் கிறார்கள் என்பது கையொலியிலிருந்தே தெரிகிறது. அந்த மாணவர்களை எல்லாம் நான் வரவேற்கிறேன். அவர்களுடைய ஆர்வத்தை நான் போற்றுகிறேன், புகழ்கிறேன், பாராட்டுகிறேன்.

தமிழ்நாடு திரைப்படக்கல்லூரியின் வரலாற்றில் முதல் முறையாக 96-97ஆம் ஆண்டில் இந்நிறுவன மாணவர்கள் தயாரித்த ஆறு பட்டயப் படங்களைத் தேசிய திரைப்பட விழாவிலே பங்கேற்கச் செய்ததோடு திரு.வெங்கடேஷ் எனும் கலைஞருடைய பட்டயப் படமான "விடியலை நோக்கி" எனும் படம் சிறந்த படத்திற்கான விருதையும், சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற ஊக்கமளித்து உறுதுணை புரிந்தது இயக்குநர் அமிர்தம் என்பதை சுப்ரீம் ஸ்டார் இங்கே சுட்டிக்காட்டினார்.



### "அண்ணா வாழ்கின்றார்" படத்திற்கு தேசிய விருது

அமிர்தம் மாத்திரம் செய்துவிடவில்லை. தமிழக அரசு பின்னால் இருந்து ஊக்குவித்த காரணத்தால் அவர்கள் இந்தச் சிறப்பினைப் பெற்றார்கள். மேலும் மாதவ கிருஷ்ணனின் 'மல்லி' என்ற படமும், திரைப்படப்பிரிவின் சார்பிலே இயக்குநர் அமிர்தம் தயாரித்த "அண்ணா வாழ்கின்றார்" என்ற படமும் தேசிய அளவிலே விருதுகள் பெற்றன என்பது இந்த ஆண்டின் முக்கியத்துவமான செய்தியாகும்.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு வழங்கப்பட்ட மானிய உதவி கூட ஏற்கெனவே மூன்று இலட்ச ரூபாய் என்றிருந்து பிறகு இந்த ஆட்சியிலே ஐந்து இலட்ச ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு எட்டு திரைப்படங்களுக்கு 96இல் ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் நாற்பது இலட்சம் ரூபாயும், 97ஆம் ஆண்டில் 11 படங்களுக்கு ஐம்பத்தி ஐந்து இலட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு பதினைந்து படங்களுக்கு அந்த மானியங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன.

திரைப்படப்பிடிப்பில் இறந்து போகும் தொழிலாளர் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கும் திட்டத்தை 89-90ஆம் ஆண்டில் கொண்டுவந்ததும் நடைமுறைப்படுத்தியதும் இந்த அரசுதான்.

### திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து காப்புறுதி திட்டம்

96-97ஆம் ஆண்டில் திரைப்படத் தொழிலாளர் களுக்கு மேலும் நன்மை உண்டாக்கும் விதத்தில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 50 ஆயிரம் ரூபாய்க்கு காப்புறுதி செய்யக்கூடிய "விபத்து காப்புறுதித் திட்டம்" ஒன்றை நடைமுறைப் படுத்தியதும் இந்த அரசுதான். இத்திட்டத்தின் கீழ் விபத்திலே இறக்கும் திரைப்படத் தொழிலாளர் களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுறும் தொழிலாளர்களுக்கு அதற்குத் தகுந்தாற் போல் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. சண்டைக் காட்சியில் நடிக்கும் நடிகர்கள், பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாயும், அவர்கள் ஊனமுற்றால் 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இது 96-97ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வரும் திட்டமாகும்.



கேளிக்கை வரியிலிருந்து சில முக்கியமான படங்களுக்கு - தரமான படங்களுக்கு, சில குறிப்பிட்ட குறிக்கோளுக்காக எடுக்கப்பட்ட படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மை இந்தியா, சாதி ஜனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே, ஹவுஸ்புல் என்ற இந்தப் படங்களுக்கும், உயிரின் உயிரே என்ற இந்தி மொழியிலேயிருந்து டப் செய்யப் பட்ட படத்திற்கும் முழு வரிவிலக்குச் செய்யப் பட்டது.

கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் முதலில் 54 விழுக்காடு என்றிருந்ததை, 1989-ஆம் ஆண்டு 40 சதவிகிதமாகக் குறைத்தேன் என்பது உங்களுக்கும் தெரியும். அந்தக் கேளிக்கை வரியை 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக 1.8.98 முதலும். மேலும் இந்த ஆண்டு 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், பத்தாண்டுகளுக்கு முன் வெளிவந்த திரைப்படங்களுக்கான கேளிக்கை வரியை 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைத்தது இந்த அரசு. மொழி மாற்றம் செய்யப்பட்ட படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டதுபோல் கேளிக்கை வரி 1.8.98 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல இணக்க வரிமுறையும் அதற்கேற்றாற் போல் குறைக்கப் பட்டுள்ளது. இந்த வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத் துறையினருக்கு நாற்பது கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசு சலுகைகளை வழங்கியிருக்கின்றது.

விற்பனை வரிச் சட்டத்தின்படி திரைப்படங் களுக்கான உரிமை மாற்றம் மீது, 1.4.1986 முதல் 11.11.1999 வரை வணிகர்கள் செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததோடு, உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12.11.1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் இந்த அரசு குறைத்திருக்கிறது.

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த அரசின் பல்வேறு துறைகளுக்கும் சென்று அனுமதி பெற வேண்டிய சிரமத்தைப் போக்க அதற்கு ஒரே இடத்தில் அனுமதி வாங்கலாம் என்று தடைகளையெல்லாம் விலக்கி எளிதாக ஆக்கித் தந்துள்ள அரசும் இந்த அரசுதான். இந்த நடைமுறைகளால் தயாரிப்பாளர்களுக்குச் சிரமங்களைப் போக்கிடும் வண்ணம் தடையில்லாச் சான்றிதழ் இன்றி அரசுக்குச் சொந்தமான அனைத்து இடங்களிலும் படப்பிடிப்பு நடத்துவதற்கு ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் ஒற்றைச் சாளரத் திட்டத்தை 96 - 97இல் இந்த அரசு நடைமுறைப் படுத்தியிருக்கின்றது.



ஒரு நாளைக்கு வெளிப்புறப் படக்காட்சி எடுக்க 5,000 ரூபாய் என்று இருந்ததை 1,000 ரூபாய் என்றும், 2,500 ரூபாய் என்றிருந்ததை 500 ரூபாய் என்றும் 96ஆம் ஆண்டிலிருந்து குறைத்து ஆணையிட்டதும் இந்த அரசுதான்.

மிக முக்கியமாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு - நான் இப்போது பொறுப்பேற்ற பிறகு என்று

சொல்லவில்லை. கடந்த காலத்தில் பொறுப்பேற்ற அந்தக் காலக் கட்டத்திலேயே கலைத்துறை வித்தகர்கள் பெயரால் சில விருதுகள் வழங்கப்பட்டன.



நல்ல திறமையான இயக்குநர்களுக்கு, பழம்பெரும் ராஜா சாண்டோ அவர்களுடைய பெயரால் ராஜா சாண்டோ விருதும், கலைத்துறையிலே புரட்சி செய்தவர்களுக்கு, கலைத் துறையிலே திருப்பத்தை ஏற்படுத்திய வர்களுக்கு, கலைத் துறையிலே வித்தகர்களாக திகழ்பவர்களுக்குக் கலைவாணர் என்.எஸ்.கே. பெயரால் விருதும், திரைப்படத் துறையிலே சாதனை பல புரிந்தவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா விருதும், அதைப் போலவே கலைத்துறையிலே புகழ்பெற்ற நடிகர்களுக்கு மக்கள் திலகம் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரால் எம்.ஜி.ஆர். விருதும், நல்ல கவிஞர்களுக்கு கவிஞர் கண்ணதாசன் விருதும் வழங்கப்பட்டு வருகின்றது.

**சிவாஜி கணேசன் விருதும்
தியாகராஜ பாகவதர் விருதும்**

அதைப்போலவே நடிகர் திலகம் சிவாஜி விருதும் வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்து - ஆனால் அது எந்த விழாவிலும் வழங்கப்படவில்லை. எனவே கடந்த முறை நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே அதைக் குறிப்பிட்டேன்.

**நடிகர் திலகம் சிவாஜியின் பெயரால்
வழங்கப்படும் என்று அறிவித்தேன்**

அதற்கேற்ப வருகின்ற டிசம்பர் அல்லது ஜனவரித் திங்களில் 1999-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்குகின்ற விழாவில் நடிகர் திலகம் சிவாஜி விருதும் ஒருவருக்கு வழங்கப்படும் என்பதோடு நல்ல பின்னணிப் பாடகருக்கு எம்.கே.தியாகராஜ பாகவதர் பெயரால் தியாகராஜ பாகவதர் விருதும் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விருதும், ஐந்து பவுன் எடையுள்ள தங்கப் பதக்கமும் கேடயமும் அவர்களுக்குப் பரிசாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த நல்ல விழாவிலே நான் நம்முடைய கலையுலகப் பெருமக்களையெல்லாம் கேட்டுக் கொள்வது ஒன்றுண்டு. இன்று காலையிலே ஒரு செய்தி பார்த்தேன். தம்பி விஜயகாந்த் அவர்கள் சாதிகளின் ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக ஒரு பயணம் நடைபெற்று அதிலே கலந்துகொண்ட நண்பர்களுக்கெல்லாம் பரிசுகளை வழங்கிப் பாராட்டிப் பேசிய பேச்சை நான் பத்திரிகையிலே படித்துப் பார்த்தேன்.

கலையுலகத்திலே உள்ளவர்கள் முயன்றால் சாதி மதச் சச்சரவுகளை வீழ்த்தி மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சாதிகளால் ஏற்படக்கூடிய சண்டையை நிறுத்தி சமரச உணர்வை எங்கும் உருவாக்க முடியும். அதற்கு கலைஞர்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. ஏனென்றால் இனிப்போடு கலந்துதான் சில மருந்துகளைத் தர வேண்டியிருக்கின்றது. எனவே கலையுணர்வோடு கூடிய கருத்து மருந்துகளைத் தர கலையுலக நண்பர்கள் எல்லாம் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விருது பெற்றவர்களுக்கெல்லாம் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த அளவில் விடை பெறுகிறேன்.

- வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற
திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில்
முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 10-8-2000
ஆற்றிய உரை

• • •



# போதுமான தண்ணீர் பருகாமையால் தோன்றும் நோய்கள்

— E.V.S. சுந்தரம்

அன்றாடம் ஒவ்வொருவரும் போதுமான நீரைப்பருக வேண்டும். அங்ஙனமின்றிப் போதுமான நீர் பருகாமையால் நிணநீர் சரிவர மென்மையாக்கப்படாமல் கெட்டியாகிவிடுகிறது. அதனால் நிணநீர் குழாய்களின் மூலம் பாய்ந்தோட முடியாமல் போய்விடுகிறது. இங்ஙனம் படிந்த கழிவுகளைக் காலி செய்வது உடலின் இயல்பான வேலைகளில் ஒன்று. இக்கழிவுகளே, காதுகளிலிருந்து குறும்பையாகவும் கண்களிலிருந்து பீழையாகவும், மூக்கிலிருந்து சளியாகவும் வெளிப்படுகின்றது. இக்கழிவுப் பொருட்கள் வெளியேறாவிடின் அவையே பல்வேறு நோய்களுக்கு மூல காரணமாய் அமைந்து விடுகின்றன.




**காய்ச்சல்**

வேண்டாத கழிவுப் பொருள்களை உடல் வெளியேற்ற முனைகிறது. அளவுக்கு மீறி உள்ள நிணநீரை உடல் எரித்து வெளியேற்ற விரும்புகிறது. அத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதற்குக் கடும் காய்ச்சலும், வேகமான இதயத் துடிப்பும், அதிகமாக மூச்சு வாங்குதலும், மிகுந்த தாகமும் அறிகுறிகள் ஆகும்.

காய்ச்சல் இருக்கும் போது உடலின் வெப்பம் தணிவதற்கு நீர் பெரிதும் பயன்படும். இது இதயத் துடிப்பை நிதானமாக்கி, சுவாசத்தைச் சீராக்குகின்றது. மஞ்சள் நிறமாகச் செல்லும் சிறுநீர் தண்ணீரால் நிறம் மாறுகிறது. காய்ச்சல் தணிகிறது.

**பெரிய அம்மை**

பெரிய அம்மை தோன்றுவதற்கு முன் இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடும் ஜுரம் ஏற்படுகின்றது. அப்போதும் உடலின் கழிவுப் பொருட்கள் வெளியேறாவிடில் தான் கொப்புளங்கள் தோன்றுகின்றன. இந்நோய்க்கும் நம் முன்னோர்கள் கையாண்ட வழியே சிறப்பானதாகும். இந்த நோய் கண்டவர்களுக்கு உடலுக்குக் குளிர்ச்சி ஊட்டக்கூடிய இளநீர், மோர், நீராகாரம், பழச்சாறு முதலியவற்றையே கொடுத்து வந்தனர். இங்ஙனம் நீர்ச்சத்து நிரம்பிய உணவின் மூலமும் போதிய தண்ணீரைப் பருகுவதன் மூலமும் இந்நோயை நம் முன்னோர்கள் கட்டுப்படுத்தினர்.

**மஞ்சக் காமாலை**

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் மஞ்சள் நிறம் அடைகிறது. சிறுநீர் மஞ்சளாக வெளியேறுகிறது. கல்லீரலில் இருக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக இந்நோய் உடலில் தோன்று கிறது.

மஞ்சக் காமாலை நோயை மருந்துகளின் மூலம் குணப் படுத்த முயல்வது சில சமயம் பேராபத்தை விளைவிக்கின்றது. நோயாளிகளுக்குப் பசி இராதாகையால் உணவை வற்புறுத்தி அளிக்கக்கூடாது. பழச்சாற்றையும், தண்ணீரையும் நிறைய உட்கொள்ளுதல் வேண்டும். தண்ணீர் ஒன்றே உடலின் வெப்பத்தை தணித்து, சிறுநீரின் மஞ்சள் நிறத்தையும் மாற்றிவிடும்.

இந்நோய்களைத் தவிர மலேரியா, டைபாயிடு, பிளேக் முதலிய நோய்களை நீக்கவும் தண்ணீர் பெரிதும் உதவுகிறது.

**ஹெர்னியா**

'ஹெர்னியா' என்ற குடலிறக்க நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை ஒன்றே

வழியாகும் என்று இன்றைய அல்லோபதி மருத்துவம் கூறுகிறது. குடலிறக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களை அதிகப்படியான தண்ணீர் குடிக்க வைத்தும் உணவைக் குறைத்தும், முக்கியமாகப் புரதச்சத்துள்ள உணவைக் குறைத்தும் சிகிச்சை செய்தால் குணமாக்கிவிட முடியும்.

### நரம்பு மண்டலம்

மேலும் மூளையும் நரம்பு மண்டலமும் இரத்த ஓட்டத்தினாலும் நிணநீர் ஓட்டத்தினாலும் எப்போதும் ஈரப்பசை உள்ளனவாக இருக்கின்றன. நம் உடலில் உள்ள எல்லா உயிர் அணுக்களுக்கும் செல்கின்ற இரத்தத்தில் ஆறில் ஒரு பங்கு இரத்தம் மூளைக்குச் செல்கிறது. மூளையும் நரம்பு மண்டலமும் ஈரப்பசையுடன் இருப்பதால் உடலுக்கு அதிர்ச்சிகளைத் தாங்கும் சக்தி அதிகரிக்கின்றது. இந்த ஈரப்பசை எப்போதும் வறண்டு விடாமல் இருக்க நிணநீரும், இரத்தமும் அப்பகுதியில் நன்கு பாய்ந்து செல்ல வேண்டும். இதற்குப் போதிய நீர் பருகுவது இன்றியமையாததாகும்.

இவை தவிர சிறுநீரக நோய், சிறுநீரகப் பையில் கல் இருத்தல், வயிற்றில் வாயு சம்பந்தமாக ஏற்படும் நோய்கள், குடல் வீக்கங்கள், குடல் புண்கள், நெஞ்சுக் கரிப்புகள் முதலிய தொல்லைகளும் வேண்டிய அளவு நீரை உட்கொள்ளாதிருப்பதினால் விளைகின்றன.

### குழந்தைப் பருவ நோய்கள்

சிறு குழந்தைகளுக்கு வரும் அனைத்து நோய்களுமே மருந்தின்றி குணமாகக் கூடியன. ஏனெனில் குழந்தைகளின் உடலில் தடுப்பாற்றல் நிறைய இருக்கின்றது. உதாரணமாக, சின்னம்மை, வீக்கங்கள், சிரங்குகள், வேனிற் கட்டிகள், பெரியம்மை, அக்கி முதலியன கடும் காய்ச்சலுடனோ குறைந்த காய்ச்சலுடனோ அடிக்கடி குழந்தைகளுக்கு வருகின்றன. அவற்றின் மூலம் உடலில் சேர்ந்துள்ள கழிவுப் பொருட்களும், நச்சுப் பொருட்களும் அடியோடு நீக்கப் படுகின்றன. இவற்றில் பெரும்பான்மை யானவை, உரிய நேரங்களில் போதுமான அளவு நீரைக் குழந்தைகளுக்குத் தராததாலேயே ஏற்படுகின்றன.




### நீரும் மண்ணீரலும்

அதிகப்படியாக உள்ள நிணநீர் மண்ணீரலில் சேமிக்கப்படுகிறது. அது பின்னர் உணவில் குறைந்த அளவு மாவுப்பண்ட சத்து இருக்கும் போதும், பட்டினி கிடக்கும் போதும் பயன்படுத்தப்படுகிறது. அப்படிப் பயன்படுத்தப் போதிய தண்ணீர் வேண்டற்பாலதாகும்.

### நீரும் பித்தநீரும்

பித்தநீர் பைக்குள் உற்பத்தி ஆகும் பித்த நீர் சிறு குடல்மேல் முனைக்குள் செல்ல வேண்டும். அங்ஙனம் செல்ல வேண்டுமாயின் பித்தநீர் மிகவும் திரவ நிலையில் இருக்க வேண்டும். இல்லாது போனால் பித்தநீர், பைக்குள்ளேயே தங்கி அழுகிக் கெட்டுப் போய் இறுகிக் கல்லாகி விடும். எனவே பித்த நீர் திரவநிலை அடைந்து நுண்துளை வழியே செல்வதற்குத் தண்ணீர் இன்றியமையாததாகிறது.

### நீரும் கல்லீரலும்

கல்லீரலில் சுரக்கும் திரவம் தடைப்பட்டால் செரிப்பு வேலை சரிவர நடைபெறாது. அப்போது மலம் நிறம் வெளுத்து வெண்மையாக இருக்கிறது. கல்லீரலில் சுரக்கும் திரவம் மலத்தின் நாற்றத்தை மாற்றக் கூடியது. இதற்கெல்லாம் போதிய நீர் பருகுதல் வேண்டத் தக்கதாகும்.



மேலும் மஞ்சக் காமாலையில், இரத்தம் மஞ்சள் நிற திரவத்தால் நிரப்பப்படுவதால் உடல் முழுவதுமே மஞ்சள் நிறமாகிறது. திரவப் பொருள் குறைவினால் கல்லீரல் செயலற்றுவிடுவதே இதற்குக் காரணம்.

### நீரும் சிறுகுடலும்

இரைப்பையில் பதமாக்கப்பட்ட உணவுப் பொருள் மேற்கொண்டு நன்கு ஜீரணம் ஆவதற்குரிய வேலை சிறு குடலில் நடைபெறுகின்றது. போதிய நீர் இல்லாவிடின் ஜீரண வேலை தடைப்பட்டு, உணவுப் பொருள் சிறு குடலிலேயே தங்கி விடும். அப்பொருள்கள் குடலில் புண் ஏற்படவும், வீக்கங்கள் ஏற்படவும் காரணமாகின்றன. இதனால் சிறுகுடலின் சில பாகங்கள் தமது விரைப்பை இழந்து விடுகின்றன.

இதுவரை கூறப்பட்டவையால் நீரின் இன்றியமையாமையைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். குடிநீர் கொண்டு பல நோய்களைக் குணமாக்கிக் கொள்ள முடியும் என்பதனையும், போதிய நீர் பருகாமையே பல நோய்களுக்கு மூல காரணம் என்பதனையும், உடலின் பல்வேறு உறுப்புக்கள் நீரோடு கொண்டுள்ள தொடர்பினையும், செரிப்புக்கு நீர் உதவும் தன்மையினையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

### உமிழ்நீர்

வாயில் சுரக்கும் உமிழ் நீரில் 95% நீர் கலந்துள்ளது. வாயில் இடப்படும் உணவுப் பொருளுடன் உமிழ்நீர் நன்கு கலப்பது செரிப்பு வேலையை எளிமையாக்கும். சாதாரணமாக எச்சில் என்று இகழப்படும் இவ்வுமிழ்நீர் கிருமி நாசினியாகப் பயன்படுகின்றது. தமிழ்நாட்டுச் சித்தர்கள் தம் உடலில் சிறு சிராய்ப்பு ஏற்பட்டு, இரத்தம் கசிந்து புண் உண்டாயின், இயற்கை முறையில் உமிழ் நீரை அதன்மீது தடவி வந்தனர். இவ்வுமிழ் நீர் நச்சுக் கொல்லியாகச் செயல்பட்டு அக்காயத்தை ஆற்றி வந்தது.

பசு, நாய், பூனை முதலிய விலங்குகள் தம் உடலை நாவால் நக்கித்தூய்மை செய்து கொள்வதை நாம் அன்றாடம் காண்கிறோம். மேலும் அவைகள் தம் உடலில் உண்டாகும் காயங்களையும் நாக்கால் நக்கி நீக்கிக் கொள்வதைக் காணலாம்.

இளமையில் ஏற்படும் முகப்பருவுக்கு நல்ல மருந்து உமிழ் நீராகும். காலையில் முகப்பருவின் மேல் உமிழ் நீரைத் தடவி, சற்று நேரம் காயவைத்து, அதற்குப் பின் குளிக்க வேண்டும். மாலையிலும் இங்ஙனம் செய்து முகத்தைக் கழுவிக்கொள்ளலாம். காசு செலவாகாத இயற்கை வைத்தியமாகும் இது.

ஒவ்வொருவரும் தம்முடைய உமிழ் நீரையே தடவிக் கொள்ள வேண்டும். ஒருவர் எச்சில் பிறருக்கு நச்சு என்பதை அறிய வேண்டும்.

இத்தோடு உமிழ் நீரை அடிக்கடி துப்பி வீணாக்கலாகாது. இது நன்கு சுரப்பதற்கு நீர் குடிப்பது இன்றியமையாததாகும்.

### தண்ணீர் குடிப்பது பற்றிய பொதுவான தகவல்கள்

1. நாளொன்றுக்குப் பொதுவாக இரண்டு முதல் மூன்று லிட்டர் வரை நீர் பருகலாம். அதாவது எட்டு முதல் பன்னிரெண்டு குவளை நீர் குடிக்கலாம். குளிர், மழைக்காலத்தில் இரண்டு லிட்டரும் கோடைக் காலத்தில் மூன்று லிட்டரும் பருகலாம்.
2. உணவு உண்பதற்குக் குறைந்தபட்சம் முக்கால் மணி நேரத்திற்கு முன்னர் நீர் அருந்த வேண்டும்.
3. உட்கொள்ளும் போது நீர் அருந்துவது ஜீரணத்திற்குக் கேடு செய்யும்.
4. உண்டபின், குறைந்தபட்சம் ஒன்றரை மணி நேரத்திற்குப் பின்னரே நீரைப் பருக வேண்டும்.
5. பருகும் போது நிதானமாகவும், மெதுவாகவும், கவனமாகவும் பருகுங்கள். ஒவ்வொரு முறையும் ஒரு வாயளவே அருந்துங்கள். 'மடக்' 'மடக்' என்று வேகமாக பருகுவது நல்லதன்று.
6. தண்ணீரை வாயின் வெப்பநிலை அடையும் மட்டும் வாயில் வைத்த பின்னரே விழுங்குதல் வேண்டும்.
7. ஐஸ் வாட்டர் அல்லது மிகக் குளிர்ந்த நீர், அதிகச் சூடான நீர் உடலுக்கு ஊறு விளைவிக்கும். இது செரிப்பு வேலையைத் தடை செய்யும்.
8. சிறுநீரக நோய் உள்ளவர்கள், தொந்தி மற்றும் ஊளைச்சதை உடையவர்கள் அளவாகத் தண்ணீர் பருக வேண்டும்.
9. கடும் வெயிலிலும், சுரங்கத்திற்குள்ளும் வேலை செய்பவர்களும், மிகுதியான வியர்வை சுரக்கும் உடல் பெற்றவர்களும் சாதாரணமாக உட்கொள்ளும் அளவைவிட அதிகமாகப் பருகுதல் வேண்டும்.
10. வாந்தி, பேதி நோயின் போது அதிகத் தண்ணீரை உட்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவை வாந்தியோ, பேதியோ ஆகும்போது உடனே ஒரு டம்ளர் நீர் அருந்துதல் வேண்டும். உடலில் நீர் வற்றிவிடும் நிலைமையைத் தோற்றுவிக்கக்கூடாது.
11. டைபாயிடு, காய்ச்சல் இருக்கும்போது தண்ணீர் குடிக்க வேண்டும்.
12. சளி, தடுமம், தும்மல், இருமல் முதலியன இருக்கும் போது வெந்நீர் குடிக்க வேண்டும்.
13. பொதுவாக, ஆறின வெந்நீரைக் குடிப்பது விஞ்ஞான முறைப்படி நல்லதாகும்.

*நன்றி : நீரமுதம்*

*வெளியீடு :*
**தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கம்,**
**மதுரை–20.**

# ரெட்டைமலை சீனிவாசன் அஞ்சல்தலை வெளியீட்டு விழா

ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள் எந்த இழிவான சொல்லால் ஒரு சமுதாயம் அழைக்கப்படுகிறது என்று கருதப்பட்டதோ அது இழிவான சொல் அல்ல, ஏற்றமிகு சொல் என்று கருதி அதை உறுதிப்படுத்தி அந்தச் சொல்லை தனக்கு உரித்தாக்கிக் கொண்டு நான் பறையன் என்று சொன்னவர், அறிவித்தவர்.

### தீண்டத்தகாதவன் என்று எழுதிக் காட்டியவர்

ரெட்டைமலை சீனிவாசன் 1930–ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டிற்கு அவர், டாக்டர் அம்பேத்கர், சர் ஏ. டி. பன்னீர்செல்வம், ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் சென்றிருந்தபோது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அவர்களையெல்லாம் விருந்துக்கு அழைத்து ஒவ்வொருவருடைய கையையும் குலுக்கிக் கொண்டு வரும்போது ரெட்டைமலை சீனிவாசன் கைகுலுக்காமல் தன் கையை இழுத்துக் கொண்டுவிட்டார். இழுத்துக் கொண்டது மாத்திரமல்ல, திகைத்து நின்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஏன் என்று காரணம் கேட்டபோது நான் எங்கள் நாட்டில் தீண்டத்தகாதவன், என்னை நீங்கள் தீண்டக்கூடாது, நான் பறையன் என்று சொன்னது மாத்திரமல்ல, அதே வாசகங்களை எழுதி தன் கோட்டிலும் மாட்டிக் கொண்டிருந்தார். அதில் நான் பறையன், என் பெயர் ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன். எங்கள் நாட்டில் நான் தீண்டத்தகாதவன் என்று எழுதி மாட்டிக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் ஜார்ஜ் மன்னர் உங்கள் நாட்டில் இப்படிப்பட்டவர்கள் யாராவது கீழே விழுந்தால்கூட தூக்கிவிடமாட்டார்களா, அவர்கள் சாதியின் பெயரால் அப்படியே கிடக்கத்தான் வேண்டுமா என்று கேட்டார்.





அதற்கு ஆமாம், உங்கள் ஆட்சியிலே இந்தியாவிலே இதுதான் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு தான் இந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சி வித்து ஊன்றப்பட்டது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அந்தப் புரட்சிக்கு வித்தூன்றிய பெருமகன்தான் மறைந்தும் மறையாத மாணிக்கமாக ஜொலித்துக் கொண்டிருக்கின்ற ரெட்டைமலை சீனிவாசன் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்க்கும்போது தீண்டாமை கொடுமை காரணமாக அவர் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமல்ல. அவர் தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில், கோழியாளம் கிராமத்தில் 7.7.1859–இல் பிறந்தார். எல்லோரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள், நான் ராஜ்பவனிலிருந்து வருகிற வழியிலே கூட நம்முடைய அமைச்சர் தமிழ்க்குடிமகன் முற்றும் கற்றவர், இருந்தாலும் அடுத்த நிகழ்ச்சி என்ன என்று கேட்டபோது ரெட்டைமலை சீனிவாசன் நிகழ்ச்சி என்று சொன்னேன். அதற்கு அவர் ஓ, அதுவா, செங்கற்பட்டு மாவட்டத்தில் ரெட்டைமலை என்ற ஊரில் பிறந்தவர் அவர் என்றார். நான் சிரித்துக் கொண்டே சும்மாயிருந்தேன். இதை தம்பி துரைமுருகனுக்கும், வீராசாமிக்கும்கூட அவர் விளக்கி ரெட்டைமலை என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் பிறந்தவர் அவர் என்று சொன்னார்.

நான் பிறகு கோபாலபுரம் வந்து விட்டு மீண்டும் இந்த விழாவிற்கு வருகிற வழியிலேதான் சொன்னேன், என்ன புலவர், ரெட்டைமலை என்பது ஊரா என்று கேட்டேன். ஆமாம் அண்ணே என்றார். அது ஊரல்ல, ரெட்டைமலை என்பது அவருடைய தந்தையின் பெயர். தந்தையின் பெயரையும் இணைத்து வைத்துக் கொண்டவர் ரெட்டைமலை சீனிவாசன், அதனால்தான் அவரை எல்லோரும் தாத்தா என்று அழைக்கிறார்கள் என்று கூட நான் கற்பனை செய்து கொண்டேன். அவரை தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் என்று தான் அந்தச் சமுதாயமக்கள், பெரியவர்கள், படித்த இளைஞர்கள் எல்லாம் அழைப்பார்கள். இங்கே கூட இளையபெருமாள் பேசும்போது அப்படி அழைத்ததைக் கண்டீர்கள். தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் என்றும் தந்தை சிவராஜ் என்றும் அழைப்பார்கள். அந்த அளவிற்கு அந்தச் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட பெருமகன் ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள்.

### சமுதாயத் தொண்டிலும் பொதுத்தொண்டிலும் ஈடுபட்டார்

அவர்கள் 1865 முதல் 1878 வரையில் தஞ்சாவூருக்கு வந்து வாழ்ந்தார். காரணம் தீண்டாமைக் கொடுமை காரணமாக செங்கற்பட்டில் வாழப் பிடிக்காமல் தஞ்சைக்கு வந்தார். அங்கென்ன வாழ்கிறது? அங்கேயும் இந்தக் கொடுமை. பிறகு அங்கிருந்து கோவைக்குச் சென்று படிப்பைத் தொடர்ந்தார். அங்கேயும் தீண்டாமைக் கொடுமை காரணமாக பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டு, அதன் பின்னர் ஊட்டியில் 10 ஆண்டு காலம் கணக்கராக வேலை செய்தார். 1890–இல் சென்னையில் குடியேறினார். பிறகு, பல அரசாங்கக் குறிப்பேடுகளையும், வரலாற்று நூல்களையும் கல்வெட்டுக்களையும் ஆராய்ந்தார். தென்னிந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்து, மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளை நேரில் கண்டறிந்தார். அப்படி கண்டறிந்ததின் விளைவுதான் சமுதாயத் தொண்டில், பொதுத் தொண்டில் ஈடுபடத் தொடங்கினார்.

சென்னையில் "ஆதிதிராவிட மகாஜன சபை" என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். 1893–இல் பத்திரிகையைத் தொடங்கினார். எவ்வளவு துணிவோடு என்று பாருங்கள். வேதனையை உள்ளத்திலே அடக்கிக் கொண்டு எரிமலை உணர்வோடு அவர் தொடங்கிய பத்திரிக்கைக்குப் பெயர் பறையன். அதே ஆண்டில், சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் இந்தியாவிலேயே முதன் முறையாக ஆதிதிராவிட மக்களின் மாநாட்டைக் கூட்டிய பெருமை ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குத்தான் உண்டு. அதன் பிறகு 1895–இல் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து தனித்தன்மையோடு போராட வேண்டும் என்று ஒரு உணர்வை ஏற்படுத்தினார். அன்றைக்கு சென்னையிலே இருந்த எல்ஜின் பிரபுவிடம் ஒரு குழுவாக ரெட்டைமலை சீனிவாசன் தலைமையிலே சென்று "ஆதிதிராவிட மக்கள் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும், அனைத்துச் சமூகத்தினருக்கும் சரி நிகர் சமானமாக வாழ வழி செய்துதர வேண்டும்" என்ற கோரிக்கை மனு ஒன்றை அன்றைக்கு எல்ஜின் பிரபுவிடம் கொடுத்தார்கள். அதன்பின், 1903 வரை பல மாநாடுகளை நடத்தி, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மக்களின் நலன்களைப் பாதுகாக்க ஆங்கில அரசுடன் தொடர்ந்து போராடினார் என்பதுதான் அவருடைய வாழ்க்கைக் குறிப்பு.

### தென்னாப்பிரிக்கா நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளர்

பின்னர், தென்னாப்பிரிக்கா சென்று நேட்டாலில் தங்கி, நீதிமன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அங்கே காந்தியடிகளும் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த கால கட்டம் அது. அப்பொழுதுதான் அண்ணல் காந்தியடிகளுக்குத் தமிழில் கையெழுத்திடக் கற்றுக் கொடுத்தார். குறளின் அருமைபெருமைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தார் என்றெல்லாம் சரித்திரக் குறிப்புகள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. 1921–ஆம் ஆண்டு இந்தியா திரும்பி சமுதாய நலப்பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று அவர் முடிவு கட்டியபோது சமுதாயத்திற்காகப் பாடுபடக் கூடிய கட்சி எது என்று தேடிப்பார்த்து அவருடைய கண்ணெதிரே தென்பட்டது நீதிக்கட்சிதான் என்ற காரணத்தால் இன்றைய திராவிட இயக்கம், அன்றைய நீதிக்கட்சியிலே சேர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

சென்னை மாகாண சட்டமன்றத்தில் 15 ஆண்டுகள் அவர் பணியாற்றியிருக்கிறார். அந்தப் பொறுப்பை தன்னுடைய சமுதாய மக்களின் நல்வாழ்வுக்கு

எப்படியெல்லாம் செலவிட வேண்டுமோ அந்த அளவிற்கு அவர் செலவிட்டார். அப்பொழுதுதான் அவருடைய துணைவியார் ரங்கநாயகி அம்மாள் அவர் அளவிற்குச் சமுதாயச் சீர்திருத்தத்திலே நாட்டம் கொண்டவர்கள். அவரையொத்த சமூகப் புரட்சியாளராக அம்மையார் திகழ்ந்தார். அவருடைய தூண்டுதலின்படி சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை ரெட்டைமலை சீனிவாசன் கொண்டு வந்தார். அதுதான் சம உரிமை எல்லா மக்களுக்கும் வேண்டும். தொட்டால் தீட்டு, தண்ணீர் எடுத்தால் தீட்டு என்ற அநியாயங்கள் எல்லாம் ஒழிய வேண்டும் என்ற வகையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மான வாசகத்தை தன்னுடைய துணைவியார் இறந்த கல்லறையின் மீது கல்வெட்டுக்களாகப் பொறித்த பெருமையும் ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குண்டு.



1928–ஆம் ஆண்டு சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் ஐக்கிய மகாசபை (Madras Depressed Classes Federation) தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்குப் பிறகுதான் அவர் இலண்டன் வட்டமேஜை மாநாட்டிற்கு ஒரு முறையல்ல – 30–ஆம் ஆண்டும், 31–ஆம் ஆண்டும் இரண்டு முறை இலண்டன் மாநகர் சென்று வட்டமேஜை மாநாட்டிலே கலந்து கொண்டு இந்திய மக்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் சம உரிமை பெற வேண்டும் என்பதற்காகவும் அயராது தொண்டினை ஆற்றியிருக்கிறார், குரல் கொடுத்திருக்கிறார். இவருக்குப் பல பட்டங்கள் வழங்கப்பட்டன. ராவ் சாகிப், ராவ் பகதூர், அதன் பிறகு திவான் பகதூர் என்ற பட்டங்கள் எல்லாம் அவருக்கு வழங்கப்பட்டாலுங்கூட, தனக்கு உரிய பட்டம் பறையர் என்ற அந்தப் பட்டம் தான் என்கின்ற அந்த உறுதியோடு வாழ்ந்த பெருமகன் ரெட்டைமலை சீனிவாசன் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒன்றை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சென்னை அடையாறில் இந்து தியாசாபிகல் சொசைட்டி இருக்கிறதே, அந்த சொசைட்டியிலேதான் உயர்சாதிக்காரர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு இயக்கத்தை உருவாக்க வேண்டுமென்று முடிவெடுத்து இயக்கத்தை உருவாக்கினார்கள். க்யூம் என்பவர் தலைமையிலே, அப்போதுதான் காங்கிரஸ் பிறந்தது. அதிலே நீங்களும் சேரவேண்டுமென்று இவருக்கு அழைப்பு வந்தபோது அவர் சொன்னது இந்தக் காங்கிரஸ் இயக்கம் அரசியல் விடுதலைக்காக என்றால் அது சரிபட்டு வராது, நான் முதன்முதலாக நாட்டுக்குத் தேவை என்று கூறுவது சமுதாய விடுதலை. சமுதாய விடுதலைக்குப் பிறகுதான் அரசியல் விடுதலை. சமுதாயத்திலே மனிதனை மனிதனாக மதிக்காத ஒரு நிலைமை இருக்கும்போது எந்த மனிதனுக்காக சுதந்திரம் வாங்கப் போகிறீர்கள். மனிதனுக்காக சுதந்திரம் வாங்குங்கள். முதலிலே எங்களை மனிதனாக ஆக்குங்கள் என்கின்ற அந்தக் குரலைக் கொடுத்து அந்த அழைப்பைப் புறக்கணித்தவர் ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள். சமுதாயத்திலே இருந்த அந்த அக்கிரமங்களைக் கண்டு அவர் எப்படி துடித்தார் என்பதற்கு அவரே எழுதியுள்ளதை படித்துக் காட்ட விரும்புகிறேன். அவர் சொல்லுகிறார் :

### தீண்டாமைக் கொடுமையால் ரெட்டைமலை சீனிவாசனுக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பு

“கோயம்புத்தூர் கலாசாலையில் படிக்கும்போது, மொத்தம் 400 பிள்ளைகளில் 10 மாணவர்களைத் தவிர,



மற்றவர்கள் உயர்சாதி மாணவர்கள். இப்பள்ளியில் சாதிக் கோட்பாடுகள் மிகவும் கவனமாக கடைப்பிடிக்கப்பட்டன. இந்த மாணவர்களுடன் பழகுவதால் சாதி, குடும்பம், இருப்பிடம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டால் என்னைத் தாழ்ந்தவனாக நடத்துவார்கள் என்பதற்காகவே பயந்து, பயந்து படித்தேன். இதற்காக, நான் பள்ளியின் மணி அடிக்கும் வரை எந்த மாணவனின் கண்ணுக்கும் தெரியாத வண்ணம் எங்கேயாவது மறைவான இடத்தில் உட்கார்ந்து படித்துவிட்டு, மணி அடித்ததும் நேராக வகுப்புக்குச் சென்று இடத்தில் அமர்ந்து விடுவேன். மாலை நேரத்தில் மணி அடித்ததும் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து போகாமல் கிடுகிடுவென வீட்டிற்கு ஓடிவிடுவேன். நான் எப்பொழுதும் மற்ற பிள்ளைகளுடன் கூடி விளையாடுவது கூட இல்லை. இருந்தாலும் விளையாட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தும் அவர்களுடன் விளையாடக்கூட இந்த நாட்டிலே உரிமை இல்லையே என்று பல நாட்கள் நான் ஏங்கியதுண்டு”

என்று தீண்டாமைக் கொடுமை காரணமாக ஏற்பட்ட வேதனையை அவர் எவ்வளவு அச்சத்தோடு அன்றைக்கு மாணவப் பருவத்தை நகர்த்த வேண்டியிருந்தது என்கின்ற மனக் கொதிப்பை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அது அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய புத்தகத்திலே படிக்கும்போது நம்முடைய நெஞ்சம் எல்லாம் எரிகிறது எவ்வளவு கொடுமை. இந்த நாட்டிலே இருந்திருக்கிறது? அந்த வேதனையை எண்ணுகிற நேரத்தில் அவ்வளவு கொடுமையும் இன்றைக்கு இல்லாவிட்டாலுங்கூட அந்தக் கொடுமைகளையெல்லாம் சாய்க்க வேண்டுமென்பதற்காக வெடி வைக்கப்பட்டது சுயமரியாதை இயக்கத்தால், திராவிட இயக்கத்தால், தந்தை பெரியாரால் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதனால்தான் இன்றளவும் திராவிட இயக்கத்திற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உள்ள உறவை யார் யாரோ பிரிக்க எண்ணினாலுங்கூட அதைப் பிரிக்க முடியவில்லை.

1884–ஆம் ஆண்டு சென்னை அடையாறு தியாசாபிகல் சொசைட்டி ஆண்டு விழாவில் ரெட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டார். அப்போதுதான் தீர்மானம் போடுகிறார்கள். இந்தியர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு அரசியல் இயக்கம் தோற்றுவிப்பது என்ற முடிவு ஏற்பட்டது. அதன்படி 1885–ஆம் ஆண்டு க்யூம் தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் எனும் இயக்கம் தொடங்கியது. இதைப்பற்றி ரெட்டைமலை சீனிவாசன் சொல்கிறார்.

அப்போதைய நிலையில் இந்தியாவில் இரண்டு பிரச்சினைகள் இருந்தன. அவற்றுள்,

1. இந்தியர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து உரிமைக்காகவும், பூரண சுதந்திரத்திற்காகவும் போராட வேண்டிய பிரச்சினை,
2. இந்தியாவில் பிறந்து, வளர்ந்து பூர்வீகக் குடிமக்களாக வாழ்ந்து வரும் செட்டியூல்டு இனமக்கள், இந்து மதத்தில் இருக்கும் தீண்டாமையை எதிர்த்து விடுதலை அடையப் பாடுபடுவது.

இந்த இரண்டு பிரச்சினைகளில் சமுதாய விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதையே நான் விரும்புகிறேன். எனவே, காங்கிரஸ் இயக்கத்தில் இணைய இயலாது என்று திட்டவட்டமாக அன்றைக்குத் தெரிவித்தபோது இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இப்போது அவருடைய அஞ்சல்தலையை வெளியிட்டிருக்கிறோம். கலைவாணர் அரங்கம் நிரம்பி வழிகின்ற அளவிற்கு குழுமியிருக்கிறோம். ஆனால் நாட்டில் இன்றைக்கு என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் புகைச்சல், பூசல், போராட்டங்கள் இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலே இன்றைக்கு தென்றல் ஓரளவிற்கு வீசுகிறது என்றாலுங்கூட, கடந்த காலங்களில் அடிக்கடி பூகம்பங்களும் சாதிச்சண்டை என்ற புயல்களும் ஏற்பட்டதை நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது. இவைகள் எல்லாம் சாதியின் பெயரால் தனிப்பட்ட ஒருவர் இருவர் தங்களை வளர்த்துக் கொள்ளச் செய்கின்ற முயற்சிகளால் ஒரு மொத்த உணர்வு, சமுதாய மக்கள் அனைவரும் விடுதலை அடையவேண்டும், சுயமரியாதை பெறவேண்டும், உரிமைகளைப் பெற வேண்டும் என்கின்ற அந்த உணர்வு அடிப்பட்டுப் போய்விடுகின்றது. யாரோ ஒரு சிலருக்காக சங்கங்கள், நிறுவனங்கள், இயக்கங்கள் என்கின்ற பெயரால் இன்றைக்கு ஏற்பட்டு சாதிப் பூசல்களின் காரணமாக அதை மற்ற எதிரிகள் பயன்படுத்திக் கொண்டு ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளும்போது இரண்டு ஆடுகள் மோதிக் கொள்ளும்போது சுலபமாக ரத்தம் குடிக்கின்ற ஓநாய்களைப் போல் இன்றைக்கும் சில சாதிகள் நாட்டிலே இருக்கின்றன என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அவர்களிடத்திலே எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய புகழ் ஓங்குக, பரவுக, அவருடைய எண்ணங்கள் வென்றிடுக, அவருடைய கொள்கைகள் உறுதியோடு வென்றிடுக, அதற்காக நாம் புரவலாக முயற்சிகளை மேற்கொண்டு பாடுபடுவோம், அந்த உறுதியை இங்கே மேற்கொள்வோம் என்று கூறிவிடை பெறுகிறேன்.

*– முதலமைச்சர் கலைஞர் அவர்கள்*
*15–8–2000 அன்று ரெட்டைமலை சீனிவாசன்*
*நினைவு அஞ்சல்தலையினை வெளியிட்டு*
*ஆற்றிய உரையிலிருந்து...*

• • •

# அரசின் அரும் செயல்களில் தொழிற்சாலைகள் பங்கேற்க வேண்டும்

**– முதலமைச்சர் கலைஞர்**

தமிழகத்தில் பிராக்ஸ்ஏர் கம்பெனி திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் ஒரு நாளைக்கு 150 டன் எடையுள்ள வாயுக்களை காற்றிலிருந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலையை அமைத்துள்ள நிகழ்ச்சி இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 60 கோடி ரூபாய் முதலீட்டில் அமைந்துள்ளது இந்தத் தொழிற்சாலை. இதற்கு மூலப்பொருள் எதுவும் தேவையில்லை. காற்று ஒன்றே போதும். காற்றுதான் இந்தத் தொழிற்சாலைக்கு மூலப்பொருள். காற்றிலிருந்து ஆக்ஸிஜன், நைட்ரஜன், ஹைட்ரஜன், கார்பன்-டை-ஆக்சைடு ஆகிய வாயுக்களையும், தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வேறுபிற வாயுக்களையும் காற்றிலிருந்து பிரித்து உற்பத்தி செய்வதுதான் இந்தத் தொழிற்சாலையினுடைய நிலை. எனவே தான் இத்தொழிற்சாலைக்கு மூலப்பொருள் எதுவும் தேவையில்லை என்று சொன்னேன்.

இத்தொழிற்சாலை முக்கியமாக இத்தொழில் வளாகத்தில் அமைந்துள்ள செயின்ட்கோபைன் கண்ணாடித் தொழிற்சாலையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அமைந்துள்ள பல்வேறு தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் வாயுக்களை தயாரித்து வழங்கும். இத்தொழிற்சாலை ஆண்டுக்கு 43 ஆயிரத்து 200 டன் எடையுள்ள நைட்ரஜன் வாயுவையும், 12 ஆயிரம் டன் எடையுள்ள திரவ நைட்ரஜனையும், 36 ஆயிரம் டன் எடையுள்ள திரவ ஆக்ஸிஜனையும், 124 டன் எடையுள்ள ஹைட்ரஜன் வாயுவையும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது.

இத்தொழிற்சாலையும், இதன் இயக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ள ஐந்து மெ.வா. உற்பத்தித் திறனுள்ள துணை மின்நிலையம் ஒன்றும் (21.8.2000) திறக்கப்படுகின்றன. இவைதவிர, ஓசூரில் ''சுந்தரம் ஃபாஸ்டனர்ஸ்'' தொழிற்சாலையில் ஒரு பிரிவையும், அம்பத்தூர், கோவை ஆகிய இடங்களில் மாதம் 40,000 சிலிண்டர்களில் வாயுக்களை நிரப்பும் தொழிற் சாலைகளையும் இந்நிறுவனம் அமைத்துள்ளது. கும்மிடிப்பூண்டில் Dissolved acetylene தொழிற்சாலையையும் அமைத்துள்ளது.

சென்னையில் மட்டும் பிராக்ஸ்ஏர் கம்பெனிகள் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ ஆக்ஸிஜன் வாயு வழங்கப்படுகிறது. சென்னை அப்போலோ மருத்துவமனையில் உடனுக்குடன் ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் வழங்கப்படுவதற்காக பிராக்ஸ்ஏர் இருப்புக் கிடங்கு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்பது முக்கியமான செய்தியாகும். இந்நிறுவனம் தயாரிக்கும் வாயுக்களை விநியோகம் செய்வதற்காக தமிழகம் முழுவதும் பெரிய அளவிலான 25 விநியோகிப்பாளர்கள் உள்ளனர்.

பிராக்ஸ்ஏர் நிறுவனம் மொத்தம் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகம் முழுவதும் பல்வேறு தொழிற்பிரிவுகளை அமைத்துள்ளது. இவற்றின் மூலம் தமிழகத்தில் ஏறத்தாழ 2000 தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

**விண்ணப்பம் கிடைத்த ஒரு மாதத்தில் 5 ஏக்கர் நிலத்தை சிப்காட் வழங்கியது**

இந்தத் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் வளாகத்தில் பிராக்ஸ்ஏர் தொழிற்சாலையை அமைப்பதற்காக 28.4.1998 அன்று இந்நிறுவனத்தினால் முதல் விண்ணப்பம் அளிக்கப்பட்டது. அந்த விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய இதர விவரங்கள் விடுபட்டிருந்தமையால் அவற்றையும் சேர்த்து 17.7.1998 அன்று விண்ணப்பம் முழுமையாக சிப்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த விண்ணப்பம் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள், அதாவது 11.8.1998 அன்று சிப்காட் நிறுவனம் பிராக்ஸ்ஏர் தொழிற்சாலை அமைத்திட 5 ஏக்கர் நிலத்தினை வழங்கியது என்பதுதான் குறிப்பிடத்தக்கது. விரைவாக தொழில் வளர்வதற்கான ஆர்வம் கொண்ட அரசு இது என்பதற்கு அடையாளமாகத்தான் விண்ணப்பம் கிடைத்த ஒரு மாதக் காலத்திற்குள்ளாக இந்தத் தொழிற்சாலை அமைப்பதற்காக ஐந்து ஏக்கர் நிலத்தை அரசு வழங்கியிருக்கிறது. பிராக்ஸ்ஏர் கம்பெனிக்கு தினமும் தேவைப்படும் 65,000 லிட்டர் தண்ணீரையும் சிப்காட் நிறுவனம் வழங்குகிறது.

பிராக்ஸ்ஏர் கம்பெனி திருப்பெரும்புதூருக்கு அருகில் உள்ள போண்டூர் கிராமத்தினை தத்து எடுத்துக் கொண்டு அதன் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அதற்குரிய தொடக்க விழாவும் இன்று (21.8.2000) காலையில் நடைபெற்றுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பொது மருத்துவம், குடிநீர் வசதி, கல்வி வளர்ச்சி, துப்புரவு ஆகிய முக்கியமான பணிகள் இக்கிராமத்தில் பிராக்ஸ்ஏர் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

இது ஒரு நல்ல முன்னுதாரணம். இதைப் போல ஒவ்வொரு தொழிற்சாலையும் பக்கத்திலே உள்ள கிராமங்களைத் தத்து எடுத்துக் கொண்டு அந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு துணை நிற்பார்களேயானால் அது பெரிதும் பாராட்டி வரவேற்கத் தக்க ஒன்றாகும்.





அரசாங்கத்தினுடைய பணியைப் பங்கிட்டுக் கொள்கின்ற இந்த அரும் செயலை நான் வரவேற்கிறேன். இது தொடரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இதைத் தொடர்ந்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையிலிருந்து...

இந்தியா உட்பட 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் பிராக்ஸ்ஏர் நிறுவனம் தொழிற்சாலைகளை அமைத்து வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வது மகிழ்ச்சியளிக்கிறது.

உலகின் மிகச் சிறந்த 500 தொழில் நிறுவனங்களில் ஒன்றாக பிராக்ஸ்ஏர் கம்பெனி விளங்குவது பாராட்டுக்குரியதாகும். பிராக்ஸ்ஏர் நிறுவனம் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துகிறது. சுற்றுப்புறச் சூழல்களைப் பாதுகாக்கிறது. உற்பத்தியாகும் பொருள்களின் தரத்தினை உயர்த்துகிறது.

60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 150 டன் எடையுள்ள வாயுக்களை உற்பத்தி செய்யும் . இது குறிப்பாக, இந்த வளாகத்தில் அமைந்துள்ள செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலையின் தேவைகளை நிறைவு செய்வதுடன் வேறு பல தொழிற்சாலைகளின் தேவைகளையும் ஈடுசெய்கின்றது.

இந்த தொழிற்சாலைக்குத் தேவைப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (SIPCOT) அளித்துள்ளது.

**தமிழக அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் இணைய தளம்**

தொழில் முனைவோர்களுக்கும், தொழில் முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்பளிக்கும் மிகச் சிறந்த இடமாகத் தமிழகம் விளங்குவது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இது இந்த அரசின் தொழில் முன்னேற்றத்தை விரும்பும் ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கொள்கையின் மூலமே நிகழ்ந்துள்ளது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் ஏற்கெனவே முதலிடத்தைப் பெற்றுள்ளது. தொழில் முனைவோர் உலகம முழுவதிலும் இருந்து தமிழகத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதற்கு மேலும் ஒரு ஆதாரத்தை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (GUIDANCE BUREAU) இணைய தளம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

அதில், தமிழகத்தைப் பற்றிய புள்ளி விவரக் குறிப்புகள், உள்கட்டமைப்பு மேம்பாடுகள், மாநில அரசின் கொள்கைகள், தகவல் தொழில்நுட்பக் கொள்கை, பல்வேறு நிறுவனங்கள் வழங்கி வரும் உதவிகள், புதிய முதலீடுகள் விவரம், ஒற்றைச் சாளர வசதி, தொடர்புடைய பிற விவரங்கள் - ஆகியன இந்த இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ளன.

இந்த இணையத் தளத்தினை நாள்தோறும் உலகம் முழுவதிலும் இருந்து ஏறத்தாழ 1250 தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் பார்வையிடுகின்றனர். இந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாதமும் அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் 37 நாடுகளைச் சேர்ந்த 29 ஆயிரத்து 22 தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களால் இத்தளம் பார்வையிடப்பட்டுள்ளது. சில முக்கிய நாடுகளிலிருந்து இந்த இணைய தளத்தினைப் பார்வையிட்ட தொழில் முனைவோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 6,759 |
| இந்தியா | 2,436 |
| சிங்கப்பூர் | 442 |
| சுவிட்சர்லாந்து | 326 |
| மலேசியா | 273 |
| ஜப்பான் | 172 |
| பிரான்ஸ் | 141 |
| ஜெர்மனி | 121 |
| இத்தாலி | 116 |

2000 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்த இணையத் தளத்தை தொடர்பு கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இம்மாதம் 13-ஆம் தேதி வரை 15,377 பேர் இந்த இணையத் தளத்தினைப் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு உலக அளவில் பெருகிவரும் ஆர்வத்தினை இந்தத் தகவல்கள் உறுதி செய்கின்றன.

**- திருப்பெரும்புதூர் சிப்காட் வளாகத்தில் 'பிராக்ஸ்ஏர்' நிறுவனத்தை 21-8-2000 அன்று தொடங்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

# இந்தியப் பொருளாதார மையம் - 'எக்னாமிக் டைம்ஸ்' ஏடு தகவல்

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு 1989–91 கால கட்டத்தில் அப்போதைய அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்திருந்தது.

1991–96–ஆம் ஆண்டுகளில் கடந்த கால ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, ஐந்தாம் இடத்திற்கு இறங்கிவிட்டது.

1996–இல் கலைஞர் அரசு மீண்டும் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், தொழில் வளர்ச்சிக்குத் தொடர்ந்து அளித்து வரும் ஆக்கம், ஊக்கம் ஆகியவற்றின் காரணமாக தமிழகம் தொழில் வளர்ச்சியில் மீண்டும் தலைநிமிர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது.

22.5.2000 அன்றைய நிலையில் "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" C.M.I.E. - Centre for Monitoring Indian Economy வெளியிட்ட அறிக்கையின்படி 1 இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது.

அண்மையில் 21.7.2000 அன்று "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" C.M.I.E. - Centre for Monitoring Indian Economy இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்னும் நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று தமிழ்நாடு முதலிடம்

(இது ஒப்புதல் அளிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ள இந்தியாவின் மொத்த முதலீட்டில் 12.07 சதவீதம் ஆகும்)

1 இலட்சத்து 58 ஆயிரத்து 410 கோடியே 30 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று மராட்டியம் இரண்டாம் இடம் (11.89 சதவீதம்)

1 இலட்சத்து 38 ஆயிரத்து 135 கோடியே 20 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று குஜராத் மூன்றாம் இடம் (10.37 சதவீதம்)

1 இலட்சத்து 32 ஆயிரத்து 44 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று ஆந்திரம் நான்காம் இடம் (9.11 சதவீதம்)

1 இலட்சத்து 12 ஆயிரத்து 373 கோடியே 40 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று ஒரிசா ஐந்தாம் இடம் (8.44 சதவீதம்)

99 ஆயிரத்து 564 கோடியே 45 இலட்ச ரூபாய் முதலீடுகள் பெற்று கர்நாடகம் ஆறாம் இடம் (7.47 சதவீதம்)

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு 21.7.2000 அன்று 13 இலட்சத்து 32 ஆயிரத்து 54 கோடியே 85 இலட்ச ரூபாய். அதிலே தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் மட்டும் 1 இலட்சத்து 60 ஆயிரத்து 804 கோடியே 40 இலட்ச ரூபாய்.

1996, மே மாதத்தில் நிலவிய முதலீடுகளைக் கவனித்தால் அகில இந்தியாவிலும் முதலீடு 10 இலட்சத்து 72 ஆயிரத்து 753 கோடி ரூபாய். அப்பொழுது தமிழகத்தில் முதலீடு 90 ஆயிரத்து 650 கோடி ரூபாய். அது அப்பொழுது இந்தியாவின் மொத்த முதலீட்டில் 8.45 விழுக்காடு.

ஏறத்தாழ இந்த நான்காண்டுகளில் இந்திய அளவில் முதலீடுகளில் ஏற்பட்ட உயர்வு 2 இலட்சத்து 59 ஆயிரத்து 301 கோடியே 85 இலட்ச ரூபாய். இதில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள உயர்வு 70 ஆயிரத்து 154 கோடியே 40 இலட்ச ரூபாய்.

ஆக, ஏறத்தாழ நான்காண்டுகளில் அகில இந்தியாவிலும் தொழில் முதலீடுகளில் ஏற்பட்டுள்ள உயர்வில், தமிழகத்தின் பங்கு 27.06 விழுக்காடு ஆகும். இதன் மூலம் தொழில் முதலீடுகளில் தமிழகம் இந்திய அளவில் முதலிடம் என ஏற்கெனவே பெற்றுள்ள நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது விளங்கும்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

**தி எக்னாமிக் டைம்ஸ்**

'தி எக்னாமிக் டைம்ஸ்' நாளேட்டில் 8–ஆம் தேதி வந்துள்ள கட்டுரையின் தமிழாக்கம் :

தொழில் முதலீடு செய்வதில் மாநிலங்களுக்கிடையே கடும் போட்டி நிலவி வரும் இத்தருணத்தில், மகாராஷ்டிரர்வை முந்திக் கொண்டு பெரும் இடைவெளியுடன் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. மகாராஷ்டிராவைவிட தமிழகம் ரூ.2394 கோடி அதிக முதலீடு செய்துள்ளது.

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் முதலீடுகள் குறித்து கடைசியாக ஒரு அட்டவணையினை வெளியிட்டுள்ளது. அதில் இவ்வாண்டு ஜூலை 31 வரையிலான முதலீடுகள் உள்ளன.

அதன்படி, தமிழ்நாடு ரூ.1,60,804 கோடி முதலீட்டுடன் முதலிடத்தில் உள்ளது.

மகாராஷ்டிரா இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு அதன் முதலீடு ரூ.1,58,410 கோடி என்ற அளவில் உள்ளது. அதையடுத்து, குஜராத் உள்ளது. (அதன் முதலீடு ரூ.1,38,135 கோடி). ஆந்திர மாநிலம் தொடர்ந்து நான்காவது இடத்தில் உள்ளது. அதன் முதலீடு ரூ.1,33,535 கோடி. அதைத் தொடர்ந்து ஒரிசா மாநிலம் உள்ளது. அதன் முதலீடு ரூ.1,12,373 கோடி.

மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், கர்நாடகம் தனது முதலீட்டை ரூ.96,564 கோடியாக அதிகரித்துக் கொண்டுள்ளது.

பீகார் மாநிலம் ரூ.44,600 கோடியாகவும், கேரளாவில் ரூ.43,132 கோடியாகவும், உத்திரபிரதேசத்தில் ரூ.74,271 கோடியாகவும் அதன் முதலீடுகள் உள்ளன.

ஏப்ரல் 30–ஆம் தேதி இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தில் வெளியான பட்டியல்படி, மகாராஷ்டிரம் ரூ.1,57,236 கோடி முதலீட்டுடன் முதலிடத்தில் இருந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் ரூ.318 கோடி குறைவாக அதாவது ரூ.1,56,918 கோடி முதலீட்டில் இரண்டாவது இடத்தில் இருந்தது. அதை வைத்து பார்க்கும் போது தமிழகத்தின் இப்போதைய வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.

அப்போதிருந்து தமிழகமும், மகாராஷ்டிரமும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் முதலீடுகளை உயர்த்தத் தொடங்கின. அவைகளுக்கிடையே நடந்த இந்தப் போட்டியில் தமிழகம் வெற்றி பெற்று, ரூ.2,394 கோடி வித்தியாசத்தில் முன்னணிக்கு முதலிடத்திற்குச் சென்றுவிட்டது.

அதுவுமின்றி, நடைமுறைப்படி பார்த்தால் தமிழகத்தில் ரூ.3,886 கோடி கூடுதலாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம், மகாராஷ்டிரா மாநிலம் ரூ.1,174 கோடியளவிற்கே கூடுதலாக முதலீடுகளைச் செய்துள்ளது.

கர்நாடாகவில் புதிய முதலீடுகள் ரூ.2,384 கோடியாகவும், ஆந்திராவில் ரூ.1,496 கோடியாகவும் உள்ளன.

அதேசமயம், ஏப்ரல் – ஜூலை மாதங்களுக்கிடையே முதலீடுகளைப் பொறுத்தவரையில் குஜராத்தில் ரூ.805 கோடியும், கேரளாவில் ரூ.1,266 கோடியும் குறைந்துள்ளது ஆச்சரியப்படக்கூடியதாகும்.

★ ★ ★

## மனிதனுடைய மதிப்பு எவ்வளவு?

*ஒரு சிஷ்யன் தன் குருவிடம் சென்று, "குருவே! ஒரு மனிதனுடைய மதிப்பு எவ்வளவு என்பதை நீங்கள் கூறமுடியுமா?" என்று கேட்டுக் கொண்டான்.*

*குரு அந்த சிஷ்யனிடம் ஒரு விலையுயர்ந்த வைரக்கல்லைக் கொடுத்து, "இதை பல வியாபாரிகளிடம் காண்பித்து இதற்கு அவர்கள் எவ்வளவு விலை கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பதை கேட்டறிந்து வா. ஆனால் இதை யாருக்கும் விற்று விடாதே" என்று சொல்லி அனுப்பினார்.*

*அந்த சிஷ்யன் ஒரு ஆரஞ்சுப்பழ வியாபாரிடம் சென்று அந்த வைரக்கல்லை காண்பித்து, "இதை நான் விற்க விரும்புகிறேன். இதற்கு நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்?" என்று கேட்டான்.*

*"இதற்கு நான் இரண்டு ஆரஞ்சுப் பழங்களைக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்று அந்த ஆரஞ்சு பழ வியாபாரி கூறினார்.*

*ஒரு உருளைக்கிழங்கு வியாபாரி நான்கு கிலோ உருளைக்கிழங்குகளைக் கொடுப்பதாக கூறினார்.*

*சிறிய தங்க நகைகளைச் செய்து வரும் ஒரு சாதாரண ஆசாரி அதற்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.*

*பலவிதமான விலையுயர்ந்த வைரக்கற்களை விற்றுவரும் மிகப் பெரிய வைர வியாபாரி அந்த வைரக்கல்லை நன்கு பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "இது அபூர்வமாகக் கிடைக்கும் ஒரு விலையுயர்ந்த வைரக்கல். இதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்" என்று கூறினார்.*

*அந்த சிஷ்யன் தன் குருவிடம் திரும்பிச் சென்று நடந்த அனைத்தையும் எடுத்துச் சொன்னான்.*

*குரு சிஷ்யனைப் பார்த்து, "இப்போது நீ மனிதனின் மதிப்பு எவ்வளவு என்பதைத் தெரிந்து கொண்டிருப்பாய். ஒருவன் தன்னை இரண்டு ஆரஞ்சுகளுக்கும் விற்றுக்கொள்ளலாம். நான்கு கிலோ உருளைக்கிழங்குகளுக்கும் விற்றுக்கொள்ளலாம், ஆயிரம் ரூபாய்க்கும் விற்றுக்கொள்ளலாம். ஆனால் மனிதன் விலைமதிக்க முடியாத ஒரு சிறந்த வைரம். அவன் தன்னை மலிவாக இழந்துவிடக்கூடாது" என்று கூறினார்.*

*தகவல் : பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள் நூலிலிருந்து...*

# நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறப்புவிழா

இந்த விழாவில் மண்ணின் மைந்தனாகி நான் கலந்து கொள்கின்றேன் என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். மண்ணின் மைந்தன் என்பது நாகப்பட்டின மாவட்டத்திற்கும் அதிலே உள்ள திருக்குவளைக்கு மாத்திரம் உரியதல்ல. அப்படித்தான் என்று நான் சொன்னால், நான் நாகப்பட்டினத்திற்கும், திருக்குவளைக்கும் முதலமைச்சர் ஆவேனே தவிர, தமிழ்நாட்டு முதலமைச்சராகக் கருத முடியாது. எனவே தமிழ்நாட்டு மண்ணுக்கு மைந்தனாக இருந்து சிறப்பாக நாகை மண்ணையும் கவனித்துக் கொள்வேன் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கவி காளமேகத்திடம் இளைஞர்கள் செய்த குறும்பு

கவி காளமேகம் ஒருமுறை நாகப்பட்டினத்திற்கு இரவு நேரத்தில் வந்து தனக்கு உணவு தேவை என்பதற்காக, எங்கே உணவு கிடைக்கும் என்று தேடி அலைந்த பொழுது யாரோ சொன்னார்கள், அந்தக் கோவிலில் உணவு வீற்கிறார்கள். அங்கே போய் வாங்கிச் சாப்பிடலாம் என்று. அதைக் கேட்ட காளமேகம் அந்தக் கோவிலுக்கு அருகே வந்தார். அங்கே நிலவு ஒளியில் நான்கைந்து பாலகர்கள், இளைஞர்கள் பாக்குகளை வைத்து கோலி விளையாடிக் கொண்டிருந்தார்கள். காளமேகத்தைப் பார்த்ததும் சிறுவர்களுக்கு இவர் கொஞ்சம் துடிப்பான புலவராயிற்றே இவரிடம் கொஞ்சம் குறும்பு செய்து பார்க்கலாம் என்று அவர்களும் தயாரானார்கள். காளமேகம் அந்தப் பையன்களைப் பார்த்து "தம்பீ, சோறு எங்கே விக்கும்?" (விற்கும்) என்று கேட்டார். அதற்கு ஒரு பையன் "சோறு தொண்டையில் விக்கும்" என்று சொன்னான்.

காளமேகத்திற்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அந்த மதில் சுவரில் எழுதினார். அதாவது சாபம் இட்டார். 'பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு' என்று எழுதும் பொழுது கோவிலிலே மணி அடித்து விட்டது. உடனே 'பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு...' என்று எழுதியதை அப்படியே விட்டுவிட்டு அவசர அவசரமாக கோவிலுக்குப் போய்விட்டார். உடனே அந்தப் பையன்கள் அவர் எழுதி இருப்பதைப் பார்த்தார்கள். 'பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு' என்று எழுதி இருந்தார் அல்லவா? அதை அந்தப் பாலகர்களே பூர்த்தி செய்தார்கள். "பாக்கடிக்கும் பாலகருக்கு நாக்கு..." "தமிழ் மணக்கும் நன்னாகை" என்று எழுதினார்கள். அதாவது பாக்கடிக்கும் பாலகரின் நாக்குகூட தமிழ் மணக்கும் என்று எழுதினார்கள். அப்படிப்பட்ட நாகப்பட்டினத்தில் நிஜாமுகைதீனைப் போன்றவர்கள் நல்ல தமிழில் பேசி ஆட்சியைப் பாராட்டியது ஒன்றும் வியப்பில்லை. எனவே அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். அவரால் சட்டசபையிலே இப்படிப் பேச முடியாவிட்டால்கூட வாக்களித்த உங்களிடம் வந்து உண்மையைச் சொல்லித்தானே தீர வேண்டும் என்ற அளவில் அந்த உண்மைகளையெல்லாம் இங்கே சொல்லி இருக்கிறார். அவருக்கு மீண்டும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் 67–க்குப் பிறகு நான்காவது முறையாக இந்த ஆட்சி அமைந்த பிறகு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கான 10 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றது. இந்த ஆட்சி வந்த பிறகு எத்தனை மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட மாவட்டங்களுக் கெல்லாம் எவ்வளவு விரைவாக இந்த ஆட்சியிலே கட்டடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் ஆக்கபூர்வமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

உங்களுடைய மனதிலே எங்களைப் பற்றி வேறு எண்ணங்கள் இருந்தால் அதனைச் சற்று ஒதுக்கிவைத்துவிட்டு நல்ல காரியங்கள் நடைபெறுகின்றனவா? இல்லையா? என்று நடுநிலையோடு சிந்திக்க வேண்டும். இன்று காலையிலேயே தம்பி கோ.சி.மணி கடற்கரையைப் பார்த்துவிட்டு வரலாம் வாருங்கள் என்று என்னை அழைத்தார். எதற்கு என்று கேட்டேன். அதற்கு அவர் நமக்கு நாமே திட்டத்தின்படி அந்த கடற்கரை அழகுபடுத்தப்பட்டிருக்கிறது. அதனை வந்து பாருங்கள் என்றார். இந்த கடற்கரை சென்னை கடற்கரையைப் போல அவ்வளவு நீளமான, அழகான கடற்கரை இல்லை. உலகப் புகழ்பெற்ற கடற்கரை அல்ல. சிறிய அளவில் இருந்தாலும்கூட கடற்கரை கடற்கரைதான். அந்த கடற்கரைகூட எவ்வளவு அசிங்கமாக, ஆபாசமாக அருவருக்கத்தக்க வகையிலே ஒரு காலத்திலே இருந்தது என்பதை நானும் பார்த்திருக்கிறேன். நீங்களும் பார்த்திருக்கிறீர்கள்.





இன்றைக்கு இந்த சிறிய கடற்கரையைக் கூட சிங்காரமாக, சுத்தமானதாக, தூய்மையானதாக வைத்திருக்கக்கூடிய ஒரு நிலை நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முயற்சியினால், நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ஏற்பட்டிருக்கிறதென்றால், இப்படித்தான் தமிழகத்திலே பல காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நடக்காததை சுட்டிக்காட்டி, இது நடக்கவில்லையே நடக்கவில்லையே என்று சுட்டிக்காட்டலாம். அதுவேறு விவகாரம். எவ்வளவு பரந்த விரிந்த மாநிலம் தமிழ்நாடு என்பது உங்களுக்குத் தெரியும். ஆறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழுகின்ற தமிழகத்தில் ஐந்து கோடி மக்களுடைய ஆசைகளை நிறைவேற்றுகின்ற நேரத்திலே, ஒரு கோடி மக்களுடைய ஆசைகள் நிறைவேறாமல் இருக்கலாம். அதற்காக எல்லாமே நிறைவேறவில்லை என்று யாரும் சொல்லமுடியாது. ஆறு கோடி மக்கள் வாழுகின்ற மாநிலத்திலே ஒரு கோடி மக்களுக்குக்கூட நல்லகாரியங்கள் செய்யாமல், ஐந்தரை கோடி மக்களைக் கஷ்டப்படுத்துகின்ற காரியங்களைச் செய்து கொண்டிருந்தால், அதற்குப் பெயர் ஆட்சி அல்ல. அந்த ஆட்சி நல்ல ஆட்சியாகாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

### தொலைநோக்கோடு செய்ய வேண்டிய பணிகளை இந்த அரசு தொடர்ந்து செய்கிறது

எனவே தான் ஒரு சிறிய உதாரணமாகச் சொன்னேன், நாகப்பட்டினம் கடற்கரையிலே இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அழகு, அங்கே நடப்பட்டிருக்கின்ற செடிகள் எல்லாம் இன்னும் நான்கு ஐந்து ஆண்டு காலத்தில் மரங்களாக ஆனால், எவ்வளவு குளிர் தரும் சோலையாக அந்த இடம் மாறும் என்பதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று நடப்பதற்கு, நாளை நடப்பதற்கு அல்ல ஒரு அரசாங்கத்தின் காரியங்கள், ஆக்கபூர்வமான காரியங்கள் என்றால், தொலை நோக்கத்தோடு செய்யப்பட வேண்டிய காரியங்களை இந்த அரசு மறவாமல் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாமல் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், தொடர்ந்து செயல்படுவது என்கின்ற அந்த எண்ணத்தோடு இந்த காரியங்கள் இன்றைக்குத் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாத்திரம், நிறைவேற்றப்பட்டுள்ள சில முக்கிய பணிகளை எடுத்துக் கொள்வீர்களேயானால், இன்றைக்கு உள்ள நிலையில் நான் சொல்லுகின்ற புள்ளி விவரம், இருபத்தேழு கோடியே அறுபத்து மூன்று இலட்ச ரூபாய் செலவில் 8,844 ஆதிதிராவிட குடும்பத்தினருக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நான் சொல்லுகின்ற கணக்கு தமிழ்நாடு முழுவதும் அல்ல, இந்த நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மாத்திரம் சொல்லுகின்ற கணக்கு. இந்த மாவட்டத்தில் 1996–ஆம் ஆண்டில், இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வெளியிடப்பட்ட முதல் ஆணை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். தரைவரி ரத்து செய்யப்பட்டதாகும். அதிலே இலாபம் அடைந்தவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திலே மாத்திரம் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 335 பேர். திருக்குவளை, கீழ்வேளூர் ஆகிய இடங்களைத் தலைநகரமாகக் கொண்டு புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டது. புதிய வட்டங்களுடைய பயன்கள் மிக நன்றாக தெளிவாக உங்களுக்குத் தெரியும்.

### அடிக்கல் நாட்டப்பட்ட 57 பணிகளும் உடனடியாகத் துவங்கும்

இன்றைக்கு இந்த விழாவில், 18 கோடியே 75 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 174 கட்டடங்களும், வேறு பல திட்டங்களும் இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகின்றன. 5 கோடியே 85 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கும், செயல்படுத்தப் படவுள்ள திட்டங்களுக்கும் 57 அடிக்கற்கள் இன்றைக்கு நாட்டப்படுகின்றன. இந்த ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டால் அது உடனடியாக வேலை துவங்குவதற்காக நாட்டப்படுவதே தவிர, அந்த அடிக்கல்லை எங்கேயாவது நட்டுவைத்து, எதிர்காலத்திலே அதை காத்தவராயன், முனியன் என்று வணங்கக்கூடிய அளவிற்கு அப்படி அந்தக் கல்லை நாங்கள் யாரும் பாவிப்பதில்லை. உடனடியாக இந்த 57 பணிகளும் துவங்கும். 4 கோடியே 97 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் 6,106 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆக

மொத்தம் இன்று மாத்திரம் 29 கோடியே 58 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் இம்மாவட்டத்தில் இன்றைய விழா மூலம் செயலுக்கு வருகின்றன என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன், அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி, வருவாய்த்துறை அமைச்சர் ரகுமான்கான், விளையாட்டுத்துறை அமைச்சர் பழனிச்சாமி, உணவுத்துறை அமைச்சர் நேரு ஆகியோர் இந்த ஆட்சியினுடைய நலத்திட்டங்களை எல்லாம் அவரவர்களுடைய துறையைப் பொறுத்துச் செய்யப்பட்ட காரியங்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இங்கே கோ.சி.மணி பேச எழுந்த பொழுது அனைவரும் கைதட்டி வரவேற்றீர்கள். நான் அப்பொழுது துரைமுருகனிடம் கோ.சி.மணிக்கு எவ்வளவு வரவேற்பு உள்ளது என்று பார்த்தாயா? என்று சொன்னேன். காரணம், அந்த அளவிற்கு உழைக்கின்ற மனிதராக இருக்கின்றார் என்று நான் சொன்னேன்.

அவருடைய உழைப்பின் காரணமாகத்தான் இன்றைக்கு தமிழகத்திலேயே சேரிப்பகுதியானாலும், காலனிப் பகுதியானாலும், குடிசைப் பகுதியானாலும், கோபுரங்கள் போல் வீடுகள் அமைந்திருக்கின்றன. மாடிவீட்டுப் பகுதியானாலும், நடுத்தர வர்க்கப் பகுதியானாலும், உயர்தரவர்க்கப் பகுதியானாலும், அடிமட்டத்தில் உள்ள பகுதியானாலும், அந்தப் பகுதிகளிலே எல்லாம் இன்றைக்கு குடிப்பதற்குப் பாதுகாக்கப்பட்டக் குடிதண்ணீர் 95 சதவிகிதம் பேருக்குக் கிடைக்கிற தென்றால், அது கோ.சி.மணியினுடைய அயராத உழைப்பு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த அளவிற்கு அவர் உழைத்துக் கொண்டிருக் கின்றார். நான் அதுகண்டு உள்ளூர மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன். வெளிப்படையாக சொல் வதில்லை. இன்றைக்குத் தான் வெளிப் படையாகச் சொல்லுகின்றேன். இதற்கு முன்னால் சொல்லி யிருந்தால், கணக்கம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும் என்ற பயத்தில் சொல்லாமல் இருந்தேன்.



இந்த மாவட்டத்தில் கடந்த கால ஆட்சிக்கும் இந்த ஆட்சிக்கும் உள்ள ஒரு சில ஒப்பீட்டை மாத்திரம் சொல்கிறேன். யாரையும் குறைத்துப் பேச விரும்பவில்லை. முந்தைய ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில், 65 கி.மீ. தொலைவுள்ள சாலைகள் தான் மேம்படுத்தப்பட்டன. இந்த நான்கு ஆண்டுகளில், 632 கி.மீ. தொலைவுள்ள சாலைகள் மேம்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முந்தைய ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் நான்கு பாலங்கள் ஒரு கோடி ஐம்பத்து மூன்று இலட்ச ரூபாய் செலவிலே கட்டினார்கள். ஆனால் இந்த அரசு நான்கு ஆண்டுகளில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், பதினோரு கோடியே எழுபத்தாறு இலட்ச ரூபாய் செலவில் 21 பாலங்களைக் கட்டியுள்ளது.

பல்வேறு துறைகளுக்குக் கட்டடங்கள் கட்டியதில், கடந்த ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில், இரண்டு கோடியே ஐம்பத்தி இரண்டு இலட்ச ரூபாய் செலவில் முப்பத்து மூன்று கட்டடங்களைக் கட்டியுள்ளது. அப்பொழுது திருவாரூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்படவில்லை. அதனையும் சேர்த்து இந்த வேலைகள் நடைபெற்றுள்ளது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில், இருபத்தி இரண்டு கோடியே எழுபத்தைந்து இலட்ச ரூபாய் செலவில், நூற்று தொன்னூற்றாறு கட்டடங்களை நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் இந்த அரசு கட்டியுள்ளது என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தை நான் தான் துவக்கினேன் என்பது உங்களுக்குத் தெரியும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் தமிழகத்திலேயே, திராவிட இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு பெரியாரின் தொண்டராக, அண்ணாவுக்கு அன்னையாக எங்களுக்கெல்லாம் தாயாக விளங்கி இந்த தமிழகத்திலே ஆற்றிய சமுதாயத் தொண்டு சாதாரணமானது அல்ல. எனவேதான், அவருடைய பெயரால், ஏழை எளிய வீட்டு பெண்களுக்குத் திருமண உதவி இலவசமாக



வழங்குவது என்ற திட்டத்தை தொடங்கி, அதற்கு மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் என்ற பெயர் சூட்டினேன். ஏழை வீட்டுப் பெண்களுக்குத் திருமணம் என்றால், அவர்கள் எட்டாவது வரை படித்திருந்தால், ஐந்தாயிரம் ரூபாய் நிதியுதவி என்றும், பின்னர் அதனை பத்தாயிரம் ரூபாய் என்றும் உயர்த்தினோம்.

கடந்த ஆட்சியில் அந்த திட்டத்தின்படி, ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து மூன்று பெண்களுக்குத்தான் உதவி அளிக்கப்பட்டது. இந்த நான்கு ஆண்டு காலத்தில், ஏழாயிரத்து நூற்று தொன்னூறு ஏழைப் பெண்களுக்குத் தலா பத்தாயிரம் வீதம் அந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பீடு ஒன்றிலிருந்து ஏற்றத் தாழ்வுகளைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இதைவிட அதிகமாக நான் விளக்க வேண்டும் என்று விரும்பவில்லை. என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பதையெல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

## நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்கள்

இங்கே உழவர் சந்தை தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. தமிழகத்திலே இதுவரையில் 61 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுடைய பொருள்களை அவர்களே விளைவித்து அவர்களே நேரடியாக விற்பனை செய்து, இடைத் தரகர்கள் இல்லாமல் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் காரியம். இந்த உழவர் சந்தையை ஆரம்பித்து, இதுவரையில் 61 உழவர் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ள காய்கறிகளின் எடை மாத்திரம் பத்து கோடியே நாற்பத்தொரு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டு கிலோ. விற்பனை மதிப்பு அறுபத்தேழு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து ஏழுநூற்று இருபது ரூபாய். கிட்டத்தட்ட அறுபத்தெட்டுக் கோடி ரூபாய். பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை இலட்சக்கணக்கில். பயனடைந்த நுகர்வோரின் எண்ணிக்கை கோடிக்கணக்கில். இந்த அளவிற்கு இந்த உழவர் சந்தை அனைவருக்கும் உவகை தருகின்ற அளவிற்கு உபயோகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## வருமுன் காப்போம் – கால்நடை பாதுகாப்புத் திட்டம்

அதைப்போல் வருமுன் காப்போம் திட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில், பாடிய நல்லூரில், 29.11.99–இல் துவங்கப்பட்டுள்ளது. இதுவரையில் நடைபெற்றிருக்கின்ற மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை ஐயாயிரத்து ஐநூற்று நாற்பத்து நான்கு. அதிலே பரிசோதனை செய்து கொண்ட மக்களின் எண்ணிக்கை ஐம்பத்து மூன்று இலட்சம் பேர். இதில் தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து எழுபத்து மூவாயிரம் பேர். இவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு இரண்டு கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து அறுபத்தாறாயிரத்து முன்னூற்று பதிநான்கு ரூபாய்.

மனிதர்களுக்கு வருமுன் காப்போம் திட்டம் இருந்தால் போதுமா? கால்நடைகளுக்கு வருமுன் காப்போம், வந்தபின் காப்பதும் நமது கடமையல்லவா? எனவேதான் கால்நடைகளுக்கும், இந்த திட்டத்தை விரிவுபடுத்தி, இதை காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 18.1.2000 அன்று தொடங்கி இதுவரையில் நடைபெற்றிருக்கின்ற முகாம் இரண்டாயிரத்து முன்னூற்று எண்பத்தெட்டு. அதிலே பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்தாறாயிரம். இந்த அறுபத்துநான்கு இலட்சத்தில், பசுக்கள் பதினாறு இலட்சத்து எண்பத்து நான்காயிரம். எருமைகள் மூன்று இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம், செம்மறி ஆடுகள் பத்தொன்பது இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரம். வெள்ளாடுகள் பன்னிரண்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரம். கோழிகள் பன்னிரெண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரம். இதர கால்நடை இனங்கள் இருபத்து மூன்று ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்று. இந்த கால்நடைகளுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்ட இந்த முகாம்களில் வழங்கப்பட்ட மருந்துகளின் மொத்த மதிப்பு ஒரு கோடியே பதினாறு இலட்சத்து ஏழாயிரத்து நூற்று ஐம்பத்தைந்து ரூபாய் இவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதைப்போல, பல திட்டங்களை இந்த அரசு அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இதிலே ஓர் அற்புதமான திட்டம் தான் பெரியார் நினைவு சமத்துவபுரத்திட்டம். அதுவும் நூறு என்ற எண்ணிக்கையை நெருங்கத் தொடங்கியிருக்கிறது. அந்த அளவிற்குப் பல்வேறு மாவட்டங்களில், பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாகியுள்ளது. சமத்துவபுரத்தின் நோக்கமே, எல்லோரும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பதுதான். உயர்ந்த சாதி என்றும், தாழ்ந்த சாதி என்றும் ஒருவருக்கொருவர் பேதம் பாராட்டாமல் அனைவரும் ஒரே இடத்தில் சமமாக வாழவேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களின் நினைவாக அந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்றோம். இப்படி சமுதாயத் துறையிலும், அரசியல் துறையிலும் ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்கின்ற ஆட்சி இந்த ஆட்சி என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இடையிலே யார் எதைச் சொன்னாலும், அதைக் காதிலே போட்டுக் கொள்ளாமல், காதிலே போட்டுக் கொண்டால் அதைப்பற்றி சிந்தித்து ஆராய்ந்து நல்லது எது கெட்டது எது என்கிற ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு இந்த இனிய விழாவிலே உங்கள் இன்முகங்களையெல்லாம் காண்பதற்கான வாய்ப்பு பெற்றமைக்காக மகிழ்ச்சி அடைந்து இந்த அளவில் விடை பெற்றுக் கொள்கின்றேன்.

*– நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை 27–8–2000 அன்று திறந்துவைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★

# சங்க இலக்கிய உத்திகள்

□ தமிழரசி

சங்கப் பாடல்கள் அரசவைப் பாடல்களாக விளங்குபவையாகும். இவற்றில் உயர்குடி மக்களின் காதலும் வீரமும் பெரிதும் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. சங்க காலச் சமுதாயம் இனக்குழு வாழ்க்கை மறைந்து பேரரசுகள் உருவான காலகட்டப் பகுதியாகும். எனவே அரசனை மையமாகக் கொண்ட ஒரு சமுதாய அமைப்பாக இக்கால கட்டம் இருந்து வந்தது. அரசனுக்குத் தன் அரசை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிய தேவையும், பேரரசாக உருவாக்க வேண்டிய தேவையும், இருந்தபடியால் போர் என்பது சமுதாய இயக்கத்தின் இன்றியமையாச் செயலாக இருந்தது. இனக்குழு வாழ்க்கையில் உணவு தேடுவதற்காகவும், தன்னைக் காத்துக் கொள்வதற்காகவும், மனிதன் போராட வேண்டியிருந்தது. ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தின் மேல் தனது தேவைகளுக்காக ஆதிக்கம் செலுத்துவது என்பது இந்த வாழ்க்கையில் இயல்பான ஒன்றாக இருந்தது. இந்தப் பண்பின் மாற்று வடிவத்தையே சங்ககாலப் பகுதியில் காண்கிறோம். ஒரு அரசன் இன்னொரு அரசனின் மேல் ஆதிக்கம் செலுத்துவது; அதற்கு உதவியாக ஒரு கூட்டத்தினரைப் பயன்படுத்திக் கொள்வது என்ற நிலையை இக்காலத்தில் காண்கிறோம்.

இனக்குழு வாழ்க்கையில் வலிமைமிக்கவனும் அனைவர்க்கும் உணவைப் பகிர்ந்தளிக்கக் கூடிய திறன் படைத்தவனும் தலைவனாகக் கருதப்பட்டான். இதன் தொடர்ச்சியாக ஒப்பில்லாத வீரமும் ஆற்றலும் உடையவன் சங்க காலத்தில் சிறந்த அரசனாகக் கருதப்பட்டான். இதன் விளைவாக உடல் வலிமைக்கு இன்றியமையாமை அளிக்கப்பட்டது.

இதனால் போர், வீரம், வலிமை என்பதற்கும் இவற்றையுடைய தலைவனைப் போற்றுதற்கும் முதலிடம் அளிக்கும் சமுதாயமாகச் சங்ககாலச் சமுதாயம் விளங்கியது. மேலும், அரசன் புலவர் உறவு முறையும் அரசு அமைப்பினுள் ஒன்றாக இயங்கியது. புலவரின் வாழ்க்கையியக்கத்திற்கும், அரசனின் செயலியக் கத்திற்கும் அரசனும், புலவரும் ஒருவரையொருவர் சார்ந்து இயங்கினர். அரசனை மையப்படுத்திய இத்தகைய சமுதாய அமைப்பில் அதற்கேற்ற இலக்கிய வடிவத்தையும் உத்தி முறைகளையும் சங்கப் பாடல்கள் பெற்று விளங்குகின்றன.

தலைவனை, அரசனை முன்னிறுத்திப் பாடுவது இப்பாடல்களின் தலையாய உத்தியாக விளங்குகிறது. இந்த முன்னிலைப்படுத்தும் உத்தியின் உடன் விளைவாக உரையாடல் உத்தி அமைகின்றது. இந்த உரையாடல் உத்தியைக் களமாகக் கொண்டே பிற உத்திகள் அனைத்தும் செயற்பட்டுள்ளன. அகம், புறம் என்ற இருவகைப் பாடுபொருளுக்கும் இத்தன்மை அடிப்படையாய் உள்ளது.

சங்க இலக்கிய உத்திகளனைத்தையும் சொல்நிலை உத்திகள், தொடர்நிலை உத்திகள், வருணனை உத்திகள், பொருளமைப்பு உத்திகள் என்ற நிலைகளில் பகுத்துக் காணலாம்.

ஒலிக்குறிப்புச் சொற்கள், தனித் தன்மை வாய்ந்த சொல்லாட்சிகள், எதிர்மறைச் சொல்லுணர்வு, சொற் பொருளுணர்வு மாற்றம், புதிர்ச் சொற்கள், குறியீட்டுச் சொற்கள், இரட்டுற மொழிதல் முதலானவை சொல் நிலையில் கையாளப்படும் உத்திகளாக விளங்குகின்றன.

இவை அனைத்தையும் அடிப் படையில் குறிப்புப் பொருளையும், உணர்வு நிலையையும் விளக்கும் சொற்கள், காட்சிப்படுத்தும் திறனும் உணர்வு நிலையும் கொண்ட சொற்கள் என்று இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

வினைமுற்றுத் தொடர்கள், வினையெச்சத் தொடர்கள், உம்மைத் தொடர், தொடரமைப்பு மாற்றம், தொடர் மடக்கு, பொருள் மயக்கத் தொடர், மரபுத் தொடர், அந்தாதித் தொடரமைப்பு ஆகிய அனைத்தும் தொடரமைப்பில் கையாளப்படும் உத்திகளாக விளங்குகின்றன. இவை குறிப்பாகவும் வெளிப் படையாகவும் பொருளை உணர்த்துகின்றன.

உவமை, உருவகம், மிகைவருணனை, மிகைக்கற்பனை, பின்புல வருணனை, உருக்காட்சி வருணனை, பொருள் மடக்கு ஆகியன வெளிப்படையாகப் பொருளையுணர்த்தும் வருணனை உத்திகளாகின்றன. இறைச்சி, உள்ளுறை, படிமக் காட்சி, தொகுநிலைக்கிளவி, இனமொழி, குறிப்பெச்சம், இகழ்ச்சிக்குறிப்பு, குறிப்பு முரண் ஆகியன குறிப்பாகப் பொருளையுணர்த்தும் வருணனை உத்திகளாகின்றன.

இவற்றுள் இறைச்சி, உள்ளுறை, படிமக்காட்சி தொகுநிலைக்கிளவி ஆகியன அகப்பொருளுக் குரியவையாகின்றன. இனமொழியும், குறிப்பெச்சமும் புறப்பொருளுக்குரியவையாகின்றன. இகழ்ச்சிக் குறிப்பு, குறிப்பு முரண் ஆகியவை அகம், புறம் என்ற இரண்டிற்கும் உரியவையாகின்றன.



பாடலின் தொடக்கம், முடிவு, யாப்பமைப்பு, பத்துப்பாட்டுப் பாடல்களின் நீண்ட அமைப்பு ஆகியனவும் உத்திகளாகச் செயல்படுகின்றன. ஆற்றுப்படுத்தும் முறை, முன்னிலைப்படுத்தும் முறை, நிகழ்ந்தது நினைத்தல், நிகழ்வது நினைத்தல், நிகழ இருப்பது நினைத்தல், நிகழ்ந்தது கூறல், சார்த்திக் கூறுதல், கனவு ஆகியன பொருளமைப்பு உத்திகளாகின்றன.

புறப்பாடல்களைக் காட்டிலும் அகப்பாடல்களில் குறிப்பு உத்திகள் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. காரணம் அகப்பாடல்களில் 'உரையாடல்' என்ற மொழிக்கூறு படைப்பாக்கக் கூறாக உருப்பெற்றுள்ளது. தோழி, தலைவி ஆகியோருக்கும், தலைவனுக்கும் நடக்கும் உரையாடலில் இருவருக்குமிடையே மொழித்தளத்தில் உண்டாகும் இடைவெளி பல்வேறு குறிப்புப் பொருள்கள் தோன்றுதற்குரிய களமாகவும் அமைகின்றது.

புறப்பாடலில் அமையும் உரையாடல் ஆதிக்க சக்தியின் குரல் சார்ந்ததாக உள்ளது. எனவே, உரையாடும் இரு களங்களுக்கிடையே உள்ளது. எனவே உரையாடும் இரு களங்களுக்கிடையே உள்ள இடைவெளி குறைகிறது. இதனால், பாடலின் வழி பெறப்படும் பொருட்களத்தில் வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் என்ற இருவேறு நிலைகளுக்கு இடமில்லாமல் போயிற்று. ஆயின் ஆதிக்க சக்தியைக் கேள்வி கேட்பதாக அமையும் பாடல்களில் மட்டும் வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் என்ற இருநிலைகள் உள்ளன.

அகப்பாடல்களில் கையாளப்படும் குறிப்பு உத்திகளில் இறைச்சி, உள்ளுறை என்பன தலையாய இடத்தைப் பெறுகின்றன. இவையே சங்கப்பாடல்களுக்குத் தனித்தன்மையை அளிப்பனவாகவும், உரையாசிரியர் காலம் முதல் இன்று வரை தொடர்ந்த ஆய்வுக்குரியதாகவும் விளங்குகின்றன. கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உரிப்பொருளை உணர்த்தும் வகையில் உள்ளுறை, இறைச்சி இரண்டும் ஒன்றுபடுகின்றன. ஆயின் பொருளை உணர்த்தும் வகையில் இரண்டும் நுட்பமாக வேறுபடுகின்றன.

உள்ளுறையில் பொருளை உணர்த்தற்குக் கருப்பொருட்கள் ஒரு கருவியாக, ஊடகமாகக் கொள்ளப்படுகின்றன. இறைச்சி எனச் சுட்டப்படுவதில் கருப்பொருட்கள் நேரடியாகத் தாமே நின்று அதற்குப் புறம்பான ஒருபொருளை உணர்த்தும். இப்பொருள் நுட்பமாக உணரும் தன்மையுடையது. உள்ளுறை உட்பொருளை உணர்த்த, சுருங்கச் சொல்லி விளக்க, இலக்கியச் சுவை பயக்க என்ற மூன்று நிலைகளில் செயல் புரிவதாக உள்ளன. இயற்கை வருணனை உள்ளுறையை உணர்த்தும் களனாய் உள்ளது.

அகப்பொருளுக்கேற்ப செய்திகளை மறைமுகமாக உணர்த்தவும், நிகழ்ச்சியோட்டத்திற்கும், கூறிவரும் செய்தியோட்டத்திற்கும் தடையில்லாதவாறும், அதே நேரம் கூறவேண்டிய எல்லாக் கருத்துக்களையும் உணர்த்தற்கும் உள்ளுறை பயன்படுத்தப்படுகின்றது. உள்ளுறைகள் மிகுதியாகத் தோழி கூற்றிலும், அடுத்து தலைவி, தலைவனின் கூற்றுகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாத்திரங்களின் ஆளுமை, செயற்பாடுகள் என்பவற்றிற்கேற்ப இவை அமைந்துள்ளன.

சங்கப் பாடல்களில் அமைந்த உள்ளுறை உவமைகள் அனைத்தையும் தொகுத்துக் காணும் பொழுது அவை அமைப்பு முறையில் நுட்பமான சிறு வேறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றன. உள்ளுறைப்படுத் துப்படுதற்கான காரணம் எளிதில் தெளிவாக விளங்கும் வகையில் அமைந்தது ஒரு வகையாக உள்ளது. காரணத்தை உய்த்துணரும் வகையில் அமைந்திருப்பது இரண்டாவது வகையாக உள்ளது.

இறைச்சி தலைவனின் பண்பு தொடர்பாகவும், தோழி தலைவியை ஆற்றுவிப்பதாகவும், தோழி தலைவனைச் செலவழுங்குவிப்பதாகவும், தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்துவதாகவும், தலைவியை விரைந்து காணவேண்டுமெனும் நெஞ்ச உணர்வை வெளிப்படுத் துவதாகவும் அமைந்துள்ளன. தோழி, தலைவி, தலைவன் என்ற மூவரது கூற்றுகளே இவற்றில் இடம் பெற்றுள்ளன. அன்புறு காட்சிகளை விளக்கி அதன் வழி இறைச்சிப் பொருளை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்க தன்மையாக உள்ளது.

அகப்பாடல்களில் கையாளப்படும் உள்ளுறையுவமத்திற்கு இணையாகப் புறப்பாடல்களில் இவ்வரையறை இல்லை, அகப்பொருள் செய்திகளைப் பாத்திரங்கள் தங்களுக்குள் குறிப்பாக உணர்த்திக் கொள்ளும் தன்மையது உள்ளுறை உவமம். புறப்பொருளில் புலவன் தான் மறைமுகமாக உணர்த்த நினைக்கும் எண்ணங்களை இதன் வழி வெளிப்படுத்துகின்றான்.

தமிழிலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியத்தில் பின்பற்றப்பட்ட உள்ளுறையும் பின்வந்த இலக்கியங்கள் எவற்றிலும் பின்பற்றப்படாதது சிந்திக்கத்தக்கதாக உள்ளது. உள்ளுறையும் இறைச்சியும், 'நாட', 'ஊர' என்ற சொற்களுக்கு அடைச்சிறப்பாக அமையும் நாட்டுச்சிறப்பையும், ஊர்ச்சிறப்பையும் மையப்படுத்தி அமைந்துள்ளன. 'போர்ச் சமுதாய' அமைப்பில் தலைவனை ஏற்றிப்பாடும் பண்பின் வெளிப்பாடாக இவ்வாறு முன்னிலைப்படுத்திப் பாடுவது அமைந்துள்ளது. எனவேதான் போர்ச் சமுதாய அமைப்பு மாறிய பின் தோன்றிய இலக்கியங்களில் முன்னிலை விளி இந்த நோக்கத்தில் பயன்படவில்லை. செயல்படவில்லை. சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டதைப் போலவே இறைச்சியும் உள்ளுறையும் பின் வந்த இலக்கியங்களில் பின்பற்றப்படவில்லை. ஆனால், 'உள்ளுறைப் பொருள்' என்பதன் தொடர்ச்சி பல மாற்று வடிவங்களில் பின் வந்த இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் உத்திகள் அனைத்தும் 'உரையாடல் அமைப்பு' என்பதை நிலைக்களனாகக் கொண்டே வினைபுரிகின்றன. முன்னிலைப்படுத்திப் பாடுவது இப்பண்புக்கு அடிப்படைக் காரணமாகின்றது.

தொடர்ந்து வந்த சமுதாய அமைப்பில் சங்க காலத்தில் போற்றப்பட்டது போல காதலும் வீரமும் உயர் சமுதாய மதிப்புகளாகக் கருதப்படவில்லை. போர்ச் சமுதாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அடுத்து வந்த காலகட்டப் பகுதியில் சமண, பௌத்த

சமயசக்திகள் துறவு என்பதற்கு இன்றியமையாமை அளித்ததால், 'வீரம்' என்பது தன்னை ஒறுத்துக் கொள்ளும் வைராக்கிய உணர்வாக மடைமாற்றம் பெற்றது. துறவுக்கு இன்றியமையாமை அளிக்கப்பட்டமையால் இல்லற வாழ்க்கையும் பெண்ணும் இழிவாகக் கருதப்பட்டனர். ஆக காதல், வீரம் என்ற அடிப்படைச் சிந்தனை மாற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் அதற்கேற்ப இலக்கிய வடிவம், உத்திகள் அனைத்துமே மாற்றம் பெற்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் பாடுபொருள் விளக்குதல், புலமைத் திறனை விளக்குதல் என்ற இருநோக்கங்களில் உத்திகள் கையாளப்படுகின்றன. சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை பாடுபொருளை விளக்கும் நோக்கிலேயே உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

சங்கப் பாடல்கள் பல புலவர்களால் பாடப்பட்டதாக இருப்பினும் உத்திகளின் பயன்பாட்டில் ஓர் ஒருமைப்பாடு புலனாகின்றது. இலக்கியம், அது அமைய வேண்டிய தன்மை என்பது ஒரு தெளிவான வரையறையைப் புலவர்கள் தங்களுக்குள் கொண்டிருந்தமை இதனால் பெறப்படுகின்றது. கருத்தும் வடிவமும் இயைந்திருக்க வேண்டும் என்ற ஒருமைக் கொள்கை சங்கப் புலவர்களின் தலையாய கொள்கையாக இருந்தது என்பதை உணர முடிகின்றது.

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோரும் கலை ஒருமையை முதலில் ஒரு கொள்கையாக நிலைநாட்டினர். தொல்காப்பியரும் இதனையே மையச் சிந்தனையாகக் கொண்டிருந்தார். உவம வகைகள், உவமையின் தோற்றம், அதற்கான நிலைக் களன்கள், உள்ளுறை, இறைச்சி முதலானவற்றிற்குக் கொடுக்கப்படும் விளக்கம், ஆகியன இச்சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. தொல்காப்பியரின் இந்த ஒருமைக் கொள்கையை அடியொற்றி சங்கப்பாக்களும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சங்கப் பாக்களில் அகப்பொருளுக்கேற்பச் செய்திகளை மறைமுகமாக உணர்த்தவும், நிகழ்ச்சியோட்டத்திற்கும், கூறிவரும் செய்தியோட்டத்திற்கும் தடையில்லாதவாறு, அதே நேரம் கூறவேண்டிய எல்லாக் கருத்துக்களை உணர்த்துவதற்கும் உள்ளுறையுவமமும் இறைச்சியும் கையாளப்பட்டுள்ளன. இவை வடிவத்தே இயைந்து பாடலுக்குச் சுருக்கத்தையும், செறிவுத் தன்மையையும் அளிப்பதாக விளங்குகின்றன. பாடலின் தொடக்க, முடிவு ஆகியவற்றுக்கும் இன்றியமையாமை அளிக்கப்பட்டிருப்பதால் அதன் செறிவுத்தன்மை மேலும் கூடுவதாக இருக்கின்றது.

இவ்வாறு பாடுபொருளும் வடிவமும் இயைந்து நிற்றல் வேண்டும் என்பது அவற்றின் தலையாய கொள்கையாக இருப்பதைத் தெளிவாக உணரமுடிகின்றது. சங்கப் பாக்களில் காணப்படும் இந்த 'ஒருமைப்' பண்பே அவற்றைச் 'செவ்வியல் இலக்கியம்' எனக் கருதுவதற்கும் அடிப்படைக் காரணமாகின்றது.

பொதுவாகச் சமன் செய்யும் முறை, நிறைவு, ஒருமைப்பாடு, அளவுத்திட்டம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்ட இலக்கியத்தைச் சுட்டிக்காட்ட 'செவ்வியல்' என்ற கலைச்சொல் பயன்படுவதாகக் கூறுவர்.

இந்த உத்திகள் அனைத்தும் பொருளை எளிதாக உணர்த்தி கேட்பவர்க்குப் பயன் தருதல் என்பதை மட்டுமே மைய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டமையால் படைப்பவர்க்கும், நுகர்பவர்க்குமிடையே முரண்பாடற்ற நிலை நிலவியது. பாடலின் பொருளுக்கும் வடிவத்திற்குமிடையே முரண்பாடற்ற நிலையைத் தோற்றுவித்தது.

சங்கப் புலவர்கள் அனைவரும் அரசரைச் சார்ந்து இயங்கினர். உயர்குடி மக்களின் காதலையும் வீரத்தையும் பாடினர். அரசர், புலவர் உறவுமுறை என்பது அரசு அமைப்பினுள் ஒரு கூறாக இணைந்து இயங்கியது. இந்தப் பின்புலத்தின் காரணமாக சங்கப் புலவர் அனைவரிடமும் ஒரு தன்மையாக வெளியீட்டு வரையறைகளைக் காணமுடிகின்றது.

பாடுபொருளுக்கும் வெளிப்பாட்டு முறைக்கும் ஒருமைப்பாடு அமைய வேண்டும்.

பொருளைச் சுருக்கமாகவும், செறிவாகவும் வெளிப்படுத்த வேண்டும்.

நுட்பமான வெளிப்பாட்டு முறைகளைக் கையாள வேண்டும்.

என்பன இவர்களது வெளியீட்டுக் கொள்கைகளாய் அறியக்கிடக்கின்றன.

*நன்றி : சங்க இலக்கியம்*
*வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

### நாட்டின் சட்டங்களை மதித்து செயல்பட்டவர்

*ஏதென்ஸ் நகர நீதிமன்றம் புகழ்பெற்ற தத்துவ ஞானியான ஸாக்ரடீஸுக்கு (Socrates) மரண தண்டனை வழங்கிவிட்டது.*

*அவருடைய சீடர்கள் அவரை சிறையில் சந்தித்து அவரை தப்பி ஓடிவிடும்படி கேட்டுக் கொண்டார்கள்.*

*"நாட்டின் சட்டங்களை மதித்து செயல்பட வேண்டுமென்பதில் நான் முழு நம்பிக்கைக் கொண்டவன். நாட்டின் சட்டங்களை மதித்து செயல்படுபவன்தான், ஒரு நல்ல நாட்டுப் பிரஜையாக இருக்க முடியும். ஏதென்ஸ் நாடு பின்பற்றிவரும் சட்டங்களின் அடிப்படையில் எனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல நாட்டுப் பிரஜை என்ற முறையில் நான் இறக்கத்தான் வேண்டும்" என்று தன் சீடர்களிடம் சொல்லி தப்பி ஓட மறுத்துவிட்டார்.*

*அவர் விஷம் அருந்தி சாவைத் தழுவினார்.*

*தகவல் : பிரமிப்பூட்டும் அரிய தகவல்கள் நூலிலிருந்து...*



# திருவாரூரில் முதல்வர் கலைஞர்

திருவாரூரில் நடைபெறுகின்ற இந்த மகத்தான விழா ஒரு மாநாட்டைப் போல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் எண்ணிப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று காலையிலே நாகப்பட்டினத்திலே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைத்துவிட்டு மாலையிலே திருவாரூர் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைக்கின்ற பெரும்பேறு பெற்றமைக்காக நான் பெரிதும் நன்றி உடையவனாக இருக்கின்றேன். மகிழ்ச்சி உடையவனாகவும் இருக்கின்றேன்.



இன்று இந்த மாவட்டத்தில் 33 கோடியே 85 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பெரிய கட்டடங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உட்பட நிறைவேற்றப்பட்டுள்ள புதியத் திட்டங்கள் என மொத்தம் 778 பணிகள் மக்கள் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. 37 கோடியே 52 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள 2 ஆயிரத்து 219 கட்டடங்களுக்கும் திட்டப்பணிகளுக்கும் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

மேலும், ஐந்து கோடியே 50 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் 8 ஆயிரத்து 413 பயனாளிகளுக்கு இந்த அரசின் பல்வேறு துறைகள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆக மொத்தம் 76 கோடியே 88 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் இந்த மாவட்டத்தில் இன்றைக்குச் செயல்பாட்டிற்கு வருகின்றன.

தஞ்சை மாவட்டம் இன்றைக்கு தஞ்சை, நாகை, திருவாரூர் என்று மூன்று மாவட்டங்களாகப்



பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட, ஒட்டுமொத்த தஞ்சை மாவட்டம் மூன்று மாவட்டங்களும் இணைந்த தஞ்சை மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதி முக்கியமான பகுதி. இந்தப் பகுதியில் தவழ்ந்து வருகிற காவிரி நதி நல்ல முறையிலே பாதுகாக்கப்பட்டால்தான், பயன்படுத்திக் கொள்ளப்பட்டால்தான் நீண்ட நாட்களுக்கு அதனுடைய பயனை நாம் நுகர முடியும். விரைவாகவும் நுகர முடியும்.

### காவிரி முகத்துவாரத்தில் நடைபெற்ற தூர்வாரும் பணி

ஏறத்தாழ 50 ஆண்டு காலமாக காவிரி முகத்துவாரத்தில் டெல்டா பகுதியில் தூர்வாரப்படாத காரணத்தால் என்னதான் தண்ணீர் மேட்டூருக்கு வந்தாலும்கூட, மேட்டூரிலே இருந்து வெளிவிடப் பட்டாலும்கூட, கல்லணையிலிருந்து வெளியே வந்தாலும்கூட, அது வந்து சேருவது வகைப்படுத்துவதில் ஏற்பட்ட சிரமங்களை இந்தத் தரணியிலே, இந்தப் பூமி யிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதற்கு ஒரு ஏற்பாடாகத்தான் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தூர்வாருகிற பணியினை இந்த அரசு ஏற்றுக் கொண்டு இதுவரையிலே 108 கோடி ரூபாய் செலவில் அந்தப் பணிகள் நடைபெற்று 7,800 கிலோ மீட்டர் நீளமுள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் மேலும் 50 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இப்படி தூர்வாரப்பட்ட காரணத்தால்தான் தண்ணீர் சிக்கனம் தண்ணீர் கிடைக்குமா? என்ற ஏக்கத்திற்கு இடையே கூட, தூர்வாரப்பட்டதின் பயனாக ஏற்பட்டுள்ள ஒரு ஆறுதல் இவைகளையெல்லாம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. நான் இதைச் சொல்வதால் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக வரும் போலிருக்கிறதே என்று யாரும் கருதத் தேவையில்லை.

நம்முடைய பழனிச்சாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், நான் சென்னைக்குச் சென்றேன், முதலமைச்சரைப் பார்த்தேன். அங்கே காவிரியில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு வரும் போலிருக்கிறதே என்ற எச்சரிக்கைச் செய்தேன் என்றெல்லாம் சொன்னார். நான் அப்பொழுதே அவரிடத்திலே சொன்னேன். ஊருக்குத் திரும்பிச் செல்லுங்கள். மழையும் வரும். தண்ணீரும் வரும் என்று சொன்னேன். அதைப்போல மழை நேற்றைக்கு நாகப்பட்டினம் பகுதியில் 2 மணி நேரம் பெய்திருக்கிறது. பழைய காலமாக இருந்தால் மகான் வந்தான், மழை பெய்தது என்று சொல்வார்கள். நான் சாதாரணமானவன்தான். மகான் அல்ல. ஆனாலும் மழை பெய்திருக்கிறது.

இன்னொரு நல்ல செய்தியையும் தஞ்சைத் தரணியிலே விவசாயிகளுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேட்டூரிலே காவிரியிலே விடப்படுகின்ற தண்ணீர் கர்நாடகத்திலிருந்து விடப்படுகின்ற தண்ணீர் ஒவ்வொரு நாளும் குறைந்து வருகிறது என்கிற கவலைக்கு மாறாக இன்று முதல் ஏறத்தாழ 37 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத் தொடங்கியிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

எனவே, விவசாயிகளுடைய கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்கிற அரசு இந்த அரசு. அதைப்போல, இதை, இயற்கையினுடைய தொல்லைகளை இந்த அரசோடு சேர்ந்து பகிர்ந்து கொள்கிற கடமை உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அவர்களை வழி நடத்துகின்ற தலைவர்களுக்கும் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு இந்த அரசு தொடர்ந்து வழங்கிய நன்மைகளை விவசாயிகள் நிரம்பியுள்ள இந்தப் பெருங்கூட்டத்தில் உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

1990–ஆம் ஆண்டில் தான் இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினோம். அந்த இலவச மின்சாரத்திற்குப் பல நேரங்களில் ஆபத்து வந்தது. இலவசமாக மின்சாரம் வழங்கக்கூடாது. அது முறையல்ல என்று உலக வங்கி கூட கொஞ்சம் உறுமிப் பார்த்தது. ஆனால் அதற்கெல்லாம் இடம் தராமல் இன்றளவும் நாம் இந்த இலவச மின்சாரத்தைக் காப்பாற்றி வருகிறோம். தொடர்ந்து காப்பாற்றுவோம். இடையிலே வந்த கடந்த கால ஒரு அரசு கூட, அதைவிட்டுத் தருவதற்கு முன்வந்து உடனடியாக நாமெல்லாம் சேர்ந்துதான் போராட்டம் நடத்தி நாம் கொண்டு வந்த இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து காப்பாற்றுகின்ற அந்தப் பணியை நாம் நிறைவேற்றி முடித்திருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 1996–ஆம் ஆண்டிற்குப் பிறகு விவசாயிகளுக்கு 8 இலட்சம் உர அடையாள அட்டைகள் பதினொன்னரை இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 1.9.2000 முதல் திறக்கப்படுகின்றன. அதைப்பற்றிய விவரத்தை தம்பி நேரு இங்கே பேசும் போது குறிப்பிட்டார். 95–96–ஆம் ஆண்டு கடந்த கால ஆட்சியில் நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் 360 ரூபாய் என்றிருந்தது. சன்ன ரகம் 375 ரூபாயாக இருந்தது. இது 1996–க்குப் பின் படிப்படியாக ஏற்றப்பட்டு 99–2000–த்தில் நெல்கொள்முதல் விலை மோட்டா ரகம் 490 ரூபாய், சன்ன ரகம் 520 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படுகிறது. இன்னும் மத்திய சர்க்கார் விலை நிர்ணயம் செய்த பிறகு இன்னும் கொஞ்சம் இந்த விலை உயரும் என்ற நம்பிக்கையை நான் தருகின்றேன்.

காவிரிப்பாசனப் பகுதிகளில் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையைவிட குவிண்டாலுக்கு 35 ரூபாய் இடைநிலை செலவாக அரசு சார்பில் வழங்கப்படுகிறது. தர வெட்டுத் தொகை ரூபாய் 15–லிருந்து 5 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழக விவசாயிகளின் நலத்தினை முன்னிட்டு கருப்பு மற்றும் கிரே பகுதிகளிலும்கூட (Dark and Grey) ஏற்கெனவே கிணறுகள் வெட்டி மின்இணைப்பு கோரி விண்ணப்பம் செய்து பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு மின்இணைப்புகள் வழங்கிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மைய அரசின் நிர்ணய விலையை விட முந்தைய அரசினால் 8.5 சதவீதம் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பு டன் ஒன்றுக்கு 50 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவிலேயே அதிகரித்து விலை பரிந்துரைக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த அரசுதான் மைய அரசின் நிர்ணய விலையை விட டன் ஒன்றுக்கு 175 ரூபாய் கூடுதலாகப் பரிந்துரை விலையை நிர்ணயித்தது என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது.

### 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய்

அதன்படி 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 95–96–இல் கடந்த கால ஆட்சியில் நிர்ணயம் செய்த பரிந்துரை விலை வெறும் 560 ரூபாய் தான். இது 96–க்குப் பின் இந்த அரசால் படிப்படியாக உயர்த்தப்பட்டு 99–2000–த்தில் 740 ரூபாய் என்று பரிந்துரைக்கப்பட்டது என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. தற்பொழுது 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்கப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளது. ஆயிரம், ஆயிரம் என்று சொன்னாயே, எங்கே ஆயிரம் என்று கேட்டவர்களுக்கு பத்து சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு நிச்சயமாக 1000 ரூபாய் தரப்படும் என்று சொல்லி அப்படி இரண்டு, மூன்று ஆலைகளில் இன்று தரப்படுகின்ற அந்த சான்றையும் நாம் காட்டியிருக்கிறோம்.

நில உச்சவரம்பு சட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக வரும் என்று ஒரு காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நில உச்சவரம்பு சட்டம் வரபோகிறது என்ற எதிர்பார்ப்பு மிகையாக இருந்தது உங்களுக்குத் தெரியும். 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று 1960–ஆம் ஆண்டு உச்சவரம்பு கொண்டுவரப்பட்டது. ஆனால் அது வருவதற்கு முன்பே பெரிய பெரிய நிலச் சுவான்தாரர்களுக்கெல்லாம் அந்த செய்தி தெரிந்து அது வருவதற்கு முதல்நாள் அல்லது முதல் மாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பு தன் நிலங்களையெல்லாம் பிரித்து பிரித்து யார் யாருக்கு எழுதிவைக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம், பிறந்தவர்களுக்கும் பிரித்துவைத்து, பிறக்கப் போகிறவர்களுக்கும் எழுதிவைத்து ஏமாற்றிவிட்ட காரணத்தால், காமராஜருடைய ஆட்சியையே சிலபேர் ஏமாற்றி விட்டார்கள். அப்படிப்பட்ட காரணத்தினாலே ஒரு ஏக்கர் நிலம்கூட அந்த உச்சவரம்பு சட்டத்தால் உபரி நிலமாக எடுக்கப்பட முடியவில்லை என்பதையும் நாடு மிக நன்றாக அறியும்.

### நில உச்சவரம்பு சட்டம்

அதனால்தான் அண்ணா அவர்கள் சட்டசபையிலே "இங்கே நீங்கள் கொண்டு வந்திருப்பது உச்சவரம்பு சட்டம் அல்ல, மிச்ச வரம்பு சட்டம்'' என்று வேடிக்கையாகவும், வேதனையோடும் சொன்னார்கள். அதற்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குறிப்பாக அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு 69–ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்ற பிறகு 70–ஆம் ஆண்டில் 15.2.70 அன்று 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்பை திடீர் என்று மாற்றி, முன்கூட்டியே யாருக்கும்

சொல்லாமல் உச்சவரம்பு சட்டத்தை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராதான் ஒருவர் வைத்துக் கொள்ள முடியும் என்று உத்தரவு போட்டதின் காரணமாக ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 900 ஏக்கர் நிலம் உபரி நிலமாக எடுக்கப்பட்டது. அப்படி எடுக்கப்பட்டதில் மிச்ச சொச்சம்தான் வடபாதி மங்கலம் கரும்பு பண்ணையில் கரும்பு பயிர் செய்த நிலங்களைக்கூட பழனிச்சாமி போன்றவர்களெல்லாம் வைத்துக் கொண்டு அதை பிரித்துக் கொடுத்த நிகழ்ச்சியை நீங்களெல்லாம் யாரும் மறந்திருக்க முடியாது. இதன்மூலம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று உச்சவரம்பு கொண்டு வந்ததின் மூலம் நமது ஆட்சி கொண்டு வந்த காரணத்தினால் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 1 இலட்சத்து 37 ஆயிரத்து 236 பேர். இதிலே ஆதிதிராவிடர்கள் மாத்திரம் 61 ஆயிரத்து 985 பேர்.

அதைப் போலவேதான் குடியிருப்புமனைச் சட்டம். இந்தச் சட்டம் விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிற இடத்தில் அவன் கட்டிய வீடு அவனுக்குச் சொந்தமில்லாமல் அதை நிலச்சுவான்தார் என்றைக்குப் பிடுங்கிக் கொண்டு விடுவாரோ என்ற சூழ்நிலையில் இருந்த நிலையை மாற்றி குடியிருப்பு மனைகளையெல்லாம் அதிலே குடியிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கே சொந்தம் என்று அதை செயல்படுத்திகாட்டிய அரசும் இந்த அரசு தான்.

**விவசாயிகளுக்குச் செய்யப்பட வேண்டிய நல்ல காரியங்களை அரசு செய்யும்**

புரட்சிகரமான இந்தத் திட்டத்தின் பயனாக அன்றைக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் பேர் குடியிருக்கும் மனையில் இருந்த விவசாயத் தொழிலாளர்கள் இலாபம் பெற்றார்கள். பயனடைந்தார்கள். இவைகளெல்லாம் விவசாயிகளுக்காக, விவசாயத் தொழிலாளர்களுக்காக, விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்காக இந்த அரசு செய்த நற்காரியங்கள். நேரமில்லை எடுத்துச் சொல்வதற்கு. அவ்வளவு காரியங்கள் விவசாயிகளுக்காக செய்யப்பட்டிருக்கிறது. அது போதுமானதா என்றால் இல்லை. முழுமையாக நாங்கள் எதையும் செய்துவிட்டோம் என்று நான் சொல்லவில்லை. அதிலே குறைபாடுகள் இருக்கலாம். அதைச் சுட்டிக்காட்ட நல்ல எதிர்க்கட்சிகள் இருக்கும்போது அதை ஏற்றுக் கொள்ள ஒரு தரமான ஆளுங்கட்சி முன்வரவேண்டுமென்பதை நான் அறியாதவன் அல்ல. அந்த வகையிலே மேலும் விவசாயிகளுக்கு நாங்கள் கடன் பட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு செய்யப்பட வேண்டிய நல்ல காரியங்களை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். அவர்களுக்காகச் செய்யப்பட்டுள்ள காரியம்தான் இன்றைக்குப் புதிதாக, பொதுவாக இந்த மாவட்டத்தில் நல்ல நிர்வாகம் நடைபெறவேண்டும். என்னதான் மாவட்ட ஆட்சித்தலைவர் உமாசங்கர் அவர்கள் திறமையான மாவட்ட ஆட்சித்தலைவர் என்றாலும்கூட, அவர் அமர்ந்து வேலை பார்க்க — அலுவல் நடத்த வருகின்ற புகார்களை எதிர்கொள்ள ஒரு இடம் தேவை. அந்த இடம் நல்ல இடமாக, வசதியான இடமாக, வாய்ப்புள்ள இடமாக, அனைவரும் சென்று தங்களுடைய எண்ணங்களை வெளியிடக்கூடிய இடமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இடம் இங்கே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

பத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் இந்த நான்கு ஆண்டுக்காலத்தில் இந்த ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் எழிலோடும், அழகோடும் கட்டப்பட்டிருப்பதற்குக் காரணம் இங்கே தம்பி பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன் சொன்னார். நாங்களெல்லாம் இதைச் செய்தாலும்கூட, கலைஞர் எந்தத் தூண் எங்கே இருக்கவேண்டும் என்பது போன்றவைகளையெல்லாம் கூட அவர் சொல்லித்தான் நாங்கள் செய்தோம் என்று சொன்னார்.

இது தலைவரைப் பாராட்டுவதற்காக அவர் காட்டிய அடக்கமே தவிர, வேறல்ல. பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனுடைய ஆற்றல், அவருடைய அயராத உழைப்பு இந்த அழகான கட்டடங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்காக தம்பி துரைமுருகனுக்கு எனது நன்றியை, பாராட்டுதலை உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்நாட்டில் குடிநீர் பற்றாக்குறை பெருமளவு குறைந்திருக்கிறது**

அதைப் போலவேதான் காலையில்கூட நாகையில் சொன்னேன். இன்றைக்குத் தமிழ்நாட்டில் குடிநீர் பற்றாக்குறை என்ற அந்தக் கவலை பெருமளவு குறைந்திருக்கிறது. முழுமையாக குறைந்திருக்கிறது என்று சொல்லமாட்டேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்றைக்கு 95 சதவீத மக்களுக்கு கிடைக்கிறதென்றால் சென்னையிலேதான் கொஞ்சம் குறைவாக இருந்தது. இப்போது கிருஷ்ணாநீரும் வர ஆரம்பித்துவிட்டது. எனவே அந்தக் குறைகளையும் நீக்கி முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்றைக்குத் தமிழக மக்களுக்குக் கிடைக்கிறதென்றால் அதற்கு அரும்பாடுபட்டு அல்லும், பகலும் உழைத்துக் கொண்டிருப்பவர் என்னுடைய தம்பி உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி என்பதை நானும் மறக்க முடியாது, நீங்களும் மறக்க முடியாது. அதைப்போலவே பணியாற்றுகின்ற அத்தனை அமைச்சர்களும், இங்கே வீற்றிருக்கின்ற அமைச்சர்கள் உள்பட அனைத்து அமைச்சர்களும் தங்களுடைய துறையை ஒழுங்காக கவனிக்கிறார்கள். நன்றாக கவனிக்கிறார்களா? என்று பார்க்க நான் ஒரு ஒற்றர் குழு வைத்திருப்பதாக தம்பி கோ.சி.மணி சொன்னார். அது ஒற்றர் குழு அல்ல. ஒற்றுமைக் குழுவே தவிர ஒற்றர் குழு அல்ல.

*— திருவாரூர் மாவட்ட ஆட்சியர்*
*அலுவலகத்தை 27–8–2000 அன்று*
*திறந்துவைத்து*
*முதலமைச்சர் கலைஞர்*
*ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★



# இருதயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

உடலெனும் உலகின் போக்குவரத்துச் சாதனம் இரத்தம். இதில் உலா வரும் நெடுஞ்சாலைகள் இரத்தக் குழாய்கள். ஆக்ஸிஜனையும் ஊட்டச் சத்துக்களையும் ஏற்றிச் சென்று உடலிலுள்ள எல்லா செல்களுக்கும் ஊட்டுகிறது. அவைகள் வெளியிடும் கழிவுப் பொருள்களை அவ்வப்போது அகற்றியும் வருகிறது. இரத்தமெனும் போக்குவரத்துச் சாதனம், பொதுவாக எல்லோரும் இதைப் போக்குவரத்துச் சாதனம் என்றே குறிப்பிடுகிறார்கள். ஆனால் உண்மையில் உடலெனும் உலகம் வளம் பெற்று வாழ, வளர உதவும் "உயிர்ப் பாசனம்" இது. இந்த உயிர்ப்பாசனம் செய்ய உதவுவது எது? இருதயம் எனும் தசை உறுப்பு மார்புக் கூட்டினுள் சற்றுச் சாய்வாக நுரையீரல்களுக்கிடையே இது அமைந்துள்ளது.




இருதயமும் அதையொட்டி அமைந்துள்ள உறுப்புகளும்
1. மூச்சுக்குழல், 2. உணவுக்குழல், 3. இடது பிராகியோ செபாலிக் சிரை, 4. நுரையீரல் தமனி, 5. மகாதமனி, 6. இடது நுரையீரல் சிரை, 7. இருதயம், 8. இடது நுரையீரல் (உள்ளிழுக்கப்பட்ட நிலை), 9. மகாதமனி, 10. உணவுக்குழல், 11. கீழ்ப்பெருஞ்சிரை, 12. உதரவிதானம், 13. மேற்பெருஞ்சிரை, 14. வலது பிராகியோ செபாலிக்சிரை, 15. காரைஎலும்பு, 16. நுரையீரல் சிரை.

இருதயம் ஒரு பம்பு. இதை இரட்டைப்பம்பு என்றும் சொல்லலாம் அல்லது இரண்டு மின்சுற்றுகளை இயக்கும் ஒற்றை பம்பு என்றும் சொல்லலாம். ஒருமுறை துடிக்கும் போது நுரையீரலிலிருந்து ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் இடதுபுறம் வழியாக உடலெங்கும் செல்லுகிறது. அதே சமயம் ஆக்ஸிஜனூட்டம் பெற வலதுபுறமாக அசுத்த இரத்தம் நுரையீரலுக்குள் செல்லுகிறது.

இருதயம் நான்கு அறைகளைக் கொண்டது. மேற்புறம் இரண்டு அறைகள், கீழ்ப்புறம் இரண்டு அறைகள். இவைகள் வலதுபுறம், இடதுபுறம் என்று பிரிக்கப்பட்டுள்ளன. மேற்புற அறைகள் "வரவேற்புக் கூடங்கள்" கீழ்ப்புற அறைகள் "வழி அனுப்பு நிலையங்கள்". மேற்புற அறைகளுக்கு ஏட்ரியங்கள் என்று பெயர். கீழ்ப்புற அறைகளுக்கு வெண்ட்ரிக்கிள்கள் என்று பெயர். ஏட்ரியங்கள் பணி சற்று இலகுவானது. எனவே தசைச்சுவர்கள் மெல்லியதாக இருக்கும். வெண்ட்ரிக்கிள்கள் பணி சற்றுக் கடினமானவை. இவைகளின் தசைச்சுவர்கள் பருமனாகவும் வலிமை உடையதாகவும் இருக்கும். இடது ஏட்ரியத்திலிருந்து இரத்தம் இடது வெண்ட்ரிக்கிளுக்குச் செல்ல முடியும். அதேபோல் வலது ஏட்ரியத்திலிருந்து வலது வெண்ட்ரிக்கிளுக்குச் செல்ல முடியும். இருதயத்தை இடது புறம் வலது புறம் என்று பிரிக்கும் குறுக்குத் தடுப்புச் சுவர்கள் உள்ளன. இதனால் ஒரு புறம் வரும் இரத்தம் அடுத்த புறமுள்ள இரத்தத்துடன் கலப்பதில்லை. பிறவியிலேயே இருதயத்தில் ஏற்பட்டுள்ள நோய்கள், வளர்ச்சிக் குறை காரணமாக இருபுறமுள்ள இரத்தமும் கலக்கும் வாய்ப்பு ஏற்படுவதுண்டு.

ஆக்ஸிஜனற்ற அல்லது குறைந்த இரத்தம் உடலின் எல்லா பகுதிகளிலிருந்தும் (இருதயச்சுவர் தவிர) மேற்பெருஞ்சிரை, கீழ்ப்பெருஞ்சிரை வழியாக வலது ஏட்ரியத்தை அடைகிறது. இருதயப் பகுதியிலிருந்து இரத்தத்தை இங்கு கொண்டு வருவது கரோனரி சைனஸ். இங்கிருந்து மூவிதழ்களைக் கொண்ட ஒரு தடுக்கிதழ் வழியாக வலது வெண்ட்ரிக்கிளை அடைந்து நுரையீரல் தமனி வழியாக நுரையீரல்களை அடைகிறது. அங்கு வளிய பரிமாற்றம் நடைபெறுகிறது. இந்த இரத்தத்திலுள்ள கரியமில வாயுவை வெளியேற்றி விட்டு ஆக்ஸிஜனூட்டம் பெறுகிறது. பின்னர் ஆக்ஸிஜனூட்டம் பெற்ற இரத்தம் நுரையீரல் சிரைகள் வழியாக இடது ஏட்ரியத்தை அடைகிறது. அங்கிருந்து மிட்ரல் வால்வு (ஈரிதழ் தடுக்கிதழ்) வழியாக இடது வெண்ட்ரிக்கிளை அடைந்து மகாதமனி மூலமாக உடலெங்கும் வினியோகிக்கப் படுகிறது.

இருதயம் நல்ல, நிலையிலிருந்து சரிவரச் செயல்பட்டால்தான் "இந்த உயிர் பாசனம்" உடலை ஊட்டி

• என். ஸ்ரீநிவாசன்

வளர்க்கும். வாழவைக்கும். இருதயம் சரிவர செயல்படாவிட்டால் அல்லது வேறு ஏதேனும் கோளாறுகள் இருந்தால் "உயிர்ப்பாசனம்" சரிவர நடைபெறாது. இருதயத்தின் கட்டமைப்புப் பணிகள் பின்வருமாறு உள்ளன.

இருதயம் நான்கு தசை மடிப்புகளைக் கொண்டது. அவைகள் 1. உள்நோக்கிய பெரிகார்டியம், 2. எபிகார்டியம் 3. மையோகார்டியம் 4. என்டோகார்டியம் என்பன.

இருதயம் தனது பணிகளைச் சுருங்கி விரிவதன் மூலம் செய்கிறது. இருதயம் சுருங்குவது சிஸ்டோலி, இருதயம் விரிவது டயஸ்டொலி. இருதயம் 0.8 வினாடிகளுக்கு ஒருமுறை சுருங்கி விரிகிறது. இதற்கு இருதய வட்டணை என்று பெயர். ஒரு நிமிடத்தில் 75 இருதய வட்டணைகள் நடைபெறுகின்றன. உடலின் இரத்த சுழற்சி இருதயம் சீராக இயங்குவதில்தான் உள்ளது.

இரத்த சுழற்சியில் இரத்தம் ஒரே திக்கில் செல்ல வழி வகுக்கும் தடுக்கிதழ்கள் இருதயத்தில் நான்கு உள்ளன. அவைகள் :

1. ஈரிதழ் வால்வு, இதை மிட்ரல் வால்வு என்பர். இடது ஏட்ரியத்திற்கும் இடது வெண்ரிக்களுக்கு மிடையேயுள்ளது.
2. மூவிதழ் வால்வு இதை டிரைகஸ்பிட் வால்வு என்பர். வலது ஏட்ரியத்திற்கும் வலது வெண்ரிக்களுக்கும் இடையே உள்ளது.
3. அர்த்தசந்திர வடிவமுடைய மூன்று மடல்களைக் கொண்ட மகாதமனி வால்வு. இது இடது வெண்ரிக்களுக்கும் மகாதமனிக்கும் இடையே உள்ளது.
4. நுரையீரல் வால்வு. இதுவும் அர்த்தசந்திர வடிவம் கொண்டது. வலது வெண்ரிக்களுக்கும் நுரையீரல் தமனிக்கும் இடையே உள்ளது.

இந்த தடுக்கிதழ்கள் சரியாக இயங்காவிட்டாலோ, அல்லது இவைகளில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டாலோ இருதயத்தின் பணி பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக இரத்த சுழற்சியிலும் பாதிப்பு உண்டாகிறது.

இருதயம் இரத்தத்தை விசையுடன் செலுத்தும் பொறி என்று வைத்துக் கொள்ளலாம். இந்தப் பொறியை இயக்க ஒரு விசை வேண்டுமே. நமது வீட்டு பம்ப்பை இயக்க மின்சக்தியைப் பயன்படுத்துகிறோம். அதேபோல் இருதயப் பணியை இரத்தத்தை விசையுடன் ஒரே சீராக ஒரே வேகத்துடன் செலுத்தும் பணியை நிரலொழுங்கு செய்வதும் உயிரி மினியியல் விளைவுதான். சினோ ஏட்ரியல் கணு எனும் இருதய துடிப்பு நிர்மாணி உருவாக்கும் மின் அலைகள் ஒவ்வொரு இருதயத் துடிப்பையும் உண்டாக்குகிறது. இது உண்டாக்கும் கிளர்த்தல் ஏட்ரியங்களைச் சுருங்கச் செய்கிறது. இந்தச் சுருங்கலியக்கம் ஏட்ரிய–வெண்ரிக்கிள் கணுவைத் தூண்டுகிறது. இதிலிருந்து உருவாகும் கிளர்த்தல் சிறப்பு ஊடு கடத்து சாதனங்கள் மூலம் பரவி வெண்ரிக்கிளைச் சுருங்கச் செய்கின்றன.

தவிர இருதயப்பணி ஒரே சீராகவும் வேகத்துடனும் இயங்க துணை புரிபவை பரிவு நரம்புகளும், துணைப்பரிவு நரம்புகளும். பரிவு நரம்புகள் சுருங்கலியக்கத்தின் வேகத்தையும் வலிமையையும் அதிகரிக்கின்றன. துணைப்பரிவு நரம்புகள் அடங்கல் செய்கின்றன. மேலும் சில குறிப்பிட்ட கட்டங்களில் வேதிப்பொருள்களும் இருதய நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றன. நாளமில்லா சுரப்பிகளான அட்ரினல் சுரப்பி சுரக்கும் அட்ரினலைன் எனும் ஹார்மோன் இரத்தத்தில் கலந்து சென்று இருதயத்தை அடைகிறது. இருதயத் துடிப்பின் வேகத்தையும் திறனையும் அதிகரிக்கிறது.

ஏறக்குறைய 300 கிராம் எடையுள்ள மிகச்சிறிய அமைப்பு இருதயம். கருவிலிருந்து கடைசிவரை இது செய்யும் பணியோ இமாலயச் சாதனைகள் தான். உடலெனும் உலகம் உயிர்ப்புடன் இயங்க வேண்டுமென்றால் இது ஒரே சீராகத் தொடர்ந்து இயங்கவேண்டும்.

### இருதய நோய் வகைகள், அறிகுறிகள்

உடலுக்கு "உயிர்ப்பாசனம்" செய்வது இரத்தம். இரத்தம் செல்லும் பாதைகள் இரத்த நாளங்கள், அதாவது தமனிகள் சிரைகள் தந்துகிகள் முதலியன இரத்தத்தை இப்பாதைகளில் உந்திச் செலுத்தும் விசைப் பொறி இருதயம். இவைகள் ஒன்றையொன்று சார்ந்து இணைந்து செயல்படும் இரத்த சுழற்சி கூறமைவு. இவைகளில் ஏதேனும் ஒன்றில் பழுது ஏற்பட்டாலோ, நோய் பற்றினாலோ இந்தக் கூறமைவு முழுவதுமே பாதிக்கப்படும்.

இருதய நோய்களைப் பொதுவாக "மௌனநோய்கள்" என்று சொல்லலாம். சில குறிப்பிட்ட நோய் வகைகளைத் தவிர மற்றவைகள் இருப்பதற்கான அறிகுறிகளே தெரியாது. "நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை" என்ற பெருமையை மனிதனுக்கு கொடுத்தவற்றுள் இருதய நோயையும் முக்கிய காரணமாகச் சொல்லலாம். சிறு வயதிலிருந்து சில கோளாறுகள் இருந்திருக்கலாம். ஆனால் வயது முதிர்ந்த உடன் தான் அவைகள் "விஸ்வரூபம்" எடுக்கும்.

இருதய நோய் இருக்கும் அல்லது ஆரம்பமாகும் அறிகுறிகள் அவ்வளவு எளிதாகத் தெரிவதில்லை. தற்செயலாகத்தான் கண்டு பிடிக்கப்படுகிறது. வேறு ஏதேனும் நோய்க்காகவோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ மருத்துவ சோதனை செய்யும் போதுதான் இது பெரும்பாலும் கண்டுபிடிக்கப்படுகிறது. டாக்டர்கள் பரிசோதிக்கும் போது பல உண்மைகள் வெளிவரும். நாடித்துடிப்பு, இருதயத் துடிப்பு முதலியன பல இரகசியங்களை டாக்டர்களுக்குத் தெரிவித்துவிடும்.



நாடித் துடிப்பு உடலில் பல இடங்களில் தொட்டுப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். தமனிச் சுவர்களில் விட்டுவிட்டு ஏற்படும் ஏற்ற தாழ்வுகளே நாடித்துடிப்பு. நாடித்துடிப்பை மேலார்ந்த தமனிகளில் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். பொதுவாக மணிக்கட்டுப் பகுதியில் ரேடியல் தமனியில் தொட்டுணர்ந்து கணக்கிடப்படுகிறது. தவிர முழங்கை, அக்குள், கழுத்து, பொட்டு, அரை முதலிய இடங்களிலும் கண்டுணரலாம். இருதயத் துடிப்பின் வேகம், விகிதம், லயம் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை இது தெரிவித்துவிடும். மகாதமனி – தடுக்கிதழ் குறுகலாக இருந்தால் அதன் வழியாக வரும் இரத்தத்தின் அளவும் வேகமும் குறையும். அதற்கேற்ப நாடித்துடிப்பிலும் மாறுதல்கள் தென்படும்.

இரத்த அழுத்தத்தை கண்டறிய ஸ்பிக்மோமானோ மீட்டர், டோனோ மீட்டர் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. தவிர இருதய மின்னலை வரைபடம், இருதய எக்ஸ்ரே, இருதய எதிரொலி வரைபடம் முதலான கருவிகள் துணையுடன் இருதயம் இரத்த நாளம் தொடர்பான நோய்கள் கண்டறியப்படுகின்றன. மருத்துவ சோதனையின் போது இருதய ஒலியில் வழக்கத்திற்கு விரோதமான ஒலிக்குறிப்பு உண்டாவது தெரிந்து விடுகிறது. இந்த புதிய ஒலிக்கு இருதய முணுமுணுப்பு என்று பெயர். இருதய முணுமுணுப்பு மட்டுமே ஒருவனை இருதய நோயாளி என்று முத்திரை குத்திவிடாது. இருதய நோய்களுக்கு என்று சில நோய்க்குறிகள் உள்ளன. எனினும் அந்த நோய்க்குறிகளை மட்டுமே கொண்டு இருதய நோய்தான் என்று முடிவாகக் கூறிவிட முடியாது. எனினும் பெரும்பான்மையான சூழ்நிலைகளில் இந்த நோய்க்குறிகள் இருதய நோய்களின் அறிகுறிகளாகவே விளங்குகிறது.

1. தீராத சோர்வு அல்லது அசதி
2. மூச்சிறைப்பு
3. மார்புவலி
4. கணுக்கால் வீக்கம்
5. இடது கையில் வலி
6. மயக்கம் அல்லது கிறுகிறுப்பு
7. குறைந்த அளவு சிறுநீர் பிரிதல்—என்பன.

உடல் சோர்வு அடிக்கடி ஏற்படுவதும் இருதய நோய்களின் அறிகுறியே. இரத்தத்தில் போதுமான ஆக்ஸிஜன் இல்லாததே இதற்குக் காரணம். எனினும் இதை ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு இருதய நோய் என்று கூறிவிடமுடியாது.

மூச்சிறைப்பு என்பது மூச்சு விடுவதில் ஏற்படும் சிரமம். இது இருதய நோயின் மிக முக்கியமான அறிகுறியாகும். மூச்சுவிடுவதில் சிரமம் பலருக்குப் பல விதங்களில் ஏற்படுகிறது. சாதாரணமாக உட்கார்ந்து கொண்டு ஓய்வெடுக்கும் போதே சிலருக்கு மூச்சிரைப்பு வரும். மாடிப்படி ஏறி இறங்கினால் மூச்சிரைப்பு வரும். வேறு சிலருக்கு அதிக உடலுழைப்பினால் இது ஏற்படும்.

மார்பு வலியும் இருதய நோயின் அறிகுறிதான். எனினும் மார்பு வலியைக் கொண்டு மட்டும் இருதய நோய் என்று நிர்ணயித்து விடமுடியாது. இரைப்பையில் ஏற்படும் நலிவு, மார்புத் தசை அழற்சி மற்றும் பல நோய்களின் காரணமாகவும் மார்பு வலி ஏற்படலாம்.




இருதயத்திற்கு நரம்பூட்டம் அளிக்கும் நரம்புகள்
[illegible]

சிலருக்கு மார்பு படபடப்பு இருக்கும். லயம் தவறிய இருதயத் துடிப்பை வெளிப்படுத்துவது. இருதயத் துடிப்பு சீராக லயத்தோடு இல்லாமல் வேகமாகவோ, மெதுவாகவோ இருக்கும் வழக்கத்தைவிட அதிகமான நாடித் துடிப்புகளும் இருக்கும்.

கணுக்கால்களில் வீக்கம் ஏற்படுவது. இடது கையில் வலி, கிறுகிறுப்பு, குறைந்த அளவு சிறுநீர் போதல், அளவுக்கு அதிகமாக வியர்த்தல், தூக்கமின்மை, அஜீர்ணம், அடிக்கடி வாந்தி எடுத்தல் முதலானவைகளும் இருதய நோயின் அறிகுறிகள். இருதய நோய் என்று குறிப்பிடுவது இருதயத்தைப் பற்றிய நோய்களை மட்டும் அல்லாமல் இரத்த நாளங்களின் நோய்களைப் பற்றியும் குறிப்பிடுவதுதான்.

### இருதய நோய்க் காரணங்கள்

இருதய இரத்த நாள வியாதிகளினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இப்போது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நம் நாட்டில் டில்லி நகரில் மட்டும் 1000க்கு 32 பேர்கள் இருதய நோய்களின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் 1000க்கு 111 பேர்களுக்கு இரத்த மிகை அழுத்தம் உள்ளதாம். நாம் முன்னுக்கு வரவேண்டும் என்ற பரபரப்பு

ஒய்வில்லாமல் உழைத்தல், போதிய தேகப் பயிற்சி செய்யாமை முதலியன இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் இருதய வியாதிகள் பெரும்பாலும் நாமாக வரவழைத்துக் கொள்வது தான். நாம் என்ன சாப்பிடுகிறோம்? நாம் என்ன செய்கிறோம்? நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? என்பனவெல்லாம் இருதய நோயின் காரணிகளாக விளங்குகின்றன. தேகப் பயிற்சியின் அவசியம் பற்றியோ, ஊட்ட உணவின் முக்கியம் பற்றியோ அறியாதது ஒரு காரணம். புகை பிடித்தல், குடி முதலியன மற்றொரு காரணம். இருதய நோய்கள் ஏற்படுவதற்கு இவைகளைப் போல் இன்னும் எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை :

1. பிறவி இருதய நோய்கள்
2. முடக்கு வாதக்காய்ச்சல்
3. காக்காய் வலிப்பு வகை
4. கிரந்தி, சோகை, பெரிபெரி முதலான நோய்கள்
5. உணர்ச்சிகள் உருவாக்குபவை
6. இரத்த மிகை அழுத்தம்
7. கரோனரி நாள அடைப்பு முதலியன.

கருவிலே குழந்தை வளரும் போதே ஏற்படும் இருதயக் கோளாறுகள் பின்னர் இரத்த சுழற்சி சரிவர நடைபெறமுடியாதவாறு தடுக்கிறது. இதனால் இருதயம் பெரிதும் பாதிக்கப்பட்டு பல இருதய நோய்கள் உண்டாகின்றன.

முடக்கு வாதக் காய்ச்சலும் இருதயத்தைப் பாதிக்கின்றன. இருதய தடுக்கிதழ்கள், எண்டோகார்டியம் எனும் உள்ளுறை, மையோகார்டியம் எனப்படும் நடு உறை முதலியன முடக்குவாதக் காய்ச்சலினால் பாதிக்கப்படுகிறது. இதனால் இருதயப்பணியில் கோளாறுகள் ஏற்படுகின்றன.

காக்காய் வலிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் முடக்குவாதம். இருதய நோய்கள் உண்டாவதற்கான முக்கிய காரணங்களில் முடக்கு வாதமும் ஒன்றாகும். எனவே காக்காய் வலிப்பு நோயினால் இருதயம் பாதிக்கப்படுவதில் வியப்பு ஒன்றுமில்லை. காக்காய் வலிப்பினால் முதன் முறையாக இருதயம் பாதிக்கப்படும் போது நாடித்துடிப்பு துரிதமாக இருக்கும். இருதயம் சற்று விரிவடைந்து, இருதயத் துடிப்பு வழக்கமாக ஏற்படும் இடத்தை விட்டுச் சற்று விலகி ஏற்படும். இருதய முதல் ஒலியின் ஓசை வழக்கத்தை விடக் குறைவாக இருக்கும். அத்துடன் மிட்ரல் தடுக்கிதழ் பகுதியில் லேசான முணுமுணுப்பு ஒலியும் உண்டாகும். இந்த அறிகுறிகள் மையோகார்டிட்டிஸ் எனும் இருதய தசை அழற்சியைக் குறிப்பவை. முடக்குவாதக் காய்ச்சலினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட இருதயத்தில் இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டால் அது தடுக்கிதழ்களைப் பாதித்துவிடும்.

கிரந்தி, சோகை, பெரிபெரி போன்ற நோய்களும் இருதயப் பணியைப் பாதிக்கின்றன. இருதய தடுக்கிதழ்களில், கோளாறு, மையோகார்டியம் எனும் இருதயத் தசையில் நலிவு, இருதயத்தின் வலது பக்கம் விரிவடைதல் முதலியன இதனால் ஏற்படுகின்றன.

சில நோயாளிகளைப் பரிசோதிக்கும்போது இருதய நோய்க்கான எந்தவித அறிகுறிகளும் தென்படுவதில்லை. எனினும் இருதய இரத்த நாள நோய்கள் அவர்களைப் பாதித்துள்ளன. இதற்குக் காரணம் உணர்ச்சிகள் – பயம், பதட்டம், மனதில் கட்டுப்படுத்தி வைக்கப்பட்ட உணர்வுகள், எதிர்பாராமல் கேள்விப்படும் பெருமகிழ்ச்சியான செய்தி அல்லது அதிர்ச்சி தரும் செய்திகள் இருதயத்தைப் பாதித்து விடுகின்றன. திடீரென்று லாட்டரியில் பெரும் பணம் கிடைத்த மகிழ்ச்சியைத் தாங்க முடியாத சிலருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மரணமும் சம்பவித்திருக்கிறது. இதே போல் அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்டு நிலை குலைந்து இருதய நோய்க்குள்ளானவர்களும் உண்டு.

இரத்த மிகை அழுத்தத்தினாலும் ஆஸ்துமா, மூச்சு கிளைக்குழல் அழற்சியினாலும், வெண்ரிக்கிளின் வேலைப்பளு அதிகரிக்கிறது. இதனால் இருதயத்தின் எல்லா பகுதிகளும் நாளடைவில் சீர்கெட்டுப் போய்விடுகின்றன.

இருதயத் தசை சரிவர இயங்க அதற்குத் தேவையான இரத்த ஊட்டம் வேண்டும். ஒரு வங்கியின் காசாளர் போல இருதயம். நாள் முழுவதும் இலட்சக் கணக்கான ரூபாய்களை வங்கிக் காசாளர் எண்ணிக் கொண்டிருந்தாலும் அவரது வாழ்க்கைச் செலவுக்குத் தேவையானதை அவர் ஊதியமாகத்தான் பெற்றுக் கொள்கிறார். நேரடியாக எடுத்துக் கொள்வதில்லை. அதே போல்தான் இருதயமும். இது முழுவதும் இரத்தம் எப்போதும் நிரம்பியிருந்தாலும் தனக்குத் தேவையானவற்றை நேரிடையாக எடுத்துக் கொள்ள முடியாது. இருதயத்திற்கு இரத்த ஊட்டம் அளிப்பது கரோனரி நாளங்கள். இதில் ஏற்படும் அடைப்புகள் இருதயத் தசைகளைச் சிதைவுறச் செய்கின்றன. இதனால் இருதயம் பாதிக்கப்படுகிறது. இதனால் மாரடைப்பு ஏற்படுகிறது.

இருதய நோய்களின் முக்கிய காரணங்கள் இவை.

*– "உடலியல் கலைக் களஞ்சியம்"*
*புத்தகத் தொகுப்பிலிருந்து...*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927






# தமிழரசு

செப்டம்பர் 1–30, 2000 ரூ.10



# கலைஞர் அரசில்

## முதுமைக்கு மரியாதை செய்ய

### மாத ஓய்வூதியம் ரூ.200 ஆக உயர்வு







விழாமல் மரத்தைத் தாங்கும் விழுதுபோல்
ஆதரவற்றவர்க்கு அரசே ஊன்றுகோல்

**பலன்பெறுபவர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| முதியோர் உதவித் தொகை | 4,15,399 |
| விதவை உதவித் தொகை | 3,97,850 |
| உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | 39,847 |
| நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் | 73,572 |
| கணவனால் கைவிடப்பட்ட மகளிர் | 70,489 |
| நெசவாளர்களுக்கு உதவித் தொகை | 5,680 |


858


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 1–30, 2000
மலர் : 32 இதழ் : 5 & 6
விலை ரூ.10


முதல் பக்க அட்டையில்
உயிரியல் தொழில்நுட்ப மாநாடு

கடைசிப் பக்க அட்டையில்
தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா
வண்ண ஓவியம்

## இந்த இதழில்...


- வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம் — 2
- அடுத்த 10 ஆண்டுகளில் உணவு உற்பத்தியை இருமடங்காக்க முயற்சி — 4
- எங்கள் ஊர் பிரச்சினை — 7
- உயிர்த் தொழில்நுட்பக் கொள்கை — 9
- மருதாயிக் கிழவியின் காகிதப்பைகள் — 16
- தொலை மருத்துவ மையம் — 21
- மோர்தானா அணை — 25
- செய்திச்சரம் — 30
- மீனின் விழிகளிலும் கண்ணீர் — 33
- நூற்றாண்டுக்கு ஒருவர் தந்தை பெரியார் — 34
- எருதுகட்டு — 40
- அண்ணா ஒரு காவியம் — 46
- தொல்லியலும் சங்க இலக்கியமும் — 57
- சோத்துப்பாறை அணை — 68
- அறநிலையத்துறையின் அரும் பணிகள் — 73


**திருக்குறள்**

*ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்*
*கருதி இடத்தாற் செயின்.*

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம்

"வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம்" (Bio-technology for Development) என்னும் இம்மாநாட்டில் பங்குபெறும் வாய்ப்பினை எண்ணி நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இம்மாநாடு அமெரிக்க நாட்டு கார்னல் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவிலுள்ள சத்குரு மேலாண்மை நிறுவன ஆலோசகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி



நிறுவனம் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றின் ஆதரவுடனும் நடைபெறுகிறது.

உயிரியல் தொழில்நுட்பத் துறையில் கடந்த நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த பல முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, வேளாண்மை, சுகாதாரம் மற்றும் மருந்தாக்கத் தொழில்கள் போன்றவைகளில் வியக்கத்தக்க வகையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் மானுட மரபணு தொடர் வரிசை முறை அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மரபியல் இயக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இத்தகைய பின்னணியில் உயிரியல் தொழில்நுட்பம், வருங்காலத்தில் தொழில் துறையில் விரைவான முறையில் வளர்ச்சி பெறுவதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவைப்படக் கூடிய உணவுப் பாதுகாப்பு, சத்துணவு, சுகாதாரம், சுற்றுச்சூழல்கள் போன்றவைகளில் உயிரியல் தொழில்நுட்பத்தின் ஆற்றல் பொதிந்து கிடக்கிறது என்பதால் அது முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். வளரும் நாடுகளில் இந்த முயற்சி மிகவும் முக்கியமானது. மக்கள் தொகைப் பெருக்கம், வரம்பிற் குட்பட்ட விளைநிலங்கள், அதிக அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகியவை தொடர்பான இன்றைய சவால்களைச் சந்தித்துத் தீர்வு காண்பதற்கு இது நமக்கு பெரிதும் உதவும்.

**உயிரியல் தொழில்நுட்பத்தில் புதிய முதலீட்டிற்கு சிறந்த வாய்ப்பு**

உயிரியல் தொழில்நுட்பம் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கக் கூடியது. இவ்வாறு உயிரியல் தொழில்நுட்பம், புத்தாயிரம் ஆண்டில் தகவல் தொழில் நுட்பத்துடன் இணைந்து மிகப்பெரிய அளவில் செழித்து வளரும் அருமையான வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

உயிரியல் தொழில் நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில், இந்தியாவில் நுகர்வதற்குப் பயன்படுவனவற்றின் மதிப்பு ரூ.7,154 கோடி (1,789 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) என இருந்தது; இது நடப்பு ஆண்டில் 9,400 கோடி ரூபாய் (2,186 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) அளவினை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2005ஆம் ஆண்டில் 14,560 கோடி ரூபாய் (3,236 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) அளவுக்கு மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றின் மூலம், உயிரியல் தொழில்நுட்பத்துறையில் புதிய முதலீடுகள் செய்யப்படுவதற்கு மிகச் சிறந்த வாய்ப்புகளை இந்தியா பெற்றுள்ளது என்பது விளங்கும்.

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது என்பதனை இப்பேரவையில் குழுமியுள்ளோர் அனைவரும் நன்கறிவர். தமிழகம் 1,60,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்துள்ளது. முதலீட்டாளர் நட்புறவு மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த இந்த அரசின் சீரிய கொள்கைகள் காரணமாகவே இது சாத்தியமாயிற்று. இம்மாநிலம் மிகச்சிறந்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளையும், உயர்தர மனித வளத்தினையும் வழங்குகிறது. இதன் வேலை – பண்பாடு (Work Culture) என்பது, நடைமுறைக்கேற்ற வினைத் திட்பத்தைக் (Business- like) கொண்டதாகும்.

அது மட்டுமல்லாமல், அரசின் அனைத்துச் செயல்பாடுகளும் வெளிப்படையானவையாகும்.

☐ முதலமைச்சர் **கலைஞர்**



இந்தக் காரணிகளின் அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையிலும் தமிழ்நாடு ஒரு முன்னணி மாநிலமாக எழுச்சி பெறும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தமிழ்நாடு உயிரியல் வளங்களையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள பல்வேறு வகையான நிலவியல் பகுதிகள் (geographical terrains) மிகப் பலவான உயிரியல் வகைகளைக் கொண்டுள்ளது. இதன் வனவளம், வேளாண்மை வளம், நிலவளம் ஆகியவை அளவில் பெரியதாகவும், பல்வேறு வகையினதாகவும் அமைந்துள்ளன. நாட்டிலேயே நீண்ட கடற்கரையையும் இம்மாநிலம் கொண்டுள்ளது.

இவ்வாறு உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காகவும், உயிரியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மேம்பாடுகளுக்காகவும், வர்த்தக நடைமுறைகளுக்காகவும் அதிக அளவில் முதலீடுகள் செய்வதற்குரிய வாய்ப்புகளைத் தமிழகம் கொண்டுள்ளது. ஆகையால் உயிரியல் தொழில் நுட்பத்தில் தொழில் வளர்ச்சி சார்ந்த பல்வேறு நடைமுறைகளைத் தொடங்குவதற்குத் தமிழகம் தேவையான ஆற்றல்களைக் கொண்டுள்ளது என எங்களது அரசு உறுதியான கருத்தினைக் கொண்டுள்ளது.

**உயிரியல் தொழில்நுட்ப கொள்கை உருவாக்கம்**

இது தமிழக அரசினால் புகழ்மிகு அறிவியல் மேதை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் கருத்தும் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு இம்மாநிலத்திற்கான உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றினை வகுக்க முடிந்துள்ளது.

எனது தொடக்க உரையினுடைய முடிவில் இந்தக் கொள்கை ஆவணத்தினை வெளியிடவிருக்கிறேன் என்பதனை நான் இங்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு குழுமியுள்ள அறிவார்ந்த பெருமக்கள் இக்கொள்கை பயனுள்ளது என்பதனையும், சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதனையும் உணர்வார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

வருகின்ற மாதங்களில் எங்களது அரசு இந்த உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையை நிறைவேற்றிட பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்திடும். அத்துடன் பல பெரிய அளவிலான தொடக்கப் பணிகளும் செயல்முறைக்கு வரும்.

உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஆவணத்தை உருவாக்கியுள்ளதில் மட்டுமல்லாமல் இக்கொள்கை ஆவணத்தைப் பன்னாட்டு அறிஞர்கள் கூடியுள்ள இம்மாநாட்டில் வெளியிடுவதன் மூலமும் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியை அடைகிறேன்.

மாநிலத்திலுள்ள அதிக அளவிலான உயிரியல் வளங்களை மூலதனமாகக் கொள்ள இக்கொள்கை வழிவகுக்கிறது. அத்துடன் இம்மாநிலத்தில் நிறைந்துள்ள மிகச்சிறந்த தரத்திலான மனித ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் இது வழி காட்டுகிறது. இந்த ஆவணம் கொள்கை வடிவமைப்பையும், நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிவகைகளையும் முழுமையாகக் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள உயிரியல் வளங்களை நீடித்து நிலைத்து நிற்கும் பொருளாதார மேம்பாட்டுக்கான சாதனங்களாக மாற்றுவதற்கு இக்கொள்கை உதவும்.

**இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்ப வரைபடத்தில் தமிழகம் இடம் பெறும்**

அண்மையில் சில ஆண்டுகளில் தமிழக அரசு முதலீடுகளை ஈர்ப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தை முன் நடத்திச் செல்வதற்கும் உரிய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளின் பயனாக மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது, குறிப்பாக அறிவு வளர்ச்சி சார்ந்த தொழில் துறைகளில் (Knowledge-based industries) மிகச் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இக்கொள்கையின் பல்வேறு அம்சங்களையும் சரியான செயல்திட்டங்களாக மாற்றுவதில் தமிழக அரசு முனைந்துள்ளது. இது இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்ப வரைபடத்திலும், அதே போல உலக வரைபடத்திலும், தமிழகத்தினை இடம் பெறச் செய்வதில் எங்களின் சீரிய முயற்சியாக அமைந்திடும்.

இந்த மாநாட்டின் அமைப்பாளர்கள், மாநாடு நடைபெறுவதற்குரிய இடமாகச் சென்னையைத் தேர்வு செய்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்பு அதிநவீனமானதும் அளவில் மிகப் பெரியதுமான "டைடல் மென்பொருள் பூங்காவினை" சென்னையில் நாங்கள் தொடங்கினோம். இன்று பன்னாட்டு அறிஞர்கள் பங்கு பெற்றுள்ள இந்த மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன். தமிழக மக்களுக்கும் இந்தியாவின் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களுக்கும் இது ஒரு சிறந்த நிகழ்வாகும். இம்மாநாட்டில் நிகழும் விவாதங்களின் மூலம் பயனுள்ள புதிய பல சிந்தனைகள் உருவாகும் என நான் உறுதியாக நம்புகிறேன். இம்மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெற என் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

– *'வளர்ச்சிப் பாதையில் உயிரியல் தொழில்நுட்பம்' மாநாட்டில் 12-9-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிர் தொழில்நுட்ப கொள்கையினை வெளியிட்டு ஆற்றிய உரை.*

★ ★ ★

# அடுத்த 10 ஆண்டுகளில் உணவு உற்பத்தி இரு மடங்காக்க முயற்சி

☐ திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
வேளாண்மைத்துறை அமைச்சர்

தேசிய வேளாண்மை கொள்கைக் குறித்து சில முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் நித்தீஷ்குமார் அவர்களால் கூட்டப்பட்டுள்ள இம்மாநாட்டில் கலந்து கொண்டு தமிழக அரசின் சார்பில் கருத்துக்களை எடுத்து வைக்க எனக்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

உருகுவே நாட்டில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வேளாண்மை குறித்த ஒப்பந்தத்தின் படி வளர்ந்து வரும் நாடுகளில் உற்பத்தியாகும் வேளாண்மைப் பொருட்கள் எதிர்பார்த்த ஏற்றுமதி உயர்வினை அடைய வில்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் வளர்ச்சி பெற்ற நாடுகள் வேளாண்மைத் தொழிலுக்கு அதிக அளவில் மானியம் அளிப்பதால் அந்த நாடுகளில் உற்பத்தியாகும் வேளாண் பொருட்களை குறைந்த விலையில் ஏற்றுமதி செய்கின்றன. அதனால் வளரும் நாடுகளின் வேளாண் விளை பொருட்களுக்கு உற்பத்தி செலவுக்கு ஏற்ப உரிய விலை கிடைக்கவில்லை. வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் வேளாண் விளைபொருட்களுக்கு உயர்ந்தபட்ச சுங்கவரி விதிக்கப்பட்டால் தான் வளர்ந்த நாடுகளின் விளைப் பொருட்களின் இறக்குமதி குறைந்து நம் நாட்டு உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் என்பதால் மத்திய அரசு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## தேசிய வேளண்மை கொள்கையை வரவேற்கிறேன்

1994-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ''காட்'' ஒப்பந்தத்தினால் நமது நாட்டிற்கு வேளாண்மையில் ஏற்படும் சாதக, பாதக நிலைமையை அறிய மத்திய அரசு ஒரு உயர்மட்டக் குழு அமைத்து அக்குழு அளிக்கும் பரிந்துரையின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்த 20 ஆண்டுகளுக்குள் வேளாண்மை வளர்ச்சி, ஆண்டுக்கு 4 சதவிகிதத்திற்கு மேலாக வளர்ச்சி அடைய வேண்டுமென்ற கோட்பாட்டுடன் வரையறுக்கப்பட்டுள்ள ''இந்திய தேசிய வேளாண்மைக் கொள்கையை'' தமிழக அரசின் சார்பாக நான் வரவேற்கிறேன்.

## முதல்வர் தலைமையில் உயர்மட்டக் குழு

தமிழக அரசைப் பொறுத்த வரை நடைபெறும் 9-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண்மையின் வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 5 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டுமென்ற இலக்கு வரையறுக்கப்பட்டு உள்ளது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

''தமிழகத்தில் மாநில வேளாண்மைக் கொள்கை'' உருவாக்கி அதன் செயல்பாடுகளை கண்காணிக்க தமிழக முதல்வர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் விவசாயிகள் அதிக அளவில் பழங்கள் மற்றும் காய்கறி களைச் சாகுபடி செய்கிறார்கள். இவைகள் எளிதில் கெட்டுவிடும் தன்மை உடையதாலும், அறுவடைக்குப் பின் இழப்பினைத் தவிர்க்கவும், உற்பத்தி மையங்களில் குளிர்சாதனக் கிடங்குகள் அமைக்க தமிழக அரசால் திட்ட மிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட் களுக்கு நல்ல விலை பெற வழி வகை செய்யப்படுகிறது.

தேசிய தோட்டக்கலை வாரியம் மூலம் 25 சதம் முதலீடு மானியம் வழங்கி பெருமளவில் குளிர்சாதன கிடங்குகள் நிறுவ மத்திய அரசு முன் வந்து இருப்பதை நான் இங்கு பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதுபோன்ற திட்டங்களை மாநில அரசுகள் செயல்படுத்த நிதி நெருக்கடி உள்ளதால் மத்திய அரசு 50 சதமாக உயர்த்துவதுடன், தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ள குளிர்சாதன கிடங்குகள் அமைக்கும் பணிக்கு மத்திய அரசு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டும்.



வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு மத்திய அரசு அளிக்கும் ஊக்கத்திற்கு தமிழக அரசின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் தங்கள் வேளாண்மை விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏதுவாக மத்திய அரசு பல வேளாண்மை விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்து இருந்தாலும், இன்னும் சில வேளாண் விளை பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை.

எனவே மத்திய அரசு அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

வெங்காய விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் சாகுபடி செய்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே ''நேபஃபெட்'' நிறுவனத்தின் மூலம் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தையும் கொள்முதல் செய்திட வேண்டுமென மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். வெங்காயம் விரைவில் கெட்டுவிடும் பொருள் என்பதால் தமிழ்நாட்டில் இருந்து அதிக அளவில் வெங்காயத்தை கொள்முதல் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## தேசிய பயிர் காப்புறுதி திட்டம்

மத்திய அரசு அறிவித்துள்ள ''தேசிய பயிர் காப்புறுதி திட்டத்தை'' தமிழ்நாட்டில் செயல்படுத்த தமிழக அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது. இத்திட்டத்தை நடப்பாண்டில் செயல்படுத்த தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான ''கார்ப்பஸ் நிதி''க்கு தமிழக அரசின் பங்கு விரைவில் செலுத்தப்பட உள்ளது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ள ''கார்ப்பஸ் நிதி''க்கு மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் நிதியினைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மாநில அரசுக்கு நிதி சுமை அதிகம் ஆகியது என்பதால் மாநில அரசுகளுக்கு நிதி சுமை ஏற்படா வண்ணம் 75:25 என்ற விகிதத்தில் நிதி பங்கேற்பு விகிதாச்சாரத்தை மத்திய அரசு மாற்றி அமைக்க வேண்டுமென தமிழக அரசின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சுமார் 3.5 இலட்சம் எக்டெரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு சுமார் 600 இலட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இதில் சுமார் மூன்றில் ஒரு பங்கான 200 இலட்சம் தென்னை மரங்கள் ஈரியோபைட்மைட் என்ற சிலந்தி பூச்சிகளினால் தாக்கப்பட்டுள்ளதால் தென்னை பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் உயிரியல் பூச்சிக் கொல்லி மற்றும் கார்போசல் பான் மருந்தை வேர் மூலம் செலுத்தி இந்த பூச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என கண்டறிந்து உள்ளது. இந்த மருந்தை இரண்டு முறை வேர் மூலம் செலுத்த ஒரு தென்னை மரத்திற்கு ரூ.21.60 காசு செலவாகும். விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து செலுத்த ஆகும் செலவை வழங்க முதற்கட்டமாக ''தேசிய துயர் துடைப்புநிதி'' யிலிருந்து ரூ.37 கோடி தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்ய 26.7.2000 நாளிட்ட கடிதத்தின் மூலம் மத்திய அரசை கோரியுள்ளது. இந்த நிதியை உடனே வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

## நிதியை மத்திய அரசு தரவேண்டும்

மேலும் இந்த மருந்தை வேர் மூலம் செலுத்துவதுடன் வேப்பம் புண்ணாக்கு, மக்கிய தொழு உரம், ஜிப்சம், மக்னீசியம் சல்பேட், போராக்ஸ், இரசாயன உரம் மற்றும் நுண்ணூட்டச் சத்து இடவேண்டும் எனவும், அதற்காக ஒரு மரத்திற்கு ரூ.60 செலவாகும் எனவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கணக்கிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 200 இலட்சம் மரங்களுக்குச் சுமார் ரூபாய்160 கோடி அளவில் பயிர் பாதுகாப்பு மற்றும் உரம் இட செலவு ஆவதால் இந்த தொகையை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்க மத்திய அரசு இந்த நிதியை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் பொறுப்பேற்றவுடனும், அண்ணாவின் மறைவிற்குப் பின்பு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் வேளாண்மையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி உணவு தானிய உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, பெருகி வரும் மக்கள் தொகைக்கும், குறைந்து வரும் சாகுபடி பரப்புக்கும் பெருகி வரும் உணவு தேவையினை ஈடு செய்யும் வகையிலும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

அதன் அடிப்படையில் 1995-96-ஆம் ஆண்டில் தமிழகத்தின் மொத்தம் உணவு உற்பத்தி 68 இலட்சம் மெ.டன்கள் ஆகவும், அரிசி உற்பத்தி 52 இலட்சம் மெ.டன்கள் ஆகவும் இருந்ததை 1996-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக முதலமைச்சராகப் பொறுப் பேற்றவுடன் வேளாண்மைத் துறைக்கும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கும் தொடர்ந்து வழங்கி வரும் ஊக்கத்தின்

காரணமாகச் சிறப்பாகச் செயல்பட்டு அரிசி உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

1998-99-ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஒரு எக்டெருக்கு 3,579 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டு 22.74 எக்டெர் பரப்பில் 81.41 இலட்சம் மெ.டன் அரிசி உற்பத்தி செய்து சாதனைப் படைத்துள்ளது.

இந்த உற்பத்தி திறனை அடைவதற்கு காலத்தே வழங்கப்பட்ட இடுபொருட்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, நுண்ணூட்டச் சத்து, உயிரின உர உபயோகம், தரமான சான்றிதழ் பெற்ற விதைகள் வினியோகம் மற்றும் மத்திய, மாநில அரசு திட்டங்களைக் காலத்தே செயல்படுத்தியதாலும், நவீன தொழில் நுட்பங்களைக் கடைபிடித்ததாலும் அரிசி உற்பத்தித் திறனில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழக அரசு 9வது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் ஒரு எக்டெரில் 7 மெ.டன் அளவிற்கு உற்பத்தியை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்திட்டம் தீட்டி செயல்பட்டு வருகிறது என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்..

அதேபோல் அடுத்த 10 ஆண்டிற்குள் உணவு உற்பத்தியை இரண்டு மடங்காக, அதிகரிக்க வேண்டுமென்ற மத்திய அரசின் எதிர்பார்ப்பை அடைய தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை இங்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முயற்சியினால் தமிழகத்திலுள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் ஆய்விற்கு பின்னர் தமிழகத்திலுள்ள சுமார் 15 இலட்சம் எக்டெர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 1999-2000-ஆம் ஆண்டில் சுமார் 10,000 எக்டெர் தரிசு நிலங்கள் வேளாண்மைக்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் 2000-2001-ஆம் ஆண்டில் 30,000 எக்டெர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வேளாண்மைப் பாடம்**
**தமிழக அரசு நடவடிக்கை**

இந்தியா ஒரு விவசாய நாடு. 70 சதம் மக்கள் விவசாயத் தொழிலையே நம்பிவாழ்கிறார்கள். 80 சதம் தொழிற்சாலைகள் வேளாண்மை விளைபொருட்களையே மூலப்பொருட்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு வேளாண்மைக் கல்வியை உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு பாடமாக முதல் கட்டமாக 2000-2001-ஆம் ஆண்டு முதல் 200 பள்ளிகளில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனால் படித்த இளைஞர்கள் வேலைத் தேடி அலையாமல் கிராமங்களில் உள்ள அவர்களுடைய நிலங்களிலேயே அவர்கள் பெற்ற வேளாண்மை தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு விஞ்ஞான முறையில் வேளாண்மையைச் செய்து வருவாயை ஈட்டக் கூடிய அளவில் ஈடுபட ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, வேளாண் பாடத் திட்டத்தை அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டுவர தமிழக அரசுக்கு, மத்திய அரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவிப்பால் தமிழகத்தில் ''உழவர் சந்தை'' திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை இங்கு தெரிவிப்பதோடு, இதனால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உரிய விலையும், நுகர்வோர்களான பொது மக்களுக்குக் குறைந்த விலையில் காய்கறிகளும், பழங்களும் கிடைக்கின்றன. இதனால் உழவர் சந்தைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

இதுவரை தமிழகத்தில் 65 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2000-ஆம் ஆண்டு இறுதிக்குள் 100 உழவர் சந்தைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மத்திய வேளாண் அமைச்சருக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

- புதுடெல்லியில் நடைபெற்ற வேளாண்துறை
அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை.

★ ★ ★



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம் திண்ணனூர் கிராமத்தில் இருந்து கரட்டாம்பட்டி வரை உள்ள மிக மோசமான தார்சாலையை மாற்றி தார்சாலை நான்கு கிலோ மீட்டர் போடப்பட வேண்டும்.
2. திண்ணனூரில் இருந்து ஓமாந்தூர் வரை உள்ள கப்பி சாலை தார்சாலையாக மாற்றப்பட வேண்டும்.
3. முசிறியில் இருந்து புலிவலம், திண்ணனூர், புத்தனாம்பட்டி வரை புறநகர பேருந்து இயக்கப்பட வேண்டும்.
4. துறையூரிலிருந்து காலை 5 மணிக்கு திண்ணனூர் வருவதற்கு புறநகர பேருந்து இயக்க வேண்டும். இரவு 10 மணிக்கு சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து புற நகர பேருந்து திண்ணனூர் வழியாக துறையூர் வரை இயக்க வேண்டும்.
5. முசிறி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சுற்றிலும் தடுப்புச்சுவர் எடுக்கப்பட வேண்டும்.

*கிராம பொதுமக்கள் சார்பாக*
*மு.இராஜவேல், திண்ணனூர்,*
*திருச்சிராப்பள்ளி.*

**தீர்வு :**

1. முசிறி வட்டம் திண்ணனூர் கிராமத்தில் இருந்து கரட்டாம்பட்டி வரை உள்ள சாலையில் கி.மீ.0/0–1/0 வரை உள்ள தார்தளம் நல்ல நிலையில் உள்ளது. கி.மீ.1/0 – 3/6 வரை உள்ள தார் தளத்தைப் புதுப்பிக்க ரூ.18.20 இலட்சத்தில் 2000–2001–ஆம் ஆண்டிற்கான நபார்டு திட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரேரணை ஒப்புதல் பெற்றதும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படும்.
2. முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கும் சாலையாகும். இதனை அடுத்து வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து இப்பணி செய்யப்படும்.
3. முசிறியில் இருந்து புலிவலம், திண்ணனூர், புத்தனாம்பட்டி வரை புறநகர பேருந்து தினசரி ஒரு நடை இயக்கப்பட்டு வருகிறது.
4. துறையூர் – திண்ணனூர் (வழி) கரட்டாம்பட்டி வழியாக இரண்டு நடையும், துறையூர் – சமயபுரம் (வழி) கரட்டாம்பட்டி, திண்ணனூர் வழியாக நான்கு நடையும், துறையூர் – மண்ணச்சநல்லூர் (வழி) கரட்டாம்பட்டி, திண்ணனூர் வழியாக நான்கு நடையும் தினசரி இயக்கப்பட்டு வருகிறது.
5. தடுப்புச்சுவர் கட்டும் பணி எத்திட்டத்திலும் எடுக்கப்படுவதில்லை. இந்த வேலைக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். இதில் 1/4 பங்குக்குக் குறைவாகப் பங்குத் தொகை செலுத்தினால் இவ்வேலையை "நமக்கு நாமே" திட்டத்தில் எடுத்துச் செய்ய ஏதுவாகும்.

*திட்ட அலுவலர்,*
*மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,*
*திருச்சிராப்பள்ளி.*

★ ★ ★

**பிரச்சினை :**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், நாரணபுரம் ஊராட்சி எங்கள் கிராமம். இங்கு துணை சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்பட்டு சுமார் 7 வருடங்களுக்கு மேல் திறக்கப்படாமலே உள்ளது. துணை சுகாதார நிலையம் தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. இரவு நேரங்களில் பொதுமக்களுக்கு நோய் வந்துவிட்டால், கிராமச் செவிலியரை அழைக்கச் சென்றால் இரவு நேரங்களில் வீட்டு உரிமையாளர் கதவைத் திறக்க மறுக்கிறார். கிராமச் செவிலியர் தொகுப்பு வீட்டில் இரண்டு வீடு தள்ளியுள்ளார். ஆகையால், பொதுமக்கள் இரவு நேரத்தில் சுமார் 5 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இரவு நேரங்களில் பேருந்து வசதியும் கிடையாது. ஆகையால், துணை சுகாதார நிலையத்தைத் திறக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் பலமுறை ஊர் பொதுமக்கள் மனு அனுப்பியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்ட ஆட்சித்தலைவர் முதல் நாரணபுரம் கவுன்சிலர் மற்றும் பஞ்சாயத்து தலைவர் வரை பொதுமக்கள் மனுக்கொடுத்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே நாரணபுரம் துணை சுகாதார நிலையத்தைத் திறக்க உடனே சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*ஊர் பொதுமக்கள் சார்பாக,*
*கே.நெடுஞ்செழியன்,*
*நாரணபுரம், திருநெல்வேலி மாவட்டம்.*

**தீர்வு :**

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், நாரணபுரம் துணை சுகாதார நிலையத்தில் குடிநீர் இணைப்பு மற்றும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இத்துணை சுகாதார நிலையத்தில் கிராம, சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிந்து வருகிறார் என்ற விபரத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாவட்ட ஆட்சித்தலைவர்,*
*திருநெல்வேலி.*

★ ★ ★

**பிரச்சினை :**

செய்யார் நகரிலிருந்து தேரூர் வரை இயங்கி வரும் பேருந்து (தடம் எண்.58) 4.7.2000 அன்று வழக்கம்போல்

பிற்பகல் 2.30 மணிக்கு செய்யாரிலிருந்து புறப்பட்டு வந்தது. அதில் நானும் பயணம் செய்தேன். வரும் வழியில் செங்காடு வாராவதி அருகே டயர் பஞ்சராகிவிட, மெதுவாக பேருந்தை கிருஷ்ணாவரம் இணைப்புச் சாலை வரை எடுத்துச் சென்று விட்டால் டயரும் பஞ்சர் போட்டு விடலாம். பயணிகளுக்கும் மாற்று ஏற்பாடுகளுக்கு வசதியாக இருக்குமென நடத்துனர் திரு ஏழுமலை தெரிவித்தார். ஆனால் அதை செவிமடுக்காத ஓட்டுநர் (பெயர் தெரியவில்லை) மறுத்து பயணிகளைப் பேருந்திலிருந்து இறக்கிவிட்டுவிட்டு செய்யார் நோக்கிச் சென்று கொண்டிருந்த வழிபோக்குக் காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

பயணிகளோ விதியே என அரசுப் பேருந்தையும் நொந்த வண்ணம் நடந்து வருகையில் கிருஷ்ணாவரம் வரை வரும் வேறு ஒரு தனியார் பஸ் கிடைக்க அதில் ஏறி கிருஷ்ணாவரம் இணைப்புச் சாலையில் வந்து இறங்கினோம். திடீரென அதே நகரப் பேருந்து (அரை மணி நேரத்தில்) கிருஷ்ணாவரம் வந்தது. பாலைவனச் சோலையாய் பேருந்தைக் கண்டதும் ஏற்கெனவே அதில் பயணம் செய்து, கைபிசைந்து நின்று கொண்டிருந்த பயணிகள் திபு திபுவென பஸ்ஸில் ஏற முண்டியடித்தனர். ஆனால் அதே ஓட்டுநர் பயணிகளை ஏமாற்றி பஸ்ஸை வேகமாக எடுத்துச் சென்றுவிட்டார். நடத்துனர் எவ்வளவோ சொல்லியும் பயணிகளின்றி அந்தப் பேருந்து தேரூர் சென்றது. ஏராளமான பயணிகள் ஓட்டுநரை வைதவண்ணம் நடந்து செல்லலாயினர்.

மறுநாள் அந்த ஓட்டுநரைப் பார்த்து அவர் செய்த அநியாயத்திற்கு என்ன காரணம் என தட்டிக் கேட்டேன். தமக்கும் நடத்துனருக்கும் ஏற்பட்ட சண்டைதான் காரணம் என கதைக்குதவாத காரணத்தைத் தெரிவித்தார்.

அரசின் பேருந்தில் அரசுப் பணியாளர்களான இருவருக்கும் உள்ள சொந்தப் பிரச்சினையால் ஐம்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் அவஸ்தைப்பட்டதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அவர்களின் சார்பில் இப்புகார் மனுவை ஏற்றுக் கொண்டு ஓட்டுநரை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம். இல்லையெனில் அரசுப் பேருந்துகள் என்றால் இப்படித்தான் என சிலர் சொல்லும் வியாக்கியானம் மெய்த்துப் போகும்.

நடவடிக்கையை நாடும்,

*பொதுமக்கள் சார்பில்,*
*ஈ.கிருஷ்ணவேணி, வல்லம்–604 525,*
*திருவண்ணாமலை மாவட்டம்.*



**தீர்வு :**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விகோ2)லிட், வேலூர் கழகத்தின் செய்யாறு பணிமனையைச் சேர்ந்த நகரத் தடம் எண்.டி58–இல் சம்பவ தினமான 4.7.2000 அன்று திரு.ஜெயக்குமார் ஓட்டுநராகவும் திரு.ஏழுமலை நடத்துனராகவும் பணிபுரிந்தனர். இவர்கள் இருவரையும் தலைமை அலுவலகத்திற்கு அழைத்து விசாரணை செய்யப்பட்டது. அவர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டதுடன், ஓட்டுநர் திரு. எ. ஜெயக்குமார், (பணி எண்.0280 என்பவரை) தற்போது பணிபுரிந்து வரும் செய்யாறு பணிமனையிலிருந்து காஞ்சிபுரம் பணிமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதை தங்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

*மேலாண் இயக்குநர்,*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*(விகோ2)லிட்., வேலூர்.*

★ ★ ★

**பிரச்சினை :**

எங்கள் ஊர் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் வட்டம் அன்னவாசல் பேரூராட்சியாகும்.

அன்னவாசல் பேரூராட்சிக்கு எதிரே உள்ள மின்கம்பம் சோடியம் விளக்கு பொருத்தப்பட்டுள்ள அதிகளவு மின்சாரம் செல்லும் மின்கம்பியாகவும், இந்த மின்கம்பம் உள்ளது. ஆனால் அதை தாங்கி நிற்கும் மின்கம்பம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதை உடனே மாற்றுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மின்கம்பம் அன்னவாசல் புதுக்கோட்டை சாலையில் அன்னவாசல் பேரூராட்சிக்கு எதிரே உள்ளது.

*ஊர் பொதுமக்கள் சார்பாக,*
*எழு.சீனிவாசன், இலுப்பூர் வட்டம்,*
*புதுக்கோட்டை மாவட்டம்.*

**தீர்வு :**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தைச் சேர்ந்த அன்னவாசல் பிரிவிற்கு உட்பட்ட அன்னவாசலில் மின் கம்பம் ஒன்று பழுதாகி இருப்பதாக மின்வாரிய ஊழியர் என் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

உதவிப் பொறியாளர் என்ற முறையில் நான் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்ட பிறகு, மின் கம்பத்தை மாற்றி அமைக்க 30.10.99–ஆம் தேதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 3.12.99–ஆம் தேதி மேல் அதிகாரியின் அனுமதியும் பெறப்பட்டது.

ஆக உடைந்த மின்கம்பம் தற்போது மாற்றப்பட்டு புதிய மின் கம்பம் நடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*உதவி மின் பொறியாளர்,*
*இயக்குதலும், காத்தலும்,*
*தமிழ்நாடு மின்சார வாரியம், அன்னாவாசல்,*
*புதுக்கோட்டை மாவட்டம்.* ★



# உயிர்த் தொழில்நுட்பக் கொள்கை

**கலைஞர் மு. கருணாநிதி**
தமிழ்நாடு முதல்வர்

## முன்னுரை

தமிழகத்துக்கான உயிர்த் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவோம் என்று 24.3.2000 அன்று எனது நிதிநிலை அறிக்கை உரையின் போது குறிப்பிட்டேன். தமிழக சட்டப்பேரவைக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அன்று அளித்த வாக்குறுதி இன்று நிறைவேற்றப்படுவதை எண்ணி அகமகிழ்கிறேன்.

இந்தக் கொள்கை தமிழகத்தின் செழுமையான உயிர்வளத்தை (rich and varied bio-resources) மூலதனமாக்க உறுதுணையாக இருக்கும். இக்கொள்கை மாநிலத்தின் சிறந்த தரமுள்ள மனிதவளத்தை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கும். சுற்றுச்சூழலுக்கும் சமூக அமைப்புக்கும் தாக்குப் பிடிக்குமாறு பொருந்தும் வகையில் உயிர்ச் செல்வத்தைப் பொருட் செல்வமாக மாற்றுவதற்கான கொள்கைகளை வகுத்து செயல்படுத்த அமைப்பு ரீதியாக வழி காண்பதும் நமது திட்டமாகும்.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழக அரசு, பெரிய அளவில் முதலீடுகளை ஈர்க்கவும், பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தை முதலிடத்துக்குக் கொண்டு செல்லவும் பல்வேறு முதன்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றின் விளைவாக தமிழ்கத்தின் பொருளாதார வளர்ச்சி - குறிப்பாக அறிவுசார் தொழில் துறையில் - வியத்தகு மேம்பாட்டை எட்டியிருக்கிறது. அரசு தற்போது இந்தக் கொள்கை முன்மொழிவை நடைமுறைத் திட்டமாக்கி உரிய செயல்வடிவம் தர உள்ளது. உரிய பலன்களைப் பெற அரசு முன் வந்துள்ளது. இந்திய உயிர்த் தொழில்நுட்ப வரைபடத்தில் மட்டுமல்லாது உலக உயிர்த் தொழில்நுட்ப வரைபடத்திலும் தமிழகத்தை இடம் பெறச் செய்வதைப் பெற்றுத் தரவே அரசு முனைந்து வருகிறது.

இந்த உயிர்த் தொழில்நுட்பக் கொள்கை, இத்துறையில் இதுவரையில்லாத புதிய தொழில் முதலீடுகளைக் கொண்டுவரும் என்பதும், அதன் விளைவாகத் தமிழ்நாட்டின் கல்வி, பொருளாதார வளர்ச்சி சுழன்று மேம்படும் என்பதும் திண்ணம்.

சென்னை-600 009
I அக்டோபர், 2000

மு. கருணாநிதி

### அ. அறிமுகம்

முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. அண்மைக் காலமாக, அறிவுசார் தொழில்துறையில் தமிழகத்தின் வளர்ச்சி அபாரமானதாகும். 1995–96இல் ரு.37 கோடியாக மட்டுமே இருந்த தமிழகத்தில் மென்பொருள் ஏற்றுமதியின் அளவு 1999–2000இல் ரூபாய் 1,914 கோடியை அடைந்திருக்கிறது. இந்த மகத்தான முன்னேற்றத்தின் பலன்களைத் திடப்படுத்தவும் பொருளாதார மேம்பாட்டில் மாநிலத்தை மேலும் முன் நகர்த்தவும் தமிழக அரசு இன்னொரு அறிவுசார் தொழில் துறையான உயிர்த் தொழில்நுட்பத்தின் மீது தனது கவனத்தைத் திருப்ப முடிவு செய்திருக்கிறது.



2. புத்தாயிரமாண்டில் ஊருருவிச் செல்லும் களமாக தகவல் தொழில்நுட்பமும், உயிர்த் தொழில்நுட்பமும் இருக்கவல்லவை என்பது உலகறிந்த உண்மை. அண்மையில் மனித மரபியல் குறியீட்டமைப்பு அறிவிக்கப்பட்டது. கடந்த இருபது ஆண்டுகளில் மரபு நுட்பவியல் பிரமிப்பூட்டும் வகையில் வளர்ந்திருக்கிறது. இந்தப் புதுமைகளைத் தொடர்ந்து உயிர்த் தொழில்நுட்பம் மின்னல் வேகத்தில் வளரும் தொழில்நுட்பமாக மாறியிருக்கிறது. இந்தப் போக்கை உணர்ந்த தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 2000–2001ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், அரசு ஒரு புதிய உயிர்த் தொழில்நுட்பக் கொள்கையை விரைவில் வகுத்துச் செயல்படுத்தும் என்று அறிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் ஓர் உயர்நிலைக்குழு நியமிக்கப்பட்டது. புதிய கொள்கையை வகுத்த அந்த குழுவின் பரிந்துரைகள் ஓர் அறிக்கையாக அரசிடம் அளிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையிலும் இது தொடர்பான பல்வேறு அம்சங்களைத் தீவிர பரிசீலனைக்குட்படுத்தியும், தமிழக அரசு ஒரு புதிய உயிர்த் தொழில்நுட்ப கொள்கையை அறிவிக்கத் திட்டமிட்டது.

### ஆ. பின்னணி

3. தமிழகத்தின் உயிர் வளம் மிகவும் செழிப்பானதாகும். தமிழகத்தில் உள்ள உயிர் வகைபாடுகளை (biodiversity) வேறு எந்த மாநிலத்திலும் காண்பது அரிது. மாநிலத்தின் வனவளம், வேளாண்வளம், தாவர வளம் ஆகியவை விரிந்தும் வேறுபட்டும் இருப்பதோடு மிகப்பெரிய உயிர்த் தொழில்நுட்பச் சந்தை ஒன்றை உருவாக்கும் ஆற்றல் படைத்தவை. மாநிலத்தில் 5,000க்கும் மேற்பட்ட பூக்கும் தாவரங்கள் உள்ளன. தமிழகத்தின் வனப்பரப்பு 22,500 ச.கி.மீ. நாட்டின் மிக நீளமான கடற்கரையைக் கொண்ட தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கடலுயிர்த் தொழில்நுட்பம் (Marine Bio-technology) வளர வாய்ப்புள்ளது. உயிர்நுட்ப பொருள்களை உருவாக்க, வணிக மயப்படுத்துவதில் அனுபவமிக்க உயிரியல் வல்லுநர்களும் தமிழகத்தில் ஏராளம். உயிர்த் தொழில்நுட்ப தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தகுந்த ஆற்றல் கொண்ட மனிதவளத்தையும் தமிழகம் பெற்றுள்ளது.

4. உயிர்த் தொழில்நுட்பத் தொழில் துறையில் இதுவரை தமிழகத்தில் காணப்படுபவை முதல் தலைமுறை உயிர்த் தொழில்நுட்பத் துறைகளாகும். எடுத்துக்காட்டு: ஆன்ட்டிபயோடிக்ஸ் ஃபெர்மன்டேஷன். மாநிலத்தின் முன்னணி தொழில் நிறுவனங்கள் இதுவரை உணவு மற்றும் அலங்காரத் தாவரங்கள் போன்றவற்றுக்கான திசு வளர்ச்சி தொழிலகங்களை நடத்தி வருகின்றன. இவ்வாறாக, உயிர்த் தொழில்நுட்பம் வளர்ப்பதற்கான முன்தயார் நிலை ஏற்கெனவே மாநிலத்தில் நிலவுகிறது. இனி, மறுகலப்பு, டி.என்.ஏ. அடிப்படையிலான பொருட்கள், உயிர்த் தகவலியல் போன்ற இரண்டாம் தலைமுறை தொழில்களுக்குச் செல்லலாம். வேளாண்மை, தொழில்துறை, மருத்துவம், கால்நடை அறிவியல், சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு நிகராக நவீன முறைகளை அறிமுகப்படுத்தவும், அதேசமயம் பாரம்பரிய உயிர்நுட்ப உற்பத்திகளைத் தொடரவும் அரசு கவனம் செலுத்தும். குறிப்பாக, மேலைநாடுகளில், ஏற்கெனவே பயன்படுத்துகிற வெப்பமண்டல சூழல்மயமாக்க வாய்ப்புகளைத் தருகிற தொழில் மற்றும் உணவு நொதி உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்படும். குறுகிய காலத்தில், வணிக நோக்கில் கூடுதல் வாய்ப்புகளைத் தரும். இவற்றை உயிர்தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பான எல்லா ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளிலும் உள்ளடக்க வேண்டும்.

### இ. எதில் தொழில் வாய்ப்புகள் அதிகம்?

உயிர்த் தொழில்நுட்பத்தில் பின்வரும் நான்கு பிரிவுகளில் தமிழகம் வாய்ப்புகளைப் பயன்படுத்தும் நடவடிக்கைகள் தொடரும்.

- ☐ மருத்துவம் / மனித – விலங்கின உடல் நலம் பாதுகாப்பு
- ☐ வேளாண்மை – உணவு
- ☐ சுற்றுச் சூழல்
- ☐ தொழில் உற்பத்தி பொருட்கள்

பன்னாட்டுச் சந்தையை முன்னிறுத்திப் பார்க்கும்போது, மருத்துவம், வேளாண் மற்றும் உணவு சார்ந்த பொருள்களுக்கு அதிகம் உகந்ததாயிருப்பினும் இந்தியச் சூழலில் (தமிழகத்தில் குறிப்பாக, நெசவு, தோல் தொழில் முக்கியமானவை) தொழில்துறை மற்றும் சுற்றுச்சூழல் பொருள்களில் உற்பத்தி மற்றும் மரபு மற்றும் நவீன உயிர் தொழில்நுட்பப் பொருள்கள் உற்பத்திக்கும் அபரிமிதமான சந்தர்ப்பங்கள் உள்ளன.

#### (1) மருத்துவம்

மருத்துவ உயிர்த் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் அனைவரையும் ஈர்க்கும். ஏனெனில் நாட்டின் மருத்துவ உற்பத்தியில் 11 சதவீதம் தமிழகத்தில் செய்யப்படுகிறது. பென்சிலின் உற்பத்தியகங்கள், மற்றும் பென்சிலின் சார்ந்த உற்பத்தியகங்கள் தவிர, இந்தத் துறையில் முதலீடு குறைவாகவே இருக்கிறது. எனவே, இந்த நிலையை மாற்ற உயிர்த் தொழில்நுட்பம் சிறந்த சாதகமான சாதனமாகத் தோன்றுகிறது.

தொழில் நிறுவனங்கள் மாநிலத்திலுள்ள சிறந்த மருத்துவ மையங்களோடு இணைந்து செயலாற்றும் சூழல் ஊக்குவிக்கப்படும். எடுத்துக்காட்டாக, தடுப்புமருந்து தயாரிக்கும் முயற்சியில் சென்னை காசநோய் ஆராய்ச்சி நிலையம் கூட்டு முயற்சியில் ஈடுபட்டு வருவதைக் குறிப்பிடலாம். இங்கேயும் வேறு பல மையங்களிலும் பெரிய அளவில் மருத்துவ மாதிரிகள் (clinical specimen) உருவாக்கப்பட்டுள்ளன. வருங்கால ஆராய்ச்சிக்கு இவை முன்னுதாரணங்கள்.

கீழ்க்காணும் துறைகளில் மருத்துவ உயிர்த் தொழில்நுட்ப வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

- ☐ நோய் நிர்ணயம் (Diagnostics)
- ☐ தடுப்பு மருந்து (ஹெபாடிடிஸ்–சி, மலேரியா போன்றவை)
- ☐ சிகிச்சை மருந்து (இன்டாஃபெரோன், இன்சுலின் போல)
- ☐ விலங்கின மருந்துகள் (தடுப்பு மருந்துகள் உள்பட)

#### 2. வேளாண் உணவு

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் போன்றவை உருவாக்கியுள்ள ஜெர்ம்ப்ளாசம் தகவல் களஞ்சியத்தை மையமாகக் கொண்டு செயல்பட வாய்ப்புகள் உள்ளன. அரிசி, தேங்காய், கரும்பு, தேயிலை போன்ற மாநிலத்தின் முன்னணிப் பயிர்களை மையமாகக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தப்படலாம். இந்தத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சி வாய்ப்புகள் –

- ☐ உயிர்ப் பூச்சியழிப்பு மற்றும் உயிர் உரம் (Biopesticides and Biofertilizer)
- ☐ உடல்நலத்திற்கான / இயற்கைப் பொருட்கள் (மூலிகை தாவரங்கள்)
- ☐ வேளாண் பொருள்களிலிருந்து கால்நடைத் தீவனம் மற்றும் ஊட்ட உணவு
- ☐ வாசனாதி பொருட்கள்/ நுண் ரசாயனம்/ அமினோ அமிலங்கள் மற்றும் விலங்கினக் கழிவிலிருந்து வேதியப்பொருள்கள் (Flavours/Fine Chemicals/ Amino Acids/Nutrient supplements from animal wastes)
- ☐ மரபு மாற்றுகள் (Transgenics)
- ☐ நோய் நிர்ணயம் – நோய்ப் பகுதிகள் (Diagnostics - Disease Markets)

#### 3. சுற்றுச் சூழல்

மாநிலத்தில் தோல் மற்றும் ஜவுளித் தொழில்களில் உயிர்த் தொழில்நுட்பப் பொருள்கள் மீது கவனம் செலுத்தப்படும். பிரபல மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (C.L.R.I) போன்றவற்றுடன் தொழிற்கூட்டு உருவாக்கி, உகந்த உயிர்த் தொழில்நுட்பப் பொருள்கள் உருவாக்க ஊக்கமளிக்கப்படும்.

- ☐ உயிர் உணர்விகளுக்கான நுட்பங்களை உருவாக்குதல்/முறைகள்/கருவிகள் (Methods / Apparatus / Techniques for Bio-Sensors)
- ☐ கழிவு மேலாண்மையில் நுண்ணியின் பயன்பாடு, குணமாற்றம் குறித்து ஆராய்ச்சி.

- உயிர்த் தீர்வு (Bio remedition)
- கழிவுநீர் மற்றும் விண்ணீர் பயன்பாடு (Effluents and waste water)
- நுண்ணுயிர் ஜெர்ம்ப்ளாசம் உட்பட பொதுவான ஜெர்ம்ப்ளாசம் தகவல் களஞ்சியம் தயாரித்தல்

**4. தொழில்துறை தயாரிப்புகள்**

கவனம் செலுத்தவுள்ள பகுதிகள்

- ☐ உணவு மற்றும் தொழில்சார் நொதிகள் (பப்பயின், பைடோஸ், லிபேஸ், என்ஸைம் கலவை போன்றவை) (Food and Industrial Enzymes)
- ☐ உற்பத்தி அதிகரிக்கும் தரமான பாரம்பரிய நொதிப்புப் பொருட்கள் (எதிர் உயிரிகள், நோய்த் தடுப்பு பொருள்கள் போன்றவை) (Classical fermentation products)
- ☐ உயிரிய ஆற்றல் (Bio Energy)
- ☐ வெளித்தோற்றம் / உணவு மற்றும் இதர பொருள்கள் கெடாமல் இருக்க சிறிய அளவில் சேர்க்கப்படும் (preservative) பாதுகாக்கும் பொருள்(Surface and additives)
- ☐ உயிர் பாலிமர்கள் (Bio Polymers)

சுருங்கக்கூறின், வர்த்தக ரீதியாக புதிய வேலைவாய்ப்பையும், பொருளாதார வளத்தையும் உருவாக்க மேற்சொன்ன பிரிவுகளில் எண்ணற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன. மாநிலத்தில் உள்ள உயிர்வளங்களைக் கொண்டே இந்த சாத்தியக்கூறுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரசு பொருத்தமான நடைமுறைகளையும் கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கவுள்ளது.

**(ஈ) உயிர்நுட்பத் தொழில் முனைப்பு மண்டலங்களை (உயிர்ப் பள்ளத்தாக்குகள்) தமிழகத்தில் அமைத்தல்:**

5. மாநிலத்தின் உயிர் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு சிலிகன் பள்ளத்தாக்கு போன்று உயிர்நுட்ப தொழில் முனைப்பு மண்டலங்களை (Bio-technology Enterprise Zones), உயிர்ப் பள்ளத்தாக்குகள் (Bio-Valleys) அமைக்க தமிழக அரசு வசதி செய்து தரும். ஆராய்ச்சி நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், புதிய பொருள்கள் மற்றும் உற்பத்தி முறைகளை உருவாக்கும் வணிக நிறுவனங்கள் போன்றவை இந்த மண்டலங்களில் செயல்படுவதற்கு ஊக்கம் அளித்திட முயற்சி எடுக்கப்படும். இத்தகைய உயிர்நுட்ப நிறுவனங்களுக்கிடையில் தகவல் மற்றும் அறிவு பரிமாற்றங்களுக்காக இணைப்பு வலை (network) ஏற்பாடுகள் செய்யப்படும்.

6. தமிழ்நாட்டின் வேளாண் – சுற்றுச்சூழல் மண்டலங்களின் உயிர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நான்கு உயிர்நுட்ப பூங்காக்களும் (Bio-tech. Park) ஒரு உயிர்த் தகவலியல் (Bio-Informatics) மற்றும் மரபியல் மையமும் (Genomics Centre) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. உயிர்நுட்பத் தொழில் முனைப்பு மண்டலங்களின் மையமாக இவை செயல்படும்.



7. அவையாவன :

**(அ) உயிர்நுட்ப உயிர் அணு வளர்ச்சி பூங்கா, சென்னை (Bio technology Incubator Park)**

உயிர்நுட்பப் பூங்காக்களை நிர்வகிப்பதில் மிகுந்த அனுபவம் பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ரூ.40 கோடி செலவில் இந்தப் பூங்கா தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (TIDCO) நிறுவப்படும். வணிக நிறுவன அடிப்படையில் இது அமைக்கப்படும். வேளாண்மை, மருத்துவம், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சார்ந்த உயிர்த் தொழில் நுட்பத்தில் இது கவனம் செலுத்தும். இப்பூங்கா, அங்கு அமையவிருக்கும் தனிநபர் நிறுவனங்களுக்கு, அவர்கள் பொருள்களை உருவாக்குவதற்கும், விற்பனை செய்வதற்கும், தனி உரிமப் பத்திரம் (Patents) பெறவும் உதவி செய்யும்.

**(ஆ) மகளிர் உயிர்நுட்ப பூங்கா, கேளம்பாக்கம்**

சென்னைக்கு அருகில் உள்ள கேளம்பாக்கத்தில் இயங்கிவரும் மகளிர் உயிர்நுட்பப்பூங்காவிற்கு அரசு தொடர்ந்து ஆதரவு தரும். நுண்தொழில் மற்றும் பாரம்பரிய உயிர்நுட்ப முறைகள் ஆகியவற்றில் இந்தப் பூங்கா கவனம் செலுத்தும். உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் முழு பலன்களையும் அடைவதற்கு, அரசின் முயற்சிகள் தொடரும்.

**(இ) மருத்துவத் தாவரங்கள் உயிர்நுட்பப் பூங்கா (Medicinal Plants Bio- technology Park)**

மதுரைக்கு அருகில் மருத்துவத் தாவரங்கள் உயிர்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கப்படும். அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட மூலிகை மருந்துகளை உருவாக்குவதற்கான கச்சாப் பொருள்களை விளைவிக்கும் பணியில் இந்தப் பூங்கா ஈடுபடும். பாரம்பரிய மருத்துவ முறைகளின் வளர்ச்சிக்கும் இப்பூங்கா வசதி செய்து கொடுக்கும். கொடைக்கானல் சாலையில், தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) உருவாக்கி வரும் தொழிற்பேட்டையில் இந்தப் பூங்கா அமையும். இதற்காக 380 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வர்த்தகம் தொடர்பான பணிகளை சிப்காட் மற்றும் டிட்கோ இணைந்து செயல்படுத்தும்.

**(ஈ) கடல்சார் உயிர்நுட்பப் பூங்கா (Marine Bio technology park)**

சுற்றுப்புறச் சூழல் பாதிக்காவண்ணம், சிப்பி வகை மீன்கள் (Oyster, mussel), நண்டு, ஈல் (Eel) உற்பத்தி செய்வதற்காகவும், கடற் தாவரங்களைப் (Sea Weeds) பயன்படுத்துவதற்காகவும் இதர கடற்சார் உணவு தயாரிக்கும் நிறுவனங்களுக்காக, மண்டபம் பகுதியில் ஒரு கடல்சார் உயிர்நுட்பப் பூங்கா அமைக்கப்படும். சதுப்புநிலக் காடுகள் (Mangroves), கடற்புல் போன்றவற்றை பேணிக்காக்கவும், வளர்க்கவும் (Low External Input Sustainable Aquaculture- (LEISA) வழிசெய்யவும் முக்கியத்துவம் தரப்படும். மன்னார் வளைகுடா உயிர்மண்டல அறக்கட்டளையுடன் ஒருங்கிணைந்து இந்த கடல் உயிர் நுட்பப் பூங்கா செயல்படும்.

**உயிர்த் தகவியல் – மரபியல் மையம் (BGC)**

சென்னையிலுள்ள டைடல் பூங்காவில் இந்த மையம் அமையும். இந்திய மரபியல் செல்வத்தை ஆராய்ந்து ஜெர்ம் பிளாச வளத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு இந்திய உயிர்த்தகவியல் அறிஞர்களையும் குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய இந்திய மென்பொருள் வளத்தையும் தூண்டுவதற்கு இம்மையம் உறுதுணையாக இருக்கும். ஆராய்ச்சியோடு இந்த மையம், உயிர்த் தொழில்முனைவோர்களுக்கு ஆராய்ச்சி உருவாக்கங்களை வர்த்தக மயமாக்குதல், ஏற்புரைத்தல், ஒப்பந்த தொடர் சேவை, பயிற்சி போன்ற பணிகளையும் மேற்கொள்ளும். இந்த மையம் வணிக ரீதியிலேயே செயல்படும். டைடல் பூங்காவில் கிடைக்கும் போதுமான அளவு அலைவரிசை அளவு (Bandwidth) வசதியை மையம் பயன்படுத்திக் கொள்ளும். இந்த மையத்தை டிட்கோ நிறுவனம் அமைக்கும்.

8. தேசிய உயிர்வள வாரியத்தின் நிதியுதவியுடன் தமிழகத்தில் உயிர் வளங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் அரசு ஈடுபடும். இதன் விளைவாக உருவாகும் தகவல்தளம், உயிர்த்தகவியல் மற்றும் மரபியல் மையத்தின் மூலம் வெளியாகும்.

**(உ) ஒழுங்கு முறைமை (Regulatory facilitation)**

9. உயிர்நுட்ப நிறுவனம் ஒன்றை அமைப்பது அல்லது ஆராய்ச்சியை மேற்கொள்வது போன்றவை மத்திய அரசின் சட்டதிட்டங்களுக்குட்பட்டது. மறுசேர்ப்பு இனவழிச் சரடு ஆலோசனைக் குழு (Recombinant DNA Advisory Committee), அமைப்பு வழி உயிர் பாதுகாப்பு (Bio safety) குழு (IBSC), மரபியல் மாற்றம் குறித்த மறு ஆய்வுக்குழு (Review Committee on Genetic Manipulation)), மரபு நுட்பவியல் ஏற்புக்குழு (Genetic Engineering Approval Committee) போன்ற அமைப்புகள் தெளிவான வழிமுறைகளை வகுத்துள்ளன. தற்சமயம், மாநில அரசின் அதிகாரம் அமைப்பு வழி, உயிர் பாதுகாப்பு (Bio safety) குழு மற்றும் மாவட்ட அளவிலேயே உள்ளது. மத்திய அமைச்சகங்களுடன் இணைந்து கள ஆய்வுகளின் போது மாவட்ட அளவிலான குழுக்களை அமைத்து செயல்படுவது மட்டுமே. இனி உயிர்நுட்ப திட்டங்களுக்குத் தேவையான ஒப்புதல்களை பல்வேறு மத்திய அரசு அமைப்புகளிடமிருந்து வாங்கித் தரும் பொறுப்புகளை தமிழக அரசு ஏற்று, அனைத்து அங்கீகாரங்களுக்குமான ஒற்றைச் சாளர வசதி உண்டாக்கப்படும். மத்திய அரசின் உயிர்நுட்பவியல் துறையின் ஆலோசனையின்பேரில் இதற்கான தகுந்த தனி அமைப்பு ஏற்படுத்தப்படும்.



10. உலக வணிகக் கழக ஒப்பந்தங்களின் அடிப்படையில் உயிரியல் பொருள்களுக்கான அனைத்து வசதிகளையும் மாநில அரசு உருவாக்கித் தரும். உற்பத்திப் பொருள்கள் காலதாமதத்தினால் சிதைவதைத் தடுக்க, ஏற்புப் பணிகள் துரிதப்படுத்தப்படும்.

### மனிதவள ஆதாரத்தை வலுப்படுத்துதல் (Strengthening of Human Resources Pool)

11. மாநிலத்தில் கிடைக்கும் உயிர்நுட்ப மனிதவளத்தை மேம்படுத்தும் பணிகளை அரசு தொடங்கும். பல்வேறு பல்கலைக்கழகங்களில் உள்ள உயிரியல் அறிஞர்களுக்கும் உயிர்நுட்ப நிறுவனங்களுக்கும் இடையே கருத்து பரிமாற்றத்துடன் இணைந்து செயல்பட அமைப்பு ரீதியான வசதி உருவாக்கப்படும்.

12. மனிதவள மேம்பாட்டுக்காக அரசு செய்யவிருப்பவை:

- ☐ விஞ்ஞானி / தொழில்நுட்ப தொழில் முனைவோர்களை உருவாக்க ஏதுவாக உதவி பல்கலைக் கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வர்த்தகச் சமுதாயத்துடன் நல்ல தொடர்பு ஏற்படுத்த விதிமுறைகள் உகந்தவாறு மாற்றியமைக்கப்படும்.
- ☐ பல்கலைக் கழகங்களில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்குப்பின் குறுகிய கால உயிர்த் தொழில்நுட்பப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.
- ☐ உயிர்நுட்பப் படிப்புகளுக்காக சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
- ☐ உயிர்த் தகவலியல் துறையில் உருவாகும் தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தி செயல்பட ஏதுவாக அத்துறையில் மனித வளத்தை உருவாக்க உதவும் பயிற்சிகளை அளிக்கும் பிரத்தியேக நிறுவனங்களைத் தர மதிப்பீடு செய்து ஒரு முறை நிதியுதவி அளிப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

13. இன்னொரு முக்கியமான மனிதவள முதன்மைப் பணி ஏற்கெனவே உள்ள நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் உயிர்நுட்ப ஆராய்ச்சிப்பணிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது ஆகும். தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்கள், உயிரியல் நிறுவனங்கள், ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றில் உள்ள உயிர்நுட்ப தகவல்கள், பொருள்கள், ஆராய்ச்சி முடிவுகள், உற்பத்தி முறைகள், கூட்டு ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் போன்ற தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவாக இவை இணைக்கப்படும். இதன் மூலம் உயிர்வளம், நோய் தடுப்பு, களப்பணி தொடர்பாக அறிவும், ஆராய்ச்சி முறைகளும் பரிமாறிக் கொள்ளப்படும்.

### எ. உயிர்த் தொழில்நுட்பத்துக்கான புதிய தொழில்நுட்ப நிதி அமைத்தல் (Establishment of Emerging Technologies fund for Bio-Technology)

14. ரூபாய் 30 கோடியை தொடக்க நிதியாகக் கொண்டு உயிர் தொழில்நுட்பத்துக்காக ஊக்க மூலதன நிதி, டிட்கோ மூலம் தமிழக அரசு வழங்கும். இந்த நிதி வளரும் தொழில் நுட்பங்களுக்கான நிதி (Emerging technologies fund) என்றழைக்கப்படும். இந்த நிதி முறையாக நிர்வகிக்கப்பட்டு உயிர்நுட்பப் பூங்காக்களுக்கு உள்ளேயும், வெளியேயும் செயலாற்றும் பெறும் எல்லா உயிர்நுட்பத் திட்டங்களுக்கும் உதவும்.

### ஏ. தமிழ்நாடு உயிர் தொழில்நுட்ப வாரியம் அமைத்தல் (Tamil Nadu Bio Technology Board)

15. திறமைமிக்க உயிர் தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரின் கீழ் தமிழ்நாடு உயிர் தொழில்நுட்ப வாரியத்தை மாநில அரசு நிறுவும். இந்த வாரியத்தில் மூத்த அரசு அதிகாரிகள், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் உயிர்த் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெறுவார்கள். இந்த வாரியம் கீழ்க்கண்ட துறைகளில் தொழில் வளர்ச்சியைக் கொண்டுவர நிலையான ஆலோசனைக் குழுக்களை உருவாக்கும்.

- மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவ உயிர்நுட்பம் (Medical & Veterinary Bio-technology)
- உணவு மற்றும் வேளாண் உயிர்நுட்பம் (Food & Agricultural Bio-Technology)
- உயிர்த்தகவலியல் மற்றும் மரபு குறியீட்டியல் (Bio-Informatics and Genomics)
- சுற்றுச்சூழல் உயிர்நுட்பம் (Environmental Bio-technology)



- தொழிலிய உயிர்நுட்பம் (Industrial Bio-technology)

16. தமிழ்நாட்டின் உயிர் வளத்தை – சுற்றுச்சூழல் கெடாத வகையிலும், சமூகம் ஏற்கும் வகையிலும் – பொருளாதார வளமாக மாற்ற மாநில அரசுக்கு இந்த வாரியம் உதவி செய்யும். உயிர்நுட்ப வாய்ப்பு பயிற்சி, மனிதவளமேம்பாடு, தொழில்நுட்ப உள் கட்டமைப்பு, சர்ச்சைக்குரிய உயிர் வளப் பாதுகாப்பு, உயிர் அறிவியல், உயிர்வளக் கண்காணிப்பு ஆகியவற்றில் கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கவும் அரசுக்கு வாரியம் உதவி செய்யும். விதிமுறைகளை இயற்றுவதற்கும் இவ்வாரியம் முதன்மையாக இருந்து உதவும். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஏற்ற உயிர்நுட்பம் தொடர்பான, 1992இல் ரியோடி ஜெனிரோவில் நடந்த ஐ.நா. சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட, அஜெண்டா–21 என்ற செயல்திட்டத்தின் பிரிவு – 16இல் வரையறுக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் உயிர் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு முன்னிலை வகிக்க, தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதாரங்களைத் திரட்டும் பணியிலும் இந்த வாரியம் மும்முரமாக ஈடுபடுத்தப்படும். இந்தத் துறையில் முன்னேறியுள்ள பிற நாடுகளுடன் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகளையும் வாரியம் ஆராயும்.

### ஐ. உயிர் தொழில்நுட்பத்துக்கு தொழில்துறை அந்தஸ்து

17. வர்த்தக அடிப்படையில் தொடங்கப்படும் அனைத்து உயிர்நுட்ப நிறுவனங்களும், தொழில் துறை நிறுவனங்களாகவே கருதப்படும். எனவே தொழில்துறைக்கான சலுகைகள் இவற்றுக்கும் கிடைக்கும். தமிழ்நாடு மின்சார வாரியத்தால், தொழில்துறை கட்டணத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும். இவையனைத்தும் தமிழ்நாடு உயிர்நுட்ப வாரியத்தின் அங்கீகாரம் மற்றும் சான்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

18. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இணையாக உயிர்த்தகவலியல் நிறுவனங்களுக்கும் F.S.I விதிமுறைகள் அளிக்க அனுமதிக்கப்படும். ★



மருதாயிக் கிழவியின் உடல் பாயில் சுருட்டப்பட்டு காரின் டிக்கியில் வைக்கப்பட்டது. சிறுத்த குள்ள உடல் வெகு சிரமம் தராமல் அதனுள் பொருந்திக்கொண்டது. அண்ணனும் நானும் முன் இருக்கையில் அப்பாவுடன் அமர்ந்து கொள்ள பின் இருக்கையில் தம்பிகளும் தங்கையும் அம்மாவுடன் உட்கார்ந்து கொண்டார்கள். வண்டியை எடுக்கலாமா என்ற பாவனையில் நாயுடு அப்பாவைப் பார்த்தார். அம்மாவின் சிநேகிதியான பக்கத்து வீட்டு அத்தை அம்மாவுடன் இன்னமும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். அப்பா தோளைச் சரித்து முகத்தைத் திருப்பி, கிளம்பலாமா என்று அம்மாவிடம் கேட்டபோது நானும் திரும்பினேன். அம்மா தலையசைத்துவிட்டுச் சுற்றியிருந்தவர்களைக் கும்பிட்டார். கண்களில் நீர் கோத்திருந்தது. சோகச் சாயலையும் மேவி முழு நிறைவில் பொலிவுற்றிருந்தது அம்மாவின் முகம். மருதாயிக் கிழவியின் கடைசி நாட்களைக் கோலாகலமாகக் கொண்டாட விரும்பிய அம்மாவின் ஆசை இந்தக் கார் பயணத்தின் மூலம் பூர்த்தியின் விளிம்பைத் தொட்டுவிட்டிருந்தது.

மருதாயிக் கிழவி முடியாமலிருப்பதாகவும் ஒண்டியாகச் சிரமப்படுவதாகவும் ரொம்ப நாள் தாங்காதென்றும் தகவல் வந்தபோது அம்மா அவரை அழைத்துவந்து கடைசி நாட்களில் சீராட்ட விரும்பினார். அப்போதே காரில் போய் கூட்டி வரத்தான் அம்மாவுக்கு உள்ளூர ஆசை. அப்பாகூட, "வாடகைக்குப் போயிருக்கிற கார் நாளைக்கு வந்திரும், வேண்ணா எடுத்துட்டுப் போயேன்" என்று சீண்டிப் பார்த்தார். "இதுக்கு எதுக்குக் காரும் மோரும், வந்தப்புறம் அத நாலு எடத்துக்குக் கூட்டிட்டுப் போனாப் போதும்" என்று சமாளித்துவிட்டார் அம்மா.

# மருதாயிக் கிழவியின் காகிதப் பைகள்

□ சி.மோகன்

பாட்டி வந்து சேர்ந்த போது அக்கம்பக்கத்தாருக்கு அவர் அதிசயமானார். கறுத்துச் சிறுத்த குள்ள உடலில் முதிர்ந்து காய்ந்த மரப்பட்டையின் செதில்களாயிருந்த தோல் சுருக்கங்களில் வயது குடியிருந்தது. அவர் அம்மாவுக்குத்தான் பாட்டி (அம்மாவைப் பெத்த அம்மாவுடைய அம்மா). ஆனாலும் அம்மா அவரை ஆத்தா என்பார். நாங்கள் பாட்டி என்போம். பாட்டிக்கு அப்போது 100 வயசுக்குக் குறையாது. பாட்டியின் வயதை அக்கம்பக்கத்தாரிடம் அம்மா விவரிக்கும் விதமே அலாதி. அம்மா அப்போது தன் 7 குழந்தைகளையும் பெற்றுவிட்டிருந்தார். மூத்தவனுக்கு வயசு இப்போது 19. அவன் பிறந்தபோது தனக்கு 20 வயசிருக்கும். ஆக, இப்போ தனக்கு வயசு 40. அம்மாவைப் பெத்த அம்மாவுக்கு அம்மாதான் கடைசி. மூன்றாவதாக அம்மாவைப் பெத்துப் போட்டுவிட்டு அவர் போய்ச் சேர்ந்துவிட்டார். அப்போது அதுக்கு 30 வயசுக்குக் குறையாது. அது இருந்திருந்தால் இப்போ அதுக்கு எப்படியும் 70 வயசிருக்கும். அதோட அம்மாதான் இந்த மருதாயிக் கிழவி. அம்மாவுடைய அப்பா இன்னொரு கல்யாணம் செய்து கொண்ட வகையில் ஏதோ பிணக்குப் பட்டுக் கொண்டு கிழவிதான் தன்னையும் இரு அண்ணன்மார்களையும் வளத்து ஆளாக்கியது. அம்மாவோட அம்மாதான் மருதாயிக் கிழவிக்குக் கடைசி. அது வயத்துல இருக்கும்போது தான் கிடைக்குத் தொலையூர் போன கிழவியின் புருஷன் ஏதோ பொம்பள தகராறுல வெட்டுப்பட்டுச் செத்துப்போனார். அப்போ மருதாயிக் கிழவிக்கு 30, 35 வயசிருக்கலாம். ஊர்ல எவ்வளவோ சொல்லியும் மறுபடியும் வாக்கப்படமாட்டேனுடுச்சாம். எப்படிப் பார்த்தாலும் இப்ப அதுக்கு 100 வயசுக்குக் குறையாது என்பார் அம்மா. இதே கணக்கை அப்பாவுடன் வேலை பார்க்கும் சுந்தரம் இன்ஸ்பெக்டர் மனைவியிடம் சொன்னபோது, கிழவியின் புருஷன் பாம்பு கடித்துச் செத்துப் போனதாகச் சொன்னார். அம்மாவிடம் இதுபற்றிக் கேட்டேன். அந்தப் பொம்பளைக்குக் கெடைக்குப் போறதுனா என்னனு தெரியாது. அத வேற வெளக்கமாச் சொல்லணும். அதான் அப்படிச் சொன்னேன் என்றவர், கூடவே, வர்றவங்க போறவங்ககிட்ட என்ன பேசறேனு வாயப்பாத்துக் கிட்டிருக்காம படிக்கிறதப்பாரு என்றார்.

நூறு வயதுக்குக் குறையாத பாட்டிக்குப் பார்வை இருந்தது. கத்திப் பேச வேண்டிய அவசியமிருக்கவில்லை. கறி மெல்ல முடிந்தது. பாட்டி இருந்த நாட்களில் அம்மா அடுப்படியைக் கொண்டாடினார். பலமுறை பிரியாணி செய்தார். முதல்முறை அம்மா பாட்டிக்குப் பிரியாணி கொடுத்தபோது, "இது என்னாத்தா" என்று கேட்டார் பாட்டி. "இதுதான் பாட்டி பிரியும் ஆணியும்" என்றேன் நான். பாட்டிக்கு அந்தச் சம்பவம் நினைவிலிருந்து நழுவிப்போயிருக்க வேண்டும். மலங்க விழித்தார். "சும்மா இர்ரா" என்று சிரித்தபடியே அதட்டினார் அம்மா.

ஒவ்வொரு தேர்வு விடுமுறையின் போதும் தேர்வு முடிந்த மறுநாள் கிராமத்துக்கு பஸ் ஏறிவிடுவேன். ஊரில் பல வீடு நெருங்கிய சொந்தம் என்றாலும் தனியாக இருக்கும் பாட்டியுடன் தான் தங்குவேன். அதுதான் எங்கள் வீடு என்பதாக இருந்தது. நெருங்கிய உறவினர்கள் வீட்டுக்குப் பாட்டி போவதே இல்லை. தூரத்து உறவைத்தான் கொஞ்சமாவது எட்டிப்பார்க்கும். யாரையும் அண்டாத கிழவி என்று பாட்டிக்குப் பேர் இருந்தது. அதே சமயம் யார் பற்றியும் பாட்டி புகார் சொல்லி நான் கேட்டதே இல்லை. மற்றவர்கள்தான், கிழவி என்ன சொல்லுதுப்பு என்று சீண்டுவார்கள். நான் இடையிடையே சித்தப்பா வீடு, மாமா வீடு, தாத்தா வீடு என்று அவர்கள் சாப்பிடக்கூப்பிடும் போது பாட்டியிடம் சொல்லிவிட்டுப் போவேன். போயிட்டு வாப்பு என்று சகஜமாகச் சொல்வார் பாட்டி. அழகம்மாதான் பாட்டிக்கு ஒத்தாசை. அம்மா ஊருக்கு வரும்போதெல்லாம் அழகம்மாவுக்குச் சேலையும் அவர் குழந்தைகளுக்கு இனிப்பும் வாங்கி வருவார். ஒருமுறை பாட்டி, என்னப்பு வேணும் என்று சமையல் பண்ணக்கேட்டபோது, "பிரியாணி பாட்டி" என்றேன் கேலியாக. "என்னாப்பு" என்று மீண்டும் கேட்டார். ஏதோ ஒரு காரியமாக அச்சமயம் அங்கிருந்த ஆட்டுப்பால்கார தாத்தா, "பேராண்டிக்குப் பிரியாணி வேணுமாம். படப்புலருந்து கொஞ்சம் பிரியும் அப்படியே நாலஞ்சு ஆணியும் இருந்தாக் குடு கெளவி" என்றார். நான் சிரித்தேன். பாட்டிக்குக் கோபம்தான் வந்தது. "பிள்ள என்னமோ கேக்குதே என்னனு கேட்டா வெளங்காத பேச்சு பேசறியே" என்று கோபித்துக் கொண்டார். பிரியாணியை அறிந்திராத பாட்டிக்குப் பிரியாணி ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. ஞாயிற்றுக் கிழமைகளில் எல்லோருக்குமாகவும் இடையிடையே பாட்டிக்கென்று கொஞ்சமாகவும், அம்மா பிரியாணி செய்தார். பாட்டி வந்து சேர்ந்த மறுநாள் அவரைப் பார்க்க வந்த டாக்டர் விநாயகம், இன்னும் கொஞ்சநாள் தான் இருப்பாங்க. இதயத்துடிப்பும், நாடித்துடிப்பும் தளந்துபோச்சு, அவங்க ஆசப்பட்டதக் கொடுங்க. ஞாயித்துக்கிழமை மதியம் கிளினிக் முடிஞ்சு போகும்போது பாக்கிறேன். இடையில் ஏதாச்சுமென்றால் சொல்லி அனுப்புங்க என்றார். ஆனால் அதற்கடுத்தும் சில ஞாயிற்றுக்கிழமை அவர் வரவேண்டி இருந்தது.

பாட்டியை எங்கள் காரில் உட்கார வைத்து அழகர்கோவில், திருப்பரங்குன்றம், மீனாட்சி அம்மன் கோவில் என்று கூட்டிப் போகவேண்டுமென்ற அம்மாவுடைய ஆசை மட்டும் கடைசி வரை நிறைவேறவில்லை. பாட்டி வந்த ஒன்றிரண்டு நாளில் நாயுடு கணக்குக் கொடுக்க வந்தபோது, "பிளசரு வந்துருக்குனு பாட்டியக் கூட்டிட்டு வா" என்றார் அம்மா. பாட்டியை அழைத்து வந்தேன். வாசல்படியில் உட்கார்ந்து கொண்டபடி பார்த்தார். "ஒரு ரவுண்டு போயிட்டு வரலாமா பாட்டி என்றார்" நாயுடு. இப்ப "வேண்டாம்பு. கோவிலுக்குப் போகலாம்னு பேத்தி சொல்லுச்சு, அப்ப பாத்துக்கலாம்" என்றார் பாட்டி. வண்டியை நாட்டாமைக் கோனார் வீட்டு முன் விடுவதற்காக எடுத்துப் போகும்வரை பாட்டி பார்த்துக் கொண்டு இருந்தார். அடுத்த முறை வாடகைக்கு வெளியூர் போன கார் சிறு விபத்தில் மாட்டிக்கொண்டது. வண்டிக்கு மட்டும் லேசான சேதம். நாயுடு நாணயமானவர் என்றாலும் குடிகாரர் என்ற விஷயம் அப்போதுதான் அப்பாவுக்குத் தெரியவந்தது. அப்பா நாயுடுவை வேலையை விட்டு நிறுத்தினார். வண்டியை விற்க முடிவு செய்தார். வண்டி சரியாகி வந்த சில நாளில் விற்கும்வரை இருந்துவிட்டுப் போகட்டுமென்று நாயுடுவை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டார். வண்டி ஓட்டத்திலிருந்தால்தான் நல்ல விலை போகும் என்று இந்த ஏற்பாடு. பாட்டி இறப்பதற்கு 2, 3 நாள் முன்பு வண்டி ஓட ஆரம்பித்தது.

காலாண்டு விடுமுறைக்கு – பாட்டி வருவதற்கு 2 மாதம் முன்பாக இருக்கும் – நான் ஊர் போயிருந்த போது, "பிளசரு வாங்கியிருக்கீங்கலாம் அப்பு" என்று ஊர் சனம் ஒருவர் விடாமல் கேட்டது. "ஆத்தாவை அதுல ஒருக்கா வரச் சொல்லுங்கய்யா" என்ற அழகம்மா, "ஆமா, பிளசரு

வர்றதுக்கு இங்க என்ன ரோடா இருக்கு" என்றும் தானாகவே சொல்லிக்கொண்டார். எங்கள் ஊரிலிருந்து பஸ் போகும் சாலைகூடக் கண்ணில் படாது. முக்கு ரோடில் இறங்கினால் 3 மைல் நடை, வெள்ளாமை சமயங்களில் அந்த வழி உதவாது. சாயல்குடியில் இறங்கி நடக்க வேண்டும். 4 மைல் நடை. எது எப்படியோ 6 மாசமே எங்களுடனிருந்த கார், தான் பிரிவதற்கு முன்பாக பாட்டியின் உடலோடு போய் எங்கள் கிராமத்தைப் பார்த்துவிட்டது.

பாட்டி எங்களுடன் கிட்டத்தட்ட ஒன்றரை மாதம்தான் இருந்திருப்பார். அதற்குள் ஒரு விநோதப் பழக்கம் அவரைப் பீடித்திருந்தது. கிராமத்தில் தள்ளாமையிலும் துடியாய் தன் பாட்டையும், வயல்காட்டையும், ஆடுகள் கோழிகளையும் கவனித்துக் கொண்டிருந்தவருக்குத் தனி அறையின் சுற்றுச் சுவர்களில் முட்டித் திரும்பும் குறுகிய பார்வை வெளியில் முடங்கிக் கிடக்க நேர்ந்துவிட்டது காரணமாக இருக்கலாம். ஒரு நாள் காபித்தூள் வாங்கிவந்து அடுப்படியிலிருந்த அம்மாவிடம் கொடுத்தபோது உள்ளறையிலிருந்து, கோவாலு, கோவாலு என்று பாட்டி கூப்பிட்டார். ராக இழுப்போடுதான் பாட்டி எப்போதுமே கூப்பிடுவார். முதல் உச்சரிப்பு, இரண்டாவது உச்சரிப்புக்கு எடுப்பென தணிந்தே இருக்கும். என்ன பாட்டி என்று கேட்டபடியே போனேன்.

"என்னப்பு வாங்கிட்டு வந்த"

"காபித்தூள் பாட்டி"

"பையில போட்டுக் கொடுத்தாங்களா, பொட்டலமாப்பு"

"கவர்லதான் பாட்டி"

"அதக் கொஞ்சம் கொண்டாப்பு"

கண்ணாடித்தாள் கவரைக் கொண்டுபோய் கொடுத்தேன். இன்னமும் அங்கங்கே சில புள்ளிகளாய் கவரில் ஒட்டியிருந்த காபித்தூளைப் பாட்டி உதறியபோது அந்தத் தாளின் சடசடப்பு அவருக்கு விசித்திரமாகப் பட்டிருக்க வேண்டும். விரல்களால் மேலும் சில முறை தட்டி நாசூக்காக உதறியவர், கண்ணாடித் தாளின் சத்தம் கிறுகிறுக்கச் செய்வதுபோல் கண்மூடி லயித்திருந்தார். முகத்தின் தேன்கூட்டுச் சுருக்கங்களில் மெல்லிய அதிசயச் சிரிப்பு ஒடுங்கியிருந்தது. நான் பாட்டியை ஆச்சரியத்தோடு பார்த்தபடி இருந்தேன். பின்னர் தன்னை விடுவித்துக் கொண்டவராக, கவரைத் தலையணை அருகில் வைத்துவிட்டு, "சரிப்பு நீ போய் படி" என்றார். "எதுக்குப் பாட்டி இது" என்றேன். "சும்மாதாம்பு" என்றவர் தலையணை அடியிலிருந்து ஒரு பெரிய காகிதக் கவரை எடுத்தார். அதன் அடிப்பகுதி லேசாக உப்பியிருந்தது. அந்தப் பெரிய கவர், பாட்டி வந்த அன்றே அம்மா எடுத்துவந்த 2 சேலைகள் அடங்கியிருந்த ஜவுளிக்கடை கவர். அம்மா சேலைகள் வாங்கி வந்தபோது, "இதெல்லாம் எதுக்குத்தா, ஒன் பழசத் தந்தா போதாதா" என்றார் பாட்டி. "நாளைக்கு டாக்டரு உன்னப் பாக்க வர்றப்ப புதுசு உடுத்தியிருக்கணும் கிழவி.





அதுக்குத்தான்" என்றார் அம்மா. அன்று சேலைகள் இருந்த காகிதப் பைக்கும் மருந்துக் கடை கவர், அல்வா கடை கவர் என்று ஏழெட்டு ஒன்றுக்குள் ஒன்றாகவும் தனியாகவும் பொதிந்திருந்தன. காபித்தூள் கவரும் உள்ளே போயிற்று.

பாட்டியின் இந்தச் செயல் எனக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. நான் வெவ்வேறு காலங்களில் தீப்பெட்டிப்படம், ஃபிலிம், ஸ்டாம்ப் என சேர்த்திருந்த போதிலும் பாட்டியின் கவர் சேகரிப்பு விசித்திரமாகவே பட்டது. இனம் புரியா கலக்கமும் ஏற்பட்டது. காலையில் பள்ளிக்கூடத்துக்குத் தனியாகப் போகும்போது அச்சத்தையும், மாலையில் நண்பர்களுடன் திரும்பும்போது கும்மாளத்தையும் விளைவிக்கிற, எங்கள் பள்ளிக்கூடச் சந்து முனையில் அவ்வப்போது தென்படுகிற பைத்தியத்தின் செயல் ஏனோ நினைவுக்கு வந்து கலவரமூட்டியது. அழுக்கும் கந்தையுமாக அலையும் அந்தப் பைத்தியத்தின் கால்சட்டைப் பைகள், மேல்சட்டைப் பைகள், கையிடுக்கு, உள்ளங்கை என எங்கும் காகிதக் கந்தல்கள் பிதுங்கி வழியும். "எதுக்கு பாட்டி சேக்குறீங்க" என்றேன். "சும்மாதாம்பு" என்று லேசாகச் சிரித்தவர், காகிதப் பையை மீண்டும் தலையணைக்கடியில் வைத்துக் கொண்டார். திடீரென, என் இடது கையைப் பிடித்துத் தடவியபடியே, "நேத்து ஒரு கனா கண்டேம்பு" என்றார். அதுல "உன்னக் காணோம்னு வீடே ஆளாப் பறக்குது. உங்காத்தா, கோவாலு, கோவாலு என்று கூப்பிட்டபடியே அங்கேயும், இங்கேயும் ஓடிக்கிட்டிருக்கு. இந்த எடம் மாதிரிதான் இருக்கு நா இருக்கிறது. ஆனாக்க சுத்தி சிறுசும் பெரிசுமாக காயிதப் பைங்க அரிசிமூட்ட கணக்கா தண்டி தண்டியா குவிஞ்சு கெடக்கு. அப்ப, பாட்டி பாட்டினு நீ கூப்பிடற சத்தங் கேக்குது. எங்கடானு பாத்தா ஒரு காயிதப் பை மூட்டைக்குள்ளேருந்து கூப்பிட்டுக்கிட்டிருக்க. அப்படியே நீ கூப்பிட்ட சத்தத்துக்கு முளிச்சுக்கிட்டேம்பு" என்றார்.

கனவில் கவிந்திருந்த வசீகரமும் கலக்கமும் ஒன்றையொன்று மேவி என்னுள் படிந்ததில் நான் எதுவும் பேசாதிருந்தேன். ஆனால், அதன்பிறகு, பாட்டிக்கும் வெற்றுக் காகிதப் பைகளுக்குமான உறவில் என்னையும் சந்தோஷமாகப் பிணைத்துக் கொண்டேன். என் பங்குக்கு அழைப்பிதழ் கவர், அப்பா ஆபீஸ் கவர், தபால் கவர் என்று அவ்வப்போது பாட்டியிடம் கொடுத்தேன். கவர் இருந்தா போட்டுக் கொடுங்க என்று கடைகளில் கேட்டு வாங்கினேன். அதன் மூலம், பீடிக்கட்டு கவர், பாக்கு கவர் எனக் கிடைத்தன. ஏதேனும் பொருள் தீர்ந்து போனதாக அம்மா பேச்சுவாக்கில் சொல்லியிருந்தால், "நான் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், ஆத்தா ஏதோ தீந்து போச்சுனு சொல்லுச்சு, என்னனு கேட்டு வாங்கிட்டு வாப்பு" என்று குதூகலிக்கும் அளவு பாட்டியின் மோகம் தீவிரமடைந்தது. பாட்டியின் விசித்திரமான குதூகல உலகில் நானும் கும்மாளமிட்டுக் களித்திருந்தேன்.

பாட்டி இவ்வளவு நாள் இருந்தது விநாயகம் டாக்டருக்கு ஆச்சரியமளித்தது. ஆனால், கடைசியாக வந்த ஞாயிறன்று, அதிகமாப் போனா 2, 3 நாள்தான். அதுக்கேத்த மாதிரி பாத்துக்குங்க என்று அழுத்தமாகச் சொன்னார். அப்போதும் பாட்டியின் உயிர் அதற்கடுத்த ஞாயிறு காலைதான் பிரிந்தது. உயிரின் கடைசிக் குமிழ்கூட தன் முழுப் பாய்ச்சலையும் உடலுக்குத் தந்துவிட்டுப் பிரிந்த வெகு சுபாவமான மரணம் அது.

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி போல ஆப்பமும் தேங்காய்ப் பாலும் பாட்டிக்குக் கொடுக்கப்போன

அம்மா, பாட்டி மூச்சுவிட மிகவும் அவஸ்தைப்படுவதைப் பார்த்து, "ஓடிப்போய் டாக்டரைக் கூட்டி வா" என்று என்னை விரட்டினார். எங்கள் வீட்டுச் சந்துமுனை பிரதான சாலையில் சேருமிடத்துக்கு நேரெதிரில் டாக்டரின் கிளினிக். டாக்டர் வந்திருக்கவில்லை. வரும் நேரம் தான். தவிப்போடு வாசலில் காத்திருந்தேன். எங்கள் வீடு தெரியும்படியாக நின்று கொண்டு சந்தையும், டாக்டர் கார் வரக்கூடிய வலப்புற திசையையும் பார்த்துக் கொண்டு நிலை கொள்ளாதிருந்தேன். அடுத்த சில நிமிஷங்களில் டாக்டர் கார் கண்ணில் பட்டது. அவர் காரிலிருந்து இறங்குவதற்கு முன்பாகவே பக்கத்தில் போய் குனிந்து சொன்னேன். காரை நிறுத்திவிட்டு அவர் உள்ளே போனபோது ஏற்கெனவே காத்திருந்த நான்கைந்து பேர் எழுந்து நின்றார்கள். அவர் அறைக்குள் சென்றுவிட்டு உடனே திரும்பியவர், வா, போகலாம் என்று நடந்தார். நாங்கள் நுழைந்தபோது, முன்னறையிலிருந்த அப்பா டாக்டரைப் பார்த்து, முடிஞ்சிருச்சு என்றார். உள்ளறைக்கு டாக்டர் போன போது, அப்பாவும் நானும் கூடப்போனோம். பாட்டியின் தலைமாட்டில் அம்மா உட்கார்ந்திருந்தார். அண்ணன் மட்டும் நின்று கொண்டிருக்க தம்பிகளும் தங்கையும் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்து வீட்டு அத்தை அம்மாவுக்குப் பக்கத்திலிருந்தார். நான் அண்ணன் பக்கத்தில் போய் நின்று கொண்டேன். டாக்டர் பாட்டியின் கையை லேசாகத் தூக்கிப் பார்த்துவிட்டு, "ஆக வேண்டியதைப் பாருங்க. எங்க காரியம் பண்ணப் போறீங்க" என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டார். "ஊருக்குத்தான் கொண்டு போகணும்" என்றார் அம்மா. "சந்தோஷமா பாத்துக்கிட்டீங்க, விசேஷமா அனுப்பி னீங்க" என்றார் டாக்டர். அம்மா தலையசைத்தார்.

அடுத்த சில நிமிடங்களில் காரோடு நாயுடு வந்து சேர்ந்தார். காரிலேயே நாட்டாமைக் கோனாரின் மூன்று சம்சாரங்களும் அவருடைய வளர்ப்பு மகனான மாணிக்கம் மாமாவும் வந்திறங்கினார்கள். பெண்கள் மூவரும் அம்மாவைக்கட்டிப்பிடித்து கொஞ்ச நேரம் ஒப்பாரி வைத்தனர். அப்பாவும் மாணிக்கம் மாமாவும் அடுத்து ஆக வேண்டியதைப் பற்றிப் பேசினார்கள். அப்பா அம்மாவைக் கூப்பிட்டு என்னென்ன வாங்க வேண்டும் என்று கேட்டார். அம்மா சொன்னபடி, பூக்கள், மாலைகள், பொரி, வெல்லக்கட்டி எல்லாம் வாங்க மாணிக்கம் மாமா கிளம்பினார். போகும்போது அம்மா, மாணிக்கம் மாமாவிடம், அப்படியே பத்திருபது ரூபாய்க்கு பொடிச் சில்லரையா மாத்திட்டு வாங்க என்றவர், சுடுகாட்டுக்குத் தூக்கிட்டுப் போறபோது, போற வழியெல்லாம் பூவும், வெல்லமும், பொரியும், காசும் தூவிக் கொண்டு போகணும் அதுக்குத்தான் என்றார்.

இருட்டுவதற்குள் ஊர் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமே என்ற பதட்டத்தில் அப்பா இருந்தார். 1 மணிக்குள் கிளம்பினால்தான் 4.30, 5க்குள் வெளிச்சத்தோடு போய்ச் சேரலாம் என்று அவசரப்படுத்திக்கொண்டே இருந்தார். ஊருக்குள் கார் போகுமா என்ற கவலை வேறு. இப்ப வெள்ளாமை கிடையாது. வயக்காட்டுக்குள்ளே வண்டிப் பாதை இருக்கும். போயிடலாம் என்று அம்மா சொன்னது அவருக்குச் சமாதானமாக இருக்கவில்லை. பாதை கிடையாது. இருட்டிவிட்டால் வேறு வினையே வேண்டாம் என்று பரபரத்துக் கொண்டிருந்தார் அப்பா. எங்கள் ஊரில் அப்போது மின்சாரம் கிடையாது. இது நடந்த சில வருஷங்களுக்குப் பிறகுதான் 100 சதவீத மின்னிணைப்பு என்ற திட்டம் எங்கள் கிராமக் கண்மாய்க்கரை வேப்பமரத்தடியில் ஒரு கம்பத்தை நிறுத்தி 40 வால்ட்ஸ் பல்பு ஒன்றை எரியவிட்டது.

மாணிக்கம் மாமா சாமான்களோடு வந்தார். அக்கம் பக்கத்தார் கூடிவிட்டிருந்தனர். பாட்டியைக் கூடத்தில் கிடத்தினார்கள். பக்கத்து வீட்டு அத்தை அவர்கள் வீட்டிலிருந்து காபி போட்டுக்கொண்டு வந்து எங்கள் எல்லோருக்கும் கொடுத்தார். அதற்குப் பிறகு அம்மா, நாங்கள் போட்டுக் கொள்வதற்கும், கொண்டு போவதற்குமான துணிமணிகளை எடுத்துக் கொடுத்தார். அண்ணனும் நானும் அவற்றை ஒரு பெரிய பையில் வைத்தோம். அம்மா திடீரென நினைத்துக் கொண்டவராக அப்பாவைப் பார்த்து, "பட்டுச் சேலை ஒண்ணு எடுக்கணும்" என்றார். "ஊர்ல போய் குளிப்பாட்டி சாத்திரதுக்குத்தானே. போற வழியிலே எடுத்துக்கலாம்" என்றார் அப்பா. எல்லோரும் கிளம்ப ஆயத்தமானோம்.

பாட்டியின் உடலை வண்டியில் எங்கே எப்படி வைப்பது என்ற பிரச்சனையை மாணிக்கம் மாமா எழுப்பினார். உடலை வண்டியில் வைத்து நாங்கள் எல்லோரும் உட்கார்ந்து கொள்வதென்பது, எப்படி யோசித்துப் பார்த்தாலும் சரி வரவில்லை. நாயுடுதான் டிக்கியில் வைத்துவிடலாமென்று யோசனை தெரிவித்தார். ஒரு நிமிஷம் சங்கடம் சூழ்ந்து எல்லோரையும் இறுக்கமடையச் செய்தது. அப்பா அம்மாவைப் பார்த்தார். அம்மா ஒன்றும் சொல்லவில்லை. மாணிக்கம் மாமா, டிக்கியைச் சுத்தம் பண்ணி பாயில் வைச்சுடலாம் என்று சொன்னதோடு, நாயுடு, "டிக்கியை சுத்தமாக கிளீன் பண்ணுய்யா" என்றார். அம்மா பாய் கொண்டு வந்து மாமாவிடம் கொடுத்தார். பாயில் பாந்தமாகச் சுருட்டி மாமாவும் நாயுடுவும் பாட்டியின் உடலை டிக்கியில் வைத்தார்கள்.

நான் எங்கள் உடைகள் இருந்த பையைத் தூக்கிக் கொண்டபோது, பாட்டியின் காகிதப் பை நினைவில் தாக்கியது. பாட்டி இருந்த உள்ளறைக்கு ஓடினேன். பாட்டியின் மொந்தையான காகிதப் பை, சிறு குழந்தையின் தலையணை போல, அநாதையாக ஒரு மூலையில் கிடந்தது. பாட்டியின் உடலைக் கூடத்துக் கொண்டு போனபோது, தலையணையடியில் இருந்த அந்தப் பையை யாரோ கையாலோ காலாலோ தள்ளியிருக்க வேண்டும். அதை எடுத்துக் கைகளில் வைத்துக் கொண்டபோது மனமும் கண்களும் கசிந்தன. எங்கே அவனைக் காணோம் என்றபடி அப்பா என்னைக் கூப்பிடுவது கேட்டது. நான் அதை எங்கள் துணிமணிப் பைக்குள் திணித்துக் கொண்டு காரை நோக்கி ஓடினேன்.

– ரகசிய வேட்கை நூலிலிருந்து.
வெளியீடு : அகரம், கும்பகோணம்

● ● ●



நான் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு வந்து நிகழ்ச்சியிலே கலந்து கொள்வது இது ஆறாவது முறையாகும். 31.8.1989 அன்று இந்த மருத்துவப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழா நிகழ்ச்சிக்கு நான் வந்து கலந்துகொண்டேன். இந்தப் பல்கலைக்கழகம் 1988–ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டாலுங்கூட இதனுடைய தொடக்கவிழா நடைபெறாமலிருந்து நடைபெறக்கூடிய சூழ்நிலையிலே எதிர்பாராத காரணங்களால் நிறுத்தப்பட்டு, பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அந்தப் பல்கலைக்கழகத்தை அதே பெயரில் டாக்டர் எம்.ஜி.ஆருடைய பெயரிலேயே அமைக்க வேண்டுமென்ற உறுதி பூண்டு 31.8.89–இல் இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்து விழா கொண்டாடி பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்தோம்.

பின்னர் 1997–ஆம் ஆண்டு நிகழ்ந்த ஏழாவது பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தும் வாய்ப்பையும் பெற்றேன்.

பின்னர் 1998–ஆம் ஆண்டு நடைபெற்ற எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில், எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கின்ற அந்த வாய்ப்பையும் பெற்று அந்த விழாவிலும் கலந்து கொண்டேன்.

22.4.1999 அன்று ஒன்பதாவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் உரையாற்றுகின்ற வாய்ப்பும் பெற்றேன்.

# தொலை மருத்துவ மையம்

**எம்.ஜி.ஆர். பெயரை மேடையில் சொல்லாதவர்களைக் கண்டித்தேன்**

இதிலே வேடிக்கை என்னவென்றால் அதற்கு முன்பு நான் முதல் அமைச்சர் பொறுப்பையேற்றவுடன் ஒருமுறை ஒரு மருத்துவத்துறை நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட போது அதிலே கலந்து கொண்ட, ஏன் நம்முடைய அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி உட்பட மற்ற அதிகாரிகள் அனைவருமே இந்தப் பல்கலைக்கழகத்தின் பெயரைக் குறிப்பிட வேண்டிய அவசியம் வந்தபோது அந்தப் பெயரை விட்டுவிட்டே மருத்துவப் பல்கலைக்கழகம் என்றே குறிப்பிட்டார்கள்.

இறுதியிலே நான் உரையாற்றியபோது, அதற்காக அவர்களையெல்லாம் கண்டித்துவிட்டு "இது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய பெயரால் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகம். இதிலே ஆட்சிமாறி விட்ட காரணத்தால் அந்தப் பெயரை மாற்றிவிட முடியாது. அது குறுகிய நோக்கம்" என்று குறிப்பிட்டு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லி பின்னர் 89–ஆம் ஆண்டு இதனுடைய தொடக்க விழாவை நிகழ்த்தினேன்.

**ஏழாவது எட்டாவது முறையும் நான் வந்து கலந்து கொள்வேன்**

பின்னர் 90–ஆம் ஆண்டு இப்பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் உரை ஆற்றுகின்ற வாய்ப்பைப் பெற்று அதிலே கலந்து கொண்டேன்.

இன்றைக்கு இந்த தொலை மருத்துவ மையத்தைத் தொடங்கி வைக்க, குருதி ஏற்றத்துறையின் புதிய கட்டடத்தைத் தொடங்கி வைக்க நடைபெறும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு ஆறாவது முறையாகவும் கலந்து கொண்டிருக்கிறேன். ஏழாவது, எட்டாவது முறையும் கலந்து கொள்வேன் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தொலை மருத்துவத்திற்கு விரைவில் வேறு பெயர்**

தொலை மருத்துவம் என்பது இன்னொரு அபிப்பிராயத்தை தொலை தூரத்திலிருந்து பெற வேண்டும் என்பதற்காக சூட்டப்பட்டுள்ள பெயர் என்று கருதுகிறேன். தொலைமருத்துவம் என்பதில் தொலை என்பது தூரத்தைக் குறிப்பிடுவதற்காக உள்ளது என்றாலுங்கூட, தொலை என்பது அவ்வளவு நல்ல சொல்லாக எனக்குப் படவில்லை. "விட்டுத் தொலை" என்பதைப் போல – தொலை மருத்துவத்தை விட்டுத் தொலை என்று ஆகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே இந்தத் தொலை மருத்துவம் என்பதற்கு மாறாக இன்னொரு பொருத்தமான பெயரைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. விரைவில் அதை தக்கவர்களோடு கூடிப்பேசி அந்தப் பொருத்தமான பெயரைக் கண்டுபிடித்து அந்தப் பெயர் இதற்குச் சூட்டப்படும்.

– முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

8-9-2000 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தொலை மருத்துவ மையத்தைத் தொடங்கவைத்தும் குருதியேற்ற மருத்துவத் துறையின் புதிய கட்டடத்தை திறந்துவைத்தும் ஆற்றிய உரை.

**இரண்டு மருத்துவர்கள் - ஒரே கருத்தைச் சொல்லமாட்டார்கள்**

மருத்துவத் துறையிலே இன்னொரு அபிப்பிராயத்தைப் பெறுவது இயல்பு. பெற வேண்டிய அவசியமுண்டு. ஆனால் மருத்துவர்கள் இரண்டு பேர் ஒரே கருத்தைச் சொல்ல மாட்டார்கள். இரண்டு கடிகாரம் ஒரே நேரத்தை எப்படி காட்டாதோ அதைப்போல இரண்டு மருத்துவர்கள் ஒரே கருத்தைச் சொல்லமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் பல ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய சின்ன மருமகன் செல்வத்திற்கு இதய நோய் வந்து சென்னை பொது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருந்தான். அப்போது நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கிறேன். அந்த நேரத்தில் நான் மதுரையிலே இருக்கிறேன். இங்கே நம்முடைய வீராசாமி போன்றவர்கள் மற்றும் அமைச்சர்கள்



எலலாம் அவருடைய உடல் நிலையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**செல்வத்தை தூங்க வைக்க டாக்டர்கள் நடத்திய "மாநாடு"**

ஒருநாள் இரவு கொஞ்சம் நோய் அதிகமாக ஆகி நிலைமை கவலைக்கிடமாக இருந்தபோது செல்வம் தூங்க வேண்டுமென்று டாக்டர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் தூங்குகின்ற ஓய்வு அளிக்க வேலியம் என்ற மாத்திரையைக் கொடுக்கலாமா? அல்லது பெத்தடின் ஊசி போடலாமா என்ற இருவேறு கருத்துக்களுக்காக இரண்டு மணி நேரம் டாக்டர்கள் எல்லாம் வாதாடினார்கள் என்று கேள்விப்பட்டேன். உள்ளே நோயாளி இருக்கிறார். அவர் தூங்க வேண்டும் என்பதற்காக வெளியே அமர்ந்து டாக்டர்கள் எல்லாம் பெத்தடினா அல்லது வேலியமா அல்லது வேறு மருந்தா என்று மாநாடு நடந்து அதிலே எந்த முடிவும் ஏற்படாமல் சச்சரவுதான் ஏற்பட்டது என்ற அந்த சூழ்நிலையிலே, செவிலி (நர்ஸ்) செல்வத்தின் அறையிலிருந்து வெளியே வந்தார்.

நோயாளி எப்படியிருக்கிறார் என்று அவரிடம் டாக்டர்கள் கேட்ட போது அவர் தூங்கி அரைமணி நேரம் ஆகிறது என்று சொன்னார்.

**பாஸ்டனிலிருந்து கருத்துக்களை பெறக்கூடிய வகையில் விஞ்ஞானப் புதுமை**

தூங்குவதற்கு என்ன மருந்து கொடுக்கலாம் என்று டாக்டர்கள் யோசித்துக் கொண்டிருந்தபோது நோயாளி தூங்கி விட்டார். இது என்னுடைய வாழ்க்கையிலே நான் அறிந்த ஒரு நிகழ்ச்சி. இப்படியேதான் எல்லா மாற்று யோசனைகளும், மாற்றுக் கருத்துக்களும் இருக்குமென்று எண்ண வேண்டாம்.

பாஸ்டன் போன்ற இடங்களிலிருந்து மருத்துவத் துறையிலே தேவைப்படுகின்ற கருத்துக்களை உடனடியாகப் பெறக்கூடிய பலன் இன்றைக்கு ஏற்படுகின்றது. அத்தகைய விஞ்ஞானப் புதுமை ஏற்பட்டுள்ளது.

இது எப்படி வந்தது என்பதற்கான காரண காரிய விளக்கங்களையெல்லாம் தம்பி பாலு அவர்கள் இங்கே விவரித்தார்கள். அந்த அளவிற்கு நான்



அவைகளையெல்லாம் படிக்கவில்லை. அவர் இதற்காகவே படித்துக் கொண்டு வந்திருக்கிறார், எப்பொழுது எங்கெங்கே இதை ஆரம்பித்தார்கள் என்று நான் இன்று அவசர வேலையாக பெங்களூர் சென்றுவிட்டு வந்த காரணத்தால் அதையெல்லாம் படித்துக் கொண்டு வரவில்லை.

**தொலை மருத்துவம் பயன்படுத்தப்படும் இடங்கள்**

இந்தத் தொலை மருத்துவம் பயன்படுத்தப்படுகின்ற இடங்கள் தொலைத் தொடர்பு வழி ஆலோசனைகள் (Teleconsultations) இரண்டாவது கருத்து தேவைப்படும் அவசரச் சிகிச்சைகளுக்கு இந்த மருத்துவம் பயன்படுகிறது என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

தொடக்க நிலையில் மருத்துவப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், செவிலிப் பயிற்சியாளர்களுக்குப்




பயிற்சி அளிப்பதற்கும் தொலை மருத்துவம் பயன்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

கிராமப் புறங்களில் பணியாற்றும் மருத்துவர்கள், வல்லுநர்களின் கருத்தறிய விரும்பும் போது தொலை மருத்துவம் பயன்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

வீடுகளில் மருத்துவம் (Home Health) என்பதில் தொழில் நுட்பம் நவீன மயமாகி வருதலால், தொடர் மருத்துவச் செலவிகளைக் குறைப்பதற்கு வீடுகளில் மருத்துவப் பணிகளை மேற்கொள்ள தொலை மருத்துவம் பயன்படுகிறது.

மருத்துவ நிர்வாகம் (Medical Administration) என்பதில் மருத்துவப் பணிகளில் நிர்வாகத் தேவைகளை ஈடு செய்திட தொலை மருத்துவம் பயன்படுகிறது.

மருத்துவ *ஆராய்ச்சிகள் (Research) என்பதில் மருத்துவம் தொடர்பான ஆய்வுப் பணிகளுக்குத் தேவைப்படும் புள்ளி விவரங்களைப் பராமரிப்பதற்கும், புள்ளி விவரங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் தொலை மருத்துவம் பயன்படுகிறது.

**இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தொலை மருத்துவம் அறிமுகமாகிறது**

எனவே இப்படி எல்லா வகையிலும் பயன்படுகின்ற இந்த மருத்துவத்தை இன்றைக்கு இந்தியாவிலே நம்முடைய தமிழகத்திலே முதன்முதலாக அரசின் சார்பிலே இந்தப் பல்கலைக்கழகத்திலே அறிமுகப்படுத்துவது உள்ளபடியே நான் பெருமிதம் கொள்கின்ற ஒரு நிகழ்ச்சியாகும். அதற்கு உதவிகரமாக இருந்த துணை வேந்தர் ஆனந்தக்கண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் இதயமார்ந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரத்தத்தின் மூலம் பரவுகின்ற நோய்களைத் தடுக்கவும் அவைகளைக் கட்டுப்படுத்தவும் இரத்தம் சுத்தமாக ஆக்கப்பட வேண்டும், தூய்மையாக ஆக்கப்பட வேண்டும். உயிர் காக்கக் கூடிய இரத்தத்தை, சரியாகச் சோதனை செய்து செலுத்தப்படவில்லை என்றால் அது மேலும் பயங்கரமான நோய்களை உருவாக்குவதற்குக் காரணமாகி விடும்.

இன்றைய சூழலில், எய்ட்ஸ் நோய் உலகை பயமுறுத்திக் கொண்டுள்ளது. அந்த நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி.கிருமி பரவுவதற்கும், அதைப் போலவே மஞ்சள் காமாலை போன்ற பல கொடுமையான நோய்களுக்குரிய கிருமிகள் பரவுவதற்கும் இரத்தம் காரணமாக அமைய வாய்ப்புகள் நிறைய உள்ளன.

**தேர்ச்சி பெற்ற வல்லுநர்களைப் போதிய அளவில் உருவாக்க பட்ட மேற்படிப்பு**

எனவே, தரமான இரத்தத்தைத் தேவைக்கேற்ப, தகுந்த முறையில் கொடுப்பதற்கு இந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களைப் போதிய அளவில் உருவாக்கவே, பட்ட மேற்படிப்பை இப்பல்கலைக்கழகம் அறிமுகப் படுத்துகிறது.

இந்தத் துறையில் ஆய்வு மேற்கொள்ளவும் முன்னேறி இருக்கும் மற்ற துறைகளுக்கு ஈடாக செயல்படவும் இந்தத்துறை உருவாக்கப்படுகிறது என்பதை நான் அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

உயிர் வாழுகின்ற ஒவ்வொரு உடலுக்கும் இன்றியமையாத திரவம் இரத்தமாகும். இதன் பணிகள் மிகவும் மகத்தானவை. திசுக்களுக்கு பிராண வாயுவை அளிப்பது. உடலின் நோய் எதிர்ப்புச் சக்திக்குரிய அணுக்களைச் சுமப்பது, இரத்தப்போக்கை நிறுத்தி இரத்தத்தை உறையச் செய்யும் அணுக்களைச் சுமப்பது, உடலுக்குத் தேவையான புரதச் சத்துக்களையும் உப்புச் சத்துக்களையும் விநியோகிப்பது போன்ற பணிகளை இரத்தம் செய்கிறது.

**தமிழக அரசின் உதவியுடன் - அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் ரத்த வங்கி**

எனவே இரத்த வங்கி என்பது ஒருவரிடம் இருந்து தானமாகப் பெறும் இரத்தத்தினை வகைப்படுத்தி, நோய்க் கிருமிகள் இல்லாதவாறு பரிசோதித்து முறையாகத் தேவைப்படுவோருக்குக் கொடுப்பதற்கு உள்ள எல்லாவிதமான வசதிகளையும் இந்த வங்கி கொண்டிருக்கும். நமது தமிழக அரசின் உதவியுடன் இத்தகைய ரத்த வங்கிகள் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இதுவும் சிறப்பாகச் செயல்படும் என்கின்ற என்னுடைய நம்பிக்கையை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வீராசாமி அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். மருத்துவக் கல்லூரி மற்றும் பல் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் கணினி மற்றும் இணையப் (இண்டர்நெட்) பயிற்சி அளிக்க இந்த ஆண்டு முதல் ஆணையிடப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

## நாக்குக்கு உள்ள பெருமை

ஊரில் உள்ள அறிஞர்களுக்கு விருந்து வைக்க எண்ணினான் அந்த ஊர் தலைவன். அடிமை ஈசாப்பைக் கூப்பிட்டு, நல்ல கறி வாங்கி வந்து, சுவையாக சமைக்கும்படி கட்டளையிட்டான். ஈசாப் பணமும் பையும் எடுத்துக் கொண்டு கறிக் கடைக்குச் சென்றான். அங்கு கிடைத்த நாக்குகளை எல்லாம் வாங்கி வந்து நன்கு சமைத்து வைத்தான்.

அறிஞர்கள் வந்து கூடினர். விருந்து தொடங்கியது. நாக்குக் கறி பரிமாறப்பட்டது. "மிக நன்றாய் இருக்கிறது" என்று கூறி, சுவைத்துச் சாப்பிட்டார்கள். திரும்பவும் கறி கேட்டனர்.

மறுபடியும் நாக்குக் கறியே பரிமாறப்பட்டது. அது விருந்தினருக்கு வியப்பாக இருந்தது. "வேறு கறி இல்லையா?" என்றார்கள். தலைவன் ஈசாப்பை அழைத்துத் திட்டினான். "நல்ல கறி வாங்கிவந்து சமைக்கச் சொன்னேனே; நாக்குக் கறி மட்டுமே வாங்கி வந்திருக்கிறாயே?" என்றான் தலைவன். அப்போது, ஈசாப், "நாக்குகளைவிட நல்லது எது? கல்வி கற்கக் கருவியாயிருப்பது நாக்கு; அறிவுரை அளிப்பது நாக்கு; நாக்கால் தானே உலகில் நல்ல செயல்கள் எல்லாம் நடைபெறுகின்றன. நாக்கு இல்லாவிட்டால், வாழ்க்கை ஏது?" என்றான். எல்லோரும் ஈசாப்பின் அறிவைப் பாராட்டி விட்டுக் கலைந்து சென்றனர். ★

**மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கணினி பயிற்சி அளிக்கும் திட்டம்**

இந்த ஆண்டு முதல் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 56 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்தப் பயிற்சியில் ஐம்பது மணி நேரம் கருத்தியல் பாடமும் (தியரி) நூறு மணி நேரம் நடைமுறைப் பயிற்சியும் (பிராக்டிகல் டிரெயினிங்) அளிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான ஆணை நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய துணை வேந்தர் ஆனந்தக் கண்ணன் அவர்கள் இரண்டு மூன்று கோரிக்கைகளை இங்கே வைத்து எளிய கோரிக்கை, இனிமையான கோரிக்கை என்றெல்லாம் சொன்னார்கள். கோரிக்கை வைப்பவர்களுக்கு இனிமையாகத்தான் இருக்கம். அதனை ஏற்பவர்களுக்குத்தான் அதன் கஷ்டம் தெரியும். கஷ்டம் இருந்தாலும்கூட நிச்சயமாக அந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படும். அவைகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதியை துணை வேந்தர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.★



# மோர்தானா அணை

இங்கே நடைபெறுகின்ற இந்தப் பெருவிழாவில் 49 கோடி ரூபாய்க்கான வளர்ச்சிப் பணித் திட்டங்கள், நலத்திட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட இருக்கின்றன. 15 கோடியே 39 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் 17 ஆயிரத்து 342 பயனாளிகளுக்குப் பல்வேறு துறைகள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அடையாளமாக ஐந்தாறு பேர்களுக்கு மாத்திரம் மேடையிலே அவைகள் வழங்கப்பட்டன. பின்னர் அதிகாரிகள் மூலமாக அனைவருக்கும் இந்த உதவிகள் போய்ச் சேரும்.

21 கோடியே 22 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் 1,235 புதிய கட்டடங்களுக்கும், திட்டங்களுக்கும் அடிக்கற்கள் நாட்டப்பட உள்ளன. 12 கோடியே 59 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 157 கட்டடங்களும் நிறைவேற்றப் பட்டுள்ள திட்டங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. எனவே இந்தத் திட்டங்களோடு பாசனத்திட்டப்பணிகள் தேவையான அத்தியாவசியமான பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 568 கோடி ரூபாய். இந்த ஆட்சியில் பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 1,902 கோடி ரூபாய்.

அந்த 568 கோடியில் அடிக்கல்லோடு நின்று போன திட்டங்களும் பல உண்டு. ஆனால் 1,902 கோடியில் இந்த அரசு ஒதுக்கீடு செய்த தொகை பாசனத் திட்டங்களுக்காக பெரும்பகுதி செலவு செய்யப்பட்டு எஞ்சியுள்ள தொகையும் இன்னும் சில மாதங்களில் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

சிறுபாசனத் திட்டங்களுக்காக அனுமதி வழங்கியதில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் அனுமதி வழங்கப்பட்ட சிறுபாசனத் திட்டங்களின் எண்ணிக்கை 57. இந்த அரசு நான்காண்டு காலத்தில் சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட முனைந்து நிறைவேற்ற அனுமதி வழங்கிய திட்டங்களின் எண்ணிக்கை 88.

என்ற முறையில் உங்களுடைய நீண்டகால கனவான மோர்தானா அணையின் திறப்பு விழாவும் நடைபெற்றிருக்கிறது.

**பாசனதிட்டப் பணிகள் : ஒரு ஒப்பீடு**

பாசனத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் தம்பி துரைமுருகன் இங்கே ஒரு ஒப்பீடு காட்டினார். ஒரு ஒப்பீடு மாத்திரம் அல்ல, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் நடைபெற்ற திட்டங்களின் ஒப்பீடும் இந்த இன்னும் ஐந்தாண்டு நிறைவு பெறாத நான்காண்டு கால ஆட்சியில் நடைபெற்றுள்ள திட்டங்களின் ஒப்பீடும் கூர்ந்து நோக்கத்தக்கவை.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் பாசனத்திட்டங்களுக்காக விவசாயிகளுக்குத்

பாசனத் திட்டங்களால் பயனடைந்த நிலப்பரப்பு என்று எடுத்துக் கொண்டால் கடந்த ஐந்தாண்டுகளில் பாசனத் திட்டங்கள் மூலம் பயனடைந்த நிலம் 11 ஆயிரத்து 809 எக்டர் இந்த நான்காண்டு காலத்தில் நிறைவேற்றியுள்ள பாசனத் திட்டங்களின் பயனாக பயன்பெற்றுள்ள

**வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் ரூ.100 கோடி செலவில் கட்டப்பட்ட மோர்தானா அணையை 2-9-2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

நிலங்களின் அளவு 40 ஆயிரத்து 33 எக்டர். இந்த வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்வீர்களேயானால் நான் இதை ஒன்றும் அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்த விரும்பவில்லை. இந்த நான்காண்டு காலத்தில் இந்த ஆட்சி விவசாயப் பெருங்குடி மக்களுக்காக இந்தத்துறையிலும் தனது கவனத்தைப் பெரிதும் செலுத்தியிருக்கிறதே என்பதை தெரிவிப்பதற்காகவே இதை நான் குறிப்பிட்டேன்.

மோர்தானா அணை கட்டி முடிக்கப்பட்டதன் பயனாக குடியாத்தம் வட்டத்தில் பதினைந்து கிராமங்களும், காட்பாடி வட்டத்தில் 16 கிராமங்களும், வேலூர் வட்டத்தில் 19 கிராமங்களும் ஆக மொத்தம் 50 கிராமங்களில் உள்ள 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் பாசன வசதி பெறக்கூடிய ஒரு ஆதாயத்தை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளித்திருக்கிறது. இதன் காரணமாக ஏறத்தாழ நான்காயிரம் விவசாயக் குடும்பங்களுக்கும், ஏறத்தாழ பத்தாயிரம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் பயன் ஏற்படும் என்று புள்ளி விபரம் கூறுகிறது. இந்தப் பயனை விளைவிக்கக் கூடிய திட்டத்தைத்தான் இன்று உங்கள் முன்னால் உங்கள் வாழ்த்துக்களோடு, உங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நான் இங்கே திறந்து வைத்திருக்கிறேன்.



இங்கே நண்பர் ஞானசேகரன் குறிப்பிட்டார். 1962-ஆம் ஆண்டு வாக்கிலே பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்று குறிப்பிட்டார். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்றால், காமராஜர் ஆட்சியில் தொடங்கப்பட்ட நல்ல திட்டங்களை எல்லாம் இந்த காமராஜர் ஆட்சி தொடர்ந்து நடத்தும் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று என்பதை என்னுடைய நண்பர் ஞானசேகரன் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

காமராஜர் அடிக்கல் நாட்டியதாயிற்றே என்பதற்காக நாங்கள் விட்டுவிடவில்லை. இடையிலே வந்தவர்கள் விட்டுவிட்டார்கள். ஆனால் நாங்கள் காமராஜர் அடிக்கல் நாட்டிய திட்டம் ஆயிற்றே அதை வீண் போக விடக்கூடாது என்ற அந்த மன உறுதியோடு அந்த பெருந்தலைவருக்குப் பெருமையளிக்கக் கூடிய வகையில் இந்தத் திட்டத்தை இன்றைக்கு நாங்கள் நிறைவேற்றி வருகிறோம் என்பதை நண்பர் ஞானசேகரன் அவர்களும் உணருவார். அதனால்தான் அவர் இதைக் குறிப்பிட்டார் என்றே கருதுகிறேன்.

1990-ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது அதற்கு முன்பே 1972-ஆம் ஆண்டில் இதற்கு, காமராஜருக்குப் பிறகு இரண்டாவது முறையாக அடிக்கல் நாட்டப்பட்டது. இதைத் தொடங்கி வைக்கப்பட வேண்டும் என்று அடிக்கல் நாட்டப்பட்டு அதன் பின்னர் ஆட்சி 1976-



ஆம் ஆண்டு கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இந்தத் திட்டம் தொடராமல், பின்னர் மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலக்கட்டத்திலே 90-91-ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நான் அறிவித்தேன். இந்தத் திட்டம் மீண்டும் தொடங்கப்படும் என்று கூறினேன்.

ஆனால் அது என்னவோ, மோர்தானாவிற்கும் எங்கள் ஆட்சிக்கும் உள்ள ராசி இதை அறிவித்தாலே உடனடியாக ஆட்சி கலைக்கப்பட்டுவிடும். முதல் முறையும் அப்படித்தான் கலைக்கப்பட்டது. இரண்டாவது முறையும், 90-ஆம் ஆண்டு அறித்தேன். 91-இல் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. இப்போது மீண்டும் இதை அறிவித்து தொடர்ந்து நடத்தி என்னுடைய அருமைத் தம்பி, பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகனின் அயராத முயற்சியினால் இந்தத் திட்டத்தை மிக வேகமாக நேர்த்தியாக இன்றைக்கு கட்டி முடித்து, இன்னும் கால்வாய்கள் மாத்திரம் பாக்கியிருக்கிறது



என்றாலும் கூட அதைகளையும் ஓராண்டு காலத்திற்குள்ளாக செய்து முடித்துவிடக் கூடிய அளவிலே திட்டத்தைத் தயாரித்து இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாக அவர் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார். எனவே தம்பிக்கு உங்கள் அனைவரின் சார்பாக பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தினுடைய அணைக்கட்டு கட்டுமானப் பணியின் மதிப்பீடு ஏறத்தாழ 48 கோடி ரூபாய். கால்வாய் அமைக்கும் திட்டத்தின் மதிப்பீடு 53 கோடி ரூபாய். ஆக மொத்தத் திட்டச் செலவு 101.58 கோடி ரூபாய்.

இந்த அரசு பொறுப்பேற்று தம்பி துரைமுருகன் இங்கே சுட்டிக்காட்டிய பல அணைக்கட்டுத் திட்டங்களை, நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் இங்கே அடுக்கடுக்காக சொல்லிக் காட்டினார். அவருடைய நினைவாற்றலுக்கு மாத்திரம் அல்ல. செயலாற்றலுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு.

அந்தத் திட்டங்கள் அன்னியில் நான் மீண்டும் பொறுப்பேற்றவுடன் 89-90-இல் சில திட்டங்கள் தொடங்கப்பட்டன. உலக வங்கியின் உதவியோடு, நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் என்று அதற்குப் பெயர் (Water Resources Consolidation Project under World Bank Scheme) இப்படி ஒன்பது பாசனத்திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்த ஒன்பது பாசனத் திட்டங்களில் ஒன்றுதான் இன்று திறக்கப்பட்டுள்ள இந்த மோர்தானா அணைக்கட்டுத் திட்டமும்.

இதைத் தவிர நெல்லை மாவட்டத்தில் இராதாபுரம் வட்டத்தில் 14 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டில் நம்பியார் நீர்த்தேக்கம், குமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் 7 கோடியே 81 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொய்கை ஆறு நீர்த் தேக்கத் திட்டம், நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்தில் 57

கோடியே 53 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அடவிநயினார் கோயில் நீர்த் தேக்கத் திட்டம், நாங்குனேரி வட்டத்தில் 17 கோடியே 69 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கொடுமுடி ஆறு நீர்த் தேக்கத்திட்டம், நாங்குனேரி வட்டத்தில் 38 கோடியே 19 இலட்ச ரூபாய் செலவில் வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம். விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டத்தில் 2 கோடியே 54 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கிருதுமால் நதி நீர்த் தேக்கத் திட்டம், தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில் 26 கோடியே 90 இலட்ச ரூபாய் செலவிலே சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திட்டம், வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் ஒரு கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் ராஜதோப்பு, கானாறு நீர்த்தேக்கத் திட்டம். ஆகிய திட்டங்களின் கட்டுமானப் பணிகளும் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த ஒன்பது பாசனத் திட்டங்களின் மூலம் மொத்தம் பதினைந்தாயிரத்து 39 ஹெக்டர் நிலம் கூடுதலாக பாசன வசதி பெறும். இப்போது கட்ட வேண்டிய அல்லது கட்டப்பட இருக்கிற திட்டங்களெல்லாம் மிகப் பிரமாண்டமான பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் அல்ல. அப்படிப்பட்ட பிரமாண்டமான திட்டங்களெல்லாம் வெள்ளைக்காரன் காலத்திலேயே பல திட்டங்கள் கட்டி முடிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டது. அதற்குப் பிறகு வந்த காங்கிரஸ் ஆட்சியிலும், சில பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. நடுத்தரத் திட்டங்கள் சிறிய சிறிய பாசனத்திட்டங்கள் என்றாலும் கூட பத்தாயிரம் பேருக்கு, ஐந்தாயிரம் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய அளவிலே உள்ள திட்டங்களையெல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது. அவைகளையெல்லாம் சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப்போல நிறைவேற்றினால் தான் எல்லா விவசாயிகளும் பயன்பெற முடியும் என்ற எண்ணத்தோடு அந்தத் திட்டங்களை யெல்லாம் இன்றைக்கு இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்கிறது என்ற அந்த எண்ணம் உங்களுக்கும் இருக்கின்றது என்ற காரணத்தினாலே தான் இந்த விழாவிற்கு நான் இன்று காலையிலே சென்னையிலிருந்து புறப்பட்டு இங்கே வருகின்ற வரையிலே சாலையின் இருமருங்கிலும் ஏராளமான பொது மக்கள் உழவர்கள், தொழிலாளத் தோழர்கள், மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள், இளைஞர்கள், அருமைத் தாய்மார்கள், சகோதரிகள் என்னை வாழ்த்தி வரவேற்றனர். அதைப்போல இங்கேயும் பல்லாயிரக்கணக்கிலே நீங்கள் குழுமியிருந்து என்னை வாழ்த்தி வரவேற்கிறீர்கள் என்றால் ஏதோ என்னுடைய ஆட்சிக் காலத்தில் இந்த நான்கு முறை பொறுப்பேற்ற ஆட்சிக் காலத்தில் என்னால் இயன்றதை உங்களுக்குச் செய்திருக்கிறேன். இன்னும் செய்ய வேண்டியவை இல்லாமல் இல்லை.

இங்கே நண்பர் ஞானசேகரன் சுட்டிக்காட்டியதைப் போலவும் மத்திய அமைச்சர் சண்முகம் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்ததற்கு இணங்கவும் இன்னும் பல காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டியவை இருக்கின்றன. ஆறு கோடி மக்கள் வாழ்கின்ற இந்த மாநிலத்தில் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்து முடித்து விட முடியுமென்பது இயலாத காரியம். யாராலும் முடியாது. அலாவுதீனின் அற்புத விளக்கைக் கையிலே வைத்திருந்தாலும் கூட அதைச் செய்து முடிக்க முடியாது.

ஏனென்றால் பெரிய நிலப்பரப்பு இது. பெருவாரியான மக்கள் தொகையைக் கொண்ட மாநிலம் நம்முடைய மாநிலம். இந்த மாநிலம் இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களோடும் போட்டி போட்டுக் கொண்டு, அருமை நண்பர் வீராசாமி இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இன்றைக்கு முன்னணியிலே நிற்கிறதென்றால் அரசினுடைய நிர்வாகத்திறமை மாத்திரமல்ல, பொதுமக்களாகிய நீங்கள் தருகின்ற ஒத்துழைப்பும்தான் அதற்கு மிக முக்கியமான காரணம் என்பதை நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## உழவர் சந்தைத் திட்டம்

நல்லவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். கேலிக்குள்ளாக்கப்பட்ட பல திட்டங்கள் எல்லாம் இன்றையதினம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக உழவர் சந்தை என்று கடந்த ஆண்டு தொடங்கினோம். உழவர் சந்தையினால் உபயோகம் இல்லை என்று சொல்லப்பட்டது. இதுவரையிலே 65 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. அந்த 65 உழவர் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் எடை மாத்திரம் 10 கோடியே 90 இலட்சத்து 22 ஆயிரத்து 649 கிலோ. அந்தக் காய்கறிகளின் மதிப்பு 70 கோடி ரூபாய். இலட்சக்கணக்கான விவசாயிகள் அதைப் போல இலட்சக்கணக்கான நுகர்வோர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள்.

## வருமுன் காப்போம் திட்டம்

அதைப் போலவே வருமுன் காப்போம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி அது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நேற்றுகூட நீங்கள் பத்திரிகைகளிலே ஒரு விளம்பரம் பார்த்திருப்பீர்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே வாழ்கின்ற ஒரு பெண்மணி இருதய நோய் தனக்கிருப்பதை இந்த வருமுன் காப்போம் முகாமிலே சென்றுதான் தெரிந்து கொண்டு அங்குள்ள மருத்துவர்கள் அங்கே சிகிச்சை செய்தால் போதாதென்று அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே பெரிய மருத்துவமனைக்கு அந்தப் பெண்ணை அரசின் செலவிலேயே அனுப்பி வைத்து இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இப்போது சுகமாக இருக்கிறேன் என்று அந்தப் பெண்மணி இருபது வயது நிரம்பிய பெண்மணி எனக்கெழுதிய கடிதம் அந்தப் பெண்ணின் படத்தோடு நேற்று பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றது.

இது ஏழை எளிய கிராமப்புறத்து மக்கள் ஆங்காங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அவர்களுடைய முயற்சியால் மருத்துவர்களின் ஒத்துழைப்போடு நடத்தப்படுகின்ற வருமுன் காப்போம் முகாம்களிலே கிடைத்த பலன் என்னவென்று பார்த்தால், இதுவரை இந்த முகாம்கள் 5,752 நடைபெற்றுள்ளன. இதிலே பரிசோதனை செய்து கொண்ட மக்களுடைய எண்ணிக்கை 54 இலட்சத்து 86 ஆயிரம் பேர். இதிலே தொடர் சிகிச்சைக்கு நான் குறிப்பிட்டேனே குமரி மாவட்டத்தில் ஒரு பெண்மணி இருதய சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதை அதைப் போல – அந்த முகாம்களில் செய்யும் மருத்துவம் போதாது, பெரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு அனுப்பி வைக்கப்பட்டவர்கள், பரிந்துரை செய்யப்பட்டவர்கள் இரண்டு இலட்சம்பேர். இந்தப் பயனாளிகளுக்கெல்லாம் இலவசமாக வழங்கப்பட்ட மருந்து மதிப்பு இரண்டு கோடியே 80 இலட்சம் ரூபாய்.

## கால்நடை பாதுகாப்புத் திட்டம்

இதைப்போல மனிதர்களுக்கு மாத்திரமல்ல, வாயில்லா ஜீவன்களான கால்நடைகளுக்கும் இந்த உதவியைச் செய்ய வேண்டும், அது விவசாயிகளுக்குப் பெரிதும் பயனளிப்பதாக இருக்குமென்று கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கி இது வரையில் 2,469 முகாம்கள் கால்நடை பாதுகாப்புக்கான முகாம்கள் நடைபெற்றுள்ளன. அதிலே பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை 31.8.2000 வரை 66 இலட்சத்து 42 ஆயிரத்து 691. இதிலே பசுக்கள் 17 இலட்சம், எருமைகள் 3 இலட்சம், செம்மறி ஆடுகள் 20 இலட்சம், வெள்ளாடுகள் 12 இலட்சம், கோழிகள் 12 இலட்சம், இதர கால்நடை இனங்கள் 25 ஆயிரம். இலவசமாக இவற்றுக்கு வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 1 கோடியே 19 இலட்சத்து 29 ஆயிரத்து 223 ரூபாய்.

இப்படி கால்நடைகளிலிருந்து மனிதர்கள் வரையிலே எல்லோருக்கும் இந்த அரசு சேமநலத்திட்டங்களை ஒழுங்காக திறமையோடு ஆர்வத்தோடு அக்கறையோடு நடத்தி வருகின்றது. அதனுடைய ஒரு கூறாகத்தான் விவசாயிகளுடைய நன்மைக்காக பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. அதனுடைய ஆக்க பூர்வமான ஒரு முயற்சியாகத்தான் இன்றைக்கு இந்த அணைக்கட்டுத் திட்டத்தைத் தொடங்கி அதை திறந்து வைக்கும் நிகழ்ச்சியும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நல்லது செய்கிறோம், நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் ஆட்சிக்கு வந்தோம். இந்த ஆட்சி நல்லாட்சியா அல்லவா என்ற கருத்து நான் சொல்லியல்ல, உங்களுடைய மனசாட்சி உங்களுக்குச் சொல்லக்கூடிய கருத்து ஆகும். எனவே இந்த ஆட்சியை இந்த ஆட்சியினுடைய செயல்களை நீங்கள் ஆதரிப்பது, ஆட்சியிலே உள்ள எங்களை ஆதரிப்பதாக அர்த்தமாகாது, உங்களுக்கு மேலும் மேலும் நன்மைகளைச் செய்து கொள்வதாகத்தான் இதற்குப் பொருள் என்று கூறி இந்த நல்ல திட்டத்தைத் தொடங்குகின்ற நேரத்திலே நீங்கள் எல்லாம் பெருவாரியாக திரண்டு வந்து உங்களுடைய வாழ்த்துக்களை வழங்கியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். ★

## உழைப்பே செல்வம் தரும்



*ஒரு விவசாயி மரணப்படுக்கையில் இருந்தான். தனக்குப்பின் தன் மக்கள், தன்னைப் போலவே நிலத்தை உழுது பயிரிடுவார்களா என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் எழுந்தது.*

*மக்களைக் கூப்பிட்டான். மக்கள் நால்வரும் தந்தையின் படுக்கையைச் சுற்றி நின்றனர்.*

*"என் அருமை மக்களே! என் வாழ்க்கையில் நான் பாடுபட்டுத் தேடியப் பொருளை எல்லாம் நம்முடைய திராட்சைத் தோட்டத்தில் புதைத்து வைத்திருக்கிறேன். எந்த இடத்தில் வைத்தேன் என்பது எனக்கு நினைவு இல்லை. ஆதலால், தோட்டம் முழுவதையும் நன்கு தோண்டிப் பாருங்கள்" என்று சொல்லி முடிந்ததும் தந்தையின் உயிர் பிரிந்தது.*

*தந்தை இறந்தபின், அவருக்கு செய்ய வேண்டிய இறுதி கடன்களைச் செய்தனர். பிறகு ஆளுக்கொரு மண் வெட்டியையும், கடப்பாரையையும் எடுத்துக் கொண்டு திராட்சைத் தோட்டத்துக்குச் சென்று தோண்டினார்கள். ஆனால் தந்தை சொன்ன செல்வம் கிடைக்கவில்லை. மனத்தை தேற்றிக் கொண்டு தோட்டத்தைச் சமப்படுத்தி, எரு விட்டு திராட்சை நட்டனர். அது செல்வம் கொழிக்கும் நிலமாகியது.* ★

## முந்நூறு ஊனமுற்றவர்களுக்குக் கணினிப் பயிற்சி

கை, கால் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் முந்நூறு பேருக்குக் கணினிப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும் என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினையொட்டி, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 பயிற்சி மையங்கள் 34 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து முந்நூறு பேருக்குக் கணினிப் பயிற்சி இலவசமாக வழங்குவதற்கு முதலமைச்சர் 29.8.2000 அன்று ஆணையிட்டுள்ளார். இந்தக் கணினிப் பயிற்சி மூன்று மாத காலம் நடைபெறும். பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படும் ஊனமுற்றோர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு முந்நூறு ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.

## இருநூறு இடங்களில் நெல் உலர்த்தும் களங்கள்

தமிழக சட்டமன்றத்தில் 24.3.2000 அன்று இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளித்து உரையாற்றுகையில், அறுவடைக்குப் பின் சேதாரம் கணிசமாகக் குறைந்து விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் கிராமங்களில் சிமெண்டால் ஆன உலர்களங்கள் ''நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படுமென்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து,, ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் செலவில் மொத்தம் மூன்று கோடியே ஐம்பது இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக உள்ள 27 மாவட்டங்களில் ''நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் இருநூறு இடங்களில் நெல் உலர்த்தும் களங்களை அமைத்திட முதலமைச்சர் கலைஞர் 30.8.2000 அன்று ஆணையிட்டுள்ளார். ●

# செய்திச் சரம்

## தமிழக கிராண்ட் மாஸ்டர்கள்

*தமிழகத்தைச் சேர்ந்த, இந்தியாவின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற எஸ். விஜயலட்சுமி மற்றும் சமீபத்தில் சென்னைக்கு அருகிலுள்ள கேளம்பாக்கத்தில் நடைபெற்ற பென்டாமீடியா கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற கே. சசிகிரண் ஆகியோர் 30.8.2000 அன்று தமிழ் நாடு செஸ் சங்கத்தின் செயலாளரான திரு. மானுவேல் ஆரானுடன் தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். 19.9.2000 அன்று தமிழகத்தைச் சார்ந்த செஸ் கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் முன்னாள் ஹாக்கி விளையாட்டு வீரர் திரு வி.ஜே.பிலிப்ஸ் ஆகிய இருவரும், இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள் முன்னிலையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அவ்வமயம் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலாளர் திரு கே.அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.*

*தமிழகத்தைச் சேர்ந்த இம்மூன்று செஸ் வீரர்கள் மற்றும் ஹாக்கி விளையாட்டு வீரர் பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடி தமிழகத்திற்குப் பெருமைத் தேடித்தருவது குறித்து மகிழ்ச்சி அடைந்த தமிழக முதலமைச்சர் இவ்வீரர்கள் மேலும் பல வெற்றிகளைக் குவித்திட வாழ்த்துகளை வழங்கினார்.*

## கே.சசிகிரண்

சென்னையைச் சேர்ந்த 19 வயதான கே.சசிகிரண் சென்னைக்கு அருகிலுள்ள கேளம்பாக்கத்தில் நடைபெற்ற பென்டாமீடியா கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்றார். பன்னாட்டு அளவுகோலின்படி விஸ்வநாதன் ஆனந்திற்குப் பின் அதிக புள்ளிகள் பெற்றவர். 1999-ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் செஸ் பட்டம், 2000-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற குட்ரிக் இன்டர் நேஷனல் ஓபன் மற்றும் சாங்கிலியில் நடைபெற்ற இன்டர்நேஷனல் ஓபன் ஆகிய போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கிராண்ட் மாஸ்டரானார். அக்டோபர் 1999-ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய குழு சாம்பியன்ஷிப்பிற்கான போட்டியில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டார். நான்கு பேரைக் கொண்ட இக்குழு மூன்றாம் இடத்தைப் பிடித்தது. தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள இவர் சென்னையில் இந்தியன் ஆயில் மற்றும் எரிவாயு கழகத்தில் பணிபுரிந்து வருகின்றார். ●



## விஜயலட்சுமி சுப்பராமன்

ஜூலைத் திங்கள் ஹைதராபாத்தில் நடந்த விப்ரோ இண்டர்நேஷனல் கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் வென்றதன் மூலம் இந்தியாவின் முதல் பெண் கிராண்ட் மாஸ்டர் ஆனார். சென்னையைச் சேர்ந்த இவர் கல்கத்தாவில் 1996–ஆம் ஆண்டு நடந்த மகளிருக்கான காமன்வெல்த் பட்டம், 1998–ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடந்த லினோர்ஸ் ஓபன் மற்றும் 2000–இல் உதய்பூரில் நடந்த ஆசிய சாம்பியன்ஷிப் மற்றும் தற்போது ஹைதராபாத்தில் நடந்த போட்டிகளின் மூலம் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இச்சாதனையை அடைந்தார். அக்டோபர் திங்கள் 1999–ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய மகளிர் குழு சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொண்டவர்களில் இவரும் ஒருவர். இக்குழு மூன்றாம் இடத்தைப் பிடித்தது. 30–க்கும் மேற்பட்ட பன்னாட்டு அளவிலான போட்டிகளில் கலந்து கொண்ட இவர் தனது 10 வயது முதல் விளையாடத் துவங்கினார். தற்பொழுது சென்னையில் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். தமிழக அரசு இவருக்கு சென்னை அண்ணாநகரில் ரூ.13.60 இலட்சம் மதிப்புள்ள உயர்தர வருவாய் பிரிவுக்கான வீடு ஒன்று 1.6.2000 அன்று வழங்கியுள்ளது. ★

## விஸ்வநாதன் ஆனந்த்

சென்னையைச் சார்ந்த திரு விஸ்வநாதன் ஆனந்த் 1985-இல் தனது 16 வயதிலேயே தேசிய சாம்பியன் பட்டம் வென்றவராவார். செஸ் விளையாட்டில் பல சாதனைகள் சிறப்பான முறையில் புரிந்தமைக்காக 1985-ஆம் ஆண்டு மத்திய அரசு இவருக்கு ''அர்ஜுனா விருது'' வழங்கி கௌரவித்தது. 1987-ஆம் ஆண்டு உலக கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற திரு விஸ்வநாதன் ஆனந்த் அதே ஆண்டு ''பத்மஸ்ரீ'' விருதும் பெற்றார். 1996-ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற சதுரங்க கிராண்ட் ப்ரீ போட்டியில் உலக சாம்பியனான கேரி காஸ்பரோவை வென்று முதலிடம் பெற்றார். 2000-ஆம் ஆண்டில் சீனாவில் சென்யாங் நகரில் உலக சதுரங்க இணையம் நடத்திய போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டம் பெற்ற வீரரான இவர், தற்போது உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரராகத் திகழ்கிறார். ★

## வி.ஜே.பிலிப்ஸ்

*ஹாக்கி விளையாட்டில் சிறப்பான பல சாதனைகள் புரிந்த திரு வி.ஜே.பிலிப்ஸ் 1999–ஆம் ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான "அர்ஜுனா விருது" பெற்றவராவார். தென்னக இரயில்வேயில் உதவி விளையாட்டு அலுவலராகப் பணிபுரியும் திரு வி.ஜே.பிலிப்ஸ் இந்திய அணிக்காக பல போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடியுள்ளார். குறிப்பாக 1972–ஆம் ஆண்டு முனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் வெண்கலம், 1973–ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்ற 2வது உலகக் கோப்பைக்கான போட்டிகளில் வெள்ளி, 1974–ஆம் ஆண்டு டெஹ்ரான் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி, 1975–இல் கோலாம்பூரில் நடைபெற்ற 3வது உலகக்கோப்பைக்கான போட்டிகளில் தங்கம் மற்றும் 1978–இல் பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி பதக்கங்களை வென்ற இந்திய அணியில் விளையாடியுள்ளார். மேலும், 1978–இல் நடைபெற்ற இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடர் மற்றும் அர்ஜென்டினாவில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான போட்டிகளில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கி விளையாடியுள்ளார். இந்திய அணிக்குத் தலைமை தாங்கிய முதல் தமிழக வீரர் இவர்.* ★

## நெல் கொள்முதல் விலை உயர்வு

*இந்த ஆண்டின் நெல் கொள்முதல் விலை, கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட 20 ரூபாய் கூடுதலாக நிர்ணயம் செய்யப் பட்டு மத்திய அரசினால் அறிவிக்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் இந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களிலும், இதர பகுதிகளில் உள்ள வட்டக் கிடங்குகளிலும் 1.9.2000 முதல் கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட கொள்முதல் விலையான 490 ரூபாய் என்பதை 510 ரூபாய் என்றும், "ஏ" கிரேடு ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட கொள்முதல் விலையான 520 ரூபாய் என்பதை 540 ரூபாய் என்றும் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் 31.8.20000 அன்று ஆணையிட்டுள்ளார்.*

*இஃதன்னியில், 1.9.2000 முதல் கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல்லிற்கும், "ஏ" கிரேடு ரக நெல்லிற்கும் இடைநிகழ் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் கூடுதலாக வழங்குவதற்கு தமிழக அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் சாதாரண ரக நெல் ரூ.545 என்றும், "ஏ" கிரேடு நெல் ரூ.575 என்றும் விலை நிர்ணயிக்கப்படுகிறது.* ●

## தேசிய உற்பத்தித்திறன் விருதுகள்

புதுதில்லியிலுள்ள தேசிய உற்பத்தித்திறன் குழு (National Productivity Council) 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளுக்கு வழங்கிய விருதுகளில் பெரும்பாலான வற்றை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன. இவற்றில் 1997-98-க்கான 9 மொத்த விருதுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட 7 விருகளைப் பெற்றுள்ளன.

<u>தரைவழி போக்குவரத்து [பயணிகள்] நகர் பிரிவு</u>

1. சிறந்த உற்பத்தித் திறன் விருது:
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், வேலூர்
2. நன்மதிப்புச் சான்றிதழ்:
   மாநகர் போக்குவரத்துக் கழகம், [சென்னை கோட்டம்-2] சென்னை

<u>தரைவழி போக்குவரத்து [பயணிகள்] மலை பிரிவு</u>

1. சிறந்த உற்பத்தித் திறன் விருது:
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்.
2. இரண்டாவது சிறந்த உற்பத்தித்திறன் விருது:
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், உதகமண்டலம்.

<u>தரைவழி போக்குவரத்து [பயணிகள்] புறநகர் பிரிவு</u>

1. சிறந்த உற்பத்தித் திறன் விருது:
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்.
2. இரண்டாவது சிறந்த உற்பத்தித்திறன் விருது:
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு.
3. நன்மதிப்புச் சான்றிதழ்:
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.

இதேபோல், 1998-99-ஆம் ஆண்டிற்கான மொத்தமுள்ள 5 விருதுகளில் கீழ்கண்ட 4 விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன.

<u>தரைவழி போக்குவரத்து [பயணிகள்] நகர் பிரிவு</u>

சிறந்த உற்பத்தித்திறன் விருது: மாநகர் போக்குவரத்துக் கழகம், [சென்னை கோட்டம்-2] சென்னை

<u>தரைவழி போக்குவரத்து [பயணிகள்] புறநகர் பிரிவு</u>

1. சிறந்த உற்பத்தித் திறன் விருது:
   தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி
2. இரண்டாவது சிறந்த உற்பத்தித்திறன் விருது:
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்
3. நன்மதிப்புச் சான்றிதழ்:
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்

மேற்கண்ட விருதுகள் அனைத்தும் புதுதில்லி விஞ்ஞான் பவனில் 24.8.2000 அன்று மாலை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மேதகு குடியரசு துணைத்தலைவர் திரு.கிருஷ்ணகாந் அவர்களால் வழங்கப்பட்டது. ●

## வலைத்தளத்தில் அரசு ஆணைகள்

நேர்மையான, ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்கிட இந்த அரசு தொடர்ந்து உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே அறிவித்துள்ளார். அதனையொட்டி தமிழக அரசு நிறைவேற்றிய பொதுமக்கள் தகவல் பெறும் உரிமைக்கான சட்டம் அமலில் இருந்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஆணைகள் அனைத்தையும், அதன் பொருளடக் கத்துடன் தமிழக அரசின் அதிகாரப்பூர்வ வலைத் தளமான www.tn.gov.in.ல் வெளியிட வேண்டும் என முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். ●

## நாகை மாவட்டத்தில் புதிய விளையாட்டு வளாகம், மதுரை நகரில் புதிய நீச்சல் குளம்

தமிழக அரசு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை ஏற்படுத்த நிதி உதவி செய்து வருகிறது. இத்தகைய வளாகத்தை அமைக்க மைய அரசும், மாநில அரசும் 75 சதவிகிதம் நிதியுதவி செய்கின்றன. விளையாட்டரங்கக் குழு மூலம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக 25 சதவிகிதம் பெறப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும்,

1. திறந்தவெளி விளையாட்டரங்கம்
2. கையுந்து பந்து / கூடைப்பந்து ஆடுகளங்கள் மற்றும் கோ-கோ, கபடி ஆடுகளங்கள்
3. பல்நோக்கு உடல்திறனைப் பெருக்கும் கருவி, பளுதூக்கும் கருவி வைக்கக் கூடியஅறை
4. நீச்சல் குளம் மற்றும்
5. மரத்தாலான தளத்துடன் உள்விளையாட்டரங்கம்

ஆகிய ஐந்து வசதிகளையும் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் படிப்படியாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த 5 வசதிகளையும் கொண்ட மாவட்ட விளையாட்டு வளாகம் ஏற்படுத்த உத்தேசமாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

நடப்பு ஆண்டில் திண்டுக்கல்லில் ரூபாய் 1.18 கோடி ரூபாய் மதிப்பில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம், சேலம் மற்றும் ஈரோடு மாவட்டத் தலைநகரங்களில் ரூபாய் 53 இலட்சம் செலவில் நீச்சல் குளங்கள், திருச்சி மாவட்டத் தலைநகரில் ரூபாய் 83 இலட்சம் செலவில் நீச்சல்குளம் ஆகியவை அமைத்திட ஏற்கனவே முதல்வர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார்.

நடப்பு நிதியாண்டில் நாகப்பட்டினத்தில் ரூ.1.12 கோடி மதிப்பில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகமும், மதுரை மாவட்ட தலைநகரில் ரூ.51 இலட்சம் செலவில் நீச்சல் குளமும் அமைத்திட முதல்வர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார். நாகப்பட்டினத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மதுரை நகரில் நீச்சல்குளம் கட்டும்பணி விரைவில் தொடங்கப் படவுள்ளது. ●



# மீனின் விழிகளிலும் கண்ணீர்



மழையில் ஊர்மூழ்க
இரவுகள் தூக்கம் அறிவதில்லை
வலுக்கும் இலையுதிர்நாள்

— ஸோகி

நீர்க்காகம் ஒன்று
பார்க்கும் கொத்தும் கலைக்கும்
நீரலை நிலா

— ஜுயிர்பூ

இளவேனில் விடைபெற,
அழஉம் பறவைகள்; மீனின்
விழிகளிலும் கண்ணீர்

— பாஷோ

சிற்றூர் பலவுண்டு
சற்றுமிலை கடல்மீன், பூ; அவர்க்
குற்றதெலாம் மணிநிலா

— ஸயிக்கு

இன்று நான்செல்ல
இன்னும் இருக்கிறாய் நீ; உண்டு
ரெண்டின் இலையுதிர்வு

— பூஸன்

உன் காலடி குனிந்துபார்,
கண்முன்னே அவரை களவுபோம் —
என் காவல் பொம்மை?

— யயூ

சவப்பெட்டி ஒன்றை
நெருநல் நடுநிசி சந்தித்தேன்
மலர்ந்த புத்தாண்டு

— ஷிகி

குருவிகள் பறந்திருக்கும்
ஒரு காவல் பொம்மை விட்டு
ஒரு காவல் பொம்மை

— சஸநமி

குளிர்வான் தாரகைகள்
ஒழுகி ஒழுகி வெளியேற்றிச்
சலசலக்கும் ஊர்நதி

— மட்புரா தகுயா

உறைந்தநீர் கல்லறைகள்;
முறைத்துக் கொண்டு வாள்த்தே
கதிரோன், வெண்ணிலவு

— யமகுச்சி சீஷி



*ஜப்பான் ஹைகூ*
*மொழியாக்கம் : அமரன்*
*நன்றி : கவிக்கோ*

# நூற்றாண்டுக்கு ஒருவர் தந்தை பெரியார்

□ புலவர் கு. அய்யாறன்

இருபது நூற்றாண்டுகள் மறைந்துவிட்டன. இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். மகிழ்ச்சிதான். இப்பொழுது நாம் சென்ற இருபதாம் நூற்றாண்டையும், 19ஆம் நூற்றாண்டையும் பின்னோக்கிப் பார்க்கலாம்.

ஒரு நூற்றாண்டில் பிறக்கும் மக்களுயிர்க்குக் கணக்கில்லை. எல்லா உயிர்களும் பிறக்கின்றன – வளர்கின்றன – வாழ்கின்றன – உண்டு – உடுத்தி – உறங்கி பிறகு மடிகின்றன.

ஆனால் ஒருசிலர் மட்டுமே அவர்கள் மறைந்தாலும், ஏனைய மக்களின் மனதில் மறையாமல் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் வாழ்ந்தவிதம் – செயற்கரிய செய்த செயல்களே அடிப்படையாக அமைகின்றன.

நூற்றாண்டுகள் பலகழிந்தும் புத்தர் மட்டும் ஏன் வாழ்கிறார்? நபிகள் நாயகம் மட்டும் ஏன் வாழ்கிறார்? இயேசுபிரான் மட்டும் ஏன் வாழ்கிறார்?

அவர்கள் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். ஏனைய மக்களுக்காக வாழ்ந்தார்கள்.

இவ்வகையில் நூற்றாண்டுக்கு ஒரிருவர்தான் தோன்றமுடியும். அவ்வகையில் தோன்றியவர்களில், இருப்தாம் நூற்றாண்டில் இணையற்றவர் தந்தை பெரியார்.

இதற்குக் காரணம் என்ன? புத்தர் கூறிய மாற்றத்தை – நபிகள் சொன்ன மாற்றத்தை – இயேசு காட்டிய மாற்றத்தை மற்றவர்கள் தன்னுடைய வாழ்நாட்களில் தோன்றும்படிச் செய்ய முடியவில்லை.

ஆனால் பெரியார் ஒருவர் மட்டுமே அத்தகைய மாற்றத்தை நாட்டிலே ஏற்படுத்தினார். அவர் எதற்காகப் பாடுபட்டாரோ? அதை – அந்த மாற்றத்தை தன்கண்களால் கண்டுமகிழ்ந்து கண்ணுறங்கியவர் தந்தை பெரியார்.



இதற்காகப் பெரியார் பட்ட பாடுகள் – அனுபவித்த இன்னல்கள் – சிறை வாசங்கள் – எவ்வளவு? இழிவான பேச்சுகள் – ஏளனங்கள் – பழிச்சொற்கள் எவ்வளவு?

இருப்பினும் அந்த இமயத்தை யாராலும் சிறிதும் அசைக்கமுடியவில்லை.

காரணம், மனிதனுக்கு இலக்கணம் வகுத்துக் காட்டியவர் பெரியார். ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், தாய்க்குலத்திற்கும் பொற்காலம் மலர முழுமையான வித்தாக விளங்கியவர் பெரியார்.



நாளடைவில் பெரியாரைப் பற்றிப் புகழ்ந்து பேசாதார் இல்லை. மிகப் பெரிய மேதாவிகள் என்று மக்களால் கூறப்பட்டவர்கள் அனைவரும் பெரியாரின் சொல்லிற்கும் செயலிற்கும் தூய நல்ல தொண்டிற்கும் அடிமையானார்கள். பொதுத்தொண்டின் மறு உருவமாகத் திகழ்ந்தார் பெரியார். உழைப்பின் சின்னமாகத் திகழ்ந்தார் பெரியார்.

இவர் பிறப்பதற்கு முன்பு, இவருடைய தாய் சின்னத்தாய் அம்மாளும், தந்தை வேங்கடப்ப நாயக்கரும் இல்லற வாழ்க்கையின் முற்பகுதியில் மிகவும் துயருற்றனர் – வறுமையில் வாடினர். ஏன்? கூலி வேலைக்கூடச் செய்தனர். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ! என்பதற்கேற்ப அவர்கள் துவக்கிய சிறுசிறு வியாபாரங்கள், பெருகிப் பெருகி பெரும் செல்வந்தர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தனர். ஓயாத உழைப்பு வறுமையை ஓட்டியது.



இவர்களுக்கு முதலில் இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன.

செல்வம் மேலும் மேலும் செழித்தது. இந்நிலையில் அவர்களுக்குக் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் பிறந்தது. பிள்ளைவரம் கேட்டு அவர்கள் செய்யாத தானங்களும், தருமங்களும் இல்லை. போவோர் வருவோர் எல்லாருக்கும் அவர்களது வீடு உணவு விடுதியாகவும், உறங்கும் இடமாகவும் அமைந்தது.

அவர்கள் வேண்டியது வீணாகவில்லை. 1877ஆம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதுதான் பெரியாரின் சகோதரன் ஈ.வெ. கிருஷ்ணசாமி.

அடுத்து 1879ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைதான் நம்முடைய பாட்டுடைத்தலைவன் பெரியார் ஆவார்.

## குழந்தைப்பேறு

திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தன. நாகம்மை கருவுற்றார். பெரியார் மகிழ்ச்சி கொண்டார். ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அக்குழந்தை ஐந்தாவது மாதத்தில் இறந்துவிட்டது. அனைவரும் வேதனையடைந்தனர்.

பெரியார் நாகம்மையைத் தேற்றினார். வருந்தாதே, நமக்குக் குழந்தை இல்லை என்றால் என்ன? ஊரார் குழந்தைகளுக்காகப் பாடுபடுவோம் என்று ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமே பெரியாரிடம் மாற்றத்தை ஏற்படுத்தியது. மூடநம்பிக்கை இல்லாத இடத்தையும், மக்களையும் காணத் துடித்தார்.

பெரியாரின் பெருந்தொண்டுகளில் முதலிடம் பெற்றது பெண்களின் உரிமை – அவர்களிடம் உள்ள மூடப்–பழக்கங்களை ஒழிப்பது என்பதுதான்.

இதற்கு நாகம்மை பெரியாருக்கு உற்ற துணையாக இருந்தார்.

## காங்கிரஸ் தலைவர்

பெரியார் காந்தியாரின் சொற்களை முற்றும் நம்பினார். ஒத்துழையாமை பிரச்சாரத்தில் பேசினார். தான் அணிந்துவந்த ஆடம்பரமான ஆடைகளையெல்லாம் வீசியெறிந்தார். மிகவும் சாதுவாக மாறினார். முரட்டுக் கதரையே உடுத்தினார். தான் மட்டுமல்ல உயர்வான பட்டாடை உடுத்திவந்த நாகம்மையாரையும் கதர் உடுத்தச் செய்தார். எண்பது வயதைக் கடந்த தனது தாயாரையும் கதர் உடுக்கச் செய்தார். தன் இனத்தவரையும், நண்பர்களையும் கதர் அணியச் செய்தார்.

பெரியார் செல்வத்தில் திளைத்தவர். வெய்யில் படாது வாழ்ந்தவர். ஈரோட்டு வேந்தரென வாழ்ந்தவர். எளிய உடை அணிந்தார் – எளிய உணவு உண்டார். இரவு பகல் பாராது தனது வாழ்வை நாட்டிற்கே அர்ப்பணித்தார்.

24–5–1924ஆம் நாள் பெரியார் சிறைபட்டபோது, "நவசக்தி" இதழில் திரு.வி.க. எழுதினார் :

*"தமிழ்நாட்டில் இன்று நடைபெற்றுவரும் கதர் இயக்கம் ஈ.வெ.ராவை மட்டும் நம்பியிருந்தது. கதரை காங்கிரசோடு பிணைத்தார். கதர் கடைகள் அவரால்தான் ஏற்படுத்தப்பட்டன. இராஜாஜி நிர்வாகம் நடத்திவந்த திருச்செங்கோடு ஆசிரமும் ஈ.வெ.ராவால்தான் திறந்துவைக்கப்பட்டது. கதரைப் பற்றி அவர் செய்த சொற்பொழிவுகள் அளவற்றவை.*

*அவர் சொற்பொழிவைக் கேட்டோர் அனைவரும் கதராடை அணிய முற்பட்டனர். கதர் மூட்டைகளை தன் தலையில்கூட சுமந்து விற்றார். இத்தகைய ஒருபெருமகனை நாம் காண இயலுமா? கதர் சொற்பொழிவோடு தீண்டாமை விலக்கைப் பற்றியும் மிகவும் வன்மையாகப் பேசுவார்.*

*மனிதனை மனிதன் தொடக்கூடாது. கண்ணில்படக்கூடாது – தெருவில் நடக்கக் கூடாது – கோயிலுக்குள் போகக்கூடாது – குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது – என்று கூறும் ஒரு நாட்டை பூகம்பத்தாலோ! எரிமலையின் நெருப்பு குழம்பாலோ! கடல் பொங்கி மூழ்கச் செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்துபிறகு கூட, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் – அவர் நீதிமான் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது?' என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் என்று உள்ளத்தைத் தொடும் விதத்தில் பேசும் ஆற்றலுடையவர்.*

*சொல்வன்மையில் இவருக்கு இணை வேறு யாரும் இல்லை. இது பகைவர்களாலும் மறுக்கப்படாத செய்தி"*

– என்று திரு.வி.க. அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார். சொல்லின் செல்வன் என்ற தொடருக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பெரியார்.

இனி, அண்ணாவால் அக்கிரகாரத்தில் ஓர் அதிசய மனிதர் என்று புகழப்பெற்ற வ.ரா. பெரியார் பற்றிக் குறிப்பிட்டார்.

"சொரணையற்ற தமிழர்களின் உள்ளத்தை அடி தெரியும்படி கலக்கிய பெருமை ஈ.வெ.ராவைத்தான் பெரிதும் சேரும். அவர் இயற்கையின் புதல்வன். தமிழ் மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகம் இல்லை. மனதில் தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப் போல் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை".

மூதறிஞர் இராஜாஜி கவர்னர் – ஜெனரல் பதவி வகித்தபோது பெரியாரைப் பற்றிக் கூறினார். எழுபதாவது ஆண்டு விழாவிற்கு வாழ்த்து அனுப்பியதில் சீரார் ஈ.வெ.ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அகநகும் நட்பு யார் என்ன சொன்னபோதிலும் என்றும் குறையாது என்று குறிப்பிட்டிருந்தார்.

அண்ணா பெரியாரைப் பற்றிக் குறிப்பிடுகையில், எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக் கூடிய காரியங்கள் எல்லாவற்றையும் பெரியார் இருபதே ஆண்டுகளில் செய்து முடித்திருக்கிறார்.

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பெரியாரைப் பற்றி கூறுகையில், திரு. இராமசாமி நாயக்கரைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது? நாயக்கரவர்கள் தமிழ்நாட்டின் எல்லாத் தலைவர்களையும்விடப் பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏ.டி. பன்னீர்செல்வம் பெரியாரைப் பற்றிக் கூறும்போது –

"நமது பெரியார் அவர்கள் ஒரு மகாத்மாவல்ல. ஆனால் தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. தம் காரியத்தைச் சாதித்துக்கொள்ள அவர் பட்டினி கிடப்பதில்லை. சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதில்லை. நேர்மையான வழியிலேயே பாடுபடுவார்.

காங்கிரஸ்காரர்களுக்கு வார்தா ஆஸ்ரமம் எப்படியோ! அப்படியே திராவிடர்களுக்கு ஈரோடு. அவர்கள் வார்தா செல்வதைப் போல் நாம் அறிவுரை கேட்க ஈரோடு வருகிறோம். பெரியார் தமிழ்நாட்டின் உண்மைக் களஞ்சியம்" என்று புகழ்மாலை சூட்டினார்.

பெரியார் ஒரு கடல். அண்ணா சொன்னது போல் பெரியார் ஒரு சகாப்தம். அவருடைய விஸ்வரூபத்தை நாம் முற்றிலும் காணவியலாது. சிற்சில தேன் துளிகளைச் சுவைக்க முடியும்.

ஆகையால் அவரது தொண்டுகளில் சிலவற்றை அறிந்தாலே அதுவே நமக்கு நல்வாழ்வு காட்டும். இதுவே அவரது வாழ்க்கையை நமக்கு எடுத்துரைக்கும். எனவே சில குறிப்புகளைக் காண்போம்.

**17–9–1879**ஆம் நாளில் பெரியார், சாதாரண இராமசாமியாகப் பிறந்தார்.

தன்னுடைய 20ஆவது வயதில் நாகம்மையை விரும்பி திருமணம் செய்துகொண்டார்.

25ஆவது வயதில் துறவு பூண்டு கல்கத்தா, காசி முதலிய வடநாட்டுத் தலங்களுக்குச் சென்று வந்தார்.

ஈரோடு நகரசபைத் தலைவராகப் பல ஆண்டுகளிருந்தார். அப்போதுதான் ஈரோட்டிற்கு குடிதண்ணீர் குழாய் அமைத்தார்.

1918இல் பெரியார் ஈரோடு சேர்மன். அதேசமயம் இராஜாஜி சேலத்தில் சேர்மேனாக இருந்தார்.





1919இல் ஈரோடு சேர்மென் பதவியை ராஜிநாமா செய்து காங்கிரசில் சேர்ந்தார்.

1920இல் காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குகொண்டார். பொதுநிறுவனங்களில் வசித்துவந்த 29 பதவிகளையும் ராஜிநாமா செய்தார்.

வருடத்திற்கு முப்பதாயிரம் ரூபாய்குமேல் வருமானம் வந்து கொண்டிருந்த வாணிபத்தை நிறுத்தி காங்கிரசுக்கு உழைத்தார்.

காந்தியாரின் சீடரானபிறகு, ஆடம்பரமான ஆடைகளை விட்டு, கதராடை உடுத்த ஆரம்பித்தார்.

நீதிமன்றங்களை நிராகரிக்க வேண்டும் என்ற காங்கிரசின் திட்டப்படி, தனக்கு நீதிமன்றத்திலிருந்து வரவேண்டிய 50,000 ரூபாயை இழந்தார்.

1921இல் ஈரோட்டுக் கள்ளுக்கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்திச் சிறைப்பட்டார்.

1922இல் கள்ளுக்கடை மறியலில் குடும்பத்துடன் ஈடுபட்டார். மறியல் போரின் முடிவு ஈரோட்டு இராமசாமி கையில் இருக்கிறது என்று காந்தியடிகளே கூறும் நிலையை உண்டாக்கினார்.

இதே ஆண்டில் திருப்பூர் காங்கிரஸ் மாநில மாநாட்டில் மனுதர்ம சாஸ்திரத்தையும், இராமாயணத்தையும் நெருப்பில் கொளுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

1924இல் மலையாளத்தில் வைக்கம் ஊரில் தீண்டாமையை நீக்க மறியல் செய்து சிறை சென்றார்.

இதே ஆண்டில் மீண்டும் மறியல் செய்து இரண்டாவது முறை சிறை சென்றார்.

**11–9–1924**இல் கதர் பிரச்சாரம் செய்தமைக்காக சிறை தண்டனை அடைந்தார். மேலும் குருகுல ஆசிரமத்தில் உணவு அருந்துவதற்கு இரு பிரிவுகளைச் செய்த செயலுக்குக் கண்டனமாக தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசி பதவியை உதறித் தள்ளினார்.

1925ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டில் இனி காங்கிரசை ஒழிப்பதே என் வேலை என்று சொல்லி காங்கிரசிலிருந்து வெளியேறினார். என்றாலும் கதர்போர்டு தலைவராகப் பல ஆண்டுகள் உழைத்தார்.

1925ஆம் ஆண்டு 'குடி அரசு' பத்திரிகையைத் துவக்கிச் சுயமரியாதைக் கொள்கைகளை விளம்பரப்படுத்தினார்.

1927ஆம் ஆண்டு வருணாச்சிரமம் ஒழிந்தால்தான் தீண்டாமை ஒழியும் என்று காரண காரியங்களை விளக்கி காந்தியாரிடம் வாதிட்டார். இதே ஆண்டில் சைமன் கமிஷன் இந்தியாவிற்கு வந்தபோது, அதை வரவேற்கவேண்டும் என்று முதன்முதலாகச் சொன்னவர் பெரியார்தான்.

1929ஆம் ஆண்டு பெரியார் ஒரு நாத்திகர்–தேசத்துரோகி, மதத்துரோகி என்ற வசை மொழிகளுக்கு ஆளானார். இதே ஆண்டில் மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் இவர்களைச் சிறை புகச்செய்தார். மேலும் கலப்புத் திருமணம், விதவைத் திருமணம், புரோகிதர் அற்ற திருமணங்களை ஏற்படுத்தி பலரையும் இதில் ஈடுபடும்படிச் செய்தார். இதே ஆண்டில் மலேயா நாட்டிற்குச் சென்று சுயமரியாதைக் கொள்கையைப் பரவச் செய்தார். கடல் கடந்தும் தன் கருத்துகளைப் பரப்பிய பெருமை பெரியாருக்கு ஏற்பட்டது.

1930ஆம் ஆண்டு ஈரோட்டில் சுயமரியாதை மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு இவைகளைக் கூட்டினார்.

1931ஆம் ஆண்டு கிறிஸ்துவர்களாலும், மகமதியர்களாலும் இந்து வைதீகர்களாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டாலும், கல்லடி–சொல்லடி இவைகளுக்கிடையே மதநல்லிணக்க–சமதர்மப்பிரச்சாரம் ஊர்தோறும் செய்தார்.

1932ஆம் ஆண்டு எகிப்து, துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல் முதலிய

நாடுகளுக்குச் சென்று வந்து, அங்குள்ள அரசியல் நிலையை இங்கிலாந்தில் 50 ஆயிரம் தொழிலாளர் கூட்டத்தில் பேசி அரசியல் தெளிவை ஏற்படுத்திவிட்டு நாடு திரும்பினார்.

**11-5-1933**இல் தன் பொதுத் தொண்டிற்கு வலது கரமாக – தன்னுயிர் மனைவியாக இருந்த நாகம்மையார் இயற்கை எய்தினார்கள். பெரியாரின் வாழ்க்கையிலேயே யாராலும் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது என்றால், அது தன் மனைவி இயற்கை எய்திய மறுநாளே, திருச்சி சென்று, கிறிஸ்தவ திருமணத்திற்கு விதித்த 144 தடையை மீறி திருமணத்தை நடத்திவைத்தார்.

**28-12-1933**இல் ஈரோட்டில் நடந்த மாநாட்டில் சுயமரியாதை சமதர்ம திட்டம் தீட்டினார். திரு. ஜெயப்பிரகாச நாராயணன் பெரியார் வீட்டிற்கு வந்து அங்கேயே ஒருநாள் பெரியாருடன் பேசி மகிழ்ந்து, பெரியாரை எப்படியும் அவர் கட்சிக்கு வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

**30-12-1933**இல் இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும் என்று எழுதியதற்காக சிறைப்பட்டார்.

**29-9-1933**இல் கோவையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், இராஜாஜி, பெரியார் திட்டங்களைக் காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

**1934**இல் கடனுக்குச் சிறைபிடிப்பது சரியில்லை என்று அச்சட்டத்தை எதிர்த்துச் சிறை சென்றார்.

**7-3-1936**இல் 'குடி அரசு' பத்திரிகையில் இந்தி பொது மொழியாக்குவதை எதிர்த்து எழுதினார்.

**1937**இல் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தை முதன்முதலாக எழுப்பினார். காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தி மறியல் செய்யத் தீர்மானித்தார்.

**13-11-1938**இல் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு சென்னையில் நடந்தபோது "பெரியார்" என்ற சிறப்புப் பெயர் பெண்களால் கொடுக்கப்பட்டது. அது முதல் அவரது இயற்பெயர் மறைந்து பெரியார் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

**29-12-1938**இல் நீதிக்கட்சியின் தலைமைப் பொறுப்பு அவர் சிறையிலுள்ளபோதே அவரிடம் வந்தது.

**8-1-1940**இல் பம்பாயில் ஜின்னா, அம்பேத்கர் ஆகியோரைச் சந்தித்து நாட்டுப் பிரிவினை குறித்தும் சமுதாய மத இயல் குறித்தும் தம் கருத்துகளை விளக்கினார்.

**1941**ஆம் ஆண்டில் இரயில்வே நிலையங்களில் சிற்றுண்டிச் சாலைகளில், இவ்விடம் பிராமணருக்கு – இவ்விடம் இதரர்களுக்கு என்று எழுதிவைத்தனர். "இது மிகவும் கொடுமையானது, இதை உடனடியாக நீக்கவேண்டும், இல்லையானால் நானே அதை நீக்குவேன்" என்று இரயில்வே நிர்வாகத்திற்குக் கடிதம் எழுதினார். இதிலுள்ள நியாயத்தை உணர்ந்த இரயில்வே நிர்வாகம் 20-3-1941இல் இந்த வேறுபாட்டை ஒழித்தது.

**1942**ஆம் ஆண்டில் 'குடி அரசு' இதழ் இல்லாத காரணத்தால் அங்கிருந்த எழுத்துகள் – பெட்டிகள் – அலமாரி இவைகளை அண்ணாவிடம் பெரியார் கொடுத்து நூறு ரூபாய் நன்கொடையும் உதவி, 1942 மார்ச் 8ஆம் நாள் "திராவிட நாடு" இதழ் காஞ்சியில் தொடங்க வழிசெய்தார்.

**1942**இல் மாணவராக இருந்து துடிப்புமிக்க இளைஞரான கலைஞர் காலணா விலையில் "முரசொலி" என்ற கையெழுத்து ஏட்டினை ஆகஸ்ட் 10ஆம் தேதி தொடங்கினார். பெரியாரின் கருத்துகளைத் துடிப்புடன் வெளியிட்டார்.

**16-10-1943**இல் 'குடி அரசு' இதழ் மீண்டும் தொடங்கப்பட்டது.

**27-8-1944**இல் சேலத்தில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டில் தலைமை தாங்கி நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றினார்.

**1945** ஆகஸ்ட் 29ஆம் நாள் குடியரசு இதழில் கருப்புச் சட்டைப் படை அமைப்பை உருவாக்கினார். கருப்புச் சட்டைப் படையில் முதன்முதலாகத் தன் பெயரை பதிவு செய்து கொண்டவர் யார் தெரியுமா? நம்முடைய கலைஞர்தான்.

**11-5-1946**இல் மதுரையில் கருப்புச் சட்டைப்படை மாநாடு நடந்தபோது, மாற்றார்கள் பந்தலுக்குத் தீவைத்தனர். உணர்ச்சிவயப்பட்ட தன் தோழர்களை அமைதிப்படுத்தி பல உயிர்ச்சேதங்களைத் தடுத்து தான் ஒப்பற்ற தலைவர் என்பதை நிலைநாட்டினார்.

**1947**இல் ஆகஸ்ட் 15ஆம் நாள் அந்நாள் நமக்கு துக்க நாள் என்று கூறி துக்க நாளாகக் கொண்டாடச் செய்தார்.

**1948**இல் மே மாதம், 8,9 தேதிகளில் மாபெரும் திராவிடர் கழக மாநாடு தூத்துக்குடியில் நடந்தது.

**17-7-1948** கல்வியமைச்சர் அவினாசிலிங்கனார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்க ஏற்பாடு செய்தார். அதை எதிர்த்து, நாட்டில் போர்க்குரல் எழும்பச் செய்து அத்திட்டத்தை உடைத்தெறிந்தார்.

**9-7-1949**இல் திருமதி மணியம்மையார் அவர்களைத் திருமணம் செய்து, இயக்கத்திற்கு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார்.

**1950** ஜனவரி 26ஆம் நாள் துக்க நாளாகக் கொண்டாடும்படி அறிக்கையிட்டார்.

**1951**இல் வகுப்புரிமைக்காக கிளர்ச்சி நடத்தி இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தச் செய்தார்.



**1952**இல் ஆகஸ்ட் 1ஆம் தேதி இரயில் நிலையங்களில் இந்தி எழுத்துகளை அழிக்கும்படி அறிக்கை விடுத்தார்.

**1954**இல் நவம்பர் மாதம் உலக புத்தர் மாநாட்டில் கலந்துகொள்ள பர்மா சென்றார். இராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தை ஒழிக்க மாநாடு கூட்டினார்.

**1955**இல் காமராசர் ஆட்சி உண்மையான தமிழர் ஆட்சி. ஆகவே குடியாத்தம் தேர்தலில் காமராசரை ஆதரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி பிரச்சாரமும் செய்தார். ஆகஸ்ட் மாதம் இந்தித் திணிப்பை எதிர்த்து அரசாங்கக் கொடி கொளுத்தும் போராட்ட அறிவிப்பை வெளியிட்டார்.

**4-11-1956**இல் திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு.மலையப்பன், I.A.S., கலெக்டர் தமிழர் என்ற காரணத்தால் இரு நீதிபதிகள் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு எழுதியதற்காக கண்டித்துப் பேசினார். அப்போது பெரியார் தந்த வாக்குமூலம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது.

**18-1-1957**இல் திருச்சியில் திரு. வினோபாவே–பெரியார் சந்திப்பு நிகழ்ந்தது.

**3-11-1957**இல் தஞ்சையில் சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

**17-1-1961**இல் தமிழர் தலைவர் என்ற நூலை எழுதியவரும், விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவருமான சாமி சிதம்பரனார் இயற்கை எய்தினார்.

**8-12-1973**இல் பெரியார் அவர்கள் இறுதியாகக் கூட்டிய 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு' சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது. இதில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**19-12-1973**இல் சென்னையில் தியாகராய நகரில் தந்தை பெரியார் தன் வாழ்நாளின் இறுதிச் சொற்பொழிவாற்றினார். தன் வாழ்வில் செய்த செயல்கள் – நாம் இனிமேல் செய்ய வேண்டியவைகள் இவைகளைப் பட்டியலிட்டுக் காட்டி பல மணி நேரம் தன் நோயைப் பற்றியும் சிறிதும் கவலைப்படாது சொற்பொழிவாற்றினார். அதுவே அவர் ஆற்றிய மரணச் சாசனமாக அமைந்துவிட்டது.

**24-12-1973** காலை 7-22 மணிக்கு மானிடச் சிற்பி – தமிழர் தலைவர் – பகுத்தறிவுப் பகலவன் – தன்மானத்தின் ஊற்று – சுயமரியாதைச் சிங்கம் – அரிமாநோக்கினன் – அகிலத்திற்கோர் எடுத்துக்காட்டு – ஆன்றலித்தடங்கிய சான்றோன் நம்மையெல்லாம் துயரக் கடலில் தள்ளிவிட்டு, ஓடி ஆடி உழைத்தது போதும் இனி சற்று கண்ணுறங்குவோம் என்று கண் மூடிவிட்டார். அதே நேரத்தில் தமிழர்களின் கண்களைத் திறந்துவிட்டார்.

அவரது அறிவுரைகளில் சிலவற்றையேனும் நாம் கடைப்பிடித்தால் நாம் தலைநிமிர்ந்து நடக்கலாம். எஞ்சிய நம் வாழ்நாளில் அவரது உரைகளை நாம், நாட்டில் பரப்புவோம்.

நம்மால் இது இயலுமா? என்று கேட்காதீர்கள். மனிதன் மனம் வைத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை. இமயத்தைக் கூட நகர்த்தி வைக்கலாம். முயன்றால் முடியாததும் உளவோ! ★

## திருவருள் கல்லூரிக்கு அரசு நிதியுதவி

*நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரிக்குத் தமிழக அரசு ரூ.15 இலட்சம் நிதியுதவி வழங்குகிறது.*

*ந.மு.வேங்கடசாமி நாட்டார் தலைசிறந்த தமிழறிஞர் ஆவார். இவர் பல்வேறு நூல்களுக்கு உரை எழுதியுள்ளதுடன் பல நூல்களையும் எழுதித் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியவர். அனைவரும் கல்வி கற்க வேண்டும் எனும் நோக்கில் தஞ்சைக்கு அருகில் "திருவருள் கல்லூரி" எனும் பெயரில் கல்லூரி ஒன்றினை நிறுவ, 1921-ஆம் ஆண்டிலேயே பெருமுயற்சி செய்த இவர் 1944-இல் இயற்கை எய்தினார். இவரது கனவு 1992-இல் நனவாகியுள்ளது. 14.10.92-இல் தஞ்சையில் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி தொடங்கப்பட்டுக் கடந்த எட்டு ஆண்டுகளாகச் சிறப்புடன் தனித் தமிழ்க் கல்லூரி நடைபெற்று வருகிறது.*

*நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்விப் பணியும், தமிழ்ப் பணியும் ஆற்றிவரும் இக்கல்லூரிக்குக் கட்டட நிதியுதவியாகத் தமிழ் வளர்ச்சித் துறையின் வாயிலாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும் என தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார். ரூ.15 இலட்சத்திற்கான வங்கி வரைவோலையை 30.8.2000 அன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள் முன்னிலையில் கல்லூரி முதல்வர் பி.விருத்தாசலம் அவர்களிடம் நேரில் வழங்கினார்.* ★

# எருது கட்டு

□ பா.செயப்பிரகாசம்

கழுமரம் செய்வது, உமையம்மன் கோயிலுக்கு முன்னால் கழுமரம் நாட்டு, சேவலைக் குத்தி வைப்பது நாடாக்கமார் செய்தார்கள்.

கோயிலுக்கு இடது பக்கவாட்டில் பெரிசாய்ப் பரந்த எருது கட்டுக்களம். எருது கட்டு மாடுகளுக்கு ஏற்பாடு செய்தல், பயிற்சி தரப்பட்ட மாடுகள் எங்கே இருக்கிறது என்று பார்த்து, சேகரம் செய்தல், ரெட்டி, நாயுடு, வெள்ளாளர் வேலை. அம்மன் பொங்கலுக்குத் தலைமை கொடுப்பது இவர்கள்.

சூரம்பட்டி முதல் உப்பத்தூர் வரை ஓடைமரம் ஒன்றுவிடாமல் மொழுக்கை, மொழுக்கையாக தோலுரித்த கோழிகள் மாதிரி நின்றன. ஓடைமரப்பட்டையை உரித்து, ஓடைப்பள்ளத்தில் ஊறவைத்து வடம் திரிப்பார்கள். ஓடை நார் பலம் வடக் கயிறுக்குக் கூட வராது. கடையில் வாங்குகிற கயிறுகளுக்குப் பலம் தாங்காது. வடம் திரிப்பது, எடுத்து வருவது, கோயிலுக்கு முன்னால் வைத்து பூசை செய்து ஆசி வாங்குவது மாதிரி வேலைகளைக் குடும்பமார்கள் செய்தார்கள். முன்னேற்றம் கண்டுவிட்ட இந்தக் காலத்திலும் இந்த வழிமுறைதான் இருந்து வருகிறது.

ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தொழில், அம்மனுக்கு அவரவர் செய்கிற காணிக்கை மாதிரி செய்தார்கள்.

சூரம்பட்டி எருதுகட்டுக்கு எட்டுத் திக்கிலி ருந்தும் சனங்கள் கூடினார்கள். இன்றைக்கும் அவ்வளவு பெரிய திடலில் எவ்வளவு கட்டுப்படுத்தினாலும், கூட்டம் மறுகி உள்ளே போகும். எருதுகட்டும் களத்தை ஒட்டியிருந்த வீடுகளில் ஓடுகளைப் பிரித்து, விட்டங்களில் உட்கார்ந்து வேடிக்கைப் பார்த்தார்கள். ஆனால் வீடுகளின் வாசல்கள் சாலையை நோக்கியே பார்த்திருந்தன. மக்கள் கூட்டம் ஏறி வர வர மாடுகள் விளையாடும் களரி வட்டம் சுருங்கிப் போனது.

மாடுகளின் பொச்சுக்குப் பிறத்தாலேயே விரட்டிட்டுப் போக விதியில்லை. மாடு ஏப்பை சாப்பையென்றால் விரட்டலாம். ஓங்கு தாங்கான, சுளிவான மாடுகள் திரும்பிப் பாய்ந்தால், புலிப்பாய்ச்சல்தான். உள்ளே திரும்பிப் பாய்கிற மாடு ஒரு உழப்பு உழப்பிவிட்டுத்தான் போகும். முழுக் கூட்டமும் பின்னால் சாய்ந்து விழுந்து மிதிபடும்.

உமையம்மன் பண்டிகை பார்க்கவும், எருதுகட்டை வேடிக்கை பார்க்கவும், வீர லட்சுமியும், புலேந்திரனும் வந்து சேர்ந்திருந்தார்கள். புலேந்திரன், வீரலட்சுமி இரண்டுபேர் முகங்களும் அங்கே வந்து இறங்கியதும் சட்டென்று ஒடுங்கிவிட்டது.

ஒவ்வொரு முகமாய்ப் பார்த்தார்கள். தெரிந்த எந்த முகத்திற்குள்ளும் இதயம் தெரியவில்லை. இதயங் களில்லா வனாந்தரம் போல் அவர்களுக்குப் பட்டது. தெரிந்த முகங்களில் இறுக் கத்தின் எல்லைகள் இன்னும் விஸ்தீரணமாகியிருந்தன.

எருது கட்டு ஆரம்பிக்க இன்னும் நேரம் இருந்தது. இந்தத் தடவை கட்டுக் கோப்பாக நடக்கும் என்று



பேசிக் கொள்ளப்பட்டது. காக்கி உடை, கம்பு, துப்பாக்கி சகிதம் புது டி.எஸ்.பி. வந்திருக்கிறார் என்றும் சொன்னார்கள்.

ஊர் ஒற்றுமை வலுவாக இருந்தது ''அப்படி தனிப்பட்ட ஆள் தப்பு, தண்டா பண்ணினால் அதுக்கு அவனவன்தான் பொறுப்பு. ஊர் ஏத்துக்கிட்டு வரமாட்டோம்'' என்று முடிவு செய்திருந்தார்கள்.

களரியில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு இடம். இது அவரவர்களாக ஒதுக்கம் செய்து கொள்வது. முந்தின வருஷம் இந்த ஊர் ஆட்கள் நின்ற இடம் என்று மனசுக்குள் தங்கி அது அப்படியே அடுத்தடுத்த வருடத்திற்கும் தொடர்ந்தது.

''அப்படி குறிச்சா வச்சிருக்கு'' வீரலட்சுமிதான் தெரியாமல் கேட்டாள். ஆச்சரியமாய் கூட்டத்தை ஏறெடுத்துப் பார்த்தாள்.

''இல்லே அவங்க அவங்களே குறிச்சிக்கிட்டது தான்'' புலேந்திரன் சொன்னான்.

வீரலட்சுமியின் ஊர் ஆட்கள் இருக்கும் இடம் நோக்கி நடக்கலாமா என்று யோசித்தார்கள். நல்லது, பொல்லது என்றால் அவர்கள் தானே உதவ வேண்டும். எதிரே வந்த ஊர் ஆட்கள் ஒன்றிரண்டு பேரைப் பார்த்ததும் அது தப்பான எண்ணம் என்று தென்பட்டது. அவர்கள் வந்தவேகம், இவர்களைப் பார்த்துவிட்டுச் சென்றவேகம் சரியாகப்படவில்லை. புலேந்திரனும், வீரலட்சுமியும் எருது கட்டு களம் விட்டு நீங்கி விடலாமா என்று நினைத்தார்கள். யாருக்கோ பயந்து ஏன் போவது என்று அவனுடைய காக்கங்கரை ஆட்கள் கூடி இருக்கும் இடத்திற்குப் பேச்சுப் பராக்கில் வந்தது மாதிரி போய் பார்த்து வரலாமா என நினைத்தான். பிறகு எண்ணத்தை மாற்றிக் கொண்டான். எதிர்த்தாற்போல் வந்தவன் அண்ணன் மாதிரி தெரிந்தது. வீரலட்சுமி அண்ணே என்று கூப்பிட நினைத்தாள். அதற்குள் நிறைகுளத்தான் ஒரு முக்கு வாட்டில் திரும்பி கூட்டத்தினுள்ளே மறைந்து போனான். அதே பழைய முகம். பழைய வெறுப்பு கூடுகட்டி பளிச்சிட்டு மின்னி மறைந்தது. எதிரே இருக்கும் ஆள் தெரியாத அளவுக்கு கெட்டியான ரெண்டு வருசப்பகை காலத்தின் காற்றில் ஓடிப்போயிருக்கும் என்று நினைத்தாள். இன்னும் அந்தக் கணப்பு அவர்கள் இதயத்தில் இருந்து மறைந்துவிடவில்லை. இதயத்திலிருந்து கண்களுக்கு அது மாற்றப்பட்டிருந்தது. இப்படித்தான் ஒவ்வொரு முகமும் இருக்குமோ? வீரலட்சுமியின் முகத்தில் பயமாய்ப் படர்ந்தது.

இருட்டு மாதிரியான தோல் - அது புலேந்திரன்,



இளம் அந்திச் சிவப்பு போல் ஒரு நிறம் - வீரலட்சுமி. இரண்டு நிறமும் ஒன்றுக்கொன்று எப்படி பின்னிக் கொண்டன? தோல் தாண்டி, சதைக்குள், ரத்தத்துக்குள், ரத்தநாளத்துக்குள், நடுவாக இருக்கும் சாதி தாண்டி அவர்கள் பின்னிக் கொண்டார்கள். சாதி தாண்டுகிறபோது, நிறத்தையும் தாண்டிவிட்டார்கள்.



பழைய ஆசைகள், தூசு, தும்பு தட்டிவிட்டாலும் துடைபடமாட்டேனென்கிறது. அம்மா, அண்ணன், அழகரக்கா, தாயிச்சித்தி, குருவம்மாள் மதினி, ருக்கு அத்தை எல்லோரையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை வீரலட்சுமிக்கு மனசுக்குள் எதுக்களித்தது. வீரலட்சமிக்குத்தான் இதெல்லாம். அவனுக்கு தனது காக்கங்கரை மக்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசையெல்லாம் ஒரு போதும் இல்லை. ஊரைவிட்டு ஓடிவந்தபோதே, அவர்களையும் ஒதுக்கிவைத்து விட்டிருந்தான்.

ஊரைவிட்டு ஓடிப்போய் இரண்டு வருசமாகி விட்டது. உறவுகள் விரட்ட விரட்ட அவர்கள் ஓடினார்கள். அவர்களாகவே தேடிக்கொண்டதுதான். தாய் வேண்டாம், பிள்ளை வேண்டாம், ஊர் வேண்டாம், உறவு வேண்டாம் என்று ஓடி இரண்டு வருசம் ஓடிவிட்டது.

மேல்குடி, கீழ்குடி என்று எழுதப்படாத இதயங்கள் அவர்களுடையது. ஆசிரியப் பயிற்சிப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில், அந்த வேற்றுமை அரும்பி பயிராவதற்கு முன்னமே பழகிவிட்டார்கள். பக்கத்து ஊர் என்றதால் மண்ணின் அந்நியோன்யம் அதிகமானது. தொடர்பு இறுகுவதற்கு இரண்டு ஆண்டுகள் செலவாகின. பயிற்சி முடியும்வரை காத்திருந்தார்கள்.

ஒரு நடுச்சாமத்தில் திடீரென இரண்டு பேரும் வந்து நிற்கையில் அம்மா பதறிப்போனாள். அரிபூச்சி விழுந்ததுபோல் நெஞ்சுக் குழிக்குள் அரித்தது.

எடுத்தவுடனே ''வெளியே போடா பீத்திங்கறநாயி'' என்றாள்.

அம்மாவை, தன் அருகில் நிற்கிற புலேந்திரனை சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. ஒரே நேரத்தில் இருவரையும் சமமாகப் பாவித்து சமாதானப்படுத்த சாத்தியமில்லை. வீரலட்சுமி புரேந்திரனிடம் மெதுவாக ''நீங்க கொஞ்சம் வெளியே நில்லுங்க. நா அம்மாகிட்ட பேசிட்டு வர்றேன்'' என்றாள். வெளியே சுவர் அருகில் புலேந்திரன் ஒதுங்கினான். அப்படியே பிறகு வெளியேறினான்.

ஒரு நட்டநடுப்பகலில் அம்மா, வீரலட்சுமியின் தலையில் மண்ணெண்ணை டின்னைக் கவிழ்த்தாள். வீரலட்சுமி அதிர்ச்சியாகி சாமி கொண்டாடி போல் உடம்பை, தலையை உதறி வீறிட்டாள். என்ன நடக்கிறது என்று அறியும் முன்பே அம்மா தீக்குச்சியை உரசிப்போட்டாள். உயிருள்ள ஓர் அக்கினிச்சட்டிபோல் அவள் எரிந்து போயிருக்க வேண்டும். வீட்டுக்கு வெளியே தாவிக்குதித்தாள். மரணபயம் தாவி ஓடவைத்தது.

ஊர் முழுக்க தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க தெப்பலாய் மண்ணெண்ணெய் நனைய ஓடினாள்.

இரண்டு வருடம் ஊர் எல்லை தெரியாமல், இரண்டாம் பேருக்குத் தெரியாமல் வாழ்ந்தார்கள். அன்றைக்கே ஒரு கொலை நடந்திருக்க வேண்டும். அம்மாவின் மூர்க்கத்தனத்தை நினைத்தால் இப்போதும் குருத்து எலும்பு சில்லிடுகிறது.

வீரலட்சுமி மேல் புலேந்திரனுக்குச் சின்ன கோபம் நெம்பியது. திருவிழா பார்க்கிற மாதிரி போய் வரலாம்

என்று அவள்தான் சொன்னாள். மேல்சாதி இழவுகளிலிருந்தும், அவனுடைய கீழ்சாதி அசிங்கங்களிலிருந்தும் கண் விழிக்காமல் ஒதுங்கி இருக்க புலேந்திரனுக்குப் பிடித்தது. ''திருவிழா சாக்கில் போய் வரலாம்ன்னு நீதான் சொன்னே'' என்று சன்னமாய்க் கோபித்துக் கொண்டான். அவள் அதற்குப் பதில் எதுவும் சொல்லவில்லை. மண்வாசனை ஊரைப் பார்த்து, கழுத்துப்பிடியாய்த் தள்ளுகிறபோது, யாரால்தான் தப்பிக்க முடியும்.

புலேந்திரனுக்கு; அப்படி ஒரு மன ஆசை கிடையாது. மனசு இறுக்கம் ஜாஸ்தி. தன் சனத்திடமும் ஊரிடமும் அறுத்தெறிந்துவிட்டு ஓடின அந்த நாள் அவன் மனசில் தீயள்ளிப் போட்டிருந்தது. சொந்த சாதி சனங்கள் மீது கொண்ட பற்றும் ஊரின் இனிமையான பாதைகளும் அந்தத் தீயில் சாம்பலாகியிருந்தன.



எந்த ஊர்க்கும்மி என்று தெரியவில்லை. அந்த இடத்திற்கு அவர்கள் நகர்ந்தார்கள். இப்போதெல்லாம் பெண்கள் கும்மி நவீனமாகிவிட்டது. கும்மி, கோலாட்டம் எல்லாம் சினிமா பாணிதான். கும்மி சொல்லிக் கொடுக்கும் வாத்தியார்களுக்குச் சினிமா மெட்டில் பாட்டுக் கட்ட தோதாக இருந்தது. திரும்பின பக்கம் எல்லாம் ஆடியோ கேசட் - போட்டுப் போட்டுப் பார்த்து சுளுவாக வரைந்து தள்ளினார்கள். ஒன்றுபோல உடை, பாவாடை, தாவணி, அச்சாக சினிமா குரூப் டான்ஸ் மாதிரி இருந்தது.

காக்கங்கரை, சூரம்பட்டி, உப்பத்தூர், தெற்கோடை, புளியங்குளம் அஞ்சு ஊர்களுக்கும் தனித்தனியாய் அங்கே கும்மிக் கொட்டு நடந்தது. அங்கங்கே வட்டமாய் கூட்டம். எருதுகட்டு ஆரம்பிக்குமுன் மரத்தடி நிழலில், கும்மி கொட்டினார்கள்.

''அஞ்சு ஊர் கும்மி தட்டுதலும் ஒரேமாதிரி தான், சுவாரஸ்யம் இல்லே''. உன்நடுக்கம் எப்படி இருக்கிறது என்பதை தனக்குத்தானே சரிபார்க்க ஒரு பேச்சுப் பேசினாள்.

''வெளங்கவா செய்யும், ஒன்னப் பார்த்தா ஒன்னப் பார்க்க வேண்டாம்'' புலேந்திரன் பதில் சொல்லியபடி அவளை அடுத்த இடத்திற்குப் கூப்பிட்டான். மனசில் நெம்பும் பயத்தைச் சரிப்படுத்த அவன் எதையோ பேச வேண்டியிருந்தது.

புலேந்திரனுக்குக் கண் பிடரியில் இருந்தது. யாரோ தொடர்ந்து பின் வருகிறார்கள் என்பது தெரிந்தது.

அருவமில்லாமல் கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

நேர்த்திக் கடன், அக்னிச் சட்டி இதுகளுக்கெல்லாம் ஊரிலிருந்து அடித்து வருகிற கொட்டு, குழலுக்கு அம்மன் வாசல் முற்றம்தான் எல்லை. கொட்டுக்காரர்கள், குழல்காரர்களுக்கு உள்ளே அனுமதியில்லை. ஆனால் நேர்த்திக்கடன் செலுத்துவது, அக்கினிச்சட்டி எடுப்பது, பொங்கல் வைப்பது எல்லாம் கோயில் பிரகாரத்துக்குள் மேற்குடியினர் செய்தார்கள்.

பூசாரி காட்டிய தீபத்தட்டு எல்லார் முகத்திலும் ஒளி அடித்தது. அந்த இருவருக்கும் நேரே வருகையில், ''அப்படியே பொசு பொசுங்குது, போலீஸ் இருக்குதேன்னு பார்க்கிறேன்'' என்றான் மல்லையசாமி.

''பொறத்தாலேயே போய் புட்டத்தில் கத்திய சொருகிட்ட என்ன?''

''ஒரே இனமாவா இருக்கு. பாதி இதுவும் பாதி அதுவுமா பெறண்டு போயில்லே நிக்குது''

சந்தேகம் இல்லை. வீரலட்சுமியின் ஊர்க்கார சொந்தங்கள் தான்.

புலேந்திரனும் வீரலட்சுமியும் தீபத்தட்டை கைகள் நீட்டி தொட்டுக் கும்பிட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

''இங்கே இருந்து போயிடலாம்'' வீரலட்சுமி அவன் காதில் படபடத்தாள்.

''ஒழுங்கு மரியாதையா போயிருங்க''. ஒருத்தன் விறைப்பாய் அவர்களை உராய்ந்து தோளுக்க வலது பக்கமாய் எச்சரிக்கை விட்டுவிட்டுப் போனான்.

தென்மூலை இருட்டி வந்தது. மப்பும் மந்தாரமாய் மழை கூடாரமிட்டது. ஒளிந்திருந்த மேகங்கள் ஒன்றுகூடி இனிய சாயந்திரத்தை பயமுறுத்தின.



கூட்டம் மழைக்குச் சிதறி ஓடியது. களரியில் சப்புளா, சளபுளா என்று ஆகிவிட்டது. எருதுகளை விட்டுவிட்டு ஓடும் இளவட்டங்கள், லாரிகள், வேன்களில் உள்ளே ஒதுங்க இடம் தேடும் மனிதர்கள், மரத்தூரில் ஒண்டிக்கிடக்கும் ஆட்கள், பேய் பிடித்த பெண், கோடங்கியின் அடிக்கு பரசி பரசி ஆடுவதுபோல் பெருவாரிக் காற்றால் சுழன்று சுழன்று ஆடும் மரங்கள்.

''என்ன அண்ணங்காரரே சௌக்கியமா?'' கம்மாய்க் கரை மேட்டில் இருந்த ஒரு மரத்தூரில் ஒண்டியவனைப் பார்த்து கோலத்திதான் கேட்டாள். புலேந்திரன் விழி அகலப் பார்த்தான். அவனுக்கு முதலில் நெகால் பிடிபடவில்லை. 'அரிச்சலாய் ஞாபகம் வந்தது. அதற்குள் வீரலட்சுமியை அடையாளம் கண்டு கொண்டவளாய் ''மதினி நல்லா இருக்கீங்களா?'' என்றாள்.

வீரலட்சுமியை விட கோலத்தி பத்து வயசு கூடியவள். சின்னவளானாலும் உறவின் மரியாதையில் அண்ணிதான்.

வீரலட்சுமியின் கையைப் பிடித்து மழைநீர் படாமல் மரத்துக்கு அடியில் ஒதுக்கினாள்.

கோலத்தியின் மேலும், பக்கத்திலிருந்த சின்னப் பொண்ணு மேலும் மரத்து நீர் சொட்டுப் போட்டது. ''நீங்க நனையறீங்களே'' என்று கூசி ஒதுங்கிய வீரலட்சுமியை ''ஆமா மழையிலே நனைஞ்சா உடம்பு இத்தா போகுது. மழையில நனையனும், வெயில்ல காயணும், இல்லேன்னா பொழப்பு ஓடாதே'' சின்னப் பொண்ணு பேசினாள். கோலத்தி கண்ணோரம் சிரிப்பைத் தேக்கி ''ஒரேயடியா தாளிக்காதேடி. இப்பவே கமறலடிக்கு என்று மடக்கினாள். இரைச்சல் அடிக்கும் மழையையும் வெடவெடக்கும் குளிரையும் தாண்டி அங்கே கதகதப்பாகியது.

விளாசி அடித்த மழை நின்றது. மழைத் தண்ணி, சகதியில் கால் வைக்கக் கூசியது. கோலத்தி வீரலட்சுமியையும் புலேந்திரனையும் பேருந்து நிறுத்தத்திற்கு நடத்திக் கூட்டிப் போனாள்.

''இத்தனை வருசம் கண்காணாம இருந்திட்டீங்களே அப்பு'' என்றாள் பாசத்துடன் புலேந்திரனிடம்.

அவளுக்கு அவன் பேரில் தான் வருத்தம். அதெல்லாம் அவனுக்குப் புலப்படவில்லை.

''அந்த மானைக்கி ஓடிப்போனவங்க, நம்ம வீட்டில வந்து நொழைஞ்சிருக்கலாமில்லேப்பு''

''அதானே காக்கங்கரையிலே இல்லாத சனங்களா? என்னமோ அவங்களுக்குத் தோணலே'' என்றாள் சின்னப் பொண்ணு.

ஊர் வந்து சேர்ந்ததும் சனங்கள் அதிசயித்துப் போனார்கள்.

''அடி ஆத்தே, யாரிது? வேத்து ஆளாத் தெரியுது''

''ஆமா, வேத்து ஆளத்தான் கூட்டி வந்திருக்கிறோம்'' கோலத்தி சொன்னாள். முகத்தில் பெருமை பிடிபடவில்லை''. ''நீங்க பாக்கறதுக்குத் தான்'' என்றாள்.

சின்னக் குடிசை, செம்மண் தேரியை ஒட்டி பனைவிடலிகளுக்கிடையில், ஓலை போட்டு வேய்ந்திருந்தது. செதில்கள் போல், காற்றுக்குத் தூக்கிய ஓலை இடுக்கில் நிலாக்கதிர் பாய்ந்தது.

சுற்றிக் கூடி உட்கார்ந்திருந்த யாருக்கும் புழுங்கவில்லை. புலேந்திரனுக்கும் வீரலட்சுமிக்கும் சிறு சிறு வேர்வைப் பொடிகள்.

''அப்படியும் தன் சனங்க இருக்கிறபோது, என்ன பயம்''

வீரலட்சுமியின் கழுத்தில் அரும்பிய வியர்வையை புடவை நுனியில் ஒத்தித் துடைத்தாள். ஓரக்கண்ணால் புலேந்திரனை இடித்தாள் சின்னப்பொண்ணு.

''ஆமாம், நானுந்தான் கேக்கறேன்'' உள் நுழைந்தபடியே பின்புறம் தாவணியை உட்கார வசதியாய் எடுத்து விட்டுக் கொண்டே நல்லகண்ணு கேட்டாள்''. ''இப்படித்தான் வர்றதா? வர்றோம், போறோம்னு முன்ன பின்ன சொல்லிக்காம வந்தா என்ன செய்றது? கறிச்சட்டியை கழுவிக் கவிழ்த்து வச்சாச்சி'' அவள் சண்டை போட வந்திருக்கிறாள்.

''நீ சண்டை போடுறதுக்கின்றே வந்திருக்கே. பாத்தாத் தெரியுது. நீ என்ன இருந்தாலும் போடு ஆத்தா. தம்பி சாப்பிடும்''.

கோயிலில் நடந்த கேவலத்தைத் தன் சனங்களிடம் புலேந்திரன் சொல்லியிருக்க வேண்டும்.

அவன் சொல்லவில்லை.

– ''இரவு மழை'' நூலிலிருந்து
வெளியீடு : புதுமலர் படைப்பகம்,
கோவை. ●

# அண்ணா ஒரு காவியம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"**

*— குறள்*

ஒரு எழுத்து தனித்து வந்தோ! பல எழுத்துகள் தொடர்ந்து வந்தோ! ஒரு பொருளைக் குறிக்குமானால் அதற்குச் சொல் என்று பேர். மேலும் தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றார்.

இதை அளவுகோலாக வைத்துப் பார்த்தால் 'அ' என்பது உயிரெழுத்து 'ண்' என்பது மெய்யெழுத்து 'ணா' என்பது உயிர் மெய்யெழுத்து. இந்த மூன்று எழுத்துக்களாலாகிய 'அண்ணா' என்ற சொல்லிற்கு என்ன பொருள்?

ஓரளவு சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தமிழ் மொழியில் அமைந்த ஒவ்வொரு சொல்லிற்கும் என்ன பொருள் உள்ளதோ அவ்வளவு பொருளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, அடக்கமாக ஆனால் விண்ணிலும் பரந்துபட்டதாக அமைந்த சொல் 'அண்ணா' என்பது.

அண்ணா என்ற சொல்லிலேயே தமிழ் எழுத்துகளின் மூவகையான உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து மூன்றும் அமைந்துவிட்டது. ஆயுத எழுத்து என்று ஒன்று இருக்கிறதே! என்னவாயிற்று என்று கேட்கலாம்.

யாருடைய மனதும் புண்படாது பேசும் இயல்புடையவர் அண்ணா. ஆகவே அவர் என்றுமே ஆயுத எழுத்தைப் பயன்படுத்தியதேயில்லை.

ஆகவே; அண்ணா என்றாலே தமிழ் என்று பேர். பாவேந்தர் கூறியதைப் போல் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்பதையடுத்து அண்ணாவிற்கும் தமிழ் என்று பேர் என்ற தொடரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். சங்க காலத்திற்குப் பிறகு தமிழுக்குப் புதிய மறுமலர்ச்சியைத் தந்தவர் அண்ணா. தமிழால் அண்ணா உயர்வு பெற்றாரா? அண்ணாவால் தமிழ் உயர்வு பெற்றதா? என்று பிரித்துச் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு அவர் வாழ்வும் வாக்கும் இணைந்துவிட்டது.

தமிழ்நாட்டையே மாற்றிக்காட்டிய இருளை ஓட்டிய இப்பெருமகனுக்கு அடைமொழியோ! உவமைச் சொற்களோ! ஒன்றும் இல்லையா! என்று கேட்கலாம்.

□ புலவர் கு. அய்யாறன்

**யாருக்கு உவமையும் அடைமொழியும்**

நாம் கோவிலுக்குச் செல்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது வெறும் கோவில் என்று சொல்வது இல்லை. திருக்கோவில் என்று அடைமொழி கொடுக்கிறோம், திருக்கோபுரம் என்கிறோம், திருக்கொடி மரம் என்கிறோம், திருநந்தி என்கிறோம், திருப்பலிபீடம் என்கிறோம், திருச்சுற்று மாளிகை என்கிறோம். திருநந்தவனம் என்கிறோம். திருமணி என்கிறோம். இவ்வாறு, கோவிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் அடைமொழி கொடுக்கிறோம். ஆனால் மூலஸ்தானத்தைக் குறிக்கும்போது எந்த அடைமொழியையும் நாம் கொடுப்பதில்லை. மூலஸ்தானம் அல்லது கருவறை என்று மட்டுமே அழைக்கிறோம். ஏனென்றால் அந்த இடத்திற்கு உவமை சொல்லவோ! அடைமொழி கொடுக்கவோ! தமிழில் சொற்கள் இல்லை. தேடினாலும் கிடைப்பதில்லை.



மிகச்சிறந்த ஒப்புயர்வற்ற பொருளுக்கு அடைமொழி, உவமை கூறுதல் மரபன்று.

ஆகவேதான் இளங்கோவடிகள் சிறந்த பொருளான மூன்று பொருளுக்கு எவ்விதமான அடைமொழியும் உவமையும் தராது,

*"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்"*
*என்றும்;*
*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்றும்;*
*பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் என்றும்*

கூறிச் சென்றார்.

ஆகவே அண்ணாவிற்கும் அடைமொழி தேவையில்லை. அண்ணா என்ற மூன்றெழுத்து போதும். தமிழர் மூச்சு அண்ணா. அண்ணா தமிழர் மூச்சு என்பதை மட்டும் நம்முடைய உள்ளத்தின் விருப்பத்திற்கு மட்டும் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம்.

**பிறப்பு வளர்ப்பு**

*சோழநாடு சோறுடைத்து*
*பாண்டிய நாடு முத்துடைத்து*
*சேர நாடு வேழமுடைத்து*

அதுபோல் தொண்டைநாடு சான்றோர் உடைத்து என்று கூறுவார்கள். பிறவிச் சான்றோராகிய அண்ணா பிறந்ததும் தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சிதான்.

காஞ்சி புராண வாயிலாகப் பார்த்தாலும், வரலாற்று வாயிலாகப் பார்த்தாலும் சொல்லொண்ணாச் சிறப்பு வாய்ந்தது.

பாராண்ட மன்னர்களும் மண்டலாதிபதிகளும் காஞ்சியின் பெருமையை உலகறியச் செய்தனர்.

கல்விப் பணியைச் செய்வதற்காகவே தன் செல்வம் அனைத்தும் ஈந்த பச்சையப்பர் பிறந்த ஊர் காஞ்சி.

சிறப்பான ஆடையில்லா மனிதனை அரை மனிதன் என்பார்கள். அத்தகையோருக்கு பட்டாலும் பருத்தியாலும் ஆடைநெய்து கொடுக்கும் ஊர் காஞ்சி. காஞ்சிப் பட்டென்றால் காசினியில் அறியாதார் யார்?

திருக்குறளுக்கு உரையெழுதிய பத்து பேர் பழைய உரையாசிரியர்கள். அவைகளில் சிறந்த உரை பரிமேலழகர் உரை என்று தமிழறிஞர்கள் கூறுவர். உரையாசிரியர் பரிமேலழகர், பிறந்த ஊர் காஞ்சி.

இங்குள்ள கோவிந்தராஜப்பெருமாள் கோவிலுள்ள பிரகாரத்தில் அமர்ந்துதான் உரையெழுதினார். அதற்குப்பின் கணக்கற்றோர் உரையெழுதியிருக்கின்றனர். இருந்தும், பரிமேலழகர் புகழ் இன்றும் பேசப்படுகிறது.

சீனத்திலிருந்து வந்த யுவான் சுவாங் காஞ்சிக்கு வந்து காஞ்சியின் சிறப்புகளைக் குறிப்பெடுத்துச் சென்றிருக்கிறார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காஞ்சியில்தான் நம்முடைய அண்ணாவும் பிறந்தார்–தவழ்ந்தார்–வளர்ந்தார்–கல்வி கற்றார்.

**பாவேந்தரும் அய்யன் திருவள்ளுவரும்**

பாவேந்தர்,

***தலைசிறந்த பேச்சுவல்லோன் தமிழ்வீரன்***
***தமர் என்றும் தான் என்றும் நினைப்பதன்றித்***
***தமிழ்நாட்டின் நலத்திற்கே உயிர் உடல்கள்***
***அமைக என இரவு பகல் உழைக்கும் மேலோன்***

என்று கூறினார்.

அய்யன் திருவள்ளுவரிலிருந்து மூன்று குறட்பாக்களை எடுத்தக் கொள்வோம். பெரும்பாலான குறட்பாக்கள் அண்ணாவின் வாழ்வை விளக்குபவை. இருப்பினும் இம்மூன்று குறட்பாக்கள் அண்ணாவிற்கு என்றே அமைந்ததுபோல் உள்ளன. பாவேந்தர் கவிதைக்கும் இம்மூன்று குறட்பாக்களுக்கும் சற்று விரிவான முறையில் ஓரளவு நம்முடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில் விளக்கம் கண்டுவிட்டால் அண்ணாவைப் பற்றி நூற்றில் ஒரு பகுதியை நாம் அறிந்துகொண்டவர்கள் ஆவோம்.

*"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்"*

*"சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து"*

*"சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

– என்ற குறட்பாக்களுக்கு இலக்கிய இலக்கணமாகத் திகழ்ந்தவர் அண்ணா.

**மந்திரச்சொல்**

அண்ணா என்ற சொல் இருக்கிறதே! நான் அந்தச்



சொல்லை மட்டும்தான் சொல்கிறேன். அந்தச் சொல்லிற்குரிய உருவத்தைக்கூட அல்ல – அந்த ஒரு சொல்லே நம்மவரையும் தமிழ்நாட்டவரையும் வாழவைக்கும் மந்திரச் சொல்லாகும்.

மாணிக்கவாசகர் சிவனைப்பாட வந்தபோது திருவாசகத்தில் முதன்முதலாகக் குறிக்கும்போது நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க! இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! என்று கூறினார்.

"நமச்சிவாய" என்ற சொல்லைச் சொன்னாலே போதும் – அப்பெயரே அனைவரையும் வாழவைக்கும் என்று கூறி அதன்பிறகுதான் அப்பெயருக்குரியவரான நாதன்தாள் வாழ்க என்று கூறிச்சென்றார்.

மாணிக்கவாசகருடைய கருத்தை நாம் அப்படியே நம்முடைய வாழ்க்கைக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

மாசறு பொன்னாகவும், வலம்புரி முத்தாகவும், மின்னும் வைரமாகவும் மிளிர்ந்த நம் அண்ணா வங்கக் கடலோரம் நீங்கா துயில் கொண்டதேனோ!

**வாழவைத்துக் கொண்டிருப்பது எது?**

இந்நிலையில் நம்மை வாழவைத்துக் கொண்டிருப்பது எது? நம்மை தலைநிமிர்ந்து நடக்கவைத்தது எது? தமிழகத்தை இன்றளவும் நடத்திக் கொண்டு சென்று கொண்டிருப்பது எது?

ஆம்! அவரில்லாவிட்டாலும், அவர் பெயர் ஒன்றே நம்மை வாழவைக்கிறது.

அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற கலைஞர், அந்த இதயத்தை பழுதின்றி பேணி காத்திடும் தாயாக நம்மையெல்லாம் அரவணைத்து வழிநடத்தி வருகிறார்.

இத்தகைய உள்ளத்தைப் பெற்ற அண்ணா நம் நாட்டில் தோன்றி செயற்கரிய செயல்களைச் செய்த தந்தை பெரியாருடன் இணைந்து, அவரை மட்டுமே தலைவராகக் கொண்டு செய்த தொண்டுகள் ஏராளம்!

**திருப்பிய திருப்பூர்**

நம்முடைய அண்ணா கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியர் என்றாலே மாணாக்கரிடையே உள்ள குற்றங்களை நீக்குபவர் என்பதுதானே பொருள். சிறிய எல்லைக் கோட்டிற்குள் நின்று குற்றங்களைப் போக்குவதைவிட பரந்துபட்ட, புரையோடிய அப்போதைய குற்றங்குறைகளைப் போக்குவதில் தன்னுடைய பங்கும் இருக்கவேண்டும் என்று அவருடைய உள்ளத்தின் அடித்தளம் உறுத்தியது.

அண்ணா பள்ளிப் பருவத்திலே பல மேடைகளில் ஏறியவர், மலையருவிபோல் கருத்துகளைக் கொட்டியவர், சொல்லாடலிலே சோர்வு படாதவர். மாணக்கர் பருவத்திலேயே மேடைப்பேச்சிற்கு இலக்கணம் வகுத்தவர்.

இப்படிப்பட்ட ஒருவரைத்தான் அன்றைய நீதிக்கட்சி தன்னுடைய கட்சிப் பிரச்சாரத்திற்காகத் தேடிக் கொண்டிருந்தது. அதன் பொருட்டு பெரியதோர் வலையும் வீசப்பட்டிருந்தது.

இந்நேரத்தில்தான் அண்ணா அவர்கள் திருப்பூரில் பெரியாரின் பேச்சைக் கேட்டார், நிலை கலங்கினார், இனம் தெரியாத பற்றும் பாசமும் பெரியாரிடம் அண்ணாவிற்கு ஏற்பட்டது.

தமிழகத்தின் நற்பேறு அவர்களிருவரும் சந்தித்தனர். அச்சந்திப்பின்போது பெரியார் அண்ணாவிடம் ஒரு கேள்வி கேட்டார். "எம்.ஏ. படித்து முடித்தவிட்டேன் என்கிறாய், மேலும் என்ன செய்யப் போகிறீர்கள்" என்றார்.

"தங்களுடைய கருத்துகளைக் கேட்டபிறகு, எனக்கு ஏதாவது சமுதாயப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது" என்றார்.



இதைக் கேட்டதும் பெரியாருக்கு அதிர்ச்சியே ஏற்பட்டது. பெரியார் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. ஏதாவது வேலைக்குப் போகவேண்டும் என்று அண்ணா சொல்வார் என்று பெரியார் எதிர்பார்த்தார்.

இந்நிகழ்ச்சி அண்ணாவின் வாழ்வை திருப்பி அமைத்தது. அண்ணாவின் வாழ்வை திருப்பியமைத்த காரணத்தால்தான் என்னவோ! அதற்கு திருப்பூர் என்ற பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது.

சாக்ரட்டீஸ் அவர்களுக்கு ஒரு பிளேட்டோவைப் போல் பெரியாருக்கு ஓர் அண்ணா.

இராமகிருஷ்ணருக்கு ஒரு விவேகானந்தரைப்போல், வீறுகொண்ட பெரியாருக்கு ஏறுநடை போட்ட அண்ணா.

அடிமை விலங்கொடிக்க வந்த உத்தமர் காந்தியடிகளுக்கு ரோஜாமலர் நேரு கிடைத்தார். தமிழ்நாட்டின் சாதி–மத விலங்கை உடைக்க பெரியாருக்கு ஓர் அண்ணா.

**ஒரே தலைவர்**

அன்றிலிருந்து தன் வாழ்நாள் முழுவதும் பெரியார் ஒருவரை மட்டுமே தன்னுடைய தலைவராகக் கொண்டு ஒழுகியவர் அண்ணா.

"சில கருத்து வேறுபாடுகளால் தனிக்கழகம் கண்ட போதும், எனக்கு இப்போதும் பெரியார்தான் தலைவர். ஆகவே அந்த இடம் எப்போதும் காலியாகவே இருக்க வேண்டும். காலம் கனியும்போது பெரியாரை அங்கே வீற்றிருக்கச் செய்வேன்" என்று கூறி தன் கழகத்திற்குத் தலைவர் பதவி இல்லாமலேயே பொதுச்செயலாளர் பதவியை உருவாக்கினார்.

இடையில் பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. 1967ஆம் ஆண்டில் தன் கழகம் ஆட்சிக்கு வந்ததும் இந்த ஆட்சியை – வெற்றியை "என் தலைவர் பெரியாருக்குக் காணிக்கையாக்குகிறேன்" என்றுரைத்த மாட்சி ஒன்றே போதும் அண்ணாவின் பேருள்ளத்தைக் காட்ட.

**வரலாற்றுச் சாதனைகள்**

வரலாற்றில் எல்லாச் செயல்களும் நிலைபெற்று விடுவதில்லை. ஆனால் சில செயல்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சென்றாலும் அவைகள் நீங்குவதில்லை.

நன்றே செய்க–இன்றே செய்க–இன்னே செய்க என்பதற்கேற்ப சில செயல்களைச் செய்து முடித்தார்.

தன் வாழ்நாளெல்லாம் காடுமேடு சுற்றி, கல்லடியும் சொல்லடியும் பட்டு எந்தச் சுயமரியாதைத் திருமணத்தைச் செய்து வந்தாரோ! அந்தச் சுயமரியாதைத் திருமணத்தை சட்டபூர்வமாகச் செய்தார்.

இதை பெரியார் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில்தான் முதன்முதலாக வெளியிட்டார். "நாளை முதற்கொண்டு சட்டபூர்வமான சுயமரியாதைத் திருமணம் அமலுக்கு வருகிறது. ஆகவே இத்தகைய திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும். ஆகவே எதிர்காலத்தில் அனைவரும் இத்திருமணத்தை தடையின்றி நடத்தலாம்" என்று அண்ணா கூறியவுடன், பெரியார் இடைமறித்து, "அண்ணா தற்போது சொன்ன வார்த்தைகளை நான் சாதாரண வார்த்தைகளாக எண்ணவில்லை. அதை நான் வேதவாக்காகவே மதிக்கிறேன்" என்று புகழ்ந்தார்.

இதைக் கேட்டதும் அண்ணா பெரியாரிடமிருந்து வந்த இந்த வார்த்தைகளுக்கு நாம் சொந்தக்காரனாகிவிட்டால் பெரியாரைவிட தான் மேலானவனாக ஆகிவிடுவதற்கேற்ற சூழ்நிலை எங்கே அமைந்துவிடுமோ? என்று அஞ்சி உடனே, "இது வேதவாக்கு அன்று – இந்தச் சிறியவன் உங்கள் காலடியில் செலுத்துகின்ற சிறுகாணிக்கை" என்றார். இதன் மூலம் வேதவாக்கைவிட பெரியாரின் மலரடி பெரிதென நிரூபித்தார். இதன் மூலம் எப்பொழுதும் பெரியார்தான் தன் தலைவர், நான் என்றுமே அவரின் சீடர்தான் என்பதை உலகிற்குத் தெரிவித்து விட்டார்.

அடுத்து மொழிப் பிரச்சினையில் தொடர்பு மொழியில், ஆங்கிலமும், மாநிலமொழியாக எதிலும் தமிழும் ஆகிய இருமொழிக் கொள்கையை சட்டமன்றத்தில் உருவாக்கினார்.

அதற்கு அச்சாரமாக "தமிழக அரசு தலைமைச் செயலகம்" என்ற ஒளியுமிழும் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார். சத்திய மேவ ஜெயதே என்பதை "வாய்மையே வெல்லும்" என்றாக்கினார்.

சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர் சட்டப் பேரவையில் நிறைவேறச் செய்தார்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்டும் விழா நடைபெறாமல் இருந்தது. விழாவிற்கு நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அண்ணா அப்பொழுதுதான் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வந்திருந்தார். எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாது – பேசக்கூடாது – உணர்ச்சி வயப்படக்கூடாது என்றெல்லாம் கூறியிருந்தனர்.

அதையும் மீறி அண்ணா அவ்விழாவிற்கு வந்தார். இயலாமல் இருந்த அண்ணா அவர்கள் மெல்ல எழுந்து "தலைவர் அவர்களே! என்ற இரண்டு சொற்களைத்தான் கூறினார். அலைகடலென திரண்டிருந்த மக்கள் கரவொலி எழுப்பினர். ஒருமுறை அன்று – நினைத்து நினைத்து மீண்டும் மீண்டும் சில நிமிடங்கள் கரவொலி கடலின் அலைகளோடு போட்டியிட்டன. சிறிதுநேரத்தில் அமைதி தவழ்ந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு அண்ணா பேசினார்.

"இந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டாம்,

உடல்நலம் பாதிக்கும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளாமல் இங்கே வந்திருக்கிறேன். எந்த ஒரு இலட்சியத்திற்காக இவ்வளவு காலம் போராடி வந்தோமோ அந்த இலட்சியம் நிறைவேறும் இனிய விழாவில் கலந்து கொண்டால் உயிருக்கு ஆபத்து வரும் என்றால், இந்த உயிர் இருந்தால் என்ன? போனால் என்ன? என்று அவர்களிடம் கூறிவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன்" என்று கூறி அனைவரின் கண்களையும் குளமாக்கிய அவ்விழாவில் நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்து 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்டினார்.

இம்மூன்று செயல்களும் வரலாற்றில் வைர மணிகளால் பொறிக்கப்பட்டவை.

முதல்வராகப் பதவியேற்றவுடன் அரசு ஊழியர்களிடையே முதன்முதலாகப் பேசியபோது கூறிய சொற்கள் கல்வெட்டில் பொறிக்கப்படக்கூடியது. "நான் தற்போது உங்களிடம் வந்திருப்பது, தமிழ்நாடு முதலமைச்சராக இல்லை, உங்களால் தான் நான் – உங்களுக்காகத்தான் நான் என்பதைவிட உங்களில் ஒருவன் நான் என்பதைத்தான் நான் மிகவும் மதிக்கிறேன்" என்று கூறினார்.

ஆட்சிப் பொறுப்பையேற்ற சிலநாட்களில் மதுரையில் மாபெரும் வரவேற்பு அண்ணாவிற்கு அளிக்கப்பட்டது. அப்போது அவர் குறிப்பிட்டார்,

"இப்போது நான் அமைச்சராகி விட்டபிறகு எந்தெந்தக் கரங்களோ! எனக்கு மாலையிடுகின்றன. புதிய கரங்கள் என்பதற்காக அவைகளைப் பகைத்துக் கொள்ள மாட்டேன். ஏனென்றால் நான் அனைவருக்கும் உரியவன். அனைவரது நேசக் கரங்களையும் விரும்புகிறவன். எனக்குள்ள சுபாவத்திலேயே பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும் என்று உளமார நினைப்பவன் என்று கூறினார்.

இந்த இரு பேச்சுகளுமே அண்ணாவின் வாழ்வையே சுருக்கமான முறையில் நமக்குத் தெரிவிக்கும் நிகழ்ச்சியாக அமைந்துவிட்டன.

முழுமைய[illegible] மனிதராக – அடக்கமே அண்ணாவாக [illegible]வதற்கு அண்ணா பல வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்தார். அவைகளை நிரல்படுத்தி வைத்துக் கொண்டார். அவைகளிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து அதை நிறைவேற்றத் தொடங்கினார்.

முதலில் தாழ்ந்த தமிழகத்தை மீண்டும் பழைய தமிழகமாக்க மக்கள் மனதில் படிந்திருக்கும் மூடநம்பிக்கைகள் – தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறான கருத்துகள் – இவை அகல வேண்டும். பண்டைய உயர்ந்த கருத்துகள் குடியேறவேண்டும் என்று கருதினார்.





இதற்கு முதலில் அறிவுப்பிரச்சாரம் வேண்டும் என்று முடிவு கட்டினார்.

அக்காலத்தில் எல்லாருடைய அறிவின் பெரும்பகுதி சமயத்துறையிலுள்ள பழக்கவழக்கங்களிலேயே அமைந்திருந்தது. அதிலிருந்து அவர்களை மீட்டுவிட்டால், மீட்கப்பட்ட அறிவை சமுதாயப் பணிகளிலும் தூய நற்றமிழ் தொண்டிலும் செலுத்தி விடலாம் என்று திட்டம் இட்டுக்கொண்டார்.

அதன் தொடக்கமே அண்ணா அவர்கள் சமயத்துறையில் முதலில் நுழைந்தார். இதற்கு, தந்தை பெரியாரின் சமயக் கொள்கைகளை அடித்தளமாக வைத்துக்கொண்டு இந்தப் பணியை மேற்கொண்டார். அதற்கு அண்ணாவிடம் இயல்பாகவே அமைந்த அறிவும் ஆற்றலும் துணை செய்தன.

அண்ணாவின் சுழன்றடிக்கும் பேச்சையும், எழுத்தையும் யாராலும் நிறுத்த முடியவில்லை.

அண்ணா என்ற பெயரைக் கேட்டதும் பழமைவாதிகளும், மதகுருமார்களும், அமைச்சர்களும் மிரண்டு ஓடினர்.

சமயத்தைப் பொறுத்தவரை அண்ணாவின் உள்ளத்தின் அடித்தளத்தில் ஒரு கருத்து புதை கொண்டிருந்தது. அதுதான் திருமூலரின் திருவாக்கான "ஒன்றே குலம் – ஒருவனே தேவன்" என்பதாகும்.

இதை மக்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய உண்மையான உள்ளம், இதை நிலைநிறுத்துவதற்குப் படிப்படியாக இரண்டொரு அதிர்ச்சி வைத்தியம் செய்ய முற்பட்டார்.

இதற்காக பெரியாரின் சமயத்தைப் பற்றிய வன்மையான கருத்துகளை (மூடப்பழக்கங்களை) அழுத்தமாகவோ, நேரிடையாகவோ, தாக்கிப் பேசியும் எழுதியும் வந்தார்.

ஆண்டுகள் செல்லச் செல்ல நேரிடைத் தாக்குதலை விட்டுவிட்டு, மக்களே ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நாகரிகமாக மூடப்பழக்கங்களை எடுத்துரைத்தார்.

இதனால் மக்கள் மூடப்பழக்கங்களிலிருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறுகிறோம் என்பதை அவர்கள் அறியாமலேயே மாறினார்கள்.

இதுவே அண்ணாவிற்குக் கிடைத்த முதல் வெற்றி.

புராணம், இதிகாசம், மதம் இவைகளில் மக்கள் தங்களை அடிமையாக்கிக் கொள்வதற்குக் காரணங்களாக இருந்தவை இசையும் நாடகமும் என்பதை உணர்ந்தார்.

முள்ளை முள்ளால் எடுப்பதுபோல், புதுமைக் கருத்தையும் சீர்திருத்தக் கருத்தையும், நாடகம், இசை மூலம் பரப்ப ஆவன செய்தார்.

அதற்காகவே சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், ஓர் இரவு, வேலைக்காரி, சொர்க்கவாசல் இவைகளை எழுதினார்.

சினிமா, நாடகம் என்றாலே, காததூரம் செல்கிற பெரியார் அவர்களேகூட சந்திரமோகன், நீதி தேவன் மயக்கம் ஆகிய நாடகங்களைக் கண்டு, "நான் இருபது கூட்டங்களில் செய்யும் பிரச்சாரத்தை அண்ணா அவர்கள் இரண்டுமணி, இரண்டரை மணி நேரத்தில் செய்து முடித்து விடுகிறார்" என்ற புகழாரத்தைச் சூட்டினார்.

அண்ணா அவர்கள் அடுத்து மற்றோர் உத்தியைக் கையாள ஆரம்பித்தார். மாற்றார்களையும் தன்பால் இழுத்து இனிய கருத்துகளை புகுத்தவேண்டும் என்பதுதானே அண்ணாவின் எண்ணம்.

நாவன்மை படைத்த அண்ணா அவர்கள் மக்களின் மனதிலிருந்த – மண்டியிருந்த பதர்களை நீக்க ஆரம்பித்தார். தமிழில் – கன்னித்தமிழில்–அதன் பொருட்டு தான் பேசும் இன்பத்தமிழில் – மென்தமிழில் – பல வகையான உத்திகளைக் கையாண்டார். அடுக்குமொழிகள் – இரட்டைக்கிளவி – சிலேடை நயம் – உவமைகள் – குட்டிக்கதைகள் – தர்க்கரீதியான வாதங்கள் – புகழுரைகள் – நாகரிகமான மறுப்புகள் – நாடகபாணி வசனங்கள் எல்லாமே சமச்சீராக இடம்பெற்றன.

மேடைச் பேச்சு என்பது, ஏதோ இரண்டு மணி நேரம் செய்யும் காலட்சேபம் – இசைப்பேருரை – நாவினால் செய்யப்படும் ஒருவித வியாபாரம் என்று கருதப்பட்டு வந்த காலத்தில்தான் அண்ணா மேடையேறினார். சிறிதுகாலம், தான் கையாண்ட புதிய உத்திகளினால், மேடைப் பேச்சிற்கே இலக்கணமாகத் திகழ்ந்தார்.

அக்காலத்தில் மேடைப்பேச்சில் சிங்கமாகக் கர்ஜித்த எத்தனையோ பேச்சாளர்கள் அண்ணாவின் பேச்சைக் கேட்டதும், மேடைப் பேச்சு என்றால் அதை அண்ணாவிடம்தான் கேட்கவேண்டும் என்றார்கள்.

நான்கு மணி நேரம் பேசினாலும் மக்களை எழச்செய்யாமல் அமரச் செய்துவிடும் தந்தை பெரியாரின் பேச்சு – சாதாரண கொச்சைத் தமிழில் தான் பெரும்பாலும் பேசுவார் – என்றாலும் அதற்கு அவ்வளவு வலிமை இருந்தது.

அத்தகைய பெரியார் ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர் கழக தனி மாநாட்டில் கூறும்போது, "அண்ணாவைப் பற்றியும், அவர் பேச்சைப் பற்றியும் நான் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது என்பது அர்த்தமற்ற வேலை. அவர் வேண்டுமானால் என்னை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தாலும் இருக்குமே தவிர, நான் செய்ய வேண்டியதில்லை" என்று குறிப்பிட்டார்.

ஆங்கிலேயர்களுக்கே உச்சரிப்பைக் கற்றுத்தந்த வெள்ளிநாக்கு சீனிவாச சாஸ்திரி, அண்ணாவின்

பேச்சைக்கேட்டவுடன், இதுவரை நான் கேட்ட மேதைகளின் சொற்பொழிகளில் உங்கள் பேச்சு என்னை மிகமிகக் கவர்ந்தது என்று அண்ணாவிடம் கூறினார்.

புதுக்கோட்டை அரசுக் கல்லூரியில் பேசுவதற்கு அண்ணாவை அழைத்திருந்தனர். கல்லூரித் தலைவர் திரு. பஞ்சாபகேச சாஸ்திரிகள் "தான் இன்று அண்ணாவின் பேச்சுக்கு தலைமை ஏற்றதே பெரிய புதிர்" என்றும் "புதிர் என்ற தலைப்பிலேயே அண்ணா பேசுவார்" என்று கூற சிங்கம்போல் அண்ணா எழுந்தார். சுற்றுமுற்றும் தன் அரிமா நோக்கைச் செலுத்தினார். மலைவீழ் அருவிபோல் அற்புதமாக ஆங்கிலத்தில் – வானவில்லில் தோன்றும் வர்ணஜாலங்களை – எண்ணக் கலவைகளை விதவிதமாகத் தந்து அனைவரையும் வியக்கச் செய்தார்.

பேச்சைக் கேட்டு முடித்தவுடன், முன்வரிசையிலிருந்த நீதிபதி ஏ.எஸ்.பி. அய்யர் மேடை மீதேறி அண்ணாவின் கைகளைக் குலுக்கிவிட்டு "மிஸ்டர் அண்ணாதுரை என்னால் இரண்டு காரியங்களுக்கு மட்டும் சேர்ந்தாற்போல் ஒரு மணிநேரம் இருக்கையில் இருக்க முடியும். ஒன்று நான் தீர்ப்பு எழுதும்போது, இரண்டாவது எம்.எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசை கேட்கும்போது, அதற்குப்பிறகு ஆழங்காண முடியாத என்னை, தங்களுடைய பேச்சு வசீகரித்து அடிமைப்படுத்தி, எண்பது நிமிடங்கள் இருக்கையில் அமர்த்திவிட்டது" என்று வியந்தார்.

இவ்வாறு பல அதிமேதாவிகள் அண்ணாவின் குரலோசையை குழலோசையாக மதித்தனர்.

**கம்பராமாயண எரிப்பு முறிப்பு**

கம்பராமாயணம் எரிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியை பெரியார் வெளியிட்டார். அண்ணாகூட "கம்பரசம்" என்ற நூலை இயற்றி அதிலுள்ள வேண்டாத கருத்துகளை எடுத்துக் காட்டினார். என்றாலும் அது சிறந்த இலக்கியம் என்ற வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமேயொழிய, கடவுளின் அவதாரக் கதை என்று கருதக்கூடாது என்பதை மக்களிடம் தெரிவித்து விட்டோம். ஆகவே அந்நூலை எரிக்கும் கிளர்ச்சியை நிறுத்திவிடலாம் என்று ஆர்.கே. சண்முகம் போன்றோர் கருதினார்.

இதை பெரியாரிடம் கூறுவதற்கு யாருக்கும் துணிவு வரவில்லை. பெரியார் ஒரு முடிவு எடுத்துவிட்டால், அகிலத்தில் யாராலும் அதை மாற்றமுடியாது.

இதையுணர்ந்த ஆர்.கே. சண்முகம் அண்ணாவிடம் சென்று நீங்கள்தான் பெரியாரிடம் சென்று உங்கள் வாதத்திறமையால் அவர் மனதை மாற்றி நூலை எரிக்காமல் இருப்பதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

அண்ணாவும் பல மணி நேரம் பெரியாரிடம் பேசி கடைசியில் கம்பராமாயணத்தை எரிக்கும் திட்டத்தை கைவிடும்படி செய்துவிட்டார்.

இதன் மூலம் ஆன்மீகவாதிகளின் மனதையும் புண்படுத்தாது, அதே நேரத்தில் அந்நூலிலுள்ள அறிவிற்கு ஒவ்வாத கருத்துகளையும் எடுத்துக் காட்டி கம்பராமாயணம் தெய்வநூல் இல்லை – அதுவும் ஓர் இலக்கிய நூலே என்பதை நிலைநிறுத்திக் காட்டினார். இதன் மூலம் அண்ணாவின் நாகரிக உள்ளம் இந்த நானிலத்திற்குத் தெரிய வந்தது.

ஆன்மீகத் துறையிலிருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் குட்டிக்கதைகள் சொல்வதில் தலைமையானவர். அதன் மூலமே தன் கருத்துகளைப் பரப்பினார்.

இதைப்போலவே மூதறிஞர் குட்டிக் கதைகளைச் சொல்லி கருத்துகளைப் பரப்பினார். இந்த உத்தி அவருக்கு மிகவும் பயன்பட்டது.

இதற்குப் பிறகு அண்ணாவும் குட்டிக்கதைகளைக் கூற ஆரம்பித்தார். அண்ணாவின் குட்டிக்கதைகள், எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல் சிறிதும் பிறழாது கருத்துக்களோடு ஒட்டியிருந்தன. அண்ணாவின் குட்டிக்கதைகள் மக்களின் உள்ளத்தை உலுக்கியது.

அண்ணா இவ்வாறு செய்ய ஆரம்பித்ததும் இராஜாஜி குட்டிக்கதைகளைச் சொல்வதை நிறுத்திவிட்டார்.

**மொழிப்போரில் அண்ணா**

அண்ணாவின் வாழ்வில் மொழிப்போர் தலையாய இடம் வகித்தது. 1937–38ஆம் ஆண்டுகளில் இராஜாஜி சென்னை மாநிலப் பிரதமராக இருந்தபோது, பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்படும் என்ற அபாய அறிவிப்பை வெளியிட்டார்.

பெரியார் இந்தியினால் தமிழருக்கு வரும் கேட்டையும், தமிழ் மொழிக்கு வரும் சீர்குலைவையும் 'குடி அரசு' இதழில் விளக்கமாக விவரித்தார்.

இவ்விளக்கம் தமிழகத்திலுள்ள எல்லாவகை மக்களையும் கவர்ந்து இழுத்ததற்கு அண்ணாவின் தர்க்க ரீதியான வாதத்திறமை காரணமாக அமைந்தது.

1939ஆம் ஆண்டு பிப்ரவரியில் காஞ்சியில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. இந்தி எதிர்ப்புப்போர் பிரகடனம் செய்யப்பட்டது.

தமிழ் காக்கப்போர் – தமிழர்நலம் காக்கப் போர் – தனித்தமிழ் மாநிலம் காண்போம் என்று மக்கள் முழங்கினர் – போராட்டம் தொடங்கிவிட்டது.

அப்பொழுதே அண்ணா தானைத் தலைவராகி விட்டார். அவர் அழைத்த குரலுக்கு மக்கள் ஓடி வந்தனர். இந்தியை எதிர்ப்பதற்கு அனைவரும் பீடுநடை போட்டனர். பள்ளிகள் முன்பு மறியல் தொடங்கியது.



இக்கட்டத்தில்தான் திருச்சியிலிருந்து கால்நடையாகவே மக்கள் இந்திப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டே சென்னைக்கு வந்து சேர்ந்தனர். இப்படையை அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி தலைமை வகித்து நடத்தி வந்தார். அது முதல் அவரை "தளபதி அழகிரி" என்று அழைக்கலாயினர்.

**தமிழ் காத்த வீராங்கனைகள்**



மறைமலையடிகளாருக்கே தீவிர தமிழ்ப்பற்றை ஊட்டியவர் அவருடைய மகள் நீலாம்பிகை அம்மையார். இம்பெருமை படைத்த அம்மையாரின் தலைமையில் மாநாடு நடந்தது. டாக்டர் தருமாம்பாள், மூவலூர் இராமாமிர்தப் அம்மையார் – இவர்கள் தலைமையில் இந்தி எதிர்ப்பு மறியல் நடந்தது. இம்மாநாட்டில்தான் தமிழினத் தலைவர் – பகுத்தறிவுப் பாசறை – சீர்திருத்தச் செம்மல் ஈ.வெ.ரா. அவர்கட்கு பெரியார் என்ற பட்டத்தை பாவையர்கள் அளித்தனர். தாய்க்குலத்தின் வலிமையை எடுத்துக்காட்ட இந்நிகழ்ச்சி ஒன்றேபோதும். அதுமுதல் பெரியார் என்ற சொல், அகராதியில் ஈ.வெ.ரா.வை மட்டுமே குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது.

போராட்டம் தீவிரமாகியது. நீதிக்கட்சித் தலைவர்களான ஏ.டி. பன்னீர்செல்வம், முத்தையாச் செட்டியார் போன்றவர்களும் கொடிபிடித்து பொதுமக்களுடன் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் அரசு பல வகையான குற்றங்களைச் சுமத்தி நான்கு மாதங்கள் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் சிறைத்தண்டனை அளித்தது.

இந்தப் போரில்தான் தாளமுத்து, நடராசன் தங்கள் இன்னுயிரை களப்பலியாகச் செலுத்தினர். இந்த உயிர்ப்பலியை பெற்றுக் கொண்ட பின்புதான் கட்டாய இந்திப்படிப்பு என்பதை அரசு நீக்கியது.

பல ஆண்டுகள் கழித்து 1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்திய நாட்டின் பொதுமொழியாக இந்திதான் என்பதை செயலுக்குக் கொண்டு வருவது என்று மத்திய அரசு தீர்மானித்தது.

நாற்பது ஆண்டு காலமாக தொடர்ந்தும் சற்று இடைவெளிவிட்டும் நடந்துவரும் இந்தி எதிர்ப்பிற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்ற எண்ணம் அண்ணாவின் உள்ளத்தில் தோன்றியது. 1965ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை துக்கதினமாகக் கொண்டாடுவது என்று முடிவெடுத்தார். நாட்டிற்கு வெளியிட்டார்.

இதைக்கேட்ட மக்களும், குறிப்பாக மாணவருலகம் திரண்டது. தமிழ்நாட்டில் இந்திக்கு இனி எப்பொழுதுமே இடமில்லை என்று செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்.

மாணவர்கள், ஜனவரி 25ஆம் தேதியே இந்தி எதிர்ப்பில் ஈடுபடலாம் என்று அண்ணா குறிப்பிட்டார்.

நாட்டு விடுதலைப் போரில் – ஆகஸ்ட் போரில் காந்தியின் அழைப்பை ஏற்று மக்களும் மாணவர்களும் களத்தில் குதித்து தன் எழுச்சியைக் காட்டியதுபோல், அண்ணாவின் அழைப்பை மக்களும் மாணாக்கர்களும் ஏற்று களத்தில் குதித்தனர்.

மறைமலையடிகளாரும், திரு.வி.க. அவர்களும், நாவலர் சோமசுந்தரபாரதியாரும் இந்தி நுழைவால் தமிழ் கெடும் என்று கூறிவிட்டபின் – பெரியாரும் அண்ணாவும் கூறிவிட்டபின் – தமிழுக்கு ஆபத்து வருகுது என்றால் இந்தத் தேகம் இருந்து என்ன பயன் என்று தோள்தட்டி களத்தில் இறங்கினர்.

இந்தியின் நுழைவைக் கட்டுப்படுத்தினர். பொதுத்தேர்தல் வந்தது. காங்கிரஸ் கட்சியும் கவிழ்ந்தது. அண்ணா ஆட்சி தோன்றியது.

இவைகள் எல்லாம் நடப்பதற்கு அண்ணாவின் பேச்சுவன்மை – எழுத்தாற்றல் – நூல்களைக் கற்றுக் கொண்டேயிருத்தல் இவைகளே அடித்தளமாக

அமைந்தன. அண்ணாவின் பேச்சிலிருந்தும் எழுத்திலிருந்தும் ஒருசில சொற்களையும் – சொற்றொடர்களையும் காண்போம் :

இந்தி எதிர்ப்பின்போது : "பெரியாரும் அண்ணாவும் சதி செய்கிறார்கள் என்கிறார்கள். சதி என்பது பிறரறியாமல் செய்வது. நாங்கள் இந்தியை எதிர்ப்பதற்குச் சதி செய்யவில்லை. தெரிந்து–தெளிந்து–தெரிவித்துவிட்டு–பலரறிய–பட்டப்பகலில்–பத்து மணிக்குச் செய்கிறோம். அதுவும் ஊர்வலமாக மட்டுமே செல்கிறோம். இது எப்படிச் சதியாகும்" என்று கேட்டார்.

★ ★ ★

"நாவலர்களும், பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி வேலிகள் அமைத்து, அங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் சுவரை எழுப்பி, 'உள்ளே ஆடுது காளி, வேடிக்கைப் பார்க்க வாடி' என்பது போல் தொல்காப்பியத்தைப் பாரீர், அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அணுகுவர்? சங்க இலக்கியங்களை விட்டைவிட்டு வெளியேற்றி நாட்டிலே நடமாட விடவேண்டும். நடன சுந்தரிகளாக சிறுசிறு பிரதிகள் மூலம் தொல்காப்பியக் கருத்துகளைத் தொகுத்து வெளியிட்டால்தான் தொல்காப்பியம் சிறுசிறு குழந்தைகளாக ஒவ்வொருடைய மடியிலேயும் மனதிலேயும் தவழும்".

★ ★ ★

"உருட்டும் கண் – மிரட்டும் சொல் இவை ஒரு காலத்திலே ஆதிக்கக் கருவிகள்".

★ ★ ★

"கரியைக் கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா? மலைமரங்களையன்றோ முறித்திடச் செய்யவேண்டும். வேங்கையை அழைத்து விளாங்கனியை உடைத்திடச் செய்வதா? வைக்கோல் துரும்பைப் பிளப்பதற்கு போர்வாள் தேவையில்லை",

★ ★ ★

"தினசரி பத்திரிகையில் ஒரு படம் வந்தது, காந்தியாரின் சொத்துக்களைக்காட்ட. படத்தைக் கண்ட எவருக்கும் கண்ணீர் கசியாமலிருக்காது. என்ன சொத்து தெரியுமா? நூல்சரம், சிறுகரண்டி, தெர்மா பிளாஸ்க், ஒரு பேனா, ஒரு ஜோடி காலணி அவ்வளவுதான். யோகம் அறிந்தோர் – அருள் பெற்றோர் – மோட்சத்திற்கு வழிகாட்டுவோர் – துறவிகள் உள்ளனரே! அவர்களின் சொத்துக்களை மனக்கண் முன் கொண்டுவந்து பாருங்கள். எவ்வளவு ஆடை ஆபரணம் – தங்கத்தால் வட்டில் தட்டும் மட்டுமா? பாதக்குறடே தங்கத்தால்".

★ ★ ★

"அழகிய ரோஜாவுக்கு அற்புதமான வண்ணம் தீட்டிப் பார்க்க வேண்டாம் – நம்மைச் சொக்கவைக்கும் மயிலின் தோகைக்குப் பட்டாடை போர்த்தத் தேவையில்லை. முல்லைக்கு மணமும் தேனுக்கு இனிப்பும் நாம் கூட்டத் தேவையில்லை. அதுபோல்தான் நம் தாய்மொழி தமிழுக்குப் பிறமொழிச் சேர்க்கையும் தேவையற்ற ஒன்று".

★ ★ ★

"நமது பாடத் திட்டத்திலே பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாதவரை பகுத்தறிவும் பரவாது நமது நினைப்பும் உயராது".

★ ★ ★

'ஓர் இரவு' திரைப்படத்தில் வரும் உரையாடல் ஜமீன்தாரின் மகள் திருடன் இரத்தினத்தைப் பார்த்துப் பேசுகிறாள்.

"நீயோ கள்வன் – கீழேயிருப்பவன் காமுகன். உனக்கு என் உடைமை வேண்டும், அவனுக்கு என் உடல் வேண்டும். நீ கருந்தேள், அவன் கருநாகம்".

★ ★ ★

பச்சைக் கொடியா, பச்சைப் பாம்பா என்று கண்டு கொள்வதற்குக் கண்ணிற்குப் பழக்கம் வேண்டும் சொர்ணம்.

★ ★ ★

'வேலைக்காரி' திரைப்படத்தில்,

"வேஷம் அணியாத வேதாந்தி
மோடி செய்யாத மாது
ஜோடியில்லாத மாடப்புறா
சேடியில்லாத இராஜகுமாரி இருக்க முடியாதா?

★ ★ ★

"காதிலே குண்டலம் ஆட
கனத்த சாரீரம் பாட
கதியற்ற கண்கள் பெண்களை நாட
காய்ச்சிய பால் தொண்டையில் ஓட
பகவான் இருப்பிடத்திற்குப் பாதை காட்டப்பட்டது
அந்த ஆஸ்ரமத்தில்".

★ ★ ★

பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து,
நிழல்கண்டால் படுத்து,
செம்பொன்னையும் ஓட்டையும் ஒன்றாகக்
கருதுபவர்தானே உண்மைத் துறவி.

★ ★ ★

**'அண்ணாவின் வைரமொழிகள்'**
**பழைய நூலிலிருந்தும் – சான்றோர் உரைத்த உரைகளிலிருந்தும் உள்ளத்தைத் தொடும் சொற்றொடர்களையும் – தானே கூறிய**



**தொடர்களையும் நாம் இனிக் காண்போம் :**

★ மக்கள் குரலே மகேசன் குரல்

★ ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்

★ கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு

★ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.

★ துகிலுரிந்த துச்சாதனனுக்கு துரோபதை மலையிடலாமா?

★ வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது

★ எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

★ கத்தியைத் தீட்டாதே – புத்தியைத் தீட்டு

★ சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. அந்த விளக்கு ஏழைகளுக்குக் கிடைப்பதில்லை

★ சாலை ஓரத்திலே வேலையற்றதுகள் – அந்த வேலையற்றதுகள் மனதில் விபரீத எண்ணங்கள்

★ மறப்போம் – மன்னிப்போம்

★ அறிவுகூர்மையாக இருக்கவேண்டும், ஆனால் போக்கிரித்தனம் இருக்கக்கூடாது. அழகாயிருக்க வேண்டும், ஆனால் ஆள் மயக்கியாக இருக்கக்கூடாது

★ தம்பியுடையான் படைக்கஞ்சான்

★ இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

★ பல்துலக்கும் பசையை பாத்திரம் துலக்கப் பயன்படுத்துவதா? கல் உடைக்கும் கருவியால் கனியைத் தாக்குவதா?

★ உணர்ந்து மகிழ்வது அகம்–பகிர்ந்து மகிழ்வது புறம்

★ அடிப்போம், மடல் கெடுப்போம், முகத்திடிப்போம், குலை எடுப்போம், இடிப்பொடிப்போம், சிரம் உடைப்போம், வசை துடைப்போம், பழிமுடிப்போம், இனி நடப்போம்.

★ அரும்பு கோணலாக இருந்தாலும் மணம் குறையாது, கரும்பு கோணலாக இருந்தாலும் சுவை குன்றாது

★ கண்ணீர் துளிகளே. நாட்டின் கண்மணிகள்!

★ தம்பி வா – தலைமை ஏற்கவா – உன் ஆணைக்கு கட்டுப்படுகிறோம், ஆகையால் வா

★ கடவுளே இல்லை என்றோ, கடவுள் இருக்கிறார் என்றோ நான் கூறவில்லை. அறிவோடு, ஆற்றலோடு ஆபாசமற்ற கடவுள் நமக்கு இல்லை – நமக்கு இருக்கவில்லை என்றுதான் கூறுகிறேன்.

★ இடிந்த மாளிகை – இரசம் போன கண்ணாடி – ஊசல் பண்டம் – உடைந்த வாள் – பிரிந்துபோன கூடை – திரிந்த பால் – இவைகள் ஏளனம் அல்ல தம்பி! இரக்கத்தை எழுப்பத்தக்க பொருட்கள்.

★ அறிவுச்சுடர் எரிய வேண்டும், அதற்குச் சம்மட்டி அடிபோல பலமான பிரச்சாரம் இருக்கவேண்டும்.

★ இருப்பதைக் கண்டு மருளுவது இயல்பு. இல்லாததைக் கண்டு மிரள்வதை என்ன சொல்வது.

★ பகுத்தறிவை வைத்துக்கொண்டு பழைய வாழ்க்கையை நடத்தினால் என்ன பயன்?

★ நான் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன், பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டேன்.

**வாழ்வின் இலக்கணம் அண்ணா**

அண்ணா கல்வி கேள்வி, அறிவு ஒழுக்கம் இவைகளில் சிறந்து விளங்கினார். அதன் காரணமாகவே தமிழ்நாட்டின் தன்னிகரற்ற தலைவராக முடிந்தது. ஒரு தலைவனுக்கு சிறந்த அறிவு வேண்டும். அதை அண்ணா பெற்றிருந்தார். தான் மட்டும் அறிவுபெற்றால் போதாது. மற்றவர்களையும் அறிஞர்களாக மாற்றவேண்டும் என்று நினைத்தார்.

எந்தத் துறையிலும் தெளிவுபடைத்தவராக இருந்தார். அதுபோல் மற்றவர்களுக்குக் குழப்பம் மிகுந்த வேளையில் அவர்களுக்குத் தெளிவை உண்டாக்கினார்.

தலைசிறந்த பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் பெற்று விளங்கினார். தன்னைப்போலவே கணக்கற்றவர்களைப் பேச்சிலும் எழுத்திலும் உருவாக்கினார்.

அண்ணா தொடாத துறைகளே இல்லை, அவர் கரம் பட்டதும் எல்லாத்துறைகளும் ஏற்றம் பெற்றன. சங்க காலத்திற்குப் பிறகு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்தார்.

சகலகலாவல்லி என்று கலைமகளுக்குப் பேர். ஆனால் அண்ணாவோ சகலகலாவல்லவனாக அனைவரும் தொழுது வணங்கும் நிலையில், தன் தனியான முத்திரையைப் பதித்தார்.

உலக அரங்கில் தன் அறிவுக் கொடியைப் பறக்கவிடும் சமயத்தில், தன்னுலகில் அறிவுக் கொடியைப் பறக்க விடுவதற்காகக் கூற்றுவன் கொத்திச் சென்றுவிட்டானோ!



1969ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்றாம் தேதி நள்ளிரவு 12–20 என்ற தொடரை தமிழில் இனி யாரும் எழுதக்கூடாது – பேசக்கூடாது என்று எந்தச் சர்வாதிகாரியாவது வந்து நமக்கு ஆணையிடக்கூடாதா?

அண்ணா பிறந்த மண் என்ற பெருமை நமக்கிருக்கிறது. அவர் நமக்காகப் பேசிய எழுத்தும் நம்மிடம் இருக்கிறது. அவர் காட்டிய பாதை நம்மிடம் இருக்கிறது. அவர் பரப்பிய புகழ் நம்மிடம் இருக்கிறது.

முழுநிலவு உமிழும் ஒளி அண்ணாவின் புகழொளியைத்தான் பரப்பி வருகிறது.

ஞாயிறுகூட அண்ணாவின் அறிவுக்கதிர்களைத் தான் பரப்பி வருகிறது.

வங்கக் கடலோரம் தவழும் அலைகள் அண்ணாவின் பெயரைத்தான் கூறிக்கொண்டிருக் கின்றன.

ஆற்றிலே ஓடுவது வெறும் நீரல்ல – அது அண்ணாவின் அறிவுப்புனல்.

வானத்தில் வட்டமிட்டுச் செல்லும் பறவைகள்கூட அண்ணாவின் பெயரைத்தான் கூறிச் செல்கின்றன.

அண்ணாவின் புகழை எண்ணுவதற்காகவே இயற்கை, கடற்கரையிலே மணற்பரப்பை ஏற்படுத்துகிறது.

அவர் ஏற்றிய நெருப்பு இன்னும் அறியாமையைச் சுட்டெரித்துக் கொண்டுதானிருக்கிறது.

புவி எதையும் தாங்கும் இதயத்தை கொண்டு இன்னும் தாங்கிக் கொண்டுதானிருக்கிறது.

காற்று இன்னும் அவர் புகழை பேசிக்கொண்டுதானிருக்கிறது.

அவர் காட்டிய பாதை புரட்சிகரமான பாதை – புத்துலகத்தைச் சமைப்பதற்கான பாதை.

அப்பாதையில் நாம் பீடுநடைபோடுவோம், திக்கெட்டும் அண்ணாவின் புகழைப் பரப்புவோம்.

அண்ணா விட்டுச் சென்ற

**கடமை**
**கண்ணியம்**
**கட்டுப்பாடு**
**கலைஞர்**

என்ற நான்கு நெறிகளின் பொருளுணர்ந்து வாழ்வில் செம்மை காண்போம் – உயர்வடைவோம். ★

**அண்ணாவின் அசத்தலான பதில்**

*நாட்டுடைமை ஆக்கப்பட்ட தமிழ்நாடு அரசு, போக்குவரத்துப் பேருந்துகளில் எல்லாம் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் இடம் பெறச் செய்தார் அண்ணா.*

*இதைக் கேலி செய்து எதிர்க்கட்சியினர் பேசிய போதெல்லாம், தகுந்தவாறு பதில் அளித்தார் அண்ணா.*

*ஒருமுறை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், தந்திரமாக ஒரு கேள்வியைக் கேட்டார்.*

*"பேருந்தில் 'யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு'' என்று குறிக்கப்பட்டுள்ள குறள் யாருக்காக...? டிரைவருக்கா? கண்டக்டருக்கா? பிரயாணம் செய்கின்ற பொது மக்களுக்கா?"*

*இக்கட்டான நிலையில் அண்ணா அகப்பட்டுத் தவிக்க வேண்டும் என்று எண்ணி, எழுப்பப்பட்ட கேள்வி இது.*

*டிரைவர், கண்டக்டருக்காக என்றால், தொழிலாளர்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டும். பொது மக்களுக்காக என்றால், மக்களின் கண்டனத்துக்கு உள்ளாக வேண்டும்.*

*பார்த்தார் அண்ணா... மிகவும் நுணுக்கமாக "நாக்கு உள்ளவர்கள் எல்லோருக்காகவும் எழுதி வைக்கப் பட்டுள்ளது" என்று பதில் அளித்தார். இப்பதிலைக் கேட்டதும் சட்டமன்றமே அதிர்ந்தது.*

– டி.எஸ்.பாலு, *சென்னை.*



# தொல்லியலும் சங்க இலக்கியமும்

தொல்லியல் ஆய்வை Archaeology எனக் கூறுவர். இச்சொல் Archrious - Logos என்ற இரு சொற்களால் ஆனது. 'ஆதி காலத்தைப் பற்றிய அறிவியல்' என்பது இத்தொடரின் பொருளாகும். தொல்லியல் ஆய்வு என்பது பெரும்பாலும் பூமிக்குள் புதையுண்டு மறைந்து கிடக்கும் அல்லது மேற்பரப்பிலேயே காணப்படும் மனித இனத்தோடு தொடர்புடைய பொருள்களையும், அவர்கள் நாள்தோறும் வாழ்க்கையில் பயன்படுத்திய பொருள்களையும் அகழ்ந்தெடுத்து, பழம் பண்பாடுகளைப் பற்றி உய்த்தறியும் ஆய்வாகும்.

தொன்மையான வரலாற்றை வெளிப்படுத்திக் காட்டும் இலக்கியங்கள், பிற ஆவணங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள் ஆகியவை தோன்றும் முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, பழக்க வழக்கம், நாகரிகம், நம்பிக்கைகள் ஆகியவை பற்றி அறிய இத்தொல்லியல் ஆய்வே நமக்குத் துணை செய்கிறது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலநிலையை வெளிப்படுத்தும் திறன் இவ்வியலுக்கே உரியதாகும். இதனை மனிதன் தோன்றிய நாளிலிருந்து அவனைத் தொடர்ந்து பின்பற்றி அவன் வாழ்க்கை பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் துருவி ஆராயும் ஓர் இயல் எனலாம்.

இத்தொல்லியல் ஆய்வில் மதிப்புடைய பழம்பெரும் சின்னங்கள், தங்கம், வெள்ளி, இரத்தினக்கற்கள் போன்ற அழகிய அரிய மதிப்பு மிக்க தொல்பொருட்களை மட்டும் ஆராய வேண்டும் என்பதில்லை. சாம்பல், மண், கற்கள், எலும்புத்துண்டுகள், மண்டை ஓடுகள், உடைந்த சட்டி பானைகள், மனிதன் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய பிற எளிய பொருள்கள் போன்றவற்றிற்கும் இந்த ஆராய்ச்சியில் மிகவும் அரிய முக்கியத்துவம் உண்டு.

உலகில் தோன்றி, ஆண்டு, மறைந்த பேரரசுகள் அவற்றின் வாழ்வு, படையெடுப்பு, வெற்றி தோல்விகள், அதன் விளைவுகள் ஆகியன பற்றியே நாட்டு வரலாறு நமக்குக் கூறுகிறது. பொதுமக்களைப் பற்றிய குறிப்புகளை அவை பெரும்பாலும் தருவதில்லை. ஆனால் தொல்லியல் ஆய்வோ இப்புவியில் தோன்றி வாழ்ந்து மறைந்த சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை, அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களின் துணையால் நமக்குத் தெரிவிக்கிறது.

தமிழகத்தில் பல்வேறிடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் எடுத்த அரிய பல தொல்பொருட்களை C14 எனப்படும் கரிப்பகுப்பாய்வு மூலம் கால நிர்ணயம் செய்துள்ளனர்.

அவற்றின் காலம் கி.மு. 7–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3–ஆம் நூற்றாண்டுவரை என்று அறிஞர்களால் ஆய்வு செய்து கணிக்கப்பட்டுள்ளது. அந்த அகழாய்வுகளில் சங்க இலக்கியத்தோடு மிகவும் தொடர்புடைய பெயர் – பொருள்கள் பற்பல கிடைத்துள்ளன. அவற்றின் மூலம் தொல்லியல் அகழாய்வுகள் காலம் சங்க காலம் என்பதை அறிகிறோம்.

எனவே அந்தத் தொல்லியல் அகழாய்வுக் காலத்தைச் சங்க இலக்கியத்தின் காலம் என்று கொள்ளுவது தவறாகாது. ஆழமான விரிவானதோர் பெரிய ஆய்வுக்கு ஒரு முன்னோடியாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## பெருங்கற்படைச் சின்னங்கள்

தமிழகத் தொல்லியல் ஆய்வில் மிகவும் சிறப்பாகக் குறிக்கப்பெறும் தன்மையுடையது பெருங்கற்படைச் சின்னங்களின் ஆய்வாகும். தமிழகமெங்கும் பரவலாகவும், மிகுதியாகவும் காணப்பெறுவது இச்சின்னங்களேயாகும். இக்கால ஈமக்குழிகளில் பெரிய பெரிய கற்பலகைகளைக் கொண்டு செய்த கல்லறைகளையும் (Cists), கல் வட்டங்களையும் (Cairm Circles) கொண்ட காரணத்தால் இப்பண்பாட்டைப் பெருங்கற்படைப் பண்பாடு என்று அழைப்பர். இப்பண்பாடு வழங்கிய காலம் Megalithic Age என்று கூறப்படும். Megos என்றால் பெரிய என்றும், Lithos என்றால் கல் என்றும் கிரேக்க மொழியில் பொருள்படும்.

கல்வட்டம், கல்படை, கல் குவை, கல் திட்டை, கல் அறை, கல்பதுக்கை எனப் பல வகைகளாக இவை காணப்பெறும். இவை பெரும்பாலும் புதைகுழியிடங்கள் (Burial Sites) என வழங்கப் பெறும்.

## நீண்ட கற்கள்

பெருங்கற்படைச் சின்னங்கள் உள்ள இடங்கள் பலவற்றில் நீண்டு உயர்ந்த கற்கள் நடப்பட்டுள்ளன.

ஆட்களைப் புதைத்துப் பதுக்கை சேர்த்திய பின் அதில் கல் நடுதலைப் புறநானூற்றில் உறையூர் இளம்பொன் வாணிகனார் கூறுகிறார்.

● செ. இராசு
*சங்க இலக்கிய ஆய்வுகள் நூலிலிருந்து...*

**‘பாலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி**
**..................................................**
**இனிநட் டனரே கல்லும்’** (புறம் : 264)

– என்பது அவர் தம் பாடல் பகுதி.



அகநானூற்றுப் பாடல் ஒன்றில் எயினந்தை மகன் இளங்கீரனார் பதுக்கையில் ‘நெடுநிலை நடுகல்’ இருந்ததைச் சுட்டுகிறார்.

**‘சிலை ஏறட்ட கணைவீழ் வம்பலர்**
**உயர்பதுக்கு இவர்ந்த அதர்கொடி அதிரல்**
**நெடுநிலை நடுகல்’** – (அகம் : 289)

– என்பது அப்பகுதியாகும். இந்நெடுநிலை நடுகல்லை

**‘ஏறுடை இனநிரை பெயரப் பெயராது**
**செறிகரை வெள்வேல் மழவர்த் தாங்கிய**
**தறுக ணாளர் நல்இசை நிறுமார்**
**பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்**
**நட்ட போலும் நடாஅ நெடுங்கல்**
**அகல்இடம்’** (அகம் : 269)

– என்று வருணிக்கிறார் மதுரை மருதன் இளநாகனார். பிற்காலப் புறப்பொருள் வெண்பாமாலையும் இதனை ‘ஓங்கிய கல்’ என்று கூறும்.



இவ்வாறு இக்கற்கள் ஒன்றோ, இரண்டோ, பலவோ பதுக்கைகளில் நடப்பட்டிருப்பதைப் பெரியார் மாவட்டத்தில் கொடுமணல் முக்கடி வேலம்பாளையம், குடுமியாம்பாளையம், பிரப் நகர், நல்லாம்பட்டி ஆகிய இடங்களில் காணலாம். தொல்லியலார் இதனை Menhir என்பர். இந்நெடுங்கற்களே நடுகல்லின் தொடக்கம் எனலாம். Menhir என்பதை நடுகல்லின் வேறாகக் ‘குத்துக்கல்’ எனத் தொல்லியலாளர்கள் அழைப்பர்.

**பதுக்கை**

பூமிக்குள் பதுக்கப்பட்டிருப்பதால் இவை பதுக்கை எனப் பெயர் பெற்றது. சங்க இலக்கியங்களில் இப்பதுக்கைகள் பல்வேறு இடங்களில் குறிக்கப்படுகின்றன. அவை

**‘செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்**
**அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை’** (புறம் : 3)

**‘வெண்நுனை அம்பின் விசைஇட வீழ்ந்தோர்**
**எண்ணுவரம்பு அறியா வம்பப் பதுக்கை’**

**‘செருவேட்டு சிலைக்கும் செங்கண் ஆடவர்**
**வில்இட வீழ்ந்தோர் பதுக்கை’** (அகம் : 109)

**‘வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்**
**ஆள்அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை’**
(அகம் : 215)

**‘நல்இசை வலித்த நாணுடை மனத்தர்**
**கொடுவில் கானவர் கணைஇடத் தொலைந்தோர்**
**படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை’**
(அகம் : 231)

**‘இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்**
**கொடுமரம் தேய்த்தார் பதுக்கை’** (கலி : 12)

**‘........ மன்னர்**
**கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன**
**உவலிடு பதுக்கை’** (அகம் : 67)

– என்பனவாகும். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட பெருங்கதையும் ‘ஆனிடு பதுக்கை’

– என்று கூறும்.

இப்பதுக்கைகள் பெரும்பாலும் போர்க் களத்தில் போரிட்டு வீர மரணம் எய்திய வீரர்கட்கு நினைவாக, மேடாக உயர்த்து அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம். பொதுமக்களில் உயர்ந்தவர்கட்கும் அமைக்கப்பட்டிருக்கலாம். பதுக்கைகளைக் ‘கற்கிடை’ என்றும் அழைப்பர்.

இப்பதுக்கைகளைச் ‘சவக்குழிகள்’ என்றும் அழைப்பர். இதன் உட்பகுதி நான்கு செங்குத்தான பாறைகளைக் கொண்டு ஒரு சிறு அறையாகத் தடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறான அறைகள் இரண்டு மூன்று கூடச் சேர்ந்தமாதிரி இருக்கலாம். ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குப் போகத் துளையும் இருக்கும். இவ்வறைகளின் கிழக்குப் பக்கம் உள்ள துளைகளை ‘இடுதுளை’ என்பர். படையல் பொருள்களை வைக்க இவை பயன்பட்டிருக்கலாம். கல்லறையின் உள் உள்ள ஆவி வெளியே சென்றுவர அத்துளை பயன்படுகிறது என்ற நம்பிக்கையும் உண்டு.

சிறு கோயில் போல இது காட்சியளிக்கும். தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக் கலையின் தொடக்க காலக் கூறினை இங்குக் காண முடியும். குழி பெரும்பாலும் கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டிருக்கும். கல்லறைகளைப் பெரிய பாறை கொண்டு மூடுவர். புதுக்கோட்டைப் பகுதியில் இவற்றைக் ‘குரக்குப் பட்டடை’ என்று அழைப்பர்.

இப்பதுக்கையின் உள்ளும், புறமும் மண் கலயங்களிலும், மண்ணிலும் இறந்தவர்கள் பயன்படுத்திய பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். இரும்புக் கருவிகள், மட் பாண்டங்கள், அவர்கள் விரும்பி அணிந்த பல வண்ணக்கல் மணிகள், பாசிகள், சங்கு வளையல்கள் ஆகியன காணப்படும். இரும்புக் கருவிகள், வேளாண்மைக் கருவிகள், வீட்டு உபயோகக் கருவிகள், வேட்டைக் கருவிகள் எனப் பலவகைப்படும். குதிரை லாடம், கடிவாளம், அங்கவடி போன்றவைகளும் காணப்படும்.

**தாழிகள்**

தொல்லியல் ஆய்வில் மிகவும் சிறப்பிடம் பெறுவது தாழிகள் (Urns) ஆகும். தமிழ் நாட்டில் இவை பெரும்பாலும் நான்கு வகைகளாகக் காணப்படுகின்றன. அவை :

1. கூர்முனைத் தாழிகள்
2. கால்கள் உடைய தாழிகள்
3. விலங்குருவத் தாழிகள்
4. சவப் பெட்டிகள்

என்பவைகளாகும். இவற்றுள் பெரும்பாலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டவை கூர்முனைத் தாழிகளேயாகும்.

மணிமேகலையில் ஈம வகைகளைச் சுட்டும் சீத்தலைச்சாத்தனார்

**‘சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்**
**தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்’**

– என்று கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில்

**கலம்**
**தாழி**
**கவிசெந்தாழி**
**ஈமத் தாழி**
**தாழிய பெருங்காடு**
**முதுமக்கள் தாழி**

**மன்னர் மறைத்த தாழி**

– என்ற தொடர்கள் காணப்படுகின்றன.

இவை மிகப் பெரியவையாக இருந்ததையும் சங்க இலக்கியம் சுட்டுகிறது. சங்க இலக்கியத்துள்

**மாஇருந் தாழி** (நற்.271)

**ஓங்கு நிலைத்தாழி** (அகம் : 275)

**கண்ணகன் தாழி** (புறம் : 228)

என்ற தொடர்களைக் காணுகிறோம்.

இவை கைகளாலும் (Hand Made) சக்கரங்களாலும் (Wheel Made) வனையப்பட்டிருக்கும்.

'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தான். பெரும்புகழ்கொண்ட இவனுக்குப் பெரிய தாழி அல்லவா வனைதல் வேண்டும். உலகையே சக்கரமாகக் கொண்டு இமய மலையையே மண்ணாக வைத்துப் பெரிய தாழி வனைதல் வேண்டும். அது உன்னால் முடியுமா?' என்று வேட்கோவரைப் பார்த்து வினவுகிறார் ஐயூர் முடவனார் என்னும் புலவர்.

**'அன்னோன் கவிக்கும் கண்ணகன் தாழி**
**வனைதல் வேட்டனை யாயின் எனையதூஉடத**
**இருநிலம் திகிரியாப் பெருமலை**
**மண்ணா வனைதல் ஒன்லுமோ நினக்கே'**

என்பது அப்பகுதியாகும்.

மற்றொரு புலவர் கணவன், மனைவி இருவருக்கும் அமையும் வண்ணம் மிகப் பெரியதாகத் தாழி வனையுமாறு வேட்கோவைக் கேட்கின்றார்.

**'சுரம்பல வந்த எமக்கும் அருளி**
**வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி**
**அகலி தாக வனைமோ'**

என்பது அவர் கேட்கும் புறநானூற்றுப் பகுதி

தாழி வனைவோர்

'கலம் செய் கோ'

எனப்பட்டனர். இவர்கள் தொன்மைக் காலமாகவே இத் தொழிலில் ஈடுபட்டனர். ஒருவர் 'மூதூர்க் கலம் செய்கோ' எனப்படுகிறார்.

தமிழக அகழாய்வுகள் மூலம் பிணங்களை ஓரிடத்தில் திறந்த வெளியில் இட்டுவைத்துத் தசைகள் அழிந்த பின் எலும்புகளைத் தாழியில் இடுவர் என்பதும், பிணங்களை எரித்து எஞ்சிய சில எலும்புகளைத் தாழியில் இடுவர் என்பதும், சுட்ட சாம்பலில் ஒரு பகுதியைத் தாழியில் இடுவர் என்பதும் தெரிய வந்துள்ளன.

ஆனால் மிகவும் வயோதிகர்களை இறுதி நாட்களில் உயிருடனே தாழியில் இருக்கச் செய்து உணவும் தண்ணீரும் வைப்பர் என்ற தவறான மரபுவழிச் செய்திகளும் நிலவுகின்றன.

பெருங்கற்படைக்காலக் கல்லறைகளின் உள்ளும், தனி இடங்களிலும் ஒன்றிரண்டாகவும் பல சேர்ந்தும் தாழிகள் புதைக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், மலைக்கோவிலூர், பெருமாள் பாளையம், பாடாலூர் திருப்பூர் போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கில் ஒரே இடத்தில் தாழிப்புதையல்கள் உள்ளன.

தாழிகளின் உள்ளும் புறமும் சிறுசிறு மட்கலங்களும், ஆயுதங்களும், பல வண்ணக் கல் மணிகளும், அவர்கள் பயன்படுத்திய பொருள்களும் படையலாக வைக்கப் பெற்றிருக்கும்.

பொதுமக்களால் முதுமக்கள் தாழி, மூத்தாந்தாழி, மதமதக்காத் தாழி, பாண்டியர் தாழி (பண்டையோர்) எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

சங்ககாலத் தொடக்கத்தில் வாழ்ந்த பண்டை நாளைய சோழ மன்னர்கள் இவ்வழக்கத்தைப் புகுத்தினர் என்று சில பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன.

**'நாளும் – பதுமக் கடவுள் படைப்படையக் காத்த**
**முதுமக்கட் சாடி முதலோன்'** (குலோ.உ –12)

**மாறழிந்து – ஓடி மறலி ஒளிப்ப முதுமக்கட்**
**சாடி வகுத்த தராபதி'** (விக்கிரம..உ –7–8) .

**'திக்கனைத்தும் – தாங்கி முதுமக்கட் சாடி**
**யமன்படையின்**
**வாங்கி ஒளிப்ப வகுத்தோன்'** (சங்கர.உ –5–6)

**'சித்தமகிழ்ந் தீனமறச் செங்கோல் நடாத்திநமன்**
**உத்தமன்என்று எந்நாளும் உயிர்கொடுபோ**
**காமையினார்**
**மொய்த்தமுதி யோர்கட்கு முதுமக்கட் சாடிபல**
**வைத்தகுல தீரனே மன்னாகோ மன்னாகோ'**

(திருவண்ணாமலைப் புராணம்)

இச்சோழ மன்னர்களை நாபாகன், சுரகுரு எனஉரையாசிரியர்கள் அழைப்பர். குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் இதனை 'மட்சாடி' என்று அழைக்கிறது.

**சங்ககால ஊர்களில் அகழ்வாய்வு**

சங்க இலக்கியம் குறிப்பிடும் தொன்மையான சில ஊர்களில் தொல்லியல் அகழாய்வுகள் முறைப்படி நடைபெற்றுள்ளன. அவ் அகழாய்வுகள் மூலம் அவ்வூர்களின் பழம் பெருமை கண்டறியப்பட்டுள்ளது. அதன் மூலம் சங்க காலத்தில் அவ்வூர் இருந்துள்ளமை, மக்கள் வாழ்ந்தமை ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன.

**அகழாய்வு நடைபெற்ற ஊர்**

| **இப்போதையபெயர்** | **சங்ககாலப் பெயர்** |
|---|---|
| அரிக்கமேடு | வீரைமுன்துறை (அகம்.206) |
| அழகன்குளம் | மருங்கூர்ப்பட்டினம் (நற்.258) |
| உறையூர் | உறந்தை (புறம்.39) |
| கரூர் | கருவூர் வஞ்சி (புறம்.11) |
| காஞ்சிபுரம் | கச்சி (பெரும்.420) |
| காவிரிப்பூம்பட்டினம் | புகார் (பட்.173) |
| கொடுமணல் | கொடுமணம் (பதி.74) |
| கொற்கை | கொற்கை (அகம்.27) |
| தருமபுரி | தகடூர் (பதி.78) |
| திருக்கோவிலூர் | கோவல் (அகம்.35) |
| திருத்தங்கல் | தங்கால் (அகம்.48) |
| மதுரை | மதுரை (பரி.11) |
| வல்லம் | வல்லம் (அகம்.336) |
| கொடுங்கலூர் | முசிறி (புறம்.343) |

இவ் அகழாய்வுகளை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறை, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறை ஆகியன மேற்கொண்டன. அரிக்கமேட்டு ஆய்வில் ஒரு பகுதியை அமெரிக்க நாட்டுத் தொல்லியல் நிபுணர்களும் மேற்கொண்டனர்.

**நடுகல்**

**வீரர்கள் நினைவாக**

போர்க்களத்தில் போரிட்டு வீர மரணம் எய்திய வீரர்களுக்கே பெரும்பாலும் நாட்டப்பட்டது. இதனை

**'விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல்'** (ஐங்குறு 352)

**'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி ஆசூட்டிய பிறங்குநிலை நடுகல்'** (அகம் 67)

**'விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்**
**நன்னிலைபொறித்த கல்'** (அகம்.179)

**'சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்**
**உயர்பதுக்கு இவர்ந்த அதர்கொடி அதிரல்**
**நெடுநிலை நடுகல்'** (அகம்.289)

**'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென**
**மருங்குல் நுணுகிய பேஎழுமதிர் நடுகல்'** (அகம்.287)

**'வில்லீண் டரும்சுமம் ததைய நூறி**
**நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்**
**நிரைநிலை நடுகல்'** (அகம்.387)

**'முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை**
**நடுகல்',** (புறம்.314)

**'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறேந்து மருப்பில் களிறெறிந்து வீழ்த்தெனக்**
**கல்'** (அகம்.490)

**'விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**
**எழுத்துடை நடுகல்'** (அகம்.53)

**'ஒன்னாத் தெவ்வர் உலைவிடனத்து ஆர்த்தென**
**நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்**
**செல்லா நல்லிசைப் பெயரோடு நட்ட**
**கல்'** (அகம்.390)

என்ற சங்க இலக்கியத் தொடர்கள் மூலம் அறியலாம்.

**கால்நடைப் போர்**

பசுக்களையும், பார்ப்பனர்களையும், பெண்களையும், நோயாளிகளையும், மக்கட்பேறு இல்லாதவர்களையும் போர் நடைபெறும் இடத்தைவிட்டு அகலுமாறு அறிவிப்பர். எல்லோரும் அகன்றபின் எஞ்சியிருக்கும் பசுக்கூட்டங்களையும், பிற கால்நடைகளையும் அப்புறப்படுத்த வெட்சிப் பூச்சூடி வீரர் புறப்படுவர். பகைவர் கால்நடைகளைக் கவர்வர். இவர்கள் வெட்சியார் எனப்படுவர்.

வெட்சியார் கவர்ந்த ஆநிரைகளையும், பிற கால்நடைகளையும் உரியவர்கள் கரந்தைப் பூச்சூடிப் போரிட்டு மீட்பர். இவர்கள் கரந்தையார் எனப்படுவர். இதுவே போர்த் தொடக்கமாகவும் அமையும். இவ்வெட்சி, கரந்தை வீரர்களுக்கு நடப்பட்ட நடுகற்களே தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதிலும் வெட்சியார் நடுகற்களைக் காட்டிலும் கரந்தையார் நடுகற்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களிலும் கால்நடைப் போருக்குரிய பல பாடல்கள் உள்ளன.

**'முனைஆத் தந்து முடூரம்பின் வீழ்ந்த**
**வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்**
**வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**
**நடுகல்'** (அகம்.35)

**'நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்**
**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறந்துநிலை நடுகல்'** (அகம்.131)

**'ஏறுடை இனநிரை பெயரப் பெயராது**
**செறிசுரை வள்வேல் மழவர்த் தாங்கிய**
**தறுக ணாளர் நல்லிசை நிறுமார்**
**பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்**
**நட்ட போலும் நடாஅ நெடுங்கல்'** (அகம்.269)

**'பல்லா தழீஇய கல்லா வல்வில்**
**உழைக்குரல் கூகை அழைப்ப ஆட்டி**
**நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்நதை**
**விரகறி யாளர் மரபில் சூட்ட**
**நிரைஇவண் தந்து நடுகல் ஆகிய**
**வெண்வேல் விடலை'** (புறம்.261)

**'பல்லாந் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து**
**கல்லா இளையர் நீங்க நீங்கான்**
**வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்**
**கொல்புனற் சிறையின் விளங்கியோன் கல்'** (புறம்.263)

**'வைஎயிற்று உயர்ந்த மதியின் மறவர்**
**கையகத்து உய்ந்த கன்றுடைப் பல்லான்**
**நிரையொடு வந்த உரையன் ஆகி**
**உரிகளை அரவம் மானத் தானே**
**அரிதுசெல் உலகில் சென்றனன்'** (புறம்.260)

### நடுகல் ஆய்வு

செய்யுள்களும், இலக்கியங்களும், இலக்கணங்களும், இதிகாச புராண ஆகமங்களும், தோத்திரங்களும், சாத்திரங்களும் உயர்ந்தோர் வழக்கு. வரலாற்றின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் பழங்குடி மக்களின் பண்பாட்டை அறிய நடுகற்களே மூல காரணமாக அமைந்துள்ளன. ஏனெனில் நடுகல் மக்கள் வழக்காகும்.

பண்டைய நடுகற்கள் பெரும்பாலும் மன்னர்களுக்கோ குறுநிலத் தலைவர்களுக்கோ எடுக்கப்படவில்லை. அவை மறவர், எயினர், மழவர், வேடர் கோவலர், வடுகர், கள்வர், பறையர், பாணர் ஆகிய குடிகளைச் சேர்ந்த சேவகன், இளமக்கள், தொறுவாளன், இளையோர், ஆள், இளமகன், அடியாள், அடியார், மன்றாடி மனைமகன் ஆகியோருக்கே நாட்டப்பட்டுள்ளன.

### நடுகல்லே தெய்வம்

சங்க காலத்தில் நடுகல் வழிபாடு சிறப்புடன் மிகுதியாக விளங்கியது.

**'கல்லே பரவின் அல்லது**
**நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே'** (புறம்.335)

என்று பாடுகிறார் ஒரு சங்கப் புலவர்.

### உருவமும் எழுத்தும்

முதலில் நடுகல்லாக நெடுநிலை நடுகல் எனப்படும், நீண்டு உயர்ந்த கல் நடப்பட்டது. அதன் பின்னர்ச் சிறு அளவில் நடுகற்கள் நடப்பட்டன.

அக்கற்களில் முதலில் உருவமோ, பெயரோ, பெருமையோ குறிக்கப்படாமல் அவை வெறும் கற்களாக மட்டுமே இருந்தன. பின்னர் உருவமும், பெயரும், பெருமையும் ஓவியமாக எழுதப்பட்டன. பின்னர்க் காலம் செல்லச் செல்ல உருவம் செதுக்கப்பட்டது. பீடும், பெயரும் உளியால் எழுத்துக்களாகச் செதுக்கப்பட்டன. இதனை

**'நட்ட போலும் நடா நெடுங்கல்'** (அகம்.269)

**'பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'** (அகம்.67)

**'மரம்கோள் உமண்மகன் பேரும் பருதிப்**
**புன்தலை சிதைந்த வன்தலை நடுகல்**
**கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்து'** (அகம்.343)

**'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென**
**மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்**
**பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து'** (அகம்.297)

எனச் சங்க இலக்கியம் குறிக்கிறது. உப்பு வண்டியின் சக்கரங்களாலும், நடுக்கல்லில் அம்புகளைத் தேய்ப்போர் முயற்சியாலும் நடுகல் எழுத்துக்களின் கூர்மையான முனைகள் அழிந்தன என்பதால் நடுகற்களின் தொன்மை புலப்படுகிறது. அக்காலத்திலேயே வழிப்போக்கர்கள் தாம் வழிகளில் காணும் நடுகல் எழுத்துக்களைப் படிக்க முற்பட்டனர் என்ற விபரமும் இதன் மூலம் தெரிகிறது.

தமிழ்நாட்டில் எழுத்துடனும், எழுத்துக்கள் இன்றியும் ஆயிரக்கணக்கான நடுகற்கள் கிடைத்துள்ளன. அவை சங்க இலக்கியங்களுடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்தற்கு உரியவை.

### மணிகளும் பாசிகளும்

தொல்லியல் ஆய்வு நடைபெற்ற தமிழக ஊர்களில் மிகவும் அதிகமாகக் கிடைப்பன பண்டைய மணிகளும் பாசிகளுமாகும். சுடுமண், எலும்பு, தந்தம், இரும்பு, பிற உலோகங்களில் சில மணிகளும், பாசிகளும் கிடைப்பினும் பெரும்பாலும் கிடைப்பவை பல்வேறு வண்ணக் கற்களினால் ஆன மணிகளே.

இவை மிக உயர்ந்த வேலைப்பாடு உடையவை. பதிற்றுப்பத்து இவை 'வினைமாண் அருங்கலம்' என்று கூறும். தமிழகத் தொல்லியல் ஆய்வில் மிகமிக அதிகமாகக் கிடைக்கும் ஒருவகை மணி சூதுபவளம் என்னும் 'கார்நீலியன்' கல்லினால் செய்யப்பட்டவையாகும். இவ்வகைக் கற்கள் குஜராத்திலும், இமயமலைச் சாரலிலும் மட்டுமே கிடைக்கின்றன. பட்டினப்பாலையில் 'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்' புகார் வந்ததாகக் கூறுவது இதனை மெய்ப்பிக்கிறது. இன்னும் ஆப்கானிஸ்தானில் கிடைக்கும் லேபிஸ் லசுலி என்னும் கல் மணிகளும், இலங்கையில் கிடைக்கும் பூனைக்கண் மணியும் தமிழக அகழாய்வில் கிடைப்பது அந்நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

பொன்னோடு மணிகளைச் சேர்த்து அணிவதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. இலக்கியத்துள்

**'இலங்கு மணி மிடைந்த பொலங்கலம்'** (பதி : 14)

**'இலங்கு மணி மிடைந்த பசும்பொன்'** (பதி : 34)

போன்ற தொடர்களைக் காணுகிறோம். மணிகள் மலையிலும், நிலத்திலும், நீரிலும் கிடைத்தன. மணியோடு பவளமும் சேர்த்து அணியப்பட்டன என்பதை,

'மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம்' (அகம்.167) என்ற தொடர் மூலம் அறிகிறோம்.

மணியோடு முத்துக்களும் கோர்த்து அணியப்பட்டன என்பது 'மணியோடு முத்து யாத்த நேர் அணி' (பரி.17) என்ற தொடரால் அறியப்படுகிறது.

மணிகளைக் குடைந்து உருவாக்குவது பற்றிய சில குறிப்புகளும் கிடைக்கின்றன.



**'கோடு போழ் கடைநரும்**
**திருமணி குயிநரும்'** (மதுரை.511)

என்பது இலக்கியத் தொடர், கூட்டமாக இவர்கள் இருந்துள்ளனர்.

கொங்கு நாட்டுப் பகுதியில் காங்கயம் பகுதியில் கால்நடை மேய்க்கும் பொழுதும், கலப்பையால் நிலத்தை உழும் பொழுதும், மழை பெய்யும் பொழுதும், கிழங்குகளைத் தோண்டி எடுக்கும் போதும் மணிகள் கிடைப்பதாகச் சங்க இலக்கியத்தின் வழி அறிகின்றோம்.

**'முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்**
**புல்லுடை வியன்புலம் பல்ஆ பரப்பிக்**
**கல்லுயர் கட்த்திடைக் கதிர்மணி பெறூஉம்'** (பதி : 21)

**'நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்**
**அலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்**
**அகன்கண் வைப்பின் நாடுகிழவோனே'** (பதி : 58)

**'கால்கொண்டு**
**கருவி வானம் தண்டுளி சொரிந்தெனப்**
**பல்விதை உழவின் சில்ஏ ராளர்**
**..................**
**இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்**
**அகன்கண் வைப்பின் நாடுகிழ வோனே'** (பதி : 76)

**'குன்றத்துப்**
**பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு**
**கண்அகன் தூமணி பெறூஉம் நாடன்'** (குறு.379)

என்பன அதைக் குறிக்கும் இலக்கியத் தொடர்களாகும்.

மணிகளில் பாத்திரங்களும் செய்யப்பட்டன என்பது 'மணி செய் மண்டை' என்ற தொடர் மூலம் பெறப்படுகிறது. மணிகள் உருவாக்கப் பெறாத கற்களை 'வயக்கு உறாமணி' என்றும், மண்ணிலிருந்து எடுத்த மணிகளை 'மண்ணாமணி' என்றும், செய்யப்பட்ட மணிகளை 'வடிமணி' என்றும் கூறியுள்ளனர். மணிகள் சுடர்விட்டுப் பிரகாசமாக இருக்கும் என்பது 'மின் அவிர் சுடர்மணி' என்ற தொடர் மூலம் பெறப்படுகிறது.

### சங்குப் பொருட்கள்

தமிழக அகழாய்வுகளில் சங்கினால் செய்யப்பட்ட ஏராளமான அணிகலன்கள் கிடைத்துள்ளன. அவை பலவிதமான கோடுகளினாலும், கட்டங்களினாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மேற்குக் கடற்கரை நகரங்களில் மட்டும் அல்ல, உள்நாட்டு அகழாய்விடங்களிலும் சங்கு அணிகலன்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

சங்க இலக்கியங்களில் சங்குகளை அறுப்பது, குடைவது, அணிகலன்கள் செய்வது பற்றிய பல குறிப்புக்கள் வந்துள்ளன.

கொற்கையில் சங்குத் தொழில் செய்வோர் குடியிருப்பே இருந்தது என்பதை

**'சீருடை விழுச்சிறப்பின்**
**விளைந்த முதிர்ந்த விழுமுத்தின்**
**இலங்குவளை இருஞ்சேரிக்**
**கட்கொண்டிக் குடிப்பாக்கத்து**
**நற்கொற்கை'**

என்பதனால் அறியலாம்.

அறுக்கப்பட்ட சங்கின் எச்சங்கள் கண்கள் போன்று காட்சியளிக்கின்றன என்பதை

**'அரம் போழ்ந்து அறுத்த**
**கண் நேர் இலங்கு வளை'** (மதுரை.316)

என்ற தொடரால் அறியலாம்.

**'கோடீர் இலங்கு வளை'** (குறு.11)

**'கோடீர் எல்வளை'** (ஐங்குறு)

**'சில் நிரை வால்வளை'** (குறு.189)

**'இறைவளை'** (குறு.289)

**'செறி வளை'** (குறு.190)

**'ஆய் வளை'** (குறு.316)

சங்கினால் செய்யப்பட்ட காரணத்தால் தான் கைகளில் அணியப் பெறும் அணி 'வளை' எனப்பட்டது.

### சுடுமண் பொருள்களும் மட்பாண்டங்களும்

சங்க காலத்திற்கு இணையான பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில சுடுமண்கலை மிகச் சிறப்புடன் விளங்கியது. வீட்டு அழகுப் பொருள்களும், பாசிகளும், அணிகலன்களும், விளையாட்டுப் பொருள்களும், பொம்மைகளும், முத்திரைகளும், அளவுக் கருவிகளும், கூரை ஓடுகளும் செய்யப்பட்டன.

பெரிய தாழிகள் இல்லாமல் சிறு மட்பாண்டங்கள் பல தொல்லியல் அகழாய்வில் கிடைத்துள்ளன. உடைந்த மட்பாண்ட ஓடுகளுடன் முழுப் பாத்திரங்களாகவும் பல கிடைத்துள்ளன. அன்றாடம் புழுங்குவதுடன், ஈமச் சடங்கு போன்றவைகட்கும் அவை பயன்படுத்தப்பட்டன.

தொல்லியல் ஆய்வாளர்கள் அவ்வாறு கிடைத்தவற்றுக்கு அகல், உருளி, கலயம், கிண்ணம், குடம், குடுவை, குண்டா, குண்டு போகினி, குண்டுமொந்தை, கூசா, சட்டி சருவசட்டி, சிதை குண்டா, சின்ன கலயம், சின்ன குண்டு போகினி, சொப்பு, சொம்பு, சொரக்காய் லோட்டா, தட்டு, தவளை, தாளம், தோண்டி, பாளி, பானை, மடக்கு, மரக்கால், மறவை, மூக்குக் கிண்ணம், மூசை, மூடி, மைக்கிண்ணம், வடிகட்டி, வானலி, விளக்கு என்று பல்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

இவை சங்க இலக்கியத்துள் 'சிறு கலம்' என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன.

இம்மட்பாண்டங்கள் செய்முறையின் மூலம் பல்வேறு வகைகளாகக் குறிக்கப்பெறுகின்றன. அவை

கறுப்பு – சிவப்பு வகை
கறுப்பு வகை
சிவப்பு வகை
ரசட் கலவையும் வண்ணப் பூச்சும் கொண்டவை
பழுப்பு நிறவகை எனப் பல்வேறு வகைப்படும்.

மின்னும் சிவப்புச் சாயம் பூசப்பட்டவை ரசட் கலவைப்பூச்சு எனப்பெறும். இம்மட்பாண்டங்களில் பல்வேறு வரைவோடுகள் எழுதப்பட்டிருக்கும்.



## இரும்பு

பெருங்கற்படைப் பண்பாட்டுக் காலத்தில் மக்கள் இரும்பைத் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர். அகழாய்வுகளில் இரும்பால் உருவாக்கப்பட்ட வீட்டுப் பயன்படு பொருட்கள், வேளாண்மைக் கருவிகள், வேட்டைக் கருவிகள், போர்க்கருவிகள் ஆகியவை கிடைத்துள்ளன.

கல் மணிகளுக்குத் துளையிடும் நுட்பமான – மிகவும் கூர்மையான இரும்புக் கருவிகள் இருந்துள்ளன. பல தொல்லியல் அகழாய்விடங்களில் இரும்பு உருக்கியபின் எறியப்பட்ட மண் கட்டிகள், இரும்புக் கசடுகள் பல கிடைத்துள்ளன.

இவ்விரும்புக் கருவிகள் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியத்துள் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் வேல், வாள், ஈட்டி, கேடயம், வில், அம்பு போன்ற ஆயுதங்கள் குறிக்கப் பெறுகின்றன. இரும்பு செய்தல், இரும்பு வடித்தல், கொல்லன் உலைக்களம், வேல் வடித்தல் போன்ற பல்வேறு செய்முறைகளும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் இரும்பின் பயன்பாடு மிகவும் அதிகமாக இருந்தது.



**இரும்புசெய் கொல்லன்'** (நற்.133)

**இரும்பு வடித்தன்'** (பெரும்.222)

**இரும்பு திரித்தன்ன மாஇரும் மருப்பு'** (அகம்.4)

**இரும்பு புனைந்து இயற்றாப்**
**பெரும் பெயர்த் தோட்டி'** (புறம்.150)

**இரும்பு தலையாத்த**
**திருந்து கணை விழுக்கோல்'** (பெரும்.91)

**இரும்பு செய் விளக்கு'** (பெரும்.42)

**எஃகுடை இரும்பு'** (பதி.74)

**கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய**
**இரும்பு உண் நீரினும்'** (புறம்.21)

**இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்**
**விசைந்து எறி கூடமொடு பொரூஉம்**
**உலைக்கல்'** (புறம்.170)

போன்ற பல குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன.

## குதிரை

தமிழகத் தொல்லியல் அகழாய்வில் குதிரை லாடம், குதிரைக் கடிவாளம், குதிரையேற்றத்திற்குப் பயன்படும் அங்கவடி என்னும் கால்மிதி ஆகியவை கிடைத்துள்ளன. எனவே பெருங்கற்படைக் கால மக்கள் குதிரைகளைப் பழக்கிப் பயன்படுத்தியுள்ளனர் என்பது பெறப்படுகிறது.

குதிரைகள் கடல் கடந்த வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகப் பட்டினப்பாலை கூறுகிறது. நீரின் வந்த நிமிர் பரிப் புரவி' என்ற தொடரை அங்குக் காணுகிறோம். அவைகளில் உயர் ரக வெண்மையான குதிரைகளும் இருந்தன. பெரும்பாணாற்றுப்படையில் வளை கண்டன்ன வாலுளைப் புரவி'' என்று கூறப்படுகிறது. நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் பற்றிய குறிப்பு அகநானூற்றில் வருகிறது.

குதிரை பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

## தொல்லெழுத்தியல்

அகழாய்வில் கிடைக்கும் மட்பாண்டங்களிலும், பானை ஓடுகளிலும் பலவற்றில் குறியீடுகளைப் போலவே பழந்தமிழ் எழுத்துக்கள் சொல்லாகவும், சிறு சொற்றொடர் படிவிலும் கீறப்பட்டுள்ளவைகளைக் காணலாம். இவை பெரும்பாலும் மலைக் குகைகளிலும், சிறுபான்மை பாறைகளிலும், மலைச் சாரல்களிலும் பொறிக்கப் பெற்றுள்ள பழந்தமிழ் எழுத்துக்களையே ஒத்துக் காணப்படுகின்றன.

இவற்றைப் பொதுவாகப் பிராமி எழுத்து (மொழி தமிழ்) என்று அழைப்பர். ஆனால் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் ஆந்திர மாநிலப் பட்டிப்ரோலிற்கு வடக்கே கிடைக்கும் இவ்வெழுத்துக்களைத் தென்பிராமி என்றும் அழைத்தனர். அதிலிருந்து இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியலாம்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் வர்க்க எழுத்துக்கள் இல்லாமல், மெய்கள் (சிலவற்றிற்குப் புள்ளியிட்டும், தொல்காப்பிய விதிகட்கு உட்பட்ட அமைப்பில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டும், ற, ன, ழ, எ, ஒ போன்ற தமிழுக்கேயுரிய சிறப்பெழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய்களில் காணப்பெற்றும் காணப்படுகின்றன. இவை பிராமி என்ற பெயருக்கு மாறாகக் தமிழி, திராவிடி என்ற பெயர்களையும் பெற்றிருந்தன. எனவே இவை தமிழ்நாட்டுக்குரிய தனி எழுத்து வகையைச் சார்ந்தவை என்பது புலப்படும்.

வடமாநில அகழாய்வுகளில் பானை ஓடுகள் தமிழ்நாடு போல மிகுதியாகக் கிடைப்பதில்லை. கிடைக்கும் பானை ஓடுகளிலும் எழுத்துப் பொறிப்புகள் மிகுதியாக இருப்பதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் பெருநகரங்களிலிருந்து விலகி நெடுந்தொலைவில் உள்ள சிற்றூர்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கூட மிகுதியான பழந்தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகளைக் காணுகின்றோம். எனவே இந்தியத் தொல்லியல் அறிஞர்களிடம் பிராமி–தமிழி–பழந்தமிழே! தமிழ்நாடே பிராமி வரிவடிவம் தோன்றிய இடமாக இருக்கலாம் என்ற கருத்து உருவாகியுள்ளது.

புகழூர் – ஆறுநாட்டார் மலையில் பதிற்றுப் பத்து 7, 8, 9–ஆம் பத்துக்களுக்குரிய அரசர் பெயர் வரிசையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. மாங்குளத்தில் நெடுஞ்செழியன் பெயரும், பணவன், கடலன், வழுதி போன்ற பாண்டியர் குலப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. ஜம்பையில் 'அதியந் நெடுமாந் அஞ்சி' பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

சங்ககாலத் தலைவர்களான பிட்டன், பண்ணன், ஓரி, நள்ளி, ஆய், கீரண் போன்றோர் பெயர்களையும், அகல், ஆதன், அந்தை, கண்ணன், வேள், அந்துவன், கிழார், சாத்தன், சாத்தந்தை, கொற்றன், கொற்றி, நாகன், வண்ணக்கண் போன்ற சங்க இலக்கியங்களில் மட்டுமே பயின்று வரக்கூடிய பல சொற்களையும் பானையோட்டப் பொறிப்புகளிலும், தமிழிக் (பிராமிக்) கல்வெட்டுக்களிலும் காணுகின்றோம்.

## யவனர் தொடர்பு

சங்க காலத்தில் தமிழ்நாட்டோடு யவனர் தொடர்பு இருந்தது. கிரேக்கர், ரோமானியர், எகிப்தியர், பாரசீகர், அராபியர் ஆகிய அனைவரையும் யவனர் என்று பொதுப் பெயரால் பழந்தமிழர் அழைத்தனர். அயோனியன் என்ற சொல்லே யவனர் என ஆயிற்று என்பர்.

அவர்களுள் ரோம் நாட்டார் வீரத்தால் தலைமை எய்தினர். ஜூலியஸ் சீசர் காலத்தில் அலெக்சாண்டிரியா ரோம் நாட்டவர் வசமானது. அகஸ்டஸ் காலத்தில் எகிப்து முழுவதும் ரோமானியர் கைவசமானது.

தென்னிந்திய வாணிகத்தைக் கிரேக்கர் மூலம் செய்த ரோமானியர் தாங்களாகவே அவ் வணிகத்தை மேற்கொள்ளலாயினர். செங்கடல் வழியாகத் தென் இந்திய – ரோம் வாணிகம் நடைபெற்றது.

மேற்குக் கடற்கரைக்கு மிளகு, சந்தனம், தந்தம், ஏலக்காய், அகில், தேக்கு, இலவங்கம், சில விலங்குகள், பறவைகள் ஆகியவற்றிற்காக வந்த ரோமானியர் பாலக்காடு, போளுவாம்பட்டிக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டுக்கு வருகைபுரிந்து பல வண்ண மணிக்கற்களைப் பெற்றுச் சென்றனர். நொய்யல் நதிக்கரை வழியாகக் காவிரியை அடைந்து சோழ நாட்டுக்கும், பாண்டிய நாட்டுத் துறைமுகங்களுக்கும் சென்றார். தூத்துக்குடி வரை சென்று முத்துக்களைக் கொள்முதல் செய்தனர். இவற்றுள் மிளகு யவனர்கட்கு (ரோமர்கட்கு) மிகவும் பிடித்தமான பொருள். 'மிளகை 'யவனப் பிரியா' என்றனர்.

அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிடைக்கின்றன. ரோமானிய மணிகளும் ரோமானிய உயர்வகைப் பானை ஓடுகளான ரௌலாடம், அரிட்டைன் வகை ஓடுகளும், அம்போரா என்னும் மதுக்குடங்களும், ரோமானிய சுடுமண் பொம்மைகளும், பல ரோம் அரசர்களின் தங்க, வெள்ளி, செம்புக் காசுகளும் தமிழ்நாட்டின் பல இடங்களில் கிடைத்துள்ளன.

அழகன் குளம், அரிக்கமேடு, ஆனைமலை, காஞ்சிபுரம், கரூர், காரைக்காடு, வசவசமுத்திரம், பொள்ளாச்சி, கொற்கை, வெள்ளையனிருப்பு, கொடுமணல் என அவ்வூர்கள் பலவாகும்.

"தோகை (துகி), அகில் (அகிலம்), அரிசி (அரிஜா, அரி), இஞ்சி (ஜிஞ்சர்), இஞ்சி வேர் (ஜிஞ்சிபார்) முதலிய தமிழ்ச் சொற்கள் யவனர் மொழியுட் புகுந்தன.

யவனர் கப்பல்கள் பொன்னோடு முசிறிக்கு வந்து பொன்னைக் கொடுத்துவிட்டுக் கப்பலில் மிளகை ஏற்றிச் செல்வர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

**'சேரலர்**
**சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்**
**வளம்கெழும் முசிறி'**

என்று அகநானூறு கூறுகிறது.

இன்னும் யவனர் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் குறிக்கப்பட்டுள்ளன. அவை

**'யவனர் இயற்றிய வினைமாண் பாவை'** (நெடு.101)

**'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து**
**நெய்தலைப் பெய்து கையிற் கொளீஇ'** (பதி.பதிகம் 2)

**'வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்**
**புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்'** (முல்.61–2)

**'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்**
**ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து**
**ஆங்கு இனிது ஒழுகுமதி'** (புறம்.56)

என்பனவாகும்.

யவனச்சேரி, யவன வீரர், யவனத் தச்சர் போன்ற குறிப்புக்களையும் காணுகிறோம். தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் மூலம் அவை அனைத்தும் ரோமானியர் தொடர்புடையவை என அறியப்படுகின்றன.

## கருவூர்ப் புதையல்

மேலைக் கடற்கரை நகரான வஞ்சி–கருவூர் எனப்பட்டது. அது சங்கச் சேரர் கோநகரம், சேரர்கள் கொங்கு நாட்டை வென்று கைப்பற்றினர். சேரர்கள் கொங்கு நாட்டிலும் ஒரு வஞ்சியை ஏற்படுத்தி அதற்கும் கருவூர் என்று பெயரிட்டனர்.

கரூரில் ஆட்சிபுரிந்து சேரரில் இரும்பொறை மரபு. அவருள் ஒரு சேர மன்னன் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் எனப்பட்டான். கருவூர் காவிரியின் தலை ஆறாகிய அமராவதிக் கரையில் உள்ளது. அதற்குச் சங்க இலக்கியப் பெயர் 'தண் ஆண்பொருநை' என்பது.

அமராவதி ஆற்றங்கரையில் அண்மைக் காலத்தில் தனியாரால் மிகமிக அரிய தொல்பொருட்கள் பல தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றுள் முத்திரைகளிலும், மோதிரங்களிலும், காசுகளிலும் பல எழுத்துப் பொறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை

குறவன் (முத்திரை)

தித்தின் (மோதிரம்)

தாயன் ஒதவன் (மோதிரம்)

சாத்தன் (மோதிரம்)

வேடுவன் (மோதிரம்)

குட்டுவன் கோதை (காசு)

கொல்லிப்பொறை (காசு)

கொல்லிரும் பொறை (காசு)

மாக்கோதை (காசு)

மாக்கோக் கோதை (காசு)

பெழுவழுதி (காசு)

என்பனவாம்.

இப்பெயர்களை நாம் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணுகிறோம். குறவர் பெருமான் குறமகன், குறவன் என்றும், தித்தன் என்றும், தாயங்கண்ணன் என்றும், கருவூர்க் கதப்பிள்ளை சாத்தன் உறையூர்க்






கதுவாய்ச் சாத்தன் என்றும், வேட்டுவன் என்றும், சேரமான் குட்டுவன் கோதை என்றும், பொறையன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றும், சேரமான் கோதை மார்பன் பெருவழுதி என்றும் சங்க இலக்கியங்களில் காணுகிறோம்.

## தமிழரின் கடற்செலவு

எகிப்தில் நடைபெற்ற அகழாய்வில் கண்ணன், சாத்தன் என்று தமிழில் படிக்கக் கூடிய சொற்கள் கிடைத்திருக்கின்றன. தாய்லாந்து நாட்டில் சங்க காலத் தமிழ் எழுத்தில் 'பெரும்பதன் கல்' என்று எழுதப்பட்ட உரைகல் கிடைத்துள்ளது. அதனைப் பெரும் பத்தன் என்று படித்துப் பொன்வேலை செய்வோன் என்று கருதுகின்றனர்.

தாய்லாந்தில் சங்ககாலச் சோழரின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட காசு கிடைத்துள்ளது. அண்மையில் காண்ஸ்டாண்டிநோயில் நகரத்தில் முசிறி வணிகர்கட்கும் மேனாட்டு வணிகர்கட்கும் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றிய கிரேக்க மொழி ஆவணங்கள் கிடைத்துள்ளன.

இவற்றால் பண்டைய சங்க காலத் தமிழரின் கடற்செலவு பற்றிய செய்திகளை அறிகின்றோம். சங்க இலக்கியத்துள் பழந்தமிழரின் கடற்செலவு பற்றிய பல குறிப்புக்களைக் காணுகிறோம்.

**'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆதுண்ட உரவோன் மருக'** (புறம்.66)

**'முந்நீர் வழங்கு நாவாய்'** (புறம்.13)

**'சினம்மிகு தானை வானவன் குடகடல்**
**பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழி**
**பிறகலம் செல்கலாது'** (புறம்.126)

**'ஏமுறு நாவாய் வரவு எதிர்கொள்வார்'** (பரி.10)

**'வேறுபல் நாட்டுக் கால்தர வந்த**
**பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை'** (நற்.295)

**'தீம் புகார்த் திரைமுன்துறை**
**தூங்கு நாவாய்'** (பட்.124)

என்பன தமிழர் கடல்செலவைக் காட்டும் தொடர்களாகும்.

★ ★ ★

# சோத்துப்பாறை அணை

பெரியகுளத்தில் இருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் சோத்துப்பாறை என்னுமிடத்தில் வராக ஆற்றின் குறுக்கே சோத்துப்பாறை அணைக் கட்டப்பட்டு வருகிறது. வராக நதியானது வைகை ஆற்றின் ஒரு முக்கிய உபநதியாகும். இந்நதியானது 2,090 மீட்டர் உயரத்தில் பழநி மலைகளில் உற்பத்தியாகி கிழக்கு சரிவின் வழியாக சுமார் 28 கி.மீ. தூரம் ஓடி வைகை அணைக்கு கீழே வைகை ஆற்றில் கலக்கிறது. வைகை ஆற்றில் வராக நதி கலக்கும் இடம் வரை வராக நதியின் நீர்ப்பிடிப்பு பரப்பு 322.56 சதுர கி.மீ. ஆகும். இதில் 153.6 சதுர கி.மீ. மலைப்பகுதியாகும். மலைப்பகுதியான நீர்பிடிப்பு பரப்பில் இரு பருவ காலங்களில் நல்ல மழை பெய்வதால் அதிக நீர்வரத்து உள்ளது. கடந்த 1982–ஆம் ஆண்டு சுமார் ரூ.8 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு துவக்கப்பட்ட சோத்துப்பாறை அணை கட்டும் பணியானது பல்வேறு காரணங்களால் காலதாமதமானது. பின்னர் நீர்வள ஆதார அமைப்பின் கீழ் உலக வங்கி உதவியுடன் கடந்த 1996–ஆம் ஆண்டு பணி துவங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து அணையின் கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கு தமிழக அரசு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. சென்னையைச் சேர்ந்த ஈ.சி.சி.இ. நிறுவனத்திடம் ரூ.24.99 கோடிக்கு 41 மாத காலத்திற்குள் அணையின் கட்டுமானப் பணியை முடிக்க வேண்டும் என்ற அரசு நிபந்தனையின் அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளி வழங்கப்பட்டு, கடந்த 1997–ஆம் ஆண்டு நவம்பர் 21–ஆம் தேதி முதல் அணை கட்டும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.



சோத்துப்பாறை அணை கட்டும் பணி மீது அக்கறை கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1998 ஆகஸ்ட் 30–ந் தேதி அன்று அணை கட்டுமான பணியைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சோத்துப்பாறை அணையானது 57 மீட்டர் உயரமும், 345 மீட்டர் நீளமும் கொண்டதாக ஆசியாவிலேயே 2வது மிகப்பெரிய உயரம் கொண்ட அணையாகக் கட்டப்பட்டு வருகிறது. இந்த அணையினால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இத்திட்டத்தின் தென்கரை கிராமம் 817 ஏக்கரும், தாமரைக்குளம் கிராமம் 223 ஏக்கரும் புதிதாக பயன்பெறுகிறது. இதன் மூலம் 1635 டன்கள் கூடுதலாக உணவு உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அணை நீர்வரத்தின் பரப்பு 38.40 ச.கி.மீ. நீர்வரத்தின் கூட்டு பரப்பு 48.64 ச.கி.மீ. நீர்த்தேக்கத்தின் முழு கொள்ளளவு 100 மில்லியன் கன அடி. நீர்ப்பிடிப்பின் பரப்பு 35.71 ஏக்கர் ஆகும். அணையின் அடித்தளம் மட்டம் 352.640 மீட்டர். அணையின் மேல் மட்டம் 409.64 மீட்டர். அணையின் மேல்மட்ட அகலம் 7.32 மீட்டர் ஆகும்.



இதன் மூலம் 1825 ஏக்கர் நஞ்சை பாசன பரப்பும், 1040 ஏக்கர் புஞ்சை பாசனப் பரப்பும் 67 ஏக்கர் இடைவெளி பூர்த்தி செய்யும் பாசன பரப்பும் பயன்பெறும் ஆய்க்கட்டுகளாகும். இதன் கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி 2001 ஏப்ரல் மாதம் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**– உல. ரவீந்திரன்,**
செய்தி–மக்கள் தொடர்பு
அலுவலர், தேனி.

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.8.2000 அன்று மாலை தலைமைச் செயலகத்தில் ஆய்வு நடத்தினார். இவ்வாய்வுக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், ஆட்சிமொழி, தமிழ்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சமூக நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.பி.சற்குணபாண்டியன், தலைமைச் செயலாளர் திரு ஏ.பி.முத்துசாமி, நிதித்துறைச் செயலாளர் திரு பி.வி.ராஜாராமன், உணவுத்துறைச் செயலர் திரு ஆர்.சந்தானம், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல்துறைச் செயலர் திருமதி எஸ்.மாலதி, மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி அனுராதாகதி ராஜீவன், ஊரக வளர்ச்சித்துறை செயலாளர், திரு ஆர்.சி.பண்டா, சமூக நலத்துறை செயலாளர் திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் விரிவாக தெரிவிக்கப்பட்டது. 30.7.2000 வரை 6,72,000 உறுப்பினர்களைக் கொண்ட 37,735 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இதுபோன்ற மகளிர் குழுக்கள் பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆறு மாதத்திற்கு மேற்பட்ட 20,800 குழுக்களில் ஏற்கனவே 12,500 குழுக்களுக்கு சுயதொழில் தொடங்க நிதி வசதி ஏற்படுத்தி கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தகுதியான குழுக்களுக்கு அடுத்த மூன்று மாதங்களுக்குள் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SGSY) போன்ற திட்டங்கள் மூலமாக நிதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரைக்கேற்ப, தமிழகம் முழுவதும் ஆகஸ்ட் 15–ஆம் தேதி நடைபெற்ற கிராமச் சபைக் கூட்டத்தில் 3 இலட்சம் மகளிர் கலந்து கொண்டனர். பெண்களுடைய திறமையை மேம்படுத்துவதற்காக மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி தற்போது 28 நியாய விலைக் கடைகள் 9 மாவட்டங்களில் மகளிர் குழுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களை அனைத்து ஊராட்சிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்களை மேலும் புதிய குழுக்கள் அமைக்க ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். மகளிர் குழுக்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் கிராமங்களுக்குச் செல்லும்போது மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும், மகளிர் குழுக்களுக்கு அரசால் செயல்படுத்தப்படும் நலவாழ்வுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் இத்திட்டங்களின் பயன்களை மகளிர் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தினார்.

★ ★ ★

# வலிமையான சுவர்

**– டாக்டர் ச. முருகானந்தம்**

ஒரு நாள் கதிரவன் விளையாடிக் கொண்டிருந்தபோது தவறி விழுந்தான். கால் முட்டியில் சின்ன சிறாய்ப்பு ஏற்பட்டது. லேசாக இரத்தம் கசிந்தது. எரிச்சல் பொறுக்க முடியவில்லை. அவனுக்கு ஏன்தான் விளையாடினோமோ என்றிருந்தது. மறுநாளே சிறாய்ப்பு ஆறிவிட்டது என்றாலும் அன்றிலிருந்து யார் விளையாடக் கூப்பிட்டாலும் வரமாட்டேன் என ஒதுங்கி இருக்கத் தொடங்கினான்.

அரையாண்டு தேர்வுகள் முடிந்தன. மறுநாள் கிருஸ்துமஸ். கிருஸ்துமஸ் முதல் ஆங்கிலப் புத்தாண்டுத் தினம் வரை ஒரு வாரம் பள்ளிக்கு விடுமுறை. கதிரவனின் அக்கா அங்கயற்கண்ணி நேரம் போகாமல் தவித்தாள். தம்பியைத் தன்னோடு விளையாட வரும்படி அழைத்தாள். அவன் மறுத்தான். சூடான பாலில் வாய் வைத்துச் சூடு கண்ட பூனை அதன்பிறகு ஆறிய பாலைக் கண்டாலும் பயந்து ஓடுவதைப் போலக் கதிரவன் பயப்படுவதாகக் கேலி செய்தாள்.

கதிரவன் கேலியைக் கூடப் பொறுத்துக் கொண்டான். ஆனால் விளையாட வரமாட்டேன் என அடம் பிடித்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அங்கயற்கண்ணி நேரடியாகப் படிப்பறைக்குச் சென்றாள். அப்பா புறநானூறு படித்துக் கொண்டிருந்தார். அம்மா 'பாரதியார் கவிதைகள்' எனும் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். தம்பி விளையாட வராமல் மறுப்பது பற்றி அங்கயற்கண்ணி தன் பெற்றோரிடம் சொன்னாள்.

அம்மாவும் அப்பாவும் கதிரவனை அழைத்தனர். கதிரவன் வந்தான். அம்மா அவனை அருகில் அழைத்து மடியில் உட்கார வைத்துக்கொண்டாள். 'விளையாடப் போனால் திரும்பவும் விழுந்து காயம் ஏற்படும். அதனால் விளையாடப் பயமாக இருக்கிறது' எனக் கதிரவன் அம்மா முகம் நோக்கிக் கூறினான். அம்மாவின் மனம் இளகிவிட்டது. "சரி ராஜா, அம்மா மடியிலேயே உட்கார்ந்து கொள்" என முத்தம் கொடுத்து கொஞ்சத் தொடங்கினாள்.



"கதிர், நான் முதன்முதலில் சைக்கிள் ஓட்டப் பழகியபோது கீழே விழுந்துவிட்டேன். அடி பலமாகப்பட்டு விட்டது. இதோ பார் பெரிய தழும்பு. இப்போது நான் சைக்கிள் ஓட்டுவதைப் பார்க்கிறாயா, இல்லையா? கீழே விழுகிறேனா? அதற்குப் பிறகு ஒருநாளும் விழுந்ததே இல்லை. ஒருமுறை கீழே விழுந்துவிட்டதற்காக சைக்கிள் ஓட்டப் பழகாமல் இருக்கலாமா? விபத்து என்பது எப்போதாவது ஏற்படும். எப்போதுமே விபத்துகள் தொடர்ந்து நிகழமாட்டா. அதுமாதிரிதான், நீ ஒரு முறை கீழே விழுந்ததுகூட".

கதிரவன் முகத்தில் கொஞ்சம் நம்பிக்கை பிரகாசித்தது. அப்பாவைத் தொடர்ந்து அம்மா அவனை அணைத்தவாறே "கதிர், தைரியமாகப் போய் விளையாடு. ஒன்பது வயது ஆகிவிட்டதே. நீ பயப்படலாமா? இதோ பார், பெரிய மீசை வைத்துக் கொண்டிருக்கிறாரே, பாரதியார் இவர் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

**"ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"**

இது இவர் எழுதிய பாட்டுத்தான். உனக்கு அர்த்தம் புரிகிறதா? உன்னைப் போன்ற குழந்தைகளுக்காகவே இந்தப் பாட்டை இவர் எழுதி வைத்திருக்கிறார்.

**"காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு**
**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டு – என்று**
**வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"**

– என்ற பாட்டு இதோ, இந்தப் பக்கத்தில் இருக்கிறது பார்.

மாலை முழுவதும் நன்றாக ஓடி ஆடி விளையாட வேண்டும். அப்படி விளையாடினால் தான் உனக்கு நன்றாகப் பசிக்கும். நன்றாகப் பசித்த பிறகு சாப்பிட்டால்தான் எந்த நோயும் வராது. நீ நல்ல பலசாலியாக, உயரமாக, உன் அப்பா மாதிரி வளர முடியும்.

"நம் வீட்டின் மேல் முதல்மாடி இருக்கிறதல்லவா? அதை எது தாங்கி நிற்கிறது? கீழே இருக்கிற இந்தச் சுவர்தான். கீழே வலிமையான சுவர் இருப்பதால் தான் நாம் மேலே ஓர் அடுக்கு வீட்டைக் கட்ட முடிந்தது. அது மாதிரிதான். நீ நல்ல பலசாலியாக, உடல் வலிமையோடு இருந்தால்தான் நன்றாகப் படிக்க முடியும். உனக்கு ஆரோக்கியமான உடம்பு வேண்டுமா? அல்லது நோஞ்சான் உடம்பு வேண்டுமா? எது வேண்டும்? ஆரோக்கியமான உடம்பு தானே? சரி, அக்காவோடு ஓடிப்பிடித்து விளையாடு பார்க்கலாம்"

கதிரவன் நெஞ்சில் நம்பிக்கை நிறைந்தது. பயம் எங்கு போயிற்றோ தெரியவில்லை. அம்மா மடியில் இருந்து எழுந்து பாய்ந்தோடினான். "அக்கா என்னைப்பிடி பார்க்கலாம்" – அவன் குரல் தோட்டத்தில் கேட்டது. அங்கயற்கண்ணி அவன் பின்னால் ஓடி விரட்டிக் கொண்டிருக்கிறாள். கதிரவன் அவள் கையில் அகப்படவே இல்லை. ★

சிறுவர் கதைகள் தொடருகிறது...

# சுற்றுச்சூழல்

கலையரசி, மேகலை, மலர், ஒளி, உமையாள் ஐவரும் அமர்ந்து வானொலி கேட்டுக் கொண்டிருந்தனர். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி ஒரு பேராசிரியரின் உரை வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. வானொலிப் பேச்சு முடியவும் மணிவண்ணன் வீட்டிற்குள் நுழையவும் சரியாக இருந்தது. மணிவண்ணன் மேகலையின் கணவர்; அவர்க்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலை. பெண்கள் பேச்சு சுற்றுச்சூழல் பற்றியதாக இருக்கவே மணிவண்ணன் அவர்கள் அருகில் அமர்ந்து கேட்கத் தொடங்கினார்.

அனைவருடைய கருத்துகளையும் கேட்ட பின்னர், அவர்க்கும் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும் எனும் ஆர்வம் எழுந்தது. போன மாதம் ஒரு மாத இதழில் இதுபற்றி வெளியாகி இருந்த கட்டுரையில் நிறைய செய்திகள் இருந்தன.

மணிவண்ணன் அக்கட்டுரையைக் கவனமாக, ஆழ்ந்து படித்திருந்தார். கட்டுரைச் செய்திகள் இப்போதும் அவரது நினைவில் உள்ளன.

"சென்ற ஆண்டு பெய்த மழைகூட, இந்த ஆண்டு பெய்யவில்லை" இது கலையரசி கருத்து. "போன வருடத்தைவிட இந்த வருடம் வெயில் அதிகம்" – இது மேகலை தந்த செய்தி. "விளைச்சல் குறைந்துவிட்டது; விலைவாசி ஏறிவிட்டது" – இது மலர் வருத்தத்தோடு வெளியிட்ட தகவல். "வாகனங்கள் வெளியேற்றும் புகையால், சுவாசிப்பதற்கு நல்ல காற்று கிடைக்காமல் போய்விட்டது" – இது ஒளி தந்த செய்தி. உமையாள் எல்லோருடைய செய்திகளையும் தகவல்களையும் "ஆம், ஆம்" எனக் கேட்டுக் கொண்டிருந்தாள். சட்டென்று "ஏன் இப்படி ஆயிற்று?" என்ற கேள்வியை அவள் கேட்டதும் நால்வரும் மணிவண்ணன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தனர்.

மணிவண்ணன், உமையாள் கேள்விக்கு விடையளிக்கத் தொடங்கினார். பெண்கள் ஐவரும் ஆர்வத்தோடு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர். "உலகம் முழுவதும் இருக்கிற பல்லாயிரக்கணக்கான சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடைய காடுகள் வெகுவேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. பாதைகள் அமைக்க, தொழில் வளம் பெருக்க, ஏற்றுமதியை அதிகரிக்க எனப் பலப்பலக்

காரணங்களுக்காகக் காடுகள் அழிக்கப்படுவது வழக்கமாகி விட்டது. மலையடிவாரக் காடுகள், சமவெளிக் காடுகள், ஆற்றுப்படுகைகளில் உள்ள காடுகள் எல்லாம் இப்போது காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. மலேசிய நாட்டின் முக்கியத் தொழில்கள் எல்லாம் காடுகள் அழிப்பின் பயனாகத்தான் நடைபெறுகின்றன. அண்மையில் அமேசான் காடுகளில் அழிவு தொடங்கிவிட்டது.

"காடுகள் அழிக்கப்படுவதால் பல தீமைகள் உருவாகின்றன. பூமியின் வெப்பநிலை உயர்கிறது; இதனால் கடல் நீர்மட்டம் அதிகமாகிறது. கடற்கரை அரிப்பாலும் கடல்நீர் நிலப்படுகையில் புகுவதாலும் நிலம் விவசாயத்துக்கு ஏற்றதாக இல்லாமல் போகும் ஆபத்து உள்ளது; நிலத்தடி நீர் கெடுகின்றது. வெள்ளத்தால் மண் அரிக்கப்படுகிறது. காடுகள் இருந்தால் அவை மண் அரிமானத்தைப் பெரும்பாலும் தடுத்துவிடும். காடுகள் அழிவதால் நல்ல வளமான வண்டல் மண் அரிக்கப்பட்டு அது வீணாகக் கடலை அடைகிறது. அதனால் பூமி பயனற்றுப் போகிறது; விளைச்சல் குறைய இதுவும் ஒரு காரணம் ஆகும்.

"தொழிற்சாலைகள் வெளியிடும் புகை, டீசல், பெட்ரோல் ஆகியவற்றால் ஓடுகிற வாகனங்கள் விடுகிற புகை, நிலக்கரி எரிக்கப்படுவதால் எழும் புகை ஆகியன காற்றில் தொடர்ந்து கலக்கின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப் படும் கழிவு நீர் ஆறுகள் மூலமாகக் கடலை அடைகிறது. சர்க்கரை, தாள், தோல் தொழிற்சாலைக் கழிவுநீர் நச்சுத்தன்மை மிகுந்தது. இது போகும் வழி எல்லாம் பாதிப்பை உண்டாக்கும். டீசல் முதலான கழிவு எண்ணெய் சில வேளைகளில் கடலில் கொட்டப்படுவதால், கடல்வாழ் உயிரினங்களும் அழிகின்றன. இதனால் மனித சமுதாயத்துக்கும் மறைமுகப் பாதிப்புகள் உண்டாகின்றன. காற்றில் கலக்கிற கார்பன்-டை-ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு ஆகிய நச்சுப் புகைகளால் ஏற்படும் விளைவுகள் அபாயமானவை. நுரையீரல் புற்று நோய்க்கு இவை வழிவகுக்கின்றன. மேலும் நமது பூமியைச் சுற்றி இருக்கிற ஓசோன் எனும் காற்று மண்டலக் கவசத்தில் இப்புகையால் இப்போது துளைகள் உண்டாகிவிட்டன. இதனால் சூரியனின் நச்சுக் கதிர்கள் எவ்விதத் தடையும் இல்லாமல் பூமியை நோக்கி விரைந்து வந்து தாக்குகின்றன. தோல் தொடர்புடைய நோய்களுக்கு இது காரணம் ஆகலாம் என அஞ்சப்படுகிறது.

"தொடர்ந்து இந்நிலைமை நீடித்தால் விளைவுகள் கற்பனைக்கே எட்டாதவையாய் இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்; சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி எச்சரிக்கின்றனர். பெரிய பெரிய நீர்த்தேக்கங்களால் காடுகள் நீரில் அமிழ்ந்து அழிந்து விடக்கூடாது என அறிவுரை கூறுகின்றனர். காடுகள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் மக்களும் அரசும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபாடு காட்ட வேண்டும் எனவும் பரிந்துரைக்கின்றனர்" என மணிவண்ணனின் விளக்கம் தொடர்ந்தது.

பெண்கள், புதுப்புதுச் செய்திகளைக் கேட்ட மகிழ்ச்சியில் முகம் மலர்ந்தனர். மணிவண்ணன் மேலும் தொடர்ந்தார்.

"வீட்டைச் சுற்றிலும் கழிவுநீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. மலேரியா, நச்சுக் காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்களுக்கு இக்கொசுக்கள் காரணம். ஆகவே வீட்டின் பக்கத்திலோ தெருக்கோடியிலோ ஊர், நகர் ஆகிய இருப்பிடங்களுக்கு அண்மையிலோ கழிவுநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேங்கும் நீரில் மருந்தடித்தால் கொசுக்கள் அழியும்.



வெட்டவெளியில் தெரு ஓரத்தில், நடைபாதைப் பகுதியில் மலம் கழிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளையும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இது காற்றை மாசுபடுத்துகிறது; நடந்து செல்பவர் பாதங்களில் படுவதால், கால் வெடிப்புகள் மூலம் உடலுக்குள் புகுந்து குடல் புழுக்களை, பூச்சிகளை உருவாக்குகிறது. மண்ணில் ஐந்தடி ஆழம் குழி தோண்டி அதில் மலம் மூடப்படுமானால் சுற்றுப்புறமும் எல்லா உயிரினங்களும் பாதுகாக்கப்படும் எனபது உறுதி" மணிவண்ணனின் பேச்சு அவர்கள் உள்ளத்தில் புதிய ஒளி பாய்ச்சியது. தங்களால் முடிந்த அளவுக்குச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முயல வேண்டும் எனும் உறுதியுடன் தத்தம் வீடு நோக்கிக் கலைந்து சென்றனர்.

★ ★ ★



# அறநிலையத்துறையின் அரும் பணிகள்

***கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்:***

தமிழ்நாட்டில் அறநிலையத்துறையின் ஆளுகையில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து அறுபது வயதினை அடைந்து, ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்க அரசாணையினை 22.1.1997 அன்று பிறப்பித்துள்ளது. இதுவரை 1099 தகுதியுடைய பூசாரிகளுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

***கருணை இல்லங்களுக்கு அரசு மானியம் :***

ஆதரவற்ற சிறுவர், சிறுமியரைப் பேணுவதற்குத் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் துவங்கப்பட்டுள்ளன.

38 திருக்கோயில்கள் மூலம் 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. அவற்றின் மூலம் 966 சிறுவர்களும், 433 சிறுமியர்களும் பயனடைந்து வருகின்றனர். மேற்கண்ட கருணை இல்லங்களில் 23 இல்லங்கள் சிறுவர்களுக்கு எனவும், 20 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கு எனவும் உள்ளது.

கருணை இல்லம், சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் உணவு, உறையிடம், உடை, மருத்துவம், கல்வி போன்ற அனைத்து வசதிகளும் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி இவ்வகையில் ஏற்படும் செலவினத்தில் 50 விழுக்காடு அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அரசாணை 15.6.98 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1998-99-ஆம் ஆண்டிற்கு ரூ.90.54 இலட்சம் அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஆணையரால் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

***தமிழில் ஆகம நூல்:***

திருக்கோயில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதை தமிழில் மொழி பெயர்த்து. வெளியிடக் கருதி முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகமம் என்ற நூல் 30.7.99 அன்று தமிழில் வெளியிடப்பட்டது.

***புத்தகங்கள் வெளியிடுதல்:***

வடபழனி திருக்கோயில் ஓதுவார் மரபினர் பற்றிய சிராய்வு என்ற நூல் அச்சிட்டு வெளியிட்டது. இதில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு 992 பிரதிகள் விற்கப்பட்டு இன்னும் 8 பிரதிகளே இருப்பில் உள்ளது.

***தமிழ்ப் புலவர்கள் நியமனம் :***

நிதிவசதி மிக்க திருக்கோயில்களில், அத் திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள் 150 பேர்களை நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் திருக்கோயில் நிதியிலிருந்து தொகுப்பு ஊதியம் வழங்க அரசு 6.6.97 அன்று உத்தரவிட்டது. இதுவரை 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

***புதிய செயல் அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்தல் :***

அரசாணை எண்.398, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 3.9.98-ன்படி செயல் அலுவலர் நிலை 3-இல் 100 பணியிடங்களும், செயல் அலுவலர் நிலை 4-இல் 100 பணியிடங்களும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

***துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணி:***

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள 25 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.25,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இதுவரை 250 திருக்கோயில்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

***தமிழ் போற்றி புத்தகங்கள் வெளியீடு:***

தமிழில் அர்ச்சனை செய்வது தொடர்பாக உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு இக்குழு ஒன்பது முறை தலைமைச்

செயலகத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கூடியது. இக்கூட்டங்களின் வாயிலாக அறிஞர் பெருமக்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அலுவலர்கள் ஆகியோர்கள் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட தமிழ் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகன் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி
4. அருள்மிகு திருமால் போற்றி
5. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு உமையம்மை போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கை அம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி (ஒன்பது புத்தகங்கள்)



மேற்கண்ட நூல்கள் திருக்கோயில்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தப் போற்றி புத்தகங்களைப் பொதுமக்கள் குறைந்த விலைக்கு வாங்கி பயன்பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் அருள்மிகு விநாயகர், அருள்மிகு சிவன், அருள்மிகு உமையம்மன் ஆகிய தெய்வங்களுக்கு 1008 போற்றிகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

***சைவத் திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யபிரபந்த பயிற்சி மையங்கள் :***

1998–99–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி திருக்கோயில்களில் பணிபுரிந்துவரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் ஆகியோர்களுக்கு ஓராண்டு கால புத்தொளிப் பயிற்சி அளிக்க சைவத் திருமுறை ஆகம பயிற்சி மையங்கள் 20, வைணவ திவ்ய பிரபந்த பயிற்சி மையங்கள் 7ம், 10.6.99 முதல் துவங்கி நடைபெற்று வருகின்றன.

பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் சுமார் 30 முதல் 35 பயிற்சியாளர்களுக்கு மிகாமல் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சியாளர் ஒருவருக்கு ஊக்கத் தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.20 வீதம் சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500 முதல் ரூ.2,500 வரை சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து சன்மானமாக வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

துறை மற்றும் திருக்கோயில் அலுவலர்கள், பணியாளர்கள் தவிர பொதுமக்களும் பயன்பெறும் வகையில் தக்க சான்றோர்கள், அறிஞர்கள், சமய வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு குறுகிய கால சமயப் பயிற்சி வகுப்பு 1998 மற்றும் 1999–ஆம் ஆண்டுகளில் 66 மையங்களில் நடத்தப்பட்டன. இதன் மூலம் 4426 பேர் பயனடைந்துள்ளனர்.



***நாதசுர இசைக் கலைஞர்களைப் புதிதாக பணியில் அமர்த்தல் :***

பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப் பெற்ற சரித்திரப் புகழ் வாய்ந்த, பழமையான திருக்கோயில்களில் கால பூசைகள் மற்றும் திருவிழாக்களின் பொழுது "மங்கள இசை" என சிறப்பிக்கப்படும் நாதசுர இசை இசைக்கப்படுவது மரபு. ஆனால் பல திருக்கோயில்களில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் நாதசுர இசை முழங்கவில்லை. எனவே நாதசுரம், தவில் மற்றும் தாளம் இசைக்கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தனியாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டித் தொகை மூலம் நாதசுர இசைக்கலைஞர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது

இதுவரை நாதசுரக் கலைஞர்கள் 30, தவில் கலைஞர்கள் 14, தாளம் கலைஞர் 4 ஆக 48 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

***தமிழ் இசைப்பள்ளி:***

தற்பொழுது 5 சைவத் திருக்கோயில்களில் தேவார இசைப் பள்ளிகளும், 4 வைணவத் திருக்கோயில்களில் திவ்ய பிரபந்த பயிற்சி வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. 8 திருக்கோயில்களில் நாதசுரம் தவில் பயிற்சி பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. தேவார இசைப் பள்ளிகளில் 80 மாணவர்களும், திவ்ய பிரபந்த இசைப்பள்ளிகளில் 55 மாணவர்களும் பயின்று வருகின்றனர். நாதசுரம், தவில் பயிற்சி பள்ளிகளில் நாதசுரப் பயிற்சிக்கு 80 மாணவர்களும், தவில் பயிற்சிக்கு 40 மாணவர்களும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றார்கள்.

தேவாரம், திவ்யபிரபந்தம், நாதசுரம் மற்றும் தவில் இசைப்பள்ளிகளில் பயிலும் உள்ளூர் மாணவர்களுக்கு மாதம் ரூ.300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு மாதம் ரூ.600 வீதமும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்த அரசு பதவியேற்ற பின்னர்தான் தமிழ் இசைப் பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

***திருக்கோயில்களில் ஓதுவார் நியமனம் :***

திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம் போன்ற சைவ திருமுறைகள் பாடுவதற்கு ஓதுவார்கள் இல்லாத திருக்கோயில்களில் பணி நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் தொகுப்பூதியம் வழங்கவும் நடவடிக்கை எடுத்து 43 திருக்கோயில்களுக்கு ஓதுவார் நியமனம் செய்ய ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***திருக்குறள் வகுப்புகள் :***

திருக்கோயில்களில் திருக்குறள் வகுப்புகள் துவங்கப்பட்டு இதுவரையிலும் 75 திருக்கோயில்களில் நடைபெற்று வருகின்றது.

***1991–96 (6/96) வரை இத்துறையில் நடைபெற்ற பணிகள் மற்றும் 1996 முதல் தற்போது வரை நடைபெற்ற பணிகளுக்கான ஒப்பீடு***

**நில மீட்பு :**

1996 ஜூன் முதல் நாளது வரை திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் மனைகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

| | நிலங்கள் ஏ.செ. | மனைகள் கிர.ச.அடி |
|---|---|---|
| அ) நீதிமன்ற நடவடிக்கைகளில் வாயிலாக திருக்கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பு பெறப் பட்டுள்ளவை | 1414.70 | 242.1581 |
| ஆ) சட்டப்பிரிவு 78(2) மற்றும் 79(பி)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மீட்கப்– பட்ட நிலங்கள் விபரம் | 14.98 | 28.0209 |
| இ) துறை அலுவலர்கள் மற்றும் பிற துறையினரின் உதவியுடனும் நேரடியாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட விவரம் | 429.47 | 110.1962 |
| மொத்தம் | 1859.15 | 381.1352 |

**வருவாய் :**

திருக்கோயில்களில் பசலி 1401–இல் இருந்து 1405 வரையில் ரூ.365.20 கோடி வருமானம் கேட்பு பதிவேட்டில் காணும் இனங்கள் மற்றும் காணப்படாத இனங்கள் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

பசலி 1406–இல் இருந்து 8/2000 வரை ரூ.548.71 கோடி வருமானம் கேட்பு பதிவேட்டில் காணும் இனங்கள் மற்றும் மற்ற இனங்கள் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

**திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு :**

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் 1990–91 முதல் 5/96 வரை 828 திருக்கோயில்களில் திருப்பணி முடித்து திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 13.6.1996 முதல் 9/2000 வரை 2459 திருக்கோயில்களில் திருப்பணி முடித்து திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்குடமுழுக்கு நடைபெற்ற சில முக்கிய திருக்கோயில்கள் விபரம்.

| வ.எண் | திருக்கோயில்களின் பெயர் | குடமுழுக்கு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில்,மயிலாப்பூர், சென்னை | 6.6.96 |

| | | |
|---|---|---|
| 2. | அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயில், திருப்பெரும்புதூர் | 5.7.96 |
| 3. | அருள்மிகு ரங்கநாதசாசுவாமி திருக்கோயில், திருநீர்மலை, சென்னை | 23.3.97 |
| 4. | அருள்மிகு தேவநாதசாமி திருக்கோயில், திருவேந்திரபுரம், கடலூர் | 27.3.97 |
| 5. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாபுலியூர், கடலூர் | 26.3.97 |
| 6. | அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடவூர், சீர்காழி வட்டம் | 26.3.97 |
| 7. | அருள்மிகு பிரகதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர் | 8.6.97 |
| 8. | அருள்மிகு சென்ன மல்லீஸ்வரர் கோயில், சென்னை | 16.6.97 |
| 9. | அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில், வேலூர் | 12.7.97 |
| 10. | அருள்மிகு லட்சுமிநரசிம்மசுவாமி கோயில், சோளிங்கர், வாலாஜா வட்டம் | 29.4.98 |
| 11. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவெண்காடு, சீர்காழி வட்டம் | 7.6.98 |
| 12. | அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம், திருவள்ளூர் வட்டம் | 7.6.98 |
| 13. | அருள்மிகு அரவிந்தலோசனர் திருக்கோயில், இரட்டைத்திருப்பதி, ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி | 1.7.98 |
| 14. | அருள்மிகு சென்ன மல்லீஸ்வரர் மற்றும் சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயில், தேவராஜ முதலி தெரு, சென்னை | 29.1.99 |
| 15. | அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், வல்லக்கோட்டை, திருப்பெரும்புதூர் வட்டம் | 26.3.99 |
| 16. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை | 23.6.99 |
| 17. | அருள்மிகு சாரங்கபாணி சுவாமி கோயில், கும்பகோணம், தஞ்சாவூர் | 30.6.99 |
| 18. | அருள்மிகு ஆதிகும்பேசுவரர் திருக்கோயில், கும்பகோணம் | 12.12.99 |
| 19. | அருள்மிகு திரவேங்கடமுடையான் கோயில், அரியக்குடி, இராமநாதபுரம் | 16.9.99 |
| 20. | அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் கோயம்பேடு, சென்னை 107 | 11.2.2000 |
| 21. | அருள்மிகு ஆதிநாதாழ்வார் கோயில், ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி | 10.2.2000 |
| 22. | அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி காளமேகப் பெருமாள் கோயில், திரமோகூர், மதுரை வடக்கு | 16.3.2000 |
| 23. | அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், வில்லிவாக்கம், சென்னை–49. | 16.4.2000 |
| 24. | அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், வேதாரண்யம், திருவாரூர் | 14.7.2000 |
| 25. | அருள்மிகு வேதநாராயணப்பெருமாள் திருக்கோயில் திருநாராயணபுரம், தொட்டியம், முசிறிவட்டம், திருச்சி. | 7.7.2000 |
| 26. | அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோயில், திருவாணைக்காவல், திருவரங்கம் | 12.7.2000 |
| 27. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி | 5.7.2000 |
| 28. | அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், மதுரை | 11.6.2000 |
| 29, | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி, ஈரோடு | 10.9.2000 |
| 30. | அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், சிவன்மலை, காங்கயம் வட்டம், ஈரோடு மாவட்டம் | 10.9.2000 |
| 31. | அருள்மிகு பூவராகசுவாமி கோயில், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்குடி, கடலூர் மாவட்டம் | 15.9.2000 |
| 32. | அருள்மிகு கல்யாண வெங்கட்டரமணசுவாமி கோயில், தான்தோன்றிமலை, கரூர் | 10.9.2000 |
| 33. | அருள்மிகு தாயுமானவர் கோயில், மலைக்கோட்டை, திருச்சி | 11.9.2000 |
| 34. | அருள்மிகு இரத்தினகிரிஸ்வரர் திருக்கோயில், சிவாயம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் | 15.9.2000 |



### *குடும்ப நலநிதி :*

பணியிலிருக்கும் போது இறக்கும் திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.30,000–லிருந்து ரூ.60,000–ம் ஆக 5.3.99 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

1991 முதல் 5/96 முடிய 409 பணியாளர்களுக்கு ரூ.70.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

6/96 முதல் 8/2000 வரை 582 திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.171.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### *கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி :*

இத்துறையின் ஆளுகையின் கீழுள்ள கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

1991 முதல் 5/96 முடிய ரூ.99.59 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

6/96 முதல் 8/2000 முடிய ரூ.112.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### *இலவசத் திருமணம் :*

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் நலிவுற்ற பிரிவுகளில் உள்ள தகுதியுள்ள இணைகளுக்கு இலவச திருமணம் திருக்கோயில் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. 1991 முதல் 6/1996 வரை 327 இணைகளுக்கு திருமணம் நடைபெற்றுள்ளது. 1996 முதல் 3.9.2000 வரை 2075 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

### *திருப்பணி நிதிகள்*

**அரசு மானியம் :**

1991–92 முதல் 1995–96 வரை ரூ.225 இலட்சம் அரசு மானியமாக திருக்கோயில்களின் திருப்பணிக்கென வழங்கப்பட்டுள்ளது. அரசாணை(நிலை) எண்.374 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 18.8.98–ன் படி ரூ.45 இலட்சமாக வழங்கி வந்த அரசு மானியம் 1998–99 முதல் ரூ.75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

1996–97 முதல் 1999–2000 வரை ரூ.240 இலட்சம் திருக்கோயில்களின் திருப்பணிக்கென அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**பொது நலநிதி :**

திருக்கோயில்களின் திருப்பணி, கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல், திருக்குளத் திருப்பணி, திருப்பணி தேர்த் திருவிழா போன்ற பல்வேறு இனங்களுக்கு பொது நல நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது. 1991 முதல் 5/96 வரை 194 திருக்கோயில்களுக்கு ரூ.96.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1996–97 முதல் 8/2000 வரை 92 திருக்கோயில்களுக்கு ரூ.117.95 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### *கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் :*

சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் நிர்வாக செலவுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.13.70 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது 1999–2000–ஆம் ஆண்டு முதல் அரசு மானியம் மேலும் கூடுதலாக 6 இலட்சம் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி வட்டித் தொகையிலிருந்து மேற்படி திருக்கோயில்களின் நிர்வாக செலவினங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.14.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.



*புதுக்கோட்டை திருக்கோயில்கள் :*

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருக்கோயில்கள் ஒருங்கிணைத்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதற்கென அரசு மானியமாக ரூ.9.30 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. அரசாணை எண்.281 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 28.8.2000–ன்படி அரசு மானியம் ரூ.15.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

*திருக்கோயில் பணியாளர்கள் நலத் திட்டங்கள் :*

**சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் :**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு வருங்கால வைப்பு நிதித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் ஏழு இலட்சம் கொண்டதான வைப்பீடு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டப் – படி, மாதந்தோறும் ரூ.20 வீதம் பணியாளர்கள் உறுப்பினர் கட்டணத் தொகை செலுத்து–கின்றனர். பணியாளர் ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, வட்டியுடன் அவருக்கு வழங்கப்படும் ஆணையர் பங்குத் தொகை ரூ.500–லிருந்து ரூ.1000–ஆக 12.2.1999 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

**திருக்கோயில் பணியாளர் சேமநல நிதி திட்டம் :**

சட்டப் பிரிவு 116(2) (XX) (iii) – 32–இல் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு வருங்கால சேமநல நிதி ஏற்படுத்த வேண்டுமென உள்ளவாறு உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.10,000–க்கு மேல் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்குப் பணியாளரின் சம்பளத்தில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்தத் தொகைக்கு இணையான தொகையினை திருக்கோயில் நிதியிலிருந்து இத்திட்டத்திற்கென துவக்கப்பட்ட வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பணியாளர் ஓய்வு பெறும் தேதியில் மேற்படி தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 1.10.1997 முதல் நடைமுறைப்–படுத்தப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர் நலநிதி திட்டம் :**

இந்தத் திட்டத்தின் கீழ் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைகளை வழங்க பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனமாக வைப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறநிலையங்களில் பணியாற்–றிடும் ஊழியர்களுக்கு இந்த வைப்பு நிதி வட்டித் தொகையிலிருந்து சம்பள பாக்கிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டப்படி போதிய வருமானம் இல்லாத, ஆண்டு வருமானம் ரூ.40,000–க்கும் கீழுள்ள அறநிலையங்களில் பணியாற்றி மாத ஊதியம் ரூ.400க்கும் குறைவாகப் பெற்றுவரும் ஊழியர்கள் சம்பள பாக்கி வழங்கப்படுகிறது.



1991 முதல் 5/96 வரை 4541 பணியாளர்களுக்கு ரூ.63.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 6/1996 முதல் 1998–99 வரை 3269 திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.63.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதிய நலத் திட்டம் :**

திருக்கோயில்களில் பணியாற்றி வயது முதிர்வு காரணமாக பதவியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களின் நலன் காக்க திருக்கோயில்களில் 20 ஆண்டு காலம் பணியாற்றி 60 வயதில் ஓய்வு பெற்ற கீழ்க்கண்ட உள்துறை பணியாளர்களுக்கு பயனாளி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300–லிருந்து ரூ.500–ஆக 9.9.96 முதல் உயர்த்தப்பட்டு தற்போது கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

| பணியாளர்களின் விவரம் | பயன்பெறும் நபர்கள் |
|---|---|
| **1. அர்ச்சகர்கள்:** | |
| சைவம் | 468 |
| வைணவம் | 175 |
| 2. வேதபாராயணம் / திவ்யபிரபந்தம்/ அரையர் சேவை | 43 |
| 3. இசைக்கலைஞர்கள் | 85 |
| 4. ஓதுவார்கள் | 117 |
| மொத்தம் | 888 |

***திருக்கோயில் பணியாளர்களுக்கான வேறு பல நலத்திட்டங்கள் :***

**முன்பணம் :**

(I) பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்துகின்ற பணியாளர்களின் இறுதிச் சடங்குகள் செய்ய ரூ.2,000 முன்பணமாக 17.9.1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

(II) அறநிலையங்களில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்குத் திருமண முன்பணமாக பணியாளரின் மகன் திருமணத்திற்கு ரூ.6,000–மும், மகள் திருமணத்திற்கு ரூ.10,000–மும் திருக்கோயில் நிதி வசதிக்கேற்ப 17.9.1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**பண்டிகை முன்பணம்:**

திருக்கோயில் பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணம் ரூ.1,000 – 9.10.97 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**மருத்துவப்படி :**

மேலும், திருக்கோயில் பணியாளர்களுக்கு மருத்துவப் படியாக திங்கள் தோறும் ரூ.50 என 17.9.1997 முதல் உயர்வு செய்து வழங்கப்படுகிறது.

***சீருடை சலவைப்படி :***

17.9.1997 முதல் திருக்கோயில் பணியாளர்களுக்குச் சீருடை சலவைப்படியாக மாதம் ரூ.10 வழங்கப்படுகிறது.

**கடன் வசதி :**

17.9.1997 முதல் திருக்கோயில் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க ரூ.20,000 வரை கடனாக வழங்கப்படுகிறது.

**பொங்கல் பரிசு :**

2000–ஆம் ஆண்டு பொங்கல் பரிசாக உதவி ஆணையர், துணை ஆணையர் மற்றும் இணை





ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற பணியாளர்–களுக்கு ரூ.725–ம், பிற திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ.675–ம் வழங்கப்பட்டது.

**சிறப்பு ஊதியம் :**

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி மற்றும் குடமுழுக்கின் போது பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.1,300 மற்றும் ரூ.1,100 நிலைக்கு ஏற்ப அல்லது ஒரு மாத சம்பளம் இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை :**

ரூ.1 இலட்சத்திற்கு மேல் உதவித்தொகை நிர்ணய வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரே நிலையில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்குத் தேர்வு நிலையும் 20 ஆண்டுகளுக்கு மேல் ஒரே நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு நிலையும் 1.10.1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**அகவிலைப்படி**

1.1.98 வரை முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த அகவிலைப்படி, 1.1.98 முதல் ரூ.1 இலட்சத்திற்கு மேல் வருமானம் பெறும் திருக்கோயில்களைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

**வீட்டு வாடகைப்படி :**

1990–இல் திருக்கோயில் பணியாளர் களுக்கு அறிவிக்கப் பட்ட வீட்டு வாடகைப்படி திருக்கோயில் பணியாளர்களுக்கு 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டது.

**நகர ஈட்டுப்படி :**

1.6.98 முதல் அனைத்து திருக்கோயில் பணியாளர்களுக்கும் நகர ஈட்டுப்படி 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927

# கலைஞர் அரசில்
## வீதிகளில் விளைந்த விண்மீன்கள்





## உன்னதமான திட்டங்கள் ஒளிமயமாகும் தமிழகம்

**கிராமங்களில் - 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்.**

**12 ஆயிரம் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்**

**நகரங்களில் - 1 லட்சத்து 50 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்.**

**90 ஆயிரம் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்**

தமிழரசு



பதிவு எண். M.8676
LICENCE No. TN/MS(C)/PP-23

# தமிழரசு

அக்டோபர் 1–31, 2000 ரூ. 10



# கலைஞர் ஆட்சியில்

## பள்ளிதோறும் கணினிக் கல்வி





# தரணி ஆள
# கணினிக் கல்வி
# தயார் நிலையில்
# தமிழகப் பள்ளி



**அனைத்து அரசு மேனிலைப்பள்ளிகளிலும்**
**கணினிப் பயிற்சி**

**கடந்த ஆண்டில் 666 பள்ளிகளில் ரூ.112 கோடி செலவில் கணினிப் பயிற்சி**
**இவ்வாண்டில் 515 பள்ளிகளில் ரூ.73 கோடி செலவில் கணினிப் பயிற்சி**
**16 மாநகராட்சி பள்ளிகளில் ரூ.1.85 கோடி செலவில் கணினி**
**60 கலை அறிவியல் கல்லூரிகளில் ரூ.28.22 கோடி மதிப்பீட்டில் கணினி**
**12 மருத்துவக்கல்லூரிகளில் ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் கணினி**
**5 சட்டக் கல்லூரிகளில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் கணினி**


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
புரட்டாசி–ஐப்பசி
அக்டோபர் 1–31, 2000
மலர் : 32 இதழ் : 7&8
விலை ரூ.10


முதல் பக்க அட்டையில்...

காமராஜர் மணிமண்டபம் திறப்புவிழா

கடைசிப்பக்க அட்டையில்...

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோர் ஐ.நா. அமைதி சாசனத்தில் கையொப்பமிடுகிறார்கள்.

இந்த இதழில்...


- கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் — 2
- தூத்துக்குடியில் மருத்துவக்கல்லூரி — 6
- திருவள்ளூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் — 9
- வேலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் — 25
- வணிக பெருமக்களுக்கு ரூ.2,700 கோடி வரிச்சலுகை — 38
- கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் — 42
- புதுப்பொலிவு பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம் — 49
- மின்னணு ஆளுமை மாநாடு — 57
- இணையமும் இன்றியமையாமையும் — 61
- ரயில் தண்டவாளத்தில் ஓடும்... — 65
- பொய்கையாறு - நம்பியாறு அணை திறப்பு — 74
- செய்திச்சரம் — 78
- மறுமலர்ச்சிக் காணும் மலைவாழ் மக்கள் — 81
- இராணுவத்தில் சேர... — 83
- களவழி நாற்பதில் உவமைத்திறன் — 86


### திருக்குறள்

**குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

ஒருவரின் குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

— கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# கன்னியாகுமரி கடற்கரையில்

# காமராஜர் மணிமண்டபம்

"பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்தவுடன் அவர்களுடைய அஸ்தி பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அதிலே ஒரு இடமாக கன்னியாகுமரி கடற்கரையில் மறைந்த என்னுடைய அருமை நண்பர் பொன்னப்ப நாடார் அவர்களும், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களும், பெரியவர் இஸ்மாயில் அவர்களும் முன்னின்று அந்த அஸ்தியை வைத்த இடத்தில் ஒரு மண்டபம் கட்ட வேண்டுமென்கிற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக இருந்து, இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது.

**25 ஆண்டுக் கால கோரிக்கை நம் கண்ணெதிரே மணிமண்டபமாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது**

காமராஜருக்கு மணிமண்டபம் திறக்கின்ற விழாவிலே கோரிக்கைகள் எதுவும் வைக்கத் தேவையில்லை என்று அருமை நண்பர் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி இங்கே தெரிவித்ததற்குக் காரணமே, ஒரு பெரிய கோரிக்கை நிறைவேறியிருக்கின்ற போது மேலும் கோரிக்கைகள் தேவைதானா என்ற அந்தப் பொருளிலேதான் அவர் அதைச் சொன்னார். ஏனென்றால் 25 ஆண்டுக்கால கோரிக்கை நிறைவேறுமா என்ற வினாக்குறியோடு தொங்கிக் கொண்டிருந்த கோரிக்கை நிறைவேறி நம்முடைய கண்ணுக்கெதிரே மணிமண்டபமாக ஒளி விட்டுக் கொண்டிருக்கின்றது.



25 ஆண்டுக் காலம் இதிலே தயக்கம் ஏன் ஏற்பட்டது என்பதை கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது இந்தக் கோரிக்கை யாரால் எப்படி நிறைவேறியிருக்கின்றது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 25 ஆண்டுக் காலமாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் ஒரு மணி மண்டபம் கூட அல்ல, ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று முயற்சித்த நேரத்தில் குறிப்பாக என்னுடைய நண்பர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் அதற்காகக் குரல் கொடுத்த நேரத்தில் எல்லாம், முயற்சிகளை மேற்கொண்ட நேரத்தில் எல்லாம், மத்திய அரசு அதற்கான அனுமதியைத் தரவில்லை.

அந்த இடம் – இப்போது நாம் மணிமண்டபம் கட்டியிருக்கிறோமே, அந்த இடம், ஒதுக்கப்பட்ட பகுதி, அந்தப் பகுதியிலே இனிமேல் எந்தக் கட்டடங்களும் எழுப்பக்கூடாது என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. நான் 1989–90–ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலக் கட்டத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அப்போதிருந்த மத்திய அரசால் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு கூட பலமுறை முயற்சித்தும் அனுமதி கிடைக்க வில்லை. பிறகு வந்த வேறு ஆட்சி யாளர்கள் இதற்காக முயற்சித் தார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அவர்களோடு கூட்டணியிலே இருப்பவர் களுக்குத்தான் தெரியும்.

ஆனால் தொடர்ந்து குமரி அனந்தன் அவர்கள் இதை வலியுறுத்தி வந்து, இதற்காகப் போராட்டங்கள், உண்ணா விரதங்கள் எல்லாம் இந்தப் பகுதியிலே நடைபெற்ற போது நான் அதை அலட்சியப்படுத்தவில்லை. நான் எதையும் அலட்சியப்படுத்தக் கூடியவனல்ல. ஏனென்றால் நான் அகம்பாவக்காரனல்ல. ஆணவம் பிடித்தவனுமல்ல. அதனால் தான் அதை அலட்சியப்படுத்தவில்லை.

அலட்சியப்படுத்தாததற்கு இன்னொரு காரணம் உண்டு. மணி மண்டபம் எழுப்ப வேண்டுமென்பதில் இவர்களுக்கெல்லாம் எவ்வளவு அக்கறை உண்டோ அதே அக்கறை காமராஜருக்கு மணி மண்டபம் அமைப்பதில் எனக்கும் உண்டு என்பதால் நான் அதை அலட்சியப்படுத்தவில்லை. கடைசியாக மத்திய அரசில் ஏன் இந்த அனுமதி கிடைக்கவில்லை என்று பார்த்தபோது, இது கடற்கரைப்பகுதி, இங்கே உயரமான கட்டடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்று தடை போடப்பட்டிருக்கிறது, அப்படி தடை விதிக்கப்பட்ட இடத்திலே எந்தச் சின்னமும் எழுப்பக்கூடாது. ஏற்கெனவே ஒரு காந்தி மண்டபம் இந்தப் பகுதியிலே எழுப்பியாகி விட்டது. இனிமேல் இந்த இடத்தில் எந்தச் சின்னமும் எழுப்பக் கூடாது என்று சொன்னார்கள்.



அதற்குப் பிறகு நான் 1996–இல் மீண்டும் நான்காவது முறையாக முதல் அமைச்சராக வந்த பிறகு, அந்த முயற்சியிலே ஈடுபட்டேன். மத்திய அரசுக்குப் பல கடிதங்கள் எழுதினேன். நான் எழுதிய கடிதங்கள் பற்றிய விவரங்களைத் தேதி வாரியாக வைத்திருக்கிறேன். அதற்குக் கடைசியாக வந்த பதில் இது தடை விதிக்கப்பட்ட இடம். அங்கே காமராஜருக்கு மண்டபம் கட்ட இயலாது என்று வருத்தத்தைத் தெரிவித்து இன்றுள்ள மத்திய அரசிடமிருந்து வந்தது. அதற்குப் பிறகுதான் பிரதமர் வாஜ்பாய் அவர்களைத் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசினேன். அவரும் அதனை மிகுந்த அனுதாபத்தோடு கேட்டார்.

நான் அவரிடம் இந்த மண்டபம் ஒன்றும் வானளாவ எழுப்பப்படுகின்ற மண்டபம் அல்ல. பக்கத்திலே இருக்கின்ற காந்தி மண்டபத்திற்கு இணையான உயரத்தோடு தான் இங்கே எழுப்பப்படவிருக்கின்றது. இந்த மண்டபம் ஒன்றும் அங்கேயுள்ள விவேகானந்தர் பாறையிலே உள்ள மண்டபத்தைவிட உயர்ந்த மண்டபம் அல்ல. அதைவிட உயரம் குறைவாகத்தான் இருக்கப் போகிறது. எனவே இந்த மண்டபத்திற்கு அவசியம் அனுமதி கொடுங்கள் என்று சொன்ன பிறகு உடனடியாக அதை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்து இதற்கான அனுமதியை வழங்கியவர் இன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் குமாரதாஸ் இங்கே பேசும்போது இன்றைக்கு டெல்லியிலே இருப்பது வாஜ்பாய் அல்ல, கருணாநிதிதான் ஆட்சியிலே இருக்கிறார் என்றார். இந்த ஒரு விஷயத்திலே, காமராஜர் விஷயத்திலே அங்கே ஆட்சியிலே இருப்பது கருணாநிதிதான் என்பதை குமாரதாஸ் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை இளைஞர்களுக்குப் பாடமாக அமைய வேண்டிய ஒன்று**

பெருந்தலைவர் காமராஜருடைய வாழ்க்கை நம்முடைய நாட்டு இளைஞர்களுக்கெல்லாம் பாடமாக அமைய வேண்டிய ஒன்று. அரசியல்வாதிகள் எல்லாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு வாழ்க்கைச் சரித்திரம் பெருந்தலைவர் காமராஜருடைய வாழ்க்கையாகும். அப்படிப்பட்ட தலைவருக்கு இன்றைக்கு நாம் செய்திருக்கின்ற இந்தக் கடமை மிகமிகச் சிறியதுதான் என்றாலுங்கூட அதை நான் பெரிதாகப் போற்றுவதற்குக் காரணம், பெருந்தலைவருக்காக நாம் எழுப்பியிருக்கின்ற சின்னம் என்பதினாலேதான்.

அவருடைய வாழ்க்கையிலே எத்தனையோ கட்டங்கள், என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய தலைவர் அண்ணாவைப் பொறுத்தவரையில், ஏன் அண்ணாவை உருவாக்கிய தந்தை பெரியாரைப் பொறுத்தவரையிலே கூட • பல நேரங்களில் காமராஜரோடு ஒத்துப் போயிருக்கிறோம். பல நேரங்களிலே ஒத்துப்போக முடியாத சூழ்நிலை இருந்திருக்கின்றது. பெரியாருக்கே அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்திருக்கின்றது. காமராஜருக்காக காங்கிரசை ஆதரிப்பேன் என்று சொன்ன பெரியார்கூட காமராஜரை எதிர்க்க வேண்டிய கட்டாயம் சில நேரங்களில் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் எவ்வளவுதான் அரசியல் மாறுபாடுகள் இருந்தாலுங்கூட, அரசியலிலே கடைப்பிடிக்க வேண்டிய நாகரிகம், பண்பாடு இவைகள் எங்களைவிட்டு அகலாத காரணத்தால், பெரியாரை விட்டு அகலாத காரணத்தால், அண்ணாவைவிட்டு அகலாத காரணத்தால், பெருந் தலைவர் காமராஜரை விட்டு அகலாத காரணத்தால் நண்பர்களாகவே அரசியல் விரோதங்களைச் சமாளிக்கக் கூடிய அந்த நிலை எங்களிடையே இருந்தது என்பதை நான் எண்ணிப் பார்க்காமல் இல்லை.

இதே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்ட நேரத்தில் இங்கே பேசிய மோசஸ் அவர்களின் தந்தையார் மத்தியாஸ் அவர்கள் இங்கே சுயேச்சையாகப் போட்டியிட்டபோது அவரை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது என்பதும் அதற்காக நான் இங்கே முகாமிட்டுப் பணியாற்றினேன் என்பதும் மறக்க முடியாத சரித்திரம். ஆனால் அப்படி எதிர் முகாமிலே இருந்த நான் இன்றைக்குப் பெருந்தலைவர் காமராஜருக்கு மணி மண்டபம் அமைக்கிறேன் என்றால் அதற்கென்ன பொருள் ? இதுதான் தமிழ்நாட்டு அரசியலிலே நாம் கட்டிக் காப்பாற்ற வேண்டிய பண்பாடு, நாகரிகம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதற்குப் பொருள். அதைத்தான் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம்.

**இந்தச் சாமான்யனால் அந்தச் சாமான்யருக்கு மணிமண்டபம் எழுப்ப முடிந்தது**

காமராஜர் சாதாரண குடும்பத்திலே பிறந்தவர். ஒரு சாமான்ய குடும்பத்திலே பிறந்தவர். என்னைப் போல. நான் அவர் பிறந்த குடும்பத்தை விட இன்னும் சாமான்ய குடும்பத்திலே பிறந்தவன். அதனால்தான், இந்தச் சாமான்யனால் அந்தச் சாமான்யருக்கு மண்டபம் எழுப்ப முடிந்தது என்று நான் கருதுகிறேன். சாமான்ய குடும்பத்திலே பிறந்த காரணத்தால் தான் அவருடைய வாழ்நாள் எல்லாம் சாமான்ய மக்களுக்காகப் பாடுபட்டார். பணியாற்றினார். சாமான்ய மக்களை எண்ணிப் பார்த்தார். அவர்களுக்காக அவருடைய ஆட்சிக் காலத்திலே திட்டங்களைத் தீட்டினார்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.1951–ஆம் ஆண்டு வாக்கில் தமிழகத்திலே ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. அது என்ன புரட்சி என்பதை நான் உங்களுக்கு

விளக்க விரும்புகிறேன். இட ஒதுக்கீடு – வகுப்புவாரி பிரதிநிதித்துவம். அதற்கு வேட்டு வைக்கின்ற ஒரு முயற்சி உயர்நீதி மன்றத்தைத் தாண்டி, உச்சநீதி மன்றம் வரை சென்று, உச்சநீதிமன்றமும் இட ஒதுக்கீட்டிற்கு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சலுகை அளிக்க, உரிமை அளிக்க; இடங்களை ஒதுக்கித்தர, கல்வி வேலை வாய்ப்பிலே அவர்கள் முன்னேற வழி வகுக்க, உச்சநீதிமன்றமே இடையூறாக வந்து அரசியல் சட்டத்தை அதற்காகத் திருத்தித்தான் தீரவேண்டும் என்றதொரு நிலைமை ஏற்பட்ட போது தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் களம் புகுந்தார்கள். இருவரும் களம் புகுந்து, இட ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று குரல் கொடுத்தார்கள்.

அந்த நேரத்தில், அந்தக் குரலுக்கு ஆதரவாக காங்கிரஸ் பேரியக்கத்திலிருந்தும் சில குரல்கள் எழுந்தன. காங்கிரஸ் பேரியக்கத்திலே யார் யார் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் தலைவர்களோ, கே.டி.கோசல்ராம் போன்றவர்கள், ஆர்.வி.சாமிநாதன் போன்றவர்கள் எல்லாம் காங்கிரஸ் இயக்கத்திலிருந்தே அன்றைக்குப் பெரியாருக்கும், அண்ணாவிற்கும் ஆதரவாகக் குரல் கொடுத்தார்கள்.

அதையெல்லாம்விட வீரமிக்க குரலாக, வலிமை மிக்க குரலாக ஒரு குரல் ஒலித்தது. குரல் ஒலித்தது மாத்திரமல்ல, ஆக்க பூர்வமாகவே, பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களைச் சந்தித்து அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று வாதாடி, போராடி வெற்றியைப் பெற்றது ஒரு குரல் என்றால் அதுதான் பெருந்தலைவர் காமராஜருடைய குரல் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இவைகள் எல்லாம், எங்களுக்கு அவரிடம் ஆயிரம் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு அலாதியான தனியான பிரியத்தை ஏற்படுத்தியது.

அதனால் தான் 1952–ஆம் ஆண்டுவாக்கில் அவர் குடியாத்தத்தில் தேர்தலுக்கு நின்றபோது, கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்து அவர் அங்கே போட்டியிட்ட போது, அவர் மீண்டும் பதவிப் பொறுப்பையேற்று முதலமைச்சராக வரவேண்டும் என்பதற்காக – அவர் சட்டமன்றத்திற்கு வந்து விட்டார். ஆனால் சட்டமன்ற உறுப்பினராக ஆகவில்லை – சட்டமன்ற உறுப்பினராக ஆனால் தான் முதலமைச்சர் பதவி நீடிக்கும் என்பதற்காக குடியாத்தம் தொகுதியிலே வெற்றி பெற்ற காங்கிரஸ் சட்டமன்ற . உறுப்பினர் ராஜினாமா செய்துவிட்டு, அந்த இடத்திலே போட்டியிட்டார். அந்த நேரத்திலே காமராஜரும், அண்ணாவும், திராவிட இயக்கமும் காமராஜரும் எதிரும் புதிருமாக இருக்கிறார்கள். இருந்தாலும்கூட காமராஜரை ஆதரித்து அண்ணா அவர்கள் திராவிட நாடு பத்திரிகையிலே "குணாளா, குலக்கொழுந்தே, உன் வெற்றிக்காக நாங்கள் பாடுபடுவோம்" என்று அன்றைக்கே எழுதினார். இன்றைக்கும் அதைப் படித்துப் பார்க்கலாம். இவைகள் எல்லாம் எங்களுக்கு காமராஜரிடத்திலே உள்ள அன்பை, பாசத்தை மேலும் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு அமைந்தவைகளாகும்.




அவர் மொழிப் பிரச்சினையிலே எந்த அளவிற்கு உறுதியாக இருந்தார் என்பதற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற காரணத்தால் சிலவற்றை வெளிப்படையாகச் சொல்ல முடியாவிட்டாலுங்கூட, அவர் உணர்வு எப்படிப்பட்டதாக இருந்தது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். சட்டப் பேரவையில் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் குழுவின் தலைவர், பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சர்.

அப்பொழுது சட்டப் பேரவையிலே காரசாரமாக ஒரு விவாதம் நடைபெறுகிறது. அதிலே கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், என்னுடைய அருமை நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் ஆங்கிலத்தை கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடமொழியாக வைக்கக்கூடாது. அகற்ற வேண்டும். தமிழ்தான் அரிச்சுவடியிலிருந்து முதுகலைப் பட்டப்படிப்பு வரை இருக்க வேண்டும் என்று பேசுகிறார். அண்ணா முன் வரிசையிலே அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். அண்ணாவிற்கு அடுத்த பின் வரிசையிலே நானும் பேராசிரியரும் அமர்ந்திருக்கிறோம். அப்பொழுது பெருந்தலைவர் காமராஜர் அவருடைய இடத்திலே இருந்தவாறே அண்ணாவைக் கைகாட்டி அருகே அழைக்கிறார். பிறகு காமராஜர் அங்கிருந்தவாறே



கைகாட்டி என்னையும் அழைக்கிறார். நான் போய் அண்ணாவிற்கும் வி.கே.ராமசாமி முதலியாருக்கும் இடையே அமருகிறேன். அப்பொழுது என்ன பேசினார்கள் தெரியுமா?

பெருந்தலைவர் காமராஜர் அண்ணாவிடம், "என்ன தமிழ், தமிழ் என்று சொல்கிறீர்களே, நானென்ன தமிழுக்கு விரோதியா? எனக்குத் தமிழ் பிடிக்காதா?" என்று கேட்டார். அதற்கு அண்ணா, "என்ன சொல்கிறீர்கள்?" என்றார். உடனே பெருந்தலைவர் காமராஜர் அவருடைய கொச்சைத் தமிழிலேயே "அவுங்க பேசுறாங்களே, இங்கிலீஷ் அறவே கூடாது. தமிழே எல்லா இடத்திலும் இருக்கணும்னு பேசுறாங்களே, இங்கிலீஷை அறவே அகற்றிட்டா என்னாகும்னு நினைக்கிறீங்க? இங்கிலீஷை அறவே அகற்றிட்டா அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக்கும்னே" என்று சொன்னார்.

பின்னர் சபை கலைந்த பிறகு வீட்டிற்குத் திரும்பும்போது வழக்கம் போல் அண்ணா முன்னிருக்கையிலும் நான் அவருக்குப் பின்னாலும் அமர்ந்து சென்று கொண்டிருக்கிறோம். அண்ணா திரும்பிப் பார்த்து என்னை அழைத்து "எவ்வளவு பெரிய மொழிப் பிரச்சினையை ஒரே வார்த்தையிலே காமராஜர் அவருடைய பாஷையிலே சொல்லிட்டார், பார்த்தியா? என்றார். அதாவது ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டால் அந்த இடத்திலே இந்தி வந்து உட்கார்ந்து விடும் என்கிற பயம் பெருந்தலைவர் காமராஜருக்கு இருந்தது என்றால் அதற்குக் காரணம் இந்தி திணிக்கப்படக் கூடாது, என்பதும் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியைப் பிடித்துக் கொண்டு அதைச் சொல்லவில்லையே தவிர, அவருடைய இதயத்திலே அந்த எண்ணம் இருந்தது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

"குணாளா,
குலக்கொழுந்தே,
உன்
வெற்றிக்காக
நாங்கள்
பாடுபடுவோம்"
என்று அன்றைக்கே
எழுதினார் அண்ணா.

### தமிழ் - தமிழர்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்பதில் காமராஜருக்கு அழுத்தமான கருத்துண்டு

இவைகளையெல்லாம் அவர் இன்றில்லை என்பதால் நான் சொல்கின்ற வார்த்தைகள் அல்ல. அவர் உயிருடன் இருக்கும் போதே மேடைகளில் நான் பேசியதைத்தான் இப்போதும் உங்கள் முன்னால் வெளியிட்டிருக்கிறேன். ஏனென்றால் ஒருவர் மறைந்த பிறகு எதுவேண்டுமென்றாலும் அவரைப் பற்றிச் சொல்லலாம் என்பார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. அவர் இருந்தபோதே சொன்ன வார்த்தைகளைத்தான் இப்போதும் சொல்லியிருக்கிறேன். அவருக்கு மொழிப் பிரச்சினையிலே தமிழுக்கு, தமிழர்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்பதிலே அழுத்தந்திருத்தமான கருத்து உண்டு.

அதைப்போலவே சமுதாயப் பிரச்சினையிலே இட ஒதுக்கீட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பின்தங்கிப் போய் விடக்கூடாது என்பதிலே அழுத்தந்திருத்தமான கருத்து உண்டு. அப்படிப்பட்ட ஒரு பெருந்தலைவரைத்தான் நாம் இழந்தோம். இதையெல்லாம் விட மேலாக இந்தியாவிலே ஜனநாயகம் கட்டிக் காப்பற்றப்பட வேண்டும் என்பதிலே அவருக்கு உணர்வு பூர்வமான கருத்து உண்டு. அதனால் தான் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது துடித்தார். துவண்டார். அந்தக் காரணத்தினாலேயே உடல் நலிவுற்றுப் படுத்தார். படுத்த படுக்கையானார். நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. அப்போது திருத்தணிக்குப் பக்கத்திலே ஒரு கூட்டத்திலே பேசிக் கொண்டிருந்தார். நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னவுடன் அவர் சொன்ன வார்த்தை "தேசம் போச்சு, தேசம் போச்சு" என்பதுதான். அந்த அளவிற்கு ஜனநாயகத்தை மதித்தார். சர்வாதிகாரத்தை வெறுத்தார். அப்படிப்பட்ட ஜனநாயக சீலர், சர்வாதிகார விரோதி, சமுதாயக் காவலர், சாமான்ய மக்களுக்காக வாழ்ந்த அந்தப் பெரியவர், பெருந்தலைவர் இன்றில்லை என்றாலும்கூட அவருக்காக இங்கே அமைக்கப் பட்டிருக்கின்ற மணி மண்டபம் மாத்திரமல்ல, அவருக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற நினைவுச் சின்னங்கள் அத்தனையும் அவர் புகழ் பாடும். அவரைப் போல் வாழ வேண்டும் என்ற எண்ணத்தை இளைஞர்களுக்குத் தோற்றுவிக்கும் என்ற நிறைந்த நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அடுத்த ஆண்டு மருத்துவக் கல்லூரிக்கு நானே அடிக்கல் நாட்டுவேன்

மருத்துவக் கல்லூரி கோரிக்கை ஒன்று இங்கே வைக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, நேற்றுதான் அமைச்சராக ஆகியுள்ளவர் கூட மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். நான் ஏற்கெனவே அடுத்து வேலூருக்கு மருத்துவக் கல்லூரி, அதற்கடுத்து கன்னியாகுமரிக்கு மருத்துவக் கல்லூரி வரும் என்று சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டே வருவதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டாலும் கூட, அதிலே இருக்கின்ற பல்வேறு விதமான ஆவணங்கள், அதற்காகப் பெற வேண்டிய அனுமதிகள், உரிமைகள் இவைகள் எல்லாம் இடையூறாக இருக்கும் என்பதால் நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன் – அடுத்த ஆண்டு கன்னியாகுமரிக்கு மருத்துவக் கல்லூரி நிச்சயமாக வரும். அதெப்படி அடுத்த ஆண்டு தேர்தல் வருமே என்று நினைப்பீர்கள். அதற்குப் பிறகும் வந்து நானே அடிக்கல் நாட்டுவேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

*– கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபத்தை 2–10–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.* □




இந்த இனிய விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் வாழ்கின்ற பொதுமக்களாகிய உங்களையெல்லாம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய தினம் திட்டப்பணிகள் என்ற அளவில் மூன்று கோடியே ஒரு இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்படுகிறது.

12 கோடியே 6 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள 30 திட்டப் பணிகளும், கட்டடங்களும் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 17 கோடியே 89 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன.

ஆக மொத்தம் இன்றைக்கு 32 கோடியே 98 இலட்சத்து ஒரு ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகள் இந்த மாவட்டத்திலே செயலாக்கம் பெறுகின்றன என்ற மகிழ்ச்சிகரமானத் தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தூத்துக்குடியில் தொடங்கி வைக்கப் படும் மருத்துவக் கல்லூரி தமிழகத்தின் 11–வது அரசு மருத்துவக் கல்லூரியாகும். இதைத் திறந்து வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். ஏனென்றால் இந்த அரசு தொடங்கி வைக்கின்ற மூன்றாவது மருத்துவக் கல்லூரியாகும் இந்தக் கல்லூரி.

மூன்றாவது மருத்துவக் கல்லூரி என்று சொன்னதற்குக் காரணம் தூத்துக்குடியிலே தொடங்கி வைக்கின்ற மருத்துவக் கல்லூரியை அடுத்து வேலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கி வைக்கப்படவுள்ளது. ஏற்கெனவே திருச்சியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் பெயரால் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 15 ஆயிரம் மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பம் செய்கிறார்கள். ஆனால் அதில் 1,255 பேருக்கு மாத்திரமே இடம் கிடைக்கிறது. விண்ணப்பிக்கின்றவர்களுடைய தொகைக்கும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றவர்களுடைய தொகைக்கும் இடையே மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இதை உடனடியாகத் தீர்த்து வைக்க முடியாது என்பதற்காகத் தான் மெல்ல மெல்ல அரசின் சார்பில் கல்லூரிகளைத் திறந்து கொண்டிருக்கிறோம்.

### நூறு பேருக்கு ஒரு மருத்துவர்

அதிக எண்ணிக்கையில் தமிழக மாணவர்கள் மருத்துவம் பயில வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று செயல்பட்டாலுங்கூட இருக்கின்ற நிதித் தட்டுப்பாடு, வேறு வகையான இடர்ப்பாடுகள் குறுக்கே நிற்கின்றன என்பதை நான் உங்களுக்கு உணர்த்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்.



தமிழ்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ ஆறுகோடி. சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் இன்றைய கணக்குப்படி ஆறு கோடியே 17 இலட்சத்து 74 ஆயிரம் பேர். தேசிய அளவில் பார்த்தால் 3,500 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை தற்போது உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1,535 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை உள்ளது.



இது அகில இந்தியாவுடன் ஒப்பிடும் போது ஓரளவு திருப்தி தரக்கூடியது என்றாலுங்கூட, என்னுடைய ஆசை, நூறு பேருக்கு ஒரு டாக்டர் என்ற அளவிற்கு மருத்துவத்துறையில் நாம் வளர்ச்சியைக் காண வேண்டும். அதை நோக்கி நாம் வேகமாக முன்னேற வேண்டும், மருத்துவ உதவி தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமேயானால் நான் சொல்கிற இந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டும்.

மருத்துவர்கள் நியமனங்கள் என்று எடுத்துக் கொண்டால் கடந்த காலத்திலே இருந்த அரசும், இப்போது நான்கரை ஆண்டுகாலமாக உங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு நடைபெற்று வருகிற இந்த அரசும் ஆற்றியிருக்கின்ற பணிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டை நீங்கள் உணர வேண்டும்.

கடந்த கால அரசு ஐந்தாண்டுகளில் மருத்துவ மனைகளில் நியமனம் செய்த டாக்டர்களின் எண்ணிக்கை 1,327. இந்த அரசு இந்த நான்கரை ஆண்டுக்காலத்தில் எத்தனை டாக்டர்களை நியமித்திருக்கிறது என்று பார்த்தால் 2,641 மருத்துவர்களாகும்.

கடந்த கால அரசு ஐந்தாண்டுகளில் மருத்துவ மனைகளில் நியமனம் செய்யப்பட்ட செவிலியர் நர்ஸ்கள் 786 பேர். இந்த அரசு நான்கரை ஆண்டுக்காலத்தில் நியமனம் செய்த நர்ஸ்களின் எண்ணிக்கை 1,570.



ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதில் ஒரு ஒப்பீட்டை நீங்கள் பார்ப்பீர்களேயானால் முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் 213 ஆரம்பச் சுகாதார நிலையங்களை 15 கோடியே 92 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டியது.

### ரூ.61 கோடி செலவில் மருத்துவக் கட்டடங்கள்

1996–க்குப் பிறகு இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 653 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 200 துணை சுகாதார மையங்களுக்குமாக மொத்தம் 853 சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட மொத்தம் 61 கோடியே 16 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு செலவிடப்படுகிறது.

இதிலே இதுவரை 608 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், 191 துணை சுகாதார மையங்களுக்கு மாக மொத்தம் 799 சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மருத்துவப் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு முன்பிருந்த உதவித் தொகையை இந்த அரசு எந்த அளவிற்குக் கட்டம் கட்டமாக உயர்த்தியிருக்கிறது என்று நான் விளக்கிட விரும்புகிறேன். பயிற்சி மருத்துவர்களின் மாத ஊதியத்தை 1.3.1990 முதல் நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் 750 ரூபாய் என்றிருந்ததை 1,000 ரூபாயாக உயர்த்தியது இந்த அரசு.

1996–க்குப் பிறகு இதனை இரண்டு முறை உயர்த்தியிருக்கிறோம். 1.8.1997 முதல் மருத்துவ பயிற்சி மாணவர்களின் மாத ஊதியம் 1,550 ரூபாயிலிருந்து 2,250 ரூபாயாக உயர்த்தினோம். அதன் பிறகு 1.3.2000 முதல் 2,250 ரூபாயிலிருந்து 3,027 ரூபாயாகவும் இந்த அரசால் உயர்த்தப்பட்டது.

இதைப்போல பணிசாரா முதல் ஆண்டு பட்ட, பட்டய மேற்படிப்பு மாணவர்களுக்கு 1.8.1997 முதல் 1,600 ரூபாயிலிருந்து 2,500 ரூபாய் என்று மாத ஊதியம் இந்த அரசால் உயர்த்தப்பட்டது.

இப்படி எல்லா வகையிலும் பயிற்சி மருத்துவ மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவர்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்கிறது இந்த அரசு.

இந்த அரசு எத்தகைய நல்ல காரியங்களைச் செய்து வருகிறது என்பதற்கு ஒரேயொரு எடுத்துக்காட்டின் மூலமாக என்னால் விளக்க முடியும்.

இன்று மருத்துவக் கல்லூரியின் தொடக்க விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைப்போல பல இடங்களில் மருத்துவமனைகளையும் திறந்து வைக்கின்றோம். மருத்துவமனை திறப்பது, மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தயாரிப்பதெல்லாம் அவர்கள் டாக்டர்களாக மாறி, மருத்துவமனைகளிலிருந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்பதற்காகத்தான். அதிலே கூட ஒரு பெரிய மாற்றத்தைச் செய்திருக்கிறது இந்த ஆட்சி. மக்கள் மருத்துவமனைகளுக்கு வந்து தங்களுடைய உடல் நலத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வது என்று ஒன்று, மருத்துவர்கள் மக்களை நாடிச் சென்று எப்படி இருக்கிறீர்கள் என்று விசாரித்து அவர்களுக்கு உடல் நலத்தைப் பாதுகாப்பது என்பது மற்றொன்று. இந்த அரசு இந்த இரண்டு காரியத்தையும் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது.

மருத்துவமனைக்கு வருகின்ற மக்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற அந்தக் காரியத்தைத் தொடர்ந்து பல ஆட்சிகளிலே நடைபெற்ற அந்தக் காரியத்தைச் சீரும், சிறப்புமாக, செம்மையாக இந்த ஆட்சி இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவ முகாம்களை அமைத்து ஏழை—எளிய கிராமப்புறத்து மக்கள் அவர்களுக்கு உடல் நலம் இல்லை என்றால் அல்லது தங்களது உடல் எப்படி இருக்கிறதென்று சோதித்துக் கொள்ள விரும்பினால், அந்தப் பரிசோதனைக்கு எங்கே செல்வதென்று தெரியாமல் பட்டிக்காட்டில், குக்கிராமத்தில் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, அந்த மக்களை மருத்துவர்கள் நாடிச் சென்று முகாம்களைப் போட்டு அங்கே வருகின்ற மக்களுக்கு உடனுக்குடன் அதைத் தீர்த்து வைக்கக்கூடிய வியாதியாக இருந்தால் தீர்த்து வைப்பதற்கான மருந்தைத் தந்து, உடனடியாக தீராது என்றால் அதற்கான வழிமுறைகளைச் சொல்லி வேறு பெரிய மருத்துவமனைகளுக்கு அவர்களை அனுப்பி வைத்து, சொல்லப்போனால், இரண்டு, மூன்று இடங்களில் இருதய ஆபரேஷன் கூட நடத்தப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்குக் கிராமப்புறத்து மக்கள் இன்றைக்கு தாங்களே மருத்துவர்களை நாடிச் செல்கின்ற அந்தச் செயல்களில் இருந்து விடுபட்டு மருத்துவர்கள் அவர்களை நாடிச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும் என்கின்ற ஒரு முறையை 'வருமுன் காப்போம்' திட்டத்தின் மூலம் இன்றைக்கு நாம் நிறைவேற்றுகிறோம் என்றால் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத முறையை இந்த ஆட்சியிலே தமிழ்நாட்டிலே தான் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**ஓராண்டில் 6,523 மருத்துவ முகாம்கள்**

இந்தத் திட்டத்தின்படி இதுவரையிலே இந்த ஓராண்டில் 6,523 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதிலே தங்களைப் பரிசோதனை செய்து கொண்ட மக்கள் தொகை 63 இலட்சத்து 14 ஆயிரத்து 844 பேர். மேல் சிகிச்சைக்குப் பெரிய மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று அறிவுறுத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 17 ஆயிரத்து 261 பேர். இந்தப் பயனாளிகளுக்கு அரசின் சார்பில் இலவசமாகத் தரப்பட்ட மருந்துகளின் மதிப்பு 3 கோடியே 24 இலட்சத்து 85 ஆயிரத்து 787 ரூபாய். மனிதர்களுக்கு மாத்திரமல்ல, ஆடு, மாடுகளுக்குக் கூட "கால்நடை பாதுகாப்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தின்படி இதைப் போன்ற முகாம்கள் அமைத்து சேவை செய்கிறது. பணியாற்றுகின்றது; தொண்டு புரிகின்றது. இந்த அரசு என்பதையும் உங்களுக்குத் தெரிவித்து இப்படி நன்மைகளையே நாடி நாடிச் செய்கிற இந்த அரசு உங்கள் அரசு.

*– தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரியை 1–10–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...*

★ ★ ★

## அமைதி சாசனம்



*ஐக்கிய நாட்டுப் பொதுசபை 2000வது ஆண்டை அனைத்து நாட்டு கலாச்சார அமைதி ஆண்டாக அறிவித்து, 2000 முதல் 2010 வரை உலக குழந்தைகள் நலனுக்காக அமைதி மற்றும் அஹிம்சை கடைபிடிக்கும் ஆண்டாக அறிவித்துள்ளது.*

*இதையொட்டி யுனெஸ்கோ தனது உறுப்பு நாடுகளுக்கு நோபல் பரிசு பெற்றவர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அமைதி சாசனத்தின் முக்கியத்துவத்தை அனைத்து தரப்பு மக்களும் உணரும் வகையில் அனைத்து நாட்டுத் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் கையொப்பமிட்டு வருகிறார்கள். தமிழகத்தில் காந்தி ஜெயந்தி விழாவின் போது 2.10.2000 அன்று காலை சென்னையில் காந்தி சிலை அருகே மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், சென்னை மாநகர மேயர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்களும் இந்த அமைதி சாசனத்தில் கையொப்ப மிட்டார்கள். தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.10.2000 அன்று காலை தூத்துக்குடியில் அமைதி சாசனத்தில் கையொப்பமிட்டார். தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்கள் மதுரையில் இந்த அமைதி சாசனத்தில் கையொப்பமிட்டார்.* ●



# திட்டங்களை வகுக்க - அலுவலர்கள் கூடி முடிவு செய்ய ஆட்சியர் அலுவலக கட்டடங்கள்

## - முதலமைச்சர் கலைஞர்

*திருவள்ளூரில் ரூ.5.61 கோடி மதிப்பில் கட்டப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் 7.10.2000 அன்று திறந்து வைத்தார்.*

*இவ்விழாவில் குத்தம்பாக்கம் பெரியார் நினைவு சமத்துவபுரம் மற்றும் புதிய கட்டிடங்களையும், திருவள்ளூர் நகர குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தையும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், வீட்டு மனைப் பட்டாக்களையும் வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*



"திருவள்ளூருக்கு நான் வரும்போதெல்லாம் மழை பொழிகிறது. இனிமேல் இங்கே மழை வேண்டுமென்றால் என்னை அழையுங்கள். அந்த அளவிற்கு திருவள்ளூருக்கும் மழைக்கும் எனக்கும் ஒரு ராசி இருப்பதை என்னால் உணர முடிகின்றது.

இங்கே திராவிட கட்டிடக் கலை அடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாட்டில் இந்த நான்காண்டு காலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கான அலுவலகக் கட்டிடங்கள் பத்து கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. இன்னும் தேனியில் மட்டும் கட்டிடம் கட்டப்பட்டு என்னுடைய தேதிக்காக காத்திருக்கிறது. விரைவில் தேதி கொடுக்கவிருக்கிறேன்.

ஏதோ ஒரு கட்டிடம் இங்கே இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்படவில்லை. செம்மையாக, சீராகப் பணிகளை வகுத்துக் கொண்டு ஆற்ற வேண்டுமேயானால், அதிகாரிகள் கலந்து பேசி என்னென்ன காரியங்களை எப்படியாற்ற வேண்டும் என்று திட்டங்களை வகுத்துக் கொண்டு காரியங்களை ஆற்றுவதற்கு இதுபோன்ற ஒரு கட்டிடம் தேவை. இந்தக் கட்டிடங்களிலே அமர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் மற்றும் அதிகாரிகளும் ஆற்றுகின்ற பணிதான் இந்த மாவட்டத்து மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து தருகின்ற தொண்டாக அமையவிருக்கின்றது. அந்த வகையில் இந்தக் கட்டிடம் இவ்வளவு சீரும் சிறப்புமாக, இவ்வளவு எழுச்சியோடு எழிலார்ந்த முறையிலே கட்டப்பட்டுக் காட்சி தருவதைக் காணும் போது நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியோடு மற்றொரு சமுதாயப் புரட்சி நிகழ்ச்சி 77–வது சமத்துவபுரம் இன்றைக்கு இந்த மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளது.

> விவேகம் என்னும் வெள்ளி முளைத்து
> சாதி–மதப்பித்து எனும் சனி தொலைந்தால்தான்
> சமத்துவம் என்னும் ஞாயிறு தோன்றும்.
>
> - கலைஞர்



### பெரியாருடைய நினைவைப் போற்றும் சமத்துவபுரங்கள்

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 77 இடங்களில் பெரியாருடைய நினைவு போற்றப்படும் வகையில் சமத்துவபுரங்கள், ஏதோவொரு அட்டையிலோ அல்லது கல்தூணிலோ பெரியார் என்று எழுதி வைத்து அவருடைய நினைவைப் போற்றவில்லை.

எந்தவொரு கொள்கைக்காக அவர் காலமெல்லாம் பாடுபட்டாரோ, சாதிகள் ஒழிந்து, சாதி சமய வேறுபாடுகள் ஒழிந்து அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்ற கொள்கைக்காகப் பெரியார் பாடுபட்டார். அப்படி எந்தக் கொள்கைக்காகப் பாடுபட்டாரோ அந்தக் கொள்கையை உள்ளடக்கிய சமத்துவபுரம், ஆதிதிராவிடர்கள் மற்றும் வெவ்வேறு வகுப்பினர், அவர் உயர் வகுப்பார் என்று சொல்லிக் கொண்டாலும் அல்லது நடுத்தர வகுப்பார் என்று சொல்லிக்கொண்டாலும் எல்லா வகுப்பினரும் கலந்த நூறு குடும்பங்கள் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலை. நூறு குடும்பங்கள் கொண்ட பல்வேறு வகுப்பினர் சமத்துவபுரங்களிலே வாழ்ந்தாலும், அனைவருக்கும் அங்கே ஒரேயொரு சுடுகாடு, இடுகாடுதான் என்கிற அளவிலே ஒரு புரட்சி. அவர்களிடம் மத வேறுபாடுகள் இல்லை, சாதி வேறுபாடுகள் இல்லை என்ற ஒரு அருமையான கொள்கை முழக்கம்.

அதோடு வசதி வாய்ப்புகளையும் அவர்களுக்குத் தேடித்தந்து திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்காக திருமண மண்டபங்கள், குழந்தைகள் படிப்புக்குப் பள்ளிகள், தேவைக்கேற்ப மருத்துவமனைகள் என்ற இவ்வளவு வசதியோடு தந்தை பெரியார் அவர்களின் நினைவாக ஒரு சமத்துவபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதிலும் தமிழ்நாட்டில் இதுவரை 76 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டு இன்று 77வது சமத்துவபுரம் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

### 2 மாதங்களுக்குள் 100ஆவது சமத்துவபுரம் திறக்கப்பட வேண்டும்

இன்றும் இரண்டு மாதங்களுக்குள்ளாக 100 சமத்துவபுரங்கள் கட்டப்பட வேண்டும். நூறாவது சமத்துவபுரத்தை திறந்து வைக்கும் வாய்ப்பை இந்தச் சமத்துவபுரங்களையெல்லாம் சீரோடும், சிறப்போடும் கட்டி வருகின்ற என்னுடைய அருமைத் தம்பி உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் எனக்கு விரைவில் அளிப்பார் என்ற நம்பிக்கையோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்திலே நான்கரை ஆண்டுக் காலத்திலே நாங்கள் ஆற்றியிருக்கின்ற பணிகளையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். வருமுன் காப்போம் என்ற திட்டத்தால் எவ்வளவு பயன் கிடைத்திருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். உழவர் சந்தையினால் எவ்வளவு மக்கள் உற்சாகம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். கால்நடை பாதுகாப்புத் திட்டத்தால் விவசாயப் பெருமக்கள் இன்றைக்கு திருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

நமக்கு நாமே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், இவைகளையன்னியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று உள்ளாட்சி மன்றங்கள் எல்லாம் அதிகாரம் பெற்று இயங்குகின்ற காரணத்தினால் எல்லா உள்ளாட்சி மன்றங்களிலும் நடைபெறுகின்ற வேலைகளை நீங்கள் காண்கிறீர்கள். எங்கேயாவது ஒரு இடத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று திருப்தி அடைகின்ற அளவிற்குத் தமிழ்நாடு இன்றைக்கு இருக்கின்றது.

தொடர்ந்து இந்தப் பணிகள் எல்லாம் நடைபெற உங்களுடைய ஆக்கமும் ஊக்கமும் எங்களுக்குத் தேவை என்பதை எடுத்துரைத்து இன்னொரு முறை வருகிறேன். மழை இல்லாமல் வருகிறேன் என்று உங்களுக்கு உறுதியளித்து இந்த நிகழ்ச்சியிலே இவ்வளவு மகிழ்ச்சியுடன் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டுள்ள உங்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன். ★



- *தீண்டாமை, இந்து மதத்தின் பகுதியல்ல, அதில் புகுந்துள்ள ஒரு கறை, குறை அல்லது பாவமே. அதைப் போக்குதல் ஒவ்வொரு இந்துவின் தர்மமும் சிறந்த கடமையுமாகும்.*
- *தீண்டாதார் என்று கருதப்படுவோரும் நான்கு வருணங்களைச் சேர்ந்தவர்களே.*
- *நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கொடுமைக்குள்ளாகி, பண்புள்ள வருணத்தாரின் சேர்க்கையின்றி வாழ்ந்தமையால் தீண்டாதார் நிலை மிகவும் பரிதாபகரமாய் இழிவுற்றுப் போயிற்று; அவர்களைக் கைதூக்கி விட்டு மற்ற வருணத்தாருடன் சேர்க்கும் பொருட்டு பண்புற்ற இந்துக்கள் பெரிதும் முயல வேண்டும். ஆகையால் தீண்டாதார் முதலிய மற்றத் தாழ்த்தப்பெற்ற, முன்னேற்றமெய்தாத சமூகங்களின் ஊழியத்தின் பொருட்டு தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தலும், அப்பணிக்கு தாராளமாய் உதவுதலும் இந்த யுகத்தில் பண்புள்ள இந்துக்களின் மிகத்தூய கடமையாகும்.*

*- காந்தியடிகள்*
*காந்திய நவநீதம் நூலிலிருந்து.*



# திருவள்ளூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தின் பகுதியாக இருந்த திருவள்ளூர் மாவட்டம் 1.1.97 முதல் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது.

இம்மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி ஆகிய வருவாய் கோட்டங்களும் – திருவள்ளூர், அம்பத்தூர், பூவிருந்தவல்லி, திருத்தணி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்மிடிபூண்டி மற்றும் பள்ளிப்பட்டு ஆகிய 8 வருவாய் வட்டங்களும் – 6 நகராட்சிகளும், 19 பேரூராட்சிகளும், 14 ஊராட்சி ஒன்றியங்களும், 539 ஊராட்சி மன்றங்களும் உள்ளடங்கி உள்ளன.

### மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்

மாவட்டம் உருவான முதலாண்டில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, இரண்டாம் ஆண்டில் நிலம் கையகப்படுத்தப்பட்டது. மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திருவள்ளூரில் ரூ.5.61 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக கட்டுமானப் பணி 25.4.1999 அன்று தொடங்கப்பட்டது.

திராவிட கட்டடவியல் அடிப்படையில் கட்டப்பட்ட இந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்குப் பிரதான நுழைவு வாயிலுடன் நான்கு இதர வாயில்களும் உள்ளன. இக்கட்டடத்தின் தரைதளம் 2,636 சதுர மீட்டர். முதல் தளம் 2,548 சதுர மீட்டர் இரண்டாவது தளம் 2332 சதுர மீட்டர் என 7,516 சதுரமீட்டர் கொண்டதாக உள்ளது. மாநாட்டு கூடத்தின் கூரை பிரமிட் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. 150 ஏக்கரில் அமைந்திடும் இந்த பெருந்திட்ட வளாகத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், போக்குவரத்துத்துறை, தீயணைப்புத்துறை, பொதுப்பணித்துறை, மாவட்ட விளையாட்டுக்குழு, வேலை வாய்ப்புத்துறை அலுவலகங்கள் தவிர காவல்துறை பயிற்சி மைதானம், போக்குவரத்துத்துறை சோதனை ஓட்டத் தடம் உட்பட பல்வேறு வசதிகள் ஒருங்கிணைந்து உருவாகி வருகிறது. இப்பெருந்திட்ட வளாகம் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 7.10.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.



### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சியில் அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் ஊர் கட்டமைப்புகளை ஒருமுனைப்படுத்தி அக்கிராமங்களை சுயவளர்ச்சி பெற்ற மற்றும் தன்னிறைவு பெற்ற நவீன கிராமமாக உருவாக்குவதே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.



இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரு கிராம ஊராட்சியை சில நிபந்தனைக்குட்பட்டு தேர்வு செய்வர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 1997 முதல் 372 சாலைகள், 201 கட்டடங்கள், 162 குடிநீர்த் திட்ட பணிகள், 167 தெரு விளக்குகள் மற்றும் 283 இதர பணிகள் ரூ.1622 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**நமக்கு நாமே திட்டம்**

தங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை உருவாக்கித்தருவது அரசின் பாற்பட்டதே என்றில்லாமல், தாங்களே திட்டமிட்டு, அரசின் உதவி கொண்டு, தங்களின் பங்களிப்போடு, நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பினையும் வழிவகையினையும் உருவாக்கித் தருவதுதான் நமக்கு நாமே திட்டம்.



இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு மொத்த மதிப்பிட்டில் 25 விழுக்காடு தொகையை பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து உடல் உழைப்பாகவோ அல்லது பங்குதொகையாகவோ அளிக்கின்றார்கள்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.309.55 இலட்சம் மதிப்பீட்டில் 56 கட்டடங்கள், 71 சாலைகள், 89 நீர் ஆதாரப் பணிகள், 16 குடிநீர் பணிகள், 1 சிறுபாலம் மற்றும் 222 இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

இந்தியாவின் முன்னோடித் திட்டமான பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில்



ரூ.69.27 இலட்சம் மதிப்பீட்டில் சந்தான வேணுகோபாலபுரம் ஊராட்சியிலும், ரூ.83.19 இலட்சம் மதிப்பீட்டில் மப்பேடு ஊராட்சியிலும் உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

"சமத்துவ புரங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல; தமிழ்நாடே சமத்துவபுரமாக ஆகட்டும்; இந்திய திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும்" என்ற தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப அனைத்துப் பிரிவினரும் கூடிவாழும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்று இடங்களில் சமத்துவ வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனை "சமத்துவபுரத்தருகே இன்னொரு சமத்துவபுரம்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்கள். சந்தான வேணுகோபாலபுரம் சமத்துவபுரம் எதிரில் ரூ.4.63 இலட்சம் செலவில் 170 வீட்டுமனைகள் உருவாக்கப்பட்டு மற்றொரு சமத்துவபுரம் உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதே போன்று மப்பேடு பெரியார் நினைவு சமத்தவபுரத்திற்கருகே ரூ.3 இலட்சம் மதிப்புள்ள 2.80 ஏக்கர் அரசு நிலத்தில் சமத்துவ அடிப்படையில் அனைத்து இனத்தவரும் இணைந்து வாழும் வண்ணம் 82 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு பயனாளிகள் குடியேறியுள்ளனர். மூன்றாவதாக திருத்தணி வட்டம் கார்த்திகேயபுரம் கிராமத்தில் ரூ.3.11 இலட்சம் மதிப்பீட்டில் 9 ஏக்கர் நிலத்தில் 240 பயனாளிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சமத்துவப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**வருமுன் காப்போம்**

ஏழை எளியோர் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து அதனால் வேதனையை தணித்துக் கொள்வதற்கு மட்டுமே மருத்துவர்களையும் அரசு சுகாதார நிலையங்களையும் நாடிச்செல்கின்றனர்.



பொதுவாக மக்களிடையே நிலவி வரும் இந்த மனோநிலையை மாற்றி நோய்கள் வருமுன் தடுக்கும் அணுகுமுறையை மக்களிடையே பரப்பி நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்ற



விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் நோய்த் தடுப்பு முறைகளை எளிய வகையில் விளங்க வைத்து பின்பற்றச் செய்திடவும், ஏழை, எளியோர்க்கு உயர்தர மருத்துவ சிகிச்சை இலவசமாக அளித்திடவும் "வருமுன் காப்போம்" திட்டம் முதலமைச்சர் அவர்களால் தமிழகத்தில் முதன்முறையாக திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூர் ஊராட்சியில் தான் முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 227 இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன. 2,64,135 நபர்கள் சிகிச்சை பெற்று பலன் பெற்றுள்ளனர். இதற்காக ரூ.15,94,793 மதிப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. 24,993 நபர்கள் மேல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டு அவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் மேல் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள கிராமப் பகுதியில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு முறையான சிகிச்சை அளித்து பாதுகாக்கவும் நோய்கள் வராமல்



தடுத்திடவும் இனவிருத்தி அதிகரிக்கவும் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டமாகும்.

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 27.1.2000 அன்று திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் ஊராட்சியில் தொடங்கப்பட்டது. இதுவரை நடைபெற்ற 113 முகாம்களில் 3,80,000 கால்நடைகள் பயனடைந்துள்ளன. இதன் மூலம் கால்நடைகளுக்கு ரூ.5,61,075 மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**உழுவோர் உயர - நுகர்வோர் மகிழ உழவர் சந்தை**

உழவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை எந்தவிதமான இடைத்தரகர்கள் குறுக்கீடும் இல்லாமல் விற்பனை செய்வதற்கு வசதியாக உழவர் சந்தை என்கின்ற நேரடி விற்பனை முறை செயல்படுத்தப்படுகிறது. இதன்படி உழவர்களே தங்கள் விளைபொருட்களை தாங்களே விற்பனை செய்யவும்



அதன் மூலம் தகுந்த விலையை பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட உழவர் சந்தையில் இதுவரை 23,76,680 கிலோ காய்கறிகள் ரூ.1,35,03,581-க்கு விற்பனையாகியுள்ளது. இதன்மூலம் 12,817 விவசாயிகளும் 54,03,867 நுகர்வோர்களும் பயன்பெற்று உள்ளனர்.

இதுதவிர இம்மாவட்டத்தில் திருவள்ளூரில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டிலும் திருத்தணியில் ரூ.12.10 இலட்சம் மதிப்பீட்டிலும் இரண்டு உழவர் சந்தைகள் தலா 40 கடைகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

**பூமாலை**

கிராமப்புறங்களில் உள்ள கைவினைக் கலைஞர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்டு வரும் பொருட்கள் நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான விற்பனை மையங்களை அனைத்து மாவட்டங்களிலும்



ஏற்படுத்தவும், இந்த பொருட்களுக்கு "பூமாலை" என்னும் வணிகச் சின்னம் உருவாக்கி அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பூமாலை கைவினைப் பொருட்கள் விற்பனைக்கு இடம்பெற்றுள்ள இத்திட்டத்தின் விற்பனை மையங்களை முதன் முதலில், அம்பத்தூர் உழவர் சந்தையில் முதலமைச்சர் அவர்களால் 9.4.2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இம்மையம் மூலம் இதுவரை ரூ.3,89,332 மதிப்பில் கைவினைப் பொருட்கள் விற்பனை ஆகியுள்ளன.

### மினி பஸ் வசதி

கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கிவைக்கப்பட்டது மினிபஸ் திட்டமாகும்.

★ பள்ளிக்குழந்தைகள் இனி 5 கிலோ மீட்டர் நடக்கத் தேவையில்லை·



★ கர்ப்பிணிப் பெண்களுக்கு விடிவுகாலம்·

★ காய்கறிகள் விற்பனைக்கு வசதி என்று மக்களால் போற்றப்படும்.

மினி பஸ் திட்டத்தின் கீழ் 52 வழித்தடங்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 9 வழித்தடங்களில் மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன.

### இளைஞர் விளையாட்டு – உடற்பயிற்சி மையங்கள்

கிராமங்களிலும் பேரூராட்சிகளிலும் உள்ள இளைய தலைமுறையினர்களின் நேரம் மற்றும் சக்தியை ஒருமுகப்படுத்தவும், தீய பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியத்துடனும் மத நல்லிணக்கத்துடனும் வாழவும் இளைஞர் நலம் பேணுகின்ற வகையில் 206 இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

### மக்கள் பணியில் கணினியின் பயன்பாடு

பொதுமக்களுக்கான சேவைகளை வெளிப்படையாகவும், விரைவாகவும் துல்லியமாகவும் வழங்கும்



வகையில் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. இதன்படி மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் கணினிமையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), சார் ஆட்சியர், கோட்டாட்சியர் அலுவலகங்கள், 8 வட்டாட்சியர் அலுவலகங்கள், 14 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், மாவட்ட சிறுசேமிப்பு அலுவலர் அலுவலகம் ஆகியவற்றில் கணினிமையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவையனைத்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் சென்னை தலைமைச் செயலகத்துடன் பரவலான வலைப்பின்னல் பிணையமாக இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாவட்ட ஆட்சியர் தனது அலுவலகத்தில் இருந்து மற்ற அலுவலகங்களின் பணிகளின் நிலையை கணினி மூலம் தெரிந்து கொள்ள முடியும். இந்த அலுவலகங்களுக்கு ஆட்சியர் தேவையான உத்தரவுகளை வழங்க ஏதுவாக மென்பொருள் தனியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரசு ஆணைகள், சுற்றறிக்கை, மற்றும் முக்கிய கடிதங்கள் அனைத்தும் மின் அஞ்சல் (ஈ மெயில்), நிகரி (ஃபேக்ஸ்) இவற்றை கணினியில் பொருத்தி உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் அனைத்து கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் நேரம், காலம் வீணாகாமல் உடனுக்குடன் தகவல் பெற உதவியாகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திற்கென இன்டர்நெட்டில் தனி வெப்சைட் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வெப்சைட் உதவியால் திருவள்ளூர் மாவட்டம் குறித்த பல்வேறு தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள முடியும்.

### வருவாய்த்துறை

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள முதியவர், ஆதரவற்ற விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு தாய் உள்ளத்தோடு மாதந்தோறும் உதவித்தொகை வழங்க உத்தரவிட்டதின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை 38,558 பயனாளிகளுக்கு ரூ.6.96 கோடி வழங்கப்பட்டுள்ளது.

| திட்டம் | பயனாளிகள் | தொகை இலட்சத்தில் |
|---|---|---|
| 1. முதியவர் உதவித்தொகை | 15,046 | 258.46 |
| 2. விதவை உதவித்தொகை | 16,369 | 306.97 |
| 3. ஊனமுற்றோர் உதவித் தொகை | 1,294 | 24.27 |
| 4. ஆதரவற்ற விவசாய கூலித் தொழிலாளர் உதவித் தொகை | 2,602 | 48.66 |
| 5. ஆதரவற்ற விதவையர் உதவித்தொகை | 3,247 | 58.58 |
| மொத்தம் | 38,558 | 695.94 |

விபத்து நிவாரண திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 54 நபர்களுக்கு ரூ.8.04 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

துயர் துடைப்பு நிவாரண திட்டத்தின் கடந்த மூன்றாண்டுகளில் 51,133 நபர்களுக்கு ரூ.387 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தீவிபத்தில் வீடிழந்து தவிக்கும் ஏழை குடிசைவாழ் மக்களுக்கு பகுதி சேதாரமாக ரூ.500, முழுசேதாரமாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இதுவரை 1,330 நபர்களுக்கு ரூ.10.29 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

### வீட்டுமனை மற்றும் நிலப்பட்டா வழங்குதல்

வீட்டுமனையற்ற வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டத்தின் கீழ் இம்மாவட்டம் தொடங்கப்பட்ட பின்பு இதுவரை ரூ.3.67 கோடி மதிப்பீட்டில் 23,933 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது. இதில் 13,393 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் 350 நபர்கள் பழங்குடியினர்.

இம்மாவட்டத்தில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் 98.12 ஹெக்டேர் பரப்பில் 84 நபர்களுக்கு இலவசமாக நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் 23 ஆதிதிராவிடர்களும், 7 பழங்குடி இனத்தவர்களும் அடங்குவர்.

### சமூக நலத்துறை

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 6807 பேருக்கு ரூ.6.81 இலட்சம் வழங்கப்பட்டது.

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 54 பேருக்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டது.

ஈ.வே.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவி திட்டத்தின் கீழ் 91 பேருக்கு ரூ.4.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

விதவை மறுமண உதவித்திட்டத்தின் கீழ் 10 பெண்களுக்கு ரூ.0.82 இலட்சம் வழங்கப்பட்டது.

டாக்டர் முத்துலெட்சுமி நினைவு தேசிய மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் 13,333 மகளிருக்கு ரூ.57.6 இலட்சமும், டாக்டர் சத்தியவாணி அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 360 பெண்களுக்கு ரூ.7.02 இலட்சமும் வழங்கப்பட்டது.

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.15.92 இலட்சத்தில் 1,061 பெண் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 898 கிராமங்களில் 30 கோடியே 13 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் ஊரக குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



இதன் மூலம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் 120 கிராமங்களுக்கு ரூ.37 இலட்சம் செலவில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ரூ.3.94 கோடி செலவில் நாராவாரிகுப்பம், திருநின்றவூர், திருத்தணி, கொடிவலசை வெங்கத்தூர், பாதிரிவேடு, புழல் மற்றும் ஆவடி பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்புகள் பயனடைந்துள்ளன.

### தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் உள்ள மாவட்டங்களில் திருவள்ளூர் மாவட்டமும் ஒன்று. இம்மாவட்டத்தில் உள்நாட்டுத் தொழில் முதலீடுகள் மட்டுமல்லாது வெளிநாட்டுத் தொழில் முதலீடுகளையும் பெருமளவில் ஈர்க்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள காக்களூர், அம்பத்தூர், கும்மிடிபூண்டி – சிப்காட் ஆகிய

தொழில்பேட்டைகள் உட்பட மணலி பகுதியில் அமைந்துள்ள பெரிய இரசாயனத் தொழிற்சாலைகள் நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கின்றன. கடந்த நான்காண்டுகளில் மாவட்டத்தில் ரூ.708.48 கோடி - மதிப்பீட்டில் பன்னாட்டு தொழில் முதலீட்டுடன் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர எண்ணூரில் ரூ.6,000 கோடி அளவில் பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலை நிறுவ ஜப்பானிய மிட்சூயி கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்ட தொழில் மையம் மூலம் சிறுதொழில் நடத்திட 10,959 நபர்களுக்கு சிறுதொழில் தற்காலிக சான்றிதழ்களும், சிறுதொழில் நிரந்தர சான்றிதழ்கள் 6,178 நபர்களுக்கும், குடிசைத்தொழில் 889 நபர்களுக்கும் மற்றும் கைவினைத் தொழில் சான்றிதழ்கள் 589 நபர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வேலை வாய்ப்பும் மற்றும் தொழில் உற்பத்தி பெருகிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 233 நபர்களுக்கு ரூ.7.09 கோடி மூலதன் முதலீட்டு மானியமும், 34 நபர்களுக்கு ரூ.18.27 இலட்சம் ஜெனரேட்டர் மானியமும், 182 நபர்களுக்கு ரூ.43.76 இலட்சம் குறைந்த அழுத்த மின்சார உபயோகத்திற்கான மானியமும் மாவட்டத் தொழில் மையம் மூலம் தொழில் நடத்த உதவிகள் செய்யப்பட்டுள்ளது.

### மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள ஊரக மகளிருக்கு நிரந்த தீர்வின் அடிப்படையில் சுயவேலை வாய்ப்புக்களை அளித்திடவும் மகளிரிடையே விழிப்புணர்வை



ஏற்படுத்தவும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இவர்களுக்கு பல்வேறு வகையான பயனுள்ள தொழில் மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்திற்கு 2,200 சுயஉதவிக் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 26,059 உறுப்பினர்கள் அடங்கிய 1,669 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ரூ.2.49 கோடி கடனாக சேமிப்பு பணத்தில் இருந்து வழங்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து ரூ.1.55 கோடி சேமிப்பாகப் பெறப்பட்டுள்ளது.

### தாட்கோ

தனிநபர் தொழில் முனைவோர் திட்டம், பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம், வேளாண்மை தொழில் சார் திட்டங்கள், சிறுதொழில் போன்ற திட்டங்களில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனமக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்ட கடன் ரூ.1.45 கோடி. இதன் மூலம் 5,316 நபர்கள் பயனடைந்துள்ளனர். அரசு மானியம் ரூ.90.33 இலட்சம்.

### ஊனமுற்றோர் மறுவாழ்வு

மறுவாழ்வுத் துறையின் மூலம் கண்பார்வையற்ற– வரை பார்வையுள்ளவர் திருமணம் செய்தல், கைகால் ஊனமுற்றவரை சாதாரண நபர் திருமணம் செய்தல்,



பேசும் திறனற்ற காது கேளாதவரை சாதாரண நபர் திருமணம் செய்து கொள்ளுதல், போன்றவற்றிற்கான திருமண உதவித் தொகைகள், கடும் ஊனமற்றவர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை, கல்வி உதவித்தொகை, மூன்று சக்கர வண்டி, இரு சக்கர நாற்காலி, பிரெய்லி கைக்கடிகாரம், கேலிப்பர் வழங்குதல், ஊன்றுகோல், காதொலி கருவி, செயற்கைக் கால் வழங்குதல் மற்றும் பிறவகையில் 3,994 பயனாளிகளுக்கு ரூ.32,49,098 செலவிடப்பட்டுள்ளது.

### வாழ்வொளித் திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் வாழ்வொளித் திட்டத்தின் மூலம் 1,144 பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்க்கு ஒவ்வொரு வியாழக்கிழமையும், இந்த பகுதியைச் சார்ந்த ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் குழுவின் மூலம் பரிசோதனை செய்யப்படுகிறது.

வருடத்திற்கு மூன்று முறை இதுபோன்று பரிசோதிக்கப்படும் இத்திட்டத்தின் மூலம் இதுவரை 80,486 மாணவர், மாணவிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். இதில் 247 மாணவர்களுக்கு





கண்பார்வை குறைவும், 29 மாணவர்களுக்கு இருதயநோய் இருப்பதும், 65 மாணவர்களுக்கு தொழுநோய் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்கள்.

### மக்கள் நல்வாழ்வுத்துறை

புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் 48 படுக்கைகள் கொண்ட புது பிரிவு, ரூ.29.60 இலட்சம் மதிப்பீட்டில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசரப்பிரிவு, ரூ.11.43 இலட்சம் மதிப்பீட்டில் 24



படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு, ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மைய நீராவி தொற்று நீக்கிப் பிரிவு, ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் 6 படுக்கைகள் கொண்ட தீவிர இருதய அறுவை சிகிச்சை கவனிப்பு பிரிவு, ரூ.35.50 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை அரங்கத்துடன் கூடிய 16 படுக்கைகள் கொண்ட கண் பிரிவு ஆக ரூ.1.64 கோடி மதிப்பில் தலைமை மருத்துவமனை மேம்படுத்தப்பட்டுள்ளது.

கும்மிடிபூண்டி அரசினர் மருத்துவமனையில் ரூ.13.64 இலட்சம் மதிப்பீட்டில் 26 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவும், திருத்தணி அரசினர் மருத்துவமனைக்கு ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்பதன வசதியுடன் கூடிய பிணவறை, ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் 75 கிலோவாட் மின்ஆக்கி மற்றும் அதற்கான கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 22 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.175 இலட்சம் மதிப்பிலும், 7 துணை சுகாதார நிலையங்களுக்கு ரூ.38.50 இலட்சம் மதிப்பிலும் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் பொதட்டூர்பேட்டை, பழவேற்காடு மற்றும் மாதவரம் ஆகிய ஊர்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### கண்ணொளித் திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் கண்ணொளித்திட்டத்தின் கீழ் இதுவரை 29,883 நபர்களுக்கு கண்புரை அறுவை



சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு மானியம் ரூ.8,24,700 வழங்கப்பட்டுள்ளது.

கண்ணொளித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் 2,710 ஆசிரியர்களுக்கு கண் பரிசோதனை பயிற்சி அளித்து 3,58,198 மாணவ மாணவியர்க்கு கண் பரிசோதனை செய்யப்பட்டதில் கண்ணாடி வாங்க வசதியற்ற 3,285 மாணவர், மாணவியருக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் தலைமை மருத்துவமனைக்கு ரூ.35.50 இலட்சம் செலவில் 16 வார்டுகள் மற்றும் அறுவைச் சிகிச்சை கூடத்துடன் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

### கல்வித்துறை

இம்மாவட்டம் தொடங்கப்பட்டபின் 396 பெண்கள், 154 ஆண்கள் என 550 இடைநிலை ஆசிரியர்களும், 10 உடற்கல்வி ஆசிரியர்களும், 5 தையல் ஆசிரியர்களும், 5 ஓவிய ஆசிரியர்களும், ஒரு இசை ஆசிரியரும் ஆக மொத்தம் 571 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 22 தொடக்கப்பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. 6 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 21 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. 45 அரசுப்பள்ளிகளில் கணினிப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



## நெடுஞ்சாலைத்துறை

நெடுஞ்சாலைத் துறையின் கீழ் சாலை, பாலங்கள் மேம்பாட்டிற்காக ரூ.3.55 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.5.84 கோடி செலவில் 21 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமச்சாலைகள் சிறப்பு உறுப்புத் திட்டம் மற்றும் பேருந்து வழித்தடத் திட்டங்கள் கீழ் இதுவரை 31 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 86.70 கிலோமீட்டர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் திட்டம் சாரா சாலைப்பணிகள் திட்டத்தின் கீழ் 17.21 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநிலச் சாலைகள், 183.89 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்டச் சாலைகள், 581.73 கிலோமீட்டர் நீளமுள்ள 385 இதர சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## பொதுவிநியோகத் திட்டம்

இம்மாவட்டத்தில் 717 முழுநேர நியாயவிலைக் கடைகள், 177. பகுதி நேர நியாயவிலைக் கடைகள் மூலமாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.



## மகளிர் சிறுவணிகக் கடன் வழங்கும் திட்டம்

இம்மாவட்டத்தில் உள்ள நகரங்களில் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் திருவள்ளூர் நகரக் கூட்டுறவு வங்கி மூலம் இதுவரை 1,445 மகளிருக்கு ரூ.8.92 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மாவட்டத்தில் உள்ள 13 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் "மகளிர் சிறுவணிகக் கடன்" வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

இவ்வங்கிகள் மூலமாக இதுவரை குறுகிய காலக் கடனாக ரூ.45.72 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.1.18 கோடியும், நகைக்கடனாக ரூ.28.72 கோடியும், பண்ணை சாராக் கடனாக ரூ.0.33 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

## வேளாண்மைத்துறை

விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை கொடுத்த தொடர் ஊக்கத்தாலும், வழிக்காட்டுததாலும், இம்மாவட்டம் தொடங்கியபோது எக்டேருக்கு 3,200 கிலோவாக இருந்த அரிசி உற்பத்தி 4,073 கிலோவாகவும், மணிலா உற்பத்தி 2,180 கிலோவிலிருந்து 3,664 கிலோவாகவும், பயிறு வகைகள் உற்பத்தி 596 கிலோவிலிருந்து 853 கிலோவாகவும், சிறுதானியங்கள்



உற்பத்தி 1,350 கிலோவிலிருந்து 3,002 கிலோவாகவும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தரமான தென்னங்கன்றுகள் வழங்கிடும் வகையில் 72,000 நெட்டை மற்றும் குட்டை ரக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இதுவரை 35,000 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மின்சார வாரியம்

குறைந்த மின்அழுத்தத்தை நிவர்த்தி செய்ய பாலவாக்கம், விடியன்காடுபுதூர், துறைநல்லூர் அழிஞ்சிவாக்கம் ஆகிய நான்கு இடங்களில் ரூ.5.87 கோடியில் சார்பு மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. குறைந்த மின் அழுத்தத்தைச் சரிசெய்ய 650 மின்





மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 1,851 விவசாய மின் இணைப்புகள் ரூ.5.20 கோடியிலும், 8,927 குடிசைகளுக்கு ரூ.1.20 கோடி செலவில் ஒரு மின் விளக்கு திட்டத்தின் கீழ் மின் வசதியும், 7,448 தெரு விளக்குகள் ரூ.3.20 கோடி செலவிலும், 697 பொது குடிநீர் மின்இணைப்புகள் ரூ.1.35 கோடி மதிப்பிலும் உருவாக்கப் பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 4 இடங்களில் ரூ.479.89 இலட்சம் செலவில் புதிய துணை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ரூ.681.149 இலட்சம் மதிப்பீட்டில் 783 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

இத்துறையின் மூலம் 25,372 மாணவ, மாணவியருக்கு ரூ.56.88 இலட்சம் கல்வித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 26,150 பள்ளிக்குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்களும் 2,380 குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.1.24 இலட்சம் மதிப்பில் 101 நபர்களுக்கு இலவசமாக சலவைக் கருவிகளும், முடிதிருத்தும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## ஆதிதிராவிடர் நலத்துறை.

இத்துறையின் சார்பில் இதுவரை 72.61 இலட்சம் செலவில் 3,029 ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களும் ரூ.3.01 இலட்சம் மதிப்பீட்டில் 161 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## பொதுப்பணித்துறை

கட்டடப்பிரிவின் மூலம் வருவாய்த்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை, காவல் மற்றும் சிறைத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை போன்ற அரசுத் துறைகளுக்கான 750 பணிகள் ரூ.32.43 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 670 பணிகள் ரூ.19.13 கோடி மதிப்பில் முடிவுற்றுள்ளன.

நீர்வள ஆதார அமைப்பின் மூலம் இதுவரை ரூ.319.6 இலட்சம் மதிப்பீட்டில் 2 சிறிய அணைக்கட்டுகளும் ரூ.140 இலட்சம் மதிப்பீட்டில் 14 தூர்வாரும் பணிகளும் ரூ.86.84 இலட்சம் மதிப்பீட்டில் 70 ஏரிகள் தரப்படுத்தும் பணிகளும் ரூ.87.19 இலட்சம் மதிப்பீட்டில் 69 வேலை வாய்ப்பு உறுதிப் பணிகளும் ரூ.690 இலட்சம் மதிப்பீட்டில்



வடசென்னைப் பகுதி கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ ★ ★

# திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் கணினி மயம்

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல்முறையாக ஊராட்சி ஒன்றியம் வரை கணினி மயமாக்கப்பட்டுள்ளது திருவள்ளூர் மாவட்டத்தில்தான். இம்மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவைகளில் 11 ஊராட்சி ஒன்றியங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அலுவலர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. E-Mail, Fax வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. 5,000-க்கு மேற்பட்ட உதவி பெறுவோர்க்கு கணினி உதவியுடன் இரண்டு நாட்களுக்குள் உதவித்தொகை அனுப்பமுடிகிறது.

தாலுக்கா அலுவலகத்தில் சிட்டா பட்டா போன்றவை கணினி உதவியுடன் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

## உடனுக்குடன் மக்கள் பணி

பொதுமக்கள் அரசு அலுவலகங்களுடன் கொள்ளும் தொடர்பு எளிதானதாகவும் தாமதமின்றி இனிதானதாகவும் இருக்கும் வண்ணம் சேவை மைய அணுகுமுறைகள் பின்பற்றப் படுகின்றன.



அதன்படி பட்டா மாற்றம், உட்பிரிவு செய்தல், முதியோர் உதவித்தொகை மற்றும் சான்றிதழ் கோரும் மனுக்கள் போன்றவை சேவை மையத்தில் பெறப்பட்டு கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு இறுதி ஆணை நாள் குறிப்பிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு கணிப்பொறி மூலமாக வழங்கப்படும். குறிப்பிட்ட நாளில் இறுதி ஆணை வழங்கப்பட்டதை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து கணிப்பொறி மூலமாக நேரடியாக கண்காணிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளையும் அவற்றின் தன்மையைப் பொறுத்து 3 நாள் முதல் ஒரு வாரம் மற்றும் அதிகபட்சம் 30 நாட்களுக்குள் முடிவு செய்ய இயலும்.

## வலைத்தளம் (WEBSITE)

அரசு அலுவலகங்களிலிருந்து பொது மக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை எளிதில் பெறும் வண்ணம் தனி வலைத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சான்றிதழ்கள், பட்டா மாற்றம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம் பெறுதல் போன்றவைகளுக்கான வழிமுறைகளை பொதுமக்கள் எளிதில் அறியும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. இவ்வலை தளத்திலிருந்தே இதற்குத் தேவையான விண்ணப்பப் படிவம் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அலுவலர் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை பொதுமக்கள் பெறலாம். மேலும், மாவட்டத்திலுள்ள அனைத்து மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் பற்றிய தகவல்களும் இதில் இடம் பெற்றுள்ளன.



## வளர்ச்சிப் பணிகள் பிணையம்



திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகிய அனைத்திலும் கணினி மையங்கள் அமைக்கப்பட்டு அவை பரந்த வலைப்பின்னல் பரப்பு பிணையமாக இணைக்கப் பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஆகியோர் நேரடியாக தங்கள் அலுவலகத்தில் இருந்து வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள கணினியுடன் தொடர்பு கொண்டு வளர்ச்சிப் பணிகளின் நிலையை கணினி மூலமாகத் தெரிந்து கொள்வதுடன், மேற்கொண்டு உத்திரவுகளைக் கணினி மூலமாகவே பிறப்பிக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இனி அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் முக்கிய கடிதங்கள் யாவும் மின் அஞ்சல் (E-Mail), நிகரி (Fax) இவற்றை கணினியுடன் பொருத்தி உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்யும் வகையில் அனைத்துக் கணினிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

★ ★ ★



*திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கத்தில் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் காலம் (நேரம்) தெரிவிக்கும் சங்கு (சைரன்) அமைக்கப்பட்டு ஒலி எழுப்பப்படுகிறது.*

*இப்பகுதி வேளாண் பெருமக்கள் அதிகம் கொண்ட பகுதி. அவர்களுக்குக் காலத்தைத் தெரிவிக்கும் வகையில் சங்கொலி எழுப்பப்படுகிறது. காலை 6 மணிக்கு அவர்களை பணிக்கு ஆயத்தப்படுத்தவும், 7 மணிக்கு பணிக்குச் செல்லவும் என ஒரு நாளில் 6 முறை சங்கொலி எழுப்பப்படுகிறது.*



திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் பகுதி நேருஜி நகர் மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சந்தித்தோம்.

நேருஜி நகர் மகளிர் குழுவில் 15 உறுப்பினர் உள்ளனர். அவர்கள் 10 பேர் துவரம் பருப்பு மொத்தமாக வாங்கி ஒரு கிலோ, அரை கிலோ என்ற அளவில் பாக்கெட் போட்டு விற்பனை செய்கின்றனர். வெளி மார்க் கெட்டில் கிலோ ரூ.30-க்கு விற்கும் போது அவர்கள் ரூ.25-க்கு விற்பனை செய்கின்றனர். அப்படியும் ஒரு மூட்டைக்கு ரூ.300 இலாபம் ஈட்டுகிறார்கள்.

மற்ற 5 பேர் பழ வியாபாரம் செய்கிறார்கள்.

மகிழ்ச்சியாக இருக்கிறோம். நம்பிக்கையுடன் வாழ்கிறோம் என்று கூறினர்.

குழந்தைகளை நல்ல முறையில் பராமரிக்கவும், படிக்க வைக்கவும் இக்குழுவினரால் முடிகிறது.

★ ★ ★

அம்பேத்கர் நகர் மகளிர் சுய உதவிக்குழுவினைச் சந்தித்தோம். அவர்கள் 4 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து நெல் பயிரிட்டார்கள். இதில் ரூ.18,000 இலாபம் பெற்றுள்ளனர்.

கூலிவேலை செய்து பிழைத்து வந்த இப்பெண்கள் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குகின்றனர். முதலில் இட்லிகடை, துணிக்கடை, சோப்பு, மசாலா விற்பனை என தொடங்கி, இன்று வெற்றி நடைபோடுகின்றனர். தற்போது 10 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிரிட எண்ணியுள்ளனர்.

சாலை போடும் ஒப்பந்தத்தைப் போராடிப் பெற்று 750 மீட்டர் சாலை அமைத்துக் கொடுத்துள்ளனர். இதில் அவர்களுக்குக் கிடைத்தது ரூ.800 தான். வருமானம் இல்லை என்றாலும் ஒரு சாதனை நிகழ்த்திய பெருமிதத்துடன் அதனைக் குறிப்பிட்டார்கள்.

★ ★ ★

## திருவள்ளூரில் 7-10-2000 அன்று முதலமைச்சரால் திறக்கப்பட்ட புதிய திட்டங்களும், வழங்கப்பட்ட உதவிகளும்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர், ரூ.561 இலட்சத்தில், வருவாய் கோட்ட அலுவலகம், திருத்தணி ரூ.59 இலட்சத்தில், நிலஅளவை ஆவணக்காப்புக் கட்டிடம், திருவள்ளூர் ரூ.10 இலட்சத்தில் உருவாக்கப்பட்டு திறக்கப்பட்டன.

பெரியார் நினைவு சமத்துவபுரம், ருத்தம்பாக்கம் ரூ.124.75 இலட்சத்தில் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்டிடம்,ஆரம்பாக்கம், கும்மிடிப்பூண்டி வட்டம் ரூ.33 இலட்சத்தில், பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்கட்டிடம், பழவேற்காடு, பொன்னேரி வட்டம் ரூ.35 இலட்சத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்டிடம், கீழச்சேரி, ரூ.36 இலட்சத்திலும், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் மைய நீராவி தொற்று நீக்கு பிரிவு கட்டிடம் ரூ.9 இலட்சத்திலும், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் நலப்பிரிவு கட்டிடம் ரூ.30.8 இலட்சத்திலும் உருவாக்கப்பட்டு, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

திருவள்ளூர் பெரியகுப்பத்தில் ரூ.470.92 இலட்சத்தில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பிற்காக 54 அடுக்குமாடி வீடுகளையும் முதல்வர் திறந்து வைத்தார்.

### அடிக்கல் நாட்டப்பட்ட புதியத் திட்டங்கள்

பொன்னேரி வருவாய் கோட்ட அலுவலகக் கட்டிடம், திருவள்ளூர் நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பொதட்டூர்பேட்டை நகர குடிநீர் அபிவிருத்தித் திட்டம், ஆரணி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பூந்தமல்லி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், பொன்னேரி வட்டம் பழவேற்காடு ஏரியின் குறுக்கே புதிய பாலம் அமைத்தல், காமராஜ்நகர் 33/11 கிவோ.துணைமின் நிலையம், பட்டாபிராம் 110/11 கிவோ. துணைமின் நிலையம் அலமாதி 400கி.வோ. துணை மின்நிலையம், பொன்னேரி வட்டம் திருவெள்ளவாயல் துணைமின் நிலையம், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் 150 கி.வோ. மின்உற்பத்தி இயந்திரக் கட்டிடம், திருவள்ளூர் வாகன சோதனை தளம் அமைத்தல், புழல் மத்திய சிறைச் சாலையில் சுற்றுச் சுவர், கண்காணிப்புக் கோபுரம். மின்வேலி முதலிய மேம்பாட்டுப் பணிகள், திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டம் பென்னாலூர் பேட்டை சித்தேரியின் கரை மற்றும் பாசனக் கால்வாய் சீரமைத்தல், திருவள்ளூர் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கட்டடம் மற்றும் திருவள்ளூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கக் கட்டடம் ஆகியவற்றிற்கும் அந்நிகழ்ச்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது.

இதுதவிர ரூ.13.47 கோடி நலதிட்ட உதவிகளாக 9,483 பயனாளிக்கு வழங்கப்பட்டது.

### திருத்தணி சிறப்பு நிலை பேரூராட்சி 1996 முதல் 2000 வரை முடிக்கப்பட்ட பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் கி.மீ. | செலவிடப் பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தார்சாலைகள் | 10.306 | 38.28 |
| 2. | சிமெண்ட் சாலைகள் | 5.468 | 83.34 |
| 3. | கப்பிச்சாலைகள் | 0.570 | 1.03 |
| 4. | வடிகால்கள் | 9.197 | 52.21 |
| 5. | குடிநீர் பணிகள் | 6.590 | 12.43 |
| 6. | ஆழ்துளை கிணறுகள் | 8 | 2.70 |
| 7. | திருத்தணி பேரூராட்சி பகுதியில் டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்தது | -- | 12.21 |
| 8. | தெருவிளக்கு | 175 | 16.19 |
| 9. | வாகனங்கள் வாங்கியது | -- | 9.69 |
| 10. | கல்வெர்ட் | 2 | 0.27 |
| 11. | கழிப்பிடங்கள் | 1 | 1.25 |
| 12. | இதரபணிகள்(பூங்கா) | -- | 22.70 |
| | மொத்தம் | 32.317 | 252.30 |





## திருவள்ளூர் மாவட்டம்
## வேளாண் உதவி



வேளாண்மைத்துறையின் சிற்றுநீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் ஆயில் எஞ்சின் வாங்கிய பயனாளி திருவள்ளூர் மாவட்டம் கூடம்பாக்கம் திரு.தங்கவேலுவைச் சந்தித்தோம். 'ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவள் நான். எங்கள் குடும்பத்திற்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் ஒரு கிணறும் உண்டு. இந்த கிணற்றிலிருந்து நீரை மொண்டு ஊற்றித்தான் செடிகள் வளர்த்து வந்தேன். இதனால் சிறிய பகுதியில் தான் பயிரிட முடிந்தது. இப்போது வேளாண்மைத்துறையின் மானிய உதவியுடன் ஆயில் எஞ்சின் வாங்கி பயன்படுத்துகிறேன். எங்கள் நிலம் முழுவதும் பயிரிட முடிகிறது. நல்ல வருமானம் கிடைக்கிறது. நன்றாக இருக்கின்றோம். நான் ரூ.9,300 கட்டினேன். வேளாண்மைத்துறையின் மானியம் ரூ.9,300. இப்போது ரூ.18,600 மதிப்புள்ள ஆயில் எஞ்சின் எனக்குச் சொந்தமாக உள்ளது' என்று கூறி அரசுக்கு நன்றி கூறினார். ★



ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.30,000 மானிய உதவி பெற்று விசை உழவி பெற்றவர் திருமதி சி.இராஜேஸ்வரி. அவர் கணவர் திரு.கிருஷ்ணன் 'நாங்கள் வாடகைக்கு உழவு மாடுகள் வைத்து உழவு செய்து வந்தோம். எங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் வாடகை உழவி கிடைக்காது. அதனால் பயிரிடும் பணி தாமதம் ஏற்படும். இப்போது இந்த விசை உழவி பெற்று பயிர்த் தொழில் செய்வது மிகவும் எளிதாக இருக்கிறது. இந்த உதவி செய்த தமிழக அரசுக்கு நன்றி' என்று உருக்கத்துடன் கூறினார். ★

# அம்பத்தூர் உழவர் சந்தை



தூய்மையான சுகாதாரமான சுற்றுச்சூழல் அமைந்துள்ள அம்பத்தூர் உழவர் சந்தைக்குச் சென்றிருந்தோம். சுறுசுறுப்பான மாலை நேரம். எந்த அங்காடியிலும் இல்லாத தூய்மை இச்சந்தையில் இருந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக காய்கள் வாங்கிச் செல்வதைப் பார்த்தோம். கடைகள்தோறும் பசுமையான காய், கனிகள் இருந்தன. அங்குள்ள வியாபாரம் செய்த விவசாயிகளை வினவியபோது, "நாங்கள் இந்த சந்தை தொடங்கிய நாளிலிருந்து வியாபாரம் செய்கின்றோம். நல்ல வருமானம் வருகிறது'' என்றனர். கீழகொண்டான் பாளையத்தைச் சேர்ந்த திரு.கார்த்திகேயன் ஒரு நாளைக்கு ரூ.180–லிருந்து ரூ.200 வரை இலாபம் கிடைப்பதாகக் கூறினார்.'

நுகர்வோரும் இங்கு குறைந்த விலையில் புதிய காய், கனிகள் வாங்குவதாகக் கூறினார்கள். திருமதி. இந்திராணி, திரு.பி.கே.வால்கன் ஆகியோர் "இந்த சந்தை தொடங்கிய நாளிலிருந்து இங்குதான் காய்களை வாங்கி வருகின்றோம். வேறு கடைக்குச் செல்வதில்லை. நியாயமான விலையில் நல்ல காய்களை வாங்க முடிகிறது" என்றனர்.

இங்கு டான்வா மகளிர் காய்–கனி கடை ஒன்றையும், சிற்றுண்டிச்சாலை ஒன்றையும் நடத்தி வருகின்றனர்.

இச்சந்தையின் கழிவுகளைக் கொண்டு உரமும் அம்பத்தூர் உழவர் சந்தையில் தயாரிக்கப் பட்டு வருகிறது.

இங்கு பூமாலை திட்டத்தின் கீழ் 6 கைவினை பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளும் உள்ளன. ★



# வேலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

## வேலூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| தலைநகர் | – | வேலூர் |
| பரப்பு | – | 6.077 ச.கி.மீ. |
| மக்கள் தொகை | – | 30,26,432 |
| ஆண்கள் | – | 15,29,944 |
| பெண்கள் | – | 14,96,488 |
| எழுத்தறிவு | – | 15,72,293 |
| மக்கள் நெருக்கம் (ச.கி.மீ.) | – | 498 |

**வரலாறு**

இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் 1806–இல் சிப்பாய் கலகத்தின் முதல் பொறி இம்மாவட்டத் தலைநகர் வேலூரில் இருந்து கிளம்பியது. 1989, செப்டம்பர் 30–இல் வேலூர் மாவட்டம் உருவானது.

**வருவாய் நிர்வாகம்**

கோட்டங்கள்–3. ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர். வட்டங்கள்–8. ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம், வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர், வாணியம்பாடி, காட்பாடி,

**கல்வி**

அரசு மேல்நிலைப்பள்ளி–79, அரசு உயர்நிலைப்பள்ளி 127, நகராட்சி உயர்நிலைப்பள்ளி–4, நகராட்சி மேல்நிலைப்பள்ளி–3, ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளி–6, ஆதி திராவிட நல உயர்நிலைப்பள்ளி–3, நிதியுதவி பெறும் உயர்நிலை/மேனிலைப்பள்ளிக்ள்–60, கல்லூரிகள்–12, சுயநிதி கல்லூரிகள்–3, அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள்–5, அரசு பாலிடெக்னிக்–1, அரசு நிதியுதவி பாலிடெக்னிக்–1, தனியார் பாலிடெக்னிக்–5.

**தொழிற்சாலை**

ராணிப்பேட்டை ஒரு பெரிய தொழில் மையம். பெல், என்பீல்டு, ஈ.ஐ.டி. பாரி போன்ற நிறுவனங்கள் இங்குள்ளன. அரிசி மண்டிகள் குறிப்பிடத்தகுந்தவை. தவிர தமிழ்நாடு வெடி பொருள் ஆலை, எஃகு ஆலை, நூற்பாலை, எம்.ஆர்.எப்.டயர், சந்தனம், சர்க்கரை, தோல் மற்றும் தீப்பெட்டி ஆலைகளும் உள்ளன.

**முக்கிய விளைபொருட்கள்**

நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை.

**ஆறுகள்**

பாலாறு, பொன்னையாறு.

**மழையளவு**

சராசரி 1012.4 மி.மீ.-1998–99

**சுற்றுலாத் தலங்கள்**

வேலூர் கோட்டை, முத்து மண்டபம், ஏலகிரிமலை, அமிரிதிக்காடு, ஜவ்வாதுமலை, டாக்டர் விஷ்ணுபாப்பு வான் இயற்பியல் நிறுவனம், காவனூர்.





கிராமங்கள் மூலம் விவசாயிகள் காய்கறிகள், பழங்கள், மலர்கள், தேங்காய் போன்ற விளை பொருட்களை கமை கட்டணம் இன்றி பேருந்து மூலம் உழவர் சந்தைக்குக் கொண்டுவந்து தாங்களாகவே இலவச எடை தராசு மூலம் நுகர்வோருக்கு விற்பனை செய்து எந்த இடைத் தரகர்கள் இல்லாமல் இலாபம் பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள்.

இதே போன்று 19.6.2000 மற்றும் 19.8.2000 முறையே காகிதப்பட்டடை மற்றும் வாணியம்பாடியில் தொடங்கப் பட்ட உழவர் சந்தைகளுக்கு 40 கிராமங்கள் மற்றும் 50 கிராமங்களிலிருந்து காய்கறிகள் வருகின்றது.

## வளர்ச்சிப் பணிகள்

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அனைத்து வசதிகளையும் கிராமங்களுக்கு அளித்திடும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வேலூர் மாவட்டத்தில் 49 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டது. இந்த 49 கிராமங்களிலும் 2642 பணிகள் ரூ.16.85 கோடியில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

### நமக்கு நாமே திட்டம்

ஊர் முன்னேற்றத்தில் ஒவ்வொருவரும் பங்கேற்கும் நமக்கு நாமே திட்டம் மூலம் வேலூர் மாவட்டத்தில் 2109 பணிகள் ரூ.7.37 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.

### சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் இத்திட்டம் மூலம் 1937 பணிகள் ரூ.23.04 கோடியில் மேற்கொள்ளப்பட்டது.

### உழவர் சந்தை

வேலூர் மாவட்டத்தில் நான்கு உழவர் சந்தைகள் தொடங்கப் பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இதில் வேலூர், காட்பாடி உழவர் சந்தை 29.1.2000–ல் தொடங்கப்பட்டது. இச்சந்தைகளில் முறையே 52 கிராமங்கள் மற்றும் 72

| | | |
|---|---|---|
| வேலூர் மற்றும் காட்பாடி | 29.1.2000 முதல் 19.9.2000 முடிய | 235 நாட்கள் |
| காகிதப்பட்டடை உழவர் சந்தை | 19.6.2000 முதல் 19.9.2000 முடிய | 93 நாட்கள் |
| வாணியம்பாடி உழவர்சந்தை | 19.8.2000 முதல் 19.9.2000 முடிய | 32 நாட்கள் |

### விற்பனை விவரம் :

வேலூர் உழவர் சந்தையில் 27,13,286 கிலோ காய்கறிகள், ரூ.1,60,41,691–க்கு விற்பனை செய்யப்பட்டது. இதில் 42,566 உழுவோரும், 8,25,072 நுகர்வோரும் பயனடைந்துள்ளனர்.





காட்பாடி உழவர் சந்தையில் 23,78,070 கிலோ காய்கறிகள் ரூ.1,53,29,609–க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 34,966 விவசாயிகளும், 7,94,455 பொதுமக்களும் பயன்பெற்றனர்.

காகிதப்பட்டடை உழவர் சந்தையில் 3,67,821 கிலோ காய்கறிகள் ரூ.25,38,842–க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 6,356 விவசாயிகளும், 1,23,338 பொதுமக்களும் பயன் பெற்றனர்.

வாணியம்பாடி உழவர் சந்தையில் 2,20,640 கிலோ காய்கறிகள் ரூ.11,78,599–க்கு விற்பனையாகியுள்ளது. இதில் 3,584 விவசாயிகளும், 73,142 பொதுமக்களும் பயன் பெற்றனர்.

மொத்தத்தில் 56,79,817 கிலோ காய்கறிகள் ரூ.3,50,88,741 மதிப்பில் விற்பனை ஆகியுள்ளது. இதில் மொத்தமாக 87,472 விவசாயிகளும், 18,16,007 நுகர்வோரும் பயன் பெற்றுள்ளனர்.

### வருமுன் காப்போம் திட்டம்

வேலூர் மாவட்டத்தில் வருமுன் காப்போம் பன்முனை இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம் 6.1.2000 முதல் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டில்



454 மருத்துவ முகாம்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2000 வரை 275 முகாம்களும், தொரப்பாடி மத்திய சிறையில் சிறப்பு முகாம் ஒன்றும் சேர்த்து 276 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள 178 முகாம்கள் 2000ஆம் ஆண்டு நவம்பர்/டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

★ இதுவரை நடைபெற்றுள்ள 276 முகாம்களில் 2,86,057 நபர்கள் பயனடைந்துள்ளனர். அவர்களில் ஆண்கள் 96,600 (34%), பெண்கள் 1,26,360 (44%) மற்றும் குழந்தைகள் 63,097 (22%)

★ இவர்களில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, கண், காது–மூக்கு–தொண்டை, பல், தோல், குழந்தைகள் நலம், மகப்பேறு, சித்த மருத்துவம் சிறப்பு மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றவர்கள் ஆண்கள்–56,162, பெண்கள்–68,622 மற்றும் குழந்தைகள்–46,456 (மொத்தம்–1,71,240)

★ மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை – 15,974

★ அவர்களில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றவர்கள் – 3,298

★ மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகளுக்காக 15.7.2000–ம் அன்று வேலூர் அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவமனையில் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு, 616 நோயாளிகள் சிகிச்சைப் பெற்றனர்.

★ இதுவரை ரூ.16,98,973 மதிப்புள்ள மருந்துகள் இந்த முகாம்களில் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வக பரிசோதனைகள் இம்முகாம்களிலேயே செய்யப்பட்டன. அதில்

சிறுநீர் பரிசோதனை – 1,92,446 பேருக்கும், இரத்த பரிசோதனை – 33,816 பேருக்கும், சளி பரிசோதனை – 3,370 பேருக்கும், இ.சி.ஜி. – 6,205 பேருக்கும், அல்ட்ரா சோனாகிராம் – 1,150 பேருக்கும், மற்ற பரிசோதனைகள் – 3,174 பேருக்கும் செய்யப்பட்டது.

1500 பேர்களுக்கு மேல் பங்கு பெற்ற முகாம்கள் – 34, 1000 பேர்களுக்கு மேல் பங்கு பெற்ற முகாம்கள் – 99, 1000 பேர்களுக்கு குறைவானவர்கள் பங்கு பெற்ற முகாம்கள் – 143

### பாராட்டு மற்றும் சிறப்பு அம்சங்கள்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் ஒத்தகால மதிப்பீட்டு ஆய்வறிக்கையில் வேலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட முகாம் ஒரு மாதிரி முகாம் என பாராட்டியுள்ளது.

"வேலூர் மாவட்டம் கொணவட்டம் முகாமின் (28.1.2000) சிறப்பம்சமாவது, முதலாவதாக இங்கு பதிவு செய்யப்பட்ட அத்தனை பயனாளிகளுக்கும் எடை பார்க்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அவர்களில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரத்த அழுத்தம் பரிசோதித்து சுகாதார அட்டைகளில் குறிப்பிட்டது சீரான செயலாக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அடுத்த சிறப்பம்சமாவது, ஒவ்வொரு மருத்துவப் பிரிவுக்கும் மற்றும் பரிசோதனை இடம் போன்றவற்றிற்கு அடையாள



சின்னம் குறிப்பு பலகைகள் வைக்கப்பட்டிருந்ததால் பெரும்பாலான பயனாளிகள் பொது மருத்துவ பரிசோதனைக்குப் பின் தானாகவே தங்களுக்கான சிறப்பு மருத்துவர் மற்றும் பரிசோதனை பிரிவுகளுக்குச் சென்று பயனடைந்தனர். தமிழகத்தில் இதுகாறும் நடைபெற்ற அத்தனை முகாம்களைக் காட்டிலும் இங்கு அதிக அளவில் நோயின் குணமறிந்து அதற்கேற்றாற்போல் மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான பயனாளிகள் முகாமின் மருத்துவ சேவையைப் பாராட்டி சென்றதற்கு மற்றொரு காரணம் முகாமில் மிகப் பொறுமையாகப் பணியாற்றிய மருத்துவர்களும், பேருதவி புரிந்த சீருடைத் தரித்த புனித ஜான் செவிலியர் பள்ளியின் மாணவிகள் மற்றும் ஜே.பி.கே.எம். செவிலியர் பள்ளி மாணவிகளின் சேவைகளுமே. இம்முகாம் வளாகம் மிகவும் தூய்மையாகவும், துப்புரவாகவும் ஒரு சிறந்த மருத்துவமனை போல் காட்சி அளித்ததை பயனாளிகள் மிகவும் பாராட்டி இருந்தார்கள். வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் ஒத்துழைப்பும், ஊராட்சி ஒன்றியத்தின் அதிக அளவு ஈடுபாடும் தன்னார்வ தொண்டர்களின் பங்கேற்பும் இம்முகாமை சுகாதாரத்துறை செவ்வனே நடத்தி முடிக்க ஏதுவாக இருந்தது. இது ஒரு மாதிரி முகாம் என்று கூட சொல்லலாம்".

மேலும் முகாம்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆய்வகம் மிகவும் சிறப்பாக செயல்படுகிறது என்பதை நேரிடையாகவும், தமிழகத்தில் இம்மாவட்டத்தில் தான் ஆய்வகம் மற்றும் மலேரியா மற்றும் யானைக்கால் சிகிச்சை ஏற்பாடுகள் தொடர்ந்து அனைத்து முகாம்களிலும் நடைபெறுகின்றன எனவும் பாராட்டியுள்ளனர்.

முகாம் செயல்பாடு பற்றிய சிறப்பு அறிக்கை முகாமைப் பார்வையிடும் மாவட்ட அளவிலான அதிகாரிகள் மற்றும் முகாம் பொறுப்பு வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து மாவட்ட ஆட்சியருக்கு நேரிடையாக அனுப்பும் முறை நடைமுறையில் உள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும்.

ஜூன் 2000ம் முதல் தொழுநோய் கண்டறிய முகாமிற்கு வருகிற நோயாளிகள் சிறியவர், பெரியவர்கள் ஆக அனைவருக்கும் மருத்துவம் சாரா மேற்பார்வையாளர்களால் பரிசோதனை செய்யப்படுவதும், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அனைவருக்கும் இ.சி.ஜி எடுப்பதும் சிறப்பு செயல்பாடுகள் ஆகும்.

மலேரியா மற்றும் யானைக்கால் சிகிச்சை கடந்த ஆண்டைவிட நடப்பு ஆண்டில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்திருப்பது, சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்வை வருமுன் காப்போம் திட்ட முகாம் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகிறது.

**மகளிர் சிறுவணிகக் கடன்**

வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் ஏழை, எளிய மகளிர் சிறுவணிகம் செய்ய 3145 மகளிர்க்கு ரூ.49.80 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

சாதி சமய பூசல்களற்ற ஓர் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முயலும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியில் உருவானதுதான் பெரியார் நினைவு சமத்துவபுரம் என்ற மகத்தானத் திட்டம்.





தமிழ்நாட்டின் முதல் சமத்துவபுரம், வேலூர் மாவட்டம் பொய்கை ஊராட்சியில் 12.77 ஏக்கர் பரப்பளவில் ரூ.105.49 இலட்சம் செலவில் அமைக்கப் பெற்று 20.12.98–இல் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தின் இரண்டாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் அரக்கோணம் வட்டம் பெரும்புலிபாக்கத்தில் 11.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.101.66 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்று 30.6.99 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தின் மூன்றாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் வாலாசா வட்டம் அம்மூர் பேரூராட்சி எல்லையில் 11.03 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.121.66 இலட்சம் செலவில் அமைக்கப்பெற்று 30.6.99 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இம்மாவட்டத்தின் நான்காவது பெரியார் நினைவு சமத்துவபுரம் திருப்பத்தூர் வட்டம் உடையாமுத்தூர் கிராமத்தில் 12.33 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.81.65 இலட்சத்தில் நிர்மாணிக்கப்பட்டு 19.8.2000 அன்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தின் 1999–2000–ஆம் ஆண்டு ஐந்தாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் காட்பாடி வட்டம் செம்பராயநல்லூர் ஊராட்சியில் 11.36 ஏக்கர் பரப்பில் அமையும் பொருட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது.

இம்மாவட்டத்தின் ஆறாவது பெரியார் நினைவு சமத்துவபுரம் அரக்கோணம் வட்டம் சோளிங்கர் – அரக்கோணம் நெடுஞ்சாலையில் கூடலூர் ஊராட்சியில் 10.41 ஏக்கர் பரப்பில் அமைக்க, கட்டுமானப் பணிகள் 16.8.2000 அன்று தொடங்கப்பட்டது.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

தமிழக முதல்வர் அவர்களால் 18.1.2000 அன்று தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம் மாதம்தோறும் 20 கிராமங்களில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று விதம் 31.3.2000 முடிய 41 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 1,40,161 கால்நடைகள் பயனடைந்துள்ளன.

1.4.2000 முதல் 31.8.2000 முடிய 100 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. 2,12,575 கால்நடைகள் பயனடைந்துள்ளன. முகாம்களில் தடுப்பூசிப் பணி, சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம் செய்தல், கருவூட்டல் பணி, மலட்டுத் தன்மைக்கு சிகிச்சை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் கால்நடை தீவனம் குறித்து விரிவான பிரசாரம் செய்யப்படுகிறது.

**பூமாலை**

வேலூர் மாவட்டத்தில் டவுன்ஹாலில் 23.8.2000 முதல் தற்காலிக வணிக வளாகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




இவ்வளாகத்தில் 17 கடைகள் உள்ளன. இக்கடைகளில் தினமும் ரூ.700–க்கு மேல் பொருள்கள் விற்பனை செய்கிறார்கள்.

**சமூக நலத்துறை**

வேலூர் மாவட்டத்தில் சமூகநலத்துறை மூலம் கடந்த நான்காண்டுகளில் வழங்கப்பட்ட உதவிகள் விவரம்:

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவி ரூ.16,01,01,000. பயன்பெற்றோர் எண்ணிக்கை 17,545 பேர்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டஉதவி ரூ.2,19,000. பயன் பெற்றோர் 32 பேர்.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவி ரூ.34,80,000. பயன் பெற்றோர் 251 பேர்.

ஈ.வெ.ரா.மணியம்மையார் ஏழை விதவை மகள் திருமண நிதியுதவி ரூ.10,80,000. பயன் பெற்றோர் 222 பேர்.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்றோர் பெண் திருமண நிதியுதவி ரூ.1,15,000. பயன் பெற்றோர் 22 பேர்.

சத்தியவாணிமுத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் மூலம் பயன்பெற்றோர் 725 பேர்.

ஏழை விதவை குழந்தைகளுக்கு இலவச பாடநூல் வழங்கும் திட்டச் செலவினம் ரூ.1,52,500. பயன்பெற்றோர் 1410 பேர்.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவி திட்டச் செலவினம் ரூ.1,03,93,750. பயன்பெற்றோர் 18,750 பேர்.

சிவகாமி அம்மையார் நினைவு பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டச்செலவினம் ரூ.36,66,000. பயன்பெற்றோர் 2434 பேர்.

### இளைஞர் மன்றம்

வேலூர் மாவட்டத்தில் ரூ.0.68 கோடியில் 272 இளைஞர் மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

### கண்ணொளித் திட்டம்

இந்தியாவில் 1986–1989–ஆம் ஆண்டு ஆய்வின்படி 12 மில்லியன் மக்கள் பார்வையிழப்புக்குள்ளாகி உள்ளனர் எனவும், ஆண்டுதோறும் இந்நிலை கூடி வருவதாகவும் அறியப்பட்டுள்ளது. உலகளவில் பார்வையிழப்புக்குள்ளான நபர்களில் 5ல் ஒருவர் இந்தியாவில் உள்ளனர் எனவும், நகர்புறங்களைவிட கிராமப்புறங்களில் இந்த நிலை கூடுதல் எனவும் ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இதன்படி இந்திய அளவில் 1,000 பேர்களில் 15 பேர்கள் பார்வையிழப்புக்குள்ளாகியுள்ளனர் என கணக்கிடப் பட்டுள்ளது.

ஆண்டுதோறும் பெருகிவரும் பார்வையற்றோரின் எண்ணிக்கையை குறைக்க, குறிப்பாக கிராமப்புற ஏழை, எளிய மக்களும் பெரிதும் பயன்பெறும் வகையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1972–ஆம் ஆண்டு அரசு இலவச கண்ணொளித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் கிராமங்கள், நகரங்கள் தோறும் பெரியளவில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, கண் மருத்துவ நிபுணர்களால் புரைநோய்க்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இலவச கண்ணொளித் திட்டம் குக்கிராமங்களில் வாழக்கூடிய மக்களிடையேயும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்வுகளின்படி வேலூர் மாவட்டத்தில் பார்வை இழப்புக்குள்ளானவர்களின் நோய் வாரியான விகிதம் 100 நபர்களில் பின்வருமாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| கண்புரை நோய் உள்ளவர்கள் (Cataract) | – | 80% |
| பார்வைத் திறன் குறையுள்ளோர் (Refractive Error) | – | 7.35% |
| கருவிழித் தழும்பு (Corneal Scar) | – | 4% |
| க்ளாக்கோமா (Glaucoma) | – | 1% |

வேலூர் மாவட்டத்தில் 1996–97 முதல் 1999–2000ம் முடிய கடந்த 4 ஆண்டுகளில் 53,920 பேர்களுக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு பார்வை மீட்டுத் தரப்பட்டுள்ளது.

### 1998–99 கண்புரை நோய் இல்லாத மாவட்டமாக அறிவிக்கும் சிறப்புத் திட்டம் :

1998–99 ஆண்டில் வேலூர் மாவட்டத்தை "முற்றிலும் கண்புரை நோய் இல்லா மாவட்டமாக" அறிவிக்கும் சிறப்புத் திட்டத்தின்படி கண்புரை நோயாளிகள் அனைவரையும் கண்டறிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் 1998–ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் வீடு வீடாகக் கணக்கெடுப்பின்படி கண்டறியப்பட்ட கண்புரை நோயாளிகள் அனைவரும் சிகிச்சைப் பெற இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

இச்சிறப்புத் திட்டத்தின்படி 1998–99–ஆம் ஆண்டின் மொத்தம் 122 இலவச கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு, முற்றிய கண் புரையுள்ள அனைவருக்கும் கண்புரை நீக்க அறுவைச் சிகிச்சை செய்து கண்ணொளி வழங்கப்பட்டது.

### பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கண் பரிசோதனை:

1996–97–ஆம் ஆண்டில் 9 வட்டாரங்கள் மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள 972 பள்ளிகளில் பயிலும் 1,92,654 மாணவ, மாணவியர்களுக்குப் பார்வைச் சோதனை செய்யப்பட்டு பார்வைக் குறைவான 1,140 மாணவ மாணவியர்களுக்கு இலவசக் கண்ணாடிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் கண் மருத்துவ உதவியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு பார்வையிழப்பு தடுக்கப்பட்டது.

1997–98–ஆம் ஆண்டில் 11 வட்டாரங்கள் மற்றும் 5 நகராட்சிகளில் உள்ள 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் 3,00,771 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பார்வை சோதனை செய்து பார்வைக் குறைவான 1,155 குழந்தைகளுக்கு இலவசக் கண்ணாடிகள் கண் மருத்துவ உதவியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு பார்வையிழப்புத் தடுக்கப்பட்டது.

1999–2000–ஆம் ஆணடில் வாழ்வொளித் திட்டத்தின் கீழ் 57,387 பார்வைக் குறைவான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பார்வைச் சோதனை செய்து 1,327 மாணவ மாணவியர்களுக்கு இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

31.3.2001க்குள் பார்வைக்குறைவான அனைத்து குழந்தைகளுக்கும் கண்பரிசோதனை செய்து பார்வையிழப்பைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இலவசக் கண்ணாடிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



### கண் மருத்துவக் கட்டட வசதிகள்:

16 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்பரிசோதனை அறைகள் ரூ.8.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ளன.

1999–2000–ஆம் ஆண்டில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண் பரிசோதனை அறைகள் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

ஆற்காடு மற்றும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைகளில் 16 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் ரூ.64 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளன.

1999–2000–ஆம் ஆண்டில் அரக்கோணம் மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

### தொழில் வளர்ச்சி

மாநில தொழில் வணிகத்துறையின் ஒரு அங்கமாக மாவட்ட அளவில் செயல்படும் ஒரு அமைப்பு தான் மாவட்ட தொழில் மையம். தொழில் முனைவோருக்குத் தேவையான தகுந்த தொழில் திட்டங்களை வகுத்துக் கொடுத்தல், தொழிலுக்குத் தேவையான நிலம், கட்டடம் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதி நிறுவனங்கள் மூலம் கடன் உதவிபெற பரிந்துரை செய்தல் மற்றும் உரிமம் பெறுவதில் தடங்கல் ஏற்படின் ஒருமுனை வழி தீர்வுக் கூட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்படுகிறது. மின் இணைப்பு முன்னுரிமையில் பெற்றிட வழி வகுத்தல். உற்பத்திப் பொருட்களை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சிறுதொழில் நிறுவனம் மூலமாக விலை முன்னுரிமை அடிப்படையில் விற்பனை செய்திடத் தேவையான பதிவுச்சான்றிதழ்கள் பெற்றிட பரிந்துரை செய்தல். உற்பத்தி பொருட்களுக்கு "தர நிர்ணயச் சான்றிதழ்" இந்திய தர நிர்ணய நிலையம் மற்றும் அரசு சோதனைக் கூடங்களின் மூலம் குறைந்த கட்டணத்தில் பெற்றிட பரிந்துரை செய்தல். பாரதப் பிரதமர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 8–ஆம் வகுப்பு தேறிய அனைத்து ஆண்/பெண் இருபாலரும் சுயமாகத் தொழில் தொடங்க தேசிய வங்கியின் மூலம் கடனுதவி அளிக்கிறது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளித்தல். சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தொழில் நடத்த சலுகைகளும் மானியங்களும் வழங்கப்படுகிறது.

### மாவட்டத் தொழில் மையத்தின் சாதனைகள்:

சிறுதொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்களைக் கண்டறிந்து தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தொழில் தொடங்கி நடத்திக்கொண்டு இருப்பவர்களுக்கு நிரந்தர சிறுதொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

| | இலக்கு | சாதனைகள் |
|---|---|---|
| அ) தற்காலிக சிறுதொழில் சான்றிதழ் | | |
| 1997–98* | 2200 | 2313 |
| 1998–99 | 2200 | 1489 |
| 1999–2000 | 2200 | 2341 |
| 2000–2001 (31.8.2000 முடிய) | 2200 | 868 |
| ஆ) நிரந்தர சிறுதொழில் சான்றிதழ் | | |
| 1997–98 | 1220 | 1272 |
| 1998–99 | 1220 | 1222 |
| 1999–2000 | 1220 | 1224 |
| 2000–2001 (31.8.2000 முடிய) | 1310 | 559 |

### சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மானியம் மற்றும் சலுகைகள் :

தொழிலில் பின்தங்கிய ஒன்றியங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 15% தொழில் முதலீட்டு மானியம், மிகவும் பின்தங்கிய ஒன்றியங்களில் தொடங்கப்படும் தொழில்களுக்கு 20% மானியத் தொகை வழங்கப்படுகிறது. மேலும் தானியங்கி வாகன உதிரி பாகங்கள் தயாரித்தல், உணவுப் பொருட்கள், தோல், மருந்துகள், மின்னணுப் பொருட்கள் தயாரிப்பு போன்ற தொழில்களுக்கு 20% சிறப்பு மானியம் வழங்கப்படுகிறது.

புதிய தொழிற்சாலைகள் மின்சாரம் பெறப்பட்ட முதல் மூன்று வருடங்களுக்கு முறையே 40%, 30% மற்றும் 20% மின்கட்டண மானியம் வழங்கப்படுகிறது. மேலும் வட்டியில்லா விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டத்தில் விற்பனை வரி தள்ளுபடி சலுகைகள்.

| | | மானியம் வழங்கப் பட்ட தொகை (இலட்சத்தில்) | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொழில் முதலீட்டு மானியம் | 1997–98 | 156.65 | 56 |
| | 1998–99 | 163.90 | 69 |
| | 1999–2000 | 208.09 | 53 |
| | 2000–2001 (31.8.2000 முடிய) | 125.73 | 28 |

| | | | |
|---|---|---|---|
| மின்மானியம் | 1997-98 | 39.17 | 293 |
| | 1998-99 | 24.69 | 127 |
| | 1999-2000 | 24.39 | 152 |
| | 2000-2001 (31.8.2000 முடிய) | 10.43 | 67 |
| ஜெனரேட்டர் மானியம் | 1998-99 | 1.03 | 4 |
| | 1999-2000 | 1.69 | 4 |
| | 2000-2001 (31.8.2000 முடிய) | 1.12 | 4 |
| வட்டியில்லா விற்பனை வரி தள்ளிவைப்பு | 1997-98 | 24.29 | 2 |
| | 1998-99 | இல்லை | இல்லை |
| | 1999-2000 | 18.88 | 1 |
| | 2000-2001 | இல்லை | இல்லை |
| வட்டியில்லா விற்பனை வரி தள்ளுபடி | 1997-98 | 14.21 | 2 |
| | 1998-99 | இல்லை | இல்லை |
| | 1999-2000 | 80.41 | 1 |
| | 2000-2001 | இல்லை | இல்லை |

## மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் படித்து சுயதொழில் தொடங்க விரும்பும் மகளிருக்கு 2 மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் தொழில் தொடங்க எல்லா உதவிகளும் செய்யப்படுகிறது. பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ.300 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இவர்கள் 10 ஆம் வகுப்பு படித்தவராக இருக்க வேண்டும். மேலும் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். பயிற்சி முடிந்தபின் கடன் உதவி பெற, தேசிய வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும்.

| | ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1997-98 | 30 | 26 |
| 1998-99 | 35 | 35 |
| 1999-2000 | 30 | 27 |
| 2000-2001 (31.8.2000 முடிய) | 30 | பயிற்சி அளிக்கப்பட உள்ளது. |

## தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் :

கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து சேவை செய்வதில் வேலூர் மாவட்டத்தில் தொழில் வணிகத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 14 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

அதிக அளவில் தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீரால் பாலாற்று படுகை மற்றும் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதால் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்திரவின் பேரில் பொது தோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இராணிப்பேட்டை, ஆம்பூர், பேர்ணாம்பட்டு, வாணியம்பாடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

## கல்வித்துறை

அனைத்துக் கிராமப்புற உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 8-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்க்கு ஒவ்வொரு ஆண்டும் திறனாய்வுத் தேர்வு நடத்தி, தேர்வு பெற்ற 100 மாணவ, மாணவியர்க்கு ஆண்டுதோறும் ஒவ்வொருவருக்கும் ரூ.1,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 1997-2000-ஆம் ஆண்டு வரை ரூ.14.70 இலட்சம் மாணவர்களுக்கு உதவித்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் மாவட்டத்தில்/மாநிலத்தில் தரம் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு அவர்களின் உயர் கல்விச் செலவை அரசு ஏற்கும் திட்டம் 1997-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 1997-ஆம் ஆண்டு முதல் 1999-ஆம் ஆண்டு வரை 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 7 பேர்களுக்கும், பிளஸ் 2 தேர்வில் 12 பேர்களுக்கும் மொத்தம் ரூ.2,74,161 உயர் கல்விச் செலவினமாக வழங்கப்பட்டுள்ளது.








கணினிக் கல்வித் திட்டத்தின் கீழ் 1999-2000-ஆம் ஆண்டில் 63 அரசினர் மேல்நிலைப்பள்ளிகளிலும், 2000-2001-ஆம் ஆண்டில் 22 அரசினர் மேல்நிலைப்பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள்-312, முழுநேர நியாய விலைக்கடைகள்-106, மகளிர் நியாயவிலைக் கடைகள்(முழுநேரம்)-14 ஆக மொத்தம் 432 புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

## குடும்ப அட்டைகள்

புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி 1998-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டு, புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. அதன் விவரம் :

பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக 6,71,360 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

புதியதாக குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற மனுக்களின் பேரில் விசாரணை மேற்கொண்டு, தகுதியான நபர்களுக்கு 1,16,071 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

## போலி குடும்ப அட்டைகள்

போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடிக்க வருவாய்த்துறை, உணவு பொருள் வழங்கல் துறை மற்றும் கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் அனைவரையும் ஈடுபடுத்தி நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளை வீடு வீடாகச் சென்று 100% தணிக்கை மேற்கொண்டு 49,496 போலி குடும்ப அட்டைகள் கண்டறிந்து இரத்து செய்யப்பட்டுள்ளன.

பொது மக்களின் சௌகரியத்தை முன்னிட்டு, நகர்ப் புறங்களில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருவதை ஒருங்கிணைத்து, வேலூர் மாவட்டத்தில் 9 மண்ணெண்ணெய் பங்குகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, மாதம் முழுவதும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரசு நிர்ணயித்த அளவுகோலின்படி மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.



## போக்குவரத்துத்துறை



வேலூர் மாவட்டத்தில் இதுகாறும் 33 வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயங்கும் வகையில் அனுமதிச் சீட்டு வழங்க வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் உள்ள 303 கிராமங்களில் வசிக்கும் பொது மக்கள் சிற்றுந்து வசதிகள் பெற்று பயனடைவார்கள்.

அனுமதிக்கப்பட்ட மேற்குறித்த 33 வழித்தடங்களில் 13 வழித்தடங்களில் தற்பொழுது சிற்றுந்துகள் இயங்கி வருகிறது . மேலும் 26 வழித்தடங்களில் சிற்றுந்து அனுமதி வழங்கிட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

தனி நபர் கடனுதவித் திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டில் பெறப்பட்ட 715 மனுக்களில் 83 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூ.53,42,435 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 1999–2000 ஆண்டில் 117 மனுக்கள் பெறப்பட்டு, 18 மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டு 18 பயனாளிகளுக்கு ரூ.16,68,000 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 1996–97–ஆம் ஆண்டில் மிக பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த 97,372 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.10 கோடியும், பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த 77,716 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.26.67 கோடியும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்துறை மூலம் 1996–97–ஆம் ஆண்டில் 21,225 மாணவ, மாணவியர்களுக்கும், 1997–98–ஆம் ஆண்டில் 26,608 மாணவ, மாணவியர்களுக்கும், 1998–99–ஆம் ஆண்டில் 30,801 மாணவ, மாணவியர்களுக்கும், 1999–2000–ஆம் ஆண்டில் 34,257 மாணவ, மாணவியர்களுக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி 5–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 1996–97–ஆம் ஆண்டில் 1,141 மாணவ, மாணவியர்களுக்கும், 1997–98–ஆம் ஆண்டில் 1,141 மாணவ, மாணவியர்களுக்கும், 1998–99–ஆம் ஆண்டில் 1,057 மாணவ, மாணவியர்களுக்கும், 1999–2000–ஆம் ஆண்டில் 1,163 மாணவ, மாணவியர்களுக்கும் இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி பயிலும் 10, 12ஆம் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு 1996–97–ஆம் ஆண்டில் 323ம், 1997–98–ஆம் ஆண்டில் 323–ம், 1998–99–இல் 330–ம், 1999–2000–ஆம் ஆண்டில் 285ம் இலவச கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி உதவித் தொகை 1996–97–ஆம் ஆண்டில் 49 நபர்களுக்கு ரூ.18,720ம், 1997–98–ஆம் ஆண்டில் 39 நபர்களுக்கு ரூ.13,745ம், 1998–99–ஆம் ஆண்டில் 25 நபர்களுக்கு ரூ.9,065ம், 1999–2000–ஆம் ஆண்டில் 55 நபர்களுக்கு ரூ.19,335ம் வழங்கப்பட்டுள்ளன.

1996–97–ஆம் ஆண்டில் ரூ.87,075 மதிப்புள்ள 75 சலவைப் பெட்டிகளும், 1997–98–ஆம் ஆண்டில் ரூ.1,84,650 மதிப்புள்ள 150 சலவைப் பெட்டிகளும், 1998–99–ஆம் ஆண்டில் ரூ.4,92,400 மதிப்புள்ள 400 சலவைப் பெட்டிகளும், 1999–2000–ஆம் ஆண்டில் ரூ.6,15,500 மதிப்புள்ள 500 சலவைப் பெட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள முடிதிருத்தும் தொழில் புரிபவர்களுக்கு 1996–97–ஆம் ஆண்டில் ரூ.5,880 மதிப்புள்ள சவரக் கருவிகள் 20 நபர்களுக்கும், 1997–98–ஆம் ஆண்டில் ரூ.14,700 மதிப்புள்ள சவரக்கருவிகள் 50 நபர்களுக்கும், 1998–99–ஆம் ஆண்டில் ரூ.29,400 மதிப்புள்ள சவரக்கருவிகள் 100 நபர்களுக்கும், 1999–2000–ஆம் ஆண்டில் ரூ.54,000 மதிப்புள்ள சவரக் கருவிகள் 250 நபர்களுக்கும் வழங்கப்பட்டன.

1997–98–ஆம் ஆண்டில் 20 பயனாளிகளுக்கு ரூ.13,520 மதிப்புள்ள கல் உடைக்கும் கருவிகளும், 1998–99–ஆம் ஆண்டில் 50 பயனாளிகளுக்கு ரூ.19,100 மதிப்புள்ள கல் உடைக்கும் கருவிகளும், 1999–2000–ஆம் ஆண்டில் 100 பயனாளிகளுக்கு ரூ.45,000 மதிப்புள்ள கல் உடைக்கும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பிற்பட்ட வகுப்பு, மிகப் பிற்பட்ட வகுப்பு, முற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொருட்டு 1996–97–ஆம் ஆண்டில் ரூ.15,54,000 மதிப்புள்ள 16.18 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 312 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1997–98–ஆம் ஆண்டில் ரூ.74,59,000 மதிப்புள்ள 78.18 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 1,676 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1998–99–ஆம் ஆண்டில் ரூ.60,51,000 மதிப்புள்ள 73.82 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1,381 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1999–2000–ஆம் ஆண்டில் ரூ.61,58,000 மதிப்புள்ள 107.94 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 2,249 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது.

## கால்நடை பராமரிப்புத்துறை

வேலூர் மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் 20 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டம் வறட்சி பகுதியாக இருப்பதால் ஆடுகள் அதிக அளவில் சீரிய முறையில் வளர்க்கப்பட்டு வருவதாலும், ஆடு வளர்ப்பை மேம்படுத்த 112 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

6,11,755 பசுக்களும், 1,75,737 எருமைகளும், 5,90,627 ஆடுகளும், 17,090 பன்றிகளும், 92,255 நாய்களும், 11,99,712 கோழிகளும், 1,760 இதர பிராணிகளும் வளர்க்கப்படுகின்றன.

முகுந்தராயபுரம் என்னுமிடத்தில் ஒரு ஆட்டுப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையில் சென்னை சிவப்பு இன செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.



மேலும் கால்நடைகளின் தரத்தை உறைவிந்து மூலம் மேம்பாடு அடைய செய்வதற்கு உறைவிந்து வங்கி ரூ.7.3 இலட்சத்தில், உலக வங்கி நிதியுடன் காட்பாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் 2000–2001–ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் 100 கிராமப்புற இளைஞர்களுக்கு தீவனம், செயற்கைமுறை கருவூட்டல், குடற்புழு நீக்கம், கறவை மாடு பராமரிப்பு, தடுப்பூசிப்பணி போன்றவற்றில் நவீன தொழில் நுட்பங்களுடன் பயிற்சி அளிக்க ரூ.1,28,500 நிதி இசைவளிக்கப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி வாரியம்

வேலூர் வீட்டு வசதி பிரிவின் கீழ் 1996–97–ஆம் ஆண்டில் வேலூர் புறநகர் திட்டப் பகுதியில் 80 மத்திய வருவாய் பிரிவு வீடுகள் ரூ.170.44 இலட்சத்திலும், வேலூர் புறநகர் திட்டப்பகுதி – 50 உயர் வருவாய் பிரிவு வீடுகள் ரூ.233.03 இலட்சத்திலும், ஆற்காடு புறநகர் திட்டப்பகுதி – 1068 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.401.65 இலட்சத்திலும், சீக்கராஜபுரத்தில் 778 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.501.73 இலட்சத்திலும், காட்பாடி தாராபடவேட்டில் 592 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.561.21 இலட்சத்திலும், வேலூர் புறநகர் திட்டம் பகுதியில் 72 உயர் வருவாய்பிரிவு மற்றும் 60 மத்திய வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்கட்டும் திட்டம் ரூ.258.70 இலட்சத்திலும் செயல்படுத்தப்பட்டன.

1997–98–ஆம் ஆண்டில் சோளிங்கர் திட்டப்பகுதியில் 297 மனைகள் மேம்படுத்தும் திட்டம் ரூ.98.96 இலட்சத்திலும், 1998–99–ஆம் ஆண்டில் வேலூர் புறநகர் திட்டப் பகுதியில் 312 மனைகள் மேம்பாட்டுத் திட்டம் ரூ.197.70 இலட்சத்திலும், 1999–2000–ஆம் ஆண்டில் சீக்கராஜபுரத்தில் 20 மத்திய வருவாய் பிரிவு வீடுகள் மற்றும் 26 உயர்வருவாய் பிரிவு வீடுகள் கட்டும் திட்டம் ரூ.117.84 இலட்சத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

வேலூர் வீட்டுவசதி பிரிவால் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களில் வேலூர் புறநகர் திட்டப்பகுதியில் 'சி' மற்றும் 'டி' பிரிவினருக்கான அடுக்குமாடி குடியிருப்புகளும், வேலூர் புறநகர் திட்டப் பகுதியில் செயல்படுத்தப் பட்டுள்ள உயர்வருவாய் பிரிவினருக்கான தனித்தனி வீடுகள் சீக்கராஜபுரத்தில மனைகள் மற்றும் வீடுகள், தாராபடவேடு மற்றும் சோளிங்கர் மனைகள் தற்சமயம் ஒதுக்கீடு பெற தயார் நிலையில் உள்ளது.

## இந்து அறநிலையத்துறை

### திருப்பணிகள்

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை வேலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருக்கோயில்கள் திருப்பணி வேலைகள் :

1997–98–ஆம் ஆண்டில் இரத்தினகிரியிலுள்ள அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் அரசு மானியம் ரூ.5 இலட்சத்தில், திருப்பணி வேலைகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கரில் உள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி

திருக்கோயிலில் உபயதாரர் மூலம் ரூ.8 இலட்சம் செலவில் தங்கும்விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது.

1998-99-ஆம் ஆண்டில் குடியாத்தம் வட்டம், காங்குப்பத்தில் உள்ள அருள்மிகு மகாதேவசுவாமி திருக்கோயிலில் ஆணையர் பொதுநல நிதியிலிருந்து ரூ.1.5 இலட்சமும், அரசு மானியம் ரூ.1.5 இலட்சமும் அளிக்கப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சோழமூர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ஆணையர் பொதுநலநிதி ரூ.1 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன.

ஆற்காடு வட்டம் அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் அரசுமானியம் ரூ.2.56 இலட்சம் மற்றும் பொதுநலநிதி ரூ.1 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**மலைப்பாதை அமைத்தல்**

1999-2000-ஆம் ஆண்டில் வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமிநரசிம்ம சுவாமி திருக்கோயிலில் பெங்களூர் ஸ்ரீஇலட்சுமி நரசிம்மசுவாமி கைங்கர்ய டிரஸ்ட் மூலம் ரூ.2.15 கோடி மதிப்பீட்டில் பெரிய மலையில் மலைப்பாதை அமைக்க மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணித் துவங்கப்பட்டுள்ளது.

வாணியம்பாடி வட்டம், கைலாசகிரி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் 1999-2000-இல் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் மலைப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

**கிராமப்புற திருப்பணித் திட்டம்**

கடந்த 4 ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் மிகவும் நலிந்த நிலையில் உள்ள கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.25,000 வீதம் 28 திருக்கோயில் களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள்வசிக்கும் இடங்களில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 8 திருக் கோயில்களுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

12 திருக்கோயில்களின் திருக்குளங்கள் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் திருப்பணி செய்து முடிக்கப்பட்டது.

குடியாத்தம் அருள்மிகு பாலசார்துலிஸ்வரர் திருக்கோயிலில் தேர் திருப்பணி முடிவடைந்து, தேரோட்டம் நடத்தப்பட்டது.

சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூ.8 இலட்சம் செலவில் தேர் திருப்பணி வேலைகள் 80 சதவீதம் முடிவடைந்துவிட்டன.

ஒருகால பூஜைத் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 135 திருக்கோயில்களுக்கு ரூ.2,500 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்தில், வாலாஜா வட்டம், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் முக்கிய திருவிழா நிகழ்ச்சிகள் படமெடுத்து ஒலி ஒளி நாடா தயாரிக்கும் பணி ரூ.1 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், வெட்டுவானம் அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயில், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்களில் திருக்குறள் வகுப்புகள் பக்தர்கள் பயனடையத்தக்க வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த 4 ஆண்டுகளில் 161 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டது. 1999-2000-இல் மட்டும் 38 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

**மோர்தானா அணை**

ரூ.100 கோடியில் குடியாத்தம் வட்டம், மோர்தானா கிராமத்தில் கவுண்டன்யா நதியின் குறுக்கே நீர்தேக்க அணை கட்டப்பட்டு தமிழக முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இந்த அணையில் 7.40 மி.க.மீ. நீர் தேக்க முடியும். இடது புறக்கால்வாய் 32,250 மீட்டர் நீளம் உடையது. காவனூர் வரையிலான 7 ஏரிகள் அடங்கிய 1,538 ஏக்கர் நிலமும், இக்கால்வாயின் மூலம் நேரிடையாக 17 கிராமங்களில் உள்ள 2,689 ஏக்கர் நிலமும் பாசன் வசதி பெறும்.





வலது புறக்கால்வாய் 43,500 மீட்டர் நீளம் உடையது. இக்கால்வாயின் மூலம் நேரிடையாகவும், தொரப்பாடி ஏரிவரையிலான 12 ஏரிகள் மூலமாகவும், 4,001 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**ஊரக வளர்ச்சித்துறை தொகுப்பு வீடுகள் திட்டம்**

ரூ.36.49 கோடிக்கு செயல்படுத்தப்பட்டு பயன் பெற்றோர் 12,490 பேர்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் 6074 பணிகள் ரூ.27.15 கோடியில் மேற்கொள்ளப்பட்டன.



வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மூலம் 2,784 பணிகள் ரூ.41.47 கோடியிலும், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம் மூலம் 2,020 பணிகள் ரூ.6.62 கோடியிலும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 378 பணிகள் ரூ.5.1 கோடியிலும் மேற்கொள்ளப் பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் ரூ.11.12 கோடியில் 18,175 பேர்களும், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடுத் திட்டத்தில் ரூ.1.15 கோடியில் 6,640 பேர்களும் பயனடைந்தார்கள்.

சுயவேலை வாய்ப்புப் பயிற்சியளிப்புத் திட்டம் மூலம் ரூ.86 இலட்சத்தில் 1819 பேர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டது.

கரிமவாயு திட்டம் மூலம் ரூ.25 இலட்சத்தில் 419 பேர்களும், மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகள் விநியோகத்திட்டம் மூலம் ரூ.23 இலட்சத்தில் 23,621 பேர்களும் பயனடைந்தார்கள்.

கிராமக் குடிநீர் திட்டப்பணிகள் மூலம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகளுக்கு ரூ.71 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.



**வருவாய்த்துறை**

வேலூர் மாவட்டத்தில் வருவாய்த்துறை மூலம் ரூ.45.72 கோடியில் 2,72,772 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் நான்காண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

முதியோர் உதவித்தொகை ரூ.13.91 கோடியில் 88,834 பேர்களும், விதவை உதவித்தொகை ரூ.13.01 கோடியில் 87,906 பேர்களும், ஆதரவற்ற விவசாயக்கூலிகள் உதவித்தொகை ரூ.3.96 கோடியில் 26,985 பேர்களும், உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை ரூ.1.5 கோடியில் 10,268 பேர்களும், கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை ரூ.3.13 கோடியில் 21,618 பேர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து உயிர்காக்கும் மருத்துவச் சிகிச்சைக்காக நிதியுதவி ரூ.86 இலட்சத்தில் 577 பேர்களும், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியதில் ரூ.5.475 கோடியில் 29,587 பேர்களும், இலவச நிலப்பட்டாக்கள் வழங்கியதில் ரூ.1.786 கோடியில் 1,037 பேர்களும், இடர்பாடு நிவாரண உதவித்தொகை ரூ.1.97 கோடியில் 5,709 பேர்களும், விபத்து நிவாரண உதவித்தொகை ரூ.12 இலட்சத்தில் 251 பேர்களும் பயனடைந்துள்ளனர்.

**பொதுப்பணித்துறை**

வேலூர் மாவட்டத்தில் ரூ.733 இலட்சம் மதிப்பீட்டில் 32,793 ஹெக்டேர் பாசன வசதி பெரும் பாலார் அணைக்கட்டு பாசனத்திட்டம். ரூ.400 இலட்சத்தில் 9090 ஹெக்டேர் பாசன வசதி பெரும் பொன்னை அணைக்கட்டுத் திட்டம் உள்பட ரூ.253 கோடி மதிப்பீட்டில் பாசன திட்டங்கள்செயல்படுத்தப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையில் கட்டடப்பிரிவு 120 பணிகளை ரூ.18.63 கோடியில் செயல்படுத்தியுள்ளது. இதில் அரசு கட்டடங்கள், 44 பள்ளி, கல்லூரி மற்றும் 40 மருத்துவமனை கட்டடங்கள் அடங்கும். இத்துடன் ரூ.10.01 கோடியில் 239 பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளன.

**மின்வாரியம்**

வேலூர் மாவட்டத்தில் ரூ.2518.2 இலட்சத்தில் 8394 விவசாய மின்இணைப் புகள் கொடுக்கப்பட்டுள்ளன. தொழில் நிறுவனங்களுக்கு ரூ.457.20 இலட்சத்தில் 3048 புதிய இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1,10,935 குடியிருப்புகளுக்கு ரூ.1331.21 இலட்சத்திலும், 940 நீர்த்தேக்க தொட்டிகளுக்கு ரூ.564 இலட்சத்திலும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. ரூ.820.69 இலட்சத்தில் 16,749 தெரு விளக்குகள் புதியதாகப் போடப்பட்டன.

**வனத்துறை**

வேலூர் மாவட்டத்தில் தோட்டம் எழுப்புதல், பராமரித்தல், சிமெண்ட் தடுப்பணைகள், ஓடை தடுப்பணைகள் கட்டுதல் மற்றும் நலத்திட்டப் பணிகளுக்காக 1997-98-ஆம் ஆண்டு ரூ.68.35 இலட்சமும், 1998-99-ஆம் ஆண்டு ரூ.111.15 இலட்சமும், 1999-2000-ஆம் ஆண்டு ரூ.89.33 இலட்சமும், 2000-2001-ஆம் ஆண்டு 25.9.2000 வரை ரூ.46.41 இலட்சமும் செலவிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நெடுஞ்சாலைத்துறை**

வேலூர் மாவட்டத்தில் 484.5 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டது. 140 சாலைகள் ரூ.23.16 கோடியில் தார்சாலைகளாக்கப்பட்டன. ★

தூத்துக்குடி இந்திய வியாபார தொழிற் சங்கத்தினுடைய பவள விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரோடு சேர்ந்து இந்த விழாவினைக் கொண்டாடி மகிழ்வதிலே நான் மிகுந்த பெருமையடைகிறேன்.

1947-ஆம் ஆண்டு முதல் தூத்துக்குடிக்கும் எனக்கும் உள்ள தொடர்புகளையெல்லாம் அருமை விழாத் தலைவர் நித்தியானந்தம் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள்.

1947-ஆம் ஆண்டு நடைபெற்ற, தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று நடத்திய, கே.வி.கே.சாமி எதிர்காலத் திராவிடத்தினுடைய தளகர்த்தராக ஆகக் கூடியவர் என்று பெரியாரால் புகழப்பட்ட அந்த மாநாட்டிற்கு நானும் வந்திருந்தேன். அந்த மாநாடு நடைபெற்ற நேரத்தில், நாங்கள் மாநாடு முடிந்து மகிழ்ச்சியோடு திரும்பினோம் என்று சொல்ல முடியாது. காரணம், அப்போது நடைபெற்ற அகில இந்திய ரெயில்வே வேலை நிறுத்தத்தின் காரணமாக ரெயில்கள் இல்லாமல் மூன்று நாள் தூத்துக்குடியிலேயே தங்கிவிட்டு திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படி தூத்துக்குடியை என்றைக்கும் மறக்க முடியாத அளவிற்குப் பல நிகழ்ச்சிகள் உண்டு.

அந்த நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சியாக இந்தப் பவள விழா நிகழ்ச்சியும் இணைகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசியவர்கள் எல்லாம் அடுத்தும் இவர்தான் முதலமைச்சராக வரவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு என்ன பொருள் என்றால், தொடர்ந்து நீ தான் தொல்லைப்பட வேண்டும் என்று தான் நான் கருதுகிறேன். இருந்தாலும் "தொந்தரவுக்குள்ளே தோழி சுகம் கண்டேன்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அந்தத் தொந்தரவு உங்களுக்காக, தமிழ்நாட்டு மக்களுக் காக, இந்திய நாட்டு மக்களுக்காகப் படக்கூடிய தொந்தரவாக இருக்குமேயானால், அந்தத் தொந்தரவை நீங்கள் விரும்பி எனக்கே தருவீர்களேயானால், அந்தத் தொந்தரவை ஏற்றுக் கொள்ளவும் நான் தயாராக இருப்பவன். இதைப்பற்றி அதிகமாக நான் பேசி பவள விழா நிகழ்ச்சியை தேர்தல் பிரச்சார நிகழ்ச்சியாக ஆக்கிவிட நான் விரும்பிடவில்லை.

தேர்தல் இன்னும் சில மாதங்கள் தள்ளி வரப்போகின்ற ஒரு ஜனநாயகக் கடமை. அதற்கிடையே இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்றுகின்ற பல பிரிவுகளில் ஒரு பிரிவாக வணிகர்களுடைய பிரிவு இருக்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது.

**வணிக பெருமக்களுக்கு**
**ஐந்தாண்டு காலத்தில்**
**ரூ.2,700 கோடி**
**வரிச்சலுகை**
**- முதலமைச்சர் கலைஞர்**

***சிறப்போடு செயல்படும் 'வணிகர் நலவாரியம்'***

எப்படி விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கிறோமோ, எப்படி நெசவாளர்களுக்காகக் குரல் கொடுக்கிறோமோ, எப்படி தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கிறோமோ அதைப்போல வணிகர்களுக்காகவும் குரல் கொடுக்க வேண்டிய அளவிற்கு உள்ள ஒரு பெரிய சமுதாயம் வணிகச் சமுதாயம் என்பதை நான் மறந்துவிடக் கூடியவன் அல்ல. அந்தக் காரணத்தினால்தான் ஏற்கெனவே வணிகர் நல வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வணிகப் பெருமக்களிடமிருந்து வந்தபோது திருநெல்வேலியில் நடைபெற்ற வணிகர்களுடைய மாநாடு ஒன்றில் வணிகர் நல வாரியம் அமைக்கப்படுமென்று அறிவித்து, ஆனால் உடனடியாக அறிவித்தவாறு அமைக்க முடியாமல் ஆட்சிக் கலைக்கப்பட்டு, மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டு, இன்றைக்குச் சிறப்போடு செயல்படுகின்ற ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் எல்லாம் வணிகர் நல வாரியத்தின் சார்பாக எடுக்கப்பட்டு இருக்கின்றன.

உங்களுக்கென்று ஒரு சங்கம், ஒரு அமைப்பு தேவை என்பதை நீங்கள் உணரத் தலைப்பட்ட காலத்திலிருந்து ஆங்காங்கு இந்த அமைப்புகளை நிறுவி வருகிறீர்கள். அதிலே ஒரு அமைப்பாக தூத்துக்குடியில் உருவாகிய அமைப்பு இன்றைக்குத் தன் பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

**மூன்று பவள விழா சங்கமித்திருக்கின்ற நிகழ்ச்சி**

இதிலே ஒரு பொருத்தம். ஏற்கெனவே பவள விழா கொண்டாடிய என்னை அழைத்து, பவள விழா கொண்டாடிய தலைவர் நித்தியானந்தம் அவர்களின் தலைமையிலே இந்தப் பவள விழாவை நடத்துகிறீர்கள். ஆக மூன்று பவளவிழா சங்கமித்திருக்கின்ற ஒரு நிகழ்ச்சி இது என்று சொன்னால் மிகையாகாது.





இந்த நிகழ்ச்சியிலே பேசிய அனைவரும் வணிகர்களுக்கு இந்த அரசு ஆற்றியுள்ள அரும்பெரும் பணிகளையெல்லாம், தொண்டினையெல்லாம் தொகுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தினுடைய- இச்சங்கத்தின் இக்கால நோக்கங்கள் நமது பொருளாதாரம் Global Economy-ஐ தழுவியதாக மாறி வருகின்றது என்பதும் இதன் அடிப்படையில், எதிர்காலத்தில் இந்தச் சங்கத்தின் பங்கு முறையீடு என்று இருக்காமல், ஒத்துழைப்பு என்ற வகையில்தான் இருக்கும் என்றும் கூறுகிறது. நமது நாடு குறிப்பாக தமிழ்நாடு எதிலும் முதலிடம் பெறப்பாடுபடுவதே இந்தச் சங்கத்தின் கொள்கையாக அமையும் என்று இச்சங்கம் அறிவிக்கின்றது.

தனியார் துறையில் உள்ள சிறுதொழில், பெரிய தொழில், சிறிய வணிகம், பெரிய வணிகம் போன்றவற்றிற்கிடையே எப்போதும் ஒரு நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டும். அதற்காகச் சங்கம் தொடர்ந்து பாடுபடும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிகரமாக வரவேற்கத் தக்க ஒன்று என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**வணிகப் பெருமக்களுக்கு ஐந்தாண்டு கால ஆட்சியில் ரூ.2,700 கோடி வரிச்சலுகை**

மதுரை ரெத்தினவேலு அவர்கள் இங்கே உரையாற்றும் போது ஆண்டுதோறும் வரிச்சலுகை அளிக்கப்பட்டது பற்றிக் குறிப்பிட்டார்.

வரிச் சலுகை 2,700 கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசின் சார்பாகக் கடந்த ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

1996-97-இல் அளிக்கப்பட்ட வரிச் சலுகை 353 கோடி ரூபாய். 1997-98-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 143 கோடி ரூபாய். 1998-99-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 81 கோடி ரூபாய். 1999-2000-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 25 கோடி ரூபாய். 2000-2001-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகை 76 கோடி ரூபாய். இதில் ஐந்தாண்டுகளில் எப்படி 2,700 கோடி வந்ததென்றால், 1996-97-இல் 353 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகை அளிக்கப்பட்டதல்லவா, அது தொடருகிறது.

அது மாத்திரமல்ல, 1997-98-இல் அளிக்கப்பட்ட வரிச்சலுகையும் தொடருகிறது. இப்படி தொடர்ந்து, தொடர்ந்து 2,700 கோடி ரூபாய் மதிப்புக்கு இந்த ஐந்தாண்டு காலத்தில் வணிகப் பெருமக்களுக்கு வரிச் சலுகையாக வழங்கப்பட்டிருக்கின்றது.

நான் பெருமையோடும், பெருமிதத்தோடும், பெருமகிழ்ச்சியோடும் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய வருவாயில் அதிகமான வருவாய் வருவது ஓரளவு நாங்கள் திருப்தியடைய முடியாத அளவிற்குத்தான், மொத்தத்திலே பார்க்கும்போது வருவாய் இருக்கின்றது. அதிலும் இன்றைய தினம் மத்தியிலே போடப்பட்ட பதினோறாவது நிதிக் குழுவினுடைய பரிந்துரையால், ஆண்டு ஒன்றுக்கு 900 கோடி ரூபாயை தமிழக அரசு இழக்க நேரிடுகிறது. இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது வருவாய் திருப்திகரமாக இல்லை.

**விற்பனை வரித்துறையின் மூலம்தான் அரசுக்கு அதிக வருவாய்**

ஒவ்வொரு பிரிவாக எடுத்து எவ்வளவு வருவாய் என்று பார்க்கும் போது, நான் உங்களோடு சேர்ந்து பெருமையோடு சொல்வேன். இந்த விற்பனை வரித்துறையின் மூலம் வருகின்ற வருவாய்தான் இந்த அரசுக்கு அதிகமான வருவாய் என்பதைநான் தெரிவித்துக் கொள்வேன். இது எப்படி சாத்தியமாயிற்று, இவ்வளவு சலுகை அளித்தும்

எப்படி சாத்தியமாயிற்று என்று கேட்டால் சலுகை அளித்த காரணத்தினால்தான் சாத்தியமாயிற்று, இந்தச் சலுகைகள் அளிக்கப்பட்ட காரணமே ரெத்தினவேலு போன்றவர்கள், என்னுடைய அருமை நண்பர் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத்தின் முன்னாள் கொறடா சொக்கர் போன்றவர்கள் மற்றும் பல வணிகத் தொடர்புடைய ஆர்வலர்கள் என்னை அடிக்கடி சந்திக்கும் போதும், அவர்களையெல்லாம் கொண்டு ஒரு வரிச் சீர்திருத்தக்குழு இந்த அரசின் சார்பில் அமைக்கப்பட்ட போதும் அவர்கள் ஆய்ந்து தெளிந்து சொன்ன கருத்துத்தான். நீங்கள் வரிச்சலுகைகள் அளித்தால் அதிக வருவாய் வரும் என்ற அந்தக் கொள்கையாகும். அந்தத் தத்துவத்தை அவர்கள் தான் எனக்குத் தந்தார்கள். அதை உதாசீனப்படுத்தவில்லை, அலட்சியப்படுத்தவில்லை, அதை அப்படியே ஏற்றுக் கொண்டு அந்தச் சலுகையை நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கி ஏறத்தாழ மொத்தம் 2,700 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு நான் துணிவோடு சொல்ல முடிகிறது. விற்பனை வரியின் மூலமாக எங்களுக்கு அதிக வருவாய் வருகிறது என்ற அந்தச் செய்தியை நான் துணிச்சலோடு தெரிவிக்க முடிகிறது.

அது மாத்திரமல்ல, தமிழக அரசின் வரலாற்றில் இல்லாத ஒன்றையும் நாங்கள் செய்தோம். 1999-2000-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் தயாரிப்பதற்கு முன்பு வணிகர்களின் பிரதிநிதிகளை யெல்லாம் அழைத்து சென்னையிலே உள்ள தலைமைச் செயலகத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி, இன்னும் ஒரு மாத காலத்தில் நிதிநிலை அறிக்கை வரப்போகிறது, உங்களுடைய கருத்துக்கள் என்னவென்று கேட்டு, அவர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்களை யெல்லாம் ஏற்றுக் கொண்டு 1999-2000-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நான் நாட்டிற்கு அளித்தேன்.

**நிதிநிலை அறிக்கைக்குமுன் வணிகர்களின் கருத்து கேட்டறிந்த ஒரே அரசு**

அதைப்போலவே 2000-2001-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கு முன்பும் வணிகப் பெருமக்களை, வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துக் கருத்துக்களைக் கேட்டு அதற்குப் பிறகுதான் வரிச் சலுகைகளை அறிவித்தேன் என்பதையும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

எந்தவொரு அரசும் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அதிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலே உள்ள எந்தவொரு அரசும் இந்தப் பணியை மேற்கொள்ளவில்லை, இந்த அரசுதான் இந்தப் பணியை மேற்கொண்டது . எனவே இந்த அரசு விவசாயிகளுடைய அரசு மாத்திரமல்ல, தொழிலாளர்களுடைய அரசு மாத்திரமல்ல, நெசவாளர்களுடைய அரசு மாத்திரமல்ல, வணிகப் பெருமக்களாகிய உங்களுடைய அரசு என்பதை நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரிச்சலுகைகள் அளிக்கப்பட்ட அத்தனை பொருட்களின் பட்டியலையும் நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. அத்தனைப் பொருட்களுக்கு வரி விலக்கும் வரிக்குறைப்பும் செய்யப்பட்டுள்ளது.

நான் மேலவையிலே உறுப்பினர் தாமோதரன் அவர்களுடைய உரையைப் பலமுறை கேட்டிருக்கிறேன். நல்ல ஜனநாயகவாதி. தாமோதரன், ஏ.ஆர்.முதலியார் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் மேல்சபையிலே பேசும் போதெல்லாம் சொல்வார், "அரசாங்கத்திற்கு வரி போடுவதிலே ஒரு வியாதி இருக்கிறது. சர்-சார்ஜ் என்று ஒன்று போடுகிறீர்கள்,வரி போடுவதோடு நீங்கள் விடுவதில்லை,சர்-சார்ஜ், அதற்குப் பிறகு கூடுதல் சர்-சார்ஜ் என்றெல்லாம் போடுகிறீர்கள். இந்த இரண்டும் ஒழிந்தால்தான் வாணிபம் உருப்படும்" என்று அடிக்கடி சொல்வார். அது என்னுடைய காதுகளிலேயே ஒலித்துக் கொண்டிருந்தது. காதுகளிலே ஒலித்தால் மாத்திரம் போதாது. என் கருத்திலும் பொதிந்திருந்தது. எனவேதான் வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசும் போது அவர்களும் அதே கருத்தை எதிரொலித்த நேரத்தில் அதை அப்படியே எற்றுக் கொண்டு 'சர்-சார்ஜ், கூடுதல் சர்-சார்ஜ் அதாவது மேல்வரி, கூடுதல் மேல் வரி ஆகியவற்றை அறவே நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமாக நீண்ட காலமாக எழுப்பப்பட்ட கோரிக்கை சமையல் எண்ணெய்களான தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றிற்கு அறவே வரி விலக்கு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த அரசுதான் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. இவ்வளவு சலுகைகளுக்குப் பிறகும் நாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் நேரத்தில் சோடை போய்விடவில்லை என்பதை இங்கே பேசியவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

**சுயவரி விதிப்பு உச்சவரம்பை உயர்த்தியதால் 70 ஆயிரம் வணிகர்கள் பலன்**

இந்த வரிமுறையிலே சமாதானத் திட்டம் என்ற திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு 1.6.1999 முதல் அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து 1,672 வணிகர்கள் அதனால் பயன் பெற்றார்கள். இதன் வாயிலாக 20 கோடி ரூபாய் வரி வசூலானது. சர்க்காருக்கும் வசூலானது. 48.78 கோடி ரூபாய் வரி நிலுவையும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இன்னொன்று, இந்த வரி விதிப்பிலேயிருந்த உச்ச வரம்பு, உங்களுடைய கோரிக்கை பலப்பட பலப்பட அரசு எந்த அளவிற்கு வளைந்து கொடுத்து, கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்து கொண்டு செயல்பட்டது என்பதற்கு ஒரெயொரு எடுத்துக்காட்டு, 1993-ஆம் ஆண்டு முதற்கொண்டு 1996 வரையிலே விற்பனைத் தொகை ஐந்து இலட்சம் ரூபாய் வரையிலே இருந்தால் சுய வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு 17.7.1996 முதல் பத்து இலட்சம் ரூபாயாக இருந்தது. அதை 1.4.1998 முதல் பத்து இலட்சம் ரூபாய் என்ற உச்ச வரம்பை இருபது இலட்சமாக உயர்த்தினோம்.

மீண்டும் கோரிக்கை எங்களை அழுத்தியது. அழுத்தியது என்று சொல்ல மாட்டேன். மெல்ல சீண்டியது. அதை ஏற்றுக் கொண்டு 1999-2000-ஆம் ஆண்டு வரி விதிப்புக்கு அந்த உச்ச வரம்பை ஒரு கோடி ரூபாய் என்று நான் மேலும் உயர்த்தினேன். இதன் காரணமாகப் பயன் அடைகின்ற வணிகர்களின் எண்ணிக்கை 70 ஆயிரம் பேர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏற்றுமதி அளவு 22,976 கோடியாக உயர்வு**

அதைப் போலவே வணிகர் நல வாரியத்தின் பணி இடையிலே தொய்வு ஏற்பட்டது. அந்தத் தொய்வைப் போக்கி அந்த வணிகர் நல வாரியத்தைச் சரியாகச் செம்மையாக நடத்துகின்ற அந்தப் பொறுப்பினை உரிய குழுவிடம் ஒப்படைத்து, இன்றைக்கு அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட நிலைமைகளின் காரணமாக 1992-93-இல் இந்த ஆட்சி வருவதற்கு முன்பிருந்த காலக்கட்டத்திலே ஏற்றுமதி 6,808 கோடி ரூபாய் தான். 1997-98-இல் இந்த ஆட்சி வந்த பிறகு 18,982 கோடி ரூபாய். இப்போது ஏற்றுமதி 22,976 கோடி ரூபாய் என்பதையும் நான் மிகுந்த பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

**தமிழகத்தில் நிலையாக ஓங்கி உயர்ந்துள்ள மென்பொருள் ஏற்றுமதி**

கணினி மென்பொருள் தமிழகத்திலிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு 1999-2000-ஆம் ஆண்டில் 1,890 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுப் புதிய சாதனையை நிகழ்த்தியிருக்கிறோம்.

இதுபற்றிய கணக்கைச் சொல்கிறேன். கொஞ்சம் சிந்திக்க வேண்டுகிறேன். தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி 1993-94-இல் 2 கோடியே 35 இலட்ச ரூபாய். 1994-95-இல் 12 கோடியே 17 இலட்ச ரூபாய். 1995-96-இல் 37 கோடி ரூபாய்.

1996-97-இல் 161 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி. 1997-98-இல் 393 கோடி ரூபாய்க்கு. 1998-99-இல் 1,246 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி. 1999-2000-இல் 1,890 கோடி ரூபாய்க்கு இந்த ஏற்றுமதி கொஞ்சம் கொஞ்சமாக, அதே நேரத்திலே அழுத்தந்திருத்தமாக, நிலையாக ஓங்கி உயர்ந்திருக்கின்றது என்பதையும் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

தொலை நோக்கோடு கணினியை வளர்க்க வேண்டும் என்று நாம் தொடங்கிய முயற்சியின் காரணமாக 1996 மே மாதத்திற்கு முன்புவரை 34 மென்பொருள் நிறுவனங்கள்தான் இருந்தன. ஆனால் 1996 மே மாதத்திற்குப் பிறகு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 562 மென்பொருள் நிலையங்கள் தமிழகத்திலே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படி எல்லா வகையிலும் வளர்ச்சிப் பெற்றிருக்கின்ற தமிழகத்தில், நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப் போல தொழில் முதலீட்டில் நாம் முதல் இடத்திலே இன்றைக்கு இருக்கிறோம். அந்த முதல் இடத்தைப் பெறுவதற்கான அந்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு தந்த பிரிவினரில் ஒரு பிரிவினர்தான் வியாபார சமுதாயத்தினர், வணிகப் பெருமக்களைக் கொண்ட இந்தப் பிரிவினர் என்பதை நான் எடுத்துரைத்து, அதற்காக நான் நன்றியினைக் கூறிக் கொண்டு அந்த நன்றியை நீங்கள் பவள விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்திலே இதயபூர்வமாக உங்கள் அனைவருக்கும் தெரிவித்து, இந்தச் சங்கம் மேலும் மேலும் வளர்க, மேலும் மேலும் புகழ் ஈட்டுக, மேலும் மேலும் வளம் பெருக என்று வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

- தூத்துக்குடியில் இந்திய தொழில் மற்றும் வர்த்தகச் சங்கத்தின் பவளவிழா மாநாட்டில் 1-10-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

★ ★ ★

**எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ**
**அங்கேதான்**
**மானுடம் திருவிழாக் கொண்டாடுகிறது.**
**— அப்துல் ரகுமான்**

# காலநடைப் பாதுகாப்புத் திட்டம்

## - ஓர் ஆய்வு

முனைவர் **இரா. பிரபாகரன்**
துணைவேந்தர்
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

*தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பராமரிப்புப் பொருளாதாரத்துறை வல்லுநர்களால் தமிழக அரசின் கால்நடை பாதுகாப்புத் திட்டம் பற்றி நடத்திய ஆய்வின் முக்கிய முடிவுகள் :–*

★ கால்நடை பாதுகாப்புத் திட்டம் தமிழக விவசாயிகளிடம் குறிப்பாக கால்நடைகளையே நம்பி வாழும் நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்கள், ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் ஆகியோரிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

★ இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்களில் (18–5–2000 வரை) தமிழகத்தில் 40.95 இலட்சம் கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.

★ 1276 கிராமங்களில் நடைபெற்ற இத்திட்டத்தில் முகாமொன்றுக்குச் சராசரியாக 3,209 கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.

★ செம்மறியாடுகளும் (31.32%) பசுவினங்களும் (25.74%) அதிகப் பயன்பெற்றுள்ளன.

★ குடற்புழு நீக்கம் (51.11%) மற்றும் தடுப்பூசி (30.88%) ஆகிய இரு பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ஒரு பெரிய முகாமில் சுமார் 8,500 கால்நடைகளும், நடுத்தர முகாமில் 6,000 கால்நடைகளும், சிறிய முகாமில் 4,000 கால்நடைகளும் பயன்பெறுகின்றன.



★ பயனடைந்த விவசாயிகளில் சுமார் 70 விழுக்காடு ஆண்களும், 30 விழுக்காடு பெண்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

★ படிக்காத பாமர மக்கள் தான் அதிக அளவில் (57.9 விழுக்காடு) பயனடைந்துள்ளனர்.

★ நிலமற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் 57.4 விழுக்காடு பயனடைந்துள்ளதாக அறியப் படுகிறது.

★ சிறப்பு முகாமிற்குக் கால்நடைகளைக் கொண்டு வந்தோரில் 78 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

★ சுமார் 4–8 கி.மீ. தூரத்திற்குக் கால்நடைகளை கொண்டு சென்று சிகிச்சை பெற்று வந்த நிலை மாறி கால்நடைகள் இருக்குமிடங்களிலேயே மருத்துவ சிகிச்சை கிடைக்கின்றது.

★ கிராமத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்கின்றது.

★ நீண்ட நாட்களாக குணமாகாத நோய்கள் மற்றும் குறைபாடுகளைப் போக்க தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்களின் முயற்சி நல்ல பயனளிக்கின்றது.

**பரிந்துரைகள் :**

★ கால்நடைகள் வளர்ப்போர் பெரும்பாலானோர் விவசாயம் சார்ந்த தொழிலிலேயே இருப்பதால் கால்நடை சிறப்பு முகாம்களில் காலை 6 மணியிலிருந்து 8 மணி வரை சிகிச்சையும், மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை கால்நடை வளர்ப்பு முறை பற்றிய செயல் விளக்கமும் செய்தால் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறுவர் என்பது திண்ணம்.

★ கால்நடை சிறப்பு முகாம் ஒரு கால்நடை கோட்டத்தில் ஒரு வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு (3 நாட்கள் இடைவெளி தேவை) முறை நடத்தினால் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவரும் பங்கு பெற இயலும்.





★ நவீன கால்நடை வளர்ப்பு முறைகளைப் பற்றிய ஒளி நாடாக்களைத் திரையிட்டு சிறப்பு முகாம்களில் விளக்க வேண்டும்.

★ இச்சிறப்பு முகாம் 6 மாதத்திற்கு ஒரு முறை மீண்டும் அதே ஊரில் நடைபெறவேண்டும் எனவும், இதன் மூலம் தடுப்பூசியின் பலனை முழுவதும் பெறலாம் என்றும் பெரும்பாலான விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

★ மாதம் ஒரு முறையாவது கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பொருட்காட்சி கோட்ட அளவில் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்.

★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்தி திட்டத்தின் முக்கியத்துவத்தை அறியச் செய்யலாம்.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம் - ஓர் ஆய்வு**

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 2.5 கோடி கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு, தமிழக அரசு கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவித்து, 10–1–2000 அன்று அரசாணை வெளியிட்டது. கால்நடை பாதுகாப்புத் திட்டம் கடந்த 18–1–2000 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்**

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் மாதந்தோறும் கால்நடைகளுக்கு மருத்துவ முகாம் நடத்தி அதன் மூலம் கால்நடைகள், கோழி இனங்கள் மற்றும் பறவைகளுக்கு இலவச மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படும். இத்திட்டம் கால்நடை பராமரிப்புத்துறை பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்கள் மூலம் நிறைவேற்றப் படும். மேலும், ஒரு பொருட்காட்சியும், பல்வேறு கால்நடைப் பண்ணைகள் தொடர்புடைய செயல் விளக்கமும் காண்பிக்கப்படும்.

**திட்டத்தின் நடைமுறை**

கால்நடை பாதுகாப்புத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. பின்னர் பொதுமக்களுக்கு விளம்பரத் தட்டி, சுவரொட்டி, ஒலி



பெருக்கி, துண்டுப் பிரசுரம், தண்டோரா போன்ற முறைகளால் கால்நடை பாதுகாப்புத் திட்டம் நடைபெறும் இடம் மற்றும் நேரம் அறிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு முகாமிலும் சராசரியாக கீழ்க்காணும் அளவில் அலுவலர்கள் பங்கு பெறுகிறார்கள்.



| | | |
|---|---|---|
| மண்டல இணை இயக்குநர் | – | 1 |
| உதவி இயக்குநர் | – | 1 |
| கால்நடை உதவி மருத்துவர்கள் | – | 6 |
| கால்நடை உதவியாளர்கள் | – | 8 |
| கால்நடை மருத்துவ பல்கலைக்கழக நிபுணர்கள் | – | 2 |

### முகாமில் நடைபெறும் பணிகள்

1. கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை
2. செயற்கைமுறை கருவூட்டல்
3. ஆண்மை நீக்கம்
4. குடற்புழு நீக்கம்
5. தடுப்பூசி போடுதல்
6. அறுவை சிகிச்சை
7. மலட்டுத் தன்மை நீக்க சிகிச்சை
8. சினை பரிசோதனை
9. கோழிகளுக்கு நோய் தடுப்பூசி
10. தீவனப்புல் கரணைகள் மற்றும் விதைகள் வழங்குதல்
11. கால்நடைக் கண்காட்சியில் பரிசு பெறும் சிறந்த கறவை மாடுகள் மற்றும் கலப்பினக் கன்றுகளுக்குப் பரிசு வழங்குதல்



கால்நடை சிறப்பு முகாமிற்குக் கால்நடைகளை கொண்டு வரும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அதில் கொண்டு வந்துள்ள கால்நடைகளைப் பற்றிய விவரம், அளிக்கப்பட்ட சிகிச்சை விவரம் போன்றவை குறிப்பிடப்படுகின்றன. தொடர் சிகிச்சை தேவைப்பட்டால், அடையாள அட்டையிலேயே பரிந்துரை செய்யப்படுகிறது. பின்னர் கால்நடை மருத்துவர்களால் கால்நடைகள் பரிசோதிக்கப்பட்டு நோயின் தன்மைக்கேற்றவாறு அறுவை சிகிச்சை முதற்கொண்டு தரமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு கால்நடைக் கண்காட்சி நடத்தப்பட்டு அதில் சிறந்த கறவைமாடுகளும் மற்றும் கலப்பினக் கன்றுகளும் தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. தரமான தீவன உற்பத்திக்காக தீவனப்புல் கரணைகள் மற்றும் விதைகள் இலவசமாகவே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கால்நடைப் பண்ணைகள் தொடர்புடைய செயல் விளக்கமும் காண்பிக்கப்படுகிறது.

### கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

இத்திட்டத்திற்கு முன்பாக தமிழகத்தில் அவ்வப்போது ஆங்காங்கே கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டிருந்தாலும், அவற்றிலிருந்து இப்பாதுகாப்புத் திட்டம் கீழ்க்கண்ட காரணங்களால் முற்றிலும் வேறுபட்டுள்ளது.

★ இக்கால்நடை பாதுகாப்புத் திட்டம் தொடர் முறையில் மாதந்தோறும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்படுகிறது.

★ ஒவ்வொரு சிறப்பு முகாமிற்கும் தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது.



★ மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

★ கால்நடைகளின் உடல் நலக் குறிப்பேடு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

★ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்கள் கலந்துகொண்டு சிக்கலான நோய்களுக்கு நிபுணர் கருத்து வழங்கி சிகிச்சையளிக்கிறார்கள்.

★ தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.





சுருங்கக்கூறின் இத்திட்டம் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி செம்மையாக திறம்பட தீட்டப்பட்டுள்ளது.

### ஆராய்ச்சி முடிவுகள்

தமிழகம் முழுமைக்கும் 18–5–2000 வரை நடத்தப்பட்ட முகாம்களில் நடைபெற்ற பணிகளை ஆராய்ந்து அதன் முடிவுகள் அட்டவணை–1லிருந்து 3 வரை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கால்நடை இனங்களில் செம்மறியாடுகள் மற்றும் மாட்டினமும் அதிக எண்ணிக்கையில் பயன் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. கால்நடை நலப்பணிகளில் குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி போடுதல் ஆகிய இருபணிகளும் மொத்தப் பணியில் சுமார் 80 விழுக்காடு அளவாக உள்ளது. சிகிச்சை செய்யும் பணி சுமார் 12.34 விழுக்காடு அளவில் உள்ளது.



### தகவல் சேகரிக்கப்பட்ட இடங்கள்

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த விவசாயிகளைப் பற்றியும் அவர்களது கருத்துக்களை அறியவும் தமிழகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம் (திருக்கழுக்குன்றம்), நாமக்கல் மாவட்டம் (செல்லியாயிபாளையம்) மற்றும் திருவள்ளூர் மாவட்டம் (காவேரி ராஜபுரம்) ஆகிய இடங்களில் ஒரு ஆரம்பக் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் முடிவுகள் அட்டவணை–4 மற்றும் 5இல் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வட்டவணைகளிலிருந்து, ஒரு பெரிய முகாமில் சுமார் 8,500 கால்நடைகளும், நடுத்தர முகாமில் 6,000 கால்நடைகளும் மற்றும் சிறிய முகாமில் 4,000 கால்நடைகளும் பயன்பெறுகின்றன என்பது தெரிய வந்துள்ளது. மேலும், பயனடைந்த விவசாயிகளில் சுமார் 70 விழுக்காடு ஆண்களும், 30 விழுக்காடு பெண்களும் அங்கம் வகிக்கிறார்கள். படிக்காத பாமர மக்கள் தான் அதிக அளவில் (57.9 விழுக்காடு) பயனடைந்துள்ளனர். நிலமற்ற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் 57.4 விழுக்காடு அளவு பயனடைந்துள்ளதையும் அறியலாம். சிறப்பு முகாமிற்குக் கால்நடைகளைக் கொண்டு வந்தோரில் 78 விழுக்காடு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் என்பது தெரிகிறது.



### அட்டவணை-1

தமிழகத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் பயனடைந்த மொத்த கால்நடைகளின் விவரம் (18-5-2000 வரை)

| வ. எண். | கால்நடைகளின் இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பசுவினம் | 10,54,789 |
| 2 | எருமையினம் | 2,11,033 |
| 3 | செம்மறியாடுகள் | 12,81,811 |
| 4 | வெள்ளாடுகள் | 7,49,567 |
| 5 | கோழிகள் | 7,84,914 |
| 6 | இதர இனங்கள் | 13,794 |
| | மொத்தம் | 40,95,908 |

### அட்டவணை-2

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தில் சராசரியாக முகாமொன்றுக்குப் பயனடைந்த கால்நடைகளின் விவரம்

| வ. எண். | கால்நடைகளின் இனம் | எண்ணிக்கை (சதம்) |
|---|---|---|
| 1 | பசுவினம் | 826 (25.74) |
| 2 | எருமையினம் | 165 (5.14) |
| 3 | செம்மறியாடுகள் | 1,005 (31.32) |
| 4 | வெள்ளாடுகள் | 587 (18.29) |
| 5 | கோழிகள் | 615 (19.17) |
| 6 | இதர இனங்கள் | 11 (0.34) |
| | மொத்தம் | 3,209 (100) |

### அட்டவணை - 3

## தமிழகத்தில் சராசரியாக ஒரு முகாமில் நடந்த பணி விவரம்

| பணி விவரம் | பசு | எருமை | செம்மறி ஆடு | வெள்ளாடு | கோழி | இதர | மொத்தம் (சதம்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சிகிச்சை செய்தல் | 248 | 35 | 64 | 27 | 13 | 9 | 396 (12.34) |
| 2. ஆண்மை நீக்கம் | 9.0 | 0.3 | – | 16.3 | – | 0.4 | 26 (0.81) |
| 3. செயற்கை முறை கருவூட்டல் | 10 | 3 | – | – | – | – | 13 (0.41) |
| 4. சினை பரிசோதனை | 50 | 22 | – | – | – | – | 72 ((2.24) |
| 5. மலட்டுத்தன்மை சிகிச்சை | 46 | 25 | – | – | – | – | 71 (2.21) |
| 6. குடற்புழுநீக்கம் | – | 251 (கன்றுகள்) | 812 | 517 | 60 | – | 1640 (51.11) |
| 7. தடுப்பூசி போடப்பட்டவை | – | 294 | 154 | – | 542 | 1.0 | 991 (30.88) |
| 8. தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவை | 0.50 | – | 0.30 | – | – | 0.05 | 0.85 |
| மொத்தம் | | | | | | | 3,209* (100) |

* தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டவை நீங்கலாக
(அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளவை மொத்த எண்ணிக்கையின் சதவீத மதிப்பு)



### அட்டவணை–4

பயனடைந்த கால்நடைகளின் விவரங்கள்

| வ. எண். | கால்நடை இனம் | திருக்கழுக் குன்றம் | செல்லியாயி பாளையம் | காவேரி ராஜபுரம் |
|---|---|---|---|---|
| 1. | பசுவினம் | 2796 | 1037 | 1004 |
| 2. | எருமையினம் | 641 | 703 | 351 |
| 3. | செம்மறியாடுகள் | 1911 | 1292 | 1249 |
| 4. | வெள்ளாடுகள் | 1470 | 964 | 788 |
| 5. | கோழிகள் | 1776 | 2145 | 965 |
| 6. | இதர இனங்கள் | 74 | 16 | 0 |
| | மொத்தம் | 8668 | 6157 | 4357 |

### அட்டவணை–5

| பயன்பெற்ற மக்களின் விவரம் | திருக்கழுகுன்றம் | செல்லியாயி பாளையம் | காவேரி ராஜபுரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **1 பயன்பெற்றோர்:** | | | | |
| ஆண் | 84(62) | 45(75.5) | 33(82.5) | 162(69) |
| பெண் | 51(38) | 15(24.5) | 7(17.5) | 73(31) |
| மொத்தம் | 135(100) | 60(100) | 40(100) | 235(100) |
| **2 கல்வியறிவு:** | | | | |
| படிக்காதவர் | 92(68) | 17(28.4) | 27(67.5) | 136(57.9) |
| ஆரம்ப கல்வி | 38(28) | 30(49.8) | 6(15.0) | 74(31.5) |
| மேல்நிலைக்கல்வி | 5(4) | 10(16.1) | 5(12.5) | 20(8.5) |
| கல்லூரிக் கல்வி | 0(0) | 3(5.7) | 2(5.0) | 5(2.1) |
| **3 நில அளவு:** | | | | |
| நிலமற்றோர் | 100(74) | 14(22.9) | 21(52.5) | 135(57.4) |
| 5 ஏக்கருக்குக் குறைவு | 30(22) | 35(58.3) | 18(45.0) | 83(35.0) |
| 5–10 ஏக்கர் | 4(3) | 7(11.7) | 1(2.5) | 12(5.1) |
| 10 ஏக்கருக்கு அதிகமாக | 1(1) | 4(6.7) | 0(0) | 5(2.5) |
| **4 வருமானம்:** | | | | |
| வறுமைகோட்டிற்கு கீழ் | 115(85) | 40(67.2) | 28(70) | 183(78) |
| வறுமைகோட்டிற்கு மேல் | 20(15) | 20(32.8) | 12(30) | 52(22) |

(அடைப்புக் குறியில் உள்ளவை சதவீதத்தை குறிக்கிறது)



**கால்நடை பாதுகாப்புத் திட்டம் பற்றி விவசாயிகளின் பல்வேறான கருத்துக்கள்**

* கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால் கன்றுகள் நன்கு வளர வாய்ப்புள்ளது.
* தடுப்பூசிகள் போடப்படுவதால், 6 மாதங்களுக்கு ஒரு முறை சிறப்பு முகாம் மீண்டும் நடத்தப்பட வேண்டும்.
* சிறப்பான முறையில் கால்நடைகளுக்குக் சிகிச்சை யளிக்கப்படுகிறது.
* கிராமத்திற்கே வந்து சிகிச்சை அளிப்பதால் மிகவும் வசதியாக உள்ளது.
* அதிக அளவில் கால்நடைகள் உள்ளதால் முகாமிற்கு அனைத்தையும் கொண்டுவர இயலவில்லை.
* கால்நடை வளர்ப்பு பற்றிய பொருட்காட்சி திறம்பட நடத்தல் வேண்டும்.
* கால்நடைப் பண்ணைகள் தொடர்புடைய செயல்விளக்கம் அதிகம் செய்து காட்டவேண்டும்.
* அதிக அளவில் நவீன கால்நடை வளர்ப்புப் பற்றி சொல்லித் தரவேண்டும்.
* இன்னும் அதிக அளவில் தீவன விதைகள் வழங்கப்பட வேண்டும்.
* நல்ல பயனிக்கும் திட்டம்.
* இத்திட்டம் கண்டிப்பாக தொடர்ந்து நடக்க வேண்டும்.



இருந்தபோதிலும் வெளிநாட்டுச் சந்தையில் நம் நாட்டின் கால்நடைப் பொருட்களுக்கு அதிக கேட்பு இல்லை. இதற்கு மிக முக்கிய காரணம் நம் நாட்டின் கால்நடைகளில் தொற்று நோய்கள் பரவலாகக் காணப்படுவதேயாகும். கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் நோயற்ற கால்நடைச் செல்வங்களை உருவாக்க முடியும். உலக வர்த்தக கழக ஒப்பந்தம் (WTO) இந்தியாவில் செயல்படுத்தப் படுவதால், தமிழகத்தின் கால்நடைப் பொருட்களைத் தரமான முறையில் உருவாக்கி ஏற்றுமதி செய்து அந்நிய செலவாணியை அதிக அளவில் ஈட்டும் வாய்ப்பு உள்ளது.

எதிர்காலத்தில் தரமான கால்நடைகளின் எண்ணிக்கை உயர்ந்து கால்நடைகளைப் பாதிக்கும் நோய்கள் ஒழிக்கப்பட்டு, பால், முட்டை மற்றும் இறைச்சி போன்ற புரதச் சத்து நிறைந்த கால்நடைப் பொருட்கள் மிகுந்த அளவில் உற்பத்தி செய்யப்பட்டு இந்தியாவில் தமிழகக் கால்நடை வளம் ஒரு தனி முத்திரை பதிக்கும்.



## கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் பயன்கள்

**உடனடிப் பயன்கள்**

நோயுற்ற கால்நடைகள் சிகிச்சையளிக்கப்பட்டு நோயிலிருந்து உடனடி நிவாரணம் அடைகிறது.

கால்நடைகளை மட்டும் நம்பி வாழும் நிலமற்ற விவசாயிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களின் கால்நடைகளுக்கு ஊர் தேடி வந்து சிகிச்சை வசதி அளிப்பதால் மிகுந்த பயன்பெறுகிறார்கள்.

கால்நடைகளை வல்லுநர் குழு பரிசோதிப்பதால் நீண்டகாலமாக சரியாகாமல் இருந்த நோய்கள் சரி செய்யப்படுகிறது.

கால்நடை பராமரிப்பில் நவீன யுக்திகள் கற்றுத் தருவதால் அதைக் கடைபிடித்து விவசாயிகள் மிகுந்த பயன்பெறுவர்.

**எதிர்காலப் பயன்கள்**

கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்வதால் நன்கு வளர்ச்சியுற்று கால்நடைப் பொருட்கள் உற்பத்தி பெருக வாய்ப்பு அதிகம்.

தடுப்பூசிகள் போடுவதன் மூலம் தொண்டை அடைப்பான், சப்பை நோய், துள்ளுமாறி நோய் போன்ற எளிதில் பரவக்கூடிய நோய்கள் வராமல் தடுப்பதால் எதிர்காலத்தில் இம்மாதிரி நோய்களைத் தமிழகத்தில் அறவே ஒழிக்க சாத்தியமுண்டு.

இலவசமாக தீவன விதைகள் விவசாயிகளுக்கு அளிப்பதால் எதிர்வரும் காலத்தில் தீவனப் பற்றாக் குறையைச் சமாளிக்க இயலும்.

ஐரோப்பிய நாடுகளை ஒப்பிடும்பொழுது, நம் நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் கால்நடைப் பொருட்கள் குறைந்த செலவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

**பரிந்துரைகள்**

இத்திட்டம் மேலும் செம்மையாக நடைபெற கீழ்க்கண்ட பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

- ★ கால்நடைகள் வளர்ப்போர் பெரும்பாலானோர் விவசாயம் சார்ந்த தொழிலேயே இருப்பதால் கால்நடை சிறப்பு முகாம்களில் காலை 6 மணியிலிருந்து 8 மணி வரை சிகிச்சையும் மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை கால்நடை வளர்ப்பு முறை பற்றிய செயல்விளக்கமும் செய்தால் அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறுவர் என்பது திண்ணம்.
- ★ கால்நடை சிறப்பு முகாம் ஒரு கால்நடை கோட்டத்தில் ஒரு வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு (3 நாட்கள் இடைவெளி தேவை) முறை நடத்தினால் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவரும் பங்குபெற இயலும்.
- ★ நவீன கால்நடை வளர்ப்பு முறைகளைப் பற்றிய ஒளிநாடாக்களைத் திரையிட்டு சிறப்பு முகாம்களில் விளக்க வேண்டும்.
- ★ இச்சிறப்பு முகாம் 6 மாதத்திற்கு ஒரு முறை மீண்டும் அதே ஊரில் நடைபெறவேண்டும் எனவும், இதன் மூலம் தடுப்பூசியின் பலனை முழுவதும் பெறலாம் என்றும் பெரும்பாலான விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.
- ★ மாதம் ஒரு முறையாவது கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பொருட்காட்சி கோட்ட அளவில் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்.
- ★ கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்தி திட்டத்தின் முக்கியத் துவத்தை அறியச் செய்யலாம். ●



# புதுப்பொலிவு பெற்றுள்ள காஞ்சிபுரம் மாவட்டம்

பல்லவ மன்னர்கள் ஆண்ட சரித்திர பூமி இது,
பேரறிஞர் அண்ணா அவர்களை ஈன்று,
உலகிற்கு உவந்த, பெருமைமிக்க மண் இது:
பட்டாடைகள் என்றாலே...
நினைவிலே நிற்பது காஞ்சிபுரம் அன்றோ!
இயற்கை அன்னை எழில் கொஞ்சும்
சோலைவனம்!

பல்வேறு ஆலயங்களும், சுற்றுலாத் தலங்களும் கொண்ட சிறப்புமிக்க மாவட்டம், பெருமைமிக்க காஞ்சிபுரம் மாவட்டம். அழகுக்கு அழகு சேர்ப்பது போல், அரசின் பல்வேறு நலத்திட்டங்களினால், புதுப்பொலிவு பெற்று, சிறப்பாகத் திகழ்கிறது.

கிராம முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் தமிழக அரசின் திட்டங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமங்களில் தார்ச்சாலைகளும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும், தெருவிளக்குகளும், மினி பஸ்களும், நியாய விலைக் கடைகளும், ஆரம்பச் சுகாதார நிலையங்களும் அமைந்து இருப்பது கிராம மக்களுக்கு மன நிறைவினை ஏற்படுத்தி உள்ளது.

**நமக்கு நாமே திட்டம்**

முதல்வர் கலைஞர் அவர்களின் "நமக்கு நாமே" திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ரூ.4,480 கோடி மதிப்பில் 320 பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

செங்கல்பட்டு நகருக்கு அருகில் அம்மணம் பாக்கம், புள்ளவாக்கம் போன்ற 8 கிராமங்கள் உள்ளன. செங்கல்பட்டு நகருக்குச் செல்ல வேண்டுமானால், இடையே உள்ள கொளவாய் ஏரி குறுக்கிடுவதால், 8 கி.மீ.க்கு மேலாக சுற்றிச் சென்று, செங்கல்பட்டு நகருக்கு வரவேண்டும். ஏரிக்குக் குறுக்கே சாலை அமைத்தால், வெகு சீக்கிரம் செல்லலாம் என்ற ஏக்கம் 30 ஆண்டுகளுக்கு மேலாக அம்மணம்பாக்கம் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களுக்கு இருந்து வந்தது. இந்த நிலையை மாற்றி இணைப்புச்சாலை அமைத்து இக்கிராம மக்களின் மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தது, "நமக்கு நாமே திட்டமாகும்".



**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 1959 பணிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

**கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

கால்நடைச் செல்வங்களுக்காக, கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தினை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தினார்கள். இத்திட்டம் தமிழகத்திலேயே முதன்முதலாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றத்தில், புத்தாயிரம் ஆண்டின் துவக்கத்தில், துவக்கி வைக்கப்பட்டது. கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் இதுவரை 112 நடைபெற்றுள்ளது. 3,61,992 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ரூ.4,20,870 மதிப்பிலான மருந்துகள் வழங்கப் பட்டுள்ளன. கிராமங்களில் இம் முகாமிற்கு நல்ல வரவேற்பு இருந்தது, இம்முகாமின் வெற்றியைக் காட்டுகிறது.

**வருமுன் காப்போம் திட்டம்**

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் நடைபெற்ற 252 முகாம்களில் 61,269 ஆண்களும், 79,270 பெண்களும், 59,280 சிறுவர்களும் ஆக மொத்தம் 1,99,819 பேர் சிகிச்சைப் பெற்றுள்ளனர். ரூ.7,35,992 மதிப்பிலான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. 13,625 பேர் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப் பட்டுள்ளனர்.

**உழவர் சந்தைத் திட்டம்**

தமிழக முதல்வர் அவர்களால், செங்கல் பட்டு நகரில் துவக்கி வைக்கப்பட்ட உழவர் சந்தை மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. 10,360 விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த 10,69,445 கிலோ காய்கறிகளை ரூ.74,99,301-க்கு விற்பனை செய்துள்ளனர். இதில் உழவர்கள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்ததால் மகிழ்ச்சியடைவதுடன், நுகர்வோரும் நியாயமான விலையில் காய்கறிகள் கிடைத்த திருப்தியுடன் செல்வதை நாம் கண்கூடாகப் பார்ப்பது மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இதில் 4,43,924 நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

**பஸ் வசதி**

கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதியைக் கருத்தில் கொண்டு, பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்கு மினி பஸ் விட அரசு உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 29 வழித்தடங்களில் மினி பஸ் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், 12 வழித்தடங்களில் மினி பஸ் வசதி செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.








**பள்ளிகளில் கணினி வகுப்பு**

எதிர்கால சமுதாயம் ஏற்றம் அடைய, தமிழக முதல்வர் அவர்கள் பள்ளிகளில் கணினி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அதன் அடிப்படையில், இம்மாவட்டத்தில் 50 பள்ளிகளில் கணினி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இளைஞர் நலம்**

கிராமப்புற இளைஞர்கள் நலனில் அக்கறையுடன் தமிழக அரசு விளையாட்டு மையங்களை ஏற்படுத்தி உள்ளது. அதன்படி இம்மாவட்டத்தில் 180க்கும் மேலான விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இளைஞர்கள் ஆர்வத்துடன் இம்மையங் களுக்கு வருகை தருகின்றனர்.

**கல்வித்துறை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வித்துறையின் சாதனை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கடந்த 4 ஆண்டுகளில், 39 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளும், 20 நடுநிலைப் பள்ளிகளும் துவக்கப்பட்டுள்ளன. மேலும் 13 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 13 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள 50 பள்ளிகளில் கணினி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பொது விநியோகத் திட்டம்**

இம்மாவட்டத்தில் புதிதாக 93,069 நபர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. முழுநேரம் மற்றும் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் 76 புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை**

இம்மாவட்டத்தில் 14 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

4 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணிநேரமும் செயல்பட்டு வருகின்றன.





### மின்துறை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில் 190 புதிய மின் மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன. சாதாரண முன்னுரிமையில் 512 மின் இணைப்புகளும், சிறப்பு முன்னுரிமையில் 403 மின் இணைப்புகளும், விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. 162 மேல்நிலை குடிநீர்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. 1,259 கிராமப் பஞ்சாயத்துத் தெரு விளக்குகளுக்கும், 506 நகரப் பஞ்சாயத்துத் தெருவிளக்குகளுக்கும், 189 நகராட்சி தெருவிளக்கு களுக்கும் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள ஓரிக்கையில் 110/11 கி.வோ, முகரவாக்கத்தில் 33/11 கி.வோ. கொண்ட துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

### ஊரக வளர்ச்சித்துறை

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.5.46 கோடியில் 328 பணிகள் செய்யப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7.87 கோடி மதிப்பில் 347 பணிகள் செய்யப் பட்டுள்ளன.

வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.23.80 கோடி மதிப்புள்ள 1,545 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



திருத்தி அமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதாரக் கழிப்பிடத் திட்டத்தின் கீழ் ரூ.73.64 இலட்சத்தில் 7,014 கழி வறைகள் கட்டப்பட்டுள்ளன.

இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ரூ.33.29 கோடியில் 11,516 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### ஆதிதிராவிடர் நலத்துறை

8,367 ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

ரூ.13.14 இலட்சம் மதிப்பில் மயானம் மற்றும் மயானப் பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

275 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.4.30 இலட்சத்தில் இலவச தையல் இயந்திரம் மற்றும் சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

### பொதுப்பணித்துறை

1997-98-இல் ரூ.109.25 இலட்சம் செலவில் 11 ஏரிகளும், 1998-99-இல் ரூ.6.80 இலட்சம் மதிப்பில் 8 ஏரிகளும் தூர்வாரப்பட்டன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.0.93 இலட்சம் மதிப்பில், 1998-99-இல் திருக்கழுக்குன்றம் வட்டம், மணமை கண்டிகை, தாங்கல் ஏரியில் மதகு எண்.1ஐ திரும்ப கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.





நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.29.28 இலட்சம் மதிப்பில், ஏரிக் கரையில் சாலை அமைத்தல், சிறுபாலம் அமைத்தல், மராமத்து செய்தல் போன்ற பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

துறைகளின் கட்டட பணிகள் 1996-97-இல் 42 பணிகள் ரூ.620.53 இலட்சத்திலும், 1997-98-இல் 66 பணிகள் ரூ.644.77 இலட்சத்திலும், 1998-99-இல் 36 பணிகள் ரூ.164.18 இலட்சத்திலும், 1999-2000 ஆண்டில் 14 பணிகள் ரூ.114.41 இலட்சம் மதிப்பிலும் நடை பெற்றுள்ளன.

### தொழில் வளம்

நெசவுத் தொழிலும், வேளாண்மைத் தொழிலும் முக்கியத் தொழிலாக உள்ள இம்மாவட்டம், தொழில் வளத்திலும் கடந்த 4 ஆண்டுகளில் முன்னேற்றப்பாதையில் வீறுநடை போட்டு வருகிறது.

1824 ஏக்கர் பரப்பில் இருங்காட்டுக்கோட்டையில் உருவாக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் வளாகத்தில் 32 தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.





மறைமலைநகரில் ரூ.27 கோடி மதிப்பில் ஆஸ்பெஸ்டாஸ் ஃபிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.

மறைமலை நகரில் "போர்டு இந்தியா" கார் தொழிற்சாலை.

திருப்போரூரில் ஸ்ரீராம் ஆட்டோகாம் பொனனண்ட்ஸ் நிறுவனத்தாரின் ஆட்டோ மொபைல்ஸ் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

திருப்பெரும்புதூரில் ரூ.15 கோடி மதிப்பில் குருதிப்பைகள் தொழிற்சாலை.

ரூ.28.5 கோடி மதிப்பில் மறைமலை நகரில் "அப்டிக் பைபர் லேபில் ப்ராஜெக்ட்" தொழிற்சாலை ஆகியவை இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆகும்.

**கூட்டுறவுத்துறை**

1998 முதல் 1,093 நபர்களுக்கு ரூ.875 இலட்சம் வீடு கட்ட கடன் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர் மற்றும் பொறியாளர்கள் 239 பேருக்கு ரூ.949.27 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற பிரிவினர் 47,401 நபர்களுக்கு ரூ.4,981.73 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

12,318 நபர்களுக்குப் பண்ணைச்சாராக் கடனாக ரூ.2,946.91 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

**வேளாண்மைத்துறை**

மாநில அளவில் நெல் சாகுபடி பரப்பில் காஞ்சிபுரம் மாவட்டம் 1998-99-ஆம் ஆண்டில் முதலிடம் பெற்றுள்ளது.

1997-98 மற்றும் 1998-99-ஆம் ஆண்டுகளில் மாநில அளவில் அரிசி உற்பத்தியில் இம்மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

1997-98-இல் மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், படப்பை, திருப்போரூர் மற்றும் மதுராந்தகம் ஆகிய வட்டாரங்களில் 75 கி.மீ. தூரத்திற்கு நடவு செய்யப்பட்டுள்ள கன்றுகள் நல்லமுறையில் பராமரிக்கப்படுகின்றன.

1998-99-ஆம் வருடத்தில் காஞ்சிபுரம், வாலாசாபாத், உத்திரமேரூர், திருப்பெரும்புதூர், சித்தாமூர் ஆகிய 5 வட்டாரங்களில் சாலை ஓரங்களில் இருபுறமும் 15 கி.மீ. தூரத்தில் மொத்தம் 75 கி.மீ. தூரத்திற்கு மரக்கன்றுகள் நடவு செய்ய அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.







1997-98-ஆம் ஆண்டில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு 50% மானியத்தில், 586 கடப்பாறைகளும், 513 மண்வெட்டிகளும், அக்ரோபெட் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளது. மொத்த மானியத்தொகை ரூ.9,695 இலட்சமாகும். மதுராந்தகம் வட்டத்தில் மொத்தம் 30,000 உர அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளது.

1998-99-இல் 23 விவசாயிகளுக்கு 7.5 குதிரைத்திறன் சக்தி கொண்ட ஆயில் என்ஜின்கள் அக்ரோபெட் மூலம் ரூ.1.637 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

பொது மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் தமிழக அரசு முனைப்புடன் செயல்படுகிறது. அதன் அடிப்படையில் இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற நீர் ஆதாரத்தைக் கொண்டு, குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

**நகர குடிநீர்த் திட்டங்கள்**

1996 முதல் 2000 வரை நகர குடிநீர்த் திட்டத்தின் கீழ் 9 திட்டங்கள் ரூ.17.11 கோடி மதிப்பில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 1,77,140 பேர் பயன்பெறுகின்றனர்.

8 பேரூராட்சிகளில் ரூ.13.30 கோடி மதிப்பில் 1,23,640 நபர்கள் பயன் பெறும் வகையில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சோழிங்கநல்லூர் பேரூராட்சி, சோழிங்கநல்லூரில் ரூ.1.62 கோடி மதிப்பில் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பகுதி-1 மேனிலைத் தொட்டியும், எம்.ஜி.ஆர். நகரில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பகுதி-2 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வரை குடிநீர் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**ஊரக குடிநீர்த் திட்டம்**

மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 3,346 குடியிருப்புகளில் 993 குடியிருப்பு களுக்கு ரூ.41.55 கோடி மதிப்பில் குடிநீர்த்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மக்கள் உபயோகத்தில் உள்ளது.

நடப்பு நிதியாண்டில், 225 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.11.55 கோடி மதிப்பில் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, ரூ.5.5 கோடி மதிப்பில், 97 குடியிருப்புகள் பணி முழுமையாக முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன.

**சமூக நலத்துறை**

காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத்துறை, கடந்த 4 ஆண்டுகளில் தனி முத்திரை பதித்துச் சாதனை படைத்து வருகிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 8,102 பெண்கள் பயனடைந் துள்ளனர்.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் 35 பெண்களுக்கு ரூ.2,02,000 வழங்கப்பட்டுள்ளது.

அன்னை அஞ்சுகம் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் 138 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அன்னை தெரசா அம்மையார் ஆதரவற்ற மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 25 பெண்களுக்கு ரூ.1,25,000 வழங்கப்பட்டுள்ளது.

விதவையரின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான இலவச பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 3,670 குழந்தைகளுக்கு ரூ.2,22,750 மதிப்புள்ள புத்தகங்கள், நோட்டுகள் வழங்கப்பட்டன.

தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 28,377 பெண்களுக்கு ரூ.1,41,86,000 வழங்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புத் துறை**

1996-ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் 765 நபர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 268 பெண்கள். உடல் ஊனமுற்றோர் 61 பேர்.

1997-இல் 1,157 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் பெண்கள் 234 பேர், உடல் ஊனமுற்றோர் 60 பேர்.

1998-இல் 947 பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 259 பேர் பெண்கள், 60 பேர் உடல் ஊனமுற்றோர்

1999-இல் 569 பேர் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். இதில் 260 பேர் பெண்கள், 60 பேர் உடல் ஊனமுற்றோர்



**கால்நடை பராமரிப்புத்துறை**

ஆதிதிராவிட நலத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இனப் பெண்களில் 1,160 நபர்களுக்கு கிடேரி கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.17,40,000 மானியத் தொகை வழங்கப்பட்டது.

1,212 நபர்களுக்கு அகில் இன கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.1,45,440 மானியத் தொகை செலவிடப்பட்டது.

கிரிராஜா இனக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 1,212 நபர்களுக்கு ரூ.8,72,640 தொகை வழங்கப்பட்டது.

242 நபர்களுக்கு, ரூ.48,360 செலவில் கால்நடைகள் மற்றும் கோழிகள் வளர்ப்பது குறித்து 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

தொலை தூர கிராமங்களுக்குப் பொலி காளைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், காளை ஒன்று ரூ.5,000 வீதம் 10 நபர்களுக்கு 100% மானியத்தில் காளைகள் வழங்கப்பட்டது.

பழங்குடியினர் நலத்திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 இருளர்களுக்கு, ஒரு அலகின் விலை ரூ.5,000 வீதம் 50 அலகிற்கு ரூ.2,50,000 பெறப்பட்டு ஆடு அலகுகள் வழங்கப்பட்டன. ஒரு அலகிற்கு 4 பெட்டை ஆடுகளும், ஒரு கிடா ஆடும் வாங்கி வழங்கப்பட்டது.

யூரியா மூலம் வைக்கோல் ஊட்டமேற்றும் திட்டத்தின் கீழ், சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் மூலம் 100% மானிய அடிப்படையில் ஊட்டமேற்றப்பட்ட வைக்கோல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 400 பேர் தேர்வு செய்யப்பட்டு, 1 நபருக்கு ரூ.500 வீதம் ரூ.2,00,000-ம் 1998-99-இல் வழங்கப்பட்டது.

□ பா. நாராயணமூர்த்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.



# தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனிக் கொள்கையை இந்தியாவில் முதன்முதலில் வகுத்தது தமிழகம்

□ முதலமைச்சர் கலைஞர்

“E-governance எனும் மின்னணு ஆளுமையை அரசு நிர்வாகத்தில் பெருமளவுக்குக் கையாண்டு விரைவுபடுத்துதல் குறித்து, மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைத் திட்டங்களை வரையறை செய்திடும் நோக்கில் நடைபெறும் இம்மாநாட்டில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

1996ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னர் தமிழகத்தில் பல்வேறு துறைகளில், கணினியைப் பயன்படுத்தி நிர்வாகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த முனைப்பான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணினியை அரசு நிர்வாகத்தில் முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம், அரசுப் பணிகளின் தரம் உயரும்; நடவடிக்கைகளில் தாமதங்கள் குறையும்; பொது மக்களின் அலைச்சலும், மனத் தாங்கல்களும், வீண் செலவும் தவிர்க்கப்படும்.

அரசு நடவடிக்கைகள் வெளிப்படையாகி மக்களுக்கு அரசிடம் நம்பிக்கைகள் வலுவடையும். இதனைக் கருதித்தான் 1996இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் புதிய தொழிற் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

ஒளிவு மறைவற்ற வெளிப்படையான நிர்வாகத்தை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. அதனால்தான், பொதுமக்கள் தகவல் பெறும் உரிமைக்குச் சட்ட வடிவம் தந்து, தேவையான விதிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தியுள்ளோம். அரசு ஆணைகள், டெண்டர் விளம்பரங்கள் போன்றவற்றையெல்லாம் வலைதளத்தில் (website) இடம் பெறச் செய்துள்ளோம்.

தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனிக் கொள்கையை இந்தியாவிலேயே முதன் முதலில் வகுத்தது தமிழகம். அதற்கு ஓராண்டு கடந்த பின்னர்தான், அகில இந்திய அளவில் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

தமிழக அரசு உருவாக்கிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்முயற்சிகளின் பயனாகத் தமிழகம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பாராட்டத் தக்க அளவில் முன்னேற்றம் கண்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறந்து விளங்கும் உலகளாவிய நிறுவனங்கள் பல, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்துள்ள பல்வேறு அம்சங்களைக் கண்டறிந்து, இங்கே முதலீடுகள் செய்துள்ளன; முதலீடுகள் செய்வதற்குப் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றன.

தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான மனிதவளத்தைப் பெருக்கும் வகையில் புதிய கல்வி நிறுவனங்கள் பல தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்போதுள்ள, ஏறத்தாழ 160 பொறியியல் கல்லூரிகளில் ஆண்டுதோறும் 45,500 மாணவ, மாணவியர் பல்வேறு தொழில்நுட்பப் பாடங்களில் தேர்ச்சி பெறுகின்றனர். இவர்களில், 26,000 பேர் தகவல் தொழில்நுட்பப் பாடங்களில் வல்லுநர்களாக வெளிவருகின்றனர். அடுத்த இரண்டு ஆண்டுகளில்



இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்திடும். இதற்கு ஏற்றவகையில் கூடுதல் வசதிகளை உருவாக்கிட அறிஞர்கள் குழு ஆய்வு செய்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பொறியியல் பட்டதாரிகளைக் கூடுதலாக உருவாக்கிவரும் அதேவேளையில், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் நடுத்தர நிலையில் தேவைப்படும் பயிற்சிபெற்ற பணியாளர்களையும் இந்த அரசு உருவாக்கி வருகிறது.

கடந்த ஆண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 112 கோடி ரூபாய் செலவிலும்,

இந்த ஆண்டு முதல் எஞ்சியுள்ள 515 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 73 கோடி ரூபாய் செலவிலும்,

16 மாநகராட்சிப் பள்ளிகளில் 1.85 கோடி ரூபாய் செலவிலும்,

60 கலை அறிவியல் கல்லூரிகளில் 28.22 கோடி ரூபாய் செலவிலும்,

12 மருத்துவக் கல்லூரிகளில் 2.79 கோடி ரூபாய் செலவிலும், 5 சட்டக் கல்லூரிகளில் 1.55 கோடி ரூபாய் செலவிலும்,

கணினிக் கல்வி கற்பிக்கப்படுவதற்குத் தமிழக அரசினால் வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மூலம், ஆண்டுக்கு ஏறத்தாழ 1 இலட்சம் மாணவ, மாணவியர் கணினி அறிவு பெற்றவர்களாக வெளிவரும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துள்ளதன் காரணமாகத்தான், NASSCOM நிறுவனம், மென்பொருள் துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை மதிப்பிடும் பொழுது, "Availability of Software Manpower" என்ற அளவுகோலின் அடிப்படையில், மென்பொருள் திட்டங்களைத் தயாரிப்பதற்கு இந்தியாவிலேயே சிறந்த இடம் சென்னைதான் என்று அறிவித்திருப்பது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

இப்படி ஆற்றல் வாய்ந்த மனித வளத்தினை உருவாக்கி வருவதுடன், தமிழக அரசு நிர்வாகத்தில் முடிவுகள் மேற்கொள்வதற்குப் பின்பற்றப்படும் நடைமுறைகளிலிருந்து, திட்டச் செயலாக்கங்கள் வரை கடைப்பிடிக்கப்பட்டுவரும் வெளிப்படையான அணுகுமுறையும் தமிழகத்தின் வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் உறுதுணை புரிந்து வருகிறது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான போக்குவரத்து வசதிகள், விமான நிலையங்கள், துறைமுக வசதிகள், மின்சார வசதிகள், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இங்கு நிலவும் குறைந்த விலைவாசிகள் போன்ற பல்வேறு காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் அலைஅலையாகத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தோன்றி வருகின்றன.

மென்பொருள் தொழில் நிறுவனங்களைப் பொறுத்த வரை, 1996 மே திங்கள் அளவில் 34 மென்பொருள் நிறுவனங்கள் மட்டுமே தமிழகத்தில் இருந்தன. தற்போது இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 600க்குமேல் உயர்ந்துள்ளன. 1995–96இல் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் மதிப்பு 37 கோடி ரூபாய் மட்டுமே. நான்காண்டுகளில், அதாவது, 1999–2000இல் இது, ஏறத்தாழ 52 மடங்காகப் பெருகி, 1914 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்து மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இவையெல்லாம், தமிழக அரசு கடைப்பிடித்து வரும் தகவல் தொழில்நுட்பக் கொள்கைக்குக் கிடைத்திருக்கும் மாபெரும் வெற்றிச் சின்னங்கள் என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஜூலைத் திங்கள் 4ஆம் நாளன்று நமது பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட "டைடல் பூங்கா" தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மற்றொரு சாதனை மகுடமாக உருவாகியுள்ளது. இதில், உலகின் புகழ்வாய்ந்த பல மென்பொருள் நிறுவனங்கள் தங்களுடைய வர்த்தகப் பணிகளைத் தொடங்கிட முன்வந்துள்ளன. இதன்மூலம், மேலும் அதிக அளவில் மென்பொருள் வர்த்தகம் தமிழகத்தில் நிகழவும், ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறவும் ஒளிமயமான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.



இந்த டைடல் மென்பொருள் பூங்காவைப் போல், சிறுசேரியில் 1,000 ஏக்கர் பரப்பில் தகவல் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது. இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனம் (Software Technology Park of India) தமிழக தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் வகையில் தமிழக அரசின் உதவியுடன் மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்களை (Satellite Earth Stations) அமைத்திட நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் ஏற்பட்டுவரும் இத்தகைய முன்னேற்றங்களின் பயன்கள் நமது நாட்டிலுள்ள பாமர மக்களுக்கும் கிடைத்திட வேண்டும்.



அவர்களின் தேவைகளைத் தேடிச் சென்று நிறைவுசெய்வதாகவும், தகவல் தொழில்நுட்பம் அமைந்திட வேண்டும்.



இன்றைய நிலையில், கணினி வசதியும், இணையத் தொடர்பு வசதிகளும், பண வசதி படைத்தவர்களுக்கும், ஆங்கிலம் கற்றவர்களுக்கும் மட்டுமே பரவலாகக் கிடைத்திடும் வாய்ப்புகள் உள்ளன.

வசதியற்ற ஏழை எளிய மக்களுக்கும் இந்த வாய்ப்புகள் கிடைத்திட வேண்டும் என்பதற்காகத் தான், தமிழக அரசு இங்கிலாந்து நாட்டிலுள்ள "வேர்ல்டுடெல்" என்னும் நிறுவனத்துடன் இணைந்து மாநிலம் முழுவதிலும் 13,000 சமுதாய இணைய மையங்களை உருவாக்குவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், கணினியில் தமிழ்மொழி முழுமையாகப் பயன்படுத்தப்படும் சூழ்நிலை உருவாவதன் மூலம், தமிழகத்தைச் சார்ந்த எளிய, நடுத்தரக் குடும்பத்தினரும், குறிப்பாகப் பாமர மக்களும் பெரும்பயன் எய்திட முடியும் என்ற அடிப்படையில், கணினியில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய்வதற்காக "தமிழ்நெட்99" மாநாட்டினைச் சென்னையில் நடத்தியது இந்த அரசு.

"தமிழ்நெட்99" மாநாட்டின் பரிந்துரைகளின்படி தரப்படுத்தப்பட்ட தமிழ் விசைப்பலகையும், தமிழ் வரிவடிவக் குறியீடுகளும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மென்பொருள்களின் வளர்ச்சி அதிகரித்துள்ளது. இதுவரை தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள 18 புதிய மென்பொருள்கள், எழுத்து வடிவங்கள், விசைப்பலகைகள் போன்றவைகளுக்கு ஒப்புதல் அளித்துச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தமிழ் மென்பொருள்களில் சில தமிழகத்திலுள்ள கல்வி நிலையங்களுக்கு விரைவில் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

கணினியிலும், இணையத்திலும் ஏற்பட்டு வரும் புதுப்புது மாற்றங்களுக்கு ஏற்ற வகையில், தமிழ் மென்பொருள்களைத் தயாரிப்பதற்கு ஊக்கம் அளித்து இதுவரை பல்வேறு நிறுவனங்களுக்கு ஒரு கோடி ரூபாய் நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

"தமிழ்நெட்99" மாநாட்டில் எடுக்கப்பட்ட மற்றொரு முக்கிய முடிவின் அடிப்படையில், உலகெங்கிலும் பரவிக்கிடக்கும் தமிழர்களும், தமிழ் ஆர்வலர்களும் தமிழ் மொழியைக் கற்றிடத் துணைபுரிய அமைக்கப்பட்டு வரும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், வரும் பொங்கல் திருநாளிற்கு முன்பாகத் தொடங்கப்பட இருக்கிறது என்பதனையும், இந்த இனிய வேளையில் எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவற்றைத் தொடர்ந்து, அரசின் அன்றாட நடவடிக்கைகளில் விரைவும், தெளிவும் ஏற்படும் வகையிலும், நிர்வாகத்தில் சீர்மையும், செம்மையும் பெருகிடும் வகையிலும் தகவல் தொழில்நுட்பத் துறையின் ஆற்றல்களை எந்த வகையில் பயன்படுத்திட முடியும் என்பதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்காகவே, இன்று இங்கு உங்களை அழைத்திருக்கின்றேன்.

தமிழக அரசின் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம், போக்குவரத்துத் துறை, வணிகவரித்துறை, பத்திரப்பதிவுத்துறை போன்ற துறைகளில் கணினியைப் பரவலாகப் பயன்படுத்திடும் முயற்சிகள் தொடங்கப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இந்த இரண்டாண்டுகளில் கணினியின் பயன்பாடுகளும், மென்பொருள்களின் செயல்பாடுகளும் பன்மடங்குப் பெருகியுள்ளன. எனினும், தனியார் நிறுவனங்கள் இவற்றின் மூலம் பயன்கண்டுள்ள அளவுக்கு இணையாக, அரசு நிர்வாகத்தில் கணினியின் மூலம் அந்த அளவுக்குப் பயன் எய்திடவில்லை என்றே நான் கருதுகிறேன்.

பொதுமக்களுக்கும், குறிப்பாக, இளைஞர்களுக்கும், மாணவ, மாணவியர்க்கும் தேவைப்படும் பல்வேறு வகைச் சான்றிதழ்கள், நில ஆவணங்கள், ஓய்வூதியங்கள், அரசின் சலுகைகள் போன்றவை கணினி தொழில்நுட்பத்தின் மூலம் உடனுக்குடன் சென்றடையும் போதுதான், மக்களின் ஆதரவும், மதிப்பும், அரசுக்கும், அரசு நிர்வாகத்திற்கும் கிடைக்கும் என்பதனைச் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இத்தகைய சீரிய பணியில் தொண்டு மனப் பான்மையுடன் ஈடுபட்டுள்ள அலுவலர் பெருமக்களை உளமாரப் பாராட்டுகிறேன். இப்பணியில் வேகம் நிறைந்திட வேண்டும். இடையில் தோன்றும் இடர்பாடுகள் உடனுக்குடன் களைந்தெறியப்பட வேண்டும். அடுத் தடுத்த நிலைகளில் உள்ள அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் உரிய வழிமுறைகள் எடுத்துரைக்கப் பட வேண்டும்.

கணினிகள் பெறுதல், மென் பொருள்கள் தயாரித்தல், அவற்றின் பயன்பாட்டை அதிகரித்து நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துதல் கணினியை முழுமையாய் அன்றாடப் பணிகளில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டும் வண்ணம், பணியாளர்களுக்குப் பல்வேறு பயிற்சிகள் அளித்தல், பொதுமக்களுடன் தொடர்புகளை விரிவாக்குதல், வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் மாவட்ட ஆட்சியர்களும், அவர்களது அலுவலர்களும் தீவிரம் காட்டிட வேண்டும். இப்பணிகளில் காட்டப்படும் ஆர்வத் தைப் பொறுத்துத்தான், தமிழகத்தில் அவரவர் பகுதிகளில் சமூக பொருளாதார நிலைகளில் முன்னேற்றங்களை விரைவில் எட்டிப் பிடித்திட முடியும்.

இக்காலத்தில் இப்பணியில் நம்மிடம் ஏற்படும் சுணக்கம், நமது தமிழகத்தின் முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டைகளாய் அமைந்திடும் என்பதை எச்சரிக்கையாகவே ஒவ்வொருவரும் கருதிட வேண்டும்.

தகவல் தொழில்நுட்பமும், உயிரியல் தொழில்நுட்பமும் (Information Technology and Bio Technology) இந்த நூற்றாண்டின் இரு கண்களைப் போன்ற விஞ்ஞானங்கள் என்பதால்தான், அவற்றின் பயன்களைச் சமுதாயத்தின் எல்லா முனைகளுக்கும் எடுத்துச் செல்வதற்கு தொடர்ந்து இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதனை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

அரசு நிர்வாகத்தில் அனைத்துப் பணிகளையும் கணினி மயமாக்குவது நமது இலக்கு. எனினும், ஓராண்டு காலத்தில், ஆறு மாத காலத்தில், மூன்று மாத காலத்தில் கணினிமயமாக்கத்தக்கப் பணிகள் எவைஎவை என வரையறை செய்துகொண்டு, அவற்றை அந்தந்த கால அளவிற்குள் நிறைவேற்றி முடித்தாக வேண்டும். இதற்கு ஏற்ற செயல் திட்டங்களை இன்றைய மாநாட்டில் வரையறை செய்திட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மின்னணு ஆளுமையின் அடிப்படைக் கட்டமைப்பாக இணையங்கள் விளங்கிட வேண்டும். அதற்கேற்ற வகையில் நிர்வாகத்தின் ஒவ்வொரு முனையிலும் உகந்த வலைதளம் (Website) உருவாக்கப்பட வேண்டும். இப்படி வலைதளங்கள் உருவாக்கப்படும்பொழுது துறையின் கண்ணோட்டத்தோடன்றி, பொதுமக்களின் தேவைகளை அறிந்து அவர்தம் கண்ணோட்டத்திலும் உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படும் வலைதளங்கள் தொடர்ந்து நவீனப்படுத்தப்பட வேண்டும்.

"ஈ—மெயில்" என்பது மிகச்சிறந்த மின்னணு சாதனம் என்பதால் அரசு அலுவலர்கள் எல்லா நிலைகளிலும் அதனைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அப்படி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பொழுது "காகிதம் இல்லா நடைமுறை" (Paperless system) கைவசப்படும். ஒவ்வொரு துறையிலும் ஏதாவது ஒரு நடவடிக்கையை (Activity) தெரிந்தெடுத்து, அதில் இந்த காகிதம் இல்லா நடைமுறையைப் பின்பற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இரண்டு மாதங்கள் கடந்தபின் மீண்டும் நாம் இங்கு சந்திக்கும் வேளையில், இன்று வரையறை செய்திடும் இலக்குகளில், நாம் எய்தியவை எவைஎவை என அடையாளம் காட்டத்தக்க வகையில், நம் செயல் திட்டங்கள் இன்று வடிவம் பெற வேண்டும் என்பதும் என் விழைவாகும்.



இந்த அடிப்படையில், உங்களிடமிருந்து கருத்துகளை, பொருத்தமான செயல் திட்டங்களை ஆவலுடன் எதிர்பார்த்து அமைகிறேன்"

*5–10–2000 அன்று மின்னணு ஆளுமை – மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

★ ★ ★



# இணையமும் இன்றியமையாமையும்...

– புலவர் டி.எம்.சண்முகசுந்தரம்

இதிகாசங்களைப் படித்து இளமையை முதுமை ஆக்கிக்கொண்டிருந்த எம்மை இணையம் (அல்லது) வலையம் என்ற சொல் ஈடில்லா பிணைப்பை ஏற்படுத்தியுள்ளது. தகவல் தொடர்புக்காக 1858–இல் அட்லாண்டிக் பெருங்கடலின் அடியில் ஒரு கேபிள் நிறுவப்பட்டது. அது சில நாட்களே செயல்பட்டாலும், தொழில்நுட்ப ரீதியில் தோல்வி அடைந்தாலும் தொலைத் தகவல் தொடர்புத்துறை சரித்திரத்தில் அது ஒரு மைல் கல்லாக அமைந்தது. பிறகு 1866–இல் மீண்டும் நிறுவிய கடலடி கேபிள்கள் அடுத்த நூறு ஆண்டுகள் வரை பயன்பாட்டில் இருந்தது. இதுதான் இன்றைக்குக் கம்ப்யூட்டரின் இலக்கணத்தையே மாற்றி, இந்த நூற்றாண்டின் மகத்தான தகவல் தொழில் நுட்பத்திற்கு வித்திட்டிருக்கிறது.

1957–இல் சோவியத் யூனியன் விண்ணில் பறக்கவிட்ட 'ஸ்புட்னிக்' செயற்கைக் கோளைக் கண்டு வியந்த வல்லரசான அமெரிக்கா 'ஆர்ப்பா' என்னும் ஆராய்ச்சி அமைப்பை அமைத்து, அடுத்த ஆண்டே எக்ஸ்புளோர் செயற்கைக் கோளை விண்ணில் பறக்கவிட்டது. பின்னாளில் தொலைத் தகவல் தொடர்புக்காக எண்ணற்ற செயற்கைக் கோள்கள் விண்ணில் பறக்கவிடப்படுவதற்கு ஸ்புட்னிக்கும், எக்ஸ்புளோருமே முன்னோடியாய் விளங்கியது. இன்றியமையாத் தேவைகளின் முதன்மையானதாக இந்த இணையம் இருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அறிவியலும், நவீனங்களும் நன்கு வளர்ச்சியடைந்த காலகட்டங்களில் அதனுடைய எழுச்சி புதுமையாக இருந்தது உண்மை தான். எனினும் இந்த இணையம் வந்த பிறகு ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்று அங்கெல்லாம் நடைபெறும் சம்பவங்களை அறியவேண்டிய அந்த நிலை மாறி, இன்றைக்கு இருந்த இடத்தில் இருந்துகொண்டே இணையத்தின் வழியாக உலகைப் பார்க்கின்ற இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கம்ப்யூட்டர் நெட்வொர்க்கிலும், தகவல் தொடர்பிலும் ஆர்ப்பா கவனம் செலுத்த ஆரம்பித்த ஆரம்ப காலத்தில், அமெரிக்க இராணுவத்துறையில் கம்ப்யூட்டரின் பயன்பாட்டை 1962வாக்கில் ஆராயத் தொடங்கினாலும், அதற்குப் புதுமையான நெட்வொர்க்கை நிறுவுவதே நோக்கமாக இருந்தது. பிறகு இங்கிலாந்து நாட்டின் தேசிய இயற்பியல் ஆய்வுக்கூடமும், ஆர்ப்பாவும் நெட்வொர்க்கில் காட்டிய முனைப்பால் 1969–இல் ஆர்ப்பாநெட் உருவாக்கப்பட்டு, அதில் இருந்த நான்கே நான்கு நோடுகளை மட்டுமே கொண்டு நோடுகளுக் கிடையேயான தகவல் பரிமாற்றத்தினை வெற்றிகரமாக நடத்திக் காட்டப்பட்டது. வளரும் தொழில்நுட்பத்தின் வசந்தகாலம் என வர்ணிக்கப்பட்ட 1972–ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு உலகத்தின் பார்வையை ஈர்த்தது என்பதுடன் அதுவரை இருந்து வந்த வியப்புக்கு விளக்கமாக அமைந்து, சேமித்துவைக்கப்படும் எந்தவொரு தகவலையும், எந்தவொரு மூலையிலிருந்தும் எளிதில் பார்க்க முடியுமென்கிற நம்பிக்கையை வலுவூட்டியது.

வர்த்தகம், வானிலை, அண்டை தேசத்துடனான அந்நியம், சர்வ சாதாரணமான சமநிலை போன்ற அத்தியாவசங்களின் ஆக்கப்பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து இந்த இணையம் எம்மைப் புத்தம் புது தேசத்திற்கு இட்டுச் செல்கிறது. நெட்வொர்க் கண்ட்ரோல் புரொட்டக்கால் எனும் கம்ப்யூட்டர் தகவல் தொடர்பு முறையை ஆர்ப்பாநெட்டில் பயன்படுத்தியதன் ஆதாயமாக, ஒரு தகவலை என்சிபி என்னும் உறையில் போட்டு உரிய முகவரியை உறையின் மேல் எழுதிவிட்டால் அஞ்சல் நிலையங்களின் வழியாகக் கடிதங்கள் சென்று சேர்வதைப் போல் நோடுகள் வழியாகப் பயணம் செய்து உரிய முகவரியை அடைகிறது. ஒரு நெட்வொர்க்கோடு இணைக்கப்படும் எந்த கம்ப்யூட்டரும் அதே நெட்வொர்க்கில் இணைக்கப்படுகின்ற எந்த கம்ப்யூட்டருடனும் நேரடியாக பேசிக்கொள்ள முடியும் எனும் நினைப்பதற்கு இனிக்கும் நிஜ தத்துவம் இதில் அடங்கியுள்ளது.

அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தாராளமயமாக்கலின் அடிப்படையில் தகவல் தொழில் நுட்ப விரிவாக்கம் மற்றும் பயன்பாடு நம்மை வசப்படுத்தியிருக்கிறது என்பதைவிட வளப்படுத்தி யிருக்கிறது என்பதே பொருத்தமாக இருக்கும். உலகின் பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் கம்ப்யூட்டர்கள், பல்வேறு ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடன் தயாரிக்கப்படும் கம்ப்யூட்டர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதற்காக டிசிபி/ ஐபி (Transmission Control Protocol/Internet Protocol) என்னும் புதிய முறையைப் புகுத்தியதால் எல்லாக் கம்ப்யூட்டர்களுக்குமான இணைப்பு வசதி ஏற்பட்டது. சூப்பர் கம்ப்யூட்டர்கள், மினி கம்ப்யூட்டர்கள், மெயின் ஃபிரேம் போன்றவைகள் கோலோச்சிய காலத்தில் முதன்முதலாக சாதாரண டெஸ்க்டாப் (DTP) கம்ப்யூட்டர்கள், கம்ப்யூட்டரின் நோடுகளாக அறிமுகம் ஆனது. இதன் காரணமாக ஏராளமான சமூகக் குழுக்கள் மிகவும் சக்திவாய்ந்த கம்ப்யூட்டர்களையும் நெட்வொர்க்கு களையும் அமைத்துக்கொள்ள முடிந்தது.

இப்படி வேகமாக வளர்ந்த இணையத் தொடர்பால் இராணுவத் தன்மைக்கு இன்னல்கள் வருமோ என அஞ்சிய அமெரிக்கா அதற்காக மாற்று ஏற்பாடுகளுக்கு ஆயத்தமான காலமே உலகில் மிகச் சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் அறிமுகமாயின. அதன் பிறகு சேமித்து வைக்கப்படும் மூலாதாரங்

களைப் பயன்படுத்திக்கொள்கின்ற வாய்ப்பு பரவலாக்கப்பட்டது. ஒரு காலகட்டம் வரை நவீனம் என்பதற்கே பொருள்புரியாத நிலைமாறி, பரந்த ஒரு இணையத் தொடர்பு சாத்தியமானதற்கு அறிவுத் திறத்தை ஆக்கப்பணிகளின் பக்கம் அடியோடு திருப்பியதால் அடைந்த முதல் வெற்றியே காரணம் ஆகும். அதனைத் தொடர்ந்து தகவல் தொடர்புத்துறை, இணையத்தோடு இணைக்கப்படுவதற்கு முன்புவரை எந்த நிலையிலிருந்தது, எப்படி இயங்கியது என்பது யாவருக்கும் தெரியும். இந்த நெட்வொர்க்கில் நிபுணர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவும், பரந்துபட்டதை நாடும் வேட்கையும் பதிவு செய்யப்பட்ட பிறகு பல்நோக்கில் தன்னைத்தானே வியக்கின்ற மேம்பாட்டு நிலைக்கு நாம் உயர்ந்துள்ளோம், உள்ளம் மகிழ்ந்துள்ளோம்!

அமெரிக்காவின் நேஷனல் சயின்ஸ் பவுண்டேஷன் நிறுவிய நெட்வொர்க்கே பின்னர் பெருமளவில் சக்திவாய்ந்த டெலிபோன் கேபிள்களுடன் இணைக்கப் பட்டு சூப்பர் கம்ப்யூட்டர்களில் வைக்கப்பட்ட தகவல்கள் உலகின் எந்தப் பகுதியிலும் அதன் பயனாளருடன் பகிர்ந்துகொள்ள முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக அமைந்தது. இந்த முயற்சிக்குக் கிடைத்த பலன் நாளடைவில் தகவல் பரிமாற்றங்களை அதிகப் படுத்தியது. அதனால் மிகவும் சக்தி வாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் என்று நம்பப்பட்ட கம்ப்யூட்டர்களே சமாளிக்க முடியாமல் திணறியது. வேகவேகமான தகவல் பரிமாற்றத்திற்காக 1988–இல் நெட்வொர்க்குகள் புதுப்பிக்கப்பட்டு, மின்சாரம் அளவிற்குத் தகவல் சொல்லவேண்டும் என்பதற் காக தொலைபேசி வழித் தடங்களின் மூலமாக சக்திவாய்ந்த சகல கம்ப்யூட்டர்களும் இணைக்கப்பட்டதால் ஏற்பட்டதே இன்று அகில உலகிலும் பரவிக்கிடக்கும் இண்டர்நெட் ஆகும்.



அகவிருள் அகற்றி அறிவுச்சுடர் கொளுத்திய முதல் பாகத்தைவிட அறிவுப் பெருக்கத்தை அறிவியல் கோட்பாட்டோடு நெருக்கப்படுத்திக்கொண்ட இரண்டாவது பாகமே எதிர்காலத்தில் இணையத்தின் தேவையைப் புரிந்துகொள்ள உதவும். சுவாசப்பைகளுக்குக் காற்றும், தமனிகளுக்கு இரத்தமும், இதயத்திற்குக் காதலும் எப்படி அவசியமானதோ, அப்படி இணையத்தின் அவசியமும் இன்றியமையாததாக அமைகிறது. ஒரு சின்னஞ்சிறிய மின்காந்த தட்டில் சேமித்து வைக்கப்படுகின்ற தகவல்கள் பெரும் களஞ்சியமாக, கடிதப் போக்குவரத்தின் கடினத்தை சுலபப்படுத்துவதாக கூடி, குழு விவாதம் நடத்துவதிலிருந்த குளறுபடிகளைக் களைவதாக நாளேடுகளுக்காக செலவழிக்கும் நேரத்தை சேமிப்பதாக, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை கண்டுபிடித்துக் கொடுப்பதாக, பொழுதுபோக்கிலும், பொது அறிவை வளர்த்துக் கொள்வதாக, வணிகம், கலை, கலாச்சாரம் எல்லாவற்றையும்விட மேலாக அயல் நாடுகளின் நிகழ்வுகள் போன்றவற்றை குறைந்த செலவில் மனிதனின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்கின்ற நிலையில் இன்றைக்கு இணையம் இருக்கிறது.

மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் தேவைகளோடு உலகை ஒரு நொடியில் வலம் வர இணையத் தேவை இருப்பது குறித்து, இப்போதைக்கு எந்தப் பிரச்சினைகளும் இல்லை என்றாலும், எதிர்காலத்தில் இதன் வேகமும் விளைவும் உலக சமுதாயத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. வேகத் தளத்தில் விவேகத் தடத்தை தவறவிட்டு விடுவோமோ எனும் வினாவிற்கு விடை தேவையில்லை என்றாலும், விளக்கம் அவசியமாகிறது. காலத்தின் கவலைக்குக் கண்டிப்பாக ஆறுதல் சொல்லித்தான் ஆக வேண்டும். அறிவியல் முன்னேற்றந் தான் என்றாலும், ஆபத்தை விளைவிக்கக் கூடிய அணு மற்றும் ஹைட்ரஜன் தொழில் களைவிட, மற்ற புதிய இரசாயன தொழில் களைவிட இந்த இணையம் பெரும் இன்னல்களை ஏற்படுத்தக்கூடும் எனும் நம்பிக்கை எனக்கில்லை. அறிவை ஆக்கச் செயல்களுக்குப் பயன்படுத்துகின்ற அந்த நிலையிலிருந்து அறவே மாறாத வரை எந்தத் தீங்கும் எளிதில் ஏற்பட்டுவிடாது.

உலகின் பரப்பு ஒருபோதும் சுருங்குவதும் இல்லை, விரிவதும் இல்லை. ஆனால் உலகின் மக்கள்தொகை மட்டும் மட்டேயில்லாமல் உயர்ந்துகொண்டே செல்கிறது. அதனடிப்படையில் தேவைகளையும் நிறைவேற்றியாக வேண்டும். இந்த இணையத் தொடர்பாவது, இனி இன, மத, மொழி பூசல்களின்றி ஒரு புதிய இனத்தை ஏற்படுத்தட்டும்.

★ ★ ★



## சமத்துவபுரத்தில் கணினி மையம்

வேலூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டை அருகில் அம்மூரில் அழகிய சமத்துவபுரம் அமைக்கப்பட்டுள்ளது. எந்த சமத்துவபுரத்திலும் இல்லாத சிறப்பு, இங்கு ஒரு கணினி மையம் உள்ளது. முதலமைச்சர் கலைஞர் அவர்களது பவள விழா பிறந்த நாளினையொட்டி இராணிப்பேட்டை சட்டப்பேரவை உறுப்பினர் திரு ஆர்.காந்தி அவர்களின் பொருள் உதவியால் அமைக்கப்பட்டது. இங்கு 4




கணினிகள் உள்ளன. மையம் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இவைகள் ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தில் 30 மாணவர்கள் பயிலுகிறார்கள். இங்கு 6 மாத காலம் கணினிக் கல்வி அளிக்கப்படுகிறது. இதற்கு சமத்துவபுர வாழ் மக்களுக்கு மாதம் ரூ.50ம், இதர மக்களிடம் 6 மாதத்திற்கு ரூ.2000மும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்த ரூ.2000-ஐயும் 5 தவணைகளில் செலுத்தலாம். ஆனால் இப்படிப்பிற்கு வெளியில் ரூ.4000-க்கு மேல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இம்மையத்தை சிறப்புடன் செயலாற்றச் செய்ய வருவாய் அலுவலர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

## வேலூர் உழவர் சந்தை

ஏராளமான மக்கள் வேலூர் உழவர் சந்தையில் காய்கறிகள் வாங்கிக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது. இக்கூட்டமே இச்சந்தையின் வெற்றிக்கு கட்டியம் கூறுவது போல் இருந்தது.



சந்தைக்கு வந்த நுகர்வோர்களையும், கடைக்காரர்களையும் சந்தித்துப் பேசினோம். அனைவரும் உழவர் சந்தை சிறப்பான பயனைத் தந்து கொண்டிருப் பதாக ஒருமித்த குரலில் கூறினர்.

திரு.பிச்சாண்டி ''சரியான எடை, நியாயமான விலை, புதிய காய்கறிகள்" என்று கூறினார். திருமதி வரலட்சுமி, "இச்சந்தை தொடங்கியக் காலத்திலிருந்து வாங்குகிறேன். இதுபோன்று முன்பு குறைந்த விலையில் நல்ல காய்களை

வாங்கியதில்லை. இங்கு எந்தக் குறையும் இல்லை" என்றார். சௌந்தர்ராஜன் மற்றும் சிலரும் இதுபோன்று கூறி திருப்தியாக உள்ளது என்றனர்.

அதுபோல், இராமச்சந்திரன், இந்திராணி, திருப்பதி போன்ற கடைக்காரர்கள் "இங்கே நல்ல் வியாபாரம் நடைபெறுகிறது. நாங்கள் விளைவித்த பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. நல்ல இலாபமும் கிடைக்கிறது" என்று மகிழ்ச்சியுடன் கூறினர்.

60 கடைகள் உள்ள இந்த சந்தையில் 22.9.2000 அன்று 150 விவசாயிகள் பதிவு செய்து வியாபாரம் செய்தனர். கடந்த எட்டுமாதங்களில் 27,42,216 கிலோ காய்கள் ரூ.1,62,09,116 க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

உழவர் சந்தையில் மகளிர் குழு நடத்தும் ஒரு சிற்றுண்டி சாலை உள்ளது. இச்சிற்றுண்டி சாலையில் விற்பனை உழவர் சந்தைபோல் அமோகமாக உள்ளது என்றனர்.

• • •

## பள்ளியில் கணினி

ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் பூட்டுத்தாக்கு அரசு மேனிலைப்பள்ளி கணினிக் கல்வி மையத்தைப் பார்த்தோம். இங்கு 10 கணினிகள் உள்ளன. 9,10,11,12-ஆம் வகுப்பு மாணவர்கள் இங்கு கணினிக் கல்வி பயின்று வருகிறார்கள். ஆண்டுக்கு ரூ.100 வீதம் 9, 10-ஆம் வகுப்பு மாணவர்கள் செலுத்த வேண்டும். 11, 12-ஆம் வகுப்பு மாணவர்கள் ரூ.200 கணினிக் கல்விக் கட்டணமாக செலுத்தி பயிலுகிறார்கள். •



## வருமுன் காப்போம்

வேலூர் மாவட்டம் மேல்விசாரத்தில் இஸ்லாமிய பெண்கள் அதிகமாக கலந்துகொண்ட வருமுன் காப்போம் திட்ட முகாமிற்கு 22.9.2000 அன்று சென்றிருந்தோம். ஏராளமான பெண்களும், ஆண்களும் தங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

முதலில் பதிவு செய்துகொண்டு, பிறகு பொதுவான பரிசோதனை, தோல் வியாதி, தொழுநோய், இ.சி.ஜி., இருதய நோய், இரத்த பரிசோதனை மற்றும் கண், பல் மருத்துவ பரிசோதனைகளும் செய்யப் பட்டன. சித்த மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டன.

12 மருத்துவ அலுவலர்கள், டாக்டர் அன்பரசு தலைமையில் 47 உதவியாளர் களுடன் இம்முகாமில் கலந்து கொண்டனர்.

மதியம் 12.30 மணி வரை 1,096 பொதுமக்கள் பரிசோதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பெண்கள் மட்டும் 461 பேர்.

இம்முகாமிற்கு வந்திருந்த கூட்டத்தைக் கண்டு இத்திட்டத்தின் பெரும் வெற்றியை எங்களால் உணர முடிந்தது.





# ரயில் தண்டவாளத்தில் ஓடும்...

□ சுந்தர ராமசாமி

முப்பது வருடங்களாகப் பார்த்து வரும் இந்த வேலையிலிருந்து ஓய்வுபெற இன்னும் இருப்பதெல்லாம் இரண்டே இரண்டு மாதங்கள் தாம். ஒரு ரயில்வே டிரைவராக இத்தனை வருடங்கள் உழைத்ததை இன்றுகூட என்னால் நம்ப முடியவில்லை. சிறு பிராயத்தில் எந்த வேலைக்கும் என் மனசு வளைந்து கொடுக்கவில்லை. மேடையில் தோன்றி நடிக்க வேண்டும் என்று ஓர் ஆசை இருந்தது. அப்பா, 'அது ஆகவே ஆகாது' என்று குறுக்கே நின்றுவிட்டார். உதவாக்கரை என்று ஊரில் பெயர் எடுத்துவிட்டேன். ஊரார் பார்வையைத் தாங்க முடியாமல் கசப்புணர்ச்சியில் சாமியார் ஆகிவிடும் உத்தேசத்துடன் வீட்டைத் துறந்து ஓடினேன். தகப்பனார், அடுத்த ரயிலில் புறப்பட்டு வந்தவர், என்னைக் கையோடு இழுத்துச் சென்று இந்த வேலையில் மாட்டிவிட்ட பின்புதான் கண்ணை மூடினார். நீலநிறச் சட்டையும் நிஜாரும் அன்று மாட்டிக் கொண்டது. இனிமேல் தான் கழற்றியெறிய வேண்டும். கரிப்பொடியும் அழுக்கும் அடையாய் அப்பிவிட்டன.

ஒரே பாதையில் வருடக்கணக்காகச் சென்று, அலுத்துப்போய்விட்டது எனக்கு. இரவு கண்ணை மூடினாலும் அன்றாடம் செல்கிற திருவனந்தபுரத்துக்கும், கொல்லத்துக்குமான இடைவெளி தூரம்தான் ஒரு குடிசை விடாமல், ஒரு பாலம் விடாமல், ஒரு குளம் விடாமல், ஒரு தென்னை மரம் விடாமல் மனத்திலே ஓடிவரும். சுருள் விரிந்து கொண்டே செல்லும் காட்சிக்கு இப்போது கண் மூட வேண்டியதில்லை. மனசே போதும். இதுவரையிலும் கோடிக்கணக்கான பிரயாணிகளை அவரவர்களுடைய இலட்சிய ஊர்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறேன். நான்தான் இதைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். பிரயாணிகளில் ரொம்பப் பேர்கள் என் முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்த்திருக்க மாட்டார்கள். குறித்த நேரத்துக்கே கொண்டு போய்ச்' சேர்த்தாலும் பாராட்டு என்னவோ ரயிலுக்குத்தான். 'ரயில் இன்று ரொம்பக் கரெக்டாக வந்துவிட்டது ஸார்'.ரயிலுக்குத்தான் சக்கரங்கள் உண்டு ? எனக்கு உண்டா ? என்னையும் ரயில்தானே சுமக்கிறது ? நான் என்ன வெளியே நின்று கயிற்றால் இழுக்கிறேனா ?

என் வேலையே விசித்திரமானது. மனித வெள்ளத்தின் மத்தியில் ஒளிந்து கொண்டிருக்கும் வேலை. எல்லோருக்கும் முன்னால் எல்லோருடைய பயணத்தையும் இயங்க வைப்போனாக இருந்தும் ஒருவருக்காவது என் ஞாபகம் இலேசில் வந்து விடுவதில்லை. பஸ் டிரைவர் வேலை, டாக்ஸி டிரைவர் வேலை மாதிரி இல்லை இது. ஓர் உறவு, ஒட்டு, மனுசத்தன்மை, ஒரு பசை, பாராட்டு ஒன்றும் இராது. பிரயாணிகள்தான் என்ன செய்வார்கள் ? அவசரம் அவர்களை முந்திக்கொண்டு ரயிலடிக்கு வந்துவிடுகிறது. மேலும் ரயில் ரொம்பப் பெரிசு. உலகம் மாதிரி, அகப்பட்ட பெட்டிக்குள் முண்டியடித்து நுழைந்து இடத்தைப் பிடிக்கும் ஆத்திரத்தில் முன்னும் பின்னும் பார்க்க நேரம் ஏது ? என் நினைவு எங்கே வரும் ?

தண்டவாளத்தில் ரயில் ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும் வரையிலும் என் நினைவு எழ வேண்டிய அவசியமும் அவ்வளவாக இல்லைதான்.

இன்று வரையிலும் என் வாழ்வில் பளிச் பளிச்சென்று எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. சிலர் வாழ்க்கையில்தான் ஏணிப்படிகள் வுந்து கொண்டேயிருக்கும். படிகள் அத்தனையும் ஏறிய பின்பும் அவர்கள் கண்களுக்கு மட்டும் மேலேயும் ஓர் ஏணிப்படி புலப்படும். எனக்கு அந்த அதிருஷ்டம் எல்லாம் கிடையாது.

இந்த முப்பது வருஷ சர்வீஸில் என் மனசைத் தொட்ட சில அனுபவங்களை நான் சபையோருக்குச் சொல்ல வேண்டுமாம். எனக்கு மேடையேறிப் பேசிப் பழக்கமா என்ன ? வேண்டாம் என்றாலும் விடமாட்டேன் என்கிறார்கள். கூட்டம் கூட்டிப் பிரிவுபசாரம் பண்ணப் போகிறார்களாம். உடன் வேலை செய்யும் நண்பர்களின் உற்சாகத்துக்கு நான் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தக் காலத்து இளைஞர்களுக்கெல்லாம் நன்றாகப் பேச வருகிறது. என்னாலெல்லாம் அப்படிப் பேசமுடியாது. வந்திருக்கிறவர்கள் அத்தனை பேரையும் சொந்த மச்சான்களாகப் பாவித்துச் சல்லாபம் செய்து பார்க்க வேண்டியது தான்.

பொழுதுவிடிந்து அஸ்தமிப்பது வரையிலும் புத்திசாலித்தனமான பேச்சையே கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருக்கும் ஜனங்கள் ஒரு கால் மணி நேரம் உளறலைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்களா என்ன ? எதற்கும் மனசுக்குள் ஒரு தடவைச் சொல்லிப் பார்த்து விடுவது நல்லது...

.... மனசைத் தொட்ட அனுபவம் என்று நான் எதைச் சொல்லுவது ? வேலையில் அமர்ந்த சில நாட்களுக்கெல்லாம் ஓர் எருமை மீது ரயில் ஓடிவிட்டது. பிராணவஸ்தையில் எழுந்த அதி பயங்கரமான அலறல், என்னை அப்படியே ஒரு முழம் மேலே தூக்கிப் போட்டுக் கீழே தள்ளியபோதும் நிலைகுலைந்து போய் விடாமல், மனசை இரு கைகளாலும் ஏந்திச் சுருட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணை விழித்துப் பார்த்தேன். ரயில் தண்டவாளத்தில் அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. அப்பா! அந்த நிமிஷத்தில் ஏற்பட்ட நிம்மதி இருக்கிறதே, அது விலைமதிக்க முடியாதது.

இந்த வேலையைப் பொறுத்த வரையில் மலையே புரண்டு





வந்தாலும் முதல் விசாரம் அதுதான். ரயில் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதா என்பதுதான். என்னதான் கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு கட்டிக் காத்தாலும் ஏதாவது ஒரு விக்கினம் வரத்தான் செய்யும். அதை அலட்சியப்படுத்த வேண்டும் என்றுநான் சொல்லவில்லை. ஆனால் ரயில் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதே, அதுதான் முக்கியம். எல்லாவற்றைறயும் விட..

நான் ரொம்பப் படித்தவன் இல்லை. ஏதோ அனுபவம். குறைப்புத்தியை அனுபவம் சாணைப் பிடித்துத் தந்திருக்கிறது. அதை நம்பித்தான் பேசுகிறேன், சொல்ல வந்த விஷயத்தை விட்டு வேறு எங்கோ சென்று விட்டேன். தண்டவாளம் இல்லாத ரயில் மாதிரி அல்லவா இந்த மனசும் ஓடுகிறது.

என் வாழ்வில் மனசைத் தொட்ட அனுபவம் ஒன்றே ஒன்றுதான். அதை எந்த நாளும் என்னால் மறக்க முடியாது. என் நினைவில் அடிக்கடி எழுந்து இன்ப வேதனையைத் தந்து கொண்டிருக்கிற அனுபவம் அது. எஞ்சின் கரி படிந்த நீல நிறச் சட்டையோடும், எண்ணெய்ப் பிசினும் தூசியும் ஏறிப் போயிருந்த நீல நிற நிஜாரோடும், ஒருநாள் ஓடுகிற ரயிலில் கண்ணீர் விட்டு அழுதேன். பசுமையற்ற என் வாழ்விலும் கண்ணீர் சிந்த ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததே! தெய்வம் என்னை மறந்து விடவில்லை. என்னையும் அழ வைத்து விட்டது அது. அந்த அனுபவத்தையும் என் வாழ்வையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறபோதெல்லாம் கடைக்காவூர் ஸ்டேஷன் பக்கம் நூற்றுக்கணக்கான பூவரசு மரங்களுக்கிடையே ஒரு தென்னை மரம் தலையைத் தூக்கி நிற்கும் காட்சிதான் என் நினைவில் எழும்.



பிரமாத விஷயம் ஒன்றும் அல்ல. முன்பின் பார்த்திராத பழக்கமில்லாத ஒரு

குழந்தையிடம் என் மனசைப் பறி கொடுத்து விட்டேன். அதற்கான தண்டனையையும் அனுபவித்தேன். பாசம் பலமாகச் சொடுக்கிவிட்டது.

ஆனால் மனசு கண்ணன் பேரில் அவனுடைய உண்மைப் பெயர் இன்றுவரை எனக்கோ என் குடும்பத்தாருக்கோ தெரியாது. கவிந்து நின்ற நாட்களில் எல்லாம் உடம்புக்குள் ஓர் ஆனந்த மயக்கம் அலை அலையாய் எழுந்தவண்ணம் இருக்கும். அதிமதுரத்தைக் கடைவாயில் ஒதுக்கிக் கொண்டதுபோல் சதா ஒரு தித்திப்பு.



உலகத்தில் எந்தக் காரியமுமே நாம் எண்ணுவது போலத்தான் நிகழ வேண்டும் என்பதில்லை. அதற்கு நேர்மாறாகவும் நிகழலாம் என்பது எத்தனை பட்டாலும் நம் பிரக்ஞையில் ஒலித்துக் கொண்டிருப் பதில்லை. நிகழ நிகழத்தான் பழையபடி நினைவில் வருகிறது எத்தனை தடவை ஒத்திகை நடந்திருந்தாலும், மேடையில் அப்போது தான் நிகழ்கிறது என்ற பாவனையில் நடிக்கிறானே நடிகன், அது போலத்தான் நாமும் நடித்தாக வேண்டுமோ ?

எருமை மீது ரயிலேறிய விஷயத்தை அந்தரத்தில் விட்டு விட்டேன். அது ஒன்றும் அத்தனை பெரிய விஷயமும் அல்ல. இருந்தாலும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அந்தச் சம்பவம் நடந்த இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் ஒரு நாள், வேளி ஸ்டேஷனில் ஒரு கிராமத்தானிடம் விசாரித்தேன். 'மாதவப் பணிக்கர் என்பவரின் எருமைதான் அது' என்றான் அவன். மடியில் விரல் பட்டதும் 'சொர் சொர்' என்று ஒரு வேளைக்குப் பத்துப்படி வரையிலும் பொழியுமாம். பணிக்கர் துக்கம் தாங்காமல் தண்டவாளத்தின் மீது தலையை முட்டியபடி அழுது புலம்பிவிட்டுக் கூடையில் வழித்துப் போட்டுக் கொண்டு சென்றாராம். கொம்பு மட்டும் இரண்டு ரூபாய்க்குப் போச்சு என்றும் அவன் சொன்னான்.

சற்றுப் பெரிய கொம்பு போலிருக்கிறது. நாற்பது ஐம்பது சீப்பாவது தேறியிருக்கும். அவ்வளவுதான். பெரிய விஷயமாகச் சொல்லப் போகிறேன் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனீர்களோ என்னவோ ?

சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். கண்ணனைப் பற்றி அல்லவா சொல்ல வந்தேன் ? அதைச் சொல்லி விடுகிறேன்.

நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் ரயில் பேட்டை ஸ்டேஷனைத் தாண்டி, நடுவில் ஒரு பெரிய வளைவும் மரம் அறுக்கும் டிப்போவும் வருகின்றனவே, அவற்றையும் தாண்டிப் போகையில் வானவெளியில் நாதசுர இசை கேட்க ஆரம்பித்தது. தொலை தூரத்தில் நிறையக் குடைகள் ஊர்ந்து வருவதையும் கவனித்தேன். ஒரு கல்யாண கோஷ்டி.

அந்த இடத்தில் தண்டவாளம் மேட்டுப் பாங்கான இடத்தில் ஓடுகிறது. இரு பக்கமும் பள்ளம். சரிவில் பச்சைப் புற்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும். அநாதைக் குளத்தில் பாசிபடர்ந்த மாதிரி ஒவ்வொருவராக வலது பக்கத்தோடு ஏறித் தண்டவாளத்தைத் தாண்டி இடது பக்கமாக இறங்கிச் சென்றார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் கண்ணுக்கு லக்ஷணமான ஜோடிதான். பெண் சற்று ஸ்தூலமாக இருந்தாள். அநேகமாக அப்படித்தானே அமைகிறது. கறுகறுவென்று மையில் தோய்த்த புருவம், நெற்றியில் நேர் கோட்டில் நீளமான சந்தனப் பூச்சு. பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நடுவில் ஒரு கிழவனார் சவரம் செய்த முகத்தோடும் சலவை செய்த வெண்ணிற ஆடைகளோடும் வெகு சுத்தமாகக் காட்சி அளித்தவர் தனது வேஷ்டியோ உத்தரீயப் பட்டோ பெண்ணின் மேல் பட்டுவிடக் கூடாது என்ற ஜாக்கிரதையில் அதிகப்படி கவனத்துடன் இருவருக்குமாகக் குடை பிடிக்கும் முயற்சியில் இருவரையும் முழுதும் நனையவிடாமல் தனக்கும் பட்ச பாதம் காட்டிக் கொள்ளாமல் வேண்டிய மட்டும் நனைந்து கொண்டு பின்னால் வந்தார். அப்போதே அவருக்கு எண்பது வயசுக்குக் குறைவில்லை. இப்போ இருக்கிறாரோ என்னவோ!

ரயில் அருகே வந்ததும் பெண்ணின் முகம் சிவந்தது. மணப்பெண் கோலத்தில் அவளைக் காண ஒரு ரயில் நிறைய அல்லவா கூட்டம் வந்துவிட்டது! வெட்கமாக இராதா அவளுக்கு ?

இரண்டு வருடங்களுக்குப் பின் மீண்டும் அவளைக் கண்டேன். அந்த இடமே அதி அற்புதமானது. தங்கச்சேரி ஸ்டேஷனையொட்டி இருந்த ஒரு சிற்றூர் அது. எங்கு பார்த்தாலும் அடர்த்தியான தென்னந் தோப்பு. முகம் பார்க்கும் கண்ணாடி உடைந்து சிதறியது போல் சூரிய ஒளி சில்லுச் சில்லாய் மண்ணில் இறைந்து கிடக்கும். இடையிடையே தீப்பெட்டிகள் மாதிரி சிறு குடிசைகள். பள்ளத்தை நோக்கிப் பாதாளம் வரையில் பாயும் பாதையோரங்களில் கூட முதுகைக் காட்டியபடி குடிசைகள் ஒட்டிக் கொண்டிருக்கும். காற்றடித்தால் புரண்டுவிடும் என்று எண்ணும்படி. நீள நீளமான கயிற்றில் கட்டப்பட்டிருந்த மாடுகள் பரிபூர்ண சுதந்திரத்துடன் மேய்ந்து திரிவதைக் காணலாம்.

சற்றுத் தொலைவில் ஒரு குளம் தெரியும். காலை வேளையில் பெண்கள் கூட்டமாகக் குளித்துக் கொண்டிருப்பார்கள். கரையில் உடம்பைத் தேய்த்தபடி நிற்கும் இளம் பெண்கள் ரயில் அருகே நெருங்கி வருவது வரையிலும் கழுத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் கடைசி நிமிஷத்தில் தொப்பென்று தண்ணீரில் குதிப்பார்கள். ஒன்று குதிக்க, இன்னொன்று குதிக்க, ஒன்றன்பின் ஒன்றாக எல்லாக் குட்டிகளும் தண்ணீருள் தொப்தொப்பென்று விழும். சில பெண்கள் கழுத்தளவு தண்ணீரில் நின்றபடி ரயிலைப் பார்த்து விஷமத்தனமாகச் சிரிப்பதும் உண்டு. என் மனத்தை வெகுவாகக் கவர்ந்த இடம் அது.

அந்த இடத்தில் ரயில் தண்டவாளத்தை ஒட்டியிருந்த ஒரு சிறு வீட்டின் முன்வாசலில் ஒரு நாள் ஒரு பெண் குனிந்து நின்றவாறு கோலமிடும் காட்சி கண்ணில் விழுந்தது. அப்போது மணி ஆறு ஆறரைதான் இருக்கும் புகைப்படம் பிடிக்கும் ஸ்டுடியோ விளக்குகள் போல் அந்த வீட்டுக் கொல்லையிலிருந்து இருளைக் கிழித்து முன்னேறிக் கொண்டிருந்த கிரணங்கள் அவளுக்கு இருபக்கமுமாக வந்து தண்டவாளத்தைத் தொட்ட இடத்தில் எல்லாம் வெள்ளி முலாம் பூசியது. நாற்புறமும் சூழ்ந்திருந்த மங்கிய ஒளியில் ஒளிக்கற்றையின் நடுவே அவள் காட்சி அளித்தது இயற்கையின் ஒரு விசித்திரமான ஏற்பாட்டின் விளைவே என எண்ணினேன். அந்த நேரத்திலேயே அவள் குளியை முடித்துவிட்டிருந்தாள். ஈரத்தலை ஒரு வெறும் நாடா முடிச்சில் கட்டுண்டு கிடந்தது. அப்போதும் என்ன அகலமான அடர்த்தி! குனிந்து நின்ற கோலத்தில் அவள் கறுப்பு நிறப்பட்டு ஜம்பர் அணிந்து கொண்டிருப்பதாக நான் எண்ணியது தவறு என்பது, எழுந்த வேகத்தில் அவளுடைய கேசபாரம் தோள்பட்டையில் ஒதுங்கியபோதுதான் தெரிய வந்தது.

பின்னால் எத்தனையோ தடவை அவளைப் பார்த்தேன். ஒவ்வொரு தடவையும் மனசில் ஒரு முடிச்சு உறுத்தும். திடீரென்று ஒரு நாள் ஏதோ ஒரு நிமிஷத்தில் அது அவிழ்ந்தது. மணப்பெண் கோலத்தில் இரண்டு வருடங்களுக்கு முன் நான் பார்த்த அதே பெண்தான் அவள் என்பது நினைவில் உதித்துவிட்டது.

முன்னைவிட அவள் உடம்பு அப்போது சற்றுக் குளுமையாக இருந்தது. கன்னக் கதுப்புக்களில் செம்மை படர்ந்திருந்ததா என்பது என் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால்

நாம் வெட்டும்
வாய்க்கால்களைப் போல்
நதிகள் நேராக ஓடுவதில்லை
ஆனால்
நதிகளின் சௌந்தர்யம்
நம் வாய்க்கால்களில்
இல்லை.

- அப்துல் ரகுமான்

அவளுடைய முகத்தையும் உடம்பையும் கவனித்த நான் வெகு சுலபமாக ஊகித்துவிட்டேன். ஐந்து பெண்களுக்குத் தகப்பனும் ஏழெட்டுக் குழந்தைகளுக்குப் பாட்டனுமாகிய நான் அதை உணர்ந்து கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அதற்கு முன், அந்த வீட்டையொட்டிய தென்னந் தோப்பில் கட்டியிருந்த கயிற்றுக் கொடியில், ஜம்பரும் வேஷ்டியும் பெரிய சட்டையும் பனியனும்தான் தொங்குமே தவிர சின்னச் சொக்காய் தொங்குவதைக் கண்டதே இல்லை. என் மனசுக்கு இது குறையாக இருந்தது. இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டதே என்று கூட எண்ணுவேன். எதற்கும் ஒரு வேளை கூடி வர வேண்டாமா?

அந்த வேளையும் வந்துவிட்டது. என் மனைவியிடம் இதைச் சொன்னபோது 'கடவுள் அவளுக்கு ஆண் குழந்தையைக் கொடுக்கட்டும்' என்று ஆசிர்வாதம் பண்ணி வைத்தாள்.

ஏழெட்டு மாதங்களுக்குப் பின்னால் அதே கொடியில் உள்ளங்கை அகலத்தில் சின்னச் சொக்காய்கள் இரண்டு மூன்று தொங்குவதைக் கண்டு ரொம்பவும் சந்தோஷப்பட்டேன். 'என்ன குழந்தை?' என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். தோப்பில் வீசிக் கொண்டிருந்த காற்று ஒரு பதிலும் சொல்லவில்லை.

அன்று என் மனத்தில் எழுந்த கேள்விக்கு விடை கிடைக்க எத்தனையோ மாதங்கள் காத்திருக்கும்படி ஆகிவிட்டது.

இத்தனைக்கும் ஒவ்வொரு நாளும் அந்தக் குழந்தையைப் பார்க்கத் தவறியதும் இல்லை. தாயாரின் மடியில் ஊனக் கண்களுக்குப் புலப்படாத ஏதோ ஓர் அரிய சம்பத்தைப் பிஞ்சு விரல்களிடையே இறுகப் பற்றியபடி நிஷ்டையில் ஆழ்ந்து கிடக்கும் நாட்களிலிருந்து

நாம் வளர்க்கும் பூங்கா
மரங்களைப் போல்
காட்டு மரங்களில்
கட்டுப்பாடு இல்லை
ஆனால்
காட்டின் கம்பீரம்
நம் பூங்காவில் இல்லை

- அப்துல் ரகுமான்

ரயிலின் ஓசை கேட்ட மாத்திரத்தில் அவசரம் அவசரமாய் உள்ளேயிருந்து முன்வாசல் வரையிலும் தவழ்ந்து வந்து தலையைச் சரித்தபடி வேடிக்கை பார்க்கும் நாட்கள் வரையிலும் எத்தனையோ தடவைகள் அந்தக் குழந்தையைப் பார்த்திருக்கிறேன். சில சமயம் தாயார் முற்றத்தில் பிச்சிப்பூ பறித்துக் கொண்டிருக்கும்போது இடுப்பில் உட்கார்ந்து தோளில் ஈற்றின் தினவைத் தீர்த்துக் கொண்டிருக்கும், ரயிலைக் கண்டால் அதற்கு என்ன சந்தோஷம்! தாயாரின் முகத்தை இரண்டு கைகளாலும் மாறிமாறி அடித்து இடுப்பிலிருந்து திமிறிக் குதிக்கும். வில்லாய் வளைந்து பின்பக்கம் சரிகிறபோது அவள் நிலைகுலைந்து தடுமாறி அப்படியே கீழே உட்கார்ந்து விடுவாள்.

என்ன அற்புதமான குழந்தை! ஒரு குறுநகையில், ஒரு கை வீச்சில் மனத்தை அள்ளிக் கொண்டு போய்விடும். தெய்வத்தின் சிருஷ்டி மகோன்னதத்தை மண்ணில் பறைசாற்ற வந்த குழந்தை போலும்! இந்த மோகன உருவத்தைப் படைத்தவன் எப்படி இதை விட்டுப் பிரிந்தான்? கடவுளைக் கலைஞன் என்றும் துறவி என்றும் கவிஞர்கள் போற்றுகிறார்களே அதன் காரணமே இதுதானோ?

பல நாட்களாக மனசை உறுத்திக் கொண்டிருந்த கேள்விக்கு ஒருநாள் விடை கிடைத்துவிட்டது.

தென்னந் தோப்பில் வெய்யிலில் சூடேற்றிய நீரில் அவள் குழந்தையைக் குளிப்பாட்டுவதை ஒருநாள் கண்டேன். என் மனைவியின் ஆசீர்வாதம் பலித்துத்தான் இருந்தது!

இரவு வீட்டுக்குச் சென்றால் ஒருநாள் கூட அந்தக் குழந்தையைப் பற்றி என்னால் பிரஸ்தாபிக்காமல் இருக்க முடியாது என்றாகிவிட்டது. நாளடைவில் 'குழந்தை குழந்தை' என்று மொட்டையாக அழைப்பதே எங்களுக்குப் பிடிக்கவில்லை. என் மூத்த பெண் அவனுக்குக் கண்ணன் என்று பெயர் வைத்தாள். அவனுடைய உண்மைப் பெயர் எங்களுக்குத் தெரியாது என்பதையே பின்னால் நாங்கள் மறந்துவிட்டோம். எங்களுக்கு அவன் கண்ணன்தான்.

கண்ணனுக்கும் எனக்கும் என்ன உறவோ? ஒரு நாள் அவனைப் பார்க்காமல் இருந்துவிட்டால் என் மனம் ஏன்



வாட வேண்டும்? காலையில் ரயிலில் புறப்படுகிற வேளையிலேயே எனக்கு ஏன் அவன் ஞாபகம் வருகிறது? உலகத்துக் குழந்தைகளையெல்லாம் எதற்காக நான் அவனுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்? அவனை ஒவ்வொரு தடவை பார்க்கிறபோதும் என்னுடன் என் மனைவி குழந்தைகள் அருகில் இல்லையே என்ற குறை உணர்ச்சி எனக்குத் தோன்றக் காரணமென்ன? தெய்வமே, எனக்கு எதற்கு இந்த விசாரமெல்லாம் என்று நொந்து கொள்வேன்.

கண்ணனுக்கு நன்றாக வால் முளைத்துவிட்டது. வாசல் கதவு திறந்திருந்தால் போதும், நொடிப் பொழுதில் அவன் முற்றத்தில் இறங்கி ஓடி விடுவான். பின்னால் பிடிக்க வரும் அவ்ன் தாயாரை அவன் ஓடஓட அடிப்பதை எத்தனையோ தடவைகள் பார்த்திருக்கிறேன். அவள் அவனைக் கையால் எட்டி எடுத்து தன்னுடைய தலைக்கு மேல் தூக்கிக் கீழே விட்டெறிவது போல் பாவனை காட்டிவிட்டு அப்படியே அவனை மார்புறத் தழுவிக் கன்னத்தில் முத்தமிடுகிற போதெல்லாம் அந்த பட்டுக் கன்னத்தின் ஸ்பரிச சுகத்தை நானும் அனுபவிப்பது போல் ஆனந்தத்தில் திளைப்பேன்.

அவன் தாயாருக்கு வீட்டு வேலைகள் இல்லையா என்ன? நாள் முழுதும் கண்ணனுடன் மல்லுக்கு நின்று கொண்டிருந்தால் சோறும் கறியும் எங்கிருந்து வரும்?கிணற்றடியில் ராட்டினத்தின் கிரீச்சென்ற ஓசை எழும்போதும், துணி துவைக்கும் சத்தம் தப்தப்பென்று கேட்கும் போதும் வாசல் கதவு சாத்தியிருக்கும். அப்போதெல்லாம் கண்ணன் முன்னறையில் சிறைப்பட்டுக் கிடக்கிறான் என்று அர்த்தம். ஆனால் ரயில் வருகிற சத்தத்தைக் கேட்டால் நாற்காலியைப் பற்றி ஏறி ஜன்னல் விளிம்பில் நின்றபடி வலது கையைக் கம்பிகளிடையே நீட்டிக்கொண்டு என்னைப் பார்த்துக் கையை விசுறுவான்.. கையை மேலும் கீழும் இழுத்துக் காட்டுவான். ரயில் கத்த வேண்டுமாம். விசையை இழுத்து ரயிலைக் கத்த வைப்பேன். அவனுக்கு உற்சாகம் கரை புரண்டுவிடும். அவன் குதிப்பதைப் பார்த்து ஜன்னலிலிருந்து உருண்டுவிடக் கூடாதே என்று நான் கவலைப்பட ஆரம்பித்து விடுவேன்.

ஒருநாள் கண்ணன் தோப்புக்குள் வந்துவிட்டான். அவனுக்கு வெகு சமீபத்தில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. 'உள்ளே போ, போ' என்று இரண்டு கைகளாலும் சைகை காட்டினேன். என்னுடைய யோசனையை அவன் கொஞ்சமேனும் மதிக்கவில்லை. 'கிடக்கிறான்கள், பயந்தாங்கொள்ளிகள்' என்று எண்ணி அலட்சியம் செய்தானோ என்னவோ? உதட்டைச் செம்பருத்தி மொக்கு மாதிரி குவித்துக் கொண்டு '<u>ஊஊ</u>' என்று கத்தினான். ரயில் கத்த வேண்டுமாம். சில மாடுகள் அவனுக்கு வெகு சமீபமாக நின்று மேய்ந்து கொண்டிருந்தன. அபாயச் சங்கிலி எல்லாம் பிரயாணிகளுக்குத்தான். மேலும் ஒரு குழந்தையை மாடு முட்டாமல் காப்பாற்றுவதற்காக ரயிலை நிறுத்தினேன் என்று சொன்னால் ரயில்வே இலாகாக்கு அந்தப் பாஷை புரியுமா என்ன? ரயில் வெகுதூரம் சென்ற பின்னும் என் பார்வை தோப்புக்குள்ளேயே தங்கி நின்றது. கண்ணன் பார்வையிலிருந்து மறையும் வேளையில் அவனுடைய தாயார் படியிறங்கி வருவதைக் கண்டு ஆசுவாசம் அடைந்தேன். ரயில் அன்று எக்களிப்போடு கூவிக்கொண்டு சென்றது.

தாயார் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததில் ஏற்பட்ட துணிச்சலோ என்னவோ, ஒருநாள் கண்ணன் என்னைப் பார்த்து மீசையை முறுக்குவது போல் பாவனைக் காட்டிக் கண்ணை உருட்டி விழித்தான். நான் பயந்து நடுங்குவது போல் நடித்தேன். அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. வயிறு குலுங்கக் கடகட வென்று சிரித்தான். அவன் தாயார் அவன் முதுகில் இலேசாகத் தட்டி முகத்தால் கண்டித்துவிட்டு என்னைப் பார்த்தாள். 'குழந்தைதானே!' என்று முணுமுணுத்தேன். நான் சொன்னது அவளுக்கு எங்கே கேட்டிருக்கும். இந்த ரயிலின் பேய்ச் சிரிப்பில்?

திருவோணப் பண்டிகை அன்று ஏற்பட்ட அனுபவத்தை ஒரு நாளும் நான் மறக்க முடியாது.

அன்று கண்ணன், அவனுடைய தாயார், தகப்பனார் மூவரும் புத்தாடைகள் அணிந்து வாசலில் இறங்கி நின்று கொண்டிருந்தார்கள். ரயிலை வரவேற்க வந்து நிற்பது போலத்தான் இருந்தது. அவர்கள் மூவரும் அங்கு நின்று கொண்டிருந்த கோலத்திலேயே பண்டிகையின் நறுமணம் நன்றாக வீசியது. ஓணம் அங்கிருந்துதான் ஆரம்பமாகிறது என்று எண்ணிக் கொண்டேன்.

அன்று கண்ணனுடைய தகப்பனாரும் என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் அவருடைய குழந்தையின் உயிர்த்தோழன் என்பதை மனைவி சொல்லத் தெரிந்து கொண்டிருக்கிறார் போலிருக்கிறது.

கண்ணன் அன்று டேப் வைத்துத் தைத்த அழகான பட்டு நிஜார் அணிந்து கொண்டு வேடிக்கையாகக் காட்சியளித்தான். நான் எங்கே அவனுடைய ஆடையலங்காரத்தைப் பார்க்காமலே சென்று விடுவேனோ என்ற எண்ணத்தில் அவனுடைய தாயார் அவனை முன் பக்கம் எடுத்து நிறுத்தினாள். கண்ணன் என்னைக் கண்டதும் தன் சின்னஞ்சிறு கைகளை



முன்னால் நீட்டினான். இரண்டு கைகளிலும் தங்கக் காப்பு ஒளி வீசியது. அவனுடைய தகப்பனார் அவனுக்கு ஆசையாகச் செய்து போட்டிருக்கிறார்.

ரயில் அவர்கள் எதிரே வந்ததும் கண்ணனின் காதருகே அவன் தாயாரின் முகம் குனிந்தது. மறு நிமிஷம் குழந்தை என்னைப் பார்த்துத் தன் சின்னஞ்சிறு கையை வாய் அருகே கொண்டு சென்று சாப்பிட வரவேண்டும் என்று சைகை காட்டி அழைத்தான். என்னையும் மீறிக்கொண்டு வந்த உற்சாகத்தில் 'வருகிறேன்' என்று வாய்விட்டுக் கத்தினேன். மனசை என்னவோ செய்தது. அப்படியே ரயிலிலிருந்து குதிக்க முடியவில்லையே என்னால்! அன்று ரயில் நன்றியுடன் ஒரு மணி நேரம் கத்தியது.

இத்தனை உறவு கொண்டாடிய பின்பும் ஒரு நாள் கூட நான் அவர்கள் வீடு தேடிச் செல்லவில்லை. கை நிறைய வாங்கிக்கொண்டு ஒருநாள் போக வேண்டுமென்று எத்தனை தடவையோ எண்ணியிருக்கிறேன். நான் போகாமலே நாட்கள் போய்க்கொண்டிருந்தன.

இதற்கு மேல் எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. என் மனதிலிருப்பதை முழுதும் சொல்ல எனக்குத் தெரியவும் தெரியாது. சொல்லவும் முடியாது. இருந்தாலும் ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன்.

ஓணம் பண்டிகைக்குப் பின் சில மாதங்கள் சென்றன. ஒருநாள் திடீரென்று கண்ணனைக் காணமுடியவில்லை. அன்றும் அதற்கு அடுத்த நாளும் அவனைப் பார்க்காமலே சென்றேன். காலையில் இஞ்சின் பெட்டிக்குள் நுழைகிறபோதே அவன் நினைவுகள் வரும். இன்றாவது அவனைக் காண முடியுமா என்று கேட்டுக்கொண்டு செல்வேன். அந்த வீட்டுக்கு ஒரு மைல் இருக்கும்போதே ரயிலை முடிந்த மட்டும் உரக்கக் கத்த வைப்பேன். ஆனால் என்றும் ஏமாற்றம்தான் காத்திருந்தது. வீட்டு வாசல் கதவு சாத்தியிருக்கும். முற்றம் வெறிச்சென்றிருக்கும். சன்னல்களில் சூன்யம் தேங்கிக் கிடக்கும்.

என் மனைவியிடம் சொன்னபோது, 'உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதோ என்னவோ, மழையும் தண்ணீருமாக இருக்கிறதே' என்று சந்தேகப்பட்டாள். அப்படியும் இருக்கலாம் என்றுதான் நானும் எண்ணினேன்.

ஒருநாள் அவர்கள் வீட்டைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கும் போது கொடியில் உலர்த்தியிருந்த ஒரு பட்டுச் சொக்காய் காற்றில் உயரப் பறந்து இஞ்சின் பெட்டிக்குள் வந்து விழுந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தேன். கண்ணனின் அழகிய பட்டுச் சொக்காய். அதைத்தான் அவன் ஓணப் பண்டிகையன்று அணிந்து கொண்டிருந்தான்.

வீட்டில் என் மனைவியும், குழந்தைகளும் ஒவ்வொருவராகச் சட்டையைப் பிரித்துப் பார்த்ததும் மடித்து வைத்துக் கொண்டதும், மீண்டும் கைவிரல் நுனியில் தூக்கி முகத்துக்கு எதிரே விரித்துப் பிரித்தபடி ரசித்துச் சிரித்ததும் உடம்பிலும் நெஞ்சிலுமாக அணைத்துக் கொண்டதும்... அப்போது அனுபவித்த இன்பத்தை என்னால் வருணிக்க முடியாது.

எனது இரண்டாவது பெண்ணுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. அவள் அந்த சட்டையில் அழகிய பூ வேலை செய்யத் தொடங்கினாள். அதே சட்டையைத் தீபாவளி அன்று கண்ணனுக்கு எங்கள் உளம் கனிந்த அன்புடன் திரும்ப அளித்து விடுவது என்றும் தீர்மானம் பண்ணிக் கொண்டோம்.

ஒரு மாதம் வேலை செய்து தனது கை வண்ணத்தை முழுதும் காட்டிச் சொக்காயில் இரண்டு



பெரிய சிவப்புப் பூக்களைப் பொறித்தாள் என் பெண்.

தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு மாத காலத்துக்கு மேல் இருந்தது. அந்த நாட்களில் கண்ணனை நான் ஒரு நாள் கூடப் பார்க்கவில்லை. நடுவில் சில நாட்கள் அந்த வீடு பூட்டிக் கிடப்பதைப் பார்த்தேன். பின்னால் பூட்டுக் கழன்று விட்டதென்றாலும் வாசல் கதவு அநேகமாகச் சாத்தப்பட்டிருக்கும்.

ஒரே ஒருநாள் கண்ணனின் தாயாரை மட்டும் பார்த்தேன். கூடைக்காரியிடம் பேரம் பேசிக்கொண்டு வாசலில் நின்றாள். உடம்பு பாதியாய் இளைத்து விட்டது. முகத்தைப் பார்க்கவே சகிக்கவில்லை. அவள் ரயிலை ஏறிட்டுப் பார்த்தாள் என்றாலும் என் பார்வையைத் தவிர்த்துவிட்டு முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். என் மனைவி சொன்னது அப்போது என் நினைவில் ஓடியது. படுக்கையோடு படுக்கையாய்க் கிடக்கும் குழந்தை ரயில் கத்துவதைக் கேட்டாவது சந்தோஷப்படட்டும் என்ற எண்ணி ரயிலை உரக்கக் கத்தச் சொன்னேன். எவ்வித சஞ்சலமும் இன்றி அன்றும் ரயில் கத்திற்று.

தீபாவளி அன்று கண்ணன் சட்டையை எடுத்துச் செல்ல நான் ரொம்பவும் தயங்கினேன். என் மனைவிதான் வற்புறுத்திக் கையிலெடுத்துக் கொடுத்தாள். அந்தச் சட்டையில்தான் அவனுடைய ஐசுவரியம் அடங்கியிருப்பதாகவும் மீண்டும் அணிந்து கொண்டுவிட்டால் அவன் உடம்பை வருத்தும் பீடைகள் பனிபோல் விலகிப் போகும் என்றும் அவள் சொன்னாள்!

வழவழப்பான காகிதத்தில் சிவப்பு ரிப்பனால் கட்டப்பட்டிருந்த பொட்டலத்தை எடுத்துச் சென்றேன். நல்லவேளை கண்ணனின் தாயார் அன்று வாசலில் நின்று கொண்டிருந்தாள். யாரையோ எதிர்பார்த்து நிற்பது போலிருந்தது. முடியாது தலைமயிர் காற்றில் கண்ணிலும் முகத்திலுமாக விழுந்து கொண்டிருந்தது. ரயிலை ஏறிட்டுப் பார்த்த அவள் முகத்தில் பிரேதக்களை தட்டியது. படி இறங்கிவரும்படி சைகை காட்டினேன். நான் வீசியெறிந்த பொட்டலம் அவள் கைக்குள் சென்று விழுந்தது.

பெட்டியின் வாசல் கைப்பிடியைப் பிடித்துத் தொங்கியவாறு நான் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றேன். அவசரம் அவசரமாய்ப் பொட்டலத்தைப் பிரித்த அவளுடைய முகம் பயங்கரமாகக் கோணியது. அப்படியே அந்தச் சட்டையில் முகத்தை மூடியபடி உள்ளே நோக்கி ஓடினாள். எனக்குப் புரிந்துவிட்டது.

படைத்து மண்ணில் விட்ட பின்புதான் அதன் அருமை தெய்வத்துக்கேப் புரிந்தது போலும். மனிதன் அதை அள்ளியெடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சுவதைப் பார்த்துப் பார்த்து எத்தனை நாட்கள் தான் அவர் பொறாமைத் தீயில் வெந்து கொண்டிருக்க முடியும் ?

அதற்கு மேல் எனக்குத் தாளவில்லை. வயசும் அனுபவமும் அவைக் கற்றுத் தந்த பாடங்களும் என்னை விட்டு அகன்று சென்றுவிட்டன. பதினாறு வயதில் சந்நியாசம் வாங்கிக்கொள்ள நான் ஆசைப்பட்டது உண்மைதான். ஆனால் இன்று நான் அழுதுவிட்டேன்.

சில நாட்களுக்கெல்லாம் பழையபடி அந்த வீட்டு வாசலில் ஒரு துருப்பிடித்த பூட்டுத் தொங்கியது. கயிற்றுக் கொடி அப்படியேதான் இருந்தது. என்றாலும் அதில் துணிகள் தொங்குவதை நான் காணவில்லை. முற்றத்தில் நின்ற பிச்சி ஆயிரம் பற்களைக் காட்டிச் சிரித்தது. அது சிரித்ததும் மொக்கு அவிழ்ந்ததும் உதிர்ந்ததும் கருகியதும் என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ராட்டின் கரகரத்த ஓசையோ, துணி துவைக்கும் சத்தமோ அதற்குப் பின்னால் என்றுமே நான் கேட்கவில்லை. இரவில் அந்த வீட்டுக்குள் அந்தகாரம் தேங்கிக் கிடந்தது.

என் மனசில் அந்தப் புண் ஆற நீண்ட நாட்கள் ஆயிற்று, என்னைப் பொறுத்த வரையில் நான் எதற்கும் ஒரு வியாக்கியானம் தேடிப்பிடித்துத் திருப்தி அடைகிறவன். பிறருக்கு அது அசட்டுத்தனமாகக் கூடப் படலாம்.

கண்ணன் எங்கும் போய் விடவில்லை என்றும், அனுபவித்த இன்பத்தை என்னால் வருணிக்க முடியாது என்றும், ரயிலின் ஆரவாரத்தில், கரகரப்பற்ற அந்த ஓசையில் அவன் கலந்து நிற்பதாகவும் சமாதானம் தேடிக்கொண்டேன். அந்த நினைப்பும் ஏதோ ஒரு விதத்தில் மனச்சாந்தியைத் தருகிறது.

அதற்குப் பின்னால் அந்த வீட்டைத் தாண்டிச் செல்லுகிற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தடவையும் ரயிலைக் கூவ வைப்பேன். அந்தக் குரலில் அவன் முகத்தையே பார்க்கிறேன்.

ரயிலுக்கு அவன் வந்ததும் தெரியாது. போனதும் தெரியாது. மாதவ பணிக்கர் தனது எருமையை இழந்ததும் கண்ணனை அவனுடைய தாய் இழந்ததும் அதற்கு ஒன்றுதான். அது இன்றும் தன் போக்கில் ஓடிய வண்ணமாய் இருக்கிறது. அதுதானே முக்கியம் ? அந்த ஞானம் என்றுதான் நமக்கு வரப்போகிறதோ ?

பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*– 'காகங்கள்' சிறுகதைகள் தொகுப்பிலிருந்து.*
*வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம்*

• • •

# பொய்கையாறு அணை

"இங்கே இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள பொய்கையாறு அணை எவ்வளவு காலமாக இந்த மாவட்ட மக்களுடைய கனவாக இருந்தது என்பதை முன்னால் பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தொடக்கத்திலே பேசிய நண்பர் ஹேமச்சந்திரன் அவர்கள் அதைக் குறிப்பிட்டார். கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கனவாக இருந்த இந்தப் பிரச்சினை இன்று நிறைவேறி இருக்கின்றது என்று குறிப்பிட்டார். ஏன் இவ்வளவு காலம்



இதில் தயக்கம் ஏற்பட்டது. தாமதம் ஏற்பட்டது என்பதை தம்பி துரைமுருகன் இங்கே விளக்கினார்.

89–ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலக் கட்டத்திலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டு இந்தப்பணி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டும்கூட இடையிலே ஐந்தாண்டு காலம் அந்தப் பணியைப் பற்றி யாருமே கவலைப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்ட காரணத்தால் இந்தத் தயக்கம், இந்தத் தாமதம் ஏற்பட்டு 96–க்குப் பிறகு எடுக்கப்பட்ட முயற்சிகளால் இன்று இந்த அணைகள், இந்த நீர்த்தேக்கங்கள் ஆகியவைகளை நாம் காணுகிறோம்.

தம்பி துரைமுருகன் இங்கே ஒரு நீண்ட பட்டியலைப் படித்தார். அவர் படித்தார் என்பதைவிட கூறினார் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் சட்டசபையிலேகூட அவர் இந்தப் பட்டியலை மனப்பாடமாக ஒப்புவிக்கக் கூடிய திறமை படைத்தவர். அந்த அளவிற்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் அவருடைய நெஞ்சிலே நிலைத்திருப்பவை, பதிவானவைகள். அதனால்தான் பொதுப்பணித் துறையைப் பொறுத்த வரையிலே எந்த ஊரிலே எந்த ஆறு இருக்கிறது, எந்த வாய்க்கால் இருக்கிறது, எந்தக் குளம் இருக்கிறது, எந்த ஏரி இருக்கிறது என்று கேட்டால் விரல் நுனியிலே என்பார்களே அதைப்போல இந்தப்புள்ளி விவரங்களை யெல்லாம் விரல் நுனியிலே வைத்திருக்கக்கூடியவர் பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன். அந்த வகையிலே அவர் இங்கே பட்டியலிட்டுக் காட்டினார்.

ஏறத்தாழ பெரிய திட்டங்களாக 69–இல் இருந்து 76 வரையிலே அன்றைக்கிருந்த இதே கழக அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 31 என்று அவர் இங்கே குறிப்பிட்டார். அந்த 31 திட்டங்கள் மூலமாகக் கிடைத்த



பாசன வசதி ஏறத்தாழ இரண்டு இலட்சம் எக்டேர். அதாவது 2 இலட்சம் எக்டேருக்கு புதிய பாசன வசதி கிடைத்தது. ஏற்கனவே இருந்த பழைய பாசன வசதி நிலங்களோடு சேர்த்து புதிதாகக் கிட்டிய பாசன வசதி இரண்டு இலட்சம் எக்டேர்.

அதன் பின்னர் 89–90–இல் போடப்பட்ட அந்தத் திட்டங்களின் வாயிலாகவும், கிட்டத்தட்ட 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் எக்டேர் நிலங்கள் பயன்பெறக்கூடிய அளவிற்குப் புதிய பாசன வசதி கிடைத்திருக்கின்றது. மொத்தத்தில் பார்த்தால் மூன்று அல்லது நான்கு இலட்சம் எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியை அளித்திருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த நான்காண்டு காலத்தை எடுத்துக் கொண்டால் 96 முதல் இதுவரையிலே உள்ள காலத்தை எடுத்துக் கொண்டால் கூட ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் ஐந்தாண்டு காலத்திலே பாசன வசதி புதிதாக செய்து கொடுத்தது 11,809 எக்டேர் நிலத்திற்காகும். ஆனால் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 96–க்குப் பிறகு நாம் நிறைவேற்றியுள்ள பாசனத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ள நிலம் 40,033 எக்டேர் என்ற இந்த ஒப்பீட்டையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கே குளங்கள், குட்டைகள், வாய்க்கால்கள் இவை பற்றியெல்லாம் பேசப்பட்டது. அவைகளையெல்லாம் நாம் சாதாரணமாகக் கருதக்கூடாது. அணைகட்டுவதென்றால் ஆற்றிலேதான் கட்டவேண்டும் என்று இல்லை. ஏரிகளையும் பயன்படுத்தி அணைகளைக் கட்டலாம், நீர்த்தேக்கங்களை அமைக்கலாம். வாய்க்கால்களையும் செம்மைப்படுத்தி அந்த நீர்த் தேக்கங்களுக்காக துணை நிற்கச் செய்யலாம்.

இப்போது தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம், ஏன் நெல்லை மாவட்டம், குமரி மாவட்டத்தைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வளவு இடங்களிலே உள்ள ஆறுகள் எல்லாம் கடந்த இரண்டாண்டு காலமாகத்தான் தூர்வாரப்பட்டு கரைகள் உயர்த்தப்பட்டு, உயர்த்தப்பட்டது மாத்திரமல்ல, காங்கிரீட் தளங்கள் என்ற வகையிலே கரைகள் எல்லாம் அமைக்கப்பட்டு அதன் காரணமாக ஏற்பட்ட பயன் என்னவென்று கேட்டால் வெறும் மணலாக இருந்தால் வரும் தண்ணீரை உறிஞ்சுகின்ற சக்தி அதிகம். இதைப் போன்ற காங்கிரீட் தளங்களாக இருந்தால் தண்ணீர் அதிகமாக உறிஞ்சப்படாமல் அது தேவைக்கு மேல் நமக்குக் கிடைக்கும் என்பதற்காகத்தான் வாய்க்கால்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆறுகள் வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் கூட நீர்ப்பாசனத் திட்டத்தினுடைய கூறுகள் தான். அந்த வகையிலேதான் நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே எல்லா திட்டங்களும் நிறைவேறி விட்டதாக நான் சொல்லமாட்டேன். இங்கேகூட நான் பேசுவதற்கு முன்பு நம்முடைய வேலாயுதம் அவர்கள் என் காதுகளிலே சொன்னார்,



மாம்பழம் மறந்துவிடாதீர்கள் என்று சொன்னார். மாம்பழம் என்பது தேர்தல் சின்னம் அல்ல. மாம்பழத்துறை ஆறு திட்டத்தை மறந்துவிடாதீர்கள் என்றார். மறக்க மாட்டோம். ஆனால் நிறைவேற்ற வேண்டிய காலம் ஒன்று வரவேண்டும். அது நிச்சயமாக வரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. ஒரேயடியாக எல்லாத் திட்டங்களையும் ஒரே நாளில் நிறைவேற்றி விட முடியாது. படிப்படியாகத்தான் நிறைவேற்ற வேண்டும். எனவே அந்தத் திட்டங்களும் எஞ்சியுள்ள எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்படுவதற்கு உங்களுடைய அன்பான ஆதரவு தொடர்ந்து இந்த அரசுக்குத் தேவை என்பதை மாத்திரம் உரைத்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன்.

*– 4.10.2000 அன்று பொய்கையாறு அணையைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை*

• • •

# நம்பியாறு அணை

“இந்தத் திட்டத்தைத் தொடங்கிய பிறகு இந்தப் பகுதிக்கு ஒன்பது முறை தான் வந்திருப்பதாக துரைமுருகன் என்னிடம் சொன்னார். ஒரு பொதுப்பணித்துறை அமைச்சர் ஒரு திட்டத்தை நிறைவேற்ற ஒன்பது முறை வந்தார் என்பதிலிருந்தே இந்தத் திட்டத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு திட்டத்திலும் அவருக்குள்ள அக்கறையை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். நீங்களும் அறிந்து கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

தம்பி துரைமுருகன் மாத்திரமல்ல, என்னுடைய அமைச்சரவையிலே இருக்கின்ற தம்பிமார்கள் அனைவரும் இதுபோன்ற அரும்பணிகள் மக்களுக்கு நடைபெற வேண்டுமென்பதற்காக தங்களுடைய சிரமத்தைப் பார்க்காமல் மக்களுக்கு நன்மைகள் பெருகினால் போதுமென்கிற அளவில் தங்களுடைய கடமைகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

சிறப்பாகப் பொதுப்பணித்துறையிலே மிகுந்த ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஓராண்டு காலத்திற்குள்ளாக பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற அந்த ஆற்றலோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தம்பி துரைமுருகனுக்கு உங்கள் சார்பாக என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

அண்மையில் மோர்தானா திட்டம் என்றதொரு திட்டத்தைத் தொடங்கிவைத்தோம். அந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களால் எந்த அளவிற்கு எதிர்பார்க்கப்பட்டது என்பதற்கு அதற்குக் கூடிய கூட்டமே சான்றாக விளங்கியது. இலட்சக்கணக்கான மக்கள் நாலாபுறத்திலிருந்து—ஏன் எட்டுத் திக்கிலுமிருந்து அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து எங்களை வாழ்த்தினார்கள், பாராட்டினார்கள். அவ்வளவு அவசியமான திட்டம் மோர்தானா திட்டம். அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோதும், அதைப் போல இந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றி தொடங்கி வைக்கின்ற இந்த நேரத்திலும் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். அளவற்ற மன நிறைவு எனக்கேற்படுகிறது.

இந்தத் திட்டங்களின் மூலமாக மக்களுக்கு என்ன பயன் என்றால், பாசனவசதி– அது தான் பெரும் பயன். எந்த மக்களுக்கென்றால், வேளாண்மைத்துறையை நம்பியிருக்கின்ற – வேளாண்மையைத் தங்களுடைய உயிர் மூச்சு என்று கருதிக் கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்தத் திட்டங்கள் வரப்பிரசாதங்களாக அமைகின்றன.

அணைக்கட்டு திட்டம் என்றால் பத்தாயிரம் ஏக்கருக்கு பாயக் கூடிய திட்டமாகத்தான் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஐந்தாயிரம் ஏக்கராவது பயனடைய வேண்டும் என்ற அளவில்தான் அந்த அணைக்கட்டுகளைத் தொடங்குவது என்று ஒரு காலத்திலே நிலைமை இருந்தது. அது மாற்றப்பட்டு இன்றைக்கு ஓடைகள், குளங்கள், குட்டைகள், ஐம்பது ஏக்கரா நிலம் பாசன வசதி பெறக்கூடிய நிலை இருந்தாலும்கூட அந்த திட்டங்களை நிறைவேற்றுவது என்ற முறையிலே இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

### மாநில திட்டக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரையின் விளைவே இன்றைய நிலை

ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கால கட்டத்தில் மத்தியிலே ஒரு திட்டக்குழு இருப்பதைப் போல மாநிலங்களிலும் திட்டக்குழு தேவை என்று கருதி மாநிலத் திட்டக்குழு ஒன்றை தமிழ்நாட்டிலே அமைத்தேன். அப்போது பெரியவர் சி.சுப்ரமணியம் அவர்கள் கூட அந்த மாநிலத் திட்டக்குழுவைப் பாராட்டி, "இது ஒரு புதிய முயற்சி, கருணாநிதி அவர்களைப் பாராட்டுகிறேன். மாநிலங்களிலே திட்டக்குழு அமையுமேயானால் மத்திய திட்டக்குழுவினுடைய வேலை குறையும். அதற்கு இந்த மாநிலத் திட்டக்குழு பயன்படும்" என்று அப்போது வாழ்த்து தெரிவித்திருந்தார்.

அந்தத் திட்டக்குழுவினுடைய தொடக்கக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரை எனக்கு நன்றாக நினைவிலே இருக்கிறது. அப்போது நான் – திட்டங்களைத் தீட்டும் பொழுது பொருளாதார ஆய்வு என்ற வகையில் இது பொருந்துமா என்றெல்லாம் பார்க்காதீர்கள் என்று சொன்னேன். இது திட்டக்குழு உறுப்பினர்களுக்கு அதிர்ச்சி – எந்த ஒரு திட்டத்தையும், பொருளாதார வடிவத்திலே பார்ப்பதுதான் திட்டம் தீட்டுகின்றவர்களின் பணி. அவர்களுக்கு அதிலேதான் அக்கறை. ஆனால் எடுத்த எடுப்பில் இந்த முதலமைச்சர் இப்படி பேசுகிறாரே என்று அதிர்ச்சி அடைந்தார்கள். பயன் எவ்வளவு என்று எண்ணாதீர்கள், ஆனால் அந்தப் பயன் யாருக்கு என்பதைப் பற்றி நினைத்துப் பாருங்கள் என்று சொன்னேன்.



இதற்காக செலவழிக்கப்படுகின்ற பணத்திற்கு இலாபம் கிடைக்கின்றதா, வருமானம் கிடைக்கிறதா, பத்து கோடி ரூபாய் செலவழித்தால் அதன் பலனாக இருபது கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கிறதா என்று பார்க்கக்கூடாது. அதைவிட நாம் பார்க்க வேண்டியது இந்த திட்டத்தை நிறைவேற்றினால் எத்தனை விவசாயிகள் இதன் மூலம் பயன் அடைவார்கள் என்ற அந்தக் கணக்கை மாத்திரம் பாருங்கள் என்று சொன்னதன் அடிப்படையிலேதான் குட்டைகள், குளங்கள், சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு தமிழகத்திலே அமைக்கப்பட்டுள்ள காட்சியை நீங்கள் காணுகிறீர்கள்.

அந்த வகையிலே இன்றைய தினம் 96–ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த நான்காண்டு காலத்திலே மாத்திரம் இங்கே தம்பி துரைமுருகன் எல்லாத் திட்டங்களையும் விவரித்துக் காட்டினார். 69 முதல் 76–ஆம் ஆண்டு வரை எத்தனை திட்டங்கள் நிறைவேற்றி இருக்கிறோம், எத்தனை அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொன்னார். அதற்குப் பிறகு 89–ஆம் ஆண்டு எவ்வளவு திட்டங்கள் தொடங்கினோம், எத்தனை திட்டங்களை முடித்தோம் என்ற புள்ளி விவரத்தையும் இங்கே சுட்டிக் காட்டினார். இந்த நான்காண்டு காலத்தில் 96–க்குப் பிறகு சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக எத்தனை விவசாயிகளுக்கு பயனளித்திருக்கிறோம் என்பதை ஒரு ஒப்பீடாக நீங்கள் பார்க்க வேண்டும்.

கடந்த ஆட்சி நடந்த ஐந்தாண்டு காலத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக பயன்பெற்ற நிலங்கள் 11,809 எக்டேர் நிலங்கள். இந்த நான்காண்டு காலத்தில் இந்த ஆட்சியிலே பாசனப் பயன் பெற்ற நிலங்கள் 40,033 எக்டேர் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வீர்களேயானால் எவ்வளவு அக்கறையோடு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை தெரிந்து கொள்ளலாம். நாம்தான் பெரிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிவிட்டோமே என்று அதோடு விட்டுவிடாமல் இன்றைக்கு இந்தத் திட்டங்கள் மூலமாக பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறக்கூடிய அந்த ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### பயன் பெறுவர் அடிப்படையில்தான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

எனவே திட்டங்கள் என்பது பொருளாதார அடிப்படையிலே வெற்றிகரமானதா என்று பார்ப்பதைவிட எத்தனை விவசாயிகளுக்குப் பயன்பட்டது என்றுதான் பார்க்க வேண்டும். இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேதான் ஆட்சியிலே திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அப்படி நிறைவேற்றப்பட்ட திட்டங்களிலே ஒன்றுதான் இந்த நம்பியாறு திட்டம்".

*– முதல்வர் கலைஞர் அவர்கள் 4.10.2000 அன்று நம்பியாறு அணையைத் திறந்து வைத்து, ஆற்றிய உரையிலிருந்து.* •

## இயற்கை என்னும் இளமை

புன்னகை பூக்கும்
பூக்கள் எல்லாம்
பொன்னகை யாகாதோ ?–வான
வெண்ணிலா எனக்கு வெள்ளி ஓடமாய்
விரைந்து வாராதோ ?

மாலை வெய்யில்
மஞ்சள் என்னைத்
தஞ்சம் அடையாதோ ?–அதி
காலை மலரோ
கண்ணில் வந்து
ஜாலம் புரியாதோ ?

கொட்டும் அருவி
கும்மியடித்துக்
கூடிக் குலவாதோ ?–அங்கே
வெட்டும் மின்னல்
வேடிக்கைக் காட்ட
என்னை அழைக்காதோ ?

மானும் மயிலும்
மனத்துள் வந்து
மேடை அமைக்காதோ ?–அங்கே
வான வீதியில்
வலம் வரும் பறவை
வந்து தழுவாதோ ?

பச்சைக் கொடியும்
பசுமைப் புல்லும்
பார்வை யாகாதோ ?–மலை
உச்சியில் என்னைத்
தென்றல் வந்து
தழுவிச் செல்லாதோ ?

செயற்கை யோடு
சேர்ந்திசை பாடிச்
சோர்ந்தே போகாமல்,
இயற்கை என்னும்
இளமை இனிமை
எனக்கும் வாராதோ!

• பி.வி. கிரி



## தமிழ்நாடு முழுவதும் தெருவிளக்கு, குடிநீர் வசதி முழுமையாகச் செய்துதர அரசின் முனைப்பான நடவடிக்கைகள்

சிறு கிராமம் முதல் மாநகராட்சி வரையுள்ள அனைத்து இடங்களிலும் தெருவிளக்கு மற்றும் குடிநீர் வசதி செய்து தந்து, அவற்றை நன்முறையில் பராமரிக்க தமிழக அரசு பல்வேறு தீவிர நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைகளின் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் தொடர்ந்து எரிவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு காலாண்டிலும் இப்பணியினை மேற் கொள்ளும் துறைகளின் பிரதிநிதிகள், எல்லா தெருவிளக்கு களையும் பார்வையிட்டு, அவை அனைத்தும் நன்முறையில் எரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார். இதே முறையில் குடிநீர் வழங்கும் ஆழ்துளைக் கிணறுகள், விசைப்பம்புகள் மற்றும் கைப்பம்புகள் பழுதின்றி தொடர்ந்து இயங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தார்.

மேலும் இதனைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக, மூத்த அரசு அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்ப வேண்டும் என முதலமைச்சர் கலைஞர் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என்ற முறையில், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றாளர்களாக நியமிக்கப் பட்டனர். இந்தப் பற்றாளர்கள் சனவரி, ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களில் ஆண்டு சிறப்பாய்வினை, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய துறை அலுவலர்களுடன் மேற்கொண்டு, அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரைகளின்படி, ஜூலை திங்கள் வரையில் அரசு மேற்கொண்டுள்ள இந்த சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக 98.4 சதவீத தெருவிளக்குகளும், 98.4 சதவீத கைப்பம்புகளும், 98.5 சதவீத விசைப்பம்புகளும் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

### தெரு விளக்குகள்

ஊராட்சிகளில் 10,64,280 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் 2,94,769 தெருவிளக்குகள், நகராட்சிகளில் 2,55,999 தெருவிளக்குகள், மாநகராட்சிகளில் 2,11,330 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில், ஊராட்சிகளில் 10,46,359 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் 2,92,614 தெருவிளக்குகள், நகராட்சிகளில் 2,51,554 தெருவிளக்குகள், மாநகராட்சிகளில் 2,06,720 தெருவிளக்குகள் நல்ல நிலையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 18,26,378 தெருவிளக்குகளில் 98.4 சதவீதம் தெருவிளக்குகள் சரியாக எரிகின்றன. எரியாமல் உள்ள 29,131 தெருவிளக்குகளையும் எரியச் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**செய்திச்சாரம்**

### குடிநீர் வழங்கல்

குடிநீர் வழங்கும் சாதனங்களைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 1,75,246 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 24,118 கைப்பம்புகள், நகராட்சிகளில் 14,875 கைப்பம்புகள், மாநகராட்சிகளில்(சென்னை நீங்கலாக) 5,514 கைப்பம்புகள் உள்ளன. இதில், ஊராட்சிகளில் 1,72,422 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 23,936 கைப்பம்புகள், நகராட்சிகளில் 14,543 கைப்பம்புகள், சென்னை நீங்கலாக உள்ள மற்றைய மாநகராட்சி களில்5,338 கைப்பம்புகள் நன்முறையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 2,19,753 கைப்பம்புகளில் 2,16,239 கைப்பம்புகள் அதாவது 98.4 சதவீத கைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில் இயங்காமல் உள்ள 3,514 கைப்பம்புகளையும் சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசைப்பம்புகளைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 40,583 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,989 விசைப்பம்புகள். நகராட்சிகளில் 1,476 விசைப்பம்புகள், சென்னை நீங்கலாக உள்ள மற்றைய மாநகராட்சிகளில் 1,042 விசைப் பம்புகள் உள்ளன. ஊராட்சிகளில் 39,944 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,963 விசைப்பம்புகள், நகராட்சி களில் 1,445 விசைப்பம்புகள், சென்னை நீங்கலாக உள்ள மாநகராட்சிகளில் 1,029 விசைப் பம்புகள் நன்கு இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப் பட்டுள்ள 48,090 விசைப் பம்புகளில் 47,381 விசைப் பம்புகள் அதாவது 98.5 சதவீத விசைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில், இயங்காமல் உள்ள 709 விசைப்பம்புகளையும் சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.





ஊரகக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய 28 மாவட்டங்களிலும் சட்டத்திற்குப் புறம்பாக 3,24,443 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டது. இதில், தொழில்நுட்ப ரீதியாக 2,19,639 இணைப்புகள் வரன்முறை செய்யப்பட வேண்டும். சட்டத்திற்குப் புறம்பாக உள்ள 1,04,804 இணைப்புகள் துண்டிக்கப்பட வேண்டும். இதில், இதுவரை, 4,618 இணைப்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. மேலும், 41,729 இணைப்புகள் வரன்முறை செய்யப்பட்டு விட்டன. புதிதாக 1,28,519 குடிநீர் இணைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

அரசு தொடர்ந்து எடுத்துவரும் இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளினால், உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் நூறு சதவீதம் எரிவதற்கும், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் அனைத்தையும் செம்மையாக இயங்கிடச் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளன.

• • •

### கட்டடம் இல்லாத 960 தொடக்கப்பள்ளிகளுக்கு கட்டட வசதிகள்

**– முதலமைச்சர் ஆணை**

*ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதமரின் கிராம வளர்ச்சித் திட்டங்களின் கீழ், இந்த ஆண்டில் முப்பது கோடியே முப்பது இலட்சம் ரூபாய்ச் செலவில், 960 தொடக்கப்பள்ளிகளில், ஒவ்வொரு பள்ளியிலும், இரண்டு அறைகள், கழிப்பறை வசதி மற்றும் தாழ்வாரத்துடனான கட்டடங்கள் கட்டித்தர முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.*

*ஒவ்வொரு பள்ளிக்கும் இரண்டு இலட்சத்து பதின்மூன்றாயிரம் ரூபாய்ச் செலவில் கட்டடமும், அறுபத்திரண்டாயிரம் ரூபாய்ச் செலவில் தாழ்வாரமும் மற்றும் தலா இருபதாயிரம் ரூபாய்ச் செலவில் இரண்டு கழிப்பறைகளும் ஆக மொத்தம் மூன்று இலட்சத்து பதினையாயிரம் ரூபாய்ச் செலவில் இந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 12 கோடியே 30 இலட்சம் ரூபாயும், பிரதமரின் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 18 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 30 கோடியே 30 இலட்சம் ரூபாய்ச் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.*

### 6,900 தொகுப்பு வீடுகள் கட்ட

**முதலமைச்சர் ஆணை**

*சட்டமன்றத்தில் அறிவித்தபடி, நடப்பு ஆண்டில் எழுபது கோடி ரூபாய்ச் செலவில் நாற்பத்தேழாயிரம் தொகுப்பு வீடுகள் கட்டும் பணிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன.*

*அத்துடன் கூடுதலாக, 6,900 தொகுப்பு வீடுகள் 24 கோடி ரூபாய்ச் செலவில் கட்டும் பணிகளைப் பிரதமரின் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.*

*இத்திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டுவதுடன், குடியிருப்புகளில் உள்ள உட்புறச் சாலைகள், குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு ஆகிய அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.*





தர்பூசணிப் பழங்கள் மேல்
கோபமில்லை
கீற்றுச் சிவப்புக் கூட
அழகாகத்தான் இருக்கிறது.
இதை இப்போது
குவித்திருக்கும் மரத்தடியில்தான்
வெள்ளைக் களிமண்ணில்
சிலைகளை வார்த்துக் கொண்டிருக்கும்
அந்தக் கணவனும் மனைவியும் குழந்தையும்
சித்திரம்போல
உறங்கிக்கொண்டிருந்த
கயிற்றுக் கட்டில் கிடந்தது.
அதை மனதிலிருந்து
அகற்றுவதில்தான் சிரமம் எனக்கு.
அயர்ந்துறங்கும் மனிதர்களை
ஒருபோதும் ஈடுசெய்யாது
அடுக்கிவைத்த
தர்பூசணிப் பழங்கள்.

**– கல்யாண்ஜி,'**
*அந்நியமற்ற நதி நூலிலிருந்து.*



# மறுமலர்ச்சி காணும் மலைவாழ் மக்கள்



இயற்கை வளங்கள் செறிந்து குன்றுகளால் சூழப்பட்டு மாங்கனிக்குப் பெயர் பெற்றதும் எஃகுத் தொழிலில் சிறப்புற்று விளங்குவதும் சேலம் மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் எங்கு நோக்கினும் வளம்மிக்க வனப்பகுதிகள் காட்சியளிக்கும். குளிர்தென்றல் காற்று உடலுக்கு உற்சாகமூட்டும். சேலம் மாவட்டத்தில் வனத்துறை பலப் புதுமையான பயன்மிக்க திட்டங்களைச் செயலாக்கப் படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களால் மலைவாழ் மக்கள் மன மாற்றம் பெற்றுத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றம் பல கண்டு வருகின்றனர்.



வனத்துறையினர் முதல் நடவடிக்கையாக மலைவாழ் மக்களின் முரட்டுத்தனத்தை நீக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த மென்மையான வழிமுறைகளைக் கையாண்டனர். விலங்குகளை முரட்டுத்தனமாக வேட்டையாடுவது, மரங்களை வெட்டுவது போன்ற சமூகவிரோத செயல்களிலிருந்து இவர்களை விடுவிக்க தகுந்தத் திட்டங்களை வனத்துறையினர் உருவாக்கினார்கள்.

வனத்துறையினர் இத்திட்டங்களைப் பல கிராமங்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தினர். சேலம் மாவட்டத்தில் தீவிர காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 12 மலைக் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.6 கோடியே 35 இலட்சம் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம மக்களிடத்திலேயே 300 முதல் 500 எக்டேர் நிலப்பரப்பை ஒப்படைத்து அதில் உற்பத்தியாகும் நெல்லிக்காய், புளி, பயிர் வகைகளை அவர்களே விற்பனை செய்யும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இம்மக்களுக்கு நிலங்கள் வழங்க ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டில் இதுபோன்று 45 கிராமங்களுக்கு வனப்பகுதிகள் வழங்கப்பட்டு உள்ளது. தவிர, இதில் வரும் வருவாயைக் கொண்டு, அந்தந்த கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அவர்களே செய்துகொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம மக்கள் சுயமாகத் தொழில் தொடங்க மலைப்பகுதிகளில் 52 மகளிர் சுயநிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டு இவற்றின் மூலம் வனம் சாரா தொழில்களான நெசவு, தையல், கயிறு திரித்தல், துணி மிதியடி நெய்தல், பாய் பின்னுதல் போன்ற தொழில்கள் செய்வதற்குப் பயிற்சியும் உதவியும் அளிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை இவர்களுக்கு ரூ.65 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு உள்ளது. கடனைப் பெற்றவர்கள் ஒழுங்காகச் சங்கங்களுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும், இப்பகுதி மக்கள் விவசாயம் செய்ய உதவும் வகையில் மலை ஓடைகளில் தடுப்பாணைகள், கசிவு நீர்க் குட்டைகள், கட்டித் தரப்படுகின்றன. தடுப்பாணைகளில் மீன் வளர்ப்பதன் மூலமும் கிராமத்திற்கு வருவாய் கிடைக்கிறது. மருத்துவ செடிகள் பயிரிடுவதற்கும் வனத்துறை உதவி செய்கிறது.

வனத்துறையின் மூலம் மலைவாழ் மக்கள் மனநிலை மாற்றப்பட்டு, இன்று அவர்கள் அத்திட்டங்களின் பயனை அனுபவித்து வருகிறார்கள். முன்பு இருந்த தங்கள் வாழ்க்கை நிலையையும் தற்போது அவர்கள் வாழும் நிலையையும் எடுத்துரைத்தனர். டேனிஷ்பேட்டை என்ற கிராமம் புளிமலை அடிவாரத்தில் இயற்கை கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் முக்கியத் தொழில் மரம் வெட்டி அவற்றைக் கடத்திச் சென்று விற்பனை செய்வதாகும். ஆனால் தற்போது அவர்கள் அத்தொழிலை அடியோடு விட்டு மரம் வளர்க்கும் மனப்பக்குவத்தை பெற்றுள்ளனர். அவ்வூர் ஒரு பெரியவர் கூறும் போது, "இப்பொழுது நாங்கள் திருட்டுத்தனமாக மரம் வெட்டுவதில்லை. அதற்குப் பதிலாக மரம் வெட்டிய பகுதிகளில் மரங்களை வளர்க்கிறோம்" என்று கூறினார்.

இக்கிராமப் பெண்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவதோடு தொழிற்பயிற்சியிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்களுக்கு இலவசமாக தையற் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. படித்துக் கொண்டே ஓய்வு நேரங்களில் தொழிற்பயிற்சிப் பெறும் அனிதா என்ற மாணவி கூறும் போது, "நான் +2 படித்து வருகிறேன். விடுமுறையில் தையற் பயிற்சி பழகி இப்போது துணிகள்



தைக்க பழகியுள்ளேன். இதன் மூலம் வரும் வருமானம் எனது படிப்புச் செலவுக்கு உதவுகிறது. இதற்கு முன் விடுமுறை நாட்களில் பொழுதை வெறுமனே கழித்து வந்தோம். ஆனால் தற்போது படிக்கும் காலத்திலே ஒரு தொழில் கற்றுக் கொண்டோம்" என்று பெருமையாகக் கூறினார்.

மேலும் ரேவதி என்ற மாணவி "நான் ஓய்வுநேரங்களில் தென்னங்கீற்று பின்னுகிறேன். இதன் மூலம் ரூ.10 முதல் ரூ.20 வரை ஒரு நாளைக்குக் கூலி கிடைக்கிறது. இத்தொகை என் படிப்புச் செலவை ஓரளவுக்குக் குறைக்க உதவுவதாகக் கூறுகிறார்."

பெண்களுக்குக் கால்மிதியடிகள் தயாரிக்கும் பயிற்சியும் அளித்து வருகிறது. பயிற்சி பெற்ற லதா கூறும் போது, "எங்களுக்கு இம்மிதியடிகள் தயாரிக்க நிதி வசதியும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.30 முதல் ரூ.40 வரை வருமானம் கிடைக்கிறது. இதனால் நாங்கள் மாதத்திற்கு ஒரு கணிசமான தொகையையும் எங்களால் சம்பாதிக்க இயலுகிறது" என்று பெருமிதத்துடன் கூறினார்.

இவ்வூரில் வனத்துறை சார்பில் நெல் மற்றும் மாவு அரவைமில் அமைத்துத் தந்துள்ளதால் பெண்கள் வெளியூர்களுக்குச் சென்று மாவு அரைக்கும் பிரச்சினை தீர்ந்துள்ளதாக பெண்கள் மகிழ்ச்சியுடன் கூறினார்கள். முன்பெல்லாம் விவசாயம் செய்யப் போதிய தண்ணீர் வசதி இல்லை. ஆனால், வனத்துறை தற்போது 'செக் டேம்' கட்டியுள்ளதால் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயம் நன்றாக செய்ய முடிவதாகவும் பயனடைந்த விவசாயி ஒருவர் கூறினார்.

இதற்கு முன்பு தீராத பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு கட்டி எங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்கி தற்போது மறுமலர்ச்சிக் கண்டு வருகிறோம். இதற்கெல்லாம் காரணம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியே. அவர் தோற்றுவித்த மகளிர் குழுக்கள் மூலம் எங்கள் குலப் பெண்களெல்லாம் நல்ல தொழிலைக் கற்றுக் கொண்டு வருமானமும் ஈட்டுகின்றனர். இது எங்களின் குடும்பப் பாரத்திற்கு மிகவும் உதவியாக உள்ளது என்கிறார் சாமியப்பன் என்கிற கிராமவாசி.

தவிர, சேலம் மாவட்டத்தில் கண்ணப்பாடி என்ற மலைகிராமம் ஒன்றுள்ளது. இக்கிராமத்தில் கந்து வட்டிக்காரர்கள் புற்றீசல் போல் பெருகியுள்ளனர். இப்பகுதி வாழ் மக்கள் பெரும்பாலும் எஸ்டேட் தொழிலாளர்கள். இவர்கள் தங்கள் வறுமையின் காரணமாகக் கந்துவட்டிக் காரர்களிடம் ரூ.100க்கு ரூ.12.50 வட்டிக்கு வாங்குகிறார்கள். இவர்கள் வருமானம் கந்து வட்டியை அடைக்கவே போதவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் வேதனையுடன் வாழ்க்கையை நடத்தினர். இதனை அறிந்த வனத்துறையினர் இக்கிராமத்தை தத்து எடுத்து பல அடிப்படை வசதிகளைச் செய்து தந்ததோடு மட்டுமல்லாமல், கந்து வட்டிக்காரர்களிடமிருந்து இக்கிராமத்தை மீட்க நடவடிக்கை மேற்கொண்டனர். இதற்காக தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்ட மகளிர் சுயநிதிக் குழுக்களை அமைத்து அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கினார்கள். இதனால் இவர்கள் தற்போது சேமிப்புத் தொடங்கி கந்து வட்டிக்காரர்களிடமிருந்து கொஞ்ச கொஞ்சமாக மீண்டு வருகின்றனர். இதனால் இவர்களின் நீண்டகால கந்துவட்டிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டதாக இவ்வூர் பெரியவர்கள் பெருமூச்சு விடுகின்றனர்.



'கந்துவட்டி' என்னும் கொடிய அரக்கனை விரைவில் இப்பகுதியை விட்டு விரட்டி அடிப்பதே ஒவ்வொருவரின் குறிக்கோள்' எனப் பெருமைப்பட கூறினர்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் திட்டத்தினால் மலைவாழ் மக்களின் வாழ்வு மலர்ந்துள்ளது. ஆண்டாண்டு காலமாக தீராத பிரச்சினை தற்போது தீர்ந்து அடிப்படை வசதிகளைப் பெற்று, இன்று வளமான வாழ்வை பெற்றுள்ளனர்.

*– மு. நா. கிருட்டிணசாமி,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், சேலம்.*

★ ★ ★



# இராணுவத்தில் சேர...

**- வீ. சங்கரன்**

"வாழ்க்கையில அது ஒரு மறக்க முடியாத நாளு, அன்னிக்குதா நா ஒரு எதிரி ஊடுருவல்காரன கொன்னேன்" இது இளம் இராணுவ வீரர் முத்துராஜின் பெருமிதம். தனது சொந்த ஊரான தருமபுரி மாவட்டம் பூசாரிப்பட்டிக்கு விடுமுறையில் வந்திருந்தார் அவர். கார்கில் போரில் இவரும் பங்கேற்று சாகஸம் புரிந்திருக்கிறார். அதைப் பற்றிய பேச்சுதான் இது. பூசாரிப்பட்டி கிராமத்து இளைஞர்கள் வாய்க்கால் வேப்பமரத்தடியில் தினந்தோறும் கூடிப் பேசுவது வழக்கம். விடுமுறையில் வந்திருக்கும் முத்துராஜும் அங்கு வருவார். அப்போது தனது சாதனையையும் தனது படை பிரிவைச் சேர்ந்த மற்ற வீரர்களின் சாகஸங்களையும் அவர் கதை கதையாகக் கூறுவார். இதைக் கேட்டு முத்துராஜின் நண்பர்கள் மெய்சிலிர்த்துப் போவார்கள். அதோடு இராணுவத்தில் எப்படியாவது சேர்ந்துவிட வேண்டுமென்ற ஆசையும் அவர்களிடம் ஒட்டிக்கொண்டது. தங்களையும் இராணுவத்தில் சேர்த்து விடுமாறு முத்துராஜை அவர்கள் நச்சரிக்க ஆரம்பித்தார்கள்.

இராணுவத்தில் சேருவதற்கு முன்பு முத்துராஜ் முரடனாகவும், அப்பாவியாகவும் இருந்தான். இராணுவப் பயிற்சியும் வாழ்க்கை முறையும் அவனை வெகுவாக மாற்றிவிட்டது. தற்போது அவனிடம், பண்பு, வீரம், அறிவு, மரியாதை ஆகியவையெல்லாம் செறிந்து கிடக்கின்றன. அவனுக்குப் பெண்தர நான் நீ என்று பலபேர் தற்போது போட்டிப் போடுகிறார்கள். இதில் வியப்பேதும் இல்லை. கார்கில் போரின் போது நமது வீரர்கள் செய்த சாகஸங்கள் பத்திரிக்கைகளில் வெளிவந்தவுடன் நாடெங்கிலும் இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகங்களுக்கு இளைஞர்கள் படையெடுக்கத் துவங்கிவிட்டார்கள்.

உண்மையில், சாகஸ செயல்கள் புரிவதற்கு இராணுவம் தரும் வாய்ப்புகளைப் போன்று வேறு எந்த தொழிலும் தர முடியாது. பனி படர்ந்த சியாச்சென் சிகரமானாலும் சரி, மணலாகப் பரவிக் கிடக்கும் ஜெய்சால்மர் பாலைவனப் பகுதியானாலும் சரி, வடகிழக்குப் பகுதியிலுள்ள அடர்ந்த காடுகளானாலும் சரி, இலைப் பச்சை சீருடையிலிருக்கும் வீரனின் பணி எப்போதுமே சாகஸங்கள் நிறைந்த தாகத்தான் இருக்கும்.

செய்யவேண்டிய பணிகள், ஈடுபட வேண்டிய பயிற்சிகள் ஆகியவை எப்போதுமே இராணுவ வீரனை ஆயத்த நிலையிலேயே வைத்திருக்கும். உடலும், உள்ளமும் உறுதியானவையாக இருக்கும். மேலும் வீரரின் அறிவுத் திறனை மேம்படுத்த அவருக்குத் தொடர்ந்து கல்வி புகட்டப்படுகிறது. திறமைகளை வெளிக்கொணரும் வகையில், விளையாட்டு போட்டிகளிலும், கலாச்சார நிகழ்ச்சிகளிலும் அவர் ஈடுபடுத்தப்படுகிறார்.

இராணுவம் வேலைவாய்ப்பை மட்டும் அளிப்பதில்லை. வீரராக பணியாற்றுபவர்களுக்கு



கௌரவமிக்க அந்தஸ்தையும் அது வழங்குகிறது. இராணுவத்தில் சேருபவர்கள் பெருமிதத்துடன் தாய்நாட்டிற்குச் சேவை செய்கிறார்கள். அரசாங்கத்தில் பணிபுரிபவர்கள் அரசு ஊழியர் என்றே குறிப்பிடப்படுகின்றனர். ஆனால், இராணுவ வீரர்கள் எப்போதுமே வீரர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். இராணுவ வீரர்களுக்கு நல்ல ஊதியம் தரப்படுகிறது. சொல்லப்போனால், அரசு ஊழியர்களின் சம்பளத்தைவிட இராணுவ வீரர்களின் சம்பளம் கவர்ச்சியானது. ஐந்தாவது சம்பளக் கமிஷனும் அவர்களுக்குக் கணிசமான அளவில் சலுகைகளை வழங்கியுள்ளது. இராணுவத்தில் சேருபவருக்கு முன்னேற்றம் காண பல வாய்ப்புகள் தரப்படுகின்றன. பதவி உயர்வு பல உண்டு. அதுமட்டுமல்ல, தலைநகரங்களிலும் ஆட்சேர்ப்பு முகாம்கள் நடத்தப் படுகின்றன. தமிழகத்திலிருந்து மட்டும் ஆண்டிற்கு சுமார் 6,000 இளைஞர்கள் இராணுவத்தில் பணியமர்த்தப் படுகிறார்கள்.

இராணுவத்தில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் ஆட்சேர்ப்பு முகாம்களுக்கு நேரடியாக வந்துவிட வேண்டும். வயது, கல்வித் தகுதி, குடியுரிமை ஆகியவற்றை நிரூபிக்க அவற்றின் சான்றிதழ்களை அவசியம் கொண்டு வரவேண்டும். உயரம், எடை, மார்பளவு ஆகியவை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அளவுகளுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் அவசியம். இவைகள் அனைத்தும் விவரமாக



பணி ஓய்வுக்கு பிறகு வேறு வேலை பார்க்கவோ சுயமாகத் தொழில் புரியவோ அவருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இளம் வயதிலேயே ஓய்வுபெறும் இராணுவ வீரனை, திறமையும் தன்னம்பிக்கையும் கொண்ட மனிதனாக மாற்றுகிறது நமது இராணுவம்.

### ஆட்சேர்ப்பு முகாம்கள்

இராணுவத்திற்கு பெரும்பாலும் இரண்டு நிலைகளில் ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது. கீழ் மட்டத்தில், அநேகமாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஆட்சேர்ப்பு முகாம்கள் மூலம் இராணுவ வீரர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். தமிழ்நாட்டில், சென்னை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் ஆட்சேர்ப்பு அலுவலகங்கள் உள்ளன. இந்த நகரங்களில் மட்டுமல்லாமல், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களிலுள்ள இளைஞர்கள் பயன்பெறும் வகையில், மாவட்ட நாளிதழ்களில் செய்தியாக வெளிவரும். ஆட்சேர்ப்பு முகாம்கள் நடப்பதற்கு ஒருசில நாட்களுக்கு முன்பு இந்த செய்தி வெளியாகும். முகாமிற்கு எந்தெந்த மாவட்டத்து இளைஞர்கள் அழைக்கப்படுகிறார்களோ அந்தந்த மாவட்டத்து இளைஞர்கள் மட்டுமே அந்த குறிப்பிட்ட முகாமிற்கு வரமுடியும் என்பதை மறக்கலாகாது.

முகாம் நடைபெறும் நாளில், இராணுவத்தில் சேர விருப்பம் உள்ளவர்கள் அதிகாலையிலேயே முகாமிற்கு வந்துவிட வேண்டும். முகாமின்போது உயரம், எடை, மார்பளவு போன்றவை பரிசோதித்து, வந்திருப்பவர் இராணுவத்தில் சேரத்தகுதியான நபரா என்பது கண்டறியப்படும். பின்னர், வயது, கல்வித்தகுதி, குடியுரிமை போன்றவற்றைக் குறிப்பிடும் சான்றிதழ்கள், சரி பார்க்கப்படும். ஓட்டம், தூரம் தாண்டுதல் போன்றவற்றில் அவரின் திறமையும் அறியப்படும். ஆறு நிமிடங்களில் ஒரு மைல் தூரம் ஓட வேண்டும். குறிப்பிட்ட





அகலமுடைய குழியையும் அவர் தாண்டியாக வேண்டும். இதில் வெற்றி பெறுபவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இதிலும் வெற்றி பெறுபவர்கள் அந்தமாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று பொதுத் தேர்வையும் எழுத வேண்டும். இதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு இராணுவத்திற்கு வந்து சேரச்சொல்லி, அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படும்.

### ஊதியமும் சலுகைகளும்

புதிதாக இராணுவத்தில் சேருபவர்களுக்கு படை மையங்கள் ஒதுக்கப்படும். பின்னர் தங்களுக் குரிய படை மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, அவரவர் படைப்பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள். இராணுவத்தில் சேர்ந்தவுடன் மாத ஊதியமாக சுமார் ரூ.5,000 கிடைக்கும். அத்துடன் நகர ஈட்டுப்படி, களப்படி போன்ற சில படிகளும் உண்டு. உணவு, தங்கும் வசதி, மருத்துவ தேவை போன்ற வற்றை இராணுவமே முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. மேலும், குறைந்த விலையில் பொருள்களை வாங்க கேண்டீன் வசதியும் அவர்களுக்குக் கிடைக்கும். இராணுவ வீரர்களுக்கு, வருடத்திற்கு 60 நாட்கள் விடுமுறை உண்டு. அத்துடன், 30 நாட்கள் வரை சிறுவிடுப்பும் எடுத்துக் கொள்ளலாம். சொந்த ஊருக்குச் சென்றுவர வருடத்திற்கு ஒருமுறை இலவச இரயில் பயணச்சலுகை வழங்கப் படுகிறது.



ஒன்றுக்கு மேற்பட்ட இத்தகைய பயணங்களுக்கு, இரயில் கட்டணங் களில் 50 சதவீத சலுகையும் உண்டு. குழுக் காப்பீட்டுத் திட்டம், வீடு கட்டவும், வாகனம் வாங்கவும் கடனுதவி போன்ற வசதிகளும் கிடைக்கும். குழந்தைகளின் கல்விக் கட்டணமாக செலவழிக்கப்பட்ட தொகையும் ஈடுசெய்யப்படுகிறது. சொல்லப்போனால், இராணுவ வீரரின் ஒவ்வொரு தேவையையும் அரசே பூர்த்தி செய்துவிடுகிறது. எனவே தனது சம்பளத்தின் பெரும்பகுதியை, இராணுவ வீரர் சேமிக்க முடிகிறது. வேறெங்காவது இதே சம்பளத்தைத் தரும் பணியில் இருந்தால், நிச்சயம் அவரால் இவ்வளவு சேமிக்க இயலாது.

இராணுவத்தில் சேருபவர் பணிக்காலம் முழுவதும் திறமைசாலியாக விளங்கினால், அவர் சுபேதார் மேஜராகக் கூட பதவி உயர்வு பெற முடியும். இந்தப் பதவி தான் அதிகாரிகள் அல்லாத பதவிகளில் மிக உயர்ந்த பதவியாகும். அதிகாரிகள் மட்டத்தில் மூன்றாம் நிலையிலுள்ள பதவியான மேஜர் பதவியை பெற்ற வீரர்களும் உண்டு.

இராணுவ வீரர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓய்வு பெறுகின்றனர். விருப்ப ஓய்விலும் செல்கிறார்கள். ஓய்வுபெறும் வீரர்களுக்குப் பின்னர் வேலை தேடிக்கொள்ளவும், சொந்தத் தொழில் புரியவும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி தரப்படுகிறது. சென்னையிலுள்ள ஐ.டி.ஐ. ஒன்றில் அண்மையில் பிளம்பர் தொழிற்பயிற்சி முடித்தார் இராணுவ வீரர் ஆனந்தன். "ஓய்வு பெறுவது பற்றிய கவலை எனக்கில்லை; ஓய்வுபெறும் நாளை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்" என்கிறார் அவர். தன்னம்பிக்கை மிகுந்த மனிதராக அவர் காணப் படுகிறார். கிடைக்கவிருக்கும் ஓய்வூதியமும், பின்னர் பிளம்பராக சுயதொழில் புரியும்போது கிடைக்கும் வருமானமுமே தனது வாழ்க்கையை வளமான தாக்கும்" என்கிறார் அவர்.

தாய்நாட்டிற்குச் சேவை செய்வதற்கு இராணுவப் பணியை விட மாற்று ஏதும் கிடையாது. எனவே, நீ என்ன சொல் கிறாய்? இளைஞனே! இப்பொழுதே ஒரு முடிவு எடு. இராணுவத்தில் சேருவதற்கான தகுதிகள் உன்னிடம் இருக்கின்றன என்று நீ கருதினால், உனது ஊர் அருகாமையில் நடைபெறப் போகும் இராணுவ ஆட்சேர்ப்பு முகாம் குறித்த அறிவிப்பை எதிர்பார்த்திரு. இராணுவத்தில் சேர்ந்தவுடன், உனது வாழ்க்கை அர்த்தமும் வளமும் கொண்டதாக மாறிவிடும்.

*– பத்திரிகைத் தகவல் அலுவலகம்*

# களவழி நாற்பதில் உவமைத் திறன்

□ குடந்தை டி.எஸ்.பாலு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று 'களவழி நாற்பது'. இது, புறப்பொருள் பற்றிய 40 வெண்பாக்களைக் கொண்டது.

சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானுடன், 'கழுமலம்' என்னுமிடத்தில் போரிட்டுத் தோற்றபோது, அவனைச் சிறை மீட்கப் பாடியதே இந்த நூல்.

கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை, மணியாகத் தொகுத்துக் 'களவழி நாற்பது' என்னும் இந்த நூலை இயற்றியவர் பொய்கையார்.

கவிதையின் ஒரு கூறாகிய 'உவமை நலன்' இந்நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம் :



**குருதி ஏற்படுத்திய குளம்**

சேரனுக்கும், சோழனுக்கும் போர் நடைபெறுகின்றது. வீரர்களுக்கு வீரத்தையும் எழுச்சியையும் தம் ஒலியால் ஏற்படுத்திய முரசங்கள், மேற்போர்வை கிழிந்து ஒரு பக்கமாகக் கிடக்கின்றன. அந்த முரசங்களின் மேல், 'பிறை கவ்வி மலை நடந்ததைப் போன்ற, ஒரு யானை விழுந்து விடுகின்றது.

போர்க்களம் முழுவதும் குருதியால் நனைந்து, பெருங்குளமாகவே மாறிவிடுகிறது. செங்குருதி, இங்கும் அங்குமென அலை பாய்ந்து, முரசத்தின் வழியாகச் செல்லுகிறது.

இந்தக் காட்சி எப்படி இருக்கின்றது தெரியுமா ? கார்காலத்தில் மழை பெய்த பிறகு, செங்குளத்தினது கரையின் கீழ் உள்ள மதகுகள், நீர் உமிழ்தலைப் போல வித்தியாசமாக இருப்பதாகப் பொய்கையார் உவமைப்படுத்திப் பாடுகின்றார்.

*"ஞாட்பினுள் எஞ்சிய, ஞாலஞ்சேர் யானைக்கீழ்*
*போர்ப்பு இல், இடி முரசின் ஊடு, போம் ஒண் குருதி,*
*கார்ப்பெயல் பெய்தபின், செங்குளக் கோட்டுக்கீழ்*
*நீர்த்தூம்பு, நீர் உமிழ்வ போன்ற புனல் நாடன்*
*ஆர்த்த மரட்ட களத்து"*

– இதுவே பொய்கையார் தீட்டிக் காட்டிய அந்தப் பாடல் வரிகள்.

**பயன் உவமை**

'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர், உவமையை வினை, பயன், மெய், உரு என நான்காகப் பிரித்துக் கூறினார். தொல்காப்பியர் வழிநின்று, 'களவழி நாற்பது' நூலில், பொய்கையார் படைத்துக் காட்டும் பயன் பற்றிய உவமை ஒன்றைக் காண்போம்.

போர்க்களமெங்கும், குருதியானது வெள்ளமெனப் பாய்ந்தது. அது, பெருங்கடலைப் போலத் தோன்றியது. கருங்கடலையே கண்டு பழகிய கண்கள், அந்தச் செங்கடலைக் கண்டு சிவந்தன.

கடலிலே உள்ள தோணியையும் அலையையும் போலக், குருதி வெள்ளத்திலே பிணங்கள் மிதந்தன; அலைகள் பாய்ந்தன. மலைகள் உருட்டுகின்ற வெள்ளத்தைப் போலப் பரந்த குருதி வெள்ளம், கொல்லப்பட்ட யானைகளை இழுத்துச் சென்றன.

இப்படிப்பட்ட குருதி வெள்ளத்தில், தளர்ச்சி அடைந்த வீரர்கள் எவ்வாறு எழுந்து நடக்கிறார்கள் என்பதை நுட்பமாக ஒரு உவமை வழி விளக்குகிறார் பொய்கையார்.

போர்க்களத்தில், நடக்கும் இடமெல்லாம் குருதியால் வழுக்குகிறது. , வீரர்கள், தம் கையில் வேல் வைத்திருந்தாலாவது அதைக்கொண்டு ஊன்றுகோலாகப் பயன்படுத்துவர். அதுவோ கையில் இல்லை. வாளாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தலாம். அதுவும் கரத்தில் இல்லை.

எனவே வீரர்கள் என்ன செய்தார்கள். களத்தில் இறந்து கிடக்கும் யானைகளின் கொம்புகளை ஊன்றுகோலாகக் கொண்டு எழுந்தனராம்.

*"ஒழுக்கும் குருதி உழக்கித் தளர்வார்*
*இழுக்கும் களிற்றுக் கோடு, ஊன்றி எழுவார்..."*

என்று இரண்டே வரிகளில், இதனை நமக்குப் புரிய வைக்கின்றார் பொய்கையார்.

வீரர்கள் தளர்ந்து விழும் இடமெல்லாம், யானைகளின் கொம்புகள் கிடந்தன என்றால், போர்க்களத்தில் எத்தனை யானைகள் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று சிந்திக்க வைக்கவும் அல்லவா இந்த உவமை நமக்கு உதவுகிறது.

**உரு தரும் உவமை**

'உரு' என்பதன் அடிப்படையிலும், உவமைகள் தோன்றும் எனக்கூறிய தொல்காப்பியத்தின் இலக்கணத்திற்கு, இலக்கியமாகத் திகழ்கிறது 'களவழி நாற்பது'.

உரு பற்றிய ஒரு உவமையைப் பாருங்கள்... போர்க்களத்தில், இறந்துபோன வீரர்களின் உடல்கள் விழுந்து கிடக்கின்றன. அந்த உடல்களில், வேல் பாய்ந்த இடங்களில் எல்லாம் குருதி ஒழுகிக் கொண்டிருக்கிறது.

## சென்னையின் தாகம் தீர்க்கும் திருவள்ளூர் மாவட்டம்

சென்னைக்கு நீர் வழங்கும் புழல் ஏரி, பூண்டி, சோழவரம் ஏரி, செங்குன்றம் ஏரி ஆகியவை திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளன.

சென்னை மாநகர மக்களுக்கு நாள் ஒன்றிற்கு 250 மில்லியன் லிட்டர் குடிநீர் திருவள்ளூர் மாவட்ட நீர் தேக்கங்களில் இருந்து வழங்கப்படுகிறது. பூண்டி நீர் தேக்கத்தில் இருந்து புழல் ஏரிக்கு வந்தடையும் நீரை சுத்திகரிக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் குழாய்கள் மூலம் மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது.

இது தவிர, தாமரைப்பாக்கம், பூண்டி, மீஞ்சூர் போன்ற பல்வேறு இடங்களில் 75 ஆழ்துளை கிணறுகள் மூலமாக 100 மில்லியன் லிட்டர் நீர் நாள் ஒன்றிற்கு எடுக்கப்படுகிறது. இந்த நீரில் பெரும்பகுதி மணலி, எண்ணூர் பகுதிகளில் அமைந்துள்ள பெரிய தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. மீதமுள்ள நீரும் சென்னை மாநகர மக்களுக்கு குடிநீராக வழங்கப்படுகிறது. ●

அதைக் காகங்கள் உண்டு களிக்கின்றன. இதனால், காகங்கள் தம் இயல்பான நிறத்தை இழந்தனவாம். சிச்சிலிக் குருவி போன்ற வாயினையும், செம்போத்து போன்ற நிறத்தையும் அவை பெற்றதாக, உரு பற்றிய வண்ண உவமையாகப் படைத்துக் காட்டுகிறார் பொய்கையார்.

உவமைகளில் மற்றொரு வகை 'இல்பொருள் உவமை' என்பதாகும். உலகில், இல்லாத ஒரு பொருளை உவமையாகக் கூறுவது எவ்வகை உவமையாகும். திருக்குறளில் ஓர் எடுத்துக்காட்டு.

'களவழி நாற்பது' நூலிலும் இவ்வகை உவமைகளைக் காணலாம். மலை கலங்கப் பாயும் மலை போல், யானைகள் பாய்தலால், அவற்றின் மீது கட்டப்பெற்ற கொடிகள் மேலே எழுந்து வானத்தைத் துடைப்பது போன்ற செய்கையை ஒத்திருந்ததாகப் பாடுகிறார் பொய்கையார்.

*"மலை கலங்கப் பாயும் மலைபோல் நிலைகொள்ளாக்*
*குஞ்சரம் பாயக் கொடியெழுந்து – பொங்குடி*
*வானம் துடைப்பன போன்ற புனல்நாடன்*
*மேவாரை அட்ட களத்து"*

என்பது அப்பாடல்.



*"அன்பு அகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரம் தளிர்த் தற்று"*

வலிய பாலை நிலத்தில், வற்றல் மரம் தளிர்க்குமா...? தளிர்க்காது. அதைப் போன்றதே நெஞ்சில் இரக்கமில்லாதார் வாழும் வாழ்க்கையும் என்று இப்பொருள் உவமையைத் தம் குறளில் அமைத்துக் காட்டினார் வள்ளுவர்.

இதைப்போல், இன்னொரு பாடல். போர்க் களத்தில், வீரர்களின் கைகள் வெட்டப்பட்டு, அங்கங்கே கிடக்கின்றன. அவற்றைப் பருந்துகள் கவ்விக்கொண்டு செல்லுகின்றன. இந்தக் காட்சி, ஐந்து தலை பாம்பைக் கவர்ந்து செல்லும் கருடனைப் போல இருந்ததாக உவமிக்கிறார் பொய்கையார்.

இதயத்திற்கு இன்பம் தரும் இவ்வகை இலக்கியங்களைக் கற்போம்; மகிழ்வோம். ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927



பதிவு எண். M.8676 LICENCE No. TN/MS(C)/PP






# தமிழரசு

நவம்பர் 1 - 30, 2000 ரூ. 10/-







# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஐப்பசி–கார்த்திகை
நவம்பர் 1–30, 2000
மலர் : 32     இதழ் : 9 & 10
விலை ரூ.10


இந்த இதழில்...

**மக்கள் சாசனம்**


- சமூக நலத்துறை ........ 1
- வருவாய்த்துறை ........ 7
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ........ 11
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ........ 12
- உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்–3வது திட்டம் ........ 14
- சமூகப் பாதுகாப்புத்துறை ........ 17
- ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை ........ 18
- தேசிய சமூக நலத்திட்டம் ........ 28
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ........ 29
- ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் ........ 47
- பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ........ 51
- பதிவுத்துறை ........ 55

- தொழில் வணிகத்துறை ........ 59
- சிறுதொழில் துறை ........ 62
- பள்ளிக்கல்வித் துறை ........ 64
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ........ 66
- பட்டு வளர்ச்சித்துறை ........ 71
- கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் ........ 77
- ஊரக வளர்ச்சித்துறை ........ 78
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை ........ 81
- குடும்ப நலத்துறை ........ 82
- வேளாண்மைத்துறை ........ 83
- வேளாண்மைப் பொறியியல் துறை ........ 92


## திருக்குறள்

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.**

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...


**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.


நாள் : 24–11–2000

## முன்னுரை

''ஒளிவு மறைவற்ற நிர்வாகம்'' எனும் அடிப்படையில், அரசால் அறிவிக்கப்படுகின்ற திட்டங்களை, பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்வதற்கு, அவர்களுக்கு உரிமையுண்டு. அதற்காக இவ்வரசின் சார்பில் தனியே சட்டமியற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் குறித்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக, ஒவ்வொரு துறையும் மக்கள் சாசனம் வெளியிட வேண்டும் என அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், கிராமப்புறங்களிலுள்ள மக்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புறப் பெண்கள் அதிக அளவில் அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்த விவரங்களை அறிந்து, தகுதியுடையவர்கள் அவ்வுதவிகளைப் பெறுவது என்பது ''சட்டபூர்வ உரிமை'' என்ற விழிப்புணர்ச்சியை உருவாக்கிடும் வகையில் அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்தும், அவைகளைப் பெற எவ்வகையில், யாரை அணுக வேண்டுமென்பது குறித்தும், மாநில அளவிலான தொகுப்பாக இம் ''மக்கள் சாசனம்'' தமிழரசின் மூலம் வெளியிடப்படுகிறது.

இதனை, மகளிர் சுயஉதவிக் குழுக்களிலும், இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களிலும் குழுவாக அமர்ந்து படித்துக் கேட்டு அரசின் திட்டங்களைப் புரிந்து தகுதியுள்ளவர்கள் எவ்விதக் குறுக்கீடுமின்றி நலத்திட்ட உதவிகளைப் பெற்றுப் பயனடைந்திட விரும்புகிறேன்.

எல்லா அய்யன் திருவள்ளுவர் படிப்பகங்களிலும், ஊராட்சிகளிலும் இந்தக் கையேடு இடம் பெறும். அரசு நலத்திட்டங்களைக் குறித்த விவரங்களை அறிய விரும்புகிறவர்கள் இவற்றைப் படித்துத் திட்டங்களை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

தமிழக அரசு இந்த நான்கரை ஆண்டு காலத்தில் எண்ணற்ற புதிய திட்டங்களையும், ஏற்கெனவே இருந்த திட்டங்களில் மாற்றங்களையும் ஏற்படுத்தி மக்கள் வாழ்வு செழிக்க மகத்தான உதவிகளைப் புரிந்து வருகிறது. அவற்றை எளிதில் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துச் சொல்லும் இந்த ''மக்கள் சாசனம்'' அனைத்துத் தரப்பினர்க்கும் பயன்படும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

(மு. கருணாநிதி)

நலத்திட்டத்தின் பெயர் :

**1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.**

தகுதி :

★ மணப் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.

★ பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருத்தல் வேண்டும். மணமகள் 10–ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினராக இருந்தால் 5–ஆம் வகுப்பு பயின்றிருக்க வேண்டும்.

★ திருமணம் நடைபெறுவதற்கு 45 நாட்களுக்கு முன் விண்ணப்பம் உரிய படிவத்தில் அனுப்பிட வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு பெண் மட்டுமே நிதி உதவி பெறலாம்.




★ வயது, படிப்பு, வருமானம் ஆகியவற்றிற்குச் சான்றுகள் இணைக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

★ ரூ.10,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ சமூக நல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூக நல அலுவலர்

★ மாநகராட்சி ஆணையர்

**2. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்**

தகுதி :

★ திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள் உதவி கோரி விண்ணப்பிக்கலாம்.

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

★ தம்பதியரில் எவரேனும் ஒருவர் ஆதிதிராவிடராக இருப்பின் தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.10,000, காசோலை ரூ.10,000 மொத்தம் ரூ.20,000

★ முன்னேறிய சமுதாயத்தினர் பின் தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினரை மணந்தவர் தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.7,000, காசோலை ரூ.3,000 மொத்தம் ரூ.10,000.



**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ சமூகநல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூகநல அலுவலர்

★ மாநகராட்சி ஆணையர்





**3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண நிதியுதவித் திட்டம்**

தகுதி :

★ முதல் கணவர் இறந்த 30 வயதுக்குள் உள்ள கைம்பெண்ணாக இருத்தல் வேண்டும்.

★ 2–வது கணவருக்கு முதல் திருமணமாக இருக்க வேண்டும். முதல் கணவருடன் திருமணம் செய்ததற்கான சான்று இணைக்க வேண்டும்.

★ திருமணம் முடிந்த 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

ரூ.10,000 (ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000 காசோலை)



**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ சமூக நல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூக நல அலுவலர்

**4. ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டம்**

தகுதி :

★ கணவரை இழந்த கைம்பெண்ணின் மகளின் திருமணத்திற்கு வழங்கப்படுகிறது. மணமகள் வயது 18–30–க்குள் இருக்க வேண்டும்.

★ மணப்பெண்ணுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட சகோதரர் இருக்கக்கூடாது.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

★ காசோலையாக ரூ.7,000 அல்லது கேட்பு வரைவோலை

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூகநல அலுவலர்.

**5. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டம்**

தகுதி :

★ மணப்பெண் தாய், தந்தையற்ற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.

★ மணப்பெண்ணின் வயது 20–30க்குள் இருக்க வேண்டும்.

★ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

★ காசோலையாக ரூ.7,000 அல்லது கேட்பு வரைவோலை

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூகநல அலுவலர்.

### 6. சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**தகுதி :**

★ தாய் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தவராக இருக்க வேண்டும்.

★ தாயின் வயது 40க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருத்தல் வேண்டும். ஆண் குழந்தை இருக்கக்கூடாது.

★ திட்டத்தில் சேரும் நாளில் இரண்டாவது குழந்தைக்கு 3 வயது முடிந்திருக்கக்கூடாது.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

★ ஒரு பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அப்பெண் குழந்தைக்கு ரூ.3,000–ம், இரண்டு பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் இரண்டு பெண் குழந்தைகளின் பெயரிலும்



தலா ரூ.1,500ம், 5 ஆண்டு நிரந்தர வைப்புத்தொகை இரசீதாக அக்குழந்தைகள் பெயரில் வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் வரை ஐந்தாண்டுக்கு ஒரு முறை கட்டாயமாக இந்த இரசீதைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் போது வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்
மகளிர் ஊர்நல அலுவலர்

★ நகராட்சி ஆணையர்
வட்டார ஊட்டச்சத்து திட்ட அலுவலர்

★ மாநகராட்சி கோட்ட உதவி ஆணையர் / மாவட்ட சமூகநல அலுவலர்.
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்

### 7. சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

**தகுதி :**

★ 40 வயது வரை உள்ள கைம்பெண்கள் / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் / வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

★ தையற் கலை தெரிந்திருக்க வேண்டும்.

★ வருட வருமானம் ரூ.12,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

ஒரு தையல் இயந்திரம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

★ மாநகராட்சி ஆணையர் / மாவட்ட சமூகநல அலுவலர்.



சமூக நலத்துறை



### 8. விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

**தகுதி :**

★ தந்தையை இழந்து பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை வழங்கப்படுகிறது.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். வேறு எந்தத் திட்டத்தின் கீழும் இலவச பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம் பெற்று இருக்கக் கூடாது.

**அளிக்கப்படும் உதவி :**

பாடப் புத்தகங்கள், இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஒன்றிய ஆணையர், சமூகநல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

### 9. சத்தியா அம்மையார் நினைவு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்

**தகுதி :**

★ தாய், தந்தையற்ற குழந்தைகள் / நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் ஆயுள் கைதிகளின் குழந்தைகள்

★ வருமான வரம்பு ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்

★ 5 வயது முதல் 18 வயது வரை உள்ள சிறுமியர்கள்

★ 5 வயது முதல் 10 வயது வரையுள்ள சிறுவர்கள்

**அளிக்கப்படும் உதவி :**

இலவச உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி முதலியன

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்ட சமூகநல அலுவலர்

★ காப்பகக் கண்காணிப்பாளர்

### 10. தேசிய மகப்பேறு நிதியுதவித் திட்டம்

★ 19 வயது முடிந்திருக்க வேண்டும்.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.



★ மகப்பேறு காலத்தில் ஏழு மாதம் முடிந்ததும் விண்ணப்பிக்க வேண்டும்.

★ உயிருடன் பிறக்கும் முதல் இரண்டு குழந்தைகள்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ஒரு பயனாளிக்கு ரூ.500 வழங்கப்படுகிறது. இத்தொகை முழுவதும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கு பண அஞ்சல் மூலம் பணம் அனுப்பப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பயிற்றுநர். வட்டார ஊட்டச்சத்து திட்ட அலுவலகம் / கிராம ஊட்டச் சத்து மையப் பணியாளர் / சுகாதார செவிலியர்

★ குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்/ அங்கன்வாடி பணியாளர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

★ மாநகராட்சிப் பகுதிகளில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள்

## 11. அரசுப் பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதி

**தகுதி :**

★ வேலைக்குச் செல்லும் பெண்கள் மட்டும் இங்கு தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

★ மகளிரின் மாத வருமானம் பெருநகரப் பகுதிகளில் ரூ.7,500க்கு மிகாமலும், ஏனைய பகுதிகளில் ரூ.7,000க்கு மிகாமலும் இருந்திட வேண்டும்.



**அளிக்கப்படும் உதவி :**

இதற்கான வாடகை உள்ளுறைவாளர்களின் மாத வருமானத்தின் அடிப்படையில் பின்வரும் விவரப்படி வசூலிக்கப்படும். மாத வருமானம் வாடகை ரூ.1,000க்கு ரூ.50, ரூ.1,001 முதல் ரூ.2,500 வரை ரூ.75, ரூ.2,500க்கு மேல் ரூ.100. உள்ளுறைவாளர்களின் உணவுக் கட்டணம் / மின் கட்டணம் ஆகியவை உறைவாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்து வசூலிக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்ட சமூகநல அலுவலர்

★ கண்காணிப்பாளர், பணிபுரியும் பெண்கள் விடுதி

## 12. இந்திய அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**தகுதி :**

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.11,400க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

★ 15.8.1997 அன்றோ அதற்குப் பிறகோ பிறந்த பெண் குழந்தைகள் மட்டும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

★ குடும்பத்தில் 15-8-1997க்கு முன் பிறந்த ஆண்/பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை கணக்கில் கொள்வதில்லை.

★ குழந்தையின் பிறப்புச் சான்று மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வருமானச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

★ உதவித்தொகை ரூ.500 தாயிடம் வழங்கப்படும்.

★ இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பெண் குழந்தை பள்ளிக்கு செல்லும் தருவாயில் வருடாந்திர ஸ்காலர்சிப் தொகை வழங்கப்படும். 1 முதல் 3ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு ஆண்டும் ரூ.300-ம் 4ஆம் வகுப்பில் ரூ.500. 5ஆம் வகுப்பில் ரூ.600-ம் 6 மற்றும் 7ஆம் வகுப்பில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.700-ம், 8ஆம் வகுப்பில் ரூ.800-ம், 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் ஆண்டொன்றுக்கு ரூ.1000 வழங்கப்படும். அஞ்சலகப் பொதுக் கணக்கில்





வருடாந்திர வட்டி சதவிகிதம் 12%ல் இத்தொகை முதலீடு செய்யப்படுகிறது. படிப்படியாக (Cumulative) வட்டி ஈட்டப்படும். இத்தொகையானது பெண்ணின் 18ஆம் வயது முடிவில் ரூ.18,778 முழுத்தொகையாக வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பயிற்றுநர். வட்டார ஊட்டச்சத்து திட்ட அலுவலகம் / கிராம ஊட்டச் சத்து மையப் பணியாளர் / சுகாதார செவிலியர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

★ மாநகராட்சிப் பகுதிகளில் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் திட்டம்-1, திட்டம்-2 மற்றும் மாநகராட்சி கோட்ட அலுவலர்.

## 13. தத்தெடுத்தல்

**தகுதி :**

★ தத்தெடுக்கும் பெற்றோர்களின் மொத்த வயது 90க்குள்ளும் அதில் ஒருவர் 45 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

★ வயதான தம்பதியினருக்கு வயது அதிகமுள்ள குழந்தைகள் தான் தத்து கொடுக்கப்படும்.



★ தனிப்பட்ட ஆணோ / பெண்ணோ அல்லது விதவையோ அல்லது முறையாக விவாகரத்து செய்தவர் தத்து எடுக்க விரும்பினால் அவர்களின் வயது 30-ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும். மற்றும் தத்து எடுக்கும் பெற்றோருக்கும் குழந்தைக்கும் குறைந்தது 21 வயது வித்தியாசம் இருக்க வேண்டும்.

★ வருமான வரம்பு - ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்க்கத் தேவையான வருமானம்.

**அளிக்கப்படும் உதவி :**

தத்தெடுத்துக் கொள்ளும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு சிறப்பு தத்து விடுப்பு அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தத்துக்குழு, சமூக நல ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-5.

★ சம்பந்தப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலர், தன்னார்வத் தொண்டு நிறுவனம் (Voluntary Co-ordinating Agency - VCA) 11, 3வது பிரதான சாலை, செனாய் நகர், சென்னை-600 030.

★ உரிமம் பெற்ற 17 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்.

## 14. அரசு சேவை இல்லங்கள்

**தகுதி :**

★ விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு யாருமற்ற பெண்கள்.

★ வருட வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

★ வயது 19-40க்குள் இருக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி, பாடப்புத்தகம், நோட்டுப்புத்தகம், சீருடை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தாம்பரம், உதவி இயக்குநர் மாவட்ட சமூகநல அலுவலர் - மாவட்டங்களில் கண்காணிப்பாளர், இதர சேவை இல்லங்கள், சமூகநல விரிவாக்க அலுவலர், மகளிர் ஊர்நல அலுவலர், ஊராட்சி ஒன்றியப் பகுதிகள்

★ ★ ★

நலத்திட்டங்கள் பெயர் :

### 1. விபத்து ஆறுதல் நிதியுதவித் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

அடையாளம் தெரியாத வாகனங்களால் அடிபட்டு இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் ரூ.25,000–ம், கடுமையாக காயம் அடைந்தவர்களுக்கு ரூ.12,500–ம் வழங்கப்படும். விபத்து நடந்தவுடன் அருகிலுள்ள காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அந்நகலுடன் 6 மாதங்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் கோட்டாட்சியர்

### 2. ஆதரவற்ற விதவை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. வயது வரம்பு இல்லை. ஆதரவற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

### 3. ஊனமுற்றோர் உதவித் தொகை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 45 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.



ஆதரவற்றவர்களாகவும், எந்தவித வருமானம் இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

### 4. ஆதரவற்ற விவசாயக் கூலி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

60 வயது அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

ஆதரவற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

### 5. கணவரால் கைவிடப்பட்டவர்கள்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.200 வழங்கப்படுகிறது.



30 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டும்.

கணவனைப் பிரிந்து 5 ஆண்டுக் காலம் ஆகி இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)





### 6. இலவச வீட்டுமனைப் பட்டா

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மனைப் பட்டா மாநகராட்சியில் 1 சென்ட், நகராட்சி எல்லைக்கு உட்பட்டு இருப்பின் 1½ சென்ட், கிராமப்புறங்களில் 3 சென்ட் மனையும் பட்டா வழங்கப்படுகிறது. இதில் தடை விதிக்கப்பட்ட நீர்வழிப்புறம்போக்கு, மைதானம் மற்றும் மேய்ச்சல் தரை, புறம்போக்குகளில் மட்டும் மனைப் பட்டா வழங்கப்பட மாட்டாது. முன்னுரிமைப் பட்டியல்படி மனைப் பட்டா வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு மனைப் பட்டா கோரப்படும் கிராமத்திலோ அல்லது வேறு இடங்களிலோ சொந்தமாக வீடு இருக்கக்கூடாது.

குடும்பத்தின் ஆண்டு வருமானம் கிராமப்பகுதிகளில் ரூ.16,000க்குள், நகரப்பகுதிகளில் ரூ.24,000ஆக இருத்தல் வேண்டும்.

மனைப் பட்டா கோரும் நபர் மனைப் பட்டா கோரும் கிராமத்திலேயே குடியிருக்க வேண்டும்.

மனுதாரருக்குச் சொந்தமாக நில புலங்கள் இருத்தல் கூடாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் வட்டாட்சியர்கள்

### 7. இலவச நிலப்பட்டா

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நிலப் பட்டா கோரும் நபருக்குச் சொந்தமாக நஞ்சை நிலங்களோ, புஞ்சை நிலங்களோ இருத்தல் கூடாது.

ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருத்தல் வேண்டும்.

நஞ்சை 1½ ஏக்கர் அல்லது புஞ்சை 3 ஏக்கர் நிலம் வழங்கப்படும்.

நிலப் பட்டா கோரும் நபர் குடும்பத் தலைவராக இருத்தல் வேண்டும். மேலும் நிலப் பட்டா கோரும் நபர் உள்ளூரில் குடியிருப்பவராகவும், மேற்காணும் நிலத்தில் விவசாயம் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.

நீர்நிலை, புறம்போக்கு, மயானம், மேய்க்கால், மலைப் பகுதிகளில் தடையாணை உள்ளது. முன்னுரிமைப் பட்டியல்படி மனைப் பட்டா வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் வட்டாட்சியர்கள்

### 8. நலிந்தோர் நலத்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை ரூ.10,000 1.8.98 முதல் வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால் அக்குடும்பத்திற்கு நிவாரணம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இறந்தவர், குடும்பத்தில் பொருளீட்டும் நபராக இருத்தல் வேண்டும்.

புஞ்சை 5.00 ஏக்கரும், நஞ்சையாக இருந்தால் 2.50 ஏக்கரும் மிகாமலும் இருந்தால் நிவாரணம் பெறத் தகுதியுடையவராவார்.

அக்குடும்பத்தில் 18 வயது நிரம்பிய ஆடவர் இருப்பின் இச்சலுகை பெற இயலாது.

பொருளீட்டும் நபர் இறந்து 6 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

வயது வரம்பு 18க்கு மேல் 65க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)



## 9. தொழிலாளர் விபத்து உதவித்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

தொழிலாளர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்துக்களால் உயிரிழப்போர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம், நிவாரணத் தொகை ரூ.15,000, இறந்த நபர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடுதல்.

இத்திட்டத்திற்கு வருமான வரம்பு கிடையாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 10. முதலமைச்சரின் வாகன விபத்து உதவித்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

அடையாளம் தெரிந்த வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களில் உயிர் இழக்கும் நபர்களின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை ரூ.10,000. விபத்தில் நிரந்தரமாக இரு கண்களை இழக்க நேரிட்டால் ரூ.6,000 நிவாரணமும், விபத்தில் ஒரு கண் அல்லது ஒரு கை இழக்க நேரிட்டால் ரூ.4,000 நிவாரணமும் வழங்கப்படும். ஏனைய சிறு காயங்களுக்கு ரூ.500 நிவாரணம் வழங்கப்படும். நிபந்தனை ஏதும் இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் கோட்டாட்சியர்

## 11. அடையாளம் தெரியாத வாகனங்களால் விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடும் இனங்களில் நிவாரணம் (SOLATIUM FUND)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

ரூ.25,000 வழங்கப்படும். கடுமையாக காயம் அடைந்தவர்களுக்கு ரூ.12,500ம் வழங்கப்படும். விபத்து நடந்தவுடன் அருகிலுள்ள காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அந்நகலுடன் 6 மாதங்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

நிபந்தனை ஏதுமில்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் கோட்டாட்சியர்



## 12. முதியோர் உதவித்தொகை (பொது)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

65 வயது முடிந்திருக்க வேண்டும்.

ஆதரவற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 13. முதியோர் ஓய்வூதியத் திட்டம் (Old Age Pension)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஓய்வூதியம் ரூ.200 வழங்கப்படுகிறது. 65 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். ஆதரவற்ற, எந்தவித வருமானமும் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 14. நலிவுற்ற கலைஞர் நிதியுதவி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.500 வழங்கப்படுகிறது. கலைஞராக இருத்தல் வேண்டும்.





58 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.

புகழ்பெற்ற கலைஞரிடம் சான்று பெற்று இருக்க வேண்டும்.

ஆண்டு வருமானம் ரூ.6,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், சென்னை–28.

## 15. மொழிக்காவலர் நிதியுதவி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மாதம் ஓய்வூதியம் ரூ.3,000 வழங்கப்படுகிறது.

தமிழ்மொழி மற்றும் பண்பாடு ஆகியவற்றில் ஈடுபாடு இருத்தல் வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றி இருக்க வேண்டும்.

வருமான வரம்பு இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை.



## 16. அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் நிதியுதவி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.500 வழங்கப்படுகிறது.

58 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.

தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறப்பாகத் தொண்டாற்றி இருக்க வேண்டும்.

வருமான வரம்பு மாத வருவாய் ரூ.400–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆட்சியர் மூலமாக இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை

## 17. மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.3,000 மற்றும் மருத்துவப்படி ரூ.15 வழங்கப்படுகிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 1942–1944இல் கலந்து கொண்டிருத்தல் வேண்டும்.

மூன்று வாரம் சிறைத் தண்டனைப் பெற்றிருக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்டத்தில் தலைமறைவாக இருந்து செயல்பட்டமைக்கு ஆதாரபூர்வ ஆவணங்களான நீதிமன்ற ஆணை, கைது வாரண்ட், முதல் தகவல் அறிக்கை நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

படிவம் 1–இல் அரசு செயலாளர், பொதுத் (அரசியல்) துறை, சென்னைக்கு அனுப்ப வேண்டும்.

* * *

**நலத்திட்டத்தின் பெயர் :**

## 1. பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்

**தகுதி :**

★ கிராமப்புற ஏழைப் பெண்கள்

**அளிக்கப்படும் உதவி :**

★ பெண்களைச் சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் மேம்படுத்தும் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்டத் திட்ட அலுவலர், பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்ட செயலாக்க அலுவலகம்

## 2. வேலைவாய்ப்பு பயிற்சி திட்டங்கள்

1. தமிழ்நாடு அரசுத் திட்டம் – வாழ்க்கைத் தொழில் கல்வி (VOCATIONAL TRAINING)
2. இந்திய அரசுத் திட்டங்கள் (NORAD/STEP) பன்னாட்டு மேம்பாட்டிற்கான நார்வே நாட்டு முகமை / பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கான உதவித் திட்டம்

**தகுதி :**

★ சுயஉதவிக் குழு உறுப்பினர்கள்

★ கிராமப்புற, நகர்ப்புற ஏழைப் பெண்கள்



**அளிக்கப்படும் உதவி :**

★ குறிப்பிட்ட தொழிலில் இலவசப் பயிற்சி

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திட்ட மேலாண்மை அலுவலகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 600032.

★ மாவட்ட திட்ட அலுவலர், பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்ட செயலாக்க அலுவலகம்

## 3. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

**தகுதி :**

★ கிராமப்புற, நகர்ப்புறப் பெண்கள்

**அளிக்கப்படும் உதவி :**

★ தொழில் முனைவோர்களுக்கு இலவசப் பயிற்சி அளிப்பது

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திட்ட மேலாண்மை அலுவலகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 600032.

## 4. மகளிர் மனமகிழ் மன்றங்கள்

**தகுதி :**

சுயஉதவிக் குழு உறுப்பினர்கள்

**அளிக்கப்படும் உதவி :**

சென்னை நீங்கலாக, 28 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழுக்களில் போதிய அடிப்படை வசதி பெறுகின்ற குழுக்கள் தேர்வு செய்து, இந்த மையங்களுக்கு தலா ரூ.4,200 வீதம் விளையாட்டுப் பொருட்கள் வாங்கவும் மற்றும் மைய பராமரிப்புச் செலவு மேற்கொள்ளவும் அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர்:**

★ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திட்ட மேலாண்மை அலுவலகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 600032

★ மாவட்டங்களில் திட்ட அலுவலர், பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்ட செயலாக்க அலுவலகம்

★ ★ ★





**நலத்திட்டத்தின் பெயர் :**

## 1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

★ முதல் பிரிவு கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்

★ பிறந்தது முதல் 6 வயது குழந்தைகள்

★ கர்ப்பம் தரித்த மூன்றாம் மாதமே பதிவு செய்து கர்ப்ப கால பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1. கர்ப்பிணிகளை, குழந்தைகளை எடை எடுத்தல்
2. கர்ப்பிணிகளுக்கு சிறுநீர் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, வயிற்றுப் பரிசோதனை செய்தல்
3. ரணஜன்னி தடுப்பூசி போடுதல்

**ஊட்டச்சத்து உணவு பெறுபவர்கள் :**

அ. கர்ப்பிணிகள்

ஆ. பாலூட்டும் தாய்மார்கள்

இ. 6–36 மாத நலிவுற்ற குழந்தைகள் (ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள்)

**நலப்பணிகள் :**

**அனைத்து கர்ப்பிணிகளுக்கும் கர்ப்பிணிகளை இணை உணவிற்குத் தேர்வு செய்யக் காரணங்கள் :**

1. கர்ப்பம் தரித்த முதல் மாத எடை 42 கிலோவுக்குக் கீழ்
2. தாயின் வயது 18க்குக் கீழ்
3. தாய்க்கு இது முதல் கர்ப்பம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பம்
4. இரத்த சோகை
5. வீக்கம்
6. இரத்தப்போக்கு
7. நீரில் உப்பு
8. நான்கு மாதத்திற்கு பிறகு எடை கூடவில்லை எனில்
9. தாய்க்கு முந்தைய கர்ப்ப. காலத்தில் வலிப்பு
10. கால் வீக்கம்
11. குறைமாத பிரசவம்
12. கருச்சிதைவு
13. இரட்டைக் குழந்தை
14. பிறந்த குழந்தையின் எடை 2.500 கி.கி.க்கு கீழ்
15. ஏழு நாட்களுக்குள் குழந்தை இறப்பு போன்றவை ஏற்பட்டு இருந்தால்

**அணுக வேண்டிய அலுவலர்**

ஊட்டச்சத்துப் பணியாளர் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர் சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர்

## 2. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

பாலூட்டும் தாய்மார்கள் ( குழந்தை பிறந்ததிலிருந்து குழந்தைக்கு 6 மாதம் வரை உள்ளவர்கள் – பாலூட்டும் தாய்மார்கள்)



**நலப்பணிகள் :**

சுகாதாரப் பணியாளரால் தேர்வு செய்யப்பட்ட தாய்மார்களுக்கு 6–ஆம் மாதம் முதல் குழந்தை இறந்துவிட்டால், தாயின் நலன் கருதி குழந்தை இறந்த பின் 2 மாதங்களுக்கு மட்டும்

**அணுக வேண்டிய அலுவலர்:**

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர்

## 3. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

சிறப்பு மருத்துவப் பரிசோதனை, கர்ப்பிணிகள்

**நலப்பணிகள் :**

1. 18 வயதிற்கு மேல் 35 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள்
2. உயரம் 145 செ.மீ. குறைவு
3. எடை 42 கி.கி.க்கு குறைவு
4. முந்தைய கர்ப்பத்தில் கால் வீக்கம்
5. அதிக இரத்தப் போக்கு
6. குறைமாத பிரசவம்
7. இறந்தே குழந்தை பிறத்தல்
8. பிரசவத்தில் சிக்கல்
9. ஏழு நாட்களுக்குள் குழந்தை இறப்பு
10. இரட்டைக் குழந்தை
11. இந்த கர்ப்பத்தில் மிகப் பெரிய அல்லது மிகச் சிறிய வயிறு

**அணுக வேண்டிய அலுவலர் :**

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர்கள்

### 4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

★ 0–1 மாதக்குழந்தைகள் தடுப்பூசி, சிறப்பு மருத்துவ கவனிப்பு

**நலப்பணிகள் :**

அனைத்துக் குழந்தைகளுக்கும்

1. குறை மாதத்தில் பிறந்த குழந்தைகள்
2. பிறப்பு எடை குறைந்த குழந்தைகள்
3. ஊனங்கள் உள்ள குழந்தைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர்கள்

### 5. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்

**பயனடைவோர் :**

★ 1–36 மாதக் குழந்தைகள் உயிர்ச்சத்து ஏ, வயிற்றுப் பூச்சி நீக்கம் மருந்து வழங்குதல்

★ இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்குதல்

**இணை உணவு பெறுபவர்கள்:**

(6–36 மாதக் குழந்தைகள்) வயிற்றுப் போக்கு எனில் வாய்வழிக் கரைசல் பொட்டலம் அளித்தல், நலக் கல்வி அளித்தல், கடுமையான சுவாச மண்டல நோய்க்கு கவனிப்பு அளித்தல், எல்லா தடுப்பூசிகளும் போடுதல்

**நலப்பணிகள் :**

★ ஆறு மாதத்திற்கு மேற்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும்

★ இரும்புச் சத்து குறையுள்ள குழந்தைகள் :

1. எடை எடுத்தவுடன் இரண்டு, மூன்று மற்றும் 4–ஆம் நிலையில் உள்ளவர்கள்



2. எடை இழப்பு ஏற்பட்ட குழந்தைகள்
3. வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் தனி கவனம் செலுத்தி உயரச் செய்தல்

**அணுக வேண்டிய அலுவலர்:**

சமுதாய ஊட்டச்சத்து பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர்கள்

### 6. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

★ 3–5 வயதுக்குட்பட்ட குழந்தைகள்

★ பள்ளி முன் பருவக் கல்வி ஊனங்களைக் கண்டறிந்து சிகிச்சை ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை

★ 3 மாதங்களுக்கு ஒரு முறை எடை, மதிய உணவு அளித்தல்

**நலப்பணிகள் :**

அனைத்துக் குழந்தைகள் (பள்ளி முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகள்)

**அணுக வேண்டிய அலுவலர்:**

குழந்தைகள் நல அமைப்பாளர்கள் ★





**நலத்திட்டத்தின் பெயர் :**

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்–3வது திட்டம்

**திட்டம் செயல்படும் மாவட்டங்கள் :**

மதுரை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, தருமபுரி, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், திருவண்ணாமலை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி, கரூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய 24 மாவட்டங்களில், 318 வட்டாரங்களில், 19500 மையங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**திட்டத்தின் முக்கிய குறிக்கோள்**

0–6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச்சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்திக் குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை தடுத்து, குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினை குடும்ப அளவில் மேம்படுத்துவது.

பெண்களிடையே குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.

குடும்பத்தின் ஊட்டச்சத்து, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்வது அதன் மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துவது.

**பயனடைவோர்**

கர்ப்பிணித் தாய்மார்கள்

பாலூட்டும் தாய்மார்கள்

0–3 வயது குழந்தைகள்

3–6 வயது குழந்தைகள்

இளம் பெண்கள்

சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்

**கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

அங்கன்வாடி மையத்தின் பணியாளர் கர்ப்பிணிகளை மூன்றாவது மாதம் முதல் பதிவு செய்யப்பட்டு தாய்சேய் நல அட்டை வழங்கப்படுகிறது.

கர்ப்பிணிகளின் எடை மாதாமாதம் எடுத்து கருவின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

ஐந்தாவது மாத கர்ப்பத்திலிருந்து மாதம் ஒரு கிலோ குறைவாகவோ மூன்று கிலோவிற்கு அதிகமாகவோ எடை இருந்தால் மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

மையத்தில் சுகாதாரப் பணியாளரால் கர்ப்பிணிகள் மாதாமாதம் பரிசோதனை செய்யப்படுகிறார்கள்.




பிரசவ சிக்கல்கள், உடல் நலக் குறைபாடுகள் உள்ள கர்ப்பிணிகள் மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

20வது வார கர்ப்பத்தில் 42 கிலோவிற்குக் கீழ் உள்ள கர்ப்பிணிகள், இரத்தசோகை, பதினெட்டு

வயதிற்குக் கீழ் மற்றும் 35 வயதுக்குக் கீழ், கர்ப்பக் காலத்தில் போதுமான எடை கூடுதல் இல்லாத கர்ப்பிணிகள் முந்தைய கர்ப்பத்தில் குறைப்பிரசவம் மற்றும் குறைந்த பிறப்பு எடையுடன் குழந்தை பெற்ற கர்ப்பிணிகளுக்கு, கர்ப்பகாலம் 6வது மாதம் முதல் குழந்தை பிறந்த 6வது மாதம் வரை, தினமும் 100 கிராமம் இணை உண்வு வழங்கப்படுகிறது.




7,8 மற்றும் 9 மாத கர்ப்பிணிகளுக்கு இரத்தசோகை வராமல் தடுக்க தினமும் ஒரு இரும்புச் சத்து மாத்திரைகளும், இரத்த சோகை உள்ளவர்களுக்கு தினமும் இரண்டு மாத்திரைகளும் கொடுக்கப்படுகிறது.

கர்ப்பிணியைப் பதிவு செய்தவுடன் ரண ஜன்னி வராமல் தடுக்க ரண ஜன்னி தடுப்பூசி சுகாதார செவிலியரால் போடப்படுகிறது.

கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளிக்கப்படுகிறது.

கர்ப்பிணிகளுக்கு மருத்துவமனை/ சுகாதாரநிலையத்தில் பிரசவம் வைத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

வீட்டில் பிரசவம் நடக்கும் கர்ப்பிணிகளுக்குக் குழந்தை பிறந்தவுடன் அங்கன்வாடி பணியாளரால் எடை எடுக்கப்படுகிறது. தொடர்ந்து பிரசவ பின்பராமரிப்பு சுகாதார செவிலியர்களால் அளிக்கப்படுகிறது.

கர்ப்பகாலத்தில் இணை உணவுக்குத் தேர்வு செய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு குழந்தை பிறந்து தொடர்ந்து 6 மாதம் வரை இணை உணவு வழங்கப்படுகிறது.

**0-36 மாத குழந்தைகளுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் மாதாமாதம் 23, 24, 25ம் தேதிகளில் அங்கன்வாடி பணியாளர்களால் எடை எடுக்கப்பட்டு தாய்சேய் நல இணை அட்டையில் குறிக்கப்பட்டு குழந்தைகள் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள 6–36 மாத குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிலைக்கும், வயதிற்கும் உகந்தவாறு இணை உணவு காலை 7 மணி முதல் 9 மணி வரை அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி மையத்தில் குறிப்பிட்ட புதன்கிழமைகளில் சுகாதாரச் செவிலியரால் பி.சி.ஜி., முத்தடுப்பூசி, போலியோ சொட்டு மருந்து, தட்டம்மை தடுப்பூசி ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒன்றரை வயது முதல் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முத்தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது.

சிறுநோய்களுக்கு, சிகிச்சை மையத்தில் சுகாதாரச் செவிலியருடன் இணைந்து அளிக்கப்படுகிறது.





வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு ஓ.ஆர்.எஸ். பாக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு வயிற்றுப் பூச்சி நீக்க மருந்தும் உரிய காலத்தில் வழங்கப்படுகிறது.

சுவாச மண்டல நோய் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, தேவையானவர்களை மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

குழந்தையின் 6வது மாதத்திலிருந்து,ஆறு மாதத்திற்கு ஒருமுறை விட்டமின் ஏ திரவம் ஐந்தாவது வயது வரை வழங்கப்படுகிறது.

குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து, சுகாதாரம், குழந்தை பராமரிப்புக் கல்வி அளிக்கப்படுகிறது.

**3-6 வயதுக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

3–6 வயதுக் குழந்தைகளை எடை எடுத்து குழந்தையின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

இக் குழந்தைகளுக்கு மதிய உணவு, அங்கன்வாடி மையத்தில் வருடம் 365 நாட்களும் அளிக்கப்படுகிறது.

இக்குழந்தைகளுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை ஆரம்ப சுகாதார மருத்துவர்/ பணியாளரால் செய்யப்படுகிறது.

இக்குழந்தைகளுக்கு விளையாட்டு முறைப்படி முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் குழந்தைகளுக்கு அறிவு, மனம், மொழி மற்றும் உடல் வளர்ச்சி போன்றவற்றில் ஈடுபாடு கொள்ளச் செய்து, ஆறாவது வயதில் ஆரம்பப் பள்ளிக்குச் செல்லத் தயார்படுத்தப்படுகிறது.

**இளம் பெண்களுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

12 வயது முதல் 18 வயது வரை உள்ள இளம்பெண்களை ஊக்குவித்து அங்கன்வாடி மையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை எடை எடுத்து, எடை அட்டையில் குறித்து வளர்ச்சியைக் கண்காணிக்க வழிவகை செய்யப்படுகிறது.

இளம் பெண்கள் போதுமான எடையுடன் இருக்க தினமும் அவர்கள் உண்ணும் உணவிற்குக் கூடுதலாகப் புரதச்சத்து நிறைந்த நிலக்கடலை, கொண்டைக்கடலை போன்றவற்றை ஒரு கைப்பிடி அளவு உண்ண அறிவுரை வழங்கப்படுகிறது.

இளம் பெண்களுக்கு இரத்த சோகையைத் தடுக்கவும், இரத்த சோகையைப் போக்குவதற்கும் இரும்புச் சத்து மாத்திரை மையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இளம் பெண்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை பூச்சி நீக்க மருந்து, மையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இளம் பெண்கள் மேலாண்மை பெற ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, அவர்களின் உரிமை பற்றித் தெரிந்து கொள்ளவும் தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**சமுதாயக் குழுக்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களுக்கு திட்டம் பற்றிய கல்வி**

பெண்கள் தொடர்புக் குழு, இளம்பெண்கள் தொடர்புக் குழுக்கள் ஒவ்வொரு அங்கன்வாடி மையத்தில் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் திட்டப்பணிகள் பற்றி கல்வி அளிக்கப்பட்டு, திட்டத்தில் அவர்களுடைய ஈடுபாட்டைப் பெற வழிவகை செய்யப்படுகிறது.

சமுதாயத் தலைவர்களுக்குத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அங்கன்வாடி மையப்பணிகள் திறம்பட செயல்பட அவர்களின் ஒத்துழைப்பு தொடர்ந்து பெற வழிவகை செய்யப்படுகிறது.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், இளம் பெண்கள் ஆகியோருக்கு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள் அனைத்தும் இலவசமாகச் சிறப்பான முறையில் அங்கன்வாடி மையம் வழியாகச் சென்றடைகின்றன.

**அணுக வேண்டிய அலுவலர்;**

அங்கன்வாடி மையத்திலுள்ள பணியாளர்

திட்டத்தின் பயன்களைப் பெற எவ்விதமான படிவங்களையும் பூர்த்தி செய்து தர வேண்டிய அவசியமில்லை.

★ ★ ★

**பணி விவரம் :**

தமிழ்நாடு அரசின் கீழியங்கும் சமூகப் பாதுகாப்புத் துறை, இடர்பாடான சூழ்நிலையிலுள்ள சிறார்களின் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வுடன், சிறுமியர் மற்றும் மகளிர் ஆகியோருக்குச் சேவைகள் புரிவதை கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை சிறார்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களின் முறையான வளர்ச்சிக்காகவும் துறையின் அனைத்து திட்டங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி வருகிறது.

இத்துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் சிறார்கள் மற்றும் 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்குப் பாதுகாப்பு பயிற்சி (கல்வி மற்றும் தொழிற்கல்வி) மற்றும் மறுவாழ்வு அளித்து வருகின்றன. மேலும், இத்துறை நிறுவனங்களிலிருந்து நீக்கம் பெறும் சிறார்கள் மற்றும் மகளிருக்குத் தேவையான பிற்காப்பு உதவிகளையும் அளித்து வருகிறது.

போதைப் பொருட்களின் முறைகேடான பயன்பாட்டினை கட்டுப்படுத்துதல் மற்றும் தவிர்ப்பது தொடர்பான இந்திய அரசின் திட்டங்களைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளராக சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநர் உள்ளார். இத்திட்டத்தின்கீழ் மைய அரசின் நிதிஉதவி கோரும் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு நிறுவனத்தை ஆய்வு செய்த பின்னர் நிதி உதவிக்கென பரிந்துரைக்கப்படுகின்றன.

**இத்துறையின் திட்டங்களால் பயன்பெறுவோர் பின்வருமாறு :**

- ★ ஆதரவற்ற சிறார்கள்
- ★ தவறிழைத்த சிறார்கள்
- ★ சாலையோர சிறார்கள்
- ★ துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்கள்
- ★ கைவிடப்பட்ட மகளிர் மற்றும் மணமாகாத தாய்மார்கள்
- ★ ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர்
- ★ 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்த சிறுமியர் மற்றும் மகளிர்

**செயலமைப்பு :**

- ★ இளைஞர் நலக்குழுமங்கள் – ஆதரவற்ற சிறார்கள்
- ★ இளைஞர் நீதிமன்றம் – தவறிழைத்த சிறார்கள்
- ★ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – சாலையோர சிறார்கள்
- ★ இளைஞர் நலக்குழுமம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்கள்
- ★ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – கைவிடப்பட்ட மகளிர் மற்றும் மணமாகாத தாய்மார்கள்
- ★ பாதுகாப்பு இல்லங்கள் – ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான மகளிர்
- ★ குற்றவியல் நீதிமன்றம் – 1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்த சிறுமியர் மற்றும் மகளிர்



**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

இயக்குநர், சமூகப் பாதுகாப்புத்துறை,
153, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை–600 010.

★





**நலத்திட்டத்தின் பெயர் :**

**1. ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை**

**தகுதி :**

- ★ ஊனமுற்ற அனைவரும் அந்தந்தப் பகுதி அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலரிடம் ஊனத்தின் தன்மை மற்றும் அளவு குறிப்பிட்டுச் சான்று பெற வேண்டும்



- ★ ஊனத்தின் சதவீதம் 40 மற்றும் அதற்கு மேல் உள்ளவர்களுக்கு அட்டை வழங்கப்படும்.
- ★ ஊனம் தெரியும்படியான பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

இலவச ஊனமுற்றோர் அடையாள அட்டை

தமிழக அரசின் அனைத்து ஊனமுற்றவர்களுக்கான உதவிகளையும் பெற அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**கல்வி**

**2. சிறப்புக் கல்வி**

பார்வையற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர், காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றக் குழந்தைகளுக்கு இலவச உணவு மற்றும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை இரண்டு இணைச் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது.

**தகுதி :**

5 வயதுக்கும் மேற்பட்ட ஊனமுற்ற குழந்தைகள் மருத்துவச் சான்றிதழ், வயது சான்றிதழ், சாதிச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்

**அளிக்கப்படும் உதவி :**

**அணுக வேண்டிய அலுவலர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

**3. முன்பருவக் கல்வி**

**தகுதி :**

3 வயதிலிருந்து 5 வயதுக்கு உட்பட்ட செவித்திறன் குறையுடன் பேசும் திறன் இழந்த குழந்தைகளின் மருத்துவச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.



**அளிக்கப்படும் உதவி :**

உணவு மற்றும் இலவச தங்கும் விடுதி மற்றும் சிறப்புக்கல்வி அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கொருமுறை இரண்டு இணைச் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

### 4. மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிலையம், சிட்லபாக்கம், சென்னை

**அளிக்கப்படும் உதவி :**

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அன்றாட செயல்களைக் கவனித்துக் கொள்ளத் தேவைப்படும் பயிற்சியோடு கூடிய சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. இலவச உணவும், இலவச தங்கும் விடுதி, ஆண்டுக்கொரு முறை இரண்டு இணைச் சீருடைகள் அளிக்கப்படுகின்றன.

**தகுதி :**

5–9 வயதுக்குட்பட்ட மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிலையம், சிட்லபாக்கம், சென்னை.

### 5. பார்வையற்ற மாணவர்களுக்குத் தேர்வு எழுத உதவித் தொகை

பார்வையற்றவர்கள் அரசுப் பொதுத் தேர்வில் வினாக்களுக்கு வாய் மூலம் அளிக்கும் பதிலினை எழுதும் உதவியாளருக்கு ஒரு தேர்வுத்தாளுக்கு ரூ.30 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**தகுதி :**

பார்வையற்ற மாணவர்கள் தலைமை ஆசிரியரின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / தலைமை ஆசிரியர்

### 6. கல்வி உதவித் தொகை

**தகுதி :**

- ★ அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியிலோ, கல்லூரியிலோ பயில வேண்டும். எட்டாம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலுபவர்கள் முந்தைய முழு ஆண்டுத் தேர்வில் 40 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
- ★ ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும்.
- ★ 9–ஆம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் ஊனமுற்றோர், உதவித் தொகை பெற குடும்ப மாத வருமானம் ரூ.2000 வரை இருக்கலாம்.

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

- ★ ஆண்டுக்கு ரூ.250 (1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை).
- ★ ஆண்டுக்கு ரூ.750 (6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை).





- ★ ஒன்பதாம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.110 எனவும், பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.150 எனவும், தொழிற்கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் முதுநிலை பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.195 எனவும் வழங்கப்பட்டு வருகின்றது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

### 7. இலவசமாக பிரெய்லி புத்தகங்கள் வழங்குதல்

**அளிக்கப்படும் உதவி :**

பார்வையற்றோருக்காக அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு பிரெய்லி முறையில் அச்சடித்த புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

**தகுதி :**

பார்வையற்ற மாணவர்கள் பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை

### 8. பார்வையற்றோருக்கான தொழிற்பயிற்சி (ஆண்கள்)

**தகுதி :**

- ★ பார்வையற்றவராக இருத்தல் வேண்டும். 8–ஆம் வகுப்பு அதற்கு மேலும் படித்தவர்கள் 18 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும்.
- ★ கல்வித் தகுதி, சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

இலவச விடுதி, உணவு வசதியுடன் ஆண்டிற்கு இரண்டு ஜோடி சீருடை, இலவசமாக தொழிற் பயிற்சி, பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஒரு வருடம்), புத்தகம் கட்டுபவர் (ஒரு வருடம்), மின்கம்பி சுற்றுபவர் (6 மாதம்) ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / பள்ளித் தலைமை ஆசிரியர், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை–600 056.

### 9. பார்வையற்ற மகளிருக்கான பயிற்சி

**தகுதி :**

ஆதரவற்ற, பார்வையற்ற பெண்கள் 18–40 வயதிற்குள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும்





பழங்குடியினருக்கு 45 வயது வரை மருத்துவச் சான்றிதழ், வயது சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

இலவசமாக உணவு, தங்கும் விடுதியுடன் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / முதல்வர், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை, ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை.

### 10. பேச்சுத் திறன் மற்றும் காது கேட்கும் திறன் இழந்தவர்களுக்குப் பயிற்சி (ஆண்கள்)

பொருத்துநர் பிரிவு அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டியில் இலவசமாக இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாத உதவித் தொகையாக ரூ.150 வழங்கப்படுகிறது.

**தகுதி :**

★ பேசும் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோர் 10-ஆம் வகுப்பு தேறியிருக்க வேண்டும். 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

★ 10-ஆம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ், வயது மற்றும் மருத்துவச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32.

### 11. ஊனமுற்றோருக்கு கல்வி நிறுவனங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீடு

கல்வி நிறுவனங்களில் சேர பார்வையற்றோருக்கு ஒரு சதவீதமும், கை, கால் ஊனமுற்றோருக்கு ஒரு சதவீதமும், செவித்திறன் குறைவுடையோருக்கு ஒரு சதவீதமும் ஒதுக்கி பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவம் நீங்கலாக.

**தகுதி :**

★ அந்தந்த வகுப்பிற்குத் தேவையான கல்வித் தகுதிகளைப் பெற்றிருத்தல் அவசியம்

★ இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் – சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களினால் வகுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் தலைவர்கள்

### 12. ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு

அரசுப்பள்ளிகளில் 3 சதவீத இட ஒதுக்கீடு அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் எழும் காலிப் பணியிடங்களில் ஒரு சதவீதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும், ஒரு சதவீதம் செவித்திறன் குறைவுடையோருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.




**தகுதி :**

★ தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் நிர்ணயம் செய்துள்ள வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி.

★ தமிழ்நாடு தேர்வாணையம் கேட்கும் பணியிடங்களுக்குக் குறிப்பிட்ட படிவத்தில்





விண்ணப்பித்தல் வேண்டும். மற்றோர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நடப்பு பதிவேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் கோரும் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட நிறுவன அலுவலர்கள்

### 13. சுயவேலை வாய்ப்பு வங்கிக் கடன்

வங்கிக் கடன் தொகை பரிந்துரை செய்யப்பட்டு அதற்கு ரூ.2,000 மானியத் தொகையும் வழங்கப்படும்.

**தகுதி :**

ஊனமுற்றோர் சொந்தத் தொழில் செய்ய உரிய விண்ணப்பத்தில் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்



### 14. முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து செயற்கை அவயம் பொருத்துதல்

ரூ.2,000 மதிப்புள்ள செயற்கைக் கை அல்லது கால் இலவசமாக பொருத்த உதவி

**தகுதி :**

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும். செயற்கை அவயம் பொருத்தும் நிலையத்திலிருந்து மதிப்பீடு பெற்று ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகத்திற்கு அளிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

## பயணச் சலுகை

### 15. பேருந்து பயணம்

இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கப்படும்.

**தகுதி :**

★ கண்பார்வையற்றோர் நகரப் பேருந்துகளில் மாவட்டம் முழுவதும் பயணம் செய்யலாம்.

★ இதர ஊனமுற்றோர் கல்வி, தொழிற்கல்வி பணிக்கு, சுயவேலைக்கு, மருத்துவ சிகிச்சைக்கு இலவசமாக சென்று வர ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும்.

★ அரசு போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளில் பார்வையற்றோரும் இதர ஊனமுற்றோரும் இலவசமாக பயணம் செய்ய ஆண்டிற்கு ஒருமுறை இருவழிப் பயணத்திற்கு இலவசப் பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. (தமிழ்நாட்டிற்குள் மட்டும் பயணம் செய்ய)

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

போக்குவரத்துப்படி

குறைந்த அளவு 5 சதவீத அடிப்படைச் சம்பளம் அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ.150, இதில் எது குறைவோ அது சம்பளத் தொகையுடன் வழங்கப்படும்.

**தகுதி :**

அரசுத்துறையில் பணிபுரியும் ஊனமுற்றோர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட அரசுத்துறை தலைவர்கள்

## திருமண நிதியுதவி

### 17. கண்பார்வையற்றவரை பார்வையுள்ளவர் திருமணம் செய்தல்



**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.3,000 ரொக்கமாகவும், ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும்.

**தகுதி :**

- ★ இருவருக்கும் இது முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.
- ★ திருமணம் பதிவு செய்யப்படல் வேண்டும்.
- ★ திருமணமான இரண்டு வருடத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- ★ அரசின் பிற திருமண நிதி உதவி ஏதும் பெற்றிருக்கக் கூடாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 18. கை, கால் ஊனமுற்றவரை சாதாரண நபர் திருமணம் செய்தல்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.2,000 ரொக்கமாகவும், ரூ.5,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும்.

**தகுதி :**

- ★ இருவருக்கும் இது முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.
- ★ ஆண்டு வருமானம் ரூ.24,000க்குள் இருக்க வேண்டும்.
- ★ திருமணம் பதிவு செய்யப்படல் வேண்டும்.
- ★ திருமணமான இரண்டு வருடத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- ★ அரசின் பிற திருமண நிதி உதவி ஏதும் பெற்றிருக்கக் கூடாது.
- ★ இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் ஒருவர் 100 சதவிகிதம் கை, கால், உடல் ஊனமுற்றவராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 19. காது கேளாதோர் வாய் பேசாதோரை சாதாரண நபர் திருமணம் செய்தல்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.5,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.2000 காசோலையாகவும் வழங்கப்படும்.

**தகுதி :**

- ★ மணமகனோ அல்லது மணமகளோ எவராவது ஒருவர் காதுகேளாதவர், வாய் பேசாதவராக இருக்க வேண்டும்.
- ★ இருவருக்கும் இது முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.
- ★ அரசின் பிற திருமண நிதியுதவி ஏதும் பெற்றிருக்கக் கூடாது.
- ★ பெண்ணுக்கு 18 வயதும் ஆணுக்கு 21 வயதும் நிரம்பியிருக்கவேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்





## மருத்துவ உதவிகள்

### 20. போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.400 உதவித் தொகையுடன் கூடிய இலவச அறுவை சிகிச்சை, அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்குப் பின் இலவச காலிப்பர் ஊன்றுகோல் வழங்கப்படும்.

**தகுதி :**

இத்துறை மூலம் நடத்தப்படும் போலியோ முகாமில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 21. சட்டப்படிப்பு பயின்ற உடல் ஊனமுற்றோருக்கு சட்டத் தொழில் புரிய நிதியுதவி வழங்கும் திட்டம்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

சட்டப்புத்தகம் வாங்க ரூ.3,000 காசோலையாக வழங்கப்படும்

**தகுதி :**

- ★ உடல் ஊனமுற்றோர் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.



- ★ பார் கவுன்சிலில் உறுப்பினராக பதிவு செய்துள்ளவராக இருத்தல் வேண்டும்.
- ★ ஆண்டு வருமானம் ரூ.50,000க்குள் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 22. மூன்று சக்கர வண்டி வழங்குதல்

**அளிக்கப்படும் உதவி :**

- ★ 12 முதல் 16 வயது வரை சிறிய மூன்று சக்கர வண்டி.
- ★ 16 முதல் 65 வயது வரை பெரிய மூன்று சக்கர வண்டி.

**தகுதி :**

- ★ இரண்டு கால்களும் செயல் இழந்து கைகளால் மட்டும் இயங்கக் கூடிய நிலை
- ★ வயது 12 முதல் 65 வரை, வருமானம் ரூ.30,000க்குள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 23. காதொலிக் கருவி

**அளிக்கப்படும் உதவி :**

காதொலிக் கருவி

**தகுதி :**

வயது மூன்று முதல் 70 வரை, வருமானம் ரூ.30,000க்குள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### சூரிய ஒளியால் சக்தி பெறும் மின்கலம்

**அளிக்கப்படும் உதவி :**

சூரிய ஒளி மின்கலம்

**தகுதி :**

- ★ காதொலிக் கருவி உபயோகப்படுத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.
- ★ பள்ளி மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 25. கடும் ஊனமுற்றவர்களுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

மாதம் ரூ.150

**தகுதி :**

★ மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்

★ மூளை வளர்ச்சி குன்றியவர்கள்

★ கடும் உடல் ஊனமுற்றவர்கள் (ஊனத்தின் அளவு 75% மேல்)

★ குடும்ப (பெற்றோர்கள்/பாதுகாவலர்கள்) ஆண்டு வருமானம் ரூ.15,000

★ மாவட்ட தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 26. கண் பார்வையற்றவர்களுக்கு கருப்புக் கண்ணாடி, ஊன்றுகோல் வழங்கும் திட்டம்

**அளிக்கப்படும் உதவி :**

கருப்புக் கண்ணாடி, மடக்கு ஊன்றுகோல்

**தகுதி :**

★ இரண்டு கண்களும் பார்வையில்லாமை

★ வயது வரம்பு இல்லை

★ ஆண்டு வருமானம் ரூ.30,000க்குள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 27. கண் பார்வையற்றோருக்குப் பிரெய்லி கைக்கடிகாரம் வழங்கும் திட்டம்

**தகுதி :**

★ வருமானம் ரூ.24,000க்குள் இருக்க வேண்டும்

★ சுய தொழில் செய்பவராகவோ, அமைப்பு சாரா நிறுவனங்களில் வேலை செய்பவராகவோ இருக்கலாம்



**அளிக்கப்படும் உதவி :**

பிரெய்லி கைக்கடிகாரம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 28. பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அற்றோர் நிவாரணத் தொகை

★ பள்ளி இறுதி வகுப்பிற்கு கீழ் தகுதி உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200

★ புதுமுக வகுப்பு மற்றும் மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.250

★ பட்டதாரிகள் மற்றும் அதற்கு மேல் கல்வித் தகுதி உள்ளவர்கள் ரூ.300

**தகுதி :**

★ பார்வையற்றவராக இருக்க வேண்டும்.

★ வேலை வாய்ப்பு கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டிற்கு மேல் ஆகியிருக்க வேண்டும்.

★ பார்வையற்றவரின் வயது 18க்கு மேல் 40க்குள் இருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலை சாதியினர் வயது 45 வரை

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்





### 29. தசைப் பயிற்சி

தசைப் பயிற்சிகள் இலவசமாக செய்யப்படுகிறது.

**தகுதி :**

அறுவை சிகிச்சை செய்து கொண்டவராகவோ அல்லது அறுவை சிகிச்சை தேவைப்படாத நபராகவோ இருத்தல் வேண்டும். மருத்துவ சான்றிதழ் இணைக்க வேண்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 30. கால்தாங்கி ஊன்றுகோல், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி இலவசமாக வழங்குதல்

**தகுதி :**

★ முகாம் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

★ மருத்துவச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 31. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியுதவி

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

விபத்தினாலோ வேறு காரணங்களினாலோ நிரந்தரமாக முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டு பணிக்கு செல்லும் நபர்களுக்கு உதவுவதற்காக மாதம் ரூ.100 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

**தகுதி :**

★ ஊனமுற்ற நபருக்கு முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

★ ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். வருமானச் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 32. பார்வையற்றோருக்கு ஆசிரியர் பணியிடங்களில் இட ஒதுக்கீடு

கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் புணியிடங்களில் காலி இடங்களில் இரண்டு சதவிகித பணியிடங்கள் பார்வையற்றோருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**தகுதி :**

★ தகுதி வாய்ந்த பார்வையற்றோர் ஆசிரியர் பணிகளுக்கென வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

★ பார்வையற்ற நபர் வேலை வாய்ப்பகத்தில் நடப்பு பதிவேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ நிறுவனங்கள் கோரும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்

### 33. கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியில்லாத பணியிடங்களைச் செவித்திறன் குறையுடையோருக்கு ஒதுக்கீடு செய்தல்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியல்லாத பணி இடங்களில் மொத்த எண்ணிக்கையில் இரண்டு சதவீத பணி இடங்களைச் செவித்திறன் குறையுடையோரைக் கொண்டு நிரப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**தகுதி :**

★ பதவிக்குத் தேவையான கல்வித் தகுதிகள் பெற்றிருத்தல் அவசியம்.

★ வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் கோரப்படும் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்.




### 34. உடல் ஊனமுற்றோருக்கு கணினிப் பயிற்சி அளித்தல்

**அளிக்கப்படும் உதவி :**

கணினிப் பயிற்சி 3 மாதம் இலவசமாக வழங்கப்படும். பயிற்சி உதவித் தொகை மாதம் ரூ.300 வழங்கப்படும்.

**தகுதி :**

★ மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

★ உடல் ஊனமுற்றோர் அடையாள அட்டை நகல், மேல்நிலை வகுப்புச் சான்றிதழ் நகல் ஆகியன சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 35. உடல் ஊனமுற்றோருக்கு ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பிரிவில் பயிற்சியளித்தல்

**அளிக்கப்படும் உதவி :**

ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சி, எக்ஸ்ரே, ஈசிஜி, ஈஈஜி ஆகிய பிரிவுகளில் ஓராண்டுப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும்.

பயிற்சி உதவித்தொகையாக மாதம் ரூ.300 வீதம் ஓராண்டிற்கு வழங்கப்படும்.

**தகுதி :**

★ மேல்நிலைக் கல்வியில் விஞ்ஞானப் பிரிவில் பயின்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

★ உடல் ஊனமுற்றோர் அடையாள அட்டை நகல், மேல்நிலை வகுப்புச் சான்றிதழ் நகல் ஆகியன சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள்

### 36. கை, கால் ஊனமுற்றோர் மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கு மோட்டார் வாகன பராமரிப்புப் பிரிவில் பயிற்சியளித்தல்

மோட்டார் வாகன பராமரிப்பில் இலவசமாக ஓராண்டு காலம் சென்னையில் பயிற்சியளிக்கப்படும்.

**தகுதி :**

★ 10ஆம் வகுப்பு தேறிய/தவறிய கை, கால் ஊனமுற்ற, செவித்திறன் குறையுடைய நபர்கள்.

★ ஊனமுற்றோர் அடையாள அட்டை, பத்தாம் வகுப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் நகலை சமர்ப்பித்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள்

### 37. இலவச செயற்கைக் கால் (அ) கை வழங்கும் திட்டம்

ரூ.2000 மதிப்புள்ள செயற்கை கை (அ) கால் இலவசமாக, அந்தந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகங்களின் மூலம் பொருத்தப்படுகிறது.

**தகுதி :**

★ முழுவதுமாக கை அல்லது கால் இழந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள் ★





இந்திய அரசு, தேசிய சமூகநல உதவித்திட்டம் என்ற புதிய திட்டத்தை 1995–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15–ஆம் நாள் முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய நிதியுதவி அடிப்படையில் பின்வரும் நலத்திட்டங்களைத் தேசிய சமூகநல உதவித் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ளது.

**திட்டத்தின் பெயர் :**

### 1. தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்

**அனுமதிக்கப்பட்ட தொகை :**

மாதம் ஒன்றுக்கு ரூ.75.



**தகுதி :**

விண்ணப்பதாரர் (ஆண்/பெண்) 65 வயது அதற்கு மேற்பட்டவராக, வருமானமில்லாத தொடர் வருமானம் அல்லது குடும்பத்திலுள்ள இதர நபர்கள் மூலமாக எந்தவித நிதியுதவியும் பெறாத ஆதரவற்றவர்கள்.

**அணுக வேண்டிய அலுவலர் முகவரி :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத்திட்டம்)

### 2. தேசிய குடும்ப உதவித் திட்டம்

**அனுமதிக்கப்பட்ட தொகை :**

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பிற்கு ரூ.10,000, விபத்தினால் இறக்க நேரிடும் குடும்பத் தலைவருக்கு ரூ.10,000.

**தகுதி :**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களுக்கு ஒரே தவணைத் தொகை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத்திட்டம்)

### 3. தேசிய பேறுகால உதவித் திட்டம்

**அனுமதிக்கப்பட்ட தொகை :**

உயிருடன் பிறக்கும் முதல் இரண்டு குழந்தைகளின் பேறு காலத்திற்கு தலா ரூ.500.

**தகுதி :**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 19 வயது அதற்கு மேல் வயதுடைய பேறுகால மகளிரின் முதல் இரண்டு உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூக நல அலுவலர்

★ ★ ★

## பள்ளிகள்

**பள்ளிகளின் தற்போதைய நிலவரம் :**

**1. தொடக்கப்பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------------------- 785

பழங்குடியினர் ------------------- 192

மொத்தம் ------------------- 977

**2. நடுநிலைப்பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------------------- 127

பழங்குடியினர் ------------------- 32

மொத்தம் ------------------- 159

**3. உயர்நிலைப் பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------------------- 49

பழங்குடியினர் ------------------- 9

மொத்தம் ------------------- 58

**4. மேல்நிலைப் பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------- ------------ 56

பழங்குடியினர் ------------------- 9

மொத்தம் ------------------- 65

இப்பள்ளிகளில் சுமார் 2.44 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :



**நலத்திட்டத்தின் பெயர் :**

### 1. சிலேட்டுகள் வழங்குதல்

**தகுதி :**

1ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

### 2. பாடப்புத்தகங்கள் வழங்குதல்

**தகுதி :**

1 முதல் 10–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்



### 3. நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்

**தகுதி :**

3 முதல் 10–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்





**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்கள்



### 4. சீருடைகள் வழங்குதல்

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

### 5. சிறப்பு வழிகாட்டி (வினா) வழங்குதல்

**தகுதி :**

பத்தாம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

**மாணவர் இல்லங்கள் :**

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கள் மேற்படிப்பைத் தொடர உதவும் பொருட்டு மாணவர் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இன்றளவில் சுமார் 78,983 மாணவர்களின் நலனுக்காக 1075 ஆதிதிராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன. இதில் மாணவிகளுக்காகவே 344 விடுதிகள் உள்ளன.

★ இவற்றைத் தவிர 26 விடுதிகள் பழங்குடியின மாணவ, மாணவியர் மேம்பாட்டிற்காக இயங்கி வருகின்றன. இவற்றில் 1285 மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயிலுகின்றனர். ஆண்டுதோறும் புதிய விடுதிகள் திறக்கப்படுகின்றன. இம்மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பகுதி நேர ஆசிரியர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குப் பின்வரும் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

### 6. விடுதி

**தகுதி :**

மாணவர்கள் 4ஆம் வகுப்பு முதலும் மாணவியர் 3ஆம் வகுப்பு முதலும் தொடர்ந்து தங்கி பயில விடுதியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைக்குட்பட்டு சேர்க்கப்படுவார்கள்.

**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் அல்லது விடுதிக் காப்பாளர்

### 7. இலவச உணவு

**தகுதி**

ஆண்டு வருமானம் ரூ.50,000க்குள் இருக்க வேண்டும்

**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் அல்லது விடுதிக் காப்பாளர்

### 8. உறைவிடம்

**தகுதி :**

பள்ளிக்கும் வீட்டிற்கும் 5 கி.மீ.க்கும் மேல் இருக்க வேண்டும். (இது மாணவிகளுக்குப் பொருந்தாது)

### 9. சீருடை

**தகுதி :**

12–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவியருக்கும் வழங்கப்படுகிறது.



அணுக வேண்டியவர்கள் :

விடுதிக் காப்பாளர்

**10. வழிகாட்டி**

தகுதி :

★ 10 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு வழிகாட்டியும் வழங்கப்படுகிறது.

★ இத்துறை சார்ந்த பள்ளிகளில் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்

அணுக வேண்டியவர்கள் :

விடுதிக் காப்பாளர்

## கல்வி உதவித் தொகைகள் :

கல்வித்துறை மற்றும் அனைத்து அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலும் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்கும் பின்வரும் கல்வி உதவித் தொகைகள், சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**11. கல்விக் கட்டணச் சலுகை**

தகுதி :

1. ஆங்கில பயிற்சி மொழிக் கல்வியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் / மதம் மாறிய ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்.
2. போஸ்ட் மெட்ரிக் கல்வி பயிலும் மாணவர்கள்.
3. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,920–க்குள் சுயநிதி கல்வியில் இலவச இடஒதுக்கீட்டில் பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்கள்.

அணுக வேண்டியவர் :

பள்ளித் தலைமை ஆசிரியர்/கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆட்சியர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்/ஆதிதிராவிடர் நல இயக்குநர்

**12. சிறப்புக் கட்டணம் மற்றும் பத்தாம் வகுப்புத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் வழங்குதல் (இத்தொகை நேரடியாகத் தலைமையாசிரியருக்கும் அரசுத் தேர்வுத் துறைக்கும் வழங்கப்படும்)**

தகுதி :

அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர். வருமான வரம்பு இல்லை.

அணுக வேண்டியவர்கள் :

தலைமை ஆசிரியர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**13. இலவசமாக நோட்டுப் புத்தகம், பாடப்புத்தகம் வழங்குதல்**

தகுதி

★ அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், 9 மற்றும் 10–ஆம் வகுப்பு வரை பாடப்புத்தகம்.

★ 4 முதல் 10–ஆம் வகுப்பு வரை நோட்டுப் புத்தகம்

அணுக வேண்டிய அலுவலர் :

மாவட்டக் கல்வி அலுவலர் / பள்ளித் தலைமை ஆசிரியர் மூலமாக மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்





**14. தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்குதல்**

தகுதி :

உலர் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்வோர், தெருப்பெருக்கும் தொழில் செய்பவர், தோல் உரிப்போர் மற்றும் பதனிடுவோர் முதலியவர்களின் குழந்தைகள். சாதி, மத, பேதமில்லை.

அணுக வேண்டிய அலுவலர் :

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**15. கல்வி உதவித் தொகை**

அ. பெற்றோருடன் தங்கிப் படிப்பவர்கள்

1–5–ஆம் வகுப்பு மாதம் ரூ.25
(பத்து மாதங்களுக்கு)



6–8–ஆம் வகுப்பு மாதம் ரூ.40
(பத்து மாதங்களுக்கு)

9–10–ஆம் வகுப்பு மாதம் ரூ.50
(பத்து மாதங்களுக்கு)

இது தவிர ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படும்.

ஆ. மாணவர்கள் இல்லங்களில் தங்கிப்படிப்பவர்கள்

3–8–ஆம் வகுப்பு மாதம் ரூ.200
(பத்து மாதங்களுக்கு)

9–10–ஆம் வகுப்பு மாதம் ரூ.250
(பத்து மாதங்களுக்கு)

இதுதவிர அனைவருக்கும் ஆண்டுதோறும் ஒட்டுமொத்த மானியமாக ரூ.500 வழங்கப்படும்.

தகுதி :

வருமான வரம்பு இல்லை

அணுக வேண்டியவர் :

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## கல்லூரி மற்றும் பத்தாம் வகுப்பு பள்ளி படிப்புக்கு மேற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை

**16. மைய அரசு கல்வி உதவித் தொகை : கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய அனைத்துக் கட்டணம் மற்றும் பராமரிப்புக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

தகுதி :

11–ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் ஆதிதிராவிடர் இந்து மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் ஆண்டு வருமான வரம்பு ரூ.60,965.

அணுக வேண்டியவர்கள் :

பள்ளித் தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

**17. பராமரிப்புத் தொகை பெற்றோருடன் தங்கிப்படிப்பவர்களுக்கு மாதம் ரூ.90 முதல் ரூ.190 வரை**

தகுதி :

விடுதி மாணவர்களுக்கு மாதம் ரூ.150 முதல் ரூ.425 வரை.

அணுக வேண்டியவர்கள் :

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## மாநில அரசின் சிறப்புக் கல்வி

## உதவித் தொகை

**18. பள்ளி மற்றும் கல்லூரிக்குக் கட்ட வேண்டிய கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதி மாணவர்களுக்கும், வெளி மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படும்.**

**தகுதி :**

மைய அரசு திட்டத்தில் பயன்பெற இயலாதவர்கள்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்கள் (ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000க்குள்)

**அணுக வேண்டியவர்கள் :**

தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## இலவச கல்வித் திட்டம்

**19. பிளஸ்–1, பிளஸ்–2 மற்றும் பகல் நேர கல்லூரியில் இளங்கலை / அறிவியல் / வணிகவியல் பட்டப்படிப்புக்கு கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணங்கள் வழங்கப்படும்.**

**தகுதி :**

மேற்குறிப்பிட்ட இரு திட்டங்களில் பயன்பெற இயலாதவர்கள் / பிளஸ்–1 முதல் பட்டப்படிப்பு வரை பகல் நேர கல்லூரிகளில் படிப்பவர்கள். இத்திட்டத்தில் வருமான வரம்பு கிடையாது.

**அணுக வேண்டியவர்கள் :**

தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**20.பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு தொழில் படிப்பில் சேரும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணம், பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்தல்**

**தகுதி :**

ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள்




**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5

**21. வெளிநாட்டில் மேல்படிப்பினை தொடரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாநில அரசு உதவித்தொகை வழங்குதல்**

**தகுதி :**

1. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்கள்
2. ஆண்டு வருமானம் ரூ.10,000க்குள்
3. வயது வரம்பு 40க்குள்
4. குடும்பத்தில் ஒருவர்

**அணுக வேண்டியவர் :**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை–5

**22.பட்டயக் கணக்கர் பயிற்சி : பட்டயக் கணக்கர் பயிற்சி பெற மூன்றாண்டுகளுக்குப் பராமரிப்பு செலவு கல்விக்கான கட்டணம் முதலியன வழங்கப்படும்.**

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்தவ ஆதிதிராவிடர். வருமான வரம்பு ரூ.50,000





**அணுக வேண்டியவர் :**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை–5

## கடன் உதவித்தொகை

**23. விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கடன் உதவித் தொகை வழங்கப்படும். இந்தத் தொகை படித்து முடித்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது வேலையில் சேர்ந்த ஒரு ஆண்டிற்குப் பிறகு இது எது முந்தியதோ அதற்குள் திரும்பச் செலுத்த வேண்டும். வட்டி இல்லை. வழங்கப்படும் தொகை ரூ.6,500 முதல் 7,000 வரை (ஆண்டுக்கு)**

**தகுதி :**

கல்லூரியுடன் இணைநத விடுதியில் தங்கிப் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்.

பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000.

சான்றுறுதி அலுவலரின் முன்னிலையில் ஒப்பந்த படிவத்தில் கையெழுத்திட வேண்டும். +2 மற்றும் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் கல்விக்கான உதவித்தொகை வழங்கப்படும்.

**அணுக வேண்டியவர்கள் :**

கல்லூரி முதல்வர் மூலம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## புத்தக வங்கி

**24.பொறியியல் / மருத்துவம் / கால்நடை மருத்துவம் / வேளாண்மை / பாலிடெக்னிக் போன்ற கல்விக்குத் தேவையான புத்தகங்கள் படிப்புக்கு ஒரு செட்**
**இரு மாணவர்களுக்கு என்ற விகிதத்திலும், ஒரு மாணவருக்கு ஒரு செட் என்ற விகிதத்திலும் படிப்பு பிரிவுக்கு ஏற்றவாறு தொகை வழங்கப்படும். புத்தகங்கள் கல்லூரி நூலகங்களில் வைக்கப்படும். மாணவர்கள் எடுத்துப் படித்து பின்னர் திருப்பிக் கொடுக்க வேண்டும்.**

**தகுதி :**

பொறியியல் / மருத்துவம் / வேளாண்மை / கால்நடை மருத்துவம் / பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு / பாலிடெக்னிக் பட்டம், பட்டயம், கணக்காயர், எம்.பி.ஏ., எம்.சி.ஏ., போன்ற படிப்பு பயின்று மைய அரசு உதவித் தொகை பெறும் மாணவர்கள்.



**அணுக வேண்டியவர் :**

கல்லூரி முதல்வர்கள்

## ஊக்கப் பரிசுகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களிடையே மதிப்பெண்கள் பெறுவதில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி அவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த பல ஊக்கப்பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

### 25. மாநில அளவில் முதல் மதிப்பெண்

**பிளஸ்–2 தேர்வு ரூ.25,000**

**பத்தாம் வகுப்பு தேர்வு ரூ.10,000**

**தகுதி :**

முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி (ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்தவர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம்) மூன்று இனத்திலும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலமாக இயக்குநர், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

### 26. மாவட்ட அளவில் முதல் மதிப்பெண்

பிளஸ்–2 தேர்வு ரூ.3,000

பத்தாம் வகுப்பு முதல் பரிசு ரூ.1,000

பத்தாம் வகுப்பு 2–ஆம் பரிசு ரூ.500

பத்தாம் வகுப்பு 3–ஆம் பரிசு ரூ.300

8–ஆம் வகுப்பு முதல் பரிசு ரூ.1000

8–ஆம் வகுப்பு 2–ஆம் பரிசு ரூ.500

8–ஆம் வகுப்பு 3–ஆம் பரிசு ரூ.200

**தகுதி :**

முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி (ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்தவர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம்) 10 மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்வில் 60 சதவிதமும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## தகுதி மானிய உதவித்தொகை

**27. 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 60ம் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்று மேல்படிப்பை தொடர்பவருக்கு ஒருமுறை மட்டும் ரூ.300 வழங்கப்படுகிறது**

**தகுதி :**

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர்கள். பட்டப்படிப்பு/பட்ட மேற்படிப்பு / தொழிற்படிப்பு. இறுதித் தேர்வில் 60%க்கு மேல் மதிப்பெண் பெற்று ஒரே தடவையில் தேர்வு பெற்று இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6

## பரிசுத் தொகைத் திட்டம்

**28. பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கப்**




**பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்தேர்வுகளில் படிப்பிற்கான கால அளவு முடித்து 60% அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்வு பெற்றவர்களுக்கு ரூ.2,000 முதல் ரூ.5,000 வரை பரிசாக வழங்கப்படும்**

**தகுதி :**

பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு / தொழிற்படிப்பு இறுதித் தேர்வில் 60% சதவீதத்திற்கும் மேல் மதிப்பெண் பெற்று படிப்புக்கான கால அளவுக்குள் தேர்வு பெற்று இருக்கவேண்டும். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

## அறிவுக்கூர்மை பரிசுத் தொகை

**29. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவர் ஆகிய ஒவ்வொரு இனத்திலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்புத் தேர்வில் முதல் இரு இடங்களைப்பெற்ற இரு மாணவர் மற்றும் இரு மாணவியர்களுக்கு மேற்படிப்பைத் தொடர அடுத்த ஆறு ஆண்டுகளுக்குப் பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.800ம் மற்ற ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.960ம் வழங்கப்படும்.**





**தகுதி :**

மாவட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவிகள், படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும். வருமான வரம்பு இல்லை.



**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5

## காந்தி நினைவுப் பரிசு

**30. ஒவ்வொரு மாவட்டத்திலும் பிளஸ்–2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் மாணவிக்கு இப்பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.1,500ம் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 விதமும் வழங்கப்படும்.**

**தகுதி :**

பிளஸ்–2 தேர்வில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். இந்து மதத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் (வருமான வரம்பு இல்லை)

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5

## தகுதி வழிப் பரிசு

**31. காந்தி நினைவுப் பரிசு போன்றே இப்பரிசும் வழங்கப்படும்.**

**தகுதி :**

மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5

## முதலமைச்சர் தகுதிப் பரிசுத்தொகை

**32. பிளஸ்–2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறிஸ்துவ ஆதிதிராவிடர்களில் முதல் ஆயிரம் மாணவர்கள் மற்றும் முதல் ஆயிரம் மாணவியர்களுக்கு இப்பரிசு வழங்கப்படும். இப்பரிசு தொடர்ந்து பயின்றால் மட்டும் ஆண்டுக்கு ரூ.1,500 விதம் ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.**

**தகுதி :**

பிளஸ்–2 தேர்வில் முதல் ஆயிரம் இடங்களுக்குள் வர வேண்டும். மேல் படிப்பைத் தொடர வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5

## ஆதிதிராவிடர் பழங்குடியினர் பெண் குழந்தைகளுக்கு ஊக்கப் பரிசு

**33. ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்திவிடாமலிருக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கீழ்க்கண்ட மாவட்டங்களில் 3 முதல் 5 வரை படிக்கும் 60,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 வழங்கப்படும். தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், விருதுநகர், கடலூர், காஞ்சிபுரம், வேலூர், கரூர், பெரம்பலூர், நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அனைத்து பழங்குடியின மாணவிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகள் 3 முதல் 5 வகுப்புகளில் படித்துக் கொண்டு இருக்கவேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

**34. 6–ஆம் வகுப்பு படிக்கும் 30,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 (மாதம் ஒன்றுக்கு ரூ.100 விதம் 10 மாதங்களுக்கு) வழங்குதல். இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.**

**தகுதி :**

6–ஆம் வகுப்பில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## வேலைவாய்ப்புக்கான சிறப்பு பயிற்சி

**35. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளை எழுதும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குப் பயிற்சி அளிக்க முன்னோடி பயிற்சி நிலையம் சென்னையில் இயங்கி வருகிறது. உணவு, தங்கும் இடம் பயிற்சி ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகிறது.**

**தகுதி :**

தேர்வுக்கு வருமான வரம்பு இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை.

## வேலை வாய்ப்புப் பயிற்சி :

**36. ரயில்வே, எல்.ஐ.சி., வங்கிகள், தமிழ்நாடு மற்றும் மைய அரசு சர்வீஸ் கமிஷன் போன்றவைகள் நடத்தும் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றன.**

**தகுதி :**

இவற்றிற்கான விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளிவரும். அவற்றைப் பார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–5

**37.மருத்துவம், பொறியியல் போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு உரிய பயிற்சிகள்**

**தகுதி :**

1. வயது வரம்பு இல்லை.
2. இலவசப் பயிற்சி.
3. மூன்று முறை எழுதலாம். செய்தித்தாள்களில் விளம்பரம் வெளிவரும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–5

**38.நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பம் மற்றும் பதிவுக்கட்டணங்களுக்குக் கட்டண விலக்கு**

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள். மூன்று முறை விலக்கு அளிக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்/ அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25

## பெண்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி :

**39. கணினிப் பயிற்சி விற்பனை மற்றும் இயந்திரவியல் அடிப்படைப் பயிற்சி, காலணி தயாரித்தல், பெண்களுக்காக தச்சுத் தொழில், தையல் இயந்திர இயக்குநர் பயிற்சி, ஆடை வடிவமைத்தல், ஆடை உற்பத்தி, உடை தயாரித்தல் மற்றும் இயந்திர பூவேலை பயிற்சி, பேக்கரி, கன்பெக்ஷனரி மற்றும் ஜாம்**





**தயாரித்தல், சேல்ஸ் மென்ஷிப், பேஷன் அப்பேரல் டிசைன்ஸ், இன்டீரியர் டிசைன் மற்றும் டெக்கரேஷன், அழகுக் கலைப்பயிற்சி, வடிவமைப்பு வெட்டுதல் முதுநிலைப் பயிற்சி, உற்பத்தி மேற்பார்வை தரக்கட்டுப்பாடு பயிற்சி, தையல் இயந்திரம் இயக்கப் பயிற்சி, செயல் அலுவலர் பயிற்சி**



**தகுதி :**

ஆதிதிராவிடர் ஆக இருக்க வேண்டும். (பயிற்சிக் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும்.)

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

**40.தட்டச்சு/சுருக்கெழுத்துப் பயிற்சி**

**தகுதி :**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்தவ ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## வழக்கறிஞர்களுக்குப் பயிற்சி

**41. பட்டம் பெற்ற வழக்கறிஞர்களுக்கு மூத்த வழக்கறிஞர்களிடம் நான்கு ஆண்டுகளுக்குப் பல்வேறு துறைகளில் பயிற்சி. பயிற்சி காலத்தில் மாதம் ரூ.750 வழங்கப்படும். பயிற்சி அளிக்கும் மூத்த வழக்கறிஞர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ.2,500 மதிப்பூதியமாக வழங்கப்படும்.**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர். செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

## வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க உதவி

**42. வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க கட்டிட வாடகை, புத்தகங்கள் மரச்சாமான்கள் வாங்க ரூ.5,000 மானியமாக அளிக்கப்படும்**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**43. வழக்கறிஞர்களுக்குத் தொழில் ஆரம்பிக்க ரூ.750 மானியமாகவும் ரூ.750 கடனாகவும் நிதி உதவி**

**தகுதி :**

கிருத்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## தொழில் பயிற்சி

**44. ஆதிதிராவிடர்களுக்கென ஒரு ஐ.டி.ஐ. சிதம்பரத்தில் இயங்கி வருகின்றது**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

முதல்வர், ஐ.டி.ஐ., சிதம்பரம்

**45.சங்கராபுரத்தில் பழங்குடி மாணவர்களுக்காக ஒரு ஐ.டி.ஐ. இயங்கி வருகிறது**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

முதல்வர், ஐ.டி.ஐ. சங்கராபுரம்,
விழுப்புரம் மாவட்டம்

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் ப்ழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டிற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :

**46.உழவுமாடுகள் வாங்க மானியம் அளித்தல், மானியம் ரூ.3,000 வங்கிக்கடன் ரூ.3,000**

**தகுதி :**

ஒரு ஏக்கர் புன்செய் நிலம் அல்லது நன்செய் நிலம் வைத்திருக்க வேண்டும் அல்லது குத்தகைக்குச் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். ஆண்டு வருமான வரம்பு ரூ.11,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

**47.கறவை மாடுகள் வாங்க உதவி ரூ.4,000 மானியமாக அளிக்கப்படும். ரூ.8,000 கூட்டுறவுச் சங்க வங்கிகள் மூலம் கடன் தொகை அளிக்கப்படும்**



**தகுதி :**

ஆண்டு வருமான வரம்பு ரூ.11,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொது மேலாளர், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்

## கல்வி குடும்பத் திட்டம்

**48. ஆதிதிராவிடர் குடும்பத்தில் ஒரு நபர் பட்டம் / பட்டயப்படிப்பு படித்திருந்தால் தொழில் தொடங்க ரூ.15,000 முதல் ரூ.50,000 வரை வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

தொழில் அனுபவம் பெற்று இருக்க வேண்டும். (ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள்) இருக்க வேண்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## ஆதிதிராவிடர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) செயல்படுத்தும் திட்டங்கள்

**49. சுயவேலை வாய்ப்புக்காக 6 மாத பயிற்சி (பயிற்சி உதவித் தொகை மாதம் ரூ.350 வீதம்)**





**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**50. தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் மீட்பு மறுவாழ்வுத்திட்டம்**

**இத்திட்டம் ஒரு தேசிய திட்டமாகும். தொழில் தொடங்க திட்ட அதிகபட்ச அலகுத் தொகை ரூ.50,000. மானியம் ரூ.10,000மும், விளிம்புத் தொகை ரூ.7,500ம், வங்கிக்கடன் ரூ.32,500ம் வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

துப்புரவுப் பணியாளர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**51. துப்புரவுப் பணியாளரைச் சார்ந்தவருக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 6 மாத காலப் பயிற்சி. மாதம் ரூ.350 பயிற்சி ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

துப்புரவுப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

## ஆதிதிராவிடர் விவசாயிகள் மேம்பாடு

**52. வடிமுனைக் குழாய்க்கிணறு அமைக்க (பாசனத்திற்கு) மானியம் ரூ.10,000, வங்கிக்கடன் ரூ.10,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிட விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**53.நீர் இறைக்கும் பம்புசெட் வாங்க 5 எச்.பி.டீசல் மானியம் ரூ.7,000 வங்கிக்கடன் ரூ.7,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**54. நீர் இறைக்கும் பம்புசெட் மின்மோட்டார் வாங்க மானியம் ரூ.5,250 வங்கிக்கடன் ரூ.5,250**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் சொந்தக்கிணறு உள்ள விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**55. உழவு மாடு வாங்க மானியம் ரூ.3,000, வங்கிக்கடன் ரூ.3,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**56. 20 அம்சத் திட்டத்தின் கீழ் சிறுதொழில் செய்ய நிதி உதவி ரூ.1,000 (மானியம் ரூ.500, வங்கிக்கடன் ரூ.500)**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**57. விசைமருந்து தெளிப்பான் வாங்க (ஒரு மிதிவண்டியுடன்) மானியம் ரூ.3,000; வங்கிக்கடன் ரூ.3,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**58. ஒரு ஜோடி மாடுடன் கூடிய டயர் வண்டி வாங்க மானியம் ரூ.9750, வங்கிக் கடன் ரூ.9750**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

## தொழில்முனைவோர்க்குத் தொழில் ஆரம்பிக்க உதவிகள் வழங்குதல்

**59. நிதி உதவி ரூ.7,50,000 வரை. மானியம் ரூ.25,000, விளிம்புத் தொகை தாட்கோ 20% அல்லது அதிகபட்சம் ரூ.1,25,000 மீதம் வங்கிக் கடனாக வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**60. பெரிய திட்டங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் வாங்குவது உட்பட ரூ.30 இலட்சம் வரை (மானியம் ரூ.25,000, விளிம்புத் தொகை ரூ.12,500 மீதமுள்ள தொகை தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழகம், புதுதில்லி அளிக்கும்) மனுதாரர் பங்குத் தொகைரூ.10.00 இலட்சம் வரை 5%ம் ரூ.10 இலட்சத்திற்கு மேல் 8% ஆகும்.**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

## வீட்டுவசதி மற்றும் இதர திட்டங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கும் அவர்கள் வாழும் பகுதிகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகள்அனைத்தும் இத்துறை மற்றும் பல்வேறு துறைகளின்மூலம் செய்து தரப்படுகின்றது. இத்திட்டங்கள்குறித்த விவரங்கள் பின்வருமாறு:

**61. இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. கிராமப்புறத்தில் 3 சென்டும் நகராட்சிப் பகுதியில் 1.5 சென்டும் மாநகராட்சிப் பகுதியில் 1 சென்டும் வழங்கப்படும்**

**தகுதி :**

வீட்டுமனை சொந்தமாக இருக்கக்கூடாது. ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000. அரசுக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு ஆட்சேபணை அற்றவை என்றால் அந்த நிலத்திற்குப் பட்டா வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்)

## வீடுகள் கட்டித்தரும் திட்டம்

**62. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன**

**தகுதி :**

சொந்தமாக வீடற்றோர், மனைப்பட்டா வைத்திருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஊராட்சி மன்றத்தலைவர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## குடிநீர் வசதி

**63. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து தருதல்.**

**தகுதி :**

குடிநீர் வசதி இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர்.





## தெருவிளக்கு

**64. தெரு மின்விளக்கு வசதி**

**தகுதி :**

தெருவிளக்கு இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## ஒரு குடில் ஒரு விளக்கு

**65. கிராமப்புறத்தில் உள்ள குடிசைகளுக்கு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் விளக்கு வசதி செய்து தரப்படுகிறது.**



**தகுதி :**

கிராமத்தில் உள்ள குடிசைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம்/ ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலவலர்

## மயானம்

**66. மயானம் மற்றும் மயானத்திற்குச் செல்லும் பாதை வசதிகள் செய்து தருதல்**

**தகுதி :**

ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக மயானப் பாதை இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/ ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் அலுவலர்

## இணைப்புச் சாலை

**67. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்துத் தருதல்**

**தகுதி :**

குடியிருப்புக்குச் செல்ல இணைப்புச் சாலை இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## சமூகக் கூடங்கள்

**68. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சமூகக் கூடங்கள் கட்டித்தரப்படுகின்றன.**

**தகுதி :**

சமூகக்கூடங்கள் இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## ஈமச்சடங்கு உதவி

**69. ஏழ்மை நிலைமையில் உள்ள ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால், அந்த ஈமச்சடங்கிற்கு ரூ.500 மானியமாக அளிக்கப்படும்.**

தகுதி :

இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000க்குள் இருத்தல் வேண்டும்.

அணுக வேண்டிய அலுவலர் :

ஆணையர், ஊராட்சி ஒன்றியம்/ செயல் அலுவலர், பேரூராட்சி / பழங்குடியினர் நல அலுவலர், ஆணையர், நகராட்சி, மாநகராட்சி.

## கொத்தடிமை ஒழிப்புத் திட்டம்

70. கொத்தடிமைகளாக அடக்கிவைக்கப்பட்டிருப்பவர்களை விடுவித்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் வகையில் பொருளாதார மேம்பாட்டிற்கு ரூ.10,000 வரை மானியமாக அளிக்கப்படுகிறது. இதில் உடனடி



உதவியாக ரூ.1,000 ஒரு நபருக்கு வழங்கப்படும். பின்னர் திட்டங்கள் மூலம் ரூ.9,000 வழங்கப்படும்.

தகுதி :

சாதி, மத, பேதமில்லை, விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் அனைவரும்

அணுக வேண்டிய அலுவலர் :

மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆதிதிராவிடர் நல பழங்குடியினர் அலுவலர்

## பழங்குடியினர் நலம்

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக இந்தத்துறை மற்றும் பல்வேறு துறைகள் சீரிய பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

விழுப்புரம் கல்ராயன்மலை, திருவண்ணாமலை, ஜவ்வாதுமலை, பச்சைமலை பகுதியில் வாழும் பகுதியில் பழங்குடியின மக்களுக்குப் பின்வரும் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### தோட்டக்கலை மேம்பாடு :

71. ரூ.1,000 மதிப்புள்ள மரக்கன்றுகள், பட்டுப்புழு உரம் இலவசமாக வழங்கப்படும்

தகுதி :

பழங்குடியினர், 1 ஏக்கர் நிலம் உள்ளவர்

அணுக வேண்டிய அலுவலர் :

துணை / உதவி இயக்குநர், தோட்டக்கலைத்துறை

### பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் :

72. மல்பரி தோட்டம் ஏற்படுத்தவும், பட்டுப்புழு வளர்க்கவும் 50% முதல் 75% வரை மானியம் அளிக்கப்படுகிறது

தகுதி :

பழங்குடியினர் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர்

அணுக வேண்டிய அலுவலர் :

துணை / உதவி இயக்குநர், பட்டுப்புழு வளர்ப்பு

### சிறிய நீர்ப்பாசனத் திட்டம் :

73. பழங்குடியினர் அதிகம் நிலம் வைத்திருக்கும் பகுதியில் சிறிய நீர்தேக்க அணை போன்றவை ஏற்படுத்தப்படும்.

தகுதி :

பயன்பெறுவோரில் 50% மேல் பழங்குடியினராக இருக்க வேண்டும்.








அணுக வேண்டிய அலுவலர் :

செயற்பொறியாளர் (நீர்ப்பாசனம்), பொதுப்பணித்துறை

### கால்நடை பராமரிப்பு :

74. ஆடுகள், கறவை மாடு கன்றுகள் வாங்கி வளர்க்க மானியம் (50% முதல் 75% வரை) வழங்கப்படும். கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, கருவூட்டல் போன்றவைகளும் செய்து தருதல்.

தகுதி :

பழங்குடியினர்

அணுக வேண்டிய அலுவலர் :

உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை

### நீர்த்தடுப்புப் பணிகள் :

75. மலைச்சரிவில் உள்ள நிலத்தை நீர் அடித்துச் செல்லாமல் தடுத்து விவசாயம் செய்ய அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல் : இவை முழுவதும் இலவசமாக செய்து தருதல்

தகுதி :

நிலமுடைய பழங்குடியினர்

அணுக வேண்டிய அலுவலர் :

செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை

### தேனீ வளர்த்தல் :

76. தேன் சேகரிப்பது மூலம் வருமானத்தை அதிகரிக்க 10 தேன்பெட்டிகள் இலவசமாக வழங்குதல்

தகுதி :

மலை, காடு பகுதிகளில் வாழும் பழங்குடியினர்

அணுக வேண்டிய அலுவலர் :

துணை / உதவி இயக்குநர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம கைத் தொழில் வாரியம்.

### வன வளம் :

77. வனவளத்தை அதிகரிக்கச் செடிகள் வழங்குதல் : அந்தச் செடிகளைப் பராமரிக்க (அடுத்த ஆண்டு) ஊக்கத் தொகை வழங்குதல், வனவளம் சம்பந்தப்பட்ட வேலைகளைப் பழங்குடியினரைக் கொண்டே நிறைவேற்றுதல். இதனால் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கச் செய்தல்

தகுதி :

வனப் பகுதியில் வாழும் பழங்குடியினர்

அணுக வேண்டிய அலுவலர் :

மாவட்ட வன அலுவலர்

### லாம்ப் சொசைட்டி :

78. பழங்குடியினருக்கு வட்டியில்லாக் கடன் வழங்க / அவர்கள் விளை பொருட்களை நல்ல விலைக்கு விற்க / அரிசி, உப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் வழங்க/ விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்ய பொருளாதாரத் திட்டங்களுக்குக் கடன் போன்றவை பல நோக்கு என்னும் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) மூலம் வாங்குதல்

தகுதி :

பழங்குடியினர்

அணுக வேண்டிய அலுவலர் :

தனி அலுவலர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

## தெரு மின்விளக்கு :

**79. பழங்குடியினர் குடியிருப்புகளுக்குத் தெரு மின்விளக்கு அமைத்தல்**

**தகுதி :**

தெருவிளக்கு இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொறியாளர்; தமிழ்நாடு மின்சார வாரியம் /
ஆணையர், ஊராட்சி ஒன்றியம்

## இணைப்புச் சாலை வசதி :

**80. பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு முக்கிய கிராமத்துடன் அல்லது சமவெளியுடன் இணைத்துச் சாலை அமைத்தல்**

**தகுதி :**

தற்பொழுது சாலை இல்லாதிருத்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

கோட்டப் பொறியாளர், தேசிய
நெடுஞ்சாலைத்துறை

## தொகுப்பு வீடுகள் :

**81. இலவசமாக வீடுகள் கட்டித்தருதல்**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் /
ஆணையர், ஊராட்சி ஒன்றியம்

## தனி வேலைவாய்ப்பகங்கள் :

**82. பழங்குடியினர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்குரிய உதவிகள், ஆலோசனைகள் நல்க உதகமண்டலம் / சங்கராபுரம் / ஜவ்வாதுமலை / கொல்லிமலை ஆகிய இடங்களில் வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன.**

**தகுதி :**

பழங்குடியின இளைஞர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வேலைவாய்ப்புக்கான ஆலோசனை
மையத்திலுள்ள வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை அலுவலர், உதகமண்டலம்,
விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல்

## வேலைவாய்ப்புப் பயிற்சி :

**83. போதிய கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி அளித்தல்**

**தகுதி :**

கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்




**அணுக வேண்டிய அலுவலர் :**

பயிற்சிக்கான வழிகாட்டி மையம், சங்கராபுரம் –
விழுப்புரம் மாவட்டம், உதகமண்டலம்,
கொல்லிமலை – நாமக்கல் மாவட்டம்,
ஜவ்வாதுமலை – திருவண்ணாமலை மாவட்டம்

## பெண்களுக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி :

**84. பழங்குடியினர் பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி, மூங்கில் கூடை முடைதல் போன்ற பயிற்சி அளித்தல்**

**தகுதி :**

பழங்குடியினர் பெண்கள்





**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூக நலத்துறை அலுவலர்

**85. பந்தல் அலங்காரம், சமையல் பாத்திர வாடகை, ஒலி, ஒளி அமைப்பு நிறுவனம் அமைக்க பழங்குடியின மகளிர்க்கு 10 முதல் 15 நபர்கள் கொண்ட சுயநிதி உதவி குழுவுக்காக ரூ.15 இலட்சம் வழங்கும் திட்டம்**



**தகுதி :**

பழங்குடியினர் பெண்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை /
சென்னை மாவட்ட மேலாளர், தாட்கோ

## தனிநபர் தொழில் முனைவோர் உதவித் திட்டம் :

**86. தனியாகப் பெரிய/சிறிய அளவில் தொழில் தொடங்க விரும்பும் பழங்குடியினர்க்காகப் புதியதாக தொடங்கப்பட்டுள்ளது. திட்ட அதிகபட்ச அலகு ரூ.5 இலட்சம். உயர் அளவு மானியம் ரூ.25,000 விளிம்புத்தொகை 25% , விளிம்புத்தொகையும், மானியமும் சேர்த்து ரூ.1,25,000 க்கு மிகைப்படக் கூடாது. மானியமும், விளிம்புத்தொகையும் ரூ.1,25,000 இருக்குமேனில் வங்கிக்கடனாக ரூ.3,50,000 வழங்கப்படும்**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை /
சென்னை மாவட்ட மேலாளர், தாட்கோ

**87. மலைவாழ் இளைஞர்களுக்குச் சிறிய போக்குவரத்து வாகனங்கள் வழங்கும் திட்டம் :**

**இத்திட்டத்தின் கீழ் ரூ. 175 இலட்சம் செலவில் ஈப்பு மற்றும் ரூ.90 இலட்சம் செலவில் 20 மினி வேன்களும் வழங்கி வாடகை மற்றும் சுற்றுலா வாகனமாக பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. ரூ.47 இலட்சம் செலவில் மலைவாழ் மக்கள் சிறிய அளவில் பால்பண்ணை, கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் ஆடு வளர்ப்புத் தொழில்கள் தொடங்கி அதன் மூலம் பயனடைய நடப்பில் இத்திட்டங்கள் 20 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.**

**தகுதி :**

பழங்குடியினர் ஆண்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மேலாண்மை இயக்குநர் (தாட்கோ), சென்னை /
சென்னை மாவட்ட மேலாளர், தாட்கோ

★ ★ ★

## வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள்

வேளாண்மையை, முக்கிய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பாக, இந்த வகையை / பிரிவைச் சார்ந்தது என வரையறை செய்யப்படவில்லை. மாவட்ட மேலாளர்களே அந்த மாவட்டத்திற்குத் தேவையான/ அத்தியாவசியமான வேளாண் தொழிலை, அதன் தொடர்புடைய தொழிலை மேம்படுத்தும் பொருட்டு பயனாளிகளைத் தேர்வு செய்து பயன்பெறும் வகையில் கடன் வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மைத் திட்டங்கள் :**

இத்திட்டத்தின் மதிப்பீடு :

அலகுத் தொகை – ரூ.6,000த்திலிருந்து ரூ.50,000 வரை உள்ளது.

மானியத்தொகை – 50% ஆகும். இது திட்டத் தொகையில் அதிகபட்சமாக ரூ.15,000த்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

பயனாளிகளின் பங்குத் தொகை – திட்டத் தொகையில் 10% ஆகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் கொடுக்கப்படுகின்ற கடன்களுக்கு வழங்கப்படுகின்ற விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்தாளப்படுகின்றது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் பின்வருமாறு இனங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**5 குதிரை திறன் கொண்ட டீசல் பம்பு செட்டுகள்:**

தேவையான தகுதிகளாக, இரண்டு ஏக்கர் நிலம் சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்ட ஆதிதிராவிட விவசாயிகள் இக்கடன் பெற விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.



**இரட்டை மாடுகளுடன் கூடிய டயர் வண்டி :**

தேவையான தகுதிகளாக, இரண்டரை ஏக்கர் (2.5 ஏக்கர்) நிலம் சொந்தமாகவோ, குத்தகையாகவோ கொண்டுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர்.

**சைக்கிளுடன் கூடிய விசைத் தெளிப்பான் :**

தேவையான தகுதிகளாக, நிலமற்ற ஆதிதிராவிட விவசாய கூலிகள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர். மேலும் விசைத் தெளிப்பானைப் பயன்படுத்தும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

**உழவு மாடுகள்**

தேவையான தகுதிகளாக, இரண்டு ஏக்கர் நிலத்தினைச் சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்ட ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர்.

**விசை உழவு இயந்திரம்**

தேவையான தகுதிகளாக, மூன்று ஏக்கர் நிலத்தினை சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்டுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர். மேலும் மகளிர் சுய உதவி குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நெற்பயிர் கதிரடிக்கும் இயந்திரம்**

தேவையான தகுதிகளாக, மூன்று ஏக்கர் நிலத்தினை சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்டுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர். மேலும் மகளிர் சுய உதவி குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்குப் பயனாளிகள் அளிக்கப்பட வேண்டிய இதர இணைப்புக்கள் .

1. சாதிச்சான்றிதழ்
2. குடும்ப உணவு பங்கீட்டு அட்டை
3. சொத்துக்கான சிட்டா, அடங்கல்
4. திட்டத்திற்கான தொகை தேவைப்பட்டியல் மற்றும்
5. நிழற்பட நகல்

ஆகியன இரு பிரதிகள் வழங்கப்பட வேண்டும்.





**தொழில், பணி மற்றும் வர்த்தகம்**
**(வேளாண்மையைச் சார்ந்த திட்டங்கள்)**

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அலகுத் தொகை (அதிக பட்சமாக) | – | ரூ.40,000 |
| மானியத் தொகை 3% | – | ரூ.12,000 |
| வங்கிக் கடன் 60% | – | ரூ.24,000 |
| பயனாளிகளின் பங்குத் தொகை | – | ரூ.4,000 |

இதனைப் பொறுத்தவரையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஏற்ப, இத் திட்டத்திற்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் விளக்கங்கள் பின்பற்றப்படுகின்றன.

## தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்

**தனிநபர் திட்டங்கள் :**

இத்திட்டத்தின் பிரதான அம்சமாக ரூ.7,50,000 வரை கடன் வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| விளிம்புத் தொகை | – ரூ.1,25,000 அல்லது திட்டத் தொகையில் 20 சதவீதம், இவற்றில் குறைந்த தொகை |
| மானியத் தொகை | – ரூ.25,000 அல்லது திட்டத்தொகையில் 30 சதவீதம் இவற்றில் குறைந்த தொகை |
| பயனாளிகளின் பங்குத் தொகை | – திட்டத் தொகையில் 5 சதவீதம் ஆகும். |

இதுகுறித்து வழங்கப்பட வேண்டிய பட்டியல்கள் பின்வருமாறு உள்ளன. லாரி, டிராக்டர், பவர் டில்லர், சுற்றுலா கார், மினிவேன், ஆட்டோ ரிக்ஷா, கோழிப்பண்ணை, மினி பால்பண்ணை, ரெடிமேட் துணிக்கடை, புளூ மெட்டல் தொழில், கணிப்பொறி மையம், ஜெராக்ஸ் மிஷின் மற்றும் இதர தொழில்கள். ஆகவே, இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் ஒரு சில எடுத்துக்காட்டுகளே ஆகும்.



**குழுத் திட்டங்கள்**

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குழுவும் 10 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைகின்றது. இதன் மதிப்பீடு பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அ. அலகுத் தொகை ரூ.15,000 x 10 உறுப்பினர்கள் | – | ரூ.1,50,000 |
| ஆ. மானியத் தொகை 50 சதவீதம் அல்லது ரூ.10,000 இவற்றில் குறைவான தொகை | – | ரூ.1,00,000 |
| இ. பயனாளிகளின் பங்குத் தொகை 5 சதவீதம் (ரூ.2500 x 10) | – | ரூ.25,000 |
| ஈ. நிதி நிறுவனங்களின் கடன் தொகை (ரூ.37,500 x 10) | – | ரூ.3,75,000 |

இத்திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தினை மேம்படுத்தும்/ வளர்ச்சியடையச் செய்யும் நலக்குழுக்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

## சுயதொழில் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்

**சுய தொழில் பயிற்சித் திட்டம் :**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக ஆதிதிராவிட ஆடவர், பெண்டிர் குறிப்பிட்ட தொழிலில் திறமை பெற்று கிராமப்புற குடிசைத் தொழிலில் சுய வேலை வாய்ப்பினைப் பெறச் செய்வதே ஆகும். இதன் மதிப்பீடு பின் வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| மாதாந்திர உதவித் தொகை | – | ரூ.500 |
| மாதாந்திர பயிற்றுவிப்போர் கட்டணம் | – | ரூ.200 |
| மாதாந்திர உபகரணப் பொருள் வாங்குவதற்கான கட்டணம் | – | ரூ.100 |

மேலே கண்டவாறு, ஒவ்வொரு மாணவர்களும், பெறும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இத்திட்டத்திற்குத் தேவையான தகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளது.



2. குறைந்த கல்வித் தகுதியாக பட்டப் படிப்பு தேர்வு செய்திருத்தல் வேண்டும்.

**தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திட்டம்**

**உயர்ந்த தொகை திட்டம் மற்றும் போக்குவரத்துத்துறை திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், மாநில அளவிலான பட்டியலினத்தோர் மேம்பாட்டுக் கழகமும் சேர்ந்து பல்வேறு நலத்திட்டங்களைக் குறைந்த வட்டி வீதத்தில் பொருளாதாரத்திற்கு உகந்தவாறு சுய தொழில் விவசாயம், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை, குறைந்த நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறு தொழில், பணிசேவை மற்றும் போக்குவரத்துத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது.

அ. விண்ணப்பதாரர் 18 முதல் 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

ஆ. குடும்ப வருட வருமானம் ரூ.31,952 க்கு மிகாமலிருத்தல் வேண்டும்.

இ. பயிற்சியாளர்களின் இருப்பிடத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்குள் பயிற்சி நிறுவனங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரர்களின் கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பு அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

மேலும் இத்திட்டமும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில், பழைய திட்டமான சுயவேலை வாய்ப்புப் பயிற்சி திட்டத்தின் அமைப்பின் அடிப்படையில் இப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**ஓராண்டு கணிப்பொறி பயிற்சித் திட்டம்:**

இப்பயிற்சியின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அந்த மாவட்டங்களிலிருந்து மாவட்ட மேலாளர்கள் மூலம் மாணவர்கள் தேர்வு செய்து, தாட்கோ தலைமை அலுவலகத்தில் பெறப்படுகின்றது.

இப்பயிற்சி குறித்து வழங்கப்படும் பாடத் திட்டங்கள் சம்பந்தமாகவும், நிறுவனங்கள் தேர்வு செய்வது தொடர்பாகவும், தாட்கோ தலைமை அலுவலகத்திலிருந்து தெளிவான விவரங்கள் மாவட்ட மேலாளருக்குத் தெரிவிக்கப்படும். இப்பயிற்சியில் சேர தகுதிகள் பின்வருமாறு உள்ளது.

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

1. பயனாளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

2. பயனாளிகள்/பட்டியலினத்தோர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சட்டப்படி நிறுவப்பட்ட அமைப்பு ஆகியவற்றின் மூலம் பெறப்படும் ஆண்டு வருமானம் கிராமப்புறத்திற்கு ரூ.3,195ம், நகர்ப்புறத்திற்கு ரூ.42,412ம் அதிகப்படாமலும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் பெறப்படும் வருமானம் இரு மடங்கிற்கு மேல் மிகாமலும் இருத்தல் வேண்டும்.

3. மேலும், தனிநபர், கூட்டு பங்கு நிறுவனம் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் மூலம் அமைக்கப்படும் சொத்துகள் அடிப்படையில் வருமானம் உருவாக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில், தாட்கோவில் செயல்படுத்தப்படும் பிரதான திட்டங்கள் பின்வருமாறு உள்ளன.

1. உயர்ந்த தொகைப் பிரிவுத் திட்டங்கள்

2. போக்குவரத்துப் பிரிவுத் திட்டங்கள்

3. வேளாண்மைப் பிரிவுத் திட்டங்கள்

நிதி ஒதுக்கீடு விவரம் பின் வருமாறு அமைந்துள்ளன.

பருவக் கடனைப் பொறுத்தவரையில், ரூ.30 இலட்சம் வரையிலும் உள்ள திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் உதவி வழங்கப்படுகிறது.

பயனாளிகளின் பங்குத் தொகை பின்வருமாறு உள்ளன.





| வ. எண். | திட்ட அலகுத் தொகை (ரூபாயில்) | பயனாளிகளின் குறைந்த பட்ச பங்குத் தொகை (சதவீதத்தில்) | குறிப்புரை |
|---|---|---|---|
| 1. | 1 இலட்சம் வரை | இல்லை | பயனாளிகளின் பங்குத் தொகை அடுக்குமுறை அடிப்படையில் அமையாது. |
| 2. | 1 இலட்சம் முதல் 2.5 இலட்சம் வரை | 2 | |
| 3. | 2.5 இலட்சம் முதல் 5.0 இலட்சம் வரை | 3 | |
| 4.. | 5.0 இலட்சங்களுக்கு மேல் | 5 | |

திட்ட மதிப்பீட்டில் பருவக் கடன் அதிகபட்சமாக 90% நிதியினை மாநில அளவிலான முறைப்படுத்தும் முகமையின் உதவித் தொகை மற்றும் திட்டத்தின் பிற நிதி ஆதாரங்களையும்/மானியத்தையும் கருத்தில் கொண்டு வழங்கப்படும்.

வட்டி விகிதம் 5 இலட்சம் வரை 7% ஆகவும், 5 இலட்சத்திற்கு மேல் வழங்கப்படும் என்.எஸ்.எப்டி.சி. அலகுக் கடன்களுக்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய தொகை 9% ஆகவும் உள்ளது. இதுவும் அடுக்குமுறை அடிப்படையில் அமையாது.

பருவக் கடன், காலாண்டு/ அரையாண்டு/ முழு ஆண்டு காலத் தவணைகளில் 10 ஆண்டுகளுக்குத் திருப்பிச் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

**நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் குறுகிய காலக் கடன் வசதித்திட்டம்**

இத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் குறைந்த அளவே, அலகுத் தொகையாக உள்ளது. இத்திட்டத்திற்கென, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், இலக்கு நிர்ணயம், தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் அடிப்படையில் மாவட்ட மேலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து மாவட்ட மேலாளர்கள் மூலம் அந்த மாவட்டங்களிலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் அமைப்பையும், அரசு சார்பற்ற அமைப்பையும், கவனத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு உள்ளன.

| | |
|---|---|
| அலகுத் தொகை | – ரூ.10,000 இத்தொகை முழுவதும் என்.எஸ்.எப்டி.சி.யையே சாரும். இது ஒரு பருவக் கடனாகும். |
| விளிம்புத் தொகை மற்றும் மானியங்கள் | – இல்லை |
| கடன் தொகை | – 36 மாத தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும் |
| வட்டி வகிதம் | – 7 சதவீதம் |

இது தவிர, இத்திட்டத்தினால் மகளிர் மற்றும் மகளிர் குழுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

**தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்**

இத்திட்டம் குறித்து, ஏற்கெனவே தாட்கோ தலைமையிடத்தில் விவரங்கள் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள நிதிகளுக்கு ஏற்ப உரிய விண்ணப்பங்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதில் திட்டத் தொகையாக என்.எஸ்.எப்டி.சி.யின் மூலம், அனுமதிக்கப்பட்ட தொகையை உள்ளடக்கியதாகும்.

**பழங்குடியினருக்கான தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் ஒருங்கிணைக்கப்பட்டு, குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட மேலாளர்கள், பழங்குடியினரை ஆய்வு செய்து, குழுக்களை ஏற்படுத்தி, அவ்விவரங்களை உடன் தாட்கோ, தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தி நிதியினைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

| | |
|---|---|
| அலகுத் தொகை (ரூ.50,000 x 10 உறுப்பினர்) | -- ரூ.5,00,000 |
| மானியத் தொகை 50 சதவீதம் அல்லது ரூ.10,000 (இவற்றில் குறைந்த தொகை ) | -- ரூ.1,00,000 |
| விளிம்புத் தொகை (20 சதவிகிதம்) | -- ரூ.1,00,000 |
| நிதி நிறுவனங்களின் கடன் தொகை | -- ரூ.3,00,000 |

எஸ்.எல்.ஆர்.எஸ்.–மறு வாழ்வுத் திட்டங்கள் மற்றும் சுய தொழில் பயிற்சி

இத்திட்டத்திற்கு, மாவட்ட மேலாளர்கள் பணியாளர்களைத் தேர்வு செய்து, குழுக்களை ஏற்படுத்தி விவரங்களை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ★

## 1. பள்ளிப்படிப்பு உதவித் தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ/மாணவியருக்கும் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் இலவச பாடப்புத்தகங்களும், இரண்டு தொகுதி சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட
பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## 2. பள்ளி மேல் படிப்பு உதவித்தொகை

மேல்நிலைப் பள்ளி முதல் கல்லூரி/பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ/மாணவியருக்கு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவற்றில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாக வழங்கப்படுகின்றன.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட
பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## 3. இலவசக் கல்வி

கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டு கல்வி நிறுவனங்களுக்கு அதற்கான தொகை ஈடு செய்யப்படுகிறது.

### அ) பட்டப்படிப்பு வரை :

10ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு இச்சலுகை அளிக்கப்படுகிறது.

**உதவி பெறுவதற்கான தகுதி :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயின், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். மேலும் மனுதாரரின் குடும்பத்தில் பட்டதாரி எவரும் இருத்தல் கூடாது.

மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு நிபந்தனை ஏதும் இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட
பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

### ஆ) தொழிற் கல்வி :

பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை, சட்டம் போன்ற தொழிற்கல்வியிலும் பல்தொழில் பட்டயப்படிப்பிலும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ/மாணவியருக்கு இச்சலுகை அளிக்கப்படுகிறது.








**உதவி பெறுவதற்கான தகுதி :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். மேலும், மனுதாரர் அவர் தம் குடும்பத்தில் தொழிற்கல்வி பட்டயப்படிப்பு பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட
பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## பரிசுத் திட்டம் :

### மாநில அளவிலான பரிசு

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் மாநில அளவில் உயர் மதிப்பெண் பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவியர் ஒருவருக்கும் பின்வருமாறு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு | மிகப் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர்ராயின். | ரூ.3,000 |
| | பிற்படுத்தப்பட்டவராயின் | ரூ.1,500 |
| பனிரெண் டாம் வகுப்பு | மிகப்பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் | ரூ.5,000 |
| | பிற்படுத்தப்பட்டவராயின் | ரூ.3,000 |

### மாவட்ட அளவிலான பரிசு

மாவட்ட அளவில் பனிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவியர்.

| | |
|---|---|
| மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் | ரூ.3,000 |
| பிற்படுத்தப்பட்டோர் | ரூ.1,500 |

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மூன்று மாணவர் மற்றும் மூன்று மாணவியர்

| பரிசு | மிகப்பிற்படுத்தப் பட்டோர்/சீர்மரபினர் | பிற்படுத்தப் பட்டோர் |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ.1,000 | ரூ.500 |
| 2ஆம் பரிசு | ரூ.500 | ரூ.250 |
| 3ஆம் பரிசு | ரூ.300 | ரூ.150 |

★ ★ ★

### அண்ணா நினைவுப் பரிசு

மாவட்ட அளவில் பனிரெண்டாம் வகுப்புத் தேர்வில் முதல், இரண்டு இடங்கள் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இருவர் மற்றும் மாணவியர் இருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3,000 விதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

### மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு ஊக்கப் பரிசு :

மூன்றாம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையில் பயிலும் 60,000 மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு (வகுப்பிற்கு 20,000 மாணவியர்கள்) நபர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500 விதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல், 6ஆம் வகுப்பில் பயிலும் 30,000 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 விதம் ஆண்டொன்றுக்கு (10 மாதங்களுக்கு) ரூ,1,000 வழங்கப்படுகிறது.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட
பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### இலவசக் கருவிகள்

முடிதிருத்துவோருக்கான கைப்பெட்டிகள், துணிதேய்ப்புப் பெட்டிகள், கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மேற்கூறப்பட்டுள்ள பூர்வீகத் தொழிலை மேற்கொள்ளும் மிகப்பிற்படுத்தப்பட்ட பிரிவினராக இருத்தல் வேண்டும். பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

* * *

### மானியத்துடன் கூடிய கடனுதவி

முடிதிருத்தும், சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| | மானியம் | கடனுதவி |
|---|---|---|
| முடிதிருத்தகம் | ரூ.1,500 | ரூ.3,500 |
| சலவையகம் | ரூ.1,500 | ரூ.3,500 |
| நடமாடும் சலவையகம் | ரூ.600 | ரூ.2,000 |

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மேற்கூறப்பட்டுள்ள பூர்வீகத் தொழிலை மேற்கொள்ளும் மிகப்பிற்படுத்தப்பட்ட பிரிவினராக இருத்தல் வேண்டும். பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

* * *

### இலவச வீட்டுமனை

கிராமப்புறங்களில் வசிக்கும் மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பிற்படுத்தப்பட்ட மற்றும் முன்னேறிய பிரிவினருக்கும் 3 சென்ட் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

ஆண்டு வருமானம் ரூ.12,000–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

* * *

### வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகைப்படாமல் உள்ளவர்களுக்கு பின்வரும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

| வ. எண். | பயிற்சி | பயிற்சியாளர் எண்ணிக்கை | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| 1. | கணினிப் பயிற்சி | 1,000 | 6 மாதம் |
| 2. | கணினிப் பயிற்சி (சிறப்புப் பாடத்திட்டம்) | 500 | 6 மாதம் |





| | | | |
|---|---|---|---|
| 3. | கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 2,000 | 3 மாதம் |
| 4. | தானியங்கி பொறியியல் | 50 | 12 மாதம் |
| 5. | குளிர்சாதன/ குளிர்பதனப் பெட்டி பழுது பார்த்தல் | 100 | 6 மாதம் |
| 6. | அலங்கார ஆடை வடிவமைப்பு | 20 | 6 வாரம் |
| 7. | ஆடை தயாரிப்பு | 20 | 8 மாதம் |
| 8. | கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல் | 20 | 8 மாதம் |
| 9. | துணைச் செவிலியர் | 250 | 12 மாதம் |
| 10. | பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல் | 25 | 6 மாதம் |
| 11. | தோல் பொருட்கள் தயாரித்தல் (குறுகிய கால பயிற்சி) | 130 | 6 மாதம் |
| 12. | தோல் பொருட்கள் தயாரித்தல் (நீண்ட காலப் பயிற்சி) | 92 | 15 மாதம் |
| 13. | தையல் இயந்திரம் இயக்குதல் | 90 | 2 மாதம் |
| 14. | அலுவலக செயலர் பயிற்சி | 200 | 6 மாதம் |
| 15. | தட்டச்சுப் பயிற்சி | 900 | 6 மாதம் |
| 16. | சுருக்கெழுத்துப் பயிற்சி | 300 | 12 மாதம் |
| 17. | தொலைபேசி இயக்குதல் | 200 | 1 மாதம் |



| | | | |
|---|---|---|---|
| 18. | தகவல் தொழில்நுட்பம் | 5,000 | 12 மாதம் |
| 19. | பிளாஸ்டிக் உற்பத்தி தொழில் நுட்பவியல் | 60 | 25 வாரம் |
| 20. | மருத்துவ சோதனைக்கூட தொழில்நுட்பம் | 20 | 12 மாதம் |

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சிகளுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், இதர பயிற்சிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம்

* * *

### தொழில் கடனுதவி

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சுயதொழில் தொடங்க குறைந்த வட்டி விகிதத்தில் திட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்/ தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

* * *

## சிறுபான்மையினருக்கான நலத்திட்டம்

### தொழில் கடனுதவி

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறுபான்மையின மக்களுக்குச் சுயதொழில் தொடங்க குறைந்த வட்டி விகிதத்தில் திட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்/ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

* * *

## அளிக்கப்படும் சேவைகள் :

### ஆவணங்கட்கு சட்டபூர்வ தன்மை அளித்தல்

தாக்கல் செய்யப்படும் ஆவணங்கட்கு இத்துறை பதிவு செய்வதின் வழி சட்டபூர்வ தன்மையை அளிக்கின்றது. பதிவுச் சட்டம் ஆவணத்தை பதிவு செய்ய வழிவகுக்கிறது. மாறாக அதனில் கூறப்படும் செயலைப் பதிவு செய்யவில்லை.

இப்பதிவு சொத்தின் மீதான உரிமையை உறுதி செய்யாது.

சொத்தினை விற்பவருக்கு அத்தகு உரிமை உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியது வாங்குபவர் கடமை.

### பதிவின் பலன்

சிலவகை ஆவணங்கள் கட்டாயமாகவும், சில விருப்பப்படியும் பதிவு செய்திட வரையறுக்கப்பட்டுள்ளது.

கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லையெனில் அவை செல்லுந்தன்மையை இழக்காது. ஆயினும் இத்தகு ஆவணங்களில் பதிவுற்றவை, பதிவுறாத ஆவணங்களை விட முன்னுரிமை பெறுகின்றன. பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லையெனில் அவை சாட்சிய ஆவணங்கள் அல்ல. இருப்பினும் கடந்த கால நிகழ்ச்சிகட்கு சாட்சியமாக ஏற்கப்படலாம். சட்டத்தின் முன் உங்கள் உரிமையை நிலைநாட்ட அனைத்து ஆவணங்களையும் பதிவு செய்து கொள்ளுங்கள்.

### பதிவுகள் பாதுகாப்பு மற்றும் சான்றிட்ட நகல் வழங்கல்

பதிவுற்ற அலுவலகங்களில் ஆவணங்களின் நகல்கள் நிரந்தரமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

அசையாச் சொத்து சம்பந்தப்பட்ட 1 புத்தகத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் பதிவுகள் மற்றும் பதிவு மறுப்புக்கான காரணம் அடங்கிய 2 புத்தகம் பதிவுகள் யார் வேண்டுமென்றாலும் ஆய்வு செய்து சான்றிட்ட நகல் பெறலாம். உயில்கள் மற்றும் தத்து ஆவணங்கள் பதிவு செய்யப்படும் 3 புத்தக ஆவண நகல்கள் எழுதி வைத்தவரின் அல்லது அவரது முகவருக்கு மட்டுமே வழங்கப்படும். அவரது மறைவுக்குப் பின் யார் வேண்டுமென்றாலும் பெறலாம்.

பலவகை ஆவணங்கள் கொண்ட 4 புத்தக பதிவுகள் எழுதித் தரும் அல்லது பெறும் நபர்கட்கு மட்டுமே வழங்கப்பெறும். வில்லங்க சான்று மற்றும் சான்றிட்ட நகல்களை வரையறை செய்யப்பட்ட கட்டணம் செலுத்தி அஞ்சல் வழியிலும் பெறலாம்.




### திருமணப் பதிவு

மாவட்டப் பதிவாளர்கள், சார் பதிவாளர்கள் இந்து அறநிலையத்துறை கோயில் நிர்வாக அலுவலர்கள் இந்து திருமணச் சட்டத்தின் கீழ், தம் எல்லைக்குள் திருமணப் பதிவாளர்கள் ஆவர். இந்து மதத்தைச் சேர்ந்த ஆண், பெண் இருவரிடையே, எந்த முறைப்படியும் நடத்தப்பெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம்.





மணமகளுக்கு 18 வயதும், மணமகனுக்கு 21 வயதும் நிறைவுற்று இருக்க வேண்டும்.

இந்துத் திருமணம் பதிவு கட்டாயமில்லை, எனினும் எதிர்கால பயன் கருதி தாமாகவே திருமணத்தை பதிவு செய்து கொள்ள பொதுமக்கள் முன்வரவேண்டும். வெளிநாடு செல்ல நுழைவிசைவு பெறல் போன்ற சமயங்களில் தேவைப்படும்போது பதிவுக்கு அவசரப்படுதலைத் தவிர்த்து திருமணத்தின் போதே பதிவு செய்து கொள்ளலாம்.

மணமகன் அல்லது மணமகள் இருப்பிடத்தில் அல்லது திருமணம் நடைபெறும் இடத்தில் பதிவு செய்து கொள்ள வசதி உள்ளது. திருமணப் பதிவு மனுவில் சரியான விவரங்களை அளித்து, பின்னர் திருத்தம் செய்து கொள்வதைத் தவிர்க்கலாம்.

### தனித் திருமணம்

தனித்திருமணச் சட்டத்தின் கீழ் மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார் பதிவாளர்கள் திருமண அலுவலர்கள். எம்மதத்தைச் சார்ந்தோரும் செய்து கொள்ளும் திருமணம் இதனில் பதிவு செய்யப்படலாம். மணமகன் மற்றும் மணமகள் முறையே 21 மற்றும் 18 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள திருமண அறிவிப்பு திருமண அலுவலருக்கு அளித்திடல் வேண்டும். அறிவிப்பு அளித்திட்ட 30 நாட்கள் கழித்து பதிவுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லையெனில், 3 மாதங்களுக்குள் திருமணப் பதிவு செய்யப்படும். இல்லையெனில் பதிவு செய்திட மீண்டும் அறிவிப்பு செய்ய வேண்டும்.

### இந்திய கிருத்துவ திருமணம்

இந்திய கிருத்துவ திருமணச் சட்டத்தின் கீழ் திருமணப் பதிவாளர்களை அரசு நியமிக்கின்றது. இத்தகு திருமணப் பதிவாளர்களால் நடத்தப்படும் திருமண விவரங்கள், சென்னை–28இல் உள்ள பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும். திருமண வடிப்புகள் பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெறலாம்.

### பார்சி திருமணம்

மாவட்டப் பதிவாளர்கள் பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் திருமணப் பதிவாளர்கள் ஆவர். பார்சி மதகுருக்களால் நடத்தப்படும் திருமண விவரங்கள் பதிவாளருக்கு அனுப்பப்படும். இச்சட்டத்தின் கீழ் திருமணங்கள் கட்டாயப் பதிவிற்குட்பட்டவை.

### பிறப்பு மற்றும் இறப்பு வடிப்புகள்

கட்டாயமாக பதிவு செய்யப்படவேண்டிய பிறப்பு மற்றும் இறப்புகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் பதிவு செய்யப்படுகின்றன. பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் பதிவேடுகள் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டதும் அந்த எல்லைக்குட்பட்ட சார் பதிவகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

இப்பதிவேடுகளின் வடிப்புகள் உரிய கட்டணம் செலுத்தி பெறலாம்.

### சீதன தடைச்சட்டம்

நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரதட்சிணை கேட்டல் அல்லது பெறுதல் சீதன தடைச்சட்டத்தின்படி ரூ.5,000 வரை அபராதமும், 6 மாதம் வரை சிறை தண்டனையும் அல்லது இரண்டும் விதிக்கத்தக்க தண்டனை ஆகும். இச்சட்டத்தின் கீழ், குற்ற வழக்கு தொடர மாவட்டப் பதிவாளர்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

### சீட்டுகள்

சீட்டுகளில் சேரும் முன், அவை பதிவுற்ற சீட்டுதானா என்பதை உறுதி செய்துகொண்டு சேர எச்சரிக்கப்படுகின்றனர். பதிவுறா சீட்டில் சேர்ந்து அல்லலுறும்போது துறை அவர்களைக் காப்பாற்ற வழி இல்லை. பதிவுறா சீட்டு நடத்துதல் குற்றமாகும்.

### சங்கங்கள் பதிவு

மொத்த உறுப்பினர்கள் 20–க்கு குறையாமலும் ஆண்டு வரவு அல்லது செலவு ரூ.10,000–க்கு குறையாமலும் உள்ள சங்கங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டியவை. பதிவுற்ற சங்கங்கள் ஆற்ற வேண்டிய சட்ட தேவைகள் உள்ளன. இத்தகு தேவைகளை நிறைவு செய்யவிலையெனில் பதிவு ரத்து செய்யப்பட வழி வகுக்கும். சங்க நிதி அதன் நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படல்வேண்டும். சங்க நிதியை உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ள இயலாது. பதிவுற்ற சங்கம் உரியவாறு செயல்படவில்லை என்றாலோ, தமிழ்நாடு சங்கப் பதிவு சட்ட வரையறைகட்கு முரணாக செயல்பட்டாலோ, அச்சங்க நிர்வாகக் குழுவை கலைத்து அதனை நிர்வகிக்க ஒரு சிறப்பு அலுவலரை நியமிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

### கூட்டு நிறுவனம்

மாவட்டப் பதிவாளர்கள் தங்கள் எல்லைக்குள் கூட்டு நிறுவனப் பதிவாளர்கள் ஆவர். இரண்டு பேருக்கு குறையாத பங்குதாரர்களைக் கொண்ட கூட்டு நிறுவனம், மாவட்டப் பதிவாளரால் பதிவு செய்யப்படும்.

அஞ்சல் வழியும், கூட்டு நிறுவன பதிவு மனு அனுப்பப்படலாம். பதிவுற்ற கூட்டு நிறுவனம் ஒவ்வொன்றும் கடந்த ஆண்டில் செயல்பட்டமைக்கான உறுதிமொழி ஒன்றினை கோர்வை செய்ய வரையறை உள்ளது.



## பதிவு – பொதுமக்களின் உரிமைகளும், கடமைகளும்

1. பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களில் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் அளித்து அதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்திய நிலையில் ஆவணத்தைப் பதிவு செய்து தாக்கல் செய்த மூன்றாம் நாள் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

   சில சிறப்பு நிகழ்வுகளில், முன்னதாக மனுச்செய்து உரிய கட்டணம் செலுத்திய பின், உங்கள் இல்லத்திலேயே ஆவணத்தைப் பதிவுக்கு தாக்கல் செய்திடலாம்.

   அலுவலக நேரம் தவிர்த்து பிற நேரங்களில் பதிவு அலுவலர் தனியாக இருப்பிடப் பதிவுக்கு வருவார்.

   மாவட்டப் பதிவாளர்களிடம் பாதுகாப்பிற்காக உயில் ஆவணங்களை மூடி முத்திரையிட்ட உறையில் ஒப்படைக்கலாம்.

2. உங்களால் செலுத்தப்படும் தொகைகட்கு உரிய ரசீது பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

3. முத்திரைத்தாள் தாக்கல் செய்த நான்காம் நாள் சான்றிட்ட ஆவண நகல் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

4. மனுச்செய்த 8ஆம் நாள் வில்லங்கச் சான்று பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

5. பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவு வடிப்புகள் மூன்றாம் நாள் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

### கடமைகள்

உங்களுக்கு கீழ்க்கண்ட தலையாய கடமைகள் உள்ளன.

1. பதிவுப் பணிக்கு வரையறுக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் கட்டணங்களை உடன் செலுத்துதல் வேண்டும். வரையறுக்கப்பட்ட கட்டண விவரங்கள் எல்லா பதிவு அலுவலக அறிவிப்பு பலகைகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. இதற்கென வெளியிடப்பட்டுள்ள கையேட்டிலும் இந்த விவரங்கள் உள்ளன.

2. பதிவு சேவையை தாமதமின்றி பெற சட்டத் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்க.

3. பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களில் அதன் தன்மை மற்றும் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் நிர்ணயம் செய்ய தேவைப்படும் முழு விவரங்களையும் அளித்திடுக. தவறின் குற்ற வழக்கு நடவடிக்கைகளை சந்திக்க வேண்டும்.

உரிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவது தொடர்பாக துறை அலுவலர்களை மட்டுமே அணுகவும்.

### குடிமகனை விவரங்களை அறிந்த நிலையில் வைத்தல்

பதிவுத்துறை அலுவலர்கள் உங்களுக்கு தேவைப்படும் எந்த விவரங்களையும் அளித்திட எப்போதும் விழைகின்றனர்.





அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் விவரங்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

அலுவலக நேரங்களில் உங்களுக்காகத் தேவைப்படும் தகவல்களை அளித்திட சார் பதிவாளர்கள் சித்தமாக இருக்கின்றனர். அவர்கள் பதிவு பொதுமக்களுக்கு தகவல் தரும் மையங்களாக செயல்படுகின்றனர்.

அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. பதிவு பொதுமக்கள் தங்கள் கருத்து, புகார் இவைகளை இதனில் சேர்க்கலாம்.

இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஆலோசனைகளைச் செயல்படுத்திடவும், குறைகளைக் களையவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்து மாவட்ட மண்டல அலுவலர்கள் எல்லா திங்கள்கிழமை வேலைநாட்களிலும் தங்கள் தலைமையகத்தில் இருந்து உங்கள் குறைகளைக் கேட்க இருப்பார்.

### சேவையில் தவறு நேரின்

உங்கள் தகவல் தேவைகட்கு உரிய பதில் கிடைக்காவிட்டாலும் (அல்லது) சட்டப் படியான தேவைகளை நிறைவு செய்த பின்னும் காலக்கெடு வரையறுக்கப்பட்ட பணிகளில் தாமதம் இருப்பின் (அல்லது) பதிவுச் சேவைகட்கு கூடுதல் தொகை கேட்கப்படின், சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர், மண்டல துணைத் தலைவர்கள் அல்லது சென்னையில் உள்ள பதிவுத்துறைத் தலைவரையோ நேரடியாக அல்லது கடிதம் வழி தொடர்பு கொண்டு உங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம்.

### சட்டப் பூர்வ தீர்வுகள்

1. ஆவணம் பதிவு மறுக்கப்படின் ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளரிடம் மேல் முறையீடு செய்திடலாம்.

2. பதிவுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட கூடுதலாக 4 மாதங்கள் வரை காலதாமதம் ஏற்க சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்களிடம் மனுச் செய்யலாம்.

3. ஆவணத்திற்கு குறைவு முத்திரைத்தீர்வை மற்றும் அபராதம் செலுத்தக் கோரும் மாவட்டப் பதிவாளரின் ஆணை மீது பதிவுத்துறை தலைவருக்கு (முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி) மேல்முறையீடு செய்திடலாம். பதிவுத்துறை தலைவர் உங்கள் தரப்பு வாதங்களைக் கேட்டு இறுதி ஆணையிடுவார்.

4. வழிகாட்டி மதிப்பை நீங்கள் ஏற்க மறுப்பின் உங்கள் ஆவணம் மதிப்பு நிர்ணயம் செய்திட தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பப்படும். அவர் இடத்தைப் பார்வையிட்டு மதிப்பு நிர்ணயம் செய்வார்.




5. கெட்டுப்போன அல்லது பயன்படுத்தாத முத்திரைத்தாள் தொகை திரும்பக் கோரும் மனு மீதான மாவட்ட ஆட்சியர் ஆணை மீது பதிவுத்துறைத் தலைவருக்கு மேல்முறையீடு வழித்தடம் உள்ளது.

6. சங்கப் பதிவு மறுப்பு, பதிவுற்ற சங்கப் பதிவு நீக்கம் அல்லது ரத்து ஆவணங்கள் மீது பதிவுத்துறைத் தலைவருக்கு மேல் முறையீடு செய்திடலாம்.

★ ★ ★

**நலத்திட்டத்தின் பெயர் :**

### 1. படித்து வேலையில்லா இளைஞர்களுக்குப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்

**தகுதி :**

குறைந்த அளவு கல்வித்தகுதி 8ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சியின்மை அல்லது ஐ.டி.ஐ. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 முதல் 35 வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும். பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு 45 வயது வரை அனுமதிக்கப்படுகிறது. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.40,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருபவராக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையங்கள்

### 2. மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

**தகுதி :**

விண்ணப்பிக்கும் மகளிர் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையங்கள்

### 3. மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய ஒன்றியங்களுக்கான மாநில முதலீட்டு மானியம்

| இடஅமைவு | உதவி விகிதம் | தகுதியான உயரளவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| மிகவும் பின்தங்கிய 71 ஒன்றியங்கள், சிப்காட் தொழிற்பேட்டைகள் புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பேட்டையில் உள்ள சிட்கோ வளாகம், டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டை, திருவான்மியூர், சோழிங்கநல்லூரில் உள்ள மின்னணு நகரம் மற்றும் பெருங்குடி தொழிற்பேட்டை | 20% | 20 |
| பின்தங்கிய 216 ஒன்றியங்கள், இதர சிப்காட் தொழில் வளாகங்கள், சிட்கோ மற்றும் இதர அரசு சார்பு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகள் | 15% | 15 |

### 4. சிறப்பு முதலீட்டு மானியம் (குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும்)

| | | |
|---|---|---|
| மின்னணு தொழில் | 20% | 20 |
| தோல் பொருட்கள் | 20% | 20 |
| மோட்டார் வாகனம் தயாரிப்பதற்கான துணைத் தொழில்கள் | 20% | 15 |







மருந்து மற்றும் மருத்துவப்பொருட்கள், உணவுப்பொருட்கள் பக்குவப்படுத்தும் தொழில்கள், சூரிய சக்தி கருவிகள் தயாரிக்கும் தொழில்கள், ஏற்றுமதிக்குரிய தங்கம் மற்றும் வைர ஆபரணத் தொழில்கள், சணல் பக்குவப்படுத்தும் ஆலைகள் (கீழ்க்கண்ட தாலுக்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டும்)

அம்பாசமுத்திரம், கும்பகோணம், செங்கற்பட்டு, மதுரை, முசிறி, பண்ருட்டி. மாசு கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டுச் சாதனைங்களும் கருவிகளும் ஆதாயக் கட்டுமானப் பொருள் தயாரிக்கும் தொழில்கள்

### 5. இதர மானியங்கள்

| மானிய விவரங்கள் | உதவி விகிதம் | தகுதியான உயரளவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| பெண் தொழிலாளர்களைப் பணியமர்த்தும் தொழிற்சாலைகளுக்கான கூடுதல் முதலீட்டு மானியம் | 5% | 5 |
| மாசு சுத்திகரிப்பு சாதனங்களை நிறுவியுள்ள தோல் தொழிற்சாலைகள் | 10% | 2 |
| ஜெனரேட்டர் மானியம் | 15% | 5 |
| சூரிய வெப்பசக்தி மற்றும் புதுப்பிக்கப்படும் ஆற்றல் கருவிகள் உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் மட்டும் | 10% | 10 |

### 6. குறைந்த அழுத்த மின் கட்டண மானியம் (நிலஉச்சவரம்பு மற்றும் வரி சட்டத்திற்கு உட்படாத இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டும்)

| ஆண்டுகள் | உதவி விகிதம் (செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில்) |
|---|---|
| முதல் ஆண்டு | 40% |
| இரண்டாம் ஆண்டு | 30% |
| மூன்றாம் ஆண்டு | 20% |

**விற்பனை வரி சலுகைகள்**
**(வரி நீக்கம், வரி ஒத்திவைப்பு)**

**இட அமைவு :**

மிகவும் பின்தங்கிய 71 ஒன்றியங்கள், சிப்காட் தொழிற்பேட்டைகள் புதுக்கோட்டை, மானாமதுரை,

தூத்துக்குடி, தூத்துக்குடியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ வளாகம், விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டை, திருவான்மியூர், சோழிங்கநல்லூரில் உள்ள மின்னணு நகரம் மற்றும் பெருங்குடி தொழிற்பேட்டை.

**புதிய நிறுவனங்கள் :**

முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி நீக்கம் அல்லது 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

**விரிவாக்கப்பட்ட நிறுவனங்கள் :**

விரிவுபடுத்தப்பட்டதில் முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி நீக்கம் அல்லது 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

**இட அமைவு :**

பின்தங்கிய 216 ஒன்றியங்கள், இதர சிப்காட் தொழில் வளாகங்கள், சிட்கோ மற்றும் இதர அரசு சார்பு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகள்.

**புதிய நிறுவனங்கள் :**

முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்திற்கு 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

**விரிவாக்கப்பட்ட நிறுவனங்கள் :**

விரிவுபடுத்தப்பட்டதில் முதலீடு செய்யப்பட்ட 80% நிலையான மூலதனத்திற்கு 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு

**இட அமைவு :**

இதர பகுதிகள்

**புதிய நிறுவனங்கள் :**

முதலீடு செய்யப்பட்ட 60% நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு

**விரிவாக்கப்பட்ட நிறுவனங்கள் :**

விரிவுபடுத்தப்பட்டதில் முதலீடு செய்யப்பட்ட 50% நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

இந்த ஊக்குவிப்பு திட்டம் 23-1-2000 முதல் அரசால் விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும் இத்தேதிக்கு முன்னதாக தொழில் தொடங்கி உற்பத்தி தொடங்கிய நிறுவனங்களுக்கு மட்டும் இச்சலுகைகள் வழங்கப்படும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையங்கள்

★ ★ ★





**குறிக்கோள் :**

சிறுதொழில் துறை, தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சிறு தொழில்களை எளிதில் துவக்க உதவியும் அவை நிலையான வளர்ச்சி பெறும் வகையில் திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் சிறு தொழில்களைப் பேணிப் பாதுகாக்கிறது.

**பொறுப்புகள் :**

குறைந்த அளவு தாமதத்துடன் சிறுதொழில் நிறுவனங்களை நிறுவ உதவுதல்

தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் விவரங்களை விரைந்து அளிப்பதை உறுதிப்படுத்துதல்

பொருளாதார நீரோட்டத்தில் வேலைவாய்ப்பற்ற பெரும்பாலான இளைஞர்களை ஈர்க்கும் வகையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை ஊக்குவித்தல்

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் மகளிருக்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்குதல்

தேவையான தொழில்நுட்ப விவரம் சோதனை வசதிகள் மற்றும் பயிற்சி வசதிகளைத் தேவைப்படும் தொழில் முனைவோருக்கு அளித்தல்

தகுதியுள்ள தொழில் முனைவோருக்கு பல்வேறு மானியங்களை விரைந்து அளித்தல்

சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழிலாளிகளுக்கு வேண்டிய நிதி உதவி அளிக்க வகை செய்தல்

தொழில் முனைவோர்களுக்குத் தொழிற்கூடங்கள் (கொட்டகைகள்) - மனைகள் வெளிப்படையாக ஒதுக்கீடு செய்வதை உறுதிப்படுத்துதல்

தரமான மூலப்பொருட்களைக் குறித்த காலத்தில் வழங்குவதை உறுதிப்படுத்துதல்

நடைமுறைகளை எளிமையாக்கப் பாடுபடுதல், பல்வேறு வசதிகள் குறித்து தேவைப்படும் நாளது வரையிலான தகவல்களைப் பெற வழிவகை செய்தல், விண்ணப்பங்களின் தற்போதைய நிலை ஆகியவற்றைத் தெளிவாக்குதல்

புகார்க் கடிதங்களுக்கு உடனடியாக ஒப்புகை அளித்து அதன்மீது நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடவடிக்கை எடுத்தல்

பெறப்படும் கோரிக்கைகள் விண்ணப்பித்த நாளிலிருந்து கீழ்க்குறிப்பிட்ட வகையில் குறித்த காலக் கெடுவிற்குள் நேர்செய்யப்படும்.

அ. தற்காலிக சிறுதொழில் சான்றுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் - 3 நாட்களுக்குள்

ஆ. சிறுதொழில் சான்று (நிரந்தரம்) விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் - 30 நாட்களுக்குள்

இ. மானியம் கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் - 60 நாட்களுக்குள்

## சிறுதொழில் துறையின் செயல்முறைகள்

### 1. சிறுதொழில் பிரிவு நிரந்தரம் / தற்காலிகம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை-2.

### 2. பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை-2.



### 3. மானியங்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை–2.

### 4. திட்ட அறிக்கைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர்கள், கிண்டி, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, சேலம், காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள தொழில்நுட்பத் தகவலக நூலகங்கள் இரசாயனத் தொழில்கள் விவர வங்கி, கிண்டி மின்னணுவியல் தொழில் விவர வங்கி, திருவான்மியூர்

### 5. மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியளித்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை / மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை–2.

தொழில் வணிக இயக்ககத்தின் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், துணை இயக்குநர், சென்னை–5.

### 6. தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

### 7. மின் மற்றும் மின்னணு தொழிற் பேட்டைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இந்தந்த தொழிற்பேட்டைகளின் நிர்வாக அலுவலர்கள் மற்றும் சென்னை –5 தொழில் வணிக இயக்ககத்தின் இணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு தொழில்கள்)

### 8. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் மற்றும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சென்னை–5

### 9. இரசாயன பரிசோதனை வசதிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம், கிண்டி, சென்னை–32, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றம் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மண்டலங்களில் ஆய்வுக் கூடங்கள்

### 10. மின்பொருள் பரிசோதனை வசதிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மத்திய மின் ஆய்வுக்கூடம், காக்களூர்

### 11. அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு பயிற்சி

**அணுக வேண்டிய அலுவலர் :**

கண்காணிப்பாளர், தொழில்நுட்ப பயிற்சிமையம், கிண்டி, சென்னை–32

கண்காணிப்பாளர், அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு மையம், திண்டுக்கல்

### 12. அறிவியல் கண்ணாடிப் பயிற்சி வசதிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

கண்காணிப்பாளர், அரசு அறிவியல் கண்ணாடி பயிற்சி மையம், கிண்டி, சென்னை



### 13. குறுகிய நீண்ட காலக் கடன்கள், குத்தகை மற்றும் தவணை முறையில் இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்க நிதி உதவி

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை–35

### 14. விற்பனை உதவி

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனம்

### 15. மூலப்பொருட்கள் கொள்முதல் இரும்பு, எஃகு மற்றும் இரும்பு கலவாப் பொருட்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.

★ ★ ★





**நலத் திட்டங்கள் விவரம் :**

### 1. பள்ளிச் சீரமைப்பு

இத்திட்டத்தின் மூலம் அசையும் அசையா சொத்து இலட்சக் கணக்கில் பெறப்பட்டு பள்ளிகள் மேம்படுத்தப்படுகின்றது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 2. புரவலர் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பள்ளி புரவலர்கள் மூலம் தலா ரூ.1,000 வசூலிக்கப்பட்டு வங்கியில் செலுத்தப்பட்டு வட்டித் தொகை பள்ளி மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 3. இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

முதல் 5 வகுப்புகள் முடிய பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்கட்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றது. மேலும் 6 முதல் 8 வகுப்பு முடிய சத்துணவு உண்ணும் மாணவர்கட்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 4. இலவச சீருடை வழங்குதல்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

சத்துணவு உண்ணும் 1 முதல் 8 வகுப்பு முடிய படிக்கும் மாணவியர்கட்கு பாவாடை தாவணி மேல் சட்டை, மாணவர்கட்கு கால்சட்டை மேல் சட்டை வழங்கப்படுகிறது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 5. இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்

1 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்கட்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டு வருகின்றது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 6. தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறமை தேர்வுத்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**



8ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களில் 50%–க்கு மேல் மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் நடைபெறும் தேர்வில் வெற்றி பெறும் முதல் மதிப்பெண் பெறும் 50 மாணவர்கள் 50 மாணவியர்கட்கு ரூ.1,000 வீதம் நான்கு ஆண்டுகட்கு வழங்கப்படுகிறது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 7. தாழ்த்தப்பட்ட மாணவர்கட்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

8 முதல் பிளஸ்–2 வகுப்பு வரை படிக்கும் தாழ்த்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கட்கு மாலை நேரப் பயிற்சி வகுப்புகள் பள்ளிகள் மூலம் அளிக்கப்படுகின்றன.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

## 8. வாழ்வொளி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மாவட்ட அளவில் மருத்துவ ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு பள்ளிகள் பார்வையிடப்பட்டு மாணவ–மாணவியர்களிடையே சிறப்பு நோய் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கலந்தாலோசிக்கப்படவேண்டும்)

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

## 9. நாட்டுநலப் பணித்திட்டம் மேற்கொள்ளும் பணிகள்

நாட்டு நலப்பணித்திட்டம் சில பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு எழுத்தறிவுப் பணி, குடிசைப் பகுதி சுத்தம் செய்தல், மரங்கள் நடுதல், சாலை மராமத்து பணிகள், குடும்பநலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இரத்த தான முகாம் நடத்துதல், குடிப்பழக்கத்தில் இருந்து மக்களை விடுவித்தல், மக்கள் தொடர்பு, கல்வி, எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம், அரசு மருத்துவமனை, கோயில்கள் சுத்தம் செய்தல்



## 10. தேசிய திறனாய்வுத் தேர்வு

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

9ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் கணிதம், அறிவியல், சமூகப் பாடங்களில் 60 மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்க வேண்டும். வருமான வரம்பு கிடையாது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

## 11. புத்தக உதவித்தொகை

மாதம் ரூ.200 விதம் மற்றும் ஆண்டுக்கு ரூ.500 புத்தக உதவித்தொகை

1. 65 இலட்சம் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டையுடன் தினமும் சத்துணவு வழங்கும் திட்டம். 10ஆவது வகுப்பு வரை படிக்கும் விருப்பமுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உணவு அளிக்கப்படுகிறது. (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் நிர்வகிக்கப்படுகிறது. அத்துறையினை கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.
2. கற்பலகை வழங்கும் திட்டம். அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் முதலாம் வகுப்பு பயிலும் 11.50 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாக கரும்பலகை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.35.75 இலட்சம் செலவாகும். ஒரு கரும்பலகை ரூ.3.55 மதிப்பில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
3. மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் 10ஆம் வகுப்பிலும் 12ஆம் வகுப்பிலும் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடம் பெறும் மாணவ–மாணவியரின் மேற்படிப்புச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது.
4. அரசு பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் விருப்பமுள்ள மாணவர்களுக்கும் 9,10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் கணினிக் கல்வி வழங்கப்படுகிறது.
5. 2000 ஆரம்பப்பள்ளிகளுக்கு ஒலிநாடா மற்றும் வானொலி, ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 6,800 ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒலிநாடா மற்றும் வானொலியும், 2000 நடுநிலைப் பள்ளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சியும் வழங்கப்படுகின்றன.

★ ★ ★





பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டை வைத்திருப்போரை வகைப்படுத்துவதற்காக, அரசு ‘இளஞ்சிவப்பு’ மற்றும் ‘மஞ்சள்’ என்ற இருவண்ண அட்டைகளை வழங்க பின்வரும் வரன்முறைகளை நிர்ணயித்துள்ளது :

அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் அரிசியையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் ‘இளம்சிவப்பு’ அட்டைதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். மஞ்சள் அட்டைதாரர்கள், அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் அரிசிக்குப் பதிலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலே கூறப்பட்ட இருவண்ண அட்டைதாரர்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைக் கண்டறிய கீழ்க்காணும் வரன்முறைகள் நிர்ணயிக்கப்படுகின்றன :**

**1. ஊரகப் பகுதிகள் :**

அ. ஆண்டொன்றுக்கு ரூ.15,000மும் அதற்கு கீழும் வருமானம் ஈட்டும் குடும்பங்கள்.

ஆ. நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள்

இ. சிறு உழவர்கள் மற்றும் குறு உழவர்கள்

ஈ. சொந்தத் தொழில் புரியும் ஊரக கைவினைஞர்கள்

உ. முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் மற்றும் இதைப் போன்று அரசிடமிருந்து உதவித் தொகை பெறும் ஆதரவற்ற விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோர்.



(‘ஆ’ முதல் ‘உ’ வரை உள்ள இனங்களில் ரூ.15,000 என்ற ஆண்டு வருமான வரையறை பொருந்தும்).

**2. நகர்ப்புறப் பகுதிகள் :**

அ. ஆண்டொன்றுக்கு ரூ.15,000மும் அதற்குக் கிழும் வருமானம் ஈட்டும் குடும்பங்கள்

ஆ. பொதுவாக குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள்

இ. அன்றாடம் வேலை செய்து கூலி ஈட்டுகின்ற ரிக்ஷா ஓட்டுபவர்கள், சுமை தூக்குவோர், நடைபாதைகளில் பழம் / பூ விற்பவர்கள், வீட்டு வேலைக்காரர்கள், கட்டடப் பணியாளர்கள், இதைப் போன்ற வேலை செய்யும் ஏனையோர்.

(‘ஆ மற்றும் ‘இ’ இனங்களில் ரூ.15,000 என்ற ஆண்டு வருமான வரையறை பொருந்தும்)



**3. நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி விநியோகம்**

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கும் எந்த விதமான பாகுபாடும் இன்றி ஒரு கிலோ அரிசி ரூ.3.50 விதம் மாதந்தோறும் 20 கிலோ வழங்கப்படுகிறது.

நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் தரம் இந்திய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான சராசரி தரத்தில் இருக்கும்.

**பணியின் வகை :**

1. **குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைச் சேர்த்தல் / நீக்குதல் (அந்தப் பகுதி உணவு பங்கீட்டு அலுவலகத்தில் அளிப்பதன் பேரில்)**

**காலவரையறை :**

தேவையான ஆதாரத்துடன் குடும்ப அட்டைகள் அளிப்பதன் பேரில் மூன்றாம் நாள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

2. **அதே நியாய விலைக்கடையின் அதிகார வரம்பிற்குள் முகவரி மாற்றம்**

**காலவரையறை :**

மூன்று நாட்களுக்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

3. **நியாயவிலைக் கடை மாற்றம் மற்றும் முகவரி மாற்றம்**

**காலவரையறை :**

ஒரு வாரத்திற்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

4. **ஏனைய மாநகருக்கு அல்லது வேறு வகையில் குடும்பத்தை மாற்றிச் செல்வதன் பேரில் குடும்ப அட்டை ஒப்படைப்பு சான்றிதழ் வழங்கல்**

**காலவரையறை :**

இரண்டு நாட்கள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

5. **அதே மாநிலத்திற்குள் ஒப்படைப்பு சான்றிதழ் முதலியவற்றை அளிப்பதன் பேரில் புதிய குடும்ப அட்டை வழங்குதல்**

**காலவரையறை :**

ஏழு நாட்களுக்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

6. **வேறு மாநிலத்திலிருந்து மாற்றப்பட்டு வரும் நேர்வில், தேவையான ஆதாரம் அளிக்கப்படுவதற்குட்பட்டு குடும்ப அட்டை புதிதாக வழங்குதல்**

**காலவரையறை :**

இரண்டு வாரங்களுக்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

## ஒரு கூட்டுறவுச் சங்கத்தை எவ்வாறு தொடங்குவது

**செயல்புரியும் நோக்கம் :**

1. **கிராம அளவில் விவசாயிகளுக்காக**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்

2. **நகர மக்களுக்காக (நகர்ப்புறம்)**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

கூட்டுறவு நகர வங்கிகள்

3. **வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலையில் விற்பனை செய்வதற்காகவும், விளைபொருள் ஈட்டுக் கடன் பெறுவதற்காகவும்**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

4. **சிறுபாசனக் கடன்கள், பண்ணைக் கடன்கள், பட்டுப்புழு வளர்ச்சிக் கடன்கள், தோட்டக்கலை அமைக்கக் கடன்கள், பண்ணை சாராக் கடன்கள், டிராக்டர் தேவைகள்**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

பிரதம கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்





5. **நுகர்பொருட்களை சரியான விலை மற்றும் சரியான எடையில் பெறுவதற்காக**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், கூட்டுறவுச் சிறப்பங்காடிகள்

6. **அரசுத்துறை, அரசு அங்கீகாரம் பெற்ற துறைகள், பொதுத்துறைகள் மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்காக**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

பணியாளர் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள்

7. **முடித் திருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர்களுக்காக**



**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

முடித் திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

8. **தொழிலாளர்களுக்காக**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள்

9. **காய்கறி பயிரிடுவோருக்காக**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள்

## பலவகைக் கடன்களை எங்கு பெறுவது மற்றும் யாரை அணுகுவது

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

**எவரை அணுகுவது :**

செயலாளர் / தலைவர்

**கடன் பெறும் காரணங்கள் :**

பயிர்க் கடன்கள் கரும்பு (பதிவு செய்யப்பட்டது) பத்து ஏக்கர் வரை கடனளவுக்கு ஏற்ப

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.45,000

**உரிமைப் பத்திரத்தின் மீது கடன்கள்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.5,00,000

**மனை வாங்குவதற்கு**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.20,000

**வீடு புதுப்பித்தல் மற்றும் விரிவாக்குதல்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.50,000

**வீடு கட்டுதல்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.1,00,000

**பயணிகள் பேருந்து, சிறு லாரி, கார், ஜீப்பு வாங்க**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.10,00,000

**தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பைப்புகள் அமைக்க**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.25,000

**இரு சக்கர வாகனங்கள் வாங்க**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.35,000

**நுகர்பொருட்களுக்காக சிறு தொழில் அலகு அமைக்க**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.1,00,000

**நகைக் கடன்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.1,00,000

**உறுப்பினர்களின் குழந்தைகளுக்காக கல்விக் கடன்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.5,000

**தினத் தண்டல் கடன்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.5,000

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

வேளாண் விளை பொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

**எவரை அணுகுவது :**

மேலாண்மை இயக்குநர் / தலைவர்

**விவசாயிகள் விளைவித்த விளைபொருட்களை ஆதாயமான விலைக்கு விற்பனை செய்ய விவசாயிகளுக்கு வேளாண் விளை பொருட்களுக்கு ஈட்டுக் கடன்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.50,000

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

நகர கூட்டுறவு வங்கிகள்

**எவரை அணுகுவது :**

செயலாளர் / மேலாண்மை இயக்குநர் / தலைவர்

**நகர்ப்புற மக்களுக்காக :**
**1. நகைக் கடன் – ரூ.1,00,000**

2. அ. விடுகட்ட கடன் – ரூ.5,00,000

ஆ. வீடு பழுது பார்த்தல், புதுப்பிக்க – ரூ.75,000

**பொருளாதார ரீதியாக பிற்பட்ட சமூகத்தினருக்கு தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார முன்னேற்றக் கழகம் மூலம் பின் தங்கிய மற்றும் மிகவும் பின் தங்கிய சிறுபான்மையினருக்குக் குறைந்த வட்டியில் கடன்**

நபர் ஜாமீன் கடன் மற்றும் தேசிய சேமிப்பு பத்திரத்தின் மீது கடன்




**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.5,000

**மகளிர் சிறுவணிகக் கடன்**

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.100 முதல் ரூ.5,000 வரை

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

பிரதம கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

**எவரை அணுகுவது :**

செயலாளர் / தலைவர்

**கடன் பெறும் காரணங்கள் :**

1. சிறு பாசனத்திற்காக – ரூ.75,000 முதல் ரூ.1,20,000 வரை
2. தோட்டக்கலை – ஒரு ஏக்கருக்கு ரூ.2,000 முதல் ரூ.1,46,000 வரை
3. டிராக்டர் வாங்க – அவற்றின் விலையில் 90 சதவீதம் அதாவது ரூ.3,00,000 முதல் ரூ.3,50,000 வரை
4. பட்டுப்புழு வளர்ப்பு அ. பாசனப்பகுதிகளுக்கு – 0.4 எக்டேருக்கு ரூ.38,000 முதல் ரூ.68,000 வரை

ஆ.மானாவாரி பகுதிகளுக்கு – 0.4 எக்டேருக்கு ரூ.24,200 முதல் ரூ.44,000 வரை





5. கைத்தறி நெசவு மற்றும் இதர பண்ணை சாரா காரியங்களுக்கு – திட்டத்தின் மதிப்பு உச்ச அளவு ரூ.15,00,000
6. விசை உழவு (பவர் டில்லர்) – அவற்றின் விலையில் 90 சதவீதம் அல்லது ரூ.50,000 முதல் ரூ.1,00,000 வரை
7. கோழி வளர்ப்பு – 200 பறவைகளுக்காக ரூ.16,600
8. கால்நடை பராமரிப்பு – பசுக்களுக்கு ரூ.17,000, 2 எருதுகளுக்கு ரூ.18,600, 21 ஆண்டுகளுக்கு ரூ.22,500
9. உள்நாட்டு மீன் பிடிப்புக்கு – ஒரு எக்டருக்கு ரூ.3,30,000

மீன் பிடிக்கும் படகு (கட்டுமரம்) – ரூ.15,000 முதல் ரூ.60,000 வரை

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள் மூலம்

**எவரை அணுகுவது :**

பொது மேலாளர் / தனி அலுவலர்

**கடன் பெறும் காரணங்கள் :**

1. நகைக் கடன் – ரூ.1,00,000
2. சிறு தொழிற்சாலை அலகு

**எவரை அணுகுவது :**

மேலாண்மை இயக்குநர் / தலைவர்



3. மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் சுயதொழில் செய்வோர்களுக்கு – ரூ.1,00,000
4. வீட்டுமனை வாங்க, வீடு கட்ட, பழுது பார்க்க, விரிவு படுத்தக் கடன் – ரூ.6,00,000
5. சிறுவாகனப் போக்குவரத்து இயக்குநர்கள் கடன் – ரூ.10,00,000
6. டி.வி., குளிர்சாதனப் பெட்டி, இரு சக்கர வாகனங்கள் வாங்க கடன் – ரூ.25,000
7. மகளிர் சிறுவணிகக் கடன் (பூ, காய்கறி, பழங்கள் முதலியவற்றின் விற்பனைக்காக) – ரூ.100 முதல் ரூ.5,000 வரை

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம்

**எவரை அணுகுவது :**

மேலாண்மை இயக்குநர் / தலைவர்

**கடன் பெறும் காரணங்கள் :**

1. வட்டியில்லா பயிர்க் கடனுக்காக – ரூ.35,000
2. பழங்குடி உறுப்பினர்களுக்கு – ரூ.18,000

மத்திய காலக் கடன் 3. நகைக் கடன் (வட்டியில்லாமல்) – ரூ.50,000

4. சிறுவனப் பொருட்கள் விற்பனைக்காக
5. மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் நடமாடும் ஊர்திகள் மூலம் விநியோகம்

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

**எவரை அணுகுவது :**

செயலாளர் / தலைவர்

**கடன் பெறும் காரணங்கள் :**

1. நபர் ஜாமீன் கடன்
2. நுகர்வோர் கடன்கள்

**அளிக்கப்படும் அதிகபட்ச கடன் தொகை :**

ரூ.75,000

★ ★ ★

**திட்டத்தின் பெயர் :**

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

### அ. பயனாளிகள் தேர்வு செய்ய குழூரி கூட்டம் நடத்துதல்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.540

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

ஒரு வாரத்தில்

### ஆ. மல்பரி நாற்று மானியம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500



**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### இ. பயிற்சியாளர் உதவித் தொகை

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.150

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஈ. பயிற்சி உபகரணங்கள் விநியோகம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.300

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்





**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித் துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த ஒரு மாதத்திற்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### உ. மல்பரி நாற்றுகள் கொண்டுவர வாகன செலவு

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஊ. குழி எடுத்தல்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.1500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித் துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### எ. தொழு உரம் இடுதல்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.750

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

குழி எடுத்தவுடன்

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்



**திட்டத்தின் பெயர் :**

## மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

### அ. மல்பரி நாற்று மானியம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.270

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஆ. பயிற்சியாளர் உதவித்தொகை

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### இ. பயிற்சி உபகரணங்கள்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 1 மாதத்திற்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஈ. அடிப்படை புழுவளர்ப்பு

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.2400

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து புதிய பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 1 மாதத்திற்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

**திட்டத்தின் பெயர் :**

## பழங்குடியினர் துணைத் திட்டம்

### அ. மல்பரி நாற்று மானியம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.375

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்துப் பழங்குடியின பட்டு விவசாயிகள்



பட்டு வளர்ச்சித் துறை



**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஆ. மல்பரி நடவுக்கு உதவி அளித்தல்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.375

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

அனைத்துப் பழங்குடியின பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 2 மாதங்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### இ. பயிற்சியாளர் உதவித்தொகை

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து பழங்குடியின பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஈ. பயிற்சி உபகரணங்கள் விநியோகம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

அனைத்து பழங்குடியின பட்டு விவசாயிகள்

**அணுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 1 மாதத்திற்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### உ. அடிப்படை புழு வளர்ப்பு தளவாடங்கள்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.2500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

அனைத்து பழங்குடியின பட்டு விவசாயிகள்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

பயிற்சி முடிந்த 1 மாதத்திற்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

**திட்டத்தின் பெயர் :**

## பகுதி – II திட்டம்

### அ. ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சி முன்னேற்ற திட்டம் புதிய இன மல்பரி ரகங்கள் நடவுக்கு ஊக்கத் தொகை

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

புதிய பட்டு விவசாயிகள்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை



**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஆ. ஆராய்ச்சி பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டினை பட்டு நெசவு விசைத் தறியில் பயன்படுத்துவதற்கு உதவியளித்தல் இயந்திரங்கள் கொள்முதலுக்கு மானிய உதவி

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.60,000

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து பட்டு நெசவாளர்கள்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

30 நாட்கள்

**திட்டத்தின் பெயர் :**

## செரி – 2000

### அ. சொட்டு நீர் பாசனம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.8,000

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

குழு தலைவர்கள்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

குழுக்கள் ஆரம்பித்த பிறகு





**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஆ, தன்டு அறுவடை

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.7,500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

குழு தலைவர்கள்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

குழுக்கள் ஆரம்பித்த பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### இ. புதிய பகுதியில் உள்ள பட்டு விவசாயிகளுக்கு பாரம்பரியமாக பட்டுத் தொழில் வளர்ந்துள்ள இடங்களில் பயிற்சி

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.3,500

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

புதிய பகுதி விவசாயிகள் மற்றும் பாரம்பரியப் பகுதி விவசாயிகள்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### ஈ. தொழில் முனைவோர் பயிற்சி

**ஒரு பயனாளிக்கு உதவி :**

ரூ.1,000, ரூ.1,500, ரூ.3,000

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

முதலீட்டாளர்கள் / தொழிலாளர் / பயிற்சியாளர், மேற்பார்வையாளர்

**அனுகப்பட வேண்டியவர்கள் :**

உதவி ஆய்வாளர் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

ஒரு மாதம்

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

### உ. நூற்பாளர்களுக்கு சுழல் நிதி மூலம் உதவி

பட்டு நூற்பாளர்களுக்கு, அவர்கள் விற்பனைக்கு கொண்டு வந்த பட்டின் மொத்த தொகையில் 90 விழுக்காடு முன்பணமாக சுழல் நிதியிலிருந்து வழங்கப்படும். விற்பனை செய்த பிறகு அத்தொகை சுழல் நிதியில் ஈடு செய்யப்படும்.

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் / வழி முறைகள் :**

சிறு நூற்பாளர்கள்



**அனுப்பட வேண்டியவர்கள் :**

உதவி தொழிற் கூட்டுறவு மேற்பார்வையாளர்கள் / உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

வழக்கமாக

**திட்டத்தின் பெயர் :**

## அனைத்துத் திட்டங்கள்

### பட்டு முட்டை விநியோகம்

**ஒரு பயனாளிக்கு உதவி :**

பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவையான முட்டைத் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விநியோகித்தல்

**பயன் பெறத் தகுதி உள்ளவர்கள் வழி முறைகள் :**

அனைத்து பட்டு விவசாயிகள் உதவி

**அனுப்பட வேண்டியவர்கள் :**

இளநிலை ஆய்வாளர் / உத்தேசித்துள்ள ஆய்வாளர் / ஆய்வாளர்/ உதவி இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை

**விண்ணப்பிக்க வேண்டிய காலம் :**

புழு வளர்ப்பு மேற்கொள்ள 10 தினங்களுக்கு முன்னதாக

**விண்ணப்பத்தைப் பரிசீலிக்க வேண்டிய காலம் :**

10 நாட்கள்

## தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம்

**திட்டத்தின் பெயர் :**

### அ. கைவினைஞர்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு

கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கைவினைப் பொருட்களுக்கு தமிழ்நாட்டில் 15 விற்பனை நிலையங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் 5 விற்பனை நிலையங்கள், ஆக 20 விற்பனை நிலையங்கள் மூலமாகவும், இதைத்தவிர இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களில் உள்ளூர் திருவிழா நாட்களில் கண்காட்சிகள் நடத்தியும் ஒரு நல்ல சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி தந்து வருகின்றது.



**அணுக வேண்டிய அதிகாரி :**

விற்பனை மேலாளர்

**அலுவலக முகவரி :**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 759,அண்ணாசாலை, சென்னை–600 002

**திட்டத்தின் பெயர் :**

### 2. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள்

**அணுக வேண்டிய அதிகாரி :**

உற்பத்தி மேலாளர்

**அலுவலக முகவரி :**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 759,அண்ணாசாலை, சென்னை–600 002

* * *





**நலத் திட்டத்தின் பெயர் :**

### 1. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் (S.G.S.Y.)

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

- ★ ஊரகப் பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை, வறுமைக் கோட்டிற்கு மேல் மூன்று வருடங்களில் அவர்கள் வருவாய் பெறக்கூடிய வகையில் வணிகக் கடன் மற்றும் அரசு மானியம் வழங்குதல்
- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட வருமானம் தரக்கூடிய தொழில்களை சுயஉதவிக் குழுக்கள் அமைத்து குழுவில் உள்ள பயனாளிகளுக்குத் தனி நபர்கள் அடிப்படையிலும் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப்படும். மானியம் ஒரே சீராகத் திட்ட மதிப்பில் 30% மிகாமல் அதிகபட்சமாக ரூ.7,500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குத் திட்ட மதிப்பில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.10,000 வரை இருக்கும் சுயஉதவி குழுக்களுக்கு திட்ட செலவில் 50% அல்லது ரூ.1.25 இலட்சத்துக்கு மிகாமல் இருக்கும். நீர் பாசன திட்டங்களைப் பொருத்தவரை மானியம் வழங்க உச்ச வரம்பு ஏதுமில்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்

### 2. கடன் மற்றும் மானிய உதவியுடன் வீடுகள் கட்டும் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

ஒரு பகுதியைக் கடனாகவும், ஒரு பகுதியை மானியமாகவும் வழங்கி ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டு வருமானம் ரூ.32,000 வரை பெறுபவர்கள் பயனடையலாம். ஒரு வீட்டிற்கு உச்ச வரம்பு மானியம் ரூ.10,000. உச்சவரம்பு கடன் ரூ.40,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்

### 3. சாண எரிவாயுத் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

சாண எரிவாயு திட்டம். இரண்டு கால்நடைகள் வைத்துள்ளவர்களுக்குச் சாண எரிவாயு கலன் அமைக்கக் கடனும், மானியமும் வழங்கப்படும். கலன் அமைக்க ரூ.18,000 வரையும், வங்கிக்கடன் ரூ.2,300 வரையும், மானியமும் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்

### 4. நூளந் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

தனியார் வீடுகளில் நிலையான குளா அடுப்பு அமைக்க மானியம் ரூ.70 வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்குப் புகையிலா அடுப்பு அமைக்க அரசு இம்மானியம் வழங்குகிறது.



**அணுக வேண்டிய அலுவலர் :**

கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்

## 5. தொகுப்பு வீடுகள் திட்டம் (IAY)

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

கான்கிரீட் கூரை வேயப்பட்ட தொகுப்பு வீடு ஒன்றிற்கு ரூ.32,000 மதிப்பில் குடியிருப்பு மனைகள் இலவசமாக கட்டுதல். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தவர்க்கு ஆண்டு ஒதுக்கீட்டில் 85% இதரப் பிரிவினருக்கு 15% ஒதுக்கீடு செய்யப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (ஊராட்சி மூலம்)



## 6. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவரது தொகுதிக்குள் ஆண்டு ஒன்றிற்கு ரூ.2 கோடி மதிப்பில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள பரிந்துரை செய்யலாம். கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடையும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## 7. மத்திய கிராம சுகாதாரத் திட்டம் (CRSP)

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்குத் தனிநபர் கழிப்பிடம் கட்ட தலா ரூ.500 மானியம் வழங்கப்படுகிறது. பயனாளி ரூ.125 பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கழிப்பிடங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் பங்குத் தொகையாக ஏற்கும். கிராம சுகாதார அங்காடிகள் ஏற்படுத்தப்படும். மகளிருக்கான பொதுக் கழிப்பிடங்கள் கட்டித்தரப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் / கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்

## 8. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி வளர்ச்சித் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவரது தொகுதிக்குள் ஒரு நிதியாண்டில் ரூ.77 இலட்சம் மதிப்பில் கணினி மையக் கட்டடங்கள், தார் சாலைகள், கான்கிரீட் தெருக்கள் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளலாம். பணிகளுக்கு உச்ச வரம்பு இல்லை

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்

## 9. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுயிலும் மிகவும் பின்தங்கிய மற்றும் தேவைகளின் அடிப்படையில் உள்ள ஒரு கிராமம்





தேர்வு செய்யப்பட்டு, மேற்படி கிராமம் தன்னிறைவு பெறத்தக்க வகையில் அனைத்துத் துறைகள், குறிப்பாக ஊரக வளர்ச்சித்துறையின் மூலமாக அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தேர்வு செய்யப்படும் கிராமத்திற்கான வட்டார வளர்ச்சி அலுவலர்

## 10. நமக்கு நாமே திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்களால் தேர்வு செய்யப்படும் கிராமத்தில், மேற்படி ஊர் மக்களே கூடி அந்த கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் தேவை அடிப்படையில் தேர்வு செய்து அரசுத்துறை தொழில் நுட்ப ஆலோசனைப்படி பொருள் மற்றும் நிதி அல்லது உடல் உழைப்பு தருவதன் மூலம் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளுதல், மக்கள் பங்கு குறைந்த பட்சம் 25% இருக்கும். மீதம் அரசு பங்குத் தொகையாக ஏற்கும். அரசின் நிதி உதவியுடனும் திட்டங்களை நிறைவேற்றலாம். இத்திட்டம் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

(கிராமப்பகுதிக்கு) ஊராட்சித் தலைவர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், (நகராட்சிப் பகுதிக்கு) நகர்மன்றத் தலைவர் / நகராட்சி ஆணையர்/ மாநகராட்சி ஆணையர்

## 11. ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

இத்திட்டத்தின் கீழ் கிராம அடிப்படைத் தேவைகளைத் திட்டமிட்டு தேவைகளின் அடிப்படையில் சமுதாய கிராம உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்

## 12. வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

இந்த திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு 70 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், 30 சதவிகிதம் மாவட்ட ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தேவைகளின் அடிப்படையில் சாலைப் பணிகள், பாலங்கள், சிறுபாலங்கள், கிராமத் தெருக்கள், சமுதாய சொத்துக்களுக்கான கட்டடங்கள் போன்ற வளர்ச்சிப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்ட ஊராட்சி செயலர்

★ ★ ★

**நலத்திட்டத்தின் பெயர் :**

### 1. குடும்ப நலத்திட்ட உதவி

சிறு குடும்ப நெறியை விளக்க ஒரு குழந்தை பெற்றவர்களுக்கு மேலும் குழந்தை பெறுவதைத் தடுக்க

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட துணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (குடும்ப நலம்)

### 2. காசநோய் தடுப்புத் திட்டம்

காசநோய் கண்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

துணை இயக்குநர் (காசநோய் தடுப்பு)

### 3. தேசிய கண்பார்வை இழப்புத் திட்டம்

கண்பார்வை இழந்தவர்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் கண் பார்வையை மீட்டுத் தருதல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட திட்ட மேலாளர் (கண் பார்வை இழப்புத் தடுப்புத் திட்டம்)

### 4. எய்ட்ஸ் நோய் தடுப்புத் திட்டம்

எய்ட்ஸ் நோயை கண்டுபிடித்து நோயாளிக்குச் சிகிச்சை அளித்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இணை இயக்குநர் (நலப்பணிகள்)

### 5. போலியோ நோய் தடுப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் போலியோ நோய் தடுப்பு சொட்டு மருந்து வருடத்திற்கு இரண்டு முறை கொடுத்தல் மற்றும் போலியோ நோய் கண்ட குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து நடக்க வைத்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இணை இயக்குநர் (நலப்பணிகள்),
துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்)

### 6. முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம்

இத்திட்டத்தில் 6ஆவது அம்சமான குழந்தைகள் நேய கொள்கைகள் (பேபி பிரண்ட்லி மருத்துவமனை) அரசினர் மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அமலாக்குதல்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இணை இயக்குநர் (நலப்பணிகள்)

### 7. தொழுநோய் தடுப்புத் திட்டம்

தொழுநோய் கண்டவர்களுக்குச் சிகிச்சை அளித்து தொடர் மருத்துவ கவனிப்பு அளித்தல்



**அணுக வேண்டிய அலுவலர் :**

துணை இயக்குநர் (தொழுநோய் தடுப்பு)

* * *





**நலத்திட்டத்தின் பெயர் :**

### 1. குடும்ப நலத்திட்டம்

**தகுதி :**

தகுதி வாய்ந்த தம்பதியர் உயிருடன் ஒரு குழந்தையேனும் இருந்து அறுவை சிகிச்சை செய்து கொள்வோருக்கு அரசு உதவித் தொகை ரூ.155 வழங்குகிறது.



**அணுக வேண்டிய அலுவலர் :**

அரசினர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் / அரசினர் மருத்துவமனை மருத்துவ அலுவலர்கள் / கிராமப்புறத்தில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்கள்

### 2. புதிய முறை ஆண் அறுவை சிகிச்சை

ஆண்களுக்கான புதிய முறை ஆண் அறுவை சிகிச்சை, கத்தி இல்லாமல், தையல் இல்லாமல் புதிய எளிய முறை சிகிச்சை ஆகஸ்ட் 98 முதல் செய்யப்படுகிறது. ஈட்டுத் தொகை ரூ.135

**அணுக வேண்டிய அலுவலர் :**

அரசினர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் / அரசினர் மருத்துவமனை மருத்துவ அலுவலர்கள் / கிராமப்புறத்தில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள்.

* * *

**நலத்திட்டங்கள் விவரம் :**

### 1. ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம்

சிறு, குறு, தாழ்த்தப்பட்ட வகுப்பு, மலைசாதி விவசாயிகள். நெல்விதைகள் மானியம் குவிண்டாலுக்கு ரூ.200

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 2. சிறுதானிய விதைகள்

சிறுதானிய விதைகளுக்கு மானியம் குவிண்டாலுக்கு ரூ.400

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 3. வேளாண் கருவிகள் விநியோகம்

கடப்பாரை – மண்வெட்டி பாதி விலையில் சிறு மிகச்சிறு ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகின்றன.



**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 4. வீரிய நெல் செயல் விளக்கம்

ஒரு ஏக்கருக்கு ரூ.1,000 மானியம் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 5. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம்

இந்தத் திட்டம் 75% மத்திய அரசு நிதி உதவியுடனும் 25% மாநில அரசு நிதி உதவியுடனும் செயல்படுத்தப்படுகிறது. எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும் மானியம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 6. விதைக் கிராமத் திட்டம்

சான்று விதைகள் கொள்முதல் / அட்டையிடப்பட்ட விதைகள் கொள்முதல் (நிலக்கடலை, சோயா மொச்சைக்கு மட்டும்) குவிண்டாலுக்கு ரூ.200

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 7. விதை விநியோகம்

சான்று விதைகளுக்குக் குவிண்டாலுக்கு ரூ.300 அட்டையிடப்பட்ட விதைகளுக்கு (சோயா மொச்சை / நிலக்கடலைக்கு மட்டும்) குவிண்டாலுக்கு ரூ.250

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 8. விதை நேர்த்தி மருந்து விநியோகம்

50% மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 9. பெருவிளக்கப் பண்ணை அமைத்தல்

50% மானியம்





**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 10. ஒருங்கிணைந்தப் பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம்

எக்டெருக்கு ரூ.1,500 மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 11. வேர்ப் புழுவைக் கட்டுப்படுத்துதல்

எக்டெருக்கு ரூ.500 மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 12. பெரமேன் செயல் விளக்கம்

2 எக்டெருக்கு ரூ.500 மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 13. பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம்

கருவிக்கு ரூ.1,000 மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 14. ரைசோபியம் நுண்ணுயிர் விநியோகம்

50% மானியம் அல்லது எக்டெருக்கு ரூ.25

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 15. நுண்சத்து விநியோகம்

எக்டெருக்கு ரூ.100

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 16. ஜிப்சம் விநியோகம்

எக்டெருக்கு ரூ.200

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்.

### 17. தெளிப்பு நீர்ப்பாசன விநியோகம்

சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பெண் விவசாயிகளுக்கு




50% மானியம் அல்லது எக்டெருக்கு ரூ.15,000. இதில் எது குறைவோ அது. இதர விவசாயிகளுக்கு 33% மானியம் அல்லது எக்டெருக்கு ரூ.10,000 இதில் எது குறைவோ அது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 18. விவசாயிகளுக்குப் பயிற்சி

ஒரு பயிற்சிக்கு ரூ.10,000 வீதம் 300 பயிற்சிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 19. தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்

பருத்தி சாகுபடி பரப்புகளை அதிகரிக்கவும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவித்து நவீன சாகுபடி முறைகளை விவசாயிகள் கடைபிடிக்கவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் 75% மத்திய் அரசு நிதியுடனும் 25% மாநில அரசு நிதியுடனும் செயல்படுத்தப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 20. சான்று விதை விநியோகம்

குவிண்டாலுக்கு ரூ.250

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 21. பயிர் உற்பத்தி செயல் விளக்கத்திடல் அமைத்தல்

மானியம் ஒரு எக்டெருக்கு ரூ.1,500

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 22. இனக்கவர்ச்சிப் பொறி செயல் விளக்கத்திடல் அமைத்தல்

ஒரு செயல் விளக்கத்திடலுக்கு ரூ.250

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 23. என்.பி.வி. செயல் விளக்கத்திடல் அமைத்தல்

எக்டெருக்கு ரூ.750

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 24. ஐ.பி.எம். செயல் விளக்கத்திடல் மற்றும் ஐ.பி.எம் பயிற்சி (விவசாயிகள் வயல்வெளிப் பள்ளி)

ஒரு விவசாயியின் வயல்வெளிப் பள்ளிக்கு ரூ.8,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 25. தெளிப்பு நீர்ப்பாசனம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் விவசாயிகளுக்குக் கருவியின் மொத்த விலையில் 90% மானியம் அல்லது ரூ.25,000. இதில் எது குறைவோ அது. இதர விவசாயிகளுக்குக் கருவியின் விலையில் 50% மானியம் அல்லது ரூ.10,000த்தில் எது குறைவோ அது.



**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 26. விவசாயிகள் பயிற்சி

ரூ.50 விதம் 100 விவசாயிகளுக்கு ஒரு நாள் முழுவதும் பயிற்சி

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 27. தேசிய பயறு வகை பெருக்கத் திட்டம்

பயறு வகைகள் உற்பத்தியை அதிகரிக்கவும் சாகுபடி பரப்பினை கூடுதலாகக் கொண்டு வரவும் பல்வேறு இனங்களில் பயறுகள் சாகுபடி செய்யவும் விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.





**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 28. ஆதார விதை கொள்முதல்

குவிண்டாலுக்கு மானியம் ரூ.400



**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 29. விதை கிராமம்

குவிண்டாலுக்கு மானியம் ரூ.200

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 30. சான்று விதைகள் விநியோகம்

குவிண்டாலுக்கு மானியம் ரூ.300

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 31. ஆதாரநிலை விதை கொள்முதல்

குவிண்டாலுக்கு மானியம் ரூ.400

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 32. மினிகிட் விநியோகம்

ஒரு மினி கிட்டுக்கு ரூ.80 மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 33. ஐ.பி.எம். செயல் விளக்கம்

1 எக்டெருக்கு ரூ.1,500

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 34. பெருவிளக்கப் பண்ணை

1 எக்டெருக்கு ரூ.1,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 35. ரைசோபியம் விநியோகம்

ஒரு எக்டெருக்கு ரூ.25 விதம் 400 எக்டெருக்கு நிதி ரூ.10,000. 50% மானியம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 36. தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் பயிர் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் விவசாயிகளுக்கு 90% மானியம் அல்லது ஒரு எக்டெருக்கு ரூ.20,000. இதர விவசாயிகளுக்கு 70% மானியம் அல்லது ஒரு எக்டெருக்கு ரூ.25,000. 11 எண்கள் நிதி ரூ.22,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 37. விதை நேர்த்தி

1000 எக்டெருக்கு நிதி ஒதுக்கீடு ரூ.3,000



**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 38. பயிர்பாதுகாப்புக் கருவிகள்

1 எண்ணுக்கு ரூ.1,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர்கள் / உதவி வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 39. பாமாயில் மர சாகுபடி பெருக்குத் திட்டம்

காவிரி டெல்டா பாசனப் பகுதி மற்றும் வளமான நல்ல நீர்ப்பாசன வசதி கொண்ட திருச்சி, இலால்குடி, முசிறி, துறையூர் வேளாண்மைக் கோட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏற்ற திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்கு முதல் நான்கு ஆண்டுகளுக்குக் கூடுதலாக ஒரு எக்டேர் சாகுபடிக்கு ரூ.12,500 மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் முதல் ஆண்டில் சாகுபடிக்கு பாமாயில் கன்றுகள் வழங்கும் போது அதனுடைய முழு விலையில் ரூ.25 ஒரு கன்றுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. மீதித் தொகை விவசாயி வழங்க வேண்டும்.

3 ஆண்டுகளுக்குப் பின் கிடைக்கும் பாமாயில் பழக்குலைகள் காவிரி சர்க்கரை ஆலை (பாமாயில் பிரிவு) நிறுவனம் அரசு நிர்ணய விலையில் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர், கோட்டங்களின் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 40. சொட்டு நீர்ப்பாசனம்

15 எண்கள் நிதி ரூ.3,750

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர், கோட்டங்களின் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 41. விவசாயிகள் பயிற்சி

87 எண்கள் / நிதி ரூ.70,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர், கோட்டங்களின் வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள்

### 42. மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர் வடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

30 சதவீதத்திற்குக் குறைவாக மழை பெய்யும் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. (நீர் மற்றும் மண்வளப் பாதுகாப்பு)

| | |
|---|---|
| அடிப்படைச் செலவினம் | 30% |
| சாகுபடிக்கு ஏற்ற நிலங்களில் | 24% |
| கால்நடை மேம்பாட்டிற்கு | 6% |
| சாகுபடிக்கு லாயக்கற்ற பகுதி | 30% |
| நிர்வாகக் காரணங்களுக்குச் செலவு | 10% |
| மொத்தம் | 100% |

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்

### 43. மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

அடிப்படைச் செலவினங்கள் : புள்ளி விவரங்கள் ஆவணங்கள் தயாரிப்பு. பரணி சேத்தன கேந்திரா





கட்டி பராமரித்தல். உழவர்கள் மற்றும் உழவர் நண்பர்கள் பயிற்சி மற்றும் கல்விப் பயணம்.

தொழில்நுட்ப பழகுநருக்கு ஊதியம் மாதம் ரூ.2,500 கருத்தரங்குகள் நடத்துதல் ஒரு எண் ரூ.1,500 பயிர் விளைச்சல் போட்டி நடத்துதல் ஒரு எண் ரூ.1,500 விளம்பரம் மற்றும் தொழில்நுட்பப் பிரச்சாரம். ஆராய்ச்சி முடிவுகளை வயல்களில் சோதித்தல். புதிய கண்டுபிடிப்புகளை பரிட்சார்த்தமாக அறிமுகப்படுத்துதல்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்கள்

### 44. மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

சாகுபடிக்கு லாயக்கான பகுதியில் செயல்படுத்தப்படும் பணிகள்: வெட்டிவேர் நடவு



தாவர தடுப்பு அமைத்தல் எக்டெர் ரூ.270

கரைகள் உடைப்பு தடுப்புப் பணி 1 எண் ரூ.1,000

நிருபணப்பாத்தி அமைத்தல்

வீட்டுத் தோட்டம் அமைத்தல்

சிறு கால்நடை வழங்குதல்

கிராம கைவினைஞர்களுக்குத் தொழில் கருவிகள் வழங்குதல்

பழக்கன்றுகள் மற்றும் மரக் கன்றுகள் வழங்குதல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

தேசிய நீர் வடிப்புப் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர்

### 45. கால்நடை பெருக்கத் திட்டம்

கால்நடை ஆண்மை நீக்கம் – ஒரு காளை ரூ.250 கருவுற்ற கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குதல்.

### 46. தீவனப் பெருக்கம்

விதைகள் வழங்குதல், புல்கரணைகள் வழங்குதல், தீவன மரக்கன்றுகள் வழங்குதல்



### 47. மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர் வடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

சாகுபடிக்கு லாயக்கற்ற பகுதிகளில் செய்யப்படும் பணிகள் :

வெட்டிவேர் நடவு ரூ.400 எக்டேர்

புதர் செடிகள் நடவு ரூ.100 ஒன்றிற்கு

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்கள்

### 48. மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மரக்கன்றுகள் நடவு ரூ.750 ஒன்றிற்கு
வடிகால் பகுதி

வெட்டிவேர் நடவு ரூ.400 எக்டேர்

புதர் செடிகள் நடவு ரூ.100 ஒன்றிற்கு

மரக்கன்றுகள் நடவு ரூ.750 ஒன்றிற்கு, தடுப்புச்சுவர், அணைகள் அமைத்தல். கரைகளை உறுதிப்படுத்துல்

### 49. தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் டென்மார்க் நாட்டு அரசு நிதி உதவியுடன் செயல்படுகிறது. அனைத்து வேளாண் கோட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுகிறது.

**இத்திட்டத்தின் நோக்கம் :**

பண்ணை மகளிருக்கு எளிய, செலவில்லாத வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல். அதன் மூலம் பண்ணை மகளிர் கூடுதல் மகசூல் பெற்று அதிக வருவாய் ஈட்டி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்

★ கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர்

★ வேளாண்மை அலுவலர் (டான்வா–தொடர்பணி)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பண்ணை மகளிர் தேர்வு
- திருமணமானவர்கள்.
- சிறு மற்றும் மிகச்சிறு விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள்.
- 20 முதல் 45 வயதுடையவர்கள்.
- கற்றதை பிறர்க்கு எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.
- தலைமைப் பண்பு உள்ளவராக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வேளாண்மை அலுவலர் (டான்வா – தொடர்பணி)

### தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி (கிராம அளவில்)

**நோக்கம் :**

கிராம அளவில் வேளாண் தொழில்நுட்பங்களை செயல் விளக்கம் மூலம் பயிற்றுவித்து தனித்தனியே பழக்கப்படுத்திக் கொள்ள பயிற்சி அளித்தல்

**பயிற்சி நாட்கள் :** 5 நாட்கள்

**பயனாளிகள் :**

25 – ஒரு வேளாண்மை உதவி அலுவலர் பகுதியிலிருந்து 25 பண்ணை மகளிர் மட்டும்

**உதவித்தொகை :**

நாள் ஒன்றுக்கு ரூ.25







**ஒரு வேளாண் கோட்டத்திற்கு இடுபொருள் வழங்கப்பட்ட மதிப்பு :**

வருடத்திற்கு 3 பயிற்சி மட்டும்.
ரூ.40 ஒருவருக்கு மட்டும்.

**பயிற்சியாளர்கள் :**

வேளாண்மை அலுவலர் (டான்வா – தொடர்பணி) இதர வேளாண்மை அலுவலர்கள்.

**ஒரு பயிற்சிக்குத் தேவைப்படும் தொகை :**

ரூ.7,500

### 50. பண்ணை மகளிர் குழு உருவாக்கும் பயிற்சி :

**நோக்கம் :**

பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்க தேவைப்படுகின்ற பயிற்சி அளித்தல்

**பயிற்சி நாள் :** 1 நாள்

**ஒரு வேளாண் கோட்டத்திற்கு :**

2 எண்கள்



**பயனாளிகள் :**

20 பண்ணை மகளிர் குழு அங்கத்தினர்

**உதவித் தொகை :**

நாள் ஒன்றுக்கு ரூ.25

**ஒரு பயிற்சிக்குத் தேவைப்படும் தொகை :**

ரூ.2,500

**பயிற்சியாளர்கள் :**

வேளாண்மை அலுவலர் (டான்வா–தொடர்பணி) / தொடர்பு தலைவிகள்

### 51. குழு நிலைப்படுத்தும் பயிற்சி :

**நோக்கம் :**

பண்ணை மகளிர் குழு நடவடிக்கைகளை கண்காணித்து நேர்படுத்திட உரிய பயிற்சி

ஒரு வேளாண் கோட்டத்திற்கு – 25 நாட்கள்

**பயிற்சி நாள் :** 1 நாள்

**பயனாளிகள் :**

20 பண்ணை மகளிர் குழு அங்கத்தினர்கள்

**உதவித் தொகை :**

நாள் ஒன்றுக்கு ரூ.25

**ஒரு பயிற்சிக்குத் தேவைப்படும் தொகை :**

ரூ.2,000

### 52. குழு சார்ந்த சிறப்புப் பயிற்சி :

**நோக்கம் :**

ஆண்டு முழுவதும் வருமானம் கிடைத்திட வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடை, தோட்டக்கலை காளான் வளர்ப்பு முதலிய தொழில்களில் பயிற்சி அளித்தல்

**ஒரு வேளாண் கோட்டத்திற்கு :**

2 எண்கள்

**பயிற்சி நாள் :** 3 நாட்கள்

**பயனாளிகள் :**

20 பண்ணை மகளிர் குழு அங்கத்தினர்கள்

**உதவித் தொகை :**

நாள் ஒன்றுக்கு ரூ.25

**ஒரு பயிற்சிக்குத் தேவைப்படும் தொகை :**

ரூ.7,500

**பயிற்சியாளர்கள் :**

வேளாண்மை அலுவலர் (டான்வா–தொடர்பணி/ சகோதரத்துறை மற்றும் பல்கலைக்கழக பிற நிபுணர்கள்

### 53. மாவட்ட பண்ணை மகளிர் குழு ஒருங்கிணைப்பு கருத்தரங்கு :

**நோக்கம் :**

குழுக்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கவும், குழு தங்களது அனுபவங்களையும், தேவையை எடுத்துக் கூறி பகிர்ந்து கொள்ள வழிவகை செய்தல்




**ஒரு வேளாண் கோட்டத்திற்கு :**

2 எண்கள்

**பயிற்சி நாள் :** 1 நாள்

**நிதி உதவி :** ரூ.100 உணவிற்கும்

**பயனாளிகள் :**

50 எண்கள் பண்ணை மகளிர் குழு பொறுப்பாளர்கள்

**ஒரு கருத்தரங்கிற்கு ஒதுக்கீடு :**

ரூ.40 போக்குவரத்து செலவு ரூ.10,000

**பயிற்சியாளர்கள் :**

வேளாண்மை அலுவலர் (டான்வா)

**சிறப்பு அழைப்பாளிகள் :**

மாவட்ட ஆட்சித்தலைவர்/கூடுதல் ஆட்சியர்/ வங்கி அலுவலர்கள்/நபார்டு அலுவலர்கள்/ இதர துறை அலுவலர்கள்

### 54. மாதிரிப் பண்ணைகள் :

**நோக்கம் :**

ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பயிர் சாகுபடியுடன் பழமரங்கள், மலர் மற்றும் காய்கறி சாகுபடி, கறவைமாடு, ஆடு வளர்ப்பு, கோழிவளர்ப்பு போன்ற சார்பு தொழில்களை ஊக்குவித்து ஆண்டு முழுவதும் சீரான வருவாயை அதிகரிக்க பண்ணை மகளிர் வயலில் மாதிரிப்பண்ணை அமைத்தல்

**ஒரு வேளாண் கோட்டத்திற்கு :**

3 எண்கள்

**வயல்விழா நடத்துதல் :** 6 எண்கள்

**நிதி உதவி :** ஒரு மாதிரிப் பண்ணைக்கு ரூ.1,250

**அணுக வேண்டிய அலுவலர்கள் :**

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்

கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் வேளாண்மை அலுவலர் (டான்வா–தொடர்பணி)

* * *





**நலத் திட்டங்கள் விவரம் :**

### 1. உழவு வாடகைத் திட்டம், நிலம் சமன் செய்தல்

மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகள். நிலம் சமன் செய்யும் பணிக்கு இத்துறையில் புல்டோசர்கள் (மண் தள்ளும் இயந்திரம்) வாடகைக்கு விடப்படுகின்றன. குறைந்த அளவு 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்தப்பட வேண்டும். விவசாயப் பணிகளுக்கு 1 மணி நேரத்திற்கு வாடகை ரூ.700.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை

### 2. நிலம் உழுதல்

நிலங்களை உழவு செய்வதற்காக இத்துறையில் உழவு இயந்திரங்கள் (டிராக்டர்) வாடகைக்கு விடப்படுகின்றன. குறைந்த அளவு 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்தப்பட வேண்டும். விவசாயப் பணிக்கு 1 மணி நேரத்திற்கு வாடகை ரூ.150.

**கதிர் அறுவடை செய்தல்**

கதிர் அறுவடை செய்வதற்காக இத்துறையில் நெல் அறுவடை இயந்திரங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. குறைந்த அளவு 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்தப்பட வேண்டும். விவசாயப் பணிகளுக்கு 1 மணி நேரத்திற்கு வாடகை ரூ.1,100.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை.

### 3. சிறுபாசனத் திட்டங்கள்

இத்திட்டத்தில் தரை மட்டத்திலிருந்து குழாய்க் கிணறுகள் அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், கிணற்றின் உள்துளையிடும் பணிக்கும் கருவிகள் வாடகைக்கு விடப்படுகின்றன.

இதைத் தவிர குழாய்க் கிணறு அமைக்கும் இடம் தேர்வு செய்ய புவியியல் ஆய்வு செய்யவும், குழாய்க் கிணறுகளில் மின் இயல் ஆய்வு செய்யவும் கருவிகள் வாடகைக்கு விடப்படுகின்றன.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை

### 4. சிறுபாசனத் திட்டங்கள்

**வாடகை விவரம் :**

ரோட்டரி டிரில் 8" குழாய் கிணறுகளுக்கு மீட்டருக்கு ரூ.130

ரோட்டரி டிரில் 6" குழாய் கிணறுகளுக்கு மீட்டருக்கு ரூ.120

இன்வெல் டிரில் மீட்டருக்கு ரூ.100

பெரிகுஷன் டிரில் நாள் ஒன்றுக்கு ரூ.300

**கைத்துளைக் கருவி :**

6" குழாய் கிணறு அமைக்க மீட்டருக்கு ரூ.30

8" குழாய் கிணறு அமைக்க மீட்டருக்கு ரூ.40

10" குழாய் கிணறு அமைக்க மீட்டருக்கு ரூ.50

பாறை வெடி இயந்திரம் ஒரு தடவை வெடிப்பதற்கு ரூ.250

புவியியல் ஆய்வுக்கு (ஒரு குழாய் கிணற்றிற்கு) ரூ.1,000

குறைந்த அளவு வாடகை :
(விவசாயப் பணிக்கு) ரோட்டரி டிரில் இன்வெல்டில் கைத்துளைக் கருவி ஆகியவற்றிற்கு குறைந்த பட்சம் 15 மீட்டருக்கான வாடகை செலுத்தப்பட வேண்டும்.

பெர்குஷன் டிரில்களுக்குக் குறைந்த பட்சம் 5 நாள் வாடகை செலுத்தப்பட வேண்டும்.

பாறை வெடிப்பு இயந்திரங்களுக்கு 5 தடவை வெடிப்பதற்கான வாடகை குறைந்தபட்சமாக செலுத்தப்பட வேண்டும்.

மின்னியல் ஆய்வுக்கு கருவியினை பணி இடத்திற்கு எடுத்துச் செல்ல ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.4 வீதம் குறைந்த அளவு ரூ.100 கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். டிரக்குடன் இணைக்கப்பட்ட டிரில்களுக்கு கருவியினை பணி இடத்திற்கு எடுத்துச் செல்ல ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை கட்டணமும் குறைந்த அளவு ரூ.400 கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

இத்திட்டத்தில் கருவிகளைப் பணி இடத்திற்கு எடுத்துச் செல்லவும், பணி முடிவுற்றதும் மீண்டும் அலுவலகத்திற்கு கருவிகளை எடுத்து வரவும் விவசாயிகள் தங்கள் பொறுப்பில் போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும். பாறை வெடி இயந்திரம் பணி செய்வதற்கான டீசல் மற்றும் வெடிமருந்துகளை வழங்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை



**5. சிறப்புத் திட்டம் : சொட்டுநீர்ப் பாசனம்**

இத்திட்டத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் தோட்டக்கலைப் பயிருக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு விவசாயிகள் பயனடைகிறார்கள்.

இத்திட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ஆகும் செலவில் எக்டெருக்கு குறு மற்றும் சிறு விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர் ஆகியோருக்கு மொத்த செலவில் 50% அல்லது எக்டெருக்கு ரூ.22,500 இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும். பிற விவசாயிகளுக்கு 70% அல்லது எக்டெருக்கு ரூ.16,000 இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும்.
ஒரு குடும்பத்தில் 1 விவசாயிக்கு 4 எக்டெர் வரை மானியம் பெறலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழகத்தின் அனைத்து மாவட்ட உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை

★ ★ ★

*(மக்கள் சாசனம் தொடர்ச்சி அடுத்த இதழில்...)*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927



தமிழரசு
Licence No.TN/MS(C)/PP-23




# தமிழரசு

டிசம்பர் 1-31 , 2000 ரூ 10/-












தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2031
கார்த்திகை-மார்கழி
டிசம்பர் 1-31, 2000
மலர் : 32 இதழ் : 11 & 12
விலை ரூ.10

முதல் பக்க அட்டையில்...

கல்லூரிகளில் கணினி அறிவியல் அறிமுகம்

கடைசிப்பக்க அட்டையில்...

சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

இந்த இதழில்...


- சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா — 2
- சேலம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் — 7
- 100-வது உழவர் சந்தை — 17
- மக்கள் சாசனம் (தொடர்ச்சி) — 21
- திருக்குறள் கீர்த்தனைகள் இசைநிகழ்ச்சி முழுதும் பாடப்படவேண்டும் — 60
- மாரடைப்பு — 62
- கல்லூரிகளில் கணினி அறிவியல் அறிமுகம் — 71
- கரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் — 78


**திருக்குறள்**

**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.**

நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்து, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

□ முதலமைச்சர் கலைஞர்

மகளிர்க்கான இந்தப் பொன் விழா ஆண்டில் "மகளிர்க்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவைத்" திறந்து வைத்து உரையாற்றிடும் அரிய வாய்ப்பு கிட்டியுள்ளமைக்காக மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்கிறேன். இருபத்தோராம் நூற்றாண்டில், மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான வளம், நலம் இரண்டையும் வழங்கிடும் மிக முக்கியமான துறைகள் இரண்டு; ஒன்று தகவல் தொழில்நுட்பம்; மற்றொன்று உயிரியல் தொழில்நுட்பம்.

தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சியைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் அதற்கென்று தனித்துறை தோற்றுவிக்கப்பட்டு, பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு கடந்த 4.7.2000 அன்று சென்னை தரமணியில் நமது பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள டைடல் மென்பொருள் தொழிற்பூங்கா, ஆசியாவிலேயே மிகப் பெரிதாக விளங்குவதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். திறக்கப்பட்ட நான்கு மாதங்களுக்குள், உலகின் முன்னணி நிறுவனங்களாகத் திகழும் பல மென்பொருள் நிறுவனங்களும், இந்தியாவில் உள்ள பல பெரிய மென்பொருள் தொழில் நிறுவனங்களும் அதில் தமது தொழில் அமைப்புகளை நிறுவ முன்வந்து ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளமை டைடல் பூங்காவின் வெற்றிக்கு மட்டுமல்ல; தமிழகத்திலே தகவல் தொழில்நுட்பம் அடைந்து வரும் வளர்ச்சிக்கும் சிறந்த சான்றாகும்.

இத்துடன், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான, தரமான பல கட்டமைப்பு வசதிகளும் அங்கே உருவாக்கப்படுகின்றன. இந்தத் துறையில் தமிழகத்தில் உருவாக்கப்படும் ஆற்றல் மிகுந்த மனித வளம் உலகின் பல பகுதிகளிலும் தமிழக இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் வழிவகுத்துள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருதும் நாடுகள் இந்தியாவை, குறிப்பாகத் தமிழகத்தை நாடி வரும் சூழ்நிலைகளை இந்த அரசு அண்மைச் சில ஆண்டுகளில் உருவாக்கி, மகத்தான சாதனை



படைத்துள்ளது என்பதனைப் பெருமிதத்தோடு நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



இப்படித் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகத் தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைப் போலவே உயிரியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் இந்த அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது என்பதை நீங்களெல்லாம் மிக நன்கறிவீர்கள்.

கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவைப்படக்கூடிய சத்துணவு, சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல் போன்றவைகளில் உயிரியல் தொழில் நுட்பத்தின் ஆற்றல்கள் பொதிந்து கிடக்கின்றன. எனவே, இந்த ஆற்றல் முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டு வரப் பட வேண்டும். வளரும் நாடுகளில் இந்த முயற்சி மிக மிக முக்கியமானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### உயிரியல் தொழில் நுட்பத்தினால் பெரிய அளவில் வேலை வாய்ப்பு

மக்கள் தொகை பெருக்கம், வரம்பிற்குட்பட்ட விளை நிலங்கள், அதிக அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகியவை தொடர்பான இன்றைய சவால்களைச் சந்தித்துத் தீர்வு காண்பதற்கு உயிரியல் தொழில்நுட்பம் நமக்குப் பெரிதும் உதவும். இவை மாத்திரமல்லாமல், உயிரியல் தொழில்நுட்பம் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கக்கூடியது என்பதும் சிறப்பாகக் கவனத்தில் கொள்ளக்கூடியதாகும்.

உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் இந்தியாவில் பயன்படுத்தப் படும் பொருள்களின் மதிப்பு சென்ற ஆண்டில் 7,154 கோடி ரூபாயாக இருந்தது. நடப்பு ஆண்டுகளில் இது 9,400 கோடி ரூபாய் அளவினை எட்டும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இது 2005–ஆம் ஆண்டில் 14,560 கோடி ரூபாய் அளவுக்கு உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவரங்களின் அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் புதிய முதலீடுகள் செய்யப் படுவதற்கு மிகச் சிறந்த வாய்ப்புகளை இந்தியா பெற்றுள்ளது என்பது நன்றாக விளங்கும்.

முதலீட்டாளர் நட்புறவுடன் கூடிய தொழில் வளர்ச்சி குறித்த இந்த அரசின் சீரிய கொள்கைகள் காரணமாக முதலீடுகளை ஈர்ப்பதில் கடந்த சில ஆண்டுகளில் தமிழகம் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழகம் உயிரியல் வளங்களை மிக அதிக அளவில் கொண்டுள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள பல்வேறு வகையான நிலவியல் பகுதிகளில் (Geographical Terrains) உயிரியல் வகைகள் பல காணப்படுகின்றன. தமிழகத்தின் வனவளம், வேளாண் வளம், நிலவளம் ஆகியவை அளவில் பெரியதாகவும், பல்வேறு வகையினதாகவும் அமைந்துள்ளன. நாட்டிலேயே மிக நீண்ட கடற்கரையை தமிழகம் கொண்டுள்ளது.

இவற்றின் காரணமாக உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காகவும், உயிரியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மேம்பாடுகளுக்காகவும், வர்த்தக நடைமுறைகளுக்காகவும் அதிக அளவில்

முதலீடுகள் செய்வதற்குரிய வாய்ப்புகளைத் தமிழகம் பெற்றுள்ளது.

இதன் காரணமாக, உயிரியல் தொழில்நுட்பத்தினைத் தமிழகத்தில் பெருக்கி வளர்க்க உதவும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக உயிரியல் தொழில் நுட்பத்திற்குத் தனிக் கொள்கை வகுத்து, அதனைச் செயல்படுத்திடும் முதல் மாநிலம் தமிழகம் என்பதனை இவ்வேளையில் நினைவு படுத்துகிறேன்.

**டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் உயர்மட்டக் குழு**

2000–2001–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று சட்டப் பேரவையில் வைத்து நான் உரையாற்றிய போது பின்வருமாறு குறிப்பிட்டேன்:

"வளர்ந்து வரும் உயிரியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திட உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. டாக்டர் திரு எம்.எஸ்.சுவாமி நாதனைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து தனது பரிந்துரைகளை அளிக்கும்" இவ்வாறு நிதிநிலை அறிக்கை உரையிலே நான் குறிப்பிட்டேன். இந்த அறிவிப்பின்படி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு, தமிழகத்திலே அதிக அளவில் கிடைக்கும் உயிரியல் வளங்களையும், உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த மனித வளங்களையும், தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்களை அமைப்பதற்குரிய வாய்ப்புகளையும், விரிவாகப் பரிசீலித்து அவற்றின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட பரிந்துரை களை 10.8.2000 அன்று அரசுக்கு வழங்கியது. அந்தப் பரிந்துரைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிட நான் விரும்புகிறேன்.

தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கழகம் (Tamilnadu Biotechnology Board) ஒன்றை உருவாக்கி அதன் மூலம் உயிரியல் தொழில்நுட்பத் தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான நிதியுதவிகள், தொழில்நுட்ப உதவிகள் முதலியவற்றை வழங்கலாம்.

தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கழகம், மருத்துவம், உணவு மற்றும் வேளாண்மை, தொழில் மற்றும் சுற்றுச்சூழல் உயிரியல் தொழில்நுட்பங்கள், உயிரியல் வளம் சார்ந்த தகவல்கள் (Bioinformatics) மரபணுக்கள் (Genomics) ஆகியவற்றின் மீது ஆலோசனைகள் வழங்குவதற்கு நிலையான ஆலோசனைக் குழுக்களை அமைக்கலாம்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ள சிலிகான் பள்ளத்தாக்கு அமைப்பினைப் போல, மாமல்லபுரம் – கல்பாக்கம் பகுதி, மண்டபம்–தூத்துக்குடி பகுதி, மதுரை–கொடைக்கானல் பகுதி ஆகிய மூன்று இடங்களிலும் உயிரியல் தொழில்நுட்பத் தொழில் மண்டலங்களை அல்லது உயிரியல் பள்ளத்தாக்குகளை அமைக்கலாம்.





இப்பள்ளத்தாக்குகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் தொடர்ந்து உருவாகும் உயிரியல் தொழில்நுட்ப வளாகங்கள் இந்த உயிரியல் பள்ளத்தாக்குகளுடன் இணைந்து செயல்பட முடியும்.

அயல்நாடுகளில், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செயல்பட்டு வரும் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களோடு தகுந்த முறையில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளலாம். இது உயிரியல் தொழில்நுட்பப் பாதுகாப்புப் பூங்காவை நிறுவ பணிகளை விரைவுபடுத்திட உதவும்.

30 கோடி ரூபாயைத் தொடக்க மூலதன நிதியாகக் கொண்டு உயிரியல் தொழில்நுட்பத்திற்கு உதவிடும் சிறப்பு மூலதன நிதி ஒன்றை உருவாக்கலாம் என்பன போன்ற பல பரிந்துரைகளை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான உயர்மட்டக்குழு அரசுக்கு அளித்தது.

இந்தப் பரிந்துரைகளைத் தமிழக அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்து, அவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டு, அதற்குரிய கொள்கை ஆவணம் 12.9.2000 அன்று சென்னையில் நடைபெற்ற, இன்றைக்கு உலகிலேயே உயிரியல் தொழில்நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகமான கார்னெல் பல்கலைக்கழகம் நடத்திய உயிரியல் தொழில்நுட்ப மாநாட்டில் தமிழக அரசினால் வெளியிடப்பட்டது.

**தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்**

இக்கொள்கை ஆவணம் கூறும் ஒரு பரிந்துரையின்படி, "தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்" ஒன்று 22.11.2000 அன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் அமையும் இந்த வாரியத்தில், தமிழக அரசின் தொழில்துறைச் செயலாளரும், நிதித்துறைச் செயலாளரும், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறைச் செயலாளரும், அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினராகவும், உறுப்பினர் செயலாளராகவும், விளங்குவார்.

மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர் டாக்டர் எஸ்.இராமச்சந்திரன், கோவை பாரதியார் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் எஸ்.இக்னாசிமுத்து (Dr.S.Ignacimuthu), பெங்களூர் இந்திய அறிவியல் கல்வி நிலையத்தில் உள்ள குளோபல் பயோடைவர்சிடி கன்வென்ஷனில் (Global Biodiversity Convention) அறிவியல் ஆலோசகக்குழுத் தலைவர் பேராசிரியர் மாதவ் காட்கில் ( Prof. Madhav Gadgil).

மராட்டிய மாநிலம் ஜாய்னாவில் உள்ள மாய்கோ உயிர் அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (Mahyco Life Sciences Research Centre, Jaina) இணை இயக்குநர் டாக்டர் திருமதி உஷா பர்வாலே–செர் (Dr.(Mrs.)Usha Barwale-Zehr)

ஆகியோர் இந்த வாரியத்தினுடைய உறுப்பினர்களாக தமிழக அரசினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் இந்த தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த வாரியத்தின் உதவியோடு தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பம் தொழில்கள் பல அடுத்தடுத்துத் தோன்றிப் பெருக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு இன்று திறக்கப்படும் மகளிர்க்கான பொன்விழா ஆண்டு உயிரியல் தொழில்நுட்ப வளாகம் பயன்படும் என்று நாம் நம்புகிறேன். இந்த உயிரியல் தொழில்நுட்ப வளாகம் அமைந்ததன் பின்னணியை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழகத்தில் அமைந்து கிடக்கும் அளவற்ற உயிரியல் வளங்களின் அடிப்படையில் சென்னையில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்துறையும், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து, ஆசிய, பசிபிக் மண்டலத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய செயலரங்கம் ஒன்றை 1996–ஆம் ஆண்டு டிசம்பரில் நடத்தியது அந்தச் செயலரங்கம்.

"உயிரியல் தொழில்நுட்பத் துறையிலே தகுதி வாய்ந்த பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கிடும் நோக்கத்தோடு பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம்." என்று பரிந்துரை செய்தது.

மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை அப்பரிந்துரையை ஏற்று, அதனை நமது நாட்டில் 50–வது சுதந்திரப் பொன்விழா நினைவு சிறப்புத் திட்டங்களில் ஒன்றாக அறிவித்தது.

அதனையொட்டி தமிழ்நாடு அரசு, மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை சென்னையிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கேளம்பாக்கத்திற்கு அருகில் இங்கே, சிறுசேரியில் அமைத்திட முடிவு செய்தது. இதன்படி இந்தப் பூங்காவை இங்கு அமைப்பதற்காக 20 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தியாவிலேயே முதலாவதாக அமையும் இந்தப் பெண்களுக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக மேதகு குடியரசுத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களால் 29.7.1998 அன்று

அடிக்கல் நாட்டப்பட்டது. பின், கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்த உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா உருவாக்கப் பட்டுள்ளது. மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை இப்பூங்காவை உருவாக்க 4 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. நிதி நிறுவனங்களும், வங்கிகளும் 2 கோடி ரூபாய் கடனாக வழங்குவதற்கு இசைந்துள்ளன.

இப்பூங்காவில் அமையும் தொழில் முகவர்கள் தங்கள் உற்பத்திகளைத் தொடங்குவதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் இங்கே ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

வேளாண் உயிரியல் தொழில்நுட்பம், உணவுசார் உயிரியல் தொழில்நுட்பம், மருத்துவ உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவைகளின் அடிப்படையில் இப்பூங்காவில் உற்பத்தியாகும் பொருள்கள் உள்நாட்டுச் சந்தைகளில் வரவேற்பினைப் பெற்றுச் செல்வாக்கினைப் பெறும்.

இங்கு திறந்து வைக்கப்படும் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, உயிரியல் தொழில்நுட்பத் தொழில்கள் தமிழகத்தில் தொடர்ந்து பெருகி, தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் என்றும், இப்பூங்காவின் மூலம் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான உலக வரைபடத்தில் தமிழகம் முக்கியமான, சிறப்பான ஒரு இடத்தைப் பெறும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். ஏறத்தாழ ஆயிரம் மகளிர், தொழில் முகவர்களாக உருவாக இந்தப் பூங்கா வழிவகுக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மகளிர் சமுதாயம் தொழில் முகவர்களாக உயர இப்பூங்கா இந்தியாவிற்கே வழி காட்டக்கூடிய ஒன்றாக விளங்க வேண்டும் என்றும் நான் உளமார விரும்புகிறேன். இங்கு தொழில் தொடங்கும் மகளிர் தொழில் முகவர்களுக்கு என் நல்வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கு வித்திடும் இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை இங்கு உருவாக்க உதவிகள் புரிந்த மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறைக்கும், வேளாண் விஞ்ஞானி அருமை நண்பர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கும் தமிழக அரசின் சார்பில் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் ஈடுபட்டு நடத்துகின்ற காரியங்கள் சிறப்பாக இருக்கும். நான் எல்லா மகளிரையும் சொல்லவில்லை. ஆனால், சிறந்த மகளிர், திறமை வாய்ந்த மகளிர், ஆற்றல் பெற்ற மகளிர் ஈடுபட்டு நடத்துகின்ற காரியங்கள் வெற்றிகரமாக இருக்கும். பாராட்டத்தக்கதாக அமையும், போற்றத் தக்கதாக, புகழத் தக்கதாக, நிச்சயமாக இருக்கும்.

### மகளிர் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள்

உதாரணத்திற்கு உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால், தமிழக அரசு 96–க்குப் பிறகு தமிழகத்தில் மகளிர் முன்னேற்றத்திற்காக மகளிருடைய பொருளாதார மேம்பாட்டிற்காக சில திட்டங்களை வகுத்து ஆங்காங்கு மகளிர் குழுக்களை அமைத்து அந்த மகளிர் குழுக்கள் மூலமாகச் சமுதாயப் பணியை ஆற்றி வருகின்றது. அவர்கள் இருபது முப்பது பேர் குழுக்களாகச் சேர்ந்து அவர்கள் ஆற்றுகின்ற பணிகளை நானே நேரில் சென்று கண்டறிந்த போது அவர்கள் சமுதாயத் தொண்டினை எவ்வளவு திறம்பட ஆற்றுகிறார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது. அதுமாத்திரமல்ல, மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம், சிறுசிறு வாணியம் செய்வதற்காக, வியாபாரம் செய்வதற்காக மகளிர் ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றுகூடி அவர்கள் நடத்துகின்ற இந்தத் திட்டமும் போற்றத் தக்கதாக இருக்கின்றது. நாணயமாகவும் இருக்கின்றது.

இன்னொன்று சொல்வேன். நியாய விலைக்கடைகளைக் கூட இப்பொழுது மகளிர் சிலர் நடத்த முன் வந்திருக்கிறார்கள். மற்ற நியாய விலைக்



கடைகளை விட மகளிர் நடத்துகின்ற நியாய விலைக்கடைகள் மிகச் சிறந்த நியாய விலைக் கடைகளாக விளங்குகின்றன என்பதையும் தமிழக அரசு உணர்ந்திருக்கின்றது. எனவே, மகளிர்க்கான இந்தத் திட்டம் நல்ல முறையிலே மேலும் மேலும் வளருமென்ற நம்பிக்கையோடு வாழ்த்தி, பாராட்டி விடைபெறுகிறேன்.

***சிறுசேரியில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை 24–11–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.***



# சேலம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

### நமக்கு நாமே திட்டம்

1997–98ஆம் ஆண்டு ரூ.2.15 கோடி செலவில் 668 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் பொது மக்களின் பங்களிப்பு ரூ.82.12 இலட்சமாகும். 1998–99 ஆம் ஆண்டில் மாவட்டம் முழுவதும் ரூ.2.43 கோடி செலவில் 205 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப் பட்டுள்ளன. இதில் ரூ.127.21 இலட்சம் பொது மக்களின் பங்கேற்பு நிதியாகும். 1999–2000ஆம் ஆண்டு 254 பணிகள் ரூ.2.86 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் ரூ.170.73 இலட்சம் பொதுமக்களின் பங்கேற்பு நிதியாகும். நடப்பாண்டில் 45 பணிகளுக்கு ரூ.100.03 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் பொது மக்கள் பங்குத் தொகை ரூ.31.82 இலட்சம் அடங்கும்.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

1997–98ஆம் ஆண்டில் 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.14.09 கோடி செலவில் 1,818 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டிற்கு 10 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.9.96 செலவில் 1,091 பணிகள் செய்யப்பட்டுள்ளன. 1999–2000 ஆண்டு 9 ஊராட்சிகளில் 1,618 பணிகள் ரூ.8.42 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 932 பணிகள் ரூ.16.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப் படவுள்ளன.



### சமத்துவபுரம்

தமிழகத்திலேயே சேலம் மாவட்டத்தில்தான் 3 சமத்துவபுரங்கள் (நெய்க்காரப்பட்டி, கத்தேரி, கோனூர்) ஒரே நேரத்தில் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஒரே நாளில் திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் சின்ன சீரகாப் பாடியில் நான்காவது சமத்துவபுரம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் நடுவலூரில் ஐந்தாவது சமத்துவபுரம் அமைக்கும் பணியும் துவங்கப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டுள்ளது.

### சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

கடந்த 3 ஆண்டுகளில் 893 பணிகள் ரூ.12.44 கோடி நிதியில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 155 பணிகள் ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

### வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

முதல் தொகுதி – நீர்வடிப்பகுதி திட்டத்தின் மூலம் 15 நீர்வடிப்பகுதிகளில் ரூ.300 இலட்சம் செலவில் 7,500 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 நீர்வடிப் பகுதிகளில் ரூ.50 இலட்சம் செலவில் 12.5 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தும் வகையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஆலத்தூர் நீர்வடிப்பகுதியில் ரூ.200 இலட்சம் செலவில் 5000 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

கடந்த 3 ஆண்டுகளில் (1996–97 முதல் 1998–99 முடிய) 30,503 பயனாளிகளுக்கு ரூ.14.68 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (எஸ்.ஜி.எஸ்.ஒய்.)**

1999-2000ஆம் ஆண்டில் புதியதாக துவங்கப்பட்டுள்ள இத்திட்டம் ஐ.ஆர்.டி.பி., டிரைசம், டோக்ரா, ஸிட்ரா, கோடிக் கிணறுகள் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து துவக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின்கீழ் 1999-2000ஆம் ஆண்டில் 5,373 பயனாளிகளுக்கு ரூ.4.87 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 2000-2001ல் ரூ.5.18 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**சேலம் மாவட்ட ஊராட்சி**

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் மொத்தம் 387 பணிகள் ரூ.438 இலட்சம் செலவில் எடுக்கப்பட்டதில் 383 வேலைகள் முடிக்கப்பட்டது. 4 வேலைகள் நடைபெற்று வருகிறது. நடப்பு ஆண்டிற்கு மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.125 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

**சேலம் மாநகராட்சி**

கடந்த நான்கு ஆண்டுகளில் மாநகர மக்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகளுக்காக 8,244 பணிகள் ரூ.45.70 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன.

**நெடுஞ்சாலைத்துறை**

திட்டம் சாரா பணிகளில் கடந்த 4 ஆண்டுகளில் 465.64 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.14.95 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. திட்டப் பணிகளின் கீழ் மாநில சாலைகள், பிற மாவட்ட சாலைகள், நபார்டு சாலைகள் போன்ற பணிகள் ரூ.92.95 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

இத்துறையின் மூலம் 1996ஆம் ஆண்டு முதல் ஊரகப் பகுதிகளில் ரூ.15.31 கோடி மதிப்பீட்டில் 335 குடியிருப்புகளுக்கு கிராம குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளன. மின்விசை புனரமைப்புத் திட்டத்தின் மூலம் 173 குடியிருப்புகளுக்கு குடிநீர் திட்டங்கள் ரூ.238.49 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 16 குடியிருப்புகளுக்கு ரூ.24.75 இலட்சம் செலவில் குடிநீர் திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. ரூ.61 இலட்சம் செலவில் 45 குடியிருப்புகளுக்கு மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 8 பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகள் ஆகியவை பயன்பெறும் வகையில் மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ரூ.16.90 கோடி செலவில் துவக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. சென்ற ஆண்டு 405 குடியிருப்புகளுக்கு ரூ.14 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சின்ன சீரகாப்பாடி சமத்துவபுரத்தில் ரூ.7.60 இலட்சம் மதிப்பீட்டிலும், நடுவலூர் சமத்துவபுரத்திற்கு ரூ.6.60 இலட்சம் மதிப்பீட்டிலும் குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**வருவாய்த்துறை**

**இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் நிலப் பட்டாக்கள் வழங்குதல்**

கடந்த நான்கு ஆண்டுகளில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 58,747 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நிலப்பட்டாக்கள் 783 நபர்களுக்கு 538.53 ஏக்கர் நிலத்திலும், நடப்பாண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் இதுவரை 992 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**பொது விநியோகத் திட்டம்**

சேலம் மாவட்டத்தில் 1,173 நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன. இவற்றில் முழுநேர நியாயவிலைக் கடைகள் 1,028, பகுதிநேர நியாயவிலைக் கடைகள் 138, மகளிரால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகள் 7-ம் செயல்பட்டு வருகிறது. இந்த நியாயவிலைக் கடைகள் மூலம் மொத்தம் 7,80,404 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகின்றனர். குடும்ப அட்டைதாரர்களுக்குச் சரியான அளவில் மண்ணெண்ணெய் கிடைக்கவேண்டும் என்கிற நோக்கத்தில் சேலம் மாவட்டத்தில் 20 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு, இவற்றில் 14 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் துவங்கப்பட்டு செயல்படுகின்றன. மேலும், ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் ஆத்தூர் நகரில் துவக்க கட்டுமானப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. 30,000 போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுத்துறை**

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 2000-2001ஆம் ஆண்டில் நியாயவிலைக் கடைகளுக்கு இலவச கட்டடங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்க தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 21 முழுநேர நியாயவிலைக்கடைகள், 8 பகுதிநேரக் கடைகள் உள்ளன. இதில் 12 முழுநேர நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் உள்ளது. மீதமுள்ள 9 நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன.





**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

**இலவச வீட்டுமனைப்பட்டா**

சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 3,914 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1.36 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**கல்வி உதவித்தொகை**

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,61,012 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.3.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**இலவச சீருடைகள்**

கடந்த நான்கு ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 5,850 மாணவ மாணவியருக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.18.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 1,350 மாணவ மாணவியர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

**இலவச பாட புத்தகங்கள்**

கடந்த நான்கு ஆண்டுகளில் 97,664 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.52.87 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 24,067 மாணவ மாணவியர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**விடுதி மாணவ மாணவியர்களுக்கு உண்டி உறைவுக் கட்டணம்**

கடந்த நான்கு ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட 7,340 மாணவ மாணவியர்களுக்கு இலவச உணவு, உறைவிடம் அளித்த வகையில் ரூ.2.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**இலவச தொழில் கருவிகள்**

கடந்த நான்கு ஆண்டுகளில் 769 சலவைத் தொழிலாளர்களுக்கு ரூ.8.97 இலட்சம் மதிப்புள்ள சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. 689 போயர் இனத்தவர்களுக்கு ரூ.2.88 இலட்சம் மதிப்புள்ள கல்லுடைக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. 231 நாவிதர்களுக்கு ரூ.47,000 மதிப்புள்ள சவரக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

**சிறந்த மாணவ/மாணவியர்களுக்கான பரிசு**

கடந்த நான்கு ஆண்டுகளில் 90 மாணவ மாணவியர்களுக்கு ரூ.2.29 இலட்சம், தந்தை பெரியார் நினைவு பரிசு மற்றும் அறிஞர் அண்ணா நினைவு பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலைத் துறை**

கடந்த நான்கு ஆண்டுகளில் தோட்டக்கலைத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் ரூ.4.59 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இத்திட்டங்கள் ரூ.1.65 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் டான்ஹோப் திட்டம் மூலம் 5 சில்லறை விற்பனை அங்காடிகள் ரூ.5.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் கொள்முதல் மையம் மற்றும் 7 சில்லறை விற்பனை அங்காடிகள் அமைக்க ரூ.24.50 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நகராட்சி நிருவாகம்**

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர், மேட்டூர் மற்றும் எடப்பாடி ஆகிய 3 நகராட்சிகளிலும் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998-99 முடிய பல்வேறு திட்டப் பணிகளின்கீழ் 1,763 பணிகள் ரூ.8.13 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1999-2000ஆம் ஆண்டில் 461 பணிகள் ரூ.3.05 கோடி செலவில் பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டதில், 425 பணிகள் முடிக்கப்பட்டு 36 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. 2000-2001ஆம் ஆண்டில் சிறப்பு சாலை திட்டப்பணிகளின்கீழ் 72 பணிகள் ரூ.160 கோடி செலவிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதர பல்வேறு பணி

களுக்காக நடப்பாண்டிற்கு மூன்று நகராட்சிகளுக்கு ரூ.0.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

### பொது சுகாதாரத்துறை

1996–2000ஆம் ஆண்டு முடிய 35 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.2.34 கோடியில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது.

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 13–10–2000 தேதி முடிய 294 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் 2,80,764 நபர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. இவர்களில் 12,616 நபர்கள் மேல் சிகிச்சைக்காக பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள். 3,832 நபர்கள் மேல் சிகிச்சைப் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் வாழ்வொளி திட்டத்தின்கீழ் முதல் சுற்று மருத்துவ முகாம் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### உழவர் சந்தை

சேலம் மாவட்டத்தில் 21–12–99 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சூரமங்கலம், அம்மாப்பேட்டை காமராசர் காலனி மற்றும் ஆத்தூர் ஆகிய 3 இடங்களில் உழவர் சந்தைகள் துவக்கி வைக்கப்பட்டன. தாதகாப்பட்டியில் 4வது உழவர் சந்தை 19–5–2000 அன்று தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 5ஆவது உழவர் சந்தை 11–7–2000 அன்று மேட்டூர் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. ஆட்டையாம்பட்டி பேரூராட்சியில் 6ஆவது உழவர் சந்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### கால்நடை பராமரிப்புத் துறை

சேலம் மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டு முதல் 177 கறவை மாடுகள், 283 செம்மறி ஆட்டுப்பட்டிகள் ரூ.43.82 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பரவி வாழும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 1997–99ஆம் ஆண்டில் 100 யூனிட்டுகள் ரூ.5,00,000 மதிப்பிலும் மற்றும் 1998–99 ஆம் ஆண்டில் 40 யூனிட்டுகள் ரூ.3,60,000 மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 1996ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1. வீரபாண்டி 2. ஏற்காடு 3. ஓமலூர்

அதேபோல் கீழ்க்கண்ட இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1. ஆட்டையாம்பட்டி 2. உத்தமசோழபுரம் 3. பாலிக் கடை 4. வெள்ளாளகுண்டம் 5. வெள்ளாளபுரம்.

சேலம் மாவட்டத்தில் தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டம் 28.1.2000 அன்று சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டியில் துவக்கப்பட்டு தற்போது பிப்ரவரி 2000 மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு கிராமத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

1. இதுவரை நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை .......... 168
2. பயனடைந்த கால்நடைகள் எண்ணிக்கை .......... 4,19,230
3. தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை .......... 4,177
4. தொடர் சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்ட கால்நடைகளில் சிகிச்சைக்கு வந்த கால்நடைகள் எண்ணிக்கை .......... 845

### முதியோர் ஓய்வூதியம்

கடந்த நான்கு ஆண்டுகளில் முதியோர் ஓய்வூதியம் 26,978 நபர்களுக்கும், விதவை ஓய்வூதிய திட்டத்தின்கீழ் 22,718 நபர்களுக்கும், ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டத்தின்கீழ் 1,863 நபர்களுக்கும், விவசாய தொழிலாளர் ஓய்வூதியம் 3,609 நபர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட 3,061 நபர்களுக்கும், ஆக மொத்தம் 58,229 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 6,552 நபர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற குடும்பத்தில் பொருளீட்டுபவர் இறந்தால் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 13,637 நபர்களுக்கு ரூ.918.16 இலட்சமும், தொழிலாளர் விபத்து நிவாரண திட்டத்தின்கீழ் 424 நபர்களுக்கு ரூ.56.75 இலட்சமும், சாலை விபத்தில் இறந்த 1,003 நபர்களின் குடும்பத்திற்காக ரூ.21.64 இலட்சமும் நிதி வழங்கப்பட்டுள்ளது.



### பேரூராட்சிகள்

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 34 பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில் 824.83 கி.மீ. தார்சாலை, 211.43 கி.மீ. மெட்டல் சாலை, 217.16 கி.மீ சிமெண்ட் சாலை, 109.22 கி.மீ. மண்சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சி பகுதிகளில் 1,122 ஆழ்துளைக் கைப்பம்புகள், 231 பவர்பம்புகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 7,549 பணிகள் ரூ.2,234.17 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

மார்ச் 2001–க்குள் 3,100 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஜூன் 2000 வரை 1,451 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 25,623 உறுப்பினர்களில் 6,532 ஆதிதிராவிடர்கள். 265 மலைவாழ் மக்கள். மகளிர் சேமிப்பு ரூ.293.33 இலட்சங்களாகும், தனிநபர் சேமிப்பு மாதம் ஒன்றிற்குச் சராசரியாக ரூ.41.52. சங்க கடன் வழங்கியது ரூ.424.41 இலட்சம். ஒரு நபருக்குச் சராசரி கடன் ரூ.1,242. கடன் வசூல் 95 சதவிகிதம். 151 மகளிர் குழுக்களுக்கு ரூ.30.03 இலட்சங்கள் வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது. திரும்ப செலுத்தியது 100 சதவிகிதம். பொன்விழா கிராம சுய உழைப்பாளிகள் திட்டத்தின் மூலம் 224 குழுக்களுக்கு, சுழற்சி நிதியாக குழு ஒன்றிற்கு ரூ.10,000 வீதம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழங்கியுள்ளது.

### மாவட்ட தொழில் மையம்

மாவட்டத்தொழில் மையம் மூலம் தொழில் நிறுவனங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் முதலீட்டு மானியமாக ரூ.137.42 இலட்சமும், ஜெனரேட்டர் மானியமாக ரூ.6.21 இலட்சமும், மின்மானியமாக ரூ.93.23 இலட்சமும், விற்பனைவரி தள்ளுபடி/தள்ளிவைப்பு ரூ.250.75 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 2,243 இளைஞர்களுக்கு ரூ.13.86 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. 2000–2001 ஆண்டில் 680 இளைஞர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட உள்ளன.

### பெரியார் பல்கலைக்கழகம்

தந்தை பெரியார் பெயரில் "பெரியார் பல்கலைக் கழகம்" 17.9.97 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழகத்திற்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.21 கோடி அனுமதிக்கப்பட்டு முதல் கட்டமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

12 புதிய துறைகள் துவங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பல்கலைக்கழகத்தை மேம்படுத்தும் வகையில் இன்டர்நெட்வர்க் வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

### சமூகநலத்துறை

கடந்த நான்கு ஆண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 8,433 பெண்களுக்கு ரூ.8,43,30,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தில் 174 பெண்களுக்கு ரூ.7,26,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 19 பெண்களுக்கு ரூ.78,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 26 பேர்களுக்கு ரூ.1,82,000 வழங்கப்பட்டுள்ளது.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 146 நபர்களுக்கு ரூ.18,70,000 வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் 34,060 பெண்களுக்கு ரூ.17,82,25,000 வழங்கப்பட்டுள்ளது.





### விளையாட்டு உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இளைஞர் மன்றங்கள்

சேலம் மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் 141 மையங்களும், 3 நகராட்சிகளில் 7 மையங்களும், 34 பேரூராட்சிகளில் 55 மையங்களும், மொத்தம் 203 மையங்கள் துவங்கப்பட்டு இளைஞர்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் 101 மையங்கள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இளைஞர் மன்றங்கள் துவங்கப்பட்டு அவற்றின் செயல்பாட்டிற்கான பயிலரங்கம் விரைவில் நடைபெறவுள்ளது.

### அய்யன் திருவள்ளுவர் நூலகம்

திருவள்ளுவர் தினமான 16.1.2000 அன்று சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து (385) ஊராட்சிகளிலும் அய்யன் திருவள்ளுவர் நூலகம்/படிப்பகம் அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் அனுமதிக்கப்பட்ட ரூ.5,000 மானியத்தில், ரூ.3,000 செலவில் தளவாட சாமான்கள் வாங்கப்பட்டும், ரூ.2000 செலவில் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### மருத்துவத் துறை

கடந்த 4 ஆண்டுகளில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் சி.டி. ஸ்கேன் கருவி இம்மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் சேலம் மற்றும் அண்டைய மாவட்டங்களிலிருந்து வரும் 16,634 நோயாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். மேலும் ரூ.3 கோடி செலவில் சிறப்பு மருத்துவ கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் வீடியோ எண்டாஸ்கோப் என்னும் குடல் உள்நோக்கு கருவி மூலம் சுமார் 1200 நோயாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். ரூ.5 இலட்சம் செலவில் தேசிய கண்ணொளி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.4 கோடி செலவில் நவீன மருத்துவமனை நான்கு அடுக்கு மாடி கட்டப்பட்டு வருகிறது. இதில் பொதுமக்கள் பங்களிப்பு ரூ.1 கோடியாகும்..

### வேளாண்மைத் துறை

ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தில் நான்கு ஆண்டுகளில் மொத்தம் ரூ.115.08 இலட்சமும், தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.63.40 இலட்சமும் தேசிய பயறுவகை பெருக்கு திட்டத்தில் ரூ.29.78 இலட்சமும், எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தில் ரூ.122.97 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு சார்புத் திட்டத்தில் மொத்தம் ரூ.391.689 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### கல்வித் துறை

கடந்த நான்கு ஆண்டுகளில், 2,470 இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி மற்றும் ஓவிய ஆசிரியர்கள் பணிமூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். 42 துவக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 23 துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகளை மகளிர் பள்ளிகளாக பிரித்தும், 24 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்படுகின்றன.



1996-97ஆம் ஆண்டு முதல் 103 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகளும், 67 பள்ளிகளில் கழிவறைகளும், 35 பள்ளிகளில் அறிவியல் ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளன. உத்தமசோழபுரத்தில் புதியதாக அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 68 மேனிலைப் பள்ளிகளில் கணினி பாடப்பிரிவு துவக்கப்பட்டுள்ளது.

1999-2000ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் மார்ச் 2000 பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், அரசு மேல்நிலை பள்ளிகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், தனியார் நிதி உதவி பெறும் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் ஒருவருக்கும், ஆக மொத்தம் மூன்று மாணவர்கள் 29.7.2000 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்பட்டுள்ளனர். அதுசமயம் மாணவர்களுக்கு உயர் கல்வியில் பயிலும் செலவினத்திற்கான உதவித் தொகை முன்பணம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

அதுபோன்று ஏப்ரல் 2000-த்தில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று அதிக மதிப்பெண்கள் பெற்ற ஏழு மாணவ/ மாணவியர்களுக்கு உயர் கல்வி செலவினத்திற்கு முன்பணமும் பாராட்டு சான்றிதழும் முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

### கண்ணொளி வழங்கும் திட்டம்

கடந்த நான்கு ஆண்டுகளில் 2,774 நபர்களுக்குக் கண்புரை நீக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இவைகளுக்கென கடந்த இரண்டு ஆண்டுகளாக 1,888 அறுவை சிகிச்சைகளும் மற்றும் இவற்றில் 1,425 நபர்களுக்கு கண்ணில் உள்ளாடி (லென்ஸ்) பொருத்தப் பட்டுள்ளது.

### கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைச் சார்ந்துள்ள 562 சங்கங்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு 2,02,393 லிட்டர் பால் சேகரிப்புக்குழு மூலம் சேகரிப்பு செய்து, பால் நுகர்வோர்களின் நலன் கருதி சுமார் 70,000 லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்தில் ஆதிதிராவிடர் நல வாழ்வுத் திட்டம், தாட்கோ மற்றும் தாட்கோ கன்று வளர்ப்பு திட்டம் மூலம் கீழ்க்கண்டவாறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

| வருடம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மானியம் (ரூ.) |
|---|---|---|
| 1996-97 | 360 | 18,48,000 |
| 1997-98 | 119 | 6,33,480 |
| 1998-99 | 95 | 5,84,520 |
| 1999-2000 | 40 | 3,20,000 |

சேலம் மாவட்டத்திலுள்ள பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பயனாளிகளுக்கு 7 சதவிகிதம் வட்டியில் கறவை மாடுகள் வாங்க தாப்செட்கோ அலுவலகம் மூலம் கீழ்க்கண்டவாறு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வருடம் | பயனாளிகள் எண்ணிக்கை | மொத்தம் கடன் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1998-99 | 60 | 14,40,000 |
| 1999-2000 | 122 | 36,60,000 |

19 சங்கங்களுக்கு 50 சதவீதம் மானியத்தில் பால் பரிசோதனைக்கென மில்கோ டெஸ்டர் மைனர் வாங்க ரூ.2,56,500 ஊரக வளர்ச்சி முகமை மூலமும், பகுதி-2 திட்டத்தின் கீழ் 50 சதவீதம் மானியத்தில் இரண்டு பால் பரிசோதனைக் கருவி மில்கோ டெஸ்டர் மைனர் வாங்க ரூ.21,000ம் வழங்கப்பட்டுள்ளது.



### தமிழ்நாடு மின்சார வாரியம்

கடந்த 4 ஆண்டுகளில் 44 உயர் அழுத்த தொழில் மின் இணைப்புகள் ரூ.74 இலட்சம் செலவிலும், 4,745 விவசாய மின் இணைப்புகள் ரூ.1,494.20 இலட்சத்திலும், 4,971 குடிசை வீடுகளுக்கு ரூ.41.39 இலட்சத்திலும், 10891 LT சர்வீஸ் ரூ.4,356 இலட்சத்திலும், 615 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ரூ.246 இலட்சத்திலும், 76,232 வீட்டு மின் இணைப்புகள் ரூ.1,924.84 இலட்சத்திலும், 4,930 தெருவிளக்குகளுக்கு ரூ.179.03 இலட்சத்திலும், 893 புதிய மின் மாற்றி ரூ.1,582.50 இலட்சத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

### சேகோசர்வ்

ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியில் முன்னோடியாக விளங்கும் இம்மாவட்டத்தில், இக்கூட்டுறவு நிறுவனம் 1996–97ஆம் ஆண்டில் 21.24 இலட்சம் மூட்டைகளை விற்று ரூ.189.95 கோடி வணிகமும், 1997–98ஆம் ஆண்டில் 20.15 இலட்சம் மூட்டைகளை விற்று ரூ.192.07 கோடிக்கு வணிகமும், 1998–99ஆம் ஆண்டு 23.54 மூட்டைகளை விற்று ரூ.110.24 இலட்சம் இலாபமும், 1999–2000ல் 20.67 இலட்சம் மூட்டைகளை விற்று ரூ.37.30 இலட்சம் இலாபமாக பெற்றுள்ளது.

### வனத்துறை

கடந்த மூன்று ஆண்டுகளில் சேலம் வன மண்டலத்தில் 16,120 எக்டேர் பரப்பளவில் மிகவும் நலிவுற்றுள்ள காப்புக்காடுகளில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1,393.62 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வனத்துறை சார்பில் குரும்பப் பட்டியில் வன உயிரியல் பூங்கா மேம்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மண் அரிப்பைத் தவிர்க்கும் பொருட்டு தோட்டங்கள் மற்றும் ஈடுசெய் தோட்டங்களும் எழுப்பப்படுகிறது. சிறு வன பொருட்கள் ஏலம் மூலம் அரசுக்குக் கணிசமான வருமானம் கிடைக்கப் பெறுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,158.70 மெ.டன். கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகள் பிடிக்கப்பட்டு 438 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 2,283 நபர் களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,586.03 மெ.டன். அளவுள்ள சந்தனக் கட்டைகள் ஏலம் விடப்பட்டதன் மூலம் அரசுக்கு ரூ.369.55 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

## இந்துசமய அறநிலையத் துறை

### சமத்துவபுரம்

சேலம் இணை ஆணையர் மண்டலத்தில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 14.26 எக்டேர் நிலங்கள் அரசு சமத்துவபுரம் அமைக்கும் திட்டத்தின் கீழ் சட்டப்பிரிவு 34ன்படி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### இலவசத் திருமணம்

திருக்கோயில்கள் சார்பாக 247 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

### ஒருகால பூசைத் திட்டம்

ஒருகால பூசைகூட செய்ய இயலாத 155 திருக்கோயில்களுக்கு ரூ.25,000 நிலை வைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் கிடைக்கப்பெறும் வட்டியினைக் கொண்டு ஒரு கால பூசைகள் செய்ய நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புறத் திருப்பணித் திட்டம்

இத்துறையின் ஆளுகையின்கீழ் உள்ள மற்றும் நலிவடைந்த கிராமப்புறத் திருக்கோயில்கள் நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.25,000 வீதம் 11 திருக்கோயில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றது.

அரிசன காலனி மற்றும் பழங்குடி வகுப்பினர் காலனியில் உள்ள அரசு ஆளுகையின்கீழ் இல்லாத கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி திட்டத்தின் கீழ் 18 கோயில்களுக்கு ரூ.25,000 அளிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் அர்ச்சனை

அனைத்து திருக்கோயில்களிலும் தமிழ் அர்ச்சனை புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டு, தமிழில் அர்ச்சனை நடைபெற்று வருகிறது.

### புத்தொளிப் பயிற்சிப் பள்ளி, பயிற்சி வகுப்புகள்

சேலம் மாவட்டத்தில் இரண்டு திருக்கோயில் களில் புத்தொளிப் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு ஓதுவார்கள், அர்ச்சகர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அர்ச்சகர்கள், ஓதுவார்கள், எழுத்தர்கள், ஆய்வாளர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு சைவ, வைணவ சமய நெறிமுறை அறிந்துகொள்ளும் வகையில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளது.

கோடைக்கால பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு பொதுமக்களும் சைவ, வைணவ நெறிமுறைகளை அறிந்துகொள்ளும் வகையில் 7 நாட்கள் நடத்தப்பட்டது.



### ஓய்வூதியம்

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற 19 அர்ச்சகர் களுக்கும், வேதபாராயணம் ஒருவருக்கும் தலா ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### திருக்குறள் வகுப்புகள்

சேலம் மாவட்டத்தில் உள்ள 4 திருக்கோயில் களில் பொது மக்களுக்குத் திருக்குறளைப் பற்றி நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வாரம் ஒருநாள் திருக்குறள் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

### வழிபடுவோர் தங்கும் விடுதிகள் கட்டுதல்

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் வசதிக்காக 5 திருக்கோயில்களில் வழிபடுவோர் தங்கும் விடுதிகள் கட்ட நடவடிக்ளை எடுக்கப்பட்டு வருகிறது.



### தமிழ் புலவர் நியமனம்

சேலம் மாவட்டத்தில் உள்ள 5 திருக்கோயில் களில் தமிழ் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

### கருணை இல்லம்

சேலம் நகரில், அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயிலில் கருணை இல்லம் துவங்கப்பட்டு 24 மாணவர்கள் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

### ஓதுவார் நியமனம்

சேலம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களில் புதியதாக ஓதுவார் நியமனம் செய்ய முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

• கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.2.08 கோடி செலவில் 7,403 ஏழை ஆதிதிராவிடர்/பழங்குடியினர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், ரூ.3.30 கோடி செலவில் 86,516 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையும், ரூ.1.50 இலட்சம் செலவில் பட்ட/பட்டயதாரிகளுக்கு குடும்ப கல்வித் திட்டத்தின்கீழ் 10 பேர்களுக்கு சுய வேலை வாய்ப்பும், ரூ.22.97 இலட்சம் செலவில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் தீருதவியும் வழங்கப்பட்டுள்ளது.

மலைவாழ் பழங்குடியினர் மக்களுக்கு ரூ.41.38 இலட்சம் செலவில் 127 நபர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிகொடுத்தும், ரூ.12.20 இலட்சம் செலவில் 180 நபர்களுக்கு இலவசமாக ஆடுகளும் வழங்கப் பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் முன்னேற்றத்திற்காக விவசாயம் சார்ந்த தொழில் செய்வதற்கும், சிறு தொழில்கள் செய்வதற்கும் தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் செய்யவும், பெண் குழந்தைகள் தொடர்ந்து, கல்வி கற்பதற்கு ஊக்குவிப்பதற்காகவும், படித்த மாணவ, மாணவியர்கள் சுய தொழில் வேலை வாய்ப்பு பயிற்சிகள் மூலம் சுய தொழில் செய்வதற்காகவும் தாட்கோ மூலம் 35,056 பயனாளிகளுக்கு ரூ.5.63 கோடி மானியம் கொடுக்கப் பட்டுள்ளது. 13 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு டிராக்டர்கள் ரூ.48.50 இலட்சம் கடனில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது துப்புரவு பணியாளர்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக சானிடரி மார்ட் என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் 22 பெண்களுக்கு ஆட்டோ ஓட்டும் பயிற்சி அளிக்கப்பட்டு, உரிமம் பெற்றுள்ள மகளிருக்கு ஆட்டோக்கள் வழங்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மினி பஸ் மற்றும் ஜீப்புகள் வழங்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 70 பட்டதாரி ஆதிதிராவிட மாணவர்களுக்கு மாதம் தலா ரூ.400 உதவித் தொகையுடன் கணினி பயிற்சி அளிக்கப்படுகிறது.

### குழந்தை தொழிலாளர் மீட்பு மற்றும் மறுவாழ்வளித்தல் இயக்கம்

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் (ஸ்மைல்) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் அபாயகரமான தொழில்களில் இருந்து மீட்கப்பட்ட 2000 குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க 42 குழந்தைத் தொழிலாளர் மையங்கள் ஏற்படுத்தப் பட்டு, அக்குழந்தைகளை, அம்மையங்களில் சேர்த்து அவர்களுக்கு இலவச மதிய உணவு, வாழ்வொளித் திட்டத்தின் கீழ் மருத்துவ பரிசோதனை, மாதாந்திர உதவித் தொகை தலா ரூ.100, இலவச பாட புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டு, 1 முதல் 5ஆம் வகுப்பு வரை சிறப்பான கல்வி அளிக்கப்பட்டு வரப்படுகிறது.

### தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆண்டிப்பட்டி ஏரியில் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு ரூ.763.35 இலட்சத்தில் 588 மாடி குடியிருப்புகளும், சேலத்தாம்பட்டியில் 840 மாடி குடியிருப்புகள் ரூ.834 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 73.85 இலட்சம் செலவில் 4,105 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பணிகளும், இந்த ஆண்டு ரூ.31 இலட்சம் செலவில் 1,600 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பணிகளும் நடைபெற்று வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் தீப்பிடிக்காத கல்நார் தகடு கூரை வீடுகள் 1,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.127 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு 1,100 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.162 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### மாவட்ட மறுவாழ்வு மையம்

கடந்த நான்கு ஆண்டுகளில் இம்மையத்தின் மூலம் 6,628 பயனாளிகளுக்கு ரூ.49,00,518 செலவில் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்–1) படிப்படியாக வளர்ச்சியடைந்து 949 பேருந்துகளை 20 பணிமனைகள் மூலமாக இயக்கி வருகிறது. இப்பேருந்துகளைத் தினந்தோறும் சுமார் 3.95 இலட்சம் கி.மீ. தூரம் இயக்குவதன் மூலம் சுமார் 11.46 இலட்சம் பயணிகளுக்குப் பேருந்து வசதி வழங்கப்படுகிறது. மேலும், இக்கழகத்தில் 6,674 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 1 முதல் பிளஸ் 2 வரை பயிலும் 1,12,354 மாணவ, மாணவியர்களுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டுகளும், 50 சதவீதம் சலுகை கட்டணத்தில் 48,659 மாணவ, மாணவியர்களும், (வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டில் 4,694 பேர்) பயனடைந்துள்ளனர்.

சேலம், நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 9 உழவர் சந்தைகளுக்குத் தினசரி 101 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதன்மூலம் தினசரி 450 விவசாயிகள் பயனடைகின்றனர். இந்த பேருந்துகள் மூலம் தினசரி 28,992 கிலோ காய்கறிகள் உழவர் சந்தைகளுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

### சுற்றுலாத் துறை

கடந்த நான்கு ஆண்டுகளில் இத்துறையின் மூலம் ஏற்காட்டில் ரூ.33.03 இலட்சம் செலவில் புதிய குடில்கள் கட்டப்பட்டு முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்காட்டில் தற்போதுள்ள தொலைநோக்கி கருவி மிகவும் பழமை வாய்ந்ததாகும். எனவே, ரூ.3 இலட்சம் செலவில் புதிய தொலைநோக்கி கருவி ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஏற்காடு லேடீஸ் சீட் தொலைநோக்கி இல்லத்தில் விரைவில் பொருத்தப்படவுள்ளது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் ரூ.35.55 இலட்சத்தில் தங்கும் விடுதி/உணவகம் மற்றும் மேட்டூர் அணைப்பூங்கா அழகுபடுத்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தங்கும் விடுதி/உணவகம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

### மினிப் பேருந்துகள்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் மினி பேருந்துத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இது தொடர்பாக தடையாய் இருந்த வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் தீர்க்கப்பட்டு தற்போது அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன. இதில் அரசு நிர்ணயித்த முழு இலக்கான 250 பேருந்துகளுக்கு மாவட்ட ஆட்சியரால் செயல்முறை ஆணை வழங்கப்பட்டுவிட்டது. அவற்றில் 110 வாகனங்களுக்கான பதிவுருக்கள் வரப்பெற்று அனுமதி வழங்கி வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றது. மீதி உள்ள செயல்முறை ஆணைகளுக்குரிய வாகனங்கள் கொண்டு வரும்போது உரிய மினி பேருந்து அனுமதி உடனுக்குடன் வழங்கப்படுகிறது. இவ்விலக்கு முழுமை பெற்றவுடன் அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெறும்.

☐ மு. நா. கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

★ ★ ★



# 100–வது உழவர் சந்தை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்லவபுரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 100வது உழவர் சந்தை திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு ஆயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். 100வது உழவர் சந்தை என்ற காரணத்தினால் பல்லவபுரமே இன்றைய தினம் எழில் குலுங்க காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் 14–ஆம் நாள் நேரு பிறந்த நாளில் முதல் உழவர் சந்தை மதுரை மாநகரத்தில் தொடங்கப்பட்டது. ஓராண்டுக்குப் பிறகு இன்றைக்கு அதே நேரு பிறந்த நாளில் 100வது உழவர் சந்தையும் திறக்கப்பட்டுள்ளது. நாம் எந்தவொரு காரியத்தைச் சொன்னாலும், அது சொன்னபடி நடக்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் மதுரையிலே முதல் உழவர் சந்தையைத் திறந்து வைக்கும் போதே சொன்னேன். அடுத்த ஆண்டிற்குள் 100 உழவர் சந்தைகள் தமிழகத்திலே திறக்கப்படுமென்று குறிப்பிட்டேன். சொன்னதைச் செய்வோம் என்பதற்கேற்ப இன்றைக்கு இந்த 100–வது உழவர் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக நேரு பிறந்த நாள், இந்தியத் திருநாட்டிலே ஒரு முக்கியமான நாள், குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்படுகின்ற நாள். குழந்தைகள் நாள் என்று சொல்லும்போது எனக்கு நினைவிற்கு வந்தது. இந்த உழவர் சந்தை பற்றி தம்பி வைரமுத்து எழுதிய பாடலில் இந்தக் காய்கறிகள், கனிகள் எல்லாம் கடைகளிலே குவிந்திருப்பது, குழந்தைகள் படுத்திருப்பதைப் போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார். எனவே குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்படுகின்ற பண்டித நேருவின் பிறந்த நாளில் 100வது உழவர் சந்தை திறக்கப்படுவது எல்லா வகையிலும் பொருத்தம் என்று நான் கருதுகிறேன்.

1999–2000–ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சட்டப் பேரவையில் 17.3.1999 அன்று நான் அளித்து உரையாற்றிய போது :

"காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் பங்கேற்கும் திட்டமொன்று வரும் நிதியாண்டிலிருந்து துவங்கப்படும்" என்று அறிவித்திருந்தேன்.

அந்த அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில், 25.10.1999 அன்று பின்வருமாறு குறிப்பிட்டேன்.

"காய்கறிகள், பழங்கள் முதலான வேளாண் விளைப்பொருட்களை இடைத்தரகர்கள், வணிகர்கள், குறுக்கீடு ஏதுமின்றி உழவர்கள் நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்ய ஏதுவாக, மாநிலத்தில் நகர்ப்புறங்களில், 100 இடங்களில் உழவர் சந்தைகள் நிறுவப்படும்" என்று அறிவித்தேன்.

அதற்கேற்பத்தான் இந்த 100 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டிருகின்றன. எங்கெங்கே இவைகள் இந்த ஓராண்டு காலத்திலே திறக்கப்பட்டன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அப்படி நினைவூட்டுவது திறக்கப்பட்ட உழவர் சந்தைகளைச் சுட்டிக்காட்டுவதற்காக அல்ல. இன்னும் திறக்கப்படாத இடங்கள் எவையெவை என்பதை அந்தந்த மாவட்டங்களிலே உள்ள ஆட்சித்தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்து அவைகளையும் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நினைவூட்டுகிறேன்.

மதுரை மாவட்டத்தில் 6 உழவர் சந்தைகள், திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், திருவாரூர் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 4, சேலம் மாவட்டத்தில் 6 உழவர் சந்தைகள்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், தேனி மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், நெல்லை மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், விழுப்புரம் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், தருமபுரி மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், வேலூர் மாவட்டத்தில் 7 உழவர் சந்தைகள், நாமக்கல் மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், சிவகங்கை



மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், இராமநாதபுரம் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், விருதுநகர் மாவட்டத்தில் 5 உழவர் சந்தைகள்,கோவை மாவட்டத்தில் 8 உழவர் சந்தைகள், தூத்துக்குடி மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், கரூர் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், கடலூர் மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், திருவள்ளூர் மாவட்டத்தில் 3 உழவர் சந்தைகள், குமரி மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், நாகை மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், பெரம்பலூர் மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள், ஈரோடு மாவட்டத்தில் 4 உழவர் சந்தைகள், நீலகிரி மாவட்டத்தில் 2 உழவர் சந்தைகள் என மொத்தம் 99 உழவர் சந்தைகள் இதுவரையிலே அமைக்கப்பட்டுள்ளன. இது 100-வது உழவர் சந்தை.

### 100 உழவர் சந்தைகளுக்குக் கட்டுமானப் பணிகளுக்கு ஆன செலவு ரூ.11 கோடி

இந்த 99 உழவர் சந்தைகளில் கடந்த ஓராண்டில் இதுவரை 16 கோடியே 93 இலட்சத்து 36 ஆயிரத்து 963 கிலோ எடையுள்ள காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த 99 உழவர் சந்தைகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ள காய்கறிகளின் மதிப்பு 112 கோடி ே ய 85 இலட்சத்து 35 ஆயிரத்து 326 ரூபாய். இதிலே ஒன்றை உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

இந்த 100 சந்தைகளை நாம் அமைத்திருக்கிறோம் என்றால் ஒன்றும் ஏராளமாக செலவு செய்து அமைத்திடவில்லை. 100 சந்தைகளுக்கும் இதன் கட்டுமானப் பணிகளுக்காக ஆகியிருக்கின்ற செலவு ஏறத்தாழ 11 கோடி ரூபாய்தான் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதனால் ஏற்படுகின்ற இலாபம் யார் யாருக்கு ? நுகர்வோருக்கும் இதனால் இலாபம், அதைப் போல விவசாயிகளுக்கும் இதனால் இலாபம் முன்பெல்லாம் நம்முடைய வீடுகளிலே உள்ள தாய்மார்கள் காய்கறி கடைக்குச் சென்று காய்கறிகளை வாங்குவது என்றால் அங்கே பேரம்பேசி முடிவெடுக்க அரைமணி நேரம் ஆகும். இவ்வளவு நேரமா காய்கறி வாங்க என்று கணவர்கள் கோபித்துக் கொள்கிற நிலைமை கூட ஏற்படும். இப்போது அந்தக் கஷ்டமெல்லாம் கிடையாது. தாய்மார்கள் உழவர் சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கினால் கறார் விலை, குறைந்த விலை. ஒவ்வொரு காய்கறியும் என்ன விலை என்று ஏற்கனவே தீர்மானித்து அவர்களே எழுதிப்போட்டுவிடுவார்கள். அதனால் போனவுடன் அதற்குரிய பணத்தைக் கொடுத்து அந்தக் காய்கறியை தாய்மார்கள் வீட்டிற்கு உடனடியாக வாங்கி வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் இன்னொரு இலாபம். வீட்டிலே ஏன் இவ்வளவு தாமதமென்று கணவன் கேட்க, நீங்கள் போய் வாங்கிப் பார்த்தா தெரியும் என்று அம்மையார் கோபிக்க அந்தச் சண்டை வராது. அதுவே பெரிய இலாபம் குடும்பங்களிலே என்பதை நீங்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும்.

உழவர் சந்தையிலே வந்து வியாபாரம் செய்த அந்த உழவர்கள் இந்த ஓராண்டு காலத்தில் 112 கோடி ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளை விற்றிருக்கிறார்கள் என்று ஏற்கனவே சொன்னேன். அதிலே அவர்களுக்கு எவ்வளவு இலாபம் கிடைத்திருக்கிறதென்றால் அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்துக் கொண்டிருந்த இலாபத்தைவிட கூடுதலாக அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற இலாபம் ரூ.22 கோடியே 72 இலட்சம் ரூபாய். அதைப் போலவே வாங்கிச் சாப்பிடுகின்ற நுகர்வோர், பொதுமக்களுக்கு இந்த உழவர் சந்தை ஆரம்பிப்பதற்கு முன்பு அவர்கள் அதிக விலை கொடுத்துத்தான் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த அதிக விலை அகற்றப்பட்டு உழவர் சந்தை மூலமாக அவர்கள் வாங்கியதால் அவர்களுக்குக் கிடைத்த இலாபம் 34 கோடி ரூபாய் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனவே நியாயமான விலை, இடைத்தரகர்கள் யாரும் இல்லாமல் இந்த வியாபாரம் இன்றைக்கு நடைபெறுகிறது. இடைத்தரகர்கள் என்றால் அது யாரோ வியாபாரிகள் என்று தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இந்த அரசு வியாபாரிகளுக்கும் நண்பனாக இருக்கக் கூடிய அரசுதான். வர்த்தகர்களுக்கு இதுவரையில் எந்த அரசும் செய்யாத நன்மைகளைச் செய்த ஒரே அரசு இந்த அரசு தான். இப்போது வர்த்தகர்கள் எங்களையெல்லாம் மாநாடு கூட்டி அழைக்கிறார்கள் என்றால் கோரிக்கை வைக்க அழைப்பதில்லை. நன்றி கூறுவதற்காக - எங்களைப் பாராட்டுவதற்காக அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே தான் இன்றைக்கு 100-வது உழவர் சந்தை திறக்கப்பட்டுள்ளது.

### என்னுடைய "செஞ்சுரிக் கனவு" நிச்சயம் நிறைவேறும் என்று நம்புகிறேன்

இந்த 100வது உழவர் சந்தையைத் திறக்க வேண்டுமென்று நான் அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திடம் எடுத்துச் சொன்னபோது அதற்கான வேலைகளை மும்முரமாகத் தொடங்கி இன்றைக்கு 100-வது உழவர் சந்தையை என் கண்ணிலே காட்டியதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அதைப் போலவே இன்றைக்கு தமிழ்நாட்டில் சமத்துவபுரங்கள் 100 ஏற்பட வேண்டுமென்பது என்னுடைய குறிக்கோள், என்னுடைய ஆசை. இதுவரையிலே உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணி அவர்களின் அரிய பணியின் காரணமாக 81 பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 19 சமத்துவபுரங்களும் டிசம்பர் திங்களுக்குள்ளாகத் திறக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. எனவே இதுவும் 100 அதுவும் 100 என்கிற என்னுடைய "செஞ்சுரிக் கனவு" நிச்சயமாக நிறைவேறும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

காய்கறிகளின் விலை மாத்திரமல்ல, குறிப்பாக இன்றைக்கு விலைவாசி ஓரளவு தமிழகத்தைப் பொறுத்தவரை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது குறைந்தே இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. துவரம் பருப்பு கடந்த கால ஆட்சியிலே விலை ஒரு கிலோ ரூபாய் 30.76. இன்றைக்கு விலை ரூ.25.13. கடலை எண்ணெய் விலை ஒரு கிலோ ரூ.41.30. இப்போது விலை 37.89. நல்லெண்ணெய் விலை கடந்த ஆட்சியிலே ஒரு கிலோ ரூ.42.22. இன்றைய விலை ரூ.37.41. தேங்காய் எண்ணெய் விலை கடந்த ஆட்சியிலே ஒரு கிலோ ரூ48.71. இன்றைக்கு விலை ரூ.41.20. காய்ந்த மிளகாய் விலை கடந்த ஆட்சியிலே ஒரு கிலோ ரூ44.65. இன்றைக்கு ரூ.28.89. பெரிய வெங்காயம் கடந்த கால ஆட்சியிலே ரூ.7.70. இன்றைக்கு ரூ.6.78. இந்த அத்தியாவசிய பொருள்களுடைய மாநில சராசரி விலைகளை ஒப்பிடும்போது பருப்பு, சமையல் எண்ணெய், மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின் விலை ஒரு பெரும் கட்டுப்பாட்டுக்குள் இன்றைக்கு வந்திருக்கின்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். விலைவாசி ஏறியிருக்கின்ற மேலும் சிலபொருட்களின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் குறைக்க முடியாவிட்டால் என் என்பதற்கான விளக்கங்களையும் உங்களுக்கு நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம் என்ற உண்மையை எடுத்துச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

### வருமுன் காப்போம் திட்டத்தில் 76 இலட்சம் ஏழை எளியோர் பயன் பெற்றிருக்கிறார்கள்

இஃதன்னியல் இந்த அரசினுடைய நற்பணிகள், சாதனைகள் கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் செய்யப்பட்டுள்ள காரியங்கள் என்னென்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல சாதி மதச் சண்டைகளை நிறுத்துவதற்கு ஒரு சமரச உறவை ஏற்படுத்தவதற்கு மனித நேயத்தோடு அனைவரும் வாழ வேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்குவதற்கு பெரியார் நினைவு சமத்துவபுரங்களை அமைத்து, அவைகளை ஆங்காங்கு இன்றைக்கு திறந்து வைத்திருக்கிறோம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 692 கோடி ரூபாய் செலவில் 74,810 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நமக்குநாமே திட்டத்தின் கீழ் 147 கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் 18,590 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதில் மக்கள் பங்கு 51 கோடியே 42 இலட்ச ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 414 கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் 30,505 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இதுவரை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பெருமுயற்சியோடு 7,680 மருத்துவ முகாம்கள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டு ஏறத்தாழ 76 இலட்சம் ஏழை எளியோர் பயன்பெற்றுள்ளார்கள். கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 3,389 மருத்துவ முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, 84 இலட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன்பெற்றுள்ளன.

இவ்வளவுக்கும் பிறகு ஏதாவது குறை சொல்லவேண்டுமென்று சொல்கின்றவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். என்ன குறை ? கரும்புக்கு ஆயிரம் ரூபாய் எங்கே, அன்றைக்குச் சொன்னாயே ஏன்

கொடுக்கவில்லை என்கிறார்கள். கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. தேர்தல் அறிக்கையிலே கூறாவிட்டாலும் கூட ஆயிரம் ரூபாய் வரையிலே கொடுக்க நாங்கள் முயற்சிப்போம் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலே நாங்கள் சொன்னது உண்மைதான். நான் இல்லை என்று மறுக்கவில்லை.



இப்பொழுது கொடுக்க முன் வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பத்து சதவிகித 'ரிக்கவரி' கரும்புக்கு பிழிதிறன் இருக்குமேயானால் அந்தக் கரும்புக்கெல்லாம் ஆயிரம் ரூபாய்.

நேற்றைக்கு முன்தினம் சட்டப் பேரவையிலே வேளாண்மைத்துறை அமைச்சர் பேசுகிற போது ஒவ்வொரு ஆலைக்குத் தகுந்தாற்போல் பத்து சதவிகிதம் என்றால் ஆயிரம், பத்து சதவிகிதத்திற்கு மேல் ஒரு புள்ளி அதிகமாக இருந்தால் இருபது ரூபாய், முப்பது ரூபாய் விலை அதிகமாகக் கொடுத்து வருகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் சிலபேர் அது என்ன பத்து சதவிகித பிழிதிறனுக்கு ஆயிரம் ரூபாய், எட்டு சதவிகிதம் பிழிதிறன் இருந்தாலும் ஆயிரம் ரூபாய் கொடு என்கிறார்கள். நீங்களே நியாயமா என்று எண்ணிப் பாருங்கள். பத்து சதவிகிதத்திற்கு ஆயிரம் ரூபாய், எட்டு சதவிகிதம் பிழிதிறன் இருந்தாலும் ஆயிரம் ரூபாய் என்பது நியாயமாக இருக்க முடியுமா? எட்டு சதவிகிதத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் பத்து சதவிகித பிழிதிறன் கொண்ட கரும்பு வைத்திருப்பவர் எனக்கு 1200 ரூபாய் வீதம் கொடு என்று கேட்பாரா கேட்கமாட்டாரா?

காஞ்சிபுரம் மாவட்டத்திலே உள்ளவர்களுக்கு நூலைப் பற்றி நன்றாகத் தெரியும். பட்டு நூலைப் பற்றியும் தெரியும். சாதாரண நூலைப் பற்றியும் தெரியும். 40-ஆம் நம்பர் நூலுக்கும் ஒரே விலை, 80-ஆம் நம்பர் நூலுக்கும் ஒரே விலை என்றால் அவர்களை புத்திசாலி என்று யாராவது சொல்வார்களா? என்பதை தயவுசெய்து நீங்கள் தான் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே தான் 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று இதிலும் சொன்னதைச் செய்கிறோம் என்பதை எடுத்துக்காட்டி இப்படி சொன்னதைச் செய்கிற, செய்வதைச் சொல்கின்ற இந்த அரசுக்கு உங்களுடைய அன்பான ஆதரவு என்றென்றும் இருக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

☐ காஞ்சிபுரம் மாவட்டம் பல்லவபுரத்தில் 14-11-2000 அன்று 100-வது உழவர் சந்தை திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.





சென்ற இதழ் தொடர்ச்சி

# 'மக்கள் சாசனம்'

### ஆவினம் மற்றும் எருமையின இனப் பெருக்கம் :

ஆவின மற்றும் எருமையின தனி உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்குடன் உயிரினமான பால் வளமிக்க ஜெர்ஸி, பிரீஸியன் மற்றும் முர்ரா இனப் பொலிகாளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்யப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, தீவிர கலப்பின இனவிருத்திக்காக உறைவிந்து தொழில்நுட்பம் மூலமாக மேற்கூறிய பொலிகாளைகளை விந்தின் மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கீழ்க்கண்ட நான்கு இடங்களில் உறைவிந்து குச்சிகள் தயாரிப்பதற்காக உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.



1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஒசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

### கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் :

கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் மாதத்திற்கு ஒன்று என்ற அளவில் ஆண்டு முழுவதும் நடைபெறுகிறது. இம் முகாம்களுக்கு மருந்துகள், விளம்பரம் ஆகிய செலவினங்களுக்கு ஒரு முகாமிற்கு ரூ.5,000 வீதம் செலவிடப்படுகிறது.

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

1976-ஆம் ஆண்டு முதல் சேலம், நாமக்கல், தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலன் கருதி "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்" மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு கறவை மாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் ஆகியவற்றை வாங்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்ட கல்ராயன் மலைப்பகுதி மக்களுக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது.

### சிறப்பு மத்திய உதவித் திட்டம் :

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஆதிதிராவிடர் சமூகத்தினரின் பொருளாதார மேன்மைக்கு 1983-ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் என்ற திட்டம் அவர்களின் நலனுக்காகவே பிரத்யேகமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஆதிதிராவிடர்களுக்கு கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வாங்கி வளர்க்க நிதியுதவி அளிக்கப்படுகிறது.

### தீவிர செம்மறி ஆடு பாதுகாப்பு :

சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில், தீவிர செம்மறியாடு பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய கால்நடை பராமரிப்பில் வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம் :

இத்துறை உலக வங்கி நிதிஉதவியுடன் வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.366.29 இலட்சம் மதிப்பில் 1995-96-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு கால அளவில் செயல்படுத்தி வருகிறது.

### இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் :

1. பணியிலுள்ள பணியாளர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகளை பலப்படுத்துவதும், பெருக்குவதுமாகும்.
2. பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக கால்நடை, இனப்பெருக்கம், நோய் கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் பசுந்தீவன வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு தற்கால நவீன அறிவியல் முறைகளில் பயிற்சி அளித்தல்.

**டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் :**

டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 1.8.90 முதல் புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல், குன்னாண்டார்கோவில் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.5.46 கோடி செலவில் முதல் கட்டமாக 6 வருட கால அளவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றிகரமான முதல் கட்ட செயலாக்கத்தின் பலனைப் பாராட்டி, டேனிடா இரண்டாவது கட்டப் பணியாக 1.2.97 முதல் 46 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 7 ஆண்டு காலத்திற்கு ரூ.27.50 கோடி செலவில் இரண்டாயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலும் மற்றும் 20 இலட்சம் வேளாண்குடி மக்களை ஈடுபடுத்தி பயன்பெறும் பொருட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இளம் தம்பதிகள் இணைப்பு தொடர் தம்பதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு கால்நடை பராமரிப்பு நடைமுறைகள், தீவன வளர்ச்சி, விரிவாக்க தொழில்நுட்பம் ஆகியவைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். இவர்கள் இத்திட்டத்தின் முன்னோடிகள் ஆவர். மற்றவர்கள் இத்திட்டத்தினை செயல்பாட்டின் குறியீட்டினை பின்பற்றக் கூடிய விவசாயிகள், விவசாயிகள் சங்கம் மூலமாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும் கால்நடை நிலையங்கள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். பயிற்சி பெற்ற இணைப்பு



தொடர் முறைகளாக இருக்குமே தவிர பெரிய அளவிலான உள்ளீடுகளைக் கொண்டதாக இராது.

இதுவரை 188 தொடர் பணியாளர் தம்பதிகளும், 4,146 விவசாயிகளும் கால்நடை பராமரிப்பின் பல்வேறு பணிகள் குறித்து பயிற்சி பெற்றுள்ளனர்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்கள்**

1. தென் மாவட்டங்களில் வாழும் விவசாயிகளுக்கு, நாட்டின் செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு 6 மாத வயதுடைய செம்மறி கம்பளி இன 'சௌக்லா' கிடாக்குட்டிகளை இராஜஸ்தான் மாநிலத்திலிருந்து வாங்கி மூன்றில் ஒன்று பங்கு மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. இதற்காக திருநெல்வேலி, அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் இவற்றைப் பராமரிக்க ரூ.13.25 இலட்சம் அரசு செலவிடுகிறது. இத்திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம் மூலம் முதல் ஆண்டு 660 பயனாளிகளும், இரண்டாம் ஆண்டு முதல் 160 பயனாளிகளும் பயனடைவார்கள்.
2. திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களில் உள்ள கிராமப்புற விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்பதில் நவீன தொழில்நுட்ப முறையில் திருநெல்வேலி, அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் 15 நாட்களுக்குப் பயிற்சியளித்து, பயிற்சி முடிவில் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு கிடா மற்றும் 4 பெட்டை ஆடுகளை மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 300 விவசாயிகள் நடப்பாண்டில் பயன்பெறுவர். இதற்காக அரசு ரூ.22.94 இலட்சம் செலவிடுகிறது.
3. ஆடுகளைத் தாக்கிய நீலநாக்கு நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள மத்திய ஆய்வுக் கூடத்தில் நீலநாக்கு நோய் பற்றி ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டும், நோய் பரப்பிகளைக் கட்டுப்படுத்தத் தேவையான பூச்சிக்கொல்லி, பூச்சி எதிர்ப்பு மற்றும் வேதியப் பொருட்களை வாங்கவும் ரூ.16.00 இலட்சம் செலவில் ஒரு நவீன ஆய்வுக் கூடம் அமைக்கப்படவுள்ளது.
4. கன்னியாகுமரி, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய தென் மாவட்டங்களில் கோழியின பராமரிப்பு இல்லாத பகுதிகளில் கோழியின வளர்ச்சியினை ஏற்படுத்தவும், கிராம மக்களுக்கு புரதச் சத்து மிக்க உணவு கிடைக்கும் பொருட்டும், இருவகையில் பயன்தரக்கூடிய கிரிராஜா ஒரு நாள் கோழிக்குஞ்சுகளை வாங்கி திருநெல்வேலி, அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் 12 வார காலம் வரை வளர்த்து மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் ஒவ்வொரு விவசாயிக்கும் 10 குஞ்சுகள் வீதம் ஒரு மாதத்திற்கு 200 பயனாளிகள் வீதம் வருடத்திற்கு 2,400 பயனாளிகள் பயனடைவர். இத்திட்டத்தினால் அரசிற்கு ரூ.30,65,000 செலவினம் ஏற்படும்.

* * *





**நலத் திட்டத்தின் பெயர் :**

### 1. ஆதிதிராவிடர் நலத்திட்டம்

**தகுதி :**

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் ஆக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர்கள் கறவை மாடு வாங்க மானியத்துடன் கடன்உதவி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடன் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்திற்கான கறவை மாடு ஒன்றின் விலை ரூ.12,000 வீதம் இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. இதில் ரூ.4,000 மானியமாகவும், ரூ.8,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய முகவரி :**

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

### 2. தாட்கோ நலத்திட்டம் இந்து ஆதிதிராவிட உறுப்பினர்கள் மத்திய உதவித் திட்டம்

**தகுதி :**

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் ஆக உள்ள ஆதிதிராவிடர் கறவை மாடு வாங்க மானியத்துடன் கடன்உதவி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடன் பெறாதவர்களாக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்திற்கான கறவை மாடு ஒன்றின் விலை ரூ.12,000 வீதம் இரண்டு கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. இதில் ரூ.4,000 மானியமாகவும், ரூ.8,000 வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய முகவரி :**

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்.

### 3. உள் கட்டமைப்பு மற்றும் உள்வீடு வசதிகள் கறவை மாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் சத்துள்ள தீவனம் வழங்குதல்

**தகுதி :**

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர் ஆக உள்ள ஆதிதிராவிடர்களது கறவை மாடுகளுக்கு சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல், கால்நடைத் தீவனம் வழங்குதல், புல் வளர்ப்பு, அம்மைத் தடுப்பு போன்ற மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளுதல்.

**அணுக வேண்டிய முகவரி :**

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்.

### 4. கன்று வளர்ப்புத் திட்டம் / தாட்கோ

**தகுதி :**

மேற்குறிப்பிட்டுள்ள ஆதிதிராவிடர் நலத்திட்டம் மற்றும் தாட்கோ திட்டங்களின் மூலம் வழங்கப்படும்



கறவை மாடுகள் ஈனும் கிடாய் கன்றுகளுக்கு (நான்கு மாத வயது முதல் 32 மாத வயது வரை) இலவச கன்றுத் தீவனம், காப்பீடு மற்றும் மருத்துவ சிகிச்சை 29 மாதங்களுக்கு கன்று ஒன்றுக்கு ரூ.10,680 வரை வழங்கப்படும்.

**அணுக வேண்டிய முகவரி :**

நிர்வாக இயக்குநர், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

* * *

**நலத் திட்டத்தின் பெயர் :**

**1. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டம்**

அ. உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.12,000 வரை வழங்கப்படுகிறது.

**தகுதிகள் :**

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

ஆ. வெளிப்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.10,000 வரை வழங்கப்படுகிறது

**தகுதிகள் :**

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**2. வலைகள் வாங்கிக்கொள்ள நபர் ஒன்றுக்கு மானியம் அதிகபட்சமாக ரூ.6,000 வரை வழங்கப்படுகிறது.**

**தகுதிகள் :**

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**3. இத்திட்டத்தின் கீழ் 500 உள்நாட்டு மீனவருக்கு மீன்பிடி வலைகள் வாங்குவதற்கென ஒரு மீனவருக்கு 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2,500 வரை மானியம் வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாடு)

**4. மிதிவண்டி வாங்கிட 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.450 மானியமாக வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

உள்நாட்டு மீனவர்களுக்கு மட்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாடு)

**5. அலுமினியப் பாத்திரங்கள் வாங்க 500 மீனவ மகளிருக்கு 50 விழுக்காடு மானியம் ரூ.150 வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)



**6. மீனவர்களுக்கு நிவாரணத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் இலங்கை கடல் எல்லைப் பகுதிக்குச் சென்று வீடுகளுக்குத் திரும்பாத மீனவர்களின் குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது.**

**தகுதிகள் :**

இலங்கை பகுதி எல்லை தாண்டி மீன்பிடிக்கச் சென்ற மீனவ குடும்பம்.





**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)





**7. மீனவர் அங்காடித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் கூடிய 10 மீனவர் அங்காடிகள் அமைத்தல்.

**8. சிங்காரவேலர் நினைவு வீடுகட்டும் வசதித் திட்டம். இத்திட்டத்தின் கீழ் கடல் மீனவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.37,000 மதிப்புள்ள வீட்டுவசதி செய்து தரப்படுகிறது.**

**தகுதிகள் :**

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கடல் மீனவர்களாகவும் மற்றும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும். 3 சென்ட் சொந்த நிலம் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**9. மீனவர் இலவசக் குழு காப்புறுதித் திட்டம்**

மீனவருக்கு முழு நிரந்தர ஊனம் மற்றும் மரணம் நேர்ந்தால் ரூ.50,000 அவர்கள் குடும்பத்திற்கு காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது.

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்கள்.

**10. பகுதி நிரந்தர ஊனமடையும் மீனவருக்கு ரூ.17,500 காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்கள்.

**11. மீனவர் விபத்துக்குழு காப்புறுதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் மீனவருக்கு முழு நிரந்தர ஊனம் மற்றும் மரணம் நேர்ந்தால் ரூ.15,000–மும், பகுதி நிரந்தர ஊனம் அடைந்திருப்பின் ரூ.7,500–மும் கூடுதல் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கடல்வள மற்றும் உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்கள்.

**12. எரிபொருள் மானியம். இத்திட்டத்தின் கீழ் 20 மீட்டர் நீளத்திற்கு குறையாமல் உள்ள விசைப்படகுகள் பயன்பெறும் வகையில் டீசல் வாங்குவதற்கு ஒரு லிட்டருக்கு 45 காசு வீதம் மானியமாக வழங்கப்படுகிறது**

**தகுதிகள் :**

மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்க வேண்டும்

மீன்பிடி கலன்கள் துறையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்

மீனவர்கள் முழுநேர மீன்பிடி தொழிலைக் கொண்டிருக்க வேண்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்)

**13. மீனவர் பயிற்சி. இத்திட்டத்தின் கீழ் மீனவ மாணவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகள், மீன்பிடி விசைப்படகுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் 10 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.200 உதவித்தொகை வழங்கப்படுகிறது.**

**தகுதிகள் :**

மீனவ சமுதாய இளைஞர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) ★

### 1. தள்ளுபடி மானியம் :

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி வழங்குகிறது. இத்தள்ளுபடி தொகையை அரசு சங்கத்திற்குத் திருப்பி வழங்குகிறது.

**அணுக வேண்டிய இடம் :**

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை நிலையங்கள்

### 2. நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் :

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தில் சேர நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து ஓராண்டு காலம் முடிவடைந்திருக்க வேண்டும். பங்குத் தொகை ரூ.100–க்குக் குறையாமல் இருக்க வேண்டும். வயது 18 முதல் 60–க்குள் இருக்க வேண்டும். கொடிய வியாதிகளால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடாது. உறுப்பினர் சந்தா 8%, அரசு பங்கு 8% மற்றும் வட்டி 7%. உறுப்பினர் 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால் ரூ.50,000 காப்பீட்டுத் தொகை வாரிசுகளுக்கு வழங்கப்படும். இதுதவிர, கோ–ஆப்டெக்ஸ் கருணைத் தொகையாக ரூ.10,000 வழங்குகிறது. மேலும் உறுப்பினர் கணக்கில் உள்ள திட்டத் தொகையும் திரும்ப வழங்கப்படும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 3. நெசவாளர் தொழிற்கூடத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம் :

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தில் தனித்தனி வீடுகளும், தொகுப்பு வீடுகளும் நெசவாளர் கூட்டுறவுச் சங்க



உறுப்பினர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகிறது. பயன்பெறும் உறுப்பினர் சங்கத்தில் தொடர்ந்து நெய்பவராக இருக்க வேண்டும். சொந்த வீடு இருக்கக் கூடாது. ஹட்கோ கடன் ரூ.40,000, அரசு மானியம் கிராமப்புறத்திற்கு ரூ.25,000, நகர்ப்புறத்திற்கு ரூ.27,000–ம் வழங்கப்படுகிறது.





கடன் தொகை 14 ஆண்டு தவணைகளில் வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 4. நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தில் சேர நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் 2 ஆண்டுகள் தொடர்ந்து நெசவு செய்து வரவேண்டும். 60 வயது முடியாதவராக இருத்தல் கூடாது. இத்திட்ட உறுப்பினர் 60 வயதுக்குள்ளாக இறக்க நேரிடின் அவரது வாரிசுகளுக்கு அவர் இறந்த தேதியிலிருந்து பிரதி மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 5. தொழிற்கூடம் கட்டும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

ஏற்கெனவே வீடு உள்ள நெசவாளர்களுக்குத் தொழிற்கூடம் கட்ட கிராமப்புறத்திற்கு ரூ.7,000–ம், நகர்ப்புறத்திற்கு ரூ.10,000–ம் மானியமாக வழங்கப்படுகிறது. பயன்பெறும் உறுப்பினர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து நெய்பவராக இருத்தல் வேண்டும். மேலும் உறுப்பினர் பெயரில் சொந்தமாக வீடும், காலி மனையும் இருத்தல் வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 6. டாக்டர் எம்.ஜி.ஆர். நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குழந்தைகள் உயர் கல்வி பயில நிதி உதவி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் தலா 2 மாணவ மாணவியர்க்கு வழங்கப்படும். பட்ட மேற்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மற்றும் மருத்துவம், பொறியியல், கால்நடை, சி.ஏ.,



பயிலும் மாணவ மாணவிகளுக்கு ரூ.3,000, பி.எஸ்.சி.(வி.வ), பி.பார்ம் பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூ.2,500, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., வங்கி அலுவலர் படிப்புக்கு ரூ.2,000.

பட்டப்படிப்பு மற்றும் பாலிடெக்னிக் பயிலும் மாணவ–மாணவியருக்கு ரூ.2,000, மேல்நிலைப் படிப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு ரூ.2,000, பத்தாவது வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்கு ரூ.1,500.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 7. நோகுப்பு செறிவுத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குப் புதிய ரகம் உற்பத்தி செய்யப் பயிற்சி வழங்கப்பட்டு, புதிய தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வாங்க நிதி உதவி அளிக்கப்படுகின்றது. சொந்தமாக இடம் இருப்பின் தறிக்கூடம் அமைத்துக் கொள்ளவும் மின் இணைப்பு வழங்கவும் நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 8.சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

புதிய வடிவமைப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து நெசவு செய்யும் உறுப்பினர் உற்பத்தி செய்யும் துணி ரகம் சிறந்த வடிவமைப்பு, நெசவு மற்றும் வண்ணம் கொண்டதாக இருந்தால், ஒரு தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்படும் மூன்று ரகங்களுக்கு முதல் பரிசு ரூ.5,000, இரண்டாம் பரிசு ரூ.3,000, மூன்றாம் பரிசு ரூ.2,000 வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 9. நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து, ஓராண்டு முடிந்த உறுப்பினர்களுக்கு பின்வருமாறு உதவிகள் வழங்கப்படுகின்றன.

**கண் சிகிச்சை :** கண் பரிசோதனைக்கு ரூ.40. கண் கண்ணாடி வாங்க ரூ.150. மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். கண்ணாடி வாங்கிய இரசீது கொடுக்கப்பட வேண்டும்.









**காசநோய் மற்றும் ஆஸ்துமா :** காசநோய் மற்றும் ஆஸ்துமா சிகிச்சை ரூ.1,500, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மருந்து வாங்கிய ரசீது இணைக்கப்பட வேண்டும்.

**மகப்பேறு உதவி :** மகப்பேற்றிற்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்க பெண் உறுப்பினர்களுக்கு மற்றும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு முதல் 2 குழந்தைகளுக்கு மட்டும் ரூ.500 வழங்கப்படுகிறது.

**குடும்பக்கட்டுப்பாடு :** குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள ரூ.100 உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**ஆரம்ப சுகாதார நிலையம் :** ரூ.1.00 இலட்சம் மானியமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படுகிறது. சங்கத்திற்குச் சொந்தமாக இடம் இருக்க வேண்டும். மருத்துவர் இதர பணியாளர் செலவினங்களை இச்சங்கமே மேற்கொள்ளும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## 10. முதியோர் ஓய்வூதியத் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் 1–4–1997 முதல் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தொடர்ந்து இருந்து 60 வயது முடிந்த நெசவாளர்களுக்கு மாதம் ரூ.200 வீதம் ஓய்வூதியமாக வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 11. ஐ.ஐ.எச்.ட்டி – பட்டயப்படிப்பிற்கான உதவித்தொகை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

சேலத்தில் இயங்கி வரும் இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலக (ஐ.ஐ.எச்.ட்டி)–த்தால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறி தொழில்நுட்பப் பட்டயப் படிப்பிற்கு நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்/மாணவிகளுக்கு சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சேரும் நெசவாளர் குடும்ப மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் முதலாம் ஆண்டுக்கு ரூ.400, இரண்டாம் ஆண்டுக்கு ரூ.450, மூன்றாம் ஆண்டுக்கு ரூ.500 மற்றும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் புத்தகப்படியாக ரூ.60 என உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்க்கு மட்டும் சுற்றுலாப்படியாக (அவ்வாண்டுக்கு மட்டும்) ரூ.200 வழங்கப்பட்டு வருகிறது.



**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 12. தேசிய வடிவமைப்பு மையத்தின் மூலம் தொழில்நுட்பக் கல்வி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

புதிய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ற வகையிலும், நுகர்வோரின் மாறிவரும் இரசனைக்கு ஏற்பவும், நவீன இரகங்களை உற்பத்தி செய்தல், கணினியை அதிக அளவில் பயன்படுத்தி நவீன வடிவமைப்புகளை அமைத்தல், தையற்கலை போன்ற உடனடி வேலைவாய்ப்பைத் தரக்கூடிய பல்வேறு தொழில்நுட்பப் பட்டயப்படிப்பிற்கான வகுப்புகளை சென்னை, தேசிய வடிவமைப்பு மையம் (என்.ஐ.எஃப்ட்டி) நடத்துகிறது. இவ்வகுப்புகளில் இந்த ஆண்டு முதல் ஆண்டு ஒன்றுக்கு 360 நெசவாளர்களின் குழந்தைகளுக்கு பயிற்சி கட்டணம் ஏதுமின்றி தொழில்நுட்பக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சரக துணை/உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை

★ ★ ★





**தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியம் உதவி குறிப்பீடு :**

**குறிக்கோள்கள் :**

1. வேலைவாய்ப்புகள் அளித்தலை சமூக நோக்கமாகக் கொள்ளுதல்
2. விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்தலை பொருளாதார நோக்கமாகக் கருதுதல், மற்றும்
3. வலிமையான கிராமப்புற சமுதாய சக்தியினைத் தோற்றுவித்தல், மக்களிடையே தன்னம்பிக்கை மற்றும் விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்

**செயல்கள் :**

கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்தி நிலையங்கள் மூலமாக கிராமப்பகுதியில் வாழுகின்ற நலிவுற்ற நூற்போர் மற்றும் நெய்வோர், அதிலும் குறிப்பாக மகளிர்க்கு அவர்தம் வீட்டிற்கு அருகாமையிலேயே வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்.

உள்ளூரில் கிடைக்கின்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தியும், கிராமப்புறத் தொழில்கள் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பளித்தல்

கதர் அல்லது கிராமத் தொழில் அல்லது கைவினைப் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கும் வகையில், அவைகளுக்கான சந்தை மற்றும் தேவைப்படும் விற்பனை முகவர்களை ஏற்படுத்தி வாரியம் இணைப்புப் பாலமாக செயல்படுதல்.

இன்றியமையாத தொழில்நுட்ப மற்றும் பயிற்சி வசதிகள் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அவ்வப்போது தேவைக்கேற்ப கைவினைஞர்களுக்குத் தருதல்.

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் சுருக்கமான விவரங்கள் பட்டியலிடப்பட்டு உங்கள் உபயோகத்திற்காக கீழே தரப்பட்டுள்ளன :

**திட்டத்தின் பெயர் :**

**கதர் நூற்பு மற்றும் நெசவு :**

**தமிழ்நாட்டில் பரவலாக இத்தொழிலுக்காக 358 கிராமிய நூற்பு நிலையங்களும், 86 உற்பத்தி நிலையங்களும் செயல்படுகின்றன.**

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆர்வமுடைய கைவினைஞர்கள் அவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றிட அந்தந்த மாவட்டத்தில் உள்ள உதவி இயக்குநரைத் தொடர்பு கொள்ளவேண்டும். மேலும் திருப்பூர், வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் உள்ள மண்டலத் துணை இயக்குநர்களையும் (கதர் கிராமத் தொழில்கள்) அணுகலாம்.



**வழங்கப்படும் உதவி :**

வாரியம், நூற்போருக்கு பஞ்சு மற்றும் இராட்டை வழங்கி சிட்டங்களைப் பெற்று கூலி வழங்குகிறது. அது போன்று நூற்பாளர்களுக்குச் சிட்டங்கள் வழங்கி துணியாகப் பெற்றுக் கூலியினை வழங்கி வருகிறது.



## பட்டு நெய்தல்

**தமிழ்நாடு முழுவதும் 34 பட்டு உற்பத்தி நிலையங்கள் செயல்படுகின்றன.**

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆர்வமுடைய கைவினைஞர்கள் அவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றிட கும்பகோணம், காஞ்சிபுரம் மற்றும் சேலம் உதவி இயக்குநர்கள் (பட்டு) மற்றும் இணை இயக்குநர்கள் (பட்டு), கும்பகோணம் ஆகியவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**வழங்கப்படும் உதவி :**

வாரியம், பட்டு நூல் மற்றும் சரிகையை நெய்வோருக்கு வழங்கி, நெய்யப்பட்ட பட்டு வகைகளைத் திரும்பப் பெற்று அதற்கான கூலியை வழங்குகிறது.

## கதர் அங்காடிகள்

**தமிழ்நாடு முழுவதும் கதர் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனைக்காக 234 கதர் அங்காடிகள் மற்றும் 16 கிராமிய விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.**

**அணுக வேண்டிய அலுவலர் :**

கதர் கிராமத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் அந்தந்த மாவட்டத்தில் இயங்கும் உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**வழங்கப்படும் உதவி :**

தேனீ வளர்ப்போரிடம் சேகரிக்கப்படும் தேன், கிராமத் தொழில் கைவினைஞர்கள் தயாரிக்கும் டெரகோட்டா மற்றும் மெருகு மட்பாண்டங்கள், பொம்மைகள் மற்றும் கைவினைப் பொருட்கள், தச்சு மற்றும் கருமார் தொழில் பொருட்கள் யாவும் கதர் அங்காடிகள் மற்றும் கிராமிய விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்), திருவண்ணாமலை, சேலம் மற்றும் தருமபுரி

**வழங்கப்படும் உதவி :**

தேன் பெட்டிகள் மற்றும் அதற்கான உபகருவிகள் தேனீ வளர்ப்போருக்கு வழங்கப்படுகின்றன.

## மேற்குத் தொடர்ச்சி மலைமேம்பாட்டுத் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்), நாகர்கோவில், ஈரோடு, திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி

**வழங்கப்படும் உதவி :**

தேன் பெட்டிகள் மற்றும் அதற்கான உபகருவிகள் தேனீ வளர்ப்போருக்கு வழங்கப்படுகின்றன.





## விளிம்புத் தொகைத் திட்டம்

**திட்டம் நிறைவேற்றப்பட உள்ள இடம் :**

அனைத்து மாவட்டங்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்) மண்டலத் துணை இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்) வேலூர், திருச்சி, மதுரை மற்றும் திருப்பூர்.

**வழங்கப்படும் உதவி :**

தனி நபர் தொழில் திட்டங்களுக்கு ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறலாம். கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவால் திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு வழங்கப்படும். பயனாளிகளின் பங்கு 10 விழுக்காடு ஆகும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மகளிர் முனைவர்களுக்கு 30 விழுக்காடு விளிம்புத் தொகை ஒதுக்கப்படும். 5 விழுக்காடு மட்டுமே அவர்களின் பங்காக அமையும்.

**பயனாளிகளின் எண்ணிக்கை :**

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பொறுப்பாட்சிகள்/ கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25 இலட்சம் வரையிலான திட்டங்களுக்கு விளிம்புத்தொகை வழங்கப்படும்.

ரூ.10 இலட்சம் வரையிலான திட்டத் தொகையில் 25 விழுக்காடு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் உதவித் தொகையாக (விளிம்புத் தொகை) வழங்கப்படும் மற்றும் ரூ.25 இலட்சம் வரையிலான தொகையில் ரூ.10 இலட்சத்தில்



25 விழுக்காடும் மீதமுள்ள திட்டத் தொகையில் 10 விழுக்காடும் விளிம்புத் தொகையாக வழங்கப்படும்.

## தள்ளுபடி விற்பனை

ஆண்டு முழுவதும் ஒரே சீராக கதர் பருத்தி பாலியஸ்டர் துணி ரகங்களுக்கு 30% தள்ளுபடியும் கதர் பட்டு ரகங்களுக்கு 20% தள்ளுபடியும் மத்திய மற்றும் மாநில அரசால் இணைந்து வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கதரங்காடிகள் மற்றும் கிராமிய விற்பனை நிலையங்கள்

★ ★ ★

**குறிக்கோள்கள்**

1. பனைப் பொருட்கள் தொழிலின் கீழ் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலை அளித்தல் மூலம் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.
2. உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்தி விற்பனையாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுத்தல்.
3. பனை மரத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு நலிவுற்ற ஏழை பனைத் தொழிலாளர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளித்து, அவர்களது பொருளாதார நிலையினை மேம்படுத்திட உதவுதல்.
4. அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம் போன்ற அயல்நாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்தல்.

தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் சுருக்கமான விவரங்கள் பட்டியலிடப்பட்டு உங்கள் உபயோகத்திற்காக கீழே தரப்பட்டுள்ளன.

**திட்டத்தின் பெயர் :**

**1. பதநீர் இறக்க உரிமம் வழங்குதல்**

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம் மற்றும் அலுவலர் விவரம் :**

அந்தந்த மாவட்ட சம்மேளன மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் இல்லாத மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட கதர் மற்றும் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர்கள்.

**வழங்கப்படும் உதவி :**

பருவ காலங்களில் உரிமம் வழங்கப்படும்.

**2. பனந்தும்பு தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், நார் பொருட்கள் தயாரித்தல், பதநீர் பதப்படுத்துதல் முதலியவற்றில் பயிற்சி**

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம் மற்றும் அலுவலர் விவரம் :**

முதல்வர், மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையம், 1–டி, கடற்கரை சாலை, கடலூர் 607 001, கடலூர் மாவட்டம்.

**வழங்கப்படும் உதவி :**

மூன்று மாத கால பயிற்சி, மாதந்தோறும் பயிற்சி கால உதவித் தொகை ரூ.350 வழங்கப்படும்.

**3. பனைப் பொருட்களின் விற்பனைக்காக மாநில மற்றும் மாவட்ட சம்மேளனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பனைப் பொருள் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.**

**தொடர்பு கொள்ள வேண்டிய இடம் மற்றும் அலுவலர் விவரம் :**

பனைப் பொருள் அங்காடி தொடர்பாக அந்தந்த மாவட்ட சம்மேளன மேலாண்மை இயக்குநர்களையும், கதர் அங்காடி தொடர்பாக அந்தந்த மாவட்ட கதர் கிராமத் தொழில் உதவி இயக்குநர்களையும் தொடர்பு கொள்ளலாம்.



**வழங்கப்படும் உதவி :**

பருவ காலங்களில் பதநீரையும், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் பனை ஓலைப் பொருட்கள், பனை நார் பொருட்களைப் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களிடமிருந்து சேகரித்து மாநில மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

* * *





**திட்டத்தின் பெயர் :**

**1. விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்பு**

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

சாதாரண முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் உரிய படிவத்தில் விண்ணப்பித்தால் மாவட்ட இலக்கீட்டிற்கு ஏற்பப் பதிவு மூப்பு அடிப்படையில் இவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும்.

ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விவசாயிகளின் கிணறுகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து சான்றுப் பெற்று விண்ணப்பித்தால் உடனடியாக சிறப்பு முன்னுரிமையில் ஆண்டு ஒன்றுக்கு 1,249 நபர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். மேற்படி திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத இனத்தைச் சார்ந்த விவசாயிகள் ஆண்டு ஒன்றுக்கு 751 நபர்கள் மின் இணைப்புப் பெற இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பம் பதிவு செய்து ஒரு வருடம் ஆன பின்னர் விதவை, உடல் ஊனமுற்றோர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோர் உரிய படிவத்தில் விண்ணப்பித்தால் ஒரு வருடத்திற்கு 100 பேருக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்கப்படும்.

பயனாளிகள் பெயரில் பூமிதான இடத்தில் அமைக்கப்படும் கிணறுகளுக்கு மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் பேரில் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. சுயநிதித் திட்டத்தின் கீழ் விரிவாக்கம் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.50,000க்கு உட்பட்டு இருப்பின் ரூ.10,000 அல்லது ரூ.25,000 செலுத்தப்பட்டாலோ மின் விரிவாக்கம் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.50,000க்கு மேற்பட்டால் அந்த முழுத்தொகை செலுத்தப்பட்டாலோ உடன் மின்சாரம் பெற்றுக்கொள்ளலாம். இவ்வகை மின் இணைப்புகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு குதிரைத் திறன் ஒன்றிற்கு ரூ.250 வீதம் மின் கட்டணமாகச் செலுத்திட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர் (இயக்குதலும், காத்தலும்)
தமிழ்நாடு மின்சார வாரியம்

**2. ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின்இணைப்பு**

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

கிராமப் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்ட இடத்தில் கூரை வேயப்பட்ட மண் சுவர்களால் 200 சதுர அடிக்கு மிகாமல் கட்டப்பட்ட குடிசைகளுக்கும் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்





பரிந்துரையின் பேரில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

### 3. கதர் மற்றும் குடிசைத் தொழிற்சாலைகளுக்கும், செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற் சாலைகளுக்கும், சிறுதொழிற்சாலைகளுக்கும் 10 குதிரைத் திறன் மின்பளு வரையில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

தொடர்புடைய துறையினரிடமிருந்து சான்றுப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும். (ஸ்டீல் தொழிற் – சாலைகள் தவிர)

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

### 4. வீட்டு உபயோகத்திற்கு மின் இணைப்பு

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

மின் கம்பித் தொடர் அமைந்துள்ள பகுதிகளில் பணி விரிவாக்கம் தேவைப்படாத வீட்டு உபயோக இணைப்புகளுக்கு பணம் செலுத்தியவுடன் ஒரே நாளில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தொடர்புடைய பிரிவு அலுவலர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

### 5. தாழ் மின் அழுத்த தொழிற்சாலை மின் இணைப்பு

**தகுதிகள் – நிபந்தனைகள் :**

மின் கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையில்லாமல் இருந்தால் 5 குதிரைத் திறனுக்கும் குறைவாக இருக்கும் மின் இணைப்புகளுக்கு உரிய கட்டணம் செலுத்திய பின் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும்.

மின் கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையெனில் 15 நாட்களுக்குள் இணைப்பு வழங்கப்படும்.

5 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட இணைப்புகள் மின் கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையில்லையெனில் கட்டணம் செலுத்திய 15 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

மின் கம்பித் தொடர்பு நீட்டிப்பு தேவையெனில் 30 நாட்களுக்குள் மின்இணைப்பு வழங்கப்படும்.

புதிதாக மின்மாற்றி அமைத்திடத் தேவையெனில் 90 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

ஏற்கெனவே உள்ள குறைந்த அழுத்த தொழிற்சாலைகளுக்குக் கூடுதல் பளு விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

பிரிவு அலுவலர் (இயக்குதலும், காத்தலும்) தமிழ்நாடு மின்சார வாரியம்.

★ ★ ★





ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற தமிழக அரசின் குறிக்கோளை நிறைவுச் செய்யும் வண்ணம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், ஊரக வீட்டுவசதிக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்தி வருகின்றன.

### 1. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டம்

தற்சமயம் இத்திட்டத்தின்படி புதிய வீடு கட்ட ஒரு வீட்டிற்கு ரூ.2,000 அரசு மானியத்துடன் சமவெளிப் பகுதியில் ரூ.10,000–ம், மலைப்பகுதிகளில் ரூ.12,000–ம் ஹட்கோ நிறுவன நிதியுதவி மூலம் கடன் வழங்கப்படுகிறது.
மேலும் பயனீட்டாளர் ஒவ்வொருவரும் தனது சொந்த பங்களிப்பாக ரூ.2,000 முதலீடு செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது.

### 2. கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட வழங்கப்பட்டு வந்த கடனுதவி, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.80,000–லிருந்து, ரூ.1,00,000 ஆகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.1,20,000–லிருந்து ரூ.2,00,000 ஆகவும், 1999–2000 ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### 3. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

சாதி, மதபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் சமத்துவபுரம் திட்டத்திற்கு, வீட்டின் கட்டுமானச் செலவு, அரசு உதவித்தொகையான ரூ.35,000த்தைக் காட்டிலும் அதிகரிக்கின்ற நேர்வுகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடக்க நிலை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கடனுதவி அளித்து வருகிறது.



### 4. தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகம்

பல்வேறு மாவட்டங்களில் உள்ள பீடித் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 3,000 வீடுகள் கட்டப்பட உள்ளன. ரூ.40,000 திட்ட மதிப்பீட்டில் வீட்டின் மாதிரி அமைப்பு மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. இம்மதிப்பீட்டில் ரூ.20,000 மைய அரசு மானியமாகவும், மீதமுள்ள ரூ.20,000 ஹட்கோ கடனுதவியும் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பெற்று இக்கழகத்தின் மூலம் கட்டப்பட உள்ளது.

★ ★ ★

### 1. மாணவர்களுக்கான பயணச் சலுகை

ஒன்று முதல் 12ஆம் வகுப்பு வரை, அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள், வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று திரும்புவதற்கான இலவசப் பயணச் சீட்டுக்களைப் பெற தகுதி படைத்தவர்கள். 12ஆம் வகுப்பிற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு 50 விழுக்காடு பயணச். சலுகை அளிக்கப்படுகிறது.




### 2. சலுகை பயணச் சீட்டுக்கள் பெற நடைமுறையில் உள்ள வழிமுறைகள்

அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், அரசின் அங்கீகார உத்தரவின் நகலுடன் அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநருக்கு விண்ணப்பித்தால், அந்தப் பள்ளியின் பெயர் அரசு போக்குவரத்துக் கழகங்களால் பராமரிக்கப்பட்டுவரும் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் பட்டியலில், மாணவர்களுக்கான சலுகைப் பயணச் சீட்டுகள் வழங்குவதற்காக சேர்க்கப்படும். அதற்கான உத்தரவு அந்தப் பள்ளிக்கு அனுப்பப்படும்.

முந்தைய ஆண்டில் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் படித்த மாணவர்களின் பெயர் பட்டியல் கணினி மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்களால் தயார் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்ட பள்ளி அந்த மாணவர்களின் பெயர் பட்டியலை ஆய்வுச் செய்து தலைமை ஆசிரியரின் சான்றிதழுடனும், மாணவர்களின் பெயர்களுக்கு எதிரே உள்ள இடத்தில் சம்பந்தப்பட்ட மாணவரின் புகைப்படத்தை ஒட்டி திரும்ப அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும். இந்த கணினி பெயர் பட்டியலுடன் மாணவர்களின் மற்றொரு புகைப்படமும் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

கணினி பெயர் பட்டியல் அரசு போக்குவரத்துக் கழகத்தில் பெறப்பட்டவுடன் பேருந்து சலுகை பயண அட்டைகளை தயார் செய்து சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு, மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும். சம்பந்தப்பட்ட பள்ளிகள் சலுகை பயண அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கும். புதியதாக சேர்ந்த மாணவர்களைப் பொறுத்தவரை, ஒரு புதிய பெயர் பட்டியலை சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியர், அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு மாணவர்களின் இரண்டு புகைப்படங்களுடன் அனுப்பி வைக்கவேண்டும். அரசு போக்குவரத்துக் கழகம் கணினி மூலம் சலுகை பேருந்து அட்டைகளைத் தயாரித்து குறிப்பிட்ட பள்ளிகளுக்கு மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு அனுப்பிவைக்கும்.

### 3. ஊனமுற்றவர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது

ஊனத்தின் அளவு 40 விழுக்காடு அல்லது அதற்கு மேல் உள்ள உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் ரூ.1,000–க்கும் மிகாமல் மாத வருமானம் பெறும் அனைத்து ஊனமுற்றோர்களும் வயது வரம்பின்றி இலவச பயண அட்டை பெறத் தகுதி பெற்றவர்கள்.



போக்குவரத்துத்துறை

### 4. மனவளர்ச்சிக் குன்றியோருக்கு இலவச பயண அட்டை வழங்கப்படுகிறது

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் அவர்களின் பரிந்துரையின் பேரில் 40 மற்றும் 40க்கு மேற்பட்ட விழுக்காடு அளவு மனவளர்ச்சிக் குன்றி மாத வருமானம் ரூ.1,000–க்கும் குறைவாக பெறும் அனைவரும் வயது வரம்பின்றி இச்சலுகையைப் பெற தகுதியுடையவர் ஆவர். இப்பயண அட்டை பெறும் நபருடன் பாதுகாவலர் ஒருவரும் உடன் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 5. பார்வையற்றோருக்கான இலவச பயண அட்டை

பார்வையின் ஊனத்தின் தன்மையைக் குறிக்கும் மருத்துவச் சான்றிதழுடன் இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் இவற்றுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலர் அவர்களை அணுகி ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை பெற்று அந்த அட்டையினை இரண்டு நகல்கள் எடுத்து மீண்டும் மாவட்ட மறுவாழ்வு அலுவலரின் பரிந்துரை



பெற்று போக்குவரத்துக் கழக மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களை அணுகி சமர்ப்பித்தால் இலவச பயண அட்டை பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய பயண அட்டை வருடம் ஒருமுறை புதுப்பிக்கப்படுகிறது. மாவட்டத்தின் அனைத்து இடங்களுக்கும் செல்ல இலவச பேருந்துப் பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. பார்வையற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் அரசு விரைவுப் பேருந்துகளில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசமாக பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

1. விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய விரும்பும் பார்வையற்றோர் மற்றும் கால் முடமானோர் பயணம் செய்யும் இடம், பேருந்து, நாள் முதலிய விவரங்களை உரிய படிவத்தில் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலர் வழங்கும் அனுமதிச் சீட்டின் அடிப்படையில் இவர்கள் பயணம் செய்யலாம்.

2. இச்சலுகையானது அதிகபட்சம் ஆண்டிற்கொருமுறை இருவழி பயணம் மேற்கொள்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

3. இப்பேருந்து பயணச்சலுகை, அந்தந்த மாவட்ட மறுவாழ்வு அலுவலர்களால் மட்டுமே வழங்கப்படும். இதற்காகும் செலவினத்தை நடைமுறையில் உள்ளவாறு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை ஈடுசெய்யும்.

4. இச்சலுகையானது இம்மாநிலத்திற்குள் பயணம் செய்வதற்கு மட்டுமே பொருந்தும்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்கள் போக்குவரத்துக்கழக எல்லைக்குள் வசிக்கும் அனைவருக்கும் இலவச பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

புற்று நோயாளிகள் மருத்துவமனையிலிருந்து சான்றிதழ் பெற்று நான்கில் ஒரு பங்கு கட்டணம் செலுத்தி பேருந்தில் பயணம் செய்யலாம். புற்று நோயாளியும் தன்னுடன் உதவிக்காக மற்றொருவரை அழைத்துக் கொண்டு பேருந்துகளில் இருவருக்கும் சேர்த்து ஒரு முழுக்கட்டணம் செலுத்தி பயணத்தூரத்திற்கான பயணச் சீட்டினைப் பெற்று பயணம் செய்யலாம். ★

**நலத் திட்டத்தின் பெயர் :**

**சட்டப்பணிகள் ஆணைக்குழு**

**தெரிந்து கொள்ள வேண்டிய சட்ட விதிகள் :**

தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணைக்குழு 1.11.1997 அன்று துவக்கப்பட்டது. சட்ட உதவி தேவைப்படும் மக்களுக்கு சேவை செய்வதே இதன் முக்கிய குறிக்கோள்.

**குறிக்கோள்கள் :**

**தமிழ்நாடு சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் நோக்கங்களாவன :**

1. சமூகத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு தகுதி வாய்ந்த இலவச சட்ட உதவி அளிக்க வகை செய்தல்.
2. பொருளாதார மற்றும் இதர இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி பெறும் வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்தல்.
3. நீதிமன்ற வழக்குகளுக்கு மாற்று அமைப்பாக சட்ட அங்கீகாரமுடைய மக்கள் நீதிமன்றங்களை நடத்துதல்.
4. பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சமுதாயத்தில் வறிய பிரிவினர் ஆகியோருக்கு அவர்களின் உரிமைகள் பற்றி அறிவுறுத்துதல்.
5. மேலும் சமுதாய நலன் கருதி பிறப்பிக்கப்பட்ட பல தரப்பட்ட சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகள் அளிக்கும் சிறப்புரிமைகள் மற்றும் பலன்களைப் பெற உதவி அளித்தல்.

**சட்ட உதவி பெறத் தகுதிகள் :**

ஒரு வழக்கைத் தொடுக்கவும் எதிர் வழக்காடவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவிற்குள் வரும் ஒவ்வொரு நபரும் சட்ட உதவி பெறத் தகுதி உடையவராகிறார்.

1. பட்டியல் சாதியினர் (அல்லது) பட்டியல் பழங்குடியினர்
2. அரசியலமைப்பு சட்டப்பிரிவு 23ன்படி மனிதர்களை விற்பது மற்றும் வாங்குவதாலும் அல்லது வற்புறுத்தி வேலை வாங்குவதாலும் பாதிக்கப்பட்ட நபர்.
3. மகளிர் அல்லது குழந்தைகள்
4. ஊனமுற்றோர்
5. பேரழிவு, இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை விபத்துக்கள் ஆகியவைகளால் பாதிக்கப்பட்டவர்கள்







6. தொழிற்சாலை தொழிலாளர்கள்
7. சிறைக்காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மனநல மருத்துவமனை, மனநோய் மருத்துவமனை மற்றும் இல்லம் இவைகளில் உள்ளவர்கள்
8. உச்சநீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ரூ.12,000க்குள் பிற நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் ரூ.9,000க்குள் குறைவான வருட வருமானம் உள்ளவர்கள்

**உதவிக்கு அணுகும் முறை :**

சட்ட உதவி கோருபவர்கள் அணுகவேண்டிய குழு/மையம் :

1. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு
2. மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
3. வட்ட சட்டப்பணிகள் குழு
4. உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழு
5. சமரச மையங்கள், மற்றும்
6. மகளிர் மையங்கள்

இதற்காக தனியாக கட்டணமோ, நீதிமன்ற முத்திரை ஒட்டிய மனுக்களோ தேவையில்லை. குறிப்பிட்ட படிவத்தில் எழுத்து மூலமாக இவர்கள் மனு செய்யலாம். தற்போது உபயோகத்தில் உள்ள இரு படிவங்களின் மாதிரிகள் இணைக்கப்பட்டுள்ளன. எழுத்தறிவற்றோர் வாய்மொழி வாயிலாக தமது அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மகளிர் மையங்கள் :**

பெண்கள் தம் திருமண வாழ்வு குறித்த சிக்கல்கள் மற்றும் பிற பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு காண மாநிலம் முழுவதும் உள்ள மகளிர் மையங்கள் முனைப்புடன் உதவி புரிகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 45 மகளிர் மையங்கள் செயல்படுகின்றன.

**குற்ற வழக்குகளில் உதவி :**

குற்ற வழக்குகளில் ஒரு நபருக்கு அவர் கைது செய்யப்படும் நேரத்திலிருந்து வழக்கு விசாரணை மற்றும் மேல் முறையீடு நடவடிக்கைகள் வரையில் இலவச சட்ட உதவி அளிக்கப்படும்.




**மக்கள் நீதிமன்றங்கள்**

சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டப்படி மக்கள் நீதிமன்றம் சட்டப்படியான அங்கீகாரம் பெற்றது. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் மற்றும் வட்ட சட்டப்பணி குழுக்கள் ஆகியவை மக்கள் நீதிமன்றங்களை நடத்த அதிகாரம் பெற்றவை. வழக்குகளில் உள்ள நபர்களுக்கு வழக்கில் சமரசம் அல்லது இழப்பீடு குறித்து முடிவு செய்ய மக்கள் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

* * *

காவல்துறையினர் தம் அடிப்படைக் கடமைகளான குற்ற நிகழ்வுகளைத் தடுத்து, பொது அமைதி, ஒழுங்கைப் பாதுகாத்தால்தான் பொதுமக்கள் தங்கள் பணிகளை அமைதியான முறையில் செய்ய இயலும். காவல் துறையினர் பின்வரும் கடமைகளையும் செயல்களையும் புரியக் கடமைப்பட்டவர்கள் :

அ. பொது ஒழுங்கைப் பராமரித்து அதனைப் பாதுகாத்தல்

ஆ. குற்றங்களைப் புலன் விசாரணை செய்தும், குற்றவாளிகளைக் கைது செய்து பின்னர் நீதிமன்ற விசாரணையில் பங்கேற்றல்

இ. குற்ற நிகழ்வுகள் ஏற்பட வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களையும் சூழ்நிலைகளையும் கண்டறிதல்

ஈ. முன்னெச்சரிக்கையாக ரோந்து சென்றும், தங்கள் இதர நடவடிக்கைகள் மூலமும் குற்றம் நடைபெறுவதற்கான வாய்ப்புகளைக் குறைத்தல்

உ. குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதில் ஈடுபட்டுள்ள மற்ற அமைப்புகளுக்குத் தக்க உதவிகள் செய்து ஒத்துழைப்பு அளித்தல்

ஊ. தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்கிற நிலையிலுள்ள தனி நபர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்

எ. சமூகத்தில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி, அதனைப் பேணுதல்

ஏ. மக்களும் வாகனங்களும் சரியான முறையில் இயங்க உதவுதல்

ஐ. சச்சரவுகளைத் தீர்த்து அமைதி நிலவச் செய்தல்

ஒ. இன்னல்கள் ஏற்படும் காலங்களில் நிவாரணப் பணியில் ஈடுபடுதல், நிவாரணங்கள் பெற்றுத் தருதல்

ஒ. பொது அமைதி, சமூகம், பொருளாதாரக் குற்றங்கள், தேசப்பாதுகாப்பு, ஒற்றுமை ஆகியவற்றை சீர்குலைத்தல் குறித்த முன் தகவல்களைச் சேகரித்தல்

ஒள. சட்டத்தில் விதிக்கப்பட்ட மற்ற பணிகளைச் செய்தல்



2. பொதுமக்கள், குற்றம் நிகழ்ந்திருந்தாலும் அல்லது குற்றம் நடைபெறக்கூடும் என்ற அச்சம் இருந்தாலும் அதைப்பற்றி காவல் துறையினரிடம் புகார் அளிக்கலாம். காவல் துறையினர், அவர்களைக் கனிவுடன் நடத்தி, குற்றம் நடைபெற்றிருந்தால் வழக்குப் பதிவு செய்து அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) நகலை அளிக்க வேண்டும். குற்றம் தமது எல்லைக்குள் நடவாதிருப்பினும், காவல் நிலையத்தில் புகாரைப் பெற்றுப் பதிவு செய்து தொடர் நடவடிக்கை பற்றிய விவரத்தைப் புகார் கொடுத்தவருக்குத் தெரிவிக்க வேண்டும். வழக்கின் தன்மையையும் வழக்கின் முன்னேற்றத்தையும் அறிய வழக்கை விசாரிக்கும் எந்த அதிகாரியை அணுக வேண்டும் என்ற விவரத்தையும் புகார்தாரருக்குத் தெரிவிக்க வேண்டும்.





3. திருட்டுப்போன சொத்து கண்டுபிடிக்கப்பட்டால், நீதிமன்றத்தின் மூலம் அச்சொத்தை விரைவில் அதன் சொந்தக்காரருக்குத் திரும்பத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். தாமதம் ஏதும் ஏற்பட்டால், அதற்கான காரணம், எப்பொழுது அவரது சொத்தைத் திருப்பி அளிக்க இயலும் என்பதைப் பாதிக்கப்பட்டவருக்கு விளக்க வேண்டும். மக்கள் விரும்பினால், பிற்காலத்தில் குற்றங்கள் நிகழாவண்ணம் தடுக்க காவல் துறையினரை அணுகி அதற்கான அறிவுரைகளைப் பெறலாம். காவல்துறையினர் அத்தகையோருக்குத் தக்க உதவி அளிக்க வேண்டும். காவல்துறையினர், ஒவ்வொரு பகுதியிலும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்கும் பணியில் பொதுமக்களை ஈடுபடுத்தியும், பாதுகாப்பு அளிக்கும் பணியில் மக்கள் பங்காற்றவும் வழிவகை செய்ய வேண்டும்.

4. வன் குற்றங்களான வழிப்பறி, கூட்டுக் கொள்ளை, சங்கிலிப் பறிப்பு, தனி நபர் தாக்கப்படுதல் ஆகிய குற்றங்களில் பாதிக்கப்பட்டவருக்குக் காவல் துறையினர் உடனடி மருத்துவ உதவி அளிக்க ஏற்பாடு செய்து அவரது துன்பத்தைக் குறைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காவல் துறையினர் பாதிக்கப்பட்டவரை விசாரித்து, அவர் யாரால் தாக்கப்பட்டார் என்பதை அறிந்து, உடனடி நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும்.



5. மகளிருக்கெதிரான குற்றம் – மாவட்டங்களிலும், பெருநகரங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காவல் நிலையங்களில் மகளிருக்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமாக புகார்கள் அளிக்கலாம். மகளிருக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களான தாக்கப்படுதல், இளம் பெண்களைக் கேலி செய்தல், மானபங்கம், கற்பழிப்பு, வரதட்சணைக் கொடுமை போன்ற நிகழ்வுகளில் காவல் துறையினர் மனித நேயத்தோடு அணுகி தக்க முறையில் விசாரணை செய்ய வேண்டும்.

6. திருமணமான ஒரு பெண் திருமணமான 7 வருடங்களுக்குள் இறந்திருந்தால் வரதட்சணை இறப்பு எனக் கருதி வருவாய்க் கோட்டாட்சியரால் விசாரணையும் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவியிலுள்ள ஒருவரால் புலன் விசாரணையும் செய்யப்பட வேண்டும். பிணப் பரிசோதனை இரு மருத்துவ அலுவலர்களால் செய்யப்பட வேண்டும்.

7. நலிந்த பிரிவினருக்கு எதிரான குற்றம் – குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் ஆகியவை சம்பந்தப்பட்ட புகார்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இம்மாதிரி குற்றங்களில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், பழங்குடியினர், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி நிவாரணம் பெறத் தகுதியுடையவர் ஆவர். பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் பெற்றுத் தருவதில் காவல் துறையினர் அதிகபட்ச உதவி செய்வதுடன் நடுநிலையாக இருந்து நியாயமான முறையில் நடவடிக்கை எடுத்து பொது அமைதியை நிலைநாட்ட வேண்டும்.

8. பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் சிறப்புக் குற்றங்கள் – ஏமாற்றுதல், பணத்தைக் கையாடல் செய்தல், நம்பிக்கைத் துரோகம் ஆகிய குற்றங்களை விசாரிக்க தலைமையிடம்

மற்றும் மாவட்டங்களில் பொருளாதாரக் குற்றத்தடுப்புப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன இடங்களிலும் இது சம்பந்தமான புகாரைக் கொடுக்கலாம். காவல் துறையினர் வழக்கை விசாரித்து பாதிக்கப்பட்டவருக்கு அவர் கேட்கும் போது வழக்கின் முன்னேற்றத்தைப் பற்றித் தெரிவிப்பார்.



9. கைது – ஒருவர் கைது செய்யப்பட்டால் அவருக்கு அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணங்களைத் தெரிவித்து அவரை ஜாமீனில் வெளியில் விடவோ, கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றப் பாதுகாப்பிற்கு அனுப்பவோ ஏற்பாடு செய்வது காவல்துறையின் கடமையாகும். மருத்துவர் சோதனைக்கு வசதி செய்தல், தன் நண்பரையோ, உறவினரையோ தொடர்பு கொள்ளுதல், தனக்கு ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து கொள்ளுதல் மற்றும் தன்னைக் கைது செய்த காவல்துறை அலுவலர் பெயரையும் பதவியையும் அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றுக்கு கைது செய்யப்பட்டவருக்கு உரிமை உண்டு. கைது செய்யப்பட்ட நேரத்தைக் குறிப்பிட்டு ஒரு குறிப்பாணையினைத் தயார் செய்து அதனைக் காவல் துறையினர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும், இது பற்றிய விவரத்தினைக் காவல் கட்டுப்பாட்டறையில் வைக்க வேண்டும்.

10. பெண் சாட்சிகள் அவர்களுடைய இருப்பிடங்களிலேயே விசாரிக்கப்படுவர். பெண்கள் கைது செய்யப்பட்டால் வெகு விரைவில் வழக்கின் தன்மையைப் பொறுத்து ஜாமீனில் விடப்படுவர்.

11. முறைப்படுத்தும் பணிகள் – காவல் சட்டத்தில் கூறியுள்ளபடி பொது அமைதியை நிலைநாட்ட வேண்டி ஊர்வலம் மற்றும் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்த அனுமதி கோரி அனுமதி அளித்தோ அல்லது மறுத்தோ முடிவு செய்வர். இதில் ஏதேனும் குறை இருந்தால் உயர் அலுவலரது கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.

12. போதைப் பொருள் கடத்தல், வீடியோ திருட்டு, தயாரிப்பாளரின் பதிப்பு உரிமைச் சட்ட மீறல் போன்ற குற்றங்களை விசாரிக்க குற்றப் புலனாய்வுத் துறை (கு.பு.து) போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு ஆகியன ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குற்றங்கள் தொடர்பாக மேற்சொன்ன பிரிவுகளில் புகார் மனு அளிக்கலாம்.

13. **தபால் மூலம் புகார் அளித்தல் :**

பாதிக்கப்பட்டவர் காவல் துறையினரை நேரடியாகவும் அணுகலாம் மற்றும் தபால், மின்னஞ்சல் மூலமாகவும் புகார் கொடுக்கலாம். காவல் துறையினரின் நடவடிக்கையில் அதிருப்தி ஏற்பட்டால் அவர்கள் துறையின் மேல்நிலை அலுவலர்களையோ அரசையோ அணுகி புகார் கொடுக்கலாம்.

15. **கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) :**

**வேலைவாய்ப்பு** போன்றவற்றைச் சரிபார்க்கும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலர், மனு வரப்பெற்ற நாளிலிருந்து 15 தினங்களுக்குள் காவல் விசாரணை செய்து அறிக்கை தரவேண்டும்.





## பாதிக்கப்பட்டோர் நிவாரண நிதி

பாதிக்கப்பட்டோர் நிவாரண நிதியிலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் நிதிஉதவி வழங்கப்படுகிறது.

| வ. எண். | குற்ற இனம் | வழங்கப்படும் நிவாரணத் தொகை | யாருக்கு வழங்கப்படும் | நிவாரணத் தொகை பெற அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | கொலை | ரூ.10,000 | வாரிசுதாரருக்கு | குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்ட காவல் நிலையம் எந்த மாவட்டத்தில் அல்லது மாநகரத்தில் உள்ளதோ, அந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையாளர் அவர்களிடம் நிதிஉதவி கோரி மனு அளிக்கப்படவேண்டும். |
| 2. | கடுமையான காயம் | ரூ.5,000 | பாதிக்கபட்டவருக்கு | ” |
| 3. | கற்பழிப்பு | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |
| 4. | கடத்தப்பட்டு பாதிப்புக்குள்ளான பெண்களுக்கு | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |
| 5. | வரதட்சணை காரணமாக தீக்காயமடைந்தால், | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |
| 6. | வரதட்சணை காரணமாக உயிருடன் எரிக்க முயற்சித்தாலோ அல்லது வேறு வகையில் கொலை செய்ய முயற்சித்தாலோ பாதிக்கப்பட்ட பெண் மரணமடைந்தால் | ரூ.10,000 | வாரிசுதாரருக்கு | ” |
| 7. | வரதட்சணைக் கொடுமையினால் தற்கொலை செய்து கொண்ட பெண்களின் குழந்தைகளுக்கு | ரூ.10,000 | வாரிசுதாரருக்கு | ” |
| 8. | கொடுமையினால் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக ஊனமுற்ற பெண்களுக்கு | ரூ.5,000 | பாதிக்கப்பட்டவருக்கு | ” |

தமிழக அரசு, 54 தொழில்களில் ஈடுபட்டுவரும் கீழே அட்டவணையில் கண்டுள்ள அமைப்புச் சாராத் தொழிலாளர்களின் நலன் பேணும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலவாரியத்தை உருவாக்கியுள்ளது. இத்தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தையும் உருவாக்கியுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்து, உடலுழைப்புத் தொழிலாளர்கள் திட்டத்தின் பலன்களைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்போது அரசு 20-7-2000 தேதியில் ஆட்டோ மற்றும் ஊர்தி ஓட்டுநர், சலவை, முடிதிருத்துவோர் மற்றும் தையல் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் ஊர்தி ஓட்டுநர் நலவாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நலவாரியம், தமிழ்நாடு முடித்திருத்துவோர் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு தையல் தொழிலாளர் நலவாரியம் என வாரியங்கள் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

**என்னென்ன நலத்திட்டங்கள் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்?**

1. உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கும்போது விபத்து நேரிட்டு இறக்க நேர்ந்தால் அல்லது இரண்டு கைகளை அல்லது 2 கால்களை அல்லது 2 கண்களை இழந்தாலோ, ரூபாய் ஒரு இலட்சம் தன் விபத்து நிவாரணத்திட்டத்தின்படி வழங்கப்படும். அவ்வாறே உடல் ஊனம் ஏற்பட்டாலும் உரிய நட்டஈடு வழங்கப்படும்.
2. வாரியத்தில் பதிவு செய்த பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவத்திற்காக (இரண்டு குழந்தைகள் வரையில் மட்டும்) ரூ.1,000 வழங்கப்படும். கருச்சிதைவு ஏற்பட்டால் (இரண்டு முறைகளுக்கு மட்டும்) ரூ.500 மகப்பேறு நலத்திட்டத்தின்படி வழங்கப்படும்.
3. திட்டத்தின்படி தொழிலாளர்கள் மாதாமாதம் வங்கியின் மூலம் கட்டும் ரூ.20 மாதச் சந்தாத்தொகையை, அவர் 3 வருடத்திற்குக் குறையாமல் உறுப்பினராக இருந்தால் அவர் கட்டிய தொகையுடன் 12% கூட்டுவட்டியோடு, கட்டிய தொகைக்கு 25% பணிக்கொடையாக பணிமுடிப்பு நலத்திட்டத்தின்படி வழங்கப்படும். 3 வருடத்திற்குக் குறைவாக உறுப்பினராக இருந்தால் கட்டிய பணத்தை கூட்டு வட்டியோடு திருப்பித் தரப்படும்.




**திட்டத்தில் யார், யார் பதிவு செய்யலாம்?**

தையல் தொழில், ஆட்டோ ஓட்டுநர் மற்றும் சலவைத் தொழில் போன்ற 54 தொழில் செய்யும் தொழிலாளர்கள் இதில் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள். (அட்டவணை பார்க்க) மேற்படி திட்டத்தில் பதிவு செய்யும் தொழிலாளர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 60 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

**எங்கு பதிவு செய்து கொள்ளவேண்டும்?**

ஒவ்வொரு மாவட்டத்திலும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் துணை ஆய்வர்கள் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

**பதிவு செய்ய வரும் தொழிலாளர்கள் கொண்டு வர வேண்டியவை என்ன?**

1. கீழே வெளியிடப்பட்டுள்ள எஸ்.எஸ்.டபிள்யு. மனுக்களை 1 & III-ல் அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து கொண்டு வரவேண்டும்.
2. குறிப்பாக தொழிலாளர்கள் 3 நிழற்படங்களையும், பிறந்த வயதிற்கான சான்றிதழினையும், தொழிலில் அவர் வேலை செய்வதற்கான தொழில் சான்றையும் பெற்று வரவேண்டும்.
3. வயதுச் சான்றைப் பொறுத்தவரை, வருவாய்த் துறையிலிருந்தோ, கல்வி சான்றிதழிலிருந்தோ அல்லது பதிவு செய்யப்பட்ட மருத்துவரிட மிருந்தோ பெற்று வரலாம். மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டையும் கொண்டு வரலாம். தொழிலைப் பொறுத்தவரை அதற்கான சான்றினை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரிட மிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட தொழில் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர் அல்லது பொதுச்செயலாளரிடமிருந்தோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்க நிர்வாகிகள் அல்லது தொழிலாளர் துறை அல்லது தொழிற்சாலைகள் துறை ஆய்வாளரிடமிருந்தோ பெற்று வரவேண்டும்.
4. பதிவுத் தொகையாக ரூ.20 கொண்டு வரவேண்டும்.



உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம்

**பதிவு செய்தபின் உங்களுக்கு என்னென்ன வழங்கப்படும்?**

1. பதிவுத் தொகை ரூ.20 செலுத்தியதற்கான பண இரசீது.
2. திட்டத்தில் அவர்களை அனுமதித்தற்கான உத்தரவு.
3. அடையாள அட்டை.
4. மாதாமாதம் வங்கி மூலம் தொகை செலுத்துவதற்கான பாஸ் புத்தகம்.

**பதிவுத் தொகை செலுத்திய பின்பு தாங்கள் என்ன செய்ய வேண்டும்?**

சட்டம் மற்றும் திட்டத்தின்படி, தாங்கள் மாதாமாதம் செலுத்த வேண்டிய ரூ.20 எந்த வங்கியில், எந்த இடத்தில் செலுத்த வேண்டும் என்று தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த வங்கிக்குச் சென்று மாதாமாதம் (பாஸ் புத்தகங்களுடன்) ரூ.20 செலுத்த வேண்டும்.

மேலும் இச்சந்தாவை காலாண்டு சந்தாவாகவோ அல்லது அரையாண்டு சந்தாவாகவோ அல்லது ஆண்டு சந்தாவாகவோ முன்னதாகவே கூட செலுத்தலாம். இவ்வாறு செலுத்தினால் ஒவ்வொரு மாதமும் வங்கிக்குச் சென்று செலுத்த வேண்டிய சிரமமும் குறையும், நேரமும் மிஞ்சும்.

வங்கி ஒவ்வொரு மாதமும் 11 முதல் 20ஆம் தேதி வரைதான் இந்தப்பணத்தை வசூலிக்கும். ஆகையால், தாங்கள் சம்பந்தப்பட்ட வங்கிக்கு ஒவ்வொரு மாதமும் 11ஆம் தேதியிலிருந்து 20ஆம் தேதிக்குள் சென்று மாத சந்தாவைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் நேரடியாகச் சென்று செலுத்த வேண்டும் என்றில்லை. பல தொழிலாளர்களின் சார்பில் ஒருவர் சென்று செலுத்தலாம். இந்நேர்வில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தனித் தனி படிவம் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை. அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரே படிவத்தைப் பூர்த்தி செய்து அத்துடன் பணம் செலுத்தும் வ.எண். தொழிலாளியின் பெயர், பதிவு எண் மற்றும் செலுத்தும் தொகை அடங்கிய ஒரு அறிக்கை தயாரித்து இணைக்க வேண்டும். இந்த அறிக்கையின் மூன்று நகல்களை இணைக்க வேண்டும்.

**அட்டவணை :**

1. கடைகள், டிப்போக்கள், தொழிற்சாலைகள், சேமிப்புக் கிடங்குகள், துறைமுகங்கள், இரயில்வே குட்ஸ் ஷெட்டுகள், யார்டுகள், சந்தைகள், விவசாய மார்க்கெட்டுகள் ஆகிய இடங்களில் எடைபோடுதல், அளவிடுதல், மூட்டை கட்டுதல், பேக்கிங் செய்தல்; சுமை ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், குவித்தல் மற்றும் அது தொடர்பான ஆயத்த மற்றும் இடைப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள உடல் உழைப்பு வேலையில் ஈடுபட்டிருத்தல்.
2. பொதுத்துறை போக்குவரத்து வாகனங்களில் சுமை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் அது தொடர்பான் வேலைகளில் ஈடுபட்டிருத்தல்.
3. உணவு சேமிப்பு கிடங்குகளில் உணவுதானியங்களை ஏற்றுதல், மூட்டை கட்டுதல், மூட்டை தைத்தல் மற்றும் அது தொடர்பான மற்ற பணிகளில் ஈடுபட்டிருத்தல்.
4. உப்பளங்களில் வேலை செய்யும் தொழில்
5. மீன் பிடிக்கும் தொழில்
6. பட்டு தயாரிக்கும் தொழில்
7. மரம் அறுக்கும் தொழில்
8. கயிறு தயாரிக்கும் தொழில்



9. தோல் பதனிடுதல் மற்றும் தயாரித்தல்
10. தானியங்கி வாகனப் பணிமனைகளில் வேலை செய்தல்
11. அப்பளம் தயாரித்தல்
12. சாயப்பட்டறை தொழில்
13. மாட்டுவண்டி தொழில்
14. செங்கல் மற்றும் ஒடு தயாரித்தல்
15. பந்தல் கட்டும் தொழில்
16. சமையல் தொழில்
17. தேங்காய் உரிக்கும் தொழில்
18. வனப்பொருட்கள் சேகரிக்கும் தொழில்
19. உணவு நிறுவனங்களில் பணிபுரிதல்
20. முந்திரி தொழிற்சாலையில் பணிபுரிதல்
21. ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுதல்
22. சமையல் வாயு சிலிண்டர்கள் விநியோகித்தல்
23. சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தொழில்
24. பொறியியல் தொழில்
25. பட்டாசு மற்றும் தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்
26. மடிக்கார் தொழில்
27. காலணிகள் மற்றும் தோல்பொருட்கள் தயாரித்தல்
28. சாக்கு தைக்கும் தொழில்
29. தங்க, வெள்ளி ஆபரணங்கள் பொருட்கள் தயாரித்தல்
30. கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழில்
31. அகர்பத்தி தயாரிக்கும் தொழில்
32. துணி துவைத்தல் மற்றும் சலவையிடுதல்
33. பதனீர் தயாரிக்கும் தொழில்
34. பேனா – எழுதுமுனை தயாரித்தல்
35. மாவு மில்கள், ஆயில் மில்கள், அரிசி மில்களில் பணிபுரியும் தொழில்
36. அச்சகங்களில் பணிபுரிதல்
37. விசைத்தறி தொழில்
38. தனியார் பாதுகாவல் பணி
39. பிளாஸ்டிக் தொழில்
40. மண்பாண்ட பொருட்கள் தயாரித்தல்
41. குப்பைகள், கழிவுப்பொருட்கள் சேகரித்தல்
42. முடிவெட்டுதல் மற்றும் அழகுநிலையங்களில் பணிபுரிதல்
43. தெருச்சுமை வியாபாரம்
44. ஜவ்வரிசி தயாரித்தல்
45. சிந்தெடிக் ஜெம் கட்டிங் தொழில்
46. பட்டுப்புழு வளர்த்தல்
47. கடைகள், நிறுவனங்களில் பணிபுரிதல்
48. தையல் வேலை செய்தல்
49. மரம் ஏறும் தொழில்
50. தகர அடைப்பான்கள் தயாரித்தல்
51. பாத்திரங்கள் தயாரித்தல்
52. மரவேலைகள் செய்தல்
53. சைக்கிள் பழுதுபார்க்கும் தொழில்
54. வீட்டு வேலை செய்யும் தொழில்

**இவற்றில், கீழ்க்காணும் 7 தொழிலாளர்களுக்கு தனித்தனியாக வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

1. **தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**
2. **தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்**
3. **தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம்**
4. **தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்**
5. **தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்**
6. **தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்**
7. **தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்**
8. **ஓவியர் நல வாரியம் அமைக்கப்படவுள்ளது.**





**படிவம் எண். SSW - 1**

**பதிவிற்கான விண்ணப்பம்**

## தமிழ்நாடு 1999ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத்திட்டம்

பதிவு எண்....................

(இவ்வலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

1. தொழிலாளரின் பெயர் :
2. தந்தை / கணவர் பெயர் :
3. பிறந்த நாள் : நாள் மாதம் ஆண்டு
4. அங்க அடையாளங்கள்
   1.
   2.
5. திருமணமானவரா, திருமணமாகாதவரா? விதவையா, மனைவியை இழந்தவரா என்பது :
6. நிலையான முகவரி :
7. தற்போதைய முகவரி :
8. சொந்தத் தொழில் புரிபவரா அல்லது வேறிடத்தில் வேலை பார்க்கிறாரா? என்பதைக் குறிப்பிடவும் :
9. வேறிடத்தில் வேலை பார்ப்பவராக இருந்தால் அவர் வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி மேலும் தொழிலதிபர் ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றை அளிக்கவும் :
10. பணியின் தன்மை :
11. விண்ணப்பிக்கும் நாளன்றுள்ளபடி பணிபுரிந்து வரும் ஆண்டுகளின் எண்ணிக்கை :

உடலுழைப்பு பணியாளரின் கையொப்பம்
அல்லது இடதுகை பெருவிரல் ரேகை

**வேலை பார்ப்பது பற்றிய சான்றிதழ்**

பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பத்தில் இத்தொழிலாளர் அளித்துள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்தவரையிலும் நான் நம்புகின்ற வரையிலும் உண்மையே என்று சான்றளிக்கிறேன்.

இடம் :
நாள் :

சான்றிதழ் வழங்குபவரின்/
அதிகாரியின் கையொப்பம் மற்றும் பெயர்

★ அவசியமில்லாதவற்றை அடித்துவிடவும்

**படிவம் எண். SSW - III**

## தமிழ்நாடு 1999ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத்திட்டம்

**நியமனப் படிவம்**

பதிவு எண் :

இந்நிதியிலிருந்து எனக்குச் சேர வேண்டிய தொகையை, நான் பெறுவதற்குரிய கால அளவிற்கு முன்னரே நான் இறந்துவிடும் நேர்வில், அத்தொகையை பெறுவதற்கு கீழ்க்காணும் நபரை / நபர்களை இதனால் நான் நியமிக்கிறேன்.

| நியமனதாரரின் நியமனதாரர்களின் பெயரும் முகவரியும் (1) | நியமனதாரர்களுக்குத் தொழிலாளருடன் உள்ள உறவு முறை (2) | நியமனதாரரின் வயது (3) | ஒவ்வொரு நியமனதாரருக்கும் வழங்கப்பட வேண்டிய பங்குத் தொகையின் அளவு (4) |
|---|---|---|---|
| | | | |

இடம் :
நாள் :

உடலுழைப்புத் தொழிலாளரின் கையொப்பம் அல்லது
இடதுகை பெருவிரல் ரேகை.

## உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் மாநில காப்பீடுத் திட்டம், ஒய்வூதியம் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் ஆகிய நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட வேண்டும்.

இந்நலத் திட்டங்களை அமல் செய்வதற்குத் தேவையான் நிதிக்காக அரசு ஒரு நல நிதியை அமைத்துள்ளது. இந்நல நிதியின் பெயர் "தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொதுநலநிதி" ஆகும். 1982–ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 8–ஏ–ன்படி தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை அந்நிதிக்குச் சந்தாவாகச் செலுத்த வேண்டும். 1.11.94 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டின் 0.1% ஆக இருந்தது. 1.7.97 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மதிப்பீட்டில் 0.3% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை அமல் செய்வதற்காக அரசு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை உருவாக்கியுள்ளது. அவ்வாரியத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 21. இவர்களில் 5 பேர் அரசு தரப்பு உறுப்பினர்கள். 8 பேர் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் 8 பேர் வேலை அளிப்பவர்களின் பிரதிநிதிகள். அரசு பிரதிநிதியான தொழிலாளர் ஆணையர் இவ்வாரியத்தின் தலைவர் ஆவார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தற்போது கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட்டு வருகின்றன.

- ☐ விபத்துக் காப்பீட்டுத் திட்டம்
- ☐ ஈமச்சடங்கு உதவித் திட்டம்
- ☐ இயற்கை மரணம் உதவித் திட்டம்
- ☐ கல்வி உதவித் தொகைத் திட்டம்
- ☐ திருமண உதவித் தொகைத் திட்டம்
- ☐ மகப்பேறு / கருச்சிதைவு உதவித் தொகைத் திட்டம்

### விபத்துக் காப்பீட்டுத் திட்டம்

வாரியத்தில் ரூ.25 செலுத்தி பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாறு காப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்கள் விபத்தில் காயம் அடைந்தாலோ அல்லது உயிரிழந்தாலோ, காப்பீட்டு தொகை பெறுவார்கள். மாண்புமிகு தொழிலாளர்




நல அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் உயிரிழந்தால் ரூ.1,00,000, 10.5.98 முதல் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் இக்காப்பீட்டுத் தொகை ரூ.50,000–ஆக இருந்தது. விபத்தில் காயம் அடைந்தால் அக்காயத்தால் தொழிலாளிக்கு ஏற்படும் நிரந்தர ஊனத்தின் தன்மையைப் பொறுத்து அவருக்குக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

### ஈமச்சடங்கு உதவித்தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இறந்தால் அவருடைய நியமனதாரருக்கு 28.2.99 முடிய உள்ள காலத்தில் ரூ.500 ஈமச்சடங்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 1.3.99 முதல் இத்தொகை ரூ.2,000–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.







### இயற்கை மரணம் உதவித் தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணம் அடைந்தால் அவரது நியமனதாரருக்கு ரூ.5000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது

### கல்வி உதவித்தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.750–ம், 12ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.1000–ம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.




### திருமண உதவித்தொகைத் திட்டம்

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் திருமணத்திற்குத் திருமண உதவித்தொகையாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

### மகப்பேறு / கருக்கலைப்பு உதவித் தொகைத் திட்டம்

பதிவுபெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு / கருக்கலைப்புக்கு உதவித்தொகையாக ரூ.2000 வழங்கப்படுகிறது.



### பதிவு செய்து கொள்ளவேண்டும்

மேற்காணும் சலுகைகளைப் போல தமிழ்நாட்டின் எல்லைக்குள் பணிபுரியும் எந்த ஒரு கட்டுமானத் தொழிலாளியும் ரூ.25/–ஐ செலுத்தி இவ்வாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு சென்னை, கடலூர், வேலூர், திண்டுக்கல், குன்னூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு கட்டுமானத் தொழிலாளிக்கும் ஒரு அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

★ ★ ★

வனங்கள், இயற்கை வளச்செல்வங்களை மீண்டும் புதுப்பித்தல் மற்றும் சுற்றுச்சூழலின் மாறாத்தன்மையை நிலைநிறுத்துதல் ஆகிய இரண்டு அம்சங்களை நிறைவேற்றும் ஒரு கூட்டு அமைப்பாகத் திகழ்கிறது. மத்திய, மாநில அரசுகள் மற்றும் பன்னாட்டு நிதியுதவி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்களின் வாயிலாக இத்தகைய வற்றாத விலைமதிப்பிட முடியாத இயற்கைச் செல்வங்களை அழியாமல் பேணிப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கூட்டு வன நிர்வாகம்**

தமிழ்நாடு அரசு, உள்ளூர் மக்களைத் தரம் குன்றிய வனப்பகுதிகளில் மர உற்பத்தி மற்றும் பாதுகாப்பில் ஈடுபடுத்துவதிலும், அவ்வனங்களிலிருந்து தொடரும் பயன்களை பங்கீடு செய்து கொள்வதிலும் உறுதியாக உள்ளது. இந்த ஏற்பாடு 'கூட்டு வன நிர்வாகம்' எனப்படும்.

அவ்வமைப்பு திட்டமிட்டுப் பணி செய்தல், பாதுகாப்பு, அறுவடை மற்றும் பயன்களைப் பங்கீடு செய்து கொள்ளுதல் போன்ற பணிகளை முக்கியமாக தரம் குன்றிய காடுகளில் செயல்படுத்தும். சம்பந்தப்பட்ட வனச்சரகர், கிராம வனக்குழு அமைக்கும் செயற்முறைகளைத் துவங்குவர். கிராம வனக்குழு



தேவைப்படும் பொழுது, ஆனால் குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடும். ஒவ்வொரு கிராம வனக்குழுவும் ஒரு செயற்குழுவை தேர்ந்தெடுக்கும். குறைந்தது 5 உறுப்பினர்களும் அதிகபட்சம் 15 உறுப்பினர்களும் அச்செயல் குழுவில் இருப்பர். அதில் ஒரு குக்கிராமத்திற்குக் குறைந்தது இரண்டு உறுப்பினர்கள் விதமும், அதில் ஒருவர் மகளிராகவும் தேர்வு செய்யப்படுவர்.

இருப்பினைப் பொறுத்து, கிராம வனக்குழு உறுப்பினர்களின் குடும்பத்திற்கு மரம் அல்லாத விளைபொருட்கள் (சிறுவிளை பொருள்) அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். மிகுதியாக இருப்பின், அவை செயல்குழுவால் விற்கப்படும். தொழிற்நுட்ப ரீதியாக மரம் அல்லாத வன விளைபொருட்கள் இருப்பு மாவட்ட / கோட்ட வன அலுவலரால் தீர்மானிக்கப்படும். வேறு விளைச்சல் பொருட்கள் மாவட்ட வன அலுவலரால் தீர்மானிக்கப்பட்டு, செயற்குழுவால் விற்கப்படும். இவ்வாறு பெறப்பட்ட விற்பனைத் தொகையில் 25 சதவீதத்தை கிராம வன வளர்ச்சி நிதியில் செலுத்திவிட்டு, மீதியை கிராம வனக்குழு உறுப்பினர்களிடையே செயற்குழு சமமாகப் பகிர்ந்தளிக்கும்.

கிராம வனக்குழுவின் தலைவரும் மற்றும் உறுப்பினர் செயலரும் சேர்ந்து கையொப்பமிட்டும் ஒரு கூட்டுக்கணக்கினை கிராம வனக்குழுவின் பேரில் கிராமத்திலுள்ள / கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு வங்கியில் / தபால் நிலையத்தில் ஆரம்பித்து நிர்வகிப்பார்கள். கிராம வனக்குழுவிற்கு வரும் வருவாய் அனைத்தும் இந்த கணக்கில் வைக்கப்படும். கிராம வனக்குழுவின் தலைவரும், செயலர் உறுப்பினரும் சேர்ந்து இந்த நிதியினை கூட்டாகக் கையாள்வதோடு கிராம வனக்குழுவிற்கு நிதி நிர்வாகத்திற்கு கணக்கு ஒப்புவிக்க கடமைப்பட்டுள்ளவராவர்.

தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949 மற்றும் தமிழ்நாடு மலைப்பகுதிச் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் 1955–இன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள மலைப் பகுதிகளில் எந்தவொரு மரத்தினையும் வெட்ட மாவட்ட ஆட்சித்தலைவரை தலைமையாகக் கொண்ட குழுவிடம் முன் அனுமதி பெற வேண்டும். இப்பகுதிகளில் மரங்களை வெட்டுவதற்கான மனுக்கள் மீது குழு முடிவு செய்யும். இக்குழு தேவைக்கேற்ப அவ்வப்போது அல்லது இரண்டு மாதங்களுக்கொரு முறை கூடும்.

தமிழ்நாட்டில் வனச்சட்டத்தில் பின்வரும் மர இனங்கள் அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

1. கருங்காலி
2. செம்மரம்
3. தோதகத்தி
4. சந்தனமரம்
5. தேக்குமரம்

தமிழ்நாட்டில் தடி மரங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும் வனத்துறையிள் அனுமதிச் சீட்டு இன்றி நிலம், நீர், ஆகாயம் வழியாக கொண்டு செல்லுதல் கூடாது. சம்பந்தப்பட்ட பகுதியில் சரக அலுவலரிடம் விண்ணப்பித்து கீழ்க்கண்ட கட்டணம் செலுத்தி பெறப்படும் படிவம் – 2 அனுமதிச்சீட்டின் மூலம் தடிமரம், விறகு மற்றும் மூங்கில்களை தனியார் நிலங்களிலிருந்தோ, கடை அல்லது சந்தைகளிலிருந்தோ எடுத்துச் செல்லலாம்.

ஒரு மாட்டு வண்டி பாரம் : ரூ.10.00
ஒரு லாரி பாரம் : ரூ.50.00

சந்தனக் கட்டைகள் பொது ஏலத்தில் திருப்பத்தூர், சேலம் மற்றும் சத்தியமங்கலம் கிடங்குகளில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் விற்கப்படுகின்றன. இந்த ஏலங்களில் பங்குபெற விருப்பம் உள்ள நபர்கள்/நிறுவனம் தங்கள் பெயர்களை சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

நியாயமான தேவைகளுக்காக, சில்லறை விலையில் சந்தனக்கட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

சில்லறை விற்பனைக்கான விலை, வருடந்தோறும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் நிர்ணயம் செய்து அறிவிக்கப்படுகிறது. அதனடிப்படையில் சில்லறை விற்பனை செய்யப்படும். ★





**நலத்திட்டத்தின் பெயர் :**

### 1. மாதாந்திர நிதியுதவி

**தகுதி :**

60 வயதுக்கு மேல் வறிய நிலையில் உள்ள முன்னாள் படைவீரர் / விதவைகள்.
(மாதம் ரூ.100 விதம் ஓராண்டிற்கு)

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.





### 2. மொத்த மானிய நிதிஉதவி

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். முன்னாள் படைவீரர்கள்/ விதவைகள் சிறுதொழில் செய்து வருமானம் ஈட்டிட ரூ.5,000 வரை நிதியுதவி.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 3. திருமண நிதியுதவி

**தகுதி :**

வழங்கப்படும் தொகை ரூ.3,000 (ஒரு மகளுக்கு மட்டும்) ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகாது இருத்தல் வேண்டும். முன்னாள் படை வீரர் பத்தாண்டுகள் இராணுவத்தில் சேவை செய்து இருத்தல் அல்லது இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்து இருத்தல் வேண்டும். மணமகள் குறைந்த அளவு கல்வித் தகுதி : ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மறைந்த முன்னாள் படைவீரரின் மகளின் திருமணத்திற்கு முன்னாள் படைவீரரின் பணிக் காலத்தைக் கணக்கில் கொள்ளத் தேவையில்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 4. ஈமச்சடங்கு நிதியுதவி

**தகுதி :**

வழங்கப்படும் தொகை ரூ.2,000. முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்கள் / விதவையர்க்கு வருமான வரம்பு ஏதுமில்லை (முன்னாள் படைவீரர் இறப்பிற்கு மட்டும்).

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 5. முதியோர் ஓய்வூதியம்

**தகுதி :**

ஆதரவற்ற முன்னாள் படைவீரர்கள் / விதவைகள் மாதம் ரூ.300 விதம் ஆயுட்காலம் வரை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



**6. புயல் வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இடர்பாடு நிவாரண நிதியுதவி ரூ.300**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். வீடு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்று தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். வருவாய்த் துறையிலிருந்து இதற்குண்டான நிதிஉதவி பெற்றிருத்தல் கூடாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**7. முழுமையாக கண்பார்வை இழந்த முன்னாள் படைவீரர் / விதவைகளுக்கு ஆயுட்கால நிவாரண நிதியுதவி மாதம் ரூ.300**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். முழுமையாக கண்பார்வை அற்றவர் என்பதற்கான சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**8. புற்றுநோய், தொழுநோய் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்/விதவைகளுக்கு ஆயுட்கால நிவாரண நிதியுதவி**

**தகுதி :**

வழங்கப்படும் தொகை புற்றுநோயாளிக்கு ரூ.500–ம், தொழுநோயாளிக்கு ரூ.300–ம், ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். புற்றுநோய் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதற்கான மருத்துவச் சான்றிதழ் பெற்று இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**9. செயற்கை பல்செட், மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவி போன்ற செயற்கை உறுப்புகள் வாங்க மொத்த நிதியுதவி**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். தேவையான செயற்கை உறுப்பு அவசியம் பொருத்த வேண்டும் என்பதற்குரிய அரசு சிறப்பு மருத்துவரின் சான்றிதழ் பெற வேண்டும். செயற்கை உபகரணங்களில் 1 கருவியின் விலை ரூ.1,000 அல்லது கருவியின் விலை இதில் எது குறைவோ அத்தொகை. மூக்குக் கண்ணாடிக்கு அதிகபட்சம் ரூ.300 வரை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**10. காசநோய் சானிடோரியத்தில் தங்கி சிகிச்சை பெறும் முன்னாள் படைவீரர்களுக்குக் கைச்செலவு**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். காசநோயால் பாதிக்கப்பட்டு காசநோய் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் காலததிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.10 வீதம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.





**11. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட படைவீரர்களுக்கு ஆயுட்கால நிவாரண நிதியுதவி**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதற்கான மருத்துவச் சான்றிதழ் பெற வேண்டும். மாதம் ரூ.300 வீதம்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**12. கல்விச் சலுகை**

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். புத்தகப் படி கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

**ஒரு கல்வி ஆண்டுக்கு :**

| | | | |
|---|---|---|---|
| 1. | 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை | – | ரூ.100 |
| 2. | 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை | – | ரூ.200 |
| 3. | 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை | – | ரூ.200 |
| 4. | மேல்நிலைப் பள்ளிகள் | – | ரூ.300 |
| 5. | இளங்கலைப் பட்டம் | – | ரூ.400 |
| 6. | முதுகலைப் பட்டம் | – | ரூ.500 |

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**13. இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகிய பெரிய அறுவை சிகிச்சைகளுக்கான நிதியுதவி ரூ.20,000 வரை**

**தகுதி :**

முன்னாள் படைவீரருக்கு மட்டும். இராணுவ மருத்துவமனை / அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் இத்தகைய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.50,000 வரை இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

**14. தொகுப்பு நிதி வருடாந்திர பராமரிப்பு மானியம்**

**தகுதி :**

போரில் மரணமுற்ற படைவீரரின் வாரிசுதாரர்/ ஊனமுற்ற முன்னாள் படைவீரராக இருத்தல் வேண்டும். ஆண்டுக்கு ரூ.2,000 வீதம் ஆயுட்காலம் முழுவதற்கும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



### 15. உலகப் போர் நிதியுதவி

**தகுதி :**

முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த முன்னாள் படைவீரர் அவர்தம் விதவைகளாக இருத்தல் வேண்டும். மாத வருமானம் ரூ.500–க்குள் இருத்தல் வேண்டும். மாதம் ரூ.300 வீதம் ஆயுட்காலம் வரை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 16. பயிற்சி உதவித்தொகை கல்விச் சலுகை

**தகுதி :**

தொழிற்கல்வி, பட்டயப்படிப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் மேற்படிப்பு படிக்கும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளாக இருத்தல் வேண்டும்.

படிப்புக் கட்டணம், தனிக் கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதிக் கட்டணம், புத்தகப்படி மற்றும் பயிற்சி உதவித்தொகை – அரசு பயிலகங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 17. வீடுகட்டும் மானியம் ரூ.30,000

**தகுதி :**

போரில் இறந்த முன்னாள் படைவீரர்கள் விதவை மற்றும் ஊனமுற்ற படைவீரராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 18. வங்கிக் கடன் வட்டி மானியம்

**தகுதி :**

முன்னாள் படைவீரர்கள் / விதவைகள் ரூ.2,50,000 வரை வாங்கும் வங்கிக் கடனுக்கு வங்கி விதிக்கும் வட்டியில் 50% வட்டியை மானியமாகப் பெறலாம். முதலில் வங்கியை அணுகி வங்கியினர் கடன் தர இசைந்தால் முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை வட்டி மானியத்திற்காக அணுகலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 19. முன்னுரிமையில் பம்ப் செட்டிற்கு மின்இணைப்பு வழங்குதல்

**தகுதி :**

முன்னாள் படைவீரர் / விதவைகள் மின்னிணைப்பு பெற மின்சார வாரியத்தில் பதிவு செய்து ஓராண்டிற்குப் பின் உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



### 20. செம்பெக்ஸ்–I

**தகுதி :**

இத்திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு உட்பட்டுள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது விதவையருக்கு வாகனங்கள் வாங்கவும், தொழிற்சாலைகளை நிறுவிடவும், இதர தொழிற்சாலைக்காகவும் ரூ.15 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்குக் கடனுதவிகள் பெறலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



முன்னாள் படைவீரர் நலத்துறை

### 21. செம்பெக்ஸ்–II

**தகுதி :**

இத்திட்டத்திற்கு வயது வரம்பு கிடையாது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையருக்கு விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களுக்கு ரூ.10.00 இலட்சங்களுக்கு மேற்படாத திட்டங்களுக்குக் கடனுதவிகள் பெற்றுத் தரப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 22. செம்பெக்ஸ்–III

**தகுதி :**

இத்திட்டத்திற்கு வயது வரம்பு கிடையாது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது விதவையருக்கு கதர் மற்றும் கிராமத் தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. கடனைப் பெற விண்ணப்பதாரர்கள் சொந்த நிலம் பெற்றிருத்தல் வேண்டும். நிலம் சொந்தமாக இல்லாதவர் 1:10 என்ற விகிதத்தில் விளிம்புத் தொகை செலுத்திக் கடன் பெறலாம்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 23. இராணுவப் பணி ஊக்க மானியம்

**தகுதி :**

தனது ஒரே மகன் அல்லது மகளை இராணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடந்தோறும் ரூ.450 வழங்குதல். உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 24. வீட்டுவரி செலுத்துவதில் இருந்து விலக்களித்தல் (மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் விதிக்கப்படும் தொகை)

**தகுதி :**

சொந்தமாக வீடு உள்ள வீர விருது பெற்றுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் விதவைகளாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 25. மருத்துவ சத்துணவு மானியம் (இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து பெறுதல்) : மாதம் ரூ.300 வீதம் 6 மாதத்திற்கு

**தகுதி :**

காசநோய், தொழுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படை வீரர்கள்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 26. ஓட்டுநர் உரிமம் இலவசமாக புதுப்பித்தல் சான்று வழங்கப்படுதல்

**தகுதி :**

முன்னாள் படை வீரர்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 27. வீட்டுவசதி வாரியத்தால் 7 விழுக்காடு ஒதுக்கீடு

**தகுதி :**

முன்னாள் படைவீரர்கள் / படைப்பணியில் உள்ளவர்கள்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 28. தொழில்நுட்பக் கல்லூரிகளில் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோருக்கு இடஒதுக்கீடு

**தகுதி :**

முன்னாள் படைவீரர்கள் / விதவைகள் / அவர்களைச் சார்ந்தோருக்கு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இடஒதுக்கீடு பெற உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 29. சான்றிதழ் வழங்குதல்

**தகுதி :**




முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்கள் கல்வி நிலையங்களில், வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும், இதர சலுகைகள் பெறவும், உண்மைச் சான்று பெறலாம். வேலைவாய்ப்பில் முன்னுரிமைச் சான்று ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 30. முன்னாள் படைவீரரின் அனாதை சிறார்களுக்கான கல்வி உதவித்தொகை

**தகுதி :**

பள்ளி / கல்லூரியால் வசூலிக்கப்படும் பயிற்சி / தனி தேர்வு / விடுதி / பேருந்து கட்டணங்கள், புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களுக்கான செலவுத் தொகை வழங்கப்படும். ஆண்டுக்கு 2 செட் சீருடைகள், பள்ளியில் பயிலுவோருக்கு மாதம் ரூ.50–ம், கல்லூரி பயிலுவோருக்கு மாதம் ரூ.100 வீதம் கைச் செலவு பணம் வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 31. தையல் இயந்திரம் மானியம்

**தகுதி :**

முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையற் பயிற்சி, பள்ளியில் பயிற்சி பெற்ற ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகையாகாது உள்ள முன்னாள் படைவீரரின் மனைவியர் / மகளிருக்கு தையல் இயந்திரம் வாங்குவதற்கு ரூ.1,000 மானியம் வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 32. மனநலம் குன்றிய முன்னாள் படைவீரர் சிறாருக்கு பராமரிப்பு மானியம்

**தகுதி :**

ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகையாகாத முன்னாள் படைவீரரின் மனநலம் குன்றிய சிறாருக்கு பராமரிப்பு மானியமாக மாதம் ரூ.300–ம் மருத்துவச் செலவாக மாதம் ரூ.200–ம் மருத்துவமனையில் இருக்கும் காலத்திற்கு கைப்பணம் மாதம் ரூ.100 வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 33. தொழிற்கூட மானியம்

**தகுதி :**

ஆண்டு வருமானம் ஒரு இலட்சத்திற்கு மிகையாகாத தொழில் முனையும் முன்னாள்





படைவீரருக்கு தொழிற்கூடம் / மனையின் விலையில் 25% அல்லது ரூ.50,000–க்கு மிகாது வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

### 34. கருணைத் தொகை

**தகுதி :**

போர் மற்றும் போருக்கு நிகரான நடவடிக்கையில் உயிர் துறக்கும் படைவீரர் குடும்பத்தினருக்கு ரூ.30,000 தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 35. திருமண மானியம்

**தகுதி :**

போரில் உயிரிழந்தோர் மற்றும் ஊனமுற்றோர் மகளுக்கு ரூ.10,000 திருமண மானியம் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.



### 36. போரில் உயிரிழந்தவர்களின் குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடை மற்றும் புத்தகப்படி

**தகுதி :**

| | | |
|---|---|---|
| வகுப்பு 1 முதல் 5 வரை | – | ரூ.1,000 |
| 6 முதல் 8 வரை | – | ரூ.1,250 |
| 9 முதல் 12 வரை | – | ரூ.1,500 |

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை.

### 37. சிறுதொழில் செய்ய முதலீட்டு ஊக்குதவி மானியம்

ரூ.5,000 அல்லது கடன் தொகையில் 25% இதில் குறைவான தொகையினை மட்டும் வழங்கப்படும்.

**தகுதி :**

1. வங்கி மூலம் முன்னாள் படைவீரர் / விதவை கடன் பெற்ற பின்பு வழங்கப்படும்.
2. ஆண்டு வருமானம் ரூ.50,000 வரை.
3. இம்மானியம் பெறுவோர் மொத்த மானிய உதவித் தொகை பெறத் தகுதியற்றவர்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலத்துறை

* * *

# திருக்குறள் கீர்த்தனைகள் இசை நிகழ்ச்சி முழுவதும் பாடப்படும் நிலையை உருவாக்க வேண்டும்

**– முதலமைச்சர் கலைஞர்**

இன்று "சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது" என்பார்களே, அதைப் போன்ற ஒரு நிகழ்ச்சியில் நானும் நீங்களும் இதுவரை திளைத்திருந்தோம். நம்முடைய கலைப் புதையல்களை வெளிக்கொணர்ந்து அதனுடைய சிறப்பையும் ஒளிமிகு புகழையும் ஆற்றலையும் வெளிக்காட்டிய வித்தகர்கள் இந்த மேடையிலே அமர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்க் கடல் என்ற சொல்லலாம், கடலுக்குக்கூட எல்லையிருப்பதைப் போன்றதொரு தோற்றம் உண்டு. எனவே அந்த உவமையை விடுத்து நம்முடைய பெரியவர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்களை தமிழ் வானம் என்றழைப்பது பொருத்தமுடையதாக இருக்கும். அந்த வானத்தின் பெருமையை உணர்ந்த தமிழகம், இந்தத் தமிழகம்.

அவர் இங்கே "இயல் செல்வம்" என்ற விருதினை முத்தமிழ்ப் பேரவையின் சார்பிலே வழங்கியதைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். இந்த விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள பெரியவர் செம்மங்குடி அவர்கள் தலைமையுரையாற்றும் போது, தனக்கு பத்மவிபூஷன் விருது கருணாநிதியின் சிபாரிசால்தான் கிடைத்தது என்று குறிப்பிட்டார். நான் அவருக்கும் உங்களுக்கும் சொல்வேன் பத்மவிபூஷன் விருது ஒரு நாள் என் கனவிலே தோன்றி "என்னை எப்படியாவது நீ செம்மங்குடியார் பெயரோடு சேர்த்து விடு" என்று சிபாரிசு செய்து அப்படி செம்மங்குடி அவர்களுக்கு பத்மவிபூஷன் விருது பொருத்தப்பட்டிருக்கிறதே அல்லாமல், இதிலே என்னுடைய சிபாரிசு ஒன்றும் இல்லை.

அவருடைய வித்வத்திற்கு அவருடைய சங்கீத ஞானத்திற்கு, அவ்வருடைய இசையாற்றலுக்கு பத்மவிபூஷனை விட இன்னும் பெரிய விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் மிக நன்றாக உணர்வேன்.

திரு ஏ.கே.சி.நடராஜன் ராஜரத்தினா விருதை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது, நாதஸ்வர சக்கரவர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர்களிடத்தில் எந்த அளவிற்கு அன்பும் அடக்க உணர்வும் கொண்டு இளமைக் காலத்திலே நான் பழகினேன் என்பதை இங்கே எடுத்துக் காட்டினார்கள். என்னுடைய கரங்களால் இந்த விருதைப் பெறக் காத்திருந்தேன் என்று அவர் சொன்னார். அவருடைய கழுத்திலே இந்த விருதினை அணிவிக்க நானும் காத்திருந்தேன் என்பதை அவருக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

"இசைச் செல்வம்" விருதினை திருமதி சுதா ரகுநாதன் பெற்றிருக்கிறார். அவர் இந்தியத் திருநாட்டில் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று போற்றப்படுகின்ற ஒரு சிலரில் ஒருவராகத் திகழ்பவர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"நாட்டியச் செல்வம் விருது" திருமதி வைஜயந்திமாலா அவர்களுக்கு வழங்கப்பட்டு அதன் காரணமாக இந்தப் பேரவை பெருமை கொள்கிறது.

அவர் இங்கே பேசும்போது, தான் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலுங்கூட, எந்தவொரு மேடையிலும் கலைஞரை நான் தாக்கிப் பேசியது கிடையாது என்றார். அவர் தாக்காதது மாத்திரமல்ல, என்னுடைய கருத்துக்களை அவர் தாங்கியதும் உண்டு.

ஒன்றை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவருடைய நாட்டியத்தைப் பற்றி, அவருடைய இசை மேன்மையைப் பற்றி, அவருடைய கலை ஞானத்தைப் பற்றியெல்லாம் நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அது கொல்லன் தெருவிலே ஊசி விற்கும் கதையாக ஆகிவிடும் என்பதை நான் அறிவேன்.

அப்படிப்பட்டவருக்கு 'நாட்டியச் செல்வம்' அவருடைய கலையாற்றலுக்காக இங்கே வழங்கப்பட்டிருக்கிறது.

சிவபுரி பத்மநாபன் அவர்களுக்கு 'நாதஸ்வரச் செல்வம்' டி.ஆர் .சுப்பிரமணியம் அவர்களுக்கு "தவில் செல்வம்' அ.நடராஜன் அவர்களுக்கு "மிருதங்கச் செல்வம்", சோமு அவர்களுக்கு 'லயச் செல்வம் விருதுகள் இங்கே வழங்கப்பட்டுள்ளன. அவர்களையெல்லாம் நான் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.






அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே உரையாற்றும் போதும் விழாத்தலைவர் செம்மங்குடியார் இங்கே பேசும்போதும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இசைப்பள்ளிகளைப் பற்றியும் இசைக்கல்லூரிகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள்.

என்னதான் வயதானாலும்கூட முதிர்ச்சி அடைந்தாலுங்கூட செம்மங்குடியார் போன்றவர்கள் இன்னமும் இந்தக் கலையிலே எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளார்கள் என்பதை நாம்மால் உணர முடிகின்றது.

அவர்கள் பேசும்போது திருக்குறளை கீர்த்தனைகளாகப் பாடுகின்ற ஒரு ஏற்பாட்டை ஒரு அரிய கண்டுபிடிப்பை மயிலாடுதுறை டி..ஆர்.விஸ்வநாத சாஸ்திரிகள் உருவாக்கியிருக்கிறார் என்பதை எடுத்துக்கூறி இரண்டு பெரிய புத்தகங்களை என்னிடத்திலே கொடுத்தார்கள். மேடையிலேயே அதைக் கொஞ்சம் படித்துப் பார்த்தேன். 'திருக்குறள் மதுர கீர்த்தனை' என்பது அந்தப் புத்தகங்களின் பெயர். அதிலே,'நன்றி மறப்பது நன்றன்று' என்ற வரியைக் கூட அவர்கள் இங்கே பாடிக் காட்டினார்கள். திருக்குறள் கீர்த்தனைகளாக இன்றைக்கு வந்திருக்கிறது என்பது வள்ளுவருக்கு திருக்குறளுக்கு தமிழுக்குக் கிடைத்துள்ள பெருமையாகும். அந்தக் கீர்த்தனை புத்தகங்களைப் பரப்ப வேண்டிய கடமை தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறைக்கு இருக்கிறது என்பதை இந்த மேடையிலே நான் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உடனடியாக நாளைக்கே அதைப்பற்றி விசாரித்து எத்தனை புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. எத்தனை நூல்கள் வெளியிலே சென்று பரப்பப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் உணர்ந்து மேலும் பல படிகள் அவை எடுக்கப்படவும் ,இன்றைக்கு நாம் நடத்தி வருகின்ற இசைப்பள்ளிகளில் இசைக் கல்லூரிகளில் இந்தத் திருக்குறள் கீர்த்தனைகள் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யவும் தமிழ்க்குடிமகன் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் தேவாரம், திருவாசகம் இவைகள் எல்லாம் இன்றைக்கு இசை மேடைகளிலே பாடப்படும் போது திருக்குறள் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டு மூன்று குறள்கள் என்ற அளவிலே தான் கீர்த்தனைகளாகப் பாடப்படுகின்றன. திருக்குறள் இசை நிகழ்ச்சி கீர்த்தனைகள் முழுவதும் பாடப்படும் என்று ஒரு விளம்பரம் செய்து அதை பல்லாயிரக் கணக்கான மக்கள் கேட்கின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். அதை எனக்கு இன்றைக்கு இந்த மேடையிலே உணர்த்தியவர் செம்மங்குடியார் என்பதை எண்ணும்போது நான் புளகாங்கிதம் அடைகிறேன். பூரிப்பு கொள்கிறேன்.

இந்த இனிய விழாவிலே அவருடைய உரையைக் கேட்கிற வாய்ப்பு கிடைத்தமைக்காகவும் ராஜரத்தினா பட்டம் பெற்ற ஏ.கே.சி. நடராஜன் அவர்கள் நன்றியுரை கூறும்போது சொன்ன அந்த நன்றி மிக்க வாசகங்களைக் கேட்கின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காகவும், "இயற்செல்வம்" விருது பெற்ற அ.ச.ஞா. அவர்கள் இங்கே உரையாற்றி நம்மைப் பெருமைப்படுத்தியமைக்காகவும் அவர்கள் எல்லாம் இன்னும் நீண்ட காலம் வாழ வேண்டும். வாழ்ந்து தமிழை வாழ வைக்க வேண்டும் என்கிற விருப்பம் உடையவர்கள் நாம். இன்று வயது முதிர்ந்த நிலையிலேகூட ஒருவருடைய துணையோடுதான் மேடைக்கு வரவேண்டும் என்ற நிலையிலே கூட வந்து அவர்கள் இந்த விருதைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், விருது பெறுவதற்காக வரவில்லை. தமிழை வாழ வைப்பதற்காக தங்களுடைய தமிழ்தொண்டு எந்த நிலையிலும் தொடரும் என்பதை விளக்குவதற்காக முதிர்ந்தால், இளைத்தால், களைத்தால் அதற்காக தமிழை மறந்துவிடக் கூடாது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அவர்கள் இந்த நிலையிலும் இந்த மேடைக்கு வந்து நம்மைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போல மற்ற விருதுகளைப் பெற்ற சுதாரகுநாதன், வைஜயந்திமாலா, சிவபுரி பத்மநாபன், சுப்ரமணியம், நடராஜன், சோமு ஆகிய அனைவருக்கும் முத்தமிழ்ப் பேரவையின் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**18–11–2000 அன்று நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் வெள்ளி விழாவில் விருதுகளை வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

# மாரடைப்பு

மாரடைப்பு நோய், இன்றைய அறிவியல் யுகத்தில் வெகுவாக காணப்படும் நோய். புற்று போல இதுவும் ஒரு ஆட்கொல்லிநோய். ஆரம்ப கட்டத்திலேயே இந்த நோயைக் கண்டுபிடிப்பது சற்று கடினம். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்த நோய் ஒரு புதிராக இருந்தது. இன்று மருத்துவ அறிவியலார்களின் இடைவிடாத முயற்சிகளினால் இந்தப் புதிர் விடுபட்டுவிட்டது. இருதய மின்னலை வரைபடம் இந்த நோயின் ஆரம்ப கட்டத்திலேயே இதைப் பற்றித் தெரிவித்துவிடும்.




இந்த நோக்கு என்று சில அறிகுறிகள் உள்ளன. அந்த அறிகுறிகள் ஏதேனும் தென்பட்டால், இருதய மின்னலை வரை படத்தின் உதவியுடன் இதைப்பற்றி தீர்மானம் செய்வார்கள். அல்லது வேறு ஏதேனும் நோய்க்கென்று டாக்டரை அணுகும்போது அவர் தேர்வாய்வுகள் செய்து பார்க்கும் போது தற்செயலாக இதைக் கண்டுபிடிப்பது முண்டு.இருதய நோய் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் சிலருக்கு இருக்காது. பேசிக் கொண்டே இருப்பார்கள். திடீரென்று 'என்னவோ பண்ணுகிறது தண்ணீர் கொண்டுவா' என்பார்கள். தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கும் முன் உயிர் பிரிந்திருக்கும். எனவே இதற்கு மௌன நோய் என்றும் "மௌனக் கொல்லி" என்றும் பெயர்கள் உண்டு.

மாரடைப்பு என்றால் என்ன ? ஏன் ஏற்படுகிறது ? என்றெல்லாம் கேள்விகள் எழலாம். நாம் உழைக்க உயிர்வாழ உணவும் காற்றும் (ஆக்ஸிஜனும்) தேவை. அதேபோல் இடைவிடாமல் உழைக்கும் இருதயத்திற்கும் உணவும் காற்றும் (ஆக்ஸிஜனும்) அவசியம். அதைத் தருவது இரத்தம். இருதயத்திற்கு ஊட்டமளிக்கத் தேவையான இரத்தம் கிடைக்காத போது அதன் செயல்முறைகளில் கோளாறுகள் ஏற்படுகின்றன. அறவே கிடைக்காத போது இருதயம் தன் வேலையை நிறுத்தி விடுகிறது. விளைவு மரணம் . எந்தவித சிகிச்சையும் அளிக்குமுன் திடீரென்று மரணம் ஏற்பட்டால் அதற்குக் காரணம் பெரும்பாலும் மாரடைப்பு நோயாகத்தான் இருக்கும்.

உடலின் எல்லா பகுதிகளுக்கும் ஊட்டச் சத்துக் களையும் ஆக்ஸிஜனையும் ஏந்திச் செல்வது இரத்தம். இது உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றடைய வழி செய்யும் பம்பு இருதயம். அதேசமயம் தனது தசைகளுக்கும் இவ்வாறு இரத்தத்தை அனுப்பிக் கொள்ளுகிறது. இருதயத் தசைகளுக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் நாளங்களுக்கு இருதய தமனிகள் என்று பெயர். இவைகளில் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்டதிலோ அடைப்பு ஏற்பட்டால் இருதயத்திற்குத் தேவையான ஆக்ஸிஜனூட்டம் கிடைக்காது. இந்த அடைப்பு சாதாரணமாக இருந்தால் மார்புவலி ஏற்படும். ஆஞ்சினா பெக்டாரிஸ் என்று சொல்வது இந்த வலியைத்தான். மாரடைப்பு நோயின் அறிகுறிகளில் ஒன்று, அடைப்பு தீவிரமாக இருந்தால் இருதயத் தசையின் எப்பகுதிக்கு இரத்த ஊட்டம் கிடைக்கவில்லையோ அப்பகுதியிலுள்ள தசைத் திசுக்கள் இறந்து விடுகின்றன. நாளடைவில் அத்தசையின் பெரும் பகுதி திசுக்கள் இறந்து விட இருதயத்தின் சுருங்கலியக்கம் நின்று விடுகிறது. மரணம் ஏற்படுகிறது.

மேலும் மகாதமனி அர்த்த சந்திர வால்வுகளுக்கு மேலே உடனடியாக இரு கிளைகளாகப் பிரிகிறது. இந்தக் கிளைகளாக இருதய தமனிகள் எனப்படுவது. இவைகள் வலது இருதய தமனி என்றும் இடது இருதய தமனி என்றும் குறிக்கப்படும். இடது இருதய தமனி சற்றுப் பெரியது. இது மேலும் இரு கிளைகளாகப் பிரிகிறது. இருதயத்தின் முன் பக்கத்திற்கும் இடது பக்கத்திற்கும் இரத்த ஊட்டம் அளிப்பது இது. வலது இருதய தமனி இருதயத்தின் பின்புறத்திற்கும் பக்கங்களுக்கும் இரத்த ஊட்டம் அளிக்கிறது. இருதயத்தில் இரத்த நாளப்பின்னல் அமைவு குறைவு. எனவே இருதயத் தமனியில் அடைப்பு ஏற்பட்டால் விளைவு விபரீதமாகிவிடுகிறது.

இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. த்ராம்போஸிஸ் என்பது ஒன்று. நாளத்தில் குருதி உறைவு ஏற்பட்டு இரத்த ஓட்டத்தை தடைப்படுத்துவது. எம்போலிஸம் என்பது மற்றொன்று. – பாக்டீரியா, துணுக்குகள், த்ராம்போஸிஸ் துணுக்குகள் (உறைக்கட்டியின் துணுக்குகள்) ஒன்று திரண்டு கட்டியாகி சிறிய இரத்த நாளங்களின் பாதையை அடைத்து விடுவது.

இரத்த நாளங்களில் இரத்தம் உறைவதற்கு இரத்த ஓட்டத்தின் வேகம் குறைதல், இரத்தத் தமனியின் உட்சுவரில் ஏற்படும் கரடு முரடான தன்மை, இரத்தம் விரைவில் திரிந்து விடுவது முதலானவை காரணங்கள். இரத்தத் தட்டணுக்களில் புரோத்ராம்பின் எனும் ஒரு கொதி உள்ளது. இது அதிகமாக இருந்தால் இரத்தம் உறைகிறது இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகமாகும் போது இரத்தம் கெட்டியாகிறது. இதனாலும் இரத்தம் உறைய வாய்ப்பு ஏற்படுகிறது. இரத்த நாளங்களில் இரத்தம் உறை கட்டியாகி இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதற்குத் த்ராம்போஸிஸ் என்று பெயர்.

எம்போலிஸமும் இதைப் போலத்தான். ஆனால் சிறிய வேறுபாடு உள்ளது. பாக்டீரியா துணுக்குகள் இரத்த உறைகட்டியின் சிதறுகள் ஒன்று திரண்டு கட்டியாகி இரத்த ஓட்டத்தினால் அடித்துச் செல்லப்பட்டு சிறிய இரத்தக்குழலின் பாதையில் படிந்து அடைத்து விடுவதற்கு இப்பெயர். இடம் மாறி கட்டிகள் தரும் இடர் இது.

ஏதெரோமாவினால் குறுகலான நாளங்கள், ஏதெரோஸ்டக்ளேரோஸிஸினால் குறுகிய நாளங்கள் வழியாக இரத்தம் செல்லும் போது அதன் வேகம் குறைகிறது. சில சமயங்களில் தற்காலிகமாக நின்றுவிடுகிறது. அம்மாதிரி சமயங்களில் இரத்தம் உறைந்து கட்டியாகிறது. இந்தக் கட்டிகள் அந்த இடத்திலேயே நாளச் சுவரைப் பற்றிக் கொண்டு இரத்தத்தை வழிமறிப்பதுண்டு. இரத்தவோட்டத்திலேயே உருண்டு சென்று சிறுநாளங்களின் நுழை வாயில்களை அடைத்து விடுவதுமுண்டு. இருதய தமனிகளில் இம்மாதிரி அடைப்பு ஏற்படுவது மாரடைப்பிற்கு வழி வகுக்கிறது.

**மாரடைப்பின் தீவிரத்தன்மை**

1. இரத்த ஊட்டம் இல்லாததினால் பாதிக்கப்பட்ட பகுதியின் அளவும் பரப்பும்,
2. தடைப்பட்ட வழியை விட்டு மாற்று வழிகளில் இரத்தம் செல்லுவது,
3. இருதயத்துடிப்பை ஒழுங்குபடுத்தும் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா இல்லையா என்பதனைக் கொண்டு கணிக்கப்படுகிறது.

இருதய சுவர்கள் மூன்று உறைகளைக் கொண்டது. மத்திய உறை மற்ற இரண்டு உறைகளைவிடச் சற்று பருமனானது. இந்த உறைக்கு மையோகார்டியம் என்று பெயர். இருதயத் தசை என்று சொல்லுவதும் இதைத்தான். சுருங்கலியக்கம் இத்தசையின் மூலம் பரவிச் செல்லுகிறது. இதற்கு இரத்த ஊட்டம் அளிக்கும் தமனியில் ஏதேனும் ஒரு சிறு அடைப்பு ஏற்பட்டால் இந்த தசையின் ஒரு பகுதிக்கு இரத்தம் செல்வது நின்றுவிடுகிறது. இரத்த ஊட்டம் இல்லாததால் அப்பகுதியிலுள்ள தசைத்திசுக்கள் இறந்துவிடுகின்றன. எனவே அப்பகுதி சுருங்கலியக்கத்தில் பங்கு கொள்ள முடியாமல் போய்விடுகிறது. இந்த நிலைக்கு மையோகார்டியல் இன்ஃபார்க்ஷன் என்று பெயர்.

உயிர்ப்பிழந்த இந்தப் பகுதி வெளிரிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். மெல்ல மிருதுவாகி தழும்பு போலாகி விடும் இப்பகுதி. இதற்குள் இந்த புதிய நிலைக்கு அதாவது இதயதசையில் ஒரு சிறு பகுதி செயலற்றுப் போன நிலைக்கு இருதயம் பழக்கப்பட்டு விடுகிறது. நிலைமையையும் சமாளிக்கத் தயாராகி விடுகிறது. ஒரு சிறு பகுதியில் பாதிப்பு ஏற்பட்டால் அதனால் சுருங்கலியக்கத்தில் மாறுதல் எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால் இதே மாதிரி இருதயத் தசையின் மற்ற பகுதிகளிலும் திட்டு திட்டாக தழும்புகள் தோன்ற ஆரம்பித்தால் சுருங்கலியக்கம் பாதிக்கப்படுகிறது. எனினும் இருதயம் வேலை செய்து கொண்டு தானிருக்கும். இதற்கான அறிகுறிகள் தோன்றியதும், நல்ல ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியம் இல்லாவிடில் இருதயத்தின் வேலைச் சுமை மேலும் அதிகரிக்கும்.

கட்டுக் குலையாத உடல் வளம் கொண்ட சிலருக்கு மாரடைப்பு திடீரென்று ஏற்படுவதுண்டு. உண்மையில் ஒரே நாளில் திடீரென்று ஏற்படும் நோயல்ல இது. ஏற்கெனவே இருதயம் பல காரணங்களினால் பாதிக்கப்பட்டிருக்கலாம். அந்த பாதிப்பின் அறிகுறிகள் எதுவும் வெளிப்படையாகத் தெரியவந்திருக்காது. இரத்தமிகை அழுத்தம், நெஞ்சு வலி, நரம்புகோளாறு ஆகிய நோய்களுடன் ஏதொராஸ்க்ளோரோஸிலும் உண்டாகும்போது, இருதயச் தசையில் பாதிப்பு ஏற்படுகிறது.

மாரடைப்பு ஏற்பட பல்வேறு இடர்வரு காரணிகளும், சூழ்நிலைகளும் இருந்தாலும் அடிப்படை குறைபாடு இருதய தமனிகளில் இரத்த ஓட்டம் தடைப்படுவது தான். ஏதேரோஸ்க்ளோரோஸிஸ் எனும் தமனி நாளச் சுருக்க நோய் தான் இத்தமனிகளில் இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தும் குற்றவாளி. தமனி நாளச்சுவரில் கொலெஸ்ட்ராலும், கால்ஷியமும் இரத்த உறைகட்டிகளும் படிந்து குறுக்களவைக் குறைக்கிறது. இவ்வாறு சுருங்கி வருவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியாது. எக்ஸ்ரே

எடுத்துப் பார்த்தாலும் சரி, மின்னலை வரைபடம் எடுத்தாலும் சரி, இக்கோளாறுகள் தெரியாது. காரணம் இருதயத் தசைக்குப் போதுமான இரத்த ஊட்டம் குறுகிய நாளத்தின் வழியாகத் தொடர்ந்து சென்று கொண்டிருப்பது தான். 70 சதவீதம் குறுகலாகும் வரை எவ்வித அறிகுறிகளும் தெரியாது. அதன்பின் அறிகுறிகளும் தெரியவரும். இருதய மின்னலை வரைபடமும் கோளாறுகளைக் கோடிட்டுக் காட்டும்.

20-25 வயதிலிருந்து நாளச்சுவரில் தேவையற்ற பொருள் படிய ஆரம்பிக்கும். எனினும் இது சிறிது நாட்களில் சரியாகிவிடும். ஆனால் தேவைக்கு அதிகமான கொலெஸ்டெரால் தொடர்ந்து சேர்ந்து கொண்டிருந்தால் தமனி நாளச் சுவர்களில் படிந்து அதன் பாதை குறுகலாக ஆரம்பிக்கும். இருபது முப்பது வருடங்களில் நாளச்சுவர்கள் பருமனாகி 70 சதவீதம் குறுகலாகிவிடும். 70 முதல் 90 சதவீதம் குறுகலடைய அல்லது தடைப்பட சில நிமிடங்கள் அல்லது சில மணி நேரங்கள் தான் ஆகும். மாரடைப்பிற்கு வழி வகுத்துவிடும்.

மாரடைப்பு ஏற்பட இதைத்தவிரவேறு பல காரணிகளும் உள்ளன. அவைகள் பின்வருவன:

1. மிகை இரத்த அழுத்தம் மாரடைப்பிற்கு வழிகாட்டும்.
2. புகை பிடிப்பவர்களின் உடன் பிறவா சகோதரன்
3. பரம்பரை நோயாக சந்ததிகளைப் பற்றுவதுமுண்டு.
4. உழைப்பை மறந்து உண்டு படுத்திருக்கும் உடலுடன் உறவாடித்துடிக்கும் இந்த நோய்.
5. இரத்தத்தில் கொழுப்புப் பொருள்கள், குறிப்பாக கொலெஸ்டேரால் அளவு அதிகமாக இருப்பதால் மாரடைப்பு நோய் உறவு முறை கொண்டாட ஆரம்பித்து விடும்.
6. எதற்கெடுத்தாலும் எளிதில் உணர்ச்சி வயப்படும் நிலை, தொடர்ந்து மனவெழுச்சியின் தாங்கறுதி (Stress) தரிப்பறுதி (Strain) எட்டியநிலை முதலியன மாரடைப்பிற்கு கட்டியங்கூறுபவை.
7. மிதமிஞ்சிய உணவு, இதற்கு நண்பன் தான்
8. நீரிழிவு நோயுடனும் இது கை கோர்த்துக் கொள்ளும்.
9. போதுமான உடற்பயிற்சி இல்லா விட்டாலும் இந்நோய் ஏற்படும்.

பொதுவாக இக்காரணிகளில் பல ஒன்று சேர்ந்து மாரடைப்பை உசுப்பி விடும்.

பொதுவாக மாரடைப்பு நோய் வசதி உள்ளவர்களுக்கு தான் ஏற்படும் என்ற தவறான கருத்தும் நிலவுகிறது. இந்த நோய் யாருக்கு ஏற்படும். வசதி உடையவர், வசதி இல்லாதவர்கள் என்ற வேறுபாடு இந்த நோய்க்குக் கிடையாது. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்கள் அதிகம் என்றாலும் அதற்கு குறைந்த வயதினருக்கும் ஏற்படுவதுண்டு. பெண்களைவிட ஆண்களுக்குத்தான் இந்த நோய் அதிகம் தோன்றுகிறது. பெண்கள் உடலில் சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் எனும் ஒரு ஹார்மோன் இந்நோய் அவர்களைப் பற்றாமலிருப்பதற்குக் காரணம் என்று கருதுகிறார்கள். எனினும் மாதவிடாய் நின்று விட்ட பெண்களுக்கு இந்நோய் வரலாம்.

எந்தவித இடர்வருகாரணிகளும் இல்லாத 40 வயதுடையவர்களுக்கு மாரடைப்பும் மற்ற இருதய நோய்களும் ஏற்படும் சாத்தியக்கூறுகள் குறைவு 0.01 சதவீதம் எனலாம். இந்த நிலையில் 50 வயதுடையவர்களுக்கு இது ஏற்படும் வாய்ப்புகள் 0.05 சதவீதமாக உயர்கிறது. 65 வயதுடையவர்களுக்கு 0.1 சதவீதமாகிறது. இடர்வருகாரணிகளில் முக்கியமான மும்மூர்த்திகள்,

1. மிகை இரத்த அழுத்தம்
2. இரத்தத்தில் அதிக கொலலெஸ்டெரால் அளவு.
3. புகை பிடித்தல், என்பன.

40 வயதானவர்களிடம் இம்மூன்று 'காரணிகளும் இருந்தால் முதலில் கவனிக்கப்பட வேண்டிய காரணி கொலெஸ்டெரால் அளவுதான். இந்த வயதில் 'கொல்லும் காரணி' யாகச் செயல்படுவது இதுதான்.இரத்தத்தில் கொலெஸ்டெரால் அளவைக் கட்டுப்படுத்துவது இந்த வயதினர் செய்ய வேண்டிய முதல் வேலை. 50 முதல் 60 வயதினரிடையே செயல் ஆதிக்கம் செலுத்துவது மிகை இரத்த அழுத்தம் இந்த வயதினர் கவனிக்க வேண்டிய காரணி இது. எப்படியிருந்தாலும் . இந்த மும்மூர்த்திகைளயும் வழி அனுப்பிவிட்டால் மாரடைப்பு மற்ற இருதய நோய்கள் ஏற்படாமல் தடுக்கலாம். இரத்தத்தில் கொலெஸ்டெரால் அளவைக் குறைப்பது, மிகை இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது, "புகையே நீ போ" என்று பிகை பிடித்தலை வழி கூட்டி அனுப்புவது ஆகிய மூன்றும் மாரடைப்பு மற்றும் பல இருதய நோய்களுக்கு எதிராக நாம் போடும் மூன்று தாழ்ப்பாள்கள் எனலாம்.



## அறிகுறிகள்

ஆண்களிடமே அதிக அளவில் காணப்படும் இந்த நோய்க்குக் காரணம் அவர்களின் பழக்க வழக்கங்கள், வேலையின் தன்மை முதலியன எனலாம். மாரடைப்பு நோய்க்கான அறிகுறிகள் பல உள்ளன. கடும் மார்புவலி அத்தகைய அறிகுறிகளில் ஒன்று. சாதாரணமாக நாம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போதே இந்த வலி தோன்றுகிறது. "அழுகிற பிள்ளைக்குப் பால் கிடைக்கும்" என்ற பழமொழி இருதயத்திற்குத் தெரியுமோ தெரியாதோ ஆனால் அது அதிக இரத்த ஊட்டம் கேட்டும் எழுப்பும் அழுகுரல் தான் மார்பு வலி. மற்ற வேறு பல காரணங்களினாலும் மார்பு வலி ஏற்படும். ஆனால், மாரடைப்பின் அறிகுறியாகத் தோன்றும் மார்புவலி பெரும்பாலும் இருதயத்திலோ இருதயப் பகுதியிலோ தோன்றுவதில்லை. இந்த வலி ஸ்டெர்ணம் எனப்படும் மார்பின் நடு எலும்பின் பின்பகுதியில் தோன்றுகிறது. சிலருக்குக் குறிப்பாக வயதானவர்களுக்கு நீரிழிவு நோயினால் இருதய நரம்பூட்டம் பாதிக்கப்பட்டவர் களுக்கும் இந்த வலிதெரியாது. அப்படியே இருந்தாலும் லேசான வலியாகத்தான் இருக்கும். சிலருக்கு ஒரு வித எரிச்சல் உணர்வுதான் இருக்கும்

இந்தவலி கடுமையாக இருக்கும். எனினும் இதைப்பற்றி இந்த வலி உள்ளவர்களால் விவரித்தும் சொல்லமுடியாது. சிலர் மார்பை ஏதோ கனமான பொருள் அழுத்துவது போல் இருக்கிறது என்பார்கள். வேறுசிலர் கசக்கி நசுக்குவது போலிருக்கிறது என்பார்கள். மார்பைக் குத்துவது போலவும், குடைவது போலவும், எரிவது போலவும், விரிவது போலவும் இருப்பதாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விவரிப்பார்கள்.

மெல்ல இந்த வலி மார்பின் மற்ற பகுதிகளுக்குப் பரவும். பிறகு, கழுத்து, தாடை, தோள்பட்டைகள், இடது கை பின்பக்கம் ஆகிய பகுதிகளுக்குப் பரவுகிறது. தண்டுவடத்தில் இருதயத்திற்கு நரம்பூட்டம் அளிக்கும் நரம்புகள் கிளம்பும் அதே கூறிலிருந்து, இந்தப் பகுதிகளுக்கு நரம்பூட்டம் அளிக்கும் நரம்புகளும் கிளம்புவதால் இந்நிலை ஏற்படுகிறது. இதை சுட்டுவலி என்பார்கள். மார்பு வலி வைத்திய உதவியினாலேயோ இல்லாமல், சில மணி நேரங்களிலோ சில நாட்களிலோ குறைந்துவிடும். அனால் இது ஒரு மனக் கலக்கத்தையும், பயத்தையும் உண்டாக்கிவிடும். இது ஏற்படும் போது வியர்வை அளவிற்கு அதிகமாக ஏற்படும். உடல் வெளிறிப்போகும். வாந்தியும் ஏற்படலாம்.

எல்லாவித மார்புவலியையும் மாரடைப்பின் முன்னோடி என்றோ அறிகுறி என்றோ முடிவெடுக்கக் கூடாது. ''இரத்தம் ஊட்டம் தா'' என்று கேட்பதற்கு எழுந்த அழுகையொலி மட்டுமல்ல இந்த நெஞ்சுவலி, "இருதயத்தைப் பாதிக்கும் செயல்களை உடனே நிறுத்தி விடுங்கள்" என்று கேட்கும் கெஞ்சல் ஒலி, "டாக்டரிடம் காண்பித்து (இருதயத்தை) வலுப்படுத்தும் முயற்சியில் இன்றே இறங்குங்கள்" என்று கேட்கும் கட்டளைக் குரலும் கூட..

அடுத்து இருதய அதிர்ச்சி, மாரடைப்பின் அறிகுறி. முகம் வெளுத்துப் போதல், கை கால்கள் சில்லிட்டும் போதல், குறைவான இரத்த அழுத்தம், மெல்லிய வழுவிழந்த நாடித் துடிப்பு, குறைவான உடல்வெப்பம் முதலியன இருதய அதிர்ச்சியைச் சுட்டிக் காட்டும் அடையாளங்கள். மார்பு வலி அதிகமாக இருப்பதாலும் இருதய தசைக்கு இரத்த ஊட்டம் குறைந்து விடுவதாலும் அதிர்ச்சி ஏற்படுகிறது. வியர்வை அதிகமாகப் பெருகி வழிதோடும். இந்த நிலை அதிக நேரம் நீடித்தால் நோயாளி பிழைப்பது கடினம். உடனடியாகக் கவனித்துத் தகுந்த தீவிர சிகிச்சை அளித்தால் நோயாளி பிழைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. சிறுநீர் போகாததும் நுரையீரல் நீர்க் கோவையும் இருதய அதிர்ச்சியை மேலும் தூண்டிவிடும்.

நுரையீரல் செல்களில் அளவிற்கதிகமாக நீர் சேர்ந்து கொள்ளுவதே நுரையீரல் நீர்க்கோவை என்பது. மூச்சிரைப்பு நுரையீரலில் நீர்க்கோவை ஏற்பட்டுள்ளதை அறிவிக்கும் அறிகுறி. இடது வெண்ரிக்கிளின் விரிந்து சுருங்கும் தன்மையில் ஏற்படும் பாதிப்பு மிட்ரல் வால்வு குறுக்கம் முதலியன நுரையீரல் நீர்க்கோவை ஏற்படக் காரணமாகின்றன. இந்த நீர்க்கோவை இருதய அதிர்ச்சியை மேலும் தூண்டிவிடும். இருதயச் செயலிழப்பும் மாரடைப்பின் அறிகுறி மாரடைப்பிற்கும் இருதயச் செயலிழப்பிற்கும் வேறுபாடு உள்ளது. இருதயத் தமனிகளில் இரத்த ஓட்டம் தடைப்பட்டு இருதய தசையின் பகுதி ஊட்டம் இல்லாமல் வரண்டு உலர்ந்து போவது, அதன் விளைவாக இருதயப் பணி தடைப்படுவது மாரடைப்பு. அதிக வேலைப்பளு காரணமாகவோ, போதிய வலுவின்மை காரணமாகவோ இருதயம் தனது பணியைச் சரிவரச் செய்ய இயலாமல் போவது இருதயச் செயலிழப்பு அதாவது இருதயம் இரத்தத்தைப் பீச்சி அடிக்கும் தனது பணியை முழுதிறனுடன் செய்ய இயலாத நிலை, மூச்சுவிடுவதில் சிரமம், நுனி நீலம்பாய்தல், சரும நிறம் நீலமாதல் கணுக்காலில் வீக்கம், சிறுநீர் போகும் அளவு குறைதல் முதலியன இருதயச் செயலிழப்பின் அறிகுறிகள்.

நாடித்துடிப்பின் வேகம் அதிகரிக்கலாம். இதனால் இருதயம் துரிதமாக சுருங்கி விரிவதால் அதற்குப் போதுமான ஓய்வு கிடைப்பதில்லை. சில சமயம் மெதுவாகவும் நடைபெறும். சில சமயங்களில் முறைகெட்டுத் துடிக்க ஆரம்பிக்கும். அதாவது துடிப்பின்




லயநயத்தில் மாறுபாடுகள் ஏற்படும். திடீரென்று ஏற்படும் மயக்கமும் அளவிற்கதிகமான வியர்வையும் மாரடைப்பின் அறிகுறிகள்தான்.

மாரடைப்பின் பலவகையான அறிகுறிகள் பொதுவாக நோயாளிகளையும், அவர்களது உறவினர்களையும் ஒரு விதக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். அவர்களுக்கு எதனால் ஏற்படுகிறது என்றும் தெரியாது. என்ன செய்வதென்றும் புரியாது. சிலர் உடனே சோடா குடிப்பார்கள். சிலர் வெளிக்குப் போனால் சரியாகப் போய்விடும் என்று முக்கி முனகி வெளிக்குப் போக முயற்சி செய்வார்கள். வேறுசிலர் உடனே தேகப்பயிற்சி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். மற்றும் சிலர் மேலும் கீழுமாக நடைபயில்வார்கள். இந்தச் செயல்கள் இருதயத்தின் வேலைப்பளுவை மேலும் அதிகரிக்கும். மேலும் பல சிக்கல்களை உருவாக்கும்.

இம்மாதிரி அறிகுறிகள் தோன்றினால் உடனே டாக்டரை வரவழைத்துக் காண்பிப்பதுதான் சிறந்த வழி மட்டுமல்ல, ஒரே வழியும் கூட. மாரடைப்பினால் ஏற்படும் பல ஆரம்பச் சிக்கல்களை குறைக்கவும் முடியும். உயிருக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்க்கவும் முடியும்.

## அறிமுறைகள் - நோய் நிர்ணயம்

தற்போது மாரடைப்பிற்கான சிகிச்சை முறைகள் முன்காணிப்பு ஆகியவற்றில் வெகுவாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளன. மாரடைப்பு நோய் உள்ளவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளித்து மீண்டும் ஓரளவு பழைய நிலைக்குக் கொண்டு வருவதில் வெற்றியும் கண்டு வருகிறது, இன்றைய இருதய மருத்துவவியல் துறை.

மாரடைப்பு நோயில் முன்கணிப்பு செய்வது எளிதான காரியமல்ல. அறிகுறிகளும், அறிமுறைகளும் இப்பணியை எளிதாக்குகிறது. அறிகுறிகள் என்பது இத்தாக்குதலின் போது ஏற்பட்ட அனுபவங்களை, கஷ்டங்களை நோயாளிகள் கூறுவது, நோயின் வரலாறு, நோயாளியின் குடும்ப வரலாறு ஆகியவற்றை நோயாளியிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது, நோயாளியை நேரிடையாகப் பரிசோதித்துப் பார்ப்பது, பல கருவிகளின் துணையுடன் ஆய்வு செய்வது ஆய்வுக்கூட தேர்வாய்வு செய்வது முதலியன நோயின் தன்மையை முறையாக அறிந்து கொள்ளக்கடைபிடிக்கும் அறிமுறைகள்.

நோயாளியைக் கூர்ந்து நோக்கியும், நாடி பிடித்துப் பார்த்தும் உடலின் மார்பு, வயிற்றுப் பகுதியைத் தொட்டுப் பார்த்தும் தட்டிப் பார்த்தும் நோயின் தன்மைகளை டாக்டர்கள் ஓரளவு நிர்ணயம் செய்வார்கள். நாடித்துடிப்பு சாதாரணமாக ஒரு நிமிடத்திற்கு 72 வரை இருக்கும். இந்த நிலையில் நாடியின் எண்ணிக்கை 100 முதல் 120 வரை சில நேர்வுகளில் இருக்கும். வேறு சில நேர்வுகளில் நாடித்துடிப்பு மிகவும் குறைந்தும் விடலாம். நிமிடத்திற்கு 40 ஆக இருக்கலாம். துடிப்புகளும் ஒரே சீராக இல்லாமல் தாறுமாறாக இருப்பதுமுண்டு.

ஸ்டெதஸ்கோப்பின் மூலம் பரிசோதனை செய்யும்போது இருதய துடிப்பின் ஒலி குறைந்திருக்கும். மிகைத்துடிப்புகளும், வழக்கத்திற்கு மாறான ஒலிகளும் கேட்கும். இருதயம் உராய்வதினால் ஏற்படும் உராய்வொலியும் கேட்கும்.

ஸ்பிக்மோ மானோமீட்டர் எனும் இரத்த அழுத்தமானியின் உதவியுடன் இரத்த அழுத்தத்தை சோதிப்பார்கள். இருதய அதிர்ச்சி இருந்தால் அழுத்தம் குறைவாகக் காண்பிக்கும். தெர்மா மீட்டரின் உதவியுடன் உடல் வெப்பமும் கண்டறியப்படும். இருதய மின்னலை வரை படம் மூலம் இருதயப் பணியை கண்காணிப்பார்கள். மார்புவலி இல்லாதபோது இந்த வரைபடத்தில் எவ்வித மாறுதலும் இருக்காது. இருதய மின்னலை வரைபடம் மூலம் மாரடைப்பு நோய்ப் பற்றி முன்கணிப்பு செய்வது கடினம். மார்புவலி என்று சிகிச்சை எடுத்துக்கொண்ட பின்னரும் சிலருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மாரடைப்பின் போது இருதய மின்னலை வரைபடம் எடுக்கும் போதுதான் இரத்த ஓட்டத்தில் ஏற்பட்டுள்ள தடை மாறுதல்கள் அல்லது இரத்த ஓட்டத்தடை தெரியும்.

இரத்த ஊட்டம் எப்பகுதிக்கு கிடைக்கவில்லையோ இருதயத் தசையின் அப்பகுதியிலுள்ள திசுக்கள் இறந்துபோய் தழும்பு போலாகி விடுகிறது. சினோ ஏட்ரியல் கணு உருவாக்கும் மின்னலைகள் இருதயத் தசையில் பரவி சுருங்கலியக்கத்தைத் தூண்டுகின்றன என்பது



தெரியும். இந்த மின்னலைகள் தழும்பு போலுள்ள உயிரற்ற பகுதியில் பரவிச் செல்லாது. அப்பகுதிக்கு வரும்போது மின்னலைகள் தாறுமாறாகச் செல்லும். இந்தத் தாறுமாறான போக்கை மின்னலை வரைபடம் தெளிவாகக் காட்டிவிடும்.

ஆய்வகச் சோதனை செய்து பார்த்தும் நோயை நிர்ணயம் செய்வார்கள். ஆய்வகச் சோதனை என்பது இரத்தப் பரிசோதனை செய்து. மாரடைப்பு நோயுள்ளவர்களுக்குப் பல்தோற்ற துகளுடைய வெள்ளணுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். பல்தோற்ற துகளுடை வெள்ளணுக்கள் என்பது வெள்ளணுக்களில் ஒரு வகை. உடலிலுள்ள வெள்ளணுக்களில் 70 சதவீதம் இது உள்ளது.

சிவப்பணு படியும் விகித சோதனையும் இந்த ஆய்வில் ஒன்று. இரத்தத்தில் பிளாஸ்மா எனும் மஞ்சள், நிற புரத நீர்மம் உள்ளது. இரத்த அணுக்கள் எல்லாம் இதில்தான் படிந்துள்ளன. சிவப்பணுக்களின் அடர்த்தி எண் பிளாஸ்மாவைவிட அதிகம். இரத்தத்தை ஒரு குடுவையில் சேமித்து வைத்தால், அதிக அடர்த்தி கொண்ட சிவப்பணுக்கள் குடுவையின் அடியில் படிகின்றன. சாதாரண நிலையில் இது ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் தான் படியும். மாரடைப்பு நோயில் இந்த விகிதம் அதிகமாக இருக்கும்.

இரத்தத்தில் ஸீரம் எனும் வெளிறிய மஞ்சள் நிற நீர்மம் உள்ளது. இதில் சில நொதிகள் கலந்திருக்கும். இந்த நொதிகள் சாதாரண அளவைவிட அதிகமாயிருக்கும். இருதயத் தசைகளிலுள்ள நொதிகள் வேதியியல் வினைச் செயல்களில் வினையூக்கிகளாகச் செயல்படுகின்றன. உயிரற்ற தசைத் திசுக்கள் வெளியிடும் நொதிகள் இரத்தவோட்டத்தில் கலக்கின்றன. இரத்த ஸீரத்தில் நொதிகளின் அளவையும் அதிகரிக்கின்றன.

தவிர நோய்கணிப்பிற்கு வேறுபல உத்திகளையும் கடைபிடிக்கிறார்கள். அவைகள், உட்புகா, ஆய்வு உத்திகள்(Non Invasive Techniques) உட்புகு ஆய்வு உத்திகள் (Invasive) என்பன. உட்புகா ஆய்வு உத்திகளின் மூலம் எத்தகைய நோயாளிகளுக்கும் உட்புகு ஆய்வு உத்திகள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே நிர்ணயிக்கிறார்கள். உட்புகா உத்தி என்பது உடலின் வெளியிலிருந்து உட்புற நிலைகளை வரைபட திரைப்பட ஊடு கதிர் ஒளிப்பட முறைகளில் கண்காணித்து ஆய்வறுதி செய்தல்.

பரவலாக கடைப்பிடிக்கும் உட்புகா ஆய்வு முறைகள்:

1. உடற்பயிற்சி செய்கையில் தேர்வு நோட்டமிடுதல்.
2. கதிரியக்க ஐஸோடோப்புகள் மூலம் உருவச்சாயல்.
3. இரு பரிமாண இருதய எதிரொலி வரைபடம்
4. 24 மணி நேரத் தொடர் – இருதய மின்னலை வரைபட பதிவு (ஹோல்ட்டர்–மானிட்டரிங்) முதலியன.

நோயாளியை சில எளிய உடற்பயிற்சிகள் செய்யச் சொல்லிவிட்டு இருதய மின்னலை வரைபடம் (ஈ.சி.ஜி.) மூலம் இருதய பணித்திறனைக் கணிப்பது உடற்பயிற்சியின் போது தேர்வு நோட்டமிடும் முறை பயிற்சியின் போது ஈ.சி.ஜி.கோடிட்டுக் காண்பிக்கும் 12 முனைப்புகளையும் ஒரே சமயத்தில் பதிவு செய்து பகுப்பாய்வு செய்ய தற்போது கம்யூட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளுறை இருதய தமனி நோய், அதன் வளர்ச்சி நிலை, மருந்து மூலம் குணப்படுத்த இயலுமா அல்லது அறுவை சிகிச்சையால் தான் குணப்படுத்த முடியுமா என்பது. இருதய நோயாளியின் புனர்வாழ்வு நிகழ்ச்சி முறையைக் கண்காணிப்பது முதலியவற்றை கணிக்க இந்தத் தாங்கறுதி ஆய்வு செய்யப்படுகிறது. எனினும் இம்முறையில் இருதய நோய்களில் சில வகைகளைத்தான் கணிக்க முடியும்.

செயற்பயிற்சியின் போது ஏற்பட்ட இரத்த ஓட்ட தடைமாறுதல் இருதயத் தமனி நோயின் தன்மையை விளக்கும். தாங்கறுதி ஆய்வில் உறுதி செய்யப்பட்ட தடைமாறுதல் நிகழ்வுகள் இருதயத் தமனி நோயின் தீவிரத்தைக் காட்டும்.

கதிரியக்க ஐஸோடோப்புகள் மூலம் உருவச் சாயல் பெற்று ஆய்வு செய்யும் முறை சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதியமுறை. இம்முறையின் மூலம்,

1. இடது வெண்ரிக்கிளின் செயல்தன்மை,
2. தசையின் பரவவிடு தன்மை – ஆகிய இரு தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இடது வெண்ரிக்கிளின் பணித்திறனை மூகா (Muga) அலகீட்டின் மூலம் கணிப்பதுண்டு. மல்ட்டிப்பிள் அப்டேக் கேட்டட் அக்யூசிஷன் ஸ்கான் (Multiple Uptake Gated Acquisition Scan) என்பதின் சுருக்கமே மூகா அலகீடு. டெக்னிஷியம் என்பது ஒரு தனிமம். இதனுடைய கதிரியக்க ஐஸோடோப்பின் மூலம் இரத்தச் சிவப்பணுக்கள் குறியிடப்படும். இவ்வாறு குறியிடப்பட்ட சிவப்பணுக்களுடன் இரத்த ஓட்டம் நடைபெறுவதை காமா ஒளிப்படக் கருவி (Gama Camera) மூலம் படமெடுத்து பகுப்பாய்வு செய்து பார்ப்பார்கள். எளிய உடற்பயிற்சி செய்யும்போது எடுக்கப்படும் படத்தில் நல்ல நிலையிலுள்ள இடது வெண்ரிக்கிள் வெளியேற்றும் இரத்த வீதம் அதிகமாக இருக்கும், இடது வெண்ரிக்கிளில் பாதிப்பு இருந்தால் அதாவது இரத்த வோட்ட தடை மாறுதல் இருந்தால் வெளியேற்றும் வீதம் குறைவாக இருக்கும்.

தசைகளின் தன்மைபற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள கதிரியக்க தால்லியம் ஐஸோடோப்பு அலகீடு முறை பயன்படுத்தப்படுகிறது. தால்லியம் இருதயத் தசையில் (மையோ கார்டியம்) நன்கு பரவக் கூடிய பகுதியில் விரைவில் பரவிவிடும். நோயாளியை உடற் பயிற்சி செய்யச் சொல்லிவிட்டு உச்ச கட்டத்தில் ஊசி மூலம் தால்லியத்தை உடலில் செலுத்துவார்கள். இடது வெண்ரிக்கிள் தசைப்பகுதியில். இப்பயிற்சியின் போது ஏதாவது ஒரு பகுதியில் இரத்தம் செல்லுவதில் தடை ஏற்பட்டால் அப்பகுதியில் தால்லியம் பரவிச் செல்லாது.

அலகீட்டில் அப்பகுதி தண்புள்ளியாகத் தெரியும். இரத்த ஓட்டத் தடை ஏற்பட்ட இடது வெண்ரிக்கிளின் தசைப் பகுதியின் பரவவிடு தன்மை ஒய்வு நிலையில் சீர்பெறுகிறது. அப்போது தால்லியம் இப்பகுதியில் (தணபுள்ளி) நுழைந்து பரவுகிறது. பாஸிட்ரான் உமிழ் ஊடுகதிர் உள்தள அலகீட்டுக் கருவி (Positron Emission Tomographic) மூலமும் இதைத் தெரிந்து கொள்வதுண்டு. நம் நாட்டில் பெருவாரியாகக் கையாளப்படுவது உடல் பயிற்சியின் போது மூகா அலகீட்டின் உதவியுடன் கண்காணிக்கும் முறைதான்.

இருபரிமாண இருதய எதிரொலி வரைபடம், இருதயத்தில் ஏற்பட்டுள்ள பலவகை நோய்களை விளக்கமாகக் காட்ட உதவும் ஒரு கருவி. இடது வெண்ரிக்கிளின் செயல்திறனை அறிந்து கொள்ளவும், இதைப் பயன்படுத்துவதுண்டு. இருதய தசையின் சுருங்கலியக்கம், சுணக்கம் ஏற்பட்டுள்ள பகுதிகள் முதலியன இதில் தெளிவாகத் தெரியும். இருதயத் தமனிகளில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ள பகுதி இருதய வால்வுகளின் நிலை, இடது வலது இருதய தமனி நாளங்களின் நிலை ஆகியவற்றை இதன் மூலம் கண்டறியலாம்.

ஹோல்ட்டர் மானிட்டரிங் இருதய டெலிமெட்ரி போன்ற உத்திகளும் இருதய நோய்களை நிர்ணயம் செய்ய கடைபிடிப்பதுண்டு. நெஞ்சுவலி, சீர்கெட்ட இருதயத் துடிப்பு, மூச்சிறைப்பு முதலான நோய்களைக் கணிக்க இந்த உத்திகள் பெருமளவு பயன்படுகிறது. மாரடைப்பு நோயாளிகளிடம் சிகிச்சைக்குப் பின் ஏற்படும் அபிவிருத்திகளைத் தொடர்ந்து கண் காணிக்க இம்முறை பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது.

நோயின் தன்மை, சோதிக்கும் போதுள்ள நிலை, சிகிச்சை செய்யும்போது ஏற்படும் அபிவிருத்தி, எந்த அளவு முன்னிருந்த நிலை திரும்பும் என்றெல்லாம் கணிக்க, கண்காணிக்க மேற்கூறிய தேர்வாய்வு முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

உட்பகுதி ஆய்வு உத்திகளில் மிக முக்கியமாக பயன்படுத்தப்படும் முறை இருதய தமனி வரைபட முறை. எக்ஸ் கதிர்கள் ஊடுருவா தன்மையுடைய பாய்மத்தை ஊசி மூலம் இருதய அறைகளில் செலுத்திவிட்டு எக்ஸ்ரே கருவிமூலம் படம் எடுத்துப் பார்ப்பது இந்த முறை. அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலையிலுள்ளதா மருந்தின் மூலமே குணப்படுத்திவிட முடியுமா பின்னால் இதன் நிலை எப்படியிருக்கும் என்றெல்லாம் நிர்ணயம் செய்யவும் முன்கணிப்புச் செய்யவும் இருதய தமனி வரை படம் பெரிதும் உதவுகிறது.

இருதயமே ஒரு புதிர்! இருதய நோய்கள் அதைவிடப் பெரும்புதிர்! மாரடைப்பு புதிர் மட்டுமல்ல – ஒருவகை உள்பயத்தையும் உண்டாக்கும் நோய் என்ற நிலை பல ஆண்டுகளுக்கு முன் வரை இருந்து வந்தது. இன்று இருதய இயல் வல்லுநர்கள் கடைப்பிடிக்கும் உத்திகள், நோய் நிர்ணய முறைகள் முன்கணிப்பு, இருதயத்தை வளமுடன் வைத்திருக்க அவர்கள் கூறும் வழிமுறைகள் இந்நிலையை வெகுவாக மாற்றி வருகிறது.

**சிகிச்சை**

அறிகுறிகள், அறிமுறைகள் மூலமாக நோயைப்பற்றி நிர்ணயம் செய்துவிட்டு உடனடியாக சிகிச்சை முறைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுவார்கள். இருதய இயல் வல்லுநர்கள். தீவிர சிகிச்சைப் பிரிவில் (Intensive Care Unit) மாரடைப்பு நோயாளிகளை தங்க வைத்து மருத்துவம் செய்ய ஆரம்பிப்பார்கள். சிகிச்சையின் பலனைத் தொடர்ந்து கண்காணித்தும் வருவார்கள்.



இருதய இயல் சிகிச்சைப் பிரிவில் எந்தவித அவசரத் தேவைக்கும் உதவும் கருவிகள் உள்ளன. செயற்கை இருதயத் துடிப்பு நிர்மாணி (Artificial Pacemaker) இருதய செயல் கண்காணிப்புக்கருவி, அலகீட்டுக் கருவிகள், முக்கியமான மருந்து வகைகள், ஆக்ஸிஜன் சிலிண்டர் முதலானவை உடனடி சிகிச்சை அளிக்கும் வகையில் தயாராக இருக்கும்.



சிகிச்சையில் மிக மிக முக்கியமானது, நோயாளிக்குப் போதிய ஒய்வு கொடுப்பதுதான். முழு உடல் ஓய்வு இருதயத்தின் வேலைப் பளுவை வெகுவாகக் குறைக்கும். ஓய்வுகால அளவு நோயாளிக்கு நோயாளி மாறுபடும். ஒரு சில வாரங்கள் ஓய்வு போதுமானது என்பது இன்றைய பொதுவான கருத்து.

மாரடைப்பு நோயாளிக்கு உடல் ஓய்வுடன் மன ஓய்வும் அவசியம். அவர்களது மன கலவரத்தைக் குறைக்க வேண்டும். உற்சாகப் படுத்தி முழுநம்பிக்கை ஊட்ட வேண்டும். மருந்துகள் தீர்க்கும் நோயின் அளவு பாதிப் பங்கு என்றால் நம்பிக்கை தீர்ப்பது மீதிப்பங்கு.

மாரடைப்பு ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் இருதய தமனிகளில் ஏற்படும் அடைப்பு. இந்த அடைப்பு அந்த நாளங்களில் இரத்தம் உறைந்து கட்டியாகி இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதுதான். இப்போது இந்த அடிப்படைக் காரணியையே களைவதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஊசி மூலம் நேரிடையாக இரத்த நாளங்களில் செலுத்தப்படும் இந்த மருந்துகள் இரத்த உறைகட்டிகளைத் தகர்த்து இரத்த ஓட்டத்திற்கு வழி வகுத்துக் கொடுக்கின்றன. மரபின் புனை திறயியல் (Genetic Engineering) இரத்த உறை எதிர் மருந்துகள் உற்பத்தி செய்யும் "பாக்டீரியா தொழிலகம்" முதலாக பல புதிய உத்திகளும் மாரடைப்பிற்கு எதிராக இப்போது கடைபிடிக்கப்படுகின்றன.

ஆஞ்சியோ பிளாஸ்டி, மாற்று வழி அமைப்பு, போன்ற சிகிச்சை முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இருதய தமனி வரைபடம் மூலம் எந்தப் பகுதியில் அடைப்பு ஏற்பட்டுள்ளது என்று கண்டுபிடித்து அடைப்பின் தன்மைக் கேற்ப சிகிச்சை முறைகள் கையாளப்படும். லேஸர் மூலம் அடைப்பை அகற்றும் முறையும் கையாளப்படுகிறது. அடைப்பின் தன்மை அகற்றக் கூடியதாக இருந்தால் ஆஞ்சியோ பிளாஸ்டி முறை சிகிச்சை அளிக்கப்படுகிறது. இல்லாவிடில் ஒட்டுச்சினை செருகி மாற்றுவழி அமைக்கும் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

ஆஞ்சியோ பிளாஸ்டி முறையில் கதீட்டர் எனும் நுண் செருகு குழல் அடைப்பு ஏற்பட்டுள்ள இருதய தமனி வரை செலுத்தப்படும். அந்தக் குழலின் முனையில் பலூன் போல் விரியக் கூடிய ஒரு குமிழமைப்பு இருக்கும். அடைப்புள்ள பகுதியை இக் குழல் சென்றடைந்ததும் பலூன் போலுள்ள குமிழமைப்பை விரிவடையும்படி செய்யப்படும். விரியும் குமிழமைப்பு அப்பகுதியிலுள்ள படர் காய்ப்பை தமனியின் உட்சுவருடன் சேர்த்து அழுத்தி இரத்த ஓட்டம் செல்லும் பாதையை விரிவுபடுத்துகிறது. இந்த முறைக்கு பலூன் ஆஞ்சியோ பிளாஸ்டி என்று பெயர். லேஸர் ஆங்கியோ பிளாஸ்டியில் லேஸர் கற்றைகள் அடைப்பைத் துளைத்துக் கொண்டு சென்று இரத்த ஓட்டம் தடையில்லாமல் செல்ல வழி வகுக்கிறது.

தமனியில் அடைப்பு கடுமையாக இருந்தால் ஒட்டுச்சினை செருகி மாற்றுவழி அமைக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படும். நோயாளியின் கால் பகுதியிலிருந்து சிரைநாளத் துண்டு ஒன்றை எடுத்து ஒரு முனையை மகாதமனியில் பொருத்தி, இன்னொரு முனையை இருதய தமனியில் அடைப்பு இல்லாத பகுதியில் செருகி பொருத்தி விடும் முறை இது. அதாவது இருதய தமனியில் அடைப்பு ஏற்பட்டுள்ள பகுதியைத் தவிர்த்து விட்டு அதற்கடுத்த அடைப்பு இல்லாத பகுதியில் ஒட்டு நாளத்தை செருகிவிடுதல். இதனால் இரத்த ஓட்டம் தங்கு தடையில்லாமல் மாற்று வழியாகப் பாய்ந்து மீண்டும் இருதயத் தமனியில் அடைப்பு இல்லாத பகுதியின் வழியாக இருதயத்தில் இரத்த ஊட்டம் தேவைப்படும் பகுதிக்குச் செல்லுகிறது. இன்னொரு வகையில், விலா எலும்பின் முன்முனைக்குப் பின்னால் செல்லும் தமனி நாளத்தின் வழியை அறுவை சிகிச்சை மூலம் ஒட்டுச் சினைமாற்று வழியாகத் திருத்தி அமைத்து விடுவது இத்தகைய சிகிச்சைகள் இப்போது சர்வ சாதாரணமாக வெற்றிகரமாகச் செய்யப்படுகிறது.

எனினும் எப்போதும் ஒன்றைமட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தவித சிகிச்சை முறையானாலும் சரி அதன் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பது நோயாளியின் முழு ஒத்துழைப்புதான். நோயின் அறிகுறிகள் தெரிந்தாலும் அதை அலட்சியப் படுத்துவது பெரும்பாலானவர்களின் மனப்போக்கு, நெஞ்சுவலி, உறுத்தல், விரல்நுனிகள் மரத்துப் போதல், வாந்தி உணர்வு, மிதமிஞ்சிய வியர்வை முதலான அறிகுறிகளுக்கெல்லாம் தற்காலிகமான கை வைத்தியம் செய்து கொண்டு நோயைமுற்ற வைத்துக் கொள்வது இருதய நோய் சிகிச்சையின் வெற்றி வாய்ப்பைப் பெரிதும் பாதிக்கக் கூடியவை. சிறு சந்தேகம் இருந்தாலும் சரி உடனடியாக டாக்டரை அணுகினால் அல்லது மருத்துவ மனைக்குச் செல்வதால் மருந்தின் மூலமே தீர்க்கக் கூடிய இருதய நோய்களுக்கு அறுவை சிகிச்சை வரை போக வேண்டிய நிலை ஏற்படாது.

மாரடைப்பு ஒரு பயங்கர அனுபவம் சிகிச்சைக்குப் பின்னும் நோயாளிகளுக்கு ஒருவித உள்பயம் இருந்து கொண்டிருக்கும், இந்த உள் பயத்தை அகற்றவேண்டும், அதே சமயம் முந்திய தன்னிலைக்குக் கொண்டுவரும் எளிய பயிற்சி நிகழ்ச்சிகள், படிப்படியாக அமைத்து அவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்.இடர்தரு காரணிகளைக் கட்டுப் படுத்துவது. இருதயத்தை வலுப்படுத்துவது, நோயாளியின் உள்பயத்தை நீக்கி தன்னம்பிக்கை ஊட்டுவது முதலியன மாரடைப்பு மீண்டும் ஏற்படாமலிருக்கக் கடைபிடிக்க வேண்டிய வழிகளாகும்,

**வருமுன் தடுத்தல்**

மாரடைப்பு ஏற்படாமல் தடுக்க வழி இல்லையா ? என்று ஆவலுடன் கேட்டார் ஒருவர். 'மூன்று வழிகள் உள்ளன' என்றார் ஒரு டாக்டர். அந்த வழிகள் என்னென்ன என்று கேட்டபோது அவர்கூறிய பதில்

1. வருமுன் தடுத்தல்.
2. வருமுன் தடுத்தல்.
3. வருமுன் தடுத்தல்.

என்பதுதான். எளிய வழிகள் தான். ஆனால் உண்மையான நிலை விளக்கம்.

மாரடைப்பு ஏற்படுவதற்கு மரபுக் கீற்றில் கறைபாடுதான் காரணம் என்று கருதுகிறார்கள். இந்த அடிப்படை குறைபாடைத் தீர்ப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படாமல் தடுத்து விடலாம் என்பது இருதயயியல் வல்லுனர்களின் கருத்து. அதற்கான முயற்சியில் வெற்றி பெறும் வரை, மாரடைப்பின் பிடியிலிருந்து தப்பிக்க நமக்கு இருக்கும் ஒரே வழி "வருமுன் தடுத்தல்" தான்.

வருமுன் தடுத்தல் என்பது இடர்தரு காரணிகளைக் கட்டுப்படுத்துவது அல்லது தவிர்ப்பது. புகைபிடிப்பது ஒரு முக்கிய காரணி. இதிலுள்ள நிகோடின் இரத்தத்திலுள்ள தட்டணுக்களின் ஒட்டும் தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. இரத்தத்திலுள்ள கொழுப்பின் அளவையும் உயர்த்துகிறது. இந்தப் பழக்கத்தை அடியோடு நிறுத்திவிட வேண்டும். குடிப்பழக்கத்தையும் நிறுத்திவிட வேண்டும்.

வயதிற்கேற்ப உணவு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். கொலெஸ்டெராலின் அளவை உண்ணும் உணவின் மூலமும் குறைக்க முடியும். மருந்தின் மூலமும் குறைக்கலாம். தானிய வகைகள், காய்கறிகள், பழங்கள், பயற்றங்காய் வகை காய்கறிகள் முதலியன கொலெஸ்ட்டரால் அளவைக் குறைக்கின்றன. குறிப்பாக இவைகளிலுள்ள நார்ப் பொருள்கள் ஜீரணமாவதில்லை. அவைகள் கொலெஸ்டெராலை கவர்ந்திழுத்துக் கொண்டு வெளியேறுகின்றன. காய்கறிகளிலுள்ள நார்ப் பொருளைவிட தானியங்களிலுள்ள நார்ப் பொருளுக்கு இந்தத் திறன் அதிகம். உண்ணும் உணவின் மூலம் கொலெஸ்ட்ரால் அளவைக் குறைக்க முடியாத நிலையில் மருந்துகளின் உதவியை நாடலாம்.

உணவில் கட்டுப்படுத்திக் கொள்வது அல்லது தவிர்ப்பது நல்லது.

1. கொழுப்பு உணவுகள், உறையும் தன்மை கொண்ட எண்ணெய் வகைகள், அதிகமாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. பொரித்த உணவு வகைகள், வறுத்த உணவு வகைகளைக் குறைப்பது தவிர்ப்பது நல்லது.
2. சர்க்கரை மற்றும் இனிப்பு வகைகள்
3. கொலெஸ்ட்டரால் அளவை அதிகரிக்கும் உணவுப் பொருள்
4. உப்பு—குறிப்பாக ஊறுகாய் வகைகள்
5. குடி
6 காப்பி, காஃபின் அடங்கிய பானங்கள், குளிர்பானங்கள் முதலியன.

அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியவை.

1. எல்லாவிதமாக தானிய வகைகள் கைக்குத்தல் அரிசி, பார்லி, கோதுமை, தினை, பருப்பு, புல்லரிசி.
2. கிழங்கு வகைகள், பயற்றங்காய் வகைகள் உருளைக்கிழங்கு, சர்க்கரைவெள்ளிக்கிழங்கு, அவரை, பீன்ஸ், பட்டாணி.
3. பழங்களும், காய்கறி வகைகளும்.
4. குறைந்தது ஒரு நாளைக்கு 6 முதல் 8 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.
5. காலை உணவு மிக முக்கியம், எந்தக் காரணத்தைக் கொண்டும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.

வேலை, ஓய்வு, எளிய உடற்பயிற்சி குறிப்பிட்ட இடைவெளி விட்டு உணவு உண்ணுதல், குறைந்தது அரைமணி நேரமாவது நடத்தல், நல்ல பழக்க வழக்கங்கள் மாரடைப்பு ஏற்படாமல் தடுக்கும் சாதனங்கள். தினமும் ஒரு ஆஸ்ப்பிரின் சாப்பிட்டால் மாரடைப்பு விலகிப் போகும் என்று ஒரு புதுமொழி கூறப்படுகிறது. இக்கருத்தை "நியு இங்கிலாந்து ஜெர்னல் ஆப் மெடிசின்" என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒரு அறிக்கையும் வலியுறுத்துகிறது. இரத்த நாளத்தில் இரத்த உறைகட்டி ஏற்படுவதைத் தவிர்க்கிறது ஆஸ்ப்பிரின். இரத்தத்திலுள்ள தட்டணுக்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கட்டியாகிறது. அவ்வாறு ஒட்டிக் கொள்ளாமல் தடுக்கிறது ஆஸ்ப்பிரின். எனினும் இதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

ஆஸ்ப்பிரின் இரத்த உறைவைத் தவிர்க்கிறது அல்லது தாமதப்படுத்துகிறது. எனவே இருதய நோய்களுக்கு எல்லாம் இது ஒரு அனைத்துநோய் மருந்தாகத் கருதமுடியாது, வருமுன் தடுக்கும் வழிகளில் ஒன்றாக இதைச்சேர்த்துக் கொள்ளவும் முடியாது. மாரடைப்பு முதலான இருதய நோய்கள் வராமல் பார்த்துக் கொள்வது. காலத்திற்கு முன்னாலேயே கிழட்டுத் தன்மை அடையாமலிருப்பது. இருதயத்தை நல்ல நிலையில் வலுவுடன் வைத்துக் கொள்வது, வயதானாலும் உடல்வலுவுடனும் நலத்துடனும் இருப்பது எல்லாமே அவரவர்களின் கையில்தான் உள்ளது.

டாக்டர்கள், மருத்துவமனை, மருந்து வகைகள் நவீன மருத்துவக் கருவிகள் முதலியன நமது உடல்நலத்தை மீட்டுத்தரலாம். ஆனால் அவைகளுக்கு அந்த வாய்ப்பையே கொடுக்காமலிருப்பது, அதாவது நமது உடல் நலத்தை எப்போதும் பேணிப் பாதுகாப்பது நமது கையில்தான்.

*-- "உடலியல் கலைக் களஞ்சியம்"*
*பகுதி–5*
*வெளியீடு : அல்லயன்ஸ்* •



# கல்லூரிகளில் கணினி அறிவியல் அறிமுகப்படுத்தும் திட்டம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் தொடக்கவிழா கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் 1.12.2000 அன்று சென்னை மாநிலக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழகத்திலுள்ள 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 30 ஆயிரம் மாணவ–மாணவிகள் கணிப்பொறி அறிவை ஆண்டுதோறும் பெறும் உயர்ந்த நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய திட்டத்தினை தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாநிலக் கல்லூரியின் கணிப்பொறி மையத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்தவைத்து கணினியை இயக்கி வைத்தார்.

இத்திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் பொருட்டு முதற்கட்டமாக மாநிலக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயிலும் செல்வி சத்யா, சைலஜா, புலோரன்ஸ் பிரேமா தேவி, சடகோபன், ஜெகதீசன் ஆகியோர்க்கு இப்பாடத் திட்டத்திற்கான பயிற்சிப் புத்தகத்தினை முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

## முதல்கட்டமாக ரூ.1.5 கோடி

மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிட் (NIIT), ரவி சங்கர் சிஸ்டம்ஸ் மற்றும் எஸ்.ஆர்.எம். சிஸ்டம்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு முதற்கட்ட மாக 1.5 கோடி ரூபாய்க்கான காசோலையை தமிழக அரசின் நிறுவனமான மின் அணு கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஞானதேசிகனிடம் இந்த விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார். இந்தத் தொகை மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

## திட்டத்தின் சிறப்பம்சங்கள்

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாததாகி விட்டது. கணினி மற்றும் இணைய பயன்பாட்டின் அறிவு பெறாத மாணவர்கள் வேலை வாய்ப்பு சந்தையில் தனித்து விடப்படும் நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். 21–ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள இத்தருணத்தில் கணினி மற்றும் இணைய கல்வியினை அனைத்து இளங்கலை பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வழங்குவது அரசின் குறிக்கோள்களில் ஒன்றாகும் என அரசு கருதுகிறது. எனவே, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் பயிலாத மாணவ, மாணவியர் அனைவருக்கும் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தும் திட்டத்தினை முதற் கட்டமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர் களுக்கு கணினி மற்றும் இணைய பயன்பாட்டினை அறிமுகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இரண்டாம் ஆண்டு பட்ட வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும். அதே நேரத்தில் மூன்றாம் ஆண்டு மற்றும் நிறைநிலை பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்களும் இப்பயிற்சித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுவர். நடப்பாண்டில் இதுவரை இப்பயிற்சித் திட்டத்தில் 25,178 மாணவ, மாணவியர் சேர்ந்துள்ளனர். இம் மாணவர்களின் இனவாரியான விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 6,620 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 5,917 |
| பிற்படுத்தப்பட்டோர் | 11,204 |
| பிறவகுப்பினர் | 1,437 |



இப்பயிற்சிக்கான காலம் ஓராண் டாகும். இப்பயிற்சி பல்கலைக்கழக கல்வி வரம்பிற்கு அப்பாற்பட்டு அளிக்கப்படும். பயிற்சியில் சேரும் ஒவ்வொரு மாணவருக்கும் நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் வீதம் வாரத்தில் ஐந்து மணி நேர பயிற்சி அளிக்கப்படும். இந்த ஐந்து மணி நேர பயிற்சி இரண்டு மணி நேர கருத்தியல் போதனையாகவும், மூன்று மணி நேர செய்முறைப் பயிற்சியாகவும் வழங்கப்படும். ஒவ்வொரு மாணவருக்கும் 10 மணி நேர இணையப் பயிற்சி உட்பட 150 மணி நேரத்திற்குக் குறையாமல் இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்படும். இந்த 150 மணி நேர பயிற்சியில் 60 மணி நேர கருத்தியல் போதனையும் 90 மணி நேர செய்முறை பயிற்சியும் அளிக்கப்படும். ஒவ்வொரு மாணவருக்கும் செய்முறை பயிற்சிக்கென தனித்தனியே ஒரு கணிப்பொறி வழங்கப்படும் என்பது இத்திட்டத்தின் சீரிய அம்சமாகும்.



**அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணம் மிகவும் குறைவானது**

பயிற்சிக்கென கட்டணமாக ரூ.2,000 ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் வசூலிக்கப்படும். இக்கட்டணத்தை நான்கு தவணைகளிலும் செலுத்தலாம். தனியார் கணினி பயிற்சி நிறுவனங்களில் இதே போன்று பயிற்சிக்கு ரூ.15,000 முதல் ரூ.25,000 வரை கட்டணம் வசூலிக்கப்படுவதை ஒப்பு நோக்குகையில் அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணம் மிகவும் குறைவானதாகும்.

இத்திட்டத்தை அரசு கல்லூரிகளில் செயல்படுத்த தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்தை முகமை நிறுவனமாக அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்று சிறந்த தனியார் கணினி பயிற்சி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை, NIIT நிறுவனம் 48 அரசு கல்லூரிகளிலும், சென்னை எஸ்.ஆர்.எம்.சிஸ்டம்ஸ் நிறுவனம் 3 அரசு கல்லூரிகளிலும் கோயம்புத்தூர் ரவிச்சந்திரா சிஸ்டம்ஸ் நிறுவனம் 9 அரசு கல்லூரிகளிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளன. இந்நிறுவனங்கள் அவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கல்லூரிகளில் கணிப்பொறி மற்றும் இதர உபகரணங்களை நிறுவி எம்.சி.ஏ./எம்.எஸ்.சி.(கணினி அறிவியல்)/பி.ஈ. (கணினி பொறியியல்) பட்டம் பெற்ற பயிற்சியாளர்களையும் நியமித்துள்ளன.

மேற்கண்ட நிறுவனங்களே உபகரணங்களைப் பராமரித்தல், பயிற்சிக்கான புத்தகங்கள் வழங்குதல், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் எழுதுபொருள் கட்டணம் போன்ற செலவினங்களை மேற்கொள்ளும். ஐந்தாவது ஆண்டின் இறுதியில் கல்லூரியின் கணினி மையங்களில் உள்ள கணிப்பொறி மற்றும் உபகரணங்களோடு இணைந்த கட்டமைப்பு வசதிகள் அந்தந்த கல்லூரிகளின் உரிமையாகிவிடும். இவ்விதம் பயிற்சி அளிப்பதில் அரசுக்கு எவ்வித மூலதன செலவினமும் இல்லை. வருவாய் செலவினமாக காலாண்டுக்கு ஒருமுறை குத்தகை தொகை செலுத்துவது மாத்திரமே அரசால் மேற்கொள்ளப்படும்.

**முதல்வர் உரை**

திட்டத்தினை தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :

"இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகம் கணினித் துறையிலே முன்னணியில் இருக்கின்றது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். மேலும் இதனை ஊக்குவிப்பதற்கும், மாணவர்களிடையே பரப்புவதற்கும் அரசு எடுத்துள்ள முயற்சியிலே ஒரு கட்டம்தான் இன்றைய நிகழ்ச்சி என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதற்கு முன்பு +2 வரையிலே கணினிப் பயிற்சியை கடந்த ஆண்டு இந்த அரசு தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பொழுது அரசு கல்லூரிகளில் இந்த முயற்சி தொடங்கப்பட்டிருக்கின்றது. இது கணினி யுகம். இந்த கணினி யுகத்தோடு சேர்ந்து நாமும் நடைபோட வேண்டும் என்பதிலே ஊக்கம் கொண்ட இந்த அரசு உங்களுடைய ஒத்துழைப்போடு இந்த முயற்சியை தொடங்கியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு உங்கள் நல்லாதரவு என்றும் தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்"

★ ★ ★



# கரூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்தியத் துணைக்கண்டத்தில் முன்னோடி திட்டமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் போன்ற அடிப்படை வசதிகளை ஊரகப் பகுதியில் மேம்படுத்தும் திட்டங்கள் 1997–98–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.950.06 இலட்சம் செலவில் 1,121 பணிகள் 11 ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டன.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.581.39 இலட்சம் செலவில் 234 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 100% முழுப்பங்குத் தொகையாக ரூ.300.54 இலட்சமும் பகுதி பங்குத் தொகையாக ரூ.97.29 இலட்சமும் ஆக ரூ.397.836 இலட்சம் பொதுமக்கள் பங்கு ரொக்கமாகவும், பொருளாகவும், உழைப்பாகவும் வழங்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.252.90 இலட்சம் செலவில் 254 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதுபோன்று அனைத்து சமுதாயத்தினரும் சாதிமத வேறுபாடு இன்றி ஒற்றுமையுடன் வாழ சமத்துவபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 4 சமத்துவ புரங்கள் ரூ.352.59 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 400 வீடுகளுடன் உருவாக்கப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.252.90 இலட்சம் செலவில் 213 பணிகள் நடைபெற்றுள்ளன.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.884.63 இலட்சம் செலவில் 3,215 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் 536 புதுப்பித்தல் மற்றும் பழுது சரிபார்த்தல் பணிகளுக்காக ரூ.41.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1355.66 இலட்சம் செலவில் 868 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.87.32 இலட்சம் செலவில் 127 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.334.59 இலட்சம் செலவில் 7,284 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மில்லியன் கிணறு திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 260 பணிகள் ரூ.184.31 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.



குறைந்தபட்ச அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 125 பணிகள் ரூ.39.80 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1999–2000 நிதியாண்டில் 95 சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.159.17 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. தனி நபர் மானியமாக 84 குழு உறுப்பினர்களுக்கு ரூ.6.66 இலட்சமும் உள் கட்டமைப்பு வசதிக்கான 27 பணிகள் மேற்கொள்ளக் குழு மானியமாக ரூ.59.40 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.



ஊரகப்பகுதிகளில் இளைஞர்கள் நல்ல உடல்வளம், மனவளத்துடன் ஆரோக்கியமாக வாழ 80 ஊரக விளையாட்டு மற்றும் பொழுது போக்கு மையங்கள் கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு தொடங்க திட்டமிட்டு 15.6.2000 முடிய 26 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**பிற்பட்டோர் நலத்துறை**

மாவட்ட பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 11,663 நபர்களுக்கு ரூ.170 இலட்சம் செலவில் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 37,110 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.85 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1,489 மாணவ மாணவியருக்கு சீருடைகளும், 1,100 நபர்களுக்கு சலவைப் பெட்டிகளும், 260 நபர்களுக்கு சவரக் கருவிகளும், 200 நபர்களுக்கு போயர் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணா நினைவுப்பரிசு, மாவட்ட அளவிலான பரிசு ஆகியவை 37 நபர்களுக்கு ரூ.52,300 செலவில் வழங்கப்பட்டுள்ளன. சலவைக்கடை மானியக்கடன், சவரக்கடை மானியக்கடன், நடமாடும் சலவையகம் மானியக்கடன் ஆகியவை 32 நபர்களுக்கு ரூ.44,400 வழங்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிட நலத்துறை**

மாவட்ட ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் 97–98, 98–99, 99–2000 ஆண்டுகளில் இலவச வீட்டுமனைப் பட்டா 8,225 நபர்களுக்கு ரூ.1.26 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. மயானப்பாதை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 39 பணிகள் ரூ.2.7 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப கல்வித் திட்டத்தின் கீழ் 137 குடும்ப நபர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.7.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சீருடைகள், குறிப்பேடுகள், பாடநூல்கள் ஆகியவை 98,197 மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளன. விடுதிகள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் 37 பணிகள் ரூ.3.44 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஆதி திராவிட நலப்பள்ளிகள் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் 21 பணிகள் ரூ.2.29 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இத்துறையின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்க்கு போஸ்ட்மெட்ரிக் பட்டப் படிப்பு வரை இலவசக்கல்வி சுகாதாரக் குறைவான தொழில் செய்வோர் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை, கல்விக் கடன் உதவித் தொகை போன்ற பல்வேறு கல்வி உதவித் தொகைகள் 38,133 நபர்களுக்கு ரூ.1 கோடியே 6 இலட்சத்து 46 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண்மைத்துறை**

வேளாண்மைத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் வேளாண்மை வளர்ச்சித் திட்டம், வேளாண்மை விரிவாக்கத் திட்டம், நெல் மற்றும் சிறுதானிய விதைகள் கொள்முதல், எண்ணெய் விரிவாக்கத் திட்டம், எண்ணை வித்து உற்பத்தித்திட்டம், முதலமைச்சர் அவர்களின் சாலையோர மரம் வளர்ப்புத் திட்டம் போன்ற 37 திட்டங்கள் ரூ.240.05 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாண்டில் ரூ.162.10 இலட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நவ்ரா திட்டம், ஒருங்கிணைந்த தென்னை அபிவிருத்தித் திட்டம் போன்ற 4 திட்டங்கள் ரூ.244.59 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**உழவர் சந்தை**

கரூர் மாவட்டத்தில் கரூர், வேலாயுதம்பாளையம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. 22.3.2000 முதல் 14.6.2000 வரை கரூர் உழவர் சந்தையில் 7,26,277 கிலோ காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.47,55,643 ஆகும். இதில் 9,259 விவசாயிகள் உழவர்சந்தை கடையில் காய்கறிகளை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர். 2,85,929 நுகர்வோர்கள் பயனடைந்துள்ளனர்.

வேலாயுதம்பாளையம் உழவர்சந்தையில் 22.3.2000 முதல் 14.6.2000 வரை ரூ.13,80,111 மதிப்பில் 1,99,082 கிலோ காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2,746 விவசாயிகள் காய்கறிகளை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர். 49,821 நுகர்வோர்கள் பயனடைந்துள்ளனர்.



**தோட்டக்கலைத்துறை**

தோட்டக்கலைத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த நறுமணப்பயிர்கள் அபிவிருத்தித் திட்டம், வெப்ப பிராந்தியத்தில் பழப்பயிர்கள் அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம், வேர் மற்றும் கிழங்குவகை அபிவிருத்தித் திட்டம் போன்ற பல திட்டங்கள் ரூ.57.51 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
**(நகர கோட்டம்)**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகரக் கோட்டத்தின் மூலம் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.1370 இலட்சம் செலவில் 4 குடிநீர்த் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் காவேரி ஆற்றில் இருந்து இனாம் கரூர் மற்றும் தாந்தோணி பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்களும் அடங்கும். புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 5 பேரூராட்சிகளில் ரூ.27 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் நகராட்சி பேரூராட்சிப் பகுதிகளில் 2 குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**
**(ஊரகக் கோட்டம்)**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரகக் கோட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ரூ.802.33 இலட்சம் செலவில் 277 குடியிருப்புகளுக்கு கிராம குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மின்விசை புனரமைப்பு திட்டத்தின் மூலம் 72 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த்திட்டப் பணிகள் ரூ.70.35 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.257.72 இலட்சம் செலவில் 108 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வெள்ளியனை, சின்னபனையூர், மண்மங்கலம் மற்றும் புத்தாம்பூர் ஆகிய சமத்துவபுரங்களுக்கு ரூ.28.20 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கரூர், அரவக்குறிச்சி, க.பரமத்தி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் 564 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.17.21 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. 1999–2000 ஆண்டில் புளோரைடால் பாதிக்கப்பட்ட 64 குடியிருப்புகளுக்கு ரூ.1 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. நடப்பாண்டில் 150 குடியிருப்புகளுக்கு ரூ.8.50 கோடி செலவில் முழுமையடையும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்படவுள்ளது.

**கால்நடை பராமரிப்புத்துறை**

கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஒரு புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது. 2 கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் சிறப்பு மத்திய உதவி திட்டத்தின் கீழ் செம்மறியாடு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.12.37 இலட்சமும் வெள்ளாடு வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த ரூ.7.83 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

**சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டம்**

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 34 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களில் 13,265 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆண்மை நீக்கம் 1161 கால்நடைகளுக்கும், செயற்கை முறை கருவூட்டல் 716 கால்நடைகளுக்கும், சினைப்பரிசோதனை 5,209 கால்நடைகளுக்கும், மலட்டுத்தன்மை சிகிச்சை 2,357 கால்நடைகளுக்கும், குடற்புழு நீக்கம் 56,354 கால்நடைகளுக்கும் செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை 32 கால்நடைகளுக்கும், தடுப்பூசி 53,055 கால்நடைகளுக்கும் செய்யப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ.3,70,463 செலவில் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**சமூக நலத்துறை**

சமூக நலத்துறையின் கீழ் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.3,25,40,000 நிதியுதவி அளிக்கப்பட்டு 3,254 ஏழை பெண்கள் பயனடைந்துள்ளனர்.

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணம் நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.9,60,000 நிதியுதவி அளிக்கப்பட்டு 74 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.92,000 நிதியுதவி அளிக்கப்பட்டு 12 ஏழை மகளிர் பயனடைந்துள்ளனர்.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.29,000 நிதியுதவி அளிக்கப்பட்டு, 5 ஏழை மகளிர் பயனடைந்துள்ளனர்.

டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூ.200 வீதம் ரூ.21,99,200 நிதியுதவி அளிக்கப்பட்டு 10,996 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.



இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 295 நபர்களுக்கு தையல் இயந்திரங்கள், வழங்கப் பட்டுள்ளன.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 288 தொழில் முனைவோருக்கு ரூ.1334.72 இலட்சம் தொழிற்கடனாக வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம் மூலம் கடந்த நான்காண்டுகளில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளுக்கு ரூ.1248.475 இலட்சம் செலவில் 141 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அரசுக்கு சொந்தமான கட்டடங்களில் 618 பராமரிப்புப் பணிகள் ரூ.403.890 இலட்சம் செலவில் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

### பொதுப்பணித்துறை (ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம்)

பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு ஆற்றுப்பாதுகாப்புக் கோட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் புதிய தடுப்புச் சுவர்கள் கட்டும் பணிகள் ரூ.37.5 இலட்சம் செலவிலும் காவேரி ஆறு வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் 309.25 கி.மீ. நீளத்திற்கு ரூ.170.75 இலட்சம் செலவில் தூர்வாரும் பணிகளும், ஏரிகள் மற்றும் குளங்கள் ரூ.34 இலட்சம் செலவில் தூர் வாரும் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. நவம்பர் 99 மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வாய்க்கால் மற்றும் வடிகால்கள் உடைப்புகள் ஏற்பட்டுள்ளதை செப்பனிடுவதற்காக ரூ.103.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஆதிதிராவிட நலத்திட்டத்தின் கீழ் 168 நபர்களுக்கு ரூ.5.29 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தாட்கோ நலத்திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்க 416 நபர்களுக்கு ரூ.12.48 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

### மின்சாரத்துறை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ரூ.1530 இலட்சம் செலவில் 3,057 விவசாயப் பம்புசெட்டுகளும், ரூ.50 இல்ட்சம் செலவில் 2480 குடிசை களுக்கும், ரூ.268 இலட்சம் செலவில் 536 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் ரூ.964 இலட்சம் செலவில் 1,285 தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ரூ.867 இலட்சம் செலவில் 867 மின்மாற்றுகளும் ரூ.446 இலட்சம் செலவில் 1,784 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. 1999–2000 நிதியாண்டில் தோகமலையில் ரூ.59 இலட்சம் செலவில் புதிதாக 33/11 கே.வி.துணை மின்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 811 விவசாயப் பம்புசெட்டுகளும் 322 குடிசைகளுக்கும், 266 தொழிற்சாலைகளுக்கும் மின் இணைப்பு வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை

உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காலிப்பர் மற்றும் கிரட்சஸ் ஆகியவை ரூ.5.93 இலட்சம் செலவில் 382 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பராமரிப்பு உதவித்தொகை, வங்கிக்கடன் உதவி, திருமண நிதியுதவி, கல்வி உதவித்தொகை, இலவச பேருந்து பயணச் சலுகை ஆகியவை ரூ.20.46 இலட்சம் மதிப்பில் 2,390 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. முடநீக்கியல் சாதனங்கள், செயற்கை அவயங்கள் போன்றவை தயாரிக்க இயற்பியல் சிகிச்சைப் பிரிவு, காதுகேட்கும் திறன் அறியும் பிரிவு ஆகியவை ரூ.5.1 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் 558 நபர்கள் பயனடைந்துள்ளனர். ஊனமுற்றோர் மற்றும்



இளம்பிள்ளைவாத முகாம்கள் நடத்தப்பட்டதன் மூலமாக 3,426 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.1.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் 31 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 114 புதிய பேருந்துகள் மாற்றப்பட்டு இயக்கப்பட்டுள்ளன. 56 வழித்தடங்கள் தடம் நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது. 1,05,487 மாணவ மாணவியருக்கு இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 50 சதவீத பேருந்து பயண சலுகை மூலம் 39,529 நபர்கள் பயனடைந்துள்ளனர். 658 மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கும், 138 சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கும் இலவச பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 114 கண்பார்வை யற்றவர்களுக்கும், 205 உடல் ஊனமுற்றோர்களுக்கும் இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான சிற்றுந்து திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 73 சிற்றுந்துகள் ஊரக பகுதிகளில் இயங்கி வருகின்றன.

### தாட்கோ

தாட்கோ மூலம் கடந்த நான்காண்டுகளில் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்புரிவதற்காக 151 நபர்களுக்கு ரூ.12.05 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 169 நபர்களுக்கு ரூ.94.74 இலட்சம் மானியம் மற்றும் விளிம்புத்தொகை வழங்கப்பட்டுள்ளது. சுயவேலைவாய்ப்புப் பயிற்சித்திட்டத்தின் கீழ் 58 நபர்களுக்கு ரூ.2.02 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 3–ஆம் வகுப்பு முதல் 6–ஆம் வகுப்பு வரை பயிலும் 7312 ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்குக் கல்வி பயில ரூ.37.88 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டள்ளது. தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2 நபர்களுக்கு மானியம், விளிம்புத் தொகை மற்றும் குறுகிய கால கடனாக ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### இந்து சமய அறநிலையத் துறை

இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 8 நபர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் பணியாளர்கள் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் 5 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.1.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின் கீழ் 54 திருக்கோயில்களுக்குத் தலா ரூ.2500 வீதம் ரூ.1.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்கள் திருப்பணி வேலைகளுக்காக அரசு மானியமாக ரூ.2.45 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணித் திட்டத்தின் கீழ் 4 திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் ரூ.1,00,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2000–2001 ஆண்டு திருக்கோயில்கள் சார்பாக இலவச திருமணங்கள் நடத்தப்பட உள்ளன.

### கூட்டுறவுத்துறை

கூட்டுறவுத்துறையின் மூலம் கடந்த நான்காண்டு களில் குறுகிய கால கடனாக ரூ.61.58 கோடியும், மத்தியகால கடனாக ரூ.7.21 கோடியும், நீண்டகால கடனாக ரூ.20.83 கோடியும், பண்ணை சாராக்கடனாக ரூ.9.22 கோடியும், கொதுவைக் கடனாக ரூ.35 இலட்சமும் நகையீட்டுக் கடனாக ரூ.67.31 கோடியும், வீடுகட்டும் கடனாக ரூ.2.73 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறையின் மூலம் ரூ.18 இலட்சம் செலவில் 4 புதிய மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 5 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில் 7 மகளிர் நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மகளிர் சிறுவணிகக் கடன் 2,927 மகளிர்க்கு ரூ.17.86 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அபராத வட்டி தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் இதுவரை ரூ.2.71 இலட்சம் அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் புதிய திட்டத்தின் அடிப்படையில் 1.5.98 முதல் 31.5.2000 முடிய இம்மாவட்டத்தில் 2,57,517 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த நான்காண்டுகளில் 37 முழுநேர நியாய விலைக்கடைகளும்,102 பகுதி நேர நியாய விலைக்கடைகளும், 7 மகளிர் அங்காடிகளும் திறக்கப்பட்டுள்ளன.

### பேரூராட்சிகள்

கரூர் மாவட்டத்தில் உள்ள 13 பேரூராட்சிகளில் கடந்த நான்காண்டுகளில் 591 சாலைப் பணிகள் ரூ.611.46 இலட்சத்திலும், 372 வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.225.77 இலட்சம் செலவிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன. 48 சிறுபாலங்கள் ரூ.15.06 இலட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 505 குடிநீர்த்திட்டப் பணிகள் ரூ.175.66 லட்சம் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன. 185 புதிய சோடியம் ஆவி விளக்குகள் ரூ.9.08 இலட்சம் செலவிலும், 1,304 புதிய குழல் விளக்குகள் ரூ.42.45 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 116 இதர பணிகள் ரூ.198.17 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### கல்வித்துறை

கல்வித்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் 667 இடைநிலை ஆசிரியர்களும் 20 உடற்கல்வி

ஆசிரியர்களும் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 8 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 93 தொடக்க பள்ளிகளுக்குப் புதிய கட்டங்களும், 18 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. 14 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி கல்வி அறிமுகம் திட்டத்தின் கீழ் 1999-2000 ஆண்டில் ஆறு மேல்நிலைப்பள்ளிகளில் கணிப்பொறி கல்வி துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

**மாவட்ட தொழில் மையம்**

பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் சுய தொழில் தொடங்க1,209 நபர்களுக்கு ரூ.754 இலட்சம் கடனாக வழங்கப் பட்டுள்ளது. 2000-2001 ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 360 நபர்களுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் 117 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**நெடுஞ்சாலைத்துறை**

நெடுஞ்சாலைத்துறையின் நிரந்தர கோட்டம், கிராம சாலைகள் மற்றும் கரும்பு அபிவிருத்தி கோட்டம் மூலமாக கடந்த நான்காண்டுகளில் ரூ.2147.39 இலட்சம் செலவில் 1042.10 கி.மீ. சாலைகளில் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில சாலைகள் 55.30 கி.மீ. மாவட்ட சாலைகள் 234.60 கி.மீ. இதர மாவட்ட சாலைகள் 752.20 கி.மீ. செப்பனிடப்பட்டுள்ளது. திட்டப்பணியின் கீழ் ரூ.441.10 இலட்சம் மதிப்பீட்டில் 13 பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டு அதில் 6 பாலங்கள் ரூ.61.20 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 7 பாலங்கள் ரூ.379.90 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. பகுதி 2 திட்டத்தின் கீழ் 2000-2001 நிதியாண்டில் 3 பணிகள் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுள்ளன. நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் டி.இடையப்பட்டி சாலையில் ரூ.81.25 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**கரூர் நகராட்சி**

கரூர் நகராட்சியில் கடந்த நான்காண்டுகளில் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், சாக்கடை, சிறு பாலங்கள், பொது கழிப்பிடங்கள், ஆழ்துளை கிணறுகள் போன்று 313 பணிகள் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.377.72 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10 பணிகள் ரூ.20.75 இலட்சம் செலவிலும் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 40 பணிகள் ரூ.15.71 இலட்சம் செலவிலும்,





சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.8.34 இலட்சம் செலவிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பத்தாவது நிதிக்குழு மற்றும் அடிப்படை வசதி திட்டங்களின் மூலம் 34 சோடியம் ஆவி விளக்குகள் ரூ.1.36 இலட்சம் செலவிலும், 173 தெருவிளக்குகள் ரூ.8.89 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அமராவதி ஆற்றுப்பாலம் கட்டும் பணியை ரூ.1556 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு தற்பொழுது பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**குளித்தலை நகராட்சி**

குளித்தலை நகராட்சியில் கடந்த நான்காண்டுகளில் 54 தார்சாலை அமைக்கும் பணிகள் ரூ.57.12 இலட்சம் செலவிலும், 45 சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.39.04 இலட்சம் செலவிலும், 6 கப்பி சாலைகள் ரூ.2.41 இலட்சம் செலவிலும் போடப்பட்டுள்ளன. 37 தெருவிளக்குகள் ரூ.1.69 இலட்சம் செலவிலும் 290 குழல் விளக்குகள் ரூ.11.62 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 5 குடிநீர்த்திட்டப்பணிகள் ரூ.1.65 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 69 வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.21.18 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. 36 சிறுபாலங்கள் ரூ.10.03 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 நீரடி பொதுக்கழிப்பிடங்கள் ரூ.3.56 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ளன. 20 இடங்களில் உள்ள கழிப்பிடங்களை மேம்படுத்தும் வகையில் ரூ.6.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. தற்போது 26 இடங்களில் ரூ.58.07 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வேளாண்மைப் பொறியியல் துறை**

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கடந்த நான்காண்டுகளில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 330 பணிகள் ரூ.379.625 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மில்லியன் கிணறுகள் திட்டத்தின் கீழ் 54 பணிகள் ரூ.55.534 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின் கீழ் ஒரு பணி ரூ.1.48 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. மண்வள பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 330 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.4.70 இலட்சம் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சொட்டு நீர்ப் பாசன திட்டத்தின் கீழ் 86 பணிகள் ரூ.47.80 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**வருவாய்த்துறை**

வருவாய்த்துறையின் மூலம் கடந்த நான்காண்டுகளில் முதியோர் உதவித் தொகை 2,06,625 நபர்களுக்கு ரூ.262.11 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. விதவை உதவித் தொகை 3,06,595 நபர்களுக்கு ரூ.388.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர்க்கான உதவித் தொகை 26,696 நபர்களுக்கு ரூ.33.62 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை 44,714 நபர்களுக்கு ரூ.58,80 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. விவசாய கூலி உதவித் தொகை 97,877 நபர்களுக்கு ரூ.124.02 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இலவச வீட்டு மனைப்பட்டா ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த 21,704 நபர்களுக்குப் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த 15,160 நபர்களுக்கு முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த 100 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. விபத்து நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் 307 நபர்களுக்கு ரூ.33.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நலிந்தோர் நலத்திட்டத்தின் கீழ் 3,673 நபர்களுக்கு ரூ.228.74 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்**

கரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 446 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளின் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக அமைக்கப்பட்ட 8 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மாநில அரசின் மானியமாக ரூ.370.51 இலட்சம் வழங்கப்பட்டு அதில் 7 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இதுதவிர 66 சலவை மற்றும் சாயத்தொழிற்சாலைகள் தனியாக சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயக்கி வருகின்றன. மாவட்டத்தில் உள்ள 55 கல் உடைக்கும் தொழிற்சாலைகள் காற்று மாசு தடுப்பு சாதனங்களை அமைத்து சுற்றுச் சூழலுக்குக் கெடுதல் ஏற்படாத வகையில் இயங்கி வருகின்றன. புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் காற்று மாசு படுவதை தடுத்து வாரிய நிர்ணய தர அளவுக்குக் கொண்டு வருவதற்காக அந்த நிறுவனம் சுமார் ரூ.15 கோடி செலவிட்டுள்ளது. அதேபோல் புலியூர் செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேசன் லிட்., என்ற நிறுவனமும் வாரிய நிர்ணய தர அளவுக்குக் கொண்டு வருவதற்காக சுமார் 5 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. கரூர், குளித்தலை நகராட்சிகள் வனத்துறை ஆகியவற்றுடன் இணைந்து 1.6.2000 முதல் மரம் வளர்ப்பு"திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

**சுகாதாரத்துறை**

கடந்த நான்காண்டுகளில் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.38.50 இலட்சம் செலவில் அறுவை அரங்கு வசதியுடன் கூடிய கண்சிகிச்சை பிரிவும் ரூ.16.50 இலட்சம் செலவில் இருதய அறுவை சிகிச்சை பிரிவு கட்டடமும், ரூ.20 இலட்சம் செலவில் சித்தமருத்துவ பிரிவு கட்டடமும், ரூ.12.57 இலட்சம் செலவில் பிணவறை கட்டடமும், ரூ.10 இலட்சம் செலவில் 75 கிலோ வாட்ஸ் திறன் கொண்ட ஜெனரேட்டர் அறையும் கட்டப்பட்டுள்ளது. ரூ.13 இலட்சம் செலவில் டிரான்ஸ்பார்மர் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் செலவில் குழந்தைகள் உள்ளிருப்பு பகுதியும்,

ரூ.30 இலட்சம் செலவில் காசநோய் மையக் கட்டடமும் கட்டப்பட்டு வருகின்றன. குளித்தலை அரசு மருத்துவ மனையில் ரூ.12 இலட்சம் செலவில் குழந்தைகள் நலப்பகுதி கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தப் பட்டுள்ளன.

குடும்ப நலப்பிரிவு மூலம் 11,496 நபர்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும் அளிக்கப் பட்டுள்ளது. 21,500 பெண் களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. கருத்தடை மாத்திரைகள் விநியோகிக் கப்பட்டுள்ளன.

மாவட்ட பார்வையிழப்பு தடுப்புச் சங்கம் மூலமாக கடந்த நான் காண்டுகளில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு 17,328 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 12,483 நபர்களுக்கு உள்விழி லென்ஸ் பொருத்தப்பட்டுள்ளது. 4,845 நபர்களுக்கு இலவச கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

**வருமுன் காப்போம் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 86 சிறப்பு மருத்துவ முகாம்கள் 12.6.2000 வரை நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களில் 18,434 ஆண் களுக்கும், 23,095 பெண் களுக்கும் 12,132 குழந்தை களுக்கும் பரிசோதனை செய்யப் பட்டுள்ளனர். இதில் 4,416 நபர்களுக்கு தொடர் சிகிச்சை அளிக்க தெரிவு செய்யப்பட்டு அரசு மருத்துவ மனைகளில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது. இதுவரை ரூ.2,30,506 மதிப்பிலான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 82 முகாம்கள் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது.

— ஏ. சந்திரசேகரன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர்.

* * *

## தமிழ்நாட்டில் நடப்பாண்டில் 9 நகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டம்

திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கரூர், தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் சம்பந்தமாகவும், நகரின் கழிவுநீர், நதிநீர் மற்றும் கடல்நீரை மாசுபடுத்துவதை தவிர்ப்பதற்கான திட்டங்கள் பற்றியும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் தலைமையில், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம் (மற்றும்) சுற்றுப்புற சூழல் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் 5–12–2000 அன்று கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் நிதித்துறை செயலர் திரு. ஆர். சந்தானம், வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல்துறை செயலர் திரு.எஸ்.ராஜரெத்தினம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திருமதி. எஸ். மாலதி, நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.க. கணேசன், பேரூராட்சிகள் இயக்குநர் திரு.தா.சந்திரசேகரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சி.பி.சிங், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆ.மு.காசிவிஸ்வநாதன் மற்றும் சுற்றுப்புற சூழல் துறை இயக்குநர் ஆகியோர் கலந்துகொண்டனர். மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் மேற்படி நகரங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, வெளியிட்ட அறிவிப்புகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலே கண்ட 9 நகரங்களில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு ரூ. 550 கோடி ஆகும். இதில் சுமார் ரூ.250 கோடி மத்திய அரசின் பங்காகவும், சுமார் ரூ.110 கோடி மாநில அரசின் பங்காகவும் அமையும். இத்திட்டங்கள் நடப்பாண்டிலேயே செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் உடன் மேற்கொள்ளப்படும்.

* * *

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927



தமிழரசு

பதிவு எண். M.8676
LICENCE No. TN/MS(C)/PP-23





